
உடையார்
பாகம்
6
பாலகுமாரன்

முதற் பதிப்பு: ஆகஸ்ட்., 2006

உரிமை: ஆசிரியருக்கு

மாமன்னன் இராஜராஜ சோழனின் வரலாறு

விசா பப்ளிகேஷன்ஸ் வெளியீடு

UDAIYAAR - PART VI (History of Rajaraja Chola)

By: Balakumaran

First Edition: August, 2006

No. of Pages: 536

Size: Demy

Paper used: N.S. 70 G.S.M. Maplitho

விலை ரூ. 250/-

VISA PUBLICATIONS
New No: 16, Old No: 55,
Venkatnarayana Road,
T.Nagar, Chennai-600 017.
Phone: 24342899, 24327696
Thirumagalnilayam@yahoo.com

Available at:
THIRUMAGAL NILAYAM
New No: 16, Old No: 55,
Venkatnarayana Road,
T.Nagar, Chennai-600 017.
Phone: 24342899, 24327696
Thirumagalnilayam@yahoo.com

Laser Typeset By: Sivaa Graphics, Chennai-94. Ph: 65413222

Printed at: Udayam offsets, Ph : 28454808 ,

யோகிராம்சுரத்குமார்

# முன்னுரை

நெஞ்சு முழுவதும் ஒரு விம்மிதம் பரவிக்கிடக்கிறது. எந்த நினைப்புமற்று, எந்தச் செயலுமற்று, எந்த அசைவுமற்று வெறுமே கிடக்கின்ற ஒரு நிலைமை சில கணங்கள் உள்ளே உண்டாயிற்று.

உடையார் நாவல் எழுதி முடித்து விட்டேனா, உண்மைதானா. நாவல் எழுதி முடிக்கப்படாது என்று சொன்னார்களே. இராஜராஜசோழனை கையிலே எடுத்தவர்கள் அவன் விஷயத்தை முடிக்க முடியாமல் மூளியாகத்தான் வைப்பார்கள் என்று ஆருடம் கூறினார்களே. நான் எழுதித்தருகிறேன்; அடித்துச் சொல்கிறேன்; இந்த நாவல் எழுதி முடியாது என்று என் பதிப்பாளரை பயமுறுத்தினார்களே.

பந்தல் எரிந்த கும்பாபிஷேகத்தையும், பதவி பறிக்கப்பட்ட தலைவர்களையும், பாதிக்கப்பட்ட அமைச்சர்களையும், சுட்டிக் காட்டினார்களே. எனக்கும் அதுதான் கதி என்று சொன்னார்களே. அவர்கள் என்ன ஆனார்கள். இந்த நாவலை நான் எப்படி முடித்தேன் என்று யோசிப்பு வந்தபோது மிகத்தீவிரமாய் என் குருநாதரைப் பற்றிய நினைப்பு எனக்குள் பீறிட்டு எழுந்தது.

என் சத்குருநாதன் கடவுளின் குழந்தை, அடியார்க்கு நல்லான், திருவண்ணாமலை மகான் யோகிராம்சுரத்குமார் அவர்களின் கருணையாலும் பரிபூரண ஆசியாலும் இந்தப் புதினத்தை ஆறாவது பாகம் வரை எழுதி முடித்துவிட்டேன்.

இந்த பிரம்மாண்டமான சரித்திரத்தை என் புத்திக்கு எட்டியவரை உணர்ந்து அனுபவித்து உள்வாங்கி மிகுந்த கவனத்தோடு, இழை இழையாய் நெய்து, பூக்கள் நிறைந்த சால்வையாய் அவர் காலடியில் சமர்ப்பிதம் செய்து விட்டேன். இதை வெறும் சரித்திர நாவலாக மட்டும் கருதவில்லை. ஒரு

இனத்தின் பண்பாட்டு வெளியீடாக, ஒரு நதிக்கரை நாகரிகத்தின் நிறைவான கதையாக, வரலாற்றைக் காட்டிலும் பிரம்மாண்டமான சனாதன தர்மத்தின் ஒரு அலைவீச்சாக, தமிழ் பேசும் எம் குடிமக்கள் எத்தனை அற்புதமான விஞ்ஞானபூர்வமான, அறிவு பூர்வமான வாழ்க்கை வாழ்ந்திருக்கிறார்கள் என்று சொல்லுகின்ற விதமாகவும் எழுதியிருக்கிறேன்.

உடையார் ஸ்ரீ ராஜராஜத்தேவர் என்கிற தனி மனிதர் தன்னைப் பற்றி மட்டுமே முன்னிலைப் படுத்திக் கொள்ளாது தன்னைச் சேர்ந்த அத்தனை மக்களைப் பற்றியும் அக்கறைப்பட்டு அவர்களையும் இந்த இறைப்பணியில் சேர்த்துக் கொண்டு ஒரு நாகரிகத்தை கல்வெட்டாக விட்டுச்சென்ற கனிவை எண்ணி, அதில் மனம் கரைந்து, அதில் காதல் வசப்பட்டு, கதைக்கு நடுவே அந்தக் கனிவை காட்டவும், நான் முயற்சித்திருக்கிறேன்.

சரித்திரக் கதையாக இருப்பினும் போர் பற்றிய விமர்சனமும், பெண்கள் பற்றிய பார்வையும் ஒரு பொழுதுபோக்கு பற்றிய குறிப்புகளும், கடவுள் பற்றிய சிந்தனையும், அது குறித்த தத்துவமும் விவாதமும் என்றைக்கும் எப்போதும், எவரும் புரிந்து கொண்டு மேற்கொண்டு சிந்திக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு இதில் புகுத்தியிருக்கிறேன்.

விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளால் வாழ்வினுடைய அடிப் படைத் தாகங்கள் அகன்று விடவில்லை. மனிதர்கள் இப்போதும், எப்போதும் ஒரே விதமாகத்தான் வாழ்கிறார்கள் என்பதைச் சுட்டிக் காட்டியிருக்கிறேன்.

இந்த நாவலை சோழதேசம் நோக்கி பயணப்படுகையில் நான் முடிக்க நேர்ந்தது. ஒரு குவாலிஸ் வண்டியில் நண்பர்கள் அமர்ந் திருக்க தாம்பரத்தில் கதைதுவங்கி இடையறாது இடையறாது ஒலி நாடாவில் பதிவு செய்து கொண்டு வந்தேன். ஒரு கனத்த மழை போல தங்கு தடையின்றி இந்த நாவல் என்னிலிருந்து மிகச்சீராக வெளிப்பட்டுக் கொண்டிருந்தது. பயணப்பட்டுக்கொண்டே நாவல் சொல்வதால் அதன் அடர்த்தியும், வேகமும், தெளிவும், அழகும் குறையவே இல்லை. உடன் வந்த என் நண்பர்கள் வியந்துபோனார்கள். அங்கங்கே நான் உணர்ச்சிவசப்பட என் தலையைத் தடவி, பிடரியை வருடி, தோளைத்தட்டிக் கொடுத்து உற்சாகப்படுத்தினார்கள்.



சோழதேசத்தின் எல்லையைத் தொடும்போது உடையார் ஸ்ரீ ராஜராஜத்தேவர் இறைவனடி சேர்ந்தார் என்று சொல்லி முடித்துவிட்டு ஒலிநாடாவை பக்கத்தில் வைத்துவிட்டு வெளியே பார்த்து அழத்துவங்கினேன். இன்னும் என்னுள் அந்த நேரம் அந்த நினைப்பு பசுமையாக இருக்கிறது. அருகே ஒருவர் இறந்துவிட்டதுபோல, அவர் இறந்த செய்தி ஐந்து நிமிடத்திற்கு முன்புதான் எனக்கு தெரிவிக்கப்பட்டதுபோல, துக்கத்தோடு நான் ஆயிரம் வருடங்களுக்கு முன்பு இறந்த அந்த மன்னனுக்காக விட்டுத்தட்ட கதறலாக அழுதேன். அப்பொழுது அப்படி உணர்ச்சி வசப்பட்டது நியாயமாகத்தான்படுகிறது. அந்த அழுகை சரி என்றுதான் தோன்றுகிறது.

வெறும் புத்தியால் மட்டும் ஒரு புதினத்தை எழுதிவிட முடியாது. ஒரு கல்வெட்டைப் பார்த்து விட்டு அதுபற்றிய தகவல் சொல்வது போல ஒரு கட்டுரையாய் ஒரு புதினம் எழுதப்படக் கூடாது. விமானம் இத்தனை உயரம், இத்தனை அகலம் இத்தனை வருடங்கள் முன்பு கட்டப்பட்டது. இதன் கற்களின் எடை இத்தனை. பிளந்த கற்கள் இவ்வளவு. பிளக்காத கற்கள் இவ்வளவு. உயரே இருக்கின்ற கலசத்தின் எடை இவ்வளவு. சுற்றியுள்ள மதில்சுவரின் அளவு எத்தகையது. 'இவர்தான் மூலவர் எல்லாரும் சாமி கும்பிட்டுக்கோங்க. சீக்கிரம் வெளிய வாங்க' என்று ஒரு வழிகாட்டியைப்போல ஒரு எழுத்தாளன் செயல்பட முடியாது.

அந்தக் கட்டிடத்திற்கு அருகே போய் அண்ணாந்து பார்த்து ஆயிரம் வருடங்களுக்கு முன்பு இதை எப்படிக் கட்டினார்கள். அவர்களெல்லாம் யார். என்ன கணக்கு. என்ன கருவி என்று எவர் வியக்கிறாரோ. நம்முடைய முன்னோர். எத்தனை நேர்த்தியாக இதைச் செய்திருக்கிறார்கள் என்று எவர் பெருமிதப்படுகிறாரோ, இதைச் செய்கின்ற ஆற்றல் இருக்குமென்றால் அவர்களுக்கு இன்னும் என்னென்ன ஆற்றல் இருந்திருக்க வேண்டும். அந்த ஆற்றல் உள்ளவர்கள் எப்படிப்பட்ட வாழ்க்கை வாழ்ந்திருக்க வேண்டும். அவர்கள் எவ்விதமாகக் குடித்தனம் செய்திருக்க வேண்டும் என்றெல்லாம் தொடர்ந்து யோசிக்கிறார்களோ அப்படி உணர்ச்சிவசப்பட்டவர்களுக்கு உணர்வுபூர்வமாக எழுதப்பட்டது இந்த நாவல்.

உடையார் ஸ்ரீ ராஜராஜத்தேவர் எப்படியிருப்பார் கருப்பா, சிகப்பா, குட்டையா, நெட்டையா, ஒல்லியா என்று யாருக்கும் தெரியாது. சில சித்திரங்களும், சில சிலைகளும் அவர் இவ்விதமாக இருப்பார் என்று காட்டுகின்றன. அந்தச் சிலைகளிலிருந்து அவர் நிறமும், நடையும், உடையும், பாவனையும் வெளி வந்துவிடாது. படம் வெறும் அடையாளமாகத்தான் இருக்கும். அந்த அடையாளத்தை வைத்துக் கொண்டு அதை என்னுள் தேக்கி அவர் இப்படி இருந்திருக்கக் கூடும் என்று நான் எழுதியிருக்கிறேன். அவருடைய மனைவிகள் இத்தனை பேர் என்று ஒரு கணக்கு இருக்கிறது. இது சொல்லப்பட்டிருக்கிறது. அதை வைத்துக் கொண்டு அதில் இவள் முக்கியமானவளாக இருந்திருப்பாள் என்று பல்வேறு காரணங்களை வைத்து ஒரு யூகம் செய்திருக்கிறேன்.

பட்டமகிஷிக்கோ, ராஜேந்திர சோழனைப் பெற்ற தாயார் வானதிக்கோ பள்ளிப்படை கோயில் இல்லை. ஆனால், பஞ்சவன் மாதேவி என்ற பெண்மணிக்கு பள்ளிப்படைக் கோயில் இருந்திருக்கிறது. அதுவும் ராஜராஜ சோழனுடைய மகன் ராஜேந்திர சோழனால் கட்டப்பட்டிருக்கிறது. தந்தையினுடைய அனுக்கிக்கு கோவில் எழுப்புகிற அரசனின் செயலை உற்றுப்பார்க்கிறபோது அவள் அற்புதமான பெண்மணியாய் இருக்கக்கூடும் என்ற எண்ணம் ஏற்படுகிறது.

பட்டமகிஷிக்கும் வானவன் மாதேவிக்கும் பள்ளிபடை இருந்திருக்கலாம். சிதிலமாயிருக்கலாம். பஞ்சவன்மாதேவி கோவிலும் கண்ணெதிரே இடிபட இருந்தது. யார் செய்த புண்ணியமோ, அதை இந்து அறநிலையத்துறை மறுபடியும் தூக்கிக்கட்டியிருக்கிறது.

மாதேவடிகள் என்று ராஜராஜசோழனின் மகள் ஒருத்தி கட்டியகோயில் சிதிலமான நிலையில் இருக்கிறது. எப்பொழுது வேண்டுமானாலும் அது தரையோடு தரையாக மாறும் அதைக் காப்பாற்ற இன்னும் வேளை வரவில்லை. இந்தத் தமிழ்தேசத்தின் பல்வேறு சாபங்களில் இதுவும் ஒன்று. நம் பழம் பெருமைகளை, போற்றிப் பாதுகாக்காதது. போற்றிப்பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணம் இல்லாததுபெருங்குறை. மக்கள் எவ்வழி அவ்விதம் அரசு.



கவிதை என்றால் சினிமாப்பாட்டு ஓவியம் என்றால் வாரப் பத்திரிகை, இலக்கியம் என்றால் வேண்டாத விஷயம். தியாகிகள் என்றால் கட்சித்தலைவர்கள் என்று மிகவும் சுருங்கிப்போன இந்த தமிழ் மக்களிடையே பழம்பெருமையை கொஞ்சம் உரத்துக் கூறித்தான் ஞாபகப்படுத்த வேண்டும். கொஞ்சம் அலங்காரமாகப் பேசித்தான் தமிழ் உணர்வு ஊட்ட வேண்டும். ஹிந்தியை அழிப்பதால் தமிழ் வாழ்ந்து விடாது. தமிழை போற்றுவதால்தான் தமிழ் வாழும் என்பதை அவர்களுக்கு லேசாய் இடித்துரைக்க வேண்டும்.

ஆங்கிலப்படிப்பு மட்டுமே மேன்மையன்று. அதில் பேசுவதால் மட்டுமே ஞானம் வந்துவிடாது. நம்முடைய தாய்மொழியான தமிழில் நுணுக்கங்கள் நிறைந்த பல்வேறு விஷயங்கள் இருக்கின்றன. மனித உணர்வுகளை மிகத்துல்லியமாகக் காட்டுகின்ற அற்புதமான கவிதைகள் இருக்கின்றன. இப்படியும் யோசிக்க முடியுமா மனிதர்களால் என்று இன்றைக்கும் வியக்க வைக்கின்ற காவியங்கள் இருக்கின்றன. திரும்பத் திரும்ப சொல்லப்பட்டதால் திருக்குறளுக்கு தமிழ் மக்களிடைய ஒரு மேன்மை வந்திருக்கிறது. ஆனால், ஸ்நேகம் வந்திருக்கிறதா. எனக்குச் சந்தேகமே. திருக்குறள் முக்கியமானதென்று என்று தலையில் வைத்துக்கொண்டு கூத்தாடுகிறார்கள். நெஞ்சுக்குள் இறக்கிக் கொள்கிறார்களா. கேள்விக்குறியே.

எனவே, தமிழ் மொழியின் தொன்மை மக்களுக்குத் தெரியாமல் போனதுபோல இந்தத் தமிழ் நாகரிகத்தினுடைய தொன்மை, பரப்பளவு, கனம் தெரியாமல் போய்விடக்கூடாது என்பதற்காக இவளை உணர்ச்சிப் பூர்வமாக நான் அணுகி இந்தச் சோழதேசத்து வரலாற்றைச் சொல்லியிருக்கிறேன்.

காதுகள் உள்ளோர் கேட்கக்கடவர். இதற்கொரு காது வேண்டியிருக்கிறது. இதற்கொருவிதமான சிந்தனை வேண்டியிருக்கிறது.இதற்கு ஒரு விதமான தாகம் வேண்டியிருக்கிறது. இதற்கு ஒரு தவிப்பு வேண்டியிருக்கிறது. இது எல்லோருக்கும் இருக்குமென்று நாம் எதிர்பார்க்க முடியாது. இருக்கின்ற சிலபேருக்கு எளிதாக்கி அரைத்துக் குடிப்பதற்கு கொடுக்க வேண்டுமல்லவா. அந்தச் செயலை நான் செய்திருக்கிறேன்.

தமிழ் நாகரிகத்தின் மேன்மையை ஒரு ஐரோப்பியன் பாழடைந்த கோயில்களுக்குள் ஏறி உதவியாளர்களோடு கற்களின்

மீது சுண்ணாம்புத்தடவி படித்து, படித்ததை எழுதி மிகப் பெரிய குறிப்புகளாகச் செய்து வைத்திருக்கிறார். திரு.ஹுல்ஷ் என்ற அந்த பிரிட்டானியப் பெருமகனுக்குத் தமிழ்தேசம் நன்றிக்கடன் பட்டிருக்கிறது. அதற்குப்பிறகு திரு. நீலகண்ட சாஸ்திரியிலிருந்து இன்று மிகச்சிறப்பாக தனிமனிதனாக சரித்திர ஆராய்ச்சி செய்து வரும் டாக்டர் கலைக்கோவன் வரை, திரு.சதாசிவப் பண்டாரத்தாரிலிருந்து, அரசாங்க உத்தியோகஸ்தராக இருப்பினும் அதைத்தாண்டி சோழ தேசத்தின் மீது மாறாக காதல் கொண்ட டாக்டர். குடவாயில் பாலசுப்ரமணியம் வரை பல்வேறு நண்பர் களுடைய கடும் உழைப்பை நான் உள்வாங்கிக் கொண்டு உங் களுக்கு புரியும் வண்ணம் தேன் குழைத்துக் கொடுத்திருக்கிறேன். அவர்கள் எழுதிய கட்டுரைகளைத் திரும்பத் திரும்ப படித்த போது தேன் சுவை போதையில் நான் பல வருடங்கள் திளைத்திருந்தேன்.

கட்டுரைகள் கொடுத்த போதையோடு நான் நேரே சென்று இந்த பெரிய கோயில் என்கிற கவினுரு பொக்கிஷத்தைப் பார்க்கும் போது இன்னும் வசமிழந்தேன்.

ஒருமுறையா, இருமுறையா முப்பது வருடங்களுக்கு மேல் எத்தனையோ முறை இந்தக் கோயிலை விதம் விதமாக சுற்றிப் பார்த்திருக்கிறேன். கல்வெட்டுக்களைத் தடவித் தேம்பியிருக் கிறேன். உற்சாகத்தில் குதித்திருக்கிறேன். அவ்வப்போது நண்பர் களை அழைத்து வந்து பார், இதைப்பார், அதைப்பார், அங்கே பார், இங்கே பார் என்று கூவலாய்ப் பேசியிருக்கிறேன். கையிலே ஒரு தடியை வைத்துக் கொண்டு அந்த கோபுர வாசலில் நின்றபடி

திருமகள்போல பெருநிலச் செல்வியும்
தமக்கே உரிமை பூண்டு மெனக்கெள
காந்தளூர்ச்சாலை கலமறுத்தருளி...

என்று கட்டியம்காரனாகக் கூவ ஆசைப்பட்டிருக்கிறேன். பஞ்சவன் மாதேவி பள்ளிப்படை கோவிலுக்குப்போய் இருண்டு பாழடைந்து கிடந்த இடத்தை நீரும், துடைப்பமும் கேட்டு வாங்கி தண்ணீர் ஊற்றி சுத்தம் செய்து அழுக்குகளை அகற்றி, அவர் நினைவாக ஸ்தாபிக்கப்பட்ட சிவலிங்கத்திற்கு நல்லெண்ணய் அபிஷேகம் செய்து, அபிஷேகப்பொடி தூவி, கழுவி, பால் ஊற்றி சமனம் செய்து விபூதி கொட்டி மணக்க வைத்து, நெய் விளக்குகள் ஏற்றி வைத்து, ஒரு வெண்கல விளக்கு ஒரு கண்ணாடி விளக்கு,



பொருத்தி வைத்து ஐநூறு ரூபாய்ப் புடவை சார்த்தி, பூபோட்டு, தேவாரப்பதிகம், பாடியிருக்கிறேன்.

மீளா அடிமை உமக்கே ஆளாய் பிறரை வேண்டாதே...

என்று கண்ணில் நீர்கசிய இந்த இடம் நல்லபடி மிளிர வேண்டுமே என்று வருத்தப்பட்டிருக்கறேன்.

கட்டிடக்கலைஞர் நண்பர் திரு.சுந்தர் பரத்வாஜரும், ஜோதிடர் K.P.வித்யாதரனோடும் ராஜராஜன் கால்பட்ட இடங்களெல்லாம் எல்லை என்று பல்வேறு முறைகள் பயணம் செய்திருக்கிறேன்.

உடையார்குடி என்ற காட்டுமன்னர் கோயிலிலும் குடந்தைக்கு அருகே இருக்கின்ற பழையாறை உடையாளூரிலும், சோழன் மேடு, சோழன் மாளிகை போன்ற இடங்களிலும் பகலும், இரவும் படுத்துக் கிடந்திருக்கிறேன். ''பூச்சிப்புட்டு இருக்கும். இங்க என்னத்துக்கு கிடக்கறீங்க'' என்று கிராம மக்கள் விரட்டினாலும் உள்ளுக்குள் ஏதோ ஒன்று ஸ்பூரிக்க வேண்டுமென்று கிடந்திருக் கிறேன்.

பெருவுடையார் கோயில் உள்ளுக்குள் இருக்கின்ற ஓவியங்களையும், சிற்பங்களையும், நாற்பது ஐம்பது முறைகளுக்கு மேல் பார்த்திருக்கிறேன்.

காரில் பயணப்பட்டால் தூரம் தெரியவில்லை என்று ஸ்கூட்டர் கடன் வாங்கி குதிரையில் பயணப்படுவதுபோல தஞ்சையிலிருந்து பல்வேறு இடங்களுக்கு பயணப்பட்டிருக்கிறேன். குடந்தை, தஞ்சை பெருஞ்சாலையை பல இடங்களில் நடந்தே கடந்திருக் கிறேன்.

மிக உக்கிரமான நிகும்பசூதனி சிலையையும், சில காளி கோவில் சிலைகளையும் அருகே நின்று தொட்டுத் தடவிப் பார்த் திருக்கிறேன். அந்நேரங்களில் அந்தக் கோவில், சம்பந்தப்பட்ட வர்களே கருவறைக்குள் அழைத்து நெருக்கமாய் நின்று தரிசனம் செய்யச் சொல்லியிருக்கிறார்கள்.

பதினாறு வயதில் பெருவுடையார் கோவில் பார்க்கும் போது இது ஏதோ அற்புதம் என்ற எண்ணம் மனதில் பதிந்தது. திரும்பத் திரும்ப பார்க்க வேண்டும் என்ற எண்ணத்தை ஏற்படுத்தியது. திரும்பத்திரும்பப் பார்த்தது கோயிலைப் பற்றிய விவரங்களை

தெரிய வைத்தது. அப்படிப் படித்துத் தெரிந்து கொண்ட பிறகு உடையார் ஸ்ரீ ராஜராஜத்தேவர் மீது ஈடுபாடு வந்தது. சோழ நாகரிகம் மொத்தமும் எனக்குத் தெரிய வந்தது. அந்தத் தனி மனிதனும் அவரைச் சுற்றியுள்ள நாகரிகமும் இந்தப் பெருவுடையார் கோவிலும் ஒன்று சேர்ந்து ஒரு கலவையாகி இதை எழுதி வேண்டுமென்ற எண்ணம் முப்பத்திரண்டு வயதில் ஏற்பட்டது. முப்பத் தெட்டு வயதில் இதற்கான, முயற்சிகளை நான் வேகமாகத் துவங்கினேன். இந்த முயற்சிகளை நான் வேகமாகத் துவங்கினேன். இந்த அறுபது. வயதில் எழுதி முடித்து விட்டேன்.

வாசகர்களுக்கு இவர்கள் உண்மையா, இது கற்பனையா என்று ஒரு புதினத்துக்குப் பிறகு கேள்விகள் வருவது இயற்கை. நூற்றுக்கு தொண்ணூற்றொன்பது விழுக்காடு இதிலுள்ள பெயர்கள் உண்மையானவை. பல சம்பவங்கள் உண்மையானவைகள் கல்வெட்டு ஆதாரமுள்ள சம்பவங்கள் என்னுடைய கற்பனையும் இதில் கலந்திருக்கிறது.

பஞ்சவன்மாதேவி எப்படி இறந்தார் என்று யாருக்கும் தெரியாது. அவர் இறந்த விதம் என் கற்பனை. ஆனால், அவருக்காக பள்ளிப்படைக் கோயில் ராஜேந்திர சோழன் எழுப்பியது என்பது சரித்திரம்.

ராஜராஜ பாண்டிய ஆபத்துதவிகளான சேரதேசத்து நம்பூதிரிகள் தேடிக் கொலை செய்ய முயற்சிக்கிறார்கள் என்பது என் கற்பனை. ஆனால் மாதேவடிகள் ஸ்ரீ ராஜராஜ சோழர், மகள் என்பதும் அவர் நடுவிற் பெண்பிள்ளை என்பதும், அவர் புத்த மதத்தைச் சார்ந்தவராக இருந்திருக்கக்கூடும் என்பதும் சரித்திரம்.

பாறைகள் வெட்டப்பட்ட இடம், கொண்டுவரப்பட்ட விதம் யூகம்தான். வேறு அப்படியும் இது இருந்திருக்காது என்பதுதான் அந்த யூகத்தின் அடிப்படை

சாரப்பள்ளத்திலிருந்து சாரம் கட்டி இத்தனை உயரம் கல் சுற்றியிருக்கிறார்கள். என்பது சிறிதளவுகூட நம்ப முடியாத ஒரு செய்தி. தஞ்சையில் வாழும் திரு.ராஜேந்திரர் என்ற பொறியியல் வல்லுனரின் கூற்றுப்படி இது ஸ்பைரல் சாரமாக, வளைந்து வளைந்து போகும் பாதையாகத்தான் இருந்திருக்க வேண்டு



[illegible] ஒரு யூகம். அந்த மண் கொண்டுபோய் கொட்டப்பட்ட [illegible] ஒரு சிறு குன்றென அது நிற்கும் விதமும் இன்னமும் இருக்கின்றன.

அருண்மொழிப்பட்டனும், சீருடையாளும், சாவூர் பரஞ்சோதியும், வீணை ஆதிச்சனும், கோவிந்தனும், நிஜம்.

சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீ ராஜராஜத்தேவர் பார்க்க விற்போர் [illegible] நிஜம். கண்டன் காரியும், காரிக் குளிப்பாகையும் நிஜம். இந்த விநோதப் பெருந்தச்சன் குணவன் நிஜம். குஞ்சரமல்லப் பெருந்தச்சர் நிஜம்.

ஆனால், உள் சாந்தாரத்திலுள்ள பரத நாட்டியச் சிற்பங்களுக்கு பஞ்சவன்மாதேவிதான் ஆதாரமாக இருந்தார் என்பது என் [illegible] நாவலுக்காகக் கொடுக்கப்பட்ட சுவை.

திருவாதிரைக் களியோடு தந்தக் கூட்டுக்கறியில் அவரை எத்தனை துவரை எத்தனை என்று எண்ணாது நன்கு ருசித்து உண்ணுங்கள்.

சோழதேசத்து மேன்மையும், தமிழர் நாகரிகமும் ஆயிரம் வருடங்களுக்கு முன்னோர்கள் வாழ்ந்த வாழ்க்கையை உங்களுக்கு ஒரு கோடி காட்டுவதுதான் இந்தப் புதினத்தின் நோக்கம்.

இருநூற்று முப்பத்தேழு நாவல்கள் நான் எழுதியதினுடைய அடிப்படைக் காரணமே இதை எழுதத்தான். மற்ற நாவல்கள் அத்தனையும் உடையார் எழுதுவதற்குண்டான பயிற்சிதான். ஏதேதோ செய்து, எங்கெங்கோ அலைந்து எதைஎதையோ முக்கியம் என்று கருதி சிதறி சின்னாபின்னப்பட்டு பிறகு மறுபடியும் ஒன்று கூடி இப்படி ஆறு பாகத்திற்கு ஒரு புதினம் எழுத முடிந்திருக்கிறதென்றால் அது குருவருள் அன்றி வேறு என்ன.

என் குருநாதர் யோகி ராம்சுரத்குமார் என்னை நேசித்தார். யூ ஆர் மை பென் என்று சொன்னார். மறுபிறவி என்று ஒன்று இருந்தால் இந்தப் பிரச்சனைக்காரன் (யோகிராம்சுரத்குமார்) பாலகுமாரனோடு இருக்க விரும்புகின்றான் என்று சொன்னார். அவர் மகாஞானி. எல்லாம் கடந்தவர். அவருக்குப் பிறவி உண்டா. என்னுள் இருக்கிறார். என்னை இயக்கிக் கொண்டிருக்கிறார். அந்த இயக்கத்தின் வெளிப்பாடுதான். இந்த உடையார், இந்த ஆறுபாகப் புதினம்.

சோழசாம்ராஜ்ஜியத்தின் மீது தன் பொன்னியின் செல்வன் மூலம் என்னைக் காதல் கொள்ள வைத்த பேராசிரியர் கல்கி அவர்களுக்கு என் வணக்கத்தையும், நன்றியையும் நான் சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன்.

நாவல் எழுத உதவி செய்த என்னுடைய இலக்கிய தொல் பொருள் ஆராய்ச்சி நண்பர்களுக்கும் சோழ தேசத்துக் காதலர் களுக்கும் என் நன்றியை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இலக்கியம் படிக்க என்னை இடையறாது ஊக்கப்படுத்தி 'பாலகுமாரன் நல்லவன். அவனால் பலருக்கு நல்லது நடக்கும்' என்று வெகுநாட்களுக்கு முன்னே உறுதியளித்து எனக்குத் தெம்பு கொடுத்த என் தாயார், தமிழ்ப் பண்டிதை தெய்வத் திரு ப.சு.சுலோச்சனா அவர்களுக்கும் என் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். என் தமிழ் அவர் போட்ட பிச்சை.

உடையார் எழுதி முடித்ததும் பொங்கிப் பொங்கி வந்த கடிதங்களும், தொலைபேசி அழைப்புகளும், நேரே பார்க்கும் போது கட்டிக் கொண்டவர்களும் 'எப்படி இந்த மாதிரி ஒரு நாவல் எழுதினேள்' என்று கண்கலங்கியவர்களும், 'இந்த தடவை ஊட்டிக்கோ, கொடைக்கானலுக்கோ போப்போறதில்லை. இந்த சம்மர்ல தஞ்சாவூர் முழுக்க ராஜராஜனை தேடிண்டு போகப் போறோம். போகும்படியா பண்ணிட்டேங்க' என்று சொன்னவர் களும், இம்மாதிரி பாண்டியர்கள் பத்தி எழுதமுடியாதா என்று ஆதங்கப்பட்வர்களுக்கும், சோழர்கள் காலத்துல தமிழ் எப்படி யிருந்தது என்று கேள்வி கேட்டவர்களுக்கும், ஒரு பக்கம் லெட்டர் எழுதறதுக்கு முடியலை என்னால, இத்தனை பக்கம் எழுதியிருக்கீங்கன்னா நீங்க மனுஷனா, இல்ல வேற ஏதாவதா எனக்குத் தெரியலை என்று வியந்தவர்களுக்கும், என் படைப்புக்கு மறைமுகமாகத் துணைபுரிந்த என் துணைவியர் கமலா, சாந்தா இருவருக்கும், 'சூப்பர் நாவல்பா' என்று சொன்ன மகள் ஸ்ரீ கௌரிக்கும், அப்பா ஒருநாள் உட்கார்ந்து முழுக்க படிக்கணும். படிப்பேன் என்று வாக்குறுதி அளித்த மகன் சூர்யா என்கிற வேங்கடரமணனுக்கும், நாவல்ல இந்த இடம் தப்பு வந்துடுச்சு மாத்தணும் என்று சுட்டிக்காட்டி மாற்றுவதற்கு வழியைச் சொல்லி உதவி செய்த சம்பத்லக்ஷ்மிக்கும், ஒலி நாடாவில் கதை சொல்வதை அங்கிருந்து ஆர்வமாகக் கேட்டு உற்சாகப்படுத்திய பாக்யலக்ஷ்மி



[illegible]க்கும், இந்திரா பாஸ்கருக்கும் தஞ்சாவூருக்குத்தானே [illegible] நாங்களும் வரோம் என்று உடன் வந்து என் பித்து பிடித்த நிலையை பார்த்து ரசித்த அந்தத் தோழிகளுக்கும், [illegible]யிலுள்ள தொல்பொருள் ஆராய்ச்சி அதிகாரிகளுக்கும், [illegible]களுக்கும், என் நண்பர் திரு.ராஜவேலுவுக்கும் அவர் [illegible] திரு.சத்தியமூர்த்திக்கும், பல நேரங்களில் இந்த ஆறு பாகத்திலும் எனக்குப் பிழைதிருத்தம் செய்தும், தேவையான குறிப்புகளை எடுத்து வைத்தும், என்னோடு விவாதித்தும், என்னைச் சரியான கோணங்களில் பார்க்க வைத்ததுமான என் உடன்பிறந்த சகோதரி, சரித்திர ஆசிரியை சிந்தா ரவி அவர் களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றி உரித்தாகுகிறது.

ஆறு பாக நாவல் கண்டு அசராது சீக்கிரம் எழுதுங்கைய்யா என்று ஊக்கப்படுத்திய விசா பப்ளிகேஷன் ஸ்ரீ திருப்தி அவர்களுக்கும்,

இந்த நாவல் தொடர்ந்து வெளிவர தன் பல்சுவை நாவல் மாத பத்திரிகையின் இடம் கொடுத்து பெருமிதப்பட்ட திரு.பொன் [illegible]சேகர் அவர்கட்கும்,

இந்த நாவல் நிற்கக்கூடாது. முடிக்கப்பட வேண்டும். என்ன உதவி தேவையெனினும் நான் செய்கிறேன் என்று உற்சாகம் தந்த என் அருமை நண்பர் ஸ்ரீ எம். ரவிச்சந்திரன், கோவை அவர்கட்கும்,

சிறப்பாக அட்டைப்பட வரைந்த ஓவியர் ஷியாம் அவர்கட்கும்,

என் கண்பார்வையில் ஒரு கோளாறு ஏற்பட, இனி எப்படிப் படிப்பேன், எவ்விதம் எழுதுவேன் என்று பயந்தபோது அக்குறையை நீக்கி அருளிய எங்கள் மயிலாப்பூர் அருள்மிகு முண்டகக் கண்ணி பெருமாட்டிக்கும் என் சிரம் தாழ்ந்த வணக்கங்கள்.

என் எழுத்து வேகத்திற்கு ஈடுகொடுத்து கேட்ட போதெல்லாம், சரித்திரப் புத்தகங்களை என் முன் பரப்பி இந்நாவலை ஒலி நாடாவிலிருந்து காகிதத்திற்கு மாற்றிய என் உதவியாளர் திரு கிருஷ்ணமூர்த்திக்கு என் ஆசிகள்.

எந்த [illegible]யக்தியும் தனி மனிதனால் நடந்து வருவதில்லை. ஒரு [illegible] கூட்டு முயற்சியால்தான் முளைக்கிறது. மலர்கிறது.

இப்புதினத்தை சோழ மக்களின் நாகரிகத்தை அவர்கள் வாழ் வாங்கு வாழ்ந்ததை பெருவுடையார் கோயில் கட்டிடக்கலைச் சிறப்பை கணித மேன்மையை, செல்வச் செழிப்பை வெளிக் கொணர்ந்த என் அரசர் சோழமாமன்னர் சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவர் அவர்கள் பாதங்களில் வைத்துப் பணிகிறேன்.

வாழ்க இராஜராஜத்தேவர்
வளர்க தமிழ் மொழி.
சோழம் சோழம் சோழம்

5ஆம் தேதி ஜூலை மாதம் 2006

80/4 வாரன் சாலை
மயிலை
சென்னை- 600 004
போன்: 24612343.

என்றென்றும் அன்புடன்
**பாலகுமாரன்**

# உடையார்
# 6-ம் பாகம்

## 163

இளவரசர் இராஜேந்திரர் தலைமையில் அவருடைய படைகள் தஞ்சைக்குள் நுழைந்தபோது மிகப்பெரிய ஆரவாரம் ஏற்பட்டது.

அவரோடு அவரால் கவரப்பட்ட புரவிக்கூட்டம் ஒன்று வந்தது. தஞ்சையின் தெருக்கள் முழுவதும் புரவிகள் அலைந்தன.

சிறு தேர்கள் மிகுந்த சத்தத்தோடு ஜனக்கூட்டத்தைக் கிழித்துக் கொண்டு பறந்தன. எங்கும் ஒரு உற்சாகமும், போர் வெறியும் ததும்பி நின்றன.

மக்கள் போர் வீரர்களை வணங்கி கையெடுத்துக் கும்பிட்டு, ஏதாவது கொடுங்களய்யா என்று கேட்டார்கள். பாத்திரங்களும், நகைகளும், பொற்காசுகளும் பொது மக்களுக்குக் கொடுக்கப் பட்டன.

போர்வீரர்கள் தங்களுக்காக சேர்த்ததுபோக, தாங்கள் கொண்டு வந்த பொருளை மக்களிடம் கொடுத்து கம்பீரமாய் நெஞ்சு நிமிர்த்திப் போனார்கள். பொதுமக்களிடம் கொடுக்க காசுகளைத் தனியாக மறைத்து வைத்திருந்தார்கள்.

வீடுகளுக்குப் போய், கொண்டு வந்திருந்த நகைகளும், விளக்குகளும், பாத்திரங்களும், மரச்சாமான்களும், விளையாட்டு பொம்மைகளும் கொடுத்தார்கள். பல வீடுகளிலிருந்து அபகரிக்கப்பட்ட வெங்கலச் சிலைகள் மறவர்களின் வீடுகளில் குடியேறின. ஒரு பாரவண்டி முழுவதும், இருபது கை நீளமுள்ள, நான்கு பேர் கட்டிபிடிக்கக் கூடிய பெரிய சந்தனமரம் ஏற்றி வரப்பட்டது.

அடாடா... என்ன அற்புதமான மரம். இதை இழைத்தால் என் ஆயுசுக்கும் போதும் என்று ஒரு அந்தணர் மரம் பார்த்து சந்தோஷப்பட்டார். அவருக்கு ஒரு கிளை வெட்டிக் கொடுக்கப் பட்டது.

உனக்கல்ல. உங்களுக்கு என்று சொல்லப்பட்டது. மற்ற அந்தணர்கள் பரபரப்பானார்கள். பங்கு போட அளவெடுத் தார்கள். நடுநாட்டு அந்தணர்களும் தொண்டை நாட்டு அந்தணர் களும் சுறுசுறுப்பானார்கள்.

இராஜேந்திரரோடு மிகப்பெரிய பொக்கிஷம் வந்தது. ஒரு பெட்டி நிறைய தங்க நகைகள் இருந்தன. தன்னுடைய மனைவியை அழைத்து அந்தப் பெட்டியைத் திறந்து ஆளுக்கொரு பிடி நகைகள் வழங்கினார்.

தங்கப்பூவால் கோர்க்கப்பட்ட ருத்ராட்சத்தை தான் அணிந்து கொண்டார். அபரகண்டியை ஈசான பண்டிதருக்குப் பரிசளித்தார். பெரிய அடுக்கு தீபத்தை வந்தியத்தேவருக்கும், தீபத்தட்டை குந்தவைக்கும் கொடுத்தார். குந்தவையும், பட்டமகிஷி தந்திசத்தி விடங்கியும் இராஜேந்திரரைக் கட்டித்தழுவி முத்தமிட்டு வரவேற்றனர். அவர்களுக்கு அவர் பரிசு கொடுக்க முயற்சித்த போது வேண்டாம் என்று மறுத்து விட்டார்கள்.

அரசர் வருவார் தருவார். உன் மனைவியரைச் சந்தோஷப் படுத்து. அதுதான் முக்கியம் என்று அவர்கள் பின்வாங்கிக் கொண்டார்கள். என்ன சொல்லியும் எதுவும் ஏற்க மறுத்தார்கள்.

சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவர் தஞ்சை எல்லைக்கு வந்துவிட்டார் என்றதும், மக்கள் அத்தனை பேரும் திரண்டு தஞ்சை எல்லைக்கு ஓடினார்கள். புறம்படி முழுவதும் மக்கள் தலைகள்தான் இருந்தன.

இராஜராஜர் தன்னுடைய கறுப்புக் குதிரையில் வெள்ளை உடை அணிந்து புன்முறுவல் பூத்த வண்ணம் நிதானமாய் மக்கள் கூட்டத்திற்கு நடுவே ஊர்ந்து வந்தார். அவர் கால்தொட்டு பல பேர் கும்பிட, மெய்க்காவல் வீரர்கள் அதிகம் தொடாமல் இருக்க எச்சரித்தார்கள். விலக்கினார்கள்.

மக்கள் தலைக்குமேல் கையெடுத்து கும்பிட, இராஜராஜர் இரண்டுபுறமும் கைவீசி அவர்கள் ஆசீர்வதித்துக் கொண்டு வந்தார். இராஜராஜருக்குப் பின்னால் பட்டத்து யானை வந்தது. பட்டத்து யானை மீது ஒரு குடம் இருந்தது. அந்தக் குடத்தை அணைத்துக்



கொண்டிருந்த போர் வீரன் தன் ஈட்டியைத் தலைகீழாய் பிடித்துக் கொண்டிருந்தான். அவன் முகம் கல்லென இருந்தது.

''யார்.. யார் அது.'' எல்லோரும் விசாரித்தார்கள்.

அது இறந்தவரின் அஸ்தி என்று சகலருக்கும் தெரிந்திருந்தது.

''ஈட்டி தலைகீழாக இருந்தால் தளபதி என்றுதானே அர்த்தம். யார் அது...''

மக்கள் பதறியபடி கேட்டார்கள்.

வைணவதாசன் என்று சொல்லப்பட்டது. வைணவதாசனை நிறைய பேருக்குத் தெரிந்திருந்தது. பழமர்நேரிக்கு செய்தி போயிற்று. வைணவதாசன் மனைவிக்கு நிதானமாய் செய்தி சொல்லப்பட்டது. வைணவதாசனின் மனைவி பெரிதாக அலறினாள். நெஞ்சைப் பிடித்துக் கொண்டாள். சுருண்டு விழுந் தாள். அவளது இரண்டு குழந்தைகளும் அலறின. தாயைக் கட்டிக்கொண்டு ''எழுந்திரம்மா... எழுந்திரம்மா'' என்று கதறின.

அந்த ஊர் மக்கள் தலையில் அடித்துக் கொண்டு வாய்விட்டு அழுதார்கள். அந்தணத்தேவனே... அந்தணத்தேவனே.. என்று பழமர்நேரி மக்கள் நெஞ்சில் அடித்துக்கொண்டு அழுதார்கள்.

அந்தணனா... தேவனா... பார்ப்பனக் குலக்கொழுந்தா... க்ஷத்திரிய சிங்கமா...

இரண்டும்தான். அதனால்தான் அவனை அந்தணத் தேவன் என்று அன்போடு அழைத்து அழுதார்கள். வைணவதாசன் மனைவிக்கு வைத்தியரால் முதலுதவி செய்யப்பட்டது. ஆனால், அவள் சித்தம் கலங்கியது போலவே கிடந்தாள்.

''எனக்கு ஒன்றுமில்லை.. எனக்கு ஒன்றுமில்லை. நான் நன்றாக இருக்கிறேன்.'' என்று நடுநடுவே சொன்னாள்.

ஆனால், அவள் அப்படிச் சொன்னதே அவள் நன்றாக இல்லை என்பதைத் தெள்ளத் தெளிவாகக் காட்டியது.

அவள் மெல்ல மனம் பேதலித்துக் கிடக்கிறாள் என்று தெரிந்தது.

யானை வந்தது. யானையின் மீது அஸ்திக்கலசம் வந்தது. அவள் வீட்டு எதிரே நின்று யானை பிளிறியது.

அஸ்திக்கலசம் இறக்கப்பட்டது. வாசல் திண்ணையில் வைக்கப்பட்டது. உள்ளே கூடத்தில் படுத்துக் கிடந்தவள் மெல்ல எழுந்தாள். முகம் துடைத்துக் கொண்டாள். வாங்கோ என்று உரத்துச் சொன்னாள். எழுந்து உயிருள்ள புருஷனை வரவேற்பது போல வேகமாக வாசலுக்குப் போனாள். பெண்கள் பின்

தொடர்ந்து ஓடினார்கள். வாசற்பக்கம் நின்று அந்த பித்தளைப் பாத்திரத்தையே வெறித்துப் பார்த்தாள்.

"இதுதானா... இவ்வளவுதானா... இவர்தான் என்னவரா.. இவர் தான் ஒற்றர் தளபதி வைணவதாசனா. சோழர்குல சிங்கங்களின் தூதுவனா.

பலபேர் ஊனத்தையடையாமல் திரும்பியிருக்கிறீர்கள். இந்த அந்தணனை மட்டும் விட்டுவிட்டீர்கள். எத்தனை சேனாபதிகள், எத்தனை உபசேனாபதிகள். ஆனால், ஒற்றர் மட்டும் கொல்லப் பட்டிருக்கிறார். எப்படிச் செத்தார் என் புருஷன். சொல்லுங்கள்... சொல்லுங்கள். எப்படி இறந்தார் என் புருஷன். யாரெல்லாம் அவருக்கு அருகே இருந்தீர்கள் சொல்லுங்கள். என்ன நடந்தது. சொல்லுங்கள். நீங்கள் எவரும் அவரோடு இல்லையா? தனியா வெட்டுப் பட்டாரா?"

மருவூர் அந்தணர் முன்னே வந்தார். கை கூப்பினார்.

"நான் அவரோடு இருந்தேன்" என்றார்.

"நீங்களா.. நீங்கள் ஏன் அங்கு போனீர்கள்"

அந்தணர் விவரித்தார். அவள் கேட்டுக் கொண்டாள்.

ஊர் மொத்தமும் அந்தணர் வார்த்தைகளைச் சிறிதுகூட சப்தமில்லாமல் கேட்டுக் கொண்டது.

"அவர்களைக் காப்பாற்ற இளவரசர் இராஜேந்திரரின் கட்டளைப்படி வைணவதாசன் வந்ததாகவும், அவர்களோடு பேசும்போது கண்டுபிடிக்கப்பட்டதாகவும், பிரம்பால் அடித்தும், சூட்டுக்கோலால் இழுத்தும், கத்தியால் குத்தியும், எட்டி உதைத்தும் அவர் கொல்லப்பட்டார்" என்று சொல்லப்பட்டபோது, ஜனங்கள் எழுந்து நின்று வாய்விட்டுப் புலம்பினார்கள். பிளிறினார்கள். கதறினார்கள்.

ஊர்கூட்டம் நெஞ்சில் அடித்துக்கொண்டு அழுதது. தூணைப் பிடித்துக் கொண்டிருந்த வைணவதாசனின் மனைவி மறுபடியும் சுருண்டு விழுந்தாள். அவள் குழந்தைகள் அலறின. கூட்டத்தைப் பிளந்து கொண்டு கருவூர்த்தேவர் வந்தார்.

"அம்மா... அம்மா... என் தாயே. எழுந்திரு.." என்று அவள் உச்சந்தலையில் கை வைத்தார்.

சட்டென்று அவள் கண்விழித்தாள். அவளுக்கு அவர் நீர் கொடுத்தார். முகத்தில் நீர் அடித்தார். தலையில் நீர் ஊற்றினார்.



எழுந்திரடா.. எழுந்திரு.. எழுந்திரு.. என்று உள்ளே அழைத்துக் கொண்டுபோனார். திரும்பி மருவூர் அந்தணரைப் பார்த்தார்.

"அந்த அஸ்திக் கலசத்தை வைணவதாசனாகப் பாவித்து மறுபடியும் தகனத்திற்கு ஏற்பாடு செய்யுங்கள். குழந்தைகளை வைத்து நிறைவேற்றுங்கள்." என்று கட்டளையிட்டார். மருவூர் அந்தணர்கள் குழந்தைகளுக்குப் புதிய கௌபீனம் உடுத்தி தலையில் நீர் வார்த்தார்கள். இறுக்க மூடியிருந்த அஸ்திக்கலசம் மீது காவிரிஜலம் விடப்பட்டது.

பிரேதமே நாங்கள் உன்னை ஸமஸ்கரிக்கப் போகிறோம். உன்னுள் இருந்த மகத்தான உயிர் இந்த இடத்தில் சுற்றிக் கொண்டிருந்தால் அது அமைதியாகட்டும். சாந்தியாகட்டும். ஈசனை நோக்கி நகரத்துவங்கட்டும் என்று பிரார்த்தித்தார்கள். வைணவதாசனின் மனைவியையும் வெளியே அழைத்து வந்து நீர் ஊற்றச்சொன்னார்கள்.

"தாயே நான் பேசுவதைக் கேள்."

கருவூர்த்தேவர் பேசத் துவங்கினார்.

"மரணத்தை வரவேற்க மனிதனுக்கு உரிமையில்லை. உன்னை மரணம் ஏற்கும் வரையில் நீ மரணமடையத்தகாது. அப்படி மரணத்தை வரவேற்ற உயிர்கள் மேலே போகாமலும், கீழே இறங் காமலும் நடுவே சிக்கிக்கொண்டு வருடக்கணக்கில் அவஸ்தைப் படுகின்றன. கீழே பிறக்கவே மறுபடியும் தவம் செய்கின்றன. பல ஆண்டுகள் அவர்கள் செய்யும் தவத்தை உயிரோடு இருந்து, ஒரு சிலநாட்களில், ஏன் ஒரு சில நாழிகையில் நீ பெற்று விடலாம்.

ஒரு நிறைவான வாழ்க்கை வாழ்ந்துவிட்டாய். மிகப் புகழ்மிக்க சூட்சுமமிக்க ஒரு மனிதனோடு நீ குடித்தனம் செய்திருக்கிறாய். இந்தத் தேசத்திற்கென்று அவன் உயிர் நீத்திருக்கிறான். உன்னுடைய சுக சௌகரியங்கள், உன் குழந்தைகளின் சுக சௌகரியங்கள், இந்தத் தேசத்து மக்களால், மன்னரால் கவனிக்கப் படும். அப்போது உன் வேலையென்ன. இறையோடு அமர்ந் திருந்தல். எங்கும் பரவிய இறையை, எல்லாமுமாய் இருக்கும் இறையை உன்னுள் உணர்ந்து. உன்னுள் உணர்ந்த இறையை வெளியிலேயும் தரிசித்தல். அப்படித் தரிசிக்கும் போது நீயும் வைணவதாசனும் வெவ்வேறல்ல என்பது புரியும். எனவே அமைதியாக இரு. உன் புருஷன் மகாவீரன்.

அந்தணர்களை அனுப்பாது வைணவதாசனை மட்டுமே அனுப்பியிருப்பின் இந்தக் கோரம் நிகழ்ந்திருக்காது. விஷயங்

களைக் கிரகித்துக் கொண்டு வெகு அற்புதமாய் வைணவதாசன் திரும்பியிருப்பான். இது விதியின் வேலை. அந்தணனை நரபலி கொடுத்துத்தான் கோயில் எழுப்பவேண்டு மென்பது சிவனின் கட்டளை.

நூற்றுக்கணக்கான அந்தணர்களைச் சேரதேசத்துக் காந்தளூர் சாலையில் சிரச்சேதம் செய்தோமல்லவா. அப்போது வைணவ தாசனும் இருந்தானல்லவா. ஒவ்வொரு அந்தணனுடைய இறப்பும் அவன் உடம்பில் சூட்டுக் கோலால் எழுதப்பட்டது. வேறொன்று மில்லை. காந்தளூர்ச்சாலை கடிகை கதவு திறந்து விட்டது வைணவதாசன். அப்போது அவன் பதினைந்து வயது இளைஞன்.

பிரம்மராயரால் போஷித்து வளர்க்கப்பட்டவன். இடுப்பில் ஒரு துண்டும், மேலே ஒரு துண்டுமாய் யாசகம் கேட்பவன் போல உள்ளே நுழைந்து, வேதபாடங்கள் சொல்பவன் போல அங்குள் ளோரிடம் நடித்து, படையெடுப்பு நடக்கும் ஒரு மாதம் முன்பே அங்கு போய் அமர்ந்து, சகல விஷயங்களையும் தெரிந்து கொண்டு, இரவு கோட்டைக்கு வெளியே அம்பெறிந்து தகவல் சொல்லி கதவும் திறந்து வைத்தவன். அவனை அடித்து நொறுக்க முற்பட்ட போது, சிட்டெனப் பறந்து மேற்கு வாசல் வழியாய் வெளியேறி, மறுபடியும் சக்ரவர்த்தி உடையாருடன் சேர்ந்து கொண்டவன்.

சக்ரவர்த்தி கட்டளையின்படி கிருஷ்ணன்ராமனான பிரம்ம ராயர் பதினாறு வயதிலேயே அவனுக்கு உபதளபதி பட்டமும், கேயூரமும் அளித்தார். ஒற்றர் படையில் முக்கியமானவராகச் சேர்த்தார்.

முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும். எந்தக் கணக்கும் இங்கு முடிவுறாமல், பதிலில்லாமல் போவதில்லை. எனவே, உன் புருஷனுடைய மரணத்திற்கு வருத்தப்படுவதை இப்போது, இந்த க்ஷணத்திலிருந்து விட்டுவிடு.

அவன் கதவு திறந்ததால்தான் ஆயிரக்கணக்கான அந்தணர்கள் உயிர் இழந்தார்கள். ஒவ்வொரு அந்தணரும் அவன் முதுகில் ஒரு சூடாய் எழுதப்பட்டது. தாயே... அவசியமென்று சொல். இந்த இடத்தில் வைணவதாசனை வரவழைக்கிறேன். அவனோடு சற்று பேசிக் கொண்டிரு.''

ஒரு போர்வை எடுத்து அமர்ந்திருந்தவள் மீது சட்டென்று போர்த்தினார். கைதட்டினார். அந்தப் போர்வை விரிந்து விசாலமாகி ஒரு இருட்டு அறையாக மாறியது. ஒளியாய் வைணவ



தாசன் அவள் முன்பு வந்து நின்றான். கைகூப்பி வணங்கினான். அவளும் வணங்கினாள்.

அங்கு மொழியில்லை. ஆனால் பேச்சு புரிந்தது. அங்கு செய்கை யில்லை. ஆனால் மனம் தெளிவாயிற்று.

''இனி பழமர்நேரி வேண்டாம். தஞ்சைக்குக் குடிபெயர்ந்து விடு. சக்ரவர்த்தி உடையார் கட்டும் கோயிலுக்குப் பணி செய்து வா. வில்வ இலைகளால் நீண்ட மாலை ஒவ்வொரு நாளும் செய்துவருவது என் மனதிற்கு உகந்ததாக இருக்கும்.

உன் குழந்தைகளுக்கு மிகப்பெரிய பலம் கிடைக்கும். உனக்கு ஆறுதல் தரும். நீ கொடுத்த மாலையைப் போடும்படியாகவே உடையார் உத்தரவிடுவார். இடது தோளிலிருந்து வலது கை நுனிவரை பத்து கை நீளம் வில்வ மாலை தினமும் செய்து வா. நான் இருக்குமிடம் அமைதியான இடம்.

நான் எதிர்த்து நின்று தாக்கியவர்களும், என்னைத் தாக்கியவர் களும் இங்கே சந்தோஷமாய் இருக்கிறார்கள். ஒற்றுமையாய் இருக்கிறார்கள். என்னால் கொல்லப்பட்டவர்களும் என்னைக் கொன்றவர்களும், என் மீது பிரியமாய் இருக்கிறார்கள். இது வேறு உலகம். என்னைப்பற்றி நெல்முனையளவும் கவலைப்பட வேண்டாம். இத்தனை நாள் என்னோடு இருந்ததற்காக உனக்கு சிறிய பரிசு ஒன்று தருகிறேன். உயிர் என்பது இதுவே.''

வைணவதாசன் மனைவியின் உடம்பைச் சுட்டிக் காட்டினான். சட்டென்று அவள் உயிர் வெளியே வந்தது. அவள் ஆடிப் போனாள். உடம்பு உலுக்கிப் போட்டது. சுருண்டு சரிந்தது. உயிர் வெளியே வந்து நின்றது. அவருக்கருகே வந்து கைகூப்பியது. அவர் மெல்ல அவளைத் தழுவிக் கொண்டார்.

''இது எண்ணம். தழுவுதல் என்கிற எண்ணம். எண்ணம் மட்டும் வாழ்க்கையாகாது. எண்ணத்தைச் செயலாற்றுகின்ற உடம்பு இருந்தால்தான் வாழ்க்கை. உடம்பற்ற எண்ணம், வேறொரு வாழ்க்கை.

தற்கொலை செய்து கொள்ளக்கூடாது என்று தடுத்து நிறுத்து. தற்கொலை செய்து கொண்டுள்ளவர்கள் பெரும் அவஸ்தைக்கு ஆளாகிறார்கள். மற்றவர்களுக்கு ஆறுதலாக இருக்க உன் வாழ்க் கையை நெறிப்படுத்திக்கொள். வில்வ மாலைப்பணி தொடர்ந்து நடக்கட்டும். இப்போதைக்கு நான் விடைபெறுகிறேன்.''

அவன் கைகூப்பினான். அவளும் கைகூப்பினாள். மெல்லப் பின்னடைந்தாள். உடம்புக்குள் புகுந்தாள். மறுபடியும் உடம்பு உலுக்கிப் போட்டது.

சரக்கென்று கருவூர்த்தேவர் போர்வையை இழுத்தார். அவ ளையே உற்றுப் பார்த்தார். அவள் மெல்ல தலை நிமிர்த்தினாள். கருவூர்த்தேவரைப் பார்த்தாள். சிரித்தாள். அந்தச் சிரிப்பில் புரிந்தது என்கிற பொருள் இருந்தது.

சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவர் அவள் வீட்டிற்கு வந்து கைகூப்பியபோது, அவளும் பதிலுக்குக் கைகூப்பினாள்.

என்னென்ன உதவிகள் வேண்டும் என்று கேட்ட போது, தஞ்சைக்குக் குடிபெயரப் போவதாய் வைணவதாசன் மனைவி சொன்னாள. அவர் சட்டென்று நிமிர்ந்தார்.

"தஞ்சையில் எங்கே"

"கோயிலுக்கு அருகே"

"நல்லது. தனித்த வீடு ஒன்றை நான் ஏற்பாடு செய்கிறேன்."

"தினமும் வில்வ இலை பறித்து, மாலையாகத் தொடுத்து நீங்கள் ஸ்தாபிக்கப் போகின்ற பரமேஸ்வர உடையாருக்கு நான் அணி விக்க வேண்டுமென்று என்னுடைய கணவர் உத்தரவிட்டிருக் கிறார். சூட்சும வடிவில் என்னோடு தொடர்பு கொண்டிருக்கிறார். நான் வைணவ சம்பிராதாயத்தைச் சேர்ந்திருந்தாலும் வில்வ இலையால் சிவனுக்கு மாலை அணிவிப்பதை நீங்கள் அனுமதிக்க வேண்டும்."

"அனுமதிப்பதென்ன. எழுத்து மூலம் உத்தரவு தருகிறேன். இந்தக் கிராமத்திலேயே ஆற்றங்கரை ஓரமாய் இருக்கின்ற நிலம் வாங்கி, உங்கள் பெயரில் எழுதி வைக்கிறேன். வருடாந்திர வருமானமாக அவை இருக்கட்டும். இதைத்தவிர கோயில் பணிக் கென்று உங்களுக்கு சன்மானமாக ஒரு பங்கு தரப்படும். எனவே, சோழதேசத்தின் அத்தனை மறவர்களும் உங்கள் முன்பு வாள் உயர்த்தி கீழ் பிடித்து வணங்குவார்கள். மண்டியிட்டு நிலம்பட தொழுவார்கள். உங்கள் கணவரை இழந்த உங்கள் துக்கத்தில் நானும் பங்கு பெறுகிறேன். உங்கள் வம்சத்தை இந்தச் சோழதேசம் காக்கும்."

சக்ரவர்த்தி உடையார் தன் நீண்டவாளை உருவினார் உயரத் தூக்கினார். சோழம் என்று கத்தினார். மெல்ல திரும்பினார். பூமியில் குத்தினார். அவள் முன்பு மண்டியிட்டு வணங்கினார்.



ணர் பதறிற்று. அந்தணர்கள் திகைத்தார்கள்.

ஹரஹர மகாதேவ என்று கூவினார்கள். தென்னாடுடைய சிவனே போற்றி. எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி என்று பிளிறினார்கள். கோவிந்தா... கோபாலா... மதுசூதனா... என்று பன்னிரண்டு பெயர்களையும் சொன்னார்கள்.

சக்ரவர்த்தி உடையார் நிதானமாக எழுந்தார். வாளை உறையில் போட்டுக் கொண்டார். வணக்கம் தெரிவித்தார். சரசர வென்று கீழே இறங்கி குதிரையில் தாவி ஏறினார். அவர் குதிரை கூட்டத்தை மெல்லப் பிளந்து கொண்டு வெகுவிரைவாய் தஞ்சை நோக்கி ஓடிற்று.

இராஜராஜரைப் பார்த்து தஞ்சை மக்கள் அலறினார்கள். உற்சாகத்தில் ஆடினார்கள். மேலைச் சாளுக்கியரை ஜெயித்த சந்தோஷத்தில், கோபத்தில் பிளிறினார்கள். இன்னும் கொல்லு வோம். சகலரையும் நிர்மூலம் செய்வோம் என்று முஷ்டி உயர்த்தி ஆரவாரம் செய்தார்கள்.

சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவர் தஞ்சைக்குள் நுழைந்தார். புறம்படியில் நிற்க வைக்கப்பட்டார்.

அந்தணர்கள் வேதகோஷம் செய்தார்கள். குடம் ஏந்தி வரவேற்றார்கள். குடத்தை இடித்துக் கொண்டு குதிரைபோகும் என்று அந்தணர்கள் பயந்தார்கள். எப்பொழுது வேண்டுமானாலும் விலகிக் கொள்ளலாம் என்கிற மனோபாவத்தில் உடல் அசைவில் இருந்தார்கள். ஆனால், சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜராஜத் தேவர் கீழே இறங்கினார். குடம் தொட்டார். அந்தணர்களுக்கு வணக்கம் சொன்னார்.

மெய்க்காவல் வீரன் ஒரு பொற்கிழியைக் கொடுக்க, அதை மூத்த அந்தணரின் கையில் கொடுத்தார். மறுபடியும் குதிரை ஏறினார். முகத்தில் சிரிப்பில்லை. ஆனால், ஒரு அமைதி இருந்தது. பார்வை தொலைதூரமாக இருந்தது. நெஞ்சு நிமிர்த்திருந்தது. ஆனால் முகத்தில் உற்சாகம் இல்லை. இறுக்கமாக இருந்தது.

ஒரு செயற்கரிய காரியம் செய்து முடித்துவிட்டு வந்தது போல ஒரு கனத்த அமைதியான நடவடிக்கையோடு அவர் காணப் பட்டார். ஜனங்கள் நெருக்கி அடித்துக்கொண்டு அவருக்கருகே வந்தார்கள்.

கோட்டையைச் சுற்றியுள்ள நான்கு வீதிகளிலும் வலம் வரவேண்டுமென்று தஞ்சை நகரத்து அதிகாரி கேட்டுக் கொண்டான்.

''எல்லா மக்களும் பார்க்க வேண்டுமென்று ஆசைப்படு கிறார்கள். பெண்டிர் பார்க்க வேண்டுமென்று விரும்புகிறார்கள். தயவு செய்து வரவேண்டும்'' என்று கீழே விழுந்து வணங்கிச் சொன்னான்.

சக்ரவர்த்தி உடையார் சரியென்று தலையசைத்தார். அவருடைய குதிரை பிரதானமான தெருக்களை நோக்கி நடந்தது. வலம் வந்தது. பின்னாலும், முன்னாலும், வலதும், இடதும் குதிரை வீரர்கள் கம்பீரமாய் ஆரோகணம் செய்துவர, நிதானமான நடையில் அவர் தஞ்சை நகரைச் சுற்றி வந்தார்.

பெண்கள் நடைபாவாடை விரித்தார்கள். குலவை சத்தம் எழுப்பினார்கள். குடிக்க நீர் கொடுத்தார்கள். பானகம் கொடுத் தார்கள். இனிப்புகளை வழங்கினார்கள். எல்லாவற்றையும் தொட்டுத் திருப்பினார்.

ஒருவர் வீட்டிலிருந்து மெல்லிய அழுகைச் சததம் வந்தது. அரசர் அருகே வந்ததும் அதிகமாயிற்று.

அரசர் திகைத்தார். யார் என்று விசாரித்தார்.

''நக்கன் சந்திரன்''

சத்யாசிரியனுடைய தளபதி அமர்ந்திருந்த யானை மீது ஏறி வாள்வீச, யானை அவன் காலை இழுத்து வீசி தரையில் அடித்து மிதித்துக் கொன்றது.

அந்தத் தளபதி வெட்டுப் பட்டு உயிர் நீத்தான் என்று சொல்ல, சக்ரவர்த்தி கண்கள் மூடிக்கொண்டார்.

புறம்படியில் வீடும், வெண்ணாற்றங்கரையில் நிலமும் எழுதினார். அவர் சொன்ன வாய்மொழி உத்தரவை ஓலையில் திருமந்திர ஓலை நாயகம் எழுதிக் கொண்டார். அவை கல்லிலே வெட்டவும், செம்பிலே வெட்டவும் உடனடியாக ஏற்பாடாக வேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டது.

இறந்த நக்கன் சந்திரன் மனைவியும், மற்ற உறவினர்களும் தெருவில் விழுந்து வணங்கினார்கள். கோட்டை வாசலை அடைந்தபோது, மக்கள் பேரரவம் செய்தார்கள்.

கோட்டை வாசலில் மூன்று இளைஞர்கள் ஓடிவந்தார்கள். அதில் உயரமாய் இருந்த ஒருவன் சட்டென்று தன் கையிலிருந்த அரளிமாலையை கழுத்தில் போட்டுக் கொண்டான். அரசனின் குதிரைக்கு முன்பு மண்டியிட்டான்.

அடேய்... அடேய்...என்று அரசர் உரக்கக் கத்தினார்.



அவன் வாளை உயர்த்தினான்.

''எங்கள் சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவர் இப்போரில் ஊத்தை அடையாது இருக்கும் பொருட்டு நான் வேண்டிக் கொண்ட வண்ணம் என் சிரமறுத்து இப்பூமியில் சமர்ப்பிக்கிறேன்'' என்று சொல்லி வாள் உயர்த்தி கழுத்தில் ஓங்கி வெட்டிக் கொண்டான். கழுத்து வெட்டுப்பட்டது. முழுவதும் வெட்டுப்படாமல் ஒரு முனையில் நின்று துடித்தது. கைகால்கள் பரபரத்தன. ஆனால், சட்டென்று கைகள் கும்பிட்டன.

அரசர் கீழிறங்கி ஓடிவந்தார். வாள் உருவினார். ஒட்டிக் கொண்டிருந்த ஒரு துணுக்கை, வேகமாக ஒரே வீச்சினால் அறுத்தெறிந்தார்.

அவன் உடலும், தலையும் பிரிந்தன. சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவர் வாள் உயர்த்தி கைகள் விரித்து வானம் பார்த்து அலறினார்.

''போதுமடா... போதுமடா... போதுமடா... போதுமடா... போது மடா...'' என்று அலறினார்.

நிற்க முடியாமல் தடுமாறினார். மெய்க்காவல் வீரர்கள் குதிரை யிலிருந்து குதித்து அவரை நெருங்கி அணைத்துக் கொண்டார்கள். இடுப்பில் கை போட்டு இறுக்கிக் கொண்டார்கள். நிற்க வைத்தார்கள்.

சட்டென்று ஒரு தேர் வர, அந்தத் தேரை நிறுத்தி, அவரை அணைத்த வண்ணம் ஏற்றித் தேரைச் செலுத்தினார்கள். கோட் டைக்குள் நுழைந்தார்கள். கோட்டைக்கதவு சார்த்தப்பட்டது.

அந்தப் பையன் தான் பலிகொடுக்கப்பட வேண்டும் என்று முன்பு ஆசைப்பட்ட பையன். சேரதேசத்திற்குப் போய் போர்ப் பயிற்சி பெற்றுவந்த இளைஞன். இரண்டு துண்டாய் கிடந்தான். தஞ்சை நகரத்து கோட்டைவாசலில் அவன் ரத்தம் பரவி உறைந்தது.

இது சரிதான் என்றும், தேவையில்லை என்றும், இப்படிச் செய்தல் கூடாது என்றும் பல்வேறு விதமாக ஜனங்கள் பேசிக் கொண்டார்கள். வந்து வந்து அந்த இளைஞனைப் பார்த்தார்கள். அவன் தாய் ஓடிவந்து அழுதாள். பெரிய வெள்ளைத் துணியை அவன்மீது போர்த்தினார்கள். அவனருகே புலிக்கொடியை நட்டார்கள்.

மறுபடியும் எல்லையில் பெரும் கோஷம் கேட்டது.

பழுவேட்டரையர் வருகிறார் என்றும், மேலைச் சாளுக்கிய சேனாதிபதி கேசவனைச் சிறைபிடித்து வருகிறார் என்றும் சொல்லப்பட்டது. போர் முடிந்த பிறகு ஒரு வீட்டிற்குள் ஒளிந்திருந்த கேசவனை, அவர்கள் ஆட்களே காட்டிக் கொடுக்க, கைது செய்து விலங்கிட்டு இழுத்து வருகிறார்கள் என்றும் சொல்லப்பட்டது.

ஒரு மூங்கில் கூண்டிற்குள் மிருகம் போல் அடைபட்ட தளபதியைப் பார்த்து ஜனங்கள் காறித் துப்பினார்கள். வெட்டிக் கொன்றுவிடுவேன் என்று பயமுறுத்தினார்கள்.

நீ அழிந்து போவாய், நாசமாகப் போவாய் என்று பெண்கள் திட்டினார்கள். அவன் எந்தவித சலனமும் இல்லாமல் கட்டுப்பட்ட கைகளோடு நகரை வேடிக்கை பார்த்துக்கொண்டு வந்தான். பழுவேட்டரையர் குதிரை அவர் மாளிகைக்குத் திரும்ப, மூங்கில் கூண்டு தளபதியோடு சிறைச்சாலை நோக்கிப் போயிற்று.

அன்று இரவு முழுவதும் உச்சகட்ட ஆட்டமும், பாட்டமும் நடைபெற்றது. தேவரடியார்களை இடைவிடாது போர் வீரர்கள் ஆடச் சொன்னார்கள்.

பஞ்சவன்மாதேவி குதிரையைக் கோட்டைப்பக்கம், திருப்பாமல் நிசும்பசூதனி கோயில் பக்கம்போய், அங்கு தலையில் ஜலம் ஊற்றி, வேறு உடை உடுத்தி, துர்கை சிலையின் முன்பு ஆடாது, அசையாது அமர்ந்து கொண்டாள்.

தாயே... தாயே... என்று அரற்றினாள்.

"என்ன அதிசயம். என்ன அதிசயம். மிகச்சில வீரர்களே இறந்து போனார்கள். மிக அற்புதமான ஒரு யுத்தமாக இது இருந்தது. சோழ தேசத்திற்கு மிகப்பெரிய செல்வத்தைக் கொண்டு வந்து கொடுத்துவிட்டாய். என் புருஷனை எந்தவித காயமுமில்லாமல் காப்பாற்றிவிட்டாய்.

தாயே... இறந்த அத்தனை பேர் மனக்கேதமும் தீர்க்கும்படி உன்னுடைய சன்னதியில் நாற்பத்தைந்து நாள் நெய் விளக்கேற்றுகிறேன்.

தாயே... தாயே... என் தாயே. உன் கருணையை என்ன சொல்வது. என் தாயே.. இறந்து போன மேலைச்சாளுக்கிய வீரர்கள் அத்தனை பேரையும் நீ ஆசீர்வதிக்க வேண்டும். அவர்கள் குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டும். அந்த தேசத்துப் பெண்களையும், ஆண்களையும் அமைதிப்படுத்த வேண்டும்."



அவளுக்கு ஏனோ அழுகை வந்தது. முகம் பொத்திக் கொண்டு நிசும்பசூதனி சன்னதியில் விக்கி விக்கி அழத்துவங்கினாள்.

அவள் வந்திருப்பதை அறிந்து அரண்மனைச் சேடிகள் ஓடிவந்தார்கள். அவளைத் தாங்கிப் பிடித்துக் கொண்டார்கள். அரண்மனைக்குப் போகலாம் என்று அழைத்தார்கள்.

இல்லை. மூன்று நாள் இறந்தவர்கள் மனக்கேதம் தீர்க்கும் பொருட்டு உபவாசம் இருக்கப் போகிறேன் என்று சொன்னாள்.

அவளுக்கு அவர்கள் ஓடிப்போய் மருந்து வாங்கி கொடுத்தார்கள். அவள் வயிறு சுத்தமாக நீர் குடித்தாள்.

நிசும்பசூதனி கோயிலுக்கு அருகேயுள்ள பெரிய குறி மேடையில் படுத்துக்கொண்டாள். உயரமான மூங்கில்கள் நட்டு திரை கட்டப்பட்டது. அவள் தூங்குவதைப் பார்த்தால் இன்னும் இரண்டு நாளைக்கு எழுந்திருக்கமாட்டாள் என்று தோன்றியது.

அந்தப் பதினான்கு பேரும் தோல்வியின் கனத்தைத் தாங்காமல் தற்கொலை செய்து கொள்ளலாமா என்று சர்ச்சையில் ஈடுபட்டு ஓய்ந்து, தற்கொலை செய்துகொள்ள முடியாது என்ற முடிவிற்கு வந்து சுருண்டு படுத்துத் தூங்கினார்கள். எழுந்தவுடன் பசித்தது.

எல்லோருக்கும் வயிற்றில் குடாரக்கனி எரிந்தது. ஆனால், உண்ணப் பிடிக்கவில்லை. உண்ண அவமானமாக இருந்தது. அந்தத் தோல்விக்குப் பிறகும் ஒருவன் உணவு உண்ணுவானேயானால் அவன் மனிதனாக இருக்க முடியாது என்ற எண்ணம் வந்தது.

அவர்கள் இருந்த இடம் மேலைச் சாளுக்கியத்திற்கும் கீழைச் சாளுக்கியத்திற்கும் இடைப்பட்ட செம்மண் நிறத்து பூமியாக இருந்தது.

கண்ணுக்கெட்டிய தூரம் வரையிலும் பூமி விரிந்து பரந்து கிடந்தது. சிறிய குத்துச் செடிகள் மட்டுமே இருந்தன. அவர்கள் இருப்பது மற்றவர்களுக்குத் தெரியக் கூடாது என்பதற்காக அந்தப் பூமியிலுள்ள ஒரு பெரிய நீர்தேங்கிய குழிக்குள் இறங்கி உட்கார்ந்து கொண்டார்கள்.

பெரிய குளம்போல ஒரு குழியின் நடுவில் ஒரு யானை படுத்துறங்கும் அளவுக்கு நீர்நிலை இருந்தது. பூமியின் அடியிலிருந்து ஊற்று பெருகி வந்தது. செம்மண் கலந்த நீரைத்தான் அவர்கள் பிரித்து எடுத்துப் பருகினார்கள்.

நீரை ஒரு பாத்திரத்தில் மொண்டு அசையாமல் வைத்து, நீரிலுள்ள செம்மண் எல்லாம் அடியில் இறங்கிய பிறகு, பாத்

பழுவேட்டரையர் வருகிறார் என்றும், மேலைச் சாளுக்கிய சேனாதிபதி கேசவனைச் சிறைபிடித்து வருகிறார் என்றும் சொல்லப்பட்டது. போர் முடிந்த பிறகு ஒரு வீட்டிற்குள் ஒளிந்திருந்த கேசவனை, அவர்கள் ஆட்களே காட்டிக் கொடுக்க, கைது செய்து விலங்கிட்டு இழுத்து வருகிறார்கள் என்றும் சொல்லப் பட்டது.

ஒரு மூங்கில் கூண்டிற்குள் மிருகம் போல் அடைபட்ட தளபதியைப் பார்த்து ஜனங்கள் காறித் துப்பினார்கள். வெட்டிக் கொன்றுவிடுவேன் என்று பயமுறுத்தினார்கள்.

நீ அழிந்து போவாய், நாசமாகப் போவாய் என்று பெண்கள் திட்டினார்கள். அவன் எந்தவித சலனமும் இல்லாமல் கட்டுப் பட்ட கைகளோடு நகரை வேடிக்கை பார்த்துக்கொண்டு வந்தான். பழுவேட்டரையர் குதிரை அவர் மாளிகைக்குத் திரும்ப, மூங்கில் கூண்டு தளபதியோடு சிறைச்சாலை நோக்கிப் போயிற்று.

அன்று இரவு முழுவதும் உச்சகட்ட ஆட்டமும், பாட்டமும் நடைபெற்றது. தேவரடியார்களை இடைவிடாது போர் வீரர்கள் ஆடச் சொன்னார்கள்.

பஞ்சவன்மாதேவி குதிரையைக் கோட்டைப்பக்கம், திருப்பாமல் நிசும்பசூதனி கோயில் பக்கம்போய், அங்கு தலையில் ஜலம் ஊற்றி, வேறு உடை உடுத்தி, துர்கை சிலையின் முன்பு ஆடாது, அசையாது அமர்ந்து கொண்டாள்.

தாயே... தாயே... என்று அரற்றினாள்.

"என்ன அதிசயம். என்ன அதிசயம். மிகச்சில வீரர்களே இறந்து போனார்கள். மிக அற்புதமான ஒரு யுத்தமாக இது இருந்தது. சோழ தேசத்திற்கு மிகப்பெரிய செல்வத்தைக் கொண்டு வந்து கொடுத்துவிட்டாய். என் புருஷனை எந்தவித காயமுமில்லாமல் காப்பாற்றிவிட்டாய்.

தாயே... இறந்த அத்தனை பேர் மனக்கேதமும் தீர்க்கும்படி உன்னுடைய சன்னதியில் நாற்பத்தைந்து நாள் நெய் விளக் கேற்றுகிறேன்.

தாயே... தாயே... என் தாயே. உன் கருணையை என்ன சொல்வது. என் தாயே.. இறந்து போன மேலைச்சாளுக்கிய வீரர்கள் அத்தனை பேரையும் நீ ஆசீர்வதிக்க வேண்டும். அவர்கள் குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டும். அந்த தேசத்துப் பெண்களையும், ஆண்களையும் அமைதிப்படுத்த வேண்டும்."



அவளுக்கு ஏனோ அழுகை வந்தது. முகம் பொத்திக் கொண்டு நிசும்பசூதனி சன்னதியில் விக்கி விக்கி அழத்துவங்கினாள்.

அவள் வந்திருப்பதை அறிந்து அரண்மனைச் சேடிகள் ஓடிவந்தார்கள். அவளைத் தாங்கிப் பிடித்துக் கொண்டார்கள். அரண்மனைக்குப் போகலாம் என்று அழைத்தார்கள்.

இல்லை. மூன்று நாள் இறந்தவர்கள் மனக்கேதம் தீர்க்கும் பொருட்டு உபவாசம் இருக்கப் போகிறேன் என்று சொன்னாள்.

அவளுக்கு அவர்கள் ஓடிப்போய் மருந்து வாங்கி கொடுத் தார்கள். அவள் வயிறு சுத்தமாக நீர் குடித்தாள்.

நிசும்பசூதனி கோயிலுக்கு அருகேயுள்ள பெரிய குறி மேடையில் படுத்துக்கொண்டாள். உயரமான மூங்கில்கள் நட்டு திரை கட்டப்பட்டது. அவள் தூங்குவதைப் பார்த்தால் இன்னும் இரண்டு நாளைக்கு எழுந்திருக்கமாட்டாள் என்று தோன்றியது.

அந்தப் பதினான்கு பேரும் தோல்வியின் கனத்தைத் தாங்காமல் தற்கொலை செய்து கொள்ளலாமா என்று சர்ச்சையில் ஈடுபட்டு ஓய்ந்து, தற்கொலை செய்துகொள்ள முடியாது என்ற முடிவிற்கு வந்து சுருண்டு படுத்துத் தூங்கினார்கள். எழுந்தவுடன் பசித்தது.

எல்லோருக்கும் வயிற்றில் குடாரக்கனி எரிந்தது. ஆனால், உண்ணப் பிடிக்கவில்லை. உண்ண அவமானமாக இருந்தது. அந்தத் தோல்விக்குப் பிறகும் ஒருவன் உணவு உண்ணுவானேயானால் அவன் மனிதனாக இருக்க முடியாது என்ற எண்ணம் வந்தது.

அவர்கள் இருந்த இடம் மேலைச் சாளுக்கியத்திற்கும் கீழைச் சாளுக்கியத்திற்கும் இடைப்பட்ட செம்மண் நிறத்து பூமியாக இருந்தது.

கண்ணுக்கெட்டிய தூரம் வரையிலும் பூமி விரிந்து பரந்து கிடந்தது. சிறிய குத்துச் செடிகள் மட்டுமே இருந்தன. அவர்கள் இருப்பது மற்றவர்களுக்குத் தெரியக் கூடாது என்பதற்காக அந்தப் பூமியிலுள்ள ஒரு பெரிய நீர்தேங்கிய குழிக்குள் இறங்கி உட்கார்ந்து கொண்டார்கள்.

பெரிய குளம்போல ஒரு குழியின் நடுவில் ஒரு யானை படுத்துறங்கும் அளவுக்கு நீர்நிலை இருந்தது. பூமியின் அடியிலிருந்து ஊற்று பெருகி வந்தது. செம்மண் கலந்த நீரைத்தான் அவர்கள் பிரித்து எடுத்துப் பருகினார்கள்.

நீரை ஒரு பாத்திரத்தில் மொண்டு அசையாமல் வைத்து, நீரிலுள்ள செம்மண் எல்லாம் அடியில் இறங்கிய பிறகு, பாத்

திரத்தை உயரே வைத்து வைக்கோல் புல்லை உள்ளே நுழைத்து, அடியில் இருக்கின்ற செம்மண்ணை உறிஞ்சி, வைக்கோல் புல்லை வெளியே சாய்த்து விடுவார்கள். புவியீர்ப்பு சக்தியினால் செம்மண்அடியிலிருந்து வைக்கோல் வழியாக வெளியே வரும். மறுபடியும் ஆடாது வைப்பார்கள். மீண்டும் செம்மண் சேரும். அந்தச் செம்மண்ணையும் இவ்விதமாகவே வெளியேற்றுவார்கள். சிறு மூலிகைக் குச்சிகளை உடைத்துப் போட நீர் இன்னும் சுத்தமாகும். நீரிலுள்ள அத்தனை கெட்ட விஷயங்களும் குச்சிக்குப் போய்விடும். குச்சியை எடுத்து வெளியே போட்டு விடுவார்கள். பாத்திரம் பெரியதாக இல்லாததால் பதினான்கு பேருக்கு இரண்டு மிடறு தண்ணீர்தான் வந்தது. ஆனால், அது போதுமானதாக இருந்தது.

மத்தளம் போன்ற ஒரு கிழங்கை ஒருவன் சுமந்து வந்திருந்தான். அதைத் தோல்போக மெல்லியதாய் சீவி, சிறு துண்டுகளாகப் பிய்த்து உண்டு நன்கு பற்களால் மென்று அரைத்து கூழாக்கி வாயில் ஊற வைத்து பிறகு விழுங்கினார்கள். சோழதேசத்து வீரர்களிடமிருந்து தப்பிக்க, இதுதான் மிகச்சரியான வழியாக இருந்தது.

சோழப்படைகள் அவர்களைப் பின்தொடர்ந்து குதிரைக் குளம்படி பார்த்துவந்தது. தேடியது. ஆனால், கண்டுபிடிக்க முடியவில்லை. குழியிலிருந்து தலை மட்டும் தூக்கி அவர்கள் வருகையை எதிர்பார்த்து பதினான்கு பேரும் காத்திருந்தார்கள்.

தொலைவிலிருந்து பார்க்கும்போது இவர்கள் இருப்பது தெரியவில்லை. ஆனால், ஒரு இளைய வீரன் மட்டும் அங்கு ஏதோ அசைகிறதென்று குழியைக் கைகாட்டி குதிரையைச் செலுத்திவர, அவர்கள் போருக்குத் தயாரானார்கள். ஆனால், அந்தக் குதிரை வீரனை யாரோ மடக்கிவிட, அவன் சற்றுநேரம் உற்றுப் பார்த்துவிட்டுத் திரும்பிவிட்டான்.

அவர்கள் போனதும் குழியிலிருந்தவர்களுக்கு அயர்ச்சிவந்தது. தங்களுடைய மிகப்பெரிய தோல்வி அவர்கள் கண்முன்னே நர்த்தனம் ஆடியது. அவர்கள் அழுதார்கள். புலம்பினார்கள்.

தலைவர் போலிருந்த ஒரு கிழவர் புலம்பித்தீரட்டும் என்று கட்டளையிட, இன்னும் வேகமாகப் புலம்பினார்கள். சேறும், நீரும், தென்னையும், வாழையும், கோயிலும், குளமும் நிரம்பிய எங்கள் சேரதேசத்தை விட்டுவிட்டு, எந்தப் பாவத்தினால் இப்படியொரு கட்டாந்தரையில், இப்படியொரு நீரைக் குடித்துக் கொண்டு வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்று புலம்பினார்கள்.



“சேரதேசம் போவோமா.”

“என்னவென்று போவது. எல்லா இடமும் ஜெயித்து விட்டீர்களா என்று மக்கள் கேட்பார்களே. என்ன பதில் சொல்வது. எல்லா ஊரிலும் புலிக்கொடி பறக்கிறதாமே. அதை அகற்றாமல் எப்படி வாழ்வது. காந்தளூர் தேசத்துக் கடிகையில் தின்ன மட்டும் தான் கற்றுக் கொடுக்கிறார்களா என்று கேள்விவருமே. என்ன பதில் சொல்வது?

அந்தணனுக்குத் தேவையில்லாத கத்தியும், வாளும், அம்பும், வில்லுமாய் நெஞ்சு நிமிர்த்தி அலைந்து கொண்டிருந்தீர்களே. இப்போது சோழ தேசத்து ஆண்களுக்கும், பெண்களுக்கும் செருப்பு துடைத்து விட்டுத்தானே வருகிறீர்கள் என்று சேரமக்கள் கேட்பார்களே? என்ன பதில் சொல்வது. எதற்கும் வார்த்தையாய் பதில் சொல்லாது, ஹூங்காரமாய் பேசிக் கொண்டிருந்தோமே, அந்த கம்பீரம் இனி காட்ட முடியுமா? போதும்... போதும்... ஓரமாய் போய் உட்கார் என்று நகர்த்தி விடுவார்களே.

சேரதேசத்து அந்தணர்களுக்குண்டான அந்த தனித்த கம்பீரம் முற்றிலும் அழிந்து போயிற்று. வாள் எடுத்தால் வெற்றி பெற்றே ஆகவேண்டும். வெற்றி அல்லது வீரமரணம் என்று இரண்டில் ஒன்றே தேர்ந்தெடுக்க வேண்டும். வெற்றி பெறாதவன் மரணம் அடைந்தே ஆகவேண்டும். வெற்றி பெறாதவன் உயிரோடு இருப்பது பிணமாக வாழ்வதற்குச் சமம்.

இப்போது பாண்டிய ஆபத்துதவிகளான இந்த சேரதேசத்து அந்தண வீரர்கள் அத்தனை பேரும் பிணமாகத்தான் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். பிணத்தைவிட கேவலமாக வாழ்ந்து கொண்டிருக்கிறோம். பிணத்திற்குக்கூட மாலை, மரியாதை உண்டு. சந்தனக் குங்குமம் உண்டு. புத்தாடை உண்டு. இங்கு எதுவுமில்லை. கிழிந்து, கசங்கிய ரத்தம் தோய்ந்த கந்தைகளோடு திரிந்து கிழங்கும், சேறும் உண்டு வெறுமே உயிர் வாழ்ந்து வருகிறோம். எதற்கு என்று புரியவில்லை. ஆனால், ஏதாவது செய்தாக வேண்டும். என்ன செய்வது என்று புரியவில்லை.”

அவர்கள் அயர்ச்சியோடு தன்னந்தனியே புலம்பிக் கொண்டிருக்கிறார்கள்.

தொலைவில் புரவி சத்தம் கேட்டது. சடேரென்று அத்தனை பேரும் பரபரப்பானார்கள். தாவி சரிவுகளில் ஏறி விளிம்பில் முகம் வைத்து என்ன என்று பார்த்தார்கள்.

ஒரு வயிறு பெருத்த மட்டகுதிரையில் யாரோ தலை குனிந்தபடி வந்து கொண்டிருந்தான். நீண்ட கோலை குறுக்கே பிடித்துக் கொண்டிருந்தான். குதிரை நீர் வாசனை பார்த்துவிட்டு இந்தப் பக்கம் தலை திருப்பியது.

அவன் குதிரை ஓட்டுபவனாகத் தெரியவில்லை. வெறுமனே உட்கார்ந்து மயங்கிய நிலையிலும் சவாரி செய்பவனாக இருந்தான். குதிரை திசை திரும்பியது. நீர் நிலை நோக்கி வந்தது.

குதிரைகள் நீர் இருக்குமிடத்தை காற்றிலுள்ள வாசனையின் மூலம் கண்டுபிடித்துவிடும். குதிரை வாய்பிளப்பதைப் பார்த்தால், நடை தள்ளாட்டத்தைப் பார்த்தால், தண்ணீருக்காக ஏங்கியிருக் கிறது என்று தெரிந்து கொள்ள முடிகிறது.

எதிரே இருக்கிறவன் நடிக்கிறானா, அருகே வந்ததும் விழித்துத் தாக்குவானா, அவர்கள் விலகி நின்று கொண்டார்கள். ஆயுதங் களோடு தயாராக இருந்தார்கள். ஒருவன் பதினாலு பேரை என்ன செய்து விடமுடியும். அவன் கால்கள் துவண்டு தொங்கியிருக் கின்றன. தலைமுடி கலைந்திருக்கிறது. உடம்பு முழுவதும் அழுக்கு பிடித்திருக்கிறது. இவன் சோர்வாக இருக்கிறான்.

அவர்கள் புரிந்து கொண்டு சற்று தளர்வானார்கள்.

குதிரை அருகே வந்தது. தலைநிமிர்த்தி நீரைப் பார்த்துவிட்டு உரக்கக் கனைத்தது. உடம்பை உதறியது.

அந்த வீரன் பொத்தென்று குதிரையிலிருந்து கீழே விழுந்தான். குதிரை பள்ளத்தை நோக்கி வேகமாக நடைபோட்டது.

விழுந்தவன் முனகினான். புரண்டு படுத்தான். இரண்டு கால்களையும் விரித்து வானம் பார்த்துக் கிடந்தான். அவர்கள் ஒருவரையொருவர் பார்த்துக் கிடந்தார்கள்.

இளையவனான ஒருவன் சட்டென்று மேலே ஏறி அந்த வீரனுக்கு அருகே போனான். மற்றவர்கள் அம்பு தொடுத்து அவன் அசைந்தால் எய்துவிடத் தயாராக இருந்தார்கள். அவன் போய் அருகில் உற்றுப் பார்த்தான்.

"அஹோய்... இது பரசு நம்பூதிரி."

குனிந்து பார்த்தவன் உரத்துக் கத்த, மற்றவர்கள் எழுந்து வந்தார்கள். அவனைச் சூழ்ந்து கொண்டார்கள்.



"ஆமாம். அது பரசு நம்பூதிரி. கங்க தேசத்திற்கும், சேர தேசத்திற்கும் உள்ள எல்லையில் மலைப்பாங்கான பூமியில் தனித்ததாய் ஒரு கடிகை அமைத்து யுத்தப்பயிற்சி அளித்துக் கொண் டிருந்தவன். இவன் மூன்றாம் தலைமுறை. ஆனால், சேரதேசம் தாக்கப் பட்டபிறகு அந்தக் கல்லூரியும் கலைந்து போயிற்று. அவர்கள் சிதறிப் போனார்கள். பரசு நம்பூதிரி கங்க தேசத்திற்குப் போய்விட்டதாய் தகவல் வந்தது. அந்தப் பரசு நம்பூதிரிதான் இங்கு நாடியில் துடிப்பில்லாமல் துவண்டு கிடக்கிறான்."

"பரசு... அடேய்... பரசு"

நம்பூதிரிக் கிழவர் அவனை உலுக்கினார்.

அவன் தோளில் சுற்றியிருந்த போர்வை நழுவி விழுந்தது. அவனது வலது கை முழங்கையோடு துண்டாடப்பட்டிருந்தது. தோளைச்சுற்றி கந்தையும், கந்தையைச் சுற்றி மெல்லிய நூல்கயிறும் கட்டப்பட்டிருந்தன. மெல்லிய மருந்து நெடி அடித்தது.

அந்தத் துண்டுபட்ட கையின் வேதனையினால் தான் அவன் உடம்பு முழுவதும் ஜுரமாக இருப்பதை அவர்கள் அறிந்து கொண்டார்கள். அவனை அப்படியே தூக்கிக் கொண்டு குழிக்குள் இறங்கினார்கள்.

"என்ன மருந்து இருக்கிறது"

"தெரியவில்லையே."

கிழவர் நம்பூதிரி அலறலாய்ப் பேசினார்.

ஒரு பையைச் சோதித்தார்கள். காயத்திற்குப் போடும் பொடி யாக இருக்கின்ற மருந்து இருந்தது. நீர் கொண்டு வந்தார்கள். பொடியைக் குழைத்தார்கள். மெல்ல கட்டை அவிழ்த்தார்கள். கை முழுவதும் சீழ் பிடித்திருந்தது. அவன் வலியில் முனகினான்.

"மது இருந்தால் நன்றாக இருக்கும். மது ஊற்றிக் கழுவிய பிறகு மருந்து போடுவதுதான் நன்றாக இருக்கும். எங்கே கிடைக்கும்."

குதிரை மெல்ல மேலேறுவதை ஒருவன் பார்த்தான்.

"எங்கிருந்தாவது நான் வாங்கி வருகிறேன்"

ஓடினான். குதிரையை மடக்கினான். ஏறி அமர்ந்தான். அருகே இருக்கின்ற ஊர் நோக்கி விரட்டினான்.

பரசுவுக்கு அவர்கள் குடிக்க நீர் கொடுத்தார்கள்.. அவன் கண் திறந்து பார்த்தான். பயந்தான். ஆசுவாசப் படுத்தினார்கள். அவன் கண் கிறங்கிக் கிடந்தான்.

போனவனைக் காணோமே என்று தவித்துக் கொண்டிருந்த போது, நடுநசியில் அவன் சீழ்க்கை ஒலியை ஒலித்துவிட்டு அருகே வந்தான். இருட்டில் அடையாளம் சொன்னான். கீழே இறங்கினான். வெல்லக் கட்டிகளும், தேனும், மாவும், வெள்ளரிக் காய்களும், மாம்பழங்களும், கீரைகளும் வாங்கி வந்திருந்தான். சுரைக்குடுவையில் எரிசாராயமும், வேறொரு மண் சட்டியில் மருந்துகளும் கொண்டு வந்திருந்தான்.

எப்படி என்று வியந்தார்கள்.

''திருடினேன்.'' என்று ஒருவார்த்தையில் பதில் சொல்ல, வாய்விட்டுச் சிரித்தார்கள்.

பரசுவுக்கு வைத்தியம் செய்ய ஆரம்பித்தார்கள். அவன் பெரிய தோற்பையைப் பிரித்து மூங்கில் நட்டு சொருகினான். கிட்டத்தட்ட இரண்டு முழ பானை போல அந்தத் துருத்தி நின்றது. தண்ணீரை இதில் இரைத்துக் கொள்ளலாம். என்று அவன் சொல்ல, ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

''தோல் துருத்தியில் நிரம்பிய தண்ணீரையா குடிப்பது. நமது வழக்கமில்லையே.''

ஒருவர் உரத்துச்சொல்ல, ஆபத்துக்குப் பாவமில்லை என்று இரண்டு மூன்றுபேர் சொன்னார்கள்.

மேலோட்டமாக நீர் எடுத்து அந்தத் தோல் துருத்தியில் விட்டார்கள். அந்தத் தோல் துருத்தியை உயரத்தூக்கி உள்ளுக்குள் இருந்த செம்மண்ணை வைக்கோல்புல்லால் வெளியே கொட்டினார்கள். தெளிந்த ஒரு பானை நீர் அவர்களுக்குக் கிடைத்தது. சந்தோஷமானார்கள். கிழங்கு உண்டார்கள். வெல்லக் கட்டியைச் சுவைத்தார்கள்.

அவன் காயத்தைச் சுத்தம் செய்து மருந்து போட்டார்கள். விடியல் நேரத்தில் காலைக்கடன்களை முடித்துவிட்டு மறுபடியும் குழிக்கு வந்து உட்கார்ந்து கொண்டார்கள். பிராணாயாமம் செய்தார்கள். யோகாசனம் செய்தார்கள்.

பரசு கண்விழித்தபோது, அவனுக்கருகே அமர்ந்து கொண்டார்கள்.

உத்தமசோழன் சோழதேசத்தை ஆண்டபோது, பரசு இளைஞன். அவன் தமையனும், தகப்பனாரும் உத்தமசோழன் காலத்தில் முதல் மந்திரியாக இருந்த பிரம்மராயர் ரவிதாசனிடம் விண்ணப்பம் செய்து பெரும் உதவிகள் பெற்று கடிகை ஒன்றை, சேரதேசத்து வடகிழக்குப் பக்கத்தில் துவக்கினார்கள்.



கங்கதேசத்து இளைஞர்கள் பலருக்கும் பயிற்சி கொடுத்தார்கள். கங்க தேசத்தை சோழர்கள் ஜெயித்த பிறகு கடிகையைக் கலைக்க வேண்டியதாயிற்று. தந்தையோடும், தமையனோடும் மேலைச் சாளுக்கியம் நோக்கிப் பயணப்பட்டார்கள். அங்கே போய் சத்யாசிரியனுடைய தகப்பனான கிருஷ்ணனிடம் வணக்கம் சொல்லி படையில் சேர்ந்து, படையில் இருந்தபடியே பயிற்சிகள் துவக்கினார்கள். மேலைச்சாளுக்கிய வீரர்களுக்குக் கடும்பயிற்சிகள் கொடுத்தார்கள்.

சத்யாசிரியன் அந்தப் பயிற்சியில் மயங்கினான். அவனும் பயிற்சிகள் எடுத்துக் கொண்டான். உத்தம சோழன் காலத்தில் ரவிதாஸனுக்கு பிரம்மராயர் பட்டம் கிடைத்ததுபோல, நல்ல வாழ்க்கை அமைந்தது போல, சேரதேசத்து நம்பூதிரியான பரசுவின் தகப்பனாருக்கும், தமையனுக்கும் உயர்ந்த பதவிகளும், தனி வீடுகளும், மரியாதைகளும் கிடைத்தன.

எதிரிக்கு எதிரி நண்பன் என்பதுபோல சோழர்களை மையமாக வைத்து சேரதேசத்து அந்தணவீரர்களும், மேலைச்சாளுக்கிய சத்யாசிரியனும் நட்பானார்கள். பழக்கத்தில் நட்பு இறுகியது.

பரசுவின் தமையனுக்கும், தந்தைக்கும் தாசிகள் வழங்கியதோடு மட்டுமல்லாமல். பரசுவுக்கு நல்ல இடத்திலே பெண் பார்த்து திருமணம் செய்து வைத்தார்கள். சித்ரதுர்கத்திலிருந்து வந்து ஒரு பிராமணக் குடும்பத்தைச் சேர்ந்த மந்திரியின் மகளை அவனுக்குத் திருமணம் செய்து வைத்தார்கள். மந்திரியின் மகள் மூலம் மூன்று ஆண் குழந்தைகள் பிறந்தன. மனைவியின் தங்கையையே அவன் காதலித்து இன்னொரு திருமணம் செய்து கொண்டான். அவள் மூலம் இரண்டு பெண் குழந்தைகள் பிறந்தன.

தந்தையின் வேலையைத் தமையனுக்குக் கொடுத்து விட்டு தமையன் வேலையை இவனுக்குக் கொடுத்தார்கள். நல்ல சன்மானம் பங்காக கிடைத்தது. அவனும் திறம்பட வேலை செய்தான். ஆனால், எல்லாம் போயிற்று.

மேலைச்சாளுக்கியம் நோக்கி சோழர்கள் வருகிறார்கள் என்று தெரிந்ததும் மான்ய கேடத்திலிருந்து அவனோடு ஒரு சிறு படையை அழைத்துக் கொண்டு வந்தான். எல்லையைப் பலப்படுத்தச் சொல்லி விண்ணப்பம் அனுப்பினான். சிறிதும் ஓய்வு ஒழிச்சலின்றிப் பல்வேறு விதமாக உழைத்தான்.

குச்சிகளில் வைக்கோல் பொம்மைகளைச் சுற்றி நிற்க வைத்ததும், ஒரே நேரத்தில் ஒரே திக்கில் பலநூறுஅம்புகளை எறிய வைத்ததும், அவன் துங்கபத்ரையைத் தாண்டித்தான் வரவேண்டும் என்பதால் துங்கபத்ரையின் குறுக்கே மதகுகள் அமைத்து நீரின் வரத்தை அதிகரித்தும், குறைத்தும் செய்ததும் அவன்தான். சத்யாசிரி யன் மகிழ்ந்து போனான். என்ன வேண்டும் என்று கேட்டான்.

என் வீட்டிலுள்ளவர்களைப் பார்க்க வேண்டும். போய் வரவா என்று கேட்டபோது, போய்வர முடியாது. உனது வீட்டை இங்கு மாற்றுகிறேன் என்று சொல்லி விட்டான்.

மான்ய கேடயத்திலிருந்து, சாளுக்கிய எல்லையான துங்கபத்ரை கரைக்கு புரவிகள் பூட்டிய தேர்களில் அவனது இரண்டு மனைவிகளும், குழந்தைகளும் வந்து இறங்கினார்கள். நகரத்தில் அவனுக்குப் பெரிய வீடு ஒதுக்கி, அங்கேயே அவர்கள் தங்க சத்யாசிரியன் உத்தரவிட்டான். அவன் இரு மனைவிகளும் அவன் கம்பீரம் பார்த்துவிட்டு குதூகலித்தார்கள்.

சித்ரதுர்காவிற்கு ஓலை அனுப்பி தாய், தந்தையரையும் மற்ற உறவினர்களையும் வரச் சொன்னார்கள். அவர்கள் வந்த பதினோராம் நாள் தெற்குக் கரையில் இராஜராஜரின் படைகள் வந்து சேர்ந்துவிட்டன. திருப்பி அனுப்பலாம் என்றால், தேர்கள் இருந்தன. ஆனால் குதிரைகள் இல்லை.

எல்லாக் குதிரைகளும் போர் முனைக்குப் போய் விட்டன. அவரைக் கேட்டுப் பெறமுடியாத சூழ்நிலை ஏற்பட்டது. துங்க பத்ரையைத் தாண்ட முடியாது என்ற எண்ணம் வேறு இருந்தது. ஆனால், ஏழு லட்சம் வீரர்கள் வருகிறார்கள் என்றதும் பயந்தான். மாமனார். மாமியாரை இருக்கச் சொல்லிவிட்டு, இரண்டு மனைவிகளையும், குழந்தைகளையும் குதிரைகளைக் கொடுத்து போகும்படி உத்தரவிட்டான்.

அவர்கள் ஒரு நாளைக்கு பத்து காதம் என்றுதான் பயணித் தார்கள். இரண்டாவது நாள் பயணத்தின் போது சோழன் ஆற்றில் இறங்கிவிட போர் துவங்கி விட்டது.

எவ்வளவு தடுத்தும் ஏழு லட்சம் வீரர்கள் உள்ளே வருவதை நிறுத்தமுடியவில்லை. மிக வேகமாகப் பின்னடைந்து மான்ய கேடத்தைக் காப்பாற்றிக் கொள்ளலாம் என்று வடக்கு நோக்கி நகர்ந்தபோது, அவன் குடும்பத்தைத் தாண்டிப் போக வேண்டி யிருந்தது. குடும்பத்தோடு இருந்து அவர்களை வேறு திக்கில் அனுப்பலாமா என்று யோசித்தபோது, இராஜேந்திரசோழன் படைகள் பெரிய ஆழிப்பேரலை போல உள்ளே நுழைந்ததைப் பார்த்தான்.



குடும்பத்தை வைக்கோல் போருக்குள் மறைத்து வைத்தான். போகிற போக்கில் அவர்கள் வைக்கோல் போருக்கு நெருப்பு வைத்துவிட்டார்கள். உதறிக் கொண்டு பெண்களும், குழந்தைகளும் வந்த போது சோழவீரர்கள் ஆச்சரியப்பட்டு அவன் மனைவிகளையும், பெண்டுகளையும் வாரிக் கொண்டார்கள். நகைகளைப் பறித்துக் கொண்டார்கள். துணிகளை உருவினார்கள். அடித்தார்கள். அனுபவித்தார்கள்.

பரசு பாய்ந்து வந்தபோது ஒரே வீச்சில் அவன் கை துண்டா யிற்று. அவன் சுருண்டு விழுந்தான். இறந்து விட்டான் என்று நினைத்து குதிரைகளை வேறுபக்கம் எடுத்துப் போனார்கள். அவனுடைய பையன் திமிறி ஒருவன் முதுகில் வேல் எறிந்தபோது அவன் எறிந்த வேலை வாளால் தட்டிவிட்டு அந்தப் பையனுடைய குடுமியைப் பிடித்து இழுந்து உயரத்தூக்கி எரிகின்ற வைக்கோல் போரில் கதறக் கதற போட்டான். வெட்டுப் பட்ட கையோடு சகல மும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கத்தான் பரசு நம்பூதிரியால் முடிந்தது.

ஒரே பெண்மீது பல வீரர்கள் பாய்ந்து இம்சிப்பது பார்க்க முடிந்தது. இருட்டிய பிறகு மெல்ல நடந்து கிடைத்த பெட்டைக் குதிரைகளின் மீது ஏறி கிழக்கு நோக்கி நகர்ந்துவிட்டான். அவன் குடும்பத்தில் அத்தனை பேரும் அழிந்து போயிருப்பார்கள் என்று அவனுக்குத் தெளிவாகத் தெரிந்தது.

பரசு சொல்லிவிட்டு அழத் துவங்கினான்.

அவர்கள் அவனைச் சமாதானப் படுத்தாமல் வெறுமே வெறித்து வானம் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

விடியலில் ஆள் அரவம் கேட்டது. உற்றுப்பார்த்த போது கீழைச்சாளுக்கியப் பெண்கள் நீருக்காக வருவது தெரிந்தது. நீலநிற, பச்சை நீற புடவைகளைத் தலைசுற்றிப் போட்டு ஒயிலாக நடந்து வந்தார்கள். பெண்களின் சிரிப்பொலி கேட்டது.

''என்ன செய்வது.. தாக்குவதா..''

''வேண்டாம். குடித்துவிட்டுப் போகட்டும். யார் என்று கேட்டால் வணிகர்கள் என்று சொல்லலாம்.''

''நம்புவார்களா?''

''நம்பவில்லையென்றால் மிரட்டி நம்ப வைக்கலாம்.''

அவர்கள் தங்களுக்குள் பேசிக் கொண்டார்கள். அமர்ந்து கொண்டார்கள்.

குழியின் மேலிருந்து மண்ணும், கல்லும் கீழே தள்ளப்பட்டன. இவர்கள் விலகி ஓடியபோது பெண்கள் போல் வேடமிட்டு வந்த சோழவீரர்கள் புடவைகளை களைந்து விட்டு அம்பு எய்யத் துவங்கினார்கள். குதிரைகள் கீழிறங்கத் துவங்கின. சுதாரித்து எழுவதற்குள் கடுமையாகத் தாக்கப்பட்டார்கள்.

பரசு மயக்கத்தில் இருந்தான். அந்தப் போரையே பார்த்துக் கொண்டிருந்தான். சுவரில் குழிபறித்து அவனைச் சாய்த்து வைத்திருத்ததால் நகர முடியாமல் வெளியே முனகிக் கொண்டிருந்தான்.

போர், அரைக்கால் நாழிகையில் முடிந்துவிட்டது. சோழவீரன் ஒருவன் மரணமடைந்திருந்தான். மூன்று நம்பூதிரிகள் அடிபட்டு துடித்துக் கிடந்தார்கள். அவர்களைச் சோழவீரர்கள் குத்திக் கொன்றார்கள். மற்ற நம்பூதிரிகளின் வலதுகை கட்டை விரலை வெட்டினார்கள். இடது கால் பெருவிரலை அடித்து நசுக்கினார்கள்.

இடது கால் பெருவிரலை அடித்து நசுக்கி விட்டால், ஓட முடியாது. நொண்டி நொண்டித்தான் நடக்க வேண்டும். வலது கை கட்டைவிரலை வெட்டிவிட்டால் அம்பு தொடுக்க முடியாது. பலவீனமாகத்தான் விடமுடியும்.

எல்லார் கழுத்திலும் பாறைகளைக் கட்டித் தொங்க விட்டார்கள். குழிக்கு மேலேற்றினார்கள். மூன்றுநாள் இப்படித் தொங்கினால் போதும் முதுகெலும்பு உராய்ந்து வாழ்க்கையில் வேறெந்த வேலையும் செய்ய முடியாமல் போகும். அதேநேரம் உயிரோடு வலியோடு வாழலாம். உலகிலேயே மிகக் கொடுமையான தண்டனை கழுத்தில் பாறையைக்கட்டி நடத்தி அழைத்துப் போவதுதான்.

நொண்டி நொண்டி வலக்கை விரல் வலிக்க வலிக்க பாறை கழுத்தை இறுக்க இறுக்க நடந்து போக வேண்டும். மிக மோசமான சித்ரவதை இது. தனக்கும் கிடைக்குமோ என்று பரசு பயந்தான். அழுதான்.

ஒரு சோழவீரன் அவனருகே வந்து பார்த்தான். மற்றவர்களை அழைத்தான். எல்லோரும் சூழ்ந்து நின்று பார்த்தார்கள். துண்டித்த அவன் கையைக் கவனித்தார்கள். யார் வெட்டியது என்று கேட்டார்கள். இராஜேந்திரரின் மெய்க்காவல் வீரர்கள் என்று சொன்னதும் வாய்விட்டுச் சிரித்தார்கள்.



"நம்மைவிட எப்போதுமே வேகமாக இருக்கிறார்களய்யா. நாம் வெறும் கட்டைவிரல்தான் எடுக்கிறோம். அவர்கள் பாருங்கள் வெறும் முழங்கையையே எடுத்துவிட்டார்கள். இனி அன்னமும், அசிங்கமும் ஒரேகையில்'' என்று சொல்லிச் சிரித்தார்கள்.

அவன் அழுதான். ஒருவன் ஒரு குளத்து செம்மண் எடுத்து முகத்தில் அடித்தான். ஒழிந்துபோ என்று சொல்லி அவர்கள் விலகிப் போனார்கள். அவர்கள் போகும்வரை அவன் அங்கேயே இருந்தான். பிறகு ஒரு கையில் குழி நோண்டினான். இறந்துபோன அந்தணர்களை இழுத்துப் புதைத்தான். மேலே கல் வைத்தான். வாய்விட்டு அழுதான். மெல்ல மேலேறினான். நின்றான். எதிரே செம்மண்காடு. பொட்டல் காடு ஒருமரம் கூட இல்லாத காடு விரிந்து கிடந்தது. அவன் மெல்ல சோழதேசம் நோக்கி நடக்கத் துவங்கினான்.

எப்படியாவது இராஜராஜரைக் கொல்ல வேண்டும். தன் கையால் இராஜராஜருக்கு மரணம் நிகழ வேண்டும் என்று ஆசைப் பட்டான். அவ்வப்போது மேலே சூரியனை உற்றுப் பார்த்து வேண்டிக் கொண்டான். சூர்யகாயத்ரி சொல்லியபடி நடந்தான். அவன் தெம்பு மெல்ல மெல்ல அதிகரித்தது. புத்தி கூர்மையாக வேலை செய்தது. வலக்கை வெட்டி வீழ்த்தியபிறகு இடையறாது வலி இருக்கிறபோது எப்படி இராஜராஜரைக் கொல்ல முடியும்.

அவன் யோசித்தான். முதலில் முகத்தை மாற்றிக் கொள்ள வேண்டும். சோழ வீரர்கள் போல தொங்கு மீசை வைத்துக் கொள்ள வேண்டும். சேரதேசத்துப் பருமன் இல்லாமல் இன்னும் இளைக்க வேண்டும். நெடுநெடு என்ற உயரம் வராது. ஆனாலும் இப்பொழுது இருப்பதைவிட அதிக உயரமாக, கொஞ்சம் தூக்கலான பாதரட்சை அணியவேண்டும். வெள்ளைப் பற்களை காவிப்பற்களாய் மாற்றிக் கொள்ள வேண்டும். வெற்றிலை போட்டு அவர்கள் போலவே இருக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். வெற்றி ஆரவாரம் செய்ய வேண்டும். எங்கேனும் தங்கக் காசுகள் சம்பாதித்து, கொள்ளையடித்தது என்று சொல்லி மக்களுக்கு வழங்க வேண்டும். நெருக்கமாக வேண்டும். மெய்க் காவல் படை வீரர்களோடு குதூகலமாய்ப் பேசவேண்டும்.

பிறகு, இராஜராஜரை நெருங்க வேண்டும். நெருங்கி..

அவன் தீவிரமாக யோசித்தான்.

குழல்... குழல்... ஊதுகுழல்...

அவனுக்குள் ஒரு எண்ணம் முளைவிட்டது. அவன் சிரித்தான். அதுதான் சரி.

உயிர்பலம் மொத்தமும் திரட்டி வாய்க்குக்கொண்டு வந்து முழு வேகத்தில் குழலை ஊதினால் போதும். உள்ளுக்குள் இருந்து அம்பு சீறிப்பாய்ந்து சட்டென்று இராஜராஜர் உடம்பில் தைக்கும். தைத்த நேரத்தில் விஷம் பரவும், விஷம் பரவிய சில நொடிகளில் மரணம் நிச்சயம். இராஜராஜர் சுருண்டு விழுவதுபோல ஒரு தோற்றம் அவனுக்குள் ஏற்பட்டது.

## 164

சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவர் பெருந்தச்சர் குஞ்சரமல்லரை ஆரத்தழுவிக் கொண்டார். தோளில் கை போட்டு அணைத்துக் கொண்டார். தோளில் கை போட்ட விதமாகவே கோயில் கட்டுமான இடத்தைச் சுற்றிவந்தார். நிமிர்ந்து கோயில் மேட்டையே பார்த்துக் கொண்டிருந்தார்.

கோயிலுக்கு அருகேயிருந்து மண்ணைக் கொத்தி, தலைசுமையாய் ஏற்றிக் கொண்டு வந்து கொட்டிக் கொண்டிருந்தார்கள். ஏராளமான பிரம்புக்கூடைகள் ஒரு மூலையில் குவிக்கப்பட்டிருந்தன.

பிரம்புக்கூடையை எடுத்துக் கொண்டு போய் மண்வெட்டுகிற இடத்திலிருந்து சுமந்து மெல்ல மெல்ல கோயிலின் அடிவாரத்திற்கு வருகிறார்கள். கோயிலின் அடிவாரத்திலிருந்து ராட்டினங்களின் மூலம் மண்கூடைகள் மேலே கொண்டு போகப் படுகின்றன.

மூன்று வட்டச் சுற்றுப்பாதை முடிந்து, நான்காவது வட்டச் சுற்றுப்பாதைக்கு மண் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். வட்ட சுற்றுப்பாதையில் யானைகள் ஏறிக்கொண்டிருக்கின்றன. திருப்பங்களில் யானைகள் சறுக்காது இருப்பதற்காக அந்த மண்பாதையில் சவுக்கு கட்டைகளை வெட்டி ஒன்றின் பின் ஒன்றாக அடுக்கி தளம் போல செய்கிறார்கள்.

யானைகள் நீண்ட கற்பலகைகளை இழுத்துக் கொண்டு போகின்றன. கீழே வேறொரு பக்கம் கல்தச்சர்கள் கற்பலகைகளை அறுத்துக் கொண்டிருக்கிறார்கள். அறுத்த கல்லைக் கொண்டு வந்து மரஅளவுகள் மீது வைத்துப் பார்க்கிறார்கள். மேலே போகப் போக கற்பலகையின் அளவுகள் மாறிக் கொண்டேயிருக்கின்றன. துல்லியமாக கற்பலகையின் அளவு இருக்க வேண்டுமென்று பெருந்தச்சரின் சீடர்கள் உத்தரவிட்டுக் கொண்டிருக்கிறார்கள்.



"ஒரு நூல்தானே வித்தியாசம். எதற்குக் கத்துகிறீர்கள்."

யாரோ ஒரு கற்சிற்பி கேட்கிறான்.

"இங்கே ஒரு நூல் வித்தியாசம் என்றால், கோபுரம் ஒருகோல் கோணலாக வரும். ஒருநூல் வித்தியாசம் கூட இருக்கக்கூடாது." என்று அவரின் சீடப்பிள்ளை கத்துகிறான்.

அப்படியா... என்பதுபோல் சக்ரவர்த்தி இராஜராஜர் பெருந்தச்சரைப் பார்க்க, "ஆமாம் சக்கரவர்த்தி. ஒரு இடத்தில் பிசகு ஏற்படினும் கோபுரம் தவறாகி விடும். மரம் அறுப்பதுபோல, கல் அறுப்பதற்கும் பெரும் கருவிகளைக் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

பெரும் பாறைகளைத் துளையிட்டு அடித்து பிளந்து விடுகிறோம். சிறு பாறைகளைத் துளையிட்டு அடித்தால் சில சமயம் வேறுவிதமாகவும் கல் பலவீனத்தினால் உடைந்து விடுகிறது. சிறு பாறைகளை அறுக்க அரம் போன்ற விஷயத்தை வைத்திருக்கிறோம். பழுக்கக் காய்ச்சி எண்ணெயில் குளிர்வித்த இரும்பு இன்னும் கெட்டியாகிறது. அதில் அரம் செய்கிறபோது வெண்ணெய் மாதிரி பாறை அறுபடுகிறது."

கருவிகளைக் காண்பித்தார்.

ஒரு பெரும்பாறை ஓங்கி அடிப்பதற்குத் தயாராக இருக்கிறது என்ற செய்தி வந்தது. அரசரை அந்தப் பாறைக்கருகே அழைத்துப் போனார். கோணல் மாணலான ஒரு பாறையை சதுர வடிவாய் அடிப்பதற்கு சுண்ணத்தால் கோடு போட்டிருந்தார்கள்.

அந்தக் கோட்டின் மீது சிறுசிறு துளைகள் போட்டிருந்தார்கள். பாறையைப் புரட்டியும் துளைகளிட்டிருந்தார்கள். பாறையைச் சுற்றி துளைகள் இருந்தன. நடுவே ஒரேயொரு துளையை மட்டும் ஆழம்பண்ணியிருந்தார்கள். அதில் பெரிய முழங்கை நீளமுள்ள ஆணியை அடித்திருந்தார்கள். இப்போது அந்த ஆணியை பலம் கொண்ட மட்டும் அடிக்க பாறை அந்தத் துளைகள் வழியே பிளவுபடும்.

அடி சரியாக விழவேண்டும். அழகாக விழவேண்டும். அடி ஆணியில் இறங்கி பாறை முழுவதும் பரவ மிகத் துல்லியமாக சம்மட்டியும், ஆணியின் தலையும் சந்திக்க வேண்டும். அடி தவறானால் பாறை தவறாக உடையும். இப்பொழுது செய்த அத்தனை வேலையும் பாழாகிவிடும். அதாவது வெகுதூரம் இருந்து

இந்தப் பாறையைக் கொண்டு வந்ததும், நுணுக்கி நுணுக்கி பாறையைச் சுற்றி சிறுசிறு ஓட்டையைப் போட்டதும் வீண். எனவே, தவறு செய்யாமல் இந்தக் காரியத்தைச் செய்ய வேண்டும். ஆனால், சில சமயம் எவ்வளவு திறமை மிகுந்தவராக இருப்பினும் இந்தப்பாறை கோணலாக வருவதற்கு வாய்ப்பிருக்கிறது. இது பிளவுபடுவது கடவுள் அருள்.

''யார் அடிக்கப் போவது ஆணியை...''

பெருந்தச்சர் உரக்கக் கேட்டார். உடைப்பவர்கள் தயங்கினார்கள். நீ போ, அவன் போகட்டும் என்று சைகையில் பேசிக் கொண்டார்கள்.

சக்ரவர்த்தி இருக்க, உடைக்க வேண்டுமென்றால், அது சாதாரண காரியமல்ல. உடைபடுவது தப்பாக இருந்தால் வாழ்நாள் முழுவதும் ஏசப்படுவார்கள்.

இவன்தான் ஆணியை அடித்தானாம். பாறை நெடுகாக உடைவதற்குப் பதிலாக, குறுக்காக உடைந்துவிட்டதாம்.

வெட்டுப்பட்ட பாறையை விட்டு இறங்கி ஓடியே போய் விட்டானாம் மூன்று நாள் கழித்துத்தான் திரும்பினானாம். அப்பொழுதும் யாரும் முகம் கொடுத்துப் பேசவில்லையாம்.

எவ்வளவு பெரிய அவமானம் இது என்று பேசிக் கொண்டேயிருப்பார்கள். இதை வாழ்நாள் முழுவதும் கேட்டுக் கொண்டேதான் இருக்க வேண்டும். எனவே ஆணி அடித்து பாறை பிளக்க வெட்கப்பட்டார்கள்.

''நான் உடைக்கட்டுமா''

சக்ரவர்த்தி உடையார் சட்டென்று மேலே போர்த்தியிருந்த போர்வையை அகற்றினார்.

''எதற்கு... நீங்கள் எதற்கு.''

''ஏன், என்னால் முடியாது என்று நினைக்கிறீர்களா.''

''அட... உங்களால் முடியாது என்று உண்டா. ஆனால் அந்த ஆணியில் துல்லியமாக அடி விழவேண்டும்.''

''விழுமய்யா... நீங்கள் எத்தனை பாறையைச் சரியாக உடைத்திருக்கிறீர்கள்.''

பெருந்தச்சரைப் பார்த்துக் கேட்டார்.

''பல பாறைகளை உடைத்திருக்கிறேன்.''

''சில பாறைகளைத் தவறாகவும் உடைத்திருக்கிறீர்களல்லவா.''



''ஆம். சிலது தவறாகவும் உடைந்திருக்கிறது.''

''ஹா... அப்படியானால் பாறை உடைப்பது என்பது ஒட்டு மொத்தமாய் நம்மிடம் இல்லை. கடவுள் அருள் வேண்டியிருக்கிறதல்லவா.''

''ஆமாம். கடவுள் அருளும் வேண்டியிருக்கிறது.''

''எனக்குக் கடவுள் அருள் இருக்கிறதா? இல்லையா? என்று பார்த்துவிடலாமா.''

''ஐயனே... இதென்ன சோதனை.. உமக்குக் கடவுள் அருள் இல்லையெனில் வேறு எவருக்கு இருக்கும்.''

''என் முன்னே பாறை உடைக்க உங்கள் சிற்பிகள் தயங்குகிறார்கள். எனவே இந்தப் பாறையை நானே உடைக்கிறேன். இது சரியாகப் பிளந்தால் கோயில் மிகச் சிறப்பாக வரும். இல்லையெனில் தவறாகும்.''

''போதுமய்யா, அதிகம் பேசுகிறீர்கள்.''

பெருந்தச்சர் கோபமாக சக்ரவர்த்தியைக் கடிந்து கொண்டார்.

சக்ரவர்த்தி சிரித்தபடி பஞ்சகச்சத்தைத் தளர்த்தி விட்டு சட்டென்று இறுக்கி இடுப்போடு ஒட்டியபடி கட்டிக்கொண்டார். அவருடைய தொடைகள் பலமாகத் தெரிந்தன. தாவி பாறை ஏறினார். திரும்ப கோயில் கட்டுகிற இடத்தைப் பார்த்தார். அதே போல ஒரு பெரிய மண்மேடு சுற்றுப் பாதைகளுடன் தெரிந்தது அந்த மண்மேடே பெரிய சிவலிங்கம் போலத் தெரிந்தது.

'இறையே..' அதைப் பார்த்துக் கைகூப்பினார்கள்.

'என் சிவனே..' அதனோடு கொஞ்சினார்.

இது உனக்காக நீ கட்டிக் கொள்கிற கோயில். நான் கருவி. வெறும் சுத்தி. ஆணி, அரம், உளி. எல்லா மனிதயத்தனங்களும் இறைவனின் கருணை.

ஒரு மனிதன் எவ்வளவு நாள் உயிரோடு இருப்பான் என்று மனிதனால் அறிய முடியாதவரை, மனிதனுடைய வாழ்க்கையும், யத்தனங்களும், இறைவன் கருணை.

மரணம் பற்றிய தெளிவும், ஞானமும் வராதவரை மனிதன் வெறும் துரும்பு. மரணமற்ற பெருவாழ்வு எவனுக்கு வருகிறதோ அவனே மனிதன். அவனே மனிதருள் மாணிக்கம். மகான். மற்றதெல்லாம் வெறும் சலசலப்பு. வாய்ப்பேச்சு.

மரணத்தை ஜெயிக்காத மனிதன் இறைவன் இல்லையென்று சொல்வது அகம்பாவம். வெற்றுத் திமிர். பேடித்தனம். ஆணவ முள்ள மிருகம். இறையே நீ உண்டு. நீ இருக்கிறாய். எல்லாமுமாய் இருந்து எல்லா அசைவையும் ஆட்டுவிக்கிறாய். உன் பிரமாண்டம் புரியவில்லை. நீ பிரமாண்டமாக இருப்பதாலேயே புரியவில்லை. எனவே, நீயே உன்னைக் காட்டினாலொழிய உன்னைப் புரிந்து கொள்ள முடியாது.

வா, என் அருகில் வா. என்னோடு இரு. எனக்கு உன்னை உணர்த்து. உன்னை எனக்கு உணர்த்துவாய் என்ற நம்பிக்கையில் இந்த ஆணியை அடிக்கப் போகிறேன். பாறை சரியாகப் பிளந்தால், நீ என்னோடு இருக்கிறாய் என்று அர்த்தம். இல்லையெனில் நான் இன்னொரு ஜென்மம் எடுக்க வேண்டும் என்று அர்த்தம் அப்போதுதான் உன்னைப் புரிந்து கொள்வேன் என்று அர்த்தம். இறையே... என் சிவனே... உன்னை முன்னிறுத்தி இந்தச் செயலைச் செய்கிறேன். எனக்குப் பதில் சொல்.

சம்மட்டியை எடுத்து கனம் பார்த்தார். வாகாய் வைத்துக் கொண்டார். தரையிறக்கினார். பிறகு, பெருந்தச்சரைப் பார்த்து தலைகுனிந்து வணக்கம் செய்தார்.

கூட்டம் சில்லிட்டது.

“உத்தரவிடுங்கள் பெருந்தச்சரே..” என்று அவர் உத்தரவுக்காக காத்துக் கொண்டிருந்தார்.

பெருந்தச்சருக்கு நாணமாக இருந்தது.

யார், யாருக்கு உத்தரவிடுவது. தலையை இடதும், வலதும் திருப்பிக் கொண்டார். சக்ரவர்த்தி விளையாட ஆரம்பித்து விட்டார். சீக்கிரம் இந்த விளையாட்டை முடிக்க வேண்டும். கை உயர்த்தி மேல் துண்டைச் கழற்றிக் கீழிறங்கினார். அதற்கு அடி என்று அர்த்தம்.

சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜராஜத் தேவர் ஆணியின் தலையை உற்றுப் பார்த்தார். பலநூறு அடிகள்பட்ட அந்த ஆணியின் தலை பளபளப்பாக இருந்தது.

கட்டை விரலையும், ஆள்காட்டி விரலையும் சேர்த்துக் கொண்டால் எவ்வளவு பெரிய வட்டம் வருமோ, அத்தனை பெரிய தலை இருந்தது. அந்த ஆணி முழங்கை உயர ஆணியாக இருத்தல் கூடும். பாதி பாறையில் மறைந்திருந்தது. மீதி பாதி வெளியே நீட்டிக் கொண்டிருந்தது. உறுதியான இரும்பு என்று தெரிந்தது.



நுரையீரல் நிறைய காற்றைத் தேக்கிக் கொண்டார். சிற்பிகளெல்லாம் உளியையும், சுத்தியையும் போட்டுவிட்டு சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீஇராஜராஜத்தேவர் பாறை பிளக்கிறார் என்று கேள்விப்பட்டு ஓடிவந்தார்கள். அங்கங்கே மோர் குடித்துக் கொண்டிருந்த பெண்களும், நீர் குடித்துக் கொண்டிருந்த ஆண்களும் பானையைப் போட்டுவிட்டு ஓடிவந்தார்கள்.

“ஹர... ஹர நமசிவாய...”

பெருந்தச்சர் உரக்கக் கத்தினார்.

கூட்டம் எதிரொலித்தது.

தென்னாடுடைய சிவனே போற்றி என்று பிளிறினார். எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி என்று கூட்டம் எக்களித்தது.

சக்கவர்த்தி சம்மட்டியை உயரத் தூக்கினார். நிலை நிறுத்தினார். மிகுந்த கூர்மையுடன் அந்த ஆணியின் தலையைப் பார்த்தார். பலத்தோடு வேகமாக ஆணியின் தலைநோக்கி சம்மட்டியை படேரென்று இறக்கினார்.

ஆணியின் மீது மிகச்சரியாக அடி விழுந்தது. கர்க்..கர்க்..கர்க்.. என்று அடிதாங்காமல் பாறையின் பல இடங்கள் பிளவுபட்டன. பிளவுபட்ட இடங்களிலெல்லாம் வேகமாக மரத்தச்சர்களெல்லாம் மர ஆப்பு வைத்து அடித்தார்கள். அடுத்த அடிக்குத் தயாராக சக்ரவர்த்தி சம்மட்டியை தோள் பக்கம் வைத்துக் கொண்டார். ஆனால், பாறை வேகமாக விடத்துவங்கியது. ஆப்பு வைக்க, வைக்க இன்னும் அதிகமாயிற்று. ஆப்பை அசைக்க, அசைக்க விரிசல் பெரிதாயிற்று. அந்த விரிசலில் ஆப்பு வைத்து அடித்தார்கள். சட்டென்று பாறை பிளந்து நகர்ந்து மெல்ல எதிர்புறம் சரிய தச்சர்கள் வேகமாக அந்தப் பாறையை உள்ளங்கையால் தாங்கி தரையிறக்கினார்கள். மிகச்சரியாகப் பாறை பிளவுபட்டது.

கூட்டம் வெறிபிடித்ததுபோல ஆடியது. பெருந்தச்சர் பாறையை வெளியே எடுக்கச் சொன்னார். பாறையை வெளியே எடுத்தார்கள். துண்டு மிகச்சரியாக, எந்தப் பிசிறும் இல்லாதிருப்பதை பெருந்தச்சர் கண்டார்.

வாழ்க... வாழ்க... சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீஇராஜராஜத்தேவர் வாழ்க... வாழ்க... எங்கள் சிவபாதசேகரன் வாழ்க... வாழ்க... என்று உரக்கக்கத்த, கூட்டம் எதிரொலித்தது.

உடையார் ஸ்ரீஇராஜராஜத்தேவர் சுத்தியலைக் கீழே இறக்கினார். திரும்ப அந்த மண் மேட்டை நோக்கிக் கைகூப்பினார்.

என்னோடு இருக்கிறாயா என் இறையே. என்னிடம் இருக்கிறாயா நன்றி என் தந்தையே. உன்னை வணங்குகிறேன் என் சிவனே.

பாறையிலிருந்தபடி கைகூப்பினார். மரஏணியில் கால்வைத்து கீழிறங்கினார். நிலம்பட மேடு நோக்கி விழுந்து வணங்கினார். எழுந்து நின்றார்.

சோழம்... சோழம்... என்று மறவர்கள் கேடயத்தை வாளால் தட்டினார்கள். பெண்கள் குலவையிட்டார்கள். சிற்பிகளும், கல்தூக்கிகளும் ஆடினார்கள். உரத்த குரலில் கூவினார்கள்.

''தொடர்ந்து வேலை நடக்கட்டும். எந்தச் செலவுக்கும் அஞ்சாதீர்கள். இந்த வேலை மிக நன்றாக முடியவேண்டும் என்பதே முக்கியம். சிற்பிகளுக்குக் கூலி அதிகம் தேவையெனினும் நான் கொடுக்கத் தயாராக இருக்கிறேன்.''

பெருந்தச்சரை அணைத்துக் கொண்டு சக்ரவர்த்தி பேசினார்.

பெருந்தச்சர் யோசித்துச் சொல்கிறேன் என்று சொன்னார்.

''ஊதிய உயர்வு தேவைப்படுமா.'' என்று அன்பொழுக சக்ரவர்த்தி கேட்டார்.

''தேவைப்படும்.''

பெருந்தச்சர் யோசனையோடு பதில் சொன்னார். மெல்ல பெருந்தச்சரை அணைத்துக் கொண்டு ''நான் வருகிறேன். நாளை சந்திப்போம்.'' என்று அரண்மனை நோக்கி நடந்தார்.

கூட்டம் பின்தொடர்ந்தது. எல்லோரையும் பார்த்து முகமலர்ச்சியாய் கையசைத்தார். குதிரை அருகே வந்ததும் சட்டென்று தாவி ஏறிக்கொண்டார். திரும்ப மணல் மேட்டைப் பார்த்தார். சுற்றியுள்ள ஜனங்களைப் பார்த்தார்.

கையில் கணக்கு எழுதும் ஓலைக் கட்டை இடுக்கிக் கொண்டு மூன்று அந்தணர்கள் நிற்பது தெரிந்தது. மெல்ல அவர்களைப் பார்த்துச் சிரித்தார். வாசல் நோக்கி கைகாட்டினார். அவர்கள் வாசல் நோக்கி விரைந்தார்கள். சற்று நேரம் ஜனங்களோடு விதம்விதமாக சக்ரவர்த்தி உடையார் சல்லாபித்தார்.

''இங்கு யாருக்கேனும் குறை உண்டா? கூலிகளில் ஏதேனும் பேதம் உண்டா? கூலி சரியாகக் கொடுக்கிறார்கள் அல்லவா? பிற்பகல் உணவு இங்கு கொடுக்கச் சொல்லியிருக்கிறேன். எப்படியிருக்கிறது உணவு. ஏதேனும் குறையிருப்பினும் உடனடியாக எனக்குத் தெரிவியுங்கள். உன் ஆடை கிழிந்திருக்கிறதே ஏன்.''



''நல்ல ஆடை வைத்திருக்கிறேன். அது அழுக்காகி விடுகிறது. அதனால் கிழிசலைக் கட்டிக் கொண்டிருக்கிறேன்.''

''மிகவும் கிழிந்துபோய் விட்டது. இவ்வளவு கிழிசல் வேண்டாம். எல்லோருக்குமே மாற்றுத்துணி தரச்சொல்கிறேன். நீ கூலியல்லவா. இங்கு எத்தனை பேர் வேலை செய்கிறீர்கள்.''

''ஆயிரத்து நானூற்று ஐம்பத்தாறு பேர்.''

இன்னொருவன் பதில் சொன்னான்.

''சரியாகக் கணக்கு வைத்திருக்கிறாயே. நீ பாண்டிய வீரனா.''

''ஆமாம்.''

''நலமாகக் கவனித்துக் கொள்கிறார்களா.''

''நன்கு கவனித்துக் கொள்கிறார்கள்.''

''வம்பு எதுவும் இல்லையே.''

''இல்லை''

''எப்பொழுது பாண்டியதேசம் போகப் போகிறாய்''

''கோயில் கட்டி முடித்த பிறகு. போனாலும் போவேன். போகாது இங்கேயே தங்கினாலும் தங்கி விடுவேன்.''

''சோழப் பெண்ணைக் காதலிக்கிறாயா.''

''இல்லை. சோழ மண்ணைக் காதலிக்கிறேன்.''

அவன் பதில் சொல்ல இராஜராஜர் மெல்ல குதிரையை ஓட்டி அவன் அருகே வந்து அவன் தலையில் கை வைத்தார். முகத்தைத் தடவினார். வாழ்க என்று சொன்னார்.

கைநீட்டி மூன்று பொற்காசுகள் என்று சொல்ல மெய்க்காவல் படைவீரன் பொற்காசுகள் வைத்தான். அதை அவனிடம் நீட்டினார். மறுபடியும் தலையில் கைவைத்து ஆசீர்வதித்தார். குதிரையைத் திருப்பிக் கொண்டு சரட்டென்று கோயில் கட்டுமானப்பணி இடத்திலிருந்து வெளியே வந்தார்.

வெளியே அந்த அந்தணர்கள் நின்றிருந்தார்கள். அங்கே பெரிய கூரை ஒன்று கட்டப்பட்டிருந்தது. அது அந்தணர்களின் அலுவலகமாக இருந்தது. சரக்கென்று எழுந்து கீழே வந்து அங்குள்ள மரமேடையில் அமர்ந்து கொண்டார்.

''எவ்வளவு செலவாகியிருக்கும். இன்னும் என்ன செலவு செய்ய வேண்டும். பெருந்தச்சர் கேட்கின்ற உதவிகள் என்னென்ன. பெருந்தச்சர் என்ன கேட்டாலும் கொடுங்கள். ஆனால், என்ன கேட்கிறார் என்பதைக் குறித்து வைத்துக் கொடுங்கள்.''

''ஊதிய உயர்வு கேட்பார் போலிருக்கிறது.''

''அப்படியா... எவ்வளவு கேட்பார்.''

''விதம்விதமாகக் கேட்பார் என்று நினைக்கிறேன். தலைமைச் சிற்பிகளுக்கு, மரத் தச்சர்களுக்கு என்று விதம்விதமாகக் கேட்டார்.''

''அவர் கேட்பார் என்று எந்த ஆதாரத்தில் பேசுகிறாய்.''

''என்னுடைய பண்டாரத்தில் எவ்வளவு காசு இருக்கிறதென்று அவர் அடிக்கடி விசாரித்துக் கொள்கிறார்.''

''நீ என்ன சொல்கிறாய்.''

''பொய் சொல்கிறேன். பண்டாரத்தில் என்ன இருக்கிறது என்பதை நான் ஒட்டு மொத்தமாக அவரிடம் சொன்னதேயில்லை. பாதிதான் சொல்கிறேன்.''

சக்ரவர்த்தி வியப்போடு அந்த அந்தணரைப் பார்த்தார்.

''ஏன் அப்படி'' என்று கண்கள் சுருக்கிக் கொண்டு கேட்டார்.

''பண்டாரத்தில் வேலை செய்பவன் மொத்தக் கணக்கையும் அரசர் தவிர, வேறு எவருக்கும் சொல்லக் கூடாது. நீங்களே இந்த பண்டாரத்திற்கு உரிமையாளர். செலவழிக்கிறவர்களுக்கு பண்டாரத்தின் தொகை தெரிந்துவிட்டால் மொத்தமும் செலவு செய்துவிடுவார்கள். அப்பொழுது தேச நிர்வாகம் நடைபெற முடியாமல் தவிக்கும்.''

''அற்புதம் அந்தணர்களே.. உங்கள் சேவை என்னைக் குளிர்விக்கிறது. பண்டாரத்தில் காசு குறைவாக இருக்கிறது. கூலி உயர்வு சிரமம் தான் என்று சொல்லிவிடு.''

''அப்போது கூலி உயர்வு இல்லையா.''

''இப்போது இல்லை. மேலைச்சாளுக்கியத்திலிருந்து என்ன உள்ளே வந்திருக்கிறது என்பதை நான் தெள்ளத் தெளிவாகப் புரிந்து கொண்ட பிறகு இதுபற்றிப் பேசலாம். விளைச்சல் எப்படி இருக்கிறது என்று தெரிந்த பிறகு இதை நிர்ணயம் செய்யலாம்.''

மறுபடியும் குடிசையை விட்டு வெளியே வந்தார். குதிரையில் தாவி ஏறிக்கொண்டார்.

''உங்களுக்கும் கூலி உயர்வு தேவைப்படுமோ.''

''கொடுத்தால் வாங்கிக் கொள்வோம்.''

அந்தணர்கள் பல் தெரிய சிரித்தார்கள்.



''கொடுக்கப்படும். அமைதியாக இருங்கள். உற்சாகமாக இருங்கள். ஆழ்ந்து அனுபவித்து எல்லாச் செயலையும் செய்யுங்கள். உங்கள் உதவி மறக்கப்படமாட்டாது.''

''மருவூர் அந்தணர்கள் போருக்கு வந்து பெரும் உதவி செய்தார்களாமே.''

''ஆமாம்... உதவி செய்தார்கள்.''

''அவர்கள் கர்வத்திலிருந்து எங்களைக் காப்பாற்றினால் போதுமானது. வேறு ஏதுவும் எங்களுக்குத் தேவைப்படவில்லை.''

ஒரு அந்தணர் சட்டென்று சொல்ல,அவனை ஆழ்ந்து சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவர் பார்த்தார்.

''உங்கள் பயம் எனக்குப் புரிகிறது. அவர்களுக்கு அதிகம் மான்யங்கள் வழங்கப்படும். உங்களுக்கு அதிகம் அதிகாரங்கள் வழங்கப்படும். கவலைப்பட வேண்டாம்.''

''கோயில் பணி முடிந்த பிறகு நாங்கள் ஊருக்குப் போய் வரவும் அனுமதி தரவேண்டும். கூடுதல் அதிகாரம் எப்போது?''

''இப்போதே தந்தேன். இந்த எல்லைக்குட்பட்ட எந்த இடத்திலும் நீங்கள் அதிகாரியாக இருக்கலாம். அப்படி இருக்க தனித்தனியாக ஓலை தரப்படும.''

''மிக்க நன்றி சக்ரவர்த்தி.''

அவர்கள் கைகூப்பிப் பணிந்தார்கள்.

கூலி வேண்டாம். அதிகாரம்தான் வேண்டும் என்பதாகக் கேட்கிறார்கள்.

சக்ரவர்த்தி சிந்தித்துக் கொண்டே குதிரையைச் செலுத்தினார்.

அப்படியானால்.. கூலி வெவ்வேறு விதமாக வருகிறதோ. அவர்கள் வாழ்க்கைத்தரம் எப்படியிருக்கிறது. ஒற்றறிய வேண்டும் என்று அவருக்குத் தோன்றியது. அங்குள்ள மெய்க்காவல் படை வீரரிடம் காதோடு சொல்ல. வைணவதாசன் இடத்திற்கு உயர்த்தப் பட்ட ஒரு அந்தண ஒற்றன் குதிரையை ஒட்டிக்கொண்டு அவரருகே வந்தான்.

கோட்டை நோக்கிப் போகும் வழியே நடுநாட்டு, தொண்டை நாட்டு அந்தணர்களின் செல்வச் செழிப்பு பற்றி விசாரித்து வருமாறு கட்டளையிட்டார். அவன் தலையசைத்தான். குதிரையைத் திருப்பிக் கொண்டே சிரித்தான்.

இதுதான் அரசியல். இதுதான் அரசாங்கம். பட்டமும் கொடுத்து விலங்கும் போடுவது. எனக்குப் பின்னால் இன்னொரு ஒற்றன் இந்நேரம் கிளம்பியிருக்கக்கூடும். அப்படியே நடந்தது.

வைணவதாசனுக்குப் பதிலாக ஒரு புதிய ஒற்றத்தளபதி வந்திருக் கிறான். அவன் எப்படியிருக்கிறானென்று கண்காணித்து வா.

கங்கதேசத்து மறவனுக்கு உத்தரவிட்டார்.

பஞ்சவன்மாதேவி நிசும்பசூதனி கோயிலில் படுத்திருப்பதாக வழியில் ஒரு செய்தி வந்தது. கோட்டையை நோக்கிப் போய்க் கொண்டிருந்தவர், சட்டென்று திசை திரும்பினார்.

நிசும்பசூதனி கோயிலுக்குப் போனார்.

''கண்மணி எழுந்திரு. என்ன கோலம் இது.''

சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவர் உறங்கிக் கொண்டிருந்த பஞ்சவன்மாதேவிக்கு அருகே போய்மெல்லக் காதோரம் முணுமுணுத்தார்.

பஞ்சவன்மாதேவி சரட்டென்று கண் விழித்தாள். கை ஊன்றி எழுந்திருந்தாள்.

''போருக்காக என்னொடு தொலைதூரம் வந்து வெயிலிலும், மழையிலும், காட்டிலும், மேட்டிலும் அலைந்தது போதாதா. இங்கு வந்து என்ன உபவாசம். எனக்கு நீ செய்வது பிடிக்க வில்லை.''

மெல்லிய சீற்றத்தோடு, ஆனால் அருகேயிருக்கின்ற எவருக்கும் தெரியாதவாறு முணுமுணுப்பாகப் பேசினார்.

''வருத்திக் கொள்ளவில்லை. நன்றி சொல்கிறேன். முப்பத்தேழு நாட்கள் உயிருக்கு ஆபத்தான மேலைச் சாளுக்கியத்தில் இருந்தோமே. அப்படி ஆபத்துக் காலங்களில் இருந்தபோது நம்மை அரவணைத்து இந்த நிசும்பசூதனிதானே காப்பாற்றினாள். அவளுக்கு நன்றியாக மூன்றுநாள் உபவாசம் இருக்கிறேன்.''

''இதையெல்லாம் பதினைந்து நாள் ஓய்வுக்குப் பிறகு செய்யக் கூடாதா. பௌர்ணமி முடிந்த பிறகு செய்யக்கூடாதா. வந்தவுட னேயே இப்படியிருக்க வேண்டுமா. நீ செய்வது அரக்கத்தனமாக இல்லையா.''

அவர் கோபம் இன்னும் அதிகமாயிற்று.

''தயவு செய்து கோபித்துக் கொள்ளாதீர்கள். போரில் நேரடி யாக ஈடுபட்டிருக்கும் நேரத்தைவிட போருக்காக போய்க் கொண்டிருக்கிறோம் பாருங்கள் இதுதான் கொடுமையான நேரம்.



நாளை விடிந்தால் யார் உயிரோடு இருப்பார்கள். யார் மரண மடைவார்கள் என்று தெரியாமல் அந்நிய தேசத்திற்குள் மெல்ல மெல்ல புகுந்து கொண்டிருக்கிறோமே அதுதான் வேதனையான நேரம். அந்த நேரத்தில் இவளை நோக்கி நீங்கள் ஊத்தையடை யாத வண்ணம் திரும்பி வந்தால் உடனே உபவாசம் இருப்பதாக வேண்டிக் கொண்டேன்.''

''ஹா... நான் மனிதன்தானே. இன்றில்லையெனில் என்றேனும் ஒருநாள் நான் மரணமடையத்தானே வேண்டும்.''

அவள் சட்டென்று முன்னேறி சக்ரவர்த்தி உடையாரின் வாயைப் பொத்தினாள்.

''நீங்கள் மரணமடையக்கூடாது. உங்களுக்கு மரணமே வரக்கூடாது.''

''என்ன முட்டாள்தனம். பிதற்றுவதற்கு ஒரு அளவு இல்லையா. நான் சக்ரவர்த்தி என்பதால், சோழ சாம்ராஜ்ஜியத்தின் அரசன் என்பதால் எனக்கு மரணமே வராமல் போய்விடுமா. காலாகாலத் திற்கும் இந்த இராஜராஜன் உயிரோடு இருப்பானா.''

''ஆமாம். காலாகாலத்திற்கும் இந்த இராஜராஜர் உயிரோடு இருப்பார். அவர் மரணமடைந்ததாக என்னிடம் யாரும், எப்போ தும் எதன் பொருட்டும் தகவல் சொல்லமாட்டார்கள்.''

''என்ன உளறலம்மா இது. போர் உன் சிந்தனையைப் பாதித்து விட்டது. செத்து விழுவதைப் பார்த்துவிட்டு நான் சாகக்கூடாது என்று கதறுகிறாயா. கொஞ்சம் நிதானமாக, தெளிவாகப் பேசு. எப்படி முடியும் இது.''

''நிச்சயம் முடியும்.''

''எப்படி.''

''நான் உங்களுக்கு முன்னே இறந்து போனால், என் காதுகளில் நீங்கள் மரணமடைவது விழாதல்லவா. நீங்கள் இறப்பது பற்றி எனக்குத் தெரியாதல்லவா.''

''என் இறையே... பரமஸ்வாமி... இப்போது வாய் பொத்துவது என்னுடைய முறையா. நீ செத்துப் போவதைப்பற்றி வாய் நிறைய சொல்லலாம். நான் சாவதைப் பற்றிப் பேசக்கூடாதா.''

''நீங்கள் இறந்து போவதை என்னால் தாங்கவே முடியாது.''

''என்ன கூத்து இது. விழித்துக்கொண்டு பேசு. ஏதேனும் மருந்து மயக்கத்தில் இருக்கிறாயா. மரணம் இல்லாத வாழ்க்கை எவருக்கு மில்லை. நீ, நான் யாவரும் ஒருநாள் இறக்கப் போகிறோம்.''

"அது குறித்து எனக்குக் கவலையில்லை. என் காதுபட உங்கள் மரணச்செய்தி எனக்கு வரவே வராது. வரக்கூடாது என்று நிசும்ப சூதனியிடம் வரம் கேட்டிருக்கிறேன். இந்த யுத்தத்திற்குப் போகும் போது நானும் அவரோடு போகிறேன். போகும் வழியெல்லாம் உன் பெயரைத்தான் சொல்லப் போகிறேன். நான் அறிய, அவருக்கு மரணம் வரக்கூடாது என்று வேண்டியிருக்கிறேன். இந்த யுத்தத்தை அவள்நிறைவேற்றிக் கொடுத்துவிட்டாள். அதற்காக மூன்று நாள் அவள் காலடியிலேயே உண்ணா நோன்பு இருக்கிறேன்."

"நான் சாதாரண மனிதனடி."

"இல்லை. நீங்கள் சாதாரண மனிதரில்லை. வெறும் சக்ரவர்த்தி யில்லை. என் புருஷன் இல்லை. சோழர் குலமக்களின் தலைவ னில்லை. நீங்கள் மிகப்பெரியவர். இதையெல்லாம் தாண்டி மிகப்பெரிதாய் சிந்திக்கிறவர்."

"கடவுளே என் மீது உனக்குள்ள காதலை இப்படி அதிகப் படியாய் புகழ்ந்துதான் காட்ட வேண்டுமா."

"காதலா.. உங்களையா, நானா, உங்களைக் காதலிக்க எனக்கு யோக்கியதை இருக்கிறதா. உங்கள் காலடியின் கீழ் இருக்கத்தான் எனக்கு முடியுமே தவிர, உங்கள் கருணையால் ஒட்டிக் கொண்டு தான் வாழ முடியுமே தவிர, உங்களை நான் காதலிக்கிறேன் என்பது அகம்பாவம். திமிர், நீங்கள் கருணைமிக்கவர். எங்கோ தெருவில் சுற்றிக் கொண்டிருந்த இந்த நாயை எடுத்து மடியில் வைத்துக் கொண்டிருக்கிறீர்கள்."

"போதுமடி."

சக்ரவர்த்தி உடையார் வேகமாகச் சீறினார்.

"உன்னை நீயே எதற்கு இழிவு படுத்திக் கொள்கிறாய்."

"நான் இழிவுபடுத்திக் கொள்ளவில்லை. உங்களையும் என்னையும் எடை பார்த்த பிறகு பேசுகிறேன். நீங்கள் நிர்வாகம் செய்யும் அழகு பார்த்து வியந்திருக்கிறேன். உங்களின் நெஞ்சி லிருந்து வருகின்ற உண்மையை, சத்தியத்தைப் பார்த்து திகைத்திருக் கிறேன். மிகப்பெரிய கடவுளுக்கு, மிகப்பெரிய கோயில் கட்ட வேண்டுமென்ற ஆதங்கம் பார்த்து வியந்திருக்கிறேன்.

வைணவதாசனை சித்ரவதை செய்து கொன்று விட்டார்கள் என்று தெரிந்ததும் மிக உக்ரமாகச் சீறி எழுந்தீர்களே. அது இதுவரை நான் காணாத விஷயம்.



அத்தனை படைகளும் ஏன், இராஜேந்திரனும், அருண்மொழிப் பட்டனும், பிரம்மராயரும், பழுவேட்டரையரும் திகைத்துப் போய் கிடந்தபோது, நீங்கள் மட்டும் அந்த வெள்ளத்தில் குதிரையை இறக்கி வெறிபிடித்ததுபோல் போனீர்களே. வேகமாக கரை தட்டி நேரடியாய் வாள் வீசி சண்டையிட்டீர்களே, அந்தக் காட்சி எனக்கு மறக்காது.

நீங்கள் கையசைத்திருந்தால் அத்தனை பேரும் நகர்ந்து முன்னேறி இருக்கலாம். சௌகரியமான ஒரு பாறையில் நின்று கொண்டு நீங்கள் கொடியசைத்தோ, கையசைத்தோ படையைப் போகச் சொல்லலாம். ஆனால், நீங்கள் தான் முதலில் இறங் கினீர்கள்.

பிரம்மராயர் தவித்துப் போனார். சக்ரவர்த்தி போகிறாரடா, போங்கள் அத்தனை பேரும் போங்கள் என்று விரட்டினார். அந்த யானைப் பாகனைக் கன்னத்தில் அடித்து உடனே நீரில் இறங்கச் சொன்னார்.

நீங்கள் கரையேறிய சில வினாடிகளில் அவர்களும் கரையேறி விட்டார்கள். போர் துவங்கிவிட்டது. கால் நாழிகைக்கும் குறைவாக அந்த நடவடிக்கைகள் இருந்தது.

அரசே.. என் அரசே.. என் புருஷா. நீ இறந்து விடுவாயோ என்று அந்த நேரம் அதிகம் பதறினேனப்பா. நீங்கள் வேகமாகப் போன போது, எங்கே துண்டுபட்டு வருவீர்களோ என்று வயிறு கலங்கினேனய்யா. இங்குள்ள அத்தனை பெண்டுகளுக்கும் நான் என்ன பதில் சொல்வேன் என்று பதறினேனப்பா. என்னை எடுத்துக் கொள். என்னை எடுத்துக் கொள். எங்கள் தலைவனைக் கொடு என்று வாய்விட்டு அழுதேன். பிளிறினேன்.

இதோ... இங்கே... இந்த தஞ்சை மாநகரில் இந்த நிசும்ப சூதனியின் கோயிலுக்கு முன்னே நீங்களும், நானும் அமர்ந்திருக் கிறோம். இங்கே மிகப்பெரிய வெற்றியோடு வந்து உட்கார்ந்து கொண்டிருக்கிறோம். நிறைய செல்வத்தைக் கொண்டு வந்து தஞ்சையிலே கொட்டியிருக்கிறோம்.

பேரரசே. எனக்கு இந்த வெற்றி உறைக்கவில்லை. நீங்கள் உயிரோடு இருக்கிறீர்களே இதுதான் என் உள்ளத்தை நிறைக்கிறது. நீங்கள் நல்லபடி தஞ்சை நகரத்தைச் சுற்றி வருகிறீர்களே இந்தச் செய்திதான் என் காதை நிறைக்கிறது. உங்களுக்கு இனி தீர்க்காயுசு. நீங்கள் இறந்துவிடுவீர்கள் என்ற செய்தி என் காதுக்கு வரவே வராது."

''என்ன சொல்கிறாய். நாளை காலையிலேயே செத்துவிடுவாயா. உடனடியாக மரணமா.''

''தெரியவில்லை. ஒன்று தெரிகிறது. உங்களுக்கு முன்னால் நான் மரணமடைவேன். உங்கள் மடியில் உயிர் துறப்பேன். நிசும்பசூதனி எனக்கு வாக்குக் கொடுத்திருக்கிறாள்.''

''நீ என் கையால் வெட்டுப்படுவாய் என்று சொல்லவில்லையா.''

''அந்தப் பாக்கியம் எனக்கு இல்லை.''

''பஞ்சவன்மாதேவி... உன் மீது மிகப்பெரிய கோபம் வருகிறது. உன்னை அடித்து உதைக்க வேண்டுமென்ற வெறி வருகிறது. அதே சமயத்தில் உன்னுடைய காதல் பார்த்து உள்ளம் நெகிழ்ந்து இறுக்கிச் கொஞ்ச வேண்டும்போல் உள்ளது. நீ உபவாசம் இருக்கிறாய். இது கோயில். எனவே, இந்த இரண்டையுமே செய்யாமல் நான் விலகுகிறேன். உபவாசம் முடித்து நன்றாக உண்டபிறகு என்னை வந்து பார்.''

''தஞ்சையை விட்டு எங்கேயாவது போகும் எண்ணம் உண்டா.''

அவர் கைகளைப்பற்றிக் கொண்டு பஞ்சவன் மாதேவி கேட்டாள்.

''இல்லை. கோயில் வேலைகள்தான் பார்த்தபடி இருப்பேன்.''

''நாளை காலையிலும் வந்து என்னைப் பார்ப்பீர்களா.''

''இல்லை. வரமாட்டேன்.''

''ஏன்.''

''அது நான் உனக்குக் கொடுக்கும் தண்டனை.''

''எதற்காக தண்டனை.''

''என்னிடம் கேட்காமல் எப்படி உபவாசம் இருக்கலாம். என் உத்தரவு இல்லாமல் எப்படி இதை மேற்கொள்ளலாம். ஆனால், உபவாசம் இருப்பேன் என்று உட்கார்ந்துவிட்டாய். தடுத்தால் அன்னையின் கோபத்திற்கு ஆளாவேன். உபவாசம் இரு. ஆனால் நான் வந்து பார்க்கமாட்டேன். என் வருகையால் உன் தவம் கலையும். நீ இரு. உபவாசம் இரு. நம்மில் இறந்து போன அத்தனை வீரர்களின் மனக்கேதம் தீரும் பொருட்டு விளக்கேற்றி வைத்து வழிபட்டு அந்த வீரர்களை நினைத்தபடி இரு.''

''வைணவதாசனின் மனைவி எப்படியிருக்கிறாள்.''



''சட்டென்று தேறிவிட்டார். கருவூர்த்தேவர் ஏதோ பேசி அவளை நிமிரவைத்துவிட்டார். தேவி... சட்டென்று அமைதியாக யோசித்துப் பார்த்தால் உன் உபவாசம் சரியென்றுதான் தோன்றுகிறது. உண்மையில் சோழதேசத்துச் சக்ரவர்த்தியான நான் உபவாசம் இருந்திருக்கவேண்டும். இறந்தவர்களின் மனக்கேதம் தீர்க்கும் பொருட்டு நான் அமைதியாக அமர்ந்திருக்க வேண்டும். நான் அமர்ந்தால் ஊரே அமர்ந்து கொள்ளும்.

உபவாசம் இருக்கும் பெண்களும், பிள்ளைகளும், கிழவர்களும், அது தாங்காமல் சோர்ந்து போவார்கள். அவர்கள் உற்சாகமாக இருக்கிறார்கள். உபவாசம் என்று சொல்லி அவர்களைக் கலைக்க வேண்டாம். என் பொருட்டும், என் தேசம் பொருட்டும், என்னுடைய வீரர்கள் பொருட்டும் நீ உபவாசமிருக்கிறாய்.

என் தாயே... பஞ்சவன்மாதேவி. என் மனமார்ந்த நன்றி. யார் எப்போது இறப்பது என்பது கடவுளுடைய விருப்பம். இது குறித்து எனக்கு எந்தக் கோரிக்கைகளும் இல்லை. நீயும் எந்தக் கோரிக்கைகளும் இல்லாமல் அமைதியாய் இரு. அது போதும்.''

சக்ரவவர்த்தி மெல்ல நகர்ந்து அவள் தலையைத் தடவிக் கொடுத்தார். விலகினார். அவள் அமர்ந்திருந்த மேடையிலிருந்து கீழிறங்கினார். விரைவாக நடந்து குதிரையில் தாவி ஏறிக் கொண்டார்.

தஞ்சை வீரர்கள் மிகுந்திருந்த அந்தக் குடியிருப்பு அவரைச் சூழ்ந்து கொண்டது. அவர் உற்சாகமாய் அவர்கள் கையைத் தொட்டும், தலையைத் தடவியும் நகர்ந்து போனார். மெய்க்காவல் வீரர்கள் மிகக் கவனமாய் அவரை அழைத்துப் போனார்கள்.

## 165

வயதில் இளமையான புத்தபிக்குகளுக்கு ஒரு இடத்திலேயே இருப்பதற்கு இடமில்லை. அவர்கள் இடம் மாறிக் கொண்டேயிருக்க வேண்டும் அல்லது தீர்த்த யாத்திரை அடிக்கடி போய் வரவேண்டும் என்பது கண்டிப்பான விதிகளில் ஒன்று. அதற்கான காரணங்கள் பல இருந்தன.

ஒரு இடத்திலேயே இருந்து அந்த இடத்தின் வசதிகளை அனுபவித்து சுகப்பட்டுவிடக்கூடாது. சுகப்படுகிற உடம்பும் மனதும் தீவினைகளுக்கு வெகு எளிதில் தயாராகிவிடும். தொலை

தூரம் நடப்பதால் உடம்பு உறுதிபெறும். உடம்பு உறுதியாக இருந்தால் மனம் சீராக இருக்கும்.

அப்படி நடக்கும்போது பல மக்களை, பல பிரச்சினைகளை பல்வேறு இடங்களைப் பார்க்கின்ற அனுபவம் மனதிற்கு வலுவூட்டும். வாழ்வு பற்றிய ஆராய்ச்சி இன்னும் அதிகமாகும். வாழ்வு பற்றிய ஆராய்ச்சி அதிகமானால் இறை நெருக்கம் மிகுதியாகும். குதிரையில்லாது, மாட்டு வண்டியில்லாது, விலங்கினங்களைத் துன்புறுத்தாது நடந்து நடந்து நாட்டின் பல பாகங்களுக்கும் போகும் போது, இயற்கையினுடைய அற்புதங்களை, அது கொடுக்கும் கொடை மிக நன்றாக மனதில் பதியும்.

வெயிலில் நடந்து பின், மரநிழலில் ஒதுங்குபவன் சட்டென்று ஒரு தாவரத்தைத் துன்புறுத்த அஞ்சுவான். எவரோ குடைபிடிக்க யானையில் போகிறவனுக்கு மரம் பற்றிய மேன்மைகள் தெரியாது. அதுவுமில்லாது அப்படி நடக்கிறபோது குழுவாக நடந்தாலும் வெகுசீக்கிரம் உள்ளுக்குள் தனிமை ஏற்பட்டுவிடும். உள்ளுக்குள் தனிமை ஏற்பட்டு, தனித்து நடக்கிறபோது தன்னைப் பற்றிய விசாரம் அதிகமாகும். தன்னைப்பற்றிய விசாரம் உள்ளவனுக்கே ஞானம் சித்திக்கும்.

சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவரின் இரண்டாவது மகளான சந்திரமல்லி என்று அழைக்கப்பட்டு மாதேவடிகளாக மாறிய அந்தப் பெண் நடந்து கொண்டே யோசித்தாள்.

தஞ்சையிலிருந்து நான்கு நாட்களுக்கு முன்பு கிளம்பி நாகைப் பட்டிணம் நெருங்கியாகிவிட்டது. அங்குள்ள புத்த விஹாரத்தில் சிறிது நாட்கள் தங்கி புத்த பிட்சுக்களோடு விவாதங்களும், கருத்துப் பரிமாறுதல்களும் செய்துகொண்டு, பிறகு மறுபடியும் தஞ்சைநோக்கி வந்துவிடலாம். ஒருமுறை வந்து போயேன் என்று புத்த விஹாரத் தலைவர் ஒரு ஓலை அனுப்பியிருந்தார்.

என்ன காரணம் என்று ஓலை கொண்டு வந்தவனை விசாரித்த போது, அவனுக்கு எதுவும் தெரியவில்லை. புத்தவிஹாரம் நல்லமுறையில் நடக்கிறதென்றும், சோழதேசத்து அதிகாரிகள் வெகுவாக உதவுகிறார்கள் என்றும், மக்களிடையே நன்மதிப்பு பெற்றிருக்கிறது என்றும், சாரைசாரையாகப் பல்வேறு கிராமங்களிலிருந்தும் நோயுற்றவர்கள் வந்து தங்கி சிகிச்சை பெற்றுப் போகிறார்கள் என்றும், வாழைப் பழங்களும், காய்கறிகளும், கனி வகைகளும் கொடுத்துவிட்டுப் போகிறார்கள் என்றும் விவரம் சொன்னான்.



விஹாரம் பெரிதாக இருப்பதால் ஒவ்வொரு திங்களன்றும் மக்கள் உள்ளே போய் விஹாரம் முழுவதும் துடைத்து, ஒட்டடையடித்து, அங்கங்கே தீபதூபம் ஏற்றி வைத்து சந்தோஷப்படுகிறார்கள் என்றும், யாரையும் மதம் மாற்றும்படி சொல்வதில்லையென்றும் அப்படி மாறுகிறேன் என்று சொன்னவர்களையும் கூட உற்சாகப்படுத்துவதில்லை என்றும் விவரமாகச் சொன்னான்.

''என்ன தயக்கம். மதமாற்றம் செய்வது வழக்கம் தானே'' ஆவலாக மாதேவடிகள் கேட்டார்.

''வழக்கம்தான். ஆனால் இன்றைய அரசியல் சூழ்நிலையில் சோழசாம்ராஜ்ஜியம் சைவ சமயத்தின் காவலாக வளர்ந்துவரும் நிலையில், பௌத்தத்திற்கு மாற்றினால் ஒருவேளை ஏதேனும் எதிர்ப்பு கிளம்பக் கூடும். அரசாங்க உதவிகள் மறுக்கப்படக்கூடும் என்பதால், அவ்விதம் செய்யாதிருக்கிறோம். அதே சமயம் யுத்தம் வேண்டாமென்றும், யுத்தத்தால் ஏற்படுகின்ற பாதிப்பு பற்றியும் கதைகள் மூலம் மக்களிடையே பிரசாரம் செய்து வருகிறோம்.'' என்றும் ஓலை கொண்டு வந்தவன் சொன்னான். மாதேவடிகளுக்கு மெல்லியதாய் ஒரு சந்தேகம் வந்தது.

இது அரசருக்கு எதிரான விஷயமாகக் கருதப்படாதா? புத்த விஹாரம் எதற்கு யுத்தத்திற்கு எதிராகப் பேசப்பட வேண்டும். அகிம்சை புத்தரின் கொள்கை என்பது உண்மையாயினும், யுத்தம் தவறு என்று சொல்கிற போது அரசர் தவறு என்றல்லவா ஆகும். சோழ தேசத்தின் அரசாங்கம் தவறு என்றல்லவா ஆகும் என்று கவலைப்பட்டாள்.

இதுபற்றியும் விஹாரத் தலைவரிடம் பேசலாம். தலைமைப் பிட்சுகளோடு பேசலாம். வயதான புத்த பிட்சுகளோடு சம்பாஷிக்கலாம் என்ற எண்ணமும் தோன்ற, ஓலையில் குறிப்பு எழுதி, கதவில் சொருகிவிட்டு ஒரு துணிப்பையோடு நாகைப்பட்டிணம் நோக்கிக் கிளம்பி விட்டாள்.

அவளருகே ஒரு சேவகன் கைகூப்பி வணங்கி, நானும் உங்களுக்குத் துணை வரட்டுமா என்று கேட்டான். அவன் காவலனா, ஒற்றனா என்று தெரியவில்லை.

''இல்லை. வேண்டாம். நான் நாகை விஹாரம் போகிறேன். நிச்சயம் திரும்பி வருவேன். ஒரு மாதத்திற்குள்ளாகத் திரும்பி விடுவேன்.'' என்று விவரம் சொல்ல, அவன் சந்தோஷமாக விடை கொடுத்தான்.

ஊர் எல்லை வரை அவன் இடைவெளிவிட்டு பின் தொடர்ந்து வந்தான் என்பதை அவளால் உணர முடிந்தது. அது ஒரு மாதிரி யான காவல். ஒருமாதிரி உளவறியும் வேலை என்று நினைத்துக் கொண்டாள். தஞ்சை எல்லையைத் தாண்டி நாகை வர நான்கு நாளாயிற்று.

பிற்பகல் நேரம் நாகை புத்த விஹாரத்திற்குள் நுழைய புத்தபிட்சுகள் ஆவலோடு வரவேற்றார்கள். இளம் சிறார்கள் துள்ளிக் குதித்துக் கொண்டு சரணம் கூறி கைகூப்பினார்கள். குனிந்து வணங்கினார்கள்.

கை கழுவ நீரும், குடிக்க மோரும், உண்ண உணவும் கொடுத் தார்கள்.

முழு தங்கத்தாலான புத்தரின் பெரிய விழிகளும், மெல்லிய புன்னகையும், அபய ஹஸ்தமும், நெஞ்சில் மலர்ந்த கையும் பார்த்து அவள் கண்ணீர் சிந்தினாள்.

''புத்த, நீ பகவான். ஜோதியே, உனக்கு வணக்கம்.'' என்று தொழுதாள்.

கண்மூடி உள்ளுக்குள் தன்னைப் பார்த்தபடி அமைதியாகக் கிடந்தாள். மெல்ல குளிர்காற்று மேலே படுவதைக் கண்டு ஏதோ ஒரு உணர்வால் கண்விழித்தாள். எதிரே, தலைமை புத்தபிட்சு அமர்ந்திருந்தார். பின்னே ஒரு சிறுவன் வெகு நிதானமாய், மிக மரியாதையாய் அளவோடு விசிறிக் கொண்டிருந்தான்.

தட்டி எழுப்புவது என்பது அநாகரீகம் என்பதாலும், கைதட்டிக் கூப்பிடுவது மிகுந்த பாபம் என்பதாலும், இப்படி மெல்ல விசிறி குளிர்காற்று அனுப்பி எழுப்பச் செய்வது புத்த பிக்குகளின் வழக்கம். அவசியமிருந்தாலொழிய இப்படி அவசரமாக எழுப்ப மாட்டார்கள்.

அவள் எழுந்து தலைமைப் பிக்குவை மண்டியிட்டு வணங்கினாள். சரணம் சொன்னாள். அவளுக்கு புத்தபிட்சுவின் காலடியில் ஆசனம் போடப்பட்டது. அவள் ஆசனத்தில் உட்காரத் தயங்கினாள். ஆனால், தலைமைப் புத்தபிட்சு வற்புறுத்த ஆசனத்தில் அமர்ந்தாள்.

புத்தரின் காலடியிலிருந்து எடுத்த பாரிஜாத மலர்களைக் கொண்டு வரச்சொல்லி, அவைகளை மாதேவடிகளின் கையில் தலைமை புத்தபிட்சு போட்டார்.



''உன்னை வரச்சொல்லி துன்பம் கொடுத்து விட்டேன். என்னை மன்னிக்க வேண்டும்.'' கைகூப்பினார். மாதேவடிகள் அவசரமாய் மறுக்க, ''நீ மிக அழகாக உன் தந்தைக்கு அருகே அமர்ந்துவிட்டாய். இந்த அமைதி மிக நல்லது. உன்னுடைய பிரார்த்தனைகள் உன் தந்தையாரை நிச்சயம் காக்கும். யுத்தம் தவறு என்று நாம் ஆணித்தரமாக, விதம்விதமாக சொல்லிக் கொண்டிருந்தாலும், இந்த உலகம் அதை செவிமடுத்துக் கேட்பதே யில்லை. மரத்தின் இயல்பு கிளைவிடுவது. மனிதனின் இயல்பு யுத்தம் செய்வது என்றுதான் எதிர்வாதம் செய்கிறார்கள். இங் கிருந்து எதையும் எடுத்துப்போக முடியாது. ஆனாலும் மனிதர்கள் எல்லாமும் தனக்கு வேண்டுமென்று பேராசைப்படுகிறார்கள். உன் தந்தை கடைசியாக நடத்திய யுத்தத்தில் அதிக சேதமின்றி குறைவான உயிர் பலிகளோடு நடத்தப்பட்டது என்று கேள்விப் பட்டு புத்தருக்கு நன்றி சொன்னேன்.

உன்னை இங்கு வரச் சொன்னதற்கு முக்கியமாக மூன்று காரணங்கள் உண்டு. புத்த பிட்சுக்கள் உடையில் வேதாரண் யத்தில் பன்னிரெண்டு பேர் கரை இறங்கியதாகவும், அவர் களோடு ஈழத்தவர் இருந்ததாகவும், அங்குள்ள நமது இனத்தைச் சேர்ந்த குடிமக்கள் சொன்னார்கள்.

புத்தபிட்சுக்கள் என்று ஆவலாகப் போய் வணங்கி உணவு எடுக்க அழைத்தபோது, அவர்கள் கடும் வார்த்தைகளைக் கூறி மறுத்துவிட்டதாகவும், அம்மாதிரி வார்த்தைகளை ஒரு புத்தபிட்சு சொல்வதில்லை என்றும், இவர் எப்படி புத்த பிட்சுவாக இருக்கிறார் என்றும் ஆச்சரியம் கொண்டதாகவும், இவர்கள் புத்த பிட்சுவாக இருக்க முடியாது என்றும் தீர்மானித்ததாகவும் நமது இனத்துத் தலைவர் ஒருவர் என்னிடம் வந்து சொன்னார்.''

''அப்படியா..''

''பத்து வயதுப் பையனை அவரைப் பின் தொடருமாறு பணித் திருக்கிறார். கடற்பயணத்தைத் தாங்காமல் ஆசுவாசப்படுத்திக் கொள்ள, அவர்கள் ஒரு இடத்தில் தங்கியபோது, இந்தச் சிறுவனும் அருகே இருந்திருக்கிறான். சக்கரவர்த்தி ஸ்ரீ இராஜராஜத்தேவர் இறந்துவிட்டால் சோழதேசம் நம் வசமாகும் என்று அவர்கள் பேசிக் கொண்டதாகச் சொல்கிறார்கள்.

சக்கரம், ஊதுகுழல் போன்ற வார்த்தைகளை அவர்கள் பயன் படுத்தியதாகவும் அந்தச் சிறுவன் சொல்லியிருக்கிறான்.

அவர்கள் மரத்தடியில் தூங்கி அங்கிருந்து புறப்பட்டபோது, ஒரு சிறு பையை விட்டுவிட்டுப் போயிருக்கிறார்கள். அந்தப் பையைக் கொண்டு வந்து அந்தச் சிறுவன் இங்கே கொடுத்தான். அதில் பளிங்குக் குப்பி இருக்கிறது. மூடிபோட்ட அந்தப் பளிங்குக் குப்பியில் கடும் விஷம் இருக்கிறது. பாஷாணக் கல்லிலிருந்து எடுக்கப்பட்ட விஷம் அது. கொல்லி மலை அடிவாரத்திலும், கங்க தேசத்திலும் இந்த பாஷாணக்கல் கிடைக்கிறது.

சேரதேசத்து நம்பூதிரிகள் இதை அம்பில் தோய்த்து உபயோகப் படுத்துவதாக நான் கேள்விப் பட்டிருக்கிறேன். உடனடியாக இம்மடத்திலுள்ள ஒரு வாலிபப் புத்தபிக்குவை இராஜேந்திரடம் அனுப்பி எச்சரிக்கையாக இருப்பதற்கு கோரியிருக்கிறேன். போனவரிடமிருந்து இதுவரை செய்தியில்லை.

உன் தந்தையாரிடம் அணுகுவது எளிதல்ல என்பதால் பஞ்சவன் மாதேவியிடம் அந்த புத்தபிக்குவைப் பேசச் சொல்லியிருக்கிறேன். இன்னொரு படகு வரும் என்று சொல்லியிருப்பதால், கடலோரத் தில் குடியிருக்கும் கடற்படை உபதளபதிகளை அழைத்து விவர மாகச் சொல்லி மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டுகோள் விடுத்திருக்கிறேன். இங்குள்ள சோழ தளபதிகள் சைவர்களாக இருந்தாலும், நம் மீது மிகுந்த மரியாதையாகப் பழகுகிறார்கள்.

அன்னியர்கள் எளிதாக வந்து போகும்படியாக வேதாரண்யத்தி லிருந்து குமரிமுனை வரை பாதுகாப்பற்றுக் கிடப்பதால், ஏதேனும் செய்து இந்தப் பகுதியின் பாதுகாப்பை அதிகப்படுத்த முடியுமா என்று பார்க்க வேண்டும்.

கிராமங்களுக்கு நடுவே இடைவெளி அதிகம் இருக்கிறது. புதிய கிராமங்களைத் தோற்றுவிக்க முடியுமா என்று பார்க்க வேண்டும். அங்கேயுள்ள கிராமமக்களிடம் பேசும்போது தஞ்சையிலிருக் கின்ற புரவிகளை இங்கே அனுப்பினால் போக்குவரத்திற்கு வசதியாக இருக்கும் என்று சொல்கிறார்கள்.

கப்பலில் வந்து இறங்குகின்ற யவனப் பொருட்கள் அத்தனை யும் தஞ்சைக்கும், குடந்தைக்கும் போகிறதே தவிர, இங்கு உபயோகத்திற்கு எதுவும் இல்லை என்கிறார்கள். இப்பொழுது சிறு வண்டிகள் வந்திருக்கிறதாமே. அது வேண்டுமென்றும் கடற்படை தளபதிகள் கேட்கிறார்கள். அவர்களுக்குக் கேட்க அச்சம் போலும். என்னைக் கேட்கச் சொல்லியிருக்கிறார்கள். நான் போய் யாரைக் கேட்பேன். உன்னிடம் தானே கேட்க வேண்டும். நீ சொன்னால் அதற்கொரு மதிப்பு இருக்குமல்லவா.''



மாதேவடிகள் வியப்போடு தலைமைப் பிட்சுவைப் பார்த்தாள்.

புத்த பிட்சு விஹாரத்தின் விவரங்களை விட்டு விட்டு, இப்படி எல்லைப்புறக் காவலுக்காகவும், கடற்கரை ஓர மக்களுக்காகவும் பேசுவது அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது. இது வழக்கமில்லாத வழக்கம் என்று மனதில் நினைத்துக் கொண்டாள்.

''இன்னொரு விஷயமும் உன்னிடம் சொல்ல வேண்டுமென்று உன்னை வரவழைத்தேன். ஆழ்ந்த தியானத்தில் ஈடுபடுகிற பொழுது கனவு போன்ற சில விஷயங்கள் எனக்கு ஏற்படும். அவை பல்வேறு நேரங்களில் நிகழ்ந்து விடுவதையும் பார்த்திருக்கிறேன். உதாரணமாக இங்குள்ள புத்த பிக்கு எவனோ சுருண்டுவிழுவது போலக் கண்டால், அவன் நோயுற்றிருப்பதை நான் முன்கூட்டியே உணர்ந்து கொண்டுவிடுவேன். அதேபோல உன்னைப் பற்றி ஒரு தியானத்தில் உணர்ந்தேன்.''

''என்னவென்று..''

மாதேவடிகள் ஆவலாகக் கேட்டாள்.

''நீ மறுபடியும் சைவ சமயத்திற்கு மாறிவிடுகிறாய் என்ற உணர்வு எனக்குத் தோன்றியது. இதை நான நேரடியாகப் பார்க்க வில்லை. காட்சியாகத் தெரியவில்லை. மாறாய் இப்படிப்பட்ட செய்திகள் பலபேர் ஆவலோடும், வியப்போடும் என்னிடம் வந்து சொல்கிறார்கள். நான் மௌனமாகக் கேட்டுக் கொண்டிருக் கிறேன். உள்ளே ஒரு வேதனை புரள்கிறது.

சைவத்திலிருந்து பௌத்தத்திற்கு மாறுபவர்கள் உண்டு. பௌத்தத்திலிருந்து யாரேனும் சைவத்திற்கு மாறுவார்களா என்ற வேதனை புரண்டது. இரண்டுமூன்று நாட்கள் ஏதோ கனவுத் தோற்றம் என்று தெரிந்த பிறகும், உள்ளுக்குள் வேதனை தொடர்ந்து இருக்கத்தான் செய்தது. அப்படி ஏதேனும் எண்ண மிருந்தால், அப்படி ஏதேனும் சூழ்நிலை இருந்தால், ஒருக்காலும் மாறிவிட வேண்டாமென்று உன்னைக் கேட்டுக் கொள்வதற் காகவும் நான் உன்னை இங்கு வரவழைத்தேன்.''

''இது என்ன விபரீதமான வேண்டுகோள். நான் எதற்கு வேறு மதம் மாறப்போகிறேன்.''

''மாறச் சொல்லி யாரும் கட்டாயப்படுத்த வில்லையே.''

''இல்லை.''

''உன்னை யாரும் கட்டாயப் படுத்த முடியாது. ஆனால், நீயாக மனம் திரும்பலாமோ என்ற பயம் எனக்கு இருக்கிறது. வேறு

எவராவது மாறுவதாக இருந்தால், அதை முக்கியமாக நினைக்க மாட்டேன். நீ சோழ குல மங்கை. இன்றைய சக்கரவர்த்தி இராஜ ராஜரின் இரண்டாவது மகள். நீ எது செய்தாலும் அது செய்தி யாகும். எல்லாப் பகுதியிலும் பரப்பப்படும். அதற்கு காரணகாரி யங்கள் விவாதிக்கப்படும். புத்தமதத்தைப் பற்றி இழிவாகவும் பேசப்படலாம். சைவர்களுக்குப் பெரும் கொண்டாட்டமாகவும் போய்விடலாம்.

இன்றைய காலகட்டத்தில் அவ்விதம் நிகழ்வது புத்த மதத்திற்கு நல்லதல்ல. தயவு செய்து எந்தக்காரணம் கொண்டும் இம்மாதிரி செய்துவிட வேண்டாம் என்று நான் மறுபடியும் கேட்டுக் கொள்கிறேன்.''

அவள் பேச வாயெடுக்கும்போது அவர் கையமர்த்தினார்.

''நான் விடை பெறுகிறேன். நீ வேண்டுமென்ற நேரம் இந்த விஹாரத்தில் தங்கி, பிறகு தஞ்சைக்குப் போகலாம். உன்னை இங்குள்ளவர்கள் நன்கு கவனித்துக் கொள்வார்கள்.

அவர் எழுந்து கை கூப்பினார். திரும்பி புத்தரை வணங்கினார். கிடுகிடுவென்று நடந்து அந்தப் பெரிய கூடத்தின் ஓரத்திலிருந்த வாசல் வழியாக வெளியே போனார். மறைந்தார். கூடத்தின் ஒரு ஓரத்தில் மாதேவடிகள் படுத்துக் கிடந்தாள்.

இரும்பாலான உள்ளங்கை அளவேயுள்ள கூர்மையான முனைகளுள்ள சக்கரங்கள் பலதும் வானத்திலிருந்து சரமாரியாக மக்கள் கூட்டத்தில் விழுகிறது. மக்கள் கைகள் உயர்த்தி இராஜ ராஜரைக் காப்பாற்ற முயற்சி செய்கிறார்கள் என்பதுபோல் கனவு வந்தது. திடுக்கிட்டு எழுந்தாள்.

புத்தரின் அருகே போய் விளக்கைத் தூண்டிவிட்டு வணங்கி, என் கனவு பலிக்காமல் இருக்கட்டும் என்று புத்தரை வேண்டி, தோளில் பை மாட்டி, விஹாரம் கதவு திறந்து வெளியே வந்தாள்.

காவலாளியிடம் தான் தஞ்சை போவதைச் சொன்னாள். தோட்டக்கதவும் திறக்கப்பட்டது. விஹாரத்திலிருந்து கீழிறங்கி அந்தச் சிறிய நாகப்பட்டிண நகரம் தாண்டி, அவள் மேற்கு நோக்கி விரைவாக நடந்தாள்.

ஒரு கோயில் திண்ணைகளில் கால் வலிக்காக அமர்ந்தபோது, யாரோ மல்லாக்கப்படுத்தபடி பாடிக் கொண்டிருந்தார்கள். மொட்டைக்குப் பட்டையில்லை என்றார்கள். அவள் மௌனமாக இருப்பது பார்த்து எழுந்து அமர்ந்து கொண்டார்கள்.



''அட... பெண் துறவியா... புத்த மதத்தில் இப்போது பெண்கள் கூட்டம் அதிகமாகிவிட்டது. அப்படித் தானே..'' என்று அதட்ட லாகக் கேட்டான்.

அதற்கும் மாதேவடிகள் பதில் சொல்லாமலிருந்தாள்.

''உள்ளே காலை நைவேத்தியம் தயாராக இருக்கிறது. மொத்தம் மூன்று பட்டைகள். ஒன்று மேளம் வாசிப்பவனுக்கு, இன் னொன்று கருவறை சுத்தம் செய்யும் அந்தணனுக்கு. மூன்றாவது எனக்கு. தயவு செய்து பங்குக்கு வந்துவிடாதே.'' என்று சொல்ல, அவள் எழுந்து நின்றாள்.

''என்ன... கோபித்துக் கொண்டு விட்டீர்களா.'' என்று அவனும் எழுந்து நின்றான்.

அவன் தோளிலிருந்த போர்வை கீழே விழுந்திருந்தது. அவன் ஒரு கை உள்ள அந்தணனாக இருந்தான். உற்றுப் பார்த்தபோது அவன் மிக மோசமான ஒரு மனிதன் என்று அவளுக்குள் தோன்றியது.

''எங்கே போய் விடுவீர்கள். நானும் தஞ்சைக்குத் தான் வருகிறேன்.'' என்று அவன் உரக்கச் சொன்னான்.

அந்த இடத்தைவிட்டு விரைவாக அகன்று விடவேண்டுமென்று மாதேவியடிகளுக்குத் தோன்றியது.

## 166

''சக்ரவர்த்தியாரே... பதினான்கு நிலைகள் கொண்ட விமானம். இதுதான் என் கணக்கு. முதல் மூன்று நிலைகளிலும், உட்பக்கப் பிரகாரம் இருக்கும். பிறகு, நெருங்கி கூம்பாகப் போவ தால் உள்பக்கப் பிரகாரம் இருக்காது. விமானத்தின் உட்கீற்றுப் பிரகாரத்தில் சிற்பங்கள். அதில் குறிப்பாக நடன நிலைகள் இருக்கும். அடுத்தது சிவனின் லீலைகளைப் பற்றிய ஓவியங்கள் இருக்கும். அதற்கு மேல் பூக்கள் பொழிவதற்காக பெண்டிர் நிற்கும் இடம் இருக்கும். அதற்குமேல் உட்சுற்று கட்டினால், அது கிட்டத் தட்ட ஆவுடையாருக்கு நெருக்கமாக வந்துவிடும். அதாவது மேலே நாம் நிற்கின்ற இடத்திலிருந்து நேர் செங்குத்தாக ஆவுடையார் மீது நம் காலின் நிழல் வீழ்வது போல இருக்கும். எனவே, இதைத் தவிர்க்கக் கருதி, மூன்றாம் உட்பிரகார சுற்றோடு நிறுத்தி விடு கிறேன்.

கற்பலகைகள் மிகச் கச்சிதமாக அறுத்து அடுக்கி வைக்கப் பட்டிருக்கின்றன. மண் குவித்து, மண் குவித்து மேடேற்றி இனி கற்பலகைகளை அடுக்கிக் கொண்டு போவதுதான் வழி. கற் பலகைகள் சாந்து பூசப்படமாட்டாது மாறாய், குழியும் குண்டுமாக அடுக்கப்படும். பலகை மேலே குழிகீழே குண்டு அமர்ந்து கொள்ளும். பாறையின் கனத்தால் ஆழப்பதியும், சிறிது சிறிதாக நீள அகலத்தைக் குறைத்து விமானத்தைக் கூம்பு வடிவில் எழுப்பி விடுவேன். பிறகு உச்சியில் மிகப்பெரிய கற்பலகை ஒன்று போட்டு இவைகளை அழுந்த வைப்பேன்.

அந்தக் கற்பலகைகளின் மீது ஒரு யானை கனம் உள்ள ஒரு கோல் உயரத்திற்கு கல் நந்திகள் செய்யப்பட்டு நான்கு மூலை களிலும் இரண்டிரண்டாய் அடுக்கப்பட்டிருக்கும். நடுபாகத்தில், கோபுரத்தின் கற்கள் அசையாது இருக்கும் வண்ணம் உருண்டைக் கல் ஒன்று வைக்கப்பட்டிருக்கும். அந்த உருண்டைக் கல்மீது கலசம் பதிய வைக்கப்படும்.

எட்டாவது நிலையைக் கடந்து ஒன்பதாவது துவங்கி விட்டேன். அடுத்த பௌர்ணமியில் பத்தாவது நிலை துவங்கப்படும். பதினொன்றும் அடுத்த அமாவாசையன்று நிறைவு பெறும். இந்த வேலை முடிந்துவிட்டால், எல்லா கோஷ்டங்களிலும் சிவபெரு மானின் பல்வேறு ரூபங்களை வைக்க வேண்டும் என்று நினைக் கிறேன்.''

பெருந்தச்சர் மிகப் பணிவாக சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜ ராஜத்தேவர்க்கு கோயில் பற்றிய விளக்கங்களைச் சொல்லிக் கொண்டு வந்தார்.

''பெருந்தச்சரே உங்களை ஒன்று கேட்கலாமா.''

அருண்மொழிப்பட்டன் மிக ஆவலாக அவரைப் பார்த்தார்.

''நன்றாகக் கேட்கலாம். என்ன கேள்வி அருண்மொழி.

சக்கரவர்த்தி வியப்போடு அவனைப் பார்த்தார்.

''கருவூர்த்தேவர் இந்தக் கருவறையைச் சுற்றிக்காட்டி இதை எப்படி செய்யப் போகிறார் பெருந்தச்சர். கருவறை எழுப்பிவிட்டு விமானம் அமைப்பாரா? விமானம் எழுப்பிவிட்டு கருவறையா? என்று கேட்கிறார். இப்பொழுது முக்கால் விமானத்திலும் மண் மூடிக் கிடக்கிறது. மண்ணை எடுத்த பிறகுதான் கருவறைக்குப் போகமுடியும். நீங்கள் கருவறை வேலையை முடித்து விட்டீர்களா. இனிதான் செய்யப் போகிறீர்களா?''



''கருவூர்த்தேவருடைய சந்தேகம் என்ன என்று எனக்குப் புரிகிறது. கருவறையின் வாசல் சிறியதாக இருக்கிறது. உள்ளுக்குள் சிவலிங்கம் பெரியதாக இருக்கிறதே, இது எப்படி சாத்தியம் என்று அவர் கேள்வி கேட்கிறார். புத்திசாலியான சிற்பிக்கு எதுவும் சாத்தியம்.

லிங்கம் என்றால் அடையாளம் என்று பொருள். சிவனுடைய வடிவத்தை நம்மால் செதுக்கி விட முடியாது. ஆனால், சிவனே நமக்கு அருகேயிருக்க வேண்டுமென்று நாம் விரும்புகின்றோம். அப்படியிருக்க வேண்டிய அந்த சிவனை ஒரு அடையாளமாக நாம் ஸ்தாபிக்க முயற்சி செய்கிறோம். அந்த அடையாளம் தான் லிங்கம். சிவலிங்கம். கடவுள் அல்ல. கடவுள் என்ற அடையாளம்.

களிமண்ணில் பிள்ளையார் செய்து, வெல்லத்தில் பிள்ளையார் செய்து அதைக் கரைத்துவிடுவது போல, கடித்து விழுங்கி விடு வதைப்போல, கையில் வைத்திருக்கும் வரை அது பிள்ளையார். கரைத்துவிட்டால் அது களிமண். அடுக்கிய கல்லாகத்தான் இந்த சிவலிங்கம் இருக்கும். கருவறையைச் செய்து முடித்துவிட்டேன் அருண் மொழிப்பட்டரே. சிவலிங்கம் செய்து தயாராக இருக் கிறது. எட்டுத்துண்டுகள் ஆவுடையார். ஒரே கல்லிலான பாணம். இவையிரண்டும் மிகத் துல்லியமாகச் செய்து ஓரமாக வைக்கப் பட்டிருக்கின்றன. மண்மேடு முழுவதும் நகர்ந்து கோஷ்ட வேலைகள் ஆரம்பிக்கும் போது, இரவோடு இரவாக இந்த சிவலிங்க ஸ்தாபன விஷயம் ஸ்தாபிக்கப்படும்.''

''எங்கே வைத்திருக்கிறீர்கள் பெருந்தச்சரே.''

சக்ரவர்த்தி ஆவலாகக் கேட்டார்.

''எதை மாமன்னா.''

''சிவலிங்கத்தை..''

''ஏன், நீங்கள் அதைப் பார்க்க வேண்டுமா?''

''ஏன், நான் அதைப் பார்க்கக்கூடாதா?''

''அவசியமில்லை. இணைத்த பிறகு பாருங்களேன்.''

''ஏன், இப்போது பார்த்தால் என்ன தவறு.''

''ஒரு முழுமையிருக்காது.''

''நீங்கள் தானே சொன்னீர்கள். ஒரு வெல்லப்பிள்ளையாரைக் கையில் வைத்திருந்தால் வெல்லப் பிள்ளையார். கடித்துவிட்டால் வெல்லம். களிமண் பிள்ளையாரைக் கையில் வைத்திருந்தால் பிள்ளையார். கரைந்துவிட்டால் களிமண். களிமண்ணாக இருப்

பதே கடவுளாகவும் மாறுகிறது. இப்பொழுது என்ன நிலையில் இருந்தாலென்ன... அது கடவுளாகும்போது கடவுளாகத்தானே இருக்கும். கலைந்து கிடந்தா காட்சிக்கு வரும். இல்லையே, நான் பார்ப்பதில் தவறென்ன..."

"நான் பேசுவதையே என்னிடம் விற்கிறீர்களா. நல்லது. பார்க்கலாம். ஆனால், நீங்களும் அருண்மொழிப்பட்டனும் மட்டுமே போதும். பிரம்மராயரைக் கூட நான் அனுமதிக்க விரும்பவில்லை. பஞ்சவன்மாதேவியோ, பழவேட்டரையரோ இங்கு வர வேண்டாம் என்பது என் விருப்பம்."

"தெரியாமல் கேட்கிறேன். ஒரு ஆவுடையார் பிளவு பட்டு இருக்கலாமா."

அருண்மொழி சற்று பதட்டத்தோடு கேட்டான்.

"ஒரு ஆவுடையார் ஒன்றாகத்தான் இருக்க வேண்டுமென்று என்ன விதி. இது அடையாளம். இது லிங்கம். லிங்கம் என்ற சொல்லுக்கு மறுபடியும் சொல்கிறேன் அடையாளம். அடையாளம் வட்டமாக இருந்தால் என்ன, சதுரமாக இருந்தால் என்ன, நாலுகல்லாக இருந்தால் என்ன, ஒரே கல்லாக இருந்தால் என்ன? கோட்டை வாசலுக்கு எதிரே ஒருவன் நவகண்டம் கொடுத்தான். மன்னர் உயிரோடு திரும்ப. அவனுக்கு நாம் என்ன மரியாதை செய்தோம். அவன் சிலையை வடித்து அவன் உருவம் போலவே செய்தோமா, இல்லை. ஒரு நீள் சதுரக்கல்லை அங்கே நட்டு அதில் அவன் பெயர் எழுதினோம். இப்பொழுது அந்தக் கல் யார். அதுதான் அவன். நவகண்டம் கொடுத்தவனுக்கு அது போதுமா? போதும், ஏன் போதும். அதுவொரு அடையாளம். அதுவொரு லிங்கம். இறைவனை நாம் வடித்து விடமுடியுமா அருண்மொழி பட்டா. அது சொல்லற்கரியது. நினைப்பிற்கரியது. இவ்விதமாகத் தான் கடவுள் இருக்க வேண்டும் என்று வரைமுறையிருப்பின் விதம்விதமான சிவலிங்கங்கள் இருக்க முடியாதே.

ஆனால், இருக்கிறதல்லவா!

இன்னும் சொல்கிறேன். இங்கு அடையாளம் எனப்படுவது அந்தப் பாணம்தான். இறந்தவன் நினைவாக எப்படி ஒரு நீள் செவ்வகக்கல் இருக்கிறதோ, அதேபோல் கடவுள் என்பதைக் குறிக்க, ஈசன் என்பதைக் குறிக்க, ஒரு பாணம் இருக்கிறது. அதாவது லிங்கரூபம் இருக்கிறது. அந்த லிங்க ரூபம் அழுத்தமாக நிற்க, ஆவுடையார் என்பது வைக்கப்பட்டிருக்கிறது. அங்குக் கல் கொடுத்து முட்டுக் கொடுப்பதைவிட வட்டமான துவாரமுள்ள



கல்லை ஏற்பாடு செய்து, அதை பாணலிங்கத்திற்குள் இறக்கி பூமியில் பதிக்கிற போது, பாணலிங்கமும் பதிந்து பாணலிங்கத்திற்கு ஆதரவாக ஆவுடையாரும் அமைந்து விடுகிறது.

பாணலிங்கத்தை எவராலும் அசைக்க முடியாது. அதுவொரு யுக்தி. அது சிற்ப சாஸ்திர கெட்டிக்காரத்தனம். இவ்வளவு பெரிய பாணலிங்கம் இருக்கும் பொழுது ஒற்றைக்கல் தேடி, அந்த ஒற்றைக்கல்லை வட்டமாகக் குடைந்து, மேலே தூக்கி, பாணலிங்கத்திற்குள் இறக்கி என்பது தேவையற்றது. அப்படி செய்வதற்குண்டான கல்லும், அப்படிக் கல் கிடைத்தால் குடைவதற்குண்டான வசதியும் நம்மிடையே இல்லை. எனவே, நாம் ஆவுடையாரை எட்டுத் துண்டுகளாகச் செய்யச் சொல்லி மிகச்சரியான அளவில் முக்கோணங்களாக எடுத்து, ஒவ்வொரு பட்டையாகப் பொருத்தி, தனியாகச் செய்து ஒன்றாக இணைத்து விடுவேன். இப்பொழுது அந்த பாணலிங் கத்தைச்சுற்றி ஆவுடையார் பலமாக நிற்கும்."

"இது சிற்ப சாஸ்திரத்திற்கு விரோதமென்று ஆகாதா."

"யார்... ஆகும், ஆகாது என்று சொல்வது. ஆகாது என்று இவர் சொல்லிவிட்டால் ஆகாது. ஆகும் என்று சொல்லிவிட்டால் ஆகும். விதிகள் அத்தனையும் மனிதர்கள் செய்வது. எல்லா விதிகளுக்கும் காரணகாரியங்கள் இருக்கின்றன. இதை வைப்பதால் எந்தக் காரியமும் கெட்டுப் போவதில்லை. பாணலிங்கம் அசையாது பலவீனமுறாது."

"எட்டுத் துண்டுகளாகச் செய்திருக்கிறேன் என்கிறீர்களே.. பிசிறில்லாது பாணலிங்கத்தை இணைக்க முடியுமா. சிறிய இடைவெளிகூட இல்லாமல் இருக்க முடியுமா."

சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவர் கவலையோடு கேட்டார்.

"மாமன்னரே இவ்வளவு உயரம் ஒரு விமானம் எழுப்புகிறோம். ஒரு நூல் அதிகமானாலும் இந்தக் கோபுரம் தவறாக முடியும். அப்படி எதுவும் நடக்காது. இத்தனை உயரத்தில் மிகத் துல்லியமாக ஒவ்வொரு கல்லும் மிகச்சரியான அவளில், மிகச்சரியான பருமனில் வைக்கப்பட்டிருக்கிறது. இவ்வளவு பெரிய விஷயம் செய்கிறபோது எட்டுத் துண்டுகளாக ஒரு ஆவுடையாரைச் செய்து இணைக்க முடியாதா."

பரிதாபமாக பெருந்தச்சர் கேட்டார். மன்னருக்குப் புரிந்தது.

''மன்னித்துக் கொள்ளுங்கள் பெருந்தச்சரே. உங்களால் முடியும். நான் அறியாமையில் கேட்கிறேன்.''

''இல்லை மாமன்னா. கவலையில் கேட்கிறீர்கள். காரியம் சரிவர நடைபெற வேண்டுமே என்ற அக்கறையில் கேட்கிறீர்கள்.''

''கோயில் பணி முற்றிலுமாய் எப்போதும் முடியும்.''

''இன்னும் இரண்டுமாதத்தில், பதினான்காம் நிலை கட்டப் பட்டு, இறுக்கப்பட்ட பிறகு, அந்தப் பெரும்பாறை, ஒற்றைச் சதுரக்கல், இரண்டரை முழங்கை உயரமுள்ள அந்தக் கரும் பலகைக்கல், அதன்மீது அடுக்கப்பட்ட கற்பலகைகள் அழுந்திக் கிடக்கும்படி ஒரு கனம் ஏற்றிவிட்டால் கோயில் வேலை முடிந்தது போலத்தான்.''

''அந்த உருண்டைக்கல் ஏற்றுவது சிரமமில்லையா.''

''இல்லை. அதுவும், உடைத்து வெட்டி பல துண்டுகளாக மேலே அனுப்பி பிறகு ஒன்றாக இணைத்து விடுவேன்.''

''அதாவது கீழே உருண்டைக் கல்லாக இருப்பதை உடைப் பீர்களா.''

''ஆமாம்.''

''ஏன்.''

''மேலே கொண்டு போவதற்கு அதுதான் எளிது.''

''எப்பாடுபட்டேனும் உருண்டைக் கல்லாகவே கொண்டு போய்விடலாமே.''

அருண்மொழிப்பட்டன் ஆவலாகக் கேட்டான்.

''பாறையோ உருண்டையானது. பாதையோ செங்குத்தானது. ஒரு கயிறு அறுந்தால், ஒரு ஆப்பு அசைந்தாலும், யாரேனும் ஒருவர் தவறு செய்தால் மொத்த விஷயமும் குலைந்து போகும். சக்ரவர்த்தி யாரே, மிகக் கவனமாக, எந்தச் சேதமுமின்றி இந்தக் கோயில் வேலை நடைபெற வேண்டுமென்று நான் விரும்பு கிறேன். பொருள் சேதம் இருந்தால்கூடப் பரவாயில்லை. உயிர் சேதம் வந்துவிடக்கூடாது. அதில் நான் கவனமாக இருக்கிறேன்.''

''மேலே மிகப்பெரிய சதுர பாறாங்கல். ஒன்றரை முழங்கை உயரம் உள்ள ஒரு பாறாங்கல்லை நீங்கள் ஏற்றப் போகிறீர்கள். அதைவிட இந்த உருண்டைக்கல் சிறியதாகத்தானே இருக்கும்.''

''அருண்மொழி.. அளவு மட்டும் பார்க்கிறாயே தவிர, வடிவத்தைப் பார்க்க மாட்டேன் என்கிறாய். தளம் போல உள்ள ஒரு தட்டைப் பரப்பான ஒரு பாறாங்கல் உருண்டு தரைக்கு வராது. சட்டென்று அங்கேயே உட்கார்ந்து கொள்ளும். ஒரு சிறு ஆப்பு போதும் நகர ஒட்டாமல் செய்துவிடும். ஆனால், ஒரு உருண்டைக் கல்லை மேலே ஏற்றுகிறபோது, ஒரு கயிறு அறு பட்டாலும், ஒரு பக்கம் பிடுங்கிக் கொண்டாலும், மற்ற பக்கங்கள் வேகமாக அறுந்து பிடுங்கிக் கொள்ளும், உருண்டைக் கல் கீழே வருமெனில் நிச்சயம் உயிர்ச் சேதம் இருக்கும். எனவே, வெற்று உருண்டைக்கல்லாய் மேலே கொண்டு போவதில் விருப்ப மில்லை.''



''அருண்மொழிப்பட்டன் சொல்வது எனக்கு உவப்பாக இருக்கிறது பெருந்தச்சரே. வேறு ஏதேனும் வழி இருக்குமா என்று யோசித்துப் பாருங்களேன். அந்த ஒற்றை உருண்டைக் கல்லை ராட்டினம் போட்டு மெல்ல மெல்ல மேலே இழுத்துவிட முடியாதா.''

''மன்னர் மன்னா எத்தனை எடை தெரியுமா. மூன்று யானை களை ஒரு சேரத் தூக்குவது போல எடை. எப்படி முடியும். அதற்குக் கயிறுக்கு எங்கே போவது. ராட்டினத்தை எதில் கட்டு வது. சாரத்திலா, எதிலேனும் இறுக்கிக் கட்டுவதற்கு ஒரு கயிறு வேண்டுமே. அது பிரிபடாமல் இருக்குமா. அது அவ்வளவு கனத்தைத் தாங்குமா.''

''புரிகிறது. புரிகிறது. ஒற்றை உருண்டைக் கல்லாய் கொண்டு போகவே முடியாது என்பது புரிகிறது. அந்த உருண்டைக்கல் வந்து விட்டதா.''

''வந்து கொண்டிருக்கிறது மன்னா. அந்த தட்டை கல்லும், உருண்டைக்கல்லும் எடுத்த இடத்திலேயே செய்யப்பட்டு இங்கு கொண்டுவரப்படுகிறது. அதை ஏற்றிவிட்டார்கள். வண்டி நகர சற்று சிரமமாக இருப்பதால் ஓய்வு எடுத்துக் கொண்டு நல்லநாள் பார்த்து நகரலாம் என்று இருக்கிறார்கள்.''

''நீங்கள் காட்டுகின்ற சிவலிங்கத்தையும், ஆவுடையாரையும் பார்த்துவிட்டு நேரே அங்கே போய் உருண்டைப் பாறையையும், தட்டைப் பாறையையும் பார்ப்போமா.''

அவர்கள் குதிரை ஏறினார்கள்.

கோயிலுக்கு மேற்கு திசையில் கோயிலுக்கருகே மேடாக்கிக் கொண்டிருந்தார்கள். அங்கே ஒரு கொட்டகை போடப்பட் டிருந்தது. கொட்டகையைச் சுற்றி குஞ்சரமல்லரின் ஆட்களே காவல் இருந்தார்கள். பெரிய மூங்கில் கதவைத் திறந்தார்கள்.

சக்ரவர்த்தி உடையார் வந்ததும் விழுந்து வணங்கினார்கள். இன்னொரு திட்டிக்கதவைத் திறந்தார்கள். உள்ளே இருட்டாக இருந்தது.

பெரிய பெரிய பாறைகள் கருப்புத் துணியால் மூடப்பட்டிருந்தன. வைக்கோல் போராலும், நாணற்புற்களாலும் மூடப்பட்டிருந்தன.

துணியை விலக்க, மிக நீளமான லிங்கபாணம் படுக்க வைக்கப்பட்டிருந்தது. ஒரு அளவு வரை மழமழ வென்று செதுக்கப்பட்டு, பிறகு எட்டு முகங்களாகச் செதுக்கப்பட்டு, அதற்குக் கீழே நாலு முகங்களாகச் செதுக்கப்பட்டிருந்தது. அந்த நான்கு முகமாகச் செதுக்கப்பட்டது பூமிக்குள் மறையும். இந்த எட்டு முகமாகச் செதுக்கப்பட்டது ஆவுடையாரில் இருக்கும். இந்த லிங்க ஸ்தானம் மட்டுமே வெளியே தெரியும்.

பிரமாண்டமாக இருந்த கல்லை மன்னரும், அருண்மொழிப் பட்டரும் சுற்றி வந்தார்கள்.

மன்னர் மெல்ல லிங்கத்திற்கு அருகே போய் அதைத் தழுவிக் கொண்டார். நெற்றியை அதன்மீது வைத்தார். என் சிவனே, என் சிவனே என்று கொஞ்சினார். மீண்டும் ஒரு முறை வலம் வந்தார்.

''மன்னர் மன்னா இப்படி வாருங்கள்.''

பெருந்தச்சர் அழைத்தார்.

பக்கத்திலுள்ள ஓலைக்குடிசையின் தடுக்குகள் சரட்டென்று சுருக்கு அவிழ்க்கப்பட்டு மடிக்கப்பட்டன. வெளிச்சம் உள்ளே புகுந்தது. முக்கோணக் கல்லாக ஒரு ஆவுடையார் எட்டுப் பகுதியாக செதுக்கப்பட்டு படுக்க வைக்கப்பட்டிருந்தது. ஒரு வரைபடம் இருந்தது. அந்த வரைபடம் ஆவுடையாரின் குறுக்கு வெட்டுத் தோற்றத்தைக் காட்டியது.

எப்படி எட்டுப்பகுதியாக வெட்டப்பட்டிருக்க வேண்டும் என்பதை அந்தப் படத்தைப் பார்த்து புரிந்து கொள்ள முடிந்தது.

பெருந்தச்சர் ஆட்களை கை தட்டிக் கூப்பிட்டார். ஏதோ சொன்னார். ஆறு, ஏழு பேர் உள்ளே வந்தார்கள். வந்து ஒரு படுக்கைக் கல்லை ஆப்பு கொடுத்துத் தூக்கி, மறுபடியும் கட்டையால் மேலே தூக்கி அதைச் செங்குத்தாக நிறுத்தினார்கள். அதே விதமாய்ச் செதுக்கப்பட்டிருந்த இன்னொரு முக்கோண கல்லையும் தூக்கி நிறுத்தினார்கள். இரண்டையும் அருகருகே வைத்து காட்டினார்கள். ஒருகால் அரைக்கால் வட்டம் ஆவுடையார் தெரிந்தது. ''இதுபோல கோமுகம் உட்பட எட்டு துண்டுகளை ஒன்றாக இணைத்தால் ஒரு ஆவுடையார் வந்துவிடும். பாண லிங்கத்தை ஸ்தாபித்த பிறகு ஆவுடையார் வைத்து மருந்து போட்டு கெட்டிப்படுத்தி விடுவோம்.''



''பெருந்தச்சரே இந்த பாணலிங்கத்தை நிறுத்திக் காட்ட முடியுமா.''

அருண்மொழிப்பட்டன் கேட்டான்.

''தேவையில்லை. அதற்கு இருபது முப்பது ஆட்கள் தேவைப் படும். என்னுடைய ஆட்களே வெகுசிலர் தான் இதை பார்த்திருக்கிறார்கள். நான் காட்ட விருப்பப்படவில்லை. என்னுடைய சிற்பிகளுக்கே இதை ரகசியமாக வைத்திருக்கிறேன்.''

''இதை எப்படிச் செதுக்கினீர்கள்.''

''புரட்டிப் புரட்டிப்போட்டு செதுக்கினோம்.''

''இந்த மழமழப்பு எப்படி ஏற்பட்டது.''

''அது ரகசியம். அது வித்தை. கல்லால் கல் தேய்ப்பது என்று ஒரு சூட்சுமம் உண்டு. அந்தக் கல்லை நீர்விட்டுத் தேய்க்கத் தேய்க்க இந்த இடம் மழமழப்பாக மாறும்.''

அந்த திட்டிக்கதவைத் திறந்து சட்டென்று சூரிய வெளிச்சம் உள்ளே வந்தது. யாரோ ஓடிவந்தார்கள். பெருந்தச்சர் காதில் மெல்ல சொன்னார்கள்.

அவர் முகம் மாறினார்.

''சக்ரவர்த்தியாரே, உங்களைத் தேடிவரும் கருவூர்த்தேவர் கோயில் பக்கம் வந்து கொண்டிருக்கிறாராம். நீங்கள் இங்கிருப்பதாகக் கேள்விப்பட்டால் இந்தப் பக்கம் திரும்பக்கூடும். அப்படி அவர் இங்கு வருவது எனக்குப் பிடித்தமான விஷயமன்று.''

''ஏன்.''

அருண்மொழிப்பட்டன் ஆவலாகக் கேட்டான்.

''அதற்குக் காரணம் சொல்ல வேண்டுமென்ற அவசியமும் எனக்கு இல்லை.''

பெருந்தச்சர் கூர்மையாகப் பதில் சொன்னார்.

மன்னருக்கு மனம் லேசாக துணுக்குற்றது. கொஞ்சம் ஆச்சரியத்தோடு பெருந்தச்சரைப் பார்த்தார்.

''ஏன், கருவூர்த்தேவர் இதைப்பார்த்தால் உமக்கு ஏதேனும் வில்லங்கம் வருமா.''

"வரும். சரி, தவறு என்று அவர் ஏதேனும் சொல்லக்கூடும்."

"அவருடைய வார்த்தைகளுக்கு நாம் மதிப்பளிப்பது தானே வழக்கம்."

"வேறு ஆவுடையாரைச் செய்து கொண்டு வா என்று சொல்லி விட்டால் கோயில் கட்டி முடிக்க இன்னும் மூன்று, நான்கு ஆண்டுகளாகும். அப்படியொரு பாறை கண்டுபிடித்து அதை வெட்டி எடுத்து உள்ளுக்குள் குடைந்து அதைத் தூக்கிவந்து, மறுபடியும் உயரத் தூக்கி பாணலிங்கத்தில் மாட்டி புதைப்பது என்பது எனக்குத் தெரிந்து இயலாத காரியம்."

"இவ்வளவு பெரிய விமானம் கட்டியிருக்கிறீர்கள். இது இயலாததா."

"துண்டு துண்டாக வெட்டித்தானடா செய்திருக்கிறேன்."

அருண்மொழியைப் பார்த்து அதே வேகத்தில் பெருந்தச்சர் சீறினார்.

"பலகை பலகையாக அறுத்துத்தான் கட்டியிருக்கிறேன். தனிக்கல்லாக இந்தக் கோயிலில் நிற்க வேண்டியவை வெகு சிலதே. எல்லாவற்றையும் ஒற்றைக்கல்லாக ஒரு சிற்பி செய்து கொண் டிருக்க முடியாது. அது பெரும் வேதனை"

"இந்த துண்டுகளை இணைத்து ஆவுடையாராகச் செய்த பிறகு கருவூர்த்தேவர் உள்ளே நுழைந்து இது சரியில்லை என்று சொன்னால் என்ன செய்வீர்கள்."

"நீயே செய்து கொள் என்று உளியையும், சுத்தியையும் அவர் மீது தூக்கிப்போட்டு விடுவேன்."

"கருவூர்த்தேவரை நீங்கள் மதிக்கவேயில்லையா."

"என்னுடைய தொழிலை, வேலையை மதிக்கிறேன். என்னு டைய மூளையைக் கசக்கிப் பிழிந்து, என்ன செய்தால் இங்கு வேலை எளிதாகவும், பலமாகவும் நிறைவேறும் என்று தீர்மானம் செய்து வைத்திருக்கிறேன். இதற்குள் இடைஞ்சல் செய்வது போல எவர் அபிப்ராயம் சொன்னாலும் எனக்கு ஏற்பதற்கு மனமில்லை. கருவூர்த்தேவரை இங்கு வரவழைப்பானேன். அவர் ஒற்றை வார்த்தையில் ஏதேனும் அபிப்ராயம் சொல்வானேன். நான் சீறுவானேன். இது நல்லதல்ல."

உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவர் யோசித்தார்.

"சரி, கருவூர்த்தேவர் நிச்சயம் நம்மைத்தேடி இங்கு வந்தாலும் வருவார். அவர் இங்கு வருவதற்குள் நாம் அங்கு போய்விடலாம்."



சக்கரவர்த்தி உடையார் வெளியேறினார். குதிரையில் தாவி அமர்ந்தார்.

நான் வருகிறேன் என்று ஒற்றை வார்த்தையில் பெருந்தச்சரிடம் சொல்லிவிட்டு குதிரையை வேகமாகச் செலுத்தினார்.

அருண்மொழிப்பட்டன் குதிரையில் பாய்ந்து ஏறிக்கொண்டு அவரைப் பின் தொடர்ந்தான்.

பெருந்தச்சரிடம் சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவன் விடைபெற்ற விதம் சரியாக இல்லை என்று அவனுக்குத் தோன்றியது.

கொஞ்சம் சிரிப்பும் வந்தது.

## 167

வறுத்த மீன் வாசனை மூக்கைக் கிளறியது. சிற்பிகளுக்கென்று பெரிய அண்டாக்களில் சோறும் கறிக்குழம்பும், கத்தரிக்காய் பொரியலும் செய்து வைக்கப்பட்டிருந்தன. சமையல் செய்த பாத்திரங்களின் மீது மற்றவர் கண்படாமல் இருக்கும் பொருட்டு பெரிய ஓலைத் தடுக்குகளால் கூரை போலச் செய்யப்பட்டு பாத்திரங்கள் மறைக்கப்பட்டிருந்தன.

ஒரு மேடை போல கட்டி அங்கு பெரிய அண்டாக்களில் நீர் நிரப்பி வைத்திருந்தார்கள். உச்சிவேளையில் கொம்பு ஊதப் பட்டது. பெருந்தச்சரின் ஆட்களில் ஒருவன் கோல் வைத்து நிழலில் நேரம் பார்த்து கொம்பு ஊதினான்.

எல்லோரும் சுத்தியும், உளியும் போட்டுவிட்டு எழுந்தார்கள். மெல்ல நின்று வேட்டியை அவிழ்த்து உதறிக் கொண்டார்கள். தலையில் கட்டிய துண்டால் முகம் துடைத்துக் கொண்டார்கள். மேலெல்லாம் பரவியிருந்த சாம்பல் போலுள்ள கருங்கல்தூளைத் துடைத்துக் கொண்டார்கள். வரிசையானார்கள்.

அண்டாக்களில் உள்ள நீரை பரண் மீது நின்ற பெண்கள் சொம் பில் மொண்டு கீழே நிற்கின்ற சிற்பிகள் மீது கொட்டினார்கள். சிற்பிகள் ஆனந்தமாக மேலுக்கு இறைத்துக் கொண்டார்கள். கைகளைச் சுத்தம் செய்து கொண்டார்கள். மேல் துணியால் முகம் துடைத்துக் கொண்டார்கள். மேல்துணியை உதறி பாறையின் மீது காயப்போட்டார்கள். பிறகு மெல்ல நடந்து கூரைக் கொட்டகைக் குள் நுழைந்தார்கள்.

பந்திப்பாய் விரிக்கப்பட்டிருந்தது. அதில் சிற்பிகள் அமர்ந்ததும் வாழை இலை வைக்கப்பட்டது.

சிற்பிகளின் வீட்டுப் பெண்டுகளே வேகமாக நீர் தெளித்து முதலில் மீன் வைத்தார்கள். பிறகு வேகவைத்த முட்டை வைத்தார்கள். பிறகு வெள்ளை வெளேரென்று சோறு கவிழ்த்தார்கள்.

வீரர்கள் அதைத் தட்டி குழியாக்கியதும், அதில் கறிக்குழம்பு ஊற்றினார்கள். சோற்றை கறிக்குழம்பில் பிசைந்து மீன் துண்டம் எடுத்து அதில் சேர்த்து அழுத்திப் பிசைந்து உருண்டையாக்கி சிற்பிகள் ஆவலாக உண்டார்கள். அங்கு பல சிறுவர்கள் நடமாடிக் கொண்டிருந்தார்கள்.

சிற்பிகள் அல்லாதவர்கள் எவரும் அந்த இடத்தில் இல்லை.

விஸ்வநாதனுக்கும், தாணுமாலயனுக்கும் காற்றோட்டமான இடத்தில் தனிப்பந்தி இருந்தது.

அங்கிருந்த வெட்டி வேர் விசிறியை இரண்டு பையன்கள் பிடித்துக் கொண்டிருந்தார்கள்.

அவர்கள் அமர, வீசிறத் துவங்கினார்கள்.

''எங்கே இளவரசரைக் காணோம்.''

தாணுமாலயன் நாலாபுறமும் சுற்றிப் பார்த்துக் கேட்டார்.

நித்தவினோதப் பெருந்தச்சன் குணவனையும், இலத்தி சடையனையும் விசாரிக்கிறார் என்பது மற்ற இருவருக்கும் புரிந்தது.

பெருந்தச்சருக்குப் பிறகு மிகப்பெரிய மரியாதை அவர்கள் இருவருக்கும் மட்டுமே கிடைப்பதால், அதுவொரு மெல்லிய கேலியாக நினைத்து அவர்களை இளவரசர்கள் என்று இவர்கள் அழைப்பது வழக்கம்.

ஐம்பது வயதின் ஆரம்பத்தில் இருந்த அந்த இருவரும் குணவன் நித்தவினோதப் பெருந்தச்சனைப் பற்றி ஒரு சிறிய பொறாமை கொண்டிருந்தார்கள். ஏதோ விதம்விதமாகச் செய்து பாராட்டு பெறுகிறான் என்பதில் காழ்ப்பு கொண்டிருந்தார்கள். அதே நேரத்தில் குணவனைப்பற்றி வெளியே பெருமையாகவும் பேசினார்கள். அவனைக் கொண்டாடும்போது இவர்கள் நெஞ்சு நிமிர்த்திக் கொண்டார்கள்.

''நம்ம சிஷ்யப் பிள்ளைதான்'' என்று உரிமை கொண்டாடினார்கள்.



''பாறையில் கோடு போடவும், மீன் அடிக்கவும் எங்கிட்ட தானே கத்துகிட்டான்.'' என்று தாணுமாலயன் தொடை தட்டிப் பேசுவார்.

ஆனால், அதே குணவன் அவருடைய வேலையில் குற்றம் கண்டுபிடித்துச் சீராக்கியபோது அவர் நடுங்கிப் போனார்.

இரும்புக் கருவிகளை எண்ணெயிலிட்டுப் பயன்படுத்தலாம் என்பதை அவன் கண்டுபிடித்தபோது திகைத்துப் போனார்.

சவுக்கு மரங்களில் சாரம் கட்டி கல்லை மேலே ஏற்ற வேண்டும் என்று அவர் படம் வரைந்து காட்டியபோது, அதைச் சுருட்டி வீசியெறிந்துவிட்டு, ஒருக்காலும் இது சரியாக வராது என்று உரத்துப் பேசி, தான் கொண்டு வந்த களிமண் மாதிரியைக் காட்டியபோது அவருக்கு நெஞ்சு விண்டு போனது.

நித்தவினோதன் என்று குணவனுக்கு ஒரு புலவர் பட்டம் கொடுத்தபோது அவர் ஆடிப்போனார்.

''நாமெல்லாம் சிற்பிகளே இல்லையா?'' என்று ஆதங்கத்தில் உரத்துப் பேசினார்.

மற்ற நண்பர்கள் அவரை ஆதரித்தார்கள். தங்களுக்கும் அப்படி பட்டம் கிடைக்கவில்லையே என்று வருத்தப்பட்டார்கள். அதேசமயம் குணவன் பெரிய ஆள்தான் என்பதை மறைமுகமாய் ஏற்றுக் கொண்டார்கள்.

கறிக்குழம்பு ஊற்றி சோறு பிசைந்து உண்ட பிறகும் இலத்தி சடையனும், குணவனும் வரவில்லை.

ஒரு பனை உயரம் மண் குவிக்கப்பட்டிருந்தது. அதன்மேலே யானைகளையும், குதிரைகளையும், எருதுகளையும் வைத்து பாறைகள் இழுத்துப் போகப்பட்டிருந்தன. அந்தக் குவிக்கப்பட்ட மண்ணுக்கு அடியில் இரண்டாள் உயரத்திற்கு ஒரு வழி செதுக்கப்பட்டு, அந்த வழி விமானத்திற்கு நேர்கீழே கருவறைக்குப் போய் அடைந்தது. கருவறையினுள் ஆறு தீப்பந்தங்கள் எரிந்து கொண்டிருந்தன. தீப்பந்தத்தின் புகை வெளியேறும் வண்ணம் மூன்றாம் தளத்தில் இடுக்குகள் வைக்கப்பட்டிருந்தன. மேலே கருங்கல்லும் சுற்றி மண்ணும் அடுக்கப்பட்டிருந்ததால் உள்ளே அந்த இடம் குளுமையாக இருந்தது.

தட்டில் சோறும், கறிக்குழம்பும் எடுத்து வந்து ஆறு இளைஞர்கள் அங்கே தயாராக நின்றார்கள். மரப்பலகை போடப்பட்டு அந்தப் பலகைக்கு எதிரே இன்னும் உயரமான மனை

போடப்பட்டு அந்த மனையில் வாழையிலை விரிக்கப்பட்டது. நீர் தெளித்து வைக்கப்பட்டிருந்தது.

கறியும், மீன் துண்டும், வறுத்த மாமிசமும், அன்னமும் கறிக் குழம்பும் வைக்கப்பட்டன. வெறுமே கஞ்சி மட்டும் குடித்துக் கொண்டிருந்த குணவன் வயிறாரச் சாப்பிட்டான். ஆறு இளைஞர்களும் பாய்ந்து பாய்ந்து பரிமாறினார்கள்.

''விசிறட்டுமா..'' என்று ஒருவன் கேட்டான்.

''வேண்டாம்.. குளுமையாகத்தானே இருக்கிறது.'' என்று குணவன் பதில் சொன்னான்.

வடகிழக்கிலிருந்து வந்த காற்று கற்பலகையால் தடுக்கப்பட்டு உள்ளே அனுப்பப்பட்டது.

ஒரு குளிர்காற்று எப்பொழுதும் அந்த இடத்தைச் சுற்றிவந்தது.

சாப்பிட்டுவிட்டு அந்தக் கருவறையிலேயே கை அலம்பினான். உயரே உள்ள விமானநிலையைப் பார்த்தான். அவனுக்கு பல் குச்சி கொடுக்க, குணவன் நிதானமாக பல்குச்சி வாங்கி பல இடுக்கில் இருந்த கறித்துணுக்குகளையும், சோற்றுப் பருக்கைகளையும் சுத்தம் செய்தான்.

சோழதேசத்தில் பல பேருக்கு இளம் வயதிலேயே பல் வியாதி வந்து விடுகிறது. பற்களில் சந்து இருக்கும்படியாகவே அதிகம் குழந்தைகள் பிறக்கிறார்கள். அப்படி சந்து இருக்கிறவர்கள் சாப்பிட்ட உடனேயே சோற்றுப் பருக்கைகளையும், கறித்துணுக்குகளையும் நீக்கிவிட்டால், அவைகள் பல்லில் தங்கி துர்நாற்றம் எடுத்து பற்சிதையை ஏற்படுத்தாது.

சாப்பிட்ட சிறிதுநேரம் வரை அந்த உணவின் ருசிவாயில் இருக்க வேண்டும். உறங்கப்போகும் முன்பு சிறிதளவு உப்புக் கரைத்த நீரால் வாயைக் கொப்பளித்துச் சுத்தம் செய்து கொள்ள வேண்டும். சோழதேசத்தில் வாய் துர்நாற்றத்திற்காக நிறைய பேர் தாம்பூலம் தரிக்கிறார்கள். குறிப்பாய் சிற்பிகள் விடாது தாம்பூலம் தரிப்பதையே தொழிலாக வைத்திருக்கிறார்கள்.

இளம் வயதிலேயே பற்களைக் காவியாக்கிக் கொள்கிறார்கள். வெள்ளைவெளேரென்று பற்களுடே இருக்கின்ற அழகு அவர்களுக்குத் தெரிவதில்லை. பற்சிதைவு ஏற்படாமல் பாதுகாத்தால் தாம்பூலம் தரிக்க வேண்டிய அவசியமே இல்லை. ஜீரணமாகுமென்று பொய் சொல்கிறார்கள். ஜீரணத்திற்கு மிளகு ரசம் இருக்கிறது. பிரண்டைத் துவையல் இருக்கிறது.



இந்த இடத்தைவிடக் குளுமையான இடம் பூமியில் எதுவும் இல்லை. முன்பெல்லாம் மண்ணில்தான் கோட்டை கட்டி வந்தார்கள். அது ஏன் என்பது இப்பொழுது புரிகிறது. ஆனால், இப்பொழுது பாதுகாப்பிற்காக கற்கோட்டை கட்டுகிறார்கள். அது சூடு ஏற்படுத்துகிறது.

இப்போது இந்த விமானம் எழுப்பக் கட்டியிருப்பது மிக பலமான ஒரு மண்கோட்டை சிறிதுகூட வெப்பமே இல்லாத கோட்டை. ஆனால், இங்கு முழுநாளும் இருக்க முடியாது. இரவுநேரம் மிகுந்த குளுமை ஏற்பட்டு விடும். எனவே, உச்சி வேளையில் இங்கு வந்து உணவருந்தி மரப்பலகைகளில் படுத்துத் தூங்கி மாலையில் மேற்கே சூரியன் சரிகின்ற நேரத்தில் வெளியே வந்து மறுபடியும் வாய்கொப்பளித்து ஒரேயொரு ஏலக்காயை வாயில் போட்டுக் கொண்டு மென்று, கைகளிலும், அக்குளிலும், தொடையிலும் வாசனை எண்ணெயைத் தடவிக் கொண்டு, தலைவாரி திருநீறு பூசி செதுக்க உட்கார்ந்தால் அந்திசாயும் வரை வேலை செய்யலாம். பிறகு மெல்ல எழுந்து நண்பர்களோடு உட்கார்ந்து நாளை என்ன வேலை செய்ய வேண்டுமென்று தீப்பந்தத்திற்கு நடுவே பேசலாம். பிறகு யாரேனும் தேவரடியார் பெண்டுகளை வரவழைத்து பாட்டுப்பாடச்சொல்லிக் கேட்கலாம். பிறகு உறங்கப் போகலாம்.

கால் பிடித்து விட நல்ல இளைஞர்கள் இருக்கிறார்கள். கால்பிடித்து விடும்போது அந்த சுகத்தில் லயித்து, புதிதாக என்ன செய்யலாம் என்று யோசித்தால் ஏதேனும் ஒன்று சரியாகக் கிளறுகிறது. ஆவுடையார் முழுமையாக இருக்க வேண்டுமென்ற அவசியமில்லை என்று சொன்னதுகூட குணவன் நித்தவினோதப் பெருந்தச்சன்.

ஆனால், குஞ்சரமல்லர் பெருந்தச்சர் இதைத் தன்னுடைய ஏற்பாடாய் சக்ரவர்த்தியிடம் சொல்லியிருக்கிறார். குஞ்சரமல்லர் பெருந்தச்சருக்கும் குணவனைப் பற்றிய ஒரு பயம் வந்துவிட்டது. அவனை சக்ரவர்த்தியின் முன்பு நிறுத்துவதில்லை. சகலமும் தானே என்று இழுத்துப் போட்டுக் கொண்டு தடுமாறுகிறார். அதனால் தான் கருவூர்த்தேவர் பற்றிப் பயப்படுகிறார். அவரிடம் மிரளுகிறார்.

கருவூரத் தேவரிடம் பயப்பட வேண்டிய அவசியமேயில்லை. கருவூர்த்தேவர் சத்திய சொரூபம். அவர் எதிரே உண்மையாக, பணிவாக, அன்பாக நடந்து கொண்டால் மிக சந்துஷ்டியாக

சம்பாஷணை நடக்கும். கருவூர்த் தேவரிடம் உண்மையாக இருந்தால் போதும். பணிவும், அன்பும் தானா வந்துசேரும்.

சிற்ப வேலையைப் பார்க்க வந்த கருவூர்த்தேவரிடம் சிற்பிகள் போய் அவரவர் எதிர்காலங்களைப் பற்றி ஆசையாக வினவியிருக்கிறார்கள். அவரும் தகுந்தாற் போல பதில் சொல்லியிருக்கிறார்.

''என்ன குணவா, உனக்கு உன் எதிர்காலம் குறித்துத் தெரிந்து கொள்ள வேண்டாமா?'' என்று உரக்க பலபேர் முன்னிலையில் கருவூர்த்தேவர் கேட்டார். அவன் வாய்விட்டுச் சிரித்தான்.

''ஏன் சிரிக்கிறாய்.'' என்று கேட்டார்.

''என்னை இறைவன் இன்ன பணிக்கென்று உருவாக்கி இங்கு அனுப்பியிருக்கிறான். நான் செய்த பணி போதுமென்றால் அவனே திரும்பி எடுத்துக் கொள்வான். இங்கு நான் செய்வது அனைத்தும் அவனுடைய கட்டளையின் பேரில், அவனுடைய ஆலோசனையின் பேரில், அவனுடைய தூண்டுதலின் பேரில் செய்கிறேன். இதில் என்னைப்பற்றி நான் எதற்குத் தெரிந்து கொள்ள வேண்டும்.'' என்று பதில் சொன்னான்.

கருவூர்த்தேவர் பாய்ந்து வந்து அவனை இறுகத் தழுவிக் கொண்டார்.

''இறைவன் உன்னைத் தன் பணிக்குத்தான் அனுப்பியிருக்கிறான் என்று தெள்ளத் தெளிவாய் உனக்குத் தெரிகிறதா?''

அணைத்துக் கொண்டபடி அவனைப் பார்த்துக் கேள்வி கேட்டார்.

''நன்றாகத் தெரிகிறது.''

''எப்படி'' உலுக்கினார்.

''புதிதாய் ஒன்று கண்டுபிடித்த பிறகு எனக்கு நான் கண்டுபிடித்தது பற்றி ஆச்சரியமாக இருக்கிறது. நானா இதைக் கண்டுபிடித்தேன் என்று ஒரு எண்ணம் வருகிறது. அந்த எண்ணம் வருகிற போது, நான் வேறு, எனக்குள் உட்கார்ந்து வேலை செய்கின்ற இறைவன் வேறு என்பதை நான் புரிந்து கொள்கிறேன். இறைவனுடைய தூண்டுதலால் நான் இயங்குகிறேன் என்பதை தெள்ளத் தெளிவாக உணருகிறேன்.''

கருவூர்த்தேவர் அவன் கைகளை எடுத்து கண்களில் ஒற்றிக் கொண்டார்.

''நீ தேவதச்சன். இறைவனுக்கு அருகே, இறைவன் பணி செய்து மேலே வாழ்ந்தவன்.அதனால்தான் இங்கு வந்த பிறகும் இறைவன்



நினைப்பாக இருக்கிறாய். இது எல்லோருக்கும், குறிப்பாக உன் ஆச்சாரியன் அந்த குஞ்சரமல்லனுக்கு வரவே வராது.''

''அப்படியில்லை ஐயா. ஒவ்வொரு இரும்பும் ஒவ்வொரு வார்ப்பு. எந்த இரும்பில், எந்தப் பகுதியில் உள்ளுக்குள் காற்றுக் குமிழி இருக்கிறதென்று சொல்ல முடியாது. அவர் பலவீனம் என்ன என்பது நம் கண்களுக்கே தெரிகிறது. என் பலவீனம் என்ன என்று என் கண்களுக்குத் தெரியவில்லை. அதனால் எவர் பற்றியும் குறைசொல்லாது இருக்கிறேன்.''

''வாழ்க... வாழ்க... குணவன் வாழ்க. நீ செயற்கரிய செயலைச் செய்யும் நாள் ஒன்று உண்டு.''

''ஐயா, உங்கள் ஆசியில் இதோ செய்து கொண்டிருக்கிறோமே.''

''இது குஞ்சரமல்லர் பணி. உனக்கென்று ஒரு பணி இருக்கிறதடா.''

சட்டென்று குணவன் அதிசயத்தான்.

நானா, இன்னொரு பணியா. இதோடு எல்லாம் முடிந்து போயிற்று என்றல்லவா உள்ளே ஒரு உணர்வு தோன்றுகிறது என்று யோசித்தான்.

''என்ன இதோடு முடிந்துவிட்டது என்று நினைக்கிறாயா?''

கருவூர்த்தேவர் ஆரம்பித்தார்.

இங்குதான் கருவூர்த்தேவர் எல்லோரையும் அசத்தி விடுகிறார். உள்ளுக்குள்ளே யோசிக்கும்போதே. யோசிப்பு என்ன என்பதை மிகத் தெளிவாய் காட்டிவிடுகிறார். உன் யோசிப்பை என்னால் யூகிக்க முடியுமென்பதை பல நேரங்களில் வெளிப்படுத்துகிறார்.

''குணவா. கோச்செங்கனான் என்று பழம்நாளில் வாழ்ந்த ஒரு சோழன் பல செங்கற்கோயிலை சிவனுக்காக எழுப்பினான். அதில் இன்றளவும் நிற்பது வெகுசிலதே. மழை வெள்ளம் தாங்காது ஆற்று வெள்ளத்தில் அடிபட்டு பல கோயில்கள் சீரழிந்தன. யுதம் வந்து மக்கள் இடம்பெயர, கவனிப்பாரற்று பாழடைந்தன.

பலநூறு கோயில்கள் என் சிவனுக்கு ஏற்படுவதை விட காலத்தால் அழியாத சந்திர, சூரியர் உள்ளவரை இருக்கின்ற கற்சிலைகள். கற்கோயில்களைச் செய்வதுதான் உத்தமம் என்று நான் கருதுகின்றேன்.

இன்றைய சோழர்காலத்து நாகரிகத்தை, சிற்பப் பெருமையைக் காலமெல்லாம் உலகம் பார்த்துக் கொண்டாடிக் கொண்டிருக்க வேண்டும். அப்படிப்பட்ட கற்றளிகளை நீ எழுப்ப வேண்டும்.

சிற்பக் கலையை நீ தூக்கி நிறுத்துகிற போது, நமது கணிதத் திறமை, கலைத்திறமை, சங்கீதத் திறமை, ஓவியத்திறமை மற்றும் நாம் உயிர் வாழ்தலில் கொண்டிருக்கிற நாகரிக மேன்மை எல்லாம் வெளிப்படும்.

இந்த தேசம் அன்னியவர்களின் ஆட்சிக்கு உட்படப் போகிறது. வேற்று மதத்தினர் வந்து, இந்த சனாதனதர்மத்தைக் குலைத்து நாசம் செய்யப் போகிறார்கள். பல வேர்களை வெட்ட முயற்சி செய்யப் போகிறார்கள். அப்படி வெட்டுப்படாமல் இருக்க இம்மாதிரியான கற்றளிகள் தானய்யா காத்து நிற்கும்.

நாம் வெறும் வேல் பிடிக்கிற கூட்டமல்ல. நாடோடிகள் அல்ல. மிக உயர்ந்த நாகரிகத்திலே ஊறித்திளைத்தவர்கள். மதமும், கலாச்சாரமும் ஒன்றுடன் ஒன்று கலந்து மிளிர்ந்து மிகச்சிறப்பான வாழ்க்கை வாழ்ந்தவர்கள் என்று உலகம் தெரிந்து கொள்ள, நமக்கு வேறு எந்த வழியுமில்லை கற்றளிகளைத்தவிர..

எனவே, மிகச்சிறந்த கற்றளிகளைச் செய்யவே இறைவன் உன்னை இங்கே அனுப்பியிருக்கிறான். அந்த வேலைக்குப் பணித்திருக்கிறான். இத்தோடு முடிந்து போயிற்று என்று இனி ஒருபோதும் நினைக்காதே. உடம்பின் கடைசிமூச்சு இருக்கும் வரை நீ உழைத்துத் தான் ஆகவேண்டும். யார் பாராட்டினாலும், பாராட்டாது போனாலும் செதுக்கித்தான் ஆகவேண்டும். இது அரசருடைய வேலை அல்ல. இறைபணி. ஞாபகம் வைத்துக் கொள்.''

அடிக்குரலில் காதோடு காதாய் அவர் சொன்ன போது, அவனுக்குள் வினோதமான விஷயங்கள் தோன்றின. கோயில் களை இடித்துத் தள்ளுவதுபோல, சிற்பங்களை உடைப்பதுபோல சில உருவங்கள் செய்ய முயலும் காட்சி தோன்றியது.

திகைத்தான். உன்னால் உடைக்க முடியாதடா என்று உறுமினான். உறுத்து கருவூர்த்தேவரையே பார்த்தான்.

அவர் அதுதான் சரி என்று தலையசைத்தார்.

அவனுக்குள் ஓடுகின்ற வேகத்தைப் புரிந்து கொண்டார்.



குரு என்பவர் மனிதனுக்கு மேம்பட்டவர். அவர் மக்களில் நல்லோரை நன்கு மேம்படுத்தி இறைவனுடைய வேலையை எளிதாக்குகிறார். இறைமையை பூவுலகில் செழிக்கச் செய்கிறார்.

குணவன் நித்தவினோதப் பெருந்தச்சன் இன்னும் இதுபோல் பல கோயில்களைச் செய்ய மனதிற்குள் உறுதி பூண்டான்.

அவர் ஆசீர்வதித்தார்.

மண்மேட்டுக்குள் வழிசெய்து கருவறைக்குள் போய் ஓய்வெடுத்துக் கொள் என்று சொன்னது அவர்தான். அப்படிக் குளுமையான இடத்தில் ஓய்வெடுத்துக் கொண்டபோது சிறிய சத்தம்கூட இல்லாமல் வியர்த்துக் கொட்டாமல் அருமையாகத் தூங்க முடிகிறது. ஒன்றரை நாழிகை அடித்துப் போட்டது போல் தூங்கினால், இரவு முழுவதும் சுறுசுறுப்பாக இயங்க முடிகிறது. உடம்பு குளுமையாக இருப்பதால், புத்தி குளுமையாக இருக்கிறது. புத்தி குளுமையாக இருப்பதால் மற்றவர் காட்டும் சீற்றம் எதுவும் செய்யமுடியவில்லை. அதுமட்டுமல்ல... குணவனுக்கு மறுபடி வேலையில் ஈடுபட புத்தியும், மனமும் மிகுந்த வலியோடு தயாராவதை உணர முடிகிறது.

அவன் அணுக்கியும் திருவாரூர் தேவரடியாருமான சீருடையாள் திணறிப் போனாள்.

என்ன இது பேயாட்டம் ஆடுகிறாய் என்று உலுக்கி நிறுத்தினாள்.

இதற்குக் காரணம் இந்த உடல் குளுமை.

தனக்கும் கூடல் வலிவு அதிகரித்தது என்று இலத்தி பேசும்போது இந்தக் காரணத்தையே சொன்னான்.

இதை வெளியே சொன்னால் அத்தனை பேரும் கருவறைக்குள் புகுந்துவிடுவார்கள். எனவே வாயை மூடிக் கொண்டிருப்பதுதான் உத்தமம் என்றும் அவன் பேச, அவர்கள் வாய்விட்டுச் சிரித்தார்கள்.

"மேலே பாறை போகின்ற பாதை போய்க் கொண்டிருக்க, கீழே இப்படியொரு வழியை ஏற்படுத்துகிறோமே.. மேலுள்ள பாதை பலவீனமாகி விடாதா.'' என்று அவனுடைய சீடப்பிள்ளை கேட்க, மண்மேட்டின் அகலத்திற்கு இங்கு ஏற்படுத்தியிருக்கின்ற வழி மிகச்சிறியது. ஆனாலும், மேலே மரப்பலகை கொடுத்து கொம்பு நட்டிருக்கிறபடியால் ஒருபொழுதும் மண் சரியாது என்று சொல்லப்பட்டது.

இன்றைக்கு என்னமோ நன்றாக உண்ட பிறகும் தூக்கம் வரவில்லை. கீழே அண்டக் கொடுத்திருக்கின்ற மரப்பலகையையும், கீழே அதைத் தாங்கி நிற்கின்ற சவுக்குக் கம்புகளையும் ஒவ்வொன்றாகப் பரிசோதித்துக் கொண்டே போனான். மெல்லிய குறட்டையோடு இலத்தி சடையன் தூங்குவதைப் பார்த்துவிட்டு நகர்ந்தான்.

பாணலிங்கத்தைப் படுக்க வைத்து, கொண்டு வந்து விடலாம்.

எட்டுத் துண்டுகளாக இருக்கின்ற ஆவுடையாரை ஒவ்வொன்றாக எடுத்துவிடலாம். கோமுகம் இடிக்குமோ என்று கோல் எடுத்து அளவு பார்க்க, கோமுகம் உரசிக் கொண்டு போய்விடும் என்று தெரிந்தது.

சவுக்குக் கட்டைகளை எடுத்து எடுத்து நட்டபடி கோமுகத்தை எடுத்து வர வேண்டும். அந்த சவுக்குக் கம்பங்களை எடுத்துவிட்டு கோமுகத்தை நகர்த்த வேண்டும். மறுபடியும் சவுக்குக் கம்பங்களை அண்ட வேண்டும். மறுபடியும் இன்னும் நான்கு சவுக்குக் கம்பங்களை எடுத்துவிட்டு கோமுகத்தை நகர்த்த வேண்டும். மூன்று நாள் இப்படி நகர்த்திக் கொண்டு வந்தால் கருவறைக்கு கோமுகம் வந்துவிடும். முழு ஆவுடையார் என்றால் இதன்வழியே வருவதற்கு வாய்ப்பேயில்லை. அதுவுமல்லாது முழுதாய் ஒரு ஆவுடையார் இந்தப் பாணலிங்கத்திற்கு செய்வது என்பது மிக மிக கடினம்.

அவ்வளவு பெரிய பாறை கிடைக்க வேண்டும். ஆவுடையாரை விட இன்னும் அரைமடங்கு அகலமாயும், உயரமாயும் கிடைக்க வேண்டும். அப்படிக் கிடைத்தால் பிசிறில்லாது அதைக் குடைந்த ஆவுடையாராக மாற்ற பலபேர், பல வருடங்கள் வேலை செய்ய வேண்டும். அந்த ஆவுடையாரைச் சுமந்துகொண்டு வந்து பாணலிங்கத்தில் மாட்டவேண்டும்.

எப்படித் தூக்குவது. எதை வைத்துத் தூக்குவது. பின்னால், வெகுநாளைக்குப் பிறகு விதம்விதமாக எந்திரங்களின் உதவியால் என்னைக் காட்டிலும் திறமையான சிற்பிகள், இப்போது செய்து கொண்டிருக்கிற இந்தக் கோயிலைக்காட்டிலும் மிக அற்புதமான விமானங்களை, கோபுரங்களை, கோயில்களை எழுப்புவார்கள்.

கருவூர்த்தேவர் பரதகண்டத்திற்கு ஆபத்து வந்துவிட்டது. சனாதனதர்மத்தை எதிர்ப்பவர்கள். அதிகமாகி விட்டார்கள். வடக்கேயிருந்து படை எடுத்து வருவார்கள் என்று சொல்கிறார்.

யார் படையெடுத்து வந்தாலும், எந்த மதத்தினர் உள்ளே நுழைந்தாலும் இந்தப் பரதகண்டம் உறுதியாக நிற்கும். இந்த



சனாதனதர்மம் அழிவேயில்லாது மிளிரும். சத்யாசிரியன் மேலைச் சாளுக்கியத்திலிருந்து படையெடுத்து இங்கு வருவதற்கு முன்பு சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவர், தான் படையெடுத்து எப்படி வென்றாரோ, அதேபோல மாற்று மதத்தினரை வேறு இடத்திலிருந்து பரதகண்டத்தில் நுழைபவர்களை நாம் படையெடுத்து அழித்துவிடவேண்டும். உள்ளே நுழைந்தால் வெட்டிக்கூறு போடுவோம் என்று எதிர்த்து நிற்க வேண்டும்.

இதை இராஜேந்திரர் செய்வார். அவரிடமிருக்கும் வேகம் அற்புதமானது. இதுவரை எந்த அரசரும் பரதகண்டத்திலிருந்து படையெடுத்து மாற்றரசர் மணிமுடியைப் பறித்ததில்லை. இன்னொரு தேசத்தை ஆக்ரமித்ததில்லை. சனாதனதர்மம் கொண்ட அரசர்களே ஒருவருக்கொருவர் அடித்துக் கொண்டிருக்கிறார்களே தவிர, கடல் தாண்டியோ, மலைதாண்டியோ போய் முற்றிலும் மாறான மொழியை, முற்றிலும் வேறான மதத்தை, வர்க்கத்தைத் தாக்கியதில்லை. இராஜேந்திர சோழர் தாக்குவார் என்று தெரிகிறது. மிகப்பெரிய கடற்போருக்கு அவர் தயாராகி வருவதாகச் சொல்கிறார்கள். அதற்காக விதம்விதமாக பயிற்சிகள் எடுத்துக் கொள்ள மறவர்களை அனுப்புவதாகச் சொல்கிறார்கள்.

இராஜேந்திரர் தொலைதூரம் போய் காம்போஜம், கடாரம் முதலிய தேசங்களிலிருந்து செல்வங்களைக் கொண்டு வந்து சேர்ப்பார் என்று சொல்கிறார்கள். அப்படிக் கொண்டு வந்து சேர்த்தால் இந்தத் தேசம் செல்வச் செழிப்பில் மிளிர்ந்தால், ஆடுகளும், மாடுகளும், குதிரைகளும், தங்கமும், வெள்ளியும், தாமிரமும் வந்து சேர்ந்தால், என்னைப் போன்ற சிற்பிகளுக்கு அதிகம் வேலை இருக்கும்.

ஆச்சார்யரான குஞ்சரமல்லப் பெருந்தச்சர் என்னுடைய புத்திசாலித்தனத்தையெல்லாம் தன்னுடைய ஏற்பாடு என்று மெச்சிக் கொண்டிருக்கிறார்.

இதை மறுக்கமுடியாது. என் புத்திசாலித்தனத்தை நானே விற்கும்படியாய் ஒரு நிலைவரும். என் புத்திசாலித்தனத்தை இங்கு ஆட்சி செய்த சக்ரவர்த்தி கொண்டாடி, என்னை தனக்கு அடுத்த இடத்திலே நிறுத்தி வைக்கும்படியான ஒரு காலம் வரும். கருவூர்த் தேவர் கட்டித் தழுவிச் சொன்னதுபோல நான் இன்னொரு மிகப்பெரிய கலைப்பணி அதாவது சிவன் கோயில் கட்டுவேன்.

இப்போதே மனதிற்குள் வரைபடங்கள் தயார் செய்ய வேண்டும். இங்கு பாறை இருக்கிறது. அங்கு பாறை இருக்கிறது

என்றெல்லாம் சொல்கிறார்கள். மேலைச்சாளுக்கியத்தில் சந்திர காந்தக்கல் கிடைக்கிறது. மிகக் குளுமையான கல், உறுதியாக அதேசமயம் இழைப்புக்கு வசப்படுகிற கல். இந்த சந்திரகாந்தக்கல் கிடைத்தால் அதில் சிவலிங்கமும், மேல் தளமும் அமைக்கலாம்.

விமானத்தின் மேல்தளத்தில் சந்திரகாந்தக்கல்லைப் பதித்து விட்டால் இப்பொழுது இருக்கின்ற இந்த மண்குகையைவிட குளுமையாக இருக்கும். அதிகாரிகள் கணக்குப் புத்தகம் தயாரித்து வைத்திருக்கிறார்களே அதேபோல, இரண்டு முழங்கை நீளத்திற்கு, இரண்டு முழங்கை அகலத்திற்கு துணியால் செய்யப்பட்ட புத்தகம் ஒன்றைத் தயார் செய்ய வேண்டும். நூறு பக்கங்கள் கொண்ட ஒரு புத்தகத்தில் விதம்விதமாக வரைபடங்கள் எழுதி வைத்துக் கொள்ள வேண்டும். பரமஸ்வாமி கோயிலை நிச்சயம் எழுப்ப வேண்டும்.

நித்தவினோதப் பெருந்தச்சன் நினைக்கும்போதே அவன் உடம்பு மயிர்கூச்செறிந்தது.

இப்படி மயிர்க்கூச்செறிதல் நல்ல சகுனம். இந்த நினைப்பு நடக்கும் என்பதற்கு சங்கேதம்.

அவருக்கு முன்னால் இங்கேயுள்ள கருவறை வாசலில் துவார பாலகர்கள் வைக்க வேண்டும். இந்த இடத்தில்தான் துவார பாலகர்கள் வரும். கருவறையின் உயரத்திற்கு இரண்டு துவார பாலகர்கள் வைக்க வேண்டும். இறைவன் என்பவன் பிரமாண்டம் என்பதை துவாரபாலகர்கள் வைத்துக் காட்ட வேண்டும்.

சிவலிங்கம் ரூப அரூபம். அதில் பிரமாண்டத்தை காட்ட முடியாது. எவ்வளவு பெரிய சிவலிங்கமாக இருந்தாலும் பிரமிப்பு சற்றுதான் இருக்கும். ஆனால் இந்த ரூபத்தில் துவாரபாலக வடிவத்தில் இறைவன் எவ்வளவு பெரியவன் என்பதை எப்படியாவது காட்டிவிட வேண்டும். பெரிய பெரிய விரலும், உருண்டையான கண்ணும், மீசையும், கூரிய நகமும் வைத்திருந்தால் பிரமாண்டம் என்று வந்துவிடுமா? இல்லை, வேறு ஏதோ ஒரு வழி இருக்கிறது பிரமாண்டம் என்று காண்பிப்பதற்கு.

குணவன் நித்தவினோதப் பெருந்தச்சனின் மனம் இடையறாது யோசித்துக் கொண்டிருந்தது. சிற்பத்தைத்தவிர வேறு எது குறித்தும் அவனுக்கு யோசனை இல்லை.

சிற்பம் பற்றிய சிந்திக்காத நேரத்தில் அவன் அனுக்கி சீருடையாளைப் பற்றிச் சிந்திக்கிறான்.



சீருடையாள் அழகி. சீருடையாள் அமைதி. சீருடையாள் ஒரு தனித்த சுகம். பெயருக்கேற்ற வண்ணம் எல்லாவற்றையும் மிகச் சீராக செய்கிற பெண். மிகச்சரியாகச் சிந்திக்கிற பெண். திருமணம் என்று வேறு எங்கேயும் போகாமல் இவளோடேயே இணைந்து விடலாமா என்று தோன்றுகிறது. ஆனால், தேவரடியாரைத் திருமணம் செய்து கொண்டால் கொஞ்சம் இளக்காரமாகத்தான் பேசுகிறார்கள். இந்த இளக்காரம் பஞ்சவன்மாதேவிக்குப் பிறகு மாறிவிட்டது.

அரச குடும்பத்திலேயே தேவரடியாருக்கு மிகப்பெரிய மரியாதையும், அரசியல் வட்டாரத்தில் யோசனை கேட்டலும் இருக்க, தேவரடியார்களின் கொடி உயரப் பறக்கத் துவங்கிவிட்டது.

போதாக்குறைக்கு பஞ்சவன்மாதேவி போருக்குப் போய் அரசரோடு மறுபடியும் மீண்டதும், நிசும்பசூதனி கோயிலில் இறந்தோருக்கு மனக்கேதம் தீர்க்கும் பொருட்டு உபவாசம் இருந்ததும், தள்ளாடி தேர் ஏறி அமர்ந்ததும், அந்தத் தேர் தஞ்சை முழுவதும் சுற்றிக் கொண்டு அரண்மனைக்குப் போனதும், மிகப் பெரிய செய்திகளாகப் பேசப்பட்டன.

குறிப்பாய் தேவரடியார்கள் பஞ்சவன் மாதேவியினுடைய இந்த விஷயத்தை மிகப்பெரிய தியாகமாகச் சொன்னார்கள்.

நீங்கள் சொடுக்கினால் ஆடக்கூடியவர்களா தேவரடியார்கள். நீங்கள் சிரித்தால் நாங்கள் பல் இளிக்க வேண்டுமா. அப்படி ஒரு அவசியமும் இல்லை. எங்களில் ஒருவரான பஞ்சவன்மாதேவி ஈடு இணையில்லாதவர். பெண்களின் ரத்தினம் என்றெல்லாம் புகழ்ந்தார்கள்.

பஞ்சவன்மாதேவி போலவே அலங்கரித்துக் கொள்வதில் ஆசை காட்டினார்கள்.

பட்டமகிஷி வெள்ளைவெளேரென்று சேரதேசத்து சாயலில் இருக்க, வானவன்மாதேவி கல்யாணி சாளுக்கியம் போல மஞ்சளாக இருக்க, சோழதேசத்தின் சாயலாக பஞ்சவன்மாதேவி மரத்துப்பட்டையை உரித்ததுபோல இருந்தாள்.

வளைந்த உதடுகள். சிரிப்பான முகம். மிகப்பெரிய செந்தூரம் இட்டு, ஒரு சாக்த உபாசனை செய்வது போன்ற மஞ்சளும், குங்குமமும் கலந்த நிறத்தில் உடுத்தியிருக்க, இதையே கிட்டத் தட்ட தேவரடியார்கள் தங்கள் சீருடைகள் போலப் பயன் படுத்தினார்கள். அவர் காரை என்கிற கழுத்து ஒட்டிய பதக்கத் துடன் கூடிய நகைபோட அதையே இவர்களும் உடுத்தினார்கள்

திருமணமாகி காதுபெருக்கி உலாவந்ததால் அதேபோல தேவரடியார்கள் சட்டென்று திருமணம் செய்து கொண்டு கழுத்துப்பொட்டை அவிழ்த்துவிட்டு காது பெருக்கினார்கள்.

தங்க ஓலையைச் சுருட்டி காது துளைகளில் நுழைத்துக் கொண்டு அந்தக் காது துளையைப் பெரிதாக்கிக் கொண்டார்கள். அப்படிப் பெரிதாக்கிக் கொண்ட தேவரடியார்கள். குடும்பப் பெண்கள். கணவனுக்கு வாழ்க்கைப்பட்டவர்கள். தேவரடியாராக இருந்தாலும் பொதுமகள் போல நடத்தப்படக் கூடாதவர்கள். அதேசமயம் நித்யசுமங்கலிகள். அவர்கள் கணவர் இறந்தாலும் நெற்றிப் பொட்டு நீக்க வேண்டியதில்லை. நகைகளைக் களைய வேண்டியதில்லை. அமங்கலி என்று தேவரடியாரை எவரும் எப்போதும் அழைப்பதில்லை.

ஒருவனோடு குடித்தனம் செய்கிற தேவரடியாருக்கு தஞ்சையில் மிகப்பெரிய மரியாதை இருந்தது. அந்தணப் பெண்களும், மறவர் குல மாதர்களும், வணிகர் குல வனிதைகளும் அவர்களை மிக மரியாதையாக வீட்டுக்கு அழைத்துப் பேசினார்கள். ஆனால், சற்றுத் தள்ளி பாண்டியதேசத்தில் அவ்விதமான மரியாதை இல்லை. தேவரடியார்தானே என்ற ஏளனம் இருக்கத்தான் செய்தது.

குஞ்சரமல்லர் பெருந்தச்சரிடம் சீருடையாளைப் பற்றிப் பேசினால் அவர், அவர் மனைவியிடம் பேசச் சொல்லி, அவர் மனைவி இதெல்லாம் வேண்டாம் என்று மறுப்பு சொல்லி, அந்த விஸ்வகர்மா குலத்திலிருந்தே ஏதேனும் ஒரு பெண்ணை ஏற்பாடு செய்துவிடுவார்.

சீராளன் என்கிற ஓவியன் இப்படியொரு பெண்ணைத் திருமணம் செய்து கொண்டுவிட்டான் என்று சிற்பிகளிடையே கடுங்கோபம் இருந்தது. அவனைப்போன்ற ஓவியர் வேறு யாரும் இங்கே இல்லை என்பதால் அவன் உயிர் பிழைத்தான்.

குஞ்சரமல்லர் தன் சொந்த மகளையே திருமணம் செய்து முடிக்க நினைத்தும் முடியாதபோது நிச்சயம் கோபமடைந் திருப்பார். ஏதேனும் கைகலப்பில் இறங்கியிருப்பார். சீராள னுடைய வித்தையால் இவரெல்லாம் ஒதுங்கிப்போக, சீராளன் அந்த உமையாளோடு மிகச் சந்தோஷமாக குடித்தனம் நடத்திக் கொண்டிருக்கிறான். அதே விதமாய் நாமும்திசை திரும்பிவிட வேண்டும். ஒருவேளை கூடவே கூடாது ஆச்சார்யன் குரலுக்கு மதிப்பில்லையா என்று கூறினால் என்ன செய்வது. சீருடை



யாளைச் சற்றுப் பொறுத்திரு என்று சொல்லி, பிறகு ஏங்கேனும் அவளோடு ஊர் விட்டு ஊர் போய்விட வேண்டியது தான். போய் என்ன செய்வது. என்ன வேண்டுமானாலும் செய்து கொள்ளலாம்.

குறைந்த பட்சம் அம்மி குத்தலாம். கல் உரல் செதுக்கலாம். திண்ணைக் கல் செய்து கொடுக்கலாம். ஆனால், பரமஸ்வாமி அப்படி விடமாட்டார். என் சிவன் என்னை நல்ல இடத்தில் வைப்பார். கருவூர்த்தேவருடைய ஆசி ஒன்று போதும், என்னை காலா காலத்திற்கும் காப்பாற்றி விடும் என்று யோசித்துக் கொண்டே, ஒவ்வொரு கட்டையாக உலுக்கிப் பார்த்துவர, ஒரு கட்டை சற்று உறுதியாக இருந்தது. அந்தக் கட்டை பாரம் தாங்காமல் வளைந்திருப்பது தெரிந்தது. முழு பலத்தோடு அந்தக் கட்டையை எட்டி உதைக்க அது ஒடிந்து விழுந்தது வேகமாக வெளியே ஓடி வந்து மண் சரிந்த இடத்திற்கு நேரே உள்ள பாதையில் என்ன நடக்கிறதென்று பார்த்தான்.

இரண்டு யானைகள் எதிரும், புதிருமாய் அருகருகே நின்று கொண்டிருந்தன. அந்த யானைப் பாகர்கள் ஏதோ ஒரு விஷயம் குறித்து உரத்த குரலில் சண்டை போட்டுக் கொண்டிருந்தார்கள்.

"ஏய்.. ஏய்.." என்று அவன் கத்தினான்.

இரண்டு பேரையும் விலகிப் போகச் சொல்லி கைவீசினான். ஆனால், இரண்டாவது அடுக்கில் நின்று கொண்டிருந்த அவர் களுக்கு அவன் என்ன சொல்கிறான் என்பது விளங்கவில்லை.

அதிலொரு யானைப்பாகனுக்கு நித்தவினோதப் பெருந்தச்ச குணவன் யார் என்றே தெரியவில்லை.

சரிதான் சும்மாயிரடா என்று கையசைத்தான்.

குணவனுக்கு கோபம் வந்தது.

அருகிலிருந்த சிறு கழியை எடுத்து சுழற்றியடித் தான். அது எந்த யானைப்பாகன் அலட்சியமாய் பேசினானோ, அவனுக்கு எதிரே யிருந்தவன் முகத்தில் போய் பச்சென்று அடித்தது. அவன் சுருண்டு பொத்தென்று விழுந்தான். யானை மிரண்டு பின்வாங்கியது. முன்பின்னும் அலைந்தது. எதனாலோ கோபமுற்று அந்த யானைப்பாகனின் காலைத்தூக்கி விசிறி எறிந்தது. எல்லோரும் கூச்சலிட்டார்கள். குணவன் தலையிலடித்துக் கொண்டான். உள்ளே போய் தூங்குகின்ற இலத்தி சடையனையும் மற்றவனை யும் எழுப்பிக் கொண்டு வெளியே வந்தான்.

அவர்கள் அனைவரும் வெளியேவர சட்டென்று அந்த இடத்தில் இரண்டு, மூன்று கட்டைகள் சரிந்து மண் உட்கார்ந்தது. பாதை அடைபட்டது.

இலத்தி சடையன் பயத்தில் அலறினான்.

"என்ன ஆயிற்று... என்ன ஆயிற்று... என்ன ஆயிற்று..." என்று குணவனை நோக்கி கூவினான்.

அங்கங்கே தனித்தனியாகப் பேசிக்கொண்டும், பாடிக் கொண்டும் உறங்கிக்கொண்டும் இருந்தவர்கள். குணவனால்தான் ஏதோ நடந்துவிட்டது என்று அவனைச் சுற்றிக் கொண்டார்கள்.

இலத்தி சடையன் கூவாமல் இருந்திருந்தால், யானைப்பாகன் மீது கட்டை விழுந்தது சாதாரணமாகப் போயிருக்கும். இலத்தி சடையன் கூவிக் கெடுத்து விட்டான்.

எந்தக் காரணமுமில்லாமல் ஒரு வம்புச் சண்டை ஆரம்பித்தது.

## 168

இடது கையால் ஒரு ஊது குழலை வாயில் வைத்து பலமாக ஊதி, ஊதிப் பார்த்துக் கொண்டிருந்தவனை, சோழதேசத்துப் போர்வீரன் உற்றுப் பார்த்தான். யாரோ உற்றுப் பார்க்கிறார்கள் என்ற உணர்வு மேலிட, அந்த ஒற்றைக்கையன் நாலா திசையும் பார்க்க, ஒரு சோழ வீரன் தன்னைப் பார்ப்பது பார்த்து சட்டென்று கலவரமடைந்தான். சுதாரித்தான்.

சோழவீரனை நோக்கி வணக்கம் என்று சொன்னான். ஆனால், பதிலுக்கு சோழவீரன் வணக்கம் சொல்லவில்லை.

அந்த ஒற்றைக் கையனுக்கு உடம்பு நடுங்கியது. வியர்த்துக் கொட்டியது.

"என்ன... என்ன அப்படிப் பார்க்கிறீர்கள்."

"எனக்குச் சந்தேகமாக இருக்கிறது."

அந்தச் சோழவீரன் அடிக்குரலில் காதோரம் முணுமுணுத்தான்.

"என்ன சந்தேகம். நானே போர்க்களத்திலிருந்து இப்போது தான் வருகிறேன். வலதுகை போய்விட்டது. எப்படி வாழ்வது என்ற கவலையோடு இருக்கிறேன். என்னைப்பற்றி என்ன சந்தேகப்படுகிறாய்."

ஆனாலும், அவனுக்கு குரல் தடுமாறிற்று.



வந்தவன் எழுந்து நின்றான். விலகினான். சட்டென்று திரும்பி ஈட்டியை உயரத்தூக்கி ஒருமாதிரி சாய்ந்திருந்த அந்த ஒற்றைக் கையனிடம் வேகமாக நெருங்கி ஈட்டியை நெஞ்சில் சொருகுவது போல பாவனை செய்தான்.

ஒற்றைக்கையன் பயந்து அம்மே.. என்று கத்தினான். அருகே வந்து அந்தச் சோழ குல வீரனுக்குச் சிரிப்பு வந்துவிட்டது.

"நீ பரசு. பரசு நம்பூதிரி. உனக்கு சோழ அந்தணவேடம் சரியாகப் பொருந்தவில்லை. ஒரு அந்தணன் நடுத்தெருவில், கோயில் திண்ணையில் அமர்ந்து சமையலுக்குப் பயன்படும் ஊது குழல்போல ஒன்றை வைத்து ஊதிக் கொண்டிருந்தால் சந்தேகம் வராமல் இருக்குமா. இதை இரவுநேரம் செய்திருக்கலாம். பகலில் செய்தது பிசகு."

"நீ யார்?"

தடுமாறிய வண்ணம் பரசு நம்பூதிரி கேட்டார்.

"நான் யார் என்று தெரியவில்லை இல்லையா? அப்படியானால் என் வேடப் பொருத்தம் மிகச்சரி என்று அர்த்தம். நன்றாக உற்றுப்பார். கண்டுபிடி."

"சேர தேசத்தவன் என்று தெரிகிறது."

"எப்படித் தெரிகிறது. நான் காளிதாசன். உத்தம சோழனிடம் பிரம்மராயராக இருந்த பரமேஸ்வரனின் நான்காவது மகன். உங்களை நான் சிறுவனாக இருந்தபோது பார்த்திருக்கிறேன். சேரதேசத்தின் வடக்குப் பக்கத்தில் கிட்டத்தட்ட கங்கதேசத்தின் எல்லைப்புறத்தில் நீங்கள் தனியாக கடிகை வைத்திருந்தீர்கள். மிகப்பெரிய ஆச்சார்யனாகத் திகழ்ந்தீர்கள் என்று பிற்பாடு கேள்விப்பட்டேன்.

ஒருமுறை என் தந்தையாரோடு நீங்கள் சோழ தேசத்தைப் பலவீனப்படுத்துவது எப்படி என்று பேசிக் கொண்டு தஞ்சையி லிருந்து உடையார்குடி நோக்கிப் பயணமானீர்கள். அப்பொழுது நான் என் தந்தையாரின் குதிரையில் அவர் முதுகுப்பக்கம் அமர்ந்து அவரைக் கட்டிக்கொண்டு உங்களைப் பார்த்தபடி வந்தேன்.

வழக்கமாக நான் என் தந்தையார் எப்படிப் பேசுகிறார். அவர் முகபாவம் எப்படி மாறுகிறது என்று பார்க்கத்தான் ஆசைப் படுவேன். அன்று நான் அமர்ந்த இடத்திலிருந்து என் தந்தையைப் பார்க்க முடியவில்லை. ஆனால், உங்களை அந்த ஒன்றரை நாள் பயணத்தில் உற்றுப் பார்த்தபடி வந்தேன்.

உங்கள் பெயர் பரசு நம்பூதிரி என்பது என் மனதில் பதிந்து விட்டது. பரசு என்பது ஆயுதமா அல்லது மனிதப் பெயரா என்று நான் என் தந்தையைக் கேட்க, பரசுராம நம்பூதிரி என்பதுதான் பரசு நம்பூதிரி என்று சுருங்கி விட்டது. அதிகம் பேர் பரசுராமன் என்று பெயர் வைத்துக்கொள்வதால், இவர் தன் பெயரை பரசு என்று சுருக்கிக் கொண்டார் என்று என் தந்தையார் சொன்னார்.

சோழதேசத்தில் பரமசிவனை பரமு என்று சுருக்குவார்கள். ஆனால், சேரதேசத்தில் பரசுராமனை பரசு என்று சுருக்கிய முதல் ஆள் நீங்களாகத்தான் இருக்கும். என்னவோ, எதனாலோ உங்கள் முகம் பதிந்துவிட்டது. இத்தனை வருடங்களுக்குப் பிறகு நீங்கள் முற்றிலும் உருமாறியதற்குப் பிறகும் உங்கள் கண் அசைவுகளை யும் முக அசைவுகளையும், கை அசைவுகளையும் வைத்துக் கண்டு பிடித்துவிட்டேன்.''

''அப்படியா... நீதான் காளிதாசனா. நான் உன்னைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால், இப்போது சோழதேசத்தில் என்னவாக இருக்கிறாய்.''

பரசுநம்பூதிரி கேட்டான்.

''மன்னருடைய கைக்கோளர் படையில் ஒரு மறவனாக இருக்கிறேன். போருக்குப் போய் வந்திருக்கிறேன் என்று பெயர் சொல்லித் திரிகிறேன். உண்மையில் தஞ்சையை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறேன். ஒட்டு மொத்தமாகப் போனால் பிரச்சினை ஏற்படும் என்று நல்ல இடைவெளிவிட்டு தனித்தனியாகப் போய்க் கொண்டிருக்கிறோம்.''

''எப்படி இந்தப் பகுதிக்கு வந்தீர்கள்.''

''தலையைச்சுற்றி மூக்கைத் தொட்டோம். சேரதேசத்தின் வழியாக மேற்குப் பக்கம் போய், கடற்கரையில் ஒருபெரிய நாவாய் வாங்கினோம். வடக்கத்திய காற்று வாகாக இருந்ததால் தென்திசை நோக்கிப் பயணப்பட்டு குமரிமுனை தொட்டு, பாண் டிய தேசத்து துறைமுகத்தில் இறங்கி, ஓய்வெடுத்துக் கொண்டு பிறகு அங்கிருந்து நாகைக்கரையோரம் வந்து இரவோடு, இரவாக சிறிய படகுகளில் இறங்கி, ஈழத்திலிருந்து வந்த புத்த பிக்குகள் போல் வேடமிட்டுக் கொண்டு, தலையை மழித்து, புத்தம் சரணம் கச்சாமி என்று சொல்லி, ஒற்றைத்துணி தரித்து உள்ளுக்குள் புகுந்து விட்டோம்.

ஜனங்கள் வந்தனம் கூறி வழிவிட்டார்கள். தஞ்சைக்குப் போகிறோம் என்று சொன்னதால் வழி விட்டார்கள். ஆனால், 



நாகை தாண்டியதும் சட்டென்று உருமாறிவிட்டோம். எங்களைத் தொடர்ந்து சந்தேகத்தோடு ஆட்களை அனுப்புவார்கள் என்று தெரியும். இரவோடு இரவாக சோழதேசத்துச் சிற்பியாகவும், போர் வீரராகவும் உருமாறிவிட்டோம்.''

''முடி இப்படி வளர்ந்தது எப்படி.''

''இது வளர்ந்த முடியல்ல. வைத்துக் கொண்ட முடி.''

அவன் முன்சிகை அவிழ்த்துவிட்டு. அவன் பொய் முடியை தூக்கிக் காட்டினான்.

உள்ளே வழுக்கைத்தலை மின்னிற்று.

''சாய வேட்டிகளையும், கேயூரங்களையும், உடைவாட்களை யும் விலைக்கு வாங்கிக் கொண்டோம். அப்படி உருமாறிய பின்னும் கூட்டமாகப் போகவில்லை. தனித்தனியாகத்தான் போகிறோம். அறுநூறு தப்படி தள்ளி துர்காசரண் என்கிற என்னுடைய அண்ணன் உத்தமசோழரிடம் பிரம்மராயராக இருந்த ரவிதாஸரின் மூன்றாவது மகன் வருகிறான்.''

''என்ன இலக்கு.''

''இலக்கு என்ன. எல்லாம் அழிந்து போயிற்று. உக்கிரமாகப் போராடாத பயங்கொள்ளித்தனமே நம் அழிவுக்குக் காரணமாகி விட்டது. பரசுநம்பூதிரி நீங்கள் ஆச்சார்யனாக இருந்ததால் உங்க ளுக்கு ஒன்று சொல்கிறேன். வித்தை என்பது கற்றுக் கொள்ளப் படுவது. வீரம் என்பது தானாகச் சுரப்பது. சத்யாசிரியன் வீரர் களுக்கு வித்தை இருந்தது. வீரம் இல்லை. பின்னடைதல் என்பது ஒரு போர் முறைத்தந்திரம். எதிரியை முன்னேறவிட்டு ஏதேனும் ஒரு இடத்தில் முழுவீச்சாய் தாக்கும் போது எதிரிகள் நிலை குலைந்து போவார்கள்.

வைக்கோல் போரில் பொம்மைகள் செய்து தூக்கிக் கொண்டு போய் தென்கரையில் இருக்கின்ற இராஜராஜரை மிரட்டி விட்டோம். அந்த நேரத்தைப் பயன்படுத்திக் கொண்டிருக்க வேண்டும். நதிநீர் போக்குவரத்து நம்மிடம் இருந்தது. நதிநீர் போக்குவரத்தைக் குறைத்து நாம் இரவோடு இரவாகக் கரையேறி விடியற்காலையில் யுத்தம் ஆரம்பித்திருக்க வேண்டும்.

சோழவீரர்கள் இல்லாத துங்கபத்ரையின் வேறொரு கரையில் இரண்டு பக்கமும் இடுக்கிபோல் வளைக்கப்பட்டிருக்க வேண்டும். அல்லது மான்யகேடம் வரை வரவிட்டு அங்கிருந்து கடுமையாகத் தாக்கியிருக்க வேண்டும். சத்யாசிரியன் முட்டாள். பதட்டக்

காரன். சத்யாசிரியன் பின்னடைந்தான் என்றதும் அவனது வீரர்கள் பின்னடைந்து அவனைவிட வேகமாகப் பின்னுக்குப் போய் மான்யகேடத்தையும் தாண்டிதான் நின்றார்கள். பின்னடைந்தது தெரிந்து வடக்கிலிருந்த பராமரர்களின் தாக்குதல்வேறு ஆரம்பித்து விட்டது. இது விதி. நம் தலையெழுத்து. நாம் எங்கு போனாலும் சிறக்க முடியவில்லை. எது செய்தாலும் வளர முடியவில்லை என்ற துக்கத்திலிருந்து என்னில் மீள முடியவில்லை.''

''நம்முடைய தோல்வி சாபம் என்றா சொல்கிறாய்.''

''ஆமாம். ஆயுதமேயில்லாமல் சோழதேசத்து இளவரசன் ஆதித்தகரிகாலன் நின்றபோது உடம்பு முழுவதும் ஆயுதம் தரித்த, மூன்று பிரம்மராயர்களும் நடுநிசியில் அவனைச்சுற்றிக் கொண்டு இருளில் நின்று விதம்விதமாக சித்ரவதை செய்து கொன்றார்களே, அந்த சாபம். அவனிடம் ஒரு வாள் கொடுத்துவிட்டு நேருக்கு நேர் மோதி அவனை வெட்டி வீழ்த்தியிருக்கலாம். இது ஆசீர்வாத மாகவே நடந்திருக்கும்.

ஆதித்தகரிகாலன் அவசரக்காரன். பதட்டவாதி. அவனால் நிதானமாக சண்டையிட முடியாதபடி செய்து வெகு வேகமாக நம்மால் தாக்கி வீழ்த்தியிருக்க முடியும். கடைசி நேரம் வாய்விட்டு கைநீட்டி ரவிதாசனையும், பரமேஸ்வரனையும் பார்த்து உங்களுக் கும் இதே கதி என்று சொன்னான். பரமேஸ்வரன் அந்த விரலை வெட்டினான். கை கீழே விழுந்தது. உங்கள் வம்சத்திற்கும் இதே கதி என்று கடைசி வாசகத்தை உதிர்த்து உயிர் துறந்தான். அதுதான் தொடருகிறது. அப்போதே இது நெடும்பகை என்று தெரிந்து போயிற்று.''

''நெடும்பகை என்றால்..''

''காலாகாலத்திற்கும் சேரதேசத்திற்கும், சோழதேசத்திற்கும் பகை இருக்கத்தான் செய்யும். தமிழ் பேசுகிற பாண்டியர்களைக் கூட சேரதேசத்தில் அணைத்துக் கொள்வார்கள். பாண்டிய தேசத்தின் வெகுளித்தனத்தை மனமுவந்து ரசிப்பார்கள். ஆனால், சோழதேசத்தை அன்றும் சரி, இன்றும் சரி, நாளையும் சரி சேர தேசத்து மக்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்.

அதேபோல சோழதேசத்து மக்களும் சேரதேசத்து மக்களை நம்ப மாட்டார்கள்.

அவர்கள் அருகருகே இருப்பது, இரண்டு வாட்கள் ஒரே உறையில் இருப்பதற்குச் சமம். காலத்தின் கோலத்தால் சோழ தேசம் ஜெயித்துவிட்டது. நாம் அடியோடு வீழ்ந்துவிட்டோம்.



மறுபடியும் பாண்டியதேசத்தை முன்னிறுத்தி சோழதேசத்தைத் தாக்க குறைந்த பட்சம் நூறு வருடங்கள் ஆகும். அப்போதும் கூட நாம் தோல்வியுறலாம். ஏனெனில், சோழதேசம் கட்டுக்கோப்பாக இருப்பதற்கு என்ன செய்வது எனத்தெரிந்து கொண்டுவிட்டது.

இந்த தேசத்து மன்னன் இராஜராஜரைப் போல மிக அற்புதமான மனிதர்களைத் தலைமையாகக் கொண்டு நடக்கத் தலைப்பட்டு விட்டது. இராஜராஜர் கட்டுகின்ற கோயிலின் மாதிரி வரைபடம் ஒன்று பார்க்கக் கிடைத்தது. அந்த மாதிரி வரைபடத்தைப் பலபேர் பிரதியெடுத்துக் கொண்டு வீடுகளில் வைத்து நன்கு முடிய வேண்டுமென்று நோன்பு இருக்கிறார்கள். மிகப் பிரமாண்டமான கோயில், ஏதோ ஒரு நேரம், எதற்கு இவ்வளவு பிரமாண்டம் என்று கேள்வி வந்தாலும், இன்னொரு விதத்தில் இது மிகப்பெரிய நாகரிகச் சின்னம் என்கிற எண்ணமும் ஏற்படுகிறது.

சைவ சமயத்தினுடைய மணிமகுடமாக இந்தக் கோயில் விளக்கப்போகிறது. அதை நினைக்கும்போதும் வயிறு எரிகிறது. விதம்விதமாகத் தன்னை வெளிப்படுத்துகிறாரே இந்த இராஜராஜர் என்று ஆத்திரம் வருகிறது. இவ்வளவு ஆற்றலுடைய அரசர் நம்மிடம் இல்லையே என்கிற வேதனையும் இருக்கிறது.''

''என்ன செய்வதாக உத்தேசம்.'' பரசு கேட்டார்.

''இதுதான் என்ற திட்டம் இல்லை. ஆனாலும், நான் அழிந் தாவது சோழதேசத்தை அழிக்க வேண்டும் என்றுதான் கிளம்பி வந்திருக்கிறேன்.''

''எனக்கும் அதுதான் எண்ணம். அரசரைக் கொல்ல முயற்சிக்கப் போகிறீர்களா.''

''அது பயனற்ற வேலை.''

''ஏன்.''

''பொது இடங்களுக்கு வரும்போது அரசர் கவசம் தரித்துக் கொண்டு வருகிறார். மிகப்பாதுகாப்பாக மெய்க்காவல் படை களைப் பெரும் வளையமாக வைக்கிறார்கள். கிராமத்து ஆட்கள் போலவும், புலவர்கள் போலவும் வீரர்கள் ஊடுருவியிருக் கிறார்கள். அருகே போய் ஊது குழல் எறிந்து அவரைக் கொல்வது என்பது இயலாத காரியம். நீங்கள் என்ன முயற்சிக்கிறீர்கள்.''

''உடனடியாக சொல்ல இயலாது. ஆனால், தஞ்சைக்குப் போவது என்று தீர்மானமாகி நகர்ந்து கொண்டிருக்கிறேன்.''

''கை வலி எப்படி இருக்கிறது.''

"அப்படியேதான் இருக்கிறது. மரணத்தின் போது தான் இந்தக் கை வலி போகும். சரியானபடி முதலுதவி செய்யப்படவில்லை."

"ரத்த ஓட்டம் இல்லையெனில் இந்த நுனிகள் பாழாகும். எனவே, வெட்டுப்பட்ட கையை மேலும் கீழுமாக அசைத்துச் சுழற்றி அதற்கு வலுவேற்றுங்கள்."

"அது தெரியும். ஆனால், வெட்டுப்பட்ட கையைச் சுழற்றிக் கொண்டிருக்க வெட்கமாகயிருக்கிறது. நீண்ட வாட்களைச் சுழற்றிய கை இது."

"போதும். நம்முடைய பெருமை போதும். நாம் தோற்றுக் கொண்டிருக்கிறோம் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். இருக்கும் வரை போராடுகின்ற குணத்தை வளர்த்துக் கொள்ளுங்கள். வலது கைக்கு, வெட்டுப்பட்ட வலது கைக்கு பயிற்சி கொடுங்கள். வலி போகும். வலி போனாலே புத்தி தெளிவாகும். புத்தி தெளிவானால் புதிய சிந்தனை வரும். இப்போது யுத்தம் என்பது முடியாத காரியம். படை திரட்டி சோழதேசத்தைத் தாக்குவதென்பது இயலாத ஒரு விஷயம்.

எனவே, சோழதேசத்தின் அடிவேரை அறுப்பது தான் மிகச் சிறந்தது. இராஜராஜரைக் கொல்வது ஒன்று தான் சேரதேசத்து நம்பூதிரிகளின் பணி. முடிந்தால் இராஜேந்திரரையும் கொன்றுவிட வேண்டும். முடிந்தால் பிரம்மராயரையும் வெட்டிவிட வேண்டும். மகள் வழி அரசன் என்கிற விமலாதித்தனையும் கொன்றுவிட வேண்டும். அப்போது சோழதேசத்து வாரிசு இல்லாத தேசமாகப் போகும். உள்நாட்டுக் குழப்பம் ஏற்படும். அதைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்."

"கோயில் கட்டி முடிந்துவிட்டதா."

"இல்லை. இன்னும் ஒரு வருடமாகும் என்று சொல்லப் படுகிறது. சரியாகத் தெரியவில்லை. போனால் தெரிந்து கொள்ளலாம். நிச்சயமாக இராஜராஜரைக் கொல்ல வேண்டும் என்ற திட்டம் இருப்பதால் எதற்கும் அவசரப்படாமல் தஞ்சைக்குக் குடிபெயர்ந்த மறவனாக நம்மை நிரூபித்துக் கொண்டு, பிறகு செயலில் ஈடுபடவேண்டும். ஆறுமாதம், ஒருவருடம், ஏன் இரண்டு வருடங்களானாலும் எடுத்துக் கொள்ள வேண்டும். அது தவிர..."

"அது தவிர..."



"நாமும் போராடிப் போராடி ஓய்ந்து விட்டோம். மனதையும், உடம்பையும் உற்சாகப்படுத்திக் கொள்ள நமக்குள் ஒரு இடைவெளி தேவை."

"அதாவது உல்லாசமாக இருக்க வேண்டுமென்று தீர்மானித்து விட்டீர்கள்."

"ஆமாம். தஞ்சை உல்லாசப்புரியாகத்தான் இருக்கிறது. நாம் உல்லாசமாக இருப்பது நோக்கமல்ல. நிச்சயமான வெற்றி என்பது தான் நோக்கம். இங்கே இருக்கின்ற சேரதேசத்துக் கடிகை நம்பூதிரிகளும் எதுவும் செய்யாமல் சிதைந்துவிடக்கூடாது என்பது மிக முக்கியம்."

"காளிதாசா உன்னைப் பார்த்தால் பரிதாபமாக இருக்கிறதடா. வாழ்க்கையின் மேன்மைகளை அனுபவிக்க வேண்டிய வயதில் ஊர் ஊராக நாடோடியாகச் சுற்றிக் கொண்டு, விதம்விதமாக உருமாறிக் கொண்டு, எது நீ என்று உனக்கே தெரியாத வரையில் அலைந்து கொண்டிருக்கிறாய்."

"என்ன செய்ய... இதுவும் விதி. என் தந்தை செய்தபாவம்."

"என்ன பாவம் செய்துவிட்டார் உன் தந்தை."

பரசு கொஞ்சம் சீற்றத்தோடு கேட்டார்.

ரவிதாஸன் மீதும், பரமேஸ்வரன் மீதும் அவருக்கு அளப்பரிய பக்தி இருந்தது.

"தஞ்சை அந்தணர்களை அவர்கள் படாதபாடு படுத்தினார்கள். தஞ்சை நாட்டு அந்தணர்களை அவர்கள் மதித்ததேயில்லை. அவர்கள் அந்தணர்களே இல்லை என்று அவர்கள் எதிரேயே இழிவு படுத்தினார்கள்.

ஒவ்வொரு பகுதிக்கு ஏற்ற வண்ணம் மக்கள் வாழ்கிறார்கள். ஆனால், வேதம் என்பதும், வேத கோஷம் என்பதும் எல்லாப் பகுதிக்கும் ஒரேவிதமானது. ஒரு அந்தணனை அவமதிக்கிற போது வேதத்தையும், வேதகோஷத்தையும் அவமதிக்கிறோம் என்பது சேரதேசத்து அந்தணர்களுக்கு, குறிப்பாய் வாளேந்தி நிர்வாகம் செய்தும், சாக்த உபாசத்தில் நிலை கொண்டும் இருந்த நம்பூதிரிகளுக்குத் தெரியவில்லை.

தொண்டை நாட்டு அந்தணர்கள் சாதுவானவர்கள். சின்ன அதட்டலுக்குக்கூட பயந்து பின்வாங்குகிறவர்கள், கேள்வியை உரத்த குரலில் கேட்டால் பதில் சொல்வதில் சந்தேகம் காட்டுவார்கள்.

அதே கேள்வியை இதமாக பணிவாகக் கேட்டால் உற்சாகமாக மிகத்தெளிவாகப் பதில் சொல்கிறவர்கள். சேரதேசத்திலுள்ள அந்தணர்களெல்லாம் வாள் பிடிக்கலாமா, அரசனுக்கு வால் பிடிக்கலாமா என்று அலைந்து கொண்டிருந்தபோது, அந்தணர்கள் வேதம் படிப்பதே வாழ்க்கை என்று வறுமையோடு வாழ்ந்தார்கள். அந்த வறுமையோடு வாழ்ந்தவர்களை சேர தேசத்து அந்தணர்கள் பல்வேறு விதமாக இம்சித்திருக்கிறார்கள்.

தங்கள் எதிரே அமரக்கூடாது என்றும், தாங்கள் உண்ட பிறகே உண்ண வேண்டும் என்றும், அப்படி உண்ணும்போது பார்க்கக் கூடாது என்றும், அந்தணர்களுக்குள்ளேயே ஒரு நான்காவது வர்ணத்தை ஸ்தாபித்தார்கள்.

அது தவறு. மிகப்பெரிய தவறு. ஒரு இனம் தனக்குள்ளேயே பிரித்து அடித்துக் கொண்டால், தங்களுக்குள்ளேயே குழு ஏற்படுத்திக் கொண்டு இழிவுபடுத்திக் கொண்டால், அந்த இனத்தின் செயல்பாடுகள் ஆட்டம் காணும். அதுதான் இப்போது நடந்திருக்கிறது. உங்களுக்குகொரு கதை தெரியுமா.''

காளிதாசன் தொடர்ந்தான்.

''இப்போது சோழதேசத்தை ஆளுமை செய்வது தொண்டை தேசத்து அந்தணர்கள். கடந்த சில வருடங்களாக சோழதேசம் முழுவதையும் அவர்கள் உள்ளே புகுந்து கைப்பற்றிக் கொண்டிருக்கிறார்கள். இப்போது வேத விஷயம் இரண்டாவதாகப் போய், முதல் விஷயம் நிர்வாகம் என்று வந்துவிட்டது. இதற்கு நாம் இழிவுபடுத்தியதுதான் காரணம்.

நம்முடைய வறுமையை நினைத்தல்லவா இவர்கள் இழிவுபடுத்துகிறார்கள். நாம் வறுமையில் இருப்பதாலல்லவா இன்றைக்கு சேரதேசத்து நம்பூதிரிகளிடம் போய் நிற்கிறோம் என்று அவர்கள் வேதனையோடு பேசுவதை நான் கேட்டிருக்கிறேன்.

அந்தணர்களே சேரதேசத்து நம்பூதிரிகளிடம் படாதபாடு பட்டால், மற்ற வர்க்கத்தினர் எத்தனை பாடுபட்டிருப்பார்கள். சோழதேசத்தின் உயர்ந்த நிலையில் அமர்த்தப்பட்டுவிட்டோம் என்ற கர்வத்தில் தலை ஆடியது. வால் எகிறி ஆடியது. பாண்டிய தேசத்து ஆபத்துவிகளை தன்னுடைய பிரம்மராயர்களாக மாற்றி உத்தமசோழனின் முட்டாள் தனத்தால் ஏற்பட்ட செயல் இது. ஆரம்பத்திலிருந்தே அணுகுமுறை தவறு.

சேரதேசத்திலிருந்து வந்து சோழதேசத்து அந்தணர்களை ஆதரித்து அவர்களையும் பலமாக்கி, அவர்களுக்கும் ஆயுதப் பயிற்சியைக் கொடுத்து தொண்டை நாட்டு அந்தணர்களை அப்போதே வரவழைத்து நிர்வாகப்பயிற்சி கொடுத்திருந்தால், சோழப்பரம்பரை தலையெடுத்திருக்காது. முளையிலேயே அந்த அருண்மொழியைக் கிள்ளிப் போட்டிருக்கலாம். அவனை வளர விட்டது பிசகு. எதனால், என் தந்தையும், ரவிதாசனும், இராஜ ராஜரை வளர விட்டார்கள் என்று தெரியவில்லை.



ஆதித்தகரிகாலன் பாண்டிய மன்னனைக் கொன்றான் என்பதால் அவனை மட்டும் பழிதீர்த்தார்கள். பதிலுக்குப் பழிதீர்க்க ஒருவன் புறப்படுவான் என்ற கணக்கை அவர்கள் ஏன் போடவில்லை. இராஜராஜர் அப்போது அமைதியாக இருந்ததுதான் காரணம். உடைவாள் கூடத் தரிக்காமல், வெறும் திருநீற்றுப் பையோடு திரிந்ததுதான் காரணம். இராஜராஜன் அரசபதவிக்கு ஆசைப்படமாட்டான் என்று இவர்கள் போட்ட தப்புக் கணக்குதான் காரணம்.

படையே இல்லாத இராஜராஜர் எப்படி எதிர்ப்பார் என்று நினைத்ததுதான் காரணம். ஆனால், இராஜராஜர் இடுப்பிலே வாள் தரிக்கவில்லையே தவிர, மனசுக்குள் உறுதிபூண்டுவிட்டார். உத்தமசோழனைக் கருவறுக்கக் காத்திருந்தார். பிரம்மராயர்களாக வீற்றிருந்த ரவிதாசனையும், பரமேஸ்வரனையும் அடித்துவிரட்டத் தருணம் பார்த்திருந்தார். அடித்தும் விரட்டினார்.

உங்களுக்குச் சொல்லப்பட்டதா பரசு நம்பூதிரி. தன்னுடைய தொண்ணூற்றாறு வயது விதவைத் தயாரோடு, தொண்ணூறு வயது சிற்றப்பனோடு ரவிதாசனும், பரமேஸ்வரனும், பெண்டுகளோடும், பிள்ளைகளோடும் ஒரு ஆயுதம்கூட இல்லாமல் இடுப்பிலும், தோளிலும் உள்ள துணியோடு எல்லாச் சொத்துக்களையும் விட்டுவிட்டு அடுத்தவேளை சோற்றுக்கு யாசகம் கேட்பதுதான் வழி என்கிற நிலையில் உடையார்குடியிலிருந்து விரட்டப்பட்டார்களே. அது சொல்லப்பட்டதா.

அந்தக் கூட்டத்தில் நானும் இருந்தேன் பரசு நம்பூதிரி. அந்த நேரமும் ரவிதாசன் சிரித்துக் கொண்டு தான் இருந்தார். கவலை வேண்டாம் என்று ஏதோவொரு பெண்மணி சொன்னபோது, என்னை அணைத்துக் கொண்டு இவனைப் போன்ற இளைஞர்கள் இருக்கும்வரை எனக்கு என்ன கவலை. எனக்கு ஏற்பட்ட அவமானத்திற்கு இவன் பழிதீர்ப்பான் என்று என் தலைவருடிச் சொன்னார். என்னால் அதை மறக்க முடியாது.

ரவிதாசனுடைய தாயார் தொண்ணூற்றாறு வயதுக் கிழவி. நடக்க முடியாமல் அமர்ந்து விட்டார். ரவிதாசனுக்கு தாயாரை விட்டுப் போக மனமில்லை. அவரும் அந்த மரத்தடியிலேயே தங்கினார். ஆனால், சோழ அதிகாரிகள் துரிதப்படுத்தினார்கள். நடந்துதான் ஆகவேண்டும் என்று சொன்னார்கள். அந்தக் கிழவி கோலூன்றி நின்று, நான் நடந்தால் தான் மரணம் வரும். நான் மரணமடைந்தால் உங்கள் பயணம் எளிதாகும். எனவே, நடக் கிறேன் என்று சொல்லி முப்பது தப்படிகள் எடுத்து வைத்துவிட்டு புரண்டு விழுந்து கிருஷ்ண நாமம் சொல்லியபடியே இறந்து போனாள்.

அங்கேயே தகனத்திற்கு ஏற்பாடு செய்துவிட்டு, குளித்துவிட்டு, மொத்த கும்பலும் ஈர உடையோடு மேற்கு நோக்கி நடந்தது. பிரம்மராயரின் தாயாரின் தகனத்தைக்கூட சரியாகச் செய்ய சோழ அதிகாரிகள் விடவில்லை. மற்றவர்களும் இறந்து போனால் எங்கள் பணி எளிதாகும் என்று சொன்னார்கள்.

நெடும்பகை என்று ஒரு வார்த்தை சொன்னேனே, அது என்னுடைய வார்த்தை அல்ல. ரவிதாசனுடைய வார்த்தை. பழிக்குப்பழி என்று ஆதித்தகரிகாலனைக் கொன்றதற்கு என்னை வெட்டிப்போட்டிருந்தால் இது சாதாரணமாகப் போயிருக்கும்.

இராஜராஜர் இதைச் சாதாரணமாக விட மறுக்கிறார். என் வம்சத்தை மறுக்கிறார். இங்கிருந்து சேரதேசம் போகும்வரை நான் விதம்விதமாகச் சிந்திப்பேன் என்று தெரிந்தே செயல்படுகிறார். தொடர்ந்து போர் மூளவேண்டுமென்றே ஆசைப்படுகிறார். என் ஆசை நிறைவேறும். சேரதேசம் தொடர்ந்து சோழ தேசத்திற்கு எதிராகப் போர் செய்யும் என்று சிரித்துக் கொண்டே சொன்னார். அவர் முகம் சிரிப்பாக இருக்க, உள்ளுக்குள் இருக்கின்ற வேதனையை அவர் கண்கள் பேசின.''

''மனிதர்களை உற்றுப் பார்ப்பதே என் வேலை. அது எனக்குப் பழக்கம். என் இயல்பு. ரவிதாசர் நின்றதும், நடந்ததும் இன்னும் என் நெஞ்சுக்குள் இருக்கின்றன. சேரதேசம் போய்ச் சேருவதற் குள் ஒரு குழந்தை உட்பட ஏழுபேர் இறந்து போனார்கள்.

சேரதேசம் போனபோது நாம் வரவேற்கப்பட்டோம். நமது மக்கள் நம்மைக் கைகூப்பி வரவேற்றார்கள். ஆனந்தக் கூச்சலிட் டோம். தாய் மண்ணிற்கு வந்து விட்டோம் என்று பெருமித மானோம். இதை அந்த சோழதேசத்து அதிகாரிகள் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்கள். ரவிதாசர் அவரிடம் போய்



கைகூப்பி மிக்க நன்றி என்று சொன்னார். நாங்கள் மறைத்து எடுத்து வந்திருந்த கத்தியை அவர்களிடம் கொண்டுபோய் கொடுத்து. இந்தக் கத்தி எங்களுக்குப் பாதுகாப்பாக வந்தது. இனி, இந்தப் பாதுகாப்பு தேவையில்லை. நீங்கள் வைத்துக் கொள் ளுங்கள் என்று அந்தக் கத்தியைக் கொடுத்தார். நாங்கள் வாய் விட்டுச் சிரித்தோம்.

பெண்ணின் இடுப்பிலிருந்து தொடை வரை புடவையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த கத்தி என்பதை அவர்கள் புரிந்து கொண்டார்கள். பெண்ணின் யோனியில் புதைத்து வைத்திருந்த கத்தி என்பதுபோல் கேலி பேசினார்கள்.

ரவிதாசர் அசரவில்லை. யோனியிலிருந்து இராஜராஜர் போன்ற மாமன்னர் வரும்போது, ஒரு கத்தி இருப்பதில் என்ன தவறு. சிறப்புதானே என்றார்.

நாங்கள் வாய்விட்டுச் சிரித்தோம்.

இராஜராஜர் அயோனிஜர் அல்ல. கடவுள் அவதாரம் அல்ல. யோனியிலிருந்து பிறக்காதவர் அல்ல. அவரும் சாதாரணமாக ஒரு பெண் வயிற்றில் பிறந்தவர்தான். அவரைக் கடவுள் அவதாரமாக நீங்கள் நினைக்கலாம். நாங்கள் நினைக்கவில்லை என்று மறைமுகமாகச் சொன்னார்.

சோழதேசத்து அதிகாரிகள் கோபத்தோடு உறுமினார்கள். எங்கள் பெண்டிரையும், பிள்ளையையும் சேர்த்து நீங்கள் தாக்குவதாக இருந்தாலும் சரி, எனக்கு கத்தி கொடுத்து ஒற்றைக்கு ஒற்றை சண்டையிட்டாலும் சரி, நான் தயாராக இருக்கிறேன் என்று ரவிதாசர் சொல்ல, அவர்கள் வெறுப்போடு திரும்பிப் போனார்கள். நாங்கள் உற்சாகக் குரல் கொடுத்தோம்.

இவையெல்லாம் தவறு. அடக்கமற்ற செயல்கள் என்று இராஜ ராஜரிடம் சொல்ல, நாம் போய் காந்தளூர்ச்சாலையில் குடியேறிய மறுவருடமே, எந்த முன்னறிவிப்புமின்றி காடுகள் தாண்டி நான்கு லட்சம் வீரர்களோடு காந்தளூர்ச்சாலை நோக்கிப் படை யெடுத்து வந்து. காந்தளூர்ச்சாலையில், உள்ள அத்தனை பேரையும் அடித்து நொறுக்கி, வரிசை வரிசையாய் அந்தணர்களை நிற்க வைத்து அம்பு எய்து கொன்றது மறக்க முடியாத ஒரு நிகழ்ச்சி.

கதவு திறந்துவிட்டுப் போன வைணவதாசனை நான் துரத்திக் கொண்டு ஓடியதால் தப்பித்தேன். அவன் பின்வாசல் வழியாக காந்தளூர்ச்சாலை கோட்டையைச் சுற்றிக்கொண்டு சோழப்படை களை அடைந்தான். அந்த இடத்திலிருந்து பார்க்கும் போதுதான்

மிகப் பிரமாண்டமான சோழப்படை அங்கு வந்துவிட்டது என்பது எனக்குத் தெரிந்தது. வந்த வழியே ஓடிப்போய் அவரிடம் விவரம் சொல்ல. காந்தளூர்ச்சாலை மாணவர்கள் இரண்டாகப் பிரிந்து கோட்டைக்கதவை உடைப்பதற்குள் கோட்டையிலிருந்து தப்பிப்பதற்கென்று தலைப்பட்டார்கள். தப்பித்த குழுவில் நானும் இருந்தேன். கோட்டை பாழாயிற்று.

ஈட்டியைத் தரையில் ஊன்றி சரணடைந்த வீரர்களையும், அந்தணர்களையும் சோழவீரர்கள் விட்டுவைக்கவில்லை. யானையை ஏற்றிக் கொன்றார்கள்.

இது என்ன நியாயம் என்று கேட்டபோது, அம்பில் விஷம் தோய்த்து அனுப்புகின்ற நியாயம் என்றார்கள். நாம் அப்படிச் செய்கிறோமாம். ஆனால் பதிலுக்கு என்ன செய்தாலும் சரியாம். அங்கு நாம் தோற்றுப் போனதால் சத்யாசிரியனிடம் போனோம். பல வருடங்கள் அவனுடன் கூட்டுச் சேர்ந்து உழைத்தோம். ஜெயித்திருக்க வேண்டிய சத்யாசிரியன் படை வலமையின்மையால் தோற்றுப் போனது.

படைத்திறன் மட்டுமே காரணமல்ல. தலையெழுத்து என்று ஒன்று இருக்கிறது. இந்த இராஜராஜருக்கு இறை அனுக்கிரகம் அதிகம் இருக்கிறது.

பதினெட்டு வருடங்கள் ஆயுதம் ஏந்தாமல் கோயில் கோயிலாகச் சுற்றி, வெறும் திருநீறு தரித்து சிவநாமம் சொல்லி வந்த புண்ணியம் அவனைக் காக்கிறது. அதனால்தான் பதினான்கு நிலைகொண்ட இத்தனை பெரிய கோயிலை எழுப்ப முடிகிறது. போரில் வெற்றியும் பெறமுடிகிறது.

இராஜராஜர் இறையருள் பெற்றவர். ஆயினும், நம் முயற்சியைச் செய்தேயாக வேண்டும். இப்பழியை நான் தீர்த்தேயாக வேண்டும்.

ரவிதாசர் கடாரம் நோக்கி கப்பலேறினார். சீன வணிகர்களோடு சேர்ந்து கொண்டார். சந்தனமரம் கொடுத்தும், ஏலக்காய் மூட்டைகள் கொடுத்தும், தந்தங்கள் கொடுத்தும், மூலிகைகள் கொடுத்தும் அவர்களோடு பயணப்பட்டார்.

சீனர்களுக்கு ஒரு துரோணரைப் போல வில்வித்தை செய்து காட்டினார். அதில் மயங்கி அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள். எங்களோடு இருந்து விடுங்கள் என்று வற்புறுத்தினார்கள்.

அப்போது போனவர்தான் திரும்பவில்லை. அவர் நலமாக இருக்கிறார். ஆனால், நம் மக்களைப்பற்றிய நினைவாக இருக்கிறார் என்றும் கேள்விப்பட்டோம். அவர் பழி தீர்க்காமல் போய்விட்டார். ஆனால், அவருக்குப் பதிலாய் நான் இருக்கிறேன். நிச்சயம் பழி தீர்ப்பேன். கூட்டமாக இல்லாமல் போனாலும், தனியொரு மனிதனாக இராஜராஜனைக் கொல்வேன். இராஜேந்திரரைக் கொல்வேன். பிரம்மராயரையும், போர்ப்பயிற்சி பெற்ற அருண்மொழிப்பட்டனையும், சோழதேசத்து மருமகனாக வந்த விமலாதித்தனையும் கொல்வேன்.''

''குந்தவை''

''அவள் பெண்பிள்ளை நமக்குக் கெடுதல் நினைத்ததில்லை.''

''வந்தியத்தேவர்.''

''இல்லை. அவரும் சாதுவானவர். தர்ம நியாயத்துக்கு உட்பட்டவர். சேரதேசம் போகும்வரை உணவு கொடுக்க மறுத்துவிடக்கூடாது என்பதால், ஒரு பை நிறைய பொற்காசுகளோடு இரண்டு அதிகாரிகளை அவர் அனுப்பினார். அந்த அதிகாரிகள் தான் நமக்கு உணவுக்குண்டான பதார்த்தங்களை வழியில் வாங்கிக் கொடுத்தார்கள். இல்லையெனில், சோழதேசம் தாண்டும் வரை சோறில்லாமல் நிறைய பேர் இறந்து போயிருப்பார்கள். எனவே, வந்தியத்தேவரைக் கொல்வதற்கில்லை.''

''பழுவேட்டரையர்.''

''அவர் வெறும் பொம்மை.''

''மூவேந்த வேளார்.''

''இன்னொரு பொம்மை.''

''ஈராயிரத்து பல்லவரையன் என்று வடக்கே மிகப்பெரிய வீரன் ஒருவன் இருக்கிறானாமே.''

''கிட்டத்தட்ட அவன் தனி சிற்றரசன். பின்னால் ஒருவேளை அவன் சோழர்களுக்குத் தலைவலியாக வரவும் கூடும். வடக்கு எல்லையைக் காப்பதுதான் அவன் பணி. அவன் இங்கே உள்ளே நுழைந்தால் வடக்கே சாளுக்கியர்கள் படை திரட்டி கொல்லாபுரத்தைக் கைப்பற்றிக் கொள்ள முடியும். எனவே, அவனைத் தாக்குவதும் வேலையல்ல. பல்லவரையனை இங்குள்ளவர்கள் தலைமையாக ஏற்கமாட்டார்கள்.''

''சரி. உங்களிடம் திட்டம் என்ன? நானும் அதை அனுசரித்துப் போகிறேன்.''

''இதனால்தான் இவ்வளவு பெரிதாக விளக்கினேன். சோழதேசத்தில் போய், சோழதேசத்து மனிதனாக அமர்வது சோழ

தேசத்து மக்களிடையே இருக்கின்ற பிளவுகளை முடிந்தவரையில் அதிகரிப்பது. போர்க்காலத்தில் ஒரு தேசம் ஒற்றுமையாக என்ன குற்றம் நடந்தாலும் கட்டிக்கொண்டு அமைதியாக இருக்கும். ஆனால் சமாதான காலத்தில் , போர் முடிந்தபிறகு ஏற்படுகின்ற பொக்கிஷ வினியோக காலத்தில் போட்டியும் பொறாமையும், எதிரெதிர் அபிப்ராயமும் ஏற்படும். இது போர் முடிந்த பொக்கிஷ வினியோக காலம். வெகுநிச்சயமாய் சோழர்கள் தங்களுக்குள் அடித்துக் கொள்வார்கள். அதை வேடிக்கை பார்ப்பதும் முடிந்தால் வேகப்படுத்துவதும் நம்முடைய கடமை.''

''நீங்கள் ஏன் அந்தணனாக இருக்கிறீர்கள் என்று புரியவில்லை.''

''நான் அந்தணனாக வேடம் அணியவில்லை. சோழதேசத்து மறவனாக, தெற்கே திரிசிரபுரத்தைச் சேர்ந்தவனாக வேடமிட்டிருக்கிறேன். திரிசிரபுரம் எனக்குத் தெரியும். ஆனாலும், ஊர் விட்டு ஏழு வருடங்களாயிற்று என்ற சொல்லப் போகிறேன். தஞ்சையில் குடி அமரப் போகிறேன். தஞ்சை மறவனைப்போல நான் மாமிசம் சாப்பிடவும், மது அருந்தவும் தெரிந்து கொண்டேன்.

நான் அந்தணன் என்று வெகுவிமரிசையாக தஞ்சையில் உபநயணம் செய்தார்கள். கோமணத்தோடும், அரசங்கிளையோடும், முப்புரிநூலோடும் நான் கோயில் கோயிலாக படியேறியிருக்கிறேன். நாள் தவறாது அக்னிஹோத்ரம் செய்திருக்கிறேன்.

என்னுடைய ஹோம குண்டத்திலிருந்து நெருப்பு வாங்கிப் போனால் சமையல் ருசியாக இருக்கிறது என்று சொல்வார்கள். கன்று போட்ட முதல் பாலை அந்தணனுக்குக் கொடுக்க வேண்டுமென்ற ஒரு பழக்கம் உண்டு.

நான் பலமுறை சீம்பால் குடித்து உறுதியாக வளர்ந்தவன். முதல் சீம்பாலை எனக்குக் கொடுத்தால் பசுவும், கன்றும் மிக ஆரோக்கியமாக இருக்கிறது என்பதால் இந்த வழக்கம் உண்டு.

யஜுர் வேதம் பாதிப் பகுதியை மனனம் செய்து விட்டேன். வேதம் எப்போதும் வேண்டுமானாலும் படித்துக் கொள்ளலாம். போர்ப்பயிற்சியில் ஈடுபடு என்று என்னை காந்தளூர்ச்சாலைக்கு அனுப்பினார்கள்.

சோழதேசத்தின் எல்லாப் பகுதிகளும் தெரியும். அதேபோல் சேரதேசத்தின் மூலை முடுக்குகளும் நான் அறிவேன். எனக்குத் திருமணமாகி மூன்று குழந்தைகள்.

பரசுநம்பூதிரி.. இந்த அரசியல் சேற்றில் சிக்க வேண்டாம் என்று சொல்லி மேற்கு கடற்கரை பயணம் ஏற்படுவதற்கு முன்பு மூன்று நாழிகை வீட்டிற்குப் போய் அமர்ந்து மனைவியையும், குழந்தைகளையும் பார்த்துவிட்டு வந்தேன். மகளுக்குத் திருமணமாகி இரண்டு பேரக் குழந்தைகள் இருக்கிறார்கள். என்னைப் பார்த்து பேரக்குழந்தைகள் பயப்படுகின்றன. மகன்கள் இருவரும் முகம் திருப்பிக் கொள்கிறார்கள். மகள் மட்டும்தான் அருகே உட்கார்ந்து என் உடம்பு தடவிக் கொடுத்தாள். மனைவிக்கு வெட்கம். உபசரித்துவிட்டு தள்ளிப்போய் நின்று கொண்டாள்.



காமம் செத்துவிட்டது பரசு. சுத்தமாய் செத்துவிட்டது. மனைவியோடு விதம்விதமாய் சல்லாபித்திருக்கிறேன். இப்பொழுது அவளைப் பார்த்தால் மரக் கட்டையைப் போல் இருக்கிறாள். எனக்குள்ளும் எழுச்சியில்லை. அவளுக்குள்ளும் ஆசையில்லை. அதுமட்டுமில்லை பரசுநம்பூதிரி. சேரதேசத்தின் அந்தணர்கள் குடும்பம் பலதும் அழிந்து நாசமாய்ப் போய்விட்டன. எதனால் இந்த சாபம் என்று தெரியவில்லை. மாட்டு வண்டிகளும், தேர்களும் கட்டி வைக்கப்பட்டிருக்கின்றன.

அக்ரஹாரத்திலுள்ள வீடுகள் இடிந்து பராமரிக்க ஆட்கள் இல்லாமல் மற்ற ஜாதியினர் உத்திரங்களையும், தூண்களையும் பறித்துக் கொண்டு போகின்ற நிலைக்கு ஆளாகிவிட்டோம். பெண்சாபம் என்று என் மனைவி சொல்கிறாள். மாற்றார் இனத்துப் பெண்களை நாம் அனுக்கிகளாகவும், வைப்பாட்டிகளாகவும் வைத்துக் கொண்டு, அதேசமயம் அருகே வராதே விலகிப்போ என்று கொக்கரித்துக் கொண்டு பகலில் ஒரு வேடமும், இரவில் ஒரு வேடமுமாய் இருந்தது தான் காரணம் என்று சொல்கிறார்கள்.

அப்படியானால் சோழர்கள் உச்சகட்டத்தில் தலையெடுத்தற்கு என்ன காரணம் என்று கேட்டேன். பெண்களுக்கு மரியாதை கொடுத்ததுதான் காரணம் என்று சொல்கிறாள். செம்பியன் மாதேவி காலத்திலே பெண்களுக்கு அதிக அதிகாரமும், கோயில் கட்டுகின்ற உரிமையும் கொடுக்கப்பட்டது காரணம் என்கிறாள். அரசியல் நிர்வாகத்தில் பெண்கள் தலையிட்டுத் தெளிவாகப் பேசியது காரணம் என்கிறாள். குந்தவையை உதாரணம் சொல்கிறாள்.

நான் சோழப்படைகளை வேவு பார்க்க கரைகடந்து அக்கரையை சோழப்படைகள் அடையும் முன்பே இன்னும் ஊருக்குள் போய் கங்கதேசத்து அந்தணனாக அவர்களோடு கலந்து கொண்டேன். சமையல் செய்யத் தெரியுமென்று அவர்களோடு துங்கபத்ரையின் தென்கரை நோக்கி நகர்ந்தேன்.

இராஜராஜரின் ஐந்தாவது மனைவி, மனைவிகூட அல்ல. அனுக்கி. பஞ்சவன்மாதேவி என்று பெயர். அந்தப் பெண்ணைப் பார்த்ததும் அசந்து போனேன். அவள் குதிரையில் தாவி ஏறுவதும், விரைந்து ஓட்டுவதும், சட்டென்று திரும்பி நின்று வேறு திசைக்கு மாறுவதும், யுத்த ஆலோசனை சபையில் இராஜராஜருக்கு அருகே அமர்ந்து விவாதம் செய்வதும், இராஜராஜரோடு சிரித்து சல்லாபிப் பதும், தன் அழகை மேம்படுத்திக்கொள்ள விதம்விதமான பூச்சு களோடு நீராடுவதும் சீராய் உடுத்துவதும், அழுத்த முடிந்து கொள்வதும் அற்புதமாய் இருந்தன.

பஞ்சவன்மாதேவி தேவரடியார் குலத்தைச் சேர்ந்தவள். ஆனால், மிகப்பெரிய கம்பீரத்தோடும் பட்டமகிஷியைவிட அதிக அதிகாரத்தோடும் வாழ்கிறாள். அதேசமயம் அவள் இராஜராஜரை மீறி எதையும் செய்வதில்லை. பணிவு சிறிதளவும் குறைய வில்லை.

சோழத் தளபதிகளும், உபதளபதிகளும் தங்களுக்கும் இப்படி யொரு மனைவி இருக்க வேண்டுமென்று யோசித்துப் பேச ஆரம்பித்து விட்டார்கள். அரசன் எவ்வழியோ, மக்கள் அவ்வழி, யோசித்துப் பார்த்தால் இராஜராஜரின் சிறப்புக்கு அவளும் காரணம் என்று தோன்றுகிறது.

அதேசமயம் வடகரையிலுள்ள சாளுக்கியக் கூட்டத்தைப் பார்த்து, திகைத்துப் போயிருந்த சோழ வீரர்கள், வெகுதூரம் நடந்து களைத்துப் போயிருந்த அந்த சோழ வீரர்கள் எதிர்கரையில் திகைத்து நிற்க. இராஜராஜர் வெறிபிடித்ததுபோல் வாள் உருவி துங்கபத்ரை நதிக்கரையில் இறங்கிய வேகம் இருக்கிறதே. அதைச் செய்ய எந்த மன்னனாலும் ஆகாது. கைநீட்டி படைகளை அனுப்பலாம். தானே போய் இறங்கிய அந்தத் துணிச்சல், அந்த வீரம் மிகப்பெரியது.

சோழர்களின் முன்னோர் விஜயாலயன் என்பவன் தஞ்சையைச் சுற்றி காளிகோயில்கள் அமைத்ததும், சாக்த உபாசகத்தில் ஈடுபட்டதும்தான் சோழதேசத்தின் சிறப்புக்குக் காரணம் என்று ஜோசியன் சொன்னான்.

எட்டு திக்கிலும், எட்டு கோயில்கள் அமைத்து அதில் நிசும்ப சூதனியை மிகவும் கொண்டாடி, சாக்த வழிபாடு செய்ததின் மூலம் பெண்களின் நிலையை உயர்த்தி தேசம் செழிப்பாகி விட்டது என்கிறார்கள். ஆறு தலைமுறைக்கு முன்னரே இதற்கு வித்திடப்பட்டது என்கிறார்கள். எந்த இடத்தில் சாக்த பூஜை செய்கிறார்களோ, அங்கு பெண்கள் உயர்த்தப் படுவார்கள். எங்கு பெண்கள் உயர்த்தப் படுகிறார்களோ, அந்த இடம் உயரும் என்பது விதி.''

''ஆனால், சிவனுக்கு இவ்வளவு பெரிய கோயில் எழுப்புகின்ற இராஜராஜர் சாக்த உபாசகரா, இல்லையா.''

''இராஜராஜரும் சாக்த உபாசகர்தான். அந்தக் கோயிலைச் சுற்றி எட்டு திக்கிலும் எட்டுவிதமான தேவதைகளை ஸ்தாபிதம் செய்யப் போகிறானாம். வராஹியைக் கல்லில் செதுக்கி ஸ்தாபிதம் செய்து விட்டானாம். ஆக, இப்போது கட்டுகிற கோயிலும் சாக்த வழி பாடு மிக்க கோயிலாக இருக்கும். சோழதேசம் மேலும் சிறப்புறும்.

நம்முடைய குலமான சேரதேசத்தின் நம்பூதிரிகளின் குலம் அடியோடு நாசமாயிற்று. மார்பில் பூணூலும், இடுப்பில் வாளும், காலில் பாதரட்சையும், இன்னொரு கையில் தர்ப்பைக் கட்டை யும், வாயில் வேதமுமாக திரிந்து கொண்டிருந்த அந்த மகத்தான காலங்கள் மண்ணோடு மண்ணாயின.

நாம் சோழ தேசத்தில் கால் வைத்திருக்கக்கூடாது. அங்கு பிரம்ம ராயராகப் பட்டமேற்றிருக்கக்கூடாது. பரசுநம்பூதிரி கடைசியாய் என் இறுதி எதிர்ப்பாய் வெகுநாள் உள்ளுக்குள் தேக்கி வைத்திருந்த வெஞ்சினத்தைத் தீர்த்துக் கொள்ளும் விதமாய் இந்த சோழ தேசத்தின் வேரை அறுத்துவிட்டு, நான் ஓடிவிடப் போகிறேன். இராஜராஜரைக் கொன்றுவிட்டு நகரப் போகிறேன். எவருக்கு வாய்ப்புக் கிடைத்தாலும் அவர் அதைப் பயன்படுத்திக் கொண்டு இங்கேயே இறப்பதோ அல்லது எகிறி ஓடிவிடுவதோ செய்துவிட வேண்டும்.

எனக்குச் சேரதேசம் போக விரும்பவில்லை. என் பெரியப்பா வும் ஆச்சார்யருமான ரவிதாஸரிடம் போகவே விருப்பம். என் பணி முடிந்துவிட்டால் நான் தப்பித்துவிடுவேன். ஈழத்திற்குப் போய் சீன மரக்கலம் வந்ததும் அதில் ஏறி பயணப்பட்டுவிடப் போகிறேன். பரசு நம்பூதிரி.. பரசு நம்பூதிரி.. வலக்கை துண்டான பிறகும் இன்னும் வெஞ்சினம் தீர்க்க வந்திருக்கிறாயே. உன்னை நான் நமஸ்கரிக்கிறேன். என்னை ஆசீர்வாதம் செய். இராஜராஜரை அழிக்க வேண்டும் என்று ஆசீர்வாதம் செய். என் கைகளால் அவனைக் கொல்ல வேண்டும் என்று ஆசீர்வாதம் செய்.''

காளிதாசன் பரசுவின் காலில் விழுந்து அழுதான்.

பரசு ஒற்றைக்கையால் அவனைத் தூக்கி நிறுத்தினான். இறுக்க அணைத்துக் கொண்டான். மிருத்யுஞ்ச ஜபம் உரக்க சொல்ல ஆரம்பித்தான். காளிதாசனும் சொன்னான். இருவரும் முகம்

துடைத்துக் கொண்டு வெகுநேரம் உரக்க மிருத்யுஞ்ச ஜபம் சொன்னார்கள். இருட்டிய பிறகு பிரிந்தார்கள்.

தஞ்சை நகரை நோக்கி பல்வேறு விதமான விஷப்பாம்புகள் நகர்ந்து கொண்டிருந்தன.

சக்ரவாத்தி உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவரைக் குறிவைத்து விரைந்து கொண்டிருந்தன.

## 169

"உண்மையில் என்ன நடந்தது." என்று பிரம்மராயர் கேட்க, குணவன் நித்தவினோதப் பெருந்தச்சன் சகலமும் நிதானமாகச் சொன்னான்.

"எனக்கு அவனைக் கொல்ல வேண்டுமென்ற எண்ணமில்லை. அவன் யாரென்றே எனக்குத் தெரியாது. ஆனால் இரண்டு யானைகளையும் ஒரு முக்கியமான இடத்தில் நிற்க வைத்து எதிரும், புதிருமாய் நின்று வாதம் செய்து கொண்டிருந்த முட்டாள்தனத்தைப் பார்த்து எனக்குக் கோபம் வந்தது. அந்த இடம் மிகக் கவனமாகத் தாண்ட வேண்டிய இடம் என்று சொல்லப்பட்டும், அபாயம் என்று குறியிடப்பட்டும் இருக்கின்ற இடம்.

கருவறைக்குள் இலத்தி சடையன் தூங்கிக் கொண்டிருந்தான். இன்னும் சிலர் அமர்ந்திருந்தார்கள். அத்தனை பேரும் மண்மூடிப் போய்விடுவார்கள் என்ற பதட்டத்தில் நான் கட்டையை எறிந்தேன். கட்டையை எறிந்ததால் அவன் இறக்கவில்லை. அவனுக்கு காயம் பட்டது. ஒருமாதிரி சரிந்தபடிதான் யானையிலிருந்து கீழிறங்கினான். யானைக்கு முன்னே போய் உட்கார்ந்திருந்தான். பிறகு எழுந்து நின்று தள்ளாடி பொத்தென்று விழுந்தான்.

அவன் விழுந்தபிறகு யானை அவனுடைய காலைத்தூக்கி விசிறி அடித்தது. யானை வீசி எறிந்ததால் அவன் இறந்து போனான். என்னால் அல்ல. நான் அவர்கள் விரைவாக நகரவேண்டும் என்பதற்காகத்தான் கட்டையை வீசினேனே தவிர, ஒரு ஆள் அனுப்பி அவனை நகரச் சொல்லும் நேரம் எனக்கு இல்லை."

"ஆனால், இலத்திச்சடையன் குற்றத்தை ஏற்றுக் கொள்ளும் வண்ணம் செய்தது ஏன்? யார் உபாயம் அது."

"இலத்தியின் உபாயம்."



"அந்த மறைப்புதான் தவறாகப் போய்விட்டது. இந்தத் தந்திரம் தான் தேவையற்றதாகப் போய்விட்டது. குற்றவாளி இலத்திச் சடையன் அல்ல. நீதான் என்பது எல்லோருக்கும் தெரிந்துவிட்டது. உன்னைக் காப்பாற்றுவதற்கு பலபேர் பெருமுயற்சிகள் எடுக்கிறார்கள் என்பதாக ஒரு அபிப்ராயம் உருவாகி விட்டது. அதென்ன குணவன் நித்தவினோதப் பெருந்தச்சன் மிக உயர்வா? நாங்களெல்லாம் சோழ தேசத்திற்கு உயிர் கொடுக்கவில்லையா? என்று மறவர்கள் பேசத்துவங்கிவிட்டார்கள். போ என்று அதட்டினால் போகப் போகிறான். கட்டையை எடுத்து வீசுவானேன்."

"அவனுக்குக் காது கேட்கவில்லை."

"ஒரு சிறிய கல்லை எடுத்து அவன்மீது போடக் கூடாதா. இவ்வளவு நீளக்கட்டை அவ்வளவு தொலைவிற்கு வீசி எறிய வேண்டுமென்றால் எவ்வளவு கோபம் வந்திருக்க வேண்டும். அப்படி கோபப்பட அவர் என்ன உயர்வு, நாங்கள் என்ன தாழ்வு என்றெல்லாம் பேசத் துவங்கிவிட்டார்கள்."

"குணவனே இந்த உலகத்தில் எவர் புகழ் பெற்றாலும் அவருக்கு எதிரிகள் எளிதில் உருவாகிவிடுவார்கள். நீங்கள் புகழ்பெற்றது இந்தக் கூட்டத்தில் உள்ளவர்களுக்கே பிடிக்கவில்லை என்பது உனக்குத் தெரியுமா, கட்டையை வீசி எறிந்தது தவறுதான் என்று தாணுமாலயன் சொல்கிறார். குணவனே, உன்னைச் சுற்றியுள்ளோர் பற்றி மிகுந்த கவனத்தோடு இருக்க வேண்டுமென்பதற்காக இவ்வளவு விளக்கமாகப் பேசுகிறேன். இலத்தியின் மீது விசாரணை நடைபெறும்.

மறவர்கள் விஷயத்தில் சிற்பிகள் இன்னும் பொறுமையாகக் கையாள வேண்டும். உங்களுடைய எல்லா செயல்களுமே கர்வமாக மக்களுக்குக் காட்சியளிக்கின்றன. உங்கள் வேலை நறுவிசைப் பார்க்கிறபோது, சிறப்பைப் பார்க்கிற போது, நீங்கள் கர்வம் கொள்ள எல்லாவிதமான யோக்கியதையும் உடையவர்கள் என்பது எனக்குப் புரிகிறது.

ஆனால், எல்லாருக்கும் புரியாது. உயிரைத் துச்சமாக மதித்து தொலைதூரம் போய் பொக்கிஷங்களை வாரி வந்திருக்கின்ற நாம்தான் சிறந்தவர்கள் என்று வீரர்கள் எண்ணுகிறார்கள். இதுவும் ஒரு உண்மையான விஷயம்தான். அதற்கும் மதிப்பளிக்க வேண்டியது அவசியம்தான். எனவே, இரண்டு பகுதிகளிலும் அனுசரித்துப் போக வேண்டிய நிர்ப்பந்தம் வந்திருக்கிறது. இலத்தி சடையனின் மீது நாளை விசாரணை நடைபெறும். நீ போகலாம்."

பிரம்மராயர் கம்பீரமாக விடை கொடுத்தார்.

குணவன் வெளியே வந்தான். இலத்திசடையன் கைது செய்யப் பட்டு சிறையில் அடைக்கப்பட்டான் என்பது சிற்பிகளிடையே கசப்பைக் கொடுத்திருந்தது.

''ஏன் கைது செய்கிறீர்கள். இரண்டு கைகளையும் வெட்டி எறிந்துவிடுவதுதானே. யாரோ ஒரு கல்தச்சரின் மனைவி முணு முணுக்க மற்றவர்களும் அதைப்பிடித்துக் கொண்டார்கள்.''

''மரணதண்டனை விதித்து விடுங்கள். உங்கள் கோயில் சிறப்பாக வரும் என்று ஏகடியம் பேசத் துவங்கினார்கள். அதே சமயம் குணவன் மீதும் குறை சொன்னார்கள்.''

''குணவனுக்கு எல்லாவற்றிற்கும் ஆள் இருக்கிறதப்பா. அரசருக்கு இருப்பதைவிட அவனுக்கு அதிகம் அடைப்பக்காரர்கள் இருக்கிறார்கள்.'' என்று கேலி பேசினார்கள். வெற்றிலை மடித்துக் கொடுப்பவருக்கு அடைப்பக்காரன் என்று பெயர். இலைக்கறி அமுது என்பது வெற்றிலையும், பாக்கும் சேர்ந்த தாம்பூலத்தைக் குறிக்கும். பாக்கை சிறுதுண்டுகளாகச் சீவி, நடுவே ஏலக்காய் தூவி, சிறிய வெல்லக்கட்டியை உள்ளே வைத்து, கிராம்பும், பச்சைக்கற்பூரமும் வைத்து அரசர்களுக்கும், பெரிய வணிகர் களுக்கும், மந்திரிமார்களுக்கும் கொடுக்க அடைப்பக்காரர்கள் இருப்பார்கள்.

இப்பொழுதெல்லாம் சிற்பிகளுக்கும் அடைப்பக்காரன் கொடுப்பது உண்டு. சிற்பிகள் குழுவாக வேலை செய்யும் இடத் திற்குப் போய் மடமடவென்று பாக்கு நறுக்கி, வெற்றிலை காம்பு கிள்ளி, சுண்ணாம்பு சேர்த்து, ஏலக்காய், கிராம்பு சேர்த்து சுருட்டிச் சுருட்டி கொடுக்கிறார்கள். நான்கு ஐந்து சுருள் போட்டால் போதும், தொண்டையில் பதமாக சாறு இறங்கி வேலையில் ஒரு முனைப்பு கூடும். பேச்சு குறையும்.

மறுநாள் இலத்திசடையனை சபைக்கு அழைத்து வந்திருந் தார்கள். இலத்திசடையன் குளித்து திருநீறு பூசியிருந்தான். இலத்தி சடையன் உள்ளே நுழைந்ததும் சாப்பிட்டாயா என்று குணவன் கேட்டான். ஆயிற்று என்று இலத்தி பதில் சொன்னான். இலத்தியை சபைக்கு நடுவே நிற்கச் சொன்னார்கள். இலத்தி நின்று கைகூப்பினார்கள்.

''நீங்கள் கட்டை வீசியது உண்மையா'' என்று ஓலைநாயகம் வினவ, ''ஆமாம். எனக்கு கட்டை தாக்கியவரின் பெயரும், ஊரும் தெரியாது. அந்த இடம் பலவீனமான இடம். நிற்கக்கூடாது என்று



சொன்ன போது நின்றிருந்தார்கள். விலகச் சொன்னபோது என் செய்கை தெரியாமல் அந்த யானைப்பாகன் சரிதான் போ என்று கை வீசினான். நான் கோபமானேன். இடித்து விழுந்துவிட்டால் யார் பதில் சொல்வது என்று அச்சமடைந்தேன். எனவே, கட்டை வீசி அவர்களைக் கலைந்து போகச் செய்யும்படியாய் எச்சரித்தேன். கட்டை அவர்மீது படும் என்று நான்நினைக்கவில்லை. அவர்மீது பட வேண்டும் என்றும் நான் எண்ண வில்லை. யானை மீது பட்டு, யானை நகரும் என்று நினைத்தேன் அல்லது எதன் மீதும் படாது தரையில் விழுந்து அவர்கள் கவனத்தைத் திருப்பும் என்று நினைத்தேன்.''

''சரி, எங்கே அந்த யானைப்பாகன்.''

பிரம்மராயர் திசை திருப்பினார்.

அந்த யானைப்பாகனை விசாரித்தார்.

அவன் அலட்சியமாக கையசைத்ததைச் சொன்னான். புரியாமல் செய்துவிட்டதாக மன்னிப்பு கேட்டான்.

யாரோ ஒரு உணவுப் பரிமாறும் ஊழியர், கீழே வந்து உணவு உண்ணச் சொல்கிறார் என்பதாகத்தான் நினைத்துக் கொண்டேன் என்று பேசினான். அந்த இடம் பலவீனமாக இடம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இருப்பினும் அதை நாங்கள் மறந்து விட்டு சண்டையிட்டுக் கொண்டிருந்தோம் என்றும் சொன்னான்.

சுற்றியிருந்த மறவர்கள் முணுமுணுத்தார்கள்.

இலத்தியின் பக்கம் மறுபடியும் விசாரணை தொடங்கியது.

''யானை என்ன செய்தது.''

''கீழே கிடந்தவரை கால்பிடித்து வீசி எறிந்தது.''

''மறுபடியும் யானையை ஏதேனும் தொந்தரவு செய்தீரா.''

''இல்லை. ஒருமுறை கட்டையை வீசியதோடு நின்றுவிட்டேன். அவர்மீது பட்டு சரிந்ததும் நான் பயந்துவிட்டேன்.'' என்று இலத்தி சொன்னான்.

விசாரணை தள்ளி வைக்கப்பட்டது.

குணவன் இலத்தியையே பார்த்துக் கொண்டிருந்தான். அவன் கண்களில் நீர் கோர்த்துக் கொண்டிருந்தது. மிக கர்வமாக இன்னும் ஒரு பெரியகோயில் கட்ட வேண்டும். மிகப்பெரிய சாதனைகள் செய்ய வேண்டும் என்று நினைத்துக் கொண்டிருந் தேன். ஆனால், இன்று நிலைமை தலைகீழாக மாறிவிட்டது.

தஞ்சையே நடுங்கும்படியாய் ஒரு சம்பவம் நிகழ்ந்து விட்டது. இலத்தி குற்றத்தை ஏற்றுக் கொண்டது மிகப்பெரிய தியாகம். ஆனாலும், குற்றவாளி யார் என்று மறவர்களுக்கும், சிற்பிகளுக்கும் தெரிகிறது. யார் யார் எதிரிகள் என்பது தெள்ளத் தெளிவாகப் புரிகிறது. இந்த வாழ்க்கை எப்பொழுது வேண்டுமானாலும், எவரால் வேண்டுமானாலும் கவிழ்ந்துபோகும். நான் செய்து விட்டேன். என்னால் முடியும். நானே உயர்வு என்ற நினைப்பெல்லாம் மிகவும் முட்டாள்தனம். அந்தக் கர்வத்தில் இடி விழுந்து விட்டது.

நான் மிகப்பெரிய சிற்பி. என் கையிலிருந்து தேவர்களும், தேவதைகளும், கடவுள்களும் வெளியே வருகிறார்கள் என்ற இறுமாப்பெல்லாம் பொடிப் பொடியாகி விட்டது. ஒரேயொரு கட்டைவீச்சு ஒரு மனிதனின் மரணத்திற்குக் காரணமாகிவிட்டது. அவன் மனைவி அலறிக்கொண்டு ஓடிவந்தாள். அதைப் பார்க்கும் போது வயிறு பிசைந்தது.

அந்த மரணத்திற்கு நான் தான் காரணம். ஏனெனில் அந்த நேரம் மோசமான நேரம். அவன் மரணமடையாது போயிருப்பின் இலத்திசடையன் மரணமடைந்திருப்பான். என்னுடைய உதவியாளர்கள் ஆறுபேரும் மரணமடைந்திருப்பார்கள். ஏன், நானும் அழிந்து போயிருக்கலாம்.

ஏதோ ஒரு விஷயம் உள்ளே தோன்றி வெளியே அனுப்பி, நான் அவனைப்பார்த்து உரத்துக்கத்த, அவன் புரியாது விழிக்க, நான் கட்டைவீச, அவன் அடிபட்டுக் கீழே விழ, யானை அவனை வீசி எறிய, நான் உள்ளே போய் சகலரையும் கூட்டிக் கொண்டு வர, மண் சரிந்து நின்றது. ஆனால், மண் சரிந்த முட்டாள்தனத்திற்கு அந்த யானைப்பாகர்கள் தான் காரணம்.

குணவன் நித்தவினோதப் பெருந்தச்சன் யோசித்தான். ஆனால், அவர்கள் அப்படித்தான். இருப்பார்கள். அவர்கள் சாதாரண மானவர்கள். மிக உன்னதமாக பணியிலே ஈடுபட்டிருக்கிறோம் என்ற தெளிவு இல்லாதவர்கள். யாருக்கு யார் கோயில் கட்டினால் என்ன: இன்றைக்கு மாலைப் பொழுதுக்கு குடிக்கக் கள்ளும், கடிக்கக் கறியும், படுக்கப் பெண்ணும் இருந்தால் போதும் என்கிற குறுகிய வட்டத்தில் வாழ்பவர்கள்.

இங்கு நிற்காதே என்றால் நிற்பார்கள். இதைச் செய்யாதே என்றால் செய்வார்கள். இந்த பூமியில் அறிவில் சிறந்தவராகவும், மக்களில் வலுவுள்ளோராகவும் இருப்பது பிசகு, அவர்களுக்குத் தான் சோதனை அதிகம்.



அந்த யானைப்பாகன் மறவனாம். எனவே மறவர்கள் எல்லோரும் ஒன்று கூடி சிற்பிகளையும் கண்டிக்க வருகிறார்களாம். இலத்தி சடையனுக்கும், இதில் சம்மந்தப்பட்ட மற்றவர்களுக்கும் தண்டனை வாங்கிக் கொடுக்காமல் ஓயமாட்டார்களாம்.

சக்கரவர்த்தி இராஜராஜர் வரையிலும் இந்த விஷயம் போக வேண்டுமாம். அவர் நேரடியாக தலையிட வேண்டுமாம். உப தளபதிகளும், தளபதிகளும் ஒத்துழைக்க வேண்டுமாம். உயிரைக் கொடுத்து போர் புரிந்த மறவன் மீது கட்டையை வீசுவதா? இன்று கட்டையை வீசுவார்கள். நாளைக்கு செருப்பை வீசுவார்கள். பொறுத்துக் கொண்டு போகவேண்டுமா என்கிறார்கள்.

நாங்கள் போர் செய்து பழக்கப்பட்டவர்கள் என்று உறுமுகிறார்கள். தொடை தட்டுகிறார்கள். தோள் முறுக்கிக் காட்டுகிறார்கள். அவர்கள் வீட்டுப் பெண்டுகளையும் கூட்டிக் கொண்டு வந்து ஒப்பாரி வைக்கிறார்கள். கூப்பாடு போடச் சொல்கிறார்கள். இதுவரை இம்மாதிரி நடந்தது இல்லை. இப்போது எதனாலேயோ இப்படி நடக்கிறது. ஒருவேளை இவ்வளவு உயரமாய் கோயிலைக் கட்டுவது இவர்களுக்குப் பிடிக்கவில்லையா? எதற்கு இவ்வளவு பெரிய கோயில் என்று ஆரம்பித்தது. இராஜேந்திரர் அல்லவா.. இளவரசருடைய மறக்குல மனதுதானே.

கட்டிடக்கலை என்பது கணிதத்தின் சிறப்பு. கணிதத்தின் சிறப்புக்கு மொழியே வாசல். மொழியின் வளமையே மனிதரின் நாகரிகம். மனிதரின் நாகரிகத்திற்கு குடும்பம் காரணம். குடும்பம் என்பதில் பெண்களே ஆணிவேர். பெண்களும், ஆண்களும் கூடிக்குலாவிட நதிகளே காரணம்.

நீரும், நிலமும் கட்டிப்புரண்டு ஒன்றுடன் ஒன்று தழுவிக் குழைந்ததினால் உண்டான குழந்தைகள் தாவரங்கள். தாவரம் வளமையாக இருக்குமிடத்தில் எல்லா நாகரிகமும் சிறப்பாக இருக்கும். சோழதேசம் காவிரிக் கரையின் நாகரிகம். வெறும் காட்டுப் பெண்ணாக இருந்த காவிரி, சோழ தேசத்திற்குள் புகுந்த பிறகுதான் குடும்பப் பொறுப்போடு அடக்கமாய் அமைதியாய் பல கிளை நதிகளாய் உருவெடுத்து வண்டல் மண் நிலங்களில் பாய்ந்து வளம் தருகிறாள். அப்படி விளைந்த நெல்லுச்சோறின் விளைவு இந்த நாகரிகம்.

இந்தக் கோயில். இந்த வீரம், இந்தக் கவிதை. இந்த வாழ்க்கை. ஒன்றின் தொடர்பால் ஒன்று. வெறும் வீரம் மட்டுமே, நாடு பிடித்தல் மட்டுமே வாழ்க்கையாகாது என்று மறவர்களுக்கு யார் சொல்லித் தருவது. வெறும் அரசியல் மட்டுமே வரலாறு ஆகாது என்பதை யார் கற்றுக் கொடுப்பது. இதோ இந்தக் கோயில்தான் வரலாறு. இந்தக் கோயிலால்தான் இங்குள்ள நாகரிகம். இங்குள்ள அரசன். அரசி, அமைச்சர், தளபதி. எல்லோருமே மலையைக் குடைந்து பேர் அடித்து விட்டுப் போயிருக்கலாமே. சாந்து பூசி அடக்கிவர்ணம் பூசி மகிழலாமே. பலகை பலகையாய் கை ஒய அறுத்து, ஆயிரத்திற்கும் மேற்பட்ட சிற்பிகள் நாள்தவறாது மெனக் கெட்டு இந்த விமானத்தை எழுப்பி வருகிறார்கள். இதன் மேன்மை தெரியாத மறவர்கள் முஷ்டியை உயர்த்துகிறார்கள். முட்டாள் தனமாகப் பேசுகிறார்கள்.

என்ன செய்வது.. விட்டுவிடுவோமா. நீங்களே கட்டிக் கொள் ளுங்கள் என்று விலகி விடுவோமா. அத்தனை சிற்பிகளையும் அழைத்துக்கொண்டு சேரதேசமோ, கீழைச்சாளுக்கியமோ அல்லது கடல் கடந்து ஈழத்திற்கோ போய்விடலாமா. மரியாதை இல்லாத இடத்தில் வாழ்ந்தென்ன லாபம். பாதை வைத்த இடத்தில் யானை நின்றது தவறு என்று மறவனிடம் சொன்னால், யானை நிற்கிற இடத்தில் உன்னை யார் பாதை போடச் சொன்னது என்று பதிலுக்குக் கேட்கிறார்கள். வெறும் ஓநாய்போல் ஊளையிடு கிறார்கள் மற்ற ஓநாய்களும் சேர்ந்து ஊளையிடுகின்றன. இவர் களோடு பேசும்போதும் மனம் வெறுத்துப் போகிறது.

குணவன் நித்தவினோதப் பெருந்தச்சன் குமுறினான். குமுறு கின்ற மனதை அடக்கி அமைதியாக்கினான்.

சற்று இரு. ஒரேவிதமாக யோசிக்காதே. அவன் பார்வையி லிருந்து இதை யோசனை செய்து பார் என்று நிலை நிறுத்தினான். மறுபடியும் மனதிற்கு இடைவெளி கொடுத்தான். மறவர் பக்கத்தி லிருந்து யோசிக்க ஆரம்பித்தான்.

போர் என்கிற உயிர் நடுக்கத்திலிருந்து, அந்த அதிர்ச்சியிலிருந்து, இந்த வீரர்கள் இன்னும் மீளவில்லை. அதிர்ச்சியிலிருந்து மீள்வதற் குள், கோயில் பணிக்கு திருப்பி அனுப்பிவிட்டார்கள். போரினு டைய வீரதீர சாகசங்களை இவர்கள் சொல்ல, உட்கார்ந்து மக்கள் கேட்கவில்லை. மக்கள் கோயில் பணியில் ஈடுபட்டிருக்கிறார்கள். போய் ஜெயித்து விட்டு வந்தீர்களல்லவா கொண்டு வந்ததைக் கொட்டு, நாங்கள் கோயிலுக்கு எடுத்துக் கொள்கிறோம் என்று,



மக்கள் மறவர்களின் போரை சாதாரணமாக்கிவிட்டார்கள். அது மறவர்களுக்குக் கோபம்.

செயற்கரிய காரியம் செய்துவிட்டு வந்தவர் என்று எவரும் சொல்லவில்லை. செயற்கரிய காரியம் இங்குள்ள சிற்பிகள் செய்கிறார்கள் என்பதாகப் பேசப்பட, கோபம் சிற்பிகள் மீது திரும்பிவிட்டு, என்னைவிட அவன் உயர்வா. அவனைவிட நான் அல்லவா உயர்வு என்று ஒப்பிட்டுப் பார்க்கும் அபத்தம் ஏற்பட்டு விட்டது.

உயிரைக்கொடுத்து நாங்கள் கவர்ந்து வந்த பொருட்கள். உட்கார்ந்து உல்லாசமாக இருக்கின்ற இந்த சிற்பிகளுக்குப் போவதா என்ற கணக்கு வந்துவிட்டது. பொருளை எடுத்து பொம்மை செய்வதா நன்றாகத்தான் செய்கிறார்கள். ஆனால், எதற்கு.. வரலாறு காட்டுவதற்கா. நாகரிகம் தெரிவதற்கா. கவிதையும், கணிதமும் சிறப்பாக இருந்தது என்று காட்டுவதற்கா. இதெல்லாம் ஒன்றும் தேவையில்லை. மறுபடியும் எங்கே போர் என்று சொல்லுங்கள். ஒரு கைபார்த்துவிடுகிறோம். நெஞ்சு துடிக்கிறது. புஜம் எகிறுகிறது.

போர்... போர்... என்ற முழக்கம் கேட்டு நாளாயிற்று. மறுபடியும் எப்போது போர் என்று சாஸ்வதம் இல்லாத வாழ்க்கை பற்றி யோசிக்கத் துவங்கிவிடுவார்கள். இந்தக் கோயில் சாஸ்வதம் என்பதை மறந்து விட்டார்கள். ஆனால், இந்தக்கோயில் சாஸ் வதமா. பயமாக இருக்கிறது. இதையும் ஏதாவது ஒரு போர்வீரன் எடுத்து குப்புறத்தள்ளி எதற்கும் லாயக்கில்லாது செய்து விடுவானா. கல் கல்லாய் புரட்டி கீழே தள்ளுவானா?

இல்லை. தள்ள முடியாது. தள்ளவே முடியாது. இந்தக் கல்லை நகர்த்தவே முடியாது. கீழே குழியும். அடிபாகத்தில் குண்டும் ஒன்றுடன் ஒன்று பொருந்தி விடும். எந்தச்சாந்தும் தேவைப்படாது. காற்றிலுள்ள தூசிகள் இரண்டு கற்பலகைகளுக்கு நடுவேயுள்ள சந்தில்போய் ஒட்டிக்கொள்ளும், மழை பொழியும். மழை பெய்து உள்ளுக்குள் ஈரம்படியும். தூசு இறுகும். இறுகிய தூசு வெயிலில் உலரும். இன்னும் கெட்டிப் படும். தூசு மீது தூசு படிந்து கற்பலகையின் அடிசந்து வரை தூசு படிந்து, நீர்ப்பட்டு, வெயில் பட்டு இறுகி அதுவே புது சாந்தாகும். அந்தக் காரை பிரிவது மிகக் கடினம்.

இதையெல்லாம்விட கற்பலகை கற்பலகையாய் கட்டியதின் மீது மிகக் கனமான ஒரு பலகை அமரப் போகிறது. அந்தப் பலகையின்

நான்கு மூலைகளிலும் எட்டு நந்திகள் அமர்த்தப்படப் போகின்றன. அந்த நந்திகளுக்கு நடுவே ஒரு உருண்டைக்கல் வைக்கப் படப்போகிறது. அந்த உருண்டைக்கல்லும் முழுதாக மேலேறாது. அறுத்துத்தான் மேலேற்ற வேண்டும். அதைச் செய்துவிட்டு பட்டைக்கல் வைத்துவிட்டு க்ரீவத்தை அங்கே கோர்த்துவிட்டு கருவறை வேலையெல்லாம் நீங்களே செய்து கொள்ளுங்கள் என்று எங்கேயாவது தீர்த்த யாத்திரை கிளம்பி விடலாம். குடந்தைக்குப் போய்விடலாம். கிழக்கே திரிசிரபுரம் போகலாம். நாகைக்கரையோரம் போகலாம்.

நேற்றுவரை உற்சாகமாக இருந்த ஒன்று, இன்று உடைந்து விட்டது. இங்கிருக்கப் பிடிக்கவில்லை. எதனாலோ பிடிக்க வில்லை. இன்னதுதான் காரணம் என்று இல்லை. பல காரணங்கள் ஒன்று சேர்ந்து, போ... போ... என்று துரத்துகின்றன.

குணவன் நித்தவினோதப் பெருந்தச்சன் மனம் குமைந்தான். நல்லவர்கள் துக்கப்படும்போது மழை பெய்யும் என்று சொல் வார்கள்.

அன்று மழை பெய்தது.

சபை குறைவரக்கூடியிருந்தது. பிரம்மராயர் ஆசனத்தில் வந்து அமர்ந்ததும், எல்லோரும் எழுந்து நின்று சேனாதிபதிக்கு மரியாதை செலுத்தினார்கள். அவர்களில் பாதிப்பேர் நல்ல தீர்ப்பு ஆகும் என்றும். பாதிப்பேர் ஆகாது என்றும் தங்களுக்குள் பேசிக் கொண் டிருந்தார்கள். சிற்பிகள் கவலையோடு இருந்தார்கள். தேவரடி யார்களும், வணிகர்களும், அரசாங்க அதிகாரிகளும் வேடிக்கை பார்த்தபடி இருந்தார்கள்.

சிறையில் அடைக்கப்பட்ட இலத்திசடையன் சபைக்கு அழைத்துவரப்பட்டான். பிரம்மராயரை விழுந்து வணங்கினான். மற்றவர்களுக்கும் வணக்கம் சொன்னான்.

ஒரு சபை நடுவே குற்றவாளியாய் ஒரு சிற்பி நிற்பதே பல சிற்பிகளுக்கு வேதனையாக இருந்தது.

என்ன செய்வது.. இது காலத்தின் கோலம் என்று பலபேர் வாய்விட்டுச் சொன்னார்கள்.

நடந்தது என்ன என்று இலத்திச்சடையன் சொன்னான்.

இறந்துபோன யானைப்பாகனுக்கு எதிரே நின்று பேசிய யானைப்பாகனையும் விசாரித்தார்கள்.



''வேறு யாரேனும், ஏதேனும் சொல்ல வேண்டுமா'' என்று கேட்டார்கள்.

எவரும எதுவும் சொல்வதாக முன்வரவில்லை. எனவே, தலைகுனிந்து அருகே இருக்கின்ற இரண்டு, மூன்று அதிகாரி களோடு பிரம்மராயர் ரகசியமாகப் பேசினார். நிமிர்ந்தார்.

''இலத்தி சடையன் யானைப்பாகனைக் கொலை செய்ய வேண்டும் என்ற நோக்கத்தில் கட்டையை வீசி எறியாததாலும், கட்டையை வீசி எறிந்ததால், யானைப்பாகன் இறக்கவில்லை. யானை வீசி எறிந்ததால் தான் இறந்தான் என்பது உறுதிபடத் தெரிந்ததாலும், அதற்கு இன்னொரு யானைப்பாகனே சாட்சியாக இருந்ததாலும், பலமுறை எச்சரித்தும் நிற்கக் கூடாத ஒரு இடத்தில் இரண்டு யானைகளை எதிரும் புதிருமாக நிற்க வைத்து சண்டை யிட்டிருப்பது சபைக்குத் தெளிவாகத் தெரிந்துவிட்டதாலும் இலத்திசடையன் குற்றமற்றவர் என்று விடுதலை செய்யப் படுகிறார். ஆயினும் இறந்த யானைப்பாகனின் மனக்கேதம் தீரும்பொருட்டு இலத்திசடையன் பத்து கழஞ்சு பொன் அபராதமாக இந்தச் சபைக்குத் தரவேண்டும்.

இந்தச்சபை இன்னொரு பங்காக, இன்னொரு பத்துக்கழஞ்சு பொன் போட்டு இறந்தவரின் மனக்கேதம் தீர்க்கும் பொருட்டு நிசும்பசூதனி சந்நதியில் நெய்விளக்கு ஏற்றும்படி சாவா மூவா பேராடுகள் தொன்னூற்றாறு வாங்கி ஒரு இடையரைத் தேர்ந் தெடுத்துக் கொடுக்கும். இருபது கழஞ்சுகள் பெற்றுக்கொண்டு நந்தா விளக்கு எரிக்க சத்தியம் செய்யலாம். விருப்பமுள்ள ஆட்டிடையர்கள் முன் வரலாம். இதுவே தீர்ப்பு.'' என்று சொல்லி கைதட்ட, சபை எழுந்து நின்று சோழம்.. சோழம்.. என்று கைதட்டியது. இலத்திசடையன் தலைநிமிர்ந்து சிரித்தான்.

மறுபடியும் பிரம்மராய்ரை நெடுஞ்சாண் கிடையாக வணங்கினான். திரும்ப சபை விட்டு முன்னேறும்போது இரண்டு மறவர்கள் சட்டென்று அவர்களை மடக்கிக் கொண்டார்கள்.

''எலேய் இப்போ தப்பிச்சுட்ட. மறுபடியும் மாட்டாதயா போவ. அப்போ கண்டந்துண்டமா வெட்டி எறிவோம்.'' என்று கையை உயர்த்தி அவனைப் பயமுறுத்தினார்கள்.

இலத்திசடையன் திடுக்கிட்டான். தொலைவிலிருந்து பார்த்துக் கொண்டிருந்த குணவன் நித்தவினோதப் பெருந்தச்சன் கோபத்தில் பல் கடித்தான்.

பிரம்மராயர் சரட்டென்று எழுந்தார். தன்னுடைய ஆசனம் விட்டு படியிறங்கி வந்தார்.

''யாரது... யாரடா அது. எந்த நாய் இங்கு குறுக்கே புகுந்து ஊளையிடுகிறது.'' என்று வேகமாக நடந்து வந்தார். மறித்த இரண்டு பேரின் தலைமுடியையும் பிடித்துக் கீழே தள்ளினார். ஒருவனை எட்டி உதைத்தார். இன்னொருவன் கன்னத்தில் பளார் என்று அறைந்தார். அங்கிருந்த தன் மெய்க்காவல் வீரனைப் பார்த்து சவுக்கு கொடு என்று சைகையில் கேட்டார். அவன் வேகமாய் ஓடி சவுக்கு எடுத்துக் கொடுத்தான். உதறி சடேரென்று தரையில் அடித்தார்.

''என்ன நினைத்துக் கொண்டிருக்கிறாய். சபை தீர்ப்பு சொன்ன பிறகு. நீயொரு குரல் கொடுக்கிறாயா.. என்ன தைரியம் உனக்கு.''

சவுக்கைச் சொடுக்கி அவன் முகத்தில் அடித்தார். அவன்முகம் பொத்திக் கொண்டு அழுதான்.

அவன் காலை மிதித்துக் கொண்டு மீண்டும் சவுக்கடிகள் கொடுத்தார். வெளியே போங்கள் என்று மறவர் கூட்டத்தைப் பார்த்து உரக்கக் கத்தினார்.

மூவேந்த வேளாளர் எழுந்திருந்து கீழேயிருந்த இரண்டு மறவர்களையும் சுட்டிக்காட்டி இவர்களைக் கைது செய்து சிறையில் அடையுங்கள். ஒரு சபை முடியும் முன்பு அத்து மீறிப் பேசுவதும், கை உயர்த்தி பயம் காட்டுவதும் மன்னிக்க முடியாத குற்றம். இது கிட்டத்தட்ட ராஜதுரோகம். தீர்ப்புக்கு மேல் தீர்ப்பு சொல்பவன் அயோக்கியன். சோழதேசத்து சட்ட திட்டங்களுக்கு வாக்குப்படாத திருடன் என்று மிரட்ட, மறவர் கூட்டம் மௌன மாய் போனது. எல்லார் முகங்களும் இருண்டு கிடந்தன.

சவுக்கால் அடித்து சுருண்டு கிடந்தவர்களை நிமிர்ந்து உட்கார வைத்தார்கள். யாரோ ஒருவன் ஒரு துணியை ஈரத்தில் பிழிந்து வர, அந்தத் துணியால் முகம் துடைத்தார்கள். நிற்க வைத்தார்கள்.

பிரம்மராயரும், மற்ற அதிகாரிகளும் போன பிறகு கைது செய்ய வரும் போர்வீரர்கள் அடிபட்டவனுக்கு அருகே நின்றார்கள்.

''தேவைதானா, ஒரு சபை எப்படி நகருகிறது. எதை நோக்கி நகருகிறது என்பது புரியாத முட்டாளா நீ. இதை ஒரு கால் நாழிகைக்குப் பிறகு செய்திருந்தால் எவ்வளவு மரியாதையாக இருந்திருக்கும். நீயும் கெட்டு எங்களுக்கும் அவப்பெயர் கொடுத்தாயே. உன்னுடைய உணர்வுகள் சரி. உன் உணர்வுகள்தான் எங்களுடைய உணர்வுகளும்.. ஆனால், வெளிப்படுத்திய விதம் தவறு. மன்னிப்பு கேட்டுக் கொள். அதுதான் சகலருக்கும் நல்லது.''



''நான் மன்னிப்பு கேட்க மாட்டேன். சவுக்கால் அடித்துக் கொன்றாலும் நான் மன்னிப்பு கேட்க மாட்டேன். இறந்த யானைப்பாகன் எனக்கு உறவினனல்ல. நண்பனுமில்லை. ஆனா லும் அவன் மறவன். மேலைச்சாளுக்கியப் போரில் யானையை விட்டு இறங்காமல் போர் புரிந்தவன். விஷ அம்பு பட்டு அவன் யானை இறந்தது. ஒற்றை ஆளாய் பெரிய குழி வெட்டி யானையை அதில் தள்ளிப் புதைத்தவன். அந்த யானைக்கு மிகப்பெரிய தந்தம். அந்த தந்தத்தை அறுக்க மறுத்துவிட்டான். காரணம் கேட்டதற்கு இந்த யானை என் குழந்தை. குழந்தையை புதைக்கும் முன்பு பற்களை யாராவது பிடுங்கிக் கொள்வார்களா என்று அழுதான்.

நான் மனிதநேயம் உள்ளவன் இல்லையா. நல்ல மறவன் இல் லையா. நகர்ந்து போ என்று சொல்வதற்கு சவுக்குக் கட்டையை எடுத்து வீசவேண்டுமா. தான் சிற்பி என்ற கர்வம். தனக்கு அரசரும், மற்றவரும் துணையிருக்கிறார்கள் என்ற அகம்பாவம். மறவனை இளக்காரமாக நினைக்கிற போதுதான் ஒரு தேசத்திற்குக் கேடு வருகிறது.''

''நட... நட... நடக்க முடியுமா.''

அடிபட்டவனை ஆதுரமாக காவல் வீரர்கள் தாங்கிக் கொண் டார்கள். மெல்ல நடத்தி சிறு தேருக்கு அழைத்துப் போனார்கள். சிறு தேரில் ஏற்றி கம்பீரமாய் சிறைச்சாலைக்கு அழைத்துப் போனார்கள். போகும் வழியெல்லாம் மறவர்கள் அவர்களைப் பார்த்து கை உயர்த்துவது ஒற்றர்களால் கண்காணிக்கப்பட்டது.

## 170

''இதற்குப் போய் யாரேனும் கவலைப்படுவார்களா.'' சீருடையாள் குணவனை இறுக்கிக் கொண்டாள்.

இலவம்பஞ்சு மெத்தையில் அவர்கள் இருவரும் ஒருக்களித்துப் படுத்துக் கிடந்தார்கள்.

''வாழ்க்கை அப்படித்தான் இருக்கும். புகழ் பெற்றவர்களை நோக்கித்தான் புகழ் பெறாதவர்கள் பாய்வார்கள். கனிந்த மரம்தான் கல்லடிபடும். காயோ, கனியோ இல்லாத மரம் நோக்கி, எவராவது பார்ப்பார்களா, மறவர்கள் உங்களுக்கு எதிராக

இல்லை. உங்களுக்கு எதிராக உங்களவர்கள் தான் இருக்கிறார்கள். இதையும் நான் தவறு என்று சொல்லமாட்டேன்.

நேற்று முளைத்த பயல், மன்னித்துக் கொள்ளுங்கள். உங்களை உங்கள் கூட்டத்தினர் அப்படித்தானே சொல்கிறார்கள். இதை நான் காதுபட மூன்றுமுறை கேட்டிருக்கிறேன். ஆனால், இலத்திசடையன் ஒரு பொக்கிஷம். சற்றும் தாமதிக்காமல் அந்தக் குற்றத்தை தான் எடுத்துக் கொண்டது மிகப்பெரிய அருஞ்செயல். இலத்திசடையனைப் பெரிதும் தண்டிக்காமல் வெறும் அபராதம் மட்டும் விதித்தது பிரம்மராயருடைய கெட்டிக்காரத்தனம்.

இலத்திசடையனுக்கு மட்டும் அபராதம் விதிக்காமல், சபையும் பத்து கழஞ்சு கொடுக்கும். அரசாங்க பொக்கிஷத்திலிருந்து அளிக்கும் என்று சொன்னாரே அது இன்னும் பெரிய கெட்டிக் காரத்தனம்.''

''நான் இன்னும் ஏதாவது கொடுக்க ஆசைப் படுகிறேன்.''

பாதி எழுந்த வண்ணம் குணவன் சொல்ல, அவள் சட்டென்று அவனை மல்லாக்கத் தள்ளினாள்.

''முட்டாள்தனம். ஒருபொழுதும் இதைச் செய்யாதீர்கள். நீங்கள் கொண்டு போய் ஏதாவது கொடுத்தால் மறவர்கள் சீறுவார்கள். அது தவிர நீங்களும் குற்றமுள்ளவர் என்று நீங்களே சொல்வது போல் ஆகிவிடும். தயவுசெய்து... தயவுசெய்து உங்களைக் கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன். உங்களுக்கு உலகம் தெரியவில்லை. சிற்பசாஸ்திரம் தவிர, வேறு எந்த சாஸ்திரமும் தெரியவில்லை. என்னைக் கேட்காமல் இம்மாதிரி முடிவுகளைத் தயவு செய்து எடுக்காதீர்கள்.''

''ஆமாம். அது மிகப்பெரிய தவறாகப் போய்விடும். நான் கொண்டு போய் கொடுத்தால் மறவர்கள் என்னைத் தாக்கி சிதறிடிக்கலாம்.''

''கடவுளே இதையும் உங்கள் வாயால் சொல்லாதீர்கள். நீங்கள் இந்த சோழதேசத்தின் பொக்கிஷம். பல கலைப்படைப்புகள் செய்யவேண்டிய உன்னதம் நீங்கள். உங்களைச் சாதாரண போர்வீரன் தாக்குவதா. எதிர்த்துப் பேசுவதா. இலத்திச் சடையனை நோக்கி முஷ்டியை மடக்கினார்களாமே. இராஜராஜருக்கு இது தெரியாமல் போய்விடுமா. சக்ரவர்த்திக்கு இது தெரிந்தால் சீறாமல் இருப்பாரா. நான் போய் சொல்லட்டுமா. அந்த இரண்டு முட்டாள் வீரர்களும் முஷ்டியை மடக்கியதை. சிற்பிகளுக்கு அவமானம் நேர்ந்துவிட்டது என்றுதானே எல்லோரும் நினைக்கிறீர்கள். இல்லை. சிற்பிகளுக்கு அதிகம் சீரும், சிறப்பும் ஏற்படப் போகிறது. எழுதி வைத்துக் கொள்ளுங்கள்.''



''எப்படிச் சொல்கிறாய்.''

''சக்ரவர்த்தி இந்த நிலைமை பார்த்து கோபமடைவார். நீங்கள் மிக முக்கியமென்பது அவர்களுக்குத் தெரியும். ஒருபொழுதும் இந்த வேலை தடைபடக்கூடாது என்பதில் அவர் ஆவல் காட்டு வார். உங்களைச் சமாதானப்படுத்த வெகுநிச்சயமாய் ஏதேனும் செய்யக்கூடும். அதேநேரம் அவர் மற்றவர்களையும் பகைத்துக் கொள்ள மாட்டார்.

சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவர் மிகப்பெரிய தந்திரசாலி. ஆனால், சாதாரணவர் போல், எளிமையானவர் போல் எல்லாக் காரியங்களுக்கும் மற்றவரைக் கலந்து பேசி செய்வது போல் காட்சி கொடுப்பார். அவர் தீர்மானம் செய்ததைத்தான் மற்றவரோடு கலந்து பேசுகிறார் என்பது தெள்ளத் தெளிவாக உற்றுக் கவனித்தவர்களுக்குப் புரியும்.''

''சீருடையாள். எப்படி இவ்வளவு தைரியமாக சக்ரவர்த்தியைப் பற்றிப் பேசுகிறாய். அவரைப்பற்றி என்ன அறிவாய்.''

''பஞ்சவன்மாதேவி எங்களவர் அல்லவா. பஞ்சவன் மாதேவிக் குத் தோழிகள் உண்டல்லவா. பஞ்சவன்மாதேவி தோழிகள் இரவோடு இரவாய் வந்து பேசுவார்களல்லவா. அதுவும் தவிர அருண்மொழி பட்டர் நேசிக்கின்ற இராஜராஜியும், எங்கள் இனத்தவர்தான். அங்கு எங்களுக்குத் தெரியாமல் என்ன அரசியல் நடந்துவிட முடியும். நாங்களறியாமல் சோழதேசத்தில் என்ன, எவர் செய்துவிட முடியும்.

''அப்படியா சொல்கிறாய். சரி, சோழதேசத்தில் மறுபடியும் போர் வருமா?''

''வராது.''

''ஏன்.''

''இராஜராஜருக்கு போரின் மீது ஆசை விட்டுப் போயிற்று.''

''அப்படியானால் இனி போரே சோழதேசத்தில் இல்லையா.

''அப்படிச் சொல்லவில்லையே. இராஜராஜர் பதவியிலிருக்கும் வரை சோழதேசத்தில் போர் வராது. இராஜேந்திரர் பதவி ஏற்றதும் உடனடியாகப் போர் வரும். ஆனால், இராஜராஜர் பதவியிறங்கி இராஜேந்திரர் பதவியேற இன்னும் சில ஆண்டுகள் போகும்.''

''எத்தனை ஆண்டுகள் போகும் என்று நினைக்கிறாய்.''

''ஐந்து ஆண்டுகள் அல்லது ஆறு ஆண்டுகள்''

''வேறு என்ன முக்கியமான விஷயங்கள் நடக்கும்.''

''கோயில் பணி... கோயில் பணி... கோயில் பணி... தஞ்சை பரமஸ்வாமி கோயிலைக் கட்டி முடிக்கும் தருவாயில், மற்ற கோயில்களைச் செப்பனிடச் சொல்வார்கள். தேவரடியார்களுக்கு வீடு கட்டி முடித்து விட்டார்கள். அதேபோல மறவர் குடியிருப்பு களும், மற்ற வேலையாட்களுக்குண்டான குடியிருப்புகளும் பெரு கும். குறிப்பாய் கருமார்களுக்கு நல்லவிதமான குடியிருப்புகளைச் செய்து கொடுப்பார்கள். விளை நிலங்கள் கொடுப்பார்கள்.''

''கருமார்களுக்குப் பூணூல் அணிந்து கொள்ளும் உரிமை கொடுக்கப்படுமா?'' குணவன் கேட்டான்.

''நன்றாக கொடுப்பார்களே.. இப்போது பிரச்சினை வேறு பக்கம் திரும்பிவிட்டது. அந்தணர்கள் சரி என்றாலும் மறவர்கள் விடமாட்டார்கள். கருமார்களுக்கு எதற்குப் பூணூல். அப் பொழுது. எங்களுக்கும் போடு என்பார்கள். சோழதேசம் மொத்தமும் முப்புரிநூல் அணிந்து கொண்டு திரியும். ஒருவேளை பெண்களுக்கும் முப்புரிநூல் அணியும்படி இவர்கள் வேண்டு கோள் விடுக்கலாம்.'' என்று அதைக் கற்பனைச் செய்து விட்டு வாய்விட்டுச் சிரித்தாள்.

''உன்னிடம் இன்னொரு யோசனை நான் கேட்க விரும்பு கிறேன்.''

''சொல்லுங்கள்... தெரிந்தால் பதில் சொல்கிறேன்.''

அடக்கமாகப் பேசுவது போல் பேசினாள். ஆனால், உள்ளுக் குள் ஆர்வம் கொப்பளித்தது.

''என்னுடைய முக்கியத்துவத்தை இங்குள்ளவர்களுக்கு உணர்த்த நான் என்ன செய்யவேண்டும்.''

''மிக அருமையான கேள்வி. என்னிடம் ஸ்நேகமானதிலிருந்து நீங்கள் கேட்கும் முதல் புத்திசாலித் தனமான கேள்வி இதுதான்.''

''ஏய்.. அதிகம் பேசுகிறாய்.''

''உண்மையைப் பேசுகிறேன். ஆனால், என்னைக் கேள்வி கேட்பதற்குப் பிறகு உபகேள்விகள் சிலவற்றை எழுப்பவேண்டும்.''

''என்ன உபகேள்விகள்.''

''யாருக்கு உங்கள் முக்கியத்துவம் தெரிய வேண்டும். சக்ரவர்த் திக்கா, இளவரசருக்கா அல்லது உங்கள் ஆச்சார்யன். உங்களை அருகே வைத்துக் கொண்டே உங்களை எதிர்க்கிறாரே குஞ்சர



மல்லப் பெருந்தச்சர் அவருக்கா? பழுவேட்டரையர், மூவேந்த வேளாளர். தளபதி, உபதளபதி, கைக்கோளப்படை வீரர்கள், மெய்க்காவல் வீரர்கள் என்று பலபேருக்கும் உங்கள் முக்கியத் துவம் தெரியவேண்டுமா?''

குணவன் திகைத்தான்.

''இதற்கு பதில் சொல்ல முடியவில்லை அல்லவா? நான் சொல் கிறேன். குஞ்சரமல்லப் பெருந்தச்சருக்கு உங்கள் முக்கியத்துவம் தெரிந்தால், அவர் உங்களை மதித்தால் இந்த மொத்த சோழ தேசமும் மதிக்கும். குஞ்சரமல்லர் மதிக்காது சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவர் உங்களை மதித்து அடேய்... இங்கு வா என்று கூப்பிட்டால் உடனே பாதி மாற்றுக் குறைந்துவிடும்.''

''புரிகிறது.. புரிகிறது..''

''ஆக, குஞ்சரமல்லப் பெருந்தச்சர் உங்களை மதித்துவிட்டு சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவர் அடேய்.. இங்கு வா என்று கூப்பிட்டால் அது பெரிய விஷயமல்ல. குஞ்சரமல்லர் மதித்தால் ஒருக்காலும் சக்ரவர்த்தி உங்களை அடேய் என்று கூப்பிடமாட்டார்.''

''புரிகிறது... புரிகிறது...''

குணவன் பரவசமாக அவளிடம் பேசினான்.

சட்டென்று ஆடைகளை நெகிழ்த்தி அவனை நெஞ்சோடு சீருடையாள் அணைத்துக்கொண்டாள்..

''நீ குழந்தையடா. குழந்தை. மறுபடியும் சொல்கிறேன். சிற்ப சாஸ்திரம் தெரியுமே தவிர, அந்தக் கணிதம் தவிர, உனக்கு வேறு எந்தத் தந்திரமும் தெரியாது. அதனால் தான் இத்தனை ஆவலாய் பள்ளிக் கூடப்பிள்ளை போல் கேட்கிறாய். பாலகன் போல விழி விரிய இருக்கிறாய். ஆனால், வல்லவனும், நல்லவனுமாகிய ஒரு ஆணை நான் ஸ்நேகிதமாக கொண்டிருக்கிறேன் என்பது எவ்வளவு சந்தோஷமாக இருக்கிறது தெரியுமா. எங்கள் இனத்துப் பெண்கள் ஒவ்வொரு வரும் முரட்டு ஆண்களிடம் மாட்டிக்கொண்டு படுகின்ற அவஸ்தை மிகப்பெரியது. கடவுள் கருணை மிக்கவர். என்மீது பிரியமுள்ளர். எனக்கு நல்ல புருஷனைக் கொடுத் திருக்கிறார்.''

அவள் மறுபடியும் தழுவி இதழோடு இதழ் வைத்து முத்தமிட் டாள். அவன் கிறங்கிப்போனான்.

''குஞ்சரமல்லப் பெருந்தச்சர் மதிப்பது என்பதுதான் முக்கியமென்று நீ சொல்கிறாய் அல்லவா.''

''ஆமாம்.''

''அதற்கு நான் என்ன செய்ய வேண்டும்.''

''நான் அழகாகச் சொல்லித் தருவேன். ஆனால், என்னைக் காட்டிக் கொடுத்துவிடலாகாது. நான் இப்படிச் சொன்னே னென்று எவரிடமும் சொல்லக் கூடாது.''

''மாட்டேன். சொல்.''

''கோயிலில் செய்கின்ற வேலையில் பிரச்சினை வருகிறபோது என்ன செய்து பிரச்சினையைத் தீர்க்கலாம் என்று உங்களிடம் வருவார்கள். நீங்கள் இப்பொழுது போலவே குழந்தைபோல விழித்து, தெரியவில்லையே யோசிக்கிறேன் என்று ஓரம் போய்விட வேண்டும். யோசிப்பதுபோல் நடிக்க வேண்டும். ஆனால், பிரச்சினை என்ன என்பதைப் புரிந்துகொண்டு அதன் முடிவை வெளியே சொல்ல தாமதப்படுத்த வேண்டும்.''

''நான் அப்படிச் செய்வதில்லை சீருடையாள். பிரச்சினையி னுடைய முடிவு தெரிந்ததும், குதித்துக் கொண்டு ஓடிப்போய் சொல்லிவிடுகிறேன்.''

''யாரிடம்.''

''குஞ்சமரமல்லரிடம்''

''அது தான் தவறு. அதைத்தான் அவர் உபயோகப் படுத்திக் கொள்கிறார். சரி, நானும் அப்படித்தான் யோசித்தேன் என்று சொல்லி, உங்களை விலக்கி, தான் போய் தன்னுடைய தீர்வாகச் சொல்லி வருகிறார்.''

''ஆரம்பத்தில் இது சிரமமாக இருந்தது. பிறகு பழகிவிட்டேன்.''

''அது உங்கள் நல்ல குணம். குஞ்சரமல்லர் செய்வது திருட்டுத் தனம். உண்மையைச் சொல்லுங்கள். இப்போது என்ன பிரச்சினை வரும். கோயிலின் விமானம் பற்றிப் பிரச்சினை வருமா?''

''இல்லை. வராது சீருடையாள். ஏனென்றால் அந்தக் கணக்குக ளெல்லாம் தீர்மானமாக எழுதப்பட்டு, ஓலைகளாக அடுக்கப் பட்ட மாதிரி வரைபடங்கள் உள்ளது. நானில்லையெனினும், குஞ்சரமல்லர் இல்லையெனினும் அவை செய்து முடிக்கப்படும்.''

''உச்சியிலே க்ரீவம் அமைப்பது பற்றியும், உருண்டைக்கல் வைப்பது பற்றியும் நீங்கள் கவலைப்பட்டுக் கொண்டிருந்தீர்கள்..''



''அதுபற்றியும் குறிப்புகள் எழுதப்பட்டுவிட்டன. உருண்டைக் கல் வருவதும், அறுப்பதும் எப்படி என்பதும் பலருக்கும் சொல்லப் பட்டுவிட்டன. என்னிடம் உதவியாளனாக இருப்பவன் கூட அதைக் கோடு கிழித்து அறுத்து எடுத்துவிடுவான்.''

''அப்படியானால் இந்தக்கோயில் கட்டி முடிப்பதில் எந்தப் பிரச்சினையும் வராதா.''

குணவன் யோசித்தான்.

''வரும்''

''என்ன''

''மூலபாணலிங்கம் நல்ல உயரத்தில் செய்யப் பட்டிருக்கிறது. அந்தப் பாணலிங்கத்தை ஸ்தாபித்து அதைச்சுற்றி இதுவரை எங்கே யும் இல்லாதபடிக்கு எட்டுத்துண்டுகளாக இருக்கின்ற ஆவுடை யாரை பாணலிங்கத்தின் நெருக்கமாக இணைக்க வேண்டும். ஆவு டையார் பிதுங்கிக்கொண்டு இருக்கக்கூடாது. பாணலிங்கத்தைத் தாங்குமாறும் இருக்கவேண்டும். பெரிய பாணலிங்கமாக இருந்தால் ஒரு ஆவுடையார் குடைந்து மாட்டிவிடலாம். மிகப் பிரமாண்டமான பாணலிங்கமாக இருப்பதால் ஆவுடையாரைச் செய்வதில் சிரமங்கள் இருக்கின்றன.

ஒரே கல்லாகச் செய்யாமல் துண்டு துண்டாகச் செய்திருக் கிறோம். இது என்னுடைய யுக்தி. ஆனால், இதை மாட்டுகிற பொழுது பிரச்சினைகள் வரலாம். ஏனெனில் அடியில் பத்மம் எழுப்பி, பத்மத்தின் மீது ஆவுடையாரை நிலைநிறுத்த வேண்டும். எட்டுத் துண்டுகளாக உள்ள ஆவுடையார் சிக்கலான விஷயம். சாந்து பூசி நிற்க வைப்பது கடவுளின் செயல். மனித எத்தனத்தை மீறிய விஷயம்.''

''ஆஹா.. இதுதான் குணவன் நித்தவினோதப் பெருந்தச்சன். எல்லாமும் செய்துவிட்டு இது கடவுள் செயல். அவனுடைய கருணை என்று சொல்லுகிற புத்தி உங்களுக்கு இருக்கிறது. இந்த அமைதி. இந்தப் பணிவு இருந்தால் போதும். செயற்கரிய காரியங்கள் நிறைய நீங்கள் செய்வீர்கள். இம்மாதிரி பிரச்சினை வருகிறபோது. சில நாட்கள் நீங்கள் அந்தப் பிரச்சினைக்குண்டான தீர்வைத் தாமதப்படுத்துங்கள். குஞ்சரமல்லர் ஏதேனும் சொல்வார் என்று அவரை இழுத்துவிடுங்கள். அவர் சொல்கிறாரா என்று பார்ப்போம்.''

''சொல்லிவிட்டால்...''

''பெருந்தச்சர் இதற்கு தீர்வு சொல்வது சாதாரணமானது தானே. சொல்லவில்லையென்றால்...''

அவள் தொடர்ந்து கேட்டாள்.

''என்னிடம்தான் அந்தப் பிரச்சினை வரும். சக்ரவர்த்தி முதற்கொண்டு சகலரும் என் முகத்தைத்தான் பார்ப்பார்கள்.''

''என்ன பிரச்சினை வரும்.''

''சாந்துப் பிரச்சினை சாந்து இறுகுகின்ற பிரச்சினை. வெறும் ஆவுடையாரை நிலைநிறுத்தி இறுக்குவதே பெரிய காரியம். எட்டுத் துண்டுகளாக இருக்கின்ற ஆவுடையாரை இணைத்து வைப்பதே மிகப்பெரிய கஷ்டம். சாந்து அரைப்பதில் தான் மிகப்பெரிய சூட்சுமம் இருக்கிறது.''

''சாந்தை யார் அரைப்பார்கள்.''

''அதற்கென்று ஆட்கள் இருக்கிறார்கள். ஆனால், சாந்து மட்டுமே முக்கியமல்ல. எட்டுக் கல்லையும் மிக இணைப்பாக இறக்கி வைப்பது. பிறகு சாந்தில் அழுத்துவது. இறுக்கக் கட்டுவது.''

''அதில் என்ன பிரச்சினைகள் வரக்கூடும்.''

அவள் புருவம் சுருக்கிக் கேட்டாள்.

''பாணலிங்கம் நிற்பதேகூட பிரச்சினை ஆகலாமோ என்ற பயம் இப்பொழுது இருக்கிறது.''

''ஏன்.''

''இந்தச் செம்மண் இறுக்கமானது. ஆனால், குழிதோண்டி பாணம் இறக்கிவிட்டால் அந்த இடம் மற்ற இடத்தைக் காட்டிலும் தளர்வாகப் போய் விடுகிறது. சுற்றியுள்ள இடங்கள் இறுக்கமாக வும், பாணம் இறக்கிய இடம் தளர்வாகவும் இருப்பது நல்லதல்ல. ஏகப்பட்ட மருந்து கொட்ட வேண்டியிருக்கும். உண்மையைச் சொல்லப்போனால் ஒன்றரை ஆள் உயரத்திற்கு மணங்கு மணங் காய் மருந்து காய்ச்சிக் காய்ச்சி கலந்து கலந்து ஊற்ற வேண்டியது.

பாணம் இறங்கிய கால் நாழிகையில் மருந்து மொத்தமும் கொட்டி இறுக்கியாக வேண்டும். இந்த வேலையை மிக மிகத் துரிதமாகச் செய்ய வேண்டும். சற்று தாமதமானாலும், சாந்து சரியாக குழையா விட்டாலும், எட்டுத் துண்டுகளாய் நேர்த்தியாய் இணையாது போனாலும், சிவலிங்க சொரூபம் சற்றுக் கோணலாக இருக்கும். பாணலிங்கம் ஆடினால் அது நல்லதல்ல.''



''பயமுறுத்துகிறீர்கள். இது நன்கு வரவேண்டுமென்று நான் இறைவனை வேண்டிக்கொள்கிறேன். எனக்கென்னமோ இதன்மூலம் உங்கள் சிறப்பு வெளிவரும் என்று தோன்றுகிறது.''

''வெளிவந்த பிறகு நான் எப்படி நடந்து கொள்ளவேண்டும்.''

''இது உண்மையான கேள்வி. நானில்லை. என் ஈசன் செயல், என் சிவனின் கருணை என்று அமைதியாக இருந்துவிட வேண்டும்.''

''பெருந்தச்சரின் சாமர்த்தியம் என்று சொல்லலாமல்லவா.''

''இல்லை. அந்தச் சொல்லைத் தவிர்த்துவிட வேண்டும்.''

''குஞ்சரமல்லர் எதிர்பார்ப்பார். நான் அவரைக் கொண்டாட வேண்டுமென்று அடிக்கடி நினைக்கிறார்.''

''அதனாலேயே தவிர்த்துவிடுங்கள்.''

''உமையாள் என் பொருட்டு எவ்வளவு வேகமாக, எவ்வளவு கூர்மையாகச் சிந்திக்கிறாய்.''

''ஐயனே நீ எனக்குக் கிடைத்தது அதிசயம். இவ்வளவு பிரியம் என் மீது படர்ந்தது பூர்வஜென்ம புண்ணியம். எனக்கு என்ன குறை வைத்திருக்கிறீர்கள். வரும் பொழுதெல்லாம் நகைகளோ டும், ஆடைகளோடும் தானே வருகிறீர்கள். இப்பொழுதான் மரப் பெட்டிகளிலிருந்து எடுத்து எண்ணினேன். கிட்டத்தட்ட நூறு புடவைகள் வாங்கிக் கொடுத்திருக்கிறீர்கள்.

என்னையே என் தோழிகள் பொறாமையோடு பார்ப்பது என்னுடைய புடவைகளுக்காகத்தான், நான் நாட்டியத்தில் தலைக் கோலி. ஆனால், இங்கு பல தலைக்கோலிகள் இருக்கிறார்கள். விதம்விதமான நடனம் ஆடுபவர்கள் இருக்கிறார்கள். ஆனால், இவர்களிடமில்லாத புடவையெல்லாம் என்னிடம் இருக்கிறது. என் புடவையைக் கடன் வாங்கிக் கொண்டு போய் கட்டுகிற வர்கள் ஏராளம். அதனாலேயே எனக்கு இங்கு மதிப்பும், மரியாதையும் இருக்கிறது. செல்வச் செழிப்போடு இருக்கிறேன் என்றால், உங்கள் அன்பு காரணம்.''

''இல்லை. இல்லை சீருடையாள். உன்னுடைய அன்புதான் என்னை மலர வைக்கிறது. என்னை உற்சாகமாக வேலை செய்ய வைக்கிறது சீருடையாள். எல்லா ஆண்களும் கலவிக்குப்பின் கண் சோர்ந்து தூங்கிவிடுவார்கள். நீ என்னைத் தொட்டுத் தழுவிய பின்னர், உன்னோடு நான் உல்லாசமாக கூடியபிறகு, நடுநிசியா யினும் எழுந்து உட்கார்ந்து கொள்கிறேன். நீ அயர்ந்து தூங்க நான்

உன் வீட்டுக் கூடத்தில் நடை பயில்கிறேன். அடுத்தது என்ன என்று சிந்திக்கிறேன். நான் சந்தோஷமாக இருக்கக் காரணம் நீ. உன் அன்பு. நீ வஞ்சனையின்றி வழங்குகின்ற இந்தச் சுகம்.''

அவள் உடம்பைத் தொட்டுக் காட்டினான். அவள் நாணப் பட்டாள்.

''நான் தன்யனானேன் ஸ்வாமி.'' என்று நாடக பாணியில் சொன்னாள். சிரித்தாள். இன்னும் நகர்ந்து அவனை இறுக்கிக் கொண்டாள். அவன் இதழ் தேடினாள். அவனும் அவளை மார்போடு தழுவிக் கொண்டு முத்தமிட்டான்.

அவள் அவனறியாமல் அவன் ஆடையை நெகிழ்த்தி தன்னுடை யதையும் நெகிழ வைத்தாள்.

அவள் வித்தை தெரிந்த பெண். அந்தப் பெண் பிரியமாகவும் இருப்பதால், அந்த ஆண் குணவன் நித்தவினோதப் பெருந்தச்சன் எல்லையில்லா சுகத்தில் திளைத்தான். கலவியலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும்போதே, அவன் மனதிற்குள் சாந்து அரைப்பது பற்றி கணக்குகள் ஓடின.

தஞ்சையின் எல்லையில், காவிரி ஆற்றின் கரையில் சீடர் களோடு அமர்ந்திருந்த கருவூர்த்தேவர் வாய் விட்டுச் சிரித்தார்.

ராஜராஜிக்கு தளிச்சேரியில் வீடுகள் ஒதுக்கப்பட்டாலும், அந்த வீட்டை தளிச்சேரிப் பெண்டுகள் நடனம் பயிலும் இடமாக மாற்றிவிட்டு, மேற்குத் திசையில் இரண்டு அடுக்காகக் கட்டப் பட்ட வெள்ளை மாளிகையில் ராஜராஜி அருண்மொழிப்பட்ட னோடு குடிபுகுந்தாள்.

தந்தையோடு தாய் இருக்க, தாயோடு தன் மனைவியருகே இரண்டு குழந்தையிருக்க, அருண் மொழிப்பட்டனுக்குத் தனியே ஒரு இடம் தேவைப் பட்டது.

தன்னுடைய மெய்க்காவல் வீரர்களோடு பேசவும், அவனுக் கென்ற ஒற்றர்களோடு உரையாடவும், அரசாங்க ஓலைகள் சில வற்றை ரகசியமாக வைத்துக் கொள்ளவும், படை நடத்தக்கூடிய அளவுக்கு பொக்கிஷம் தயார் செய்து கொள்ளவும், அதைப் பாதுகாப்பாக வைக்கவும், அது குறித்த செலவுகளைச் சரியாக கணக்குப் பார்க்கவும் ஆட்கள் தேவைப்பட்டார்கள்.

பன்னிரண்டு வருடங்களாக அருண்மொழிப் பட்டனுக்கும், ராஜராஜிக்கும் ஸ்நேகம் இருந்தது. திருமணத்திற்கு நெருக்க மானான். ஆனால், தந்தைக்கு அது தெரிந்திருந்தும், நீ நமது



உறவுக்காரப் பெண்ணைத் திருமணம் செய்து கொள்வதுதான் சிறப்பு. அதுதான் மரியாதை. உனக்குப்பிறகு உன்னுடைய மகன் பிரம்மராயாக வரவேண்டுமென்றால் அனுக்கி சகவாசம் மட்டும் போதாது என்று அடிக்குரலில் மிக நிதானமாகச் சொல்ல, அவனுக்கு அந்தச்சூழல் புரிந்தது.

தனக்குப் பேரப்பிள்ளை என்பது அனுக்கியின் மகனாக இருக்கக்கூடாது என்பது பிரம்மராயரின் விருப்பம்.

ராஜராஜியிடம் இதைத் தெரிவித்தபோது அதுதானே நியாயம், இதை மறுத்தால் நமது உறவுகள் தடைசெய்யப்படும். நான் மிரட்டப்படுவேன். நீங்கள் கண்டிக்கப்படுவீர்கள். எதற்கு இந்தக் கூத்து, அடித்துக் கொள்ளவா காதலித்தோம். உங்கள் தந்தை சொல்வது சரி, ஆகவே, நான் இங்கு இருப்பதா, வேண்டாமா என்பதையும் அவரிடமே கேட்டுச் சொல்லுங்கள் என்று தெரி வித்தாள். அதைக்கேட்க அருண்மொழிப் பட்டனுக்குத் தயக்க மாக இருந்தது.

நான் இந்த அனுக்கியோடு உள்ள தொடர்பை மீண்டும் தொடர் வது குறித்து தந்தையிடம் எப்படிக் கேட்பது. சற்றுப் பயந்தான்.

அப்பொழுதெல்லாம் பிரம்மராயரைக் குறித்த பயம் அதிகமாக இருந்தது. போர் பற்றிய ஞானமும், நிர்வாகம் பற்றிய தெளிவும் அவனுக்குக் குறைவாக இருந்தன. ஒரு பயிற்சியாளனாக இருந்தானே தவிர, தெளிவான அதிகாரியாக மாறவில்லை. அதை ராஜராஜியும் புரிந்து வைத்திருந்தாள். அவர் தன்னைப்பற்றிக் கேட்க அச்சப்படுவதைக் கண்டு மெல்லிய வருத்தமிருந்தாலும், பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமென்ற தீவிரத்தில் இருந்தாள்.

பிரம்மராயர் அரண்மனையிலிருந்து திரும்புகின்ற வேளையில் காத்திருந்து, பல்லக்கில் வரும்போது சட்டென்று அருகே போய் நமஸ்கரித்து ஓலையை நீட்டினாள். அரைநாழிகை பேசவேண்டும் என்று அதில் எழுதியிருந்தது. அவள் பெயரையும் எழுதியிருந்தாள். பெயரைப் பார்த்ததும் அவருக்குத் தெரிந்து விட்டது. நேரடியாய் ராஜராஜியை சந்தித்ததில்லையென்றாலும் அவர் கூர்ந்து ராஜ ராஜியைக் கவனித்தார். யோசித்தார். மறுபடியும் பல்லக்கு அரண்மனைக்குத் திரும்பியது.

இது வீட்டில் வைத்துப் பேசப்படும் என்று நினைத்திருந்த வளுக்கு ஆச்சரியமாக இருந்தது. அரண்மனைக்குப் போனால் என்ன அர்த்தம். அரசரிடம் இதுபற்றிக் கேட்கப்படுமோ என்று மெல்லிய பயம் இருந்தது. ஆனாலும் வருவது வரட்டும் என்று

காத்திருந்தாள். அரைநாழிகையில் ஒரு பெண் அதிகாரிச்சி வந்து அவளை அரண்மனைக்குள் அழைத்துப் போனாள். அதுவரை யிலும் அரண்மனைக்குள் ராஜராஜி நுழைந்ததில்லை. நுழைந்து உள்ளே போய் இரண்டு தெருக்கள் கடந்து அரண்மனை போன்ற ஓர் இடத்தில் நின்றாள். அவளை வாசலுக்கு வந்து சேடி வர வேற்றாள். உள்ளே அழைத்துப் போனாள்.

உள்ளே குந்தவை, பிரம்மராயரோடு அமர்ந்திருக்க, இவள் போய் கதவோரம் நின்றாள்.

குந்தவை கைநீட்டி அழைக்க அருகே போய் பணிந்து எழுந்தாள். பிரம்மராயரையும் ஒருமுறை நமஸ்காரம் செய்தாள்.

''அவனுக்குத் திருமணம் நிச்சயம் செய்திருக்கிறார்களேயம்மா.''

குந்தவை எடுத்த எடுப்பில் பேச அவளுக்கு சற்றுத் திகைப்பாக இருந்தது.

சிலவினாடிகள் அமைதிக்குப் பிறகு, ''அதுதானே முறை. அப்படித்தானே செய்ய வேண்டும்.'' என்று பதில் சொல்ல குந்தவை மெல்லியதாய் விழி உயர்த்தினாள்.

''நல்லது. அவன் மனைவிக்கு உன்னுடைய இருப்பு பிடிக்க வில்லையென்றால்...''

''நான் விலகிவிடுவேன்.''

''அப்படி விலகுவதற்கு, இப்பொழுதே விலகி விடலாமே.''

''வாழ்ந்துவிட்டேனே. அதனால்தான் இந்த வாய்ப்பு நீடிக்காதா என்று இறைஞ்சுகின்றேன்.''

''இப்பொழுது இறைஞ்சுவாய். பிறகு எங்களை எள்ளி நகையாடுவாய்.''

பிரம்மராயர் உரத்த குரலில் பேசினார்.

அவள் அதற்கு மறுமொழி பேசவில்லை.

''பார் புகழும் பிரம்மராயரை ஒரு தேவரடியார் எப்படி எள்ளி நகையாட முடியும் என்று எனக்குத் தெரியவில்லை. நான் அருண் மொழிப்பட்டரை நேசிக்கிறேன். அவரோடு நெருக்கமாய் இருந்து வருகிறேன். என்னைக் காதலிப்பதாக அவர் பலமுறை சொல்லி யிருக்கிறார். அவர் காதலை நான் உணர்ந்திருக்கிறேன். நானும் அவரைக் காதலிக்கிறேன். மறைமுகமாகவோ, பலபேர் எதிர்ப் போடோ நான் செய்ய விரும்பவில்லை.



நான் தேவரடியார். பதியிலார். எனக்குக் கணவன் என்று எவரும் இல்லை. அதேசமயம் கணவர் என்று நாங்கள் ஒருவரை வரிக்கவும் முடியும். அவரோடு வாழவும் கூடும். ஒருவேளை அருண்மொழிப்பட்டன் என்னை வேண்டாமென்று புறந்தள்ளி விட்டால் நான் வேறொருவருக்குச் சொந்தமாவேன். ஆனால் அதில் எனக்கு விருப்பமில்லை.

அருண்மொழிப்பட்டனைப் போன்ற ஒரு அற்புதமான மனிதரோடு வாழ்ந்துவிட்டு இன்னொருவரை தீண்டுவதற்கு என் மனம் ஒப்பாது. அப்படி வாழ என் சமூகம் இடம் கொடுத்தாலும் என் மனம் இடம் கொடுக்காது. அதனாலேயே பிரம்மராயரின் காலில் விழுந்து என்னை வாழவிடுங்கள் என்று சொல்வதற்காகவே ஓலை கொடுத்தேன்.''

பிரம்மராயர் அமைதியாக இருந்தார். குந்தவையை உற்றுப் பார்த்தார். குந்தவை விலகிப் போகும்படி சைகை செய்தாள்.

அவள் விரைவாகக் கூடம்விட்டு வெளியே வந்து அந்த அரண்மனையின் படிகளில் அமர்ந்து கொண்டாள்.

பிரம்மராயர் வெளியே வருகிறார் என்ற குரல் எழுந்தது. பிரம்மராயர் அவளைக்கடந்து இறங்கினார். பல்லக்கில் ஏறினார் ஏறி பல்லக்குக் கிளம்பும்போது அவளை உற்றுப் பார்த்தார். பிறகு சாய்ந்து கொண்டார். ஒரு பதிலும் சொல்லாது போகிறாரே என்ற வருத்தம் இருந்தது. பின்னால் அதிகாரிச்சி அவள் தோள் தொட்டு குந்தவை அழைப்பதாகச் சொல்ல, விரைந்து குந்தவையிடம் போனாள். மறுபடியும் நமஸ்கரித்தாள்.

''எதற்கு அடிக்கடி நமஸ்கரிக்கிறாய். போதும் மிகப்பணி வானவள் போல் வேடம் போடாதே. உன்னைப்பற்றி பஞ்சவன் மாதேவியிடம் விசாரித்தேன். மிகத்துடுக்கான பெண். பெரிய அலட்டலான பெண். மிகக் கர்வமுடைய பெண். அதேசமயம் கூர்மையான புத்தியுடையவள். எவரையும் வசீகரிக்கின்ற வழி முறை தெரிந்தவள் என்றெல்லாம் சொல்கிறாள். அதனால் தான் பிரம்மராயருக்கு காதல் பொறுத்தமட்டில் சம்மதம் தெரிவிப்பது பயமாக இருக்கிறது.''

''இல்லையம்மா... நீங்கள் எந்த உத்தரவிடுகிறீர்களோ அப்படி இருக்கிறேன்.''

''ஹா... மறுபடியும் நாடகமா. போ என்று சொன்னவுடன் ஊரைவிட்டு ஓடிவிடுவாயா.''

"அப்படியொரு மனோநிலையில் நேற்றுவரை இல்லை... இன்று காலையிலிருந்து வந்துவிட்டது."

"என்ன."

"ஒருவேளை பிரம்மராயர் சம்மதிக்கவில்லை யென்றால், கூடவே கூடாது என்று கட்டளையிட்டு விட்டால், அடித்து உதைப்பேன் என்று ஆரம்பித்து விட்டால், வேறு இடத்திற்கு வெளியேறு என்று உத்தர விட்டு விட்டால் நான் என்ன செய்வேன் என்று யோசித்தேன்."

"என்ன செய்வாய்."

"உதறிவிட்டு ஓடிவிடுவேன்."

"ஹா.. வேறு ஆணைப் பிடித்துக் கொள்வாயா."

"இல்லை. நான் உதறிவிட்டு ஓடுவது என்பது என் உடம்பை விட்டு என் உயிர் ஓடும் என்பதைத்தான் குறிக்கிறது."

"நாயே.. என்ன திமிர் உனக்கு."

குந்தவை கோபத்தோடு பக்கத்திலிருந்த பாக்கு பாத்திரத்தை அவள் மீது வீசி ஏறிய, அந்த அடியை அவள் வாங்கிக் கொண்டாள்.

பாக்கு தரையில் சிதறியது. மெல்ல பாக்குகளை எடுத்து அந்தப் பாத்திரத்தில் போட்டாள். நாலைந்து பாக்குகள் குந்தவையின் காலடியில் இருந்தன. மெல்ல அவைகளையும் எடுத்து பாத்திரத்தில் போட்டுவிட்டு சட்டென்று குந்தவையின் பாதத்தைப் பிடித்துக் கொண்டாள். நமஸ்கரித்தாள். அழத் துவங்கினாள்.

குந்தவையின் கரம் முதுகை வருடியது தெரிந்தது. தோளை நிமிர்த்தியது. முகத்தை ஏந்தியது.

"என்னடி. என்ன அழுகை. எதற்கு கால்பிடித்து கதறுகிறாய். எதற்கு இந்த மாய்மாலம். நானும் பெண்தாண்டி. ஒரு பெண்ணின் மனம் எனக்குத் தெரியும். நீ அவனை எவ்வளவு உயிராய் காதலிக்கிறாய் என்பது உன்னுடைய இந்தத் துணிச்சலை வைத்துக் கொண்டே நான் எடைபோட்டு விடுவேன். இல்லையெனில் பிரம்மராயரிடம் ஓலை கொடுக்க எவளுக்குத் தைரியம் வரும். ஓலையைக் கிழித்துப்போட்டு இழுத்துப்போங்கள் இவளை என்று சொன்னால் உன்னுடைய கதி என்ன ஆகியிருக்கும். நல்லவேளை பிரம்மராயர் வேறு எங்கும் போகாமல் என்னிடம் வந்தார். உனக்கொன்று தெரியுமா."

"என்ன தாயே..."



கண்ணிலிருந்து நீர் வழிந்தபடி இருக்க. கைக்கூப்பியபடி கேட்டாள்.

"பிரம்மராயர் வருவதற்கு முன்பு அருண்மொழிப் பட்டன் வந்து, என் தகப்பனார் உங்களிடம் வந்து ஆலோசனை கேட்க லாம். எனக்கு உதவி செய்யுங்கள் என்று சொல்லிவிட்டுப் போய் விட்டான். அவனுக்கு உதவாமல் நான் வேறு என்ன செய்வேன். நான் பார்த்து வளர்ந்த பிள்ளையடி அவன். எங்கள் இராஜேந் திரனின் பிரம்மராயரல்லவா அவன். சோழ வம்சத்தின் அரச குலத்தின் பாதுகாவலன் அல்லவா அவன். அவனுடைய ஆரோக் கியத்திற்கு ஊறு விளைவிக்க முடியுமா.

நீ இல்லையெனில் அவன் நல்லபடி வளரமாட்டான் என்பது எனக்குத் தெரியும். பிரம்மராயருக்கும் தெரியம். இதை எளிதாகச் சம்மதித்தால் உன் தலையில் கொம்புகள் முளைத்துவிடும் என்பதும், தன் மருமகளுக்குத் தான் பதில் சொல்ல நேரும் என்ப தாலும் அவர் முறைத்துக் கொண்டு திரிகிறார். கொஞ்ச காலம் அவகாசம் கொடு. அதுவரை அமைதியா இரு.

அருண்மொழிப்பட்டன் இந்த விஷயத்தை வரும் மனைவி யிடம் சொல்லட்டும். அந்த வீட்டில் சண்டையோ, கூக்குரலோ ஓய்ந்து அடங்கட்டும். நிசும்பசூதனிக்குத் தினமும் விளக்கு போட்டுவா. எல்லாம் நல்லபடியாய் முடியும்.

அதுவரை அருண்மொழிப்பட்டனைப் பார்க்க வேண்டாம். ஒன்றை ஞாபகம் வைத்துக்கொள். உன்னுடைய புத்திசாலித்தனம், உன்னுடைய அன்பு, உன்னுடைய ஆற்றல் அனைத்தும் சோழகுலத்தின் மேன்மைக்காகத்தான் இருக்க வேண்டுமே தவிர, இதைச் சிதறடித்து விடக்கூடாது. அருண்மொழி சோழ குலத்தின் ஒரு தூண் ஞாபகம் வைத்துக்கொள்."

"சரியம்மா..." என்று விழுந்து வணங்கினாள்.

"அம்மா, அந்தப் பாக்கும் அந்தப் பாக்கின் பாத்திரத்தையும் எடுத்துக் கொள்ளட்டுமா." பணிவாகக் கேட்டாள்.

"இது எதற்கடி." குந்தவை வியந்தாள்.

"உங்கள் ஞாபகமாக இருக்க. உங்களை ஓவியமாய் எழுதி கும் பிடுவதற்குப் பதில் இதை வைத்துப் பார்த்துக் கொண்டிருப்பேன்."

கொஞ்ச காலம் போனதே தெரியவில்லை. குந்தவை கொடுத்த வாக்குறுதியா அல்லது காளிகோயிலில் பசுநெய் விளக்கு ஏற்றியதாலா, ஒருவேளை உணவு மட்டும் உண்டு. உபவாசம்

இருந்ததாலா அல்லது முந்திய வினைப்பயனா? தெரியவில்லை. மாறிப் மாறி போகாமல் இருந்தால் சரி என்று அருண்மொழிப் பட்டனின் மனைவி சொல்லிவிட்டாளாம்.

அருண்மொழிப்பட்டன் ஓடிவந்து பதினோரு வருடங்களுக்கு முன்பு இதைச் சொன்னபோது திருவாரூர் தளிச்சேரியே குதூகல மடைந்தது.

அம்மா அழுதாள். சித்தி அரற்றினாள். மற்ற பெண்கள் ஓடிவந்து அணைத்துக் கொண்டார்கள்.

அன்று மாலையே தேவரடியாராக இருந்த நக்கன் திருவாரூர் பெரியதளி தலைக்கோலி சீருடையாள் தன் கழுத்தில் கட்டியிருந்த தங்க *காரையோடு கூடிய தங்கப் பொட்டைக்கழற்றி வைத்து விட்டு, தங்கக் காதோலையைச் சுருட்டி வலிக்க வலிக்க காது வளையத்தில் நுழைத்து காது பெருக்கி. கால் மெட்டியிட்டு, நெற்றி உச்சியில் திலகமிட்டு அருண்மொழிப்பட்டன் கொடுக்க தாம்பூலம் வாங்கி உண்டு. அவள் மடித்துக் கொடுக்க அவனும் உண்டு கணவன் மனைவியானார்கள்.

இனி அவள் வெறும் தேவரடியாரல்ல. சோழதேசத்தின் சேனாதிபதியான அமண்குடி கிராமத்தைச் சேர்ந்த கிருஷ்ணன் ராமனான பிரம்மராயரின் மூத்த மகனான உபதளபதி அருண் மொழிப்பட்டனின் அனுக்கி. அனுக்கி என்கிற வார்த்தைக்கு அனுக்கமானவள், ஸ்நேகமானவள் என்று அர்த்தம்.

அவள் தேவரடியார் குலத்தைச் சேர்ந்தவள். நித்ய சுமங்கலி. அதேசமயம் மனைவியாகவோ, பட்ட மகிஷியாகவோ, பதவி யேற்க முடியாத வெறும் ஸ்நேகிதி. இது மிகச்சாதாரணமான உறவு முறைதான். அருண்மொழிப்பட்டன் அவளை உள்ளங்கையில் வைத்துத் தாங்குவான் என்ற மற்ற பெண்களுக்குத் தெரிந்திருந்தது. நம் குடிக்கு அது நல்லது என்று மற்ற மூத்த பெண்கள் சொல்ல, மத்திம வயதுப் பெண்கள் ஆதரிக்க, இளைய பெண்கள் பொறாமையோடு அவளைப் பார்த்தார்கள்.

இதோ பதினோரு வருடமாயிற்று. தெளிவும், திடமும் கொண்டவன். மிகுந்த புத்திசாலி. முன் யோசனை உடையவன். அரசனின் நம்பிக்கையைப் பெற்றவன். அரசியல் நன்கு தெரிந்தவன். மனிதர்களை எடைபோடுவதில் வல்லவன். பெரும் படை நடத்தி போர் செய்து மீண்டவன். போரில் சாகசங்கள் செய்தவன். அப்படியெல்லாம் செய்த பிறகும் குடித்து விட்டு

★ காரை என்பது ஒரு வகை நகை.



உளறாமல், பெரிய கொம்பு என்று அலட்டாமல், அந்தண குலத்தின் அமைதியோடு இருக்கிறவன்.

திருவாரூரிலிருந்து அவளைக் கொண்டு வந்து வெண்ணாற்றங் கரையில் வீடு பார்த்து குடியமர்த்தினான். அது அருண்மொழிப் பட்டனின் வீடு. அவர் அனுக்கியின் இல்லம் என்று தெளிவாக மற்றவருக்கு எடுத்துரைத்து, அந்த வீட்டிற்கு அருண்மொழி என்ற பெயரும் கற்பலகையில் பொறித்து வைத்திருந்தான். அருண் மொழி என்பது அரசர் பெயராக இருக்கிறதே என்று அவள் அச்சப் பட்டாள்.

"அதனால் என்ன. என் பெயரும் அதுதானே. எனக்கு அருண் மொழி என்று பெயர் வைத்ததும் அவர்தானே. அந்தப் பெயரை என் வீட்டிற்கு வைக்காமல் வேறு எதற்கு வைப்பேன். அது மட்டுமல்ல ராஜராஜி, உனக்கொரு மரியாதை வேண்டுமென்றால் அந்த மதிப்போடு, மற்ற குலப்பெண்களோடு பேசிப்பழகி வரவேண்டுமென்றால், இம்மாதிரி சில வேலைகள் செய்வது உத்தமம்.

இந்த வீட்டு வாயிலைக் காவல் காக்க ஒரு போர்வீரனும், ஒரு அதிகாரிச்சியும் உண்டு. எவருக்கும் நீ நேரடியாகப் பதில் சொல்ல வேண்டிய அவசியமில்லை. வாசலில் எழுந்து நின்று வரவேற்க வேண்டிய அவசியமில்லை. கோயில்களுக்கும், மற்ற விசேஷங் களுக்கும் என்னைக் கேட்காமலேயே நீ நன்கொடைகள் கொடுக் கலாம். எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை. அவ்விதம் கொடைகள் கொடுக்க இரண்டு மரப்பெட்டி நிறைய பொற் காசுகள் வைத்திருக்கிறேன். தகுதியுடையோருக்குத் தாராளமாகக் கொடு."

அவன் சொல்லிவிட்டுப் போக அவள் திகைத்தபடி உட்கார்ந் திருந்தாள்.

இரவு முழுவதும் சிவன் நாமம் சொன்னாள். அவனுக்கு உயிருக்கு உயிராய் இருந்தாள். அவனை உற்சாகப்படுத்தவே பாட்டுப்பாடினாள். ஆட்டம் ஆடினாள். உணவு பரிமாறினாள். அவன் போர் முனைக்குப் போகும்போது அவளும் குதிரை ஏறி ஒரு குறிப்பிட்ட தூரம்வரை அவன் பின்னே தொடர்ந்து போனாள். போருக்குப் போய் வந்ததும் அந்தப் போர்பற்றிய அனுபவங்களை அவனிடம் பலநூறு கேள்விகள் கேட்டுப் புரிந்து கொள்வாள்.

ஒருமுறை அவன் வாளை எடுத்து இடதுகை முழங்கையை கீறிக்கொண்டாள். கத்தியைக் கீழே போட்டுவிட்டு அலறினாள்.

அவன் சீறி சினந்து அவள் கைக்குக் கட்டுப் போட்டான்.

கீறினால் எவ்வளவு வலிக்கும் என்பதற்காக கீறிக்கொண்டேன் என்றாள்.

அங்கு சக்ரவர்த்தியும், மற்றவர்களும் காட்டிய வீர சாகசங்களை விளக்க விளக்க பூரித்துப்போவாள்.

இந்தமுறை சாளுக்கியப் போர் பற்றி அவன் விவரித்துச் சொல்ல, அவளுக்கு சட்டென்று ஒரு எண்ணம் தோன்றியது.

இராஜராஜரை வைத்து ஒரு நாட்டிய நாடகம் எழுதினால் என்ன என்ற எண்ணம் எழுந்தது.

இதை அவனிடம் சொல்ல, அவன் எழுந்து உட்கார்ந்தான்.

''அற்புதமான எண்ணம். நிச்சயமாகச் செய்யப்பட வேண்டும். உன்னால் முடியுமா. வெறும் நாடகம் எழுதுவாயா அல்லது நடித்துக் காட்டுவாயா.'' என்று கேட்க, அவள் தன் எண்ணங்களை விளக்கினாள்.

''நாற்பது பேர் கொண்ட நாட்டிய நாடகமாக அது அமையும்.'' என்று விளக்கினாள்.

அவன் திகைத்தவாறு கேட்டான்.

நல்லநாள் பார்த்து கணேச துதி எழுதிப் பாடினாள். பிறகு சிவன் நாமம் சொன்னாள். விஷ்ணுவை வணங்கினாள். கிரகதேவதைகளுக்கு நன்றி சொன்னாள். தேவர்களை, ரிஷிகளை வந்தனம் செய்தாள். ஊரின் அரசனை, அவன் மனைவியை வணங்கி எழுந்தாள்.

குழலும் வாத்தியமும் தொந்தரவாக இருந்தால் மன்னித்து விடுங்கள் என்று பித்ருக்களிடம் மன்னிப்புக் கேட்டாள். சபைக்கு வந்தனம் சொன்னாள்.

உற்சாகமாக, ''நான் உங்களுக்கு ஒரு கதை சொல்லப் போகிறேன்.'' என்று துள்ளுகின்ற பாடலாக எழுதினாள். அவன் வந்ததும் பாடிக் காண்பித்தாள்.

அவன் திகைத்துப் போனான்.

அவள் முகத்தை கையில் ஏந்திக் கொண்டான்.



''பெரிதாகச் செய். விரைவாகச் செய். முழுமையாகச் செய். அரசரைப்பற்றிய அத்தனை விவரங்களையும் நான் சொல்கிறேன். இந்த நாட்டிய நாடகத்தில் அரசராக யார் நடிப்பது.''

யோசித்தாள்.

''யோசிக்காதே நீயே செய்.''

''சக்ரவர்த்தி உடையாரைவிட நான் ஒரு பிடிகுள்ளம்.''

''அதனாலென்ன கொண்டையை உயரத்தூக்கிக் கட்டி அதன்மீது மயில் பீலியை வைத்து, கிரீடமும் வைத்தால் உயரமாகக் காட்டும். அதற்குத் தனித்த கேயுரங்கள் போட்டுக் கொண்டால் அகலமாகக் காட்டும். நான் சொல்லித் தருகிறேன். அரசர் எப்படி நிற்பார் தெரியுமா. அரசர் எப்படி நடப்பார் தெரியுமா. அரசர் எப்படி பார்ப்பார் தெரியுமா. அரசர் எப்படி சிரிப்பார் தெரியுமா.''

அவன் சொல்லிக் கொடுத்தான்.

ராஜராஜி அப்படியே பிரதிபலித்தாள்.

அவள் எழுதிய அந்த நாட்டிய நாடகத்தை கற்றுக் கொள்வதற்காக நாற்பது பெண்கள் வருகிறார்கள். அவர்களுக்கு வேண்டிய பயிற்சிகளைத் தர, அவளுடைய உயிர் ஸ்நேகிதி மழலைச்சிலம்பும், ஸ்ரீ கண்டியும் வந்திருக்கிறார்கள்.

பெண்களைத் தேர்வு செய்ய இன்று அவள் முடிவு செய்தாள்.

கரியமாணிக்கம் என்கிற தேவரடியாரும் ஓவியன் சீராளன் மனைவி உமையும் நிர்வாக ஒத்துழைப்புத் தருவதாகச் சொன்னார்கள்.

பவழக்குன்று, பொற்கோயில், தில்லை அழகி, எச்சுமண்டை, ரவிகுலமாணிக்கம், ராமி, பூமி, பூதி, பொன், உமை, கலி, தேவி, பாவை, கரிய திருவடி, பெரிய அரவம், எடுத்த பாதம், தில்லைக் கூத்தி, வெண்நாவல், இலவம், காமகோடி, இந்நிலவஞ்சி, கரண விச்சாத்ரி, ஆச்சம், ஐயாறு என்று பெண்களை கரியமாணிக்கம் தேர்ந்தெடுத்து வந்திருந்தாள். இவர்கள் எல்லோரும் நாட்டியத்தில் வல்லவர்கள் என்று சொன்னார்கள்.

அந்த வீட்டினுள்ளே ஐம்பதுக்கும் மேற்பட்ட பெண்கள் புகுந்து, சிரிப்பும் பாட்டுமாக இருப்பது கண்டு, அந்தப் பக்கத்தில் வாழும் இளைஞர்கள் வந்தார்கள். இப்படிப் பெண்களைத் தேர்ந்தெடுக்கிற செய்தி ஊரிலுள்ள பலபேருக்குச் சொல்லப் பட்டது. மறவர்கள் குதிரையேறி வந்து அந்த வீட்டு வாசலில் வந்து

எட்டிப்பார்த்தார்கள். வெறுமே குறுக்கும் நெடுக்குமாகப் போய் வந்தார்கள்.

வாசலில் ஆண்கள் கூட்டம் அதிகமிருக்கிறது என்று மழலைச் சிலம்பு கவலையோடு சொல்ல, வீட்டின் மேல் பகுதியிலிருந்து எட்டிப்பார்த்த ராஜராஜி கவலையானாள்.

இத்தனை ஆண்கள் வீட்டு வாசலில் நிற்பது நல்லதல்லவே. போகச் சொல்லலாமே அல்லது பொறுத்திருக்கலாமா. போகச் சொன்னால் என்ன ஆகும்.

யோசித்தான்.

இது நல்ல நேரமல்ல. பிரச்சினைகள் அதிகமாக இருக்கும் நேரம்.

யார் நீ என்னை போகச் சொல்லுவதற்கு என்று எவரேனும் சொல்லிவிட்டால், அதற்குப் பதில் சொல்லியாக வேண்டும். கடுமையாக நடந்து கொள்ள வேண்டியிருக்கும். அது இப் போதைக்கு நல்லதல்ல. நிற்கட்டும். பிறகு பார்த்துக் கொள்வோம். ஆனால், செய்தி பரவிப்பரவி அந்தத் தெருமுழுவதும் ஆண்கள் நிறைந்தார்கள். அந்த வீட்டின் எதிரே நின்றபடி அந்த வீடுபற்றி. வீடு பார்த்து கிசுகிசுப்பாய்ப் பேசிக் கொண்டிருந்தார்கள். உள்ளே பெண்களின் சிரிப்பொலி பெரிதாய்க் கேட்க, அவர்கள் பதிலுக்குக் கூக்குரலிட்டார்கள். அந்த ஆண்களிடையே வெறி கலந்த ஒரு சந்தோஷம் சட்டென்று பற்றிக்கொண்டது.

''வெளியே வந்து ஒரு ஆட்டம் போடுங்களடி.'' என்று யோரோ ஒருவர் கூவ மறுபடியும் ஆண்கள் கூட்டம் சிரித்தது.

மழலைச் சிலம்பு கவலைப்பட்டாள்.

வெளியே போய் பேசவேண்டும் என்பது தெள்ளத் தெளிவாய் ராஜராஜிக்குத் தெரிந்தது.

சீருடையாள் தாளம் சொல்வதில் வல்லவள். அவளை வரச் சொன்னேன். இன்னும் காணோம் என்று கரியமாணிக்கம் சொல்ல, அந்தத் தெருவின் மூலையில் சீருடையாள் நடந்து வந்தாள்.

அவள் தாயும், தங்கையும் உடன் வந்தார்கள். சீருடையாளுக்கு அந்த ஆண்கள் கூட்டம் வழி விட்டது. தொலைவிலிருந்த ஒருவன், ''அவள் நித்த வினோதப் பெருந்தச்சன் என்று அழைக்கப்படுகின்ற குணவனின் அனுக்கி.'' என்று சொன்னான்.



கூட்டத்தில் சில மறவர்கள் மிகக் கூர்மையாகவும் பொறாமை யோடும் மெல்லிய ஆத்திரத்தோடும் அவளைப் பார்த்தார்கள்.

கைகளை மறித்துக்கொண்டு இரண்டு இளைஞர்கள் நிற்க நகருங்களடா என்று சீருடையாள் அதட்டினாள். அந்த இளை ஞர்கள் விலகினார்கள். அவள் உள்ளே போய் தடேரென்று கதவு சாத்தினாள். வாசலிலுள்ள ஆண்கள் முகத்தில் கதவு அறைவது போல் தோன்றியது.

அவர்கள் ஆத்திரப்பட்டார்கள். என்ன செய்வது என்று தெரியாமல் உள்ளுக்குள் அலைபாய்ந்தார்கள்.

எப்போது வேண்டுமென்றாலும் தீப்பிடித்துக் கொள்ளும் என்கிற நிலையில் அந்த ஆண்களின் கோபக்கொழுந்தும், பெண்களின் அந்த சலசலப்பும் அருகருகே இருந்தன.

இந்த விஷயம் அருண்மொழிப்பட்டனுக்கும் சொல்லப்பட்டது.

## 171

பசுக்கள் வடக்கேயிருந்து மந்தையாக தெற்கு நோக்கி ஓட்டப்பட்டன. அவை ராஜராஜியின் வீட்டு வாசல் வழியாக புல்வெளி நோக்கித் துரத்தப்பட்டன.

ஜனங்கள் அங்கு அதிகம் இருப்பதைக் கண்டு பசுக்கள் மிரண்டன. போவதா, வேண்டாமா என்று தயங்கி நின்றன. நின்றவைகளை அதட்டி விரட்ட வேகமாய் ஓடின. வேகமாய் ஓடிய பசுக்களைக் கண்டு ஜனக் கூட்டம் சிதறி விலகியது.

''டேய்.. மெல்ல ஓடிப்போடா.''

ஒரு மறவன் இடையனைப் பார்த்துக் கூவ, இடையன் பதிலுக்குக் கத்த, மறவன் முன்னேறி அவனை அடிப்பதற்காக கை ஓங்கினான். மற்றவர்கள் சமாதானப்படுத்தினார்கள்.

பசுக்களை மறித்துக்கொண்டு போகின்ற இடையனுக்குக் கோபம் வந்தது. வேண்டுமென்றே அங்கு பசுக்களை நிறுத்தி தாமதம் செய்தான்.

மற்றவர்கள், குரல் கொடுத்து உடனடியாக அப்புறப்படுத்தச் சொன்னார்கள். ஆனால், அந்த இடையன் நீங்கள் சொல்லுவதற் கெல்லாம் நான் ஒன்றும் கட்டுப்படமாட்டேன். நான் நினைத்த படிதான் போவேன் என்று அலட்சியாக நடந்தான்.

இம்மாதிரி பல இடங்களில், பல்வேறு சந்தர்ப்பங்களில் பொது மக்களுக்கும், மறவர்களுக்குமிடையே பிணக்குகள் அதிகரித்தன.

போர் செய்யப் போகாமல், போர் செய்வதற்குத் திறமை இல்லாதவர்கள் கூட செய்தவர்கள் போல அலட்டிக் கொண்டார்கள். வெற்றிலைப்பாக்கு மடித்துக் கொடுத்த அடைப்பக் காரனெல்லாம் வீரனாகி விட்டான் என்று பொதுமக்கள் உரத்த குரலில் இழிவுபடுத்தும் அளவுக்கு அதிகம் அலட்டிக் கொண்டார்கள். ஆனால், யார் போருக்குப் போய் வந்தாலும் அப்படிப் பட்ட மனோநிலையில்தான் இருப்பார்கள். வேகமும், வெறியும் அவர்களிடம் தூக்கலாகத்தான் இருக்கும். அடி, குத்தி, கொல்லு, உதை என்று வெகுநாள் கத்திக் கொண்டு அலைந்த பழக்கத்தின் காரணமாக வீட்டிற்குள்ளும், வெளியேயும் அதேவிதமான மனோநிலையில் குரல் கொடுத்தார்கள்.

எல்லா தேசத்திலும் போர் வீரர்களுக்கு ஏற்படுகின்ற பிரச்சினை தான் இது. போரற்ற காலங்களில் மறவர்கள் விவசாயத்தைத்தான் முக்கியமாக எடுத்துக் கொள்வார்கள் நிலத்தில் இறங்கி, உழுது, பயிர் பண்ணி, மரம் வெட்டி, மாடு பிடித்து என்று பல்வேறு கடுமையாக வேலைகளை எளிதாக நிறைவேற்றுவார்கள். ஆனால், போருக்குச் சென்று வந்த மறவர்களுக்கு இப்படி விவசாயத்தில் இறங்க விருப்பமிருக்காது.

உங்களுக்காக உயிரைத் துச்சமென நினைத்து போர் முனைக்குப் போய் வந்திருக்கிறேன். பலபேரை வெட்டி நானும் அங்கங்கே காயம்பட்டு வந்திருக்கிறேன். நீங்கள் எனக்காக உழைக்க வேண்டாமா. என்னுடைய உணவை நீங்கள் தயார் செய்ய வேண்டாமா என்று மற்றவரை எதிர்பார்க்கின்ற குணம் மறவருக்கு வந்து விடும். ஊரிலுள்ள எல்லாரையும் விட தான் உயர்த்தி என்கிற இறுமாப்பு தோன்றிவிடும். அந்த இறுமாப்பின் காரணமாக அதிகாரம் தூள் பறக்கும். ஆசைகள் அளவு கடக்கும். வார்த்தைகள் அத்துமீறும்.

"ஆஹா... வெங்கலப்பானை மாதிரி இருக்கேப்பா."

உரத்த குரலில் பெண்களைக் கேலி செய்வார்கள். யார் அது என்று கண்ணியம் பார்க்க மாட்டார்கள். அது மரணம் பார்த்து வந்த தவிப்பில் ஏற்பட்ட மனப்பிறழ்ச்சி. மரணம் பார்த்ததால் ஏற்பட்ட ஒருவிதமான கோபம். என்ன வாழ்க்கை இது என்கிற அலுப்பு.



உலகத்தில் அத்தனை பேரும் வெகுசுகமாய் வாழ்ந்திருக்க, மறவன் மட்டுமே கல்லிலும், முள்ளிலும், காட்டிலும், மேட்டிலும் நடந்து உயிரைத் துச்சமாக மதித்து அடியும், உதையும் வாங்கி ரணப்பட்டு வருகிறான். அந்த மறவனுக்குண்டான மரியாதை இந்த உலகம் ஒரு போதும் தருவதில்லை என்கிற வெறுப்பு.

வீரம் என்பது தனித்தனியாக இருப்பதைக் காட்டிலும் ஒட்டு மொத்தமாக இருக்கிறபோது போட்டி போட்டுக்கொண்டு பொங்குகிறது. அந்த வீரம் சமூக நீதிகளுக்கு உட்பட்ட பொது இடங்களில் கிளறும் பொழுது முட்டாள்தனமான கலவரமாகிறது.

ராஜராஜியின் வீட்டு வாசலில் மறவன் என்கிற போதையோடு இருந்த மத்திம வயது படைவீரர்களின் நடவடிக்கைகள் அத்துமீறின.

"எப்படி இருக்காளுங்கய்யா... கொப்புங்குலையுமா.. பார்க்கும் போதே இப்படி தளும்பதே, ஆடினா."

ஒரு நாற்பது அகவை முடிந்தவன் ஆத்திரத்தோடு கேட்டான்.

அவன் பேச்சில் காமம் வழிந்தது. மற்றவர்கள் மீதும் படர்ந்தது.

குழுவாக இருப்பதால் பேச்சுக் குதூகலங்கள் அதிகரித்தன.

"நீ வெங்கலப்பானைன்னு சொன்ன. இதோபார் கள்ளுப் பானையே போகுது பார்."

கொஞ்சம் குண்டாக இருக்கிற பெண்ணைப் பார்த்து ஒருவன் சுட்டிக்காட்டி உரத்த குரலில் பேசினான். அது அந்தப் பெண்ணின் காதிலும் விழுந்தது.

தேவரடியாரான அந்தப் பெண் முகம் வெளிறினாள். மான் போல மிரண்டாள். அந்த மிரட்சி அவர்களுக்கு மேலும் குதூகலத்தைக் கொடுத்தது.

அவன் அவள் அருகே போய் "பெயர் என்னா" என்று கேட்டான். எந்த ஊர் தேவரடியார் என்று உரக்க வினவினான்.

ஆடுகிற பெண்கள் என்கின்றபோது அவர்கள் எல்லோரும் சொந்தம் என்று ஒரு எண்ணம் ஏற்பட்டு விட்டது. உடல் குலுங்க பலபேர் முன்னிலையில் ஆடுகிறாள் அல்லவா. மற்றதற்கும் வந்தாலென்ன என்கிற எண்ணம் ஏற்பட்டது. ஆனால் சோழ தேசத்தில் தேவரடியார்களை இத்தனை இழிவாக யாரும் நடத்தியதில்லை. தேவரடியார்கள் அதிகம் இருக்கின்ற திருவாரூரிலும், ஆயிரம் தளியிலும், குடந்தையிலும் அவர்கள் மிக மரியாதையாக நடத்தப்பட்டார்கள்.

வீடுகளில் நடக்கும் மங்கல விழாக்களுக்கு அவர்கள் முதன்மை யாக அழைக்கப்பட்டார்கள். குறிப்பாய் வீட்டிலுள்ள பெண் குழந்தைகள் ருதுவாகும் போது அந்தப் பெண் குழந்தைகளை ஆறுதல்படுத்த, உடலின் இயல்பு சொல்ல, திருமணத்தின்போது மணப்பெண்ணுக்கு ரகசியமாக கூடல்பற்றி அறிவிக்க, தாயும் மகளும் பேச முடியாத விஷயங்களைத் தெளிவான முறையில் தெரிவிக்க, இந்த தளிச்சேரி பெண்கள் கூட்டம் மிகப்பெரிய உதவி செய்தது. வீட்டுப் பெண்கள் இந்தத் தளிச்சேரி பெண்களை மிக உயர்வாகப் போற்றினார்கள். உங்களால் அல்லவா என் வாழ்க்கை மலர்ந்தது என்று நன்றியோடு இருந்தார்கள்.

வீட்டுப் பெண்கள் நன்றியோடு நினைத்துக் கொள்வதால், அந்தத் தேவரடியார் பெண்களுக்கு ஆண்களும் மரியாதை செய்தார்கள். அவர்கள் உள்ளே நுழைய எழுந்து நின்றார்கள். வணக்கம் கூறி வரவேற்றார்கள். அவர்கள் வீட்டிற்குள் கூட்டமாக நுழைகிறபோது ஒதுங்கிக் கொண்டார்கள். அவர்களின் வாழ்க் கைக்கு மிகப்பெரிய பாதுகாப்பாக விளங்கினார்கள்.

ஒரு சமூகத்தில் தேவரடியார்கள் என்பது மாவிலைத் தோரணம் போல. விசேஷ காலங்களில் மாவிலைத் தோரணங்கள் மிக முக்கியமானவை. மிக ரம்மியமானவை. வீட்டின் முகப்பில் அவைகள் கம்பீரமாகத் தொங்கவிடப்படும். மாவிலைத் தோரணம் இல்லாமல் எந்தப் பண்டிகையும் நடைபெறாது ஆனால், கொள்ளையடித்துப் பெரும் பொருள்களோடும், அன்னிய தேசத்துப் பெண்களோடும் ஊர் திரும்பிய மறவர்கூட்டம், சொந்த தேசத்துப் பெண்களையும் தாறுமாறாகத்தான் நடத்தியது.

ஒரு மத்திய வயது வீரன் அந்தப் பெண்ணை மடக்கி ஊரும் பேரும் கேட்டதும் அவள் நடுங்கிக் கொண்டு பதில் சொன்னாள்.

இவன் மிகப்பெரிய காரியம் சாதித்ததுபோல திரும்பவந்து நண்பர்களோடு கலந்து கொண்டான். அவனைப் பார்த்து அந்தக் கூட்டம் கூச்சலிட்டது. அந்தக் கூச்சல் பாராட்டாக இருந்தது. இன்னும் பல பேரை அவ்விதமே செய்ய வேண்டும் என்று தோன்றியது.

''உள்ள யாராவது ஆம்பளைகள் இருக்காங்களா''

யாரோ ஒருவன் அர்த்தமின்றிக் கேட்டான்.

''இல்லையாம். உன்னைதான் கூப்பிடுதாகளாம்.''

அந்த வீரன் சொல்ல மற்றவர்கள் வாய்விட்டுச் சிரித்தார்கள்.



''அங்கேபோய் பார்த்துடுவோம்.''

ஒருவன் வேட்டியை உதறிக்கட்டி எழுந்திருந்தான்.

எப்படிப் பார்ப்பான் என்கிற எண்ணம் எல்லோருக்கும் ஏற்பட்டது.

அவன் நேரே அந்த மாளிகையின் வாசலுக்குப் போனான். உள் பக்கத்து ஜன்னலை எட்டிப் பார்த்தான். அதிலிருந்து மேல் பக்கத்து வளைவில் தாவி ஏறினான். அதில் கை ஊன்றி மேலெழும்பினான். அடுத்த ஜன்னலை எட்டிப் பிடித்தான். அங்கிருந்து ஏறி பலகணி களின் வழியாக உள்ளே எட்டிப்பார்த்தான். அங்கிருந்து உப்பரி கையைத் தாவிப்பிடித்துக் கொண்டான். ''உள்ள போ... உள்ள போ...'' என்று பலரும் கத்தினார்கள். ஆனால், அவனுக்குப் பயமாக இருந்தது.

உப்பரிகைகளுக்குள்ளே உட்கார்ந்திருந்த மூன்று பெண்கள் பயந்து போய் எழுந்திருந்தார்கள். அவன் பின் வாங்கினான். உள்ளே அவர்கள் கூச்சலுடன் ஓடினார்கள்.

இறங்குவதா, அங்கேயே இருப்பதா என்று தடுமாறினான். மெல்ல மறுபடியும் பலகனிப்பக்கம் வந்தான்.

ராஜராஜி ஓடிவந்து உப்பரிகையில் எட்டிப் பார்த்தாள்.

''இறங்கடா, இறங்கு. ஏன் ஏறிக் கொண்டிருக்கிறாய் குரங்கே.'' என்று உரக்கக் கத்தினாள்.

மறவர் கூட்டம் ஆர்ப்பரித்தது. ராஜராஜி அவர்களை முறைத்துப் பார்த்தாள். கூட்டம் அமைதியாகியது.

''ஏன் இங்கு நிற்கிறீர்கள். போங்கள். உடனே போங்கள்.''

வாயிற்புரத்துக் காவல்காரனைக் காணவில்லை. அவன் பெயர் சொல்லி அழைத்தாள்.

அவன் பெயர் சொல்லி அழைத்ததும் இரண்டு, மூன்று பேர் முன்னே வந்து அம்மா ஏன் அழைத்தீர்கள் என்று போலியான பணிவு காட்டினார்கள்.

கூட்டம் அதற்கும் சிரித்தது. ராஜராஜி நெருப்பானாள். சரசரவென்று படிகளில் இறங்கி வீட்டு வாசலுக்கு வந்தாள்.

''என்ன நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள். யார் நீங்கள், சோழ தேசத்து மறவர்களா. இல்லை சாளுக்கிய தேசத்து சழக்கர்களா? கலைந்து போங்கள். பெண்கள் வீட்டு முன்பு பேடிகள் போல் நின்று கொண்டிருக்கிறீர்களே.'' உரக்கக் கத்தினாள். பலபேர் நகர்ந்தார்கள் வேடிக்கை பார்க்க வந்த பல பேர் கலைந்தார்கள்

ஆனால் கேலி செய்யலாம் என்று நினைத்தவர்கள் அப்படியே நின்றார்கள். எந்தப் பதிலும் சொல்லாமல் அதே நேரம் கலையவும் கலையாமல் அவர்கள் திடமாக நிற்பதைப் பார்த்து ராஜராஜிக்குக் கோபம் வந்தது.

''தேவரடியார்கள் என்றால் இளக்காரமாகப் போயிற்றா. உன் வீட்டுவாசல் முன்னாலும் நான்கு ஆண்களை நிறுத்தி வைக்கிறேன். உன் வீட்டுப் பெண்களை வாசலில் நிற்கவைத்து அரிசி புடைக்கச் சொல். உலக்கையால் நெல்குத்தச் சொல்'' என்று ராஜராஜி சொல்ல, அந்தக் காட்சிகள் அவர்கள் மனதில் படமாக விரிந்தன.

''அப்போது நீயும் இளித்துக் கொண்டு நிற்பாயல்லவா.'' என்று மறுபடியும் அவள் குத்திக்காட்டியபோது மெல்லக் கோபம் வந்தது.

அருண்மொழியின் அனுக்கியாக இருந்தால், என்ன இது அடாத பேச்சல்லவா என்று உள்ளுக்குள் குமுறியது.

''நாங்கள் என்ன செய்து விட்டோம். இங்கு நின்று கொண்டிருக்கிறோம் அவ்வளவுதானே. சோழ தேசத்தில் எந்த இடத்தில் நிற்க வேண்டும். எந்த இடத்தில் நிற்கக்கூடாது என்றெல்லாம் சட்டமில்லை.''

''என் வீட்டு வாசலில் முன்பு நிற்பாய், இளிப்பாய், பேசுவாய், மலஜலம் கழிப்பாய். நான் பொறுத்துக் கொள்ள வேண்டுமா?''

மறுபடியும் ராஜராஜி நெருப்பு கக்கினாள்.

சோழதேசத்து வீரர்கள் பன்றிகள் போல ஆகிவிட்டார்கள் என்று இன்னொரு வாக்கியம் சொன்னாள்.

அவர்களின் கோபம் அதிகரித்தது. நரம்புகள் புடைத்தன. முறைத்து ராஜராஜியைப் பார்த்தார்கள். ஆனால், அதே வேகத்தில் ராஜராஜி பதிலுக்கு முறைத்தாள்.

''நீ யார். நீ எந்தப்படை உன் பெயரென்ன. சொல். மீசை முளைத்த ஆண்மகனாக இருந்தால், ஒரு தகப்பனுக்குப் பிறந்தவனாக இருந்தால் சொல்.'' என்று அவள் விரல் நீட்டி சத்தம் போட, ''அட.. சும்மாயிரம்மா.''

அவள் நீட்டிய கையை அவன் தட்டிவிட்டான்.

ராஜராஜி சற்று நிலைகுலைந்தாள்.

சட்டென்று இடுப்புப் புடவையை வழித்துக் கொண்டு கை தட்டி விட்டவன் தொடையில் ஓங்கி மிதித்தாள்.



அவன் மல்லாக்க விழுந்தான். ஏய்... என்று நான்கு பேர் கத்தினார்கள். அதேவேகத்தில் ஏய் என்று ராஜராஜியும் கத்தினாள்.

சச்சரவுக்குப் பயந்த வேறு சில வீரர்கள் கை கூப்பினார்கள்.

''அம்மா, தயவு செய்து உள்ளே போங்கள். நாங்கள் இவர்களை அப்புறப்படுத்துகிறோம்.''

''நீ ஏன் நின்று கொண்டிருக்கிறாய். நீ முதலில் வெளியே போ. இந்த இடத்தில் உனக்கு என்ன வேலை.''

அவரைப் பார்த்து வேகமாக ராஜராஜி சீறினாள்.

''ஆஹா... போகிறேன் அம்மா. நீங்களெல்லாம் நின்று ரசித்து விட்டு வாருங்களடா. நாங்கள் போகிறோம்.''

ஒரு பத்து வீரர்கள் வெளியேறினார்கள்.

உரக்கக் குரல் கொடுத்தவர்களும், மடக்கிப் பெண்ணை நிறுத்தியவர்களும் சாளரத்தில் ஏறியவனும் அங்கேயே நிற்க, அவர்களைச் சுற்றி இன்னும் முப்பது பேர்கள் இருந்தார்கள்.

என்னதான் நடக்கிறது பார்த்து விடுவோமே என்றபடி இரண்டுங்கெட்டான் மனநிலையில் இருந்தார்கள். அங்கு பலபேருக்கு நேற்று குடித்த மதுவின் வேகம் இன்னமும் இருந்தது. சரியாகச் சிந்திக்க முடியாமல் போயிற்று.

நித்தவினோதப் பெருந்தச்சன் குணவனின் அனுக்கி சீருடையாளுக்கு ராஜராஜியின் கோபம் சற்றுக் கலவரமாக இருந்தது. ஆண்கள் எவரும் இல்லாத நேரத்தில் முப்பது மறவர்களுக்கு நடுவே இவர் நின்று கை உயர்த்துகிறாரே... காலால் எட்டி உதைக்கிறாரே... அவர்கள் பதிலுக்குப் பாய்ந்துவிட்டால் என்னாகும் பாய்ந்த மறவருக்கு பிற்பாடு என்ன தண்டனை கொடுத்தாலும் பாய்ந்தது பாய்ந்ததல்லவா. இது அருண்மொழிக்குக் கேவலமல்லவா. அருண்மொழிக்கும், ராஜராஜிக்கும் உண்டான அற்புதமான உறவு சிதிலப்பட்டுப் போகுமே. மறவர்கள் பாய்ந்து விடுவார்களோ என்று கலவரப்பட்டாள்.

மெல்ல ராஜராஜியிடம் போய் தோளில் கை வைத்து, ''போதும், பாதுகாப்பு வந்தவுடன் வரலாம் என்று காதோரம் சொன்னாள்.

மெல்ல அவளை அணைத்துக் கொண்டு இழுத்துக் கொண்டு போனாள்.

''வெட்டி எறிந்துவிடுவேன் நாய்களா.'' என்று ராஜராஜி கத்த அந்த மறவர்கள் கோபமாய் பல் கடித்தார்கள்.

சீருடையாள் மிகவேகமாக ராஜராஜியைக் கூட்டி கொண்டு போய் படியில் ஏற்றினாள். மறுபடியும் திரும்பி வந்து தோட்டக் கதவைச் சார்த்தினாள்.

ஒரு வீரன் வேகமாக முன்னேறி என்ன செய்வது என்று தெரியாமல் ராஜராஜியைத் தண்டிக்கும் விதமாக அந்த தோட்டக் கதவை எட்டி உதைத்தான்.

தோட்டக்கதவை உதைத்தவன் கடந்த மூன்று நாட்களாக பகலும், இரவும் குடித்துக் கொண்டிருந்தவன். மதுவின் போதை உடம்பு முழுவதும் ததும்பி நின்றது. அவனுக்கு என்ன செய்கிறோம் என்று தெரியவே இல்லை. மேலைச்சாளுக்கியத்தில் படையெடுத்து வீடுவீடாக எட்டி உதைத்ததே அவன் கால்களில், கைகளில், நெஞ்சினில் நினைவாக இருந்தது.

அவன் இளவரசர் இராஜேந்திரர் படையைச் சேர்ந்தவன். மேலை சாளுக்கியத்தில் ஒரு சுவரையும் நிற்க வொட்டாது இடித்து நகர்த்தும்படி அவனுக்குக் கட்டளையிடப்பட்டிருந்தது. அந்தக் கட்டளையை வெகுதிறமையாய் அவன் நிறைவேற்றினான். அவன் எரியூட்டிய வீடுகள் அனேகம். அவன் பிரம்பால் அடித்த முதியோர்களும், பெண்களும் பலநூறு பேர். கூட்டமாகப் போய் ஒரு தேசத்திலுள்ள கிழவர்களையும், பெண்டுகளையும் அடித்து நொறுக்கிவிட்டு வந்த ஆவேசம் அவன் புத்தியில் ஊறியிருந்தது.

மதுவின் போதையாலும், உடல் வலிவு மமதையாலும் அவன் தொடர்ந்து தளிச்சேரி பெண்களை இழிவுபடுத்தத் திட்டமிட்டான்.

பெட்டை குட்டிக்கு இத்தனை திமிர் இருக்குமானால், எனக்கு எவ்வளவு இருக்கும் என்று ஆக்ரோஷப்பட்டான். உண்மையான வீரர்கள் அமைதியை விரும்புவார்கள். அவர்களுக்கு தங்கள் தாக்குதலின் வேகம் என்ன என்று தெரியும். தாக்கப்பட்டவர்களுடைய வலி தெரியும். உண்மையான வீரன் செய்துவிட்டு வருத்தப்படுகிறவன் அல்லன். தவிக்கவிட்டுத் துக்கப்படுகிறவன் அல்லன்.

நல்ல வீரனிடம் கருணைதான் அடிப்படையான விஷயமாக இருக்கும். கனிவுதான் ஆணிவேராக இருக்கும். தன்னால் எதையும் சாதிக்க முடியும் என்கிற நம்பிக்கை இருப்பதால் எது சாதிக்கவும் அவன் வருத்தப்படுவதில்லை. தன்னைப் பற்றி அதிக சந்தேகம் உள்ளவர்களே வெகு வேகமாகத் தாக்கிவிடுகிறார்கள். பிறகு தடுமாறுகிறார்கள்.



ராஜராஜியின் வீட்டை எட்டி உதைத்து ஒருவன் உள்ளே நுழைவான் என்றால், அவன் எந்த அநியாயம் வேண்டுமானாலும் செய்ய முடியும் என்று சீருடையாளுக்குத் தோன்றியது. அரண்மனைக் கதவை, அரசனுடைய அந்தப்புரக் கதவைக்கூட எட்டி உதைக்க முடியும். இவன் போருக்குப் போய் வந்தவன் என்ற ஒரே காரணத்தினால் யாரை வேண்டுமானாலும் கடிக்கின்ற நாயாக மாறுகிறான் என்கிற ஆத்திரம் ஏற்பட்டது. நாய் வேடம் போட்டுக் குரைத்தால் அதற்கு பிரம்படி நிச்சயம் என்று அவள் பல்கடித்தாள்.

அருண்மொழிப்பட்டன் பல நேரங்களில் ராஜராஜிக்கு போர் வீரர்களுடைய குணாதிசயங்களை வேடிக்கையாகவும், விவரமாகவும் சொல்லியிருக்கிறான். மிகுந்த வெறியோடு இருக்குமாறு அவர்களைத் தூண்டியும், பிறகு மிகுந்த விவேகத்தோடு நடந்து கொள்ள வேண்டுமென்று கட்டளையிட்டும், இரண்டு விதமான மனோநிலையில் அவர்களை அழுத்தித் தள்ளுவதால் பலபேருக்கு என்ன செய்வது, எப்படி செய்வது, எப்போது செய்வது என்ற தெளிவு இல்லாமல் போகிறது என்பதைச் சொல்லியிருக்கிறான்.

எட்டி உதைத்து உள்ளே வரும் வீரனை நிதானமாக்கி, உள்ளே வரவழைத்து, ஆசனம் போட்டு குடிக்க மோர் கொடுத்து கோபப்படாதீர்கள். உங்களுக்கு என்ன வேண்டும்.. நாட்டிய நாடகம் தானே நிச்சயம் பார்க்கலாம். நான் ஏற்பாடு செய்கிறேன். ஆனால், இப்போது தேர்வுதான் நடைபெறுகிறது. நாளை மறுநாள் நீங்கள் வரமுடியுமா என்று கேட்டால், அவன் நிச்சயமாக இளகிவிடுவான். தலையசைப்பான் மன்னிப்புக் கேட்டு திரும்பி விடுவான் என்ற எண்ணம் வேகமாக ராஜராஜிக்கு ஓடியது.

அமைதியாகித் திரும்பி அங்குள்ள ஜனங்கள் கலைந்ததும் பிறகு அருண்மொழியிடம் பக்குவமாக இப்படிக் கூட்டம் கூடுவது தவறு என்று சொல்லிக் கொள்ளலாம். படைவீரர்கள் காவலை அதிகரிக்கச் செய்யலாம்.

அருண்மொழி மகாகெட்டிக்காரர். அப்படியா, யார் அது, என்ன என்று எல்லா விவரங்களும் கேட்டுக் கொள்வார். மேல் பாடிக்கு ஒரு சிறுபடை உள்ளே போகவேண்டும் என்று சொல்லி அவனை அழைத்துக் கொண்டு மேல்பாடிக்குப் போய் ரகசிய ஓலை கொடுத்து மேல்பாடியிலிருந்து கங்கதேசத்திற்கு வறண்ட ஒரு பாலையில் அவனைக் காவலுக்குப் போட்டு விடுவார்.

நேரத்திற்கு உணவும், நீரும் கிடைப்பதுகூட பிரச்சினையாகி விடும். நான்கு நாட்களில் திரும்பி விடலாம் என்று அழைத்துப்

போய் நான்கு வருடங்கள் காயவைத்து விடுவார். ஈராயிரம் பல்லவரையர் படையில் போய் சேர்ந்து கொள் என்று அனுப்பி விட்டால், அங்கு நேரத்திற்கு உண்ண முடியாது. உறங்க முடியாது. ஒரு வார்த்தை எதிர்த்துப் பேசமுடியாது. குளிர் வாட்டி எடுக்கிற மலையில் பதினைந்து நாளும், வறண்ட வெயில் பகுதியில் பதினைந்து நாட்களும் இருக்க வைத்துத் தவிக்கவிடுவார். கதறடிப்பார்.

அந்த வீரனுக்குக் கெட்ட காலம்போலும். அவன் முகத்தை, அவன் உடம்பு அசைவுகளைக் கண்டுகொள்ள வேண்டும். மனதில் குறித்துக் கொள்ள வேண்டும் என்று ராஜராஜி மெல்லிய சிரிப் போடு தீர்மானம் செய்தாள். அவனை நோக்கி ஓரடி முன்னேறிய போது, சீருடையாள் வேறுவிதமாக யோசனை செய்தாள்.

குணவன் நித்தவினோதப் பெருந்தச்சனின் அனுக்கியாக இருப்பதில் அவளுக்கு மிகப்பெரிய மதிப்பு இருந்தது. குணவனுக்கு இன்னும் திருமணமாகவில்லை. அவன் இனத்துப் பெண்களைத் திருமணம் செய்து கொள்ளும் எண்ணத்திலேயே அவன் இல்லை. அதனாலேயே அரசாங்க அதிகாரிகளும், உபசேனாதிபதிகளும், தொண்டை நாட்டு அந்தணர்களும் அவளிடம் மரியாதையாக நடந்து கொண்டார்கள்.

இன்று மாலைக்குள் குணவனிடம் சில விஷயங்கள் பேச வேண்டுமம்மா. அவரிடம் சில ஓலை நறுக்குகளில் கையெழுத்து வாங்க வேண்டியிருக்கிறதம்மா. கணக்கு வழக்கு காட்ட வேண்டி யிருக்கிறதம்மா... தொண்டைநாட்டு அந்தணர்கள் கைகூப்பி மரியாதையாக விலகி நின்று பேசுவார்கள். சற்று இருங்கள் என்றால், அமரக்கூட முயற்சி செய்ய மாட்டார்கள். வெளியில் கால்கடுக்க நின்று கொண்டிருப்பார்கள். கால் கடுக்க நிற்கிறானே மோர், பானகம் ஏதாவது குடிக்கிறீர்களா என்று கேட்டால், தொண்டைநாட்டு அந்தணர்கள் எது கொடுத்தாலும் குடிக்கிறோம் என்று பிரியமாகப் பேசுவார்கள். சிறிய ஆச்சரியம் காட்டினால், அம்மா நாங்கள் நிர்வாகிகள், தஞ்சை அந்தணர்கள் போல அலட்டல்கள் எங்களுக்கு இல்லை. நீங்கள் பிரியமாக கொடுக் கிறீர்கள். பிரியத்தை வேண்டாமென்று எப்படிச் சொல்வது என்று இனிமையாகப் பேசுவார்கள்.

இதேபோல, அருண்மொழியோடும் அவர்கள் பேசுவது இன்னும் வேடிக்கையாக இருக்கும். அவர்கள் ஐயனாக இருந் தாலும் அருண்மொழியை ஐயன், ஐயன் என்று அழைப்பார்கள். ஐயன் பிரம்மராயர் என்று கிருஷ்ணன்ராமனைச் சொல்லுவார்கள்.



ஒவ்வொரு முறை சந்திக்கும்போதும், வயதில் இளையவர்கள் அருண்மொழியின் காலில் நீண்டு நெடுஞ்சாண் கிடையாய் விழுவார்கள். இந்த தஞ்சையில் சோற்றுக்கு இல்லாமல் செத்துப் போய் விடுவோம் என்று நாங்கள் நினைத்தபோது, எங்களைக் கை தூக்கி நிற்க வைத்தது நீங்களே. அருண்மொழி ஐயன் உங்களை நாங்கள் மறக்கவேமாட்டோம். எத்தனை அவசரமான பூஜையாக இருந்தாலும் அருண்மொழி ஐயனுக்காக பதினோரு காயத்ரி நித்தமும் சொல்ல வேண்டுமென்று எங்கள் நிர்வாகக் குழு கட்டளையிட்டிருக்கிறது. ஆயிரத்துக்கும் மேற்பட்ட அந்தணர்கள் தினமும் உங்களுக்காக பதினோரு முறை காயத்ரி ஜபம் செய் கிறார்கள். அது உங்களைக் காக்கும். வளப்படுத்தும். வாழ்வாங்கு வாழ்விக்கும் என்று உரத்த குரலில் சொல்வார்கள். அருண்மொழி கொடுக்கும் பரிசுப்பொருட்களை மறுப்பார்கள். ஐயன், நீங்கள் ஆசீர்வாதம் செய்யுங்கள். அதுபோதும் என்று மறுதலிப்பார்கள்.

தேவரடியார் பெண்களுக்கு தனித்தனியாக நெல்லும், காசும் பங்கு தருவது எங்கள் வேலையல்ல. அது பரஞ்சோதியின் வேலை. ஆனால், ஒட்டு மொத்தமாக தேவரடியார்களுக்கும் அவர்களைச் சார்ந்த கலைஞர்களுக்கும் நெல்லும், பொன் கழஞ்சும் பரஞ் சோதியிடம் கொண்டு போய் கொடுப்பது எங்கள் வேலை.

இம்முறை மிகச் சௌகரியமாக இருக்கிறது. ஐயன், தேவரடி யார்களிடம் நேரடியாக நாங்கள் பேசாதிருப்பதே சந்தோஷமாக இருக்கிறது. உங்கள் புத்திக் கூர்மைக்கு முன்னால் நாங்கள் வெறும் தூசு என்று சொல்லும்போது ராஜராஜி மிகப்பெரிய சந்தோஷ மடைவாள். அருண்மொழிப்பட்டன் அனுக்கி என்பதால் அருண் மொழிப்பட்டன் மிக மரியாதையாக வைத்திருக்கிறான் என்பதால் வணிகர்களும், மறவர்களும் குறிப்பாய் உபசேனாதிபதிகளும் அவளிடம் மிகப்பணிவாக இருப்பார்கள்.

ஒருமுறை சக்ரவர்த்தியின் அந்தப்புரத்து அதிகாரிச்சி ஒருவர் அனுமதியின்றி வேகமாகப் பேச படியேறி உள்ளே வந்துவிட்டார். அருண்மொழி இதைச் செவிமடுத்ததும், அவளை உடனடியாகக் கைது செய்து சிறைக் கோட்டத்திற்கு அனுப்பினான்.

“எந்த விசாரணையும் தேவையில்லை. தஞ்சை அரண்மனையில் இருக்க உனக்கு யோக்கியதை இல்லை. வல்லத்துக் கோட்டைக்குப் போ. வல்லத்து கோட்டையில் சிறிய தவறு செய்தாலும் உன்னை மதுரைக்கு அதிகாரிச்சியாக மாற்றுவேன்.'' என்று அருண்மொழி சொல்ல, அவள் நடுநடுங்கிப் போனாள்.

மறுமுறை அவள் ராஜராஜி காலில் விழுந்து மன்னிப்பு கேட்டு தன்னை அவ்விதம் மாற்றிவிட வேண்டாமென்று, கை பிடித்து கெஞ்சிக் கேட்டுக் கொண்டாள்.

தேவரடியார் என்றால் ஒரு சிரிப்பு, கேலி, குதூகலம் என்பது மெல்ல மெல்ல சமூகத்தில் குறைந்து கொண்டு வந்தது.

சீருடையாள் மாளிகை வாசலில் நின்றால், அந்த வழியே போகிறவர்கள் நின்று விசாரித்தார்கள். வணக்கம் சொல்லி தயங்கி நகர்ந்தார்கள். பெண்ணாய் பிறந்ததினுடைய பயனை சீருடையாள் முழுமையாக அனுபவித்தாள். எல்லாவற்றையும் விட கர்வம் மிகுந்த சிற்பிகள், இளைஞர்கள், முதியவர்கள் என்று பேதம் பாராது நித்த வினோதப் பெருந்தச்சன் மனைவியாகவே அவளை அங்கீகரித்தது, அவளுக்கு மிகப் பெரிய குதூகலத்தைக் கொடுத்தது.

சிற்பிகள் வீட்டுப் பெண்கள் சற்று அதிகம் புழங்காமல் போயினும் அது மிகப்பெரிய குறையாக சீருடையாளுக்குத் தெரியவில்லை.

எட்டாம் சிறகு ஆறாம் எண் வரைபடம் வாங்கி வரச் சொன்னார் என்று இளைஞர்கள் வரும்போது அடுக்கப்பட்டிருந்த வரைபடச் சுருளை எடுத்துக் கொடுப்பதும் சீருடையாள் வேலை. அப்படியே சுருளாகக் கொடுக்காமல் அதைப் பிரித்து அது என்ன, அது எதற்கு என்று கேட்டுக் கொடுப்பது அவள் வழக்கம். இப்படி வரைபடம் பார்த்துப் பார்த்து அந்தக் கோயில் தன்மைபற்றி சீருடையாளுக்குத் தெரிந்திருந்தது.

குணவன் எப்பொழுதேனும் நினைவு வராமல் திண்டாடும் போது அவள் சட்டென்று இதைத்தானே சொல்கிறீர்கள் என்று எடுத்துக் கொடுக்க, அவன் ஆச்சரியமாக அவளைப் பார்ப்பான். பாராட்டிப் பேசுவான். இதனாலும் அவள் கர்வம் பலப்பட்டிருந்தது.

அப்படிப்பட்ட சீருடையாள் ஒரு சாதாரண மறவன் எட்டி உதைத்து வீட்டிற்குள் நுழைவது பார்த்து பெரும் கோபம் கொண்டாள்.

ஒரு பாதுகாவலனாக இருப்பவன் சாய்த்து வைத்துவிட்டுப் போயிருந்த வேல் கம்பை ஓடிப்போய் எடுத்துக் கொண்டாள்.

இன்னும் ஒரு அடி உள்ளே நுழைந்தால் உன் நெஞ்சுக்கூடு பிளந்துவிடும் என்று ஈட்டியை மேலே தூக்கினாள்.



மறவன் கலவரமானான். பயந்தான். பின் வாங்கினான். முன்னேறினாள். திரும்புவது போல் நடிக்க தளர்வானாள். திரும்பிய இவன் சட்டென்று மறுபடியும் திரும்பி அவளை நோக்கி ஓடி வந்து தளர்ந்திருந்த அவள் வேல் கம்பை பிடித்து இழுத்தான். அவள் கையிலிருந்த வேல்கம்பு உருவிக்கொண்டு போயிற்று.

வேல் கம்பின் அடிமட்டையை முகத்திற்கு நேரே வீசினான். அவள் பின்வாங்கினாள்.

பெண்கள் பெரிதாய் கூச்சலிட்டார்கள். பளீரென்று தரையில் அடித்தான். பயந்து மீண்டும் அலறினார்கள்.

தன்மீது வேல் கம்போடு பாய்ந்த பெண்ணைத் தண்டிக்காமல் விடக்கூடாது என்று சொல்லி, வேல் கம்பை இறுக்கப் பிடித்து சீருடையாளின் நீண்ட தொடையில் பளிச்சென்று அடித்தான்.

சீருடையாள் வலியில் தவித்தாள். வாசலில் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த வீரர்கள் பலர் இது மிகப்பெரிய தவறு என்பதை உடனடியாகத் தெரிந்து கொண்டார்கள். வேகமாக அந்த இடம்விட்டு நீங்கினார்கள். இடதும், வலதுமாய் பல வீரர்கள் நகர்ந்து போக மீதி வெகுசிலரே நின்றிருந்தார்கள். அவர்களுக்கும் அந்த வீரன் செய்தது தவறு என்று தெரிந்திருந்தது.

சீருடையாள் யார் என்று தெரியவில்லை. எனினும் ஒரு தேவடியாரைத் தேவையில்லாமல் தொடையில் தாக்கினால் அது சாதாரணமாகப் போகாது. இந்தக் கால கட்டம் வேறு என்பது அவர்களுக்குப் புரிந்திருந்தது.

மறுபடியும் அடிக்கக் கை ஓங்கியபோது மீண்டும் பெண்கள் அலறினார்கள். சீருடையாளைச் சூழ்ந்து கொண்டார்கள். வெளியேயிருந்த வீரர்கள் பாய்ந்து ஓடிப்போய் அவனைத் தடுத்து நிறுத்தி அவன் கையிலிருந்த வேல் கம்பைப் பிடுங்கி தரையில் வீசினார்கள். அவனை இழுத்துக் கொண்டு போனார்கள். அவர்கள் இழுக்க அவன் அதிகம் திமிறினார்கள். பலகெட்ட வார்த்தைகளை இறைத்தான். தேவரடியார் பெண்கள் பயந்தார்கள். கோபமானார்கள்.

சீருடையாள் மயங்கி விழுந்தாள். இரண்டு மூன்று பெண்கள் நித்தவினோதப் பெருந்தச்சனிடம் சொல்ல தலைதெறிக்க ஓடினார்கள்.

அருண்மொழிக்கும் இரண்டு பேர் ஓடினார்கள். பஞ்சவன் மாதேவியிடம் சொல்லலாம் என்று நான்கு பேர் புறப்பட்டார்கள்.

தேவரடியார்களின் தலைவனாக இருக்கின்ற பரஞ்சோதியிடம் சொல்வதற்காக சிலர் வேறுபக்கம் போனார்கள்.

சிறுதேர் ஏறி குணவன் நித்தவினோதப் பெருந்தச்சனும் இன்னும் இரண்டு இளம் சிற்பிகளும் அந்த இடத்திற்கு முதன் முதலாக வந்தார்கள். தேரிலிருந்து இறங்காமல் வாசல் வழியாக படியில் சார்த்தி வைக்கப்பட்டிருந்த சீருடையாளை, தொலைவிலிருந்து குணவன் பார்த்தான்.

யாரது... யாரது அடித்தது... என்று மற்ற பெண்களிடம் வினவினான். அந்தப் பக்கமாகத்தான் போனான் என்று கை காட்ட, தேர் சட்டென்று திரும்பி அவர்கள் காட்டிய திசை நோக்கிப் போயிற்று.

தேவரடியார்கள் பெண்களின் நலத்திற்கு தலைமை ஏற்ற சாவூர்பரஞ்சோதி சீருடையாள் அடிபட்டாள் என்று கேட்டதும், பாதி உணவிலிருந்து கை உதறி எழுந்து உடனே தன் குதிரையின் மீது தாவி ஏறினான்.

''அந்த வீரன் எப்படியிருப்பான். பெயர் என்ன.'' என்று விவரங்கள் கேட்டுக்கொண்டான்.

அவர்கள் பெயர் தெரியாது என்று சொன்னார்கள். ஆனால் அங்க அடையாளங்களைத் தெளிவாகச் சொன்னார்கள்.

''உண்மையிலேயே அடித்துவிட்டானா அல்லது கை ஓங்கினானா.''

''இல்லை. பட்டையாய் ஒரு அடி தொடையில் விழுந்து விட்டது. அலறி கீழே விழுந்துவிட்டார்.'' என்று சொன்னதும் பரஞ்சோதிக்குக் கோபம் வந்தது.

மறவர்களில் பலர் நிதானமற்றவர்கள். கும்பலாக இருக்கிற போது அதிகம் அலட்டி வீரம் காட்டுகிறவர்கள்.

இது அவனுக்குத் தெரியும். பொது மக்களுக்கு நடுவே பெரிய முழக்கமாகப் பேசுகிறவர்களை அவன் அறிந்திருக்கிறான். ஆனால், பெண்டுகளை, குறிப்பாக தேவரடியார் பெண்டுகளை ஒருவன் படியேறி அடிக்கிறான் என்றால், அதுவும் அருண்மொழியின் அனுக்கியையும் இழிவாகப் பேசுகிறான் என்றால் இது மிகப்பெரிய தவறு. நிச்சயம் வெடிச்சுச் சிதறக்கூடிய ஒரு நிகழ்ச்சியாக இது வரும். அருண்மொழிப் பட்டனுக்கு இது தெரிந்தால் ரௌத்திரமாவார். இது இராஜராஜர் வரை போகும் விஷயம் என்பது அவருக்குப் புரிந்துவிட்டது.



என்ன காவல் காக்கிறாய் நீ. எதற்கு தேவரடியார் பெண்களுக்கு தலைமை ஏற்கிறாய் என்று பலரும் கேட்கக்கூடும். குறிப்பாய் பஞ்சவன்மாதேவி இகழ்ந்துரைக்கக்கூடும்.

சாவூர் பரஞ்சோதிக்கு நினைக்க நினைக்க கோபம் வந்தது.

அடித்தவன். யாரிடமிருந்தோ மொந்தையிலுள்ள கள்ளை வாங்கி விடமடமடவென்று குடித்தான்.

''கெட்ட வார்த்தை கொட்டினாள் அடிச்சேன். எவளாயிருந்தா எனக்கென்ன...'' என்று உரத்த குரலில் பேசி தடுமாறினான்.

சாவூர்பரஞ்சோதி குதிரையில் தெருமுனை திரும்புகிறபோது முன்னால் நடக்கிறவனையும், பெண்கள் சொன்ன அங்க அடையாளங்களையும் அவன் மனம் வேகமாகக் கணக்கிட்டது. இவனே அவன் என்ற முடிவுக்கு வந்தது.

சட்டென்று தன் முகத்தை தலைப்பாகை நுனியால் மறைத்துக் கொண்டான். குதிரையை ஒரு ஓரம் நிற்க வைத்து விட்டு எதிர்ப் பக்கம் போய் அங்குள்ள மரத்தடியில் வெகுநேரம் நிற்பவன்போல் நின்று கொண்டான்.

மிகுந்த தந்திரசாலிகளால்தான் அப்படி நகரமுடியும். அவனை அதிகம் ஆடாமல் இழுத்துப் போகின்ற வீரனை அவன் கைதட்டி அருகே அழைத்தான்.

''எதற்கு இப்படி ஓலம். என்ன செய்துவிட்டு வருகிறான்'' என்று முகமூடியைக் கழற்றாமல் கேட்டான்.

நிறைய மறவர்களுக்கு சாவூர்பரஞ்சோதியைத் தெரியவில்லை. யாரோ போர் வீரன் விசாரிக்கிறான் என்றுதான் அந்த வீரர்களுக்குத் தோன்றியது.

''பெரும்பாடாகி விட்டது தோழா. தேவையற்று அலம்பல் செய்கிறான். பெரிய இடத்துப் பெண்ணை அடித்துவிட்டான். என்ன கதிக்கு ஆளாகப் போகிறானோ என்று தெரியவில்லை. உடன் போர் செய்த மறவன் என்பதால் கைப்பிடியாய் அழைத்துப் போகிறேன்.''

''அந்தப் பெண்மணி ஏதேனும் தவறாகப் பேசியிருப்பாளோ'' என்று கேட்க, ''இல்லை. அத்துமீறி கதவு உதைத்து அவள் வீட்டிற்குள் நுழைந்தபோது, உள்ளே நுழைந்தால் கொன்றுவிடுவேன் என்று சொன்னாள்.''

''நியாயம்தானே. அடைத்த கதவை எட்டி உதைத்து நுழைவதற்கு இவனுக்கென்ன அதிகாரம். இவன் அடிப்பதை வேடிக்கையா பார்த்துக் கொண்டிருந்தீர்கள்.''

''கணநேரத்தில் நடந்துவிட்டது தோழா. இவன் அந்தப் பெண்பிள்ளையை அடிப்பான் என்றே நினைக்க வில்லை. யாரோ இப்பொழுதுதான் சொல்கிறார்கள். குணவனின் அனுக்கியாம். சீருடையாளாம்.''

பரஞ்சோதிக்குக் கோபம் வந்தது. மெல்ல முன்னேறினான். குடித்துவிட்டு ஆடும் வீரனின் தோள்பட்டையைத் திரும்பினான்.

''என்ன ஆட்டம் அதிகமாக இருக்கிறதே. முட்ட முட்டக் குடித்திருக்கிறாயா'' என்று கேட்டான்.

''ஆமாம். பல போர்கள் கண்ட மாவீரன். நான் முட்ட முட்டத் தான் குடித்திருக்கிறேன். முட்ட முட்டக் குடித்துவிட்டுத்தான் போருக்குப் போகிறேன். என்ன அதற்கு'' என்று பதிலுக்குச் சொன்னான்.

''போருக்கு குடித்துவிட்டுப் போ. ஆனால், பெண்டுகள் இருக்கிற வீட்டிற்குக் குடித்துவிட்டுப் போகிறவரை செருப்பால் அடிக்கச் சொல்லி உத்தரவு.''

''யார் உத்தரவு'' என்று பதிலுக்குக் கேட்டான்.

''தேவரடியார் பெண்களின் தலைமை சாவூர் பரஞ்சோதியின் உத்தரவு.''

''யாரது பரஞ்சோதி. எங்கிருக்கிறது சாவூர்.'' அந்த மறவன் ஏகத்தாளமாகக் கேட்டான்.

''நானே பரஞ்சோதி. நீ போகப் போவது சாவூர்.'' என்று சொல்லி முழுபலத்தோடு அவன் கன்னத்தில் அறைந்தான்.

அந்த வீரன் சுருண்டு விழுந்தான். விழுந்த கணத்தில் துள்ளியெழுந்து சாவூர் பரஞ்சோதியின் முழங்கால்களைப் பற்றியிழுத்தான்.

சாவூர் பரஞ்சோதி அந்தத் தாக்குதலை எதிர்பாத்திருக்கக்கூடும். பிடித்த காலை அழுந்த ஊன்றி மற்றொரு காலால் அவன் முகத்தை எட்டி உதைத்தான். அவன் நீண்ட அங்கியை இடுப்பிலுள்ள உடும்புத் தோல் சவுக்கு சுற்றிக் கொண்டிருந்தது. அதைச் சொடுக்கி அவிழ்த்தான். மிக வேகமாக அந்த வீரனை அடிக்கத் துவங்கினான். அடிப்பது யாரென்று தெரியாமல் தடுக்க வந்த இன்னொரு வீரனுக்கும் அடிவிழுந்தது. அவன் விலகி ஓடினான். குடித்த



வீரனின் தலைப்பாகையை இழுத்து, அவன் குடுமியை உதறி, அவன் தலைப் பாகையாலேயே அவன் கையைப் பின்னுக்குக் கட்டி அவனை எழுந்து நிற்க வைத்தான்.

மறுபடியும் முதுகில் அடித்தான்.

சாவூர் பரஞ்சோதி அந்த வீரனை மடக்கி நகர்த்திக் கொண்டு அகலுகையில் எதிரே குணவன் நித்தவினோதப் பெருந்தச்சன் தேர் வந்தது. அவர் குதிரையின் கடிவாளத்தை இழுத்து நிறுத்தி தேரைத் திருப்பினான். சட்டென்று இறங்கினான்.

இவனா... இவனா என் மனைவியை அடித்தது என்று அருகில் ஓடினான்.

குணவன் நித்தவினோதப் பெருந்தச்சனுக்கு சாவூர் பரஞ்சோதியைத் தெரிந்திருந்தது.

''என்ன பரஞ்சோதி. என்ன விதமான மேலாண்மை, என்ன விதமான காவல் இது. நீ எதற்கு தலைமையேற்கிறாய். என் மனைவியை எவனோ அடித்துப்புடைப்பான். நீ அதற்குப் பிறகு கைது செய்வாயா. பெண்டுகள் இருக்கும் வீடுகளில் காவல் இருக்காதா. காவல் காக்க தஞ்சையில் மறவர்கள் இல்லையா அல்லது காவல் காக்கின்ற மறவர்களே அத்து மீறுவார்கள் என்பதால் காவல் இல்லாமல் விட்டு விட்டீர்களா. இனி நாங்கள் காவல் காத்துக்கொள்ளட்டுமா.''

வேகமாகப் பேச, சாவூர் பரஞ்சோதி அவன் நெஞ்சில் கை வைத்து அமைதிப்படுத்தினான். ஆனால், அந்தக் கையை குணவன் நித்தவினோதப் பெருந்தச்சன் வேகமாகத் தட்டிவிட்டான். தொடையைப் பிடித்துக்கொண்டு சீருடையாள் முகம் முழுவதும் கண்ணீராய் அழுத காட்சி ஞாபகம் வந்தது. சட்டென்று திரும்பினான். பின்னங்கை கட்டிய வீரன் முகத்தில் ஓங்கிக் குத்தினான். எட்டி உதைத்தான். தரையில் தள்ளினான். மிதித்தான்.

சாவூர் பரஞ்சோதியின் சவுக்கை வாங்கி மீண்டும் விளாறத் துவங்கினான்.

ஒரேயொரு அடிக்கு நாற்பதடி என்று அந்த வீரன் உதை வாங்க வேண்டியிருந்தது. சுற்றியுள்ள மறவர்கள் என்ன செய்வது என்று தெரியாமல் திகைத்தார்கள்.

மேலைச்சாளுக்கியத்தில் எத்தனை பெண்டுகளை எத்தனை குழந்தைகளை, எத்தனை கிழவர்களை சவுக்காலும் பிரம்பாலும் விளாறியிருக்கிறோம். அப்பொழுதெல்லாம் எவரும் எதுவும்

கேட்கவில்லை. இப்பொழுது ஒரு தட்டு தட்டிவிட்டதற்காக இப்படி ரணப்படுத்துகிறார்களே என்ற ஆத்திரம் எல்லா மறவர்களுக்கும் இருந்தது. நேரம் காலம் என்கிற கணக்கு, எங்கு, எதைச் செய்ய வேண்டுமென்ற முறை அவர்களுக்குத் தப்பிப் போயிற்று.

சாவூர் பரஞ்சோதியின் அடி கணக்காக இருந்தது. ஆனால், குணவனின் அடி மிருகத்தனமாக ஆத்திரமாக இருந்தது. உதடு கிழிய வேண்டுமென்றே அவன் தாக்கினான். கீழே கிடந்தவனின் கைகளை மிதித்து இடுப்பில் உதைத்தான். அந்தப் போர்வீரனின் வலப்பக்க மூட்டு நெகிழ்ந்து போயிற்று.

வீணை ஆதிச்சனும் மிருதங்'கக் கலைஞர்களும், கட்டியம் கூறுபவருமாகப் பலபேர் ஓடிவந்தார்கள்.

"எந்தப்பாவி எங்கள் வீட்டுப் பெண்ணை அடித்தது. அவன் நல்ல தாய்க்குப் பிறந்தவனா. ஒரு தகப்பனுக்குப் பிறந்தவனா." என்றெல்லாம் வீணை ஆதிச்சன் உரத்த குரலில் பேச, மறவர்கள் பல் கடித்தார்கள்.

"போதும் நிறுத்தடா." என்று ஒரு மறவன் வீணை ஆதிச்சனை அதட்டச் சட்டென்று குணவன் திரும்பி அவன் முகத்தையும் தாக்கினான். ஏதோ ஒரு குற்ற உணர்வால் பீடிக்கப்பட்டிருந்த மறவர்கள் சற்றுப் பின் வாங்கினார்கள். இதனாலேயே அங்குள்ள மக்கள் அவர்களைத் தாக்கத் துவங்கினார்கள்.

மறவர்கள் பின் வாங்கியதால் மேலும் அடிக்கத் துவங்கினார்கள். மறவர்கள் ஓட முயற்சித்தபோது மடக்கி அடித்தார்கள். பதினேழு பேருக்கு ரத்தகாயம் ஏற்பட்டது. சாவூர் பரஞ்சோதி மிக வேகமாகச் செயல்பட்டு அவர்களை அதட்டி விலக்கினான்.

குணவனைத் தடுத்து நிறுத்தினான்.

வீட்டு வாசலில் செய்தி கிடைத்ததும் அருண்மொழிப்பட்டன் தான் போகலாமா அல்லது யாரையேனும் உபசேனாதிபதியை அனுப்பி வைக்கலாமா என்று யோசித்தான்.

கைது செய்து வரும்படி கட்டளையிட்டு இங்கு விசாரித்தால் என்ன என்ற எண்ணம் ஓடிற்று. ஆனால், தந்தையும், மனைவியும் இங்கு இருக்கையில் இந்த விசாரணை ருசிகரமாக இருக்காது என்று தீர்மானம் செய்து சட்டென்று அவன் குதிரையில் தாவி ஏறினான். வீட்டைவிட்டு வெளியேறும்போது யார் பக்கம் இருப்பது. மறவர் பக்கமா, சீருடையாள் பக்கமா. சீருடையாள்



சட்டென்று தூக்கியெறிந்து பேசக்கூடியவள்தான். மறவர்களிடம் சிலசயம் இது எதிர்மறையாய் போய்விடும். சீருடையாள் தாக்கப்பட்டாள் என்றதும் கோபம் வருகிறது. ஆனால் கோபம் வரக்கூடாது. அப்படியே சீருடையாள் என்ன வேகமாகப் பேசியிருந்தாலும் ஒரு மறவன் வேல் கம்பால் தாக்கினான் என்பது மிகமிக அதீதம். அவனை மாறுகால் மாறுகை வாங்க வேண்டும். ஆனால், நான் கோபப்படக்கூடாது. அந்த மறவனை அழைத்து ஏன் இப்படிச் செய்தீர் என்று நிதானமாக விசாரிக்க வேண்டும். விசாரணைக்கு உட்படுத்தும் வரை நீர் தனியே கொட்டியில் இரும் என்று யானைகள் நிற்கும் இடத்திலேயோ, குதிரைகள் நிற்கும் இடத்திலேயோ நிற்க வைத்து விடவேண்டும்.

அந்த வீரன்மீது தவறு இருப்பின் தஞ்சையில் இருக்க லாயக்கற்றவன் நீ என்று சொல்லி மேலைச் சாளுக்கியத்திற்கோ அல்லது கீழைச் சாளுக்கியத்திற்கோ அல்லது ஈழதேசத்திற்கோ பன்னிரண்டு வருடங்கள் அரசாங்க சேவை என்று அனுப்பி வைத்துவிட வேண்டும். கசையால் அடிப்பதை விட இது மிகக் கொடூரமாக காரியம். எல்லா இடத்திலும் அதிகாரிகளிடம் சொல்லி இவனை நாய்போல நடத்த வைக்க வேண்டும்.

மறவர்கள் அத்து மீறுகிறார்கள். அதிகம் ஆடுகிறார்கள் என்று பல பக்கத்திலிருந்தும் செய்திகள் வருகின்றன. ஆனால், அவர்களால் ஆடாமல் இருக்க முடியாது என்றும் தெரிகிறது. பழுவேட்டரையரும் மூவேந்த வேளாளரும், இராஜேந்திரரும்கூட இவர்களுடைய தவறுகளைப் பெரிதுபடுத்தாமல் அப்படித்தான் என்று விட்டுவிடலாம். அப்போது எதிர்ப்பது என்பது கடினமாகி விடும். அப்படி அவர்கள் ஆதரித்தால் மறவர்களுக்கு அதிகம் கர்வம் ஏற்படும்.

போர்முனையில் பேரவஸ்தைப்பட்டவனை, உயிர் கொடுக்கத் துணிந்தவனை, சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவர் துங்கபத்ரையில் இறங்க அவருக்கு முன்னே ஓடிப்போய் கரை யேறத் தவித்தவனை ஒரு பெண் பிள்ளையின் விஷயத்திற்காக தண்டிக்கக் கூடாது.

சீருடையாள், குணவன் நித்தவினோதப் பெருந்தச்சனின் அனுக்கி, ஆனால், இது சிற்பிகளுக்கும், மறவர்களுக்கும் உண்டான சண்டையாகப் போய்விடக்கூடாது. சிற்பிகளுக்கெதிரே மறவர்களைத் தண்டித்தால் சிற்பிகள் அதிகம் கர்வம் கொண்டு ஆடுவார்கள். மிகச் சோதனையான விஷயம்

இதே இடத்தில் பிரம்மராயர் கிருஷ்ணன்ராமன் இருந்தால் என்ன செய்திருப்பார். தந்தையருடைய வழி என்னவாக இருக்கும் என்று யோசித்துக் கொண்டே குதிரையை வேகமாகச் செலுத்திக் கொண்டே ராஜராஜியின் வீடு இருக்கும் தெருவுக்குள் நுழைய, எதிரே பெருங்கூட்டம் இருப்பதைப் பார்த்துத் திகைத்து, குதிரையின் கடிவாளம் இழுத்து நிறுத்தினான். சேணத்தில் கால் ஊன்றி நின்று என்ன நடக்கிறது என்று பார்த்தான். அவன் குதிரை மெல்ல அசைந்தது. பிறகு உறுதியாய் நின்றது.

குணவன் அந்த வீரனைத் தாக்கிக் கொண்டிருப்பதும், மற்றவர்கள் மடக்கிக் கொண்டிருப்பதும் தெரிந்தது.

''இது தவறு.. இது தவறு.. இது தவறு...''

உள்ளுக்குள்ளே அவன் கூச்சலிட்டான்.

குதிரையை வேகமாகச் செலுத்தினான். சிற்பிகளுக்காக சிறிதும் பணிந்து போகக்கூடாது என்று திடமாக நினைத்துக் கொண்டான். குதிரையை அருகே செலுத்தினான். குதிரையில் அமர்ந்தபடியே, ''என்னது இது. என்ன கூட்டம். யார் யாரை அடிக்கிறார்கள். நீ சிற்பி குணவன்தானே எதற்கு இந்த வீரனை அடிக்கிறாய். நகர்ந்து போ... விலகுங்கள் எல்லோரும்..'' சூழ்ந்து வந்த மெய்க்காவல் வீரர்கள் அவன் கட்டளையை எதிர்பார்க்காமல் சிற்பிகளையும், வீரர்களையும் வேகமாகப் பிரித்தார்கள்.

மூன்று அணியாக நிற்க வைத்தார்கள். சாவூர் பரஞ்சோதி அங்கே உயரமாக, திடமாக இருப்பதைப் பார்த்து அவன் பக்கம் திரும்பாமல், அவன் இருப்பதையே கவனிக்காமல், கவனிக்காதவன் போல, அருண்மொழி அடிபட்ட வீரனுக்கு அருகே போய் அவன் தலை நிமிர்த்திப் பார்த்தான்.

மிக வேகமாக அடித்திருக்கிறார்கள். கண்,காது, மூக்கு, வாய், நெஞ்சு என்று பல இடங்களில் சவுக்கடிகளும், குத்துகளும் விழுந்திருந்தன. நடக்க வொட்டாமல் இரண்டு வீரர்களின் தோளில் சாய்ந்து கொண்டு தள்ளாடினான்.

''இவனை அந்த ஓரத்தில் படுக்க வையும்.'' என்று மரநிழலைச் சுட்டிக்காட்டினான்.

அந்தப் பகுதியிலிருக்கும் வைத்தியர் உடனடியாக வந்தார்.

''யார் நீ... எந்தப்படை'' என்று அங்கிருக்கும் வீரனைச் சுட்டிக் கேட்டான்.



''சொல். யாரடா நீ.. எந்தப்படை. இவனை யார் அடித்தார்கள்.'' என்று அந்த வீரனை அதட்டிக் கேட்க அவன் குணவனைச் சுட்டிக்காட்டினான்.

''குணவன், எதற்காக இந்த வீரனை அடித்தீர்கள்.''

உடனடியாக விசாரணையில் இறங்கினான். குணவனை யாரும் குணவன் என்றோ, சிற்பி குணவன் என்றே சொல்வதில்லை. நித்த வினோதப் பெருந்தச்சர் என்ற அடைமொழியோடு தான் அழைத்தார்கள். ஆனால் அருண்மொழிக்கு அப்படி அழைக்க இஷ்டமில்லை.

அருண்மொழி மிகச்சாதுர்யமாக தன்னைப் புறக்கணிப்பதை சாவூர் பரஞ்சோதி புரிந்து கொண்டான். ஆயினும் என்ன நடக்கிறது பார்க்கலாம் என்று இன்னும் நகர்ந்து சுவரோரம் நகர்ந்து கை கட்டிக் கொண்டான். இது தன்னிடம் வரும்போது பார்த்துக் கொள்ளலாம் என்று அமைதியாக இருந்தான்.

அருண்மொழி தன்னை அதட்டிக் கேட்பதும், தான் அதற்கு பதில்சொல்ல வேண்டியிருப்பதும் குணவனுக்குக் கோபத்தைக் கொடுத்தது.

இவனுக்கு நான் பதில் சொல்ல வேண்டிய அவசியமென்ன என்ற எண்ணம் ஏற்பட்டது. நேரே போய் குஞ்சரமல்லரிடம் பேசி நடந்ததை விவரித்துவிட்டு, அங்கிருந்து குதிரை ஏறி சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவரிடம் என் பெண்டுகளை மறவர்கள் அவமானப்படுத்துகிறார்கள் என்று சொன்னால் தவறாகிவிடுமா? இவனிடம் என்ன பேசுவது என்ற ஆத்திரம் எழுந்தது.

சாவூர் பரஞ்சோதி குணவனின் முகத்தைக் கவனித்தான். வெகுநிச்சயமாய் இவன் அருண்மொழிக்கு அடங்கப்போவதில்லை என்று அவனுக்குத் தெரிந்தது. புன்சிரிப்பு ஏற்பட்டது.

இந்த இரண்டு முட்டாள்களும் உரத்த குரலில் சண்டையிட்டுக் கொள்ளப் போகிறார்கள். அடித்துக் கொள்ளப் போகிறார்கள். விலகி நின்று வேடிக்கை பார்ப்பதே உத்தமம்.

தேவரடியார்களுக்குத் தகுந்த பாதுகாப்பு இல்லை என்பதை சக்ரவர்த்தி வரை சொல்லி, அவர்களுக்கு தனித்தபடை வேண்டுமென்று விவரித்து, சரியான வீரர்களைப் பொறுக்கியெடுத்து, அவர்களுக்கு புதுவிதமான பயிற்சிகளைக் கொடுத்து மிகக் காபந்தாக வைத்துக்கொள்ள வேண்டும்.

சமூகத்தில் அரசாங்க காரியத்திலும் அவர்களுக்கு மிகப்பெரிய மரியாதையை ஏற்படுத்த வேண்டும். அதாவது, எந்தப் பெண்ணாவது, எதன் பொருட்டாவது அவமானப்படுத்தப்பட்டால், நீ அமைதியாக இருக்கக் கூடாது. போய் நின்று, அதட்டிக் கேள்வி கேட்க வேண்டும். அந்தப் பெண்ணுக்குண்டான நியாயத்தை வெகுநிச்சயமாய் நீ பெற்றுத்தரவேண்டும் என்ற தன் அம்மாவின் கட்டளை ஞாபகம் வந்தது.

அவன் இன்னும் இறுக்கமானான்.

"சொல்லுங்கள் குணவன். எதற்காக இவனை அடித்தீர்கள்."

"என்னுடைய அனுக்கியான சீருடையாள் என்பவளை இவன் வேல் கம்பால் தொடையில் தாக்கியிருக்கிறான்."

"ஏன், ஏன் தாக்கினான். சீருடையாள் என்ன செய்தாள்."

"சீருடையாள் எட்டி உதைத்தாள்." என்று ஒரு வீரன் உரத்துச் சொல்ல, அவனை நோக்கி அருண்மொழி திரும்பினான்.

"இவன் கையைப் பின்னால் கட்டி தனியே நிற்க வையுங்கள்." என்று சொன்னான்.

சட்டென்று அருண்மொழியின் பாதுகாவலர்கள் தரையிறங்கி அவன் கையைப் பின் கட்டாகக் கட்டி ஓரமாக நிற்க வைத்தார்கள்.

அவன் கைது செய்யப்பட்டான் என்பதை அது காட்டியது.

மறவர்கள் வேகமாகப் பேச ஆரம்பித்தார்கள்.

"என்ன சொல்ல விரும்புகிறீர்கள். குணவன் என்கிற சிற்பியின் அனுக்கியை இந்தவீரன் வேல் கம்பால் தாக்கினானா. தொடையில் அடித்தானா."

வீரர்கள் மௌனமாக இருந்தார்கள்.

"உங்களைத்தான் கேட்கிறேன். இங்கே அதைப் பார்த்தது யார். இல்லை என்று யார் சொல்லப் போகிறீர்கள். யாராவது சொல்லுங்கள். அவன் தாக்கவில்லை என்று சொல்லுங்கள்."

ஆனால், யாரும் வாய் திறக்கவில்லை.

"ஆக, அவன் தாக்கியிருக்கிறான் என்பது தெளிவாகிறது. சீருடையாள் எட்டி உதைத்ததை யாரெல்லாம் பார்த்தீர்கள்."

நாலைந்து பேர் முன் வந்தார்கள்.

"ஓ... சீருடையாள் எட்டி உதைத்ததைப் பார்த்தீர்கள். ஆனால், அந்த வீரன் அடித்ததை நீங்கள் யாரும் பார்க்கவில்லையா? அப்படியொரு அர்த்தம் உண்டா உங்கள் செய்கைக்கு.."



மௌனமாக இருந்தார்கள்.

"சொல்லுங்கள் சீருடையாள் எட்டி உதைத்ததாகச் சொன்னீர்கள். இந்த வீரன் சீருடையாளை அடித்தானா."

ஒரு வீரன் முன்னேறி, "ஆமாம். அடித்தான்"

"ம்... நல்லது. அந்த ஓரம் போய் நில்."

அவனை அப்புறப்புத்தினான்.

"மரம் பார்த்துநில். யாரோடும் பேசவேண்டாம்."

அவன் திரும்பி மரம் பார்த்து நின்றான்.

"மாட்டிக் கொண்டான்." என்று மற்ற வீரர்கள் முணுமுணுத்தார்கள். காட்டிக் கொடுத்துவிட்டான் என்றும் பேசினார்கள்.

"வீரனே... பதில் சொல். சீருடையாளை தொடையில் வேல் கம்பால் அடித்தாயா."

"அவர்கள் என்னை எட்டி உதைத்து விட்டு உள்ளே போனார்கள். கொல்வதற்கு வேல்கம்பு எடுத்து வந்து வீசத் தயாரானார்கள். அந்த வேல் கம்பைப் பறித்து என்னைக் கொல்ல முடியாது என்று சொல்வதற்கு மெல்லியதாய் ஒரு தட்டு தட்டினேன்."

"அப்படியா... மெல்லியதாகத் தட்டினீர்களா. நல்லது போய் சீருடையாளை விசாரித்து விடுவோம்."

அவன் குதிரையிலிருந்து இறங்காவண்ணம் ராஜராஜியின் வீட்டிற்கு நகர்ந்தான். வாசற்கதவு திறந்திருந்தது. வீடு முழுவதும் தளிச்சேரி பெண்கள் இருப்பது தெரிந்தது.

ராஜராஜி பயிற்சிக்கு ஆள் தேர்ந்தெடுப்பதாகச் சொல்லியிருப்பது ஞாபகம் வந்தது.

அவன் உரத்த குரலில் ராஜராஜியை அழைத்தான்.

ராஜராஜி வெளியே வந்தாள்.

"சீருடையாள் எப்படியிருக்கிறாள்."

"சரியான அடி. பட்டையாக கன்றிப் போகும் வண்ணம், சிவந்த வண்ணம் தொடையில் அது பட்டிருக்கிறது. சதைப் பிழற்சியோ, எலும்பு முறிவோ இருக்கக்கூடும். வலி தாங்காமல் அலறிக் கொண்டிருக்கிறாள். நாங்களாகவே கை வைத்தியம் செய்து கொண்டிருக்கிறோம். எண்ணெயைச் சுடவைத்து தடவிக் கொண்டிருக்கிறோம். குளிர்ந்த தண்ணீரும், பச்சைத் தண்ணீரும்

மாறி மாறி வைத்துக் கொண்டிருக்கிறோம். ஆனாலும், காயம் ஆற பலநாட்கள் ஆகும்.''

''என்ன நடந்தது ராஜராஜி.''

''வாசலில் நின்று கொண்டு ஒரே கூச்சல், ஆட்டம்.''

''யார்''

''வீரர்கள்.''

''எதற்காக...''

''இத்தனை தேவரடியார்களை ஒருசேரப் பார்த்ததில்லை போலும். என்னுடைய வீட்டில் தேவரடியார்களெல்லாம் ஏதோ வித்தை காட்டப் போவதாக நினைத்தார்கள் போலும். நான் மிகப் பிரியமாகவும், அமைதியாகவும் அந்த வீரரிடம் இங்கு இருக்க வேண்டாம். வெளியே போகலாம் என்று சொல்லியும் அவர் கேட்கவில்லை. ஊளையிட்டுப் பேசியும், வேகமாக எதிர்த்தும் நான் இங்குதான் நிற்பேன் என்றும் பல வீரர்கள் வம்பு செய் தார்கள். பெண்களைக் கேலி செய்தார்கள். உரத்த குரலில் சிரித்து ஆபாசமாக நடந்து கொண்டார்கள்.

சீருடையாளைக் கேலி செய்தபோது நான்தான் அவனை எட்டி உதைத்தேன். மறுபடியும் அவன் தோட்டக்கதவைத் திறந்து கொண்டு சீருடையாளை நோக்கி வர, அவள் வேல்கம்பால் தற்காப்புக்காக அவனைத் தாக்கப் போவதாய் சொன்னது நிஜம். அவன் சட்டென்று பயப்படுவது போல் பின்தங்கி சீருடையாள் நகர்ந்ததும் அந்த வேல் கம்பைப் பிடுங்கி மிக வேகமாக அவள் தொடையில் அடித்தான். அதை என் கண்களால் பார்த்தேன். அந்த வீரர்கள் அத்துமீறி விட்டார்கள். கலைந்து போங்கள் என்று கண்ணியமாகச் சொன்னதைக் கேட்கவில்லை.''

''யாரெல்லாம் இங்கு நின்று பேசியது.''

''கிட்டத்தட்ட எழுபது எண்பது வீரர்கள் இருக்கும்.''

''உங்களில் யாரெல்லாம் இருந்தீர்கள்.''

பின் கை கட்டப்பட்ட வீரனை அவன் உலுக்கிக் கேட்டான்.

''யாரெல்லாம் என்று தெரியாது. ஆனால் பலபேர் இருந்தார்கள். ஒரு கும்பலாக நின்று பேசியபோது பேச்சுக்கு மேல் பேச்சு வந்து இந்தப் பெண்களைக் கேலி செய்யும் நிலைமை ஏற்பட்டுவிட்டது. இந்தப் பெண்களும் அதிகம் அலட்டிக் கொண்டார்கள்.''

''என்ன அலட்டிக் கொண்டார்கள்.''



ராஜராஜி வேகமாகக் கேட்டாள்.

''ராஜராஜி, விசாரிப்பது என் வேலை. உன் வேலையல்ல. என்ன அலட்டிக் கொண்டார்கள்.''

''ஒரே சிரிப்பு கும்மாளம்.''

''பெண்கள் சிரித்தால் உனக்கு ஆகாதா. உன் தாய் சிரித்தால் உனக்கு எரிச்சல் வருமோ. உன் தமக்கை சிரித்தால் சவுக்கால் அடிப்பாயோ. என்னடா நியாயம் பேசுகிறாய் நாயே..'' என்று குதிரையில் நின்றபடியே அந்த மறவனின் தோளில் எட்டி உதைத்தான்.

அந்த வீரன் தடுமாறி விழுந்தான். அவனை இன்னொரு வீரன் தூக்கி நிறுத்தினான்.

''சீருடையாள் அடித்த வீரனின் பின் கை கட்டப்பட்டிருக்கிறதே அதை யார் கட்டியது.''

அதைச் சாவூர் பரஞ்சோதிதான் கட்டியிருக்க வேண்டுமென்று அவனுக்கு ஊகமாகத் தெரிந்தது. அதே போல சாவூர்பரஞ் சோதியை எல்லோரும் சுட்டிக்காட்டினார்கள்.

குதிரையைத் திருப்பி சாவூர் பரஞ்சோதிக்கு எதிராக அருண்மொழி நின்றான். அவன் கண்ணில் கோபம் இருந்தது.

சாவூர் பரஞ்சோதியின் கண்களில் அலட்சியம் இருந்தது.

நீ இன்னும் உபசேனாதிபதிதான். எனக்குக் கீழான பதவி வகிப்பவன்தான். போருக்குப் போய் வந்து விட்டால், பிரம்ம ராயரின் பிள்ளையாக இருந்துவிட்டால், உனக்கு எல்லாம் தெரியும் என்று நினைத்துக் கொண்டிருக்கிறாயா என்கிற திமிர் இருந்தது.

''சாவூர்பரஞ்சோதி. எதற்காக இந்த மறவனுடைய கைகளைப் பின்னால் கட்டினீர்கள்.''

''என்னுடைய அதிகாரத்திற்குட்பட்ட தளிச்சேரி பெண் சீருடையாள் என்பவரை கோல்கொண்டு தாக்கியதால் இவரை நான் கைது செய்திருக்கிறேன்.''

''நீர் கைது செய்த ஒரு கைதியை, யாரோ ஒருவர் முகம் முழுவதும் குத்தி, சவுக்கால் விளாறி நையப் புடைத்துக் கொண் டிருப்பார்கள். நீர் வேடிக்கை பார்த்துக்கொண்டிருப்பீரா. இந்த வீரன் கைகள் கட்டப் படாதிருந்தால் இந்தச் சிற்பியின் கதி என்ன வாகியிருக்கும். இவன் விரல்கள் உடைந்திருக்கும்மல்லவா. முகம்

பிய்ந்திருக்குமல்லவா.'' என்று கேட்க, மற்ற வீரர்கள் உரத்த குரலில் கோஷம் எழுப்பினார்கள்.

அருண்மொழிக்கு தான் வீரர்களை அதிகம் கிளறிவிடுகிறோமோ என்ற எண்ணமும் ஏற்பட்டது. அவர்களை கை உயர்த்தி அடக்கினான்.

''முதலில் அந்த வீரனின் கட்டவிழ்த்துவிடுங்கள்'' கட்டளையிட்டான்.

வேறொரு மறவன் முன்வர ''நீ கட்டவில்லையே.. பின்னால் போ. கட்டியவர் கட்டவிழ்க்கட்டும்.'' என்று சாவூர்பரஞ்சோதியை நோக்கி கூர்மையாகப் பார்த்தபடி பேசினான்.

சாவூர்பரஞ்சோதி முன்னேறி அந்தச் சுருக்கை சட்டென்று அவிழ்த்தான்.

''பொழுது போக்கிற்காக தண்டிக்கின்ற எண்ணமில்லை. இவர் அத்துமீறினார் என்பதற்கு சாட்சிகள் இருக்கின்றன. அதுவும் தவிர, இவர் நிதானமான போக்கில் இல்லை. மதுவின் வேகத்தில் இருக்கிறார். அதையும் தவிர, எனக்குக் கைது செய்கிற உரிமை உண்டு. நீங்கள் உபதளபதி என்பதைவிட, சேனாபதி கிருஷ்ணன் ராமனின் மகன் என்பதாலும், இளவரசர் இராஜேந்திரரின் நெருங்கிய தோழர் என்பதாலும் உங்கள் கட்டளைக்குக் கீழ்படிகிறேன்.

ஊர்விட்டு ஊர் வந்து சிவத்தொண்டு செய்கிற தேவரடியார் பெண்களை வெறும் காமக்கண்ணோட்டத்தோடு பார்த்து, கண்டபடி பேசி, கும்பலாய் அவர் வீட்டு வாசலில் நின்று கூத்தடிப்பது சோழதேசத்து நாகரிகம் என்றால், இந்த வீரருக்கும் உபதளபதி பட்டம் கொடுத்து உற்சாகமூட்டுங்கள். இப்போது நீங்கள் தலையிட்டுவிட்டதால் இந்த விஷயம், இவருடைய செய்கை நம்மோடு போகாது. சக்ரவர்த்தி வரை இந்தச் செய்தி போகும். அதற்குண்டான பலனை அனுபவிக்க நான் சித்தமாக இருக்கிறேன். உங்களுக்கும் என் வாழ்த்துக்கள்.''

சாவூர்பரஞ்சோதி மிக நிதானமாக, கம்பீரமாக அருண்மொழிப்பட்டன் எதிரே இடுப்பில் கை வைத்துப் பேசினான்.

இது மிக மோசமான மிரட்டல். நூறு மறவர்களுக்கு எதிரே இந்த மிரட்டல் விடப்பட்டிருக்கிறது. தான் இப்போது மௌனமாக இருந்தால் வெகு நிச்சயம் மறவர்களிடையே இந்தச் செய்தி பரவும். இங்கே வலிமையானவர் யார், அருண்மொழிப்பட்டனா, சாவூர் பரஞ்சோதியா என்ற பேச்சு வரும். சாவூர் பரஞ்சோதி பக்கம் ஆதரவு அதிகமாகும். அதை அனுமதிக்கக்கூடாது. வெகுசீக்கிரமே தனக்கு பதவி உயர்வு கிடைக்கப் போகின்ற இந்த நேரத்தில் போர்க்களம் கண்டு, வீரமாகப் போராடி, வெற்றியோடு திரும்பிய இந்தக் காலகட்டத்தில் சாவூர்பரஞ்சோதி என்ற தளிச்சேரி பெண்களின் காவலனுக்கு முன்பு நான் தலை குனிந்து விடக்கூடாது.



இந்த நேரம் தந்தை இருந்திருந்தால் என்ன செய்திருப்பார். நான் வாய் கொடுத்துவிட்டு மாட்டிக் கொண்டேனோ. உடனடியாக இங்கு ஏதேனும் தந்திரம் செய்தாக வேண்டும்.

அருண்மொழிப்பட்டன் சட்டென்று சுதாரித்துக் கொண்டான்.

''சாவூர்பரஞ்சோதி, கைகளைக் கீழே இறக்கு. ஒரு உபதளபதி முன்பு இப்படிப் பேசக்கூடாது என்று உனக்கு சொல்லித்தரப்படவில்லையா. சாவூர்பரஞ்சோதி, நீ நூற்றுக்கணக்கான தேவரடியார்களுக்கு நாயகம் அவ்வளவே. அவர்களுக்கு ஆபத்தெனில் தடுக்க உரிமை இருக்கிறது. எவர் ஆபத்து விளைவித்தாரோ அவரைப்பற்றி குற்றம் சுமத்த உரிமை இருக்கிறது. மிதமிஞ்சிப் போனால் கைது செய்யவும் உரிமை இருக்கிறது. ஆனால், தண்டிக்க உரிமை இல்லை.''

'தண்டிக்க' என்ற வார்த்தையை அவன் மிகவேகமாகப் பயன்படுத்தினான்.

''ரத்த விளாறாகக் கிடக்கின்ற இந்த வீரன் இறந்து போனால், சுருண்டு விழுந்து செத்துப்போனால் உன் மீது கொலைக்குற்றம் சுமத்தப்படும். விசாரணையின்றி நீ சிறையில் அடைக்கப்படுவாய். இருபது நாட்கள் வரை சிறையில் இருந்துவிட்டு அதற்குப்பிறகு விசாரணை துவங்கும். அதற்கு நடுவே வேறு எவரையேனும் நாயகமாக பெண்களுக்கு வைத்துவிடுவார். பிறகு இடுப்பில் கை வைத்து நீ பேச முடியாது. உன் கைகள் விலங்கிடப்பட்டிருக்கும். என்னுடைய கேள்வி இதுவே. இந்த வீரனை அடித்தவன் யார்? எப்படி அடிக்கலாம். சோழதேசத்தின் மானங்காக்கப் போரிட்டு, உயிரைத் துட்சமாக மதித்து இவன் மேலைச் சாளுக்கியம்வரை பதினேழு நாட்கள் பயணம் செய்து, பதினேழு நாட்கள் திரும்ப வருவான். நீங்கள் இவனை கயிறு கட்டி அடிப்பீர்கள். இவனுக்கு அடிக்கத் தெரியாது என்று நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள். மறவர்கள் அடித்தால் தாங்குவீர்களா.''

கூட்டத்தில் மறவர்களுக்கு நரம்பு முறுக்கேறியது. மீசை துடித்தது. கண்கள் சிவந்தன. பற்களைக் கடித்தார்கள். கால்களை உதைத்தார்கள். முஷ்டியை மடக்கினார்கள்.

அருண்மொழி ஒரு கலவரத்தைத் தூண்ட முயற்சிக்கிறான் என்று சாவூர்பரஞ்சோதிக்குத் தெரிந்து விட்டது.

சாவூர் பரஞ்சோதி வீரன்தான். நல்ல திடகாத்திரம் தான். இடுப்பிலுள்ள வாளை உருவினால் ஏழெட்டுத் தலைகள் உருளும் தான். ஆனால், நூறு மறவர்களுக்கு முன்னே சாவூர்பரஞ் சோதியின் வித்தை எதுவும் பலிக்காது. அதுவுமல்லாமல் இந்த வீரர்கள் ஆவேசம் கொண்டு பெண்களிடையே பாய்ந்துவிட்டால் நிலைமை மிகவும் மோசமாகிவிடும். பிறகு, என்ன செய்தாலும் சீராகாது. அதனால் பெண்கள் பக்கம்தான் நஷ்டம் அதிகம் இருக்கும். அவர்கள் மனமொடிந்து போவார்கள். இந்தக் கலவரத்துக்கெதிரே தானும் சரி, அவர்களும் சரி நிற்க முடியாது.

ஆனால், சாவூர் பரஞ்சோதியைச் சிந்திப்பதற்கு அருண்மொழிப் பட்டன் விடவில்லை. அருண்மொழிப் பட்டனைவிட வேகமாக சாவூர்ப்பரஞ்சோதியும் யோசித்தான். இப்பொழுது அருண் மொழிப்பட்டனின் கை ஓங்கியிருக்கிறது. இதையும் தவிர சேனாபதி கிருஷ்ணன்ராமனின் மகன் என்பதால் வெகுஎளிதாக அந்தப்புரம் வரைபோய் இளவரசரையோ, அரசரையோ அவன் பார்க்க முடியும் என்பதால் தன் பக்கத்து பலவீனம் தெரிந்தது.

என்ன இப்பொழுது, தேவரடியார்களைப் பார்த்தால் உரத்துக் கத்தவும், கூத்தாடவும் எல்லோருக்கும் தோன்றுவது இயல்பு தானே. தேவரடியார்கள் சிரித்துக் கொண்டு போய்விடலாம். எதனால் இது பிரச்சினையாயிற்று. இதில் என்ன தவறு கண்டு விட்டாய் என்று சாவூர்பரஞ்சோதியை யாரேனும் விசாரித்தால் சரியாகப் பதில் சொல்ல முடியாது. ஆனால், அதேசமயம் சாவூர் பரஞ்சோதி தன் தாயாருக்கு வாக்குக் கொடுத்திருக்கிறான். எந்த அபலைப் பெண்ணையும், எந்த நேரத்திலும், எவர் துன்புறுத்தினா லும் எதிர்த்து நின்று காப்பேன் என்று வாக்குக் கொடுத்திருக் கிறான்.

உலகத்தில் எல்லாவற்றையும்விட தேவரடியாரான அவன் தாய்க்குக் கொடுத்த வாக்கு மிக முக்கியம். எனவே, அருண் மொழிப்பட்டனை அத்துமீற முடியாமல் செய்துதான் ஆக வேண்டும்.



"என் கைகளுக்கு விலங்கிடப் போவது பற்றி எனக்கு மிகுந்த சந்தோஷம். அதைப்பற்றி நான் கவலைப்படவில்லை. என் கவலையெல்லாம் உங்கள் மாளிகைக்குள் இருக்கின்ற நூறு தேவரடியார்கள் பற்றித்தான். அந்த நூறு தேவரடியார்களில் உங்களது மாதேவியார், உங்கள் அனுக்கியாரும் இருக்கிறார்கள். பெண்களுக்கெதிராக குற்றம் இழைப்பவரை சோழ தேசம் கைகட் டிப் பார்த்துக் கொண்டிருக்க வேண்டுமென்று உபதளபதியார் விரும்புகிறார். பொது மகளிராயினும், வேற்று நாட்டிலிருந்து பிடித்து வந்த வேளத்துப் பெண்களாயினும் மிகமிக மரியாதையாக பெண்களை நடத்த வேண்டும் என்பதுதான் சோழ தேசத்தின் அடிப்படையான சட்டம். குடித்துவிட்டு வாய்க்கு வந்தபடி உளறி பெண்களை நாணுறும் படியாக வார்த்தைகள் பேசி, இந்த வீட்டிற்கெதிரே இருபத்தேழு பேர் நின்று கொண்டு கொக்கரித்துக் கொண்டிருப்பார்கள்.

அந்தப் பெண்கள் தட்டிக் கேட்டால் கதவை உடைத்துக் கொண்டு ஒருவன் உள்ளே புகுவான். தடியால் அடிப்பான் என்றால்.. வாழ்க சோழதேசம், வளர்க நம் மன்னரின் கொற்றம், யாரது... பெண்டுகளே வெளியில் வாருங்கள். ஏன் உள்ளே பதுங்கிக் கிடக்கிறீர்கள். உங்களைக் காப்பாற்ற உபதளபதி வந்து விட்டார். இனி நீங்கள் எதற்கும் அஞ்ச வேண்டாம். அருண் மொழிப்பட்டன் இருக்கும் போது, உங்களுக்கு என்ன கவலை. உங்களை யார், என்ன செய்துவிட முடியும். வெளியே வந்து உங்களுடைய குறைகளைச் சொல்லுங்கள்.

இந்த வீரர்கள் எப்படி நடந்துகொண்டார்கள் என்று பேசுங்கள். இதோ இந்த நாய் என்ன பேசியது என்பதை இங்குள்ள ஒவ்வொரு தேவரடியாரும் உரத்தகுரலிலே நமது அருண்மொழிப்பட்டருக்குக் காது கேட்கும் வண்ணம் பேசவேண்டும்." என்று கட்டளை போல் சொல்ல, அந்த மாளிகையின் உள்ளே நின்று வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்த அத்தனை பெண்டுகளும் வேகமாகக் கீழே ஓடி வந்தார்கள். கதவு திறந்தார்கள். கூட்டத்தைப் பிளந்து வந்து அருண்மொழியைச் சுற்றிக் கொண்டார்கள். இது இன்னும் பெரிய தந்திரமாக இருந்தது.

சாவூர் பரஞ்சோதியை அருண்மொழிப்பட்டன் உற்றுப்பார்த் தான்.

"ஆஹா... இப்படி காய் நகர்த்துகிறாயா" என்று பல் கடித்தான்.

சாவூர்பரஞ்சோதிக்குச் சிரிப்பு கொப்பளித்தது. அடக்கிக் கொண்டான். ஆயினும் அவன் கண்கள் சிரித்தன.

''சண்டாளப்பாவிகள்... கேவலமான பிறவிகள்... இழிவான ஆண்கள்... மோசமான புத்திகள்.. குடிகாரர்கள்.'' என்று விதம்வித மாக மறவர்களை ஏசிய வண்ணம் அந்தத் தேவரடியார் கூட்டம் குதிரையிலிருந்த அருண்மொழிப்பட்டனைச் சுற்றிக் கொண்டது.

''உன் தாய்க்கு எதிரே வேட்டியை வழித்துக் கொண்டு ஒருவன் சிரித்தால் நீ பொறுத்துக் கொள்வாயா. உன் தமக்கை எதிரே ஒருவன் இழிவான வார்த்தைகள் சொன்னால் உங்களால் அமைதி காக்க முடியுமா. இவர்கள் தொலைதூரம் போய் வெற்றி பெற்று வந்தார்கள் என்பதால், என்ன வேண்டுமானாலும், யாரை வேண்டுமானாலும் பேசலாமா. தேவரடியார்கள் என்றால் அவ்வளவு கேவலமா.

சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவரின் வரலாற்றை உங்கள் அனுக்கியார் எழுதியிருக்கிறார். அது அற்புதமான நாட்டிய நாடகம். எங்களுக்குப் படித்துக் காண்பித்தார்கள். நாங்கள் நெகிழ்ந்து போனோம். அதை நாட்டிய நாடகமாக செய்வதற்காக நாங்கள் பயிற்சிக்கு வந்திருக்கிறோம். இன்றுதான் அந்த வேலை துவங்கியது. ஆனால், அந்த வேலையைச் செய்ய ஒட்டாத வண்ணம் இவர்கள் தொந்தரவு படுத்தினார்கள். கேலி செய்தார்கள். வெளியே போங்கள் என்று துரத்தினார்கள். நீண்ட கழியை எடுத்துக் கொண்டு சுளீரென்று இந்தப் பெண்ணை அடித்தான். இதோ பாருங்கள். எப்படி மோசமான காயம் என்று..'' சீருடையாளின் உடைகளை விலக்கிக்காட்ட தொடையைக் கவனித்த அருண்மொழிப்பட்டன், அந்தக் காயத்தின் வேதனை யைச் சட்டென்று மனதில் பதிய வைத்துக் கொண்டான். மெல்லியதாய் கோபத்தில் பல் கடித்தான்.

அவன் கோபத்தில் பல் கடிப்பதை சாவூர் பரஞ்சோதி கவனித்து விட்டான்.

''எல்லோரும் உரத்த குரலில் கத்தினால் அருண்மொழிப் பட்டருக்கு உங்கள் மனநிலை தெரியாது. உங்களில் எவரேனும் ஒருவர் மிக நிதானமாய், தெளிவாய் அருண்மொழிப்பட்டருக்கு இங்கேயே, இந்த மறவர் கூட்டத்திற்கு நடுவேயே தெரியப் படுத்துங்கள். இந்த மறவர்களும் கேட்கட்டும். இங்குள்ள மறவர்கள் அத்தனைபேரும் மோசமானவர்கள் என்று சொல்ல மாட்டேன். யாரோ சிலர் செய்கின்ற இந்த மோசமான காரியம்



மொத்த மறவர் கூட்டத்தையும் இழிவுபடுத்துகிறது. சோழ தேசத் திற்காக உயிரையும் மதியாது தொலைதூரம் போய் வந்தார்கள் என்பதை நான் அனைவரும் அறிவோம். ஆனால், அந்த ஒரு சிறப்பே இவர்கள் எது செய்தாலும் பொறுத்துக் கொள்ளக்கூடிய தகுதியை இவர்களுக்குக் கொடுத்துவிடவில்லை. எனவே யாரேனும் ஒருவர் பேசுங்கள்.''

''வழிவிடுங்கள்... வழிவிடுங்கள்...''

யாரோ குரல் கொடுக்க ராஜராஜி இறங்கி நடந்து வந்தாள்.

அருண்மொழிப்பட்டனை ஏறிட்டு நோக்கினாள்.

''தவறு மறவர்களுடையது. சிறிதுகூட மரியாதையில்லாது எல்லாப் பெண்களையும் மிக மோசமாக வர்ணித்து, கைகொட்டிச் சிரித்து, அத்துமீறி கதவு தாண்டி உள்ளே நுழைந்து கழியால் சீருடையாளையும் அடித்தார்.''

''அவர் ஏன் அடித்தார் என்பது முக்கியமில்லையா.''

மறவர் பக்கமிருந்து ஒரு குரல் எழுந்தது.

''புடவையை வழித்துக் கொண்டு ஒரு மறவரை நீங்கள் கால் நீட்டி எட்டி உதைக்கவில்லையா.''

''உன் தாயை தெருவில் போகிறவன் இழிவு படுத்தினால், உன் தாய் உடனே அவனை உள்ளே வரவழைத்து, குடிக்க மோர் கொடுத்து, இன்னும் நாலு வார்த்தை இழிவாய் பேசிவிட்டுப் போங்கள் என்று சொல்வாளா அல்லது எட்டி உதைப்பாளா.''

ராஜராஜி சட்டென்று சீறினாள். மறுபடியும் பெண்கள் கூச்சல் அங்கு வேகமாக எழுந்தது.

''யாரை யார் எட்டி உதைத்தது..'' அருண்மொழிபட்டன் மேற்கொண்டு என்ன செய்வதென்று தெரியாமல் விசாரணையில் இறங்க, ''அருண்மொழிபட்டன் அவர்களே..'' சாவூர்பரஞ்சோதி குரல் கொடுத்தான்.

''இந்த விசாரணையை நடுவீதியில் வைத்துக் கொள்ள முடியாது. இது அரச சபைக்குப் போகும். உங்கள் துணைவியார், உங்கள் மாதேவியார் ராஜராஜி சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜ ராஜத்தேவரிடம் நேரடியாக எழுத்து மூலமாய் குற்றச்சாட்டை இந்த வீரன் மீது தெரிவிப்பார்.

இப்போது இந்த இடத்தின் நிலைமை கருதி சகலரையும் கலைய நீங்கள் உத்தரவு பிறப்பிக்க வேண்டும். அத்தனை வீரர்களையும் கைது செய்ய வேண்டும். பெண்கள் அனைவரும் உள்ளே

போங்கள். ''யாரோ பேச வாயெடுக்கும்போது அவன் விழிகள் உருட்டி அந்தப் பெண்ணை முறைத்தான்.

''பெண்கள் அனைவரும் உள்ளே போங்கள். மாதேவியார் அருண்மொழிப்பட்டரின் அனுக்கியார் ஸ்ரீ ராஜராஜித்தேவியார் அவர்களும் உள்ளே போக வேண்டும்.''

அவன் கட்டளையிட அந்தப் பெண்கள் கூட்டம் புற்றுக்குள் நுழைகிற சிற்றெறும்புக்கூட்டம் போல அந்தக் கட்டிடத்திற்குள் நுழைந்து காணாமல் போயிற்று.

சாவூர் பரஞ்சோதி தன் விரல் சொடுக்கில் தனக்கு கீழுள்ள பெண்களை வைத்திருக்கிறான் என்பது அங்குள்ளோருக்குத் தெரிந்து போயிற்று. இப்பொழுது அருண்மொழிப்பட்டன் முறை.

மக்கள் அருண்மொழிப்பட்டனை வியப்போடு பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

அருண்மொழிப்பட்டன் புத்தி வேறுவிதமாக வேலை செய்தது.

எதற்காக இந்த வீரனைக் கைது செய்ய வேண்டும். எதற்காக இங்குள்ள வீரர்களை அவமானப்படுத்த வேண்டும். வரிசையில் நிற்கச் சொல்ல வேண்டும். நீங்கள் அனைவரும் கைது செய்யப்பட்டீர்கள் என்று சொல்லவேண்டும். தேவையில்லை. மன்னரிடம் குற்றம் சொல்லட்டும். யார் யார் என்று பெயர் சொல்லட்டும். அப்போது பார்த்துக் கொள்ளலாம்.

''இங்கு வா.''

ஒரு வீரனை அழைத்தான்.

''அடிபட்ட இந்த வீரனை உடனடியாக வைத்தியர் துணையுடன் மருத்துவ சாலைக்கு அழைத்துப் போய் அவனுக்கு மருத்துவ வசதி செய்து கொடுத்து, பிறகு என் வீட்டுக் கொட்டிலில் படுக்க வை.''

அந்த வீரனை அப்புறப்படுத்தினான். மறவர்கள் அவன் கட்டளைக்காக காத்திருந்தாள்.

''சாவூர் பரஞ்சோதி.. உன் கூட்டத்தில் எடுபிடி, குடைதாங்கி, குதிரையைக் கட்டி வைப்பவன் எல்லாம் நீதானா. உனக்குக் கீழ் ஆட்கள் கிடையாதா அல்லது ஆட்கள் இருந்தும் நீயே அல்லாடிக் கொண்டிருக்கிறாயா. நூறு தேவரடியார்கள் ஒன்று சேர்ந்திருக்கிறார்கள் என்றால், உன்னுடைய ஆட்கள் இங்கு காவல் இருக்க வேண்டும்.



அவர்கள் ஒன்று கூடுவது முன்கூட்டியே உனக்குத் தெரிவிக்கப்பட்டிருக்க வேண்டும். தெரிவித்ததும் நீ ஏவியிருக்க வேண்டும். அப்படியில்லாமல் மூலைக்கு ஒருவராக வேடிக்கை பார்த்துக் கொண்டு, இங்கு வீரர்கள் வந்து குவிந்துவிட்டார்கள். குடித்துவிட்டு ஆடுகிறார்கள் என்று புறம்பேசுவது அழகல்ல. வரும்முன் தடுப்பது என்பது விவேகம். இந்த வேகம் உனக்குமில்லை. உனக்குக்கீழ் வேலை செய்பவருக்குமில்லை. உன்னிடம் எத்தனை பேர் வேலை செய்கிறார்கள்.''

சாவூர்பரஞ்சோதியின் முகம் லேசாக வியர்த்தது.

தன்னைவிடவும் எல்லா விதத்திலும் உயர்ந்தவன் அருண்மொழிப்பட்டன். விதம்விதமாக அவன் சொல்லிக் கொண்டிருப்பதைப் பார்த்து வேதனைப் பட்டான். ஆனால், இப்படியொரு கூட்டம் நடக்கப் போகிறது என்பது அவனுக்கோ, அவனது வீரர்களுக்கோ தெரிவிக்கப்படவில்லை.

ராஜராஜி சொல்லியிருக்க வேண்டும். இங்கு இந்த விஷயம் பெரிதாகிறபோது முதலில் இந்தக் கேள்விதான் வைக்கப்படும்.

அருண்மொழி எளிதாக ஜெயித்துவிட்டான். அந்த வீரன் எளிதாகத் தப்பித்துவிட்டான்.

அருண்மொழி அந்த வீரனைக் கைது செய்திருந்தால், அது வேறு விதமாக முடிந்திருக்கும். ஆனால் சிற்பியைப்பற்றிக் கண்டு கொள்ளவேயில்லை. அருண்மொழி குதிரையைவிட்டு இறங்கி மாளிகைக்குள் நகர்ந்து அங்கிருந்து திரும்பி சாவூர் பரஞ்சோதியை நோக்கி உற்றுப்பார்த்தான். விரல் சொடுக்கினான்.

''இன்னும் கால்நாழிகையில் இந்த மாளிகையைச் சுற்றி காவல் ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும். இந்தத் தெருவுக்குள் நுழைபவர் அத்தனைபேரும் விசாரித்த பிறகே அனுப்பப்பட வேண்டும். இது என் கட்டளை.''

சாவூர்பரஞ்சோதி சரியென்று தலையசைத்தான்.

அவனுக்குள் துக்கம் பொங்கியது. மெல்லியதாக ஒரு வன்மம் படர்ந்தது.

துக்கம் மிகுந்த வன்மம் மிகக் கொடியது. அதனால் அமைதியாயிருக்க இயலாது. அது அடிப்பட்ட நாகம்போல் மீண்டும் அடித்தவனைக் கொத்தக் காத்திருக்கும்.

சாவூர்பரஞ்சோதி தன் குதிரையில் தாவி ஏறிப் போன வேகம் பார்த்து அருண்மொழிப்பட்டனுக்கு சிரிப்பு வந்தது. அந்தச் சிரிப்பு

சட்டென்று அகன்றது. வேகமாக உள்கட்டிற்குப் போய் ராஜராஜியின் படுக்கை அறையின் கதவைத் தட்டினான்.

உள்ளிருந்த நான்கைந்து பெண்கள் வேகமாக எழுந்தார்கள். அவன் வாசலில் நின்றதும் மெல்ல வெளியேறினார்கள்.

ராஜராஜியும் அவள் தோழியும் மட்டுமே உள்ளிருந்தார்கள். அந்தத் தோழியும் வெளியேற அவன் சைகை செய்தான். அவள் வெளியேறிய பிறகு கட்டிலில் அமர்ந்தான்.

ராஜராஜி அறைக்கதவைச் சார்த்திவிட்டு அருகே வந்தாள். அவளை அமரும்படி அருண்மொழி கட்டளையிட்டான்.

''முட்டாள் பெண்ணாக இருக்கிறாய். என்ன நினைத்துக் கொண்டிருக்கிறாய் உன்னைப்பற்றி. என்ன செய்தாலும் ஏன் ஆரவாரமாகச் செய்கிறாய். இந்த இடத்தில் நூறு பெண்கள் வருகிறார்கள் என்றால், காவலுக்கு ஆள் ஏற்பாடு செய்ய வேண் டாமா. குடித்து விட்ட ஒரு ஆண்மகன் எப்படி இருப்பான் என்று தேவரடியாரான உனக்குத் தெரியாதா அல்லது உன் கூட்டத் தினருக்குத் தெரியாதா. புடவையைத் தூக்கி எட்டி உதைப்பதா. அவன் காலைப்பிடித்து தூக்கிப் போட்டிருந்தால் என்ன செய்திருப்பீர்கள். குடித்திருக்கிறான் என்ற ஒரு சலுகை போதுமே அவனை விடுதலை செய்ய, என்ன முட்டாள்தனம் இது.

சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவருடைய சரித்திரத்தை நாட்டிய நாடகமாக நீ எழுதிவிட்டால் உன்னை யாருமே எதுவுமே கேட்க முடியாதா. உள்ளங்கையில் வைத்துக் காப்பாற்றுவார்களா, பெண்கள் சிரித்துக் கொண்டும், கூச்சல் போட்டுக் கொண்டும், தளுக்கிக் கொண்டும் இருக்கிற போது ஆண்களுக்கு பரவசமாகாதா. சிரிக்கவும், சீழ்க்கை அடிக்கவும் தோன்றாதா. கொஞ்சமும் பாதுகாப்பில்லாத இந்த இடத்தில் நீ இத்தனை பெண்களைக் கொண்டு வந்தது அபத்தம். அதிகாரிச்சி கள் என்ன ஆனார்கள். இடுப்பில் வாள் தரித்த இரண்டு பெண்களை அனுப்பினேனே.. எங்கே..''

''இல்லை ஐயன். நான் சொல்வது என்னவென்றால்..''

''நிறுத்து.''

அருண்மொழிப்பட்டன் வெடுக்கென்று சீறினான்.

''கேட்ட கேள்விக்குப் பதில் சொல். அந்த அதிகாரிச்சிகள் எங்கே. இந்த வாய்ச்சண்டை நடந்துகொண்டிருக்கும்போது அந்த அதிகாரிச்சிகள் என்ன செய்து கொண்டிருந்தார்கள்.''



''கொல்லையில் குளித்துக் கொண்டிருந்தார்கள்.''

''கூப்பிடு அவர்களை..''

அவள் கதவு திறந்து அதிகாரிச்சிகளின் பெயர் சொல்லிக் கூப்பிட்டாள். அதிகாரிச்சிகள் ஓடி வந்தார்கள். அவர்கள் கையில் மெல்லிய பிரம்புகள் இருந்தன. அதிகாரிச்சிகள் அந்த அறைக்குள் தயங்கியபடி நுழைந்தார்கள். நுழைந்தவுடன் அருண்மொழிப் பட்டன் அவர்களை உறுத்து பார்த்தான்.

''எங்கே போயிருந்தீர்கள்.''

''இங்குதான் இருந்தோம்.''

அருண்மொழிபட்டன் எழுந்தான். பளீரென்று ஒரு அதிகாரிச் சியை அறைந்தான். அவள் கன்னத்தில் அடிவாங்கி விழுந்தாள். கூடத்திலுள்ள பெண்கள் வாய் பொத்திக் கொண்டார்கள். அடுத்த அதிகாரிச்சியை அவன் முறைத்துப் பார்த்தான். அவள் கன்னங் களைப் பொத்திக் கொண்டாள்.

''போ... வெளியே போ. உங்கள் இருவருக்கும் வேலை போயிற்று.''

இரண்டாவது பெண் அவன் காலடியில் விழுந்தாள். அவன் அவள் முடியைக் கொத்தாகப் பிடித்தான். மெல்ல வெளியே தள்ளினான்.

''அப்படிச் செய்து விடாதீர்கள் ஐயன். அப்படிச் செய்து விடாதீர்கள்.''

அடி வாங்கியவள் மறுபடியும் வந்தாள்.

சட்டென்று கைப்பிரம்பு எடுத்துக் கொண்டு சுளீரென்று அவள் இடுப்பில் அடித்தான். அவள் மறுபடியும் அலறினாள்.

வீட்டிலுள்ள பெண்கள் சலசலப்போடு ஒடுங்கி சுவரோடு சுவராகக் கிடந்தார்கள்.

''இவ்வளவு பெண்களுடைய பாதுகாப்பை அலட்சியம் செய்துவிட்டு பின்பக்கம் உட்கார்ந்து மஞ்சள் தேய்த்துக் குளித்துக் கொண்டிருந்தீர்கள் என்றால், உங்களுக்கு சோழதேசத்தில் வேலை யில்லை. நீங்கள் உடனடியாக தஞ்சையை விட்டு வெளி யேறுங்கள். இது என் கட்டளை.''

மறுபடியும் வாய் திறந்து பேச முற்பட்டபோது ராஜராஜி அவளை அடக்கினாள். வெளியே தள்ளினாள்.

கதவை மறுபடியும் சார்த்தினாள்.

''ஐயன் என்ன கோபம் இது.''

''உன்னை அடிக்க வேண்டும். உன் கன்னத்தில் அறைய வேண்டும். என்னால் அது இயலாது. அதனால் தான் அந்தப் பெண்களை அடித்தேன்.''

''ஐயன் அடித்துவிடுங்கள். உங்களுக்கு அடித்து நொறுக்க உரிமை இருக்கிறது. தயவு செய்து அடியுங்கள்.''

அவள் அவன் கைகளைப் பற்றிக் கொண்டாள்.

''இல்லை. நீ கவிதாயினி. கற்பனையில் மிதப்பவள். ஆடுபவள். பாடுபவள். நாட்டியநாடகம் அமைப்பவள். உனக்குச் சூழ்நிலை தெரியாது. ஆனால், உன் சூழ்நிலை என்ன என்று சொல்வதற்கு உனக்கு ஆட்கள் வேண்டும். அது இல்லை. அதிகாரிச்சிகள் சரியில்லை. சாவூர்பரஞ்சோதி என்ன மாதிரி நாயகம். இந்தப் பெண்களுக்கு எந்த விதத்தில் பாதுகாப்பு. அந்த இரண்டு அதிகாரிச்சிகளும் நான்அனுப்பியவர்கள். உன் பாதுகாப்புக்காக அனுப்பியவர்கள். அவர்கள் தவறு செய்ய நான் தண்டிக்க முடியும். சாவூர்பரஞ்சோதியை யார் தண்டிப்பது. யார் அவரைக் குறை கூறுவது. தேவரடியார்களுக்கு சாவூர்பரஞ்சோதிதான் பொறுப்பு எனில், இன்றைக்கு நடந்த இந்தக் கூத்துக்கு யார் காரணம். ஏன் இங்கு பாதுகாப்பு இல்லை. ஏன் இங்கு காவலாட்கள் இல்லை. சாவூர்பரஞ்சோதியிடம் எத்தனை ஆட்கள் இருக்கிறார்கள். என்ன செய்கிறார்கள். வெறும் சோற்றுத்தடியர்களா அல்லது சாவூர் பரஞ்சோதியே அப்படிப்பட்ட தடியன்தானா.''

''இல்லை. அவரும் பெண்கள் மீது உயிரை வைத்திருக்கிறார்.''

''என்ன அர்த்தம் இதற்கு. என்ன பேசுகிறாய் ராஜராஜி. மிக ஆபாசமாக இந்தச் சொற்கள் என் காதில் விழுகின்றன. பெண்கள் மீது, தேவரடியார் பெண்கள் மீது உயிரை வைத்திருக்கிறார். அவ்வளவுதானா. அதுதான் வேலையா. இந்தப் பாதுகாப்புக்கு யார் இருக்கிறார்கள். ஒவ்வொன்றையும் அரசாட்சியின் உச்சியில் இருப்பவர்களே கவனிக்க வேண்டுமென்றால், இம்மாதிரி... சோற்றுத் தடியார்கள் எதற்காக? எந்த வேலையும் செய்யாமல் உலக்கை போல் சுற்றியிருந்துவிட்டு என்னை எதிர்த்தும் பேசுகிறார்கள். ராஜராஜி உன்னைச் சார்ந்த பெண்களிடம் சொல். நான் மிகமிகக் கடுமையாக இருப்பேன். கால்தூக்கி ஒரு போர் வீரனை எட்டி உதைக்க, உன்னால் முடியுமானால், அந்தப் போர்வீரனுக்கு என்னவெல்லாம் முடியுமென்று யோசித்துப்பார். இது எங்கே போய் முடியும்.



உடனடியாக அந்தப் பெண்ணோ, நீயோ, சாவூர்பரஞ் சோதியை அல்லது வேறு எவரையேனும் அழைத்து அல்லது இந்த அதிகாரிச்சிகளை அழைத்து சம்மந்தப்பட்ட வீரனைப் பிடித்து வைக்க முயற்சித்திருக்க வேண்டும். சாவூர்பரஞ்சோதியின் வீரர்கள் வருவதற்கு முன்பு என்னுடைய வீரர்கள் இங்கு வருவார்கள். நான்கு பகுதிகளாகப் பிரிந்து இந்த வீட்டைக் காவல் காப்பார்கள். விரைவில் இந்த நாட்டியத்தை அரங்கேற்றுவதற் குண்டான வேலையைச் செய். நான் வருகிறேன்.''

''கோபமா''

ராஜராஜி எழுந்திருந்து கேட்டாள்.

''ஒரு அளவில் ஆமாம். உன்னுடைய முட்டாள்தனம் கோபத்தைத்தான் கொடுக்கிறது. ராஜராஜி இன்று இங்கு நடந்த விஷயம் ஊதி ஊதி பெரிதாக்கப்படும். உன் பெயரும் இழுக்கப் படும். உத்தமமான காரியத்தில் இறங்கியிருக்கிறாய். அதற்கு இடைஞ்சலாக இந்த விஷயம் வந்துவிடக்கூடாது என்று நான் பயப்படுகிறேன். ஸ்ரீ இராஜராஜருடைய சரித்திரத்தை நாட்டிய நாடகமாக நீ செய்திருப்பது அற்புதம். மற்றவர் இதைப் புரிந்து கொள்ளும் முன் வேறுவிதமாகத் திரித்துக் கூறப்பட்டு விடக் கூடாது.''

சாவூர்பரஞ்சோதி எனக்கு எதிராக தொடை தட்டிக்கொண்டு நிற்கிறான். அது இயலாது என்று அவனிடம் சொல். எனக்கு அவன் ஈடு இல்லை என்று சொல். நான் சீறத்துவங்கினால் நூறு சாவூர் பரஞ்சோதிகளைச் சுழற்றிச் சுழற்றி அடிப்பேன் என்று சொல்.

அந்தணன்தானே என்ற இளக்காரம் என்னிடம் வேண்டாம். நான் சேரதேசத்தில் பாடம் பயின்றவன். வெறும் உடல்வலிமை மட்டுமல்ல. இங்கே எனக்கு வலிமை இருக்கிறது என்று அவனுக்கு விளங்கும்படி சொல்.'' என்று தன் தலையை அவன் தட்டிக் காட்டினான். எழுந்து நின்றான்.

மாளிகை வாசலில் இரண்டு அதிகாரிச்சிகளும் குத்திட்டு உட் கார்ந்திருந்தார்கள். அவனைக் கண்டதும் எழுந்து தலைகுனிந்து கொண்டார்கள்.

''அறிவு கெட்ட முண்டங்களா. வீட்டிற்கு வெளியே காவல் பலப்படுத்தியிருக்கிறேன். உள்ளுக்குள்ளும் காவல் இருக்க வேண்டும். மஞ்சள் அரைத்துக் குளித்துக்கொண்டு, மேனா மினிக்குத்தனம் செய்யாமல் தெளிவாகவும், திடமாகவும் இருங்கள். இங்குள்ள பெண்களின் நலம் உங்களின் கையில்

இருக்கிறது. ராஜராஜியை உங்கள் பாதுகாப்பில்தான் விட்டுப் போகிறேன். தெளிவோடு நடந்து கொள்ளுங்கள்.''

சீறினான். இறங்கி குதிரையில் ஏறினான். ராஜராஜி அவனையே வியப்போடு பார்த்துக் கொண்டிருந்தாள்.

அந்தத் தோழியின் முகத்திலிருந்து கலவரம் மெல்லக் கலைந்தது.

''எப்படி... எப்படியடி இவரோடு குடித்தனம் செய்கிறாய். எனக்குக் குலைநடுங்கிவிட்டது. செத்து விடுவேன் போலாகி விட்டது.''

ஒரு பெண்மணி கிட்டத்தட்ட அழுகையோடு அவளை வந்து தழுவிக் கொண்டாள்.

''ச்சீ... ச்சீ... அது குழந்தை.பார்ப்பதற்குத்தான் முரட்டுத்தனம் செய்யுமே தவிர, பக்குவமாக எடுத்துப் பேசினால் எதையும் புரிந்து கொள்கிற ஆண்மகன். நினைக்கின்ற காரியத்தை, தான் நினைக்கிற வண்ணம், மற்றவர் செய்து முடிக்க வேண்டுமென்று ஆவல் படுமே தவிர அட்டகாசம் செய்யாது.

அருண்மொழி ஒரு நிறைவான ஆண்மகன். அமைதியான அதிகாரி. கம்பீரமான புருஷன். தெளிவான கணவன். நான் மிகப்பெரிய அதிர்ஷ்டசாலி.''

''உனக்கு அவரைக் கண்டால் பயமாகவே இல்லையா.''

''என்ன பயம். அது தவறுகளைச் சுட்டிக் காட்டுகிறது. யார் தவறு செய்தார்களோ அவர்களைத் தண்டிக்கிறது. தண்டனை கடுமையாக இல்லாவிட்டால் மறுபடியும் தவறு நடக்கும், இப்படி வேகமாக இல்லாவிட்டால் ஏகத்தாளம்தான் வந்துவிடும். நான் இன்னொன்று சொல்லித் தருகிறேன். புருஷன் கோபமாக இருக்கும்போது பதில் பேசாதே. எதிர்ப்புக் காட்டாதே. விட்டுவிடு. கோபத்திலிருந்து வெளிவரட்டும். கோபம் வெளிவந்த பிறகு சிறிதுநேரம் கழித்து மெல்ல அந்த விஷயத்தைப்பற்றிப் பேசத் துவங்கு. உன்னுடைய நியாயத்தை விளக்கு. வெகு நிச்சயமாக அருண்மொழியைப் போன்ற நல்ல புருஷர்கள் அதைப் புரிந்து கொள்வார்கள். கோபித்துக் கொண்டதற்கு வருத்தப்படுவார்கள்.''

''பெண்களைப் பிரம்பால் அடிப்பது நியாயமா.''

''யார் அதிகாரிச்சிகளைச் சொல்கிறாயா. அவர்கள் அடிக்கவும், அடிவாங்கவும் பழக்கப்பட்டவர்கள். நம்மைப் போல் உள்ள வர்கள் அல்லர். நம்மைப்போல் உள்ளவர்களை அவர் ஒருக்காலும் அடிக்கமாட்டார். வெறுமே கண்டிப்பதோடு முடிந்துவிடும்.''



''ஆனால். அவர் முகத்தில் என்ன ரௌத்ரம் பொங்கியது.''

''அவர் போர் வீரரடி. உபதளபதி.''

''இவ்விஷயம் என்னவாக முடியும். அரசரிடம் போகுமா.''

''உனக்கு ஏன் அந்தக் கவலை.''

''நீங்கள் அத்துமீறி ஒரு போர் வீரனை எட்டி உதைத்திருக்கிறீர்களே.''

''அது தவறு. இங்குதான் விஷயம் மோசமாகிவிட்டது.''

''அவன் எவ்வளவு அசிங்கமாக நடந்து கொண்டான். எவ்வளவு கேவலமாக நம்மை நடத்தினான். அவனை எட்டி உதைத்தது எனக்கு சந்தோஷமாக இருந்தது.''

''இதோ பாருங்கள். நாம் எல்லோரும் ஊர்விட்டு ஊர் வந்து கோயில் பணிக்காக அமர்த்தப்பட்டிருக்கிறோம். போர்வீரர்கள் சந்தோஷத்திற்கென்று நாட்டியமாடுகிறோம். நாடகம் போடு கிறோம். எங்கேனும் பாடிவீட்டில் நம்மை அழைத்துப் போய் நாட்டியம் ஆடச்சொன்னால் மறுப்போமா. அப்பொழுது குடித்திருக்கின்ற மறவர்கள் கும்மாளமாய் எழுந்து ஆடினால் தடுப்போமா. அருகில் வராது நம்மைக் காபந்து செய்வார்க ளெனினும் மறவர்கள் பேசுவதும், ஆடுவதும், உளறுவதும் ஒரு மாதிரித்தான் இருக்குமல்லவா. அதை அதிகம் பாராட்டலாமா. சரிதான் போகட்டும் என்று விட்டுவிட வேண்டும்.''

''நம்மைப் பார்த்தால்தான் மறவர்களுக்கு இளக்காரம். மற்ற எந்தப் பெண்களையும் மறவர்கள் எதுவும் செய்வதில்லை. நாம் அதற்காகத்தான் படைக்கப்பட்டிருக்கிறோம். அவர்களின் குதூகலத்திற்காகத்தான் ஆட்டம் ஆடுகிறோம். பாட்டுப் பாடுகிறோம். இறைபணி என்பது உண்மையாயினும் இறை பணிக்கு அப்பாலும் நமக்கு பொதுமக்களைச் சந்தோஷப் படுத்துகின்ற வேலைகள் இருக்கின்றன.

அருண்மொழி சொன்னதுபோல நமக்கென்று ஒரு காவல். ஒரு சட்டதிட்டம் இருக்கவேண்டும். அந்தக் காவல் பலவீனமாக இருக்கிறது. அவர் கேட்ட கேள்விக்கு என்னால் பதில் சொல்ல முடியவில்லை. உங்களில் யாருக்கேனும் தெரியுமா, சாவூர்பரஞ் சோதியின் கீழ் எத்தனை வீரர்கள் இருக்கிறார்கள்.''

''ஐம்பது பேர் கொண்ட ஒரு படை இருந்தது. ஆனால், ஒவ்வொருவராக கோயில் வேலைக்குப் போய் விட்டார்கள். கூப்பிட்டு அனுப்பிப் போனவர்கள் சிலர். வெறுமேதானே

இருக்கிறேன் என்று போனவர்கள் சிலர். எனக்குத் தெரிந்து இப்போதைக்கு சாவூர்பரஞ்சோதிக்குக் கீழ் நான்கு, ஐந்து பேர்கள் தான் காவலாக இருக்கிறார்கள். அவர்களும் சாவூர்பரஞ்சோதி வீட்டில் சமையல் செய்து கொண்டும், வீடு சுத்தம் செய்து கொண்டும் இருக்கிறார்கள். அதுவும் பிரச்சினையாக வரப் போகிறது.''

''இல்லை அக்கா. நீங்கள் தவறாகச் சொல்கிறீர்கள். பிரச் சினையை நாம் செய்யவில்லை. மறவர்கள் செய்தார்கள். அந்தச் சிற்பி செய்தார். கைகள் கட்டப்பட்ட ஒரு வீரனை முரட்டுத் தனமாக அவர் தாக்கினார். அதுதான் தவறாகிவிட்டது.''

''ஆக பலதவறுகள் நடந்துவிட்டது என்று சொல்லுங்கள்.''

வேறொரு பெண் கவலையோடு பேசினாள்.

''ஒரு நல்ல விஷயம் ஆரம்பிக்கும்போது எத்தனை இடைஞ்சல் கள்...''

''ஒரு இடைஞ்சலுமில்லை. எனக்கு எது பற்றியும் கவலை யில்லை. யார் என்ன சொன்னாலும் நான் என் காரியத்திலேயே குறியாக இருக்கப் போகிறேன். சரி.. சரி.. மேல்மாடியில் இருப்பவர்கள். பின் பக்கம் இருப்பவர்கள். வாசல் வெளியில் இருப்பவர்கள் அத்தனை பேரும் கூடத்திற்கு வாருங்கள்.''

அவள் கைதட்டி அழைத்தாள்.

பெண்கள் அவர்களைச் சூழ்ந்து கொண்டார்கள்.

''நான் ஸ்ரீ இராஜராஜர். நீ வானதி. அவள் பட்டமகிஷி. இவள் பஞ்சவன்மாதேவி. இவள் பிரம்மராயர். இவள் பழுவேட்ட ரையர். நீ இளவரசர் இராஜேந்திரர்.. செய்கிறாயா..''

அங்கே குதூகலத்தில் குரல்கள் கிறீச்சிட்டன. இன்னும் சில பெண்கள் மேலைச்சாளுக்கியத்திற்கு அரசர்களாகவும், வீரர்களாக வும் தேர்ந்தெடுக்கப் பட்டார்கள். எல்லோரும் கூடி நின்று சிவனைத் தொழுதார்கள். தமிழை வழிபட்டார்கள். ஸ்ரீ இராஜ ராஜருக்கு நன்றி சொன்னார்கள்.

அவள் தன்னுடைய நாட்டியநாடகத்தை விவரிக்க ஆரம்பித் தாள்.

மாளிகையின் பின்பக்கம் உணவு தயாராகியிருந்தது. சோறும், குழம்பும், வெண்டைக்காயும், வள்ளிக் கிழங்கும் போட்டு இன்னொரு பக்கம் கொதித்துக் கொண்டிருந்தது.



நாட்டிய நாடகத்தைக் கேட்கக் கேட்க அந்தப் பெண்கள் அதிசயத்தார்கள். அவரவர் பகுதியை மனப்பாடம் செய்யப் பரபரத்தார்கள்.

அருண்மொழிப்பட்டன் சிற்பிகள் கூட்டத்திற்கு நடுவே கண்மூடி அமர்ந்திருந்தான்.

''எனக்கு வேறு வழியில்லை. அந்த நண்பரைக் கைது செய்து காராகிரகத்திற்கு அழைத்துப் போவதைத் தவிர வேறு வழியில்லை. யாரைக் கைது செய்கிறேன் என்று எனக்குத் தெரியும். ஆனால், மறவர்கள் மிகக் கோபமாக இருக்கிறார்கள். கைகள் கட்டிய ஒரு மறவனை நீங்கள் அடித்துத் தாக்கியதென்பது மிகப்பெரிய பிசகு.

மன்னிப்பு கேட்டாலும் மன்னிப்பு தரமுடியாத குற்றம். தயவு செய்து, இதை உங்களுடைய தலைவர் பெருந்தச்சரிடம் சொல்லுங்கள். நான் என்ன செய்வது என்று எனக்கு யோசனை சொல்லச் சொல்லுங்கள். ஒரு மறவனைத் தாக்கியவனை எந்த மறவனும் அவ்வளவு எளிதில் விடமாட்டான். இது வழக்கு மன்றம் ஏறும். குற்றவாளியாக்கப்பட்ட ஒருவரைத் தாக்கியதாக அந்தச் சிற்பியின் மீது குற்றம் சுமத்தப்படும். குற்றம் சுமத்தப்பட்ட பிறகு கைது செய்து அவரை அடிப்படையாக மூன்று நாள் காவலில் வைப்பது மரபு. துடித்துப் போவீர்கள் என்று தெரியும். அதனால்தான் சொல்கிறேன், இதைத்தவிர்க்க வேண்டுமாயின் பெருந்தச்சர் சக்ரவர்த்தியாரோடு பேசவேண்டும்.

பெருந்தச்சர் தலையிட்டாலொழிய அவரைக் காப்பாற்ற எனக்கு எந்த வழியும் தெரியவில்லை. பெருந்தச்சர் தலையிட்டா லும் காப்பாற்றிவிட முடியுமா என்பதும் எனக்குக் கவலையாக இருக்கிறது. ஏன் அலட்டலாக இருக்கிறீர்கள் என்று எனக்குப் புரியவில்லை.

உங்களுக்குப் பல்வேறு அதிகாரங்கள் யாரோ கொடுத்து விட்டார்கள் என்று நினைக்கிறீர்களா? அதுவும் எனக்குக் கேள்வி யாக இருக்கிறது. நீங்கள் சிற்பிகள். கலைஞர்களான உங்களுடைய போராட்டம் பாறைகளோடுதான். மனிதர்களோடு அல்ல. உங்கள் நண்பர் காட்டிய வன்முறை மிகமிக மோசமானது.''

''உபதளபதி அருண்மொழிபட்டர் அவர்களே, உங்கள் மனைவியை நான் ஏதேனும் மோசமான விதத்தில் நடத்தினால் நீங்கள் என்ன செய்வீர்கள்.''

''தாக்கலாம்.''

"அதுதானே நடந்தது."

"இல்லை. அது நடக்கவில்லை. உங்கள் கையில் ஒரு வாள் எடுத்துக்கொண்டு, என் கையில் ஒருவாள் கொடுத்துவிட்டு நாம் இருவரும் போர் செய்யலாம். நேருக்கு நேர் நின்று தாக்கிக் கொள்ளலாம் அல்லது என்னை நீங்கள் தாக்கி அடிக்க முடியாது என்று தெரிந்தால் உடனடியாக அருகிலுள்ள பெருந்தனக்கார ரிடம் போய் உபதளபதி அருண்மொழி இப்படிப்பட்ட குற்றம் செய்திருக்கிறார். என்ன செய்வது என்று சொல்லலாம். பெருந் தனக்காரர் வேறு சில வீரர்களுடன் வந்து என்னைக் கைது செய்ய லாம். இதுதான் இந்த தேசத்தின் வழிமுறை. அந்த மறவன் கைகள் கட்டப்பட்ட நிலையில் அவன் முகத்தைக் குத்திக் கிழித்ததென்பது பேடித்தனம்."

அந்த விமர்சனத்திற்கு சிற்பிகள் சீறினார்கள். பல் கடித்தார்கள். கால் உதைத்தார்கள்.

ஆனால் அருண்மொழி அசையாது அமர்ந்திருந்தான்.

சீருடையாள் வேகமாக தன்வீடு நோக்கி ஓடிவந்தாள். ராஜராஜி சொல்கின்ற சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீஇராஜராஜத்தேவருடைய வரலாற்று நாடகம் பற்றி எதுவும் அவள் மனதில் ஒட்டவில்லை. மனம் முழுவதும் குணவன் நித்தவினோதப் பெருந்தச்சனின் முகமே அடைத்துக் கொண்டிருந்தது. தன்னால்தான் இந்த விஷயம் பெரியதாயிற்று. தன்னால்தான் குணவன் நித்தவினோதப் பெருந்தச்சனுக்குக் கெடுதல் வந்துவிட்டது என்று நினைத்தாள். அங்கே துக்கமும், கலவரமும் மாறிமாறி அவளைத் தாக்கின.

இப்பொழுது எங்கிருப்பான். தன் வீட்டுக்கு வந்திருப்பானா அல்லது சிற்பிகள் கொட்டகையில் இருப்பானா?

அவன் அவள் வீட்டில் இல்லை.

அவளுக்கு வருத்தமாக இருந்தது. அவள் ஓடிப்போய் விசாரித்தாள்.

மறுநாளே அருண்மொழி, குணவனைக் கைது செய்யப் போவதாக வீட்டிற்கு உள்ளே உள்ளவர் வெளியே உள்ளவரிடம் சொல்ல, வெளியே உள்ளவர் தெருவில் உள்ளவரிடம் சொல்ல, தெருவில் உள்ளோர் அந்தப் பகுதி முழுக்க அந்தச் செய்தியைப் பரப்பினார்கள்.

சிற்பிகள் கூட்டம் ஒன்று திரண்டது. அவர்கள் குடும்பம் தெருவை அடைத்துக் கொண்டது.



"குணவன் எங்கே."

பெருந்தச்சரிடம் போயிருப்பதாகச் சொன்னார்கள். இல்லை என்று பலர் மறுத்தார்கள்.

கோட்டையை நோக்கி குதிரையில் போயிருப்பதாகவும், சக்ரவர்த்தியிடம் நேரே பேசி தன்னிலை விளக்கம் சொல்லத் தீர்மானித்திருப்பதாகவும், அவனுக்கு நெருங்கியவர்கள் பேசிக் கொண்டார்கள். கோட்டையை நோக்கிப் போனாரா. இல்லையா தெரியாது என்றார்கள்.

குணவனிடம் கூடவேயிருந்து வெற்றிலை மடித்துக் கொடுக்கும் பையன் சொன்னான்.

குணவன் கோயில் கருவறையின் ஆழத்தில் இறங்கி குழியில் பட்டைக்கருங்கல் பதித்து, பதித்ததை இழைத்து வேலை பார்த்துக் கொண்டிருப்பதாகவும், வெறி பிடித்ததுபோல் வேலை செய்வ தாகவும், உயரே பார்த்து சிவனே.. சிவனே.. என்று அழுததாகவும் வருத்தத்தோடு சொன்னான்.

இரண்டு பேர் கோயில் நோக்கி ஓடினார்கள். மற்றவர்கள் ஓட முயற்சிக்க சிலபேர் தடுத்தார்கள்.

அவன் பைத்தியக்காரனல்ல. அவனுக்கு என்ன செய்வதென்று தெரியும். ஒட்டு மொத்தமாய் போய் விஷயத்தைப் பெரிதாக்கா தீர்கள். அமைதியாக இருங்கள் என்று பெரியவர்கள் வேண்டிக் கொண்டார்கள்.

சீருடையாள் வேகமாக நடந்தாள். வாசலில் காவலர்களால் தடுக்கப்பட்டாள்.

"அம்மா இதற்குமேல் சிற்பிகள் போக மட்டுமே உரிமை யுண்டு."

"நான் குணவன் நித்த வினோதப்பெருந்தச்சனின் அனுக்கி."

"தெரியுமம்மா... தஞ்சை முழுவதற்கும் தெரியும். ஆயினும் உங்களை அனுமதிக்க என்னால் முடியாது."

"அவர் மனநிலை சரியில்லாது இருக்கிறார். சற்றுத் தொந்தரவு ஏற்பட்டது. அவரை நான்தான் சமாதானம் செய்யமுடியும். மற்றவர்கள் பேசத்தான் முடியும்."

அவள் மிருதுவாகப் பேசினாள். அவன் அவளை உற்றுப் பார்த்தான்.

"ஆபத்திற்குப் பாவமில்லை ஐயா. என்னைப் போகவிடுங்கள்" கைகூப்பினாள்.

அவன் சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு சரியென்று தலையசைத்தான்.

குகை போன்று ஒரு பாதை மரப்பலகை வைத்து, கட்டைகள் வைத்து கருவறைநோக்கிப் போயிருந்தது. மண்மேடு நல்ல உயரத்திற்கு வந்திருந்தது. யானைகளோ, ஆட்களோ போகவேயில்லை. சில சிற்பிகள் மட்டும் உச்சியில் அளவெடுத்துக் கொண்டிருந்தார்கள். ஏதோ ஒரு அடிமைச் சேவகன் அளவுப் பலகையை தோளில் தூக்கி நடந்து கொண்டிருந்தான். கருவறைப் பகுதிக்குள் நுழைய நுழைய இருட்டு அதிகமாயிற்று. தீப்பந்தங்கள் அங்கங்கே எரிந்து கொண்டிருந்தன. முன்னே ஓடிப்போனவர்கள் அந்த கருவறைக் குழியைச் சுற்றி நின்றிருந்தார்கள்.

குணவன் கீழிருப்பதும், பேசுவதும் எதிரொலியாய் கேட்டது.

''எதற்கடா பயப்படுகிறீர்கள். நானென்ன அஞ்சி ஒளிந்து கொண்டிருக்கிறேன் என்று நினைக்கிறீர்களா. இல்லையடா. என்னை அவர்கள் கைது செய்யலாம். சிறைச்சாலையில் போடலாம். நாடு கடத்தலாம். அதற்கு முன்பு இந்தக் கருவறை விஷயத்தைச் சரிசெய்யவில்லையெனில் என்ன செய்தாலும் இந்தக் கோயில் பூரணமாகாது. இந்த இடத்தை இழைத்து மழமழப்பாக்கி பிசிறில்லாமல் செய்தால்தான் பாணம் இறங்கும்.

அதற்குமேல் ஆவுடையாரை அடுக்க முடியும். இந்த வேலை செய்ய முடியவில்லை என்றால், பிறகு கோயில் கட்டி என்ன பயன். மேலே உள்ள அடுக்குகளை நீங்கள் செய்து விடுவீர்கள். பெருந்தச்சர் முடித்துவிடுவார். இந்த இடம் கடினமான இடம். இது சரியாகப் பூர்த்தியாகாவிட்டால் பாணம் அமர்வது கடினமானது. அதனால்தான் உள்ளே இறங்கினேன்.

இந்தப்பாணம் எட்டுப் பட்டைகளாகக் கொண்டு உள்ளே இறங்கப்போகிறது. இந்த எட்டுப் பட்டைகளின் முனைகளுக்கு நேரேயும் கோடுகள் கிழிக்கப்படவேண்டும். கோடுகள் சந்துகள் போலக் குடையப்பட வேண்டும். அப்போது மருந்து அந்த இடத்தில் அழுத்தமாக நிற்கும். அரைநாள் வேலை செய்து முடித்து விடுவேன். பிறகு அவர்கள் என்னை கைது செய்துவிடலாம்.''

''உங்களைப் போய் யார் கைது செய்வார்கள் என்று ஒருவன் கேட்டான்.

''நான் தவறு செய்துவிட்டேனடா. சீருடையாளை அடித்து விட்டான் என்பதாலேயே கட்டி வைத்திருந்தவனை அடித்து நொறுக்கிவிட்டேன். அது தவறு. அவன் கைகளை விடுவிக்கச் சொல்லி அவனோடு போருக்குப் போயிருக்க வேண்டும். அப்படிப் போருக்குப் போயிருந்தால் என்னை அவன் அடித்து நொறுக்கியிருப்பான். நான் இறந்திருப்பேன். பின்னால் கையைக் கட்டியிருந்த வீரனை அடித்தது பிசகு. பெரும் தவறு. இதற்கு நிச்சயம் தண்டனை உண்டு. வேலை செய்ய விடுங்கள்.''



''சீருடையாள் வந்திருக்கிறார்.''

''இங்கு ஏன் வருகிறாள்.''

அவன் சீறினான். சீருடையாள் அமைதியாக நின்றிருந்தாள்.

அவனிடமிருந்து எந்த அசைவும் இல்லை. அவன் சட்டென்று கயிறு பிடித்து மேலே வந்து உடம்பிலுள்ள தூசியினை உதறிக் கொண்டான். அவன் தசை முழுவதும் மெல்லிய மண் படர்ந்திருந்தது. நடந்து வந்தான். தீப்பந்தத்திற்கு அருகே இருக்கின்ற சீருடையாளை உற்றுப் பார்த்தான்.

''என்ன.. என்ன கவலை. கைது செய்யப்படுவேன் என்றா..''

''இல்லை. என்னால்தான் இது நிகழ்ந்துவிட்டது.''

''உன்னால் அல்ல. தேவையில்லாமல் பேசாதே. எந்த ஆணும் மனைவி அடிபடுவதைப் பார்த்துக் கொண்டு சும்மாயிருக்க முடியாது. நான் செய்தது சரி. ஆனால் கட்டப்பட்டவனை அடித்ததுதான் பிசகு. இதற்குத் தண்டனை இருக்கும். நீ போ. இந்த வேலையை முடித்துவிட்டு வருகிறேன்.''

தயங்கினாள்.

''தயவு செய்து போ. உன்னைக் கரம் கூப்பி கேட்டுக் கொள்கிறேன். நீ இங்கு இருந்தால் என்னால் வேலை செய்ய முடியாது. நான் இந்த வேலையை முடித்து விட்டு உன் வீட்டிற்கு வருகிறேன். சரியா...''

அவளைத் துரத்துவதுபோல பேசினான். அவள் மெல்ல அருகே வந்தாள்.

அவன் தலைமுடியைத் தடவிக் கொடுத்தாள். கன்னங்களில் முத்தமிட்டாள். நெற்றியில் முத்தமிட்டாள்.

''ஒருவேளை நீங்கள் கைது செய்யப்பட்டால், நான் தற்கொலை செய்து கொள்வேன்.''

சொல்லிவிட்டு நகர்ந்தாள்.

அவன் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான். அவன் பார்வையில் காதல் ததும்பியது.

இவள் அனுக்கியல்ல. இவள் மனைவி. இவளைத் தவிர வேறு எந்தப் பெண்ணையும் என்னால் நினைக்க முடியாது. எனக்காக உயிரையும் தர சித்தமாக இருக்கிறவளை விட்டுவிட்டு, வேறு எவளையும் திருமணம் செய்ய முடியாது. எனக்கு இரண்டு, மூன்று, நான்கு என்று எந்த மனைவிகளும் தேவையில்லை. இவள் போதும் இவள் தேவரடியாராக இருந்தால் என்ன. மனைவியாக இருக்க முடியாதா. என்னால் வேறு பெண்ணை நினைத்துக்கூட பார்க்க முடியாது.

அவன் மறுபடியும் கயிறு பிடித்தான். தாவி கீழிறங்கினான். உளியை எடுத்தான். வேகமாக, வேகமாக கீறிக்கீறி வேலை செய்யத் துவங்கினான்.

தொலைதூரத்தில் ஒரு சிறு குதிரைப்படை ஒன்று சிற்பிகள் இடம் நோக்கி வந்தது. சிற்பிகள் கலவரமானார்கள்.

ஒருவேளை குணவன் நித்தவினோதப் பெருந்தச்சன் கைது செய்யப்பட்டால் மறித்து நிற்க வேண்டும் என்று எல்லோருக் குள்ளும் தோன்றியது.

கருவூர்த்தேவர் இரண்டு வேர்களுக்கு நடுவே சாய்ந்து கொண்டிருந்தார். தொலைவிலிருந்து பார்க்க ஒரு சிம்மாசனத்தில் வீற்றிருக்கின்ற அரசர்போல காணப்பட்டார். அந்த இரண்டு வேர்களும் சிம்மாசனத்தின் கைப்பிடி போல இருக்க பின்பக்கம் குழிவாக சாய்ந்து கொள்ள வசதியாக இருக்க, கீழே மெத்தென்று இலைகள் படிந்த மண் இருக்க, அதன் மீது பாய் போட்டு அமர்ந்து வெறுமே தொலை தூரம் பார்த்துக் கொண்டிருந்தார். அவர் உடம்பில் மீண்டும் மீண்டும் சிலிர்ப்பு ஏற்பட்டது.

அவர் சிலிர்த்துக் கொள்வதை அந்த அதிகாரிச்சி உற்றுப் பார்த்தாள்.

''எதற்கய்யா தவிக்கிறீர்கள்.''

''ஆமாம். ஏதோ ஒரு தவிப்பு இருக்கிறது. உடம்பு முழுவதும் யாரோ கீறுகிறார்கள். சந்து எடுக்கிறார்கள்.''

''சந்து எடுப்பது என்றால் என்ன.''

''ஒரு இடத்தில் பாறைகளை வைத்து அடுக்கிவிட்டு அந்தப் பாறைகளில் மெல்லியதாக, நீண்டதாய் ஒரு சந்து எடுப்பார்கள். இப்படிப் பல சந்துகள் எடுக்கும்போது, அது மருந்து ஊற்றி கெட்டிப்படுத்துகின்ற இடமாக இருக்கும். அந்தச் சந்துகளில் மருந்து போய் படர்ந்து அந்த விஷயத்தைக் கெட்டியாகப் பற்றிக் கொள்ளும். அது கருவறைக் குழியாக இருக்கிறது. யார் இந்த நேரம் சந்து எடுக்கிறார்கள். நேரம் கெட்ட நேரத்தில் இந்த வேலை செய்கிறார்கள். கஷ்டகாலம் கஷ்ட காலம்.''



''என்ன... என்ன நடந்தது.''

அதிகாரிச்சி ஆவலாக அவரைப் பார்த்தாள்.

''பெண் பிள்ளை உள்ளே நுழைகிறது நல்லதில்லையே..''

அவர் கன்னத்தில் கை வைத்துக் கொண்டார்.

''ஆனால், அன்பு நல்லதில்லை என்று எப்படி சொல்வது. அன்பு நல்லதுதானே.''

''நீங்கள் சொல்வது புரியவில்லை.''

''எனக்கும் புரியவில்லை.''

அவர் முகத்தைப் பொத்திக் கொண்டார். இடம் வலதும் பார்த்தார். எழுந்தார்.

''எனக்குப் பசிக்கறதடி. நான் போய் ஏதேனும் இலைகள் தின்றுவிட்டு வருகிறேன்.''

''சமைத்து வைத்திருக்கிறேனே.''

''இதைச் சாப்பிட்டால் வேலைக்கு ஆகாது. நான் வேறு சிலது சாப்பிட வேண்டும். அப்போதுதான் எனக்குள் ரத்தம் பலம் பெறும்.''

கருவூர்த்தேவர் அடர்ந்த வனப்பகுதி நோக்கி நடந்தார்.

சீடப்பிள்ளைகள் பின் தொடரலாமா என்று எழுந்தார்கள். ஆவலோடு பார்த்தார்கள். திரும்பினார்.

''வேண்டாம். நாளை இரவுக்குள் வந்துவிடுவேன்.'' என்று சொன்னார்.

அவர் நடந்து போவதைப் பார்க்கும்போது அவருக்குள் கவலை இருப்பதுபோல் அந்தச் சீடப்பிள்ளைகளுக்குத் தோன்றியது.

''என்ன செய்யப் போகிறார் என்று உங்களுக்குத் தெரிகிறதா.''

அந்த அதிகாரிச்சி பெண்பிள்ளை சீடப் பிள்ளைகளைக் கேட்டாள்.

ஒருவன் தீவிரமாக யோசித்தான். அவர் இருந்த இடத்தையே பார்த்தான்.

''பலம் பெறுவதற்கு என்கிறார். அவர் உடம்புக்குள் இன்னும் வேறு ஏதோ ஒரு விஷயத்தை ஏற்றிக் கொள்ள வேண்டும். வேறு

ஏதோ ஒரு விஷயத்திற்கு அவர் உபயோகமாக வேண்டும். அவருடைய விந்தோ, ரத்தமோ அல்லது வேறு ஏதேனுமோ அவருடைய உடம்பில் உருவாகி, வேறு எவருக்கோ பயன்படப் போகிறது. யாருக்கு எங்கு என்ன வேதனை என்று தெரியவில்லை. பாவம், இந்த வெயிலில் கிளம்பிப் போயிருக்கிறார். ஆனாலும் ஒரு பொழுதும் இவரால் தனக்கென்று ஒரு சுகத்தை, ஒரு அமைதியைத் தேடிக்கொள்ள முடியவில்லை. எந்நேரமும் மற்றவருக்காகத் தான் அலைந்து கொண்டிருக்கிறார் குருநாதர்.''

அவர் நின்ற இடத்து மண்ணை எடுத்து அவன் நெற்றியில் பூசிக் கொண்டான்.

நடந்து போன கருவூர்த்தேவருக்கு மெல்லியதாய் புன்னகை வந்தது. அந்தப் பையனை ஆசீர்வதித்தார். அவனுக்கு மனம் கூடியது. அவர் அமர்ந்த இடத்திற்கு அருகிலேயே அவன் சம்மணமிட்டு உட்கார்ந்து கொண்டான்.

உபதளபதிகள் ஒன்றாகக் கூடிப் பேசினார்கள்.

''அந்த வீரன் செய்தது தவறு. குடித்துவிட்டு ஒரு பெண் பிள்ளையைக் கழியால் அடித்தானாம்.''

''அவள் எட்டி உதைத்தாள்.''

''ஒரு பெண் சும்மா எட்டி உதைப்பாளா. நீ என்ன சொன்னாய். நீ எப்படி நடந்து கொண்டாய். குடித்து விட்டு தேவரடியார் இருக்கும் இடத்திற்கு ஒரு மறவன் போனால் அவன் மறவனல்ல. குடிகாரன்தான். குடிகாரன் வேறு. மறவன் வேறு. எல்லா மறவர்களும் குடிகாரர்களல்ல. குடித்துவிட்டு பெண்ணை அடிப்பவன் மறவனல்ல. மறவனின் கம்பீரம் அங்கு செத்துப் போயிற்று.''

ஓர் உபதளபதி சொல்ல, ''அதற்காக கட்டி வைத்து அடிப்பீர்களா. அது தவறு. அந்தச் சிற்பி செய்தது பிசகு.''

''ஆனால், அந்தச் சிற்பி ஏன் செய்தார். அவனுடைய பெண் பிள்ளையைக் கழியால் அடித்திருக்கிறாய். அவன் கோபப்பட மாட்டானா.''

''வாளெடுத்து போர் புரிந்திருக்க வேண்டும்.''

''நன்றாக இருக்கிறதே கதை. உனக்கு போர் புரியத் தெரியும். இடையறாது பயிற்சியில் ஈடுபட்டு உன் தசை வலிமையைப் பெருக்கிக் கொண்டிருக்கிறாய். அவன் மெல்லிய கைகளால் கருங்கல் பிடிக்கிறவன். சிற்பம் செய்கிறவன். அவன் உன்னத மானவன். அவனால் பல வேலைகள் நடந்து கொண்டிருக்கிறது.



சக்ரவர்த்திக்கு அவன்மீது மிகப்பெரிய பிரியமும், மரியாதையும் உண்டு.

இந்தக் கோயில் கட்டும் பெருந்தச்சரைவிட்டு அவனை முக்கியமாக எல்லாப் பெண்களும் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். இவன் மனைவியைக் கழியால் அடித்துவிட்டு, அவன் அடிக்கிறான் என்றால் என்ன அர்த்தம். அவனைக் கொஞ்சவா செய்வான். அவன் காலில் விழுந்து வணங்கவா செய்வான். முட்டாள்தனமாக இருக்கிறதே நீங்கள் பேசுவது.''

வேறொரு உபதளபதி சீற எல்லா உபதளபதிகளும் மௌனமாக இருந்தார்கள்.

''இது மிகப்பெரிய அவப்பெயர். நமக்குக் கேவலத்தைக் கொண்டு வந்து கொடுக்கும். இவனுடைய ஒரு செய்கையில் நாம் அத்தனை பேரும் குற்றவாளிகளாகப் போகிறோம். இனிமேல் மறவர்கள் குடித்தால் தஞ்சைக்குள் நுழையக்கூடாது என்று கட்டளை வந்தால் நாம் ஆச்சரியப்படுவதற்கில்லை. நிம்மதியாக வீட்டில் மதுவகை வைத்து குடித்துக் கொண்டிருந்தேன். மனைவியோடு சல்லாபித்துக் கொண்டிருந்தேன். இப்பொழுது அதற்குக் கேடு வந்துவிட்டது.''

''ஆனால், அருண்மொழி நம் பக்கம் இருக்கிறார். ஏன் அப்படி அடித்தாய் என்று விசாரிப்பதற்காக சிற்பிகள் இடத்திற்குப் போயிருக்கிறார். சாவூர்பரஞ்சோதியை வன்மையாகக் கண்டித்திருக்கிறார். எப்படி வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாய் என்று அவரை இடித்துரைத்தார். இது ஒரு விஷயம்தான் ஆறுதலாக இருக்கிறது. ஆனால், இதற்காக அருண்மொழி வருத்தப்படப் போகிறார் என்ற பயமும் எனக்கு உண்டு.''

''இதெல்லாம் சிறிய விஷயங்கள். ஒரு விஷயம் பயமாக இருக்கிறது.''

சற்று வயதான ஒரு உபதளபதி. பல போர்களில் கலந்து கொண்டு பல வீரத் தழும்புகள் பெற்று, அஞ்சாநெஞ்சர் என்று பல பேராலும், பல விதமாகப் பாராட்டப் பெற்றவர். கூட்டத்தின் விளிம்பிலிருந்து குரல் கொடுத்தார். எல்லோரும் அவர் பக்கம் திரும்பினார்கள்.

''சோழதேசத்தில் ஒற்றுமை குறைந்துவிடுமோ என்ற பயம் ஏற்படுகிறது. அப்படி ஒற்றுமை குறைந்துவிட்டால் சோழதேசம் பலவீனப்படும். நாம் பெற்ற வெற்றிகளுக்கு அர்த்தமில்லாது போய்விடும்.''

"இனி மேல் எங்கே பகைவர்கள். யார் எதிர்க்கக் கூடும் சோழ சாம்ராஜ்ஜியத்தை... பாண்டியர்களைத் தலை தூக்கவொட்டாது செய்தாகிவிட்டது. சேரதேசம் என்ற ஒன்று இருக்கிறதா என்றே தெரியவில்லை. கீழைச்சாளுக்கியம் பெண் கொடுத்து பெண் வாங்கி பின்னிப் பிணைந்திருக்கிறது. கங்கதேசமும், ரெட்டை பாடியும் நம் வசமாகி பல காலங்களாகின்றன. எகிறி எகிறி ஆடிக் கொண்டிருந்த மேலைச் சாளுக்கியத்தையும் நிர்மூலம் செய்து விட்டோம். இனி என்ன பயம். எவர் எதிரி."

"இது அதிகப்பிரசங்கித்தனமான பேச்சு. அபத்தமான பேச்சு."

ஒரு வீரன் முழங்கியதற்கு எதிராக அந்த முதியவர் கனமான குரலில் பேசத்துவங்கினார்.

"ஒரு புல்பூண்டு கூட இல்லாமல் கட்டாந்தரையாகச் செய்து விட்டோமா. இல்லை. மேலைச்சாளுக்கியர்கள் பின் வாங்கியிருக் கிறார்கள். கடைசி வரைநாம் போய் அவர்களை வெற்றி கொள்ள வில்லை. அவர்கள் தேசமான மான்யகேடத்தை நாம் கைப்பற்ற வில்லை. துங்கபத்ரையைக் கடந்து போரிட்டு, பிறகு துங்கபத்ரை யிலிருந்து மீண்டு வந்துவிட்டோம். கரையோர கிராமங்களை, நகரங்களைச் சீரழித்துவிட்டு வந்தோம். மேலைச்சாளுக்கியம் நம் வசப்படவில்லை. மறுபடியும் யுத்தம் வரும். இன்றில்லையேனும் நாளை, நாளை மறுநாள் அல்லது நான்கு வருடங்கள் கழித்து வெகுநிச்சயம் யுத்தம் வரும். எனவே, அயர்ந்து இருப்பதில் அர்த்தமில்லை. இந்த மாதிரி சிறுசிறு சச்சரவுகள் நம்மை பலவீனப் படுத்தும். மறவர்களை இழிவாகப் பார்க்க வைக்கும்."

"இந்த விஷயம் சக்ரவர்த்திக்குப் போகுமா."

"வெகு நிச்சயமாய் சக்ரவர்த்திக்குப் போகும்."

"சக்ரவர்த்தி என்ன செய்வார் என்று நினைக்கிறாய்"

அந்த முதிய மறவன் யோசித்தான்.

"இருபது வருடங்களாக நான் சக்ரவர்த்தியையே உற்றுக் கவனித்து வருகிறேன் என்பது உண்மையானால், இந்த விஷயத்தில் மறவர்களை சக்ரவர்த்தி நிச்சயம் தண்டிப்பார்."

கூடியிருந்த மறவர்கள் கால் உதைத்துக் கொண்டார்கள். நெஞ்சில் அறைந்து கொண்டார்கள். சுவற்றில் முட்டியால் குத்திக் கொண்டார்கள்.

"இத்தனை வேதனைப்பட்ட பிறகும் மறவருக்கு ஏன் இப்படியொரு போதாத காலம்."



யாரோ உரத்த குரலில் அலுத்துக் கொண்டார்கள்.

"அதிகம் வேதனைப்படவில்லையோ என்றுதான் எனக்குத் தோன்றுகிறது. எளிதாக வந்த வெற்றியோ என்று தோன்றுகிறது. அதனால்தான் மறவர்களை மறவர்களே மதிப்பதில்லை. உயிரிழப் புக் குறைவு. அதனால்தான் உற்சாகம். அதனால்தான் குடித்து விட்டு பெண்கள் எதிரே வம்பு பண்ணிக் கொண்டிருக்கின்ற திமிர் வந்துவிட்டது."

அந்த முதிய மறவர் உரத்த குரலில் பேச, மற்றவர்கள் ஆமோதிப்பாய் சிறுசிறு சலனங்களை எழுப்பினார்கள்.

"சரி, பிரச்சினை தீர என்ன வழி, மறுபடியும் ஒரு சுமூகமான ஒரு நிலைமைக்கு வரவேண்டுமே. இது முக்கியமல்லவா." ஒரு இளமையான மறவன் கேட்க, அவனைச் சுட்டிக்காட்டி முதிய மறவன் பாராட்டினான்.

"சிற்பிகளிடமிருந்து விலகியிருங்கள். பொது மக்களை மிக மரியாதையாக அணுகுங்கள். பெண்கள் விஷயத்தில் எந்த சச்சரவும் செய்யாதிருங்கள். உங்கள் வீட்டுப் பெண்களைக்கூட மிக மரியாதையாக நடந்துங்கள். யார் குடித்துவிட்டுக் கத்துகிறார்கள் என்று விசாரித்து, யாரோ ஒரு மறவன் என்றுதான் மக்கள் பேசுகிறார்கள். இதிலிருந்து நாம் மீளவேண்டும்."

"மறவனைக் குடிக்கக்கூடாது என்கிறீர்களா. புலியை மாமிசம் தின்னக்கூடாது என்று சொல்வீர்களா."

"பசித்தாலொழிய அந்த விலங்குகள் மாமிசம் உண்பதில்லை. அவசியமானாலொழிய மறவன் குடிக்கக்கூடாது."

முதியவர் தீர்மானமாகப் பேச, அந்த மறவர்கள் தலைகுனிந்து கொண்டார்கள். உண்மை என்று தலையாட்டினார்கள்.

"போதும். அதிகம் துக்கப்பட வேண்டாம். எழுந்து வேலையைக் கவனியுங்கள். போர்க்கருவிகளைச் சீராக்க கருமார்களுக்கு உதவி செய்யுங்கள். காவிரிக்கரை ஓரமாக ஒரு மேடு நிலம் இருக்கிறது. அந்த இடத்தை கருமார்கள். தங்களுக்கு வேண்டுமென்று கேட் கிறார்கள். இராஜேந்திரர் கொடுத்துவிடுவார் என்றும் சொல்லப் படுகிறது. அந்த இடத்தை வணிக சமுதாயத்தினர் வாங்கியிருக் கிறார்களாம். மறுபடியும் அவர்களிடமிருந்து இராஜேந்திரர் வாங்கி கருமார்களுக்குக் கொடுத்து விடுவார் என்று சொல் கிறார்கள்."

"நமக்கு அப்படியொரு நிலம் கொடுக்கப்படக் கூடாதா."

''எதற்காக மேடும், கரம்பும் வேண்டுமென்று கேட்கிறீர்கள். நல்ல விவசாய நிலம் கேட்கலாமல்லவா.''

''இல்லை. விவசாயம் செய்ய வேளாளர்கள் இருக்கிறார்கள். மேடு நிலமாக இருந்தால் நமக்கு நல்லது. வீடுகள் கட்டிக் கொள்ள உதவும்.''

''இம்மாதிரியான உருப்படியான வேலைகளைச் செய்வதை விட்டுவிட்டு, குடித்துவிட்டு அலைவதில் என்ன பயன். என்றைக்கு நம் குடும்பங்களைக் கவனிக்கப் போகிறோம். என்றைக்கு நம் குழந்தைகளை நல்ல நிலைக்குக் கொண்டு வரப்போகிறோம். மறவர்களுக்கு என்றுதான் புத்திவரும். எனக்குப் புரியவேயில்லை.''

அந்த முதிய மறவர் அலுத்துக்கொள்ள, எல்லோரும் மௌன மாக அவரையே பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

''ஐயா, இப்போதைக்குப் போதுமென்று நினைக்கிறேன். நாம் இப்படி கூடியிருப்பதுகூட நல்லதல்ல. கலைந்து விடுவோம்.'' என்று யாரோ அவசரமாகச் சொல்ல, அவர் ஆமோதித்தார். மறவர்கள் கலைந்தார்கள்.

சோழ சாம்ராஜ்ஜியத்தின் சேனாபதியும் முதல் மந்திரியுமான அமண்குடி நாட்டு வைஷ்ணவரான கிருஷ்ணன்ராமன் மேல்மாடி யில் பெரிய சிம்மாசனம் போன்ற நாற்காலியில் அமர்ந்திருக்க, அவருக்கெதிரே தர்ப்பைப் பாயில் கோவிந்தன் கௌதமன் சிங்கபிரானும், வில்லிற்கிடந்தான் மங்களாச்சானும் கைகட்டி முதுகு நிமிர்த்தி அவரையே பார்த்தபடி அமர்ந்திருந்தார்கள்.

கிருஷ்ணன்ராமனின் மனைவியும், அருண்மொழிபட்டனின் தாயாருமான பெண்மணி இனிப்புகளும் நீர்மோரும் கொண்டு வந்து அந்த ஒற்றர்களுக்கு எதிரே வைத்தார். கிருஷ்ணன்ராமனின் ஒற்றர்கள் அவைகளை எடுத்துக் கொள்ள வெட்கப்பட்டார்கள்.

இருக்கட்டும். இருக்கட்டும் என்று பவ்யமாக மறுத்தார்கள்.

ஏதோ தீவிரமான சிந்தனையிலிருந்து கிருஷ்ணன்ராமன் மெல்ல குனிந்து இனிப்புகளை நோக்கி, பிறகு அவர்களைப் பார்த்து முறுவலித்தார்.

''எனக்கு வரவில்லை. உங்களுக்கு மட்டும் வந்திருக்கிறதே.'' என்று கண்சிமிட்டினார்.

''ஆமாம். இதென்ன எங்களுக்கு மட்டும் கொடுத்திருக்கிறீர்கள். தாயே, பெரியவருக்கு வைக்கவில்லையா..'' என்று பவ்யமாக கௌதமன் சிங்கபிரான் கரகரத்த குரலில் கேட்டார்.



''சும்மா இரு. எப்பொழுதும் தின்று கொண்டுயிருந்தால் அரசாங்க வேலையை யார் செய்வது.''

அந்த அம்மணி அதட்டலாகப் பேசினாள்.

''நான் தின்று கால்நாழிகை ஆகிவிட்டது.''

அவர் கால்நாழிகையை மிகப்பெரிய நேரம் என்பதாக விவரித் துச் சொல்ல, சிங்கபிரானும் மங்களாச்சானும் வாய்பொத்திச் சிரித்தார்கள்.

''கொடுப்பதற்கு இயலாது. போதும் உண்டது. உடம்பைக் கவனிக்க வேண்டாமா. குறட்டை விட்டுத் தூங்குகிறீர்கள். இதற்கு என்ன காரணம். சுவாசம் சரியில்லை. ஏன் சுவாசம் சரியில்லை. வயிறு நிரம்பி மேலே தள்ளுகிறது. நுரையீரலைச் சிரமப்படுத்து கிறது. எப்பொழுதும் ஏதாவது சிந்தனை. அதனால் ஆழ்ந்த உறக்கமும் வருவதில்லை. குறட்டை விட்டு கனவுகளோடு கூடிய தூக்கத்தை ஏற்படுத்திக் கொள்கிறீர்கள். இதற்குக் காரணம் அதிக மான உணவுகளை உண்பது. உணவைக் குறையுங்கள் பருமனைக் குறையுங்கள் என்று வைத்தியர் சொல்லியும் கேட்கமாட்டேன் என்கிறீர்கள். உங்களுக்கு இனிப்பு கிடையாது'' என்று உரத்த குரலில் சொல்லிவிட்டு நகர்ந்து போனாள்.

''ஐயன். என்னுடைய இனிப்பை எடுத்துக் கொள்ளுங்கள்.''

வில்லற்கிடந்தான் மங்களாச்சான் தட்டை எடுத்துக் கொடுத் தான். தன் பங்குக்கு கோவிந்தன் கௌதமன் சிங்கபிரானும் தட்டு நீட்டினார்.

கிருஷ்ணன்ராமன் இருவரையும் பார்த்துச் சிரித்தார். கையமர்த்தினார்.

''எனக்கு உண்மையில் இந்த உண்டிகளின் மீது விருப்பமே யில்லை. தீவிரமாக யோசிக்கும்போது ஏதேனும் தின்ன வேண்டும் போல் இருக்கிறது. தீவிரமாக யோசிப்பது அதிகமாகிவிட்டதால் தீனியும் பெருத்துவிட்டது. மற்றவரைப் போல வெற்றிலையும், பாக்கும் அடிக்கடி போட எனக்கு மனம் வரவில்லை. இதனால் பற்கள் பாழ்படுகின்றன. பல்லில் சொத்தையும், நோவும் வந்தால் பிறகு உடம்பு முழுவதும் பிரச்சினை வந்துவிடும். நீங்கள் உண்ணுங்கள். எனக்குத் தேவைப்படவில்லை.''

அவர்கள் நிதானமாக உண்டார்கள். ஓரக்கண்ணால் அவர்கள் சந்தோஷமாக உண்பதைப் பார்த்து கிருஷ்ணன்ராமனும்

மகிழ்ந்தார். தனக்குக் கீழே பணிபுரிபவர்கள் நன்கு சாப்பிடுவதும், சந்தோஷமாக இருப்பதும் ஒரு நல்ல எஜமானனுக்குப் பிடிக்கும்.

சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவருக்கும், இராஜேந் திரசோழருக்கும் இதே குணம் தான் இருக்கிறது. மறவர்கள் சிறப்பாக இருக்க வேண்டும். சீராக வாழவேண்டும். செம்மையாக நடக்க வேண்டுமென்று அவர்கள் ஆசைப்படுகிறார்கள். ஆனால், சில சமயம் சில இடங்களில் தவறு ஏற்பட்டு விடுகிறது.

ஒரு மறவனை அந்தப் பெண் சீருடையாள் ஈட்டி காட்டி உதைத்தது தவறு. அந்த மறவன் அங்கு போய் நின்று குடித்துவிட்டு உளறியதும் தவறு. அவளைக் கழியால் அடித்தது பிசகு. அப்படி அடித்தவனைக் கட்டிப் போட்ட பிறகு சீருடையாளின் கணவனான சிற்பி குணவன் நித்தவினோதப் பெருந்தச்சன் அந்த மறவன் முகத்தில் மாறி மாறிக் குத்தியதும் பெரும் குற்றம்.

அவனை அடித்தது குணவன் நித்தவினோதப் பெருந்தச்சன் என்பதால் விஷயம் பெரிதாகிவிட்டது. அடித்த இடம் அருண் மொழிப்பட்டனின் அனுக்கி ராஜராஜியின் வீட்டு வாசல் என்பதால் இன்னும் பெரிதாகிவிட்டது. எதற்காக அத்தனை கூட்டம் என்று கேள்வி கேட்டபோது, ராஜராஜி, சக்ரவர்த்தி உடையாரைப் பற்றி நாடகம் இயற்றியிருக்கிறார். அதை நடிப்பதற்காக தேவரடியார்களை வரச் சொன்னாள் என்று தெரிந்ததும் இந்த விஷயம் இன்னும் அதிகமாகப் பரவிவிட்டது.

ஒற்றர்கள் மூலம் சக்ரவர்த்தி உடையாருக்கு இளவரசர் இராஜேந்திரருக்கும். தனித்தனியாக இந்தச் செய்திகள் போய்ச் சேர்ந்திருக்கும். வெளியிலுள்ள விஷயங்களின் அசைவுகள் அவர்களுக்கு விரைவாக வந்து விடுகின்ற நேரத்தில், தஞ்சைக்குள் நடக்கின்ற இந்த விஷயங்கள் வெகுநிச்சயம் அவர்களுக்குத் தெரிந்திருக்கும். சக்ரவர்த்தி உடையார் கூப்பிட்டு அனுப்புகிற போது இதுபற்றி பேச்சு வந்தால், நிமிடநேரத்தில் இதற்கு ஏதேனும் ஒரு தீர்வு சொல்லியாக வேண்டும். தான் மட்டுமே சிந்திப்பதற்குப் பதிலாக திறமையான இந்த ஒற்றர்கள் இருவரையும் எதிரே வைத்துக்கொண்டு உரத்து சிந்தித்தால், இன்னும் எளிதாகத் தீர்வு கண்டுபிடிக்க முடியும்.

இவர்கள் வந்ததுமே நான் இதுபற்றிக் கேட்கப் போகிறேன் என்று யூகித்துவிட்டார்கள். ஆனாலும் மௌனமாக இருக் கிறார்கள்.



'சக்ரவர்த்தி உடையாரைப்பற்றி பெரும் நாடகம் தயாராகிற தாமே' என்று குதூகலமாகச் சொல்வது போல மங்களாச்சான் நடிக்கிறான்.

'ஆமாம். நானும் கேள்விப்பட்டேன்.' என்று சிங்கபிரான் தொடை தட்டுகிறார்.

தான் மௌனமாக இருப்பதைக் கண்டு அவர்களும் மௌன மாகிவிட்டார்கள். அமைதியாய் சாப்பிட்டுக் கொண்டிருக் கிறார்கள். சாப்பிட்டு முடிந்தவுடன் பேச்சு கொடுக்க வேண்டும். பேசுவதற்கு முன் சிந்திப்போம்.

எது தவறு.

ஆடும் பெண்கள் நூறுபேர் ஓரிடத்தில் குழுமும் போது வீரர்கள் அங்கே நிற்பது இயற்கை. லேசாகப் பரவசக்கூச்சல் போடுவதும் பெரிய தவறில்லை. அப்படிப் பரவசக்கூச்சல் போடும்படியாக அந்த பெண்கள் நடந்து கொண்டிருப்பார்கள் என்பதும் நடக்கக் கூடியதே. அப்படி நூறு பெண்கள் குழுமும் இடத்தில் சாவூர்பரஞ் சோதி ஏன் ஆட்களை நியமிக்கவில்லை. பரஞ்சோதி காவலில்லா மல் விட்டுவிட்டான். எளிதாக காரணம் புரிகிறது. பரஞ்சோதிக்கு ராஜராஜி இந்த திட்டத்தைச் சொல்லியிருக்க மாட்டாள். தானாக பெண்களை வரச்சொல்லி கட்டளையிட்டிருப்பாள். வாசலில் காவல் வேண்டுமென்று அவளுக்கு உரைத்திருக்காது.

முதல் தவறு பரஞ்சோதியின் காவல் இல்லாதது. பரஞ்சோதிக்கு ராஜராஜி முன்கூட்டியே காவல் வேண்டும் என்று சொல்லாதது. இதை எடுத்துக் காட்டினால் அருண்மொழிப்பட்டனுக்கு முகம் சிறுத்துப் போய்விடும். இதில் அவனும் சிக்கியிருப்பதால்தான் விஷயம் பெரிதாகிறது. நான் மண்டையை உடைத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது.

கிருஷ்ணன்ராமன் சிகையை தளரவிட்டு மறுபடியும் முடிந்துகொண்டார்.

சக்ரவர்த்தி உடையாரின் நாட்டியநாடகம் ஒன்று தயாராகும் போது, அதற்கு இடைஞ்சல் செய்ததாக அந்த மறவன் மீது குற்றச்சாட்டு வரும். இது பரிதாபத்திலும் பரிதாபம். அங்கு என்ன நடக்கிறதென்று அவனுக்குத் தெரியாது. இது தெரிந்திருந்தால் ஒருவேளை அவன் அருகே போயிருக்கமாட்டான். வெறுமே நூறு பெண்கள் இருந்ததால் அவன் சிரித்து பல் இளித்து போய் விட்டான். அவன் போனதும் பிசகில்லை. சிரித்ததும் பிசகில்லை.

சற்று அத்து மீறியது பிசகு. அந்தப் பெண் சீருடையாள் வந்து எட்டி உதைத்தது பிசகு. இவன் போய் அடித்ததும் பிசகு.

பத்துப் பெண்கள் கூடியிருந்தால் மறவர்கள்மடக்கிச் சிரிப்பார்களா. ஏகடியும் பேசுவார்களா. உங்கள் வீட்டுப் பெண்களை அப்படிப் பேசினால் நீங்கள் கவனித்துக்கொண்டு சும்மாயிருப்பீர்களா என்றுதான் முதல் கூக்குரல் வரும். தேவரடியாரைப் பார்த்து சிரிக்கலாம் என்று ஒருக்காலும் பதில் சொல்ல முடியாது.

வெளியூரிலிருந்து கோயில் பணிக்காக வந்த தேவரடியார்கள் நம்முடைய பாதுகாப்பிலே இருக்கும் போது, அவர்களைக் கேலி செய்வது தவறான விஷயம். தண்டித்தேயாக வேண்டும். அதற்காக எட்டி உதைத்து விடலாமா. கட்டி வைத்தவன் முகத்திலே மாறி மாறிக் குத்தலாமா என்று மறவர்கள் கூச்சலிடுவார்கள்.

இது சிக்கலான விஷயம். ஒன்றின் மீது ஒன்று படிந்து, பிரிக்க முடியாதபடி ஒன்றை இழுத்தால், ஒன்பது வரும்படியாக சிக்கிக் கொண்டு விட்டது. இதை எப்படித் தீர்ப்பது. தீர்க்க முடியாத விஷயமாகத்தான் இருக்கிறது. சக்ரவர்த்தி இதை எப்படித் தீர்ப்பார். உடனடியாகத் தொடமாட்டார். ஆறப்போடுவார் நேரம் வரும் போது சீறி, புத்தி சொல்வார் அல்லது வேறு ஏதேனும் தந்திரம் செய்வார். ஆனால் நேற்று காலை நடந்த இந்த விஷயம் இன்று காலை வரை சக்ரவர்த்தியின் காதுகளுக்கு எட்டாமலா இருந்திருக்கும் இல்லை, எட்டியும் சக்ரவர்த்தி சும்மாயிருக்கிறார் என்றால், வேறு ஏதோ விஷயம் இருக்கிறதென்றல்லவா அர்த்தம்.

வேறு என்ன விஷயம் இதில் ஒளிந்திருக்கிறது. இன்னும் தீவிரமாக கிருஷ்ணன்ராமன் யோசித்தார். மூக்கு நுனியை அடிக்கடி தடவிக் கொண்டார்.

வில்லிற்கிடந்தான் மங்களாச்சான் மெல்ல கனைத்தான்.

"சொல் மங்களாச்சான். என்ன சொல்ல விரும்புகிறாய்."

"சக்ரவர்த்தியாரிடமிருந்து உங்களுக்கு அழைப்பு ஏதேனும் வந்ததா."

"வரவில்லை."

"வராதது ஆச்சரியமாக இல்லையா."

கேள்வி கேட்ட மங்களாச்சானை கிருஷ்ணன்ராமன் உற்றுப் பார்த்தார்.

"ஆமாம். ஆச்சரியமாக இருக்கிறது. ஏன் உனக்கென்ன தோன்றுகிறது."



"சக்ரவர்த்தியாருக்கு இந்த விஷயம் மிகச்சரியாகப் புரிந்து, அவர் ஏதோ ஒரு திட்டத்தில் மூழ்கியிருக்கிறார் என்று எனக்குப் படுகிறது."

"என்ன திட்டம்."

"நேற்று அரண்மனை வாசலில் ஒரு சண்டை நடந்தது."

"என்ன."

"இரண்டு பேர் துவந்த யுத்தம் செய்து கொண்டார்கள்."

"யாரது."

"கோட்டைக்காவலனும், ஒரு குதிரை சேவகனும்.."

"மறுபடியும் மறவர்களுக்குள் சண்டையா போயிற்று. மறவர்களுடைய மானமே போயிற்று."

கிருஷ்ணன்ராமன் அலுத்துக் கொண்டார்.

"எப்போது நடந்தது இது."

"நேற்று இரவு, சூரியன் சாய்ந்த பிறகு."

"எனக்கு இந்த விஷயம் வரவேயில்லையே."

"அண்ணார் கோவிந்தன் சொல்லியிருப்பாரென்று நினைத்தேன்."

மங்களாச்சான் திகைப்பாகப் பேசினான்.

அது மிகச்சிறந்த நடிப்பாக அங்கிருந்த மற்ற இரண்டு பேருக்கும் தெரிந்தது. ஒருவரையொருவர் ஆழம் பார்க்கின்ற வித்தை அங்கு ஆரம்பித்தது.

"இரவு அரண்மனை வாசலில் என்ன நடந்தது."

கிருஷ்ணன்ராமன் மங்களாச்சானைக் கேட்டார்.

"விச்சாதர முத்தரையன் என்று ஒரு குதிரைச் சேவகன். அவனுக்கு வயது நாற்பத்தைந்தாக இருக்கலாம். பல போர்களில் கலந்துகொண்டு அரசரால் நேரடியாகப் பாராட்டப்பட்டவன்.

ஆரம்ப கால கட்டங்களில் அரசரின் மெய்க்காப்பாளராக இருந்து, பிறகு நடுவில் ஒரு போரில் படுகாயப்பட்டு சற்று விலகியிருந்து வெறும் குதிரைச் சேவகனாக இடம் மாறியவன். அவனுக்கொரு மாமன் மகள். பொன்னழகி. இருவருக்கும் வயது வித்தியாசம் அதிகம். ஆனாலும், பொன்னழகி விச்சாதர முத்தரையனையே திருமணம் செய்து கொள்ள வேண்டுமென்று விரும்பினாள்."

''மாமன் என்றால் எந்த வகையில்...''

''தஞ்சையைச் சேர்ந்த முத்தரையின் தங்கையை, தகடூரைச் சேர்ந்த ஒருவனுக்கு மணமுடித்து வைக்கப் பட்டிருக்கிறது. அந்தத் தகடூர் மாப்பிள்ளையின் சொந்தக்காரர்கள் பொன்னழகியைத் திருமணம் செய்து கொள்ள வேண்டுமென்று விரும்பினார்கள். ஆனால், பொன்னழகிக்கு விச்சாதர முத்தரையனின் மீது விருப்பம் அதிகம்.''

''புரிகிறது.''

''தகடூர்க்காரர்கள் கொஞ்சம் முரடர்கள். முத்தரையன் கொஞ்சம் நாகரிகமானவன். எனவே, இனிமையான முத்தரையனைத் திருமணம் செய்து கொள்ள வேண்டுமென்று பொன்னழகி விரும்பினாள்.''

''குறுக்கே தடுப்பது எது.''

கிருஷ்ணன்ராமன் வினவினார்.

''வயது.''

''அது மட்டும்தானா.''

''இல்லை. முத்தரையனுக்கு இந்த இளம் பெண்ணைத் திருமணம் செய்துகொள்ள விருப்பமில்லை.''

''ஏன்.''

''பல போர்கள் கண்ட முத்தரையன் திருமணம் செய்து கொள்ள வேண்டாம் என்ற முடிவுக்கும் வந்து விட்டான்.''

''அடடே.. என்ன காரணம். உடல் சிரமமா.''

''இருக்கலாம். ஆனால், மெல்ல பௌத்த மதத்தின் மீது அவனுக்குப் பிடிப்பு வந்துவிட்டது என்றும் சொல்கிறார்கள். துறவியாக வேண்டுமென்ற எண்ணமுடையவனாய் திரிகிறான் என்றும் பேசுகிறார்கள். ஆனால், வெளியில் அதை அவன் சொல்லவில்லை. சொன்னதாக எவரும் கேட்டதில்லை.''

''புரிகிறது. மேற்கொண்டு சொல்.''

கிருஷ்ணன்ராமன் உத்தரவிட்டார்.

கோவிந்தன் கௌதமன் சிங்கபிரான் உண்பதில் கவனமாக இருந்தார்.

''பொன்னழகியைப் பல்வேறு விதமாக தங்கள் பக்கம் திசை திருப்ப முயற்சித்தும் முடியாமல்போகவே தகடூர் ஆட்கள் முத்தரையனோடு நேரடியாக மோதத் துவங்கினார்கள். உன்னால்தான் அந்தப் பெண் எங்கள் பக்கம் வரமாட்டேன் என்கிறாள். எங்களில் எவரையும் திருமணம் செய்து கொள்ள மாட்டேன் என்கிறாள்.'' என்று பெருங்கூச்சல் போட, முத்தரையன் கடிந்து கொண்டு பேச, தகடூர் இளைஞன் காரிக்குளிப்பாகை என்பவனும் பேச புறம்படியிலுள்ள ஊர் கூடி அவர்களைச் சமாதானம் செய்து வைத்தது.



இந்தத் தகடூர் இளைஞன் காரிக்குளிப்பாகை என்பவன். வடக்குப்புற வாயிலில் கோட்டைக்காவலாக இருப்பவன், வேண்டுமென்றே முத்தரையனை வழிமடக்கி குடிபோதையில் வம்புக்கு இழுத்துத் தாக்க முற்பட, விச்சாதர முத்தரையன் குதிரைச் சவுக்கால் அடித்து வீழ்த்திவிட்டான். அடிபட்ட காரிக்குளிப்பாகை, ஒன்று நீ உயிரோடு இருக்க வேண்டும் அல்லது நான் உயிரோடு இருக்க வேண்டும். உன்தாய் ஒருவனுக்குப் படுத்து எழுந்தவள் என்றால், என்கூட தனித்துப் போர் செய் என்று அறைக்கூவல் விட்டிருக்கிறான்.

அறை கூவிய நேரம் முழு போதையில் இருந்திருக்கிறான். விச்சாதர முத்தரையன் மறுமொழி சொல்லவில்லை. அங்கிருந்து போய்விட்டதாகச் சொல்கிறார்கள். சக்ரவர்த்தி உடையார் காதுக்கு இது போய்விட்டது. விச்சாதர முத்தரையனைத்தேடி ஆள் போயிருக்கிறது.

''எதற்கு''

''தெரியவில்லை.''

''எதற்காக இருக்கும்.''

''தெரியவில்லை.''

''என்ன சொல்ல வருகிறாய்.''

''பிற்பாடு வேறொன்று நடந்தது.''

''என்ன அது.''

''வணிகர்கள் தலைவரையும், வேறு சிலரையும் மூவேந்த வேளார் அழைத்துப் பேசியிருக்கிறார்.''

''எங்கே.''

''அரண்மனையில்.''

''யார் அவர்கள்.''

''தஞ்சையில் மது விற்பவர்கள்.''

''ஆஹா... புரிகிறது.''

கிருஷ்ணன்ராமன் கைகொட்டினார்.

கோவிந்தன் கௌதமன் சிங்கபிரான் உண்பதை நிறுத்தினார். இரண்டு ஒற்றர்களும் தலைவரையே பார்த்துக் கொண்டிருந் தார்கள்.

''அரசர் மதுவைத் தடைசெய்யப் போகிறார்.''

''அது எப்படி முடியும்.''

''முற்றிலுமாக அல்ல.''

''பிறகு.''

''தஞ்சை நகரத்திற்குள் மது அருந்தக்கூடாதென்று உத்தரவிடப் போகிறார்.''

''ஆஹா... ஆஹா... இது நன்றாக இருக்கிறதே. சரியாக வருமா என்பதுதான் என்னுடைய சிந்தனை.''

''அரசர் கட்டளையிட்டால் மறுபேச்சுண்டா.''

''மது அருந்தக்கூடாது என்பது கட்டளையா அல்லது மது அருந்தி தஞ்சைக்குள்ளே வரக்கூடாது என்று கட்டளையா.''

''இரண்டுமாக இருக்கும்.''

''விச்சாதர முத்தரையனை அரசர் தேடுவதற்குக் காரணம் என்ன.''

''எனக்கொன்று தோன்றுகிறது.''

கோவிந்தன் கௌதமன் சிங்கபிரான், கிருஷ்ணன் ராமனைப் பார்த்தார்.

''என்ன''

''அந்த தகடூர்ப்பையன் காரிக்குளிப்பாகை உரத்துச் சொன்ன போர் அழைப்பை, தனித்த சண்டையை ஏற்றுக் கொள்ளும்படி அரசர் சொன்னாலும் சொல்லக் கூடும்.''

கிருஷ்ணன்ராமன் அந்தப் பேச்சுக்குத் திகைத்தார்.

''இருக்காது. ஒருநாளும் அரசர் சண்டையைத் தூண்டி விட்டு வேடிக்கை பார்க்க மாட்டார்.''

அரசரைப் பற்றி என்ன புரிந்து கொண்டு நீ பேசுகிறாய் என்று எனக்குத் தெரியவில்லை. யுத்தமின்றிப் போவதற்கு விரும்புகின்ற இரண்டுபேர். அதாவது சோழ தேசத்தவர் சண்டை போட்டுக் கொள்ள அனுமதிப்பாரா. இது வெறும் பிதற்றல். அபாண்டமான பேச்சு. சக்ரவர்த்தி உடையாரைப்பற்றி நெல் முனையளவும்



தெரியாதவர்தான் இப்படிப் பேசுவார். நீ இப்படிப் பேசுவாய் என்று நான் நினைக்க வில்லை.''

சீற்றத்துடன் கிருஷ்ணன்ராமன் சொல்ல வில்லிற் கிடந்தான் மங்களாச்சான் வாய் பொத்திக் கொண்டான்.

''இப்படி இருக்குமா ஐயன்.''

கோவிந்தன், மங்களாச்சானுக்கு உதவி செய்வது போல் ஒரு பார்வை பார்த்துவிட்டுப் பேசத்துவங்கினார்.

''சக்ரவர்த்தி உடையார் கட்டளையிடாமல் வேறு யாரேனும் அரண்மனையில் இப்படியொரு எண்ணம் கொண்டு விச்சாதர முத்தரையனை வரும்படி கட்டளையிட்டிருப்பார்களோ.''

''இது சரியான பேச்சாக இருக்கிறது. யார் என்று சொல்ல வேண்டும்.''

''பஞ்சவன்மாதேவி. வேறு யாருக்கு இந்தத் துணிச்சல் வரும்.''

''பஞ்சவன்மாதேவி சண்டை பார்ப்பதில் ஒரு ஆவல் உண்டா.''

''பஞ்சவன்மாதேவி காயப்பட்டிருப்பார்.''

''என்ன சொல்கிறாய்.''

''சீருடையாளைக் கழியால் அடித்தது பஞ்சவன்மாதேவிக்குப் போயிருக்குமல்லவா. பஞ்சவன்மாதேவி சீறியிருப்பாரல்லவா. அந்தச் சீற்றத்தை அடக்கிக் கொண்டிருப்பாரல்லவா. மறவர்கள் கைநீட்டிப் பெண்களை அடிக்கிறார்களா. அதுவும் தேவரடியார் பெண்களை அடிக்கிறார்களா என்று பொங்கியிருப்பாரல்லவா. கோபம் உச்சநிலைக்குப் போயிருக்குமல்லவா. மறவர் முகத்திரையைக் கிழிக்கிறேன் என்று ஆவேசப்பட்டிருப்பார் அல்லவா.''

''அடேய்... அடேய்... என்ன யோசிக்கிறாய். நீ யோசிப்பதைப் பார்த்தால் எனக்குப் பயமாக இருக்கிறது.''

வேகமாகத் தலையை கிருஷ்ணன்ராமன் சொரிந்து கொண்டார். ஒரு பதட்டத்துடன் எழுந்து நின்றார்.

அவர்கள் இருவரும் எழுந்து நின்றார்கள்.

கிருஷ்ணன்ராமன் மறுபடியும் ஆசனத்தில் அமர்ந்து கொண்டார். ஆனால் அவர்கள் இருவரும் கைகட்டியபடியே நின்றிருந்தார்கள்.

''ஆனால் நீ யோசிப்பது மிக நன்றாக இருக்கிறது கோவிந்தன். அடிவயிறு கலங்கிவிட்டது. பஞ்சவன் மாதேவி சீருடையாள் பற்றிக் கோபம் கொண்டால், அதுவும் குறிப்பாக... மறவர்கள்

தேவரடியார்களை அடித்தார்கள் என்று கோபம் கொண்டால், இதன் விளைவு மிகப்பெரிதாக இருக்கும். சக்ரவர்த்தியைக் கோபப்படச் செய்யவும், குளிரச் செய்வதற்கும் பஞ்சவன் மாதேவியால் முடியும். தஞ்சை மறவருக்குப் போறாத காலம் பஞ்சவன்மாதேவி ரூபத்தில் வந்திருக்கிறது.''

கிருஷ்ணன்ராமன் மறுபடியும் சிந்தனையில் ஆழ்ந்தார்.

''ஐயன் ஒரு கேள்வி.''

வில்லிற்கிடந்தான் மங்களாச்சான் குனிந்து அவரை உற்றுப் பார்த்தான்.

''என்ன.''

கிருஷ்ணன்ராமன் நிமிர்ந்தார்.

''இதுவொரு சாதாரண விஷயம். இதற்குப் போய் ஏன் நீங்கள் அதிகம் கவலைப்படுகிறீர்கள்.''

''கோவிந்தா இது சாதாரண விஷயமா.''

''இல்லை ஐயன். மங்களாச்சானுக்கு இது புரியவில்லை. கோயில் பணிநிறைவடைகின்ற இந்த நேரத்தில் ஒருக்காலும் சிற்பிகள் மனமும் கோணக்கூடாது. போருக்குப் போய் பெருஞ் செல்வத்துடன் வந்திருக்கிற இந்த நேரத்தில் ஒருக்காலும் மறவர்களையும் விட்டுக்கொடுக்க முடியாது. மறவர்களுக்கும், சிற்பிகளுக்கும் இடையே வேறு ஊரிலிருந்து நம்மையே அடைக்கலமாகக் கொண்டு கோயில் பணி செய்வதற்காக வந்திருக்கிற தேவரடியார்கள். இந்தப் பூசலுக்குக் காரணமாக இருப்பதால், அவர்களையும் நாம் இளக்காரமாக நினைத்து விடக்கூடாது. ஏற்கனவே, கருமார்களுடைய பிரச்சினையில் சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவரும், இளவரசர் ஸ்ரீ இராஜேந்திர தேவரும் மாறுபட்டு நிற்கிறார்கள். இது ஊரறிந்த விஷயம்.

அதேபோல இந்த விஷயத்திலும் இவர்கள் மாறுபாடு கொள்ள நேரிடுமெனில் சோழ சாம்ராஜ்ஜியத்திற்கு அது நல்லதில்லை. இந்த விஷயத்தில் பஞ்சவன்மாதேவி நுழைந்திருப்பது வெகுநிச்சயம் மிக மிக ஆபத்தானது. மேலைச் சாளுக்கியப் போர் முடிந்து வீரர்கள் ஊர் திரும்பி ஆறுமாதமாயிற்று. எல்லோரிடமும் நிரம்ப செல்வமிருக்கிறது. திமிர் இருக்கிறது. உல்லாசங்கள். உதவாக்கரை பேச்சுக்கள் அதிகரித்துவிட்டன.

வெகுநிச்சயம் மேலைச்சாளுக்கியத்திலிருந்து வெவ்வேறு வழியாக சேரதேசத்து நம்பூதிரிகள். பாண்டியனிடம் ஆபத்துதவி



படைகளாக இருந்த கேரளியர்கள் உள்ளே நுழைவார்கள். இங்கு வர்ணபேதமாய் அந்தணர்களை நாம் சற்று அடக்கி வைத்திருக்கிறோம்.

வைதீக அந்தணர்கள் எப்பொழுது, எங்கே நெருப்பு பற்றும் என்று காத்துக் கொண்டிருக்கிறார்கள். தொண்டை நாட்டு அந்தணர்களை நான் முன்னிறுத்தியதில் கோபமடைந்திருக்கிறார்கள். அந்தணருக்குள்ளேயே பிளவுகள் ஏற்படுத்தி சோழ அரசாங்கம் ஜெயித்து விட்டது. அந்த அந்தணர்கள் சோழ அரசாங்கத்தில் விதம்விதமாய் பிளவு ஏற்படுத்த வெகு நிச்சயம் முயல்வார்கள். இந்தக் கோயில் கட்டி முடியும் வரையில் சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவருக்கு விதம்விதமாகத் தொந்தரவு தருவார்கள்.

சேனாதிபதியும் முதல் மந்திரியுமான ஸ்ரீ கிருஷ்ணன்ராமன் யாரை அடக்க முடியும். சிற்பிகளையா.. பெருந்தச்சர் குஞ்சரமல்லருக்கு எப்போதும் ஆதரவாக இருக்கின்ற சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவர் இதற்கு அனுமதிக்கமாட்டார். நாம் மறவர்களை அடக்க முடியுமா. மறவர்களுக்கு எப்பொழுதுமே ஆதரவாக இருக்கின்ற இளவரசர் ஸ்ரீ இராஜேந்திரர் இதற்கு ஒருக்காலும் சம்மதம் தரமாட்டார்.

தேவரடியார்களைப்பற்றிக் கேள்வி கேட்க வேண்டுமா. அதட்டி வைக்க வேண்டுமா. பஞ்சவன்மாதேவி உடனடியாக உங்களுக்கு எதிர்ப்பு தெரிவிப்பார். அவர்களுக்கு தன் ஆதரவைக் காட்டுவார்.

சேனாதிபதி முதல் மந்திரி ஸ்ரீ கிருஷ்ணன்ராமன் அவர்களுக்கு வைதீக அந்தணர்களுடைய ஆதரவு இல்லை. ஏனெனில் நீங்கள் அவர்களுக்கு எதிராகச் செயல்பட்டீர்கள். தொண்டை நாட்டு அந்தணர்கள் பயந்ததுபோல் நடிப்பார்கள். புறம்பேசுவார்கள். அதிகாரத்தைச் செயல்படுத்துவதில் சிக்கல் இருக்கிறது என்று சொல்லுவார்கள். வேண்டுமென்றே சிக்கல் ஏற்படுத்துவார்கள்.

ஒன்றும் அறியாத அப்பாவியான வேளாளர்களையாவது நீங்கள் கோபித்துக் கொள்ள முடியுமா. முடியாது. உலகளந்தான் மாராயன் மூவேந்த வேளாளன் இன்னொரு மந்திரியாக இருப்பதால் அவர் ஒருக்காலும் எவரும் எதிர்ப்பதற்கு அனுமதிக்க மாட்டார். மீதம் இருப்பது வணிகர்கள்தான்.

மாயிலட்டிகள் என்கின்ற இந்த வணிகர்களை நாம் பகைத்துக் கொண்டால் சோழதேசத்துப் பொருளாதாரம் இன்றில்லையெனில் நாளை நொண்டும்.

கடற்கொள்ளைகளைத் தடுக்க எவரும் முன்வரவில்லை. நாகைப்பட்டிணத்தில் ஈழத்துக் கொள்ளையர்கள் நுழைவதைத் தடுப்பதற்கு எந்த முயற்சியும் செய்யவில்லை. வழித்துணைக்கு படைகள் அனுப்புவதில்லை. கண்டிக்க மட்டும் வந்துவிட்டீர்களா என்று அவர்கள் குழுவும் பேசும்.

நானாதேசிகள் எனப்படுகின்ற அவர்கள் சபை நம்மை மிருதுவாக எதிர்க்கும். நீங்கள் எதிர்த்தால் அரசர் உதவியை நாடும். அரசர் எதிர்த்தால் உங்கள் உதவியை நாடும். நீங்கள் இருவரும் எதிர்த்தால் இளவரசருக்கு அருகே போய் நிற்கும். ஆக, நமக்கு இப்போது அடங்கியவர்கள் ஐந்தாவது வர்ணத்தினரான பஞ்சமவர்கள் மட்டுமே. குழந்தை உள்ளம் கொண்ட அந்த எளிய மக்களை யார் எதிர்த்தாலும் கடவுள் அடிக்கிறார்.''

''நமது தேசத்தில் இது ஒன்றும் புதிதான விஷயமல்ல. இதை விடக் குழப்பமாக பாண்டிய தேசமும், அதைவிடக் குழப்பமாக சேரதேசமும் இருக்கிறது. நல்லவேளை சோழதேசத்திற்கென்று ஒரு முதல் மந்திரி. ஒரு அற்புதமான சேனாதிபதி ஸ்ரீ கிருஷ்ணன்ராமன் கிடைத்திருக்கிறார்.''

கோவிந்தன் கௌதமன் சிங்கபிரான் பேசிக்கொண்டு போன போது கிருஷ்ணன்ராமன் கை உயர்த்தினார்.

''இது பாராட்டுகிற நேரமில்லை கோவிந்தா. இதனினும் சிக்கலான விஷயங்களை நான் சரி செய்திருக்கிறேன். சோழ தேசத்தில் முக்கியமான பிரச்சினை என்ன தெரியுமா. மக்களுக்கு எதைப்பற்றியும் அறிகின்ற ஆவல் வந்துவிட்டது. மக்களை அடிமைகள் போல் நடத்தாமல் எழுந்திரு, உட்கார், நட, கலைந்து போ என்று சவுக்கு நுனியில் உத்தரவிடாமல் அவர்கள் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லுகின்ற பழக்கம் அரசகுடும்பத்தாருக்கு வந்துவிட்டது. அவர்களும் கேள்வி கேட்க பழகிக் கொண்டு விட்டார்கள். எல்லா இடங்களிலும், எல்லாவித மக்களும் கூடிக்கூடி விவாதிக்கிறார்கள். பேச்சுத்திறனும் அதிகமாகி விட்டது. இது நாகரீகத்தினால் ஏற்பட்ட கோளாறு. மக்களுக்கு எதுவும் தெரியாது. நாம் அதட்டி உருட்டி மேய்த்துவிடலாம் என்று நினைப்பது பல சமயங்களில் தவறாகப் போய்விடுகிறது.''



கோவிந்தன் கௌதமன் சிங்கபிரான் முதல் மந்திரியின் பேச்சை ஆமோதித்தார்.

''ஐயன் இதற்கு இன்னொரு காரணமும் உண்டு. தொண்டை நாட்டு அந்தணர்கள் இங்கு வந்து பதவியில் அமர்ந்து இரண்டு வருடங்களாகிவிட்டன. இயல்பாகவே புத்திக்கூர்மையுள்ள அவர்கள் மக்களிடம் நெருங்கி சகஜமாகப் பழகுகிறார்கள். அவர்களோடு மனம் விட்டுப் பேசுகிறார்கள். மக்களின் ஆதரவைப் பெறுவதற்கு முயற்சி செய்கிறார்கள். அந்த நேரத்தில் அந்தப் பேச்சு சாமர்த்தியம் மக்களுக்குத் தொற்றிக் கொள்கிறது. ஒஹோ.. இப்படியும் யோசிக்கலாமா என்று யோசிப்பதற்கு மக்கள் பழக்கப் படுத்துகிறார்கள். தொண்டை நாட்டு அந்தணர்கள் சொல்லித் தருகிறார்கள்.''

''நீ சொல்வது முற்றிலும் சரி. அவர்களைத் திரும்பவும் அவர்கள் தேசத்திற்கே அனுப்பி விடலாமா என்று யோசிப்பதுகூட முடியாத காரியம். அப்படிப் பின்னிப் பிணைந்துவிட்டார்கள். நம்முடைய தேசத்தின் பல ராஜாங்கக் காரியங்கள் மிகச்செவ்வனே நடக்கின்றன.''

''ஆமாம். ஐயன்.''

மங்களாச்சான் இப்பொழுது இடையில் புகுந்தான்.

''கோயில் பணிகள் மிகச்சரியாக நடக்கின்றன. கோயில் கணக்குள் மிக அற்புதமாக இருக்கின்றது. நினைவாற்றலில் பெருந்தச்சர் குஞ்சரமல்லர் சிம்மம் என்றும் சொல்வார்கள். அவரைவிட வேகமாக தொண்டை நாட்டு அந்தணர்கள் இருக்கிறார்கள். எல்லாச் சிற்பிகளுக்கும் தொண்டை நாட்டு அந்தணர்கள் மீது மெல்லியதாய் ஒரு பயம் இருக்கிறது. அவர்கள் சரியாகத்தான் பேசுவார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது.''

''இந்த விஷயத்தை சமனப்படுத்துவதற்கு தொண்டை நாட்டு அந்தணர்களைப் பயன்படுத்தினால் என்ன.''

முதல் மந்திரி கிருஷ்ணன்ராமன் நிதானமாகப் பேசினார்.

''இல்லை. நீங்களும் அவர்கள் பக்கம் நின்று அதிகம் ஆதரவு கொடுத்தால் அவர்களை கையில் பிடிக்க முடியாது. அருண்மொழிப்பட்டனின் ஆதரவுதான் அவர்களை மேலோங்க வைத்தது. பிறகு அந்தந்த இடத்திலுள்ள அதிகாரிகளை இதமாகப் பேசி அவர்கள்காரியம் சாதித்துக் கொண்டார்கள். நீங்களே அழைத்துப் பேசினால் இனி அவர்கள் கையில் கங்கணமும், மார்பில் தங்க ருத்ராட்சமும், வாயில் வெற்றிலையும், மிகப்பெரிய

சிரிப்புமாய் மாறி விடுவார்கள். மறவர்களையும், சிற்பிகளையும் கூட சமாளித்து விடலாம். இவர்கள் ஒரு கூட்டமாக விவகாரம் செய்தால் நாம் எதிர்ப்பது கடினம்.''

''இல்லை. தொண்டை நாட்டு அந்தணர்கள் விவகாரம் செய்கிற வர்கள் இல்லை. அவர்கள் ஒன்றாக இருப்பதுபோல் காட்சியளிக் கிறார்களே தவிர, ஒவ்வொருவரும் தனித்தனியாக இருக் கிறார்கள். மறவர்கள் ஒன்று சேர்வதுபோல சிற்பிகள் ஒன்று சேர்வதுபோல, தொண்டை நாட்டு அந்தணர்கள் ஒரு குழுவாக ஒன்றுசேர மாட்டார்கள். பேச்சு அதிகம் இருக்கின்ற அந்தணர் களிடம் ஒற்றுமை குறைவு. தலைமை என்று அந்தணர்களுக்கு எவரும் இல்லை. அது இன்னொரு குறை. எந்தத் தலைமையையும் இவர்கள் ஏற்கமாட்டார்கள் என்பதுதான் அடிப்படையான விஷயம். எல்லோருமே தலைமை ஏற்க வேண்டும் என்று தங்களை நினைத்துக் கொண்டிருப்பதுதான் இவர்களுடைய மிகப்பெரிய பலவீனம்.''

''தொண்டை நாட்டு அந்தணர்களை என்னவென்று உபயோகப் படுத்தப் போகிறீர்கள் ஐயன்.'' கோவிந்தன் கௌதமன் சிங்க பிரான் கூர்ந்து கேட்டார்.

''கோயில் பணிதான் முக்கியம். ஒருவருக்கொருவர் ஒற்றுமை யாக இருந்தால்தான் கோயில் பணி சிறப்பாக நடைபெறும். கோவிந்தா இந்தக் கோயில் பணியைப்பற்றி நீ என்ன நினைக் கிறாய்.''

சட்டென்று திரும்பி அந்த முதியவரைப் பார்த்து கிருஷ்ணன் ராமன் கேட்டார்.

''சோழ தேசத்து சிற்பிகளின் வேலை பிரமிப்பாக இருக்கிறது ஐயன். நமக்கு முன்பு இந்தப் பகுதியை ஆண்ட பல்லவ சாம்ராஜ் ஜியத்தின் சிற்ப வேலைகள் தான் மிக அற்புதம் என்று பலரும் சொல்லக் கேள்விப்பட்டிருக்கிறேன். ஏன் நமது சோழ சிற்பிகளே கூட பல்லவருடைய மற்ற உருவங்களைப் பார்த்து அதிகமாய் வியப்பதைக் கவனித்திருக்கிறேன். குடவரைக் கோயில்கள் என்று பேசுவதை நான் கேட்டிருக்கிறேன்.''

கல்லைத் தேடி தச்சன் போன காலம் அது. இப்பொழுது தச்சனைத்தேடி கல் வந்து கொண்டிருக்கிறது என்று இவர்கள் தங்களைப்பற்றி பெருமையாகப் பேசுகிறார்கள்.

அதாவது எங்கு கல் இருக்கிறதோ அங்கு போய் குடவரைக் கோயில்கள் செய்தது அந்தக் காலமாம். இப்போது எங்கிருந்தோ



கல்வெட்டி யானையிலும் மாட்டு வண்டியிலும் ஏற்றி வண்டல் பிரதேசமான தஞ்சைக்கு இழுந்து வந்து, இங்கே அடுக்கி அடுக்கி கோயில் கட்டுகிற பெருமையைக் கம்பீரமாகச் சொல்கிறார்கள்.

இவ்வளவு உயரம் எப்படி கல்தூக்கிக் கொண்டு போக முடியும் என்ற பெரும் கேள்வி எழுந்தபோது, இந்த குணவன் நித்த வினோதப் பெருந்தச்சன்தான். இதைச் சுற்றிச்சுற்றி பாதை போட வேண்டுமென்று சொன்னான். நீளமான சாரம் போடுவது என்றுதான் திட்டமிட்டிருந்தார்கள். இது சாத்தியமாகாது என்று மிகத்தெளிவாக அவன்தான் எடுத்துரைத்தான்.

கற்பலகைகள் பற்றிய கணக்கு மொத்தமும் எல்லாச் சிற்பி களுக்கும் மனப்பாடமாகத் தெரிந்திருக்கிறது. ஒவ்வொரு நிலை யிலும் கற்பலகைகளின் அளவு என்ன என்பதை அவர்கள் மரத்தில் மாதிரி செய்து வைத்திருக்கிறார்கள். அந்த மரமாதிரியை வைத்துக் கொண்டுதான் அடுக்கடுக்காக கற்பலகைகள் செய்கிறார்கள்.

தூண்களின் அளவுகளுக்காக தனியாக ஒரு ஓலைச் சுவடி கட்டு இருக்கிறது. உள்ளே நிறுத்துவதற்காக பிரமாண்டமான நடராஜர், அற்புதமான சரஸ்வதி சிலை வெளிப்பிரகாரத்தில் ஒவ்வொரு கோஷ்டத்திலும் வைப்பதற்காக விதம்விதமான சிவபெருமான் சிலைகள் செய்து கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொன்றுக்கும் ஓர் அர்த்தமிருக்கிறதாம். ஒவ்வொன்றும் சிவபெருமானின் படைக்கலன்களாம்.

வெறுமே கோயிலாக இல்லாமல் சிவனுடைய சக்தி முழுவதை யும் உள்ளுக்குள் பொதித்து வைத்து வெளிப்படுத்துகின்ற ஒரு யந்திர ஸ்தாபனமாகவே இந்தக் கோயில் இருக்குமாம். இந்தக் கோயில் கட்டி முடித்துவிட்டால், சோழ சாம்ராஜ்ஜியத்தின் மீது எவரும் படையெடுக்க முடியாதாம். சந்திரசூரியர்கள் உள்ளவரை சோழசாம்ராஜ்ஜியத்தின் பெருமையும், புகழும் இருக்குமாம். மாற்றரசர் எவரும் இந்த தேசத்திற்குள் வரவே முடியாதாம். இந்தச் சிற்பிகள் சொல்வதைப் பார்த்தால் ஆச்சரியமாக இருக்கிறது.

மாற்றரசர் உள்ளே வராமல் இருக்க கோயில் கட்ட முடியுமா என்ற சந்தேகமும் எனக்கு வந்தது. சேனாதிபதி கிருஷ்ணன்ராமன் அவர்கள்தான் இதைத் தீர்த்து வைக்க வேண்டும்.''

''எனக்கு என்ன தெரியும் கோவிந்தா. நான் வெறும் தந்திரக் காரன். முன்னும் பின்னும் கணக்குப் போட்டு வாழ்க்கையை நடத்துபவன். பெரிய ஆசார அனுஷ்டானங்கள் இல்லாதவன். கடவுள் நம்பிக்கை இருக்கிறது. ஆனாலும் சந்தேகமும் உண்டு.

எனவே மனித யத்தனங்கள், மனித வலிமை, மனித மூளை இவைகளின் மீதே அதிகம் நம்பிக்கை உடையவன்.

இப்படியொரு கோயில் கட்டிவிட்டு, பிறகு சோழ சாம்ராஜ்ஜியத்தில் படைகளைக் கலைத்து விடலாம் என்று சொன்னால் நான் ஒருக்காலும் ஏற்கமாட்டேன். இது உண்மையா. இப்படியெல்லாம் நடக்குமா. யந்திர ஸ்தாபனமாய் சிவன் கோயில் செய்ய முடியுமா என்பது பற்றியெல்லாம் எனக்குக் கேள்விகள் உண்டு. நான் கலந்து கொண்ட போர்களில் வெற்றி பெற்றபோது, அந்தந்த ஊர் கோயில்களிடமிருந்து சிலைகளைப் பெயர்த்து எடுத்துவந்து, என்னுடைய ஊரில் வைத்து ஒரு கோயில் கட்டியிருக்கிறேன்.

சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவர் நினைவாக ராஜராஜேஸ்வரம் என்று அமண்குடியிலுள்ள அந்த ஊருக்கும் பெயர் வைத்திருக்கிறேன். நான் கொண்டு வந்த காளி சிலையை எல்லோரும் புகழ்கிறார்கள். அருகே போனால் சுடுகிறது என்கிறார்கள். வெப்பக்கதிர்வீச்சு என்கிறார்கள். அந்தக் கோயில் என்னுடைய திமிர். என்னுடைய அதிகாரபலம் அவ்வளவுதான் எனக்குத் தெரிகிறது.''

''மிகவும் யதார்த்தமாகப் பேசுகிறீர்கள் ஐயன்''

''அதுதான் என் பலம். அதுதான் என் பலவீனம். இன்னும் யதார்த்தமாகச் சிந்திப்போம். ஆக, இவ்வளவு திறமையுடைய இந்த நித்தவினோதப் பெருந்தச்சன் குணவனை நாம் அதிகம் காயப்படுத்திவிடக்கூடாது. அவன் ஒரு பொக்கிஷம். வாராது போல வந்த மாணிக்கம்.

அந்த மறவன் ஒரு மடையன். ஆனாலும் அவனுக்கு குணவனைக் காயப்படுத்த வேண்டும். குணவனுடைய அனுக்கியை அசிங்கப்படுத்த வேண்டுமென்று எண்ணமில்லை. ஒரு வேகத்தில் செய்துவிட்டான். அவனை மன்னித்துவிடலாம்.

குணவன், கட்டியிருப்பவனை அடித்ததுதான் பிசகாகிவிட்டது. அதற்கு குணவன் மன்னிப்பு கேட்டால் போதும், இந்தப் பிரச்சினை முடிந்துவிடும். ஆனால் குணவனை சிற்பிகள் கூட்டம் மன்னிப்பு கேட்க விடாமல் போயின் மிகப்பெரிய அபிப்ராய பேதங்கள் உண்டாகும். உள்ளுக்குள் அபிப்ராய பேதங்கள் உண்டாகும். உள்ளுக்குள் கசப்பு பொங்கி விழியும். குணவனை மன்னிப்பு கேட்கும்படி செய்ய வேண்டும் என்ன செய்யலாம்.''

''உங்களுடைய குறிக்கோள் புரிகிறது ஐயன். சிற்பிகள் கூட்டத்திற்கு நடுவே என்ன அபிப்ராயம். அங்குள்ள பெரியவர்கள் என்ன



பேசிக்கொள்கிறார்கள். இளைஞர்கள் எப்படி இருக்கிறார்கள் என்று தெரிந்துவரச் சொல்கிறீர்கள். இரண்டு நாட்களில் தெரிந்து வரச் சொல்கிறீர்கள். இரண்டு நாட்களில் மொத்தமும் விசாரித்துக் கொண்டு வருகிறோம். தேவரடியார்களைப்பற்றி விசாரிப்பது தேவையா.''

''இல்லை. நான் நேரடியாக ராஜராஜியையும் சீருடையாளையும் இன்னும் சிலரையும் அழைத்து பேசி விடுகிறேன். அமைதியாக நடந்துகொள்ள வேண்டுமென்று எச்சரிக்கிறேன்.

கோவிந்தன் சிற்பிகள் இருக்கின்ற இடத்திற்குப் போகட்டும். தேவையெனில், இன்னும் சில ஒற்றர்களை அங்கங்கே தனித் தனியாக அனுப்பி விவரங்கள் சேகரித்துக் கொள்ளுங்கள்.

மங்களாச்சான், அரண்மனை வட்டாரத்தில் என்ன நடக்கிறது என்பதை எனக்குச் சொல். எனக்கு எதுவுமே தெரியாததுபோல பஞ்சவன்மாதேவியைப் பார்ப்பதற்காக நான் போகிறேன். வரும் வளர்பிறையில் அவர்கள் திருமணம் நடந்த நாள் வருகிறது. அமண்குடியில் அதற்காக வேதபாராயணமும்,ருத்ரஜபமும், ஏழை எளியோருக்கு அன்னதானமும், அறுபத்து மூன்று நாயன்மார்களைப்பற்றிய தெருக்கூத்தும் நடத்தப்போவதாகவும், அதற்கு அவர்கள் வரவேண்டும் என்று கேட்டும் போகப் போகிறேன். அவர்கள் வருவதற்கில்லை என்றுதான் சொல்வார்கள். ஆனாலும் விழா நடந்த அனுமதி கோருவேன்.''

''அவர்கள் மிகவும் கெட்டிக்காரர்கள். ஐயன்''

''ஆமாம். அதனால் என்ன.''

''போன வருடம் ஏன் நடத்தவில்லை என்று கேட்பார்கள்.'' என்று மெல்லியதாய் சிரித்துக்கொண்டு கோவிந்தன் பேசினார்.

''உடனடியாகப் பதில் சொல்வேன். போன வருடம் படையெடுப்புக்கான மும்முரத்தில் நீங்கள் இருந்தீர்கள். தஞ்சையே பதறிக் கிடந்தது. அந்த நேரத்தில் கொண்டாட்டம் சரியாக இருக்காது. அதற்கு முந்திய வருடம் கோவில் கட்டும் பணி உச்சத்தில் இருந்தது. அதற்கு முந்திய வருடம் நீங்கள் ஊரில் இல்லை. நாகைப் பக்கம் பயணப்பட்டிருந்தீர்கள் என்று அடுக்கிவிட என்னால் முடியும்.''

இப்பொழுது கிருஷ்ணன்ராமன் கண் சிமிட்டினார்.

கிருஷ்ணன்ராமன் எழுந்திருக்க, அவர்கள் விழுந்து வணங்கினார்கள். மெல்ல கோவிந்தன் தோளில் கை வைத்தார்.

"என்ன வயது."

"அறுபது வயதுதான்."

"இந்த வயதில் பேரப்பிள்ளைகளோடு வீட்டில் அமர்ந்து, கொஞ்சிக் கொண்டும், குலாவிக்கொண்டும், வயல்வேலை பார்த்துக் கொண்டும், ஏதேனும் பெருமாள் கோயிலில் கைங்கர்யம் செய்து கொண்டும் இல்லாமல் எனக்காக ஊர்சுற்றிக் கொண்டிருக்கிறீர் அல்லவா."

"ஐயன். நானும் உங்களைப்போல ஆசார அனுஷ்டானங்கள் இல்லாதவன். மனித யத்தனங்கள் மீது நம்பிக்கை உடையவன். மனித மூளையின்மீது யோசிப்பின் மீது ஆசையுள்ளவன். அதனால், வெறுமே குழந்தைகளைக் கொஞ்சிக் கொண்டிருக்க முடியாது. வீட்டிலிருக்கின்ற நேரத்தில் ஒருவருக்கொருவர் சண்டையிடும்படி செய்து விடுகிறேன் என்று மனைவி சொல்கிறார்கள். வெளியிலேயே இருப்பது நல்லது என்கிறார்கள்."

"அதாவது வீட்டிலேயே உளவு அறியும் வேலையை ஆரம்பித்து விட்டீர் என்றுதானே அர்த்தம்."

"ஆமாம். இதில் ஈடுபட்ட புத்தி மௌனமாக இருக்க விருப்பமில்லாமல் இருக்கிறது."

"நல்லவேளை சொன்னீர். என்னோடேயே இரும். வீட்டிற்குப் போகவேண்டாம்."

கட்டளையைப்போல கிருஷ்ணன்ராமன் சொல்ல அவர்கள் எல்லோரும் வாய்விட்டுச் சிரித்தார்கள்.

அந்தச் சிரிப்புக்கு கீழே தங்களால் சாதாரணமாக மற்ற ஜனங்கள் போல குடியும், குடித்தனமுமாக வாழமுடியவில்லை என்ற துக்கம் இருக்கத்தான் செய்தது.

சீருடையாள் ஒரு மறவனால் தாக்கப்பட்டாள் என்று தெரிந்ததும் பஞ்சவன்மாதேவிக்கு உடம்பு பதறியது. கடும் கோபம் ஏற்பட்டது பல் கடித்து அமர்ந்திருந்தாள். உடனே போய் குதிரை ஏறி அந்த மறவனைப் பார்த்து சவுக்கால் விளாற வேண்டுமென்று ஆத்திரம் ஏற்பட்டது. ஆனால், சில வினாடிகளில் சமாதானமானாள்.

சீருடையாளைப்பற்றி நினைக்க நினைக்க பஞ்சவன்மாதேவியின் மனம் பழைய நினைவுகளை அசைபோடத் துவங்கியது.



திருவாரூரில் ஒரே தெருவில் எதிர் எதிர் வீடுகளிலிருந்து சீருடையாளும், பஞ்சவன்மாதேவியும் ரதி மன்மதன் நடனம் ஆட, ஊரே திரண்டு சொக்கிக் கிடக்கும். ஒவ்வொரு அசைவும், ஒவ்வொரு பார்வையும், ஒவ்வொரு சிரிப்பும், ஒவ்வொரு அழைப்பும் பார்த்தவர்களைக் கிறங்கடிக்கும். காதலே வராது என்று சொன்னவர்கள் கூட விக்கித்துப் போய் உட்கார்ந்திருக்கிறார்கள். மடாதிபதிகளும், சன்னியாசிகளும் கை உயர்த்தி வாழ்த்தியிருக்கிறார்கள்.

நடனத்தை ஆறு அங்கமாகப் பிரித்து பெரிய குழுவாக ஊர் ஊராக இவர்கள் கூட்டம் பயணப்படும்.

ராம காதையிலிருந்து மாரீச வதமும், மகாபாரதத்திலிருந்து கீசகவதமும் நடைபெறும். இவைகள் குழந்தைகள் பார்க்க வேண்டுமென்பதற்காக செய்யப்பட்ட நடனங்கள். பிறகு குழந்தைகள் தூங்கி விடுவார்கள் என்பதால் பரதத்து நுணுக்கங்கள் கொண்ட நாட்டியங்கள் நடைபெறும். ஒரு குழுவாக ஒன்று கூடி கலைந்து, ஒன்றுகூடி கலைந்து என்று பின்னல் வேலைகளோடு அவர்கள் ஆடுகின்ற ஆட்டத்தை ஊர் வியந்து பார்க்கும். அதற்குப் பிறகு பஞ்சவன்மாதேவியின் ரதி மன்மதன் நாடகம் நடைபெறும்.

அப்படியொரு குதியல், அப்படியொரு ஆட்டம், அப்படியொரு காதல், இளம் பெண்களும், வாலிபர்களும் வைத்த கண் மூடாமல் பார்ப்பார்கள். காதலுக்குக் கண்ணில்லை என்கிறபடி, காதலி கேட்க எது வேண்டுமானாலும் செய்யலாம் என்கிற முட்டாள் தனத்தோடு மன்மதன், தவம் செய்கின்ற சிவனை நோக்கி தன் கணையை எறிய, சிவன் மூன்றாவது கண்ணால் விழித்துப் பார்க்க, நெருப்புப்பட்டு பொசுங்கி மன்மதன் விழுந்துவிட, சீருடையாள் என்கிற ரதி துடித்துத் துடித்து அரங்கம் முழுவதும் போய் அலறுவாள்.

கூட்டம் உறைந்து போய் நிற்கும்.

அங்கே சிவன் என்பது ஒரு நாட்டியமணி அல்ல. அப்படி வேண்டாமென்று பஞ்சவன்மாதேவி சொல்லி விட்டாள். சிவன் என்பதை யாரால் சொல்ல முடியும். அதுமிகப் பெரிய விஷயமல்லவா. எனவே, ஒலி ரூபமாக அவர் தவம் செய்வதையும், ஒலி ரூபமாகவே அவர் மெல்ல கண்விழிப்பதையும், ஒலி ரூபமாகவே மன்மதனின் அம்பு பட்டு கண்விழிப்பதையும், ஒலிரூபமாகவே அவரிலிருந்து நெருப்பு பிரிவதையும் சொல்ல வேண்டுமென்று தீர்மானித்து மிக மிகக் கவனமாக வீணை ஆதிச்சனுடன் சேர்ந்து

தந்தோம்... தந்தோம்... என்கிற தாளகதியாகவும், வீணை மீட்டலாகவும், குழல் ஒலியாகவும், மிருதங்கத்தின் நயமாகவும், கொட்டுமுரசின் அலறலாகவும், எக்காளத்தின் சத்தமாகவும் பல்வேறு விஷயங்களையும் ஒன்றாக இணைத்து மன்மதன் விழுந்த பிறகு சகலத்தையும் நிறுத்தி, மௌனமாக்கி எல்லோரையும் திகைக்க வைத்து, மெல்ல வந்த மன்மதனை உலுக்கி எழுப்பி எழுந்திருக்காத மன்மதனைப் பார்த்து வாய்விட்டு சீருடையாள் அலறுவாளே, அதைப் பார்த்துவிட்டு அழாத மனிதர்களே இல்லை.

பொற்காசுகள் பலதும் கொண்டு வந்து சீருடையாளுக்கும், பஞ்சவன்மாதேவிக்கும் கொடுப்பார்கள். ஆனால், அந்தப் பொற் காசுகளை அப்படியே அவர்கள் தலைக்கோலியிடம் கொடுத்து விடுவார்கள். குழு மொத்தமும் பங்கிட்டுக் கொள்ள வேண்டும் என்று சொல்லிவிடுவார்கள்.

ரதி, மன்மதனுக்கு இணையாக மற்ற நாட்டிய நாடகங்கள் இல்லை என்று சொல்லப்பட்டதால் பஞ்சவன்மாதேவியும், சீருடையாளும் உட்கார்ந்து மாரீசவதத்தையும், கீசகவதத்தையும் நகாசு ஏற்றினார்கள். அங்கேயும் வாத்தியங்களை விதம்விதமாகச் சேர்த்தார்கள்.

திருவாரூரிலுள்ள தேவரடியார்களுக்கு மிகப்பெரிய மரியாதை இந்த நாட்டிய நாடகங்களால் கிடைத்தது.

''உன்னுடைய கலைத்திறமைக்கு கோயில் கட்ட வேண்டு மம்மா. கோயில் கட்ட வேண்டும்.''

கௌபீனம் மட்டுமே தரித்த ஒரு சாது கை உயர்த்தி வாழ்த்துவார்.

''கோயில் கட்ட வேண்டும். என்ன கோயில் கட்டுவார்கள்.'' என்று உரத்த குரலில் சொல்லிவிட்டுப் போவார்.

''என்னடி இது. யாருக்கு யார் கோயில் கட்டுவது. நாம் வெறும் நாட்டியப் பெண்மணிகள்தானே. ஏன் இப்படிச் சொல்லிவிட்டுப் போகிறார்கள்.''

''தெரியவில்லை. ஒருவேளை நாட்டியத்திற்கென்று ஏதேனும் கோயில் கட்டினால் அதில் நீயும் நானும் இருப்போமோ என்னவோ.'' என்று சீருடையாளுக்கு பஞ்சவன்மாதேவி பதில் சொன்னாள்.

''அப்படியே கோயில் கட்டினால் எனக்குக் கட்டுவார்களா. ரதியான உனக்குத்தான் கட்டுவார்கள். ஏனெனில் நீ அலறி



ஆடுகிறபோது, நான் தரையில் படுத்துக் கிடந்தாலும், உன்னுடைய நடனத்தைப் பார்க்கின்ற ஒரு கோணத்தில்தான் படுத்துக் கிடப்பேன். அரைக்கண் விழித்து நீ நாட்டியமாடுவதைத் திகைப் போடு பார்த்துக் கொண்டிருப்பேன். அடேயப்பா. உண்மையி லேயே உன்னுடைய ஒவ்வொரு அசைவுகளும் எப்பேர்பட்டவை தெரியுமா. என்னைக் கிறங்கடிக்கின்ற அசைவுகள் அவை.''

பஞ்சவன்மாதேவி இறுக்கத் தழுவிக் கொண்டு உற்சாகத்தோடு சொன்னாள்.

''அவ்வளவு நன்றாகவா நடனமாடுகிறேன்.'' என்று வியப் போடு கேட்டாள்.

''இதில் என்னடி சந்தேகம்..'' என்று பஞ்சவன்மாதேவி சொல்ல, ''என்னைவிட அழகாக நீதான் நடனமாடுகிறாய் பஞ்சவன் மாதேவி. என்னால் இனிமேல் தனியாக நடனமாட முடியாதோ என்று தோன்றுகிறது. பஞ்சவன்மாதேவி இல்லையெனில், எனக்கு நடனமே போய்விடும் என்று தோன்றுகிறது. உன்னோடு இயைந்து இயைந்து நான் நாட்டியம் செய்கிறேன். அல்லவா. அதனால் என்னால் வேறொருவரோடு ஆடவே முடியவில்லை. உன் அசைவுகள் அத்தனையும் எனக்கு நன்றாகத் தெரியும். அதை நான் ரசித்துக் கொண்டே தான் ஆடுகிறேன்.'' என்று சொல்ல, இப்பொழுது பஞ்சவன்மாதேவி தழுவிக்கொண்டாள்.

''உங்கள் இருவரின் ரசனையும், மனமும் ஒத்திருக்கின்றன. அதனால்தான் உடம்பும் நன்றாக ஒத்துழைக்கிறது.'' என்று தலைக்கோலி சொல்ல, இருவரும் மிகவும் சந்தோஷப்பட்டார்கள்.

எவ்வளவு அற்புதமான காலங்கள் அவை. எந்த நேரமும் மனம் நாட்டியத்தைப் பற்றிக்கொண்டு நிற்கும். மனம் பாடிக்கொண்டே யிருக்கும். பாட்டு வேகமாக ஆரம்பித்து மனம் சுழன்றால் உடனே நாட்டியமாட வேண்டும் என்ற வெறி தோன்றும். நாட்டியமாட வேண்டுமென்ற வெறி ஏற்பட்டவுடனேயே அருகே சீருடையாள் வந்துவிட வேண்டும்.

மூன்றாவது வீடு என்பதால் நட்ட நடு நிசியில் போய் குரல் கொடுத்து எழுப்புவாள். இரண்டு பேரும் சலங்கைகளை துணியில் சுற்றி சப்தமில்லாதவாறு நாட்டியப் பயிற்சிக்கென்று முற்றத்திற்கு ஓடுவார்கள். சலங்கையைக் கட்டிக்கொண்டு இருவரும் நடுநசியில் ஆடுவார்கள். ஆடிக்களைத்து அங்கேயே ஒரே போர்வையில் சுருண்டு கொண்டு தூங்குவார்கள்.

அடியே ரதி. எங்கே மன்மதனைக் காணோம் என்றும், மன்மதா எங்கே உன் ரதி என்று இவளை விசாரிப்பதும், அவர்கள் கூட்டத்தினரிடையே எளிதாக நடந்தன.

பஞ்சவன்மாதேவி சக்ரவர்த்தி உடையாரைக் காதலிக்கிறாள் என்று தெரிந்ததும், தில்லையிலிருந்து தஞ்சைக்கு வருகிறாள் என்று தெரிந்ததும் சீருடையாள் திருவாரூரிலிருந்து ஓடிவந்தாள். சந்தோஷப்படுவாள் என்று நினைத்தால் விக்கி விக்கி அழுதாள்.

''அரசரையா திருமணம் செய்து கொள்ளப் போகிறாய். முடியுமா. நீ வெறும் ஆட்டக்காரிதானே. உன்னால் பட்டமகிஷிகளுக்கும், மற்ற மனைவிகளுக்கும் ஈடு கொடுக்க முடியுமா. வெறுமே வேலைக்காரியாகி விடுவாயோ என்று பயமாக இருக்கிறதடி. பட்டமகிஷியின் துணி துவைத்துப் போட்டு உலர்த்தி எடுத்து வருகிற பெண்ணாய்ப் போய் விடுவாயோ, அரசர் இருக்குமிடம் சுத்தம் செய்கின்ற வேலைக்காரியாய் போய் விடுவாயோ என்று பயமாக இருக்கிறது.'' என்று விம்மினாள்.

''என்னைத் தெரியாதா உனக்கு. அரசர் என் மீது உயிரையே வைத்திருக்கிறார். அம்மாதிரியெல்லாம் எந்த இழிவும் எனக்கு நடக்காது. நீ ஏன் இன்னும் திருமணம் செய்து கொள்ளவில்லை என்று கேட்ட போது, வாழ்நாளில் திருமணமே செய்யமாட்டேன். கடைசிவரை தேவரடியாராகவே இறைவனுக்குப் பணிசெய்கின்ற பெண்ணாகவே இருப்பேன்.''

சீருடையாள் சூளுரைத்துவிட்டுப் போனாள். ஆனால், மத்திம வயதில் நித்தவினோதப் பெருந்தச்சனை அவள் காதலிக்கிறாள் என்று கேள்விப்பட்டு பஞ்சவன்மாதேவி சந்தோஷமடைந்தாள். ஒரு ஓலை நறுக்கில் வாழ்த்துக்கள் சொல்லி, மஞ்சள் பூசி, காரை என்கிற அட்டிகையும், பெரிய ஹாரமும் பரிசாகக் கொடுத்தனுப்பினாள். நன்றி சொல்லி மலர்மாலை வந்தது.

குணவன் நித்தவினோதப் பெருந்தச்சன் வேறு திருமணம் செய்து கொள்ளப் போவதில்லை என்பதும் சீருடையாளே தமக்கு எல்லாம் என்று இருப்பதாகக் கேள்விப்பட்டபோது மனம் சந்தோஷத்தில் மிதந்தது. ஆஹா... இப்படியும் நல்ல ஆண்கள் இருக்கிறார்களே. தேவரடியார்களைப் போகப் பொருளாக நினைக்காமல் குலப்பெண்களாய் நினைக்கின்ற உத்தமர்கள் இருக்கிறார்களே என்று சந்தோஷப்பட்டாள்.



சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீஇராஜராஜத்தேவர் தனக்கு மட்டும் என்று இருந்தால், எப்படியிருக்குமென்று சிறிது நேரம் கனவில் மூழ்கினாள்.

அந்தச் சீருடையாள் இப்போது ஒரு சாதாரண மறவனால் அடிபட்டாள் என்று தெரிந்ததும் கோபம் வந்தது. அந்த மறவன் குடித்துவிட்டு ஆபாசமாகப் பேசியதாகவும், அதைக் கண்டிக்க சீருடையாள் முயற்சித்தபோது, அவளைத் துரத்தி வந்து அடித்ததாகவும், கேள்விப்பட்டபோது கடும்கோபம் எகிறிற்று.

அந்தக் கோபம் சாவூர் பரஞ்சோதியின் மீது திரும்பிற்று. ஆனால், பரஞ்சோதியின் மீது தவறு இல்லை. பரஞ்சோதிக்கு, காவலுக்காக எந்த வித தகவலும் தரப்படவில்லை என்று கேள்விப்பட்டபோது, அந்தக் கோபம் ராஜராஜியின் மீது மாறிற்று. அருண்மொழிக்கு அனுக்கியாக இருப்பதால் சோழ சாம்ராஜ்ஜியமே தன்னை நோக்கி தலைவணங்கும் என்று நினைத்துக் கொண்டிருக்கிறாளா. என்ன கர்வம் இது என்று கோபம் வந்தது.

நூறு பெண்கள் இருக்கும் இடத்தில் காவல் இருக்க வேண்டாமா. அப்படிக் காவல் இல்லையென்றாலும், குடித்துவிட்டு அந்தப் பெண்களைக் கேலி செய்ய முடியுமா. கழியால் அடிக்க முடியுமா. யார் அவன் என்று விசாரிக்க, அவனைக் கைது செய்து விட்டதாக அதிகாரிச்சிகள் தெரிவித்தார்கள்.

அருண்மொழி விசாரித்துக் கொண்டிருப்பதாகச் சொன்னார்கள். அதேநேரம் பரஞ்சோதியால் மறவனுடைய கைகள் கட்டப்பட்டிருக்க குணவன் நித்தவினோதப் பெருந்தச்சன் வந்து அந்த மறவனைத் தாக்கியதாகவும், மிக மோசமாக அடித்ததாகவும் செய்திகள் வந்தன. அது தவறு என்று தெரிந்தது. ஆனால் அந்த மறவன் அடிவாங்கியது ஒரு நிம்மதியைக் கொடுத்தது. இப்போது அந்த மறவனுக்கு எதிராகப் பேச முடியாது. அவனை குணவன் நித்தவினோதப் பெருந்தச்சன் அடித்தது பிசகு.

அங்கு நடந்த குற்றங்களில் சீருடையாள் ஈட்டி காட்டியதோ, மறவன் கழியால் அடித்ததோ, அதற்கு முன்பு ஆபாசமாகப் பேசியதோ, அங்கு மக்கள் கூட்டமாக நின்றதோ தவறாக வராது. குணவன் நித்தவினோதப் பெருந்தச்சன் மறவனைக் கட்டி வைத்து அடித்ததுதான் மிகப்பெரிய குற்றமாகப் பேசப்படும். ஆனால், குணவனைத் தண்டிப்பதை சக்ரவர்த்தி விரும்பமாட்டார்.

பெருந்தச்சர் குஞ்சரமல்லர் அப்படியொரு வேளை அவனுக்குத் தண்டனை கொடுத்தால் அதைக் கடுமையாக எதிர்ப்பார். சட்டத்

தின் முன்பு எல்லோரும் சமம். குணவனை மன்னித்து விடுவார்களா. தண்டனை தருவார்களா. ஒருவேளை குணவனுக்கு ஒரு சிறிய தண்டனை கொடுப்பதாக இருந்தாலும் சிற்பிகள் கூட்டம் அதை ஏற்காது. முரண்டு செய்யும்.

தங்களால்தான் கோயில் பணி சிறப்பாக நடைபெறுகிறது என்ற கர்வம் அங்கு கிளைவிட்டுப் பரவியிருக்கிறது. அவர்கள் நடை, உடை, பாவனைகள் மிகுந்த கம்பீரமாய் போய்விட்டன. அதிகம் அலட்டலாய் இருக்கின்றன.

கடைத்தெருக்களிலே கூட அவர்கள் அலட்டலாய் பொருட்கள் வாங்குகிறார்கள். என்றும், காசு கொடுக்காமல் எடுத்துப் போகிறார்கள் என்றும், எங்கும் போய் விடமாட்டேனய்யா.. கோயில் பணி இருக்கிறது நான் இங்குதான் இருக்க வேண்டும். நான் இருந்தால் தான் கோயில் பணி முடியும். எனவே, நான்கைந்து நாட்களில் காசு கொண்டு வந்து கொடுக்கிறேன் என்று சொல்லி விட்டுத் திரும்பிப் பாராமல் போகிறார்கள்.

பெயர் கேட்டால் எதற்குப் பெயர் நானே கொண்டு வந்து கொடுப்பேன். ஒரு சிற்பியின் மீது நம்பிக்கை இல்லையா. இவ்வளவு பெரிய கோயில் பணியை அரசர் எங்களிடம் நம்பி ஒப்படைத்திருக்கிறார். நான்கு பொற்காசிற்கு நம்பமாட்டேன் என்கிறாயே என்று சொல்லிவிட்டுப் போய்விடுகிறார்களாம்.

அப்படிப் பொருட்கள் வாங்கும்போது, அங்கு நின்று போகிற சிற்பிகள் ஒரு நூலிழை தவறாக இருந்தாலும் விமானம் கோணலாக வரும் என்று தங்களுடைய வேலையைப் பற்றி பெருமையாகப் பேசுகிறார்களாம். சிற்பிகள் வந்தால் எழுந்து நிற்கவேண்டுமென்று எதிர்பார்க்கிறார்களாம். கிராமத்தலைவர்களோ, அதிகாரிகளோ வந்தால் அமர்ந்தே இருக்கிறார்களாம். என்ன எழுந்து நிற்க வேண்டுமா. உட்கார்ந்து உட்கார்ந்து முழங்கால் வலி தாங்கவில்லை. எழுந்து நிற்க முடியவில்லை. என்ன வேண்டும் உட்கார்ந்தபடி நீயும் பேசு என்கிறார்களாம். குறிப்பாக மறவர்கள் மீது அவர்களுக்குக் கோபம் இருக்கிறது.

இந்தக் கேயூரங்களை எங்கிருந்து கொண்டு வந்தாய். கங்க தேசமா அல்லது மேலைச்சாளுக்கியமா கொள்ளையடித்தது தானே என்கிறார்களாம். இல்லை எனக்கு பதவி உயர்வுக்காக கிடைத்தது என்றால் வெறுமே மேலைச்சாளுக்கியம் போய் வந்தால் பதவி உயர்வு கொடுத்து விடுகிறார்களய்யா. நாங்கள் வெயிலிலும், மழையிலும் கஷ்டப்பட்டு உழைக்கிறோம். எங்களுக்கு என்ன



பதவி உயர்வு கடைசிவரை நான் சிற்பிதான் என்று பேசுகிறார்களாம்.

சிற்பிகளுடைய கர்வம் அதிகம்தான். ஆனால் அதைவிட மோசம் மறவர்களுடைய ஆட்டம்.

திடீரென்று கடைத்தெருவில் வாள் சுழற்றத் துவங்கி விடுகிறார்களாம். ஒருவருக்கொருவர் வெறுமே அடித்துக் கொள்கிறார்களாம். ஏய்... ஊய்... என்று உரக்கக் கத்துகிறார்களாம்.

ஏன் இப்படிக் கூச்சல் போடுகிறீர்கள் என்று கேட்டால் நான்கு பேர் இங்கு வந்து கூச்சல் போட்டதற்கே பயப்படுகிறாயே. மேற்கு பக்க மலையிலிருந்து நாற்பதாயிரம் பேர், இடது பக்கத்திலிருந்து நாற்பதாயிரம் பேர். எதிரே ஒரு லட்சம் பேர் என்று சோழர் படை தனியாக நின்று அவர்களை எதிர்கொண்டது. வெற்றி கொண்டது.

இம்மாதிரியான இடத்தில் நீ இருந்திருந்தால் என்ன செய்திருப்பாய் என்று வணிகரைப் பார்த்து கேள்வி கேட்கிறார்களாம். வணிகர் விழிக்க இன்னொரு வீரன் மூத்திரம் போயிருப்பான் என்று உரக்கச் சொல்லி சிரித்தானாம்.

எப்படி என்று இன்னொருவன் கேட்க, இப்படி என்று இன்னொரு போர்வீரன் நின்ற வண்ணமே கடைத்தெருவில் அசிங்கம் செய்தானாம்.

அவர்கள் எல்லோரும் குடித்திருந்ததாகவும், இராஜேந்திரருடைய மெய்க்காவல் படையினர் மூன்று பேர் அதை கவனித்துவிட்டு, அவர்களை நெட்டித் தள்ளி விரட்டியதாகவும், எச்சரித்ததாகவும் சொல்லப் படுகிறது.

பொதுமக்கள் வேகமாகப் பேச முற்பட்ட போது சரி ஐயா, போருக்குப் போய் வந்தவன் அப்படித்தான் இருப்பான். குடித்திருக்கிறான். மன்னித்து விடுங்கள் என்று மெய்க்காவல் வீரர்களே மன்னிப்பு கேட்டதாகவும் தகவல் வந்தது.

தஞ்சையில் மட்டுமல்ல. குடந்தையில், நாகையில், சிறிய கிராமங்களில் மறவர்களின் அட்டகாசம் பற்றி தகவல்கள் வந்த வண்ணம்தான் இருந்தன. சில இடங்களில் வீரர்களுக்கு கசையடிகள் கிடைத்தன. ஆனால் தஞ்சையில் அவ்வளவு அட்டகாசங்கள் இல்லையென்று சொல்லப்பட்டு வந்தது.

சக்ரவர்த்தியின் உளவாளிகள் இந்தச் செய்தியை உடனடியாக அரண்மனைக்குக் கொண்டு வந்தபோது பஞ்சவன்மாதேவி மடக்கி விசாரித்துக் கொண்டாள். அரசர் ஓய்வெடுத்துக் கொண்டிருக்

கிறார். என்னிடம் சொல் என்று விவரம் கேட்டு வாசலில் நிறுத்திக் கொண்டாள்.

சக்ரவர்த்தி அன்று நெஞ்சு கபத்திற்காக வெறும் வயிற்றில் மருந்து எடுத்துக் கொண்டார். பிறகு மிளகு ரசம் போட்டு சாதம் சாப்பிட்டார். தொந்தரவு செய்யாதீர்கள் என்று தூங்கத் துவங்கினார். எழுந்து மறுபடியும் மருந்து சாப்பிட்டுவிட்டு, வேக வைத்த காய்கறிகள் கலந்த சாதம் சாப்பிட்டுவிட்டுத் தூங்கத் துவங்கினார்.

சண்டை குறித்து மறவர்கள் கோபமாகப் பேசுவதாகவும் பிறகு தகவல்கள் வந்தன. மறவர்களை எவரும் மதிப்பதேயில்லை என்கிற குமுறல் இருந்ததாய் ஒற்றர்கள் சொன்னார்கள். அப்போது தான் அரண்மனை முற்றத்தில் பெரிதாய் சத்தம் கேட்டது.

அரண்மனை முற்றத்திலேயே ஏதேனும் கலகம் துவக்கிவிட்டார்களா என்று பயந்து போய் பலகணியின் வழியாக பஞ்சவன் மாதேவி எட்டிப்பார்த்தபோது, குடித்துவிட்டு ஒரு வீரனும், நிலையாக ஒரு வீரனும் நின்று வாக்குவாதம் செய்வது தெரிந்தது.

குதிரையைப் பிடித்துக் கொண்டிருந்த வீரன் விலகி விலகிப் போக, அவனை கோட்டைக் காவலன் போல உடையணிந்தவன் மடக்கி மடக்கி நிறுத்தி கத்திக் கொண்டிருந்தான். ஆனால், என்னவென்று காதில் சரியாக விழவில்லை. வீரர்கள் விலக்கிய போதும் அந்தக் கோட்டைக்காவலன் அதிகமாகப் பேசினான்.. பலகணியிலிருந்து பஞ்சவன்மாதேவி பார்ப்பதைக் கவனித்து விட்ட அந்த குதிரை வீரன், சட்டென்று குதிரையின் மீது ஏறிக் கொண்டு விலகிப்போக இந்தக் கோட்டைக்காவலன் தனியே கத்திக் கொண்டிருந்தான். யாரோ மடக்கி அவன் வாயில் துணிபோட்டு இறுக்கி இழுத்துக் கொண்டு போனார்கள்.

பஞ்சவன்மாதேவி விசாரிக்க உத்தரவிட்டாள்.

அரண்மனை முற்றத்திலேயே இப்படி ஆபாசமாகக் கத்துகிறவன் யார் என்று கோபமடைந்தாள்.

விசாரித்து வந்தவர்கள் பெரிய கதை சொன்னார்கள்.

நேருக்கு நேர் சண்டைக்கு வா என்று கோட்டைக் காவலன் அழைப்பதாகச் சொன்னார்கள்.

சிறுதளத்து சிங்களாந்தக தெரிஞ்ச கைக்கோளப் படையின் குதிரைச்சேவகனாக இருக்கின்ற விச்சாதர முத்தரையனும் கோட்டைக்காவலனாக இருந்து மேலைச்சாளுக்கியம் போய் திரும்பிய காரிக்குளிப்பாகையும் சண்டையிட்டுக் கொண்டதாக விவரம் கூறினார்கள். காரணம் பெண் என்று சொன்னார்கள்.



தாய் மாமனின் மீது அந்தப் பெண் காதலாக இருக்கிறாள். ஆனால், அத்தைப் பையன் தனக்கு வேண்டுமென்று அவரிடம் ஆசை தெரிவித்திருக்கிறான்.

தாய் மாமன் அந்தப் பெண்ணை தான் திருமணம் செய்வதற்கில்லை என்று மறுத்திருக்கிறான். அத்தை மகனைத் திருமணம் செய்ய தனக்கு விருப்பமில்லை என்று அந்தப் பெண் சொல்லியிருக்கிறாள். இருவருமே எந்த முடிவுக்கும் வராமல் மூன்று நான்கு வருடங்கள் முரண்டிக் கொண்டிருக்கிறார்கள்.

''யார் சண்டைக்கு அழைப்பது''

பஞ்சவன்மாதேவி விசாரிக்க, கோட்டைக் காவலனான காரிக்குளிப்பாகை என்று தெரிந்தது.

''அப்படி சண்டை ஏற்பட்டால் யார் வெற்றி பெறுவார்கள்.''

மறுபடியும் விசாரித்தாள்.

''வெகுநிச்சயம் விச்சாதர முத்தரையன்.''

''ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்.''

''விச்சாதர முத்தரையன் பல போர்கள் கண்டவன். குறிப்பாக சிங்களத்துப் போரில் பெரும்வீரம் காட்டியவன். குதிரையை ஓட்டியபடியே சேணத்தில் ஏறிநின்று கடிவாளம் பிடிக்காமல் அம்பு தொடுத்து எதிரிகளை மிகச்சரியாகக் குறிபார்த்து அடிப்பவன். தாக்கிவிட்டு ஓடி ஒளிவார்கள் என்று சிங்களர்களைப் பற்றி சக்ரவர்த்திக்குச் சொல்லப்பட்டதால் இப்படி ஓடி ஒளிபவர்களைப் பின் தொடர்ந்து போய் வில்வளைத்து அம்படித்துக் கொல்ல பயிற்சி தனியாகத் தரப்பட்டது.

சக்ரவர்த்தி இராஜராஜர் பார்க்க இந்தப் பயிற்சியில் விச்சாதர முத்தரையன் கலந்து கொண்டான். ஒருமுறை கூட தவறு செய்யாமல் எழுபது முறை இலக்குகளை அடித்தான்.

இராஜராஜர் அவனை அருகே வரவழைத்து அணைத்துக் கொண்டார். அவரே கேயூரம் அணிவித்து அவனுக்கு பதவி உயர்வு கொடுத்தார் என்றும் சொல்லப்படுகிறது.

''இப்போது விச்சாதர முத்தரையன் என்ன பதவியில் இருக்கிறான்.''

''உபதளபதி.''

''ஏன் தளபதியாகவில்லை.''

பஞ்சவன்மாதேவி கேட்டாள்.

''மேலைச்சாளுக்கியப் போருக்கு வந்திருந்தால் அவர் நிச்சயம் தளபதியாகியிருப்பார். ஆனால் பாடிக்காவல் நியமனம் பெற்று மேல்பாடி என்ற ஊரிலேயே தங்கிவிட்டார்.''

''நல்ல போர் வீரர்தானே.''

''ஆமாம். ஆனால், போர் மீது நாட்டம் குறைந்து விட்டது என்று சொல்கிறார்.''

''எதனால் அப்படி நாட்டம் குறைந்தது.''

''சிங்களத்திலேயே நம்முடைய அரசரின் படையாக பல வருடங்கள் இருந்தார். அப்போது பௌத்த மதத் துறவிகளோடு அவருக்கு நட்பு ஏற்பட்டது. துறவியாகி விடவேண்டும் என்ற எண்ணம் வந்திருக்கிறது. போரில் நாட்டம் குறைந்து விட்டதாகச் சொல்கிறார்.''

''அவரது வயது காரணமா.''

''வயதும் காரணம்.''

''பௌத்த மதத்திற்கு மாறிவிட்டாரா.''

''இல்லை. ஆனால், அந்த மதத்தின் மீது பிடிப்பு இருக்கிறது. நமது கோயில்களுக்கு அவர் வருவதில்லை.''

''அந்த இன்னொரு மனிதனைப்பற்றி சொல்லுங்கள்.''

''கோட்டைக் காவலனாக இருந்த காரிக் குளிப்பாகை முதன் முறையாக மேலைச்சாளுக்கியம் நோக்கிய படையெடுப்பில் கலந்து கொண்டார்.''

''என்ன வயது.''

''முப்பது அகவை இருக்கும். திருமணம் ஆனவர்.''

''பிறகென்ன சண்டை.''

''அவருடைய மனைவி இறந்துவிட்டாள். தற்கொலை செய்து கொண்டாள். அதற்கு இவர்தான் காரணம் என்று சொல்லப் படுகிறது.''

''அடடே.. என்ன கேவலம் இது. இவர் இன்னொரு திருமணத் திற்காக போட்டியிடுகிறாரா.''

''ஆம்.''

''மேலைச்சாளுக்கியத்தில் ஏதேனும் வீரச்செயல் புரிந்தாரா.''



''இல்லை. வெறும் கும்பலாக துங்கபத்ரையில் இறங்கியதோடு சரி. மேலைச்சாளுக்கியத்தில் சூறையாடும்போது சில விஷயங்கள் செய்திருக்கிறார்.''

''என்ன.''

''வேறு எங்கேயும் போகாமல் நேரே கோயில்களுக்குப் போய் அங்குள்ள நகைகளை எடுத்து இடுப்பில் கட்டிக் கொண்டிருக் கிறார். அந்தக் கோயிலில் வேலை செய்தவர்கள் நேரடியாக வந்து தளபதியிடம் சொல்ல, அவரை விசாரித்து அவர் இடுப்புத் துணியை உருவி நகைகளை அரசருடைய பண்டாரத்தில் சேர்த்து விட்டார்கள்.''

''முட்டாள். பிறகென்ன நடந்தது.''

''அவன் கேலிக்குரிய ஆள்தான்.''

''என்ன. எதனால்.''

பஞ்சவன்மாதேவி வியப்போடு கேட்டாள்.

''தானாக ஒரு மாலை தயார் செய்து தன் கழுத்தில் போட்டுக் கொண்டு குடந்தை நகரைச் சுற்றி வந்திருக்கிறார். எனக்கு பரிசு தரக்கூடாதா என்று கிராமம் கிராமமாகக் கேட்டிருக்கிறார். கள்ளுப்பானையும், சாராயக் குடுவையும் பரிசாக வாங்கியிருக் கிறார். கொஞ்சம் கேலிக்குரிய மனிதனாகத்தான் வாழ்ந்திருக் கிறார். அவருடைய நடவடிக்கைகளைக் கண்டு வெறுத்துப் போய்தான் அந்தப் பெண் பொன்னழகி இவரைத் திருமணம் செய்து கொள்ள முடியாது என்று மறுக்கிறாள். இவர் வற்புறுத்து கிறார். அப்படி வற்புறுத்த இவர் மட்டும் காரணமில்லை.''

''பிறகு''

''இவர் உறவினர்கள் சிலரும் காரணம்.'' கொதிப்பிலிருந்த பஞ்சவன்மாதேவி பட்டென்று முகம் மலர்ந்தாள்.

''அரண்மனை வளாகத்திலேயே ஒருவன் குடித்து விட்டு பெரும் குரல் கொடுக்க முடியும் என்றால், மற்ற இடங்களில் இந்த மறவர்கள் என்னதான் செய்ய மாட்டார்கள்.'' என்று உரக்க உளவாளிகளை நோக்கி கேள்வி கேட்டாள்.

அவர்கள் ஆம் என்று தலையசைத்தார்கள்.

''நல்லது. விச்சாதர முத்தரையனிடம் போய் தனிப் போருக்கு சரி என்று சொல்லச் சொல். தூண்டிவிடு. மிக வேகமாக மறுத்தால் இது பஞ்சவன்மாதேவி கட்டளை என்று சொல். அப்படியும் மறுத்தால் என்னிடம் அழைத்துவா.''

சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவர் இரவு எழுந்து உட்கார்ந்ததும் சுடச்சுட பசும்பாலும், கனிந்த வாழைப்பழங்களும் கொடுத்தார்கள்.

பகல் முழுவதும் மருந்தின் வேகத்தில் உறங்கிய உடையார் உற்சாகமானார்.

''எப்படி தூங்கியிருக்கிறேன். பஞ்சவன்மாதேவி. இம்மாதிரி நான் தூங்கியதே இல்லை.'' என்று பெருங்குரலில் சொன்னார்.

''ஒரு விஷயம்'' தயவு செய்து மனதுள் நிலைநிறுத்திக் கொள்ளுங்கள்.''

''என்ன அது.''

''உங்களுக்கு வயதாகிக் கொண்டே போகிறது. நல்ல ஓய்வு தேவைப்படுகின்ற நேரம் இது. இனியும் அதிகமாக உங்களைச் சிரமப்படுத்திக் கொள்ள வேண்டாம்.''

''அதாவது எனக்கு மரணம் நெருங்கிக்கொண்டிருக்கிறது என்பதை ஞாபகப்படுத்துகிறாயா.''

''சர்வேஸ்வரா, சும்மாயிருங்கள். என்ன பேச்சு இது. விளக்கு வைக்கும் நேரத்தில்..''

பஞ்சவன்மாதேவி மெல்ல அதட்டினாள்.

அரசரின் எல்லா மனைவியரும் வந்து குழுமினார்கள். உடல் நலம் விசாரித்தார்கள். நெஞ்சில் கபம் என்னவெல்லாம் செய்யும் என்று ஆளாளுக்குத் தெரிந்ததைச் சொன்னார்கள்.

''வேறு எதாவது பேசுங்களேன்.''

அரசர் சொல்ல. பஞ்சவன்மாதேவி மெல்ல அரண்மனை முற்றத்தில் நடந்ததைச் சொன்னாள்.

அரசர் புருவம் உயர்த்தினார். அமைதியாக இருந்தார். எல்லோருடைய கவனமும் அரசர் மீதே இருந்தது. மெல்ல தலைநிமிர்ந்தார்.

''சேனாபதி கிஷ்ணன்ராமனை நான் நாளை காலை சந்திக்க வேண்டுமென்று விரும்பியதாகச் சொல். அதற்கு முன்னர் ஓலைநாயகத்திடம், தஞ்சை அரண்மனைக்கு உள்ளேயும், வெளியேயும், தஞ்சை நகரிலும், கோயில் புறத்திலும் எவரும் மது அருந்தக் கூடாது என்று நான் உத்தரவிட்டதாகச் சொல். மருத்துவர்கள் பரிந்துரைத்த நோயாளிகள் மட்டும் இதற்கு விலக்கு என்று சொல்லிவிடு.



கோவில் பூசாரிகள் வெறியாட்டம் நடந்தும் நேரத்தில் மது அருந்தத் தடையில்லை என்று சொல்லிவிட்டு, குளிர்காலங்களிலும் இது தளர்த்தப்படமாட்டாது. மது அருந்துதல் தஞ்சைக்கு வெளியேதான் நடத்தப்பட வேண்டும் என்ற என்னுடைய அழுத்தம் திருத்தமான உத்தரவைப் பறையறிவிக்கச் சொல்.

இந்த உத்தரவு எழுதப்பட்டு ஸ்ரீ கிருஷ்ணன்ராமன் அவர்களிடம் படிக்கப்பட்டு, அவர் சரிபார்த்து, அவர் அபிப்ராயம் சொன்ன பிறகு பறையறிவிக்கட்டும். இது குறித்து இராஜேந்திரன் ஏதேனும் சொல்ல வேண்டுமென்றால் அவனும் சொல்லலாம்.'' பட்டமகிஷி உட்பட எல்லா மனைவியரும் அமைதியாக இருந்தார்கள்.

இது சற்று வேகமான உத்தரவோ என்று பயந்தார்கள்.

அரண்மனைக்குள்ளே இராஜேந்திரர் மது அருந்துவதுண்டே. சிலசமயம் இராஜராஜரும் அருந்தியிருக்கிறாரே என்ற யோசனை சிலருக்கு வந்தது.

''இனி தஞ்சை நகருக்குள் நான் ஒருக்காலும் மது அருந்த மாட்டேன். இது சர்வேஸ்வரன் ஆணை.''

அரசர் உரக்கச் சொன்னார். அரசரின் மனைவியர்கள் திகைத்தார்கள்.

இந்தச் செய்தி, தஞ்சையிலுள்ள சேனாபதிகளுக்கும், முதல் மந்திரி ஸ்ரீ கிருஷ்ணராமனுக்கும், முக்கிய அதிகாரிகளுக்கும் வேகமாகச் சொல்லப்பட்டது.

அரசருடைய உத்தரவை ஓலையில் எழுதிக் கொள்கின்ற ஓலைநாயக அதிகாரிகள் அரண்மனை நோக்கி விரைந்தார்கள்.

பஞ்சவன்மாதேவி மறுபடியும் தனியாக அரண்மனையின் மேல் மாடத்திற்கு வந்தாள். ஆழமாய் யோசித்தாள். போர் செய்வது மட்டுமே மறவர்களுடைய பணி என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

கோயில் பணிகளில் முழுமையாக ஈடுபடாமல் அருகே நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

நேற்று வரை யானைகளாலும், மாடுகளாலும் கற்கள் மேலே போயின. உயரம் அதிகமாகிவிட்டது. மாடுகள் அந்த உயரத்திற்கு ஏற முடியாமல் மிரளுகின்றன. மேலே போகப் போக கற்பலகையின் அளவு சிறிதாகிவிட்டது. எனவே, தலைச்சுமையாக கற்பலகைகளை எடுத்துக்கொண்டு போனால்தான் நன்றாக இருக்கும்.

ஒரே ஆள் உச்சிவரை போகாது. ஒவ்வொரு சுற்றுக்கும் கற்பலகைகளை தலைமாற்றி எடுத்துக் கொண்டு போகவேண்டும் என்று நித்தவினோதப் பெருந்தச்சன் யோசனை சொல்லியிருக் கிறார். அதாவது ஒரு மனிதர் அறுபது தப்படி நடந்தால் போதும். ஆள் மைமாறி, கைமாறி கற்பலகை உச்சிக்கு வந்துவிடும். அந்த கற்பலகைகளை அடுக்கிய பிறகு, இந்தக் கற்பலகைகளை அழுத்து வதற்கு மிக தடிமனான, மிக அகலமான, மிக அகலமான ஒரே கல்லால் ஆன கற்பலகை தேவை.

கற்பலகையின் கனத்தில்தான் மொத்த விமானமும் அழுந்தி நிற்கும். அதன் மேலே எட்டு நந்திகள் வைக்கப்படும். ஒரு நந்தி ஒன்றரை ஆள் உயரத்திற்கு இருக்கும். கற்பலகைகளின் மூலையில் எட்டு நந்திகள் வைத்துவிட்டு, அதன்மீது உருண்டைக்கல்லை வைத்து, அதன் மீது தங்கமுலாம் பூசிய தாமிரக்கலசத்தை வைப் பார்கள்.

ஒவ்வொரு கோஷ்டத்திலும் சிலைகள் நிறுவுவதும். அவைகளை ஊன்ற வைப்பதும், ஆட்களின் துணையின்றி நடைபெறாது. இன்னும் அதிகமாக ஆட்கள் தேவைப்படுகின்ற காலம் வந்து விட்டது. இதைவிட மிகப்பெரிய வேலை, குவித்த மண்ணை எடுத்துக் கொண்டுபோய் மறுபடியும் ஒரு இடத்தில் கொட்டுவது தான்.

ஆயிரக்கணக்கில் வண்டி மாடுகள் இருப்பினும் மனிதர்தான் வெட்ட வேண்டும். மண் அள்ளிக் கொட்ட வேண்டும். அடிமை வீரர்கள் மட்டும் போதாது. விமானத்தின் உச்சியில் கலசம் வைத்ததும் விமானத்தைச் சுற்றியுள்ள மண்மேட்டை அகற்ற வேண்டும். அசுர வேலை அது. ஏராளமாக குவித்து விட்டார்கள். விரைவாக மண்ணை வெளியே எடுக்க வேண்டும். அதற்குப்பிறகு தாமிரத் தகடு வேலை. அதற்குப்பிறகு பொன் தேய்க்கும் பணி.. நினைக்க நினைக்க மலைப்பாக இருக்கிறது இந்த வேலையினு டைய கடினம், இந்த வேலையினுடைய அவசியம் உணராமல் இந்த மறவர்கள் தங்களுக்குள்ளும் சண்டையிட்டுக் கொள் கிறார்கள். ஊர் சண்டையும் இழுக்கிறார்கள்.

போரிட்டுத் திரும்பிவிட்டால் என்ன, ஜகத்தையே வென்று விட்டதாக நினைப்பா. முதன்முதலில் எதிரிப்படைகளைப் பார்த்து விட்டுப் பின் வாங்கியவர்கள் தானே.

சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவர் துங்க பத்ரையில் இறங்கி பாதி தூரம் போன பிறகுதானே இவர்கள் கீழ் இறங் கினார்கள். மறவர்கள் மட்டுமே பெரிய வீரர்களா. அந்த ஒற்றர் படைத்தலைவன் அந்தணன் வைணவதாசனைக் காவு கொடுத்துத் தானே இந்த வெற்றி வாங்கப்பட்டது.



வேதம் சொல்லுகின்ற மருவூர் அந்தணர்கள் ஒற்றர்களாகப் போகச் சம்மதித்ததால் தானே, எதிரே இருப்பது படைகள் அல்ல பொம்மைகள் என்று தெரிந்தது. அந்தணர்கள் யாரும் மாலை போட்டுக் கொண்டு நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு வர வில்லையே. குடித்துவிட்டு உளறவில்லையே.

துங்கபத்ரை நதிக்கரையில் தென்கரை நதி ஓரமாகவே நடந்து கீழைச்சாளுக்கியம் வழியாக ஒட்டர் தேசம் போய், அங்கிருந்து கங்கைக் கரையை நோக்கி வடக்கே நடப்பதற்கு உறுதிபூண்டார் களே. கங்கையில் குளிக்காமல் திரும்ப மாட்டோம் என்று சபதம் செய்தார்களே.

சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவர் கட்டுகின்ற பரமஸ்வாமி கோயிலுக்கு கங்கை நீர் எடுத்து வருவதாக சூளுரைத் துப் போனார்களே. இதைவிட மிகப்பெரிய வீரம் உண்டா. ஒரு அந்தணன் ஆயிரம் மறவனுக்குச் சமானமல்லவா. எவ்வளவு காரியத் தெளிவு. எத்தனை மன உறுதி. எவ்வளவு விவேகம்... குடித்துவிட்டு ஆடுகின்ற கோரமும் இல்லை. போரைவிட்டு விலகி பௌத்தனாகின்ற குழப்பமும் இல்லை.

இதை இந்த மறவர்களுக்கு யார் எடுத்துச் சொல்வது. மருவூர் அந்தணர்களுக்கு என்ன மரியாதை செய்யப் போகிறோம் என்று சக்ரவர்த்தி உடையாரை பிற்பாடு கேட்க வேண்டும்.

சிற்பிகளுக்கும் லேசான தலைக்கனம் இருக்கத்தான் செய்கிறது. ஆனால் என்ன செய்வது. அனுசரித்துத் தான் போகவேண்டும். இப்பேர்ப்பட்ட மகத்தான காரியத்தில் ஈடுபடுகின்ற சக்ரவர்த்தி உடையார் எந்தக் கர்வமும் இல்லாமல் அமைதியாக மனைவி மக்களோடு பேசிக் கொண்டிருக்கிறார். ஆனால், தலைக்குத் தலை என்னால்தான் என்று ஊர் முழுக்க விதம்விதமாக கோயில் [illegible] கர்வத்தை வெளியிட்டுக் கொண்டிருக்கிறது.

ராஜராஜிக்கு தனித்த கர்வம். சக்ரவர்த்தி உடையாரைப்பற்றி நாட்டிய நாடகம் எழுதி விட்டாளாம். சூரியசந்திரர் உள்ள வரையில் அவர் புகழ் பாடுவதற்கு இந்த நாட்டிய நாடகம்தான் ஆதரவாக இருக்குமாம். எழுதி முடித்த நாட்டிய நாடகத்தைப் பல பிரதிகள் எடுக்கச் சொல்லியிருக்கிறாராம். ஒவ்வொரு பிரதிக்கும்

பல பொற்காசுகள் பரிசாகத் தருகிறார்களாம் என்று அங்கே தனி சாம்ராஜ்ஜியம் கொடிகட்டிப் பறக்கிறது.

சூரியசந்திரர் உள்ளவரையில் சக்ரவர்த்தியின் புகழை இவள் காவியம்தான் சொல்ல வேண்டுமா, இவளுடைய எழுத்துதான் பறைசாற்றுமா. என்ன பேதமை இது.

உலகத்தில் எது நிற்கும். எது நிற்காது. யார் சொல்வார்கள். யாரால் அனுமானிக்க முடியும்.

பஞ்சவன்மாதேவிக்கு எதனாலேயோ சட்டென்று எல்லாவற்றிலும் ஒரு சலிப்பு வந்துவிட்டது. பொறுப்பில்லாமல் மொத்த ஜனங்களும் இயங்குவதைப் பார்க்கும்போது, எதற்காக இவர்களுக்கு நல்லது செய்ய வேண்டும் என்ற கோபம் வந்துவிட்டது.

எனக்கே இப்படி இருக்கிறதென்றால் என் புருஷனுக்கு எப்படியிருக்கும். அவருடைய ஒவ்வொரு நல்ல விஷயங்களும் பிறரால் தொந்தரவு செய்யப்படுவது பற்றிப் பார்க்கும்போது எத்தனை கோபம் வரும் ஆனால், அது பரப்பிரம்மமாய் அது அப்படித்தான் நடக்கும் என்ற எண்ணம் உடையதாய் அமைதியாய் அமர்ந்திருக்கிறது. எல்லாவற்றையும் இறைவன் பார்த்துக் கொள்வான் என்ற நம்பிக்கையோடு மௌனமாய் இருக்கிறது. ஆனால் உள்ளூற என்ன புழுக்கமோ. எத்தனை வேதனையோ. யார் அறிவார்கள்.

பட்டமகிஷியோடு உட்கார்ந்து பேசுவதும், மற்ற மனைவியருக்குக் கதை சொல்வதுமாய் எத்தனை குதூகலம் அதன் முகத்தில். ஆனால், என்னைப் பார்க்கும்போது மட்டும்தான் கவலையெல்லாம் உடனே வந்து அப்பிக்கொள்ளும். என்னிடம் மட்டும்தான் இரவெல்லாம் புலம்பும். நான், புருஷன் புலம்புவதைக் கேட்பதற்காகவே நியமிக்கப்பட்ட மனைவி. அவர்களுக்குப் புரியாது. உனக்குத்தான் புரியும் என்று அரசாங்க சுமை முழுவதும் என் தலையில் திணித்துவிட்டு போய்விட வேண்டியதுதான் சக்ரவர்த்தியின் வேலை.

நான் என்னைப்பற்றி அதிகம் அலட்டிக் கொள்கிறேனா என்று தெரியவில்லை. ஆனால் நிம்மதியே இல்லை. அவரைக் கைப் பிடித்ததிலிருந்து உள்ளத்தில் நிம்மதியே இல்லை. மோகத்துடன் ரதியைத் தேடிக் கொண்டிருந்த அந்த மன்மதன் எப்போதோ செத்துப் போனான்.

மேல்தளத்தின் படிகளில் அமர்ந்து அப்படியே தலைசாய்த்து சுருண்டு கிடந்தவளை ஒரு அதிகாரிச்சி எட்டிப்பார்த்துவிட்டுப்



போனாள். அடுத்த சில நொடிகளில் அவள் அமர்ந்திருந்த விதம் சக்ரவர்த்திக்குச் சொல்லப்பட்டது. என்னைப்பற்றிக் கவலைப்பட எனக்கென்று ஒரு ஜென்மம் இருக்கிறது.

சக்ரவர்த்தி சந்தோஷப்பட்டார்.

ஒவ்வொரு முறையும் அரசர் அறையின் குறுக்கே நடந்து பலகணி வழியாய் அரண்மனை முற்றத்தைப் பார்க்க, ஒற்றர்கள் மூலம் வந்த தகவலை அங்குள்ள அதிகாரிச்சிகள் மெல்லிய குரலில் மன்னருக்குச் சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

சோழதேசத்தின் ஒவ்வொரு அசைவு பற்றியும், இடைவிடாது அந்த மாமனிதனுக்குத் தகவல்கள் வந்து கொண்டிருந்தன. பல்வேறு விதமாய் வந்த விஷயங்களைச் சீர்தூக்கிப் பார்த்து பின்னலிட்டுக் கொண்டிருக்க, சக்ரவர்த்தியின் முகம் மட்டும் மலர்ந்த விதமாய் குதூகலமாய் மனைவியரோடு சல்லாபித்துக் கொண்டிருந்தது.

## 172

சிறுதளத்து சிங்களாந்த தெரிஞ்ச குதிரைச் சேவகர்களின் உபதளபதியான விச்சாதர முத்தரையன் பிரம்பு சீவிக்கொண்டிருந்தான்.

தஞ்சைப் புறம்படியில் வாரத்திற்கொருமுறை காட்டிலிருக்கும் குறும்பர்கள் பிரம்பும், மூங்கிலும் கொண்டு வந்து விற்பார்கள். பதிலுக்கு தானியங்களோ, உடைகளோ கேட்பார்கள்.

காசு அவர்களுக்கு பெரிய உபயோகமில்லை. ஆனால், பொருட்கள் மிக அவசியமானவை. குறிப்பாய் கோடாரிகளும், அரிவாள்களும், துணிகளும், ருசியான தின்பண்டங்களும், அவர்களை அதிகம் கவருகின்ற விஷயங்களாக இருந்தன. இப்பொழுதெல்லாம் நல்ல மணிமாலைகள் கேயூரங்கள். இடுப்பு அணிகலன்களுக்கு கூட அவர்கள் காட்டுப் பொருள்களை விற்கிறார்கள். அடிபட்ட காயங்களுக்கு, பூச்சிக் கடிகளுக்கு மருந்து போடுவதிலும் அவர்கள் திறமைசாலிகள்.

விச்சாதர முத்தரையனுக்கு முதுகுவலி இருந்தது. குனிந்து எழும்போது அவன் வலியில் முகம் சுணங்கியதைப் பார்த்த ஒரு வேடுவன் அவனை குப்புறப்படுக்கச் சொல்லி, ஏதோ தானியத்தை வறுத்து சூடாக துணியில் கட்டி முதுகில் ஒத்தடம் வைத்தான்.

எகிறிக் குதிக்கச் சொன்னான். சட்டென்று ஏதோ மளுக்கென்று முறிந்து முதுகு சரியாயிற்று. வலி வரவேயில்லை. ஆனால், இப் பொழுது சில நாளாய் இடது கை வலிக்கிறது. கண்ணில் முன்பு போல் அவ்வளவு தெளிவுஇல்லை. மெல்லிய நடுக்கம். வந்து விட்டதோ என்று தோன்றுகிறது. வில் பிடித்து நிலைநிறுத்துகிற போது லேசாய் ஆடுவது போல ஒரு தோற்றம் வருகிறது. அது கையிலுள்ள ஆட்டமா அல்லது கண்ணில் கோளாறா என்று புரியவேயில்லை. காட்டுவாசி வரட்டுமென்று அவன் காத்திருந் தான்.

பிரம்பு வாங்கி அளவாக நறுக்கி, கத்தியால் பட்டைகளை மழித்து சீராக்கி முனையில் இரும்பிலான ஒரு கூர்மையைப் பொருத்தினான். அதன் பின்னே வகிடு எடுத்து பறவைச் சிறகுகளை பொருத்தினான்.

அந்த காட்டுக்குறும்பன் தொலைவில் வருவது தெரிந்தது. விற்களுக்கான வளைந்த மூங்கில்கள் அவனிடம் இருக்கும். வைரம் பாய்ந்த மூங்கில்கள் வீடுகட்டவும், குடிசை போடவும் உதவும். மூங்கிலை இளமையாக இருக்கும்போதே வளைத்துவிடுவார்கள். அப்படி வளைத்துக் கட்டிய மூங்கில்கள் வில்லுக்குப் பயன்படும்.

அந்தக் காட்டுவாசி, களைப்போடு வந்து அருகே உட்கார்ந் தான். குதிரைச் சேணத்தோடு கட்டியிருந்த பையை அவிழ்த்து வெற்றிலைகளை அவனிடம் கொடுக்க, அவன் முகம் மலர்ந்தது. கொட்டைப் பாக்குகள் கொடுக்க கைகூப்பி பெற்றுக் கொண் டான். ஓலைக்கூடையில் வைத்துக் கொண்டான். தாகமாக இருக்கிறது என்று சைகை செய்தான்.

காட்டுவாசிகள் அதிகம் பேசுவதில்லை. ஆனால் மற்றவர் உதடு அசைவு வைத்து, கண்ணின் சஞ்சலம் வைத்து பல விஷயங்கள் புரிந்து கொள்வார்கள்.

அருகேயுள்ள அங்காடிக்குப் போய் பானைநிறைய குளிர்ந்த நீர் எடுத்து வந்து அவன் கைகளில் ஊற்ற அவன் சந்தோஷமாகக் குடித்தான். கள்பானை விற்கிற பெண்மணி அருகே வர, ஒரு சிறிய பானை கள்வாங்கி அவனிடம் கொடுக்க சந்தோஷமாக அதையும் பெற்றுக் கொண்டான். அங்கே ஓரமாக வைத்தான்.

இந்த இடதுகை வலிக்கிறது என்று விச்சாதரமுத்தரையன் சைகையால் சொல்ல சிறிதுநேரம் அவனையே பார்த்தபடி அந்தக் காட்டுவாசி உட்கார்ந்திருந்தான். ஒரு மயிலிறகை அவன் தலை யிலும், முகத்திலும், கழுத்திலும், இடது கையிலும் மெல்ல மெல்ல



வைத்து வந்தான். பிறகு அந்த மயிலிறகை உற்றுக் கவனித்து வந்தான். மயிலிறகு சில இடங்களில் பொசுங்கி இருந்தது. நெஞ்சு தொட்டு இங்கு சரியில்லை என்று சொன்னான்.

விச்சாதர முத்தரையனுக்குத் தூக்கி வாரிப்போட்டது.

''இங்கே என்றால்..''

விச்சாதர முத்தரையன் கலவரமாகக் கேட்க. அந்தக் காட்டுவாசி சிரித்தான். உள்ளே என்று சொன்னான்.

ஹ்ருதயமா என்று கேட்க 'ஆம்' என்று தலையசைத்தான்.

கையால் மண்ணில் பறவை படம் வரைந்தான். அழித்தான். ஆடு படம் வரைந்தான் அழித்தான்.

''மாமிசம் சாப்பிடாதே என்கிறாயா.''

ஆமாம் என்று சொன்னான்.

மதுக்குடுவையை வரைந்தான். அழித்தான்.

''மது அருந்தக்கூடாது என்கிறாயா''

ஆமாம் என்று சொன்னான்.

''வேறென்ன சாப்பிடச் சொல்கிறாய்.''

அவன் மடமடவென்று காய்கறிகள் படம் வரைந்தான். புல், பூண்டுகளை எடுத்து அவன் முன்பு நீட்டினான். கொதிக்க வைத்துச் சாப்பிடும்படி பக்குவம் சொன்னான்.

''இப்பொழுது வலிக்கிறதடா. என்ன செய்யச் சொல்கிறாய்'' என்று சற்று வேதனையோடு சொல்ல, அவனது உள்ளங்கையில் பொடியைத் தூவி தேன் விட்டு குழைத்துக் கொடுத்தான். கசந்து வழிந்தது. ஆனால், சிறிது நேரத்தில் கைவலி சரியாகியது.

அவன் சீவி வைத்த அம்புகளை ஒவ்வொன்றாக எடுத்துப் பார்த்தான். ஓலைக்கூடையிலிருந்து ஒரு மண் குடுவையை எடுத்தான். கடும் நெடி அடித்ததும். விஷம் என்று எளிதில் யூகிக்க முடிந்தது. வேண்டுமா என்று சைகையில் கேட்டான். வேண்டாம் என்று பதட்டத்தோடு விச்சாதர முத்தரையன் சொல்ல இது விஷமல்ல, மயக்கம் தரக்கூடிய விஷயம். யானையை அடிப்பதற்கு என்று சைகையில் சொன்னான்.

நான் எங்கிருந்து எந்த யானையை அடிக்கப் போகிறேன் என்று வேகமாகப் பேச, அந்த காட்டுவாசிக்குப் புரியவில்லை. ஒரு அம்பு நுனியை குடுவையில் தோய்க்க, விச்சாதர முத்தரையன் பதறி அந்த அன்பைப் பிடுங்க, அந்த அம்பு இதுவரை சீவி வைத்து, இரும்பு

சொருகியிருந்த மற்ற அம்புகளுக்கு நடுவே விழுந்தது. காற்றில் பரவிய அந்த நெடியைத் தாங்காது விச்சாதர முத்தரையனின் குதிரை கால்மாற்றித் தவித்தது. மறுபடியும் அந்த அம்புகள் கலந்தன. ஒரு அம்பை முகர்ந்து பார்க்க விச்சாதர முத்தரையன் முயற்சித்தபோது காட்டுவாசி வேண்டாமென்று தடுத்தான். அந்த அம்புகளை விச்சாதர முத்தரையனின் அம்பாரத் துணியில் போட்டுவிட்டான்.

குதிரை அதிகம் மிரண்டது. முன்னும், பின்னும் நகர்ந்தது. குதிரையை அடக்க விச்சாதர முத்தரையன் முழு முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும்போது அம்பாரத்துணியிலிருந்து ஒரு அம்பை கீழே உருவி வைத்துக் கொண்டான். அந்த அம்பு விஷம் தோய்க்காத அம்பு. விஷம் தோய்த்த அம்பு உள்ளே இருந்தது.

அவன் அந்த இடத்தை விட்டு நகர்ந்ததும் குதிரை சமாதானமாகி விட்டது. கண்களை உருட்டி பின்புறம் பார்த்துக் கொண்டே எஜமானனைக் கவனித்துக் கொண்டு வந்தது.

என்ன ஆயிற்று உனக்கு. ஏன் இத்தனை முரட்டுத்தனமாக அங்கிருந்து நகர்ந்து வருகிறாய். உன்னைத் தொட்டுக்கொண்டே இருப்பதனால் உன்னுடைய மிரட்சியும் என்னை தொற்றிக் கொள்கிறது. நான் இனிமேல் உன் போன்றவர்களோடு பழகப் போவதேயில்லை. குதிரை ஏற்றமே வேண்டாம் என்ற எண்ணம் அடிக்கடி வருகிறது. பத்து வயதில் குதிரை ஏறி போதும் போதும் என்ற அளவுக்கு குதிரை சவாரி செய்துவிட்டேன். நடந்தால் கால் வலிக்கிறது. மலையேறினால் கால் நடுங்குகிறது. பயத்தின் காரணமாகப் போதுமென்று நினைக்கிறேனா அல்லது வேறு ஏதேனும் மாற்றமா. சிரமறுக்கப்பட்ட உடம்பும் கைகால் போய் நிலைகுலைந்து கிடக்கும் உடல்களும் பார்த்துப் பார்த்து வெறுத்துப் போய் ஒரு அமைதிக்கு ஏக்கம் வருகிறது.

புத்தம் சரணம் கச்சாமி..

தர்மம் சரணம் கச்சாமி..

சங்கம் சரணம் கச்சாமி.. என்று சொன்னால் ஒரு புதிய மலர்ச்சி. அமைதி புரவுகிறது. அது அழகுணர்ச்சி மிகுந்த அமைதி. உலகத் தைப் புதிதாகப் பார்க்கின்ற அமைதி ஒன்று தேவைப்படுகிறது.

இடுப்பில் வாள் இல்லாது. கண்ணில் கர்வமில்லாது, தலையில் ரோமமில்லாது. சுத்தமாய் மழித்து கையில் ஒரேயொரு கமண்டலத்துடன் இந்தப் பரதகண்டம் முழுவதும் பயணம் செய்ய வேண்டும்.



கங்கைக் கரைக்குப் போக வேண்டுமென்ற இராஜேந்திரர் சொல்லிக் கொண்டிருக்கிறாராம். படைகளை வேவு பார்க்க அனுப்பியிருக்கிறாராம். கடற்படைகள் கங்கைக்கரை முகத் துவாரத்திற்குப் போய், அங்கிருந்து கங்கைக்குள் நுழைந்து, பல்வேறு நாகரிகமான தேசங்களைப் பார்த்துவிட்டு வந்திருக் கிறார்களாம்.

போர் வீரர்களுடன் போகாமல், பரதகண்டம் முழுவதும் காவி உடையோடு சுற்றிவிட்டு வர வேண்டும். எதனாலேயோ பெண் சுகம் பிடிக்கவில்லை. அருவருப்பாக இருக்கிறது. நிறைய பெண்கள் மாய்மாலம் செய்கிறார்கள். அலட்டுகிறார்கள். அழகி என்று தங்களை முன்னிலைப்படுத்துகிறார்கள். அன்பானவர்கள் என்று முன்னிலைப்படுத்துகிறார்கள். ஆனால், உண்மையில் அவர்கள் அழகாகவும் இல்லை. அன்பாகவும் இல்லை. வெகுசில பெண்களே உண்மையாக இருக்கிறார்கள்.

பொன்னழகி உண்மையானவள். திருமணம் செய்து கொள் ளுங்கள் மாமா என்று கெஞ்சுகிறாள். எத்தனையோ விதமாக எடுத்துச் சொல்லியும் தன் திருமணத்தைத் தள்ளிப்போட்டுக் கொண்டிருக்கிறாள்.

தகப்பனும் மற்ற உறவினர்களும் கட்டாயத் திருமணத்திற்கு ஏற்பாடு செய்தபோது, வீட்டை விட்டு ஓடி விச்சாதர முத்தரையன் வேலைசெய்யும் பாடிக்காவலுக்கு வந்துவிட்டாள். அவள் விருப்பப் படியே அந்தக் கல்யாணம் வேண்டாம் என்று சொல்லி, அவள் வீட்டை சமாதானம் செய்துவிட்டு வந்தான்.

சம்பாதித்த காசின் பெரும்பகுதி இதற்காகவே செலவாயிற்று. அவளுக்காக அவன் செலவு செய்கிறான். ஆனால், திருமணம் செய்து கொள்ளவில்லை என்பதை அவன் உறவினர்கள் கொஞ்சம் வினோதமாகப் பார்த்தார்கள்.

பேசிப்பேசி மடக்குட. கையைப் பிடித்து அழு என்று உபதேசம் செய்தார்கள். ஒருமுறை அப்படி அபத்தமாக முயற்சிசெய்தபோது, அவன் பொன்னழகியை எதிரே உட்கார வைத்து தன்னுடைய மனம் பற்றி விவரமாகச் சொன்னான்.

பௌத்த மதம் பிடிக்கிறதென்றும், பௌத்தத்துறவியாகி விடவேண்டுமென்றும், பௌத்தத் துறவியாகி வைத்தியம் கற்றுக் கொள்ள வேண்டுமென்றும் ஆசைப்படுவதாகவும், எல்லோருக் கும் எந்நேரமும் உதவி செய்யவே வாழ்க்கை நடத்த வேண்டு மென்று விரும்புவதாகவும் சொல்ல, முகம் பொத்திக் கொண்டு

பொன்னழகி அழுதாள். இப்படிப் பட்ட உத்தமனைப் போய் நான் எப்படி கையைப் பிடித்து இழுப்பேன் என்று கதறினாள்.

என்னை புத்த மதத்தில் சேர்த்துக் கொள்ளக் கூடாதா, நானும் துறவியாக முடியாதா. நானும் வைத்தியம் கற்றுக் கொண்டு வாழ் நாள் முழுவதும் எல்லோருக்கும் உதவி செய்கின்ற பெண்ணாக வாழ முடியாதா என்று அவனிடம் கேட்க, அவன் தெரியாது என்று உதடு பிதுக்கினான். மிகுந்த வருத்தத்தோடு பொன்னழகி வீடு திரும்பினாள்.

விச்சாதர முத்தரையனின் மீது அவளுக்கு இருந்த காதல் மதிப்பாக மாறியது. மிகப்பெரிய மரியாதையாக உருவெடுத்தது. வேறு பக்கத்திலிருந்து உறவுகள் திருமணத்திற்குக் கிடுக்கிப் போட்டன.

''கொப்புங்கொழையுமா இருக்கா... இந்தப் பொட்டச்சிய இன்னும் கல்யாணம் பண்ணிக் கொடுக்காம இருக்கியே'' என்று ஏசின. அவளுடைய பெற்றோர் கவலையடைந்தார்கள். சிலசமயம் கோபித்துக் கொண்டார்கள். எந்த உறவு வீட்டிற்கு வந்தாலும் பொன்னழகிக்கு வயிறு கலங்கும்.

அப்பாவின் சகோதரியின் மகன்களும், உறவுகளும் மாறி மாறி வந்து மோதினார்கள். நல்லா வச்சுப்பேங்கறான் என்பது போன்ற பேச்சுக்கள் அடிக்கடி வந்தன. அப்பா தலையாட்டினார். இவள் வேகமாக மறுத்தாள். செத்துவிடுவேன் என்று பயமுறுத்தினாள்.

அவள் கூச்சலைக்கண்டு அந்த உறவுகள் பயந்தன. என்ன செய்தாலும் இவளை அசைக்க முடியவில்லையே என்று ஆத்திரப் பட்டன.

''உன் தாய்மாமன் உன்னை ஏன் கட்டிக்கிடமாட்டேன்றான் தெரியுமா. உனக்குத் தெரியாது சேதி. எனக்குத் தெரியும். குதிரை கவுத்து மெறிச்சுடுச்சி. அப்போ நசுங்கினதுதான். அவனால் பொம்பளைய கொண்டாடவும் முடியாது. அவனுக்கு குழந்தையும் பிறக்காது.'' என்று மட்டரகமாகப் பேசினார்கள். ஆண்மையற்ற வன் என்பதை விதம்விதமாகப் பேசினார்கள்.

பொன்னழகி திகைத்தாள். பிறகு அதைப் பொய் என்று புரிந்து கொண்டு, 'ச்சீ... தூ...' என்று அவர்களைக் கடினமாகப் பேசி வெளியேற்றினாள்.

காரிக்குளிப்பாகை மறுபடியும் பெண் கேட்டு வந்து இதையே சபையில் சொன்னபோது, தான் ஆண்மை மிக்கவன் என்று தொடை தட்டியபோது வீச்சரிவாளுடன் அவனை நோக்கி



ஓடினான். அவன் உயிருக்குப் பயந்து அந்த வீடுவிட்டு வெளி யேறினான். வீதியில் அரிவாளுடன் அவனைத் துரத்திப்போன காட்சி இன்னமும் பேச்சாக இருக்கிறது.

''அவளுக்குப் பிடிக்கலைன்னா விட்டுருங்களேன். ஏன் அப்பப்போ அவளைப் போய் ஆத்திரப்படவைக்கறீங்க.'' என்று தெருவிலுள்ளோர் சொல்ல, அவள் வீடு அமைதியாகியது. நடந்த அனைத்தையும் விச்சாதர முத்தரையனிடம் சொல்லி அழுது தீர்த்தாள். அவன் சமாதானப்படுத்தினான்.

உனக்கு நல்ல மாப்பிள்ளை பார்த்து நானே திருமணம் செய்து வைக்கிறேன் என்று உறுதி சொன்னான். காரிக்குளிப்பாகை அடிக்கடி வந்து தொந்தரவு செய்கிறானே என்று பொன்னழகி கலவரப்பட்டபோது, காரிக்குளிப்பாகையைக் கண்டித்து வைப்ப தாக விச்சாதர முத்தரையன் சொன்னான்.

ஆனால், காரிக்குளிப்பாகை ஒரு குடிகாரன். கண்டித்து அடங்குவானா என்ற சந்தேகம் விச்சாதர முத்தரையனுக்கு இருந்தது.

பொன்னழகி அடிக்கடி விச்சாதர முத்தரையனைப் பார்த்து விட்டு வருகிறாள் என்று செய்தி காரிக்குளிப்பாகைக்குக் கேட்கக் கிடைக்க காரிக்குளிப்பாகை ஆத்திரமானான்.

ஒரு பணிமாற்ற ஓய்வு நாளில் இரண்டு நாழிகைக்கு ஒருமுறை குடித்து போதையேற்றிக் கொண்டு விச்சாதர முத்தரையனைத் தேடி அங்குமிங்கும் அலைந்து, ஏதேச்சையாய் வழியில் சந்தித்து அவனை வம்புக்கு இழுத்தான். ஆண்மை உள்ளவனாக இருந்தால் போருக்கு வா என்று உளறினான். போதையில் இடம், பொருள், ஏவல் எல்லாம் மறந்து இந்தக் கூச்சல், இந்தச் சண்டை அரண்மனை முற்றத்தில் நிகழ்ந்துவிட்டது.

அவன் பேச்சினால் ஆத்திரமடைந்த விச்சாதர முத்தரையன் அவனை பலமாகத் தாக்கினான். அடிவாங்க. அடிவாங்க அவன் கூச்சல் அழுகையும், ஆத்திரமுமாய் கிளம்பியது. காரிக்குளிப் பாகையின் கூச்சல் தாங்காமல் விச்சாதர முத்தரையன் அது அரண்மனை முற்றம் என்ற உணர்வோடு வெளியேறினான். அவன் வெளியேறுதலைப் பயந்து ஓடுகிறான் என்று தவறாக நினைத்துக் கொண்டு காரிக்குளிப்பாகை இன்னும் அதிகம் கூச்சலிட்டான்.

விச்சாதர முத்தரையன் நகர்ந்து போன பின்னும் அந்தக் கூச்சல் இருந்தது. அவனை அரண்மனைக்காவல் வீரர்கள் அப்புறப்படுத் தினார்கள். ஆனால், அதற்குள் நிலைமை மோசமடைந்துவிட்டது.

பஞ்சவன்மாதேவி இந்தச் சண்டையைப் பார்த்து விட்டார்கள் என்றும், தயவு செய்து அரண்மனைப் பக்கம் வராதே என்றும் மெய்க்காவல் வீரர்கள் விச்சாதர முத்தரையனை எச்சரித்தார்கள். அவன் மெல்லிய கலவரத்தோடு தஞ்சைப் புறம்படியில் அலைந்து கொண்டிருந்தான்.

ஒருவேளை அழைத்தால் என்ன செய்வது உடனடியாக வரவேண்டுமல்லவா. அதனால் வேறு ஊருக்குப் போகக்கூடாது என்ற எண்ணத்தில் இருந்தான்.

அவன் நினைத்ததுபோலவே அரண்மனையிலிருந்து அழைப்பு வந்தது. அரண்மனை வாசலில் ஒரு அதிகாரிச்சியைச் சந்தித்தான்.

''உன் மீது தவறில்லை என்று மிகத் தெளிவாகத் தெரியும். ஆனாலும், இப்படி இழிவாகப் பேசியவனைத் தட்டி வைக்க வேண்டாமா. என்ன ஏது என்று பஞ்சவன்மாதேவி கேட்டார்கள். ஒன்றுமில்லை, சிறு தகராறு வாய்த்தகராறு என்று சொல்லி சமாளித்து விட்டோம். அவர்கள் உன்னைத்தான் அடையாளம் கண்டு கொண்டார்கள். இராஜராஜர் மெய்க்காவல் படையில் இருந்தாயாமே. அதைக் குறிப்பிட்டுச் சொன்னார்கள். மறுபடியும் உன்னைப் பார்த்தால் நிச்சயம் கேள்வி கேட்பார்கள். எனவே, அவனோடு உண்டான தகராறைத் தீர்த்துவிடு.''

''இதைத் தீர்க்க முடியாதம்மா.''

அவன் பணிவாகச் சொன்னான்.

''அப்படியென்றால் அவன் போருக்கு அழைத்தானல்லவா. போய் போர் செய்.''

''தேவையில்லை என்று நினைக்கிறேன் தாயே.''

''இல்லை. அப்படிச் சொல்லாதே. ஒரு அரண்மனை வாசலில் அசிங்கமாகப் பெண்பிள்ளையின் பெயர் சொல்லி, உன்னை, உன் ஆண்மையை இழிவு படுத்தியவனிடம் எப்படி அமைதியாக விலகிப் போகிறாய். எனக்குப் புரியவில்லை.''

பேசப் பேச விச்சாதர முத்தரையன் உடம்பு முறுக்கேறியது.

''ஒன்று செய். நீ அமைதியானவன். அமைதியை விரும்புபவன் எனக்குப் புரிகிறது. ஆனால், இன்னொரு முறை இம்மாதிரி வம்புச் சண்டைக்கு வந்தால் அடித்துப் புடைத்துவிடு. வெறுமே விட்டு வராதே. விலகிப் போகாதே. அது உனக்கும் இழுக்கு. அந்தப் பெண்ணுக்கும் இழுக்கு.'' என்று எச்சரித்தாள்.



அவன் சரியென்று தலையசைத்தான். அவன் உள்ளம் கொதிப் படையத் துவங்கியது.

''அடித்துத் துவைத்துப் போட்டாயாமே.'' என்று யாரோ இரண்டு பேர் கட்டியணைத்து காரிக்குளிப்பாகையைப் பாராட் டினார்கள்.

அவன் விழித்தான்.

அந்த முத்தரையரைத் துரத்தித் துரத்தி அடிச்சீங்களாமே. உங்க சொந்தக்காரராமில்ல. பங்காளியாமில்ல. தோள்ள துண்டு போட்டு கேள்வி கேட்டதுக்குப் பதில் சொல்ல முடியாம முழிச் சாராமில்ல. வீரம் ஓய் நீர். நீர் என்ன சாதாரணமா. மேலைச் சாளுக்கியம் போய் வெற்றிக்கொடி நாட்டி வந்தவரில்லையா. மாலை போட்டு வந்தவரில்லையா என்று வேறுவீரன் பாராட்ட, இன்னும் அதிகமாக காரிக்குளிப்பாகை விழித்தான்.

அவர்களைச் சுற்றியுள்ளவர்கள். காரிக்குளிப்பாகையை இந்த இரண்டு வீரர்களும் கவிழ்க்கிறார்கள் என்று புரிந்து கொண் டார்கள். ஆனால், இது காரிக்குளிப்பாகைக்குத் தெரியாமல் போயிற்று.

''நான் யாருன்னு தெரியாம எங்கிட்ட மோதராக.. நான் விடுவேனா. நான் வீண் வம்புக்குப் போக மாட்டேன். வந்த சண் டையை விடமாட்டேன்.'' என்று உளர, அவர்கள் மேலும் தூபம் போட்டார்கள்.

''இன்னொரு முறை விச்சாதர முத்தரையனைப் பார்த்தால் நாக்கை பிடுங்கிக் கொள்ளும்படி கேளுங்கள். உன்னைப் போருக்கு அழைத்தும் ஏன் வரவில்லை. நீ ஆண்மகன்தானா என்று கேளுங்கள்.''

''ஒருவேளை வந்துட்டா...'' என்று இன்னொருவர் பயமுறுத்த. காரிக்குளிப்பாகை முகத்தில் பயம் படர்ந்தது.

''துரத்தித் துரத்தி அடிப்பார். இவர் எப்பேர்ப்பட்ட வீரர் தெரியுமா. மேலைச்சாளுக்கியத்துல இவர் காட்டிய வீரம் எனக்குத்தான் தெரியும்.''

இன்னொரு வீரன் புகழ 'ஆமாம்' என்று காரிக்குளிப்பாகை தலையசைத்தான்.

அவர்கள் மூவரும் மது அருந்தும் இடத்திற்குப் போனார்கள். கள் குடித்தார்கள். சுற்றியிருந்தவர்களுக்கு காரிக்குளிப்பாகையின் கலத்தில் கள் ஏற்றிக் கொண்டேயிருக்கிறார்கள் என்பது புரிந்தது.

மற்ற இருவரும் குடிக்காமல் குடிப்பதுபோல் பாசாங்கு செய்வதும் புரிந்தது. ஆனால், இது காரிக்குளிப்பாகைக்குத் தெரியாமல் போயிற்று. குடித்துவிட்டு இருட்டில் நடந்த காரிக்குளிப்பாகை விச்சாதர முத்தரையனைக் கண்டதுண்டமாக வெட்டி எறிவேன் என்று சொல்லிக் கொண்டே போனான்.

பஞ்சவன்மாதேவியின் அதிகாரிச்சிகள் விச்சாதர முத்தரையனைத் தூண்டி விடுகிறார்கள் என்ற செய்தி சேனாதிபதி கிருஷ்ணன்ராமனான பிரம்மராயருக்குப் போயிற்று.

மறவர்களை அடக்க இத்தனை தந்திரமா. அவர்களை அழைத்துப் பேசினால் போதாதா.. இளவரசர் இராஜேந்திரரை அனுப்பி கட்டளையிட்டால் போதாதா. இராஜேந்திரருக்காக எதையும் செய்ய மறவர்கள் சித்தமாக இருக்கிறார்கள்.

சக்ரவர்த்தியார் தஞ்சையில் மது அருந்தக்கூடாது என்று சொன்னது அத்தனை உசிதமான விஷயமல்ல. பழுவேட்டரையரும், மூவேந்த வேளாரும் பல சேனாதிபதிகளும் மது அருந்தும் பழக்கம் உடையவர்கள். அவர்கள் தஞ்சையில் தான் இருக்கிறார்கள். அவர்கள் என்ன செய்வார்கள். அவர்களுக்கு மட்டும் அனுமதி உண்டா. இப்படி நாலுபேருக்கு அனுமதி கொடுத்தால் மெல்ல மெல்ல பெருகாதா. அப்போது சக்ரவர்த்தியாரின் சட்டத்திற்கு என்ன மரியாதை ஆனால், சக்ரவர்த்தி இதை யோசிக்காமலா இருப்பார். அங்கும் ஏதேனும் தந்திரம் இருக்கும். ஏதேனும் ஒரு அர்த்தம் இருக்கும். சேனாபதி கிருஷ்ணன்ராமன் கவலையோடும், ஆழ்ந்த சிந்தனையோடுமே அன்று முழுவதும் இருந்தார்.

குடமுருட்டி ஆற்றங்கரையில் பத்திலிருந்து பதினைந்து வயதிற்குட்பட்ட மறவர் இளைஞர்களோடு விச்சாதர முத்தரையன் குழுமி நின்று அம்பு விடுதல்களின் நுணுக்கங்களைக் கற்றுக் கொடுத்துக் கொண்டிருந்தான். அவன் அம்பாரத்துணியிலிருந்து ஒரு அம்பை ஒரு இளைஞன் உருவியபோது 'பட்'டென்று கையில் அடித்தான்.

''என் அம்பாரத்துணி என் மனைவியைப் போன்றது. அதில் என்னைத் தவிர எவரும் கை வைக்கலாகாது. வில்லைத் தொடுவதற்குக்கூட நான் எவரையும் அனுமதிக்கமாட்டேன்.''

அந்த இளைஞன் எடுத்த அம்பு விஷ அம்பு. மெல்ல ஒரு வாசனை குதிரையின் மூக்கை நெருடியது. குதிரை எகிறிக் குதித்தது. கனைத்தது.

என்ன ஆயிற்று உனக்கு. ஏன் இப்படி செய்கிறாய்.



கோபமாக குதிரையைப் பார்த்து விச்சாதர முத்தரையன் பேசினான். குதிரை மறுபடியும் நாலாபக்கமும் கழன்றது. வேறொரு அம்பு எடுத்து அந்த அம்பின் பின் பக்கத்தால் சுளீர் சுளீரென்று அந்தக் குதிரையை அடித்தான். சும்மாயிரு என்று அதட்டினான். குதிரை பயந்து கால் ஒடுக்கி நின்றது.

குதிரையை அடித்த அம்பை வில்லில் தொடுத்து மரக்கிளை நோக்கி அடிக்க, மரக்கிளைக்கு படாமல் அம்பு வேறெங்கோ பறந்து போய் விழுந்தது.

இளைஞர்கள் ஆவலோடு பார்த்தார்கள்.

''மரக்கிளையைத் தைக்கவில்லையே ஏன்.''

''குதிரையை அடித்தேன் அல்லவா. அம்பு வளைந்துவிட்டது. அம்பு லேசாக வளைந்தாலும் குறியை விட்டு மிக விலகிப் போய்விழும். எனவே, அம்பை மிகக் கவனமாகப் பார்த்துக் கொள்ள வேண்டும் என்பதுதான் ஒரு வில்லாளியினுடைய சாமர்த்தியம். அதனால்தான் அம்புக்கூடையை வேறு எவரும் தொடக்கூடாது என்று நான் சொன்னேன்.''

இளைஞர்கள் புரிந்துகொண்டார்கள்.

புரிகிறது. புரிகிறது என்று குதித்தார்கள். தொலைவில் யாரோ. ''யாரடா அது' என்று கத்திக் கொண்டு ஓடிவந்தான். ஓடிவந்தவன் காரிக்குளிப்பாகை.

''நீதானா. நீதான் என் மீது அம்பு அடித்தாயா. நாயே, என்ன துணிச்சல் இருந்தால் மறைந்திருந்து அம்பை எய்வாய். என்ன செய்கிறேன் பார்.''

இடுப்பிலிருந்து வாள் உருவினான்.

காரிக்குளிப்பாகை ஆமணக்கு புதருக்கு நடுவே வழித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தபோது எங்கிருந்தோ பறந்து வந்த அம்பு பொச்சென்று நேர் எதிரே வந்து தரையில் குத்தியது.

காரிக்குளிப்பாகை பயந்து போனான். கழுவாமல் ஓடிவந்து கத்தினான். விச்சாதர முத்தரையனைக் கண்டபடி ஏசினான். இதோ வந்து பேசிக் கொள்கிறேன் என்று ஆற்றில் இறங்கினான். குத்திட்டு உட்கார்ந்து கொண்டான். பெரிய வாளைமீன் எகிறி முதுகில் அடிக்க பயந்துபோய் எழுந்து நின்றான். இளைஞர்கள் வாய்விட்டுச் சிரித்தார்கள். மறுபடியும் குத்திட்டு உட்கார்ந்து சுத்தம் செய்துகொள்ள மறுபடியும் கேலியாகச் சிரித்தார்கள். மறுபடியும் வாளோடு அவன் விச்சாதர முத்தரையனை நோக்கி

வர, மறவ இளைஞர்கள் விச்சாதர முத்தரையனைச் சுற்றி நின்று கொண்டார்கள். கையில் இருக்கின்ற ஈட்டிகளைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு அவனை மடக்கத் தயாராக இருந்தார்கள். காரிக்குளிப்பாகைக்கும், விச்சாதர முத்தரையனுக்கும் மறுபடியும் வாக்குவாதம் தடித்தது.

"நீ ஒரு தகப்பனுக்குப் பிறந்தவனாக இருந்தால் ஆண்மை உடையவனாக இருந்தால், உண்மையான சோழதேசத்து வீரனாக இருந்தால், உப்புப் போட்டு தின்கின்ற உபதளபதியாக இருந்தால் என்னோடு நேருக்கு நேர் மோதிப்பார்." என்று காரிக்குளிப்பாகை கத்த விச்சாதர முத்தரையன் அமைதியாய் "மோதுகிறேன்" என்று சொன்னான்.

எப்போது, எங்கே என்று கேட்க, நீ நேரம் குறித்துக் கொண்டு வா என்று அனுப்பினான்.

அங்குள்ளவர்கள் இது அத்தனையையும் வேடிக்கை பார்த்தார்கள்.

"நாளை காலை வஸிஷ்டேஸ்வரர் கோயிலுக்குப் பின்பக்கம் இருக்கின்ற கருமார் திடலில் போர் செய்யலாம்." என்று உரக்க வாள் உயர்த்திக் கூறினான்.

மூன்று நாள் இடைவிடாது குடித்துக் கொண்டிருந்ததினுடைய போதை இன்றும் அவன் பேச்சிலும், புத்தியிலும் இருந்தது.

இதையெல்லாம் கவனித்துக் கொண்டிருந்த இரண்டு வீரர்கள் சட்டென்று குதிரை ஏறி அரண்மனை நோக்கிப் போனார்கள். மறுநாள் காலை சிறு முரசு ஒலித்தது. மக்கள் முரசு அடிப்பவனைச் சுற்றிக் கூடினார்கள்.

"தஞ்சை நகரின் எல்லைக்குள் மது எவரும் அருந்தக் கூடாது. மதுபானக் கடைகள் இருக்கக்கூடாது. மது அருந்திவிட்டு உள்ளே நுழையக்கூடாது. இது சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜராஜத் தேவரின் உத்தரவு." என்று சொல்லப்பட்டது.

நோயுற்றவர்கள் மட்டும் சிறிது அருந்தலாமென்றும், பூசாரிகள் ஆவேச நேரத்தில் சிறிது அருந்தலாமென்றும் மெல்ல சொல்லப் பட்டது.

ஆண்கள் இதை ஆதரித்தும், எதிர்த்தும் பேசினார்கள். எதற்காக இது என்று சிலர் விவாதம் ஆரம்பித்தார்கள்.



"எனக்குத் தெரியும்மய்யா. அரண்மனை வளாகத்திளிருந்த காரிக்குளிப்பாகை பெரிய அட்டகாசம் செய்து விட்டான். அதுதான் காரணம்."

ஒருவீரன் சொல்ல, யார் குளிப்பாகை என்ன நடந்தது. யாரது விச்சாதர முத்தரையன் என்று ஜனங்கள் பேச ஆரம்பித்தார்கள். விஷயங்கள் எல்லார் காதுகளுக்கும் தாவித்தாவி, தாவித்தாவி பரவின.

"போர் எப்பொழுது என்று காரிக்குளிப்பாகை அறிவித்திருந் தான்."

மக்கள் கேட்டார்கள்.

"தெரியவில்லையே."

"சீக்கிரம் வைக்க வேண்டியதானே. உடனடியாக நிறைவேற்றி விடலாமல்லவா. காரிக்குளிப்பாகையைப் பார்த்து இரண்டு வார்த்தை சொல்லிவிட்டு வரலாமே."

சிலபேர் புறப்பட்டார்கள்.

வஸிஷ்டேஸ்வரர் கோயிலுக்கு அருகேயுள்ள கிராமத்து அதிகாரிகள், "இது எங்கள் ஊரில் நடக்கிறபடியால் எங்களுடைய கண்காணிப்புக்குக் கீழ்தான் நடக்கவேண்டும்." என்று காரிக்குளிப் பாகையிடம் தெரிவித்தார்கள்.

காரிக்குளிப்பாகை சரியென்று ஒத்துக்கொண்டான். விச்சாதர முத்தரையனுக்கு ஆள் அனுப்பினார்கள். அவனும் சரியென்று ஏற்றுக் கொண்டான்.

அந்த அதிகாரிகள் நாளை மறுநாள் என்று நேரம் குறித்தார்கள். அந்த ஊரைச்சுற்றி முரசு அறிவித்தார்கள்.

இம்மாதிரி இரண்டு வீரர்களுக்கு நடுவே எதன் பொருட் டேனும் சண்டை நடப்பது வழக்கம்தான். இந்த மாதிரி சண்டை யெல்லாம் சமீபமாய் நடப்பதில்லை. பார்த்து வெகுநாளாகி விட்டது.

என் பெண்ணை இந்தப் பெயருடைய பையன் காதலிப்பதாகச் சொல்கிறான். அவன் என் பெண்ணைத் திருமணம் செய்ய வேண்டுமென்றால், நான் வளர்க்கின்ற காளையை அடக்க வேண்டும் என்று சொல்வார்கள். அந்தக் காளையையும், அந்த இளைஞனையும் திடலில் தனியே விட்டுவிடுவார்கள். அதேநேரம் அந்தக் காளையால் குத்துப்பட்டு அந்த இளைஞன் சிதைந்து

போவதும் நடக்கும். சில சமயங்களில் போர் வீரர்களுக்கு நடுவே குத்துச்சண்டையும் நடக்கும். வாட்போரும் நடக்கும்.

ஒருமுறை சுந்தரசோழர் காலத்தில் இரண்டு வீரர்களுக்கு ஈட்டி கொடுக்கப்பட்டு ஒருவர்மீது ஒருவர் எறிந்து கொல்லுகின்ற போட்டி நடந்தது. இரண்டு பேர் ஈட்டியுமே இலக்கு தப்பிப் போயிற்று. அடேய்.. என் ஈட்டியை எடுத்துக் கொள்ளடா என்று பலஈட்டிகள் அந்த வீரர்களை நோக்கி வந்தன. பூமியில் குத்தி நின்றன. அவர்கள் இருவரில் எவரேனும் ஒருவர் மடிந்து சாக வேண்டுமென்று தஞ்சை மக்கள் ஆசைப்பட்டதால் அவ்விதம் நடந்ததாகச் சொல்லப் பட்டது. ஆனால், அதிகாரிகள் தலையிட்டு இது சரியில்லை என்று அந்த ஈட்டிகளை பிடுங்கிப்போட்டு அவர்களை சமாதானமாகப் போகும்படிச் சொல்லிவிட்டார்கள்.

அவர்கள் அலுத்துக் கொண்டே பிரிந்ததாகச் செவிவழிச்செய்தி உண்டு.

இது எந்தவகைப் போர் என்று தெரியவில்லை. ஒருவேளை வாட்போராக இருக்கலாம். அல்லது மல்யுத்தமாகவும் இருக்கலாம். எந்தவிதமான யுத்தம் என்பது அன்று காலை தீர்மானிக்கப்படும் என்கிறார்கள்.

சிறு முரசுச் செய்து சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜராஜத் தேவரை அடைந்தது.

கிருஷ்ணன்ராமனும், பழுவேட்டரையரும் மூவேந்த வேளாளரும், அருண்மொழித்தேவரும் இராஜேந்திரசோழரும் இருக்க இந்த விஷயம் விவாதத்திற்கு வந்தது.

பெண் சம்மந்தப்பட்ட விஷயம். ஒரு வீரனின் ஆண்மை சம்மந்தப்பட்ட விஷயம். பேசித்தீர்த்து கொள்ளும்படி இங்கு எதுவுமில்லை. அதனால் அடித்துக்கொண்டு தீர்த்துக் கொள்ளட்டும். மருத்துவ வசதியை அருகிலேயே வைத்துக் கொள்ளுங்கள்.

''என்ன விதமான போர் சரியாக இருக்கும்.''

அருண்மொழிப்பட்டன் கேட்டான்.

''என்ன, உனக்கும் இதில் ஆவலா. வில் வளைத்து அம்பு தொடுத்தல். அதிகாரிகள் முன்னிலையில் வழக்கை தீர்மானம் செய்ய வேண்டும். அடித்துக் கொண்டு சாகவேண்டும் என்று என் விருப்பமல்ல. சாகக்கூடாது என்பதுதான் என் விருப்பம். எனவே வில்வளைத்து அம்பு தொடுத்து ஒருவர் மீது ஒருவர் குறிபார்த்து எறிய வேண்டும். இருவருக்கும் நல்ல இடைவெளி இருக்க



வேண்டும். ஒரு அம்புக்கு மேல் தரப்படமாட்டாது. ஈட்டி எறிதல் போல இதில் இரண்டு பேரும் காயம்படாமல் இருந்தால் வெகு நிச்சயம் சமாதானமாகப் போய்விட வேண்டும். இது என்னுடைய உத்தரவு என்று அதிகாரிகளுக்குச் சொல்லிவிடுங்கள்''

''யார் இதை நடுவராக இருந்து கவனிப்பது''

''சேனாபதி கிருஷ்ணன்ராமன் செய்யட்டுமே.''

சக்ரவர்த்தி உடையார் சொன்னார்.

''இல்லை சக்ரவர்த்தி. நீங்கள் வந்து இதை நடத்திக் கொடுங்கள்.''

முடிவாக சேனாபதி கிருஷ்ணன்ராமன் அரசரை அழைத்தார்.

''ஏன். எதற்கு என்னை அழைக்கிறீர்கள்.''

''மது அருந்தக்கூடாது என்று ஒரு கட்டளையிட்டிருக்கிறீர்கள். இது குறித்து மக்கள் உங்களிடம் பேச ஆசைப்படுவார்கள். அவர்களிடம் நேரடியாக இந்த விஷயத்தைச் சொல்லும்போது இது இன்னும் பலமான வரவேற்பைப் பெறும்.''

''ஏன், இதை பழுவேட்டரையரும், மூவேந்த வேளாளரும் வரவேற்கவில்லையா.''

''இல்லை. நான் குடிப்பதை நிறுத்தி இரண்டு மாதங்களுக்கு மேலாகின்றன.'' பழுவேட்டரையர் அவசரமாகச் சொன்னார்.

''பலமுறை நிறுத்தியிருக்கிறீர்களே.''

சக்ரவர்த்தி சொல்ல மற்றவர்கள் வாய்விட்டுச் சிரித்தார்கள்.

''இந்த முறை உண்மையாகவே நிறுத்திவிட்டேன். உங்கள் உத்தரவு வந்ததும், அது என்னை மேலும் பலப்படுத்திவிட்டது.''

''மூவேந்த வேளாளர் என்ன சொல்கிறார்.''

''முயற்சி செய்கிறேன். மது அருந்தவில்லையெனில் தூக்கம் வரவில்லை. எனக்கு வேறொரு எண்ணம் உண்டு.''

''என்ன''

''தஞ்சையைவிட்டு நகர்ந்து கிராமப்புறமாகப் போய்விடலாமா என்று நினைக்கிறேன்.''

''ஆஹா.. அரசாங்கப் பதவியை விட்டு ஒதுங்கி விடவேண்டுமென்று பார்க்கிறீர்கள்.''

''அதெப்படி ஒதுங்கிவிட விடுவீர்கள். ஆனாலும் அந்த எண்ணமும் வந்துவிட்டது. வயதாகிவிட்டது. சிலசமயம் வீரர்கள் பேசுவது

என் காதில் தெளிவாகக் கேட்பதில்லை. காது கேட்காத ஒரு நிலையில் அரசாங்க அதிகாரியாக இருப்பது நல்லதல்ல என்ற எண்ணமும் வந்திருக்கிறது. பிற்பாடு இதை யோசனை பண்ணிச் சொல்கிறேன்.

ஸ்ரீ கிருஷ்ணன்ராமன் சொன்னதுபோல இந்தப் போட்டிக்கு நடுவராக நீங்கள் இருங்கள். நீங்கள் சொன்னதுபோல ஒரு அம்பும் வில்லும், அந்த வில்லும்கூட நாணேற்றப்படாத வில்லாக இருக்க வேண்டும். வில்லை வளைத்து நாணேற்றி ஒருவர் மீது ஒருவர் எய்ய வேண்டும்.''

''ஆஹா நல்ல யோசனை.''

''நாணேற்றப்படாத வில் தரையில் இருக்கும் அருகே அம்பும் இருக்கும். நாம் இடுப்புத் துண்டை கீழே விட்டவுடன் இரண்டு பேரும் களத்தில் குதித்து வில் வளைத்து நாணேற்றி அம்பு தொடுத்து எய்ய வேண்டும்.''

''யார் வெற்றி பெறுவார்கள்.''

''வெகு நிச்சயமாக விச்சாதர முத்தரையன்.''

அருண்மொழி அவசரமாகச் சொன்னான்.

''ஏன்.''

''அவன் குதிரையில் ஏறி வில் விடுவதில் சாமர்த்தியன்.''

''காரிக்குளிப்பாகைதானே சண்டைக்கு அழைத்தான்.''

''அவன் குடிகாரன். கோட்டைக்காவலன்.''

''அப்படியா... அவனால்தான் இத்தனை வம்புமா.''

''ஆமாம்.''

''நல்லது. நான் இதற்கு நடுவராக வரச் சம்மதிக்கிறேன். ஒரு வேளை காரிக்குளிப்பாகை அடிபட்டால் அதற்கு குடிபோதை தான் காரணம் என்று சொல்கிறேன். இன்னும் வேகமாக வீரர்களிடம் பேசுகிறேன்.''

''நீங்கள் நடுவராக அந்த இடத்திற்கு வருவதாக இருந்தால், மெய்க்காவல் படையினரின் வேலை அதிகமாக இருக்கும்.''

''என்ன''

''அந்தக் கூட்டத்திற்குள் எவர் நுழைந்தாலும் அவர்கள் சோதனை செய்யப்படுவார்கள். வருகின்ற அத்தனை வீரர்களும் ஆயுதமின்றி வரவேண்டுமென்று சொல்லப்படுவார்கள்.''



அருண்மொழி வேகமாகப் பேசினான்

''அது உன்னுடைய விருப்பம். எனக்கு அதில் ஆட்சேபணை இல்லை.''

மன்னர் சொன்னார்.

அருண்மொழி வணக்கம் தெரிவித்துவிட்டு விரைவாக வெளியேறினான். மறுபடியும் சிறுமுரசு ஒலித்தது.

சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவர் நாளை காலை ஒரு விற்போர் நடக்கும் என்றும், காரிக்குளிப்பாகை, விச்சாதர முத்தரையன் இருவரும் போரிடுவார்கள் என்றும், இதை வேடிக்கை பார்க்க வருகின்ற எவரும் கையில் முழங்கை நீள குச்சிகூட இல்லாமல்தான் வரவேண்டுமென்றும், அவர்கள் கடும் சோதனைக்குப்பிறகே அந்த அரங்குக்குள் அனுமதிக்கப் படுவார்கள் என்று சொல்லப்பட்டது.

மூங்கில் சாரம் எழுப்பி அதன் மீது மேடை போடுவதற்கு அவன் உத்தரவுகள் பிறப்பித்தான்.

தஞ்சை நகரம் தீப்பற்றிக் கொண்டதுபோல இந்த விஷயம் பற்றிப் பேசத்துவங்கியது.

காரிக்குளிப்பாகை பயந்தான். பயம் போக்க குடிக்க வேண்டுமென்று ஆசைப்பட்டான். ஆனால், தஞ்சைக்கு அடுத்த பகுதியில் மது கிடைக்கவில்லை. அதனால் புறம்படிக்குப் போய் மதுக்கடையில் அமர்ந்து குடித்தான். தனியே புலம்பினான்.

வெளிச்சம் வரும்போது மக்கள் கடைத்தெருக்களில் குழும ஆரம்பித்தார்கள். பலகாரக் கடைகளில் ஆவி பறக்கும் வெள்ளைப் பணியாரங்கள் விற்கப்பட்டன. காய்கறிகளைப் பொடியாக நறுக்கி, அரிசி மாவும், உளுந்து மாவும் கலந்து புளிக்க வைக்கப் பட்ட சொதியில் கலந்து, மண்சட்டியில் ஊற்றி வட்டம் வட்டமாக இட்டு, அவைகள் சுட்டவுடன் எடுத்து தட்டில் வைத்து மீன் குழம்போடும், ஆட்டுக்கறி குழம்போடும் பரிமாறினார்கள்.

ஒரு செப்புக்காசுக்கு இரண்டு சொதிகள் கிடைத்தன. சூடான அரிசிக்கஞ்சியும், மோர் ஊற்றிய குளுமையான அரிசிக்கஞ்சியும் விதம்விதமான துவையலோடு விற்கப்பட்டன.

ஜனங்கள் குவளை குவளையாக வாங்கிக் குடித்தார்கள். நேற்று விற்காத கறித்துண்டை மூடிவைத்து இன்று இரும்புச் சட்டியில் போட்டுப் பிரட்டி உப்பு கலந்து சற்று மிளகுப்பொடி தூவி உண்ணக் கொடுத்தார்கள். அதேநேரம் வலைவீசிப் பிடித்த

மீன்களை விடியற்காலையில் செம்படவர்கள் கொண்டுவர கூடையில் அடுக்கி வைத்திருந்தார்கள்.

ஒருகுவளை குளுமையான அரிசிக்கஞ்சி, ஒரு பெரிய மீன் துண்டு காலை உணவுக்குப் போதுமானதாக இருந்தது.

மீனின் தலைப்பகுதியையும், வால் பகுதியையும் தின்ன நாய்கள் அந்தக் கடைகளையே வட்டமிட்டுக் கொண்டிருந்தன. நடுநடுவே சண்டையிட்டு மக்களைத் திசை திருப்ப வைத்தன.

பழங்களை நறுக்கி மத்தால் அடித்து நசுக்கிக் கூழாக்கி அதில் தேன்விட்டு குடித்தார்கள். ஒரு சிறிய சட்டியை வாயில் கவிழ்த்துக் கொண்டால் மிகச் சந்தோஷமாக ஏப்பம் வந்தது. நிண வாசனையும், பழவாசனையும், அரிசிக்கஞ்சி வாசனையும், நொதியிலிருந்து கிளம்புகின்ற கமறலான புகையும், அடுப்பு விறகு எரிகின்ற மணமும் அந்த இடத்தை வேறு விதமாக மாற்றியிருந்தன. ஜனங்களை நிற்க வைத்தன.

சற்றுத்தள்ளி ஒரு வேளாளர் குடும்பம் கை முறுக்குகளையும், பருப்பு வடைகளையும் விற்றுக் கொண்டிருந்தன. அந்தப் பலகார கடைகளில் வேப்பங்குச்சிகளை உடைத்து சிறு துண்டுகளாக்கி முன்பக்கம் நசுக்கி ஒரு அகலமான பாத்திரத்தில் நீர்விட்டு அடுக்கி வைத்திருந்தார்கள். பசுமை குறையாமல் இருப்பதற்காக அப்படிச் செய்திருந்தார்கள். அந்த வேப்பங்குச்சிகளை வருவோர் போவோர் எடுத்துக் கொண்டு அந்தப் பலகாரம் கடைக்கு அருகிலேயே பல் துலக்கினார்கள். வாய் கொப்பளித்தார்கள். வேப்பங்குச்சி சாறு உள்ளே போனதும் பசிக்கத் துவங்கியது. உடனே ஏதேனும் சாப்பிட வேண்டும் என்ற ஆசை வந்தது. அதற்காகவே வேப்பங் குச்சிகள் அங்கு வைக்கப்பட்டிருந்தன.

காலையிலேயே சோறு சாப்பிட்டு விடவேண்டும். எப்பொழுது சோறு சமைப்பீர்கள் என்று ஒரு போர் வீரன் ஆவலாகக் கேட்டான். அதற்கு சற்று நேரமாகும் இப்பொழுதுதான் அரிசி களைந்து கொண்டிருக்கிறார்கள் என்று கடைக்காரன் பதில் சொன்னான்.

ஜனங்கள் அன்று நடக்கப் போகும் வில்வித்தை பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்கள். இதற்கு முன் நடந்த விதம் தனிப்போர் பற்றி அவரவருக்குத் தெரிந்த கதைகளை அவிழ்த்துவிட்டுக் கொண்டிருந் தார்கள்.

நிறைய கழுதைகளில் துணிமணிகளை ஏற்றிக் கொண்டு வண்ணார்கள் ஆற்றுப்பக்கம் போனார்கள்.



தலையில் புதிய துணிமூட்டையோடு மனைவி பின்னால் வர தையற்கலைஞன் ஒருவன் ஒவ்வொருவரிடமும் போய் சட்டை தைக்க வேண்டுமா என்று கேட்டான். கிழிந்த சட்டையும் தைத்துக் கொடுத்தான்.

உன்னிடம் சட்டை தைக்கக் கொடுக்கலாம். நன்றாகத்தான் இருக்கும். ஆனால், உனக்கு சட்டை தைக்கக் கொடுக்கும் கூலியில் ஒரு யானை வாங்கலாமே அல்லது இரண்டு குதிரைகள் வாங்கலாமே என்று ஒரு போர் வீரன் சொல்ல, மற்றவர்கள் ஆமாம் என்று சொன்னார்கள்.

''நானா விலை ஏற்றுகிறேன். முன்பு மூன்று காசுக்கு ஒரு சட்டை தைத்துக் கொண்டிருந்தேன். இப்பொழுது ஆறு காசாகி விட்டது. இதில் நஷ்டம் உங்களுக்கல்ல.. எனக்குத்தான். யாரும் சட்டை தைத்துக் கொள்ள மாட்டேன் என்கிறார்கள். இடுப்பில் ஒரு துணியும், மேலே ஒரு துணியுமாக நேரடியாய் நெசவாள ரிடமே வாங்கிப் போய் விடுகிறார்கள். எனக்கு வியாபாரமே ஆவதில்லை.'' என்று சொன்னான்.

அவன் மனைவியும் முகம் தூக்கி வைத்துக் கொண்டாள். ஆனாலும், ஜனங்கள் அளவு கொடுத்து விட்டுத்தான் போனார்கள். குறிப்பாய் கடைக்காரர்கள் சட்டை தைத்துக் கொள்வதில் ஆவலாக இருந்தார்கள். அவர்களிடம் தான் அதிகம் காசு புழங்கியது.

அரிசியும் மற்ற தானியங்களும் நிறைந்த வண்டி இரண்டு மூன்று ஒன்றன் பின் ஒன்றாகப் போயின. பெரிய கொட்டாரங்களுக் குள்ளே நுழைந்தன. அங்கு கூடைகூடையாய் தானியங்கள் கொட்டப்பட்டன. கொட்டப்பட்ட நேரத்திலேயே ஜனங்கள் வந்து நெல் தரம் பார்த்துவிட்டு, விலைபேசி அவரவர்கள் கொண்டு வந்த கூடையில் அள்ளிக் கொண்டு போனார்கள். பருப்பு வகைகளை பலகாரக்கடைக்காரர்கள் அவசரம் அவசரமாக வாங்கிக் கொண்டு போனார்கள்.

வெல்ல வண்டிப் போயிற்று. வாசனை மூக்கைத் துளைத்தது. சிறுவர்கள் வெல்ல வண்டியிலிருந்து உதிருகின்ற வெல்லத்திற்காக அந்த வண்டியின் பின்னாலேயே போனார்கள். கோவில் காளையும் வெல்ல வண்டியின் வாசனையை மோப்பம் பிடித்துக் கொண்டே நுரைதள்ளப் பின்னால் போயிற்று. கடைத்தெரு முழுவதும் சிதறிக்கிடக்கின்ற தானியத்திற்காக கோழிகள் முன்னும் பின்னும் அலைந்தன. வண்டிகள் போக சிறகடித்துத் தாண்டின.

நாய்க்குட்டிகள் கோழிகளை விரட்டுவதிலேயே குறியாக இருந்தன.

கூடையில் வெற்றிலையும் பாக்கும் வைத்து இடுப்பு ஒசித்த வண்ணம் மறவர் குலப்பெண்கள் கடைவீதிக்கு வந்தார்கள். இப்பொழுதெல்லாம் அவர்களிடம் அதிகம் காசு புழங்குகிறது. சந்தைக்கு வந்து பொருள் வாங்கிப் போவதென்பது அவர்களுக்கு பிடித்த விஷயமாக இருக்கிறது.

ஒரு வீட்டு வாசலில் முன்கூரை போட்டு சாயப்புடவைகளைத் தொங்க விட்டிருந்தார்கள். பூக்கள் பதித்த புடவையும், சிறுசிறு பொட்டுகள் உள்ள சுங்கிடிப் புடவையும் அவர்களை அதிகம் கவர்ந்தன. ஆனாலும், வெறும் சாயப்புடவைகளையே அதிகம் வாங்கினார்கள். பூப்போட்ட புடவைகளையும், சுங்கிடிப் புடவைகளையும் கட்ட வெட்கப்பட்டார்கள். அது மிகவும் நாகரிகமாக இருக்குமோ என்று பயந்தார்கள்.

“அதெல்லாம் பழைய காலமம்மா. இப்பொழுது அரண்மனைப் பெண்டிர் எல்லோரும், அதிகாரிச்சிகள் உட்பட இம்மாதிரிப் புடவைகளைத்தான் வாங்குகிறார்கள்.” என்று கடைக்காரர்கள் சொல்ல, யார் யார் வாங்கினார்கள். எப்போது வாங்கினார்கள் என்றெல்லாம் விசாரிக்கப்பட்டது.

நீண்ட துணிக்கு நடுவே பொன் வளையம் வைத்து அதை நூலால் தைத்திருந்தார்கள். அந்தப் பொன்வளையத்தை நடு மார்பில் வைத்து இரண்டு பக்கமும் துணியை இழுத்து பின் பக்கமாக முடிச்சு போட்டுக்கொண்டால், கச்சை மிகக் கச்சிதமாக புடவைக்கு இணையாகப் பொருந்தியது.

இப்பொழுதெல்லாம் அரண்மனைப் பெண்டிர்களுக்கெல்லாம் கச்சை அணிவது முக்கிய வழக்கமாக இருக்கிறது. தேவரடியார்கள் மட்டுமே நடனமாடுவதற்காக கச்சை அணிந்து கொண்டிருந் தார்கள். இப்பொழுது அவர்களைப் பார்த்து பணிப்பெண்களும் கச்சை அணியத் துவங்கிவிட்டார்கள். கச்சை அணியாமல் இருப்பது மெல்ல மெல்ல கேலியாகிவருகிறது. பல குழந்தைகள் பெற்ற, வயதான பெண்மணிகள் தான் கச்சை அணியாமல் இருக்கிறார்கள்.

வெயில் இன்னும் ஏறத்துவங்கியது. காலை உணவு முடித்த ஆண்கள் வெற்றிலையும், பாக்கும் வாங்கிக்கொண்டு, தின் பண்டங்களை வாங்கிக் கொண்டு, வேர்க்கடலை, உருண்டை களை வாங்கிக் கொண்டு, மடியில் இறுக்கிக் கொண்டு விற்போர்



நடக்கின்ற வஸிஷ்டேஸ்வரர் கோயிலுக்குப் பின்புறம் போனார்கள்.

மேடை அமைக்கப்பட்டிருந்ததையும், சுற்றிலும் வட்டமாக சவுக்கங்கட்டைகளாலும், மூங்கில் கொம்புகளாலும் தடுப்பு போடப்பட்டிருந்ததையும் பார்த்து வியந்தார்கள்.

அட... ஒரே இரவில் இடத்தையே மாற்றி விட்டார்களே என்று அதிசயப்பட்டார்கள். ஜனங்கள் உட்காருவதற்கு உதவியாக மண்கட்டிகள் திமிசுக்கட்டைகளால் பொடிக்கப்பட்டு மெத்மெத் தென்று செய்யப்பட்டிருந்தது.

திடலைச்சுற்றி மேடாகவும், நடுவே அந்தத்திடல் சற்றுப் பள்ளமாகவும் இருந்தது. மக்கள் முன்னே போய் இடம் பிடித்துக் கொண்டார்கள். நல்லவேளையாக எங்கிருந்தோ வந்த ஒரு மேகக்கூட்டம் கதிரவனை மறைத்துக் கொண்டது. வெயில் சட் டென்று தாழ்ந்தது. குளிர்காற்று வடக்கேயிருந்து வீசத்துவங்கியது.

ஜனங்கள் துண்டால் உடம்பை மூடிக்கொண்டார்கள். இன்னும் கூட்டம் சேர்ந்தது. பெண்களுக்கென்று ஒதுக்கப்பட்ட பகுதியும் நிரம்பியது.

சட்டென்று ஒரு கழைக்கூத்தாடி கம்பு ஊன்றி வேலிதாண்டி நடுத்திடலுக்கு வந்தான். எல்லோரும் ஓ.. என்று கத்த அவன் அந்தக் கம்பை வைத்துக் கொண்டு விதம்விதமாக நடனம் ஆடினான். அவனைச் சுற்றிச்சுற்றி சிறுசிறு வட்டப்பறையோடு இரண்டு ஆட்கள் தாளம் தட்டினார்கள். அந்தத் தாளம் தட்டுதலுக்கு ஏற்ப காலில் சலங்கையோடு அவன் நடனமாடினான். ஜனங்கள் கைதட்டி ரசித்தார்கள். நடுவே ஒரு மூங்கிலை நிற்க வைத்து அதன் மீது வேறொரு மூங்கிலை குறுக்கு வாட்டில் வைத்து அவன் மேலே நின்று இடதும் வலதும் ஆடினான். நடுவேயிருக்கிற மூங்கில் அசையாமல் நின்று கொண்டிருந்தது. எப்படி இவனால் அந்த மூங்கில் கீழே விழாமல் ஆடமுடிகிறது என்று அதிசயப்பட் டார்கள். அந்த மூங்கிலின் மேலே குறுக்கே போடப்பட்டுள்ள மூங்கிலில் நின்றவாறு அவன் பந்துகளை மேலே எறிந்து இடம் வலமாக மாற்றினான். வானத்தில் இரண்டு பந்துகளும், கையில் இரண்டு பந்துகளும் வைத்து விளையாடினான். எல்லோரையும் அதிசயப்பட வைத்தான்.

கிராம அதிகாரி போதும் என்று கைதட்டியதும், சரட்டென்று இரண்டு கம்புகளையும் ஊன்றிக் கீழே இறங்கி, அவைகளைத்

தோளில் சுமந்தவாறு வெளியே போனான். ஜனங்கள் அவனுக்கு ஆரவாரம் செய்து விடை கொடுத்தார்கள்.

சட்டென்று ஒரு குதிரைப்படை வேலிப்படலைத் திறந்து கொண்டு உள்ளே வந்தது. அரசரின் மெய்க்காவல்படை என்று தெரிந்தது. எல்லோரையும் உற்றுப் பார்த்தது. சந்தேகம் உள்ளவர்களை அருகே அழைத்து விசாரித்தது. ஏதேனும் ஆயுதம் வைத்திருக்கிறீர்களா என்று கேட்டது.

அங்குள்ளவர்கள் இல்லை என்று சொன்னார்கள்.

அங்கிருப்பவர்களிடம் யாரேனும் ஆயுதம் வைத்திருந்தால் உடனடியாக மெய்க்காவல் படைக்குச் சொல்லுங்கள் என்று சொன்னது. ஒருவரையொருவர் தடவிப் பார்த்துக் கொள்ளும்படி உத்தரவிட்டது. அவ்விதமே ஜனங்கள் செய்தார்கள்.

மீசை வைத்த ஒரு சோழவீரன் இருங்களய்யா நான் வயிறு காலி செய்து கொண்டு வருகிறேன் என்று அவசரமாகக் கிளம்பி ஆற்றங்கரைப் பக்கம் ஓடினான். இரண்டு பேர் அவனது ஓட்டம் பார்த்து சிரித்தார்கள்.

யாரோ இரண்டு பேர் சந்தேகப்பட்டார்கள். அவன் மறுபடியும் வந்து கூட்டத்தின் வேறுபக்கம் நின்று கொண்டான். அப்படி நின்றவன் அருகே நின்றவர்களிடம், ''என்னிடம் ஆயுதம் ஏதும் இல்லை ஐயா... வேண்டுமென்றால் சோதனை செய்து கொள்.'' என்று சொன்னான். அருகேயிருப்பவன், வேண்டாம் என்று சொல்ல, ''பரவாயில்லை பரஸ்பரம் சோதனை செய்து கொள்ளலாம்.'' என்று அவன் சொல்ல, அருகேயிருப்பவன் சோதனை செய்தான்.

அவனிடம் ஆயுதம் ஏதுமில்லை.

என்னை நீ சோதனை செய்யவில்லையே என்று சோதனையைச் செய்தவன் அந்தச் சோழவீரனிடம் சொல்ல, ஆயுதம் வைத்திருந்தால் என்ன தப்பு. அரசரைக் குத்திக் கொல்லவா போகிறோம். எதிரியைக் கொல்லத்தானே ஆயுதம் என்று சிரித்தபடி சொன்னான்.

அவன் பேச்சு விசித்திரமாக இருந்தது.

காரிக்குளிப்பாகை வந்துவிட்டதாகச் சொன்னார்கள். எல்லோரும் காரிக்குளிப்பாகையைப் பார்க்க எழுந்தார்கள்.

காரிக்குளிப்பாகை கட்டை ஏறி உள்ளே குதித்தான். கைகட்டி நின்று கொண்டான். விச்சாதரமுத்தரையன் வந்து நிற்கிறான் என்று



சொன்னார்கள். விச்சாதர முத்தரையன் படலைத் திறந்து கொண்டு உள்ளே வந்தான். கைகூப்பி சபையினரை நோக்கி வணக்கம் சொன்னான். சபை ஆசீர்வதித்தது.

''இவன் சோழவீரன். அதுபார் உள்ளே நுழைந்ததும் கைகட்டிக் கொண்டு விரைப்பாக மரம் போல நிற்கிறது.'' என்று காரிக்குளிப்பாகை பற்றி குறைபட்டார்கள்.

விச்சாதர முத்தரையன் வேலி ஓரமாக நடந்து வந்து தனக்குத் தெரிந்தவர்கள் யார் இருக்கிறார்கள் என்று பார்த்து, ஒவ்வொருவரிடமும் தன் வணக்கத்தைச் சொல்லி, ஆசீர்வாதத்தை வாங்கிக் கொண்டான்.

காரிக்குளிப்பாகையைத் தாண்டுகிறபோது மெல்லத் திரும்பி அவனைப் பார்த்து புன்சிரிப்போடு வணக்கம் சொன்னான். காரிக்குளிப்பாகை முகத்தைத் திருப்பிக்கொள்ள கூட்டம் ஏய்.. ஊய்... என்று கத்தியது. வெளியே எக்காளம் கேட்டது. சிறுமுரசு ஒலித்தது.

அரசர் வரும்வழியில் கறுப்பு உடை அணிந்த குதிரைப்படை வீரர்கள் வந்தார்கள். அவர்கள் குதிரைகள் வேலிதாண்டி உள்ளே குதித்தன. சுற்றி வேகமாக வந்தன. அங்குள்ள ஜனங்கள் உற்றுப் பார்த்தார்கள். அவர்கள் கையிலுள்ள சாட்டைகளால் சவுக்கங்கட்டைகளை அடித்தார்கள். சவுக்கங்கட்டைகளில் சாய்ந்திருந்தவர்களை சற்று விலகியிருக்கும்படி மிரட்டினார்கள். ஈரவிரக்கமில்லாத கொடூரர்கள்போல அவர்கள் முகம் இருந்தது.

சவுக்கங்கட்டையில் அடித்த பிறகும் நிதானமாக ஒருவன் பின்னோக்கி நகர குதிரையில் இருந்தபடியே அவன் இருந்த சவுக்கங்கட்டையை ஒரு மெய்க்காவல் வீரன் எட்டி உதைத்தான். பிய்த்துவிடுவேன் என்று பிரம்பால் அதட்டினான். அவன் பயந்து பின்னால் போக ஜனங்கள் அமைதியாக இரண்டடி தூரம் சவுக்கங்கட்டையிலிருந்து விலகி நின்றார்கள். குதிரை வீரர்கள் படல் வழியாக வெளியேறினார்கள். அரசர் இருக்கும் இடத்தைச் சுற்றி குதிரையோடு நின்று கொண்டார்கள்.

அரசர் அங்குள்ள மேடை மீது தாவி ஏறினார். மேடை மீது நின்று கொண்டார். மேடையில் உயரமாக சவுக்கு நட்டு பந்தலும் போடப்பட்டிருந்தது.

அரசர் வந்ததும் ஜனங்கள் முண்டியடித்துக் கொண்டு சவுக்கங்கட்டைகளுக்கு அருகே வந்தார்கள். அரசரைப் பார்த்து துணிகள் விசிறினார்கள். கையை அசைத்தார்கள். அரசர் பதிலுக்கு வணக்கம்

சொல்ல, அத்தனை பேரும் கையிலுள்ள துணியை விசிறி வணக்கம் சொன்னார்கள். சிலர் விழுந்து வணங்கினார்கள். சிலர் குனிந்து நிலத்தைத் தொட்டு நெற்றியில் இட்டுக் கொண்டார்கள். அரசரையே கைகூப்பிய படி பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

அரசர் அமர எல்லோரும் அமர்ந்தார்கள். அரசர் அமர்ந்ததும் முதல் மந்திரி சேனாபதி பிரம்மராயர் ஸ்ரீகிருஷ்ணன்ராமன் படிகளில் ஏறினார். அவருக்கு கைலாவு கொடுத்து ஒரு வீரன் மேலே தூக்கிவிட்டான். மேலே ஏறி கூட்டத்தை நோக்கி கையை உயர்த்தினார். அரசருக்கு வணக்கம் சொன்னார். அரசரின் வலதுபுறம் அமர்ந்து கொண்டார். முகத்தைத் துணியால் துடைத்துக் கொண்டார்.

குடிக்கத் தண்ணீர் வேண்டுமா என்று அரசர் பிரம்மராயரைக் கேட்பதும், பிரம்மராயர் வேண்டாம் என்பதும் ஜனங்களால் பார்த்து ரசிக்கப்பட்டன. ஆனாலும், இரண்டு குவளைகளில் நீர் கொடுக்கப் பட்டது. முதல் குவளை நீர் எடுத்து அரசர் மிக பவ்யமாக சேனாதிபதியிடம் நீட்டியதும், அதை மிகவும் பவ்யமாக ஸ்ரீகிருஷ்ணன்ராமன் வாங்கிக் கொண்டதும், பிரம்மராயருக்குக் கொடுத்தபிறகு மீதமுள்ள குவளையைத் தான் எடுத்துக் கொண்டதும், தண்ணீர் குடித்ததும் அவரைப் பார்த்து மறுபடியும் ஏதோ பேச ஆரம்பித்ததும், மீண்டும் தண்ணீர் குடித்ததையும் ஜனங்கள் வியப்பாகப் பார்த்தார்கள். அரசருடைய அத்தனை அசைவுகளையும் ஜனங்கள் ஆவலாக கண்களின் வழியே விழுங்கினார்கள். அரசரைக் காதலோடு பார்த்தார்கள்.

மூவேந்த வேளார் வந்ததும் இராஜேந்திரசோழர் பின்னாலேயே படி ஏறினார். பழுவேட்டரையர் தாவித் தாவி மேடைக்குப் போனார். பிறகு பஞ்சவன்மாதேவியும், பட்டமகிஷியும், வானதியும் படியேறினார்கள்.

அரசர் ஏதோ நகைச்சுவையாகச் சொல்ல அந்தப் பெண்கள் வாய் பொத்திக் கொண்டு சிரித்தார்கள். என்ன... என்ன... என்று ஜனங்கள் ஆவலாகப் பேசிக்கொண்டார்கள்.

அந்தச் செய்தி அரசருடைய மேடையிலிருந்து மெல்ல வழிந்து மெய்க்காவலருக்குப் போய் மெய்க்காவலரிடமிருந்து மெல்ல மெல்ல நகர்ந்து ஒவ்வொரு வீரராக வலம் வந்தது.

பஞ்சவன்மாதேவி சற்று குண்டாகிவிட்டாராம். 'நீ மேடையேறியிருக்கிறாய். இப்போது ஆடத் துவங்கியிருக்கிறது. என்ன ஆகுமோ தெரியவில்லை என்று சொன்னாராம்'. கவலைப்படாதீர்கள் பிரம்மராயர் அமர்ந்திருப்பதால் இன்னும் ஆழ உறுதியாக மேடை உட்கார்ந்துவிடும். கவலை வேண்டாம் என்று சொன்னாராம்.



பிரம்மராயர் வாய்விட்டுச் சிரிக்க, அரசரும் சிரிக்க எல்லோரும் சிரித்தார்கள். சிறுமுரசு ஒலிக்கப் பட்டது. ஓலைநாயகம் ஒருவர் வேலி தாண்டி உள்ளே வந்தார். அரசரை வணங்கினார். பிறகு அவரையே பார்த்திருந்தார். அரசர் சரி என்று தலையசைக்க ஓலைநாயகம் கையில் இருக்கின்ற ஓலையைப் பிரித்துப் படித்தார்.

''காரிக்குளிப்பாகைக்கும், விச்சாதர முத்தரையனுக்கும் அவர்கள் விரும்பிய வண்ணம் தனிப்போர் நடக்க இந்தக் கிராமம் ஏற்பாடு செய்திருக்கிறது.

தனிப்போர் நடத்த வேறு யாரும் கேட்டுக் கொள்ளவில்லை. இவர்களாக விரும்பி ஒருவரையொருவர் பல இடங்களில் நிந்தித்துக்கொண்டு இதைத் தீர்க்கும் வண்ணமாகப் போர் புரிகிறார்கள். அதை இவர்கள் தீர்மானித்ததும் போரின் முறை இந்தக் கிராமத்தாரால் தீர்மானிக்கப்பட்டது.

இரண்டு விற்களும், இரண்டு அம்புகளும் கொடுக்கப்படும். அரசர் சைகை செய்ததும் வில்லை வளைத்து நாணேற்றி அம்பு தொடுத்து ஒருவர் மீது ஒருவர் எய்து, அவர்கள் வீரத்தை நிலைநாட்ட வேண்டும். இதில் எவர் இறந்தாலும் எதிரே உள்ளவர் பொறுப்பெற்கமாட்டார். ஒருவேளை இரண்டு பேருமே இறந்தாலும் இந்தச் சபை பொறுப்பேற்காது. ஒருவேளை இரண்டு பேருமே பிழைத்துக் கொண்டாலும் இந்தச் சபை அவர்களுடைய பிரச்சினையைப் பேசித் தீர்த்து வைக்கும்.

இந்த தனிப் போரினால் ஏற்படும் எந்த விளைவுகளுக்கும் சுற்றியுள்ள ஜனங்களோ, நடுவர்களோ, கிராம அதிகாரிகளோ இந்தக் கிராமத்தாரோ பொறுப்பேற்க மாட்டார்கள். இந்தப் போர் இருவருடைய முயற்சியினாலேயே, விருப்பத்தினாலேயே நடைபெறுகிறது. போர் துவங்க மன்னர் ஆணை அருளட்டும்.''

ஓலையை வாசிப்பதற்கு முன்னும் ஓலையை வாசித்த பின்னும் உரத்த குரலில் அரசருடைய பெருமையைச் சொல்லும் மெய்க்கீர்த்தியை ஓலைநாயகம் உரக்கச் சொன்னார்.

திருமகள் போலப் பெருநிலச் செல்வியும்
தனக்கே உரிமை பூண்டமை மனக்கொளக்
காந்தளூர்ச்சாலை கலமறுத்தருளி
வேங்கை நாடும் கங்கபாடியும்

தடிகை பாடியும் நுளம்ப பாடியும்
குடமலை நாடும் கொல்லமும் கலிங்கமும்
முரட்டொழிற் சிங்களரீழ மண்டலமும்
இரட்டபாடி யேழரை இலக்கமும்
முந்நீர்ப் பழந்தீவு பன்னீராயிரமும்
திண்டிறல் வென்றித் தண்ராற் கொண்டதன்
எழில்வள ரூழியுள் எல்லா யாண்டும்
தொழுதக விளங்கும் யாண்டே செழியரைத்
தேசு கொள் கோராச கேசரி வர்மரான
உடையார் ஸ்ரீ ராஜராஜ தேவர் வாழ்க வாழ்க..

என்று மக்களும் மெய்க்கீர்த்தியைச் சேர்த்துச் சொன்னார்கள்.

அரசரும் ஒரே குரலில் மக்கள் சொல்கின்ற அந்த மெய்க் கீர்த்தியைச் செவிமடுத்து கேட்டு மெல்ல சந்தோஷமாகி கைகூப் பினார். எழுந்து நின்றார். ஜனங்கள் பரவசமானார்கள்.

காரிக்குளிப்பாகை... காரிக்குளிப்பாகை... காரிக்குளிப்பாகை... என்று ஓலைநாயகம் சொல்ல, காரிக்குளிப்பாகை எதிரே வந்து மன்னர் முன்பு தலைகுனிந்து வணங்கினான்.

ஜனங்களுக்கு மெல்லக் கோபம் வந்தது.

முட்டாள்.. முட்டாள்.. என்று சொல்லி ஏசினார்கள். சரி, இதுவாவது செய்தானே என்று யாரோ முணுமுணுத்தார்கள்.

சிறுதளத்து சிங்களாந்த குதிரைச்சேவகன் உபதளபதி விச்சாதர முத்தரையன்... விச்சாதர முத்தரையன்.. விச்சாதர முத்தரையன்.. என்று ஓலைநாயகம் சொல்ல, மெல்ல கைகூப்பியவாரே அரசர் இருக்கின்ற மேடை நோக்கி விச்சாதர முத்தரையன் நடந்து வந்தான். அரசரைக் கண்குளிரப் பார்த்தான்.

என்னை ஆசீர்வதியுங்கள் என்று அவரைப் பார்த்த வண்ணமே கேட்டான். அரசர் கையை உயரத் தூக்கி அவனை ஆசீர்வதித்தார். அவன் நெடுஞ்சாண் கிடையாய் மண்ணில் விழுந்து அரசரை நோக்கி வணங்கினான்.

கூட்டம் சில்லிட்டது.

''இதுவல்லவா செய்திருக்க வேண்டும் இந்தக் காரிக்குளிப் பாகை. இந்தத் தகடூர் ஆட்களுக்கு மரியாதையே தெரியவில்லை.'' என்று உரத்த குரலில் கூவினார்கள்.

காரிக்குளிப்பாகை இப்போது விழுந்து வணங்க, சரிதான் போடா என்று மக்கள் அவனை அலட்சியப் படுத்தினார்கள்.



எடுத்தவுடனேயே மக்களின் கவனம் விச்சாதர முத்தரையனிடம் போய்விட்டதை சேனாபதி ஸ்ரீ கிருஷ்ணன்ராமன் கவனித்தார். அரசரிடம் மெல்லச் சொன்னார். அரசரும் ஆமாம் என்றார்.

விச்சாதரமுத்தரையனுக்கு அருகே வில் வைக்கப்பட்டது. வில்லை அவன் எடுக்க ஓலை நாயகம் தொடக் கூடாது என்று சொன்னார். ஓலை நாயகத்தை விச்சாதர முத்தரையன் மறுதலித் தான்.

''வில்லை நான் சோதித்த பிறகே கீழே வைப்பேன். இந்த வில் சரியான படியாக இல்லாவிட்டால் என்னுடைய குறி தவறாகி விடும்.'' என்று சொல்ல, ஓலைநாயகம் அரசரைப் பார்த்தார். அரசர் சரி என்று சொல்ல, அந்த வில்லை வளைத்து நாணேற்றி நாணை மீட்டி விச்சாதர முத்தரையன் சரிபார்த்தான். மெல்ல வில்லைத் தடவினான். சரி என்றான். வில்லுக்கருகே அம்பு வைக்கப்பட்டது. அந்த அம்பையும் விச்சாதர முத்தரையன் எடுத்துப் பார்த்தான். இது வேண்டாமென்று ஓலைநாயகத்திடம் திருப்பிக் கொடுத்தான். ஏன் என்று ஓலைநாயகம் கேட்க, அம்பு சரியானபடி இல்லை என்று சொன்னான். மறுபடியும் ஓலை நாயகம் அரசரைப் பார்க்க, அவருக்கு விருப்பமான அம்பைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம் என்று கட்டளையிட்டார்.

விச்சாதர முத்தரையன் படலுக்கு அருகே போய் அங்கு மாட்டியிருந்த தன் அம்புக் கூடையிலிருந்து ஒரு அம்பை எடுத்துக் கொண்டு மெல்ல வில்நோக்கி வந்து, வில்லுக்கருகே அந்த அம்பை வைத்துக் கொண்டான். அந்த அம்பு விஷ அம்பு.

இப்போது காரிக்குளிப்பாகைக்கருகே வில் வைக்கப்பட்டது. சோதித்துக் கொள்கிறாயா என்று ஓலைநாயகம் கேட்க, வேண் டாம். என்று அலட்சியமாகச் சொன்னான். அவனை முட்டாள் என்று இன்னொரு வில்லாளி சொல்ல, அவனைத் திரும்பிப் பார்த்து வில் பற்றி உனக்குத் தெரியுமா, எனக்குத் தெரியுமா என்று காரிக்குளிப்பாகை சண்டை போட, மற்றவர்கள் அவனைச் சமாதானப்படுத்தினார்கள். அவனுக்கருகேயும் ஒரு அம்பு வைக்கப்பட்டது.

அவன் அந்த அம்பையும் சோதித்துப் பார்க்கவில்லை. வெகு நிச்சயமாய் நான் ஜெயிப்பேன் என்ற அலட்டலைக் காட்டிய வண்ணம் அவன் கைக்கட்டியபடி நின்றிருந்தான். எப்போது யுத்தம் ஆரம்பிக்கும் என்று எதிர்பார்ப்பவன் போல கண்களில் ஒரு பரபரப்பு மின்ன காத்திருந்தான்.

இருவருக்கும் வில் வைத்துவிட்டு, அம்பு வைத்துவிட்டு ஓலை நாயகம் படல் திறந்து வெளியே போனான். கூட்டம் அமைதியாக அவர்கள் இருவரையும் பார்த்துக் கொண்டிருந்தது. அவ்வப்போது சக்ரவர்த்தியையும் கவனித்தது.

சக்ரவர்த்தி மெல்ல எழுந்தார். கூட்டம் பரபரப்பாயிற்று. சக்ரவர்த்தி கழுத்தைச் சுற்றிப் போடப்பட்டிருந்த வெள்ளைத்துணியை எடுத்தார். உதறினார். மெல்ல உயரத் தூக்கினார். எல்லோரும் ஆவலாக அந்த இருவரையுமே பார்த்துக் கொண்டிருந்தார்கள். மெல்ல அந்தத் துணியை அரசர் காற்றில் நழுவவிட்டார். அந்தத் துணி பறந்து சட்டென்று திடலுக்கு முன்புறம் வந்து விழுந்தது. இரண்டு பேரும் வேகமாக வில்லை எடுத்துக் கொண்டார்கள்.

விச்சாதர முத்தரையன் சட்டென்று வில்லை வளைத்து, நாணேற்றி ஸ்ருதி பார்த்து அம்பு தொடுத்து மிகச்சரியாக வளைத்து முழு வீச்சில் அம்பை காரிக்குளிப்பாகைக்குக் குறி பார்த்தான். காரிக்குளிப்பாகை வில்வளைக்க அழுத்த அந்த வில்லின் அடியிலிருந்த கல் நகர சட்டென்று புரண்டது. நாணேற்ற முடியவில்லை. மறுபடியும் நின்று அழுத்தி நாணேற்றி இந்த முறை நாண் பட்டென்று உருவிக்கொள்ள வில் முகத்தில் அடித்தது. மறுபடியும் அழுத்தி நாணை ஏற்றி வில்லைத்தேடி அம்பு தொடுக்க முயற்சித்த போது, விச்சாதரமுத்தரையன் வெகுநேரம் முன்பே அம்பு தொடுத்து தன் கழுத்துக்கு குறிபார்ப்பதைப் பார்த்துவிட்டு அவன் பயந்து போனான். அம்பு சீறி தன்னைப் புடைத்துவிடும் என்று நடுங்கினான்.

கூட்டம் ஆரவாரம் செய்தது. தெள்ளத் தெளிவாக விச்சாதர முத்தரையன்தான் ஜெயிப்பான். காரிக்குளிப்பாகை தோற்பான் என்று தெரிந்துவிட்டது.

இரண்டு பேரும் அசையாது நின்றிருந்தார்கள். காரிக்குளிப் பாகையின் கையிலுள்ள வில் அம்பு தொடுக்கப்படாமல் இருந்தது. ஆனால் அம்பின் வால்பகுதி நாணில் சொருகப்பட்டிருந்தது. ஆனால் இழுக்கப்படவில்லை. ஆனால், விச்சாதர முத்தரை யனோ நாணிழுத்து ஒரு வினாடி நேரத்தில் தளர விட்டாலும் இரண்டு வினாடிகளில் அந்த அம்பு வெகு நிச்சயம் காரிக்குளிப்பாகையின் கழுத்தைத் துளைக்கும்.

காரிக்குளிப்பாகை அசையாது பார்த்துக் கொண்டிருந்தான். அரசரும் நின்று கொண்டிருந்தார். காரிக்குளிப்பாகை தோற்றது தெரிந்தது.



''போதும்'' என்று அரசர் உரத்த குரலில் சொல்ல விச்சாதர முத்தரையன் மிக நிதானமாக அம்பை தளரவிட்டான். வில் நிமிர்ந்தது. பழைய நிலைக்கு வந்தது.

இதைப் பார்த்ததும் காரிக்குளிப்பாகை கோபமடைந்தான். தான் தோற்பதா. அவன் ஜெயிப்பதா என்று ஆத்திரமடைந்தான். வில் வளைந்து நாண் இழுத்து சரட்டென்று அம்பை விச்சாதர முத்தரையனை நோக்கி எறிந்தான்.

''அடேய்...'' எல்லோரும் சீறினார்கள்.

அம்பு சீறிக்கொண்டு விச்சாதர முத்தரையனை நோக்கி, வர, சட்டென்று கழுத்தை இடது பக்கமாக நகர்த்தி, உடம்பை வளைத்து நகர்ந்து கொள்ள விச்சாதர முத்தரையனைத் தாண்டி அம்பு போய் ஒரு போர்வீரன் முன்னே வர அவன் சட்டென்று அம்பை கைகளால் பிடித்துக் கொண்டான். அப்படிப் பிடித்துக் கொள்ளாவிட்டால் வெகுநிச்சயம். அந்த அம்பு அவன் முகத்தைத் தாக்கியிருக்கும்.

அந்த வீரன் பழக்கப்பட்டவன். மல்யுத்தக்காரன். அவன் வாயிலிருந்து கெட்ட வார்த்தைகள் தெறித்தன. உன்னை அடித்துக் கொன்றுவிடுவேன் என்று காரிக்குளிப்பாகையை மிரட்டினான்.

'இவனொரு மண்ணாந்தை' என்று விச்சாதர முத்தரையனைச் சிலபேர் திட்டினார்கள்.

இவன் குறி வைத்துவிட்டானல்லவா... அடித்து வீழ்த்த வேண்டியதுதானே அந்த நாயை. யாருக்காக காத்திருக்கிறான் என்று கூச்சலிட்டார்கள்.

எல்லாப் பக்கமும் கூச்சல் எழ அங்கு குழப்பம் நிலவியது.

அடேய்... அவனைக் கொல்லுடா. அரசர் போதும் என்று சொன்னபிறகும் அம்பு விட்டானல்லவா. அவனைக் கொல். அவனைக் கொல் என்று எல்லோரும் கூச்சலிட்டார்கள். வில்லைத் தளர்த்தாதே. அவன் மீது அம்பு தொடு. குறி வைத்து தலையைச் சிதறடி என்று விச்சாதர முத்தரையனைத் தூண்டிவிட்டார்கள்.

மேடையில் எழுந்து நின்ற பழுவேட்டரையர் எழுந்து கொல்லுடா அவனை என்று மரமேடையை உதைத்தார். மரமேடையில் தொம் என்று சத்தம் வந்தது.

காரிக்குளிப்பாகை வில்லை இறுக்கப் பிடித்துக் கொண்டு விச்சாதர முத்தரையனை அடிப்பதற்காக காலடி எடுத்து வைத்தான்.

விச்சாதர முத்தரையன் வில் வளைத்து, அம்பு இழுத்து பளிச் சென்று தளரவிட்டான். அம்பு வேகமாகப் போய் காரிக்குளிப் பாகையின் இடது தோளை ஆழமாகத் தைத்தது. காரிக்குளிப் பாகை துள்ளி பின்பக்கம் விழுந்தான். தோள்பட்டை சரிவின் வழியே உதிரம் பீய்ச்சியடித்தது.

எல்லோரும் மறுபடியும் ஹா.. என்று கத்தினார்கள். கொல், கொலை செய், சாவடி என்று வெறியோடு கூவினார்கள். சேனாபதி கிருஷ்ணன்ராமன் அசையாமல் கூட்டத்தினுடைய ஆவேசங்களைப் பார்த்துக் கொண்டிருந்தார். சக்ரவர்த்தி உன்னிப் பாக வீரர்களைக் கவனித்துக் கொண்டிருந்தார். விச்சாதர முத்தரை யன் தலையில் அடித்துக் கொண்டான். வில்லைத் தரையில் போட்டான். மெல்லகாரிக்குளிப்பாகையின் அருகே போனான்.

எதற்கு இந்த வெறியாட்டம். எதற்கு இந்த பெருங்கூச்சல். எதற்காக நான் இவனைக் கொல்ல வேண்டும் என்று வேதனைப் பட்டான்.

மெல்ல மண்டியிட்டு அவன் தோளில் தைத்திருந்த அம்பை பிடுங்கினான். விஷ வாசனை வேகமாக வீசியது.

என்ன இது. விஷய அம்பா. பயந்து போனான்.

அந்த அம்பை காரிக்குளிப்பாகையின் வயிற்றுக்கு அருகில் வைத்துவிட்டு அவன் சுவாசத்தைச் சோதித்தான். இடுப்பிலிருந்து துணி ஒன்றைக் கிழித்து அவன் காயத்தை அழுத்தித் துடைத்தான். தோளில் துணியை வைத்து ரத்த ஓட்டத்தை நிறுத்தினான்.

காரிக்குளிப்பாகையின் வலதுகை வயிற்றின் மீதிருந்த அம்பை தடவி இறுக்கப்பற்றிக் கொண்டது. மெல்ல தரைக்குக் கொண்டு வந்தது. காரிக்குளிப்பாகை என்ன செய்கிறான் என்று விச்சாதர முத்தரையனுக்குத் தெரியவில்லை. தோளில் துணியை அழுத்தி கட்டுப்போட முயற்சித்த போது வலதுகையால் விச்சாதர முத்தரை யனின் முழங்கையைத் தள்ளினான். எதற்குத் தள்ளுகிறாய் என்று கேட்க, காரிக்குளிப்பாகை அந்த அம்பை இறுகப்பற்றி மிக வேகமாக உயர்த்தி விச்சாதர முத்தரையனின் தொண்டையை அழுத்திக் குத்தினான். அந்த அம்பு தொண்டைக் குழியைக் குத்தி கழுத்தின் மறுபக்கம் வெளிவந்தது. அந்த அம்பிலிருந்த கொஞ்ச நஞ்ச விஷமும் விச்சாதர முத்தரையனின் உடலில் கலந்தது.

விச்சாதர முத்தரையன் வாய் பிளந்து கண் விழித்து வலி தாங்காமல் அலறிப் புரண்டு விழுந்தான். இரண்டு பேரின் உடல் களும் வானம் பார்த்தன.



உயிர்கள் பிரிந்து மேலே பறந்தன.

சக்ரவர்த்தி உடையார் பதட்டத்தோடு எழுந்திருந்தார்.

சக்ரவர்த்தி எழுந்ததும், அதே வேகத்தில் சேனாபதி கிருஷ்ணன் ராமனும், பழுவேட்டரையரும், மூவேந்தவேளாளரும் மற்றவர் களும் எழுந்தார்கள்.

கூட்டம் நிசப்தமாய் அந்த இருவரையும் வேடிக்கை பார்த்தது.

சக்ரவர்த்தி உடையார் கோபமானார். சரசரவென்று கீழே இறங்கினார். படலுக்குள் குதித்தார். நடந்து வந்து விச்சாதர முத்தரையன் மூக்கில் கை வைத்துப் பார்த்தார்.

உயிர் பிரிந்திருப்பதைப் பார்த்து பல் கடித்தார். தரை உதைத்தார். மெய்க்காப்பாளர்கள் உள்ளுக்குள் ஓடி வந்தார்கள். அரசரைச் சுற்றிக் கொண்டார்கள்.

சோழம்... சோழம்... சோழம்... என்று ஜனங்கள், மறவர்கள், மிக வேகமாக வெளியேற்றும் குரலில் கூவிக் கொண்டிருக்க, பொன்னழகி ஓடி வந்தாள். விச்சாதர முத்தரையனின் மீது விழுந்து கதறினாள். மெய்க்காவல் கூட்டம் விலகிக் கொண்டது.

பொன்னழகியை உற்றுப் பார்த்த சக்ரவர்த்தி மெல்லப் பின்னடைந்தார். படல்விட்டு வெளியேறினார். குதிரை ஏறினார்.

மெய்க்காவல் படைசூழ நகர்ந்து போனார்.

''யாரது அழுவது'' என்று முதல் கேள்வியை சேனாபதி ஸ்ரீ கிருஷ்ணன்ராமன் கூட்டம் நோக்கி விசாரிக்க, விச்சாதர முத்தரையன் உறவினர்களும், காரிக்குளிப்பாகை உறவினர்களும் மடமட வென்று அவர்முன்பு நிறுத்தப்பட்டார்கள். தீவிர விசாரணை நடத்தப்பட்டது.

காரிக்குளிப்பாகையின் உறவினர்களுடைய தூண்டுதலால்தான் பொன்னழகியைத் திருமணம் செய்கின்ற வெறியோடு காரிக் குளிப்பாகை அலைந்திருக்கிறான் என்றும், அவர்கள் தூண்டுத லால் தான் விச்சாதர முத்தரையனை வம்புக்கு இழுத்து பலமுறை சண்டை போட்டான் என்றும், எப்படியாவது விச்சாதர முத்தரை யனைக் கொன்றுவிடு. அப்போது தான் பொன்னழகி உனக்குக் கிடைப்பாள் என்று அவனுக்குப் போதிக்கப்பட்டதாகவும் தகவல்கள் ஒன்றின் மீது ஒன்றாக வந்து விழுந்தன.

காரிக்குளிப்பாகை தவறாக தோற்றுப் போன பிறகும் கோழைத்தனமாக விச்சாதர முத்தரையனைக் கொன்றதற்குக் காரணம் காரிக்குளிப்பாகையின் உறவினர்கள் என்று தெரிந்து

போயிற்று. விசாரித்து விசாரித்து சேனாதிபதி ஸ்ரீ கிருஷ்ணன் ராமன் பலரைக் கைது செய்தார். அன்று மாலை அரசர் முன்பு நிறுத்தினார்.

அவர்கள், அழுது அலறி மன்னிப்புக் கேட்டார்கள்.

இவர்களுக்கு என்ன தண்டனை வழங்குவது. அரசர் சிந்திக்க, கிருஷ்ணன்ராமன்.. ''இவர்கள்தான் அதற்குக் காரணமென்றாலும் இவர்களுக்கு மரணதண்டனை அளிப்பது குழப்பம் ஏற்படுத்தும் விச்சாதரமுத்தரையன் அநியாயமாக இறந்து போயிருக்கிறான். அந்த முட்டாள் காரிக்குளிப்பாகை உறவுகள்தான் இதற்கு காரணம். எனவே அபராதமாக தண்டனை விதித்தால் போது மென்பது என் அபிப்ராயம்.''

''நல்லது. அப்படியே செய்யலாம். இறந்து போனவர்களின் மனக்கேதம் தீரும் பொருட்டு இவர்கள் மூவரும் சாவாமூவா பேராடு நிவந்தமாகக் கொடுத்து வஸிஷ்டேஸ்வரர் கோயிலில் மேற்குப் பகுதியில் இடையறாது ஒரு நந்தா விளக்கு ஏற்படுத் தட்டும். இவர்களை அப்புறப்படுத்துங்கள்'' என்று உறவினர் களைச் சுட்டிக்காட்டினார்.

கோயிலின் மேற்குப்பக்கம் ஒரு நந்தா தீபம் ஏற்படுத்தப்பட்டது. அந்த தீபம் ஏற்படுத்தியதற்குக் கீழே வஸிஷ்டேஸ்வரர் கருவறை மேற்குப் புறச்சுவரில் இந்தச் சண்டை இராஜராஜர் மெய்க்கீர்த்தி யுடன் பொறிக்கப்பட்டது.

மூன்று நாட்களுக்குப் பின் பஞ்சவன்மாதேவி மெல்ல மறவர் களின் போக்கு பற்றி சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜராஜத் தேவரிடம் பேசினார்.

''மேலைச்சாளுக்கியத்திற்குப் படையெடுத்துப் போய் அதை வெற்றி கொண்டு வந்துவிட்டதால் தஞ்சையில் அவர்களுக்கு எல்லாவித உரிமையும் உண்டு என்று மறவர்கள் நினைத்தார்கள் என்றால் அது தவறு, கோயில் பணியில் ஈடுபட மாட்டோம். கைகட்டி வேடிக்கைதான் பார்ப்போம் என்று மறவர்கள் நினைத் தால் அதுவும் தவறு. அடிமை வீரர்களை வைத்துக் கொண்டு மட்டுமே இனி வேலை செய்துவிட முடியாது.

தஞ்சையிலுள்ள அத்தனை ஆண் மக்களும் இதில் பங்கு பெறத்தான் வேண்டும். அந்தணர்களையும், வணிகர்களையும் அந்த உயரத்திற்கு கல் சுமக்கும்படி சொல்ல முடியாது. இந்த மறவர்கள்தான் உதவவேண்டும். மறவர்கள்தான் கல் தூக்க வேண்டும். மறவர்கள் கல் தூக்காமல் இந்தப் பணி முழுமை பெறாது. எனவே திட்டவட்டமாய் அத்தனை மறவர்களும், உப சேனாதிபதிகளும் உட்பட கோபுர உச்சிக்கு பாறை சுமந்துதான் ஆகவேண்டும் என்று சொல்லுங்கள்.''



அதுவும் பறையறிவிக்கப்பட்டது. எல்லா மறவர்களும் கோயில் பணியில் முழுமனதாய் ஈடுபட வேண்டும். மறவர்களுடைய சண்டைச்சச்சரவுகள் அறவே நிறுத்தப்பட வேண்டும். தஞ்சையில் எவர் குடித்தாலும் கசையடி உண்டு. குடித்துவிட்டு வந்தால் தஞ்சைக்குள் நுழையக்கூடாது என்றும் சொல்லப் பட்டது. இரண்டு மூன்று வீரர்களுக்குக் கசையடியும் கொடுத்தார்கள்.

குணவன் நித்தவினோதப் பெருந்தச்சன் சண்டையிட்ட அறுபதாம் நாள் அந்த வழக்கு சக்ரவர்த்தியின் முன்பாக வந்தது.

''மனைவியைத் தாக்கிவிட்டான் என்ற கோபத்தில் அந்த மறவனை, நித்தவினோதப் பெருந்தச்சன் குணவன் தாக்கியிருக் கிறான். அவர் கட்டப்பட்டது தனக்குத் தெரியவில்லை என்றும், தாக்கிய சிறிது நேரத்திற்குப் பிறகே உணர்ந்தேன் என்றும் சொல்கிறார். எனவே, அவர்மீது பெரிய குற்றம் இருப்பதாக இந்தச் சபை நினைக்கவில்லை.

ஆனால், பெண்கள் இருக்குமிடத்தில் மறவர்கள் கூட்டமாக நின்றதும், ஆபாசமாகப் பேசியதும், சிரித்ததும், வக்கிரமாகப் பார்த்ததும், பார்த்ததைக் கண்டித்த பெண்ணைக் கழியால் அடித்ததும் மறவர் செய்த பெரிய பிசகு. எனவே மறவருக்கு மரண தண்டனை அளிப்பதுதான் நியாயம். ஆனால் இந்த மறவன் மேலைச்சாளுக்கியம்போய் திரும்பியிருக்கிறான். வெற்றிக்கு உதவி செய்திருக்கிறான் என்பதால் அவன் மரண தண்டனை விலக்கி அவன் கடற்படையில் சேரவேண்டும் என்றும், அவன்முழு மனதோடு சோழதேசத்தின் கடல் எல்லைகளைக் காக்க வேண்டும் என்றும், கடற்கரைப் பகுதியைத் தாண்டி ஒரு பொழுதும் சோழதேசத்தின் உள்ளே வரக்கூடாது என்றும், அப்படி வந்தால் அவன் சிரச்சேதம் செய்யப்படுவான் என்றும் இந்தச்சபை கட்டளையிடுகிறது.

ஒருவிஷயம் கவலை அளிக்கிறது. மறவர்களின் நாகரிகம் பற்றி நான் கவலை கொள்கிறேன். சோழதேசத்தின் மறவர் பரம்பரை மிகப்பெரியது. அவர்கள் மிகக் கம்பீரமானவர்கள். எதிரிகளின் மனைவியைக்கூட கண்ணியமாக நடத்துபவர்கள் என்று நமக்குப் பெயருண்டு. நாமே நம்முடைய தலை நகரில் பெண்களுக்கு எதிராகக் கூச்சலிடுவதும், குழப்பம் செய்வதும், அவர்களை

வக்கிரமாகப் பார்ப்பதும் நடைபெறுகிறது என்றால், இந்த மறவர் கூட்டத்திற்கு மரியாதை இல்லை என்பதாகிறது.

இந்தச் சமூகத்திற்கு முன்பு, சோழ தேசத்தின் பொது மக்களின் முன்பு, இந்த கணம் இந்த மறவர் கூட்டம் தலை குனிந்து நிற்கிறது. சோழதேசத்து விருந்தினராக வந்திருக்கின்ற தேவரடியார் பெண்கள் மீது தங்களுடைய கூச்சலான, குழப்பமான பேச்சை சில மறவர்கள் செய்தது தவறான விஷயம். இதற்காக மறவர் சமூகத்தினுடைய பிரதிநிதியாய் இளவரசர் ஸ்ரீ இராஜேந்திரர் தேவரடியார் பெண்களிடம் போய் மன்னிப்பு கேட்க வேண்டும். ஒருவேளை ஸ்ரீ இராஜேந்திரருக்கு அவசர வேலைகள் இருப்பின், வெளியூர் பயணப்பட வேண்டிய அவசியம் இருப்பின், அவருக்குப் பதிலாய் நானே போய் நேரடியாக மன்னிப்பு கேட்பேன்.

சோழதேசத்தின் எந்த இடத்திலும் பெண்களைக் குறித்து கேலி இருப்பின் அவை கடுமையாக அடக்கப்பட வேண்டும் என்பதற் காகவே இப்படிப்பட்ட முன்னுதாரணங்களை நான் ஏற்படுத்து கிறேன்.

சோழ நாகரிகத்தைக் காப்பாற்றுவதே என்னுடைய குறிக் கோள். அதற்காகவே இந்த கற்றளி பணி நடக்கிறது. இந்தக் கற்றளி பணியை முழுமை பெறவைப்பதுதான் என்னுடைய நோக்கம். என்னுடைய நோக்கத்திற்கு இந்தச் சோழதேசம் முழுவதும் உதவி செய்ய வேண்டுமென்று எதிர்பார்க்கிறேன். வேண்டிக் கொள்கிறேன்.''

அரசர் சொன்ன வார்த்தைகள் முழுவதும் ஊர் ஊராக பறையறிவிக்கப்பட்டன. ஜனங்கள் அதிர்ந்து போனார்கள். மறவர்கள் குன்றிப் போனார்கள். மறவர்களை வைதீக அந்தணர் களும், தொண்டை தேசத்து அந்தணர்களும் மெல்ல கேலி செய்யத் துவங்கினார்கள்.

மறவர்கள் அவர்களுக்குள் ஒன்று கூடிப் பேசி கூட்டம் கூட்ட மாய் கோயில் பணி நடக்கின்ற இடம் போய், அங்குள்ள சிற்பி களிடம் சென்று கைகூப்பி வேலை ஏதேனும் கொடுங்கள் என்று வேண்டினார்கள்.

அந்த மறவருடைய மனைவியர் இரண்டு பேரும் ஓடிவந்து இராஜேந்திரர் காலில் விழுந்தார்கள்.

நாங்கள் என்ன செய்வோம். எங்களுக்கு எங்கள் புருஷன் போய்விட்டால் என்ன துணை என்று சொல்ல, எனக்குத் தெரிய வில்லை. பெருந்தச்சரிடம் போய் கேளுங்கள் என்று இராஜேந்திரர்



வேண்டுமென்றே அவர்களை மாட்டு வண்டியில் அமர்த்தி பெருந் தச்சரிடம் அனுப்பினார்.

பெருந்தச்சருக்குப் புரிந்து போயிற்று. இராஜேந்திர் கோபமாக இருக்கிறார் என்று தெரிந்தது.

பெருந்தச்சர் அவர்களை நோக்கி வணங்கினார்.

''உங்கள் புருஷன் கைகட்டி இருக்கும்போது எங்கள் சிற்பி அடித்தது தவறு. எனவே, அதற்கு ஈடாக உங்கள் இரண்டு பேருக்கும் அடுத்த பதினைந்து வருடங்களுக்கு உண்ண உணவும், வேறு எந்த குறையும் நேரா வண்ணம் நித்த வினோதப் பெருந்தச்சன் குணவன் தனது சொத்திலிருந்து ஒரு பகுதியைச் சன்மானமாக அளிப்பார்'' என்று வாக்குக் கொடுத்தார்.

நித்தவினோதப் பெருந்தச்சனை அழைத்து வருடத்திற்கு பத்து கழஞ்சாக பதினைந்து வருடத்திற்கு நூற்றி ஐம்பது கழஞ்சு பொற்காசு தனித் தனியே இரண்டு பெண்மணிகளுக்கும் கொடுக்க உத்தர விட்டார்.

நித்தவினோதப் பெருந்தச்சன் தன் உடைமைகள் சிலவற்றை விற்று அந்தப் பெண்மணிகளுக்கு பொற்காசு கொடுத்தான். மனம் குன்றினான்.

கருவறை வேலைகள் எதிலும் ஈடுபடாமல் மௌனமாக கோயில்பணி நடக்குமிடத்தில் அமர்ந்து கொண்டான். நித்த வினோதப் பெருந்தச்சன் இடிந்து போய் உட்கார்ந்தது மற்ற சிற்பி களுக்கும் வேதனையாக இருந்தது. வேலைகள் உற்சாகமின்றிதான் நடைபெற்றன.

சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவருக்கு இந்தச் செய்தி போயிற்று.

உடையார் கவலையானார்.

## 173

இளவரசர் இராஜேந்திரர் சிறுதேர் ஏறி அருண்மொழிப் பட்டனின் அனுக்கி ராஜராஜியின் வீட்டிற்கு வந்தார். அவர் வருகை முன்பே சொல்லப்பட்டிருந்தது.

இளவரசர் வந்ததும் தேவரடியார் பெண்கள் குலவையிட்டனர். தளிச்சேரிப் பெண்டிர் வீட்டிற்கு வருகின்ற இளவரசர் ஸ்ரீ

இராஜேந்திரருக்கு எங்கள் வணக்கம் என்று தளிச்சேரி பெண்டிர் கட்டியக்காரனால் கூறப்பட்டது.

வீணை ஆதிச்சனும், மிருதங்கம் வாசிப்பவனும், குழல் ஊதுபவனும், தாளம் தட்டுபவனும், தலைக்கோலிகள் பலரும் முன்வரிசையில் நிற்க, மற்ற பெண்கள் பின்னால் நின்றிருக்க, முன் வரிசைப் பெண்கள் கொடுத்த பூர்ண கும்ப மரியாதையைப் பெற்றுக்கொண்டார்.

பூர்ண கும்ப மரியாதையைப் பெற்றுக் கொண்டதும், சாவூர் பரஞ்சோதி அவருக்கு முன்பு வாளை தரையில் ஊன்றி வைத்து மண்டியிட்டான். கைகூப்பி வணக்கம் சொன்னபடியே இருந்தான். மெல்ல அவன் தலை தொட்டு எழுந்திரு என்று அடிக்குரலில் இளவரசர் உத்தரவிட்டார்.

தளிச்சேரிப் பெண்டுகள் வீட்டிற்கு வருகின்ற சந்தோஷம் இளவரசர் முகத்தில் இல்லை. மாறாக ஒரு கல் போன்ற கடமை உணர்வே நின்றிருந்தது.

சாவூர் பரஞ்சோதி எழுந்ததும், அருண்மொழிப்பட்டனின் அனுக்கி ராஜராஜி முன்வந்து நெற்றி நிலம்பட விழுந்து வணங்கினாள். பிறகு எழுந்து நின்று திரும்பினாள். வேறொரு பெண் மலர் மாலை கொண்டு வரமுன்னேறி இளவரசரின் கழுத்தில் போட்டாள்.

நான்கைந்து பெண்கள் அழகாக வந்து விதம் விதமாகத் தொடுத்த மலர்மாலைகளை இளவரசருக்குக் கொடுத்தார்கள். பன்னீர் தெளித்தார்கள். சந்தனம் எடுத்துக் கொள்ளச் சொன்னார்கள். நெற்றியில் திலகமிட்டார்கள்.

மெல்ல ராஜராஜி வலதுகை நீட்ட, இளவரசர் தன் வலது கையை உயர்த்த ராஜராஜி அந்தக் கையைப் பிடித்துக் கொண்டு இளவரசனை உள்ளே அழைத்துப் போனாள். தளிச்சேரிப் பெண்கள் சூழ்ந்து கொண்டார்கள். இளவரசரை உள்ளே அழைக்கின்ற வரவேற்புப்பாடலைப் பாடினார்கள்.

இளவரசருக்கு அங்கு ஆசனம் போடப்பட்டிருந்தது. இளவரசர் ஆசனத்தில் அமர்ந்தார். சுற்றியுள்ள பெண்களை ஒருமுறை பார்த்தார். பிறகு ராஜராஜியை அருகே வரவழைத்து எல்லோரும் இருக்கிறார்களா, சீருடையாள் என்பவள் யார் என்று கேட்டார்.

சீருடையாளை உரக்க அழைத்தார்கள். சீருடையாள் பின் கட்டிலிருந்து ஓடிவந்தாள். இளவரசருக்கு நமஸ்காரம் செய்தாள்.



சீருடையாளை விரல் அசைத்து அருகே அழைத்தனர். பக்கத்தில் அமரச் சொன்னார்.

சீருடையாள் ஒரு அன்னம்போல் அவருக்கருகே அடக்கமாக அமர்ந்து கொண்டாள். மற்ற பெண்களையும் அமரச் சொன்னார். எல்லாப் பெண்களும் அமர்ந்தார்கள்.

வீணை ஆதிச்சன் தொலைவில் நின்று கொண்டிருந்தார். அவரை கையசைத்து அருகே அழைத்து தன் வலப்பக்கம் அமர்த்திக் கொண்டார். ராஜராஜியை நேர்எதிரே அமரச் சொன்னார். எல்லோரும் அமர்ந்தார்கள்.

மெல்லிய கசகசவென்று பேச்சுக்குரல்கள் இருந்த வண்ணம் இருந்தன. அவர் தொண்டையைக் கனைக்க சட்டென்று அந்தச் சப்தம் நின்று போயிற்று. இளவரசர் ராஜராஜியை உற்றுப் பார்த்தார்.

"நமது சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவர் அவர்களின் வாழ்க்கை வரலாற்றை மிகச்சிறப்பான முறையில் நாட்டிய நாடகமாக நீ செய்து வருகிறாய் என்று கேள்விப்பட்டேன். இதுபற்றி அங்கங்கே பல தகவல்கள் எனக்குக் கிடைத்தன. குறிப்பாய் அத்தை குந்தவையின் வழி காட்டியதில் அவர் வளர்ந்து வந்ததாகச் சொல்லப்படுகின்ற காட்சிகளெல்லாம் மிகச்சிறப்பாக இருக்கின்றன. பாடல்கள் மிக ரம்மியமாக இருக்கின்றன என்று கேள்விப்பட்டேன்.

சோழதேசம் முழுவதும் இந்த நாட்டிய நாடகத்தைக் காண ஆவலாக இருக்கிறது. இந்த நாட்டிய நாடகம் ஆரம்பிக்கின்ற நேரத்தில், நமது பக்கத்து மறவனால் உங்களில் ஒரு பெண் மணிக்கு, நமது நன்மதிப்பிற்குரிய குணவன் நித்தவினோதப் பெருந்தச்சன் அனுக்கிக்கு, ஒரு அசம்பாவிதம் நிகழ்ந்தது பற்றி நான் மிகவும் வருத்தப்படுகிறேன்.

சோழதேசத்து மறவர்கள் சார்பில் இளவரசர் என்கிற முறையில் என்னை நம்பி, என் தந்தை சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜ ராஜத்தேவரை நம்பி இந்தத் தஞ்சைக்கு வந்த பெண் ஊறு செய்யப்பட்டிருக்கிறாள். அவமானப்பட்டிருக்கிறாள் என்பது கேட்டு மனம் வேதனைப்படுகிறது. அந்த மறவர் நிதானமாக இல்லாததால் மது போதையில் இருந்ததால் இந்தச் சம்பவம் ஏற்பட்டுவிட்டது.

சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவர் அந்த மறவனுக்கு மரண தண்டனை அளிக்க வேண்டுமென்று விரும்பினார். என்

பொருட்டு தண்டனையை மாற்றி அவரை கடற்படைக்கு மாற்ற உத்தரவிட்டு விட்டார்.

கடற்கரை நகர் தவிர சோழதேசத்தின் வேறு எந்தப் பகுதியிலும் அவர் நடமாடக்கூடாது நடந்தால் சிரச்சேதம் செய்யப்படுவார் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. கடற்படைக்குப் போனவர் என்பவர் திரும்பி வராதவராகவே சோழப் படையில் கருதப் படுகிறார்கள்.

கடற்பயணம் மேற்கொண்டவர் அத்தனை பேரும் நிச்சயம் திரும்பி வருவார் என்று சொல்ல முடியாத நிலையில்தான் பயணம் மேற்கொள்வார்கள். எனவே, உங்களைத் துன்புறுத்திய ஒரு மறவருக்கு காலாகாலத்திற்கு அதை நினைத்துப் பார்த்து வருந்தும் படியாக ஒரு தண்டனை கிடைத்துவிட்டது. ஆயினும் சக்ரவர்த்தி உடையார் உங்களிடம் போய் மறவரின் சார்பாக, மறக்குலத்து மக்களின் சார்பாக மன்னிப்பு கேட்டு வரச் சொன்னார். அதை சிரமேற்கொண்டு என் அருகே அமர்ந்திருக்கின்ற குணவன் நித்த வினோதப் பெருந்தச்சனின் அனுக்கியார் சீருடையாள் அவர்களிடமும், இங்கு தலைமையேற்று அமர்ந்திருக்கின்ற அருண்மொழிப் பட்டன் அவர்களின் அனுக்கியார் ராஜராஜியிடமும், வீணை ஆதிச்சனிடமும் இவர்களுக்குக் காவலாக இருக்கின்ற பரஞ்சோதி யிடமும் அந்த மறவர் செய்தது தவறு என்று சொல்லி என் மன்னிப்பை மனதாரக் கோருகிறேன்.

இனி எதன் பொருட்டும் மறவர்களின் மீது, எந்தக் காழ்ப்பும் இல்லாது, ஒரு தனிப்பட்ட நபர் புத்திதடுமாற்றத்தால் செய்த ஒரு விபரீதமான செயல் என்று கருதி. அதை உதாசீனம் செய்துவிட்டு மறக்குல மக்களை மகிழ்ச்சிப் படுத்துமாறும், அவர்களுக்கும் ஆதரவாக இருக்குமாறும், அவர்களிடம் அன்போடு பேசுமாறும் உங்களிடம் கேட்டுக் கொள்கிறேன்.

இனி தேவரடியார் குறித்த காவல்கள் சற்று கூடுதலாக இருக்கும். நீங்களும், உங்கள் நடமாட்டங்களை முன் கூட்டியே சாவூர்பரஞ்சோதியின் மூலம் சோழ உபதளபதிகளுக்குச் சொல்லி பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

கோயில் பணிக்கு என்று உங்களை நீங்கள் ஒப்புக் கொடுத்திருக் கிறீர்கள். சக்ரவர்த்தி உடையாரும் தன்னுடைய வாழ்க்கையின் பெரும்பகுதியை இம்மாதிரியான ஒரு அற்புதமான இறைபணி செய்ய வேண்டும் என்ற ஆவலில் ஈடுபடுத்தி, ஒவ்வொரு போரின் முடிவும் இந்த இறைபணியின் வளர்ச்சிக்காகத்தான் இருக்கும்



என்று செய்து வந்திருக்கிறார்கள். அதேபோல என் வாழ்நாளில் இன்னொரு கோயில் எழுப்ப வேண்டுமென்ற பேரவா எனக் குள்ளும் வந்துவிட்டது. குணவன் நித்தவினோதப் பெருந்தச்சன் போன்ற இறையருள் பெற்ற கலைஞர்கள் நம்மிடம் இருப்பது நமது நாகரிகத்திற்கு ஒரு எடுத்துக்காட்டு.

வெறும் போரால் ஒரு தேசம் வாழ்ந்துவிடாது. போரின் விளைவாக கலை விஷயங்கள் மேலே வந்தால்தான், நாட்டிய நாடகங்களும் பாடல்களும், கவிதைகளும், கட்டிடங்களும் எழுப்பினால், தான் நமது நாகரிகம் பல தலைமுறைகள் தாண்டி பிரகாசிக்கும்.

போர் என்பது ஒரு செயல், அந்தச் செயலின் விளைவு, அந்தக் கடைதலின் விளைவு இதோ இந்தப் பெருங்கோயில் பணி, எனவே நடுவே ஏற்படுகின்ற எந்தவித இடையூறுகளையும் பொருட்படுத் தாது. வெகு காலத்திற்கு சூரிய சந்திரர் உள்ளவரையில் சோழ தேசத்தின் நாகரிகம் நமது தலைமுறை தலை முறையாக தமிழர் களுக்குத் தெரிய வேண்டுமென்ற எண்ணத்தில், நாம் அனைவரும் செயல்படவேண்டும். குறிப்பாக நீங்கள் செயல்பட வேண்டும்.

போர் வீரர்களுக்கு மட்டும் மகிழ்ச்சி ஏற்படுத்துகின்ற நடன மாதுக்களாக இல்லாது, சிற்பிகளோடு பேசியும், மற்ற கவிஞர்கள், பாடலாசிரியர்கள் பாணர்களை ஒன்று சேர்த்தும், இசையமைப் பாளர்களை ஒன்று சேர்த்தும், இப்பொழுது நீங்கள் செய்கின்ற நாட்டிய நாடகம்போல இன்னும் பலவற்றை நீங்கள் செய்ய வேண்டும்.

ராஜராஜியின் வேலை உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவரின் பெருமையைச் சொல்வது இதோடு முடிந்து விட்டதா, இல்லை. இங்கிருந்த நாயன்மார்களின் கதைகளை நீங்கள் எழுதித் தொகுக்க வேண்டும்.

இளைஞர்களையும், புலவர்களையும் வைத்து அவற்றை எழுத்து வடிவத்திலும் கவிதை வடிவத்திலும் மாற்ற வேண்டும் பாடல் வடிவத்திலும் மாற்ற வேண்டும். அப்படி மாற்றியவற்றை பாணர் களை வைத்துப் பாட வேண்டும். அப்படிப் பாணர்களை வைத்துப் பாடுகின்ற விஷயத்தை நட்டுவம் செய்விக்கின்ற தலைக்கோலி களை வைத்து நாட்டிய நாடகமாகச் செய்ய வேண்டும்.

அந்த நாட்டிய நாடகத்தை நீங்கள் அனைவரும் அரங்கேற்றி ஜனங்களிடம் பரப்பவேண்டும். இந்த நாட்டிய நாடகங்கள், கவிதை கள், பாடல்கள் ஆயிரக்கணக்கான வருடங்களாக நம்

புகழைச் சொல்ல வேண்டும். இறைவன் பெயரைச் சொல்ல வேண்டும்.

சோழதேசம், சைவ சமயத்தை வளர்க்கின்ற ஒரு அரசாங்கம், எனவே, சைவமதத்தை உலகெங்கும் பரப்புகின்ற ஒரு மிகப்பெரிய முயற்சியில் நாம் அனைவரும் ஒன்றுகூடி ஈடுபட வேண்டும்.

சைவ மதத்து பெரியார்களுடைய கதைகளை வரிசையாக்கி மக்களிடையே பரப்புதல் அவசியம். சக்ரவர்த்தி உடையாரின் புகழைச் சொல்வது போல, இறைவன் புகழையும் நீங்கள் சொல்ல நான் விரும்புகின்றேன். இந்த நாட்டிய நாடகம் காண சோழதேசம் ஆவலாக இருக்கிறது. வெகுவிரைவில் இதற்குண்டான எல்லா ஏற்பாடுகளையும் செய்யுங்கள்.

இந்தச் சிறிய இடத்திலேதான் பயிற்சிக்கு ஏற்பாடு செய்கிறீர்கள் என்று புரிகிறது. உங்களுக்கு உடனடியாக மிகப்பெரிய ஓலைக் கொட்டாரம் ஒன்றைச் செய்துதர உத்தரவிடுகிறேன். அதற்குண் டான செலவுகளையும் நானே என் சொந்தப் பணத்திலிருந்து தருகிறேன். அப்படி நடிப்பவர்களின் உடைகளுக்காகவும், வேறு சில உத்திகளுக்காகவும், இசைக் கலைஞர்களுக்காகவும் கொடுக்க உள்ள சன்மானங்களை சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜராஜத் தேவர் அவர்கள் தனியே பொற்கிழியாக வழங்கியிருக்கிறார்கள். அதுவும் உங்களுக்குத் தரப்படும்.

கோயிலின் சன்னதி முன்னால் மிக நிரந்தரமான ஒரு மேடை அமைக்கப்பட்டு, அதைச்சுற்றி பல்லாயிரக்கண்ககான மக்கள் அமர்ந்து உங்கள் நாட்டிய நாடகத்தைப் பார்க்கும்படியான ஒரு வசதியும் செய்து தரப்படும். கோயில் பணி முடிந்ததும் அந்த நாட்டிய மேடை கட்டுவதற்குண்டான ஏற்பாடுகள் துவங்கும்.

மறவர்களுடைய செய்கைக்காக மறுபடியும் அவர்கள் சார்பாக என்னுடைய மனமார்ந்த வருத்தங்களைச் சொல்லி..'' என்று அவர் பேசி முடிப்பதற்கு முன்பு சாவூர்பரஞ்சோதி, ''இளவரசர் ஸ்ரீ இராஜேந்திரசோழர் வாழ்க... வாழ்க...'' என்று கூவினார். அனை வரும் எதிரொலித்தார்கள். ராஜராஜி ஏதோ பேச எழுந்தபோது இளவரசர் கையமர்த்தினார்.

''போதும். பேச்சு முடிந்துவிட்டது. இந்த நாட்டிய நாடகத்தின் ஒரு சில பகுதிகளை ஆடிக்காண்பியுங்கள்.'' என்று உத்தர விட்டார். அந்தப் பெண்கள் வேறுவிதமாக வரிசையானார்கள்.

வீணை ஆதிச்சன் தன்னுடைய கருவியை எடுத்து வரச் சொன்னார். நட்டுவனார்கள் வந்து அமர்ந்தார்கள். தலைக் கோலிகள் வரிசையானார்கள். மத்தளம் சற்று தொலைவிலிருந்து முழங்கிற்று. கொள்ள, பெண்கள் நர்த்தன கணபதியை சபைக்கு வரும்படி அழைக்க, ஒரு பெண் ஆடிக்கொண்டு வந்தாள்.



கணபதியின் அசைவுகளை, யானையின் அசைவுகளை மிக அழகாக வெளிப்படுத்தினாள்.

சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவர் அருண்மொழி என்று அழைக்கப்பட்டபோது, தன் தமக்கை குந்தவையோடு காவிரிப்பூம்பட்டிணம் கடற்கரையில் உலா வருகிறார். சிலப்பதி காரம் பற்றியும், புத்தர் கோயில் பற்றியும் பேச்சு வருகிறது. சிவனுக்கு மிகப்பிரமாண்டமான ஒரு கோயிலைக் கட்ட வேண்டுமென்று அவர் ஆசைப்படுகிறார்.

நாட்டிய நாடகத்தின் சுருக்கத்தை ராஜராஜி உரத்த குரலில் சொல்ல, ஒரு பெண் குந்தவையைப் போல நடந்து வந்தாள். தம்பி எங்கே என்று தேடினாள். தம்பி தொலை தூரத்தில் கைகட்டி நிற்பதைப் பார்த்து, மெல்ல அருகே போய் அவரைப் பற்றி இழுத்துவர தம்பியையும், அக்காவையும் கடற்காற்று கேசத்தைக் கலைக்க தடவித் தடவி முன்முடி கோதிக்கொண்டே நடந்தார்கள். அது மெல்லிய நாட்டியமாய் மிக அழகாக நடத்தப்பட்டது.

எந்தக் கோட்டையைப் பிடிக்க இப்படியொரு யோசனை என்று குந்தவை கேட்க கோட்டையைப் பிடிக்க அல்ல. கோயிலைப் பிடிக்க வேண்டும். கோயிலைப் பிடித்து, கடவுளைப் பிடிக்க வேண்டும். கடவுளைப் பிடித்து என்றும் உயிர் வாழும் தன்மையை சிரஞ்சீவித் தன்மையைப் பிடிக்க வேண்டும். எல்லோரும் சாகிறார்கள். நானும் சாக வேண்டுமா, நான் சாகாதிருக்க என்ன வழி என்று யோசிக்க வேண்டும் என்று இராஜராஜர் பேசுவதாக வந்தது.

சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவராக ராஜராஜி நடந்து வந்தாள். அவருடைய அசைவுகளை வெளிப்படுத்தினாள்.

''நிச்சயம் உன் கனவு நிறைவேறும். நான் துணையிருப்பேன்.'' என்று குந்தவை சொல்ல, அந்த அங்கம் முடிவுபெற்றது.

அதைப் பார்த்த நான்கைந்து பேர் ஒன்றாக விழுந்து நமஸ்கரிக்க, இளவரசர் எழுந்து நின்று ஆஹா... ஆஹா... என்று பாராட்டினார்.

''எப்படி இராஜராஜரைக் கண்முன் கொண்டு வந்து நிறுத்து கிறாய் வேடம் தரிக்காமலேயே அவர் அசைவுகளெல்லாம் உன் உடம்பில் வந்து நின்று விட்டனவே ராஜராஜி, பரவசமாக

இருக்கிறது. இந்த முழு நாடகத்தையும் இப்பொழுதே பார்க்க வேண்டுமென்று தோன்றுகிறது.

பாட்டும், தாளக்கட்டும், வீணை வாசிப்பும் அற்புதமாக இருக்கின்றன. ராஜராஜி உனக்கு என் மனப்பூர்வமான வாழ்த்துக்கள். உன் தோழிகளுக்கும் என் வாழ்த்துக்கள். அடுத்து எந்த உதவியாயினும் நீ கேட்கலாம். நான் விடைபெறுகிறேன்'' கரம் கூப்பினார். எல்லாப் பெண்களையும் ஒருமுறை அன்போடு பார்த்தார். வாசற்படியை நோக்கினார். பெண்கள் வழிவிட்டார்கள்.

கம்பீரமாக மத யானைபோல நடந்து அவர் வெளியேறினார். அவர் வந்ததும் தேர் திரும்பி நின்றது. கடைசிப் படியில் நின்று திரும்பி பெண்களைப் பார்த்து கையசைத்தார். மடமடவென்று இறங்கினார். இறங்கிய வேகத்தில் தேரில் ஏறினார். குதிரையைச் சொடுக்கினார். தேர் விரைவாக ஓடியது. தேருக்குப் பின்னே ஓடிப்போய் இரண்டு வீரர்கள் தொற்றிக் கொண்டார்கள்.

ஒரு புயல் வந்துவிட்டு போனதுபோல் அந்தத் தளிச்சேரி பெண்டுகள் பயம் கலந்த சந்தோஷத்தில் ஆழ்ந்தார்கள்.

குணவன் நித்தவினோதப் பெருந்தச்சன் வேலை செய்யவில்லையா. அதனால் என்ன குணவனை முன் வைத்து நான் இந்தக் கோயிலைத் துவக்கவில்லை. மேலேயிருந்து ஒரு கல் உருண்டு குணவன் தலையில் விழுந்து, குணவன் இறந்துபோனால் கோயில் வேலை நின்றுவிடுமா. நடுவே யானைப்பாகர்கள் சண்டை போட, தடுப்புப் பலகை நெகிழ்ந்து போய், மண் சரிந்து கருவறை மூடிக் கொண்டதே, இவன் உள்ளேயிருந்தால் என்ன ஆகியிருக்கும். இவனும் மூச்சுத் திணறி இறந்திருப்பான் அல்லவா. அப்போது இந்தக் கோயில் பணி நின்றுவிடுமா. தன்னாலேயே சகலமும் நடக்கிறது என்று எவன் நினைத்தாலும் அது அவன் அழிவுக்கு ஆரம்பம்.

மறுபடியும் சொல்கிறேன். இந்தக் கோயில் பணி என்னால் ஆரம்பிக்கப்படவில்லை. என்னால் நடத்தப்படவில்லை. இறைவனே தன்னை இப்பூமியில் நிலை நிறுத்திக் கொள்ள ஒரு இடம் தேடி இங்கு மிகப்பெரும் கோயில் எழுப்புகிறார். இந்த சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவர் என்பவர் கட்டிய கோயிலல்ல. இதில் பலபேர் பங்கு பெற்றிருக்கிறார்கள். பலபேர் தங்கள் வாழ்நாளை இதற்காக தியாகம் செய்திருக்கிறார்கள்.



இளைஞர்கள் சிலருக்கு இம்மாதிரி கிறுக்கு வருவது சகஜம்தான். என் தந்தை சுந்தரசோழர் ஒரு கதை சொல்வார். என் தந்தையிடம் ஒரு விதூஷகன் இருந்தானாம். அவனுக்கு ஒரு மகன் உண்டாம். அந்த மகன் பகல் வேஷக்காரனாம். அதாவது பகலில் வெவ்வேறு ஆட்கள்போல வேடமிட்டு வீடுவீடாகப் போய் யாசகம் கேட்பானாம்.

அரசரைப்போல, கிராமத்து அதிகாரியைப்போல, கோட்டைக் காவலர் போல, போர்வீரர் போல வேடமணிந்து பல்வேறு விஷயங்களைச் சொல்வதற்கும், பல்வேறு மனிதர்கள் இப்படித் தான் இருப்பார்கள் என்று வீட்டிலுள்ள பெண்களுக்கு, வெளியே போகாத பெண்களுக்கு விவரமாகச் சொல்வதற்காக, இம்மாதிரியான பகல்வேஷவிளையாட்டைக் கடைபிடித்து வந்தானாம்.

அந்தப் பகல் வேஷக்காரன் சுந்தரசோழர் போலவே நிற்பதும், நடப்பதும், சிரிப்பதும், பேசுவதும் அற்புதமாகச் செய்வானாம். சுந்தரசோழரே வியந்து பார்த்துவிட்டு, என் கண்களை என்னால் நம்பவே முடியவில்லையே, நான் எப்படிக் கண்சிமிட்டுகிறேனோ அதோபோல் சிமிட்டுகிறாயே என்றெல்லாம் வியந்து பெரும் பரிசு கொடுத்தாராம்.

அந்தப் பரிசால் அவன் கர்வமடைந்து விட்டதாகவும் அதற்குப் பிறகு வேறு எந்த வேஷமும் கட்டாமல் எல்லா இடத்திலும் சுந்தரசோழர் போலவே வேடமிட்டுத் திரிந்ததாகவும், விரைப்பாக வீரவசனம் பேசியதாகவும், எவரிடமும் பணிவில்லாமல் நடந்து கொண்டதாகவும் அவருக்குச் செய்தி வந்தன.

அந்த விதூஷகன் ஒரு காட்டு வழி போகும் போது, ஒரு புலி வேஷக்காரனை அவன் பின்னே அனுப்பி, அவன் அருகே புலி வேடமிட்டு படுத்துக் கொள்ளச் சொன்னார்.

இரவு நேரம் மறைப்பில் ஒதுங்க எழுந்தபோது பக்கத்தில் புலி படுத்திருப்பதைப் பார்த்துவிட்டு அதன் உறுமலைக் கேட்டுவிட்டு, பயந்துபோய் நாலாபக்கமும் அலைந்து மரத்தில் ஏற, அந்தப் புலியும் வேகமாக மரத்தில் ஏறுவது பார்த்து அலற எவரும் துணைக்கு வராதது கண்டு கத்திக் கதற இரவெல்லாம் மரத்தின் மேலேயே இருந்திருக்கிறான். அங்கேயே எல்லா இயற்கை உபாதைகளையும் அமர்ந்தபடியே முடித்திருக்கிறான்.

புலி வேடமிட்டவன் இறங்கிப்போய்விட, அவன் என்ன சொன்னாலும் இறங்க மறுத்து விட்டான். நீங்கள் சுந்தரசோழரல்லவா என்று சொன்னால் இல்லவே இல்லை. நான் பகல்

வேஷக்காரன் என்று பலமுறை சொல்லி மற்றவர்கள் சமாதானப் படுத்த கீழே இறங்கி வந்தானாம்.

அவ்வளவு அற்புதமாக சுந்தரசோழர் வியக்கும் வண்ணம் சுந்தரசோழராக நடித்தவன், பிரச்சினை வரும்போது சுந்தர சோழராக இல்லாமல் சாதாரண கூத்தாடியாக மாறிவிட்டான்.

நித்தவினோதப் பெருந்தச்சன் குணவனுக்குப் பிரச்சினை வரும்போது எப்படி நடந்து கொள்வான் என்று அவன்தான் தீர்மானிக்க வேண்டும். இப்போது அவன் செய்திருக்கும் தீர்மானத்தை மாற்றுவதற்கு எனக்கு விருப்பமில்லை. வேண்டாம் என்று எவர் ஒதுங்கினாலும், நானே ஒதுங்கினாலும், இந்தக் கோயில் பணி முடியும். முடித்து வைப்பது இறைவன் திருவுள்ளம். அப்படி இந்தக்கோயில் முழுமையாக முடியாது போனாலும் அதுவும் இறைவன் திருவுள்ளம்.''

''போதும், போதும்.. அச்சான்யமாகப் பேசாதீர்கள்.''

பஞ்சவன்மாதேவி உள்ளுக்குள் புகுந்து அவர் பேச்சை நிறுத்தினாள்.

கருவறை வேலை துவங்கப் போகிறது என்று பெருந்தச்சரிட மிருந்து செய்தி வந்தது. ஜோதிடரிடம் நாள் குறித்து ஆலோசித் தார்கள்.

''சிவலிங்க ஸ்தாபனம் நடைபெறப்போகிறது. மருந்து கலப்பதற் குண்டான அடிப்படை விஷயங்களை வாங்கி வைத்துவிட்டேன். மருந்து காய்ச்சுவதற்குண்டான கொப்பரைகளும், அடுப்புகளும் தயாராகி விட்டன. நீங்கள் வந்து பார்த்து ஆசீர்வதித்தால் நன்றாக இருக்கும்.''

ஒரு தலைமைச்சிற்பி பெருந்தச்சக் குஞ்சர மல்லரின் செய்தியாக அரசரிடம் சொன்னார்.

''நான் ஆசீர்வதிப்பது இருக்கட்டும். இதை ஆசீர்வதிக்க வேண்டியவர் கருவூர்த்தேவர். அவர் எங்கிருக்கிறார். அவருக்குச் செய்தி அனுப்பியாகிவிட்டதா.''

''இல்லை. அவருக்குச் செய்தி போகவில்லை.''

''அவரிடம் சொல்லாமல் என்னிடம் வந்தது பிசகு. அவருக்குச் செய்தி அனுப்ப வேண்டும். உடனடியாக, இப்பொழுதே தகுந்த ஆள் போக வேண்டும். யார் அந்த ஆள். அருண்மொழி இங்கு வா.''

தொலைவிலிருந்த அருண்மொழியைக் கை தட்டி அழைத்தார்.



''கருவூர்த்தேவர் எங்கிருப்பினும் தேடிக் கண்டு பிடித்து, அவரை நேரடியாக கோயிலுக்கு விரைந்து வரவேண்டுமென்று நான் மன்றாடிக் கேட்டுக் கொண்டதாகப் போய்ச்சொல்.

லிங்கப்பிரதிஷ்டை ஆகப் போகிறதென்றும், அந்நேரம் அவர் இருக்க வேண்டுமென்றும், நான் கேட்டுக் கொண்டதாகச் சொல். பஞ்சவன்மாதேவி. நீ சிறு தேர் ஏறி கிருஷ்ணன்ராமன் வீட்டிற்குப் போய் அவரை சிவலிங்க பிரதிஷ்டைக்கு நான் அழைத்ததாகச் சொல்.

பழுவேட்டரையருக்கும், மூவேந்த வேளாருக்கும் என் சார்பாக நீயே போய் அழைப்பு விடுத்து விட்டு வா. இளவரசர் இராஜேந் திரர் தனித்த பொற்காசுகளுடன் பெருந்தச்சர் குஞ்சரமல்லரிடம் போய் சிவலிங்கப் பிரதிஷ்டை நல்லபடியாகச் செய்து கொடுக்க வேண்டும் என்று வேண்டிக் கொள்ளச் சொல். இதெல்லாம் ஒரு சம்பிரதாயம்.

சிவலிங்கப் பிரதிஷ்டை நடைபெறப் போகிறது என்று ஊரில் பறையறிவித்து, இந்த வைபவம் நல்லபடி நிறைவேற வேண்டு மென்று சகலரையும் இறைவனை வேண்டிக் கொள்ளச் சொல். எல்லாக் கோயில்களிலும் தனித்த பூஜை நடைபெறட்டும் என் மூதாதையர் விஜயாலயர் சோழர் ஸ்தாபித்த எல்லா எல்லைக் காளிகளுக்கும் தனித்த ஆராதனைகள் நடக்கட்டும் அங்கிருந்து எல்லாப் பிரசாதங்களையும் கொண்டு வந்து பெருந்தச்சக் குஞ்சரமல்லரிடம் கொடுக்கட்டும். குஞ்சரமல்லரைக் கௌரவப் படுத்துங்கள். அது முக்கியம்.''

அடுத்த சில நாழிகைகளில் தஞ்சை நகரம் பரபரப்பாக இயங்கியது. சிறுதேர்கள் முன்னும் பின்னுமாக அலைந்தன. சோழ வீரர்கள் ஜனங்களை ஒதுக்கியபடி வேகமாகப் பல்வேறு இடங் களுக்குப் பறந்தார்கள். பொது மக்கள் வழக்கம்போல கோயிலுக் கருகே அனுமதிக்கப்படாமல் சற்றுத் தொலைவிலேயே நிற்க வைக்கப்பட்டார்கள்.

மண் மேட்டின் மீது அமர்ந்தவாறு சிற்பிகள் குழுக்குழுவாக பேசிக் கொண்டிருப்பதும், பல்வேறு கணக்குகள் போடுவதும் அவர்களுக்குத் தெரிந்தன.

தொண்டை நாட்டு அந்தணர்கள் விலகி நின்று எல்லாவித உதவியையும் செய்வதற்கு தயாராக இருந்தார்கள். எந்த உத்தரவு வந்தாலும் அதை உடனடியாக நிறைவேற்றினார்கள்.

இன்னும் ஒரு வார காலத்திற்கு மற்ற ஊர் மராமத்து வேலைகளைக் கவனிக்க முடியாது. இப்பணிதான் முக்கியம். சிவலிங்க ஸ்தாபனம் முடிந்த பிறகே, என்ன வேண்டுமானாலும், நான் செய்து தருகிறேன். அதுவரை தயவு செய்து குறுக்கே வராதீர்கள்'' என்று பொதுமக்களை தொண்டை நாட்டு அந்தணர்கள் பணிவாக வேண்டிக் கொண்டார்கள். மேலும் சிறு தேரில் தொற்றிக் கொண்டு முன்னும் பின்னும் அலைந்தார்கள்.

''ஜாதிக்காயா. அப்படியென்றால் என்ன நான் பார்த்ததே இல்லையே.''

ஒரு தொண்டைநாட்டு அந்தணர் சொல்ல அவருக்கு ஜாதிக்காய் காட்டப்பட்டது. அவரும் அதை வாங்கி முகர்ந்து பார்த்துவிட்டு எங்கே கிடைக்கும் என்று பேசிக் கொண்டார்கள்.

குங்கிலியம் மூட்டை மூட்டையாக வந்து இறங்கியது. நல்ல குங்கிலியமா என்று தணலில் பிடித்துப் போட்டுப் பார்த்தார்கள். வாசனை பரவமூச்சு இழுத்து என்ன மணம் என்று நுகர்ந்தார்கள். இன்னும் வேறு என்னவெல்லாம் கலக்கப் போகிறீர்கள் என்று கேட்க, அது ரகசியம் என்று சிற்பிகள் சொன்னார்கள்.

மரப்பெட்டிகளிலும், பானைகளிலும் பல்வேறு பொருட்களைத் துணிபோட்டு மூடி வைத்திருந்தார்கள்.

கருவறைக்குள் நேரடியாகப் போய் ஈடுபடப்போகிறவன் எத்தனை பேர். கருவறைக்கு வெளியே மருந்து காய்ச்சுகிறவன் எத்தனை பேர் மருந்தைச் சுமந்து கொண்டு போகிறவன் எத்தனை பேர். அவர்கள் அத்தனைபேருக்கும் என்ன உணவு. அவர்களைத் தவிர வேறு யார் யார் முன்னும் பின்னும் வருவார்கள். அவர்களுக்கு எங்கே உணவு. சக்ரவர்த்தியாரும், அரச குடும்பத்தினரும் வந்தால் அவர்கள் எங்கே தங்க வைக்கப்படுவார்கள். ஏது நிழல், எங்கே உணவு.

தொண்டை நாட்டு அந்தணர்கள் தங்களுக்குள் கேட்டுக் கொண்டார்கள். குஞ்சரமல்லரோடு விவாதித்தார்கள். விவரம் சொல்ல மடமடவென்று குறித்துக் கொண்டார்கள்.

''சொல்லிவிட்டீர்களல்லா. உங்களுக்கு வயிறு கோணாமல் உணவளிப்பது எங்கள் பொறுப்பு.''

''இதற்குண்டான அரிசி, பருப்பு, காய்கறிகளை எங்கிருந்து பெறுவது'' என்று தங்களுக்குள் கேள்வி கேட்டுக் கொண்டார்கள்.

''மூல பண்டாரத்திலிருந்துதான் எடுக்க வேண்டும்.''



''நமக்கு மூலபண்டாரத்தோடு தொடர்பில்லை. மூல பண்டாரத்தைப்பற்றிப் பேச வேண்டுமென்றால் சக்ரவர்த்தியோடு தான் பேசவேண்டும். ஆகவே என்ன செய்வது.''

''ஒருநாள் உணவை வணிகர் தலையில் சுமத்தி விடலாமா. அரசருக்கும், மற்றோருக்கும் உணவிட வேண்டும். அது உங்கள் தர்மமாக இருக்கட்டும் என்று சொல்லிவிடலாமா. சொல்லி விட்டு அரசரிடம் போய் தனவணிகர்களே தர்மமாக உணவிட்டார்கள் என்றும் சொல்லிவிடலாம்.''

''ஆமாம். அதுதான் சரி. மூலபண்டாரத்தை நோக்கி நாம் நகர்வதாக எந்தவித அபிப்ராயமும் எவருக்கும் கொடுத்துவிடக்கூடாது.''

''நாளைக்கு மறுநாள் வேலையாக வேண்டுமென்றால் என்ன செய்வோம்.''

''அப்போது பார்த்துக் கொள்வோம். நம்முடைய பங்கிலிருந்து ஆளுக்குக் கொஞ்சம் காசு போட்டு விருந்தை நம்முடைய பங்காக நிகழ்த்துவோம்.

''நல்ல யோசனை. இதுவும் சக்ரவர்த்திக்கு உவப்பாக இருக்கும். சரி, தனவணிகர்களிடம் யாரேனும் போய் வாருங்கள்.'' அவர்கள் வேலைகளைத் தங்களுக்குள் பகிர்ந்து கொண்டார்கள். விரைவானார்கள்.

''சட்டென்று போக வர குதிரை வண்டி இருந்தால் நன்றாக இருக்குமல்லவா.''

''பொறு. அவசரப்படாதே. இப்போதைக்குத் தொற்றிக் கொண்டு ஓடு. நமக்கென்று பிறகு கிடைக்கும். அப்போது அனுபவிக்கலாம்.''

ஆட்களை விரட்டி சிறுசிறு பந்தல்களை உடனடியாக ஏற்பாடு செய்தார்கள். வெயில் சுள்ளென்று இறங்கிக் கொண்டிருந்தது.

''கருவூர்த்தேவர் வரவில்லையே. கருவூர்த்தேவரை அழைக்கப் போன அருண்மொழி எங்கே என்று தெரியவில்லையே. எங்கே இருக்கிறார்கள்.''

''தெரியவில்லை. கருவூர்த்தேவரைக் கண்டுபிடிப்பது எளிதா. நாம் தேடுகிறோம் என்று தெரிந்தாலே அவர் ஒளிந்துகொள்வார். ஆனால், அருண்மொழி கெட்டிக்காரன். எப்படியாவது கண்டு பிடித்து வந்துவிடுவான்.'' அரசர் கேட்க பஞ்சவன்மாதேவி பதில் சொன்னாள்.

அரசரும் பஞ்சவன்மாதேவியும் மண் மேட்டின் அடிவழியாக சவுக்குக் கம்புகளைத் தாண்டி தீப்பந்தத்தோடு உள்ளுக்குள் நகர்ந்து, கருவறைக்குள் உள்ள கருங்கல் தளத்திற்குள் போய் நின்று கருவறைக்குழியை எட்டிப் பார்த்தார்கள். மேலே விமானத்தின் பிந்துவை பார்த்து வியந்தார்கள் கைகூப்பி நமஸ்கரித்தார்கள்.

அந்த பாணலிங்கம் பூமியிலிருந்து ஐந்தடி உயரத்தில் கயிறுகளால் இழுத்து கட்டப்பட்டிருந்தது. சவுக்கங்கட்டைகள் அவற்றைத் தாங்கிக் கொண்டிருந்தன. எட்டுத் துண்டுகளாக ஆவுடையார் வைக்கப்பட்டிருந்தது.

''அடடே... ஒரே ஆவுடையார் இல்லையா.'' என்று பஞ்சவன் மாதேவி வியந்தாள்.

''இல்லை.''

''ஒரு ஆவுடையார் இப்படியிருக்கலாமா.''

''இருக்கலாம். ஒரே கல்லில் ஆவுடையார் எப்படி செய்வது. இவ்வளவு பெரிய பாணலிங்கம் இருக்கும்போது ஆவுடையாரை ஒரே கல்லில் செய்துவிட முடியுமா. எனவேதான் இப்படி திட்டமிட்டிருக்கிறார்கள். லிங்கம்தான் முக்கியம். ஆவுடையார் எப்படியும் இருக்கலாம்.''

லிங்கத்தினுடைய மழமழப்பை அரசரும். பஞ்சவன்மாதேவியும் தொட்டுப் பார்த்தார்கள். ஆவுடையாரைத் தொட்டுத் தடவினார்கள். மறுபடியும் தீப்பந்தம் பிடித்துக் கொண்டு அந்த இருட்டு வழியினூடே வெளியே வந்தார்கள்.

உச்சிக்குப் போகின்ற பாதைகள் மீது இப்போது யானைகள் போகாமல், மனிதர்கள் மட்டுமே பலகைக் கற்களை இரண்டு பேராக, மூன்று பேராக, நான்கு பேராகச் சுமந்து கழிஊன்றி மெல்ல நடந்து போய்க் கொண்டிருந்தார்கள். மனிதருடைய முழு முயற்சியும் அங்கு திணறத் திணற நடைபெற்றுக் கொண்டிருப்பதை பஞ்சவன்மாதேவி பரவசத்துடன் பார்த்தாள்.

''மிக அற்புதமான வேலை செய்கிறீர்கள் ஐயா, உங்களால் அல்லவா இந்தக் காரியம் நடை பெறுகிறது.''

''இல்லை. பஞ்சவன்மாதேவி. என்னால் அல்ல. இது இறைவனுடைய விருப்பம். இறைவன் செய்து கொள்கிறான். இதில் எனக்கு நெல்முனையளவும் ஊசலாட்டம் இல்லை. இங்கு வேலை செய்கின்ற அத்தனை பேர் கால்களிலும் விழுந்து வணங்க வேண்டிய கடமைதான் எனக்கு இருக்கிறதே தவிர, கடன்தான் எனக்கு



இருக்கிறதே தவிர, நான் செய்கிறேன் என்ற மதமதப்பு, இறுமாப்பு என்னிடம் இல்லைவே இல்லை.''

''அடுப்பு ஏற்றலாமா.'' வேகமாக ஒரு சிற்பி விசாரித்தார்.

''ஏன். என்ன அவசரம்.''

''குறிப்பிட்ட ஹோரை தாண்டுகிறதென்று ஒரு ஜோசியர் சொல்கிறார். அந்த நேரம் தாண்டுவதற்கு முன்பு அடுப்பு ஏற்றுவது நல்லது என்கிறார்''

''கருவூர்தேவர் வரவில்லையே.''

''அவர் வந்த பிறகு கலவையைக் கொட்டிக் கொள்ளலாம். ஆனால், மருந்து தயாரிக்கும் வேலையை ஆரம்பித்துவிடலாம் அல்லவா.'' என்று வினவ, சரி என்று அரைமனதோடு சக்ரவர்த்தி சம்மதித்தார்.

அரணி கட்டை கடைந்து, இலை சருகு பற்றி பிறகு விளக்கு ஏற்றி, மூங்கில் சருகில் போட, மூங்கில் சருகிலிருந்து பனை ஓலைகள் பிடித்துக் கொள்ள, பனை ஓலைகளிலிருந்து பெரிய விறகுகள் பற்றிக்கொள்ள, பெரிய விறகுகளுக்குப் பிறகு, பனை மரத்தின் அடிப்பாகங்களை வெட்டி வீழ்த்தி பனந்துண்டங்களை உள்ளே அடுக்க அடுப்பு கொழுந்து விட்டு எரிந்தது. கரும்புகை உயரே எழுந்தது.

நல்லபடியாக மருந்துக் கலவை வரவேண்டுமென்று உயரே எழுந்த அந்தக் கரும்புகையைப் பார்த்துவிட்டு மக்கள் கன்னத்தில் போட்டுக் கொண்டார்கள். பிரார்த்தனை செய்தார்கள்.

பெருங்குரலில் அட்டகாசமான அசைவோடும் ஜொலிப்பான நகைகளோடும் பெருந்தச்சர் முன்னும் பின்னும் அலைந்து விதம்விதமான உத்தரவுகளைச் சொல்லிக் கொண்டிருந்தார். ஒரு கொதிநிலைக்கு மருந்து வந்ததும், மருந்து கொதிநிலைக்கு வந்து விட்டது என்று அங்கங்கே கூவினார்கள்.

பெருந்தச்சர் கனத்த சரீரத்தோடு கருவறைக்குள்ளே ஓடினார். கருவறை முழுவதும் தீப விளக்குகள் ஏற்றி வைக்கப்பட்டிருந்தன. தீப்பந்தங்கள் சொருகி வைக்கபட்டிருந்தன. சுவற்றில் வெள்ளைச் சுண்ணாம்பு தெளித்து அந்த இடத்தை இன்னும் வெளிச்சமாக மாற்றியிருந்தார்கள். பாணலிங்கத்தை மெல்ல இறக்கச் சொல்லி அவர் உத்தரவிட்டார். பல தேங்காய்கள் பலியிடப் பட்டன. எலுமிச்சம் பழங்கள் நசுக்கப்பட்டன.

தென்னாடுடைய சிவனே போற்றி.. என்று வீரர்கள் குரல் கொடுத்தார்கள்.

''இறக்கு... மெல்ல இறக்கு... மெல்ல இறக்கு...''

கயிற்றை உறுதியாகப் பிடித்துக் கொண்டிருந்த மறவர்களுக்கு உத்தரவிடப்பட்டது. அங்குலம் அங்குலமாக பாணலிங்கம் கீழிறங்கியது. தரை தொட்டது. ஓ.. என்று குரல் கொடுத்தார்கள். மருந்து கொதித்துக் கொண்டிருந்த இரும்புச் சட்டிகளுக்கு நடுவே சவுக்குக்கட்டை கொடுக்கப்பட்டது.

இரண்டு இரண்டு வீரர்களாய் கொதிக்கின்ற அந்த இரும்புச் சட்டியைத் தூக்கிக் கொண்டு கருவறைக்குள் ஓடினார்கள். மற்றவர்கள் சுவரோடு பதுங்கிக் கொண்டார்கள்.

எல்லா வீரர்களும் விலகி நின்று கொள்ள, சிற்பிகள் அந்தக் கலவையை எடுத்துக் கொண்டு நாலாபுறமும் போய் நின்று கொண்டார்கள். இடைவிடாது கிளறி கொண்டிருந்தார்கள். அடர்த்தியான கரும்புகை ஒன்று உள்ளே சூழ்ந்து எழுந்தது. உச்சிவரை போயிற்று. மேலே தாக்கி மறுபடியும் கீழே வந்தது. அந்த இடத்தினுடைய வெளிச்சத்தைக் குறைத்தது.

''ஊற்றுங்கள்... கலவையை ஊற்றுங்கள்.''

பெருந்தச்சர் உத்தரவிட அந்தக் கலவையை மெல்லக் குழியில் சாய்த்தார்கள். குங்கிலியக் கலவை குழி முழுவதும் நிரம்பி பாணத்திற்கும், குழிக்கும் இடையே நெகிழ்ந்து பரவியது. இன்னும் பரவியது. நீண்டு துடுப்புப் போன்ற தட்டைக் கரண்டியால் அந்த மருந்தை இன்னும் வேகமாக அழுத்தி அழுத்தி சிற்பிகள் உள்ளே செலுத்திக் கொண்டிருந்தார்கள். மறவர்கள் திகைப்போடு வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

''இது ஒன்றும் சாதாரண வேலையில்லையப்பா.'' என்று ஒரு மறவன் வாய் விட்டுச் சொல்ல, மற்ற மறவர்களும் ஆமோதித் தார்கள்.

மருந்து இறுக வேண்டுமென்பதற்காக பெரிய வெட்டி வேர் தட்டிகளால் விசிற ஆரம்பித்தார்கள். துணிகளை பானையில் உள்ள நீரில் முக்கி பிழிந்து உலர வைத்தார்கள். உள்ளே வந்த காற்று துணியின் மீது பட்டு உள்ளுக்குள் இருக்கின்ற காற்றை ஈரப்படுத்த வேண்டுமென்று முயற்சித்தார்கள். மருந்து மேற்புறம் இறுக ஆரம்பித்தது.



எல்லோரும் குதூகலமானார்கள். மெல்ல கத்தியலால் தட்டிப் பார்த்தார்கள். நன்கு இறுகியிருக்கிறது என்று தெரிந்தது. மெல்ல கயிற்றை அவிழ்க்கச் சொன்னார்கள். பாணலிங்கத்தைப் பற்றி யிருந்த கயிறுகள் மெல்ல அவிழக்கப்பட்டன. எல்லாக்கயிறுகளும், பிரிகளும் தூக்கப்பட்டன. சவுக்கங்கட்டைகள் விலக்கப் பட்டன.

உறுதியாக நிற்கிறதா என்று பார்ப்பதற்காக பெருந்தச்சர் குஞ்சரமல்லர் மேடை மீது நின்று பாணலிங்கத்தின் உச்சியில் கை வைத்து மெல்ல அசைத்துப் பார்த்தார். அசையாமல் நின்றது. இன்னும் வேகமாக அசைத்தார். அப்பொழுதும் அசையாமல் நின்றது. பலம் கொண்ட மட்டும் வேகமாக அசைக்க சிவலிங்கம் சட்டென்று அதனுடைய இடது பக்கம் சாய்ந்தது.

எல்லாச் சிற்பிகளும் ஐயோ என்று கத்தினார்கள். சில சிற்பிகள் தலையில் கை வைத்துக் கொண்டார்கள்.

மருந்து நிற்கவில்லை. பாணலிங்கம் பிடிபடவில்லை. ஆவுடை யாரை அணைக்க முடியாது இன்றைக்கு லிங்க ஸ்தாபனம் இல்லை.

சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவர் வேகமாக உள்ளே வந்தார்.

''என்ன ஆயிற்று.'' என்றார்.

விளக்குகள் ஏற்பட்டன. சிவலிங்கம் கோணலாக சாய்ந்திருப்ப தைப் பார்த்தார். அவருக்கு உள்ளே ஒரு வலி ஏற்பட்டது. அந்த வலி நெஞ்சுவலியா அல்லது மனவலியா என்று தெரியாமல் தவித்தார். என்ன செய்வது.. என்ன செய்வது என்று பதறினார். ஒரு முதிய சிற்பி மெல்ல அருகே வந்து பாணலிங்கத்தை எதிர்புறம் தள்ளினார்.

''மொத்தமும் சுரண்டி எடுக்க வேண்டும். மீண்டும் காய்ச்ச வேண்டும். மீண்டும் ஊற்ற வேண்டும். சுரண்டி எடுக்கவே மூன்று நாளாகும். குழியைச் சுத்தப்படுத்தாது போனால் மறுபடியும் ஊற்றிப் பயனில்லை. மிகச் சுத்தமாகச் செய்யவேண்டும்.'' சக்ரவர்த்தியும், பஞ்சவன்மாதேவியும் வெளியே வந்தார்கள்.

சக்ரவர்த்திக்கு ஏனோ குணவன் நித்தவினோதப்பெருந்தச்சன் மீது கோபம் வந்தது. இது அயோக்கியத்தனம் என்ற சீற்றம் வந்தது.

நித்த வினோதப் பெருந்தச்சனுக்கு சிவலிங்கம் நிற்கவில்லை என்பது சொல்லப்பட்டது. அப்படியா என்று சொல்லிவிட்டு அவன் வேறு பக்கம் போனான். அவன் அலட்சியமாய் நடந்து போவதைப் பார்த்து சில சிற்பிகளும் வேதனைப்பட்டார்கள்.

"இது தவறு. இறைவன் பணியில் இந்தக் கர்வம் தவறு" என்று முதிய சிற்பிகள் முணுமுணுத்தார்கள்.

மறுபடியும் பாணலிங்கத்தைச் சுற்றி பிரிகள் இறுக்கி கொக்கிகள் மாட்டி கயிறுகளை அதில் இழுத்து பாணலிங்கத்தை வெளியே தூக்கி பாணலிங்கத்தைச் சுற்றியிருக்கின்ற மருந்தை வேகமாகச் சுரண்டி எடுத்து உள்ளுக்குள் இருந்த மருந்தையும் சுரண்டி சுரண்டி எடுத்து வெளியே கொண்டு வந்து கொட்டினார்கள்.

பாணலிங்கம் நிற்கவில்லை என்ற செய்தி தஞ்சை முழுவதும் பரவியது.

"ஆடுபலி கொடுக்கோணும். ஆடு பலி கொடுக்கோணும். அஞ்சு எருமையாவது பலி கொடுக்கோணும்." என்று ஒரு பக்கம் மறவர்கள் பேச, சாக்த உபாசனை இல்லாமல் இங்கே எப்படி லிங்க ஸ்தாபனம் ஆகும். அம்பாளை வேண்டிக்கொண்டால் அல்லவா இறைவன் நிற்பார் என்று வைதீக அந்தணர்கள் உரத்துச் சொன்னார்கள்.

"மருந்துல எவனோ கைய வச்சுப்புட்டாக, கடுக்காய், ஜாதிக் காய்னு உருண்டையா இருக்கற காய்களையெல்லாம் கொண் டாந்து போட்டாக.." என்று வணிகர்களைக் குறை சொல்ல, சிற்பிகளுக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை.

"நாலாபுறமும் நின்று, ஏன் இப்படி ஆயிற்று. ஏன் இப்படி ஆயிற்று." என்று வெறுமே கேள்வி கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

"யாராவது ஒரு மறவனைக் கட்டிப் போட்டு அடிங்களய்யா லிங்கம் தானாக நிற்கும்." ஒரு மறவன் சொல்ல மறவர்கள் தானாக சிரித்தார்கள்.

"இந்தச் சிற்பிகளுக்கு மிகப்பெரிய தலை இறக்கமாகப் போயிற்று. இது தேவைதானா." என்று தங்களுக்குள் மறவர்கள் பேசிக் கொண்டார்கள்.

"வேண்டாம். உரத்த குரலில் பேசாதே. நாம் அப்பாவிகளைப் போல இருந்து விடுவதுதான் நல்லது. அருகே போய் நின்று பார்க்கும்பொழுது தான் ஒரு விஷயம் புரிகிறது. ஆயிரம் சிற்பி களில் நூறு சிற்பிகளுக்குத்தான் வேலை தெரிகிறது. மற்றவர்கள் எல்லாம் மேம்போக்கான வேலைகள் செய்கிறவர்கள்.

ஆனால், இந்தச் சிற்பிகளுக்கு வெற்றிலை, பாக்கு மடித்துக் கொடுப்பவர்களெல்லாம் முண்டாசும், மேல் துண்டுமாய் அலைகிறார்களே.. அதுதான் வயிற்றெரிச்சலாக இருக்கிறது.



ஆனால் அந்த நித்தவினோதப் பெருந்தச்சன் பெரிய ஆள்தான். அவன் செய்த ஊர்த்துவ தாண்டவர் சிலையையும், மனோன்மணி சிலையையும் பார்த்தேன். அற்புதம் செய்திருக்கிறான். அவன் எழுதிய வரைபடங்களைப் பார்த்தேன். அவன் மயன்தான் சந்தேகமேயில்லை. ஆனால் என்ன, இப்பொழுது அவர்களோ டேயே பிணங்கிக் கொண்டு, அவர்கள் இழிவுபடுத்தும் விதமாகவே நடந்து கொள்கிறான்."

"ஆமாம், வேறு எப்படி நடக்கும். மறவன் சாபம் சும்மா விடுமா. அவனால் அடிபட்டு நாடு கடத்தப்பட்டவன் எல்லை தாண்டும் போது மண் வாரிப் போட்டிருப்பானே. அது சும்மா விடுமா."

அடிக்குரலில் விவாதித்தார்கள்.

"மறுபடியும் சொல்கிறேனய்யா. அமைதியாக இருங்கள். அடக்கமாக இருங்கள். எல்லோரிடமும் பேசி விடாதீர்கள்."

"இந்த லிங்கம் நிற்குமா."

"நின்றுதான் ஆகவேண்டும். இல்லையென்றால் இந்தச் சிற்பிகள் செய்து அகோர சிவன் மனோன்மணி, துவாரபாலகர் சிலைகள் இத்தனை உயர விமானம், தனியே செய்யப்பட்டிருக்கிற சிலைகள் அத்தனையும் உபயோகமில்லாது போகும்."

"நிற்க வைத்து விடுவார்களல்லவா."

"வேறு வழியேயில்லை. அவர்கள் நிற்க வைத்துத் தான் ஆகவேண்டும்."

"நிற்க வைக்காவிட்டால்."

வேறொருவன் சந்தேகம் கிளப்பினான்.

"நாணிட்டுக் கொண்டு குஞ்சரமல்லர் செத்துப் போவார்."

"அவ்வளவு பெரிய அவமானமா."

"ஆமாம். நீ போரில் தோற்றுப் புறமுதுகிட்டு ஓடிவருவது போல அத்தனை பெரிய அவமானம்."

"ஐயோ பாவம் குஞ்சரமல்லர்."

"ஏன், திடீரென்று அவர் மீது பாசம்."

"பாசம் ஒன்றுமில்லை. அவர் கழுத்தில் சுருக்கிட்டு தொங்குவது போல ஒரு கற்பனை செய்து பார்த்தேன். கயிறு அறுந்து விழும் என்று தான் எனக்குத் தோன்றுகிறது."

மறுபடியும் மறவர்கள் வாய்விட்டுச் சிரித்தார்கள்.

அவர்கள் சிரிப்பில் ஒரு குரூரம் இருந்தது.

''சிவலிங்கம் நிற்கவில்லையாமே. நிற்க வில்லையென்றால் என்ன ஆகும்.''

ஒரு தளிச்சேரி பெண் இன்னொரு தளிச்சேரிப் பெண்ணைக் கேட்க, ''அதுபற்றி எனக்கென்ன தெரியும். அல்லது நம் கூட்டத்தில் தான் யாருக்கு என்ன தெரியும். அதைப்பற்றியெல்லாம் யோசிப்பதை விட்டுவிட்டு வா. அக்காள் ராஜராஜி சொல்லிக் கொடுத்த அந்த நடனத்தை ஆடு. நமக்கு நம் வேலை முக்கியம். அவர்களுக்கு அவர்கள் வேலை முக்கியம். நாம் அதைப்பற்றி யெல்லாம் பேசிக் கொண்டிருப்பானேன்.

''தவறு செய்துவிட்டோம்.''

''என்ன தவறு செய்துவிட்டோம்.''

சிற்பிகள் புழுங்கினார்கள்.

''சிவலிங்கத்தைக் கீழே இறக்கிவிட்டு பிறகு கலவை ஊற்றி னோம். அப்படிச் செய்திருக்கக் கூடாது. சிவலிங்கத்திற்கு நேர் கீழே கலவை படியவில்லை. சிவலிங்கம் இறக்குவதற்கு முன்பு கலவையை ஊற்றி சிவலிங்கத்தை நன்கு இறக்கிய பிறகு, இடைப் பட்ட வெளியில் இடையறாது கலவையை ஊற்றிக் கொண்டே யிருக்க வேண்டும். அதாவது கலவையை ஊற்றிக் கொண்டே யிருக்கும் போது சிவலிங்கம் தாழ்ந்து கொண்டேயிருக்க வேண்டும். இரண்டு வேலைகளும் ஒன்றாக நடை பெறவேண்டும். சிவலிங்கத்தின் அடிப்பாகத்தில் கலவை போகவேயில்லை. இதுதான் சிவலிங்கம் சரிந்ததற்குண்டான காரணம், சுரண்டி கலவையை வெளியே எடுத்த சிற்பிகள் சொன்னார்கள்.''

''அதெல்லாம் இல்லை. நான் சொல்லட்டுமா. இத்தனை பெரிய சிவலிங்கத்தை இதுவரை நாம் ஸ்தாபித்ததேயில்லை. நமக்கு யாருக்கும் அப்படிப்பட்ட ஒரு அனுபவம் இல்லை. இடுப்புயர சிலைகளையும், ஆளுயர சிலைகளையும் நாம் அடித்திருக்கிறோம். ஆனால், இத்தனை உயரமும், இத்தனை அகலமுள்ள ஒரு சிவலிங்கத்தை நாம் ஸ்தாபிதம் செய்ததில்லை. கலவையில் தவறல்ல கருவறைக் குழியும் சரியாகத்தான் இருக்கின்றது. ஜாக்கிரதையாக செயல்பட்டால் இந்த முறை நிற்கும்.''

யாரோ ஒருவர் சொல்ல மற்றவர்கள் செய்து விடலாம் என்று தொடை தட்டினார்கள்.

''ஆனால், நிற்காது போனால் அவமானம் என்று இன்னொரு வர் சொல்ல திகைத்தார்கள்.''



நிற்குமா... நிற்காதா...

அவர்களுக்குச் சொல்லத் தெரியவில்லை. இந்தக் கேள்விக்குப் பதில் குஞ்சரமல்லராலும் சொல்ல முடியவில்லை. இது இறைவன் அருள் என்று நம்பினார்.

அடுத்த முறையும் நிற்காது போனால் அரசர் முகத்தில் எப்படி விழிப்பது. குணவன் நித்தவினோதப் பெருந்தச்சன் பெரியாளாகப் போய் விடுவானே. வீட்டுப் பின்பக்கத்திலுள்ள புன்னை மரத்தில் தூக்கிவிட்டுச் சாகலாமே தவிர, மறுபடியும் நித்த வினோதப் பெருந்தச்சனை அழைக்கக்கூடாது.

மீண்டும் கலவை காய்ச்சப்பட்டது. மறவர்களுக்கு செயல்திறன் விளக்கப்பட்டது. எப்படி இறக்க வேண்டும் என்று படம் போட்டு காட்டப்பட்டது.

மறவர்கள் முழு ஒத்துழைப்பு தருவதாக உத்திரவாதம் தந்தார்கள்.

''நானும் முக்கியமல்ல. நீங்களும் முக்கியமல்ல. சிவலிங்கம் முக்கியமய்யா. கோயில்தான் முக்கியம் என்று மிகுந்த சந்தோஷத் தோடு முன் வந்தார்கள்.

சிற்பிகளுக்கு நெகிழ்ந்து போயிற்று.

''உங்களுக்கும் எனக்கும் என்னய்யா சண்டை. ஏன் இப்படி நடந்தது.''

சிற்பிகள் மறவர்களை ஆரத்தழுவிக் கொண்டார்கள். மறவர்கள் சிற்பிகளை இறுக்கிக் கொண்டார்கள்.

மறுபடியும் சிவலிங்கம் தாழத்தாழ கலவையை எடுத்துக் கொண்டு உள்ளே ஓடினார்கள். சிவலிங்கம் இறக்க இறக்க கலவையைக் கொட்டிக் கொண்டே இருந்தார்கள். கொதித்துக் கொண்டிருந்த கலவைக்குள் சிவலிங்கம் இறங்கியது. குழிகளில் ஊற்றப்பட்டது.

எல்லோரும் காத்திருந்தார்கள். மறுபடியும் குளிரூட்டப் பட்டது. இம்முறை சிவலிங்கம் இறுகியது.

''நன்றாகக் குளிரட்டும் வெளியே வெப்பம் அதிகமாக இருக்கிறது'' என்று சொன்னார்கள்.

அந்தச் சிவலிங்கத்தின் மீது ஈரத்துணிகளைப் போர்த்தத் துவங் கினார்கள். உலோகம் போக அந்தக் கலவை பற்றிக் கொண்டது.

"கயிறு போட்டு இழுத்தாலும் அசையக்கூடாது. அதுதான் நல்ல ஸ்தாபிதம் என்று அர்த்தம்.'' என்று உரத்த குரலில் குஞ்சரமல்லர் சொன்னார்.

சிவலிங்கத்தைச் சுற்றி கயிறு போட்டு இரண்டு பக்கமும் கைத்துணியைப் பிடித்துக்கொண்டு இழுத்தார்கள். டப்பென்று சத்தம் கேட்டது. கலவை பொடிப்பொடியாயிற்று.

சிவலிங்கம் இப்போது முன்பக்கம் சரிந்தது.

மறவர்கள் ஐயோ... என்று அலறினார்கள்.

அந்தச் சப்தம் வெளியே நின்று கொண்டிருந்த சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவருக்குக் கேட்டது. உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவர் வயிறு கலங்கி வானம் பார்த்தார். கை கூப்பினார்.

இறைவனே, யாரைச் சோதிக்கிறாய். யாரைச் சோதிக்கிறாய்.. யாரைச் சோதிக்கிறாய் என்று அரற்றினார்.

அருண்மொழிப்பட்டனைத் தேடி மூன்று உபதளபதிகள் போய்விட்டார்கள். அருண்மொழிப் பட்டனையும் காணோம். கருவூராரையும் காணோம்.

சிவலிங்க ஸ்தாபிதம் மனித யத்தனத்தினால் நடைபெறுவதல்ல. இறைவனுடைய கருணை வேண்டும். கருவூரார்போல சித்த புருஷருடைய ஆசீர்வாதம் வேண்டும். கருவூரார் இல்லாமல் கலவைக்கு அடுப்பேற்றியது தவறு. கருவூராரை அழைக்காமல் இந்தக் காரியத்தை ஆரம்பித்தது தவறு. குருவே.. என் சத்குருநாதரே.. இங்கு வர வேண்டும். அரசர் உள்ளுக்குள் மனமுருக வேண்டினார்.

போய் விசாரித்தால் சிற்பிகள் கூட்டம் கவலைப்படும். கலவரப்படும் என்று தெரிந்திருந்ததால் எதுவும் பேசாமல் அமைதியாகப் போடப்பட்டிருந்த பந்தலின் கீழ் அமர்ந்து ஆட்கள் வேலை செய்வதைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

காலையிலிருந்து மாலை வரை சில சமயம் இரவில்கூட சக்ரவர்த்தி கோயில் பணி பார்வையிடுவதைப் பார்த்து தொண்டை நாட்டு அந்தணர்கள் குதூகலமானார்கள். அவர் பார்க்க முன்னும், பின்னும் அலைந்தார்கள். பெரிய குரலில் பேசாமல், சன்னமான குரலில் பிரியமாகப் பேசி வேலை வாங்கினார்கள்.

மூல பண்டாரம் திறந்துவிடப்பட்டு அதிலிருந்து பொற்காசுகளும், தானியங்களும், கொடுக்கப் பட்டன. இரவிலும் கிருஷ்ணன்ராமனிடம் கணக்கு சமர்ப்பித்தார்கள். கிருஷ்ணன் ராமன் அதை வாங்கி கண்ணில் ஒற்றிக்கொண்டு மறுபடியும் அவர்களிடம் கொடுத்துவிடுவார். சரியாக இருக்கிறதல்லவா என்று ஒரேயொரு விசாரிப்போடு நிறுத்திவிடுவார். இது மேலும் அவர்களை குதூகலமடையச் செய்தது.



நெல்லை அவித்து குத்தி அரிசியாக்க ஒரு களம் தேர்ந்தெடுத்தார்கள். தானியங்களை நிரப்பி வைக்க இன்னொரு இடம் தேர்ந்தெடுத்தார்கள். இரவோடு இரவாக அரிசியை கூடைகளில் நிரப்பி ரகசியமாய் தங்கள் வீடுகளுக்கும் அனுப்பினார்கள்.

தொண்டை நாட்டிலிருந்து கூட்டம் கூட்டமாக அந்தணர்களின் குடும்பங்கள் வந்து தஞ்சைக்கு அருகே குடியேறின. விசேஷமான பண்டிகைகள் அல்லது அமாவாசை, பௌர்ணமியின் போது போய் தங்குகின்ற தூரத்தில் தங்கள் வீடுகளை வைத்துக் கொண்டார்கள்.

குடமுருட்டியின் ஓரமாகவும், காவிரிக் கரையில் ஓரமாகவும் வீடும், நிலங்களும் வாங்கினார்கள். திருவையாறிலிருந்து கல்லணைக்குப் போகிற பாதையைத் தேர்ந்தெடுத்து அங்குள்ள பல கிராமங்களில் தனியாக அக்ரஹாரம் கட்டி குடியேறினார்கள். கடந்த ஒரு வருடத்தில் வெள்ளைச் சுவரும், ஓலைக்கூரையுமாய் பல அந்தணர் வீடுகள் உருவாகிவிட்டன.

"ஓடு வேய்ந்து கொள்ளக்கூடாதா'' என்று ஒருவனின் தந்தை கேட்க, "வேய்ந்து கொள்ளலாம் அப்பா. உடனடியாகச் செய்ய வேண்டாம். மெல்ல மெல்லச் செய்வோம். உடனடியாகச் செய்தால் அரசாங்கப் பணத்தில் கொள்ளையடித்து சம்பாதிக்கிறேன் என்ற பெயர் வந்துவிடும். ஏழ்மையாக இருப்பதுதான் இப்போதைக்கு நல்லது.'' என்று மகன் மறுத்துவிட்டான்.

இடையறாது பாத்திரம் பண்டங்களும் புடவைத் துணிமணிகளும், வாயார மூன்று வேளை சாப்பிடுவதற்கு ருசியான உணவுவகைகளும் அவர்களுக்குக் கிடைத்துக் கொண்டிருந்தன.

கருவறையிலுள்ள குழியில் உள்ள கலவையைச் சுரண்டி எடுக்க சிற்பிகள் இறங்கியபோது, தான் செய்வதாக நித்தவினோதப் பெருந்தச்சன் முன்வந்தான். சிற்பிகள் அதை பெருந்தச்சரிடம் தெரிவித்தார்கள்.

"அவனை என் கண்படாது வெகுதூரம் போய்விடச் சொல். அதுதான் அவனுக்கு நல்லது. என்னால் முடியாத காரியம் அவனால் முடியும் என்று செய்வதற்கு பரபரக்கிறான் அதற்கு நான் ஆளில்லை. நான் உயிரைவிட்ட பிறகு அவன வந்து சிவலிங்கஸ்

தாபிதம் செய்யச் சொல். ஆனால், என் உயிர் போவதற்கு முன்பு சிவலிங்க ஸ்தாபிதம் ஆகும் என்பதையும் அவனிடம் சொல்.''

உரத்த குரலில் சூளுரைத்தார்.

குணவன் மனம் நொந்தான். சீருடையாள் அவனை அணைத்துக் கொண்டு தேற்றினாள்.

''எதற்கு இங்கே இருக்க வேண்டும். போய் விடலாமே. உங்களிடம் வேலை இருக்கிறது. வேறு ஏதேனும் ஒரு இடத்தில் சிறிய சிறிய வேலைகள் செய்து பிழைத்துக் கொள்ளலாமே. ஒரு நாளைக்கு ஒரு கலம் நெல் நீங்கள் சம்பாதித்தால் போதும் நான் அருமையாக குடித்தனம் செய்வேன். உங்களைக் குதூகலமாக இருக்க வைப்பேன்.'' என்று ஆறுதல் சொன்னாள்.

மறுபடியும் பாணலிங்கம் உயர்த்தப்பட்டது. கலவை சுரண்டி எடுக்கப்பட்டது. இடைவெளி இன்னும் அதிகப்படுத்தப்பட்டது. கலவைகளை வாரி வெகுதூரம் எடுத்துப் போய் மண்ணில் புதைத்து வைத்தார்கள். மறுபடியும் சரியான விதைகளையும், தரமான குங்கிலியத்தையும் வேறு பொருட்களையும் கலந்து கலவைக்குக் காத்திருந்தார்கள்.

ஜோதிடர்கள் இன்று வேண்டாம். நாளை வேண்டாம் என்று நாட்களைத் தள்ளிப்போட்டுக் கொண்டிருக்க, பிரம்மராயர் பதினாறு பேர் கொண்ட சிறு படையை கடற்கரையோர கிராமங்களுக்கு கருவூர்த்தேவரைத் தேடும்படி அனுப்பினார். படை அனுப்பிய மறுநாள் கருவூர்த்தேவரும், அருண்மொழிப்பட்டனும் தஞ்சை நோக்கி நடந்து வந்து கொண்டிருப்பதாகச் செய்தி வந்தது.

அருண்மொழிப் பட்டனின் குதிரையில் இரண்டு மூட்டையில் விதம்விதமாக மூலிகைச் செடிகள் தொங்குவதாகவும் சொல்லப் பட்டது. சட்டென்று ஆறேழு குதிரைகளை அனுப்பி அவர்களை குதிரையில் வர கிருஷ்ணன்ராமன் ஏற்பாடு செய்த போது, அவை எல்லாவற்றையும் புறக்கணித்துவிட்டு கருவூர்த்தேவரும், அருண்மொழிப்பட்டனும் சிரித்துப் பேசியபடி நடந்து வரவே விரும்புவதாக செய்தி வந்தது. சக்ரவர்த்தி சந்தோஷமானார்.

''வருகிறபடி வரட்டும். நம்மால் அவரை வளைக்க முடியாது.'' என்று சக்கரவர்த்தி சேனாபதி கிருஷ்ணன்ராமனைச் சமாதானப் படுத்தினார்.

கருவூர்த்தேவர் வந்தவுடன் அந்தக் கோயில் கட்டும் பூமியை விழுந்து வணங்கினார். மெல்ல ஒரு சுற்று சுற்றத் துவங்கினார்.



வலமாகச் சுற்றி கருவறைப் பக்கம் வருகிறபோது, நித்தவினோதப் பெருந்தச்சன் குணவனைப் பார்த்து ஒரு ஹுங்காரம் செய்தார்.

''தனியே உட்கார்ந்து கோயில்கட்டிக் கொண்டிருக்கிறாயா. செய்... செய்... மனிதனாகப் பிறந்து விட்டால் ஏதேனும் செய்து தானே ஆக வேண்டும்.'' உரத்த குரலில் அவனைப் பார்த்துச் சொல்லி வாய்விட்டுச் சிரித்தார். நகர்ந்து மேடு ஏறி மருந்துக் கலவை காய்ச்சும் இடத்திற்கு வந்தார். கொண்டு வந்த பொருட்களை பெரிய பாய் விரித்துக் கொட்டச் சொல்லி அதிலிருந்து விதைகளையும் மரங்களின் பட்டைகளையும் எடுத்து பொடிப் பொடியாக அரைக்கச் சொன்னார். தனியே இருந்த மற்ற பொருட்களோடு கரைக்கச் சொன்னார்.

பஞ்சவன்மாதேவியை அருகே அழைத்தார். நெய் தீபம் ஏற்றச் சொன்னார். ஏற்றிய நெய் தீபத்தை பாத்திரத்தின் அடியில் வைத்து பற்ற வைக்கச் சொன்னார். ஓலைகளும், சருகுகளும் எரிய, பிறகு மூங்கில் குச்சிகள் எரிய, பிறகு பெரும் பனந்துண்டங்கள் சொருகப் பட்டன.

''அவரவர் செய்ய வேண்டிய காரியத்தை அவரவரர் தான் செய்ய வேண்டும். பெண் செய்ய வேண்டிய காரியத்தை ஆண் செய்யக்கூடாது. ஆண் செய்ய வேண்டிய காரியத்தை பெண் செய்யக்கூடாது.'' என்று உரக்கச் சொல்ல, சிற்பிகளுக்கு தாங்களே அடுப்பு பற்ற வைத்தது தவறு என்பது புரிந்தது. கலவை கொதிக்கத் துவங்கியது.

கருவூர்த்தேவர் உள்ளும், புறமும் அலைந்தார். கருவறைக் குழியில் இறங்கி சோதித்துப் பார்த்தார்.

சிவலிங்கத்தின் அடிப்பகுதியை உளியில் பொறிக்கச் சொன்னார் நாற்சதுர பீடத்தையும் எண்கோணப் பீடத்தையும் இன்னும் பொறிக்க சொன்னார். எப்படிக் கயிறு பிடிக்கிறாய் என்று ஒவ்வொருவரையும் விளக்கொளியில் விசாரித்தார். பெயர் கேட்டார்.

''மறவர்கள் மட்டும் பிடித்தால் எப்படி. மற்றவர்களும் வர வேண்டும். வணிகர்களை வரச்சொல். வேளாளர்களை வரச் சொல். அந்தணர்களையும் வரச்சொல். தொண்டை நாட்டு அந்தணர்களெல்லாம் வலிமையோடு இருக்கிறார்களே. அவர்களையும் உள்ளே கூப்பிடு.

மறவர்கள் மூன்று பேர் முதலில் இருக்கட்டும். அடுத்தபடி மற்றவர்கள் இருக்கட்டும். கடைசியில் அந்தணர்கள் இருக்கட்டும்

கருவூர்த்தேவர் கீழே குதித்தார். சுற்றி வந்தார்.

என் சிவனே... என் சிவனே... இங்கு இருமய்யா. இங்கு இரும்... இங்கு இரும்... என ஐயனே. இங்கு இரும்.. என்னை விட்டுப் போகாதேயும் என்று அந்தக் கருவறையைச் சுற்றிச்சுற்றி ஓடி வந்தார்.

பாணலிங்கம் சட்டென்று நான்கு விரற்கடை அளவுக்கு உள்ளுக்குள் இறங்கியது.

ஆஹா... என்று பெருந்தச்சர் வாய்விட்டுக் கத்தினார். நின்று விட்டது. நின்றுவிட்டது. நின்றுவிட்டது என்றார்.

அச்சமயத்தில் முகத்தை மூடிக் கொண்டிருந்தவர்கள் எல்லோரும் மெல்ல விடுவித்தார்கள். சக்ரவர்த்தியும் அங்கு நிற்பதைப் பார்த்து பரவசமானார்கள். அவரும் தோள் தூக்கி வந்திருக்கிறார் என்று தெரிந்து குதூகலமடைந்தார்கள்.

''சோழம்... சோழம்... சோழம்...'' என்று கத்தினார்கள்.

ஓம் நமசிவாய... ஓம் நம சிவாய... என்று உடையார் ஸ்ரீ இராஜ ராஜத்தேவர் குரல் கொடுக்க, எல்லோரும் அந்தக் குரலை எதிரொலித்தார்கள்.

அந்த இடம் முழுவதும் சப்தத்தால் அதிர்ந்தது. பெருந்தச்சர் கவலையோடு உச்சியைப் பார்த்தார்.

சப்தம் உச்சிக்கூரையைப் பிளந்தது.

''குஞ்சரமல்லா... இனி எத்தனை யானை கட்டி இழுத்தாலும் இந்த பாணலிங்கம் அசையாது.'' என்று கருவூர்த்தேவர் சொன்னார்.

கயிறு கட்டி பாணலிங்கத்தை அசைத்துப் பார்த்தார்கள். பாணலிங்கம் கல்லோடு கல்லானது போல இறுக்கமாய் நின்றது. வேகமாக ஆவுடையாரை அண்டக் கொடுத்தார்கள். வேறுவித மான கலவைக் குழம்பு கொண்டு வரப்பட்டது. ஆவுடையார் இறுக்கப் பட்டது. இறுக்கிக் கட்டப்பட்டது. இறுக்கக் கட்டிய கயிற்றின் மீது வெள்ளைத்துணி போர்த்தப்பட்டது.

சக்ரவர்த்தி உடையாரை அழைத்துக் கொண்டு கருவூர்த் தேவர் வெளியே வந்தார்.

''இராஜராஜா உன்னால்தான் இது நடந்தது. எப்பொழுது எந்தவிதமான கம்பீரமும் இல்லாமல் சாதாரணமாக தூக்குச் சட்டிக்கு தோள் கொடுத்து வந்தாயோ அப்பொழுதே இறைவன் இங்கு வந்து விட்டான். எப்போது எல்லா மக்களும் இதில் பங்கு



பெற்றுவிட்டார்களோ அப்பொழுதே இங்கு இறை சாந்நித்யம் வந்துவிட்டது.''

''இல்லை குருநாதா. இது உங்களால் நிகழ்ந்தது.''

''இல்லவே இல்லை. நான் எந்த வேலையும் செய்யவில்லை. இங்கு செய்தது அனைத்தும் இறைவன். மிகப்பெரிய நாடகமாடி யிருக்கிறான். உன்னையும், உன் மனைவியரையும், இந்த தஞ்சை நகரத்து மக்களையும் ஒன்றாக இணைத்திருக்கிறான்.

இராஜராஜா இன்னொரு வேலையும் செய்யவேண்டும். எப்பொழுது உள்ளுக்குள் சிவலிங்கம் ஸ்தாபிதமாகிவிட்டதோ, பிறகு வெகுநாள் சிவலிங்கம் பூஜையின்றி இருக்கக்கூடாது. எனவே, இந்த விமானத்தைச் சுற்றியுள்ள மண் மேட்டை விரை வாக அகற்றுகின்ற பணியில் சகலரையும் ஈடுபடுத்து.

சுற்றுப்புறம் முழுக்க இருக்கிற கிராமங்களிலிருந்தும் மக்கள் வரவேண்டும். இன்னும் பெரிய அளவில் பணி நடைபெற வேண் டும். பதினைந்து இருபது நாட்களுக்குள் இந்த மண்மேட்டை அகற்றி விமானத்தைப் பார்க்க வேண்டும். எல்லோரையும் ஈடுபடுத்து. எல்லோருக்கும் வேலை கொடு எல்லோரும் ஒற்றுமை யாகக் கைகோர்த்து இந்த மண் மேட்டை அகற்றட்டும். கருவூரானுக்கு வேறு வேலை இருக்கிறது. குடமுழுக்கின்போது நான் வந்து கலந்து கொள்வேன். கவலை வேண்டாம்.''

சொல்லிவிட்டு மறுபடியும் அவர் கிழக்கு நோக்கி நடக்கத் துவங்கினார். போகும்போது மறவர்களோடு விளையாட்டாய் சண்டையிட்டார். குழந்தைகளைத் தூக்கிக் கொஞ்சினார். அங் குள்ள படலைத் தாண்டும்போது அங்கு நின்றிருந்த நித்தவினோதப் பெருந்தச்சன் குணவனைப் பார்த்து மறுபடியும் சீறினார்.

''நீ இல்லாமலேயே உள்வேலை முடிந்து விட்டது. நீ இல்லாம லேயே வெளி வேலையும் முடியும். மற்றவையும் நடக்கும். எனவே நீ போய் வரலாம். போய் வா..'' என்று கேலியாகப் பேசினார்.

சுற்றியுள்ளோர் வாய்விட்டுச் சிரித்தார்கள்.

நித்தவினோதப் பெருந்தச்சன் மனம் குன்றினான். அந்த இடத்தைவிட்டு வேகமாக நகர்ந்தான். அவன் நடந்து போன வேகம் அதிகம் காயம்பட்டுவிட்டான் என்று மற்றவருக்குக் காட்டியது. ஆனால், அதுபற்றி யாரும் அதிகமாக அலட்டிக் கொள்ளவில்லை.

நித்தவினோதப் பெருந்தச்சன் இல்லாவிட்டால் என்ன என்ற நினைப்பில் மற்ற வேலைகளைக் கவனிக்கத் துவங்கினார்கள். மிகச்சிறந்த சிற்பி தினம் தினம் விதம்விதமாய் புதியன கண்டு பிடித்துக் கொண்டிருந்தவன் சாதாரணன் ஆனான்.

''மண் மேடு அகற்றுவது எப்படி.''

இப்போது பெருந்தச்சர் அரண்மனை மண்டபத்தில் அமர்ந்து பிரம்மராயரோடும், மற்ற சிற்பிகளோடும், ஆலோசனை நடத்தத் துவங்கினார்.

சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவர் வந்ததும் எல்லோரும் எழுந்து நின்றார்கள்.

''தஞ்சையைச் சேர்ந்த, தஞ்சையின் சுற்றுப் புறத்தில் இருக்கின்ற கிராமங்களைச் சேர்ந்த அத்தனை மனிதர்களும் கோயில் பணிக்கு வரவேண்டுமென்று முரசு அறிவித்துவிடுங்கள். சற்றுத் தொலை தூரத்திலுள்ள இளைஞர்கள்கூட வரலாம்.

கருவூர்த்தேவர் உத்தரவிட்டது போல சிறுகச் சிறுக ஏழு வருடமாகக் கட்டிய இந்த மண்மேடு. பதினைந்து நாட்களுக்குள் வேறு பக்கம் கொண்டு போய் கொட்டப்பட வேண்டும். நாலா திக்கிலும் இந்த மண்வண்டிகள் நகரவேண்டும். மண் வண்டிகள் எப்படிப் போக வேண்டும். எப்படி வரவேண்டும் என்று தீர்மானம் செய்யுங்கள். தனித்த பாதை போடுங்கள். அப்படி மண் கொட்டப்பட்ட இடம் என்னவாக இருக்கும் என்பதை யோசனை செய்யுங்கள். பிற்பாடு மண்மேடு குறித்து நாம் வருத்தப்படக் கூடாது.''

''ஒரேயொரு திசையில் மண்மேடு இருப்பது நன்றாக இருக்கும்.''

''நாலாபுறமும், நாலா திசையிலும் மண்மேடு இருந்தால்..''

''இல்லை. இதன் மேற்குப் பகுதி வறட்சியானது. வடக்குப் பகுதி நகரம் இருப்பது. கிழக்குப் பகுதி வண்டல் பகுதி நிறைந்தது. தெற்குப்பகுதி நார்த்தாமலைக்கான போக்குவரத்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. போக்குவரத்தை ஒருக்காலும் இடையூறு செய்ய முடியாது.

கிழக்கேயோ, மேற்கேயோ, தெற்கேயோ, வடக்கேயோ எப்படி மண்ணை எடுத்தாலும் அது தலைச்சுமையாகத் தூக்கிக் கொண்டு வந்து, அங்கு வரிசையாக நிற்கின்ற மாட்டு வண்டிகள் மீது கொட்டப்பட வேண்டும்.



ஆயிரக்கணக்கான கூடைகள் வேண்டும். மண்வெட்டிகள் வேண்டும். யானைகள் மீதும் மாடுகள் மீதும் கூடைகள் வைத்து மண் எடுக்கப்படவேண்டும். யானைகள் ஒரு பக்கம் போனால் அம்மாதிரி குதிரைகளும், மாடுகளும் வேறுபக்கம் போக வேண்டும்.''

''மண் எடுப்பதில் சிற்பிகளின் பங்கு என்ன''

''எதுவுமில்லை. மேற்பார்வை. மண் எடுத்த இடத்தில் இருக்கின்ற கற்சிலைகளை அந்த முனைகளை, கொடுங்கைகளை உத்திரக் கட்டைகளை, பத்மவரிகளைச் சுத்தம் செய்வதே அவர்களுக்குச் சரியாக இருக்கும். வெளியே தளம் அமைப்பதற்கு உண்டான சதுரக்கற்கள் அமைக்கப்பட வேண்டும்.

துவாரபாலகர்கள் சிலைகள், உள் பிரகாரகோஷ்டத்தில் உள்ள சிலைகள் செய்யப்பட வேண்டும். கோயிலைச்சுற்றி எட்டுவித மான தேவதைகள் பிரதிஷ்டை செய்யப்பட வேண்டும். மண் எடுக்கிற வேலையை நம்மில் யாரும் செய்யலாம். ஆனால், சிற்பி வேலையை அவர்கள் தான் செய்ய வேண்டும். எனவே, அவர்கள் வேலைக்கு எந்த இடைஞ்சலும் இல்லாமல் அவர்களை இந்த வேலையில் ஈடுபடுத்தாமல் நாம்தான் இந்த வேலைகளைச் செய்ய வேண்டும்.

''இத்தனை பேருக்கும் உண்டான உணவுக்கு என்ன செய்யப் போகிறோம்.''

''இப்போதைக்கு அரண்மனைக் களஞ்சியத்தில் நெல் இருக்கிறது. குடந்தையிலிருந்தும் பழையாறையிலிருந்தும், நாகையிலிருந்தும் நெல் வண்டிகள் வரச்செய்யலாம். இதற்கு அப்பால் மதுரையிலிருந்தும் நெல் வந்தால்தான் நெல்விலை நிலவரம் அமைதியாக இருக்கும்.''

''தொண்டை நாட்டிலிருந்தும், பாண்டியநாட்டிலிருந்தும் நெல் வரத்தை இப்போதே துவங்க வேண்டும். அங்குள்ள வணிகர்களுக்கு ஓலை அனுப்பி அவர்களே வண்டி தயாரித்து நமக்கு நெல் அனுப்புமாறு நீங்கள் உத்தரவிட வேண்டும். தானியங்களும் அனுப்ப வேண்டும். இறைபணி என்று சொல்ல வேண்டும்.''

''அப்படியே உத்தரவிடலாம். எல்லா ஓலைகளிலும் என் முத்திரையும், என் எழுத்தும் இருக்கட்டும். வேறு என்னென்ன தேவை.''

''மண்வெட்டிகள், கூடைகள், ஆடைகள்.''

''ஆடைகளா யாருக்கு.''

''எல்லா மறவர்களிடமும் அனேகமாக மூன்று நான்கு உடைகள்தான் இருக்கும். இப்படி மண்ணில் வேலை செய்தால் அந்த ஆடைகள் வெகு எளிதில் கிழிந்து போகும். அழுக்காகும். எத்தனை தோய்த்தாலும் சரியாக வராது. எனவே பத்துப் பதினைந்து நாட்களில் தஞ்சை நோக்கி ஆடைகள் வந்தால் நன்றாக இருக்கும். அந்த ஆடைகளை நாம் வாங்கி மலிவான விலையில் விற்க வேண்டும்.''

''மிக அற்புதமான யோசனை பிரம்மராயரே.''

அரசர் எழுந்திருந்து பிரம்மராயரை மெல்ல அணைத்துக் கொண்டார்.

''வேறு என்ன தேவை.''

''மருத்துவ உதவி.''

''என்ன மருத்துவ உதவி.''

''மண் தூசு படர்ந்து அனேகமாக எல்லாருடைய நுரையீரலும் கெட்டுவிட வாய்ப்பிருக்கிறது. மண்ணோடு மனிதர்கள் சரிந்து புதையவும் வாய்ப்பு இருக்கிறது. எனவே விளையாட்டுத் தனமாக எவர் முன் பின்னே முட்டிக்கொண்டு போனாலும், அவர்களை அதட்டி உருட்டி அமைதியாக இருக்கச் செய்யவேண்டும். தஞ்சையைச் சுற்றியிருக்கின்ற கிராமங்களிலிருந்து இளைஞர்கள் வருவார்கள். சில சமயம் அவர்கள் முட்டாள்தனமாக வேலை செய்வார்கள். அவர்களிடம் மிகக் கடுமையாகவும் நடந்து கொள்ள வேண்டியிருக்கும். எனக்கு இந்தக் கவலையுடன் உணவு வகைகள் தயார் செய்வதிலும் கவலைகள் இருக்கின்றன. வெறுமே அரிசிச் சோறைப் பொங்கிப் போட்டு உப்புச்சப்பில்லாத குழம்பு ஊற்றி 'இவ்வளவுதான்... முடிந்தால் தின்னு' என்று சொல்லி விடுவார்களோ என்ற பயம் இருக்கிறது.''

''ஆமாம், அந்தத் தவறும் ஏற்படக்கூடாது. அன்னக்குற்றம்.. மகாகுற்றம்.''

இராஜேந்திரசோழர் சட்டென்று நிமிர்ந்தார்.

''தொண்டை நாட்டு அந்தணர்களை அழைத்து உணவு பொங்கிப் போடுதலை அவர்கள் தலையில் சுமத்தினால் என்ன? தவறு நேர்ந்தால் முதுகைப் பிளந்து விடுவேன் என்று சொன்னால் என்ன.''



''ஆஹா... முதுகு பிளப்பதிலேயே இரு இராஜேந்திரா. வேலை நடந்தால்போலத்தான்.''

சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவர் அலுத்துக் கொண்டார்.

''சரி உங்கள் இஷ்டம்போல் செய்து கொள்ளுங்கள்.'' மறுபடியும் இளவரசர் இராஜேந்திரர் ஆசனத்தில் சரிந்து அமர்ந்து கொண்டார். சற்று நேரம் வேண்டாத விசித்திர அமைதி ஒன்று அங்கு நிலவியது.

''தொண்டை நாட்டு இளைஞர்களிடம் நான் வேலை வாங்கிக் கொள்கிறேன். வேலை மிகத் திருத்தமாக இருக்க வேண்டுமென்றால் தொண்டை தேசத்து அந்தணர்கள்தான் சரி. மிகப் பொறுப்பாகவும் இருப்பார்கள்.''

''எதில்.. மேற்பார்வையிடுவதிலா, உணவு தயார் செய்வதிலா.''

''உணவு தயார் செய்வதையே தொண்டை தேசத்து அந்தணர்கள் செய்யும்படியாக நான் சொல்லப் போகிறேன்.'' அருண்மொழிப்பட்டன் தீர்மானமாகப் பேசினான்.

''அந்த அந்தணர்கள் செய்வது மரக்கறி உணவு தான். மாமிச உணவு அல்ல. காய்கறி பதார்த்தங்கள் தான் அந்த அந்தணர்களுக்கு வீட்டில் சமைத்துப் பழக்கமுண்டு. மறவர்கள் பலருக்குப் பழக்கமில்லை.''

''தனியாக வீட்டில் சமைப்பதும், ஆயிரமாயிரம் பேருக்கு சமைப்பதும் ஒன்றா.''

''முதல் சில நாட்கள் தடுமாறும் பிறகு சரியாகி விடும். தொண்டைநாடு அந்தணர்கள் கெட்டிக்காரர்கள். மிக சாமர்த்தியமாக இயங்குவதற்குண்டான தைரியம் உள்ளவர்கள்.''

''கணக்கு வழக்குகளில் ஈடுபடுபவர்களையே மறுபடியும் திசைமாற்றி சமையலுக்கு அனுப்புகிறோமே.''

''வாழ்க்கை மொத்தமும் சமையலா செய்து கொண்டிருக்கப் போகிறார்கள். கொஞ்ச நாட்கள் தானே சமயைல். பிறகு மறுபடியும் கணக்கு வழக்குக்குத் திரும்பிவிடலாம்.'' அருண்மொழிப் பட்டன் எழுந்து நின்று பேசினான்.

''பதினைந்து நாட்கள் என்று நாம் திட்ட மிட்டிருக்கிறோம். ஒரு மாதம் ஆகும். இடையிடையே ஓய்வு தேவைப்படும். ஓய்வு நாட்களிலும் உணவு தேவைப்படும். என்னுடைய கவலையெல்லாம் அடுத்த ஆறு மாதத்திற்கு உணவுக்கு எங்கே போவது

என்பதுதான். கோயில் வேலைகள் சரியாக நடைபெற வேண்டுமே என்ற கவலைதான் அதிகமாக இருக்கிறது.'' பிரம்மராயர் பேசினார். சபை மௌனமாக இருந்தது.

''அதேநேரம் மேலைச்சாளுக்கியத்திலிருந்து எந்தவித இடையூறும் வரக்கூடாது என்பது என்னுடைய விருப்பம். இது ஒற்றர்களை வைத்து அறிய வேண்டிய விஷயம்.'' இளவரசர் இராஜேந்திரர் பேச, சபை அவரை மௌனமாகத் திரும்பிப்பார்த்தது.

எல்லா மனதிலும் அந்தக் கவலை இருந்ததை அவரவர் முகத்திலும் தெள்ளத் தெளிவாகக் காண முடிந்தது.

''அதைவிடப் பெரிய கவலை என்னுள் இருக்கிறது.'' பழுவேட்டரையர் பேசத் துவங்கினார்.

''கடற்கரை ஓரம் உள்ள கிராமங்களில் நீளப்படகுகள் வந்து இறங்குகின்றன என்றும், சிறுசிறு குழுவாக ஈழ தேசத்திலிருந்து பரதவர்கள் உடைகளில் ஆட்கள் இறங்குகின்றார்கள் என்றும், சதுப்பு நிலப் பகுதிகளில் படகுகளை நிறுத்திவிட்டு, நீண்ட கயிறு பிடித்து நான்கு பேர், ஐந்து பேராக சதுப்பு நிலப்பகுதியைத் தாண்டி வந்து விடுகிறார்கள் என்றும் சொல்லப்படுகிறது. பாண்டிய தேசம் போலவோ, சேரதேசம் போலவோ, கங்கதேசம் போலவோ, ரெட்டைப்பாடி போலவோ, ஈழதேசம் இல்லை. ஈழத்தில் படையெடுப்பு நடந்து அதிகநாள் ஆயிற்று.

அடுத்த தலைமுறை விழித்துக் கொண்டுவிட்டது. மறுபடியும் ஆயுதம் தரித்த ஆட்கள் நடமாட்டம் அதிகரித்துவிட்டது. போர்ப் பயிற்சிகள் ரகசியமாக காடுகளில் நடை பெறுகின்றன. மீண்டும் ஓர் படையெடுப்பு இருக்கலாம். சிறுசிறு தொந்தரவுகள் செய்யலாம். இம்மாதிரியான நடமாட்டத்திற்கு புத்தபிட்சுகள் துணையிருக்கிறார்கள் என்ற பேச்சும் இருக்கிறது.

புத்தபிட்சுக்களுக்கு நாம் இவ்வளவு உயரமாக, அற்புதமாக ஒரு சிவன் கோயில் கட்டுவது சந்தோஷமாக இல்லை. நாமும் புத்த குருமார்களை மதிப்பதில்லை. அதேநேரம் படையெடுத்துப் போவதற்குண்டான நேரமும் இது அல்ல.

மேலைச்சாளுக்கியத்தில் தோற்றதால் ஈழவர்களோடு சேர தேசத்து நம்பூதிரிகள் கைகோர்த்திருப்பார்களோ என்ற ஒரு எண்ணம் இருக்கிறது. அவர்கள் ஊடுருவியிருக்கக்கூடும். தஞ்சை முழுவதும் பரவியிருக்கக்கூடும். அரசரையும், அரச குடும்பத்தினரையும் பாதுகாப்பாக வைப்பது இப்போது மிகப் பெரிய பிரச்சினையாக இருக்குமென்று எனக்குத் தோன்றுகிறது. இந்தக்



கட்டிடப் பணியில் அரசர் விலகி நின்று கவனித்தால் போதுமானது.''

பழுவேட்டரையர் பேசி முடித்ததும் எல்லோரும் அடா.. அடா.. என்று விதம்விதமாக தங்கள் கவலைக் குரல்களை வெளிப்படுத்தினார்கள்.

சக்ரவர்த்தி உடையார் எழுந்து நின்றார். மெல்ல அரைவட்டமாய் அமர்ந்திருந்தவர்களைச் சுற்றி வந்தார். விலகிப் போய் நின்று கொண்டார். பேசத்துவங்கினார்.

''உங்களுடைய அன்பான ஆதரவும், இறைவன் துணையும் இருக்கும்போது எனக்கு எந்த வேலையும் கடினமில்லை என்று தெள்ளத் தெளிவாகத் தெரிகிறது. உங்கள் ஒவ்வொருவரின் தனித்த அக்கறையும் சோழதேசத்தின் மேலுள்ள காதலும் நான் இன்னும் அதிகமாகப் புரிந்துகொள்கிறேன். பழுவேட்டரையர் சொன்ன விஷயம் என் காதிற்கும் வந்தது. பாண்டியனின் ஆபத்துதவிகள் நம்முடைய வீரர்களோடு கலந்து எனக்கு ஊறு செய்து விடுவார்களோ என்று பயப்படுகிறார்.

வேலியை இன்னும் உயரமாகத் தூக்கி கோயில் பணி நடக்கின்ற இடங்களைச் சுற்றி கட்டிவிட்டு கோயில் பணி செய்வதற்கு யார் உள்ளே வருகிறார்களோ அவர்களை மிகக் கவனமாகச் சோதித்து கோயில்பணி நடக்குமிடம் நோக்கி உள்ளே விட வேண்டும்.

கோயில் பணி முடித்து வெளியே போகும் போதும் மிகக் கவனமாகச் சோதனையிட வேண்டும் குறிப்பாக திருவாரூரிலிருந்து நூற்றைம்பது இளைஞர்கள் வருகிறார்கள் என்றால் அந்தத் திருவாரூர்த் தலைமை நம்முடைய மெய்க்காப்பாளருக்கு அருகே நின்று ஒவ்வொருவரையும் அடையாளம் காட்டி உள்ளேவிட வேண்டும். வேலை செய்பவர்கள் இடம் விட்டு இடம் பெயரால் குழுக்குழுவாக இருப்பதற்கும். ஒரே குழுவாக வெளியே போவதற்கும் கட்டளையிட வேண்டும். இதை மீறியும் ஆபத்து வந்தால், அதை இறைவனுடைய ஆணை என்றுதான் நான் எடுத்துக் கொள்வேன்.

மண் கூடை மாற்றுகின்ற இடத்தில் வேலி இருக்கும். வேலிக்கு இடை வழியேதான் மண் கூடை தரப்படும். எனவே, நான் வேலையாட்களோடு நெருக்கமாய் இருப்பது தடுக்கப்படக் கூடாது. இந்த நேரத்திலும் நான் மேடையில் நின்று வேலை வாங்கிக் கொண்டிருந்தால் இங்கு வேலை சரியாக ஆகாது. நான் கீழிறங்கி

ஒவ்வொருவரையும் பாராட்டுகிறேன் என்றால் மக்கள் வெறி பிடித்ததுபோல் வேலை செய்வார்கள். எனவே, என் பாதுகாப்பை விட இந்தக் கோயில் பணி முக்கியம். தயவு செய்து தடுக்க வேண்டாம்.

அந்தணர்கள் உணவு செய்வதைப்பற்றி எனக்கு ஆட்சேபணை இல்லை. ஆனால் நெல் வரத்து ஒருபோதும் தங்கிவிடாது. தொண்டை நாட்டின் எல்லாப் பகுதிகளுக்கும் ஏன், கங்கதேசத் திற்கும், பாண்டிய தேசத்திற்கும் இப்பொழுதே ஓலை அனுப் பினால் நெல் அழகாக வந்துசேரும். வெறும் ஆட்களை மட்டும் வேலைக்கு அனுப்பாமல் வேண்டுமென்ற நெல் கொடுத்து அனுப்ப வேண்டுமென்றும் உத்தரவிடுகிறேன்.

வேலை முடிந்து தஞ்சையை விட்டு வெளியேறும் போது வேறு இடங்களில் மாமிச உணவு தயார் செய்யச் சொல்லுங்கள். வெளி யூர்களிலிருந்தும் வரும் ஆட்களோடு வைத்தியர்களும் வர வேண்டும். மண் சரிவைத் தடுக்க மிகக் கவனமாக வேலை செய் வது ஒன்றே வழி. அதிகம் ஆட்டம் ஆடக்கூடாது. ஆடுபவர்களை எச்சரிக்க வேண்டும் அல்லது அப்புறப்படுத்திவிட வேண்டும்.''

சக்ரவர்த்தி தெளிவாகப் பேசினார்.

''இந்த நேரம் மது அருந்தக்கூடாது என்று சொல்லி விட்டீர் களே. இரவு நேரம் மது அருந்த வேண்டிய ஆவல் பலருக்கு இருக்கலாம்.''

''கூடாது. தஞ்சை எல்லைக்குள் எந்தக் காரணம் கொண்டும் எவராயினும் மது அருந்தக்கூடாது. மது அருந்தித்தான் ஆக வேண்டும் என்பவர்கள் கோயில் பணிக்கு வரவேண்டாம்.''

மீண்டும் சக்ரவர்த்தி சொல்ல சபை ஆமோதித்தது.

''அடுத்த ஆறு மாதத்திற்கு நெல் பற்றி எனக்கு எந்தக் குழப்ப மும் இல்லை. வெளியூர் ஆட்கள் நெல்லோடு வந்து இங்கே உண்டு விட்டுப் போகப் போகிறார்கள். அரிசி புடைக்கவும், சலிக்கவும் அரிசியாக மாற்றவும் அவர்களோடு பெண்களும் வரலாம். இதை தனித்த விதமாய் வெளியூர் மக்களுக்குச் சொல்லி விடுங்கள்.''

''தொண்டை நாட்டிலிருந்து அவ்வளவு தொலைவு பெண்கள் வரவேண்டுமா.''

''இல்லை. அருகேயிருக்கின்ற கிராமங்கள், நகரங்களுக்கு மட்டும் இது பொருந்தும். வேறு ஏதேனும் கேள்விகள் இருக்கின்ற னவா.''



''இல்லை.''

''இந்தச் சபை அளவுக்கு அதிகமாக என்னுடைய பாதுகாப்பு பற்றிக் கவலைப்படுகிறது. இந்த நகரத்தின் பாதுகாப்புப் பற்றி கொஞ்சம் கூடுதலாகவே கவலை கொள்கிறது. நான் அந்தக் கவலையை மதிக்கிறேன். ஆனாலும், நாம் செய்வது இறைவன் பணி. நம்மைச்சுற்றி எதிரிகள் இருக்கிறார்கள். என்பதையும் நான் அறிவேன். அந்த எதிரிகளிடமிருந்து நான் சத்தியசீலனாக இருப்பின் என்னை இறைவன் காப்பாற்றுவான். அது தவிர என் பாதுகாப்புக்கு என்னைச்சுற்றி எப்பொழுதும், எனக்கும் பிரிய மானவர்கள் இருக்கிறார்கள். என்பதை அறிவேன். அவர்களைத் தாண்டி எவரும், எதுவும் செய்துவிட முடியாது என்பது என் கருத்து. எனவே முழு வீச்சில் கோயில் பணிகளைச் செய்வதற்கு துவங்குங்கள்.'' என்று சக்ரவர்த்தி சொல்ல, சபை எழுந்து நின்று அவருக்கு வணக்கம் சொல்லி மெல்லக்கலைந்தது. அரண்மனை யின் மேல் மாடத்திலிருந்து பஞ்சவன்மாதேவி இறங்கி வந்தாள்.

''பட்டமகிஷியும், உங்கள் மற்ற துணைவிகளும் தங்களுக்கு என்னென்ன வேலை என்று கேட்டுவரச் சொன்னார்கள். நிச்சய மாக வேலை கொடுத்தே ஆகவேண்டும் என்கிறார்கள்.''

''தாராளமாக வேலை செய்யலாம். எல்லோரையும் பகல் வேளையில் குடிப்பதற்கு மோர் தயார் செய்யச் சொல். புளிப்பில் லாத இனிப்பான மோர். இதை அனைவருக்கும் கொடுக்க வேண்டியது அரண்மனைப் பெண்டிரின் வேலை.''

''எனக்கென்ன வேலை.''

''என்னோடு இருப்பது. எப்போதும்... மரண பரியந்தமும்...'' பஞ்சவன்மாதேவியை அவர் இழுத்து அணைத்துக் கொண்டார்.

''அட... இந்த நேரத்தில் போய் மரணம் அது, இது என்று ஏன் பேசுகிறீர்கள்.'' பஞ்சவன்மாதேவி அவரை ஆரத்தழுவிக் கொண்டாள்.

''எனக்கு வயதாகிவிட்டது பஞ்சவன்மாதேவி. ஆனாலும், உன்மீது இருக்கின்ற ஆசை போகவேயில்லை. உன்னைப் பார்க்கும்போதெல்லாம் உன்னைத் தொட்டுக் கொண்டே இருக்க வேண்டும். உன்னை உரசிக்கொண்டே இருக்க வேண்டும் என்று தோன்றுகிறது.''

''அடாடாடா... கோயில்பணி செய்கின்ற நேரத்தில் இப்படியா கிளறிவிடுவது.''

"கோயில் பணி நேரத்தில் கூடல் கூடாது என்று சொல்லப் படவேயில்லை. கோயிலுக்கு கும்பாபிஷேகம் வருகின்றபோது விரதம் இருக்க வேண்டும் என்றுதான் சொல்லப்பட்டிருக்கிறது."

"உங்களை விரதம் இருக்கும்படிகூட நான் சொல்லவில்லை. வயதாகிவிட்டது என்பதை நினைவில் கொள்ளுங்கள். மேலைச் சாளுக்கியப் போருக்குப் பிறகு சற்று தளர்ந்துவிட்டீர்கள். கோயில் பணி முடிந்த பிறகு இன்னும் அதிகமாகத் தளர்வீர்கள்."

"ஏன், இப்படிச்சொல்கிறாய்."

"மிகப்பெரிய வேலை ஒன்றைச் செய்து முடித்த பிறகு மனதிற் குள்ளும், மனதின் மூலமாக உடம்பிற்குள்ளும் ஒரு அலுப்பு பரவுவது இயல்பு."

"புரிகிறது. அதனால் என்ன."

"இந்த அலுப்புக்கு இப்போதே தயாராகி விடுங்கள். அதை நோய் என்று நினைத்து விடாதீர்கள்."

"என்ன செய்ய வேண்டும்."

"மௌனமாக தனியே அமர்ந்து நாம் கட்டிய இந்த அரும் பெரும் கோயிலை வெறுமே அமர்ந்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருங்கள். அதற்கு முன்பு..." பஞ்சவன்மாதேவி மெல்ல இழுத்தாள்.

"என்ன அதற்கு முன்பு."

"அதற்கு முன்பு இளவரசர் இராஜேந்திரரிடம் எல்லாப் பொறுப்புகளையும் ஒப்படைத்து அவரைச் சக்ரவர்த்தியாக்கி விடுங்கள்."

"அதில் ஒரு சிக்கல் இருக்கிறது. நீ சொன்ன இரண்டு வேலையை யும் என்னால் ஒரே நேரத்தில் செய்ய முடியாது."

"ஏன் அப்படி."

"நீ சொன்னதுபோல இந்தக் கோயில் பணியை முடித்துவிட்டு, நாம் கட்டிய கோயில் என்று தினந்தோறும் ஆசையாக இந்தக் கோயிலைப் பார்த்துக் கொண்டிருக்க முடியாது."

"யார் தடுப்பார்கள்."

"யாரும் தடுக்க மாட்டார்கள். சக்ரவர்த்தியாக இளவரசரை நியமித்த பிறகு, இந்தத் தஞ்சையில் நான் இருக்க முடியாது. இந்தக் கோயிலைப் பார்க்க முடியாது."

"கடவுளே... என்ன சொல்கிறீர்கள்."



"ஏன் உனக்குப் புரியவில்லை. இளவரசரை சக்ரவர்த்தியாக மாற்றி விடுகிறேன் என்றால், என்னை ஜனங்கள் என்னவாக ஏற்பார்கள். என்னைச் சக்ரவர்த்தியாக பார்த்த ஜனங்கள் என்ன செய்வார்கள். என்னைப் புறக்கணிப்பார்களா? அவனைப் புறக் கணித்து விட்டு என்னைப் பார்க்கத்தான் முண்டியடிப்பார்கள். அப்போது அவனுக்கு மனம் நோகும். ஒரு சக்ரவர்த்திக்குத்தான் முதன்மையாக இங்கு மரியாதை தரப்பட வேண்டும். கோயிலுக் குள் நானும் அவனும் நுழைகிறோம் என்றால் முதல் பிரசாதம் யாருக்குத் தரப்பட வேண்டும்."

"சக்ரவர்த்திக்குத்தானே.."

"ஆனால், அவனே புறக்கணிப்பான். என்னை நோக்கி கைகாட்டுவான். அவருக்குத்தான் முதல் பிரசாதம் என்பான். இது அவ்வளவு சுமூகமான விஷயம் அல்ல."

"அதனால்தான் என்ன செய்யப் போகிறீர்கள்."

"ஏதாவது செய்துதான் ஆகவேண்டும். நீ சொன்னது போல எல்லாப் பொறுப்புகளையும் இராஜேந்திரனிடம் கொடுத்துவிட்டு நான் ஒதுங்கிக் கொள்வதுதான் நல்லது. ஒதுங்கிக் கொள்வது என்றால், அரசர் பொறுப்பிலிருந்து மட்டுமல்ல இந்தத் தஞ்சையி லிருந்தும் நான் ஒதுங்கியிருக்க வேண்டும்."

"கோயிலைக்கட்டி சிறிது நான் வேடிக்கை பார்த்து விட்டு, நீங்களும் நானும் உடையாளூர் போய் விடுவோம். பழையறை கோட்டைக்குள் இருப்போம். அல்லது நமக்கென்று தனியாக ஒரு அரண்மனை கட்டிக் கொண்டு குடந்தை முழுவதும் சுற்றி வருவோம்."

"எனக்கும் ஆசை இருக்கிறது. உடையாளூரும் பழையாறையும் குடந்தையும், பம்பைப் படையூரும், திருச்சத்திமுற்றமும், சுற்றி யுள்ள கிராமங்களும் இன்னும் மனதில் பசுமையாக இருக்கின்றன. ஆனால், விதி இதற்கும் அனுமதிக்குமா என்று தெரியவில்லை."

"ஏன். என்ன கவலைப்படுகிறீர்கள். என்ன மனதில் வைத்திருக் கிறீர்கள்."

"கவலை என்னைப் பற்றியல்ல."

"பிறகு."

"இராஜேந்திரனைப் பற்றி.."

"என்ன கவலை."

''இராஜேந்திரன் தஞ்சையிலிருக்க விரும்பமில்லாதவனாக இருக்கிறான்.''

''தஞ்சையில் இல்லையென்றால் யார் சக்ரவர்த்தியாக இருப்பது.''

''அவன் சக்ரவர்த்தியாக இருக்க ஆசைப்படுகிறான். ஆனால், தஞ்சையில் சக்ரவர்த்தியாக இருக்கமாட்டான்.''

''ஒரு சக்ரவர்த்தி தஞ்சையில் இல்லாமல் வேறு எங்கு இருப்பார்.''

''தலைநகரையே மாற்றிவிட்டால் அங்குதானே இருப்பார்.''

''தலைநகரை மாற்றுவதா.''

''எங்கே.''

''கொள்ளிடத்தின் வடகரை, ஜெயங்கொண்ட சோழபுரம் அருகில் ஏதேனும் ஒரு தனித்த இடத்தில் ஒரு கோயில் கட்டிக் கொண்டு இருக்கலாம். கோட்டை கட்டிக் கொண்டு இருக்க லாம்.''

''உங்களிடம் பகிர்ந்து கொண்டானா.''

''இல்லை.''

''பிறகு எப்படி தெளிவாகச் சொல்கிறீர்கள்.''

''ஒற்றர்கள்''

''எந்த ஒற்றர்கள் என்ன சொன்னார்கள்.''

''இராஜேந்திரனின் உத்தரவு பேரில், இராஜேந்திரன் அனுமதி யோடு அந்தச் சிற்பி நித்தவினோதப் பெருந்தச்சன் குணவன் தன்னு டைய சிறு குழுவினரோடு போயிருக்கிறான். அங்கு கோட்டை கட்ட இடம் தேடுகிறான். அது தஞ்சை நகர கோட்டை போல இருக்காது, மிகப்பலமான கோட்டை இது. இராஜேந்திரனின் விருப்பம். அந்தச் சிற்பியின் விருப்பம் என்ன தெரியுமா.''

''தெரியவில்லையே.''

''இதைவிட உயரமாக ஒரு கோயில் கட்டுவது.''

''எங்கே''

''எந்த இடத்தில் கோட்டை கட்டுகிறானோ அந்த இடத்திற்கு வெகு அருகிலேயே.''

''அதாவது ஜெயங்கொண்ட சோழபுரத்திலா.''

''ஆமாம்.''



''பாறைகள் எங்கிருந்து வரும்.''

''திருவக்கரையிலிருந்து வரும். மீன் சுருட்டிக்கு வடக்கேயுள்ள திருவக்கரையிலிருந்து பாறைகள் வரும்.''

''பரமேஸ்வரா, என்ன சோதனை இது. எதற்காக உங்களை விட்டு இராஜேந்திரன் விலகிப் போக வேண்டும்.''

''என்னுடைய கணக்கு சரி.''

''என்ன சரி.''

''நான் அருகேயிருப்பின் அவன் புகழ் மங்கித் தான் இருக்கும். எனக்குத்தான் முதல் பிரசாதம் எனக்குத்தான் முதல் மரியாதை. எனக்குத்தான் முதல் விசாரிப்பு. எனக்குத்தான் முதல் வணக்கம். எனவே நான் அருகேயிருப்பது அவனுக்குப் பிடித்தமான விஷயம் அல்ல.''

''நீங்கள் ஒருக்காலும் உங்கள் தந்தையை அப்படி நினைக்க வில்லையே.''

''என்ன செய்வது. என் தந்தை உயிரோடு இருக்கும்பொழுது நான் சக்ரவர்த்தியாக இல்லை. இறந்த பிறகும் சக்ரவர்த்தியாக இல்லை. அதற்கு வெகுநாள் பொறுத்துதான் நான் சக்ரவர்த்தி யானேன். ஆனால், இராஜேந்திரன் மத்திம வயது வந்தும் நான் சக்ரவர்த்தியாக இருக்கிறேன், இது தவறுதானே.''

''போதும்... போதும்... ஒருக்காலும் இராஜேந்திரன் இம்மாதிரி நினைக்க மாட்டான். நீங்கள் தேவையில்லாமல் அதிகம் யோசித்து விதம்விதமாகக் கற்பனை செய்து உங்களைத் தாழ்த்திக் கொள் கிறீர்கள்''

''பஞ்சவன்மாதேவி, இத்தனை வருட அரசியல் அனுபவம் எனக்கு ஒரேயொரு தகுதியைக் கொடுத்திருக்கிறது. மனிதர்களின் அசைவை நான் நன்கு உணர்வேன். நண்பனின் அசைவை, எதிரி யின் அசைவை, என்னால் வெகு தெளிவாகப் புரிந்துகொள்ள முடியும்.''

''என்ன சொல்கிறீர்கள். இராஜேந்திரனை எதிரி என்றா.''

''இல்லை.''

''நண்பன் என்று நினைக்கிறீர்களா.''

''இல்லை.''

''பிறகு.''

"ஊசலாடிக் கொண்டிருக்கிறேன். என்னால் கொள்ளவும் முடியவில்லை. தள்ளவும் முடியவில்லை. கோயிலைக் கட்டுவ தோடு என் பணி முடிந்து போய் விடுகிறது. நீ சொன்னதுபோல சிறிது நாள் கோயில் ஆராதனைகளைப் பார்த்து முடித்துவிட்டு, நம் மொத்த குடும்பமும் பழையாறை நோக்கிப் போய்விட வேண்டியதுதான். இதை முன்கூட்டியே தெரிவித்தால் தான் இராஜேந்திரன் தஞ்சையை விட்டு நகராதிருப்பான்.

இராஜேந்திரன் தஞ்சையில் இருந்தால்தான் நான் கட்டிய இந்தக் கோயிலும் சிறப்பாக இருக்கும். நானும் நகர்ந்து, இராஜேந் திரனும் நகர்ந்தால் இந்தக் கோயில் கவனிப்பாரற்றுப் போகும்."

"சும்மாயிருங்கள். இத்தனை உயரமும், அகலமும் உள்ள ஒரு கோயிலை, அற்புதக் கலைப்படைப்பை நம்முடைய தலைமுறை யினர் மறந்து விடுவார்களா. புறக்கணித்துவிடுவார்களா இல்லை, இது சந்திர சூரியர் உள்ளவரை நிற்கும். இது எனக்கு நன்றாகத் தெரிகிறது."

"எப்படி இவ்வளவு அழுத்தம் திருத்தமாகச் சொல்கிறாய்."

"எனக்குச் சில கனவுகள் வந்தன."

பஞ்சவன்மாதேவி பேச ஆரம்பிக்கும்போது வாசற்புறம் சப்தம் கேட்டது. அதிகாரிச்சி கைதட்டி விட்டு உள்ளே நுழைந்தாள்.

"என்ன சொல்." அரசர் உத்தரவிட, குடந்தையிலிருந்து தூதுவர் வந்திருக்கிறார் என்று சொல்லப்பட்டது.

குடந்தையிலிருந்து வந்த போர்வீரன் அரண்மனை உள்ளே நுழைந்தான். அரசர் எதிரே மண்டியிட்டான். கை கூப்பினான்.

"மருவூர் அந்தணர்கள் மேலைச்சாளுக்கியத்திலிருந்து நேரே வடக்கே போய் கங்கைக் கரையைப் பார்த்துவிட்டு, கங்கைக்கரை யிலிருந்து காசி தேசத்தில் சிறிது நாள் வாழ்ந்துவிட்டு, தொடர்ந்து இன்னும் வடகிழக்கே போய் கயிலையைத் தரிசித்து விட்டு, மானசரோவர் என்கிற தேவதைகள் குளிக்கின்ற, நட்சத்திரங்கள் மூழ்கி எழுகின்ற, மிகப்பெரிய அன்னபட்சிகள் மிதக்கின்ற இடத்தை நேரே பார்த்து விட்டுத் திரும்பியிருக்கிறார்கள்.

பிறகு கீழைச்சாளுக்கியம் வழியாக திருவொற்றியூர் வந்தடைந்து தொண்டை நாட்டின் வழியாக உடையார்குடி தாண்டி கொள் ளிடக்கரையைத் தாண்டி விட்டார்கள். குடந்தைக்கு இன்னும் சில நாட்களில் வந்து விடுவார்கள்.



ஒரு மாட்டு வண்டியை நான்கு காளைகள் இழுக்க, நான்கு குடங்கள் மானசரோவர் நீரும், ஆறு குடங்கள் கங்கை ஜலமும், இரண்டு குடங்கள் கிருஷ்ணா நதியின் நீரும், கோதாவரி ஆற்றின் நீரும் எடுத்து வருகிறார்கள். குடந்தையில் காவிரி நீர் பிடித்துக் கொண்டும் வருவார்கள். அழகிய சாளக்ராமங்களும், மானசரோ வரில் கிடைத்த சிவலிங்கமும் வெள்ளைக்கற்களும் எடுத்து வருகிறார்கள்.

சக்ரவர்த்தியாரையும், பஞ்சவன்மாதேவியாரையும் விசாரித்த தாகச் சொன்னார்கள். சக்ரவர்த்தியார் கொடுத்த பொற்காசு களாலும், பஞ்சவன் மாதேவியார் கொடுத்த பொற்காசுகளாலும் தான் இந்தப் பயணம் நன்கு நிறைவேறியது என்கிறார்கள்."

"கடவுளே... கடவுளே... தென்னாடுடைய சிவனே, என் பரம ஸ்வாமியே, கங்கையை நேரத்திற்குக் கொண்டு வந்து, நீ எடுப்பித்த கோயிலை உறுதி செய்து கொள்கிறாயே. என்னுடைய சிறு தொண்டை அங்கீகரிக்கிறாயே இந்த கும்பாபிஷேகம் மிக நன்றாக நடக்கும் என்று கோடி காட்டுகிறாயா. புனித நீருடன் வரும் மருவூர் அந்தணர்களுக்கு குடந்தையில் எல்லா மரியாதைகளும் நடைபெறட்டும். நமது வழக்கபடி சகல வாத்தியங்களோடும், வேத கோஷங்களோடும் அவர்களை குடந்தை மாநகருக்குள் அதிகாரிகள் வரவேற்கட்டும்.

குடந்தையிலிருந்து தஞ்சை வரும் வரை எல்லா இடங்களிலும் அவர்களுக்கு மரியாதை கிடைக்கட்டும். அவர்கள் கொண்டு வரும் ஒவ்வொரு ஆற்று நீரையும், ஒவ்வொரு சொம்பில் பழையாறை அரண்மனைக்குப் பிடித்து வரச்சொல்லி தினமும் அந்த புனித நீருக்கு மாலையிட்டு மரியாதை செய்யச் சொல்.

இந்தச் செய்தியை முதலமைச்சர் சேனாபதி கிருஷ்ணன் ராமனுக்குச் சொல்லி, மூல பண்டாரதிலிருந்து மருவூர் அந்தணர் களுக்கு வரவேற்பு தருவதற்காகவும், வழிச் செலவிற்காகவும் பொற்காசுகள் தரச்சொல்லி, எவ்வளவு சீக்கிரம் இந்தச் செய்தியை மருவூர் அந்தணர்களுக்குத் தெரிவிக்க முடியுமோ அவ்வளவு சீக்கிரம் தெரிவிப்பது நல்லது. நீ போய் வரலாம்."

தூதுவன் விடைபெற்றதும் இன்னும் அருகே வந்து சக்ரவர்த்தி உடையாரின் இடுப்பை பஞ்சவன்மாதேவி இறுக்கிக் கொண்டான்.

"என்ன பழையாறையில் கங்கை ஜலம் வைக்கச் சொல்லியிருக் கிறீர்கள்."

"நமக்குத் தேவைப்படுமல்லவா."

"நமக்கா. எதற்கு பழையாறையில்."

"அடியே... அங்கு போய் குடியேறப் போகிறோம் என்று இப்பொழுதுதானே சொன்னேன். அந்த இடத்திற்குப் போகும் போது ஒரு நல்ல நாளில் அந்தப் புனித நீரை தலையில் ஊற்றிக் கொள்ளலாமல்லவா. சிவனுக்கு அபிஷேகம் செய்யலாமல்லவா."

மறுபடியும் அதிகாரிச்சி வந்து நின்றாள்.

அந்தப் பேச்சு கலைந்தது.

"என்ன விஷயம்."

"யானைகளும், குதிரைகளும் வேண்டுமென்று சொல்லியிருந் தோம். அதைப் பராமரித்து புல்லும் கொள்ளும் கொண்டு வந்து கொடுத்து, அதைத் தினமும் துடைத்துக் குளிப்பாட்டுவதற்காக அரண்மனையிலுள்ள பஞ்சமச் சேரியிலிருந்து தலைவர்கள் வந்திருக்கிறார்கள்."

"அடாடா... என்ன அன்பு. என்ன அன்பு, நானல்லவா போயிருக்க வேண்டும். நானல்லவா அனுப்பியிருக்க வேண்டும். இதோ வந்து விட்டேன்."

கிட்டத்தட்ட உதறிய ஒரு வேகத்தோடு சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவர் தோளில் சால்வையைப் போர்த்திக் கொண்டு அந்தப் புரத்தை விட்டு வெளியே வந்தார்.

வெளியே சிவாச்சாரியார்கள் பிரசாதத்தோடு காத்திருந்தார்கள்.

"சற்று இருக்க வேண்டும். இதோ வந்து விட்டேன்." அரசர், அங்கே காத்திருந்த எளிய மக்களை நோக்கி வேகமாக நடந்து வந்தார். மெய்க்காவல் படை வீரர்கள் வந்தார்கள்.

"அதிகம் எவரையும் விரட்டாதீர்கள். நெருங்கி வர விரும்பு வார்கள். வரவிடுங்கள். உங்களைக் கண்டு பயப்படுவார்கள். விலகி இருங்கள்."

அரசர் நடந்து கொண்டே உத்தரவிட்டார். அருகே போய் கை கூப்பினார். அவர்கள் அத்தனை பேரும் விழுந்து பணிந்து எழுந் தார்கள். கைட்டி, பல் தெரிய, கண்கள் பிரகாசிக்க காத்திருந் தார்கள்.

"நானே வந்து பார்க்க வேண்டுமென்றிருந்தேன். நீங்கள் வந்தது மிகவும் சந்தோஷம்."



அந்த எளிய மக்கள் கோயில் பணிக்கான எருதுகளையும், குதிரைகளையும் தேய்த்துக் குளிப்பாட்டுவதாகவும் அதற்குத் தேவையான தீனியைக் கொண்டு வந்து தருவதாகவும், தாங்களே முன் வந்து வாக்குக் கொடுத்தார்கள். சக்ரவர்த்தி நெகிழ்ந்து போனார். மிகுந்த கனிவோடு அவர்களையெல்லாம் உற்றுப் பார்த்தார்.

"என்ன உங்கள் வீட்டுப் பெண்களை அழைத்து வரவில்லையா. குழந்தைகளை அழைத்து வர வில்லையா."

"வந்திருக்கிறார்கள். அரண்மனை வாசலில் இருக்கிறார்கள்."

"சகலரையும் வரச்சொல். ஓடு." என்று கட்டளையிட்டார். இரண்டு பேர் தலை தெறிக்க ஓடினார்கள்.

அவர்கள் வரும்வரை காத்திருந்தார். நலம் விசாரித்தார். ஆடு, மாடுகளுக்கு ஏதேனும் நோய்கள் வருகிறதா என்று விசாரித்தார். மேலிருந்து மண் எங்கே போக வேண்டும் என்று விவரித்தார்.

ஒரு பெண் கூட்டம் ஓடி வந்தது. ஒரு சிறு குழந்தை ஓடி வரும் வரை காத்திருந்தார். வா... வா... உள்ளே வா என்று கூட்டத்தைப் பிளந்து அதற்கு வழிவிட்டு முன்னே அமரச் சொன்னார்.

அந்தக் குழந்தை வந்து பல் தெரிய சிரித்தது.

"வெற்றிலையும், பாக்கும், வெல்லக்கட்டிகளும், ஒரு கூடை நெல்லும் உடனே இங்கு வரவேண்டும்." மெல்ல அவர்களைச் சுற்றி வந்து அந்த எளிய மக்களைப் பார்வையிட்டார்.

"எப்பொழுது திருமணமாயிற்று."

ஒரு பெண்ணைப் பார்த்துக் கேட்க அவள் பதில் சொல்ல முடியாமல் வாயடைத்துக் கிடந்தாள். அவளுக்காக மற்றவர்கள் பேசினார்கள்.

"சும்மாயிருங்கள். இவள் பேசட்டும்."

"உனக்கு எப்போது திருமணமாயிற்று."

"அப்போதே ஆயிற்று." என்று அந்தப் பெண் கைகாட்டியது.

சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவர் வாய் விட்டு மனம் விட்டுச் சிரித்தார். கூடை வெற்றிலை வந்தது. அது நிறைய பாக்கு வைக்கப்பட்டது. அழுத்தமாகப் பின்னப்பட்ட பனை ஓலைக்கூடையில் வெல்லக் கட்டிகள் வந்தன.

மக்கள் ஆவலாக அதைப் பார்த்தார்கள்.

நான்கு கூடைகளைக் கயிறு கட்டித் தூக்கி வந்தார்கள். நிலக் கடலையும், காராமணிப்பருப்பும் தனித்தனி கூடைகளில் வந்து இறங்கின. அங்குள்ள மக்கள் அரசரின் அன்பு கண்டு திகைத் தார்கள். திணறினார்கள். அவரைப் புகழ்ந்து பேச ஆரம்பித் தார்கள்.

''மொத்தம் உங்கள் கூட்டத்தில் எத்தனை பேர் என்று விசாரிக்க, அவர்களுக்கு எண்ணிக்கை தெரியவில்லை என்பது அவர்கள் கூச்சலிலிருந்து தெரிந்தது.

''எண்ணிக்கை தெரிந்து கொள்ள வேண்டும்.'' என்று அழுத்தம் திருத்தமாகப் பேசவும் அவர்கள் வாய் பொத்தி மௌன மானார்கள். சரி என்று தலையசைத்தார்கள்.

நூற்று நாற்பது பேர் என்று சொல்லியிருக்கிறீர்கள். அதைக் கணக்கில் வைத்துக் கொண்டு இருபத்தைந்து பொற்காசுகள் கொடுக்கிறேன். புடவைகள் வாங்கி எல்லோரும் பகிர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள். கை தட்டினார். பொற்கிழி வந்தது. தலைவன் போல் உள்ளவனிடம் கொடுத்தார்.

''வேறென்ன வேண்டும்.'' அன்பொழுகக் கேட்டார்.

''கோயில் பணிக்கு வருகின்ற எங்களுக்கு உணவு வேறெங்கு கிடைக்கும். குடிக்க நீரும் இன்ன பிறவும் வேறு யார் தருவார்கள்.''

தலைவன் போலுள்ளவன் கேட்டான்.

சக்ரவர்த்தி சிறிது நேரம் யோசித்தார்.

பஞ்சவன்மாதேவி இரண்டு சேடிப் பெண்களுடன் மோர் பானையைத் தூக்கி வர, வருகையில் குவளையோடு நடந்து வந்தார்.

சட்டென்று சக்ரவர்த்தி முகம் மலர்ந்தது.

''பஞ்சவன்மாதேவி அவர்கள் உங்கள் உணவுக்கும், நீருக்கும், மற்ற பொருளுக்கும் ஏற்பாடு செய்வார்கள். அவர்கள் கையா லேயே நீர் மோர் வார்ப்பார்கள்'' என்று சொல்ல, கூட்டம் தலைமேல் கை தூக்கி வணக்கம் சொல்லியது.

பஞ்சவன்மாதேவி சிறுபானையை மோரில் மொண்டு எல்லோ ருக்கும் ஊற்றினார். சிறிய கலங்களில் மோர் வாங்கிக் கொண்டு அவர்கள் குடித்து அந்தக் கலங்களை மற்றவர்களுக்கும் கொடுத் தார்கள். எல்லாக் கலங்களும் மறுபடி மறுபடி பஞ்சவன் மாதேவி யால் நிரப்பப்பட்டன. அங்கேயே ஏப்ப சத்தம் கேட்டது.



குழந்தைகள் மோர் குடிக்க அவசரப் பட்டார்கள். உள்ளங்கை குவித்துக் குடித்தார்கள்.

''எது வேண்டுமாயினும் பஞ்சவன்மாதேவியைக் கேளுங்கள். மாடுகளை அதிகம் விரட்ட வேண்டாம். சிறிதளவு நோய்ப்பட்டா லும் பிரித்து விலக்கி விடுங்கள். புதிய வாய்க்காலை ஒட்டித் தான் மண் எடுத்துப் போவது நடைபெறும். உங்களுக்கென்று ஒரு துறையைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள். அங்கே மாடுகளை யும், குதிரைகளையும் நீராட்டுங்கள். நான் விடை பெறுகிறேன்.''

கைகூப்பினார். அந்தக் கூட்டத்தலைமையாளர் கைகூப்பி சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீஇராஜராஜத் தேவரை வலமாகச் சுற்றி அரண்மனையைவிட்டு வெளியே நின்று கொண்டார்.

''பஞ்சவன்மாதேவி. மறவர் எவரும் இடையூறு செய்யா வண்ணம் இவர்களைப் பாதுகாத்துக்கொள்.''

''இவர்களுக்கு யார் இடைஞ்சல் செய்யப்போகிறார்கள். எந்த வேலைக்கும், எந்த இடைஞ்சலும் வராது. இந்தக் கோயில் பணி மிக சிறப்பாக நடைபெறும். சோழதேச நாகரிகத்தை சந்திரசூரியர் உள்ளவரை பறைச்சாற்றும்.''

''எனக்கு ஒன்று புரிகிறது பஞ்சவன்மாதேவி.''

''என்ன. இந்தக் கோயில் என்னால் கட்டப்படவில்லை. இங்குள்ள சோழ மக்களால் கட்டப்படுகிறது. நம் நாட்டு மக்கள் என்று தனியே பிரித்துக் கொள்ளவும் பிடிக்கவில்லை. பாண்டி யர்களும், சேரர்களும்கூட நம்மில் இருக்கிறார்கள். கீழைச் சாளுக்கிய, மேலைச்சாளுக்கிய மக்களும் இருக்கிறார்கள். இது பரதகண்டத்து கோயில். பரதகண்டத்து நாகரிகத்தைச் சொல்லும் கோயில். நான் என்கிற சூட்சுமம் வளர்ந்து வளர்ந்து அதன் ஒரு பகுதி இப்படிக் கோயிலாக உருவெடுத்திருக்கிறது. நான் யாருக்கு நன்றி சொல்வேன். எப்படி நன்றி சொல்வேன். எவ்வளவு கடன்பட்டிருக்கிறேன். எனக்கு ஒன்றும் புரியவில்லை. வெறும வெற்றிலையும், வெல்லக்கட்டியும் கொடுத்து விட்டு அவர்களை வேலை வாங்கப் போகிறேன்.

மெய்க்காவல் படையினர் ஒற்றர்கள் வந்திருக்கிறார்கள் என்று சொன்னதும் பஞ்சவன்மாதேவியை விட்டுவிட்டு, அவர் வேறு பக்கம் நகர, பஞ்சவன்மாதேவி அந்தப்புரத்திற்குள் நுழைந்தார். சட்டென்று நின்றார்.

எப்பொழுதும் சக்ரவர்த்தி உடையாரோடேயே இருக்க வேண்டுமென்று ஆசைப்பட்டோம். ஆனால், இவர் நம்மைப் பிரித்து வேறு இடத்திற்குப் போகச் சொல்கிறார். என்னது இது. இந்த வேலையைச் செய்தால் அவரோடு இருக்க முடியாதே. அவரோடு இல்லாது போனால் நல்லதல்லவே. மெய்க்காவல் படைகளை வேறு தளர வைக்கிறார். எல்லா இடங்களுக்கும் நேரடியாகப் போகவேண்டும் என்று ஆசைப்படுகிறார். அப்படிப் போகிறபோது துணையில்லாமல் போவது நல்லதா. நான் அருகேயிருப்பதுதானே சரியானது. இவர், பசி தூக்கமில்லாமல், குடி தண்ணீர்கூட குடிக்காமல் இருக்கிறார். நான் அருகே இருப்பது தானே இவரை பார்த்துக் கொள்ள வசதியாக இருக்கும். அப்படியானால் அங்கு வேலை செய்பவர்களை யார் கவனித்துக் கொள்வார்கள். நான் கவனித்துக் கொள்ளவில்லை என்று சொன்னால், அந்த எளிய மக்களைப் பிடிக்கவில்லை என்றல்லவா ஆகும். அரசருக்குக் கோபம் வந்தாலும் வருமே என்ன செய்வது.

அவள் சட்டென்று ஓலை நறுக்கும், எழுத்தாணியும் கொண்டு வரச் செய்தாள்.

மதிப்பிற்குரிய மாதேவடிகளாருக்கு பஞ்சவன்மாதேவியின் வணக்கம். உங்களுக்கொரு விண்ணப்பம் என்று ஓலை எழுதினாள்.

எளிய மக்களைக் கவனித்துக் கொள்கின்ற பொறுப்பை ஏற்றுக் கொள்ள முடியுமா என்று கேட்டாள். ஆமெனில் உடனே தகவல் சொல்லி அனுப்புமாறு வேண்டிக் கொண்டாள்.

அடுத்த மூன்று நாழிகையில் அரண்மனை வாசலில் தகவல் வந்தது.

''அப்படியா... அவர்தான் செய்ய வேண்டுமென்று ஆசைப் படுகிறாரா. எனக்கொன்றும் ஆட்சேபனை இல்லை.''

உரத்த குரலில் அரசர் காதுபடச் சொன்னாள்.

அரசர் என்னவென்று வினவ, மாதேவடிகளார் அந்த எளிய மக்களுக்குத் தொண்டு செய்ய விரும்புகின்றார் என்று சொன்னதும் அரசர்க்கு முகம் மலர்ந்தது.

''நல்லது. அவர் செய்யட்டும். நீ என்னோடு இரு'' என்று சந்தோஷத்தோடு சொன்னார்.

பஞ்சவன்மாதேவிக்கு தான் செய்த திருட்டுத்தனம் வலித்தது.



''இதை விட இராஜராஜனை வீழ்த்துகின்ற ஒரு அற்புதமான சந்தர்ப்பம் நமது வாழ்நாளில் எப்போதும் கிடையாது. உயிரைக் கொடுத்தாவது உயிரை வாங்க வேண்டும். நாம் அழிந்தாவது சோழ தேசத்தை அழிக்க வேண்டும்.

இராஜராஜன் கோயில் கட்டுகிற ஆரவாரத்தோடு அளவுக்கு மிஞ்சி ஆடிக் கொண்டிருக்கிறான். சோழ தேசத்தின் எல்லாப் பகுதியிலிருந்தும் ஜனங்கள் விதம்விதமாக வந்து கொண்டிருக் கிறார்கள். கும்பல் கும்பலாக அரண்மனைக்குப் போய் இராஜ ராஜனைப் பார்த்துவிட்டு வருகிறார்கள். தஞ்சை முழுவதையும் வேடிக்கைப் பார்க்க விருப்பப்பட்டுச் சுற்றுகிறார்கள்.

எல்லோருமே இடுப்பில் காசு முடிந்து கொண்டு வந்திருக் கிறார்கள். எல்லைகளில் கடும் சோதனைகள் இருப்பினும், கூட்டம் அதிகம் இருப்பதால் வீரர்கள் கண்ணில் மண் தூவி விட்டு நகர்ந்து விடலாம். நாகையிலிருந்து வரும் கூட்டத்தோடு சேர்ந்து கொண்டு தஞ்சைக்குள் நுழையலாம்.

முப்பது முழத் தொலைவிலிருந்து சக்கரம் வீசி இராஜராஜன் உடம்பில் விஷத்தைச் செலுத்தி விட்டு, அந்தக் கூட்டத்திற்கு நடுவே ஓடி மறைந்து விடலாம். தப்பித்துக் கொள்ள மிகச் சரியான இடம் எது தெரியுமா. பஞ்சமர்கள் மேற்கே எருதுகளிலும், குதிரைகளிலும் மண் அடைத்து எடுத்துப் போகிறார்கள் அவர்களோடு கலந்து விடலாம்.''

அந்த சேரதேசத்து நம்பூதிரி அடிக்குரலில் புலம்பினான்.

''நான் சொல்கின்ற காளி மந்திரமும், உபாசனையும் சரியாக இருந்தால், கொல்லுகின்ற சந்தர்ப்பத்தை எனக்குத்தான் தருவாள். இராஜராஜனைக் கொல்ல வேண்டுமென்ற வெறி நாளுக்கு நாள் எனக்குள் வளர்ந்து வருகிறது. என்னால் கனவில் பல் கடிக்காமல் தூங்க முடியவில்லை. நடு இரவில் எழுந்து உட்கார்ந்து கொண்டு, அவனைக் கொல்ல வேண்டும். கொல்ல வேண்டும் என்று சூளுரைக்காமல் இருக்க முடியவில்லை. எழுந்து நடக்கும் போதும், உண்ணும்போதும், நிற்கும்போதும் அவனைக் கொல்வதற்காகவே இருக்கிறோம் என்ற எண்ணத்தைத் தவிர்க்க முடியவில்லை.

இது பதினாறாவது சக்கரம். பல சக்கரங்களை மரத்தில் எறிந்து எறிந்து பாழ் செய்து விட்டேன். இந்தச் சக்கரத்தைப் பட்டை தீட்டி கூர்மையாக்கி கவனமாக வைத்திருக்கிறேன். மரப்பெட்டிக்குள் விஷக்கல்லை வைத்திருக்கிறேன். அந்த விஷக்கல்லில் வேகமாக விஷத்தைத் தேய்த்து வீசி எறிந்தால் அந்த விஷம் சட்டென்று

இராஜராஜன் உடலில் பாயும். பதிமூன்று, பதினான்கு வினாடிகளில் மரணம் ஏற்படும். சர்வ நிச்சயமாய் மரணம் ஏற்படும்.

என் மகனை என் எதிரே வெட்டிக் கொன்றான். அவன் கையாலேயே கொன்றான். விஷஅம்புகளால் தாக்கினான் என்பதற்காக என் பதினைந்து வயது பிள்ளையைப் பின் கைகட்டி மண்டியிடச் செய்து நரபலி கொடுப்பது போல கழுத்தில் வாள் வீசிக் கொன்றான். அந்த இராஜராஜனை என் கையால் நான் கொல்ல வேண்டும். அப்பொழுதுதான் என் மகனின் ஆத்மா சாந்தியடையும்.

இராஜராஜன் இறந்தான் என்று தெரிந்ததும், அந்த விஷக்கல்லை நான் மென்று தின்றுவிடுவேன். அந்த விஷக்கல் கடும் கசப்பாம். கசப்பு என்று சொல்லும் முன்பாகவே உயிர் பிரிந்து விடுமாம். அந்த வார்த்தையைத்தான் உச்சரிக்க முடியுமாம். தின்றால் மூன்று வினாடிகளில் மரணமாம். உடம்பில் எங்கேனும் பட்டு ரத்தத்தில் கலந்து மூளையைத் தாக்கினால் பதிமூன்று பதினான்கு வினாடிகளில் மரணம். காற்றில் இந்த விஷக்கல்லை சுவாசித்தவன். ஒரு நாழிகையில் மரணமடைவான். இந்த விஷக்கல்லை, ஒரு மரப் பேழையில் பொதித்து சுற்றி சாந்து போட்டு இறுக்கி வைத்திருக்கிறேன்.

இராஜராஜன் மரணத்தோடு சோழதேசத்தின் கதை முடியக் கூடாது. இராஜராஜனுக்குப் பிறகு இன்னும் வலிமையாக இராஜேந்திரசோழன் இருக்கிறான். எனவே, அவனை கருவறுக்க வேண்டும். அதற்கு மேலைச்சாளுக்கியம் உதவி செய்ய வேண்டும்.

இன்றைக்கு நம்மில் ஒரு ஆள் பயணப்பட்டால் பத்து நாளில் மேலைச்சாளுக்கியம் அடையலாம். பத்துநாளில் மேலைச்சாளுக்கியத்திலிருந்து ஒரு படை கிளம்பினால். அடுத்த பத்து நாளில் தஞ்சை வந்து சேரலாம். திருமழபாடி வழியாக மீன்சுருட்டி வந்து, மீன்சுருட்டியிலிருந்து கொள்ளிடக்கரையை அடைந்து, கொள்ளிடக் கரையிலிருந்து குடந்தை வந்து, குடந்தையிலிருந்து தஞ்சையை எளிதாக வந்து அடையலாம்.

தொண்டை நாடும், திருக்குடந்தையும் கோயில் பணிக்காக ஆட்களை அனுப்பி காவலின்றி இருக்கும். இருக்கிற காவலையும் நம் படைகள் எளிதாக உடைத்துவிட முடியும். சோழ தேசத்தை நாம் கைப்பற்ற வேண்டிய அவசியமில்லை. அவர்கள் எப்படி மேலைச்சாளுக்கியத்தின் ஒரு பகுதியைக் கொள்ளையடித்தார்களோ, அதேபோல சோழதேசத்தைக் கொள்ளையடித்து நிர்மூலப்



படுத்தலாம். தீக்கிரையாக்கி விட்டுத் திரும்பலாம். முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும் என்று எச்சரித்து விட்டு வரலாம். பழிக்குப்பழி, ரத்தத்திற்கு ரத்தம் என்று கொக்கரிக்கலாம்.

இராஜராஜனை நான் கொன்று விட்டால் என்னைச் சும்மாவிட மாட்டார்கள். சித்ரவதை செய்வார்கள். அடித்துக் கொல்வார்கள். மேலைசாளுக்கியத்தின் வைஷ்ணவதாசனை எப்படிச் சித்ரவதை செய்தார்கள் என்று அந்த மறவர்களுக்குத் தெரியும். அதேவிதமாய் என்னை சித்ரவதை செய்து கொள்வார்கள். ஆனாலும், நான் சந்தோஷமாக மரணமடைவேன். அவர்கள் கொல்வதற்கு முன்பு அந்த விஷக்கல்லை மென்றுவிட்டு நான் இறந்து போவேன். என் மகனைத் தேடிப்போவேன்.

உனக்கு ஞாபகம் இருக்கிறதா தோழனே, என் பதினைந்து வயது மகனை பின் கை கட்டி நரபலி கொடுப்பது போல, நமது காந்தளூர்ச்சாலை கடிகை வாசலில் இராஜராஜன் கை வாளினால் சிரச்சேதம் செய்தான். தலை கொய்வதற்கு முன்பு பூணூலை அறுத்தான். அவனை என் கையால் நான் கொல்ல வேண்டும். என் மகனைக் கொன்றது நினைவில் இருக்கிறதா என்று கேட்டுவிட்டுக் கொல்லவேண்டும். அதற்கு இதைவிட அற்புதமான ஒரு நேரம் கிடைக்காது.

பாண்டிய மன்னனின் ஆபத்துதவி படைகளின் சேர மண்ணின் மானம் காத்த வீரர்களின் வாழ்நாளின் பெரும்பகுதி சோழனை எதிர்ப்பதிலேயே கரைந்து விட்டது. நல்ல உணவின்றி, நல்ல உடையின்றி, மனைவி மக்களின் பெயர்கூட மறந்து போய், நம்முடைய கிராமம் மறந்து போய், அந்த வளம் மறந்து போய், நாடோடி போல் திரிந்த காலம் முடிவுக்கு வரப்போகிறது. நம்மில் யாரேனும் தப்பிப் பிழைத்து சேரதேசத்திற்குப் போனால், இந்தக் கதையை எழுதி வையுங்கள். நம் குழந்தைகளுக்குச் சொல்லுங்கள்.''

ஒரு சுடுகாட்டில் ஒரு பிணத்தைச்சுற்றி உறவினர்கள் போல் கட்டை அடுக்கிக் கொண்டு சேரதேசத்து நம்பூதிரிகள் அமர்ந்திருந்தார்கள்.

''என்ன எரிகிறது. பிணமா.''

எழுந்து கலையும்போது ஒருவர் கேட்டார்.

''இல்லை வேங்கை மரத்தில் முருங்கை பிசினைக் கட்டி எரிய வைத்திருக்கிறோம். கொஞ்சம் பிணவாசனை வரும். மறுபடியும் நான்கு நாட்கள் கழித்து ஒன்று கூடுவோம்.'' அவர்கள் நேரம்

குறித்துக் கொண்டார்கள். வெவ்வேறு திக்கில், வெவ்வேறு நேரத்தில் கலைந்து போனார்கள்.

பரசுநம்பூதிரி மெல்ல காடுவிட்டு நகர்ந்து ஊருணியில் இறங்கி மூழ்கிக் குளித்தான். ஈர உடைகளைப் பிழிந்து உதறினான். மரக்கிளையில் மறைத்து வைத்திருந்த உலர்ந்த துணிகளை எடுத்து உடுத்தி பழைய, துணிகளைப் புதர் நடுவே விசிறிப் போட்டான். இடுப்புத் துண்டில் முடிச்சுப் போட்டு வைத்திருந்த கேயூரங்களை அணிந்து கொண்டான். அதைத் தலைப்பாகையாகக் கட்டிக் கொண்டான். காலில் வெள்ளிக் காப்பு மாட்டிக் கொண்டான். ஒரு மரத்தடிக்குப் போய் அங்கு மரத்தில் ஏறி சற்று உச்சியில் வைத்திருந்த சால்வையையும், கழியையும் எடுத்துக் கொண்டான்.

கடைத்தெரு பக்கம் போய் ஒரு காசுக்கு நூறு வெற்றிலை வாங்கினான். பாக்கு வாங்கி கடையிலேயே சுத்தியலில் அடித்து உடைத்து வைத்துக் கொண்டான். சால்வையால் வெட்டுப் பட்ட இடக்கையை மறைத்துக் கொண்டு சற்று தூரம் நகர்ந்தான்.

பழைய காளி கோயிலுக்குப் போய் சட்டென்று மதில் சுவரின் மீது ஏறி, அங்கிருந்து விமானத்தின் மீது மேலே ஒரு சந்தில் வைத்திருந்த மரப்பெட்டியை எடுத்து அவன் இடுப்பில் கட்டிக் கொண்டான். கோயிலில் வேறு சில இடங்களில் ஒளித்து வைத்திருந்த சுதர்சன சாளக்ராமங்களைப் போன்ற இரும்புச் சக்கரங்களை வாழை மட்டையில் பொதித்து இடுப்பில் கட்டிக் கொண்டான். நாகையிலிருந்து தஞ்சைக்குப் போகும் வழியில் காத்திருந்தான்.

பூந்தோட்டம் என்கிற கிராமத்திலிருந்து ஒரு பெரிய வேளாளர் கூட்டம் தஞ்சையை நோக்கி ஆட்டமும், பாட்டமும், கூடையும் மண் வெட்டியுமாய் போனது. அவர்களுடைய நடைக்கு ஈடு கொடுக்க முடியாமல் பெண்கள் அவ்வப்போது ஓடினார்கள். குழந்தைகளும், கிழவர்களும் பாரவண்டியில் பாட்டு பாடிக் கொண்டு வந்தார்கள். அந்தப் பாரவண்டி முழுவதும் நெல் கொட்டப் பட்டிருந்தது. கூடைகூடையாகப் பருப்பும், காய் கறிகளும் இருந்தன. அந்தக் கூட்டத்தோடு அவன் கலந்து கொண்டான்.

ஆடுகளைப் பற்றிப் பேசினான். வெற்றிலை போடுகிறீரா என்று மூத்த ஆட்டு இடையனைப் பார்த்து கேட்டான். இருபது வெற்றிலைகளில் பாக்கோடு வைத்துக் கொடுக்க ஆட்டிடையன் சந்தோஷமாகப் பெற்றுக் கொண்டான்.



''இந்த ஊர் கிராமத்தலைவர் யார். பெரிய நிலச்சுவான்தார்கள் யார். முக்கியமானவர்கள் யார். கூட்டத்தில் பலசாலி யார்'' என்று பேச்சோடு பேச்சாக விசாரித்துக் கொண்டான்.

அவர்கள் இளைப்பற நின்றதும் இடையர்களைத் தாண்டி வேகமாக பூந்தோட்டத்து கிராமவாசிகளோடு சேர்ந்து கொண்டான். வாலிபனைப் பார்த்து பெயர் சொல்லி அணைத்துக் கொண்டான். எப்படியிருக்கிறாய். எப்படியிருக்கிறார் உன் தந்தை உங்கள் கிராமத்தலைவர் நலமா என்று எல்லோரையும் பெயர் கேட்டான். அந்த இளைஞனுக்குப் புரியவில்லை.

''நீ அப்போது சிறிய பயலடா. நான் ஊர் சுற்றி பலபாடிகளில் தங்கி இப்பொழுதுதான் வந்திருக்கிறேன். இதோ பார் மேலைச் சாளுக்கியப் போரில் கை போயிற்று. சோழ தேசத்திற்காக உயிர் கொடுத்திருக்க வேண்டியவன் ஏனோ, கடவுள் என்னை உயிரோடு வைத்திருக்கிறான்.'' என்று சொல்லி இளைஞர்கள் அவனைச் சூழ்ந்து கொண்டார்கள்.

மேலைச்சாளுக்கியப் போர் பற்றிக் கேள்வி கேட்டார்கள்.

''கங்கதேசம் போயிருக்கிறீர்களா. சிங்களம் போயிருக்கிறீர்களா.'' அவன் தன்னுடைய போர்த்திறமைகளைப்பற்றி, தன் போர் அனுபவங்களை பற்றி அவிழ்த்துவிட அந்த வேளாள இளைஞர்கள் விக்கித்துப் போய் நின்றார்கள்.

''நீங்கள் யார் என்று தெரியவில்லையே.''

''எனக்கே நான் யார் என்று தெரியவில்லை. நான் பூந்தோட்டம் விட்டுக் கிளம்பும்போது எனக்குப் பதினாறு வயது. இப்போது நாற்பது வயது. இருபத்து நான்கு வருடங்கள் கழித்து வந்திருக்கிறேன். நீ உன்னுடைய தாய் சாயல் தானே. சிறிய வயதில் உன்னுடைய தாய் மிக அழகாக இருப்பாள். தாய் வழிப்பாட்டனார் மிக நல்ல மனிதர்.'' அவர் பெயரையும் சொன்னான்.

ஒரு மண்மேட்டில் ஏற முடியாமல் அவன் தத்தளித்தபோது இளைஞர்கள் அவனை அணைத்துக் கொண்டார்கள். கை கொடுத்து மேலேற்றி வந்தார்கள்.

''நான் விடை பெறுகிறேன். தஞ்சை போனதும் சொல்கிறேன். உன்னுடைய கிராமத் தலைவருக்கு என் அன்பளிப்பாகக் கொடு.''

ஐம்பது வெற்றிலைகளும் பாக்கும் கொடுக்க, அந்த இளைஞன் கூவிக்கொண்டு கிராமத் தலைவரை நோக்கி ஓடினான். அந்நேரத்

தில் குதிரை ஒன்று வாங்கி வேகமாக ஓட்டிக் கொண்டு போய் தஞ்சையின் எல்லையில் நின்றான்.

''எங்கிருந்து வருகிறாய்'' என்று கேட்டதும் ''பூந்தோட்டம்'' என்று பதில் சொன்னான்.

பூந்தோட்டத்தில் யார் அதிகாரி என்று கேட்க பெயர் சொன்னான்.

''உன்னுடையது யாருடைய வீடு'' அந்த இளைஞருடைய பாட்டனார் பெயரைச் சொன்னான்.

''அவரா, வருகிறாரா.''

''இல்லை. அவர் வரவில்லை.''

''மற்றவர்களெல்லாம் எங்கே''

''அவர்கள் நடந்து வருகிறார்கள். நான் குதிரையில் வந்துவிட்டேன்.''

''குதிரையிலா. இங்கு யார் குதிரைக்குப் புல் போடுவது.''

''இல்லை. என் குதிரையை இங்கு விற்றுவிடத் தீர்மானித்திருக் கிறேன்.''

''எவ்வளவு விலைக்கு வாங்கினாய்.''

''இரண்டு கழஞ்சுக்கு.''

''பொய் இரண்டு கழஞ்சுக்கு இதைக் குருடன் தான் வாங்கு வான். இது வெறும் கழுதை. மட்ட குதிரை ஜாதி. விற்பதென்றால் என்ன காசு.''

''மூன்று கழஞ்சு.''

''இரண்டு கழஞ்சுக்கு வாங்கி உபயோகப்படுத்தி விட்டு மூன்று கழஞ்சுக்கு விற்பதா. நன்றாக இருக்கிறது. பூந்தோட்ட புத்தியா இது.''

''பூந்தோட்டக்காரர்கள் மென்மையானவர்கள். எளிமையான வர்கள். அவர்களைக் குறையாகப் பேச வேண்டாம்.''

''கடைசியாக என்ன விலை.''

''யாருக்காக கேட்கிறீர்கள்.''

''எனக்காக.''

''அப்படியென்றால் நீங்கள் சொல்வதுதான் விலை.''

''ஏன், எதனால் குறைத்துக் கொள்கிறாய்.''



''தஞ்சை நகரை இத்தனை கவனமாகப் பாதுகாத்துக் கொண் டிருக்கிறீர்களே, அதற்கு உங்களுக்கு நான் பரிசா தரமுடியும். குதிரை விலையில் சற்றுக் குறைத்துக் கொள்ளலாம்.''

''எத்தனை சொல்.''

''ஒன்றரை கழஞ்சு.''

''ஒரு கழஞ்சுக்கு தருவாயா.''

''தரவில்லையென்றால் அடித்துப் பிடுங்கிக் கொள்வீர்கள், எடுத்துக் கொள்ளுங்களேன்.''

அவன் சொல்ல ஒரு கழஞ்சு கைமாறியது.

''நல்ல விலைக்கு ஒரு பூந்தோட்டக்காரனை ஏமாற்றி ஒரு குதிரையை வாங்கிக் கொண்டீர்கள்.''

''புலம்பாதே.''

''புலம்பாமல் என்ன செய்வது. பசிக்கிறதய்யா.''

''பசிதானே இரு. சோறு போட ஏற்பாடு செய்கிறேன்.''

எந்தச் சோதனையும் இல்லாமல் தஞ்சை நகரத்தின் உள்ளே அந்தக் காவலன் அழைத்துப் போனான்.

''அதோ அந்த கட்டிடத்திலிருந்து புகை வருகிறது பார். அது சத்திரம். ஒரு காசுக்கு சோறு கொடுப்பார்கள். அந்தத் தெருவைத் தாண்டி உள்ளடங்கிப் போனால், பல்வேறு இடங்களில் இலவச மாக சோறு கொடுப்பார்கள். மாமிசம் சாப்பிடுவாய் அல்லவா.''

''நன்றாகச் சாப்பிடுவேன்.''

''ஆனால் பூந்தோட்ட வேளாளர்கள் சாப்பிட மாட்டார்களே.''

''இப்போது சாப்பிடுகிறார்கள். முன்பு போல இல்லை. எல்லாரும் எல்லாமும் செய்கிறார்கள். நன்றி ஐயா. இதுபோல வேறு சிறு உதவிகள் கேட்கிறேன். தயவு செய்து செய்ய வேண்டும்.''

''உண்மையைச் சொல். குதிரையை எத்தனை விலைக்கு வாங்கினாய்.''

''யார் இதை விலை கொடுத்து வாங்கியது. நான் திருடிய குதிரை ஐயா.''

''அடப்பாவி.''

''பயந்துவிட்டீர்களா. பூந்தோட்டக்காரன் ஒருபோதும் பொய் சொல்லமாட்டான்.''

பரசு நம்பூதிரி முகம் அந்த கோட்டைக் காவலனுக்கும், அந்த கோட்டைக்காவலனின் முகம் பரசு நம்பூதிரிக்கும் தெளிவாகப் பரிச்சயமாகியது.

காசுக்கு சாப்பாடு வாங்கினான். தாமரை இலையில் வைத்து எதிரே அமர்ந்து கொண்டான். நீர் சுற்றி உடம்பிலுள்ள ஒவ்வொரு அக்னியையும் சமனப்படுத்த மந்திரம் சொன்னான். உண்ணுகின்ற தன் முகம் ஞாபகம் வந்தது. சிரித்துக் கொண்டான்.

ஆசாரம் முக்கியமா, ஆசாரத்திற்கு காரணமான மதம் முக்கியமா, மதத்தை வளர்த்த தேசம் முக்கியமா.

உள்ளுக்குள் சிந்தனை ஓடியது. இன்னொரு தாமரை இலையில் உணவு வாங்கிக் கொண்டான். ஒரு ஓலைக்கூடையில் பழங்கள் வாங்கிக் கொண்டான். பழக்கூடையில் உணவுப் பொட்டலத்தை வைத்தான். மெல்ல நடந்து உள்ளே போனான்.

கோயிலை நெருங்க நெருங்க தீப்பந்த ஒளியில் ஒவ்வொரு வராய் சோதித்து அனுப்பிக் கொண்டிருந்தார்கள்.

''நீ என்ன வைத்திருக்கிறாய்.''

''பழங்களும், உணவும்.''

''யாருக்கு உணவு.''

''எனக்கு. நாளை காலை நகரத்தில் என்ன கிடைக்குமோ, கிடைக்காதோ வெளியே உண்டு விட்டு நாளை காலைக்கு உணவு வாங்கி வந்திருக்கிறேன்.''

''எதற்காக வந்திருக்கிறாய்.''

''கோயில் பணிக்காக.''

''கோயில் பணிக்காக வரச் சொல்லிவிட்டு உணவில்லாமல் விட்டுவிடுவார்களா. கையில் எடுத்துக் கொண்டு வரவேண்டுமா.''

''எனக்கு என்னய்யா தெரியும். உணவு கொடுப்பார்கள் என்றால், மிகுந்த சந்தோஷம். கொடுப்பவருக்கு என் நன்றியைச் சொல்லுங்கள்.''

''சோற்று மூட்டையோடு வருகிறான் பார் நாட்டுப்புறத்தான்.''

''ஐயா, கோபித்துக் கொள்ளாதீர்கள். வேண்டுமென்றால் சோற்று மூட்டையை நீங்கள் வைத்துக் கொள்ளுங்கள்.''

''கொடு. பசி கொல்கிறது.''

''முன்னரே சொல்லியிருக்கக்கூடாதா. வேண்டுமென்றால் இன்னொரு கூடையும் வாங்கி வருகிறேன்.''



''வேண்டாம். வேண்டாம். நிஜமாகவே உனக்குச் சோறு வேண்டாமா.''

''சாப்பிட்டு விட்டேனய்யா.''

''நீ எதற்காக போர்த்தியிருக்கிறாய்.''

''குளிர்கிறது.''

''உள்ளே வேறு ஏதேனும் மறைத்து வைத்திருக்கிறாயா.''

''ஆமாம்.''

''தெரியும். எடு.''

''வெற்றிலைதானய்யா.''

''வெற்றிலையை ஏன் மறைத்து வைத்திருக்கிறாய்.''

''தஞ்சையில் வெற்றிலைக்குத்தான் அதிகம் அடித்துக் கொள்கிறார்கள் என்று கேள்விப்பட்டேன். அதனால்தான் வெற்றிலையைச் சுருட்டி இடுப்பில் வைத்துக்கொண்டு, மேலே மறைப்பாய் சால்வை போட்டுக் கொண்டிருக்கிறேன்.''

''சரி. கொஞ்சம் வெற்றிலையும் கொடுத்துவிட்டுப் போ.''

''மொத்தம் வைத்துக் கொள்ளுங்கள்.''

''உனக்கு வேண்டாமா.''

''வாங்கிக் கொள்கிறேனய்யா.''

சோற்று மூட்டையையும் வெற்றிலையையும் கொடுத்துவிட்டு இன்னும் உள்ளே நகர்ந்தான்.

தொலைவிலே மலைபோல பெரிய மண்மேடு தெரிந்தது. அவன் பிரமிப்பில் ஆழ்ந்து போனான். அருகே போய் பார்த்தான். உச்சியில் தீபம் எரிந்து கொண்டிருந்தது.

''இது விளக்கா.''

''இல்லை. தீப்பந்தமய்யா. ஆளுயர தீப்பந்தம் இங்கிருந்து பார்க்கும்போது தீபம் போல் தெரிகிறது.''

பக்கத்திலுள்ளவர்கள் பேசினார்கள்.

''பளபளப்பாக இருக்கிறதே. அது என்ன.''

''கலசம்.''

''சுற்றியுள்ள மண் பாதையைத்தான் எடுக்க வேண்டுமா.''

''ஆமாம்.''

''எடுத்தால் கோயில் தெரிந்துவிடுமா.''

''ஆமாம்'' சவுக்கு வேலிக்கட்டைகள் ஊடாக அந்த மண் மேட்டைப் பார்த்தான்.

கடவுளே... கடவுளே... எவ்வளவு பெரிய கோயில் சேர தேசத்திலுள்ள கோயில்கள் எல்லாம் வீடு போலவேயிருக்கும். சிறிய முற்றத்துடன் மரவேலிகளுடன் இருக்கும். மரவேலி முழுவதும் விளக்கேற்றி வைத்திருப்பார்கள். வழிபடு தலத்தை அம்பலம் என்று அழைப்பார்கள்.

இங்குதான் கோயில் என்று அழைக்கிறார்கள். இவ்வளவு பெரிய கோயிலை நான் எங்கும் பார்த்ததில்லை. அத்தனையும் கருங்கற் களால் செய்யப்பட்டவையாம். பாதையின் உச்சிவரை யானை போயிற்றாம். இவ்வளவு அற்புதமான இப்படியொரு மண்மேடு கட்டவா பாண்டியனை நாசம் பண்ணினான். இத்தனை பெரிய கோயிலை காபந்து செய்யவா மேலைச் சாளுக்கியத்தைத் தாக்கினான். சிங்களத்தைச் சூரையாடினான்.

எல்லாச் செல்வமும் இங்கு வந்து கோயிலாக மாறியிருக்கிறது. எத்தனையோ தலைகள் கொய்யப்பட்டு, இந்தக் கருங்கல் கட்டிடம் கட்டப்பட்டிருக்கிறது. எத்தனையோ பெண்கள் விதவையாகி அவர்கள் அடித்துக் கொண்ட அழுகைதான் கலைச் சின்னமாகியிருக்கிறது. போர்... போர் என்று ஒருபக்கம் கொலை வெறி. இன்னொரு பக்கம் கலைக்கோயில். கட்டிலில் படுத்துக் கொண்டு பெண்டிரோடு சுகித்துக் கொண்டிராமல் இராஜராஜா... எதற்கு இந்த ஆட்டம். நீ நல்லவனா, கெட்டவனா. நீ பக்தனா. பாபியா.

எவ்வளவு பெரிய உயரம். எவ்வளவு பெரிய மண்மேடு. இத்தனை மண்மேட்டையும் கரைக்க ஆயிரம் ஆயிரம் ஆட்கள், மாடுகள், குதிரைகள், வேலைக்காரப் பெண்கள். போர் மறவர்கள், அந்தணர்கள். வணிகர்கள், அடேயப்பா.. தஞ்சை முழுவதும் என்ன கூட்டம்.

அவன் கோயிலை இடமாகச் சுற்றினான். குளக்கரையிலிருந்து உற்றுப் பார்த்தான். கோயிலைச் சுற்றிய வாய்க்காலில் நீர் நிரம்ப ஓடிக்கொண்டிருந்தது. அந்த மண்மேட்டுப் பகுதிக்கு அருகே போக முடியாதபடி சுற்றி அழுத்தமான சவுக்கு வேலி இருக்கிறது.

வெளியே இருப்பது உயரமான வேலி. அதற்குள்ளே பத்தடி தள்ளி சற்றுக் குறைவான உயரமுள்ள வேலி. அதைத்தாண்டி நான்கு பெரிய கோலுக்கு ஒரு ஆள் வீதம் நின்றிருந்தார்கள். பல இடங்களில் தீவட்டிகள் நிறுத்தப்பட்டு அந்த இடமே ஜெக



ஜோதியாக காட்சியளித்தது. அதைத் தாண்டி உள்ளே போவது என்பது சரியாக இராது. பெரிய பெரிய சமையல் பாத்திரங்கள் உள்ளே போகின்றன. அதில் அமர்ந்து போய்விடலாமா. பார்த்து விட்டால் நொறுக்கி விடுவார்கள். அதுவும் தவறாக முடியும். ஓம் காளி எனக்கு வரமருள்வாய் என் குறி தப்பாதிருக்க வரம் தருவாய்.

பரசு நம்பூதிரி வேண்டினான். மெல்ல நடந்து போய் சால்வை யைத் தரையில் விரித்து புல் தரையில் படுத்துக் கொண்டான். வெறும் வானம் பார்த்தான்.

ஒருவேளை தப்பிப் பிழைத்தால் என்ன செய்வது. எங்கு போவது. சேரதேசமா, துரத்தியபடிப்பார்கள். மேலைச்சாளுக்கி யமா. அங்கும் வரக்கூடும் அங்கிருந்து நாகப்பட்டினத்திற்கு குதிரையில் ஓடிப் போய் படகு பிடித்து ஈழத்திற்குப் போய். பல நாட்கள் தங்கி பெரிய நாவாயில் ஏறி தொலைதூரம் நகர்ந்துவிட வேண்டும்.

சேரதேசத்து நம்பூதிரிகள் பலரும் மஞ்சள் நிறத்து சப்பை மூக்கு மனிதர்கள். வாழும் தேசத்திற்குப் போய் விட்டார்கள். அது சிங்கங்கள் அதிகம் வாழும் இடமாம். உடனடியாக மரணம் இல்லாது. இன்னும் இருபது வருடம் கழித்து மரணம் என்றுவரின் அதுவரை வாழ்க்கையைப் பூரணமாக அனுபவித்துவிடலாம்.

சிறிய உருவமுள்ள பெண்களைத் திருமணம் செய்து கொண்டு குழந்தைகள் பெற்று கொள்ளலாம். என்ன சேரதேசம். என்ன பாண்டியதேசம். என்ன சோழ தேசம். எல்லாம் தாண்டி மொழி யறியாத மனிதர்களோடு, பகைமையில்லாது வரலாம். பிறந்ததி லிருந்து பகைமை கொண்டு, பகைமை கொண்டு வாழ்க்கையே வீணாகப்போயிற்று. பதட்டப்பட்டு... பதட்டப்பட்டு தூக்கமே யில்லாமல் போயிற்று. வரவர மோசமான கனவுகள் வருகின்றன.

மலை உச்சியிலிருந்து விழுவது போலவும், பூமிபிளந்து உள்ளுக் குள் இழுப்பது போலவும் கனவுகள் இருக்கின்றன. எல்லாம் மனக்கிலேசத்தின் சாயல்கள், செத்துப் போய் விடுவோமோ என்ற பயத்தினுடைய விளைவுகள். வெகுநாள் வாழ்வோம் என்ற நம்பிக்கை ஒரு துளி இருந்தாலும், போதும் ரம்மியமான கனவுகள் வரும். நமக்கு இப்படிக் கனவுகள் வருகின்றனவே. இந்த இராஜராஜனுக்கு என்ன கனவுகள் வரும். அவன் மல்லாந்து வானம் பார்த்துக் கொண்டே தூங்கிப் போனான்.

விடிய இன்னும் இரண்டு நாழிகை இருக்கும் போது மாதேவ அடிகள் எழுந்து கனத்த சால்வையில் தன்னைப் போர்த்திக் கொண்டு மெல்ல கோயில் நோக்கி நடந்தார்.

கடந்த மூன்று நாட்களாக எவரோடும் பேசாமல் உப்பில்லாத கீரையும், வாழைப்பழமும், நீரும் மட்டுமே உணவாக எடுத்துக் கொண்டு, உள்ளே தன்னைப் பார்க்க முயற்சி செய்து கொண்டிருந் தார். கருணையே வடிவான புத்தர் மீது தன் மனதை முழுவதுமாய் ஈடுபடுத்திக் கொண்டிருந்தார். புத்தரைப்பற்றி எத்தனை விதமான கதைகள். புத்தர் எல்லா பிறப்பிலும் எப்படி தர்ம சிந்தனையோடு இருந்தார் என்பதை யோசிக்க, யோசிக்க உள்ளம் நெகிழ்ந்து போயிற்று.

இறைவனுக்குக் கோயில் என்பது ஒரு வேடிக்கையான மனித விளையாட்டு. எல்லாம் வல்ல இறைவனுக்கு என்ன கோயில் கட்டிவிட முடியும். எதற்குள் அடக்கி வைக்க முடியும். இறைவன் என்ற பிரமாண்டத்தை உணர்ந்தவர் எவருக்கேனும் கோயில் கட்ட முடியுமா? மதம் பற்றி நினைக்க முடியுமா. அந்தப் பிரமாண்டம் தெரிந்தால் மூச்சடைத்து சாக வேண்டியது தான். உயிரோடு இருக்கும் வரை பிரமாண்டம் பற்றி நிச்சயம் தெரியாது. ஒரு அனுமானத்தில்தான் அந்த பிரமாண்டம் மனிதனுக்குத் தெரிய வருகிறது.

கோயிலினுடைய உயரமும் இதற்குண்டான உழைப்பும் பார்த்தால் குலை நடுக்கம் வருகிறது. இறைவன் இந்த பிரமாண் டத்தைக் கேட்கவேயில்லை. இறைவனுக்கு இது பிரமாண்டமும் இல்லை. கடவுள் பற்றிய நினைப்போடு மனிதர்கள் ஆடுகின்ற பல்வேறு நாடகங்களில் இதுவும் ஒன்று. பல்வேறு விஷயங்களில் இதுவும் ஒன்று. நான் செய்தேன். நான் செய்தேன் என்ற இறுமாப்புதான் எல்லாக் கலைவடிவமும்.

கலை வடிவங்கள் பக்தி என்ற போர்வை போர்த்திக் கொண்டு வருகின்றன. பக்தி என்பது ஒரு அவையடக்கம். அவையடக்கம் என்பது அகம்பாவம். தாசானுதாசன் என்று தனக்குத்தானே பிற காதுபட சொல்லுகின்ற பொய். தன்னையறியும் பக்குவம் வருகிறபோது அங்கு எந்த மதமும் இல்லை. எந்தச் சடங்கும் இல்லை. எந்தக் கலைவியக்தியும் இல்லை.

மழிக்கப்பட்ட தலையும், ஒற்றைத் துவராடையும், உயிர் வாழக் கொஞ்சம் உணவு என்றும் வாழ்க்கை முடிந்து விடுகிறது. ஆனால் துறவிகளிலும் வேடதாரிகள் இருக்கிறார்கள். பௌத்தர்களிலும்



பொய்யானவர்கள் இருக்கிறார்கள். உண்மையறிகின்ற தன்மை உள்ளுக்குள் வந்து விட்டதென்றால் செத்தவரைப் போல திரி என்கிறார்களே.. அந்த இயல்பு தான் வந்து விடுகிறது. இந்த விஷயத்தை விதம்விதமான கதைகளாலும், கேள்விகளாலும் பௌத்த மதம் சொல்கிறது. கதைகளைப் புரிந்து கொள்வதற்கு பெருந்தவம் செய்ய வேண்டியிருக்கிறது.

உன் எதிரே கௌதம புத்தர் நடந்து வந்தால் நீ என்ன செய்வாய் என்ற ஒரு கேள்வி இருக்கிறது. இந்தக் கேள்விக்கு யோசித்து பதில் சொல். ஒரு வருடம்கூட யோசிப்பதற்கு நேரம் எடுத்துக்கொள் என்று சங்கத்தில் சொல்லப்பட்டது.

கௌதம புத்தர் எதிரே வந்தால் விழுந்து வணங்குவேன். என் வீட்டிற்கு அழைத்துப் போவேன். எல்லோருக்கும் சொல்வேன். தோரணம் கட்டுவேன். பூமாலை சூடுவேன். பாதம் கழுவுவேன் என்று விதம்விதமான பதில்கள் தோன்றின. ஆனால், பல வருடங் களுக்குப் பிறகு இன்று காலை தான் புதிய பதில் தென்பட்டது.

கௌதம புத்தர் எதிரே இன்னொருவராய் வருகிறபோது இந்த ஆட்டமெல்லாம் ஆடுவேன். இதுதான் பக்தி என்கிற ஆட்டம். பக்தி என்கிற அவையடக்கம். ஆனால், கௌதம புத்தர் எனக் குள்ளே இருக்கும் போதே புத்தரைச் சுமந்து கொண்டிருக்கும் போது, நானே புத்தனாக இருக்கும்போதே எதிரே வருகிறவரைப் பற்றி எனக்கு என்ன கவலை. கடந்து போவேன். அது எவரென்று தெரியாமலேயே போவேன் என்பது தான் உண்மையான பதில் இதுதான் செத்தாரைப் போல திரி என்ற வாக்கியத்திற்கான பதில்.

பௌத்த விகாரத்தில் மிகப்பெரிய புத்தர் சிலையைப் பார்த்து விட்டுத்தான். பளபளக்கிற தங்கச்சிலை புத்தரை கண்டுவிட்ட பிறகுதான் சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவருக்கு இங்கே இப்படியொரு பிரமாண்டமான சிவலிங்கமும், விமான மும் எழுப்புகின்ற எண்ணம் உதித்த தாம். இது வெளிப்பார்வை. உள்ளே பார்த்திருந்தால் இது வேறுமாதிரி இருக்கும்.

தங்கம் மிக அரிதான உலோகம். அற்புதமான உலோகம். அந்த உலோகத்தில் மிக பிரமாண்டமான புத்தர் சிலை செய்யப்பட்ட போது புத்தர் அரிதானவர் என்று சொல்லத்தான் முயற்சிக்கப் பட்டது. உண்மையானது தான் பெரிதானது என்று தைத்து விட்டால் இப்படிக் கோயில் கட்டத் தோன்றாது. அதற்கு மாறாய் புத்தர் என்பவர் யார் என்று தேடத் துவங்கியிருக்கும். புத்தரை உள்ளுக்குள்ளே கண்டுபிடித்திருக்க முடியும்.

சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவர் பார்த்தது வெளிப்பார்வை. அவர்கள் கோயில் போல என்னுடைய கோயில், அவர்கள் சிற்பம்போல என்னுடைய சிற்பம். அவர்கள் கடவுளைப் போல என்னுடைய கடவுள் என்று தன்னை இரண்டாகப் பகுத்துக் கொண்டதன் விளைவுதான் இந்தக் கலை வடிவம். ஆனால், இதை யாரிடமும் விளக்கிக் கொண்டிருக்க முடியாது. இது சொல்லி வருவதல்ல. இது தானே உணர்வது. தன்னால் தான் தெளிவது. தலையெழுத்து சரியாக இருந்தால்தான் இது தெரியவரும். அதுவே தன்னைக் காட்டினாலொழிய அதைப் புரிந்துகொள்ள முடியாது.

அப்போது பௌத்த சன்னியாசியும் இல்லை. என்னுடைய நானற்ற தன்மைதான் புத்தம். அந்த அமைதிதான் புத்தம். எல்லோரையும் ஒரேவிதமாகப் பார்ப்பதுதான் புத்தம். வெறுமே நடந்துபோய் பிராண வாயுவை உள்ளிழுத்து நிற்கும்போது யாரோ பேசுவது கேட்டது. அவள் மெல்ல நடந்தாள்.

கொல்லு, அடி, உதை என்று யாரோ கத்திக் கொண்டிருந் தார்கள்.

அவள் இன்னும் நகர்ந்து போய் பார்த்தாள்.

தொலைவிலுள்ள அந்த வெளிச்சம் மிக மெல்லியதாக இந்தப் பக்கம் விழுந்து கொண்டிருந்தது. யாரோ ஒருவன் தலை முதல் கால்வரை போர்த்திய படி புரண்டு புரண்டு கை கால் உதைத்து கனவில் உளறிக் கொண்டிருந்தான்.

அடேயப்பா... என்ன வேதனை இது.

அவள் கருணையோடு அவனைப் பார்த்தாள்.

'அவனை விடப்படாது. என் புள்ளைய கொன்னியேடா. என் புள்ளைய கொன்னியே... நான் உன்னை கொல்வேனடா. டேய்.. இராஜராஜா... நான் உன்னை கொல்வேன். ஒரே வீச்சில் கொல் வேன். வீசி அடிக்க கொல்வேன். விஷம் வச்சுண்டிருக்கேண்டா இராஜராஜா. விஷம் வச்சுண்டிருக்கேன். என் புள்ளைய வெட்டிக் கொன்ன இல்ல. அதேபோல உன்னை வீசி அடிச்சு கொல் வேண்டா' என்று உளர அவள் அருகே போய் நின்று அவனை உற்றுப் பார்த்தாள்.

என்ன வேதனை இது. யார் யாரைக் கொல்லுவது. உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவரைக் கொல்வதற்கு இங்கே ஒருவன் தனியே புரண்டு படுத்துக் கொண்டு தூக்கத்தில் உளறிக் கொண்டிருக் கிறான். அப்படிப்பட்ட சங்கடம் என்ன இவனுக்கு. எப்பொழுது



இராஜராஜர் இவன் மகனைக் கொன்றார். மகனைக் கொன்றது நனவா, கனவா. இவன் இப்பொழுது காண்பது நனவா, கனவா அல்லது எழுந்த பிறகு இருக்கப்போவது கனவா.

மனிதனே.. அமைதியாய் இரு. மனிதனே அமைதியாய் இரு. மனிதனே அமைதியாய் இரு. நீ கொல்லாது போனாலும் இராஜராஜர் ஒருநாள் மடியத்தான் போகிறார். நீ கொன்றுவிட்டா லும் கொல்லாது விட்டாலும் நீயும் ஒருநாள் மடியத்தான் போகிறாய். இறப்பு நிச்சயம். இறப்பே சத்தியம். இறப்பு எப்போது என்று இன்றுவரை தெரியவில்லை. எனவே வாழ்க்கை அசத்தியம். இறப்பு நிச்சயம் வரும். எனவே இறப்பு சத்தியம். இறப்பு பற்றி யோசி.

அவள் தன் கைகளால் அவனிலிருந்து பீறிட்ட நீலக் கதிர்களைத் தடவிக் கொடுத்தாள். அவன் சட்டென்று அமைதியானான். திடுக்கிட்டு விழித்துக் கொண்டான். எழுந்து நின்றான்.

''யாரது.. என்ன..'' என்று தடுமாறினான்.

இடுப்பு வேட்டி அவிழ்ந்தது. இறுகப்பிடித்துக் கொண்டான். எதனாலேயோ அவன் அங்கஹீனன் என்ற உணர்வு அவளுக்குத் தோன்றியது.

''கனவு கண்டீரா'' அவள் நிதானமாகக் கேட்டாள்.

அவன் என்ன பதில் சொல்வதென்று தெரியாமல் ஆமாம். என்று பதில் சொன்னான்.

''விழித்திருப்பதும் கனவு போன்றதே. வாழ்வும் மாயையே.'' என்று சொல்லிவிட்டு நகர்ந்து போனாள்.

சற்று தூரம் போய் திரும்பிப் பார்த்தாள். அவனுடைய கதிர்வீச்சு முன்னிலும் நீளமாக இருந்தது.

என்ன ஆங்காரம். என்ன கோபம். மனிதனே அமைதியாக இரு. அவள் மறுபடியும் இறைஞ்சினாள்.

அவன் தலைகவிழ்ந்து உட்கார்ந்து கொண்டான்.

யாரது. என்ன சொன்னார்கள். என்ன செய்தார்கள்.

தலையைப் பிடித்துக் கொண்டான். சட்டென்று சுதாகரித்தான். சகலமும் வாரிக்கொண்டு அந்த இடத்தைவிட்டு வேகமாக நகர்ந்தான்.

அவன் மீது இரக்கப்படுவதற்கு முன்பு அவன் பேசியது என்ன, ஞாபகமப்படுத்திக் கொள். மாதேவடிகள் திகைத்தாள். கொல்.

இராஜராஜனைக் கொல். என்றல்லவா சொன்னான். இப்பொழுது என்ன செய்வது.

உள்ளே தடுமாறினாள். ஏதோ நடந்து விட்டுப் போகட்டு மென்று மௌனமாக இருக்க வேண்டுமா அல்லது இவனைப்பற்றி அரசிடம் சொல்ல வேண்டுமா. உள்ளுக்குள்ளே இருக்கிற என் புத்தர் என்ன சொல்கிறார். அலை மோதினாள். அவளுக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. அவள் தத்துவம் அவளெதிரெ வெறுமே நின்றது.

## 174

கோட்டை வாசலில் நாற்பத்தேழு உலோகச் சிற்பிகள் தங்கள் பெண்டுகளுடன் விடியற் காலையில் ஒன்றாகக் குழுமினார்கள். அரசரைப் பார்க்க வேண்டுமென்று விருப்பம் தெரிவித்தார்கள். கோட்டையின் தலைமைக் காவலர்கள் அவர்களை உற்றுப் பார்த்து, பல்வேறு கேள்விகள் கேட்டு, பெருங்கதவை விரியத் திறந்து வருக... வருக... என்று உள்ளே அழைத்தார்கள். உலோகச் சிற்பிகள் முகம் மலர்ந்தார்கள்.

எப்பேர்ப்பட்ட பாக்கியம். சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவர் தினமும் புழங்கும் அரண்மனைக்கு அருகே போய். அவரைப் பார்க்கப் போகிறோம் என்பது சாதாரணமான விஷயமா? வாழ்க்கையில் எல்லோருக்கும் கிடைக்குமா? இந்தக் கோட்டையின் வாசலில் நிற்பதே பெரும் பாக்கியம். உள்ளே கதவை விரியத் திறந்து அரண்மனைக்கருகே அழைத்துப் போகிறார்கள் என்றால், அது இன்னமும் சந்தோஷமில்லையா. எத்தனை மாளிகைகள். இது யாருடையது, அது யாருடையது என்றெல்லாம் கேட்டுக் கொண்டு வர, அவர்கள் கேட்பதற்கு முன்பே உடன் வந்த சில வீரர்கள் சுட்டிக்காட்டினார்கள்.

மாடத்திலிருந்து ஒரு பெண்மணி யார் என்று கேட்க, உலோகச் சிற்பிகள் என்று கீழிருந்த வீரன் உரத்த குரலில் பதில் சொல்ல, ''குழம்பு கரண்டி உடைந்து விட்டது சரி செய்ய முடியுமா.'' என்று கேட்க அந்தக் கூட்டம் தயங்கி நின்றது. செய்து தருகிறோம் என்று சொன்னது. ஆனால், அந்தக் கோட்டைக் காவலன் வேறுவிதமாக அவளுக்குப் பதில் சொன்னான்.



''வருகிறபோது நான் நிற்க வைக்கிறேனம்மா. இப்பொழுது மிக அவசரமாக அரசர் அழைத்து வரச்சொன்னார்.''

''அப்படியா... போ... போ...'' என்று வயதான பெண்மணி விடை கொடுத்தாள்.

''அரசர் எங்களை அழைத்து வரச் சொன்னாரா.''

உலோகச் சிற்பிகள் கேள்வி கேட்டார்கள்.

''இல்லை. அப்படிச் சொன்னால்தான். அந்த அம்மையார் உங்களை விடுவார். இல்லையெனில் மொத்த பேரையும் ஒரு கரண்டிக்காக உள்ளே அழைத்து, அதை இப்பொழுதே சரி செய்து கொடு என்று சொல்வார். என்றைக்கு சரி செய்து என்றைக்கு அரசரைப் பார்ப்பது. உலோகச் சிற்பிகள் போனால் குழம்பு கரண்டி சரி செய்ய வேண்டும். மரத்தச்சர்கள் போனால் கதவு சரி செய்ய வேண்டும். கருமார்கள் போனால் பின் பக்கத்து வேலியை முடைய வேண்டும், என்று ஏதாவது சொல்லிக் கொண்டே தான் இருப்பார்கள்.''

''யார் அந்த அம்மையார்.''

''மூவேந்த வேளாளரின் மனைவி. பேரவஸ்தை. என்று அந்த வீரன் சொல்ல. அவனை ஆச்சரியத்தோடு அந்த உலோகச் சிற்பிகள் பார்த்தார்கள்.

வல்லமை மிக்கவரும், அதிகாரம் உள்ளவருமான மூவேந்த வேளாளரின் மனைவியையே பேரவஸ்தை என்று சொல்கிறானே. இவன் எவ்வளவு துணிச்சல்காரன் என்று வியந்தார்கள். அதே போலவே இவர்களுக்கும் ஒரு அலட்சிய முகபாவம் மாறியது. இதையெல்லாம் ஊருக்குப் போய் மக்களிடம் சொல்ல வேண்டும். மூவேந்த வேளாளரின் மனைவி ஒரு பேரவஸ்தை என்று இவனைப் போலவே முகம் வைத்துக் கொண்டு பேச வேண்டும் என்று பலர் மனதிற்குள் திட்டமிட்டார்கள்.

அந்த அரண்மனையின் ஒவ்வொரு அசைவும் அவர்கள் நெஞ்சுக்குள் படிந்து கொண்டே வந்தது.

''அரசருக்கு ஏதும் கொண்டு வந்திருக்கிறீர்களா. வெறும் கையோடு வந்திருக்கிறீர்கள் போலிருக்கிறதே.'' ஒரு காவலன் கேட்க, ''என்ன கொண்டு வர வேண்டும் என்று ஆவலாக விசாரித்தார்கள்.''

''பழங்களும், மலர் மாலைகளும்...''

''அப்படியா. எங்கள் ஊர்ப்பக்கம் பழங்கள் ஏதுமில்லை. அரசரிடம் இல்லாத பழங்களா என்று வந்துவிட்டோம். பழங்கள் வாங்கி வரவேண்டும் என்பது சம்பிராதாயமா.''

''வெறுங்கையோடு வரக்கூடாது என்பதுதான் சம்பிரதாயம்.'' என்று அந்தக் காவலன் சொல்ல, அவர்கள் தயங்குவது தெரிந்தது.

''பரவாயில்லை வாருங்கள்'' என்று அவன் அவர்களை விரைவாக அழைத்துச் சென்றான். இதுதான் இளவரசர் மாளிகை என்று காண்பித்தான்.

சிறிது தாண்டிப்போய் சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜராஜத் தேவரின் மாளிகை முன்பு நின்றார்கள். வந்த காவலன் பதினெட்டு படிகள் ஏறி அங்கிருந்த காவலர்தலைவனிடம் பேச, அவர் அங்கிருந்தே கூர்மையாக இவர்களைப் பார்த்தார். சோதித்து விட்டாயா என்றார். வாசலில் சோதித்தார்கள் என்று சொன்னான்.

அருகிலிருந்த வீரர்களுக்குக் கண்காட்ட அவர்கள் கையில் வேலோடு இறங்கி வந்தார்கள். வேலைத் தரையில் குத்தி நட்டார்கள். உலோகச் சிற்பிகளை வேகமாகத் தடவி சோதனை செய்தார்கள். பெண்டுகளைத் தனியாக நிற்க வைத்தார்கள்.

ஒரு அதிகாரிச்சியை உரக்க அழைத்தார்கள். அதிகாரிச்சி வந்து பெண்டுகளையும் சோதனை செய்தாள். அவர்களுக்கு எலுமிச்சை வாசனை கலந்த குடிநீரும், நீர்மோரும் தரப்பட்டன.

அந்த இடம் பரபரப்பாயிற்று. பஞ்சவன்மாதேவி முதலில் வந்து இறங்கினார். பட்டமகிஷி தந்திசத்தி விடங்கி பின்னால் வந்து இறங்கினார். இருவரும் பேசிக்கொண்டு நடந்து வந்து உலோகச் சிற்பியின் எதிரே நின்றார்கள். கைகூப்பினார்கள்.

உலோகச் சிற்பிகள் கீழே விழுந்து நமஸ்கரிக்க முற்படுகையில் கூடாது என்று பஞ்சவன்மாதேவி அதட்டும் குரலில் சொல்ல, அவர்கள் தயங்கி நின்றார்கள்.

''அரசரை வணங்கலாம். எங்களை இப்படி வணங்க வேண்டிய அவசியமில்லை.''

''நலமாக இருக்கிறீர்களா.''

''என்ன ஏதேனும் முக்கியமான விஷயமா.'' என்று கேட்டுக் கொண்டிருக்கும்போதே அரசருடைய பேச்சுக்குரல் கேட்டது.

அரசரும், இளவரசரும் மேல்படியில் இருந்தபடியே வந்திருந் தோரை உற்றுப் பார்த்தார்கள்.



அரசர் படியிறங்க முயற்சிக்கும்போதே, லேசான ஒரு தடுமாற்றம் ஏற்பட, சட்டென்று இளவரசர் தாங்கிக் கொண்டார். அரசர் தனது இடது கையை இளவரசரின் மேல் போட்டபடி மெல்ல படியிறங்கினார். அரசருக்கு ஏற்ற வண்ணம் அரசரின் அசைவோடு தன் அசைவை வைத்துக் கொண்டு இளவரசரும் படியிறங்கினார். சட்டென்று அரசருக்கு தள்ளாட்டம் வந்து விட்டதே என்ற ஒரு எண்ணம் அங்குள்ள உலோகச் சிற்பிகளுக்குத் தோன்றியது.

மார்புப்படம் குறையவில்லை. முகவிலாசம் குறையவில்லை. கைகளின் அசைவு குறையவில்லை. கால் மட்டும் சற்று சரியாகப் பரவாமல் சிரமப்படுகிறது. காலில் கோளாறா அல்லது கண்ணில் கோளாறா. பார்வை சரியில்லாததால் படியிறங்கும்போது மெல்லத் தடுமாறுகிறாரா என்ற எண்ணம் ஏற்பட்டது. நான்காவது படிக்கு அருகே நின்று அரசர் கை கூப்பும் போது, ''சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவர் வாழ்க... வாழ்க என்று ஒருவன் சொல்ல, எல்லோரும் வாழ்த்துச் சொல்லி நெடுஞ்சாண் கிடையாய் மண்ணில் விழுந்து நமஸ்கரித்தார்கள்.

''போதுமய்யா. போதும். போதும்..'' என்று சொல்ல மெல்ல ஒவ்வொருவராய் எழுந்து நின்றார்கள்.

அரசர் இன்னும் இரண்டு படி கீறிழங்கி வந்தார். இளவரசர் அரசருக்குப் பின்னே நின்று கொண்டார்.

அரசரைவிட மூன்று பிடி உயரமாய் இன்னும் பலமான ஆகிருதியாய் பெரிய மீசையாய் சிவந்த விழிகளாய், உருண்டைக் கண்களாய், கொழுத்த கன்னங்களாய், லேசான தொந்தியுடன் நடையில் ஒரு அலட்சியத்தோடு இளவரசர் இருப்பதை அவர்கள் சந்தோஷமாகப் பார்த்தார்கள். மேலே பெண்கள் கூட்டம் அதிகரித்தது. படிகளில் இறங்கிப்பரவி நின்று கொண்டார்கள்.

''என்ன விசேஷம். திடீரென்று என்னைப் பார்க்க வேண்டும் என்று சொன்னீர்களாம். இத்தனை பேர் வந்திருக்கிறீர்களே. ஏதேனும் விண்ணப்பமா.'' என்று கேட்க, ''எந்த விண்ணப்பமும் இல்லை. எங்களுடைய பணிகளை நாங்கள் துவங்க வேண்டாமா. அதற்கு அனுமதி கேட்டு வந்திருக்கிறோம்.''

''ஆமாம், உங்கள் பணிகளைத் துவங்குங்கள் என்று முன்னரே சொன்னதாக ஞாபகம்.''

"என்னென்ன என்று எங்களுக்குத் தெரிவிக்க வேண்டும். ஆகம விதிகள்படி சில சிலைகள் செய்வதுண்டு. ஆகமவிதிக்கு அப்பால், சில கோயில்களில் தனித்த சிலைகளும் செய்வதுண்டு.

நாம் வேறு ஏதேனும் சிலைகள் செய்ய விரும்புகின்றோமா என்று சகலரையும் கேட்டுக் கொண்டு போவதற்காக வந்திருக் கிறோம். அதையும் தவிர, இப்போது விமானத்தைச் சுற்றியிருக்கிற மண்ணை அப்புறப்படுத்தப் போகிறீர்களாம். மிகப்பெரிய வேலையாம். அதற்கு பல்லாயிரக் கணக்கான மக்கள் ஒத்துழைப்பு தேவைப்படுகிறதாம். நாங்களும் அந்த வேலைக்குத் தயாராக இருக்கிறோம் என்ற சொல்வதற்காகத்தான் வந்திருக்கிறோம்.

கூடையில் மண் அள்ளுவதற்கான கருவிகள் கொண்டு வந்திருக் கிறோம். உங்களுக்கு எங்களது அன்பளிப்பாக ஒரு சிறிய பரிசும் கொண்டு வந்திருக்கிறோம்.'' என்று சொல்ல, "அட.... எனக்குப் பரிசா.. நன்றாக இருக்கிறதே... என்ன ஏதாவது சிலைகள் செய்து கொண்டு வந்திருக்கிறீர்களா. வேழமுகத்தவன் சிலையா? அல்லது ரிஷபாரூடர் சிலையா? என்ன கொண்டு வந்திருக்கிறீர்கள்?'' என்று கேட்டார்.

"அரசருக்கு ரிஷபா ரூடர் என்றால் மிகப்பிரியம் என்று எங்களுக்குத் தெரியும். அந்தச்சிலை உருவாகிக் கொண்டிருக்கிறது. நாங்கள் மண் அள்ளுவதற்காக அரசருக்கு ஒரு சிறிய பரிசு கொண்டு வந்திருக்கிறோம்.''

"மண் அள்ளுவதற்குப் பரிசு என்றால் என்ன அர்த்தம்.''

ஒரு துணியின் முடிச்சை அவிழ்த்து மெல்லப் பிரித்து உள்ளுக்குள் இருக்கிற வெள்ளைத்துணி மூட்டையை மறுபடியும் அவிழ்த்து அதற்குள் இருக்கின்ற சிகப்புத்துணி மூட்டையை அவிழ்த்து வெளியே எடுத்த போது தகதகவென்று தங்கத்தில் ஒரு மண்வெட்டி மின்னியது. வெள்ளிப்பிடி போட்டு அந்த மண் வெட்டி இருந்தது. பின்னால் நின்ற பெண்கள் அதைப் பார்த்து விட்டு உரத்த குரலில் கூவினார்கள்.

பஞ்சவன்மாதேவி ஹா.. என்று வாய் பிளந்தாள். தந்திசத்தி விடங்கி இரண்டடி கீழே இறங்கி வந்தாள். இளவரசர் எட்டிப் பார்த்தார். அரசருடைய கண்களும் வியந்தன.

"என்னய்யா இது.. என்ன செய்கிறீர்கள். எதற்கு தங்கத்திலே மண்வெட்டி. தங்கம்தானா.''



"சொக்கத்தங்கம். சிறிதளவு தாமிரம் உறுதிக்காக கலந்திருக் கிறோம். இந்த மண் வெட்டியால் நீங்கள் முதன்முதலில் மண் வெட்டி ஆரம்பித்து வைத்தீர்கள் என்றால், மிக விரைவாக பணிகள் முடிந்துவிடும் என்று நாங்கள் நம்புகின்றோம். எங்கள் காணிக்கையாகக் கொடுக்கிறோம்.'' என்று சொன்னதும் மண்வெட்டியை வாங்கிக் கொள்வதற்கு முன்பு அரசர் படியிறங்கி அருகேயிருந்த கிழவனை இழுத்துத் தழுவிக் கொண்டார். அவன் நெற்றியில் முத்தமிட்டார். இன்னும் இறுக்கிக் கொண்டார். அந்தக் கிழவன் நடுநடுங்கினான். மண்வெட்டியைக் கையில் வைத்திருக் கின்ற அந்தக் குழுவின் தலைவர் மண்வெட்டியை அரசரின் காலில் வைத்தார். மறுபடியும் அந்தக்கூட்டம் காலில் விழுந்து அழுதது.

"பஞ்சவன்மாதேவி என்ன இது. என்ன அற்புதம் இது. என் ஜனங்கள் என்மீது எத்தனை காதலாக இருக்கிறார்கள் பார்த்தாயா. எனக்கு என்ன தேவையென்பதை இந்த ஜனங்கள் எப்படி இடை யறாது யோசித்துக் கொண்டிருக்கிறார்கள். பார்த்தாயா. என்னை எப்படி கௌரப்படுத்த வேண்டுமென்பதை இவர்கள் விதம்வித மாக சிந்திக்கிறார்கள் பார்த்தாயா.

கங்கை நீர் கொண்டு வருகிறேன் என்று ஒரு அந்தணர் கூட்டம் போயிருக்கிறது. மண் அகற்ற வேண்டும் என்று சொன்னதும் தங்கத்திலே மண் வெட்டி கொண்டு வந்து உலோகச் சிற்பிகள் நிற்கிறார்கள். இதைவிடப் பெரும் பாக்கியம் ஒரு அரசனுக்கு என்ன வேண்டும்.

நான் வெற்றி பெற்றதெல்லாம் மேலைச்சாளுக்கியத்தையும், கீழைச்சாளுக்கியத்தையும், கங்கதேசத்தையும், ராஷ்டிரகூடரை யும், சேரனையும், பாண்டியனையும் அல்ல. இதோ இந்த தஞ்சை ஜனங்களின் அன்பை, சோழதேசத்து மக்களின் பிரியத்தை நான் வெற்றி பெற்றிருக்கிறேன். எனக்கு மரணம் சந்தோஷமாக வரும். என்ன சொல்கிறாய் பஞ்சவன்மாதேவி.''

பஞ்சவன்மாதேவி இறங்கி அவர் தோளில் கை வைத்தாள். உதட்டில் விரல் வைத்தாள்.

"போதும். மண்வெட்டியை எடுத்துக் கொண்டு அவர்களை ஆசீர்வாதம் செய்யுங்கள்.'' என்று சொல்ல, அரசர் குனிவதற்கு முன்பு இளவரசர் குனிந்து மண்வெட்டியை எடுத்தார். அரசரிடம் கொடுத்தார். இளவரசர் கொடுத்த மண் வெட்டியை சந்தோஷமாக அரசர் வாங்கிக் கொண்டார். நெஞ்சிலே வைத்துக் கொண்டார். அவர் கண்களில் நீர் கட்டியது.

இவர் மீது இத்தனை உயிராக இந்த ஜனங்கள் இருப்பதற்கு என்ன காரணம். அப்படி என்ன ஒரு மாயம் இவரிடம் இருக்கிறது. இவர் நல்லவர் என்று நேசிக்கிறார்களா. வல்லவர் என்று நேசிக்கிறார்களா. வல்லமையும், நல்லவையும் கலந்திருக்கிறது என்பதற்காக இப்படிக் கிறங்கியிருக்கிறார்களா. தங்கத்தில் மண்வெட்டி செய்து வெள்ளியில் பிடிபோட்டு நவரத்தனங்களை இழைத்துக் கொண்டு வந்து கொடுத்திருக்கிறார்கள். ப்பா... இப்படிச் செய்ய வேண்டும் என்ற ஒரு எண்ணம் மனிதருக்குத் தோன்றியிருக்கிறதே, என்ன விசுவாசம். எந்த ஆர்ப்பாட்டமும் இல்லாமல் ஒரு துணியில் சுற்றிக் கொண்டு வந்து காலடியில் வைக்கிறார்களே. எத்தனை பணிவு இங்கே உயர்வு யாருக்கு. இந்த ஜனங்களுக்கா அல்லது என் முன்னே நின்று கொண்டிருக்கிறானே என் புருஷன் அவனுக்கா.

பஞ்சவன்மாதேவி கிறங்கினாள். அவளுக்கு மெல்லியதாய் தலைசுற்றியது.

நல்ல கர்வம் எனக்கு. அந்தக் கர்வம்தான் எனக்கு தலைச் சுற்றலைக் கொடுக்கிறது. இப்படிப்பட்ட மனிதனைப் புருஷனாக அடைத்துவிட்டோம். இவனோடு நெருங்கிப் பழகி கொஞ்சிக் குலாவிக்கொண்டிருக்கிறோம். மற்ற மனைவியர் இருந்தாலும், என்னைத் திரும்பிப் பார்த்து அவன் பேசுகிறான் என்ற பெருமை எனக்குக் கிடைத்திருக்கிறது. அந்த கர்வத்தினாலே எனக்கு தலைசுற்றுகிறது என்று நினைத்துக் கொண்டாள்.

மோர் குடித்தார்களா என்று விசாரித்தாள். பிறகு மெல்ல தன் அந்தரங்கத் தோழியை அழைத்து முன்னூறு காசுகள் தன் பணப் பெட்டியிலிருந்து எடுத்து வர கட்டளையிட்டாள். அவளுக்கு இந்த உலோகச் சிற்பிகளிடம் என்ன சிலை செய்யச் சொல்வது என்ற எண்ணம் வேகமாக ஓடியது.

இளவரசர் இராஜேந்திரரின் தனித்த ஒற்றர் படையைச் சேர்ந்த குடந்தை குணவழகன் தொலைவில் நின்று ரகசிய செய்கைகள் செய்தான். இராஜேந்திரர் அதை உற்றுப் பார்த்தார்.

மிக அவசரம் என்று அந்தச் சைகை சொல்லியது.

"தந்தையே... இந்த உலோகச் சிற்பிகளுக்கு நான் ஏதேனும் சிலைகள் செய்ய உத்தரவிடலாமா என்று அனுமதி கேட்டார்.

"தாராளமாக நன்றாகச் செய்யலாமே." என்று சொல்ல, பட்டமகிஷி தந்திசத்திவிடங்கி அரசரின் காதோரம் ஏதோ கேட்க. அதற்கு தலையசைக்க இளவரசர் அங்கிருந்து நகர்ந்தார். அரண்மனையின் பின்பக்கம் போனார். அங்கே குடந்தை குணவழகன் நின்றிருந்தான்.



அவன் காதோரம் வேகமாகப் பேசினான்.

"அப்படியா... மாதேவடிகள் சொல்லி அனுப்பினாரா? எப்படியிருந்தான்."

"அங்கஹீனன்."

"அங்கஹீனன் என்றால்... கையா, காலா அல்லது வேறு ஏதேனுமா."

"அதை அவர்களுக்குச் சொல்லத் தெரியவில்லை. கையாகத்தான் இருக்கும். கால் நன்றாக இருந்தது. ஆனால் கால் ஊனமா என்பது தெரியவில்லை. ஒரு உள்ளுணர்வில்தான் அங்கஹீனன் என்று தொடர்ந்தது என்கிறார்கள்."

"உள்ளுணர்வையெல்லாம் நம்பிக் கொண்டா நான் ஆள் தேட முடியும். மாதேவடிகளுக்கு ஏன் இந்த வேலை. சரி, இதைப் புறக்கணிக்கலாகாது. இங்கே எத்தனை பேர் வாசலில் ஒரு குழுவாக எத்தனை வந்திருக்கிறார்கள். இவர்களை தள்ளிப் போகச் சொல்வதா. அருகே விடுவதா. இரண்டடி தூரத்தில் இருக்கிறார்கள். ஒருவன் கத்தியோடு பாய்ந்தாலும் கூட ஆபத்தைத் தவிர்க்க முடியாது. அரண்மனைக்குள்ளேயே கூட அசம்பாவிதங்கள் நடக்கலாம்."

"இப்போது வெளியே நான் காவலைப் பலப்படுத்த வேண்டுமென்றால் என்ன செய்வேன்." யோசித்தார்.

"இதை எவரிடமும் சொல்ல வேண்டாம். நான் அருண்மொழியிடம் சொல்கிறேன். நம்முடைய ஒற்றர் படைக்கு அங்கஹீனமாக எவர் இருந்தாலும், ரகசியமாக விசாரணை நடத்தச் சொல். அவரைப்பற்றி மற்றவருக்கு என்ன தெரிகிறது என்று பார். தெரியவில்லையென்றால் மறுபடியும் விசாரணை நடத்து விசாரணையில் உளறினால் உடனடியாய் கைது செய்."

அடுத்த நான்கு நாழிகையில் தஞ்சை நகரம் முழுவதும் ஒற்றர் படையும், மெய்க்காவலர் படையும் கலந்து பேசி காவலைப் பலப்படுத்தினார்கள். சகலரையும் மடக்கி மடக்கி கேள்வி கேட்டார்கள். தோளில் சால்வையோடு வந்தவரையெல்லாம் நிறுத்தி இடுப்பில் சால்வையைக் கட்டி கைவீசிப் போகச் சொன்னார்கள். நொண்டி நடந்து வந்தவரை நிறுத்தி எந்த ஊர்

என்று அடுத்தவரையும், அவரையும் விசாரித்தார்கள். சோதனையிட்டார்கள்.

ஒரு வீட்டின் திண்ணையில் அமர்ந்திருந்த கையில்லாத அந்த பாண்டியன் ஆபத்துதவிப்படை சேரதேசத்து நம்பூதிரி இதைக் கவனித்தான். என்ன செய்வது என்று யோசித்தான்.

நகரத்திலிருந்து மெல்ல நடந்து புறம்படிக்குப் போய் ஆற்றில் குளித்து கழுத்தளவு தண்ணீரில் நின்றபடி தன் கத்தியினை எடுத்து தன் மீசையை முற்றிலும் மழித்துக் கொண்டான். முன் தலையிலிருந்த ரோமத்தை எடுத்தான். பூணூல் மாட்டிக் கொண்டான். வெகு எளிதில் குடந்தை அந்தணன்போல உருமாறி வெளியே வந்தான்.

ஆற்றங்கரை ஓரத்தில் அடர்ந்த புதர்களுக்கு நடுவிலே வளர்ந்திருந்த பெரிய மரம் பார்த்து அதிலே உடைவாளை ஒளித்து வைத்தான். மரத்திலிருந்து சுற்றுமுற்றும் உற்றுப் பார்த்து கீழிறங்கினான்.

உரத்த குரலில் வேதவாக்கியங்கள் சொல்லியபடி நடந்து வந்தான். அவன் இடுப்பில் பட்டையான விஷக்கல்லும், தட்டையான இரும்புச் சக்கரமும் இருந்தன. கயிறு போட்டு உறையோடு கூடிய சிறிய கத்தியைக் கட்டியிருந்தான். மேலே சால்வையைப் போர்த்திக் கொண்டான். கோயில் வாசலில் திருநீறு கேட்டு வாங்கி நெற்றி முழுவதும் உடம்பு முழுவதும் பூசிக்கொண்டான். மனம் முழுவதும் ஒன்று குவித்து தன்னுடைய மொழியை அந்தணமொழியாக மாற்றுவதற்கு தன் புத்தியை வெகுவேகமாக கட்டளையிட்டு பழக்கப்படுத்தினான். மனசு உரக்கப் பல்வேறு விதமான அந்தண விசாரிப்புகளை கூவிப் பார்த்தது.

தொண்டை நாட்டு அந்தணர்கள் அவர்களுக்கென்று ஒதுக்கிக் கொண்ட பெரிய கொட்டாரத்தில் ஒன்று கூடினார்கள். கொட்டாரம் மிக உயரமாக யானைகளைக் கட்டுவதற்குண்டான வலிமையோடு வேயப்பட்டிருந்தது. போருக்கு வருகின்ற யானையைக் கட்ட வேண்டுமென்றுதான் அந்தக் கொட்டாரத்தை விரைவாகவும் பலமாகவும் கட்டச் சொன்னார்கள். ஆனால், யானைகள் அங்கு கட்டப்படவேயில்லை. கட்டப்படாமல் தொண்டைநாட்டு அந்தணர்கள் பார்த்துக் கொண்டார்கள். சவுக்குக் கொம்புகள் நட்டு மரப் பலகைகள் நட்டு அந்தக் கொட்டாரத்தின் சுவர் ஒட்டி பல இருக்கைகள் செய்து கொண்டார்கள். எளிதில் நகர்த்தக்கூடிய மேடை ஒன்றைச் செய்தார்கள். அந்த



மேடையை இப்போது நடுநாயகமாகப் போட்டு அவர்களில் முக்கியமானவர்களை அதில் அமர வைத்தார்கள்.

என்ன செய்யப் போகிறோம். எப்படிச் செய்ய போகிறோம் என்று மரப்பலகையில் கரிக்கோட்டினால் எழுதியிருந்தார்கள். அது தான் இன்றைய விவாதம் என்பதை அந்தப் பலகை சொல்லியது.

''என்ன. இந்தக் கேள்விகளுக்கு என்ன அர்த்தம் என்று புரியவில்லையே.''

மிக இளைஞனான ஒரு பையன் மத்திம வயதான ஒரு அந்தணரை நோக்கிக் கேட்டான்.

''இன்றைக்கு நாம் வற்றல் குழம்பைப் பற்றிப் பேசப் போகிறோம். வற்றல் குழம்பை எப்படிச் செய்யப் போகிறோம் என்று நாம் இப்போது விவாதிக்க வேண்டும்.''

கொஞ்சம்கூட முகத்தில் சிரிப்பேற்றாது மிகக்கூர்மையாக அந்த அந்தணர் சொல்ல, அந்த இளைஞன் சரியென்று சொல்லிவிட்டு நகர்ந்தான்.

''சும்மாயிருக்க முடியாதா. இவன் நடுக்கூடத்தில் எழுந்து நின்று நீங்கள் ஏதோ பேசுகிறீர்களே, வற்றல் குழம்பு பற்றி யார் பேசுவார்கள் என்று கேள்வி கேட்பான். பேச்சு கெடும். கேலியாகும். சிரிப்பாகும்.''

''சரி, எந்நேரமும் நாம் முறைத்துக் கொண்டே முகத்தை இறுக்கிக் கொண்டே பேச முடியுமா. நடுநடுவே நாமும் வாய்விட்டுச் சிரிக்க வேண்டுமல்லவா. அதற்காகத்தான் இப்படிச் சொல்லி அனுப்பினேன்.''

''அவன் கொஞ்சம் இரண்டாங்கெட்டான். நீ சொன்னது போல நடுசபையில் கேட்டாலும் கேட்பான்.''

''யார், அவனா. உம்மை சந்தியில் இழுக்கப் போகிறான். இரண்டாங்கெட்டான் என்று எவரை நினைத்துக் கொண்டிருக்கிறாயோ அவர்கள் எல்லோருமே நாடக நடிகர்கள் என்பதைப் புரிந்து கொள். வயதில் இளையவனாக இருக்கிறான் என்று அவனை வீணை ஆதிச்சனிடம் அனுப்பி பிறகு தளிச்சேரி பெண்டுகளுக்குப் பங்கு கொடுக்கிற கணக்கனாகவும், அவர்கள் வீட்டைச் செப்பனிடுவதற்குண்டான செலவுகளைக் கணக்கெழுதுபவனாகவும் வைத்திருக்கிறார்கள். அவன் தளிச்சேரி பெண்டுகளிடம், ''நடனம் கற்றுக் கொண்டு என்னாலும் நடனமாட முடியும். நானும் உங்களோடு சேர்ந்து கொள்ளட்டுமா'' என்று கேட்கிறான்.

வேதம் படிக்க வேண்டிய அந்தணர் கணக்கெழுதுவதே குற்றம். இப்படி நடனம் ஆடியும், பாட்டுப்பாடியும் இருந்தால் நன்றாக இருக்குமா. உங்கள் தொழிலை நீங்கள் செய்யுங்கள் என்று அந்தப் பெண்டுகள் சொல்லி விட்டனவாம். அவனுக்கு ரொம்ப துக்கம். தில்லை சபாபதிக்கு ஒரு விண்ணப்பம் என்று அறுசீர் விருத்தக கவிதையில் பாட்டாக எழுதியிருக்கிறான்.''

ஒரு அந்தணர் சொல்ல, அந்த மத்திம வயது அந்தணர் வாய் பிளந்தார். எல்லோரும் உரக்கச் சிரித்தார்கள்.

''அவன் செய்வது சரியா, தவறா. அது தெரியவில்லை. ஆனால், நம்மவரின் இந்தக் குணம் மிகவும் பிடித்திருக்கிறது. எங்கு போய் வேலையில் அமர்ந்தாலும். அந்த ஜோதியில் இரண்டறக்கலந்து விடுகிறார்கள். அதோ அங்கே குண்டாக அமர்ந்திருக்கிறானே. அவன் கருமார் கணக்கு எழுதுகிறவன். எங்கு இரும்புத்துண்டு பார்த்தாலும் அதை எடுத்து இடுப்பில் சொருகிக் கொள்கிறான். கொண்டு போய் கருமார் உலைக்களத்தில் போட்டு விடுகிறான். ஆயுதங்கள் செப்பனிடுவது பற்றி அவனுக்குக் கரதலப்பாடமாகத் தெரிகிறது.''

''அப்படியானால் இளவரசருக்குத் துணையாக இருக்கிற தொண்டை தேசத்து அந்தணன் இன்னொரு இளவரசன் என்று சொல்கிறீர்களா.''

''கிட்டத்தட்ட அப்படித்தான். நமக்கு அவன் இளவரசன்தான். சரி, விஷயத்திற்கு வருவோம். என்ன செய்யப் போகிறோம் என்ற கேள்விக்கு தெள்ளத் தெளிவாக நம்மிடம் பதில் இருக்கிறது. நிர்வாகத்தின் எல்லாப் பகுதிகளிலும் ஈடுபடப் போகிறோம். கணக்குகளைக் கவனமாகப் பார்த்துப் பார்த்து ஒப்படைக்கப் போகிறோம். எப்படிச் செய்யப் போகிறோம் என்பதும் சிக்கலில்லை. செய்து செய்து பழக்கமாகிவிட்டது. நாம் இப்போது கூடியிருப்பது நமக்கு ஏதேனும் கோரிக்கைகள் இருக்கிறதா. ஒட்டு மொத்தமாக எதையேனும் செய்ய வேண்டுமா என்பதுதான்.

நமது ஊருக்கு எப்போது திரும்பிப் போவது என்று சில இளைஞர்கள் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். தாய் தந்தையரை, தமக்கைகளை மற்ற உறவுகளை விட்டுவிட்டு வந்திருப்பவர்கள் லேசாக ஏக்கத்தோடு கேள்வி கேட்கிறார்கள்.

சோழதேசம்தான் நம் தேசம். தஞ்சைதான் நம்முடைய மண் என்று சொன்னால் அவ்வளவு பிடித்தமாக இல்லை. இங்கிருக்கும் போது சொந்த ஊர் பற்றிய நினைவும், சொந்த ஊரில் இருக்கும் போது தஞ்சைக்கு எப்போது போகப் போகிறோம் என்ற பரபரப்பும் வரத்தான் செய்யும். ஆனாலும் ஒருமுறை போய்வருவது எல்லோருக்குமே சந்தோஷம். நம்மை இரண்டாகப் பிரித்துக் கொண்டு, இரண்டு குழுக்களாகப் போய் வந்து விடவேண்டும். அதிகபட்சமாக அறுபது நாட்கள் ஓய்வு என்ற வைத்துக் கொள்ள வேண்டும்.



திருவொற்றியூரிலிருந்தும் நம் பையன்கள் வந்திருக்கிறார்கள். மேல்பாடி நாட்டு இளைஞர்கள் ஒருமுறை போய்விட்டும் வந்தார்கள். தொண்டை நாடு சற்று எட்டாக்கை என்பதால் போகவில்லை.

''ஊருக்குப் போகவேண்டும் என்ற கோரிக்கையை அரசரிடம் வைப்பதா அல்லது நாமே செய்து கொள்வதா.''

''அரசரிடம் சொல்லாமல் செய்ய முடியாது. இதற்கு ஒரு நல்ல நேரம் இருக்கிறது. இந்தக் கோயில் விமானம் திறந்து மற்ற பணிகள் முடிவடைந்து கோயில் கும்பாபிஷேகம் நடந்தால், கீழைச்சாளுக் கியத்திலிருந்து வந்த படை ஊர் திரும்பும். அந்தப் படையோடு நாம் தொண்டை நாடு போய் விடலாம். தொண்டை நாட்டைக் கடந்து தான் கீழைச்சாளுக்கியம் போகவேண்டும். அரசரது மகள் குந்தவையோடும், அவரது கணவர் விமலாதித்தனோடும் படைகள் போகும்போதும் நாம் சௌகரியமாக எந்தப் பயமுமின்றி தாண்டி விடலாம். வழி நடை மிருகங்கள் பயம் நிச்சயம் இருக்காது.''

''இன்னும் ஒரு வருடம் ஆகாதா.''

''அவ்வளவு நாள் ஆகாது என்று நினைக்கிறேன். ஆனால், ஆறு மாதம் நிச்சயம் ஆகிவிடும்.''

''வேறென்ன பிரச்சினை இருக்கிறது.''

''ஒரு பிரச்சினை இருக்கிறது.''

''என்ன அது.'' ஒரு இளைஞன் சொல்ல மற்றோர்கள் திரும்பிப் பார்த்தார்கள்.

''தேவையில்லாமல் மெய்க்காவல் படை வீரர்களும், உளவுத் துறையைச் சேர்ந்தவர்களும் மடக்கி நிறுத்தி விசாரிக்கிறார்கள். எந்த ஊர், என்ன வேலை என்கிறார்கள். பையைச் சோதனை போடுகிறார்கள்.''

''இதை ஏன் குறையாகச் சொல்கிறாய். சோதனை செய்தால் காட்ட வேண்டியது தானே.''

''என் கையில் செப்புக்காசும், பொற்காசும் இருக்கின்றன. சகலமும் திறந்து காட்டு என்றால், எனக்குப் பதட்டமாகப் போகிறது. ஒரு பிடி எடுத்துக் கொண்டுவிட்டால் என்ன செய்ய முடியும்.''

''தஞ்சை நகரம் அவ்வளவு தூரம் கெட்டுப் போய்விடவில்லை. ஆனால் கெட்டுப் போகும் என்று தோன்றுகிறது. எல்லோருக்கும் காசு ஆசை வந்துவிட்டது.'' வேறொரு அந்தண இளைஞன் பேச எல்லோரும் ஆமாம் என்று தலையாட்டினார்கள்.

''வணிகர்கள் எதையும் விற்கவும், வாங்கவும் தயாராக இருக்கிறார்கள். உங்களுக்கு ஒன்று தெரியுமா. கற்பலகைகளெல்லாம் தயாராகி விட்டது. கற்பலகைகள் செய்வதற்காக அளவுப் பலகைகள் மரத்தில் செய்திருக்கிறார்கள். அந்த மரத்தில் செய்த அளவுப் பலகைகளை வைத்துத் தான் கற்பலகைகளைச் செய்தார்கள். விமானம் எழுப்பி முடித்தாகிவிட்டது. இப்பொழுது அந்த மரப்பலகைகள் தேவையா, இல்லையா என்ற பேச்சு நடந்து கொண்டிருக்கிறது. வணிகர்கள் அந்த மரப்பலகைகளைச் சுற்றிச் சுற்றி வருகிறார்கள்.''

''எல்லாம் தேக்கு மரப் பலகைகள் வேண்டாம் என்று சொல்லி விட்டால் அள்ளிக் கொண்டு போவதற்கு ஆட்களும், வண்டிகளும் தயாராக இருக்கின்றன. நீ என்னமோ அவைகளைக் கழிவுகள் போல் வர்ணிக்கிறாய்.''

''ஆனால் அவர்களோ உலகத்தில் புழு, பூச்சிகளை விட கேவலமாக நடத்தப்படுவது வணிகர்கள்தான் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.''

''வணிகர்களைப் பற்றி ஏன் சுவாமி பேசுகிறீர்கள். நம்மைப் பற்றி பேசும். இராஜேந்திரர் தஞ்சையை விட்டு வடக்கே ஒரு தனி நகரம் ஸ்தாபிக்கப் போகிறாராம். கோட்டை கட்டப் போகிறாராம். தந்தையைப் போலவே கோயில் கட்டப் போகிறாராம். அதற்குண்டான சிற்பியை அனுப்பிவிட்டாராம். நகரத்தைச் சுற்றி மிகப்பெரிய மதில் சுவர் இருக்குமாம். அகழி இருக்குமாம். அந்த நகரத்திற்குள்ளே வயல்வெளிகள் இருக்காதாம். போர் வீரர்களுக்கான வீடுகள், அதிகாரிகளுக்கான இடங்கள், அரசு அலுவலகங்கள் என்று இருக்குமாம்.''

''நாம் இராஜேந்திரரோடு போவோமா அல்லது தஞ்சையிலேயே தங்கி விடுவோமா.''



''இளவரசர் இராஜேந்திரர் ஒன்றும் அந்தணர்களை மதிப்பவர் இல்லையே.''

''அவர் மதிக்காதது வைதீக அந்தணர்களைத் தான். நம்மீது அவர் மிகப்பிரியமாக இருக்கிறார். மரியாதையாக இருக்கிறார். அவரோடு அருண்மொழிப்பட்டன் இருக்கும்வரை நமக்கு எந்த அவமானமும் ஏற்படாது. அரசருக்கு உதவியாக இருக்க முடியாது என்று அந்தணர்கள் சொன்னதால்தான் கோபமே தவிர, உதவி செய்கிறோம் என்று முன் வந்தால் நம்மீது அவருக்கென்ன கோபம். அவர் ஒட்டுமொத்தமாய் அந்தணர்களை அவமதிக்கவே இல்லை.''

''அப்படியானால் நமக்கென்று அந்தக் கோட்டைக்குள் இடம் இருக்குமா. வீடுகள் கட்டித் தருவாரா.''

''ஜெயங்கொண்ட சோழ புரத்திற்குப் போக உனக்கு என்ன அத்தனை ஆவல்.''

''தஞ்சையைவிட ஜெயங்கொண்டபுரம் நல்ல இடம். நதியை நம்பி பாசனமில்லை. ஏரிப்பாசனம், மூன்று போகப் பயிர் நிச்சயம் உண்டு. எனவே, அரிசி விலை, பருப்பு வகைகளெல்லாம் மிக இறங்கு முகமாகத்தான் இருக்கும். காய்கறிகள் அதிகமாகக் கிடைக்கும். குடந்தைக்கு அருகே இருப்போம். அதேநேரம் தொண்டை நாட்டிற்கும் அருகே இருப்போம். இரண்டு நாள் அல்லது மூன்று நாள் பயணத்தில் மயிலைக்கோ, திருவான்மியூருக்கோ சென்றுவிட முடியும். இது பழைய நகரம். இங்கு பழம் தின்று கொட்டைப் போட்டவர்கள் அதிகம். ஒரு புதிய நகரத்திற்குள் முதன்முதலாய் நாம் உள்ளே நுழைந்தால் நம்முடைய உரிமைகளை அதிகம் கெட்டிக்காரத்தனமாகப் பெற்றுவிடலாம். எனவே, புதிய நகரத்திற்குத்தான் குடிபோவது நல்லது என்பது என் அபிப்ராயம்.'' என்று அந்த அந்தண இளைஞன் சொல்லி முடித்தான்.

உயரமும் அகலமுமான அந்த மண்மேட்டை சக்ரவர்த்தி விடியல் நேரத்தில் பார்க்கக் கிளம்பினார். அவருக்கு முன்னும், பின்னும் மெய்க்காவல் வீரர்கள் பாதுகாப்பாகப் போனார்கள்.

இளவரசரை எழுப்பட்டுமா என்று கேட்ட பஞ்சவன் மாதேவிக்கு ''வேண்டாம்'' என்று உடையார் மறுத்துவிட்டார்.

வேளாருக்கு ஆள் அனுப்பட்டுமா என்று ஒரு தளபதி கேட்ட போது அதையும் தேவையில்லை என்று மறுதலித்துவிட்டார்.

''நான் மட்டும் சுற்றி வருகிறேன். சில வீரர்கள் போதும்'' என்று உத்தரவிட்டு முகம் கழுவி திருநீறு இட்டு தோளில் சால்வை போர்த்தி கருப்புக் குதிரையில் ஏறி மிக வேகமாக அரண்மனை யிலிருந்து தெற்குநோக்கி கோயில் கட்டப்படும் இடத்திற்குப் போனார்.

தூங்கி வழிந்து கொண்டிருந்த வாயில் காவலர்கள் எழுந்து நின்று பரபரத்து வேலிக்கதவைப் பிரித்து வழிவிட்டார்கள்.

''இந்த வேலிக்கதவுகளெல்லாம் உடைபடும் என்றுதான் தோன்றுகிறது. எல்லாப் பக்கத்திலிருந்தும் ஆட்கள் வரும்போது, இந்த வாசல் மட்டும் போதாது. வேறு சில இடத்திலும் வாசல் வைக்க வேண்டியிருக்கும்.'' உரக்கச் சொன்னார்.

''ஆனால், அது அவ்வளவு பாதுகாப்பானதாகத் தெரிய வில்லையே.'' ஒரு மெய்க்காவல் வீரன் சக்ரவர்த்திக்குப் பதில் சொன்னான்.

''என்ன பாதுகாப்பு. நீங்கள் இருக்கிறீர்களே போதாதா. வேலியையா பாதுகாப்பு என்று நான் நினைத்துக் கொள்ள முடியும். வேலை விரைவில் ஆக வேண்டுமென்றால் நிறைய ஆட்கள் உள்ளே வரவேண்டும். வெளியேற வேண்டும். அதற்கு இந்த இடைஞ்சல் என்ன. இந்த வேலி தானாக உடைபடும்.''

இன்னொரு சுற்று சுற்ற வேண்டும் என்று எண்ணியபோது, பிரம்மராயர் குதிரையில் வருவது தெரிந்தது. அவருடன் அருண்மொழிப்பட்டனும், பிரம்மராயரின் உளவு ஆட்களும் அவருக்கு அருகே குதிரைகளில் வந்தார்கள். மெய்க்காவல் படைவீரர்கள் அவர்களையும் சுற்றிக் கொண்டார்கள். மறுபடியும் அந்த சிறிய குதிரைப்படை பலமாக அந்தப் பெரிய மண் குன்றைச் சுற்ற ஆரம்பித்தது.

''பரமஸ்வாமி, சிவபெருமானே என்னோடு இரும்.''

சுற்ற ஆரம்பிக்கும்போது கிழக்குப் பக்கத்திலிருந்து மேற்குப் பார்த்து மண்குன்றை நோக்கி சக்ரவர்த்தி உடையார் கை கூப்பினார். மற்றவர்களும் கை கூப்பினார்கள்.

''அனைவருக்கும் உணவு கொடுக்கத் தயாராக இருக்கி றோமா.''

''இருக்கிறோம். ஆனால் தடுமாற்றம் இருக்குமென்று நினைக் கின்றேன்.''

''எதனால்.''



''எத்தனை பேர் உள்ளே நுழையப் போகிறார்கள். எத்தனை பேர் மண்கூடைத் தூக்கப் போகிறார்கள். எத்தனை பேர் மேலேறி மண் சரிக்கப் போகிறார்கள் என்று தெரியவில்லை.''

''மண் சரிப்பதா என்ன சொல்கிறீர்கள்.''

சக்ரவர்த்தி உடையார் கொஞ்சம் பதட்டமாகச் சொன்னார்.

''மேலேயிருந்து மண் தள்ளிவிட்டால் போதாதா. கூடையில் வேறு வார வேண்டுமா.''

''மண் தள்ளினால் எங்கே விழுவது.. நம் தலையிலா என்ன பேச்சு இது. அந்த வட்டப் பாதையில் கை மாறி, கை மாறி மண் கூடைகள் கீழே வந்துதான் ஆகவேண்டும். அங்கிருந்து தள்ளுவது சரிப்பது என்பது ஒருக்காலும் நடக்காது. அது மிக ஆபத்தான விஷயம்.''

''நீங்கள் விரைவாக பணியை முடிக்க வேண்டுமென்று சொல்கிறீர்களல்லவா.''

''ஆமாம். விரைவாகப்பணி முடிக்க வேண்டுமென்றாலும் ஒரு ஒழுக்கமான முறையில்தான் இருக்க வேண்டும். மண் சரிப்பது என்று ஆரம்பித்து விட்டால், அது அவ்வளவு நன்றாக இருக்காது. மண் சரிப்பை வேகமாகச் செய்ய கீழிருக்கிறவர்கள் அவஸ்தைப் படுவார்கள். மண் நாலாபுறமும் சிதறும். ஒரு குதிரையின் முதுகி லுள்ள கூடையில் மண் சரிந்து சேர்ப்பது என்பது சரியாக வராது. ஆனாலும், மண் மேட்டிற்கருகே குதிரைகளும், மாடுகளும் நிற்க வைக்கப்பட்டிருக்கும் மேலிருந்து கை மாறி கூடைகள் வந்துஅதில் மண் நிரப்பப் பட்டிருக்கும். மாடுகளும், குதிரைகளும் வெறியேற வேண்டும். மேலிருந்து மண் வருகின்ற வேகத்திற்கேற்ப கீழே மாடுகள் நகரவேண்டும். கூடுதலாக மாடுகள் எப்பொழுதும் தயாராக இருக்க வேண்டும். ஒருவேளை வழியில் மாடுகள் நின்றால், அவைகளை விரைவில் கொண்டுவர ஏற்பாடு செய்ய வேண்டும்.''

''சக்ரவர்த்தி அவர்களே எல்லாத் திட்டங்களும் இப்பொழுது மண்டைக்குள் சரியாக இருக்கின்றன. ஆனால், இறங்கி செய்யும் போதுதான் எங்கே எப்படி திசைமாறும் என்று புரியவில்லை.'' மூவேந்த வேளார் பேசினார்.

''உங்களுக்குள் ஒரு பதட்டம் இருப்பதைக் காண்கிறோம்.''

''எனக்குள்ளும் அது இருக்கிறது. அருண்மொழிப் பட்டன் இரவு முழுவதும் தூங்கவேயில்லை.''

பிரம்மராயர் சொல்ல சட்டென்று சக்ரவர்த்தி அருண்மொழிப் பட்டனைத் திரும்பிப் பார்த்தார். அருண்மொழிப்பட்டன் மிகுந்த மலர்ச்சியோடு சக்ரவர்த்தியைப் பார்த்துச் சிரித்தான். சக்ரவர்த்தி பதிலுக்குச் சிரித்தார்.

''எப்படி இருக்கிறாள் ராஜராஜி.'' என்று மெல்லிய குரலில் கேட்டார்.

அவர் கேட்டது பிரம்மராயருக்கும். அருண்மொழிப் பட்டனுக்கும் மட்டுமே கேட்டது. உதடு மெல்ல அசைத்து உற்சாகக் குரலில் பேச சக்ரவர்த்திக்குத்தான் தெரியும். தந்தையின் எதிரே தன் அனுக்கியைப் பற்றி விசாரித்ததும் சட்டென்று ஒரு வெட்கம், ஒரு தயக்கம் அருண்மொழிப் பட்டனுக்கு வந்தது. என்ன பதில் சொல்வது என்று தடுமாறினான்.

''ராஜராஜி நலமாக இருக்கிறாள். இரவு பகலாய் இராச இராஸ்வரம் நாட்டிய நாடகம் பற்றி பேசிக் கொண்டிருக்கிறாள்.''

''அந்த சீருடையாள் நலமா.''

''நலம்.'' பிரம்மராயர் தன் மகனுக்காகப் பேசினார்.

''இனி மறவர்கள் எந்தவித முரட்டுத்தனமும் காட்டாமல் இருக்கும்படி கட்டளை பிறப்பிக்க வேண்டும்.'' சக்ரவர்த்தி உரத்துச் சொன்னார்.

''அப்படித்தான் கட்டளை பிறப்பித்திருக்கின்றேன். ஆனால், மெய்க்காவல் படைவீர்கள் கவலைப்படுகிறார்கள். முரட்டுத்தனம் காட்டாமல் இருந்தால் ஆட்டம் அதிகமாகும். வேலை நடக்காது. சவுக்கு சொடுக்கினால்தான். சில இடங்களில் சரிப்படும் என்கிறார்கள்.''

''அதட்டட்டும். அடிக்க வேண்டாம். சவுக்கு இருக்கட்டும். மறவர்களுக்கு மேலுண்டான அதிகாரிகளிடம் சவுக்கு தரவேண்டாம். இது இறைபணி. எல்லோரும் விரும்பி வேலை செய்கிறார்கள். இவர்கள் செய்கிற வேலைக்கு நாம் எதுவும் கூலி கொடுத்துவிடப் போவதில்லை. ஒழுங்காக உணவு போட்டால் போதுமென்றுதான் எனக்குக் கவலையாக இருக்கிறது. உணவு சுவையாக இருக்க வேண்டும். நேர்த்தியாக இருக்க வேண்டும். அரசாங்க உணவு முன்பின்னாகத்தான் இருக்கும் என்ற கேலி வந்துவிடக்கூடாது. நாளைக்கு எங்கேனும் சரியாகச் சமைக்க வில்லை என்றால் என்ன சக்ரவர்த்தி உடையார் போட்ட சோறு



போல போடுகிறாய் என்று ராஜராஜியை அருண்மொழிப் பட்டன் கேலி செய்வான் அல்லவா.''

சக்ரவர்த்தி சொல்ல, சில வீரர்கள் மெல்லச் சிரித்தார்கள். பிரம்மராயர் உரக்கச் சிரித்தார்.

''ஒரு விஷயம்.'' பிரம்மராயர் பேசினார்.

''என்ன'' சக்ரவர்த்தி வினவினார்.

''ராஜராஜிக்கு சமைக்கத் தெரியாது. ஆனால், அருண்மொழிப் பட்டன் நன்றாகச் சமைப்பான்.''

சக்ரவர்த்தி குதிரையைத் திருப்பி உரத்த குரலில் சிரித்தார். அருண்மொழிப்பட்டனை உற்றுப் பார்த்தார்.

அருண்மொழிப்பட்டன் தலை கவிழ்ந்து நாணி முகம் திருப்பிக் கொண்டான்.

''அப்போது ராஜராஜிக்கு சமைத்துப் போடவா தினமும் மாலைவேளையில் போகிறான்.''

''தெரியாது. நான் அங்கெல்லாம் உளவு ஆட்களை அனுப்புவ தில்லை.''

பிரம்மராயர் சொல்ல மறுபடியும் வெடிச் சிரிப்பு எல்லோரிடமும் பீறிட்டது.

அருண்மொழிப்பட்டன் குதிரையிலிருந்தபடியே மற்ற வீரர்களை முறைத்தான். அவன் முறைப்புக்கு வீரர்கள் மறுபடியும் சிரித்தார்கள்.

''அடங்கி இருங்களடா.'' என்று மறுபடியும் அதட்டினான்.

வீரர்கள் சட்டென்று அடங்கினார்கள்.

''இதுதான்... இதுதான் மிக முக்கியம். வீரர்கள் சிரிக்கிறபோது அருண்மொழிப்பட்டன் பார்த்தால் அடங்கவில்லை. அதட்டினால் அடங்கிவிடுகிறார்கள். இந்த மக்கள் ஆட்டம் பாட்டத்தில் ஈடுபட்டுத் தான் வேலை செய்வார்கள். வெறுமே பார்த்தால் அடங்க மாட்டார்கள். மெல்லியதாய் ஒரு அதட்டல் போதும், அடங்கி விடுவார்கள். இப்படித்தான் அதிகாரிகள் செயல்பட வேண்டுமென்று திரும்பத் திரும்ப சொல்லிவிடு.'' அருண்மொழிப் பட்டனுக்கு உத்தரவு போல் சக்ரவர்த்தி பேசினார்.

சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவர் எப்பொழுது கேலி பேசுகிறார். எப்பொழுது காரியத்தில் கண்ணாக இருக்கிறார் என்று எவராலும், எப்பொழுதும் அனுமானிக்க முடிந்ததேயில்லை.

மேற்குப் பக்கத்தின் வழியாக குதிரைகள் போனபோது தொண்டைநாட்டு அந்தணர்கள் காத்திருக்கிறார்கள்.

எல்லோரும் திருச்சின்னங்களுடன், இடுப்புத் துண்டோடும், ருத்ராட்ச மாலையோடும் கையில் சுவடிகளோடும் நின்றிருந்தார்கள்.

சூரியனுக்கு நிகரானவனே, எங்களின் தலைவனே, பூவுலகின் அற்புதமான மன்னனே என்று வாழ்த்தினார்கள். நீ எடுத்த காரியம் யாவும் ஜெயிக்கட்டும். ஜெயவிஜயீபவ என்று எல்லோரும் வலது கையை ஒரு சேர உயர்த்தினார்கள்.

"அரசருடைய குலப்பெருமை நன்றாக வளரட்டும்.

அப்படியே ஆகுக.

அரசருடைய ஆயுசு நல்லபடி நீடிக்கட்டும்.

அப்படியே ஆகுக.

அரசருடைய கீர்த்தி உலகமெல்லாம் பரவட்டும்.

அப்படியே ஆகுக.

அரசருடைய பெருஞ்செல்வம் இன்னும் பெருஞ்செல்வமாகட்டும்.

அப்படி ஆகுக.

அரசருடைய சுற்றம் சூழல் நண்பர்கள் எல்லோரும் சௌக்கியமாக இருக்க வேண்டும்.

அப்படியே ஆகுக.

மாடு, கன்றுகள், யானைகள், குதிரைகள், படைகள் அத்தனையும் நல்லபடியாக விருத்தியடைய வேண்டும்."

அப்படியே ஆகுக என்று 'ததாஸ்து' என்று வார்த்தையைத் திரும்பத் திரும்பச் சொன்னார்கள்.

அரசரும், குதிரைகளில் இருந்த மற்றவர்களும் இறங்கினார்கள். மெய்க்காவல் படையினர் மட்டும் குதிரையிலிருந்து இறங்காமல் மெல்ல அந்தணர்களைச் சூழ்ந்து கொண்டார்கள். வட்டவடிவமாய் அந்த குதிரைப்படை சுற்றிக் கொண்டது.

"மெய்க்காவல் படைன்னா ராஜா தலை மேல் கூட உட்கார்ந்து கொள்ளலாம் போலிருக்கு." என்று ஒரு அந்தணர் இன்னொரு அந்தணரிடம் சொல்ல, "ஆமாம். சேர்ந்துடறீயா மெய்க்காவல்ல" என்று இன்னொரு அந்தணர் கேட்க அவர் உதடு பிதுக்கினார்.



விடியலுக்கு அப்பால் மக்கள் கூட்டம் கூட ஆரம்பித்தது. தொலைவிலிருந்து அரசரைப் பார்த்துப் பேச ஆரம்பித்தது.

"என்ன ஏற்பாடு செய்திருக்கிறீர்கள்." என்று அரசர் வினவ தொண்டைநாட்டு அந்தணர்கள் மூன்று பேர் முன் வந்தார்கள்.

"கிழக்கே சோறு கவனிப்பவர். தெற்கே சோறு கவனிப்பவர். மேற்கே சோறு கவனிப்பவர்." என்று மூன்று பேரும் சொன்னார்கள்.

"அப்பொழுது வடக்கே." என்று கேட்க, "அந்த இடத்தில் நீர்க்குளம் இருக்கிறது. அந்த இடத்தில் சோறு போடுவதற்கில்லை. இடையறாது குடிதண்ணீருக்கும், மாடுகள், குதிரைகளுக்கு நீர் போவதற்கும் அந்தப்பாதை அமைக்கப் பட்டிருக்கிறது. எனவே வடக்கே உணவு போடும் வேலையை வைத்துக் கொள்ளவில்லை. தெற்கேயே இரண்டு பாகமாக பிரித்து வைத்திருக்கிறோம். வடக்கே வேலை செய்பவர்கள் என்று எவரும் வடக்கே இறங்காமல் அவர்களை கிழக்கேயும், தெற்கேயும் இறங்கச் சொல்லியிருக்கிறோம்."

"மண் மேட்டிலுள்ளவர்கள் கீழிறங்கித்தான் சோறு வாங்க வேண்டுமா அல்லது சோறு மேலே போகுமா. சோறு மேலே போவது நல்லதா."

"எல்லா இடமும் எச்சில் இலையும் தட்டுச் சோறுமாகப் பரவும். சகலமும் கீழே இறங்கி வந்து கைகழுவி சாப்பிட்டால் நன்றாக இருக்கும். இல்லையெனில் சோறோடு நீருமல்லவா மேலே போக வேண்டும்."

"நல்லது நீங்கள் சொல்வது புரிகிறது. ஆனால், இத்தனை உயரம் ஏறி, இத்தனை உயரம் இறங்க வேண்டும்."

"ஏறுவதுதான் கஷ்டம். இறங்குவது வெகு சீக்கிரம் இறங்கி விடுகிறார்கள். அதுவுமில்லாமல் கொம்பு சொருகி கட்டை வழியே சறுக்கிச் சறுக்கி நேரே இறங்குகிறார்கள். ஏறும்பொழுதுதான் இந்தப் பாதை வழியாகப் போகிறார்கள்."

"உணவு உண்டுவிட்டு மேலே ஏறுவது என்பது சிரமமாகாதா."

"ஆகும். ஆனால், மெல்ல இளைஞர்களை அந்தப்பக்கம் அனுப்பிவிட வேண்டியதுதான். ஆடிப்பாடி குதித்து அவர்கள் மேலே போய் விடுவார்கள்."

"வேறு என்ன செய்திருக்கிறீர்கள்."

''வேலை ஆரம்பிப்பதற்கும், மேலே உச்சியில் நிற்பதற்கும் மறுபடியும் வேலை துவங்க வேண்டும் என்பதற்கும், நான்கு புறமும் எக்காளங்கள் முழங்க வேண்டும். சிறுமுரசு அறையப்பட வேண்டும். அதற்கு சில சங்கேதங்கள் வைத்திருக்கிறோம். எக்காளம் இப்படி ஊதினால் வேலை ஆரம்பிக்க வேண்டும் என்று அர்த்தம்.''

அவர்கள் திரும்பி எட்டிப்பார்க்க தொலைவில் எக்காளத்தோடு நின்றிருந்த வீரர்கள் முன்னே வந்தார்கள். இன்னும் இரண்டு பேர் கையில் சிறு முரசு இருந்தது. அவர்கள் எக்காளத்தைப் பலமாக ஊதினார்கள். அதில் ஒரு கட்டளை தெரிந்தது. இப்பொழுது வேலை நிற்க வேண்டும் என்றதும் எக்காளம் எப்படி வேறுவிதமாக ஒலிக்கும் என்பதையும் அவர்கள் செய்து காட்டினார்கள்.

''இந்த இரண்டு சங்கேதங்கள் தவிர, வேறு ஏதேனும் சங்கேதங்கள் உண்டா.''

ஒரு அந்தணர் கேட்டார்.

''நிச்சயம் செய்ய வேண்டும். ஆபத்து என்று தோன்றுகிறபோது விரைவாக வெளியேறுங்கள் என்று சொல்வதற்கு ஒரு எக்காளக் குறி ஏற்படுத்த வேண்டும். உதாரணமாக, மண் சரிகிறது என்றால், இந்த எக்காளம் விரைவாக ஊதப்பட வேண்டும். அதற்கொரு நியமம் வைத்துக் கொள்ள வேண்டும்.''

''ஆபத்து என்பதை இந்த எக்காளம் எப்படிச் சொல்லும்.'' என்று அந்தணர் வாசிப்பவர்களைக் கேட்க. ''இப்படி முயற்சிக்கட்டுமா.'' நடுவே வயதாக இருந்த ஒரு எக்காளம் வாசிப்பவன். எக்காளத்தை உயர்த்தி விலகு... விலகு... என்று வேகமாக ஊத, அந்தச் சப்தம் எல்லோருக்கும் பிடித்திருந்தது.

என் காணிக்கையாக இரண்டு எக்காளங்களை பரமஸ்வாமிக்குத் தரவேண்டும். தங்க எக்காளம் செய்ய வேண்டும். சக்ரவர்த்தி உடையார் உள்ளே உறுதிபூண்டார்.

சிறு முரசு அதிர்வோடு அடிக்கப்பட்டது. மறுபடியும் இந்த மூன்றுவித ஒலிகளும் சரி பார்க்கப்பட்டன.

சக்ரவர்த்தி உடையார் தொண்டை தேசத்து அந்தணர்களைக் குனிந்து வணங்கினார்.

''வேறென்ன... காசு இருக்கிறதா. நெல் இருக்கிறதா. பருப்பு வகைகள் இருக்கிறதா. காய்கறிகள் பற்றி ஏதேனும் குறைகள் உண்டா.'' என்று கேட்க, ''இது எதுவும் உங்களுடைய கவலையில்லை. எங்களுடைய கவலை. ஒருவர் வயிறுகூட வாடாமல் சோறிடுவோம் என்று பரமஸ்வாமியின் பாதம் பணிந்து சத்தியம் செய்கிறோம். எங்கள் முழு உழைப்பையும், முழு புத்திசாலித்தனத்தையும் இதற்காகச் செலவிட நாங்கள் சபதம் பூண்டிருக்கிறோம்.'' என்று சொல்ல மறுபடியும் குனிந்து சக்ரவர்த்தி உடையார் வணங்கினார்.



''ஒரு விண்ணப்பம்.''

சற்று வயதான ஒரு அந்தணர் சொல்ல அருகே வரச் சொன்னார்.

''எங்களில் அனேகர் தொண்டை நாட்டிற்குத் திரும்ப வேண்டுமென்று ஆசைப்படுகிறார்கள். இப்போது அல்ல. கோயில் பணிகள் முடிந்து கும்பாபிஷேகம் நிறைவேறி எங்களில் பாதி பேர் தொண்டை நாட்டிற்குப் போய் மறுபடியும் மீண்டு வந்தபிறகு அடுத்த பாதிபேர் தொண்டை நாட்டிற்குப் பயணம் செய்வார்கள். இந்த வேலை முடிந்த பிறகு உங்களுக்கு ஒருமுறை நினைவூட்டி உங்கள் அனுமதியைப் பெற்றுத்தான் நாங்கள் தொண்டை தேசம் பயணப்படுவோம். அதற்கு இப்பொழுதே உங்கள் அனுமதியைக் கோருகிறோம்.''

''ஆஹா... நன்றாகப் போய் வாருங்கள். உங்கள் உழைப்பால் இந்த தஞ்சைத்தரணி பலமடைந்திருப்பதை நான் கண்கூடாகப் பார்க்கிறேன். பல்வேறு விஷயங்கள் மிகத்துல்லியமாக நடைபெற உங்கள் கணக்கு வழக்குகள் காரணம். உங்கள் அயராது உழைப்பு காரணம். இல்லையெனில் இத்தனை ஊருக்குப் போகும்போது என்ன சன்மானம் வேண்டும் என்பதை முன்கூட்டியே யோசனை செய்து சொல்லிவிட்டீர்கள். என்றால், பொக்கிஷத்திலிருந்து அதைக் கொடுக்க எனக்கு வசதியாக இருக்கும். எல்லோரும் பயணப்பட உங்களுக்கு நல்ல வண்டிகளையும் என்னால் ஏற்பாடு செய்ய முடியும். இந்த மண்வாறும் பணியில் ஈடுபட்டிருக்கிற குதிரைகள் பலவற்றை உங்களுக்குத் தானமாக வழங்க முடியும். அப்படியே கோயில் பணி செவ்வனே முடிந்துவிட்டதா என்பதையும், உங்களில் பாதிபேர் இங்கு தங்குகிறீர்களா என்பதையும் உறுதி செய்து கொண்டு இந்தக் காரியத்தில் ஈடுபடுங்கள்.''

அந்தணர் சந்தோஷமானார்கள். மேல் துண்டை மேலே விசிறி ஜெயவிஜயயீபவ என்று கத்தினார்கள். சோழம், சோழம் என்று கூக்குரலிட்டார்கள். அவர்கள் சந்தோஷம் எல்லோருக்கும் தொற்றிக் கொண்டது.

''இப்பொழுது சிற்பிகளுடைய வேலை என்ன.''

சட்டென்று சக்ரவர்த்தி உடையார் அந்த சந்தோஷத்தை நிறுத்தும்படியான கேள்வியைக் கேட்டார்.

"பெரும்பாலான சிற்பிகள் மண் அள்ளுவதை மேற்பார்வையிடச் செய்வார்கள். அவர்களுக்கு ஓய்வு தேவைப்படுகிறது. இன்னும் சில சிற்பிகள் கோஷ்டத்தில் அமர வைக்க வேண்டிய சிற்பங்களைச் செய்வதும் உள்ளுக்குள் வைக்க வேண்டிய சிற்பிகளைச் செய்வதும் என்று பிரித்துக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் சில சிற்பிகள் கோயிலைச் சுற்றி ஒரு இடுப்பளவு சுவர் ஒன்று கட்டவேண்டுமென்ற எண்ணம் கொண்டு அதற்கான பாறைகள் செதுக்க வேறுபக்கம் போயிருக்கிறார்கள்."

"இடுப்பளவு சுவரா."

"ஆமாம். ஒரு கோயில் இருந்தால் அதற்கு சற்றுச் சுவர் இருக்க வேண்டுமல்லவா. இது இடுப்பளவு பாறைச்சுவராக இருக்கும்." அந்த அந்தணன் சொல்ல, "இது எனக்கு சொல்லப்படவில்லையே." என்று சக்ரவர்த்தி உடையார் வியக்க, "இல்லை, சக்ரவர்த்தி இது வரைபடத்தில் இருந்தது. கிட்டத்தட்ட ஒரு ஆள் உயர சுவர். சுவர் முழுவதும் இடைவெளி விட்டு நந்தி பெருமான் சிலைகளை வைக்கவும் பெருந்தச்சர் முடிவு செய்திருக்கிறார். வரைபடங்களை நான் அவ்விதம் பார்த்திருக்கிறேன்."

"ஒரு ஆள் உயர சுவர் போதுமா." சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவர் கேட்டார்.

"நீங்கள் தான் சொல்ல வேண்டும் சக்ரவர்த்தி."

பிரம்மராயர் பணிவோடு சக்ரவர்த்திக்கு பதில் சொன்னார். சக்ரவர்த்தி தீவிரமான யோசனையில் ஆழ்ந்தார். விடைபெறக் கை கூப்பினார்.

அந்தணர்களின் தலைவன் போலிருந்த ஒரு மத்திம வயது இளைஞன் முன் வந்து கை கூப்பினான்.

"இந்த மகத்தான பணிக்காக உங்களை நீங்கள் முழுவதுமாக ஈடுபடுத்திக் கொண்டிருப்பதை நாங்கள் கவனிக்கிறோம். இந்தக் கோயில் பணியில் நாங்களும் ஈடுபட வேண்டுமென்று நினைக்கிறோம். எனவே, எங்கள் காணிக்கையாக... என்று திரும்பினான்.

அந்த அந்தணர்கள் சரசரவென நகர்ந்தார்கள். அங்கு பதினாறு உலோகப் பாத்திரங்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன.

எல்லாம் சோறு வடிக்கும் பெரிய தாமிரத்தவலைகள். வெளியேயும் உள்ளேயும் ஈயம் பூசப்பட்டு பளபளத்து நின்றன. ஒவ்வொரு



பானையிலும் நீண்ட உலோகக் கரண்டியும் பல்வேறு மர அகப்பைகளும் வைக்கப்பட்டிருந்தன. மரத்துடுப்புகள் இருந்தன.

சக்ரவர்த்தி வியந்தார். குதிரை செலுத்திக் கொண்டு அருகே போனார். ஒரு உலோக பானை அவருக்கு தூக்கிக் காட்டப்பட்டது.

"என்ன பிரம்மராயரே உம்முடைய கட்டளையா இது." சக்ரவர்த்தி ஆவலாக வினவினார்.

"என் கட்டளை அல்ல. எனக்கும் தெரியாது. தொண்டை நாட்டு அந்தணர்கள் என் கட்டளைகள் எதுவும் எதிர்பார்ப்பதில்லை. அவர்கள் தனியே இயங்குகிறார்கள். தனித்து செயல்படுகிறார்கள். அவர்கள் உங்களுக்கு உதவியாக இருக்க வேண்டுமென்றுதான் உறுதியாக இருக்கிறார்கள். நான் அவர்களிடம் எந்தக் கட்டளையும் இடுவதில்லை. அவர்கள் என் கட்டளையை எதிர்பார்ப்பதில்லை. அருண்மொழிபட்டன் அவர்களுக்கு ஸ்நேகமாக இருக்கிறான். தலைவனாக இருக்கிறான். என்றுகூட சொல்ல முடியாது. இவர்கள் தங்களுக்குள் தாங்களே கட்டுப்பாடு விதித்துக் கொண்டு தங்களைத்தாங்களே சரி செய்து கொண்டு எந்தத் தலைவரும் இல்லாமல் ஒரு குழுவின் சொல்படி நடந்து கொள்கிறார்கள். இது அற்புதமாக இருக்கிறது. இந்தப்பானை விவகாரம் எனக்குத் தெரியாது." என்று சொல்ல சக்ரவர்த்தி ஆவலோடு அந்தணர்களை நோக்கித் திரும்பினார்.

"உங்களில் யாரும் தலைவர் இல்லையா."

"தலைவர் என்று யாரும் இல்லை."

"ஏன் இல்லை."

"தலைவர் என்று யாரும் இருப்பின். அங்கே நல்லதும், கெட்டதும் மாறி மாறி வரும். எதிர்ப்பும், ஆதரவும் நிச்சயம் ஏற்படும். அப்படியில்லாது ஒரு குழு தீர்மானித்தால் நடுநிலையாக இருக்க முடியும் என்று நாங்கள் நம்புகிறோம். ஒரு தலைவர் இருந்தால் தான் செயல்பட முடியும் என்கிற ஒரு மனப்பான்மை எங்களிடம் இல்லை. அவரவர் தனித்த உரிமையை நாங்கள் மதிக்கிறோம். அதே நேரம் குழுவாகச் செயல்படாவிட்டால் வேலை குப்புற விழும் என்றும் தெரிந்திருக்கிறோம்.

எனவே, எங்களை நிர்வகிக்க பதினோரு பேர் கொண்ட ஒரு குழு இருக்கிறது. அந்தக்குழு கவனமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட குழு. அது சகல விஷயங்களையும் சீர்தூக்கிப் பார்த்து இப்படிச்

செய்யலாமா என்று அந்தணர்களிடம் அபிப்ராயம் கேட்டு, ஒருவேளை எவரேனும் மறுப்பு சொன்னால் அந்த மறுப்பையும் கவனத்தில் கொண்டு, அவருக்குத் தக்க பதில் சொல்லி பிறகு செயல் படுத்துகிறோம். இது எங்களுக்கு எளிதாக இருக்கிறது.''

''எனக்குப் புரிகிறது. தொண்டை நாட்டு அந்தணர்கள் கட்டுக் கோப்பு மிகுந்தவர்கள். ஒரு மறவர்களுடைய கட்டுக்கோப்பை விட தொண்டை நாட்டு அந்தணர்களின் கட்டுக்கோப்பு நன்றாக இருக்கிறது. உங்களுக்கு என் வாழ்த்துக்கள். உங்களுடைய பரிசுக்கு என் வணக்கங்கள். நான் நிறைந்த மகிழ்ச்சியோடு இந்தப் பணியை ஆரம்பிக்கிறேன். இந்தப் பானைகளும் உங்கள் அன்பும் எனக்கு அந்த மகழ்ச்சியைக் கொடுத்து விட்டன. ''சோழம்.. சோழம்... சோழம்...'' என்று அந்தணர்கள் எதிரொலித்தார்கள். சக்ரவர்த்தி உடையார் குதிரையைத் திருப்பினார்.

பிரம்மராயருக்கு உள்ளே லேசாய் வலித்தது. என்னிடம் ஒரு வார்த்தை சொல்லியிருக்கலாம். இந்த அந்தணர்கள் சுயமாகச் செயல்படுவது எனக்குச் சரியாகப்படவில்லை என்று ஒரு மெல்லிய கோபம் எழுந்தது. ஆனால், அரசர் கேட்கும்போது உண்மையைச் சொல்வது நல்லது. நீயாக என்ன செய்வாய் என்று அரசர் ஏதேனும் கேட்பாரா. நானாக ஏதும் செய்ய வேண்டும். இத்தனை பேர் இந்தக் கோயிலுக்கு நன்கொடை தருகிறார்களே. நான் ஏதும் தரக்கூடாதா.

அவர் யோசித்த வண்ணம் பின் தொடர்ந்தார். வடக்கே மண் சரிவில் குளம் நோக்கி சக்ரவர்த்தியாரின் குதிரை இறங்கியது. அவர் இறக்கத்தில் இறங்கும்போது மற்ற குதிரைகள் அவரைச் சூழ்ந்து கொண்டன. சற்று தள்ளி நிதானமாக வந்த பிரம்மராயரை அருண் மொழிப்பட்டன் அருகே போய் தன் குதிரையை உரசியபடி செலுத்தி வந்தான்.

''என்னப்பா.. சட்டென்று முகம் வாடி விட்டீர்கள். என்ன காரணம்.'' என்று வினவினான்.

''ஆள் ஆளுக்கு ஏதேனும் செய்கிறார்களடா. நான் என்ன செய்வதென்று யோசிக்கவேயில்லை. என்ன செய்வதென்று தெரியவும் இல்லை.''

''உண்மையாகவா அப்பா.''

''என்னடா.. என்ன உண்மையாகவா என்று கேட்கிறாய். நான் இதில் மனம் செலுத்தவே இல்லையடா.''



''மனம் செலுத்த முடியாமல் உங்களுக்கு விதம் விதமான வேலைகள், விதவிதமான மனக்கலக்கங்கள். அதனால்தான் மனம் செலுத்தவில்லை. நீங்கள் செலுத்தினால் வெகு விரைவில் தீர்மானம் செய்துவிடுவீர்கள்.''

''ச்சு.. என்ன தீர்மானம் செய்வது. ஏதோ ஒரு சோர்வு. அடிக்கடி பற்றிக் கொள்கிறது. எனக்கு வயதாகிவிட்டதோ என்ற கவலை வருகிறது.''

''அப்படியெல்லாம் இல்லையப்பா. எத்தனை வயதானாலும் உங்களுடைய அறிவுத்திறன் மங்காது. ஆனால் உங்களுக்கு என்னால் உதவி செய்ய முடியும்.''

''என்ன உதவி.''

''நீங்கள் என்ன கொடுத்தால் அரசருக்கு மகிழ்ச்சி அளிக்கும் என்ற விஷயத்தை நான் உங்களிடம் பகிர்ந்து கொள்ள முடியும்.''

''அடேய்... என்ன அந்த விஷயம் சொல்.''

''ஒரு வேளை உங்களுக்குப் பிடிக்காவிட்டால்.''

''அப்படியிருந்தால் ஆலோசித்துப் பேசலாமடா. என்னோடு பேசுவதற்கு எவருமில்லை. நீ உன் வேலையைப் பார்த்துக் கொண்டு போகிறாய். நான் உளவாளிகளோடல்லவா பேச வேண்டியிருக்கிறது. ஒவ்வொன்றையும் நானே யோசித்து முடிவு செய்ய வேண்டியிருக்கிறதே.''

''அப்படித்தானே அப்பா இத்தனை நாள் செய்து கொண்டிருந் தீர்கள். இன்றைக்கு என்ன கவலை வந்துவிட்டது. இருந்தாலும் நீங்கள் கவலை கொள்கிறீர்கள் என்பதால் என் கடமையாக இதைச் சொல்கிறேன்.''

''நான் சக்ரவர்த்தி உடையாருக்கு இந்தக் கோயில் பணிக்காக என்ன செய்ய வேண்டும்:''

''மதில் சுவர் எழுப்புகின்ற பணியை அந்தச் செலவை நீங்கள் மேற்கொள்ளுங்கள். அப்பா.''

''என்னடா சொல்கிறாய்.''

''இடுப்பளவு, ஆள் அளவு மதில் சுவரெல்லாம் வெகுநிச்சயம் போதாதப்பா.''

''ஏன் போதாது. இதைத் தாண்டி யார் வந்து விடுவார்கள்.''

''அப்பா எதிரிகளைக் கொன்று குவித்து இந்தக் கோயிலைக் கட்டிக் கொண்டிருக்கிறோம். மேலைச் சாளுக்கியத்தை நசுக்கி

விட்டு இந்தக் கோயிலை எழுப்பிக் கொண்டிருக்கிறோம். பாண்டியர்களையும், சேரர்களையும், ரெட்டைபாடியையும், கங்க நாட்டையும், ஏன் கீழைச்சாளுக்கியத்தையும் கூட மிரட்டி வைத்துத்தான் இந்தக் கோயிலைக் கட்டிக் கொண்டிருக்கிறோம். இந்தக் கோயில் சந்திரசூரியர் உள்ளவரை இருக்கவேண்டுமெனில், இதற்கு ஒரு நல்ல மதிற்சுவர் வேண்டாமா. இதைக் கோட்டை போல மாற்ற வேண்டாமா.''

''அடேய்... என்ன சொல்கிறாய். படையெடுத்து வந்து கோயிலை நாசம் செய்துவிடுவார்களா. அங்கு போய் கோயிலையா நாம் நாசம் செய்தோம்.''

''ஹா.. நாம் கோயிலை நாசம் செய்யவில்லை. கோயிலுக்குள் இருக்கின்ற விக்ரஹங்களைப் பெயர்த்து எடுத்து வந்து நம் வீட்டுக் கொல்லையில் நட்டுக் கொண்டோம். மறந்துவிட்டதா.''

''அதனால் என்ன சொல்கிறாய்.''

''இங்கிருந்து எதையும் எவரும் பெயர்த்து எடுத்துவிடக்கூடாது என்பதால் இதைச்சுற்றி மிக உயரமான மூன்று கோல் உயரமான ஒரு மதில் சுவரை, கோட்டை போன்ற கருங்கல் சுவரை நீங்கள் எழுப்ப வேண்டும். அந்தக் கருங்கல் சுவர் எழுப்புவதற்கு பக்கபல மாக ஒரு மண்டபத்தைக் கட்டவேண்டும்.

அந்த மண்டபம் இங்கு கோயில் பணி செய்பவர்களுக்கும், வெளியூரிலிருந்து வந்து தங்குபவர்களுக்கும் படுக்கின்ற இடமாக இருக்கும். அவர்கள் ஏன் வெட்டவெளியில் படுக்க வேண்டும். உள்ளுக்குள்ளே கோயிலில் படுக்க முடியாது. கோயில் மண்டபத் தில் படுக்கக்கூடாது என்பார்கள். வெளியிலிருந்து வந்த கிராம வாசிகள் படுப்பதற்கு இடம் வேண்டுமல்லவா. ஆக, ஒரு பெரிய வட்டகோட்டைச்சுவர். அந்தச் சுவரையொட்டி ஒரு திருசுற்று மாளிகை நன்றாக இருக்காதா.''

சட்டென்று பிரம்மராயர் குதிரையை நிறுத்தினார். திரும்பினார் திரும்பி மணற்குன்றைப் பார்த்தார்.

''வா.. என்னோடு வா..'' என்றார்.

சக்ரவர்த்தி உடையாரை விட்டுவிட்டு அவர் குதிரை மறுபடி யும் மணற்குன்று சுற்றப் போயிற்று. அருண்மொழிப்பட்டன் தன் குதிரையில் தொடர்ந்தான். அருண்மொழிப் பட்டனின் உதவி யாளும், பிரம்மராயரின் உளவாளிகள் இரண்டு பேரும் அவர் களைப் பின் தொடர்ந்தார்கள். அந்த ஐந்து குதிரைகள் மறுபடியும்



அந்த மண்குன்றை வலம் வந்தன. மண்குன்றிலிருந்து எவ்வளவு தொலைவில் அந்த மதில்சுவர் கட்டப்பட வேண்டும் என்று ஒரு கணக்கோடு அவர் குதிரையைச் செலுத்தி வந்தார்.

அப்பா கணக்குப்போட ஆரம்பித்துவிட்டார். குதிரையை நிறுத்தும்போது என்ன செலவாகும் என்று சொல்லிவிடுவார் என்று அருண்மொழிப் பட்டன் நினைத்தான்.

அவன் நினைத்தது போலவே இத்தனை கழஞ்சுகள் செலவாகும். என்றும், இத்தனை ஆட்கள் தேவைப்படும் இத்தனை நாட்களில் முடித்துவிடலாம் என்று மண் சரிவில் மறுபடியும் இறங்கும்போது பிரம்மராயர் பதில் சொன்னார். திரும்பி தன் மகனைப் பார்த்தார். அவன் தோளில் கை வைத்தார்.

''உன்னை மகனாகப் பெற்றதற்கு இந்தக் கணம், இந்த நல்ல கணம் நான் பெருமிதம் அடைகிறேன். நான் உன் மடியில் மரணமடைய விரும்புகிறேன் அருண்மொழி. என் வாயில் கங்கை ஜலம் ஊற்றி காதில் கர்ண மந்திரம் சொல்லி நாராயணனுடைய நாமத்தையும் இடைவிடாது உச்சரித்து என்னை நீதான் கரையேற்ற வேண்டும். உன் மடியில் சாகின்ற மிகப்பெரிய பாக்கியத்தை ஸ்ரீமன் நாராயணன் எனக்குத் தரவேண்டும். நான் அற்புதமான ஒரு பிள்ளையைப் பெற்றிருக்கிறேன். அவன் என் தந்தைக்கு ஒப்பானவன் என்ற நினைப்போடு நான் சாகவேண்டும்.'' என்று குரல் கம்ம சொன்னபோது, அருண்மொழிப்பட்டன் கண்கலங் கினான். குதிரையிலிருந்தபடியே தாவி தன் தந்தையைத் தழுவிக் கொண்டான்.

''நீர் எனக்குத் தந்தையாக வந்தது என் பூர்வ ஜென்ம புண்ணியம். ஒருவேளை நீர் இறந்து நான் வயதாகி தளர்ந்திருக்கும் போது எனக்கு நீர் பேராராகப் பிறக்கவேண்டும். உம்மை நான் பேர் சொல்லி அழைத்ததில்லை. ஆனால், கிருஷ்ணன்ராமன் என்று உம்முடைய பெயரை என் பேரனுக்குச் சொல்லி வாயார நான் அழைக்க வேண்டும். அந்தப் பேரனுக்கு நான் இறந்த பிறகு மக னாகப் பிறக்கவேண்டும்.'' என்று தழுவியபடியே சொன்னார்கள்.

தந்தையும், தனயனும் இறுக்கத் தழுவிக் கொண்டார்கள். கீழே குளத்திலிருந்து உச்சியில் அவர்கள் கட்டிக்கொண்டு நிற்பதை சக்ரவர்த்தி உடையார் பார்த்தார். அவர் விழிகள் வியப்பால் வியந்தன.

நல்ல சகுனங்களே காலையிலிருந்து தொடர்ந்து பார்த்துக் கொண்டிருக்கிறேன். பாத்திரங்கள் பார்த்ததும், தந்தையும்,

பிள்ளையுமாக இருவர் தழுவிக் கொள்வதைப் பார்த்ததும், அந்தணர்கள் ஜெய்விஜயீபவ சொன்னதும், எக்காளம் கேட்டதும் மனசு நிறைகிறது. இதோ இந்தக் குளத்து ஜலம் குடித்ததும் இன்னும் குளுமையாக இருக்கிறது. இந்த வேலை வெகு நிச்சய மாய் நன்கு முடியும் என்று சொன்னார். தொலைவிலே எக்காளம் கேட்டது. வேலைக்கு வாருங்கள் என்கிற எக்காளம் அது.

அந்த எக்காள சத்தம் கேட்டு ஜனங்கள் சாரை சாரையாக அந்த மண் குன்று நோக்கி நடந்தார்கள்.

அரிசிக்கஞ்சி கொதித்துக் கொண்டிருந்தது. பெரிய மண் தொட்டியில் ஆற வைக்கப்பட்டிருந்தது. உள்ளே நுழைகிற அத்தனை பேருக்கும் மண் குடுவையில் அரிசிக்கஞ்சியும், தொட்டுக் கொள்ள பீர்க்கந்துவையலும் தரப்பட்டன: இரண்டு குவளை அரிசிக் கஞ்சியும், உள்ளங்கை பீர்க்கத்துவையலும் சாப்பிட்டு விட்டு ஆட்கள் உள்ளே நுழைந்தார்கள். பெண்களும் தலைக் கூடையோடு உள்ளே போனார்கள். மாடுகள் மேற்குப்பக்கம் வரிசையாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

சோழ தேசத்தின் சேனாபதியும், முதல் மந்திரியுமான பிரம்ம ராயர் கிருஷ்ணன்ராமனின் வேவுப்படைகளின் முதல்வர்களான கோவிந்தனும் வில்லிற்கிடந்தான் மங்களாச்சனும் அவருக்கு அருகே நெருங்கி வந்து தங்கள் வாழ்த்துக்களைத் தெரிவித்தார்கள்.

"உங்களுடைய இந்த அற்புதமான பணியில் எங்கள் இரண்டு பேரையும் ஈடுபடுத்திக்கொள்ளுங்கள் என்று உங்கள் பாதம் தொட்டுக் கேட்டுக் கொள்கிறோம்."

உங்களை எங்கள் எஜமானனாக நினைக்கவேயில்லை. நீர் என் தகப்பன். நீர் என் குரு. நீரே எமக்கு எல்லாமே. உம்மை நான் ஸ்ரீமன்நாராயணனாகவே பார்க்கிறேன்.

மிகப்பெரிய சிவாலயத்திற்கு மிக அற்புதமாக மண்டபங் களோடு கூடிய ஒரு மதில் சுவரை எழுப்பவேண்டுமென்ற பணி மிக மகத்தானது. சந்திரசூரியர் உள்ளரையில் உங்களுடைய பெயரும் உங்களுடைய உழைப்பும் மண்டபத் தூண்களிலும் கருங்கல்களிலும் இருக்கும்.

காலம் காலமாக பல்லாயிரக்கணக்கான வருடங்களாக நாங்களும் இங்கே வாழப்போகிறோம். இதை நினைக்க நினைக்க சந்தோஷமாக இருக்கிறது. இந்த மதில் கட்டும் பணியில்



பூரணமாய் எங்களை ஈடுபடுத்திக் கொள்ளத் தயவு செய்து அனுமதி கொடுங்கள்.

நாங்கள் இரண்டு நாய்களைப் போல உங்களைச் சுற்றிச் சுற்றி வந்து இந்தப் பணியில் ஈடுபடுத்திக்கொள்ளச் சித்தமாக இருக் கிறோம். சிவன் விஷ்ணு என்ற பேதமெல்லாம் முட்டாள்களுக்கே உரியன. பௌத்தம், சமணம் என்ற பேதமும் மதமறியாதவர் களுக்கே உண்டு. கடவுள் பற்றிய ஞானமுள்ளவர்கள் இன்னொரு மதத்தை ஒருக்காலும் குறை சொல்லமாட்டார்கள். சக்ரவர்த்தி உடையாரின் ஈடுபாட்டைக் கவனிக்கும்போது, இந்த மதில் கட்டும் பணி மிகச் சாதாரணமானது என்பதுதான் என்னுடைய அனுமானம். இதைச் செய்வதற்கு நமக்கு ஒரு அருகதையை ஸ்ரீமன்நாராயணன் கொடுத்திருக்கிறாரே இது மிகப்பெரும் பாக்கியம்.

நீங்கள் உத்தரவிட்டால் இப்பொழுதே யார் இந்த சுவர் கட்டும் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறார் என்று பார்த்து அந்தச் சிற்பியிடம் பேசி மேற்கொண்டு இது எத்தனை உயரத்திற்கு வரவேண்டும் என்பதை நிர்ணயம் செய்து மண்டபத்தூண்கள் பற்றியும் பேசி அதற்குண்டான கற்கள் ஆட்கள் என்று பல வகைகளைப் பற்றி விவரமாய் கேட்டுக் கொண்டு, இன்று இரவே உங்களைச் சந்திக்கிறேன். இது கோவிந்தனான என்னுடைய பணி.

வில்லிற்கிடந்தான் மங்களாச்சன் நம்முடைய உளவுப் படைகளுக்கு இந்த விஷயத்தைச் சொல்லி நாம் அனைவரும் இதில் ஈடுபட வேண்டும் என்ற கட்டளையையும் விடுவான். தொண்டைநாட்டு அந்தணர்கள்போல ஒரு தனித்த குழுவாக நாம் இந்த மதில் கட்டும் பணியில் ஈடுபடுவோம். அதற்காக கூலி ஆட் களையும், பெண்டுகளையும், அவர்களுக்கு உணவு சமைப்பவர் களையும், சிற்பிகளையும், பார வண்டிகளையும், அந்த வண்டிகளை நடத்துபவர்களையும், அந்த வண்டி மாடுகளைப் பராமரிக்கிறவர்களையும் நாம் நியமிக்க வேண்டும்.

அவர்கள் மற்ற பணியில் தம்மை ஈடுபடுத்திக் கொள்ளாது இப்பொழுதே இந்த சுவர் கட்டும் பணியில் ஈடுபட்டு விடுவார்கள். வெறும் மதில் சுவர் அல்ல. நெருக்கமாய் ஒரு கருங்கல் மண்டபம். மதில் சுவரை ஒட்டி கட்டப்படப் போகிறதென்ற எண்ணம் எனக்கு மிகுந்த சந்தோஷத்தைக் கொடுக்கிறது.

கிராமங்களிலிருந்தும், மற்ற நகரங்களிலிருந்தும் வரும் மக்கள் இங்கேயே படுத்து உறங்கி இங்கேயே அமர்ந்தபடி இந்த பிர

மாண்டமான கோயிலை வியந்து வியந்து பார்த்துக் கொண்டிருப் பார்கள். இரவில் இப்படியொரு தங்குமிடம் பெண்டுகளுக்கும், கிழவர்களுக்கும், குழந்தைகளுக்கும் இருப்பது நல்லது. வெட்ட வெளியில் தூங்காமல் மண்டபத்தில் படுத்திருப்பது சகலருக்கும் உபயோகமாக இருக்கும். உங்கள் மகன் வாழ்வாங்கு வாழ வேண்டும். உங்களிடம் வேலை செய்ததுபோல நாங்கள் உங்கள் மகனிடமும் வேலை செய்ய வேண்டும். அதற்குப் பெரியவரான நீங்கள் அனுமதியளிக்க வேண்டும்.

கைகூப்பி கோவிந்தன் பேச பிரம்மராயர் கண்ணிலிருந்து மெல்லக் கண்ணீர் கசிந்தது.

"கோவிந்தா... வாழ்க்கை வினோதமானதடா. பெரும் காட்டாறு. எங்கெங்கோ இழுத்துக்கொண்டு போகிறது. எதற்கு இந்தக் கோயில் கட்டும்பணி தேவைதானா என்று நானும் யோசித்தேன். ஒருவேளை நான் வைஷ்ணவன் என்பதால் அப்படி யோசித்தேனா என்றும்கூட இப்போது தோன்றுகிறது.

எதிரிகளைச் சூறையாடுவதை விட்டுவிட்டு சோழ தேசத்தின் எல்லைகளைப் பலப்படுத்துவதை விட்டு விட்டு, கடற்படையை விட்டுவிட்டு இப்படியொரு கோயில் கட்டுகிறாரே மாமன்னர் என்று நானும் அலுத்துக் கொண்டிருக்கிறேன். ஆனால், இப்போது இந்த மதில் கட்டும் பணியும் மண்டபப் பணியும் என்னிடம் வந்த போது எனக்கு உள்ளுக்குள் ஒரு பெரிய குதூகலம் பொங்குகிறது. இது சரியாக நிறைவேற வேண்டுமே என்ற ஆவல் பிறக்கிறது. நீ யோசிப்பது போலவே. நானும் யார் யார் வேண்டும் என்னென்ன வேண்டும். எப்போது வேண்டும் என்று யோசிக்க ஆரம்பித்து விட்டேன்.

கோவிந்தா, வெறும் மதில் சுவர் கட்டும் பணியே இப்படியொரு கிறுகிறுப்பை ஏற்படுத்துகிறதே. இந்தக் கோயில் கட்டும் பணியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்ட இந்தச் சக்ரவர்த்தி என்ன அவஸ்தைப்பட்டிருப்பார். என்னை விட இராஜராஜர் வயதில் சிறியவரடா. இரவு பகல் பாராது, தூக்க மில்லாது எத்தனை உழைத்திருப்பார். எத்தனை யோசித்திருப்பார். மிக உயர்ந்த ஒரு மனிதரிடம் நாம் பணிபுரிகிறோம். அவர் வாழ்வாங்கு வாழ வேண்டும். அவரைக் கண்ணின் மணியெனக் காப்பாற்ற வேண்டும். மெய்க்காவல் படையும் நமது உளவுப்படையும் கை கோர்த்துச் செயல்படவேண்டும். அதிகமாக ஆட்கள் இருப்பதால் இவர்களுக்கிடையே மன்னர் புழங்குவதால் இங்கே எந்த



அசம்பாவிதமும் நிகழ்ந்துவிடக்கூடாது. மன்னரைத் தொடும் முயற்சியில் அல்லது மன்னருக்கு நெருங்கி நின்று பேசுகின்ற முயற்சியில் எவர் ஈடுபட்டாலும் கண்டிக்கப்பட வேண்டும். மன்னர் அகன்றபிறகு ஜாக்கிரதை என்று எச்சரிக்கப்படவேண்டும். இது நல்லது. ஆனால் மன்னர் இருக்கும் போது அதிகமாக அதட்டிவிட வேண்டாம்.''

நாலாபுறமும் நாலாவிதமுமாய் உத்தரவுகள் பிறப்பித்தார்கள். உத்தரவுகளைப் பெற்றுக் கொண்டு வேலை செய்தார்கள்.

முதன்முதலாய் நூறு வலிமையான இளைஞர் பட்டாளம் அந்த மண் குன்றின் அடியில் வந்து நின்றது. அவர்கள்தான் புலிக்கொடி யோடு மேலே ஏறி அங்கு புலிக் கொடியை நட்டுவிட்டு அங் கிருந்தபடியே மண் அகற்றப் போகிறார்கள். பல்வேறு ஊர்களைச் சேர்ந்த இளைஞர்களை அங்கு நிற்க வைத்திருந்தார்கள். அவர்கள் அமைதியாக நிற்கிறார்களா என்று ஒரு தளபதி பார்த்துக் கொண்டிருந்தார். கொஞ்சம் ஆடுகிறவரை, உடனடியாக அந்தக் கூட்டத்திலிருந்து விலக்கினார். ஆடினால் விலக்குகிறார்கள் என்று அந்தக்கூட்டம் கண்டு கொண்டது. அமைதியாக நின்றது.

"ஏன் ஆடக்கூடாது என்கிறீர்கள்.''

ஒரு வேளான் இளைஞர்கள் சீறலாகக் கேட்டான்.

"அறிவு கெட்ட முண்டம்.'' அந்தத் தளபதி அவனைவிட சீறலாகப் பதில் சொன்னார்.

"இத்தனை உயரத்தில் ஏறி நின்று இவன் இளித்தது போல் இடுப்பு அசைத்து ஆட்டிமாடினால் தலைகுப்புற விழுவாய். இன்றைக்கு முதல் நரபலியாக நீ இருக்கவேண்டுமென்று எனக்கு விருப்பமில்லை. உன் தாய், தந்தைக்கு மகனாக நீ ஊர் திரும்பிப் போக வேண்டுமென்றால் ஆடாது அசையாது அமைதியாக இரு. உயரத்தில் இருக்கிறோம் என்ற எண்ணத்தில் அமைதியாக இரு. மெல்ல மெல்ல ஒவ்வொரு அடியும் பார்த்து வைத்து, ஒவ்வொரு கூடை மண்ணையும் அமைதியாக எடுத்து வைத்தால்தான் எல்லோ ரும் வீடு போய் சேரமுடியும். இல்லையென்றால் நீயும் அழிந்து இன்னும் நாலு பேரையும் அழிப்பாய். புரிகிறதா.'' என்று சொல்ல, அங்கு நின்றிருந்த அந்த இளைஞர் கூட்டம் புரிந்தது என்று தலையாட்டிற்று. தங்களுக்குள் அமைதியாக இருக்க வேண்டியதன் அவசியத்தைப் பேசிக் கொண்டது.

''நான் சமையல்காரனா.. தலையெழுத்து மனைவி ப்ரேஷ்டையான மூன்று நாட்கள் நான் சமைக்க ஆரம்பித்தேன். அது இப்படி வந்து சேருமென்று நான் நினைக்கவேயில்லை.''

ஒரு அந்தணர் அலுத்துக் கொண்டார்.

''ஏன், சமையலைக் கேவலம் என்பது போல பேசுகிறீரே''

''கேவலம் என்று பேசவில்லை. நான் பதினைந்து பேருக்கு சமைத்திருக்கிறேன். நாற்பது பேருக்கும்கூட சமைத்திருக்கிறேன். ஆனால் ஆயிரம் பேருக்குச் சோறு வடிக்கச் சொல்கிறீர்களே என்ன அளவு. எத்தனை அளவு உப்பு அதுவும். கதம்ப சோறாம். காய்கறி வெட்டிப்போட்டு, குழம்பு போல சோறு சமைக்க வேண்டுமாம். முடியும் எனக்குத் தெரியுமா. அடுப்பும், பானையும், விறகும் கட்டையும், அரிசியும் கொடுத்துவிட்டு சமை என்று சொன்னால் நாளைக்கு சரியாக இல்லையென்றால், என் முகத்திலல்லவா துப்புவார்கள். என்னால் இது ஆகாது.'' அந்த அந்தணர் துண்டை உதறிப் புறப்படும்போது ஒரு மறவர் குறுக்கே வந்து தடுத்தார்.

''நீர் போனால் கைது செய்யப்படுவீர்.''

''ஆமாம். ஆளாளுக்கு இப்படியொன்று ஆரம்பித்து விடுங்களடா. கைது செய்து எல்லோரையும் எங்கே போடுவீர்கள். அங்கேயும் வந்து சமைக்கத்தானே சொல்வீர்கள். அறுபது பேரைக் கைது செய்திருக்கிறோம். அறுபது பேருக்கும் சமை என்றுதானே சொல்வீர்கள்.'' என்று அந்தணர் சொல்ல, அந்த மறவன் வாய் விட்டுச் சிரித்தான்.

''ஐயா, நான் வயிற்றெரிச்சலில் இருக்கிறேன். நீர் வாய்விட்டுச் சிரிக்கிறீர்.''

அந்த அந்தணர் அலுப்பாகச் சொல்ல, இல்லை, ஒரு சிறைக் கூடத்தில் நீர் சமைத்துக் கொண்டிருப்பதாக நினைத்துக் கொண்டேன் சிரிப்பு வந்தது.'' என்று சொல்ல அந்த அந்தணரும் வாய் விட்டுச் சிரித்தார்.

''இப்பொழுது என்ன செய்வது அதைச் சொல்லுங்கள்.''

''ஆயிரம் பேருக்கு தனி ஒருவனாய் எப்படி சமைப்பது.''

''தனி ஒருவன் அல்ல. உங்களுக்கு எத்தனை பேர் துணை வேண்டும். அதைச் சொல்லுங்கள்.''

''துணையிருப்பதும் முக்கியமில்லை ஐயா. இத்தனை சோறு சமைப்பதற்கு எவ்வளவு உப்பு போட வேண்டும் என்று நடுக்கமாக



இருக்கிறது. உப்புகூட இருந்தால் அசிங்கமாகிவிடுமய்யா. யாரோ அரிசி கொடுக்கிறார்கள். யாருடையதோ பானை, நான் அந்த வேலையைச் சரியாகச் செய்ய வேண்டாமா. பசிக்கின்ற மக்களுக்கு ஒழுங்காக சோறு போட வேண்டாமா.''

''கவலைப்படாதீர்கள். உப்பு குறைவாகப் போடுங்கள்.''

''குறைவாக என்றால் எத்தனை குறைவாக.''

''தெரியாதய்யா. குத்து மதிப்பாக ஒரு அளவு குறைவாகப் போடுங்கள். உப்பு குறைவாக இருந்தால் கூட்டிக் கொள்ளலாம். உப்பு கூடுதலாக இருந்தால் குறைக்க முடியாது.'' மறவர் சொல்ல அந்தணர் சரியென்று தலையசைத்தார்.

பெரிய நெய்ப்பந்தத்திலிருந்து சிறிய நெய்ப்பந்தம் எடுத்து வந்து அடுப்பு மூட்டினார்கள். அடுப்பு மூட்டுகிறபோது, ''தென்னாடுடைய சிவனே போற்றி, எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி. நமசிவாயம்... நமசிவாயம்... நமசிவாயம்...'' என்று இடையறாது முழங்கினார்கள்.

தகதகவென்று அடுப்பு எரிந்ததும் நீர்ப் பானையில் கயிறு கட்டி அதை மூன்று மறவர்கள் சேர்ந்து பாறை அடுப்பில் ஏற்றி வைத்தார்கள்.

கூடை கூடையாய் அரிசி கொண்டு வந்து கீழே இறக்க, தொண்டை நாட்டு அந்தணர் வந்து அரிசி அளவு கொடுத்துவிட்டு கையெழுத்து வாங்கிப் போக சுத்த நீர் பாத்திரத்தில் அரிசி கொட்டப்பட்டு களையப் பட்டு, மிதக்கின்ற நெல் அப்புறப் படுத்தப்பட்டு களைந்தெடுக்கப்பட்டு பெரிய ஓலைப்பாயில் களைந்த அரிசி கொட்டப்பட்டது.

நீர் கொதிக்கத் துவங்கியதும் இன்னும் கொதிநிலை வரட்டுமென்று சொல்லிவிட்டு காய்கறிக்கூடையைக் கீழே இறக்கி வைத்து, அந்த காய்கறி கூடைக்குக் கீழே பலகை போட்டு ஆறேழு பேர்கள் உட்கார்ந்து காய்கறிக் கூடையிலுள்ள கத்தரிக்காய்களை மட்டும் பொறுக்கி மிக வேகமாகத் துண்டு செய்தார்கள்.

ஒரு மறவர் கொஞ்சம் நீண்ட போர் வாளினால் கத்திரிக்காய் வெட்ட, எவன் எவனையோ கொலை செய்த வாள் இப்போது கத்திரிக்காய் நறுக்கிக் கொண்டிருக்கிறது. இது கத்திரிக்காய்க்கும் கேடு, வாளுக்கும் அசிங்கம். எனவே, இந்த வாளை வைத்துவிட்டுச் சிறிய கத்தியை எடுத்துக் கொள்ளுங்கள் என்று சொல்லி சிறிய கத்திகளைக் கொடுக்க வேகமாக கத்தரிக்காய்கள் நறுக்கப்பட்டன.

இன்னொரு அடுப்பு பற்ற வைக்கப்பட்டது. அந்த அடுப்பில், பெரிய இரும்புச்சட்டி ஏற்றி வைக்கப்பட்டது. இரும்புச் சட்டியில் எள்ளிலிருந்து எடுக்கப்பட்ட நல்லெண்ணெய் ஊற்றப்பட்டது. நறுக்கப்பட்ட கத்தரிக்காய்களோடு மிளகும், பருப்புகளும் கலந்து போடப்பட்டன. பெரிய துடுப்பில் அந்தக் கத்தரிக்காய் புரட்டிப் புரட்டி எடுக்கப்பட்டது. கொதிக்கின்ற நீரில் களைந்து வைக்கப் பட்ட அரிசி போடப்பட்டது.

"கத்தரிக்காய் நன்றாக வேகிறது. மறவனே ஒரு உதவி செய். ஒரு தூக்கு நிறைய நெய் கொண்டு வா. கத்தரிக்காயின் மேலாக நெய் தெளித்து விட்டால் இன்னும் வாசனையாக இருக்கும்." என்று அந்த அந்தணர் சொல்ல, ஒரு குதிரையில் ஏறி தூக்குச் சட்டியோடு அந்த மறவர் ஓடிப்போனார்.

வாணலியில் நீரைத் தெளித்து மறுபடியும் கத்தரிக்காயைப் புரட்ட வெள்ளையாய் புகை எழுந்தது. எண்ணெய் வாசனையும், கத்தரிக்காய் வதங்குகின்ற வாசனையும், மிளகு நெடியும் ஒன்றாய் கலந்து அடித்தன. தொலைவே இருந்த இளைஞர்கள் எட்டிப் பார்த்தார்கள். ஆனால் இடுப்பு உயரத்திற்கு அந்த அடுப்பு சுற்றி வேலி போடப்பட்டிருந்தது.

நெய் தூக்கோடு மறவர் ஓடி வந்தார். நெய் தெளிக்கப்பட்டது. இன்னும் வாசனை அதிகமாகயிற்று. இன்னும் ஜனங்கள் திரும்பிப் பார்த்தார்கள். அரிசி வெந்து விட்டதா என்று துடுப்பைப் போட்டு எடுத்துப் பார்த்தார்கள். அரிசி விரைப்பாய் வெந்திருந்தது தெரிந்தது. இறக்கி விடு என்றார் இன்னும் சற்றுக் குழையட்டுமே என்று மறவர் சொல்ல, "இல்லை நான் சொல்வதைக்கேள் இது பொலபொலவென்று இருந்தால்தான் நன்றாக இருக்கும்." என்று சொல்லி அந்தப் பானையைக் கீழே இறக்கச் சொன்னார். இரண்டு பிடிகளுக்கு நடுவே கட்டை கொடுத்து இரண்டு மறவர்கள் தூக்கி சோற்றுப் பானையைக் கீழே வைத்தார்கள். சற்று அடங்கியதும், சோற்றை பனை ஓலைப்பாயில் சாய்த்தார்கள். துடுப்பை வைத்து ஆற்றினார்கள். அற்புதமான சோறின் மணம் அந்தப் பூமியெங்கும் பரவியது.

கத்தரிக்காய் கறியைக் கொண்டு வந்து அப்படியே அந்தச் சோற்றின் மீது அந்த அந்தணர் கொட்டச் சொன்னார். கொட்டும் போதே புரட்டினார். கத்தரிக்காயும், கடலைப்பருப்பும் துவரம் பருப்பும், காராமணியும் கலந்த அந்தக் கறியமுதுசோற்றோடு கலந்தது. இன்னும் வாசனை அதிகரித்தது.



அடேயப்பா... கொலைகுத்து உணவு தயாராகிக் கொண்டிருக் கிறது என்று தொலை தூரத்திலுள்ள மறவர்கள் துள்ளிக் குதித்தார்கள்.

அவர்கள் அந்த உணவின் மீது இன்னொரு பாய் போட்டு கட்டை வைத்து மூடினார்கள்.

மறுபடியும் நீர்ஊற்றி, மீண்டும் அரிசி களைந்து அந்த அந்தணர் சோறு பொங்கினார்.

"என்னவோ பயந்தீரே. அற்புதமாகச் செய்கிறீரய்யா."

"இதுவரை தின்று பார்க்கவில்லை. தின்ற பிறகுதான் சொல்ல வேண்டும். வாசனையை வைத்துக் கொண்டு சொல்லக்கூடாது."

"வாசனை தூக்கலாக இருக்கிறதே உப்பு சரியாக இருந்தால் தானே வாசனை தூக்கலாக இருக்கும் என்று சொல்வார்கள்."

"அப்படியில்லை வாசனைக்கும் உப்புக்கும் சம்மந்தமில்லை. உப்பும் சரியாக இருக்குமென்று நினைக்கிறேன். இந்த முறை பாரும். இன்னும் திட்டமாக உப்பு போடுகிறேன்." அவர் கைகளில் உப்பு ஏந்தி அந்த மண் குன்றைப் பார்த்து என் சிவனே என்று சொல்லி கொதிக்கின்ற நீரில் உப்பைப் போட்டார். கத்தரிக் காய் மறுபடியும் நறுக்கப்பட்டது. மறுபடியும் புரட்டப்பட்டது. மறுபடியும் சோறு வெந்ததா என்று சோதிக்கப்பட்டது. இன் னொரு பாயில் சோறு கொட்டப்பட்டது. கத்தரிக்காய் போட்டு புரட்டப்பட்டது. மறுபடியும் மூடப்பட்டது. மீண்டும் உலை ஏற்றப்பட்டது.

அரசர் குளித்துவிட்டு நெற்றியில் விபூதியோடு மண் குன்று நோக்கி வந்தார். அரண்மனை அந்தணர்களும் வந்தார்கள். சிவன்பெயரால் அரசர் சங்கல்பம் செய்து கொண்டார். தர்ப்பை ஆசனத்தில் அமர்ந்து வேழ முகத்தோனை வழிபட்டார். எல்லா தேவதைகளுக்கும் வணக்கம் சொன்னார். எல்லா தேவர்களையும் நமஸ்கரித்தார். சிவனை ஆராதித்தார். ஸ்ரீமன் நாராயணனுக்கும், பிரம்மாவிற்கும், சரஸ்வதிக்கும், லஷ்மிக்கும், துர்கைக்கும் வணக்கம் சொன்னார். தங்க மண் வெட்டி அவர் கையில் கொடுக்கப்பட்டது.

மண்வெட்டியை எடுத்து மெல்ல மண் குன்றுக்கு அருகே போய் ஓங்கி மண்வெட்டியை உயர்த்தினார். சுற்று முற்றும் பார்த்தார். சிவாயநமஹ... சிவாயநமஹ... சிவாய நமஹ... கூட்டம் பிளிறிற்று.

சிவாயநமஹ... என்று சொல்லி ஒரு பெரும் கொத்தைக் குத்தி அள்ளி கூடையில் போட்டார். மீண்டும் ஒரு முறை குத்தி கூடையில் போட்டார். மூன்று கொத்தில் கூடை நிறைந்தது. கூடையை பஞ்சவன்மாதேவி தலையில் சுமந்து கொண்டு கீழிறங்கி அங்குள்ள காளை மாட்டுப்பையில் நிரப்பினார். அடுத்த கூடையை இன்னொரு மனைவி இலாடமாதேவி நிரப்பினார். அரண்மனைப் பெண்டிர்கள் மண்தட்டு சுமந்தார்கள்.

உலோக சிற்பிகள் மூவர் அரசரிடமிருந்த மண்வெட்டியை வாங்கிக்கொண்டார்கள். ஆனால், அந்த மண் வெட்டியைக் கொத்தாமல் வைத்திருந்தார்கள்.

இளைஞர்கள் மேலே உச்சியில் படியேறினார்கள். வளைந்து வளைந்து போகின்ற பாதையில் உச்சிக்குப் போய் புலிக்கொடியை நட்டார்கள்.

கீழிருந்து அரசர் கொடியசைக்க மேலே வெட்டும் பணி துவங்கியது. வெட்டும் பணி துவங்கியதும் அரசரும், இளவரசரும், மெய்க்காவல் படை வீரர்களும் வட்டப்பாதையில் குதிரையின் மூலம் ஏறினார்கள். பாதி தூரம் ஏறியபிறகு குதிரையிலிருந்து இறங்கி மெல்லக் கோலூன்றி நடந்தார்கள். உச்சிக்குப் போய் அவர்களும் நின்றார்கள். அங்கிருந்து பார்த்தபொழுது தஞ்சைத் தரணி முழுவதும் மிக அற்புதமாகத் தெரிந்தது.

அரசர் வந்துவிட்டார் என்று தெரிந்ததும் மேல் பகுதியில் சுற்றி யிருக்கின்ற அந்த இளைஞர்கள் ஒரே இடத்தில் சூழ ஆரம்பித் தார்கள். ஒரே இடத்தில் எல்லோரும் சூழ்ந்ததும் காலடி மண் மெல்ல ஆட்டம் கண்டது.

கும்ப கலசம் வைப்பதற்காக துளை போட வந்த ஒரு சிற்பி. விலகுங்கள்... விலகுங்கள்... என்று அந்த இளைஞர்களைத் துரத்தினார். சுற்றி நிற்கச் சொன்னார். அரசர் நிற்கும்போதே காலை உதைத்து மண்ணைப் பரிசோதனை செய்தார்.

சக்ரவர்த்தி அவர்கள் கீழே இறங்கி விடுதல் நலம். இந்த இடம் அவ்வளவு பாதுகாப்பாக இல்லை என்று பதட்டப்பட்டார். ஆனால், சக்ரவர்த்தி அதைக் காதில் போட்டுக் கொள்ளவில்லை.

எல்லோரும் ஒரே இடத்தில் சூழ்ந்து நின்றால் மண் ஆடத்தான் செய்யும். உங்களுடைய இடத்திற்கு நான் வருகிறேன். நீங்கள் எதற்காக என்னைப் பார்க்க வரவேண்டும் என்று அந்த இளைஞர் களைச் சுற்றி நிற்கச் செய்தார். அந்த வட்டப்பாதையின் கடைசிப் பகுதியை மெல்ல சுற்றி வந்தார். ஒவ்வொரு இளைஞனின்



தலையையும், முதுகையும் தடவிக் கொடுத்தார். அந்த இளைஞர்கள் பல் தெரிய, விழிவிரிய குதூகலத்தில் ஆழ்ந்து போனார்கள்.

இத்தனை அருகே இத்தனை உயரத்தில் சக்ரவர்த்தியைப் பார்க்க யாருக்காவது கிடைக்குமா? எந்த இடத்திலாவது சக்ரவர்த்தி யார் தோளையாவது பற்றிக் கொண்டாவது நடப்பாரா. இங்கே ஒவ்வொருவர் தோளையும் பற்றிக் கொண்டுதான் அவர் நடந்து வருகிறார். இது என்ன பாக்கியம். இதை ஊருக்குப் போய் சொல்ல வேண்டும் என்று எல்லோரும் பரபரத்தார்கள். கீழேயிருப்பவர்கள் பார்க்கிறார்களா என்று ஆசைப்பட்டார்கள்.

கீழேயிருக்கிறவர்களுக்கு மேலே புலிக்கொடிக்கீழ் இராஜராஜர் நிற்பதும், இளவரசர் அவருக்கு அருகே நிற்பதும் மெய்க்காவல் வீரர்கள் சூழ்ந்து கொண்டிருப்பதும், ஒவ்வொருவராகத் தொட்டுக் கொண்டு அரசர் முன்னேறுவதும், பின்னே மற்றவர்கள் நடப்பதும் தெரிந்தது. பொறாமையால் பெருமூச்சு வந்தது. தாங்களும் மேலே போக வேண்டும் என்று நினைத்தபோது, வழியில் மறவர்களால் தடுக்கப்பட்டார்கள்.

''எதற்கெடுத்தாலும் குறுக்கே இவர்கள் நிற்கிறார்களய்யா.'' என்று வேளாளர்களும் கருமார்களும் அலுத்துக் கொண்டார்கள்.

அந்த மறவர் கூட்டம் ஒரு ஆளைக்கூட அந்தப் பாதையில் ஏற அனுமதிக்கவில்லை.

அரசர் அந்த வட்டப்பாதையில் முதல் இரண்டு சுற்று நடந்து இறங்கினார். அவர் இறங்குவது தெரிந்ததும் எல்லோரும் கையசைத்து வாழ்த்துத் தெரிவித்தார்கள். மூன்றாவது பாதையில் வந்தபோது குதிரையில் தாவி ஏறினார். அப்போதும் பெருங்குரல் எடுத்துக் கூவினார்கள். குதிரை சுற்றிச்சுற்றி வந்து இறங்கி தரை தொட்டது. அந்த மறவர்கள் ஆட்களை மேலே அனுப்பினார்கள். ஆனால், ஆட்கள் இப்போது மேலே போவதற்கு விரும்பவில்லை. அரசர் எங்கிருக்கிறாரோ அவர் பின்னே போவதற்குத்தான் ஆசைப்பட்டார்கள்.

ஒரு ஒழுக்கமின்மை அங்கு வெகுபலமாக நிலவியது. ஒழுக்க மின்மையைச் சரிசெய்ய வேண்டிய மறவர்கள் முரட்டுத்தனத் தைக் காட்ட முடியாமலும் அதேசமயம் கூட்டத்தைக் கட்டுப் படுத்த முடியாமலும் பெரிய தடுமாற்றத்திற்குள்ளானார்கள்.

அரசர் இறங்கியதும் வட்டப்பாதை வழியாக மண், கூடை கூடையாக கைமாறி கீழே வந்து சேர்ந்தது. கீழே மாடுகளில்

கூடைகள் பொருத்தப் பட்டிருந்தன. அந்தக் கூடைகளில் மண் கொட்டப்பட்டு மாடுகள் நகர்த்தி அழைத்துப் போகப்பட்டன. இரண்டு மாட்டிற்கு ஒருவர் வீதம் மாடுகளை அழைத்துப் போனார்கள். வெளிப்புறத்தில் வேலியை உடைத்து பாதை போட்டிருந்தார்கள். அந்தப் பாதையின் வழியே மாடுகள் மண் கூடையோடு நடந்து போய் அங்கிருந்து புல்வெளி தாண்டி, காய்ந்த வயல்களைத் தாண்டி இலுப்பை மரங்கள் உள்ள தோப்பைத்தாண்டி ஒரு பெரிய கரம்பில் கொட்டப்பட்டது.

மண் அங்கு கொட்டப்பட்டதும் எல்லோரும் நமசிவாய வாழ்க என்று சொன்னார்கள்.

காலியான கூடைகளோடு மாடுகள் துள்ளி நடைபோட்டு மறுபடியும் மண் குன்றுக்கு அருகே வந்தன. மாடுகள் போலவே, மாடுகளுக்கு இணையாக குதிரைகளும் இருந்தன. குதிரையிலுள்ள கூடைகள் பெரிய கூடைகளாக இருந்தன. அவை இன்னும் அதிகமான மண் சுமந்தன.

"மேலேயிருப்பவர்களுக்கு நீர் யார் கொண்டு போய் கொடுப்பார்கள்." என்று கீழேயிருந்த ஒரு தொண்டை நாட்டு அந்தணர் வினவினார். அருகிலுள்ள ஒரு வாலிபமான பெண்மணியைப் பார்த்து "ஒரு குடம் தண்ணீர் கொண்டு போய் மேலே கொடுக்கிறாயா" என்று சொன்னார்.

அவள் சரியென்று தலையசைக்க சுற்றுப் பாதையில் நிதானமாகப் போ. தலை சுற்றப் போகிறது. ஜாக்கிரதையாக ஏறு என்று இருப்பதில் பெரிய குடத்தை அவள் கையில் கொடுத்து சிறிய இரண்டு குடுவைகளையும் கொடுத்தார்.

"உன் பெயரென்ன.." என்று கேட்டு எழுதிக் கொண்டார்.

"நப்பின்னை.." என்ற அந்த வைணவப் பெண்மணி வைஷ்ணவ தாசனின் சொந்தக்காரி. வைஷ்ணவ தாசனின் மனைவி கோயிலுக்கு அருகே வந்து விட்டதால் அவர்களைப் பார்த்துப் போகலாம் என்று வந்து அப்படியே கோயில் பணியில் இறங்கிவிட்டாள்.

நப்பின்னைக்கு திருமணமாகி ஒரு மகனும், மகளும் இருக்கிறார்கள். ஆனாலும் கட்டுடம்பும், கால்களும் உறுதியாக இருந்தன. மலைப்பாதையில் சுற்றி ஏறிக் கொண்டு போய் தண்ணீர் கொடுத்து விட்டு வருவது சிரமம் என்று தோன்றவில்லை. நப்பின்னை குடத்தோடு மேலே ஏற, "ஹா.. ஹா.. வந்து விட்டீர்களா இந்த ஒரு குடம் நீர் மேலே இருப்பவர்களுக்கு



எப்படி போதும். ஆளுக்கு ஒரு குடம் நீரல்லவா குடிப்பார்கள். அவ்வளவு தாகமல்லவா அங்கு எடுக்கும்." என்று அடிவாரத்தில் ஒருவர் சொன்னார்.

வேறொருவர் "அதெப்படி அங்கே தாகம் கூடுதலாக எடுக்குமா."

"ஆமாம். ஐயா. சூரியனுக்கு அருகே இருக்கிறார்களே. அப்போது உஷ்ணம் அதிகமாக இருக்காதா. உஷ்ணம் அதிகமாக இருந்தால் குடி தண்ணீர் அதிகம். தேவைப் படாதா. இப்படித்தான் நாங்கள் மேலைச்சாளுக்கியம் போகும் வழியில் கொஞ்சம் பாறையான இடத்தைத் தாண்டிப்போக வேண்டியிருந்தது. அத்தனை பேரும் தண்ணீர் தாகத்தில் தவித்துவிட்டோம்." என்று சொல்ல, எல்லோரும் அவரைச் சுற்றிக் கொண்டு அவர் பேசுவதைக் கேட்க ஆரம்பித்தார்கள்.

"பேசுவது போதும் வேலையில் இருங்கள்" என்று மறவன் அதட்ட, எல்லோரும் முகம் சுளித்தார்கள். நப்பின்னை, நாராயண... நாராயண... என்று சொல்லிக் கொண்டு வட்டப் பாதை ஏறினாள். உச்சிக்குப் போய் நின்று, "தம்பிகளா, குடிக்கத் தண்ணீர் வேண்டுமா." என்று பிரியமாகக் கேட்டாள்.

"நன்றாக இருக்கிறது கதை. இதற்காகவா மேலே வந்தீர்கள்."

"ஆமாம். உங்களுக்குத் தாகம் எடுக்குமே என்று தான். மேலே வந்தேன். நீங்கள் சூரியனுக்கு அருகே இருக்கிறீர்களல்லவா." என்று நப்பின்னை எல்லாம் தெரிந்ததுபோல சொன்னாள். அவர்கள் வாய் விட்டுச் சிரித்தார்கள். நப்பின்னை விழித்தாள்.

"இங்கே குளிர் கொல்லுகிறது தாயே. கீழேயிருப்பது போல வெப்பம் மேலே இல்லை. ஊதற்காற்று அடிக்கும்போது மேலே போர்த்திக் கொள்ள ஏதேனும் துணி தேவைப்படுகிறது. ஒரு வகையாகத் தாங்கிக் கொண்டிருக்கிறோம். அதுவும் தவிர இங்கு தண்ணீர் குடித்தால் குத்திட்டு உட்கார வேண்டியிருக்கும். சிறுநீர் கழிக்க வேண்டியிருக்கும். எங்கு கழிப்பது. இதே இடத்திலா அது அபசாரமல்லவா இறங்கிப் போக வேண்டுமென்றால், அதற்கே நேரம் சரியாகப் போகுமே. அதனால் மேலே வந்தவுடனேயே நாங்கள் தீர்மானித்துவிட்டோம். இங்கு தண்ணீர் குடிப்பதில்லை என்று" அவர்கள் எல்லோரும் ஒருமித்த குரலில் சொல்ல, நப்பின்னை என்ன செய்வது என்ற தெரியாமல் அந்தத் தண்ணீர் குடத்தை உச்சியிலுள்ள கரீவம் என்கிற உருண்டைக்கல்லில்

மெல்ல ஊற்றினான். அந்த உருண்டைக்கல் நீரை உள்வாங்கிக் கொண்டது.

சகலமும் நாராயணனுக்கே சமர்ப்பணமாகட்டும் என்று வேண்டிக் கொண்டாள். காலிக்குடத்தோடு கீழே இறங்கினாள்.

நான் சொன்னேன் அல்லவா. இந்த ஒரு குடம் ஒரு ஆள் குடிப் பார்கள் என்று சரிதானே என்று கீழேயுள்ள மறவர் சொல்ல, அவள் ஒன்றும் பதில் சொல்லாமல் வெளியே வந்தாள். தொலைவி லிருந்து தான் உச்சியில் நீர் கொட்டிய இடத்தைப் பார்த்தாள். அவளுக்கும் ஒன்றும் புரியவில்லை.

என்ன பிரமாண்டம். இது சிவன் கோயிலா, இந்த பிரமாண்டத் தின் பெயர் நாராயணர். சிவன் அழிப்பவர். நாராயணர் வளர்ப்ப வர். இது காலம் காலமாக வாழும். வாழ்வதற்கு நாராயணர் வழிசொல்வார். இது அழியாதது. சிவன் உள்ளே அடங்கி யிருக்கிறார். இது பிரம்மனால் உருவாக்கப்பட்டது. ஆனாலும், காப்பாற்ற வேண்டிய பொறுப்பு நாராயணருக்கே உண்டு. உள்ளேயிருப்பது சிவலிங்கம் எனினும் விமானம் நாராயணம்... நாராயணம்... நாராயணம் என்று கைகூப்பினாள்.

வெயில் உச்சிக்கு வந்தபோது மேலேயிருந்து பல கூடைகள் மண் வெளியேறிற்று. க்ரீவம் முழுவதும் தெரிந்தது. சில பேர் மாடுகள் போகின்ற பாதையைச் சரி செய்யவும். சுற்றியிருக்கின்ற மண்ணை அப்புறப்படுத்தவும் ஆரம்பித்தார்கள். நிழல் தன் காலைத் தானே தொட்டதும் அந்தணர்கள் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

எக்காளம் ஊதுபவருக்கு சைகை செய்ததும், கிழக்குப் பக்கத்திலிருந்து எக்காளம் ஊதுபவர் மூன்று பேர் எழுந்து நின்று எக்காளம் ஊத தெற்கிலும், மேற்கிலும் கூடவே எக்காளம் ஊதப்பட்டது. மேலேயிருந்து இளைஞர்கள் வேகமாக ஒரு சிறிய கூச்சலுடன் தடதடவென்று ஓடி வந்தார்கள். மேலே இயற்கை உபாதை செய்ய முடியாது. கீழே வந்துதான் செய்ய வேண்டும். எனவே, அதற்காக விரைவாக அவர்கள் வந்தார்கள். எல்லோரும் அவர்களுக்கு வழிவிட்டார்கள்.

மாடுகள் மீதிருந்த கூடைகள் அகற்றப்பட்டன. மாடுகள் சற்றுத் தள்ளாடி அங்கங்கே வைக்கப்பட்டிருந்த நீர்த்தொட்டியில் நீர் குடிக்கத் துவங்கின. புல்கட்டை அறுத்து மாடுகளுக்கு முன்பு பரப்பினார்கள். மாடுகள் அவைகளை வேகமாக மென்று மரத்தடியில் ஒதுங்கின. அமர்ந்து அசை போடத் துவங்கின.



மனிதர்கள் சாப்பிட உட்கார்ந்தார்கள். எல்லோருக்கும் வாழைச் சருகு தரப்பட்டது.

மேற்குப்பக்கம் உள்ளவர்கள் கத்தரிக்காய் பிரட்டல் கறி சாப்பிட்டார்கள். கிழக்கேயுள்ளவர்களுக்கு கதம்பஞ்சோறு கிடைத்தது. தெற்கே உள்ளவர்கள் நன்றாக தயிர் பொதித்த அன்னத்தை வழுதுணங்காய் கறியோடு சாப்பிட்டார்கள்.

இன்னும் போடு, இன்னும் போடு என்று மறவர்களும், வேளாளர்களும் நன்றாக விரும்பித் தின்றார்கள். உருண்டை உருண்டையாக உருட்டி மறவன் வாயில் போட்டுக் கொண்டான். அகப்பையில் எடுத்து வட்டத்திட்டில் போட்டுக் கொண்டு மெல்லப் பிசைந்து விரல் நுனிகளால் எடுத்து ஒருவாய் அந்தணரும் போட்டுக் கொண்டார்.

''நன்றாக வந்திருக்கிறது போலிருக்கிறதே'' என்று அந்தணர் வியப்பாகச் சொல்ல, ''அற்புதமாக வந்திருக்கிறதய்யா. ஒன்றும் தெரியாததுபோல முழித்தீரே. உப்பு உறைப்பு எல்லாம் சரி. கத்தரிக் காய் கறி பிரட்டல் செய்ய வேண்டுமென்று எப்படித் தோன்றியது. மிக நல்ல உணவய்யா அது. எப்படிச் சாப்பிடுகிறார்கள் பாரும்.''

''எப்படியிருக்கிறது உணவு.''

''மிக அற்புதம்... மிக அற்புதம்...'' என்றார்கள். எல்லோரும் உணவு முடித்ததும் நீர் மோர் வாங்கிக் குடித்தார்கள். இஞ்சியும், பச்சை மிளகாய் கலந்த நீர்மோரை ஏப்பம் வரக் குடித்தார்கள். பல பேர் அருகேயுள்ள மரத்தடிக்குப் போய் அங்குள்ள புற்களில் துண்டு விரித்துப் படுத்துக் கொண்டார்கள். அயர்ந்து தூங்கி னார்கள்.

சக்ரவர்த்தி உடையார் மெல்ல வட்டப் பாதையில் குதிரையில் ஏறினார். சுற்றிப் போகும்போது சகலரும் அங்கங்கே இளைப் பாற்றி தூங்கிக் கொண்டிருப்பது தெரிந்தது. பட்டப்பகலில் உச்சி வெயிலில் சக்ரவர்த்தி உடையார் ஒரு குதிரையில் ஏறிவட்டப் பாதையில் போயிருப்பார் என்று யாரும் எதிர் பார்க்கவில்லை.

யாரோ ஒரு மறவன் மட்டும், ''அப்பா தனியே போகாதே. ஆட் களோடுபோ.'' என்று, சக்ரவர்த்தி என்று தெரியாமல் கத்தினான். அவர் சரியென்று தலையசைத்தார்.

''ஏதேனும் பிரச்சினைகள் உண்டா'' பிரம்மராயர் அருண் மொழிப்பட்டனைக் கேட்க, அருண்மொழிப்பட்டன் உதவியாட் களைக் கேட்க, ''இப்போதைக்கு எதையும் சொல்லமுடியவில்லை.

பிரச்சினைகள் எப்போது வேண்டுமானாலும் முளைக்கும் என்றுதான் சொல்ல முடிகிறது. நான் மூன்று இடங்களிலும் சாப்பிட்டுப் பார்த்தேன். உணவு அற்புதமாக இருக்கிறது. இதே உணவு தொடர்ந்து பல நாட்களுக்கு கொடுக்க வேண்டுமென்பது தான் இப்போதைய கவலை.'' என்று ஒரு வீரன் சொல்ல, அருண் மொழிப்பட்டன் புரிகிறது என்று தலையசைத்தான். பிரம்மராய ரும் ஆமாம் என்று தனக்குள் யோசித்துக் கொண்டார்.

''பொற்கலசம் என்னாயிற்று.''

''தயாராகிக் கொண்டிருக்கிறது. நாளை காலை சரியாகிவிடும்.''

''அதற்குள் மண் அதிகம் எடுத்துவிட்டால்.''

''பெரிய கவலை இல்லை. ஏணி போட்டு ஏறிவிடலாம்.''

''யார் செய்வார்கள்.''

''சிற்பிகள்தான். உருண்டைக்கல் மீது சுற்றி பதினாறு ஆணிகள் அடித்து இறுக்குவார்கள்.''

''ஒரே உருண்டைக் கல்லா.''

''இல்லை. கிச்சிலி பழத்தின் சுளைபோல துண்டு துண்டானது சேர்க்கப்பட்டிருக்கிறது.''

''சக்ரவர்த்தி உடையார் அருகேயிலிருந்து மேற்பார்வையிடுவார் என்று சொல்லப்படுகிறது.''

''கலசமென்றால் பொன்னாலான கலசமா.''

''இல்லை. செம்புத்தகட்டில் பொன் தோய்த்த கலசம். நான்கு அடுக்கு சக்கரம் மட்டும் முழுப்பொன்னால் செய்திருக்கிறார்கள். கூம்பு மட்டும் சொக்கத்தங்கத்தால் ஆனது. அங்கங்கே பற்ற வைக்க இணைப்பு கொடுத்து ஆணியும் போட்டு இறுக்கியிருக்கிறார்கள். உள்ளே வரகரிசி வைப்பார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறதே.''

''ஆமாம். வரகரிசியும் தயாராக இருக்கிறது.''

''எதற்கு வரகரிசி வைப்பது.''

''வரகரிசி எளிதில் கெட்டுப் போகாது. பன்னிரண்டு வருடங் களுக்கு ஒருமுறை ஆலயம் செப்பனிட்டு கும்பாபிஷேகம் நடத்தப் பட வேண்டும். அப்பொழுது இந்த வரகரிசியை எடுத்துவிட்டு, அடுத்த வரகரிசியை நிரப்புவார்கள்.''

''என்ன ஆயிற்று. முகத்தில் தனித்த ஒரு சந்தோஷத்தோடு இருக்கிறீர்கள்.''



இரண்டு தொண்டை நாட்டு அந்தணர்கள் கோயில் வேலி அருகே சந்தித்துக் கொண்டார்கள்.

''வீட்டிலிருந்து ஓலைக்குழல் வந்திருக்கிறது.''

''என்ன... தொண்டை நாட்டிலிருந்தா.''

''ஆமாம்.''

''யார் அனுப்பினார்கள்.''

''மனைவிதான். நாகையைச் சேர்ந்த ஒரு வணிகரிடம் குழல் கொடுத்து அனுப்பியிருக்கிறார்.''

''நிறைய ஓலைகளா.''

''ஆமாம். என் தந்தை எழுதியிருக்கிறார். தாய் சொல்ல, என் தமையன் எழுதியிருக்கிறான். தமையன் மனைவியும், தங்கையும் சேர்ந்து ஒரு ஓலை எழுதியிருக்கிறார்கள்.''

''மனைவியும் எழுதியிருக்கிறாரா.''

''ஆமாம். பதினாறு ஓலைகள் எழுதியிருக்கிறார்.''

''அடேயப்பா.. ஒரே கடிதமா.''

''இல்லை. அவ்வப்போது மனதில் தோன்றியதையெல்லாம் எழுதி கட்டாகக் கட்டி குழலில் போட்டு, அனுப்பியிருக்கிறார்.''

''அதுதான் இந்த கிறுகிறுப்பா. எல்லாம் காதல்ரசம் சொட்டும் ஓலைகளா.''

''இல்லை. தகவல்கள்தான் அதிகம். குழந்தைகளைப் பற்றிய விவரங்களும் இருந்தன.''

''திருமணமாகித்தான் கிளம்பினீர்களல்லவா.''

''நான் கிளம்பும்போது மகளுக்கு ஆறு வயது. மகனுக்கு மூன்று வயது.''

''உங்களுடைய பூர்வீகம் எது. தொண்டைநாடு தானே. இல்லை நடுநாடா. நடுநாடு என்றால் சிதம்பரம் தீக்ஷிதர்கள் போல சிறு வயதிலேயே திருமணம் செய்து விடுவார்கள்.''

''சிறு வயதுத் திருமணம் இல்லை. ஒன்பதிலிருந்து பதினோரு வயதிற்குள் நன்றாக வீட்டு வேலைகளெல்லாம் பழகிய பிறகுதான் திருமணம் என்ற விஷயத்திற்கே நாங்கள் ஆரம்பிக்கிறோம்.''

''அப்படியானால் குழந்தைக்கு இப்பொழுது ஒன்பது வயது ஆகியிருக்கும் என்று சொல்லுங்கள்.''

''ஆமாம். மனைவியினுடைய ஓலைக்கட்டில் முக்கியமாக அதைப்பற்றித்தான் எழுதியிருக்கிறாள். பெண் குழந்தையைப் பார்த்தால் பயமாக இருக்கிறது. எப்பொழுது வேண்டுமென்றாலும் கொல்லைப்புறத்தில் உட்கார்ந்து விடுவாள், என்று அவள் உடம்பு பார்க்கும்போது தோன்றுகிறது. அசப்பில் உங்களைப் போல இருக்கிறாள். வீட்டில் அவள் அதிகாரம்தான் தூள் பறக்கிறது. இரண்டு, மூன்று பேர் பெண் கேட்டு வந்துவிட்டார்கள். உங்கள் வருகைக்குப் பிறகுதான் இதுபற்றியே யோசிக்க முடியுமென்று நாங்கள் பதில் சொல்லிவிட்டோம். அற்புதமாகச் சமைக்கிறாள். வீட்டு வேலைகளைத் திறம்படச் செய்கிறாள். அவளுக்கு ஒரு நல்ல புருஷனைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு வந்தால்கூட சந்தோஷம் தான். அவளைக் கொண்டாடுகிற புருஷனாக இருக்க வேண்டும் என்கிறாள்.''

''எல்லா தாயாருக்கும் அப்படித்தான் விருப்பம்.''

பெண்ணைப் பெற்றவருக்கு எதிரே நின்றவர் தொடர்ந்து பேசினார்.''

''நீர் எப்படி மனைவி கொண்டாடுகின்ற புருஷன் தானா.''

''ஆரம்பத்தில் மனைவியில்லாது பைத்தியமே பிடித்துவிடும் போலிருந்தது. மிகவும் சிரமப்பட்டேன். சோறும் இல்லாமல் உறவும் இல்லாமல் இது என்னடா வாழ்க்கை. இங்கேயே தஞ்சையிலேயே செத்துப் போய் விடுவோமோ என்கிற பயமும் இருந்தது. ஆனால், இப்போது சம்பாதிக்க ஆரம்பித்தவுடன் மனைவி குழந்தைகளெல்லாம் இரண்டாம் பட்சமாகிவிட்டன.''

''இது என்ன பெரிய சம்பாத்தியம். இருபது கலம் நெல். ஒரு காசு.''

''போதாது என்கிறீரா.''

''நெல்லை வைத்துக் கொண்டு என்ன செய்வது. வந்த விலைக்கு வணிகரிடம் விற்று விட்டு கிடைத்த இடத்தில் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறேன்.''

''நீங்கள் வேலை செய்யும் இடத்தில் உணவு கிடைக்க வழியில்லையோ.''

''இருக்கிறது. கருங்கல் சிற்பிகளிடம் குறிப்பாய், பலகை அறுக்கும் சிற்பிகளிடம் வேலை செய்து வந்தேன். அவர்கள் நன்றாக மாமிசம் சாப்பிடுவார்கள். அவர்களுக்கு உணவுக்காக அரசாங்கம் அரிசி வழங்குகிறது. அந்த அரிசியில் அரைபடி எனக்கு எடுத்து வைத்துக் கொள்வேன். இரவு நேரம் இரண்டு சொம்பு பால் குடித்து விடுவேன். பழங்கள் சாப்பிடுவேன்.''



''அப்படியா. அதுதான் தளதளவென்று இருக்கிறீர்கள்.''

''வேறெதும் பிரச்சினையில்லை. ஊர் பற்றிய நினைவுதான் பிரச்சினை. என் மகன் அந்த வணிகரிடம் அப்பாவைப் பார்க்க வருகிறேன் என்று அடம் பிடித்து குதிரையில் ஏறிக் கொண்டானாம். இறங்க மறுத்தானாம். ஊர் எல்லைவரை என் மனைவியும் நடந்து வந்து நல்ல வார்த்தை சொல்லி திரும்பி அழைத்துப் போனாளாம். இதை ஓலையில் படிக்கும் போது கொஞ்சம் துக்கமாக இருந்தது. அழுது விட்டேன்.''

''இதோ கும்பாபிஷேகம் முடிந்துவிடும். முதல் குழுவிலேயே பயணப்பட்டு விடுங்கள்.''

''அதெல்லாம் நம் கையிலா இருக்கிறது. ஊருக்குப் போய் அங்கேயே தங்கிவிட முடியுமா? மறுபடியும் வந்து தானே ஆகவேண்டும்.''

''திரும்பி வருவதுதான் நல்லது என்று எனக்குத் தோன்றுகிறது. திருவான்மியூரிலும், மயிலாப்பூரிலும் என்ன இருக்கிறது. தஞ்சை போல வருமா. தஞ்சை தலைநகரல்லவா.''

''தஞ்சை போல வராது. தஞ்சையின் செழிப்பு. வேறு எந்த தேசத்திலும் இல்லை. என்ன ஆட்டம் பாட்டம். தினம் தினம் எவ்வளவு கேளிக்கைகள். எத்தனை விதமான மக்கள். எவ்வளவு தின்பண்டங்கள்.

உலகத்திலுள்ள அத்தனை சரக்குகளும் வந்து இங்குதானய்யா குவிகின்றன. திரிபுவனமாதேவி பேரங்காடி என்று ஒரு தெரு முழுவதும் விதம் விதமாக சாமான்கள் குவிக்கப்பட்டிருக்கின்றன. வீடு என்று இருந்தால் வாங்கிப் போகலாம் ஒன்றுமில்லாமல் எதை வாங்குவது. அதனால் வெறுமே சுற்றிப் பார்த்துவிட்டு வந்து விடுகிறேன். ஊருக்குப் போகும்போது வாங்கிப்போக வேண்டும்.''

''அப்படி வாங்கிப் போக வேண்டுமென்றால் காசு ஆகாதா.''

''ஆமாம். அதைச் சேர்த்து வைத்துக் கொள்ள வேண்டும்.''

''எப்படிக் காசு சேர்ப்பது.''

''உங்களிடம் சொல்வதற்கு என்ன, நான் கொஞ்சம் காசு சேர்க்கிறேன்.''

''எப்படி''

"நூற்று நாற்பத்தேழு பேருக்கு மாதம் ஒன்றுக்கு ஒரு காசு என்று என்னிடம் எண்ணிக் கொடுக்கிறார்கள். ஆனால், நூற்று நாற்பத் தேழு பேர் இல்லை. நூற்றியிருபது பேர்தான் இருக்கிறார்கள். மீதிக்காசு கொடுக்கப்படாமல் இருக்கிறது. கிட்டத்தட்ட இரண்டரை வருடங்களுக்கு சேர்ந்த காசு தனியாக ஒரு மரப் பேழையில் போட்டு வைத்திருக்கிறேன். கேட்டால் கொடுத்து விடலாம் என்ற எண்ணம். கேட்க மாட்டார்கள் என்ற இன்னொரு எண்ணம். அதைக் கேட்கவில்லையெனில் அதில் துணிகளும், பாத்திரங்களும், மரச்சாமான்களும், நல்ல பசுக்களும், எருதுகளும், வில்வண்டியும் வாங்கிக் கொண்டு போய் ஊரில் சேர்க்க வேண்டு மென்பது எண்ணம். இது அயோக்கியத்தனமென்று நினைக் கிறீர்களா."

"அப்படியெல்லாம் ஒன்றும் நினைக்கவில்லை."

"இன்னும் இதுபோல சிலது செய்து கொண்டிருக்கிறேன்."

"எப்படி"

"கற்பலகையை அறுப்பதற்கு அளவுக்காக மரப்பலகைகள் வெட்ட வேண்டும். அந்த மரப்பலகைகளில் கரிக்கோடு போட்டு, அதை எளிதில் அறுத்து அதை வைத்து சரிபார்த்து அதை அளவாகக் கொண்டு, மாதிரியாகக் கொண்டு கற்பலகைகள் அறுப்பதற்குப் போகும்.

இப்படி அளவாக அறுத்த பலகை போக, மீதி இருக்கின்ற மரத்தை யாரும் கேட்கவில்லை. இதை ஒரு வணிகர் எடுத்துக் கொள்ளட்டுமா என்று கேட்டார். அரசரிடம் கேட்டுச் சொல்கிறேன் என்று சொன்னேன். ஒரு மாதம் காத்திருந்தேன். மறுபடியும் வந்து கேட்க அரசரிடம் பேச முடியவில்லை. பிரம்மராயரிடம் பேசுகிறேன் என்று சொன்னேன்.

மறுபடியும் சில நாட்கள் கழித்து வந்தார். பேசிவிட்டேன். என்ன விலைக்கு எடுத்துக் கொள்வதாகக் கேட்கிறார் என்று முதல் மந்திரி கேட்டதாகச் சொன்னேன். அவன் யோசித்துவிட்டு ஒரு தொகை சொன்னான். தொகை பெரிதாக இருந்தது. முதல் மந்திரியிடம் கேட்டுச் சொல்கிறேன் சொல்லி, முதல் மந்திரி சற்றுக் கூடுதலாக கேட்கிறார் என்று அந்த வணிகரிடம் சொல்ல, அந்த வணிகர் அந்தத் தொகைக்கும் ஒத்துக் கொண்டார்.

அரசாங்க முத்திரையிட்டு ஓலையில் கணக்கு எழுதி அவரிடம் இத்தனை காசு வாங்கி, இந்த மரங்களைக் கொடுத்தேன் என்று



எழுதி பரஸ்பரம் ஓலை மாற்றிக் கொண்டு அந்தக் காசை என்னிடம் வைத்திருக்கிறேன்.

மரத்தை ஏன் விற்றாய் என்று கேட்பாரில்லை. மரம் விற்ற காசை எங்கு வைத்திருக்கிறாய் என்று கேட்பாரில்லை. அந்த வணிகன் நான் அதை அரசாங்கத்திடம் கொடுத்துவிட்டேன் என்று நினைத் துக் கொண்டு ஆறு வண்டிகளில் அதை எடுத்துப் போய்விட்டான்.

மூவேந்த வேளார் ஒருமுறை இங்கிருந்த மரங்களெல்லாம் எங்கே என்று கேட்டார். நான்தான் இங்கு குப்பையாக இருக் கின்றதே என்று அனுப்பி விட்டேன் என்று சொன்னேன். எப்படி அனுப்பினாய் என்று கேட்டார். ஆறு வண்டி பாரமிருந்தது. ஒரு வண்டிக்கு மூன்று காசுவீதம் ஏற்றிக் கொண்டு போகச் சொன்னேன். சரி, சரி... நல்லது செய்தாய் என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார். ஆக, ஆறு வண்டிக்கு மூன்று காசாக கணக்கு எழுதி தனியே வைத்திருக்கிறேன். அரசாங்கத்தில் அதைச் செலவு என்று காட்டி காசும் வாங்கிவிட்டேன்.

உணவுக்கும் பிரச்சினையில்லை. உடைக்கும் பிரச்சினை யில்லை. காசு நடமாட்டத்திற்கும் பிரச்சினையில்லை. ஆனால், அந்தக் காசை எடுத்துக்கொண்டு நாம் அதிகம் செலவு செய்ய முடியாது. செலவு செய்தால் விழித்துக் கொள்வார்கள்.

தொண்டை நாட்டிலிருந்து பிச்சைக்காரர்போல வந்த அந்த ணர்கள் எப்படி செலவு செய்கிறார்கள் பார்த்தீரா. எப்படி வந்தது இவ்வளவு காசு என்று கேட்க ஆரம்பிப்பார்கள். அதனால்தான் எந்தச் செலவும் செய்யாமல் வெறுமே சாதாரண துணிகளோடு நடமாடுகிறேன்."

"நகைகள் செய்து கொள்ளவில்லையா."

"இடுப்பில் ஒரு வெள்ளி அரைஞாண் கயிறு இருக்கிறது. காதில் பச்சைக் கடுக்கன் இருக்கிறது. கையில் இரண்டு மோதிரங்கள் இருக்கின்றன. மற்றபடிக்கு பொற்கழஞ்சாக நாற்பது வைத்திருக் கிறேன்."

"அடேயப்பா... நாற்பது கழஞ்சா. இவ்வளவு கழஞ்சு வைத்துக் கொண்டு என்ன செய்வீர்கள்."

"நான் தொண்டை நாடு போக வேண்டும். போய் அங்கிருந்து வண்டி வைத்துக் கொண்டு குடும்பத்தாரை இங்கே கூட்டி வந்து விட வேண்டும். இங்கே வந்த பிறகு குடும்பத்தார் காசு தந்தார்கள் என்று சொல்லி இங்கே விளைநிலமும். வீடும் வாங்க வேண்டும்."

''வெளியாட்களுக்குக் கூடுதலாய் விலை சொல்வார்களே.''

''அதற்காக வேறொரு ஏற்பாடு செய்திருக்கிறேன்.''

''என்ன ஏற்பாடு.''

''மனைவி எழுதியதைப் போல ஒரு ஓலை எழுதி அங்கிருந்த நிலங்களையெல்லாம் விற்று காசு கொண்டு வருவதுபோல சொல்லி வணிகரிடம் வட்டிக்குக் கடன் வாங்கி விட்டேன்.

திருப்பூந்துருத்தி என்ற நல்ல கிராமத்தில் காவிரிப் படுகையிலிருந்து மூன்றாம் கட்டமாக இருக்கின்ற விளைநிலமும், தோட்டமும், ஓட்டு வீடும் வாங்கயிருக்கிறேன்.''

''திருப்பூந்துருத்தி சற்றுத் தொலைவல்லவோ.''

''தொலைவாக இருந்தால்தான் நல்லது. மற்றவர் கண்படாமல் இருக்கும். இங்கே புறம்படியில் வீடு வாங்கினால் பிச்சைக்கார அந்தணனுக்கு பெரிய மானியம் கிடைத்துவிட்டது பார்த்தாயா என்பார்கள். இவர்கள் கண்ணுக்குப் படாமல் நம்முடைய குடும்பம் இருக்க வேண்டுமென்பது என்னுடைய எண்ணம்.''

''ஆஹா... ஆஹா... அதிபுத்திசாலித்தனம்.''

''கடன்பட்டு நிலம் வாங்கினேன். அதற்குண்டான வட்டி கட்டி வருகிறேன். குடும்பம் வந்ததும் அசலையும், கூடுதலான வட்டியையும் கொடுத்து விடுவேன்.''

''அதாவது தாய், தந்தையர் கொடுத்தது போல உன் கையிலிருந்த காசைக் கொடுத்துவிடுவாய்.''

''ஆமாம்.''

''ஆனால் நாம் உழைக்கிற உழைப்புக்கு இது ஒன்றும் பெரிய காசே அல்ல.''

''ஆமாம். பெரிய காசு இனிமேல் கிடைக்குமென்று தோன்றுகிறது.''

''எப்படி.''

''உலோகச் சிற்பிகளிடம் என்னைப் போகச் சொல்லியிருக்கிறார்கள். நானும் அதற்குத்தான் வந்தேன். பட்டமகிஷி. பஞ்சவன்மாதேவி, வானவன் மாதேவி ஆகிய மூவர் சார்பில் உலோகச் சிற்பிகளிடம் வேலை வாங்கச் சொல்லியிருக்கிறார்கள்.''

''உங்களுக்கு மரம் அறுக்கும் வேலை இல்லையோ.''

''மரம் அறுக்கும் வேலை முடிந்துவிட்டது. அதனால் தான் வேறிடம் போட்டுவிட்டார்கள். விமானப்பணி முடித்துவிட்ட



தால் அந்தச் சிற்பிகள்பலகை அறுக்காமல் இப்போது மதில் கட்ட வெளியே கல் அறுக்கப் போய்விட்டார்கள். எனக்கும் வேலையில்லை. மன்னருக்கான உலோகச் சிலைகள் செய்ய வேண்டுமென்று மூவேந்த வேளார் நியமித்திருக்கிறார்.''

''அதில் எப்படி அதிக காசு வரும்.''

''அவர்கள் உலோகம் வேண்டும் என்று கேட்பார்கள். உலோகம் நாம்தான் நிறுத்துத் தரவேண்டும். குறிப்பாக தங்கம் நம் கையிலிருந்து தான் அவர்களுக்குத் தரப்படும். அதுமட்டுமல்ல. அவர்களுக்குத் தினக்கூலியும், நெல்லும், இன்னபிற வசதிகளும் செய்ய வேண்டும்.

இடையறாது அடுப்பு எரிந்து கொண்டிருக்க வேண்டுமென்பதால் மரங்களை வெட்டிச் சாய்ப்பதற்கும் மூலிகைகளைப் பறித்துக் கொண்டு வருவதற்கும், மெழுகு சேகரித்துக் கொண்டு வந்து கொடுப்பதற்கும் நாம் கூலி கொடுக்க வேண்டும்.

செம்மண் நன்றாகச் சலித்துக் கொண்டு வருவதற்காக குயவருக்கும் காசு தரவேண்டும். இப்படி பலபேர் சேர்ந்திருப்பதால், அங்கு வேலை செய்கின்ற பல பேருக்கு உதவியாட்களும் இருப்பதால், அவர்களுக்கும் நாம் பணம் தர வேண்டியிருப்பதால் ஒரு மாதிரி காசு புழங்க வாய்ப்பு அதிகமிருக்கிறது. ஒரே வீச்சில் காரியம் முடியாது. மறுபடி மறுபடி அச்சு ஊற்ற வேண்டியிருக்கும். ஒவ்வொரு முறையும் தங்கம் சேர்க்க வேண்டியிருக்கும்.''

''தங்கம் எங்கிருந்து வரும்.''

''தெரியாது. தெரிந்து கொள்ளும் ஆவலையும் நான் காட்டவில்லை.''

''அப்பா... நம் இரண்டு பேரையும் திருவுள்ளம் கொண்டு ஒரேஇடத்தில் சேர்த்திருக்கிறான். ஊருக்குப் போகும்போது நல்லபடியாகப் போய் நல்லபடியாகத் திரும்ப வேண்டும். நீர் ஏன் தனித்துக் கிடந்து அல்லாடுகிறீர்கள்.''

''மகளுக்குத் திருமணம் முடித்துவிட்டு மனைவியையும், மகனையும் கூட்டிக் கொண்டு வந்து விடுவேன். மகளுக்குத் திருமணத்தைக்கூட அங்கு செய்யாமல் இங்கே இருக்கின்ற இளைஞனையே பார்த்து முடித்துவிடலாம் என்று பார்க்கிறேன்.''

''உமது பெண்ணுக்கு ஒன்பது வயது. இங்குள்ள பையன்கள் சற்றுப் பெரியவர்களாக இருக்கிறார்களே. என்னுடைய பன்னிரண்டு வயது மகன் உன்மகளுக்கு ஏற்றவாறு இருப்பான். ஆனால்,

நம்மிடம் வேலை செய்கிறவர்களெல்லாம் குறைந்த பட்சம் பதினெட்டு, பத்தொன்பது, இருபது என்றல்லவா இருக்கிறார்கள்.''

''அதனால் என்ன அவள் கெட்டிக் காரத்தனத்திற்குக் கொஞ்சம் வயதானவராக இருந்தால்தான் நல்லது. உமது பிள்ளை போல் இளம் பிள்ளையாக இருந்தால் அவனை ஏய்த்து அக்குளில் அடுக்கிக் கொண்டு விடுவாள்.'' அவர் சொல்ல மற்றவர் வாய் விட்டுச் சிரித்தார்.

''பெண்ணைப் பெற்றுவிட்டால் இது பெருங் கவலைதான். மனைவிக்கும், எனக்கும்கூட வயது வித்தியாசம் ஒன்றுதான். ஆனாலும், என் மீது கொள்ளைப்பிரியம் உள்ளவள். அதனால் தான் இங்கு அழைத்து வந்துவிட வேண்டுமென்ற எண்ணம் இருக்கிறது. மற்றபடி தாய், தந்தை வருவார்களா என்பது சந்தேகமே.''

''நிச்சயம் வருவார்களய்யா. வராமல் எங்கே போவார்கள். தொண்டை நாட்டிலுள்ள அத்தனை அந்தணர்களும், தஞ்சையின் மகிமையைக் கேட்டுக் கொண்டுதான் இருக்கிறார்கள். தஞ்சைக்கு வர வேண்டுமென்ற ஆவலோடு இருக்கிறார்கள். நாம் என்ன நிலத்தோடா போராடிக் கொண்டிருக்கிறோம். நம்முடைய விஷயம் வேதம். அதை எங்கு உட்கார்ந்து சொன்னால் என்ன?

இப்போது வேதம் படிக்கின்ற ஒரு விஷயமும் மாறிக் கொண்டு வேலைக்குப் போகிற விஷயம் வந்து கொண்டிருக்கிறது. அதுவும் அரசாங்க வேலை. எனவே, நம் தலைமுறைக்கு அடுத்த தலைமுறை தஞ்சைக்கு வந்து, அரசாங்க வேலையில் ஈடுபடவேண்டுமென்ற ஆவல்தான் காட்டுவார்களே தவிர, நான்கு வேதமும் கற்றுத்தேற வேண்டுமென்ற ஆவல் குறைந்துதான் வருகிறது. வேதப்படிப்பை முன் வைத்துத்தான் இதையெல்லாம் செய்ய வேண்டும். இல்லையெனில் நம்மை அந்தணர் என்றே அழைக்கமாட்டார்கள்.''

''இப்போது மட்டும் மதிக்கிறார்களா? நமக்கு கொஞ்சம் வேதப்படிப்பு உண்டுதான். ஆனாலும், தஞ்சை அந்தணர்கள் வெகு அழகாக தங்களைப் பிரித்துக் கொண்டு, தாங்கள் வடதேசத்து வடமர்கள் என்று புதிதாக ஒரு பெயர் சூட்டிக் கொள்கிறார்கள். இங்கேயிருந்து பல தலை முறைக்கு முன்பு வேதம் சொல்வதற்காக தெற்கே மன்னர்களால் அழைத்து வரப்பட்டவர்களாம். நாமெல்லாம் அண்டிப்பிழைக்க வந்தவர்களாம்.''

''அப்படியே இருந்துவிட்டுப் போகட்டுமே. நாம் அதிகம் முட்டிவிடக்கூடாது. இது அவர்களுடைய இடம். நாம் காலூன்ற



முயற்சிக்கிறோம் என்பதை அவர்கள் தடுக்கத்தான் செய்வார்கள். இங்கு அதிகம் வேவுபார்ப்பவர்களும், சந்தேகப்படுபவர்களும் அவர்களாகத்தான் இருக்க முடியும். ஒருவேளை அவர்களுக்கு அலுப்பு ஏற்படும்போது நம்மைத்தான் முதலில் பலி போடுவார்கள். நம்மில் ஒருவர் தவறு செய்வது கண்டு பிடிக்கப்பட்டாலும் மொத்தமாக சோதனைக்கு ஆட்படுவோம். அதனால் தான் அப்படியே இருந்துவிட்டுப் போகட்டும் என்று அவர்களைப் பணிந்து விலகிவிடவேண்டும். உன்னைப் போல ஆகுமா என்று கொண்டாடிவிட்டு நகர்ந்து விடவேண்டும்.''

''ஆமாம்... ஆமாம்... நீங்கள் சொல்வது சரி. பிழைக்கத் தெரிந்தவர்கள் அதிகம் அடித்துக் கொள்ளமாட்டார்கள். எதிர்த்துப் பேசமாட்டார்கள். கோபம் கொள்ள மாட்டார்கள். நிச்சயமாக, மிருதுவாக, பணிவாக அதே சமயத்தில் நம்முடைய காரியத்தில் நாம் கண்ணாக இருக்க வேண்டும்.''

''காரியத்தில் கண்ணாக இருக்க வேண்டுமென்றதும் எனக்கு ஒரு விஷயம் ஞாபகம் வருகிறது.''

''சொல்லுங்கள்.''

''காலையில் அரசர் கையிலிருந்த மண் வெட்டியைப் பார்த்தீர்களல்லவா.''

''ஆமாம்.''

''சொக்கத்தங்கமாம். கைப்பிடி வெள்ளியாம். உலோகச் சிற்பிகள் பரிசளித்தார்களாம்.''

''இப்போது அது எங்கே.''

''அரசர் மறுபடியும் அதை உலோகச் சிற்பிகளிடம் கொடுத்து விட்டார் என்று சொல்கிறார்கள்.''

''அதெப்படி''

''அதெப்படி என்றால் புரியவில்லையே.''

''அரசருக்கு, உலோகச்சிற்பிகள் கொடுத்ததும் அது அரசருடைய சொத்து. அதை உலோகச் சிற்பிகள் மறுபடியும் எப்படி பெற்றுக் கொள்ள முடியும். அது யாருக்குப் போய் சேரும். யார் அதற்கு சொந்தக்காரார். அது ஒருவருடைய பொருளல்லவே. பல பேரிடம் பல கழஞ்சுகள் வாங்கி அவர்கள் கூட்டத்தினர் எல்லோரும் சேர்ந்து செய்த பொருளல்லவா. ஆக, ஒருவர் அதற்கு உரிமை கொண்டாட முடியாது. கொண்டாட முடியும் என்றால், அது சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவர்தான். சக்ரவர்த்தி

உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவர் பொருளெல்லாம் எங்கு இருக்கும். அவருக்கு யார் கணக்கு எழுதுகிறார்களோ அவரிடம் தான் இருக்கும். ஆகவே, அந்த தங்க மண்வெட்டி அரசரிடம் தான் இருக்க வேண்டுமே தவிர, உலோகச் சிற்பிகளிடமா இருக்கும்.''

''என்ன செய்வது.''

''பறிமுதல் செய்வோம்.''

''எப்படி''

''நைச்சியமாக.''

''பறிமுதல் செய்துவிட்டு..''

''தொண்டை நாட்டிற்கு எடுத்துப் போய் விடவேண்டும்.''

''எதை''

''தங்க மண்வெட்டியை.''

''கேட்கமாட்டார்களா.''

''கேட்க மறந்து போகும் வரை வைத்திருந்து விட்டு அதை நமதாக்கிக் கொள்ள வேண்டும்.''

''ஏன் அதைத் தொண்டை நாட்டிற்கு எடுத்துப் போவது.''

''இங்கு உருக்க முடியாதே. உருக்கினால் கேள்வி கேட்பார் களே. நாளைக்கு எவரிடமாவது போய் சொல்லிவிடுவார்களே. அப்படியல்லாது தொண்டை நாட்டிற்கு அப்பால் கீழைச்சாளுக் கியத்திற்குச் சென்று அங்கே இதை உருக்கி வேறு பொருளாக்கிக் கொண்டு வந்துவிடலாமல்லவா.''

''திட்டம் நன்றாக இருக்கிறது. ஆனால், சற்று தவறு செய்தாலும் தலை போய்விடும்.''

''தவறு நேராது.''

''ஏன்''

''தஞ்சை அரண்மனையில் அம்பாரம் அம்பாரமாய் தங்கம் குவிக்கப்பட்டிருக்கிறது. விஜயாலயச்சோழர் காலத்திலிருந்தே பானை பானையாய் சேர்த்து வைத்த தங்கக்காசுகள் ஒருமுறைகூட தொட்டுப் பார்க்கப் படாமல் பதுக்கி வைக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு யானையும் தள்ளாடுகிற அளவுக்கு பெரும் சுமைகள் ஏற்ற முடியும். அப்படி நாற்பது, ஐம்பது யானைகளுக்கு தங்கக் காசுகள் மட்டுமே தேறும். அதற்குப்பிறகு பாத்திரங்களும், நகைகளும் பலதும் இருக்கின்றன. பிரித்துப் பார்க்கலாம் என்று



ஆரம்பித்துவிட்டு, பிறகு வேண்டாம். எண்ணிப் பார்த்தால் செல்வம் குறையும் என்று சொல்லி நிறுத்திவிட்டார்கள்.''

''யார் கணக்குப் பார்க்க ஆரம்பித்தார்கள்.''

''இராஜேந்திர சோழர்.''

''ஜெயங்கொண்ட சோழபுரத்திற்கு எடுத்துக்கொண்டு போய் விடலாம் என்று பார்க்கிறாரா.''

''அப்படித்தான் இருக்கும். அங்கு கோட்டை கட்டுபவருக்கு கூலிப்பணம் கொடுக்க வேண்டுமல்லவா. நமக்கு யானை யானையாய் பொற்காசுகள் வேண்டாம். இந்த மண்வெட்டியைப் பிடுங்கிக்கொண்டு, அதை தொண்டை தேசத்திற்கு எடுத்துச் செல்ல முடியுமா என்று பார்ப்போம்.''

''நமக்குள் அதை எப்படிப் பங்கீடு செய்வது.''

''யார் அதைப் பேசி வைத்து பிடுங்கிக் கொள்கிறார்களோ, அவர்களுக்கு இரண்டின் கீழ் மூன்று பங்கும் மற்றவருக்கு ஒன்றின் கீழ் மூன்று பங்கும்.. நீர் பிடுங்குகிறீரா. நான் பிடுங்கட்டுமா.''

''நீரே பிடுங்குமேன்.''

''ஏன், நீர் பிடுங்கினால் ஆகாதா.''

''இல்லை. எனக்கு அவ்வளவு சாமர்த்தியமாகாது.''

''ஹா... உங்கள் சாமர்த்தியம் என்னவென்று தெரியாதா. எந்தவித சர்ச்சைக்கும் ஆளாகாமல் வெறும் சாட்சியாய் இருந்து, ஒன்றின் கீழ் மூன்று பங்கு தங்கமும், வெள்ளியும், எடுத்துக் கொண்டு போகலாம் என்று நினைக்கிறீர்கள்.''

''வேண்டாம். மொத்த மண்வெட்டியையும் நீரே வைத்துக் கொள்ளும். எனக்கு அதன் மீதுள்ள தூசு கூட வேண்டாம். அதுவொரு நல்ல விஷயமென்று எடுத்துச் சொன்னேன்.''

''எனக்குத் தெரியுமய்யா. இதுவரை பேசிவிட்டு இனிமேல் நீர் விலக முடியுமா? விலகினால் அது பாதுகாப்பானதாகுமா. ஆகாது. அதனால் நானே அதை நல்ல வார்த்தை சொல்லி வாங்கிக் கொள்கிறேன். ஒன்றின் கீழ் மூன்று பங்கு உமக்குத் தருகிறேன். துணையாயிரும்.''

''ஆஹா... உங்களைப் போன்றவருக்குத் துணையாக இருப்பதை விட எனக்கென்ன வேலை.''

''இந்தப் பணிவுதானய்யா உம்முடைய சொத்து.''

''தவறு. நம்முடைய சொத்து.''

அந்த அந்தணர்கள் ஒருவரையொருவர் கைகூப்பி வணங்கினார்கள். மெல்லப் பிரிந்தார்கள்.

''இருங்கற்பலகை அறுப்பதற்கான அளவு மரப்பலகை போக கழிவை அரசாங்கத்திடம் விலை பேசி வாங்கி வந்து விட்டேன். இதுதான் பலகை என்ன செய்வதென்று சொல்லும்மய்யா.'' மரத்தச்சரிடம் வணிகர் பேசினார். பலகைகள் ஆராயப்பட்டன.

''எல்லாம் நல்ல தேக்குப்பலகைகள் வீடுகட்டப் போவதாகச் சொல்லியிருக்கிறீர்கள் அல்லவா.''

''ஆமாம்.''

''தொகுப்பு வீடுகளாக சிலது கட்டியும் கொடுத்திருக்கிறீர்களல்லவா?''

''ஆமாம்.''

''இன்னும் வெறும் கரம்பாக இருக்கின்ற இடம் பார்த்து வாங்கிக் கொள்ளுங்கள் அல்லது சற்று செழிப்பாக இருக்கின்ற கிராமத்தில் விளைநிலங்களை மடக்கி அவைகளை வீடுகளாக மாற்றுங்கள்''

''எதற்கு மாற்ற வேண்டும்.''

''தொண்டை தேசத்திலிருந்தும், நடு தேசத்திலிருந்தும், ஏன் ஈழத்திலிருந்தும், பாண்டிய தேசத்திலிருந்தும் நிறைய பேர் வந்து இங்கே குடியேறப் போகிறார்கள். அவர்களுக்கு வீடுகட்ட நீங்கள் முயற்சிக்கலாம். வீடுகட்டி மொத்த விலைக்கு விற்றுவிடலாம். அங்குள்ள நிலபுலன்களை விற்று விட்டுத்தான், ஜனங்கள் இந்தப் பக்கம் குடியேறும். அப்படிக் குடியேறியவர்களிடம் அழுத்திப் பேசி நல்லவிலைக்கு விற்கலாம். வீட்டு ஜன்னல் மரக்கதவு, ஊஞ்சல் பலகை என்று பலதும் செய்யலாம். சிலது உத்திரக் கட்டைகளாகக்கூட ஆகும். தாழ்வாரப்பகுதிக்கு இந்த மெல்லிய கட்டைகள் போதும். ஆனால், இறங்கி வேலை செய்ய வேண்டுமய்யா. இது சேதப்படாமல் வேலை செய்வது நல்ல தச்சர் கையில் இருக்கிறது.''

''அதனால்தானே உன்னைத்தேடி வந்தேன்.''

''கூலி அதிகமாகுமய்யா.''

''தெரியும். உடனே நீ அடிமடியில் கை வைப்பாய் என்று.''

''அப்படியெல்லாம் பெரிய வார்த்தைகள் பேசாதீர்கள். நல்ல கூலி கொடுத்தால், உண்மையாக உழைக்கிறேன். இல்லையெனில் எனக்கு அரசாங்கப் பணி இருக்கவே இருக்கிறது. இனிமேல் தஞ்சையில் மண் கொத்தி கூடையில் கொண்டு போய் ஓரமாகக் கொட்டினால் அதற்கே ஒரு செப்புக்காசு தருகிறார்கள். நான் வேலைக்காரன். பரம்பரைத்தச்சன். கூலி சாதாரணமாகவா இருக்கும்.''

''கூலியை காசாக எடுத்துக் கொள்கிறாயா அல்லது மரமாக எடுத்துப் போகிறாயா.'' வணிகன் சற்று அவசரப்பட்டு கேட்டான். தச்சர் யோசித்தார்.

''மரமாகவே எடுத்துக் கொள்கிறேன். பதினாறு வீடுகளுக்குண்டான மரச்சாமான்கள் செய்து தருகிறேன்.''

''சரி. எவ்வளவு மரங்கள் வேண்டும்.''

''பதினாறு வீடுகளுக்கான மரச்சாமான்கள் வேண்டும்.''

''அடேய்.. இது அநியாயமடா.''

''ஆளை விடுங்கள். நான் மண் அள்ளப் போகிறேன்.''

''முரட்டுத்தனம் காட்டுகிறாயே.''

''இல்லை. இது சம்பாதிக்கின்ற நேரம். சம்பாதிக்க ஆசைப்படுகிறேன். அவ்வளவுதான்.''

''எப்பொழுது வேலையை ஆரம்பிப்பாய்.''

''கொஞ்சம் முன் பணம் கொடுங்கள். ஊருக்குப் போய் என்னுடைய விவகாரங்கள் சிலவை முடித்துவிட்டு ஆறேழு உதவியாட்களோடு வருகிறேன். கருமாரிடம் போய் கருவிகளும் தயார் செய்ய வேண்டும். அதற்கும் எனக்கு காசு வேண்டும்.''

மரத்தச்சர் காசு பெற்றுக் கொண்டு நடந்து போனார். வழிமுழுவதும் தனக்கு அதில் கிடைக்கும். லாபத்தை நினைத்து நினைத்து சந்தோஷப்பட்டார்.

முதலில் நல்லதாய் ஒரு வீடு கட்டிக் கொள்ள வேண்டும். இங்கு கட்டிக் கொள்ளாமல் குடந்தைக்குப் போகிற வழியில் ஏதேனும் ஒரு கிராமத்தில் பழைய வீடு வாங்கி, புதிதாய் மாற்றிவிட வேண்டும். சொந்த வீடு என்று ஒன்று இருந்தால் எவ்வளவு நல்லது. சுற்றி செங்கல்லால் சுவர் எழுப்பி நல்ல உயரமாய் கொண்டு போய், பிறகு வைக்கோற் புல்லாலும், தென்னோலை யாலும், கூரை சமைத்து விட வேண்டும். உள்ளே மரம் கொடுத்துவிட வேண்டும். சிகப்பு வர்ணம் பூசிவிட வேண்டும். பூச்சி அரிக்காமல் இருக்கும். முருங்கைப் பிசினில் முக்கி எடுத்து விட்டால், இன்னும்

பல வருடங்கள் தாக்குப் பிடிக்கும். அந்த ஆற்றங்கரைப்பக்கம் சற்று மேட்டு நிலமாகப் பார்த்து வீடு கட்டிக்கொள்ள வேண்டும்.

அந்தத் தச்சர் ஆசைப்பட்டார்.

வழியில் யாரோ அவரை மடக்கினார்கள்.

''நீங்கள் மரத்தச்சர்தானே.''

''ஆமாம்.''

''இரண்டு நாட்களாக உங்களைத் தேடுகிறேன்.''

''சொல்லுங்கள் என்ன வேண்டும். எனக்கு வேலைகள் அதிகமிருக்கின்றன.''

''நான் சொல்வது கொஞ்சம் பெரிய வேலை.''

''சொல்லுங்கள்.''

''என்னோடு ஜெயங்கொண்ட சோழபுரத்திற்கு வரவேண்டும்.''

''எதற்கு''

''அங்கு நிதத்தவினோதப் பெருந்தச்சன் தன்னுடைய கூட்டத்தாரோடு போயிருக்கிறார்.''

''ஆமாம். கேள்விப்பட்டேன். சுகமாக இருக்கிறாரா.''

''மிக நலமாக இருக்கிறார்.''

''அவர் நலமாக இருப்பது எங்களைப் போன்றவருக்கெல்லாம் மிகப்பெருமை... அவரால் நம்முடைய குலத்திற்கே நல்ல மதிப்பு வந்துவிட்டது.''

''அவர்தான் உங்களைப் பார்த்துவரச் சொன்னார்.''

''அப்படியா... என்ன விசேஷம்.''

''ஒன்றுமில்லை. அங்கு வேலைக்கு வர முடியுமா. வரும் பொழுது மரங்கள் அறுத்து எடுத்து வர முடியுமா என்று கேட்டார்.''

''எதற்கு மரங்கள். முழு மரமா அல்லது துண்டுகளா.''

''பலகைகள்.''

தச்சர் சட்டென்று சுதாரித்துக் கொண்டார்.

''எதற்கான பலகைகள்.''

''மாளிகை ஒன்று எழுப்பப் போகிறார். இளவரசர் இராஜேந்திரருக்காக அங்கு அரண்மனை ஒன்று எழுப்பப் போகிறார். அதற்கு கதவுகளும், ஜன்னல்களும், தூண்களும், உத்திரங்களும் செய்ய



வேண்டும். அதற்காக பலகைகள் அறுத்துக் கொண்டு வந்தால் நன்றாக இருக்கும்.''

''எவ்வளவு பலகைகள் வேண்டும்.''

''எத்தனை இருந்தாலும் நன்றாக இருக்கும்.''

''இளவரசர் வேலை என்றால் நன்றாகச் செய்கிறேன். ஆனால், நான் எப்போது வரவேண்டும்.''

''பலகைகளோடு அடுத்த மாதம் வரமுடியுமா.''

''பலகை தேர்வு செய்து அறுத்துக் கொண்டு வர வேண்டாமா. நாளாகுமே.''

''எவ்வளவு நாளில் வருவீர்கள்.''

''இன்னும் சற்றுக் கூடுதலாக ஒருமாதம் கொடுங்கள். அறுபது நாட்களில் பலகைகளோடு வந்து விடுகிறேன். ஆனால், நான் போய் கேட்டால் இப்பொழுது விலை அதிகமாகச் சொல்கிறார்கள். மெல்ல இளவரசருக்காக என்று தெரிந்து போனால், இன்னும் கூடுதலாகக் கேட்பார்கள்.''

''காசைப்பற்றிக் கவலைப்படாதீர்கள்.''

''என் கைக் காசைப்போட்டா மரம் வாங்க முடியும்.''

''இல்லை. உமக்கு முன் பணம் தருகிறோம்.''

''ஆமாம். இப்பொழுதுகூட ஒரு வணிகர் முன் பணமென்று மூன்று தங்கக்காசுகள் கொடுத்திருக்கிறார். இதை வைத்துக் கொண்டு என்ன செய்வது. இப்பொழுதெல்லாம் மூன்று கழஞ்சுக்கு எந்த மதிப்பும் இல்லை.''

''சும்மாயிருமய்யா.'' எதிர்ப்பட்டவர் அதட்டினார்.

''உமக்கு நூறு கழஞ்சுகள் தருகிறேன். ஒரு பெரிய மாளிகைக் குண்டான மரப்பலகைகள் வரவேண்டும். சம்மதமா சொல் லுங்கள்.''

தச்சருக்கு தலை சுற்றியது. ஆனால் அடக்கிக் கொண்டார். மெல்ல யோசித்தார்.

என்னடா இது. வானம் பிளந்து திருமகள் தரையிறங்கியது போல இப்படியொரு அதிர்ஷ்டம் நம்மீது அடிக்கிறது.

அவர் வேறு பக்கம் திரும்பி யோசித்தார். முகத்திலுள்ள சந்தோஷத்தை எதிராளி கவனித்து விட வேண்டாமென்ற எண்ணத்தாலும் அப்படிச் செய்தார். பிறகு தலைகுனிந்து

கொண்டார். சற்றுத் தள்ளிப் போய் நின்று கொண்டு ஒரு மரத்தைப் பிடித்து யோசனை செய்தார். பிறகு மெல்ல வந்தார்.

''இளவரசர் இராஜேந்திரர் என்றால் எனக்கு உயிர். சோழ தேசத்தின் எதிர்காலம் அவர் கையில் தான் இருக்கிறது. அவருக்கு என்றென்றும் நான் கடமைப்பட்டவன். என்னைப் போன்ற இளைஞர்கள் அவரிடம் தான் வேலை செய்ய வேண்டும். அவர் ஆதரித்தால் தான் என்னைப் போன்ற நல்ல தச்சர்கள் மேன்மைக்கு வரமுடியும். முன்னேற முடியும். சொந்தவீடும், நிலமும் வாங்க முடியும்.

இன்று வரை வேலை தெரிந்தவனாக இருக்கிறேனே தவிர, விவேகமுள்ளவனாக இல்லை. எனக்கென்று ஒரு வீடுகூட இல்லை. ஒரு பசுகூட இல்லை. இளவரசருடைய கருணை என்மீது படர்ந்திருக்கிறது. அதனால்தான் என்னை வந்து பார்த்திருக்கிறீர்கள். என்னால் முடிந்த அளவு விசுவாசமாக வேலை செய்கிறேன். அறுபது நாள் என்பது அதிகமாக நேரம். எனக்கு மரம் தேர்வு செய்யக் கிடைத்தவுடன் வெட்டி வீழ்த்தி பத்துப் பதினைந்து ஆட்களை வைத்து துண்டுகளாக அறுத்து பலகைகளாக ஏற்றி உடனடியாக எங்கு அனுப்ப வேண்டுமோ அங்கு அனுப்புகிறேன். வண்டியும் மாடும்கூட வாங்க வேண்டியிருக்கும்.''

''நூறு கழஞ்சில் பல வண்டிகள் வாங்கலாமய்யா. வேறு என்ன வேண்டும்.''

''என்னுடன் வேலை செய்பவர்களுக்கு யார் கூலி கொடுப்பது. எனக்கு இளவரசர் மீது விசுவாசம் உண்டு. எல்லோருக்கும் அந்த விசுவாசம் இருக்குமா? இருக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது நியாயமா? அவரவர்கள் வயிற்றுப் பாட்டிற்கல்லவா வேலை செய்ய வருகிறார்கள். இப்பொழுதெல்லாம் வேலை கிடைப்பதும் எளிது. சும்மா கொண்டு போய் மண்வாரிக் கொட்டினால் ஏகப்பட்ட காசு கிடைக்கிறது. அதனால் மரம் அறுக்கவோ கஷ்டப்பட்டு வேலை செய்யவோ எவரும் முன் வரமாட்டேன் என்கிறார்கள்.''

''புரிகிறது. எவ்வளவு முன் பணம் வேண்டும்.''

''நூறு என்பதை இருநூறு என்று செய்தால் நன்றாக இருக்கும்.''

''இது பேராசையாக இருக்கிறதே.''

''என்னுடைய பிரச்சினையைச் சொன்னேன்.''

''நூற்று ஐம்பது என்று வைத்துக் கொள்ளும்.''



''வைத்துக் கொள்கிறேன். ஜெயங்கொண்ட சோழபுரம் வந்ததும் எனக்கு உண்டான கூலியைக் கொடுத்துவிடுங்கள்.''

''உங்களுக்குண்டான கூலி எவ்வளவு.''

''இன்னும் ஐம்பது கழஞ்சு.''

''சரி. எத்தனை மரங்கள் கொண்டு வருவீர்கள்.''

''எட்டுக்கட்டு அரண்மனைக்குண்டான மரத்தோடு வருகிறேன்.''

''நிஜம்தானா.''

''ஒப்பந்தம் எழுதி வைத்துக் கொள்வோம்.''

அவர்கள் மரத்தடியில் அமர்ந்து பனை ஓலை சுத்தம் செய்து ஒப்பந்தம் எழுதி, இரண்டு பேரும் கையெழுத்திட்டு, திருப்பூந்துருத்திக்கருகே உள்ள மாரியம்மன் கோயிலில் வைத்து வணங்கினார்கள்.

நூற்றைம்பது பொன் கழஞ்சுகள் கொடுக்கப் பட்டன. அந்தப் பைகளைக் கழுத்தில் கட்டி முன்னும் பின்னுமாகப் போட்டுக் கொண்டு மேலே சால்வை போர்த்திக் கொண்டு அந்தத் தச்சர் விரைவாகத் தன் வீடு நோக்கி நகர்ந்தார்.

அந்தப் பொன்முட்டை கழுத்தை அறுத்தாலும் அவர் நடை உற்சாகமாக இருந்தது.

அந்தப் பழைய பலகைகளை இழைத்து, புதுப் பலகைகள் போல் செய்து நல்லவைகளை உத்திரக் கட்டைகளாக மாற்றி ஜெயங்கொண்டம் எடுத்துப்போய்விட வேண்டும். வீடு வாங்குவதைக் கூட இங்கே செய்யலாம். ஜெயங்கொண்டத்திலேயே வாங்கிவிடலாம் அல்லது கொள்ளிட நதியின் வடகரையில் வாங்கிக் கொள்ளலாம். நிலபுலன்கள் வாங்கிக் கொள்ளலாம்.

அரண்மனைக்குண்டான பலகைகளை ஜெயங்கொண்டம் அனுப்ப வேண்டுமென்றால், இங்கு பலர் வேலை செய்தாக வேண்டும். எத்தனை பேர் வேண்டும். இருபது பேர் போதாதா, ராப்பகலாய் உழைத்தால் முப்பது நாளில் கதவுகளும், ஜன்னல்களும் மரப்பலகைகளாகச் செய்துவிடலாம். உத்திரக் கட்டைகளாக மாற்றி அடுக்கிக் கொடுத்துவிடலாம்.

மனம் வேகமாகக் கணக்குப் போட்டது.

உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவர் ஒரு பெரிய கற்றளி எழுப்பினாலும் எழுப்பினார், அங்கங்கே பல பேருக்கு செங்கல்

வீடுகளும், ஓட்டு வீடுகளும், கூரை வீடுகளும் கிடைத்துக் கொண்டிருக்கின்றன.

ஒரு மனிதன் நல்லது செய்தால் போதும். இங்கே அவன் பொருட்டு எல்லோருக்கும் செல்வமழை பொழியும். எல்லோர் வாழ்க்கையும் வளமாகும்.

அந்தத் தச்சர் மனதுக்குள் சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜ ராஜத்தேவரை வாழ்த்தினார்.

## 175

உலோகச் சிற்பிகள் இரண்டாம் முறையாக அரண்மனை முற்றத்தில் குழுமினார்கள். இன்றும் அவர்களுக்கு நீர் மோர் கொடுக்கப்பட்டது. அவர்களுக்குத் தலைமையாக . இருந்த உலோகச் சிற்பி சக்ரவர்த்தி உடையாரைச் சந்தித்துவிட்டு ஓலைக் குழலோடு வந்தார். அவரைக் கண்டதும் மற்ற சிற்பிகள் எழுந்து நின்றார்கள்.

''சக்ரவர்த்தியைச் சந்தித்தீர்களா.''

ஆவலோடு கேட்டார்கள். அவரும் பெருமையோடு தலை யசைத்தார்.

''எவ்வளவு வேலை கொடுத்திருக்கிறார்''

''நிறைய வேலைகள்.''

''நிறைய என்றால் நான்கைந்து இருக்குமா.''

''அவருடைய உத்தரவாக மட்டும் இருபது பிரதிமைகள் செய்யச் சொல்லியிருக்கிறார்.''

''என்ன..''

கூட்டம் வியந்தது.

''மற்றவர்களையும் சிலைகள் செய்யவேண்டுமென்று கட்டளை அனுப்பியிருக்கிறார். பல பேரும் வேலையைப் பிரித்துக் கொண்டு, யார் யாருக்கு என்னென்ன வேலை என்பதை ஏற்றுக்கொண்டு சம்மந்தப்பட்டவரிடம் உலோகத்திற்கும், பொன்னுக்கும் காசு வாங்கி, அவர்கள் திருப்தி ஏற்படும் வண்ணம் சிலைகளைச் செய்து தரவேண்டுவது நம் கடமை.''

''என்னென்ன சிலைகள் சக்ரவர்த்தி செய்யச் சொல்லியிருக் கிறார். ஒரே சிலைகள் போல ஆகிவிடக்கூடாதே.''



''அதனால்தான் இந்த ஓலைகளை உங்களுக்குப் படிக்கக் கொண்டு வந்தேன். இவைகளைப் பிரதி எடுத்துக் கொண்டு நீங்களும் வைத்துக் கொள்ளலாம்.''

''என்ன சிலைகள் என்று சொல்லுங்களேன்.''

''ஸ்ரீபலி எழுந்தருளும் பொன்னின் கொள்கைத் தேவர்.''

''அடடா... ஸ்ரீ பலித்தேவரா. நன்றாக இருக்கிறது. சூல வடிவம் கனமாகச் செய்ய வேண்டும்.''

''பிறகு தட்சிணமேரு விடங்கர்.''

''புரிகிறது. கோயில்தான் தட்சிணமேரு. அந்தக் கோயிலின் மூலவரைச்செய்ய வேண்டும் என்று சொல்கிறார்கள்.''

''ஆடல்வல்லான்.''

''அடடா... நடராசப் பெருமான்.''

''மகாமேரு விடங்கர்.''

''மகாமேரு என்பதை வடக்கேயுள்ள கயிலாயத்தைச் சொல்கிறார்கள் போலும்.''

''அங்கே அமர்ந்திருக்கின்ற சிவபெருமானைச் சொல்கிறார்.''

''அப்படியானால் நம்பிராட்டியார் வேண்டுமே.''

''ஆமாம். அடுத்தது உற்சவ மூர்த்தி''

''சண்டேஸ்வர தேவர்.''

''ஆமாம். சிவன் கோயில் என்றால் சண்டேஸ்வரர் இல்லா மலா. இந்தச் சிலையைச் சிறப்பாகச் செய்ய வேண்டும்.''

''பஞ்சதேக மூர்த்திகள், சூரியன், சந்திரன், விஷ்ணு, சிவன், பிரம்மா என்ற பஞ்சமூர்த்திகள்.''

''நல்லது. பிறகு.''

''சுப்ரமணியத்தேவர்.''

''ஆஹா... வேலோடு அழகாகச் செய்யலாம். தட்சிணாமூர்த்தி களை வீணாதாரமாகக் கூடச் செய்யலாம்.''

''எப்படிச் செய்யவேண்டும் என்பதை நீங்கள் தான் தீர்மானிக்க வேண்டும்.''

''மஹாவிஷ்ணுக்கள் நம்பிராட்டியார், மஹா விஷ்ணுக்கள் ஸ்ரீதேவியார், இன்னொரு மஹா விஷ்ணுக்கள் நம்பிராட்டியார், பூதேவிதேவியார், சண்டேஸ்வர தேவர். இவர் உற்சவராக இருக்க

லாம். நிருத்தம் செய்தருளுகின்றவராகக் கனமாக எழுந்தருளிவித்த பிள்ளையார் கணபதியார்.''

''பல கணபதிகள் செய்ய வேண்டும்.''

''ஆமாம். நிருத்தம் செய்பவராக இரண்டு, நின்றிருப்பவராக இரண்டு.''

''ஒன்றை கருவறைக்கு அருகிலே வைத்துவிடலாம். இன்னொன்றை வாசல்புறத்தில் வைக்கலாம். வாசலில் வைத்திருக்கின்ற கணபதிக்கு உற்சவராக ஒருவரைச் செய்யலாம். தனியாகவும் ஒன்று செய்து வைத்துக் கொள்ளலாம். சுகாசனம் இருந்தவராக எழுந்திருளிவித்த பிள்ளையார் செய்யச் சொல்லியிருக்கிறார். சுகாசனப் பிள்ளையாருக்கு அபிஷேகம் செய்வது நன்றாக இருக்கும். இதுவரை அரசர் கொடுத்தது அரசர் அல்லாது அரசரோடு அமர்ந்திருக்கின்ற அவர் தமக்கையார் குந்தவையாரும் திருமேனிகள் செய்யச் சொல்லியிருக்கிறார்கள்.''

''அப்படியா. என்ன திருமேனிகள்.''

''ஆடல்வல்லார் சிலை சக்ரவர்த்தி செய்கிறார் அல்லவா. ஆடல்வல்லார் நம்பிராட்டியாரை, உமாபரமேஸ்வரியாரை குந்தவையார் செய்கிறார்.''

''அடாடா... உயரம், அகலம், கனமெல்லாம்.''

''நம்முடைய விருப்பம். மிகச்சிறப்பாக இருக்க வேண்டும் என்பதுதான் கட்டளை.''

''பிறகு வேறென்ன செய்யச் சொல்லியிருக்கிறார் குந்தவையார்.''

''தட்சிணமேரு விடங்கரின் நம்பிராட்டியார் உமாபரமேஸ்வரி.''

''அடே... அடே... அரசர் தட்சிணமேரு விடங்கர். இவர் செய்வது நம்பிராட்டியார் உமாபரமேஸ்வரி.''

''ஆமாம். மிகவும் அழகாகச் செய்து விடலாம். இதை இரண்டும் நீங்களே செய்வதுதான் அழகாக இருக்கும்.''

''இதைத்தவிர ஒரு முக்கியமான சிலையும் செய்யச் சொல்லியிருக்கிறார்.''

''என்ன சிலை.''

''பொன் மாளிகைத் துஞ்சின தேவர். அரசருடைய தகப்பனார் சுந்தரசோழர் சிலையைச் செய்ய வேண்டுமென்று குந்தவையார்



விருப்பப் பட்டார். நான் சுந்தரசோழரை அத்தனை நெருக்கமாய் அறிந்தவரல்ல. உங்களில் யாருக்கு சுந்தரசோழரை நன்கு தெரியுமோ, அவரைவிட்டுப் படம் வரையச் சொல்லி, பிறகு சிலை செய்ய வேண்டும்.''

''சுந்தரசோழரின் வண்ண ஓவியங்கள் பலதும் இருக்கிறதய்யா. அது ஒன்றும் கடினமில்லை. எளிதாகச் செய்துவிடலாம். ஒன்றும் கவலைப்பட வேண்டாம்.''

''இன்னொன்னும் செய்யச் சொல்லியிருக்கிறார்.''

''என்ன அது.''

''குந்தவையார் தம்மைப் போன்ற ஒரு உருவத்தை அங்கே வைக்க வேண்டுமென்று ஆசைப்பட்டிருக்கிறார். எதற்கம்மா உங்கள் உலோகச்சிலை, உயிரோடு இருக்கும்போது செய்தல் நல்லதல்லவே என்று சொன்னேன். என்ன ஆகும் என்று கேட்டார். சம்மந்தப்பட்டவர் உலோகச்சிலை செய்தால் மரணமோ, மரணத்துக்கு ஒப்பான வேதனையோ ஏற்படும் என்று சொல்கிறார்கள். இனி மரணம் வந்தால் என்ன. நான் தயாராக இருக்கிறேன். எனவே, மரணத்திற்கு முன்பே என்னைப் போல ஒரு உருவம் செய்து விடுங்கள் என்று சொன்னார்.''

கூட்டம் சில்லிட்டு நின்றது. அமைதியாக அவரையே பார்த்தது.

அந்த உலோக சிலை ஸ்தபதி கண்மூடிக் கொண்டு பேசினார்.

''இவை எனக்குக் கிடைத்த வேலைகள். உங்களில் எல்லோருக்குமே வேலை கிடைக்கும்படி நான் சொல்லியிருக்கிறேன். நீங்கள் உலக மாதேவியிடம் போங்கள். நீங்கள் இரண்டு பேரும் சோழ மாதேவியிடம் போங்கள். அபிமானவல்லி என்று அரசருடைய இன்னொரு மனைவியார் இருக்கிறார். அவரிடம் நீங்கள் போங்கள்.''

அவர் பிரித்துவிட்டார்.

''தஞ்சை வல்லத்து இளைஞன் திரைலோக்ய மாதேவியிடம் போகட்டும். தம்பி, நீதானே கிருஷ்ணர் பொம்மை செய்து பஞ்சவன் மாதேவியிடம் கொடுத்தாய். பஞ்சவன்மாதேவி உன்னைக் குறிப்பிட்டுக் கேட்டு விசாரித்தார்கள். அவரிடம் போய் சில வேலைகள் ஏற்றுக்கொண்டு வா. அவர் என்னை வேலை செய்யச் சொல்கிறார் தெரியுமா. தஞ்சை அழகர், தஞ்சை அழகர் நம்பிராட்டியார், உமாபரமேஸ்வரியார், ஒரு கணபதி, இதைத்தவிர

பதஞ்சலித்தேவருடைய சிலையையும் செய்யவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்.''

''தஞ்சை அழகர் என்று யார் சிலையைச் செய்வது''

''இந்தத் தஞ்சையில் அழகுள்ளவர் யார்''

''சக்ரவர்த்திதான்.''

''சக்ரவர்த்தி சிலைபோல இருக்க வேண்டுமே தவிர, அது சிவனின் சிலையாக இருக்க வேண்டும். உமா பரமேஸ்வரியாரின் சிலைபோல இருக்க வேண்டுமே தவிர, அதில் பஞ்சவன்மாதேவி யின் சாயல் இருக்க வேண்டும். கணபதி சிலை. அவர்கள் கோயில் நன்றாக வரவேண்டுமென்று வேண்டிக் கொண்டதாம். பதஞ்சலி தேவர் சிலை என்பது அவர்கள் சிறு வயதிலிருந்து வழிபட்டு வந்த குருவின் கட்டளையாம்.

சக்ரவர்த்தியினுடைய மனைவிகள் பிருத்வி மகாதேவி, இலாடமாதேவி ஆகிய இருவரிடம் நீங்கள் இருவரும் போங்கள். அது தவிர சுந்தரமூர்த்தி சுவாமிகளுடைய சிலையும், சுந்தரமூர்த்தி சுவாமிகள் துணைவியார் நங்கை பரவையார் சிலையும், திரு நாவுக்கரசர் சிலையும், திருஞான சம்பந்தர் சிலையும், பெரிய பெருமாள் சிலையும், பெரிய பெருமாள் நம்பிராட்டியார் சிலை யும், பெரிய பெருமாளுக்குத் தேவார தேவராக எழுந்தருளிவித்த சந்திரசேகரத்தேவர் சிலையும், நம்முடைய தென்னவன் மூவேந்த வேளார் செய்யச் சொல்லி இருக்கிறார். அதற்கு நான்கு பேர்கள் பொறுப்பேற்றுக் கொள்ளுங்கள்.

தத்தா நமரே காண் என்னும் மிலாடுடையார் சிலை, சேத்ர பாலர் சிலை, பைரவமூர்த்தி சிலைகள், சிறுத் தொண்ட நம்பியார் சிலை, திருவெண்காட்டு நங்கை சிலை, சீராளத் தேவர் சிலை, சூர்யர் சிலை, துர்கா பரமேஸ்வரி சிலை, காளிப்பிடாரிச்சிலை என்று பலதும் செய்யச் சொல்லியிருக்கிறார்கள்.

அடுத்த மூன்று வருடங்களுக்கு நமக்குத் தஞ்சையில்தான் வேலை. வேலை செய்கிற அழகைப் பார்த்துவிட்டு இன்னும் பல கோயில்களில் பல்வேறு இடங்களிலிருந்து நமக்குச் சிலைகள் செய்யச் சொல்லி உத்தரவு வரும். எனவே, இதைச் சீரும், சிறப்பு மாகச் செய்ய வேண்டியது நம்முடைய வேலை.''

''உலோகங்கள் யார் தருவார்கள்''



''யார் யார் பொறுப்பேற்றிருக்கிறார்களோ அவரவர் கொண்டு வந்து உலோகத்தைத் தருவார்கள். அல்லது வாங்குவதற்குண்டான பொற் கழஞ்சுகள் தருவார்கள்''

''வேண்டாம். அப்படிச் செய்ய வேண்டாம்

அவர்களின் தலைவர் அறிவுறுத்தினார்.

''இந்தக் கணக்கு வேலையை நாம் வைத்துக் கொள்ள வேண்டாம். இதற்கென்று நியமிக்கப்பட்ட தொண்டை நாட்டு அந்தணர்களிடம் போய் வாங்கி வரச்சொல்லி, நமக்கு என்ன வேண்டுமோ அதை உட்கார்ந்த இடத்தில் கொண்டு வரச்சொல்லி அவர்களைப் பணிப்போம். அவர்கள் வேலை செய்வார்கள். நாம் நம்முடைய வேலையைக் கவனிப்போம். மெழுகுக்கும், தங்கத் திற்கும், மற்ற உலோகத்திற்கும் தோளில் கூடை சாய்த்துக் கொண்டு நடந்தோம் என்றால் சிற்ப வேலைகள் செய்ய முடியாது. இது செய்வதற்குத்தான் அவர்களில் ஆட்கள் இருக்கிறார்கள். எனவே நாம் சிலை செய்கின்ற விஷயத்தை மட்டும் கவனித்துக் கொள்வோம். மாதிரி வடிவங்களை, ஓவியங்களை உடனடியாகத் தயாரித்து சம்மந்தப்பட்ட வரிடம் அனுமதி பெற்று விடுவோம்.''

அந்தச் சிறிய, வேலை தெரிந்த வீரமான கலைஞர் கூட்டம் இன்னும் நீர்மோரும், வெள்ளரிக்காய் பிஞ்சுகளும் சாப்பிட்டு விட்டு சிறிய ஏப்பத்துடன் அரண்மனையை விட்டு வெளியே வந்தது.

''நமக்கு என்ன லாபம்''

''என்ன பேசுகிறாய். கருமாருக்கு இராஜேந்திரசோழர் எத்தனை விதமாக அளித்திருக்கிறார். எப்படி செல்லப் பிள்ளைப்போல வைத்திருக்கிறார். அதேபோல அற்புதமாக வேலை செய்தோம் என்றால், இந்த அரண்மனையிலுள்ள அத்தனை பேரும் நம்மை செல்ல பிள்ளையாக வைத்துக்கொள்வார்கள்''

''சரி, செல்லப்பிள்ளையாக வைத்துக் கொள்வதில் என்ன லாபம்.''

''வீடு கிடைக்குமடா, நிலம் கிடைக்கும். நல்லவாழ்க்கை கிடைக்கும். நமது பரம்பரை இன்னும் சிறப்பாக வாழும்.''

''அடேயப்பா... இவ்வளவு பெரிய கற்களைக் கொண்டு கோயில் எழுப்பி அதில் நமக்கும் வேலை கொடுத்திருக்கிறாரே சக்ரவர்த்திப் பெருமான் அவரை வணங்க வேண்டும். அவரைத் தான் வணங்க வேண்டும். நான் ஒரு நர்த்தன விநாயகர் மாதிரிச்

சிலை செய்துவிட்டு, பிறகு அவருடைய உருவத்தைத்தான் வரையப் போகிறேன். அரசருடைய உருவமும், பஞ்சவன்மாதேவி உருவமும் வரைந்து கொண்டு போய் காட்டப் போகிறேன்.''

''எப்போது''

''நாளையே. நீங்களும் விரைவாகச் சித்திரங்கள் தயார் செய்யுங்கள்''

அந்தக் கூட்டத்தினர் தொடர்ந்து உரத்த குரலில் பேசிச் சிரித்த படியே வெளியே போனார்கள். வாழ்க்கைப்பற்றிய மிகப்பெரிய நம்பிக்கை அந்தக் கலைஞர்களுக்கு ஏற்பட்டது. தொடர்ந்து உழைக்க வேண்டுமென்ற வெறி ஏற்பட்டது. நல்ல கலைஞர் களுக்கு, நல்ல வேலை செய்வது போன்ற சந்தோஷம் வேறு எதுவும் இல்லை.

''அந்த விமானத்தில் நான்கு உள்சுற்றுக்கள் இருக்கின்றன. கருவறையை ஒட்டிய ஒரு உள்சுவற்றில் எங்களது ஓவியன் சீராளன், அவளது அனுக்கி உமையோடு அற்புதமாய் ஓவியம் வரைந்து கொண்டிருக்கிறான்.

இப்பொழுது நாம் ஏறிக்கொண்டிருப்பது இரண்டாவது சுற்று. இந்த உள்சுற்றில் வேலைகள் இனிமேல்தான் துவங்க வேண்டும். மூன்றாவது உள்சுற்றில் வெறுமே ஒரு வழிநடை இருக்கிறது. நான்காவது உள்சுற்று சிற்பிகள் மட்டுமே கவனமாகப் பிடித்துக் கொண்டு போக முடியும். அதற்குமேல் உள்சுற்று இல்லை. விமானம் கூம்பாக மாறிவிடுகிறது.

இதோ துருத்திக் கொண்டிருக்கிற இந்தப் பாறைகளுடைய நீளம் மிகப்பெரியது. இவைகளை அடுக்கி அடுக்கிதான் விமானம் எழுப்பப் பட்டிருக்கிறது. இது ஏன் துருத்திக் கொண்டிருக்கிறது என்று உங்களுக்குத் தோன்றலாம். துருத்திக் கொண்டிருக்கிற இந்தப் பகுதியில் நாங்கள் கரணச்சிற்பங்கள் வடிக்கப் போகிறோம்.''

கண்டராத்தித்தப் பெருந்தச்சர், கையில் ஒரு சுடர் விளக்கைத் தூக்கி கொண்டு முன்னே நடந்து வர, அவருக்கும் முன்னே தீப்பந்த வெளிச்சம் காட்டிக் கொண்டு ஒரு மறவர் நடந்து கொண் டிருந்தார். எங்கிருந்தோ குளுமையான காற்று அந்த இருட்டான பகுதியைத் தழுவிக் கொண்டிருந்தது.

சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவரும், சேனாபதி பிரம்மராயர் கிருஷ்ணன்ராமனும் அவருடைய மகன் அருண்



மொழிப்பட்டனும், மூவேந்தவேளாரும் ஒருவர் பின் ஒருவராக அந்த கற்பாறைகளைத் தொட்டுப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

''ஏன் கரணச்சிற்பங்கள்''

சக்ரவர்த்திக்கு அருகே நெருக்கமாக இருந்த பஞ்சவன்மாதேவி கேட்டாள்.

''இது நல்ல கேள்வி. நாம் சிவனுக்கு கோயில் எழுப்பியிருக் கிறோம். சிவன் லிங்கமாக இருக்கிறார். லிங்கம் என்பது என்ன. லிங்கம் என்ற சொல்லுக்கு அடையாளம் என்று பெயர். எல்லா வடிவத்திலும் சிவன் இருக்கிறார். அவருடைய வடிவம் என்று நாம் லிங்க ரூபத்தைச் சொல்கிறோம். லிங்கம் என்பது கூடலை மையமாக வைத்து வடிவமைக்கபட்டது. ஆவுடையார் என்பது பெண் யோனியையும், லிங்கம் என்பது ஆண் குறியையும் சொல்கிறது.

இது ஏதோ ஒரு நகைப்புக்குரிய விஷயம் என்று நினைக்க வேண்டாம். உலகம் முழுவதும் இடையறாது, இடையறாது ஒன்றோடு ஒன்று கலந்து வேறொன்று பிறந்தது. பிறந்தது வேறொன்றோடு கலந்து வேறொன்று வேறொன்றோடு கலந்து என்று ஒரு ரசாயன மாற்றம் நிகழ்ந்து கொண்டிருக்கிறது.

வெளிச்சத்தோடு தாவரம் கலக்கிறது. காற்றோடு நீர் கலக்கிறது. நீரோடு மண் கலக்கிறது வெப்பத்தோடு சகலமும் கலக்கின்றன. அதனால் உயிர்கள் தோன்றுகின்றன. இடையறாத இந்த ரசாயன மாற்றத்தை, கலவியை நாம் சிவலிங்கம் என்று வைத்திருக்கிறோம்.

இந்தக்கூடல் சின்னம் மட்டும்தான் கடவுளா? கடவுள் என்பது இன்னும் மிகப்பெரிய விஷயம். இந்த உடம்பு பெரும்கோயில், உள்ளுக்குள் இருக்கின்ற உயிரோசையே, உயிரின் அசைவே சிவனின் ரூபம், உயிரின் இருப்பை உடம்பில் அசைவுதான் வெளிக் காட்டுகிறது. கடவுளின் இருப்பை பஞ்சபூதங்கள் வெளிக் காட்டுவது போல, பஞ்சபூதங்களான இந்த உடம்புதான் கடவுள் உள் இருப்பதைக் காட்டுகிறது. பஞ்சபூதங்களான இந்த உடம்பு அசையாது இருந்தால் உள்ளுக்குள் இருக்கின்ற இந்த உயிர், அதாவது கடவுள் எனும் பெருஞ்சக்தி இல்லையென்று கொள்ள லாம். அது அப்போது சவம் என்று கருதப்படும். உயிருள்ளதே சிவம் என்று கருதப்படும்.''

கண்டராதித்தப் பெருந்தச்சர் மிருதுவாகச் சொல்லிக் கொண்டு வந்தார்.

மனிதர்களுடைய அசைவை போரில் விளக்காது, வேத கோஷங்களில் சொல்லாது, நீந்துவதில் காட்டாது, தூங்குவதில் விளங்காது, ஆடல் என்ற விஷயத்தில் மனிதருடைய சகல அசைவுகளையும் பரதம் என்கிற மாபெரும் நடனக்கலை காட்டுகிறது. அதாவது உயிர் என்கிற சிவத்தின் அசைவை உடம்பு விதம்விதமாக வெளிப்படுத்துகிறது. அது சிவத்தின் அசைவு. எனவே, பரதக்கலை என்பது வெறும் நாட்டியமல்ல. மற்றவரை மகிழச்செய்யும் விஷயமல்ல. பரதக்கலை என்பது கடவுளின் அசைவு. சிவனின் தாண்டவம். ஆடல் வல்லானின் வியக்தி.

கண்டராதித்தப் பெருந்தச்சருக்கு நாற்பது வயதிருக்கும். உடம்பு சற்று பருத்துக் காணப்பட்டது. ஆனால் கண்கள் பெரியனவாக, மூக்கு அழகாக, உதடுகள் வளைந்து கம்பீரமாக காட்சியளித்தன.

''அற்புதமாகச் சொல்கிறீர்கள் கண்டராதித்தரே. ஆனால், இந்த வேலையை ஏன் துவங்கவில்லை.''

''மண் எடுக்க வேண்டுமென்று காத்திருந்தோம். இங்கு நல்ல காற்றும், வெளிச்சமும் இருந்தால்தான் வேலை செய்வதற்கு எளிது. இல்லையெனில் தீப்பந்தத்தின் புகை உட்கார்ந்து வேலை செய்ய விடாது. இப்பொழுது நீங்கள் மண் எடுத்துவிட்டதால் இந்த இடம் காற்றோட்டமாக இருக்கிறது. சிறு கூண்டு விளக்குகளின் வெளிச்சத்தால் இந்தப் பாறைகள் செதுக்குவதை நாங்கள் விரைவாக ஆரம்பித்துவிடுவோம். ஆனால், இங்கே ஒரு பிரச்சினை வந்துவிட்டது.''

''என்ன பிரச்சினை''

''இங்கே நூற்றியெட்டு கரணங்களையும் செய்வதற்கு தகுதியுடையவர்கள் வெகுசிலரே. ராஜராஜிக்கு நூற்றியெட்டு கரணங்களும் தெரியும். அவர்களிடம் வந்து மாதிரியாக நிற்கச் சொன்னபோது எனக்கு நாட்டிய நாடக வேலை இருக்கிறது. எனக்கு இடையூறு செய்யாதீர்கள் என்று சொல்லி விட்டார். அதற்கப்பால் இந்த வேலை நன்கு தெரிந்தவர்கள் சீருடையாள். சீருடையாளைக் கேட்டபோது, அவர் தன்னுடைய கணவர் நித்தவினோதப் பெருந்தச்சர் குணவனிடம் கேட்கச் சொன்னார். குணவனும் சரியென்று சொன்னார். ஆனால் நான் மறுத்துவிட்டேன்.''

''என்ன இது. சமீபத்திய பூசல் காரணமா.''

''அது ஏதும் காரணமில்லை.''

''புரியும்படி சொல்லுங்கள்''



சக்ரவர்த்தி மெல்லிய அதட்டலாக வினவ, கண்டராதித்தர் தலைகுனிந்து வணங்கினார்.

''நித்தவினோதப் பெருந்தச்சர் எனக்கு உறவு முறை. எனக்கு தம்பி போல ஆகவேண்டும். அவருடைய அனுக்கியை நான் மாதிரியாக நிற்கச் சொல்வதில் சிரமங்கள் இருக்கின்றன.

சீருடையாள் வெறுமனே தலைக்கோலியாக, தளிச்சேரி பெண்டிராக இருப்பின் அவரை ஆதாரமாக வைத்து நான் படங்கள் வரைந்து கொள்வேன். இவரை எப்படி நிற்க வைப்பது, எப்படி உற்றுப் பார்ப்பது. எப்படி படம் வரைவது, எனக்கு அதில் விருப்பமில்லை என்று சொல்லிவிட்டேன்.

சீருடையாள் திரும்பிப் போய் விட்டார்கள். முதுமையான தலைக்கோலிகள் மூன்று பேர் இருக்கிறார்கள். ஆனால், அவர்களுடைய உருவத்தை மாதிரியாகக் கொள்ள முடியாது. தளர்ந்து போயிருப்பதால் மிகச்சரியாக நிமிர்ந்து நின்று அல்லது சரியாகக் கால்தூக்கி அவர்களால் ஆடமுடியவில்லை. நூற்றியெட்டு கரணங்களையும் இப்படியிருக்கும் என்று சொல்ல முடிகிறதே தவிர, செய்து காட்ட முடியவில்லை.''

''வேறு யாருமே இல்லையா.''

''இருக்கிறார்கள்''

''யார்''

''கேட்க முடியாது.''

''ஏன் கேட்க முடியாது''

''அவர்கள் உயர்ந்த ஸ்தானத்தில் இருக்கிறார்கள்.''

''என்ன சொல்கிறாய்''

''உங்களுடைய மனைவி பஞ்சவன்மாதேவியார் நூற்றியெட்டு கரணங்களையும் அறிந்தவர் என்று சீருடையாள் சொன்னார்கள். எங்களையெல்லாம் விட இந்தக் கரணங்களைப் பற்றிய மிகத் தெளிவான ஞானம் உள்ளவர் அவர் என்றும் சொன்னார்கள்.

சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவர் மனைவியை நான் எப்படி மாதிரியாக வைத்துக் கொள்வது. என் தம்பி மனைவியையே மாதிரியாக வைத்துக்கொள்ள நான் தயங்குகின்றேன். எனவே, நீங்கள் வெளியூரிலிருந்து, குறிப்பாய் தென் காசியிலிருந்து விஷயம் தெரிந்த தளிச்சேரி பெண்டுகளைக் கொண்டு வந்தால் நன்றாக இருக்கும் என்று தோன்றுகிறது. இந்த வேண்டுகோளின் பொருட்டே சக்ரவர்த்திப் பெருமானை இந்த

இரண்டாம் சாந்தாரத்திற்கு வரவேண்டுமென்று நச்சரித்து அழைத்து வந்தேன்.''

''இனிமேல் தென்காசியிலிருந்து தளிச்சேரி பெண்டுகள் வந்து குடியேறி எப்பொழுது ஆரம்பித்து எப்பொழுது முடிப்பது பஞ்சவன் மாதேவி இதற்கு மாதிரியாக நின்றால் என்ன.''

சக்ரவர்த்தி வினவினார்.

''அது நன்றாக இருக்காது.''

மூவேந்த வேளார் முணுமுணுத்துப் பேசினார்.

''ஏன் நன்றாக இருக்காது.''

சக்ரவர்த்தியார் திரும்பி அவரைப் பார்த்துக் கேட்டார்.

''இது கோயில் பணி. சகலரும் இதில் ஈடுபட்டுத்தான் ஆக வேண்டுமென்று மிகத்தெளிவாக கருவூர்த்தேவர் சொல்லவில்லையா? ஈடுபடுத்தவில்லையா? நாமும் ஈடுபட்டுச் செய்யவில்லையா? என் பட்டமகிஷி எல்லோருக்கும் நீர்வார்க்கவில்லையா? இளவரசர் இராஜேந்திரரின் தாயார் வானதிதேவி குடம் குடமாய் நீர் சுமக்க வில்லையா? மாதிரியாக இருப்பதில் என்ன தவறு? பஞ்சவன்மாதேவி உனக்கு ஏதேனும் ஆட்சேபனை உண்டா?''

பஞ்சவன்மாதேவி சொல்லத் தெரியாமல் தடுமாறினாள்.

''முன்னமே சொல்லியிருந்தால் நான் மாற்று ஏற்பாடுகள் செய்திருப்பேன். நான் ராஜராஜியை நம்பி ஏமாந்துவிட்டேன். தலைக்கோலிகள் நிறைய பேர் இருக்கிறார்களே என்று நினைத்துவிட்டேன்.''

''ஆனால், அந்தத் தலைக்கோலிகளால் பல்வேறு கரணங்களைத் தெளிவாகச் செய்து காட்ட முடியவில்லை. வயது காரணம். மறதி காரணம். அதுவும் தவிர இம்மாதிரியான விஷயங்களை சந்தேகத்தோடு இது சரியா, அது சரியா என்று கேட்டுக் கொண்டு நின்றால் எனக்கு வரைவதற்கு மனம் ஒப்பாது. இதுதான் என்று தெளிவாக நிற்கவேண்டும். எத்தனையோ வருடங்களாக திட்டமிட்டுக் கட்டப்பட்ட இந்தப் பாறைகள் பலருடைய உழைப்பால் இப்படித் துருத்திக் கொண்டிருக்கின்றன. இந்தப் பாறைகள் தவறான கரணங்களால் கெட்டுப் போய்விடக்கூடாது. துல்லியம் தான் இந்த பரமஸ்வாமி கோயிலின் சிறப்பு.''

''உண்மை. மிக உண்மை.''

சக்ரவர்த்தி உடையார் பரபரத்தார்.



''பஞ்சவன்மாதேவி. என்ன பார்த்துக் கொண்டிருக்கிறாய். கண்டராதித்தப் பெருந்தச்சருக்கு உதவி செய்ய உனக்கு என்ன தயக்கம்? சக்ரவர்த்தியின் மனைவி என்பது கோயில் பணி செய்வதற்கு ஒரு இடையூறாகவா இருக்கும்.''

''இல்லை சக்ரவர்த்தி. நிச்சயம் இடையூறாக இருக்காது.''

பஞ்சவன்மாதேவி பதில் சொன்னாள்.

''சற்று யோசனை செய்யுங்கள்.''

மூவேந்த வேளார் இடையில் புகுந்தார்.

''சோழதேசமே புகழுகின்ற சக்ரவர்த்தி உடையாரின் அருமை மனைவி, சோழதேசத்தில் முக்கிய அங்கம். மக்களின் நன்மதிப்புப் பெற்றவர் கைதூக்கி, கால்தூக்கி கரணம் என்ற பெயரில் நிற்பதா? அதை ஒரு சிற்பி பார்த்து ரசித்து படம் வரைவதா. செதுக்குவதா?''

''என்ன அதனால். அதில் என்ன தவறு. பரதம் சிவன் தந்த சொத்து அல்லவா. ஆடுவதும் செதுக்குவதும் நம்முடைய? கடமையல்லவா அடுத்த தலைமுறைக்கு அதைக்கொண்டு போய் சேர்ப்பது நமது கடமையல்லவா. இதில் அரசி என்ன, அரசர் என்ன?''

''உங்களுக்குப் புரியவில்லை. இந்த இரண்டாம் சாந்தாரத்தில் அத்தனை மக்களும் உள்ளே வருவார்கள். இவர் செதுக்கி முடித்து வைத்திருப்பார். என்ன என்று கேட்பார்கள்.''

மூவேந்த வேளார் ஒரு முணுமுணுப்பாகவே பேசினார்.

''சொல்லுங்கள்''

சக்ரவர்த்தி அதட்டினார்.

''இதெல்லாம் நாட்டியத்தின் காரணங்கள் என்று சொல்வார்கள். அப்படியா என்று இந்தக் கையெட்டும் தூரத்திலுள்ள இந்தச் சிற்பி செய்த சிலைகளைத் தடவித்தடவி பார்ப்பார்கள். யார் மாதிரியாக நின்றது என்று கேட்பார்கள். பஞ்சவன் மாதேவி என்றதும் கூடுதலாகத் தடவுவார்கள்.''

மூவேந்த வேளார் சொன்னதும் பலருக்கு முகம் மாறிப் போயிற்று. கண்டராதித்தப் பெருந்தச்சர் சற்று நகர்ந்து முகத்தைத் திருப்பி சாளரத்தின் வழியே தொலைவே பார்க்கலானார்.

அரசருக்கு உள்ளே லேசாகத் தடுமாறியது.

''யாரும் இதைப் பார்க்கக்கூடாது என்று தடை விதித்தோமானால், இந்தக் கரணங்கள் இருக்க வேண்டிய அவசியமே இல்லையே. யாரும் பார்க்காமல் இருப்பதற்காகவா ஒரு சிற்பம்

செய்கிறோம்'' என்று மூவேந்த வேளார் தொடர்ந்து பேசினார். சகலருக்கும் மேலும் சங்கடம் நிலவியது.

''எதுவும் எனக்கு முக்கியம் என்று படவில்லை. அவன் தடவப் போவது பஞ்சவன்மாதேவியை அல்ல. ஒரு கற்பாறையை. ஒரு பொம்மையை... இராஜராஜனைப் போல ஓவியம் வரைந் திருக்கிறார்கள். இன்றில்லையெனில் நாளை, நாளை இல்லை யெனில் இன்னொரு நாள் அழுக்காக இருக்கின்றதென்று அதன் மீது தண்ணீரை சுளீர் சுளீர் என்று அடிப்பார்கள். துடப்பத்தால் துடைப்பார்கள். சிறிது ஒட்டடை அடிக்கிறேன் என்பார்கள். மேலே வெள்ளையைப் பூசிவிட்டு வேறு ஓவியமும் வரைவார்கள். இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருக்க முடியுமா. காலப் போக்கில் இராஜராஜன் என்பதும், பஞ்சவன்மாதேவியும் மறைந்து இந்த பரதநாட்டியத்தின் கரணங்கள்தான் முக்கியம் என்பது நின்றுவிடும். ஏன் நம்மை முன்னிலைப் படுத்திக்கொள்ள வேண்டும். என்ன சொல்கிறாய் பஞ்சவன்மாதேவி.'' என்று திரும்ப தன் மனைவியைப் பார்த்துக் கேட்டார்.

''நீங்கள் என்ன உத்தரவிட்டாலும் செய்யச் சித்தமாக இருக் கிறேன். கோயில் முக்கியம். கோயில் பணி முக்கியம். பரதசாஸ் திரம் முக்கியம். நான் முக்கியமே அல்ல''

''அற்புதம். கண்டராதித்தப் பெருந்தச்சரே, என் மனைவி பஞ்சவன்மாதேவி உங்களுக்கு பரதநாட்டியத்தின் கரணங்களைத் தெளிவாக விளக்கி ஓவியம் வரைவதற்கு அசையாது மாதிரியாக நிற்பார்கள். சிற்பம் செதுக்கும்போது வந்து நின்று கரணத்தை உங்களுக்குக் காட்டி உதவி செய்வார்கள். எனவே கவலைப்பட வேண்டாம். விரைவாக ஓவியங்களும் சிற்பங்களும் தயாராகட் டும்.''

சக்ரவர்த்தி உத்தரவிட கண்டராதித்தப் பெருந்தச்சர் திரும்பினார்.

''மன்னர் மன்னா. இறைவன் கருணைமிக்கவன். எல்லோ ருள்ளும் உள்ளவன். திடீரென்று ஒரு நல்ல யோசனை தோன்றி யது. பஞ்சவன்மாதேவியைச் சிலையாக வடித்தால் தொட வேண்டிய ஆவல் சிலருக்கு ஏற்படும். தவிர்க்க முடியாது.

சீருடையாள் என்ற பெண்ணை வேல் கம்பால் அடிக்க முடிந்த மறவர்கள் எதுவும் செய்வார்கள். பெண்களை ஆண்கள் இழிவு படுத்துதல் என்பது உலகத்தில் எல்லாப் பகுதிகளிலும் தலைமுறை தலைமுறையாக உள்ள விஷயம். எனவே பஞ்சவன்மாதேவி



அவர்கள் எனக்கு மாதிரியாக இருந்து செய்து காண்பித்தால் நான் ஓவியம் வரைந்து கொள்வேன்.

ஆனால், சிற்பம் அடிக்கிற பொழுது அந்த சிற்பத்தை நான் சிவன் உருவாகச் செய்துவிடுவேன். நான்கு கைகளும், சடைமுடியும் பூணூலும், நாகப்படமும் உள்ள புலித்தோலாடை அணிந்த, கழல் அணிந்த சிவன் ரூபமாகச் செய்து விடுவேன்.

பஞ்சவன்மாதேவி கரணம் இருக்கும். ஆனால் சிற்பம் சிவச் சிற்பமாக இருக்கும். எனவே தொட்டு தடவினாலும், கொஞ்சி முத்தமிட்டாலும் அது பஞ்சவன்மாதேவியிடம் போய்ச் சேராது. சிவனைக் குறித்துதான் இருக்கும். ஆனால், சிவனை அப்படிச் செய்யவும் மாட்டார்கள்.''

கண்டராதித்தர் விழிவிரியச் சொன்னதும் இராஜராஜர் சரட்டென்று முன்னேறி அவரைத் தழுவிக் கொண்டார்.

''ஹா... இந்தக் கோயிலை நானா கட்டுகிறேன். இந்தக் கோயில் என்னாலா எழும்புகிறது. இந்தக் கோயில் பிரம்மராயரால், பஞ்சவன்மாதேவியால், இராஜேந்திரனாலுமா தூக்கி நிறுத்தப் படுகிறது. இல்லை. உன்னைப்போல அற்புதக் கலைஞர்களால் செய்யப்படுகிறது. அற்புதமான விஷயம் இது. மிக நல்ல யோசனை... மிக நல்ல யோசனை..'' வாய்விட்டுப் பாராட்டினார்.

மூவேந்த வேளார் முன்னேறி கண்டராதித்தர் தலையில் கை வைத்தார்.

''என் வயதையும், அனுபவத்தையும் வைத்துச் சொல்கிறேன். நீயும், உன் குடும்பமும் நீடூழி வாழவேண்டும். இங்கு ஒரு பிரச்சினை என்று நான் சொன்னதை எவ்வளவு எளிதாகத் தீர்த்து வைத்தாய். உம்முடைய மனம் நல் மனம். பெண்களை மதிக்கிற மனம். உன்னை மதிக்கின்ற பெண்கள் உன் குடும்பத்தில் ஆண், பெண் உறவு அற்புதமாக இருக்கும். அறிவும் பலமுமிக்க நல்ல புதல்வர்களும், புதல்விகளும் உனக்குப் பிறப்பார்கள். உன் தலைமுறை அமோகமாக வாழும்.'' என்று வாயார வாழ்த்தினார்.

பலரும் கண்டராதித்தரைத் தொட்டுத் தடவி பாராட் டினார்கள். தீபம் பிடித்து நின்ற மறவன் மண்டியிட்டு அவரின் கைகளை முத்தமிட்டான்.

''பஞ்சவன்மாதேவி ஏதும் பேசாதிருக்கிறாயே.''

''வாயடைத்துவிட்டேனய்யா. கலைஞர்கள் ஞானிகளைப் போல என்று நான் கேள்விப் பட்டிருக்கிறேன். இதுவொரு ஞானி

யின் மனது. அதனால்தான் பிரச்சினையின் மையத்தைத் தொட்டு வெகு எளிதாகத் தீர்ந்துவிட்டது. கண்டராதித்தப் பெருந்தச்சருக்கு என் பணிவான வணக்கங்கள். இந்த நகையை உம்முடைய மனைவி அல்லது மகள் கழுத்தில் போட்டு ஆனந்தப்படுங்கள்.''

தன் கழுத்திலிருந்த கனமான காரை என்ற நகையைக் கழற்றி கண்டராதித்தர் கையில் வைக்க, கண்டராதித்தர் அதை வாங்கி கண்ணில் ஒற்றிக் கொண்டார்.

''அப்படியானால் எப்போது இந்த வேலையை ஆரம்பிக் கிறீர்கள்.'' என்று இராஜராஜர் பரபரத்தார்.

''நாளையிலிருந்தே ஆரம்பித்து விடலாம்.''

பஞ்சவன்மாதேவியார் எதிரொலித்தார்.

''ஏன் நாளையிலிருந்து.. இப்பொழுதே. இப்பொழுதே ஆரம் பித்து விடுங்கள். ஓவியம் அல்லது சிற்பம் தொடங்கட்டும். இங் கேயே தொடங்கட்டும்.'' என்று சொல்லி அந்த சாந்தாரத்திலிருந்து வெளியே வந்தார்.

பஞ்சவன்மாதேவியும், கண்டராதித்தரும் தீப்பந்தம் பிடிப்ப வரும், கண்டராதித்தரின் உதவி ஆட்களும் ஒன்று கூடினார்கள். கண்டராதித்தப் பெருந்தச்சர் வெள்ளைத் துணி சட்டமிடப் பட்டதை எடுத்து இடுப்பில் வைத்துக்கொண்டு கண்மூடி தியானித்தார்.

எது முதல் கரணம் என்று சொல்ல, அஞ்சலி என்று சிவ பெருமான் பாதத்தில் பூக்கள் சொரிவது போல ஒரு அபிநயத்தை பஞ்சவன்மாதேவி செய்து காட்டினார்.

பரபரவென்று கரிக்கோட்டில் பஞ்சவன் மாதேவியின் இடுப்பும், கைகளும், காலும் வரைந்து முகத்தை சடைமுடியுள்ள சிவன் முகமாக்கி நான்கு கைகளை வைத்து அஞ்சலியை எத்தனை விதமாகச் செய்யலாம் என்று விவாதித்து ஒரு கை உயரத்தூக்கிக் கொண்டிருப்பதுபோலவும், இன்னொரு கைகள் பாதத்தில் பூச்சொரிவது போலவும் செய்ய சிவன் நடனமாகவே அந்தச் சித்திரம் இருந்தது.

பஞ்சவன்மாதேவி சந்தோஷப்பட்டாள்.

அந்த சுற்றில் கல்லைப் பொடித்துச் சிற்பம் செய்கின்ற ஜில்... ஜில்லென்ற சத்தம் சாளரத்தின் வழியே, கோயில் மதில் சுவரின் வழியே மோதியது.



ஜனங்கள் வியப்போடு அந்த இடத்தை அண்ணாந்து பார்த்தார்கள். எந்தப் பிசிறும் இல்லாமல் மடமடவென்று பல கரணங்கள் சித்திரத்தில் பதிவாயின. தெளிவான முகபாவத்திற் காக பஞ்சவன்மாதேவி சிற்பம் செதுக்கப்படுகிற போதும் போய் உதவி புரிந்து விட்டு வந்தாள்.

நித்தவினோதப் பெருந்தச்சரால் ஏற்பட்ட ஒரு சிறு இழுக்கு கண்டராதித்தப் பெருந்தச்சரால் நேராகி விட்டதென்று சிற்பிகள் மனமகிழ்ந்தார்கள்.

நம்முடைய இனத்தைச் சேர்ந்த ஒரு தளிச்சேரிப் பெண், அரசருக்கு அனுக்கியமானது மட்டுமல்லாமல், அரசாங்கத்தில் நல்ல நிலையை அடைந்தது மட்டுமல்லாமல், தளிச்சேரி பெண்டிர் செய்ய வேண்டிய முக்கியமான கடமைகளை, பரதநாட்டிய சாஸ்திரத்தில் உள்ள நூற்றியெட்டு கரணங்களை கோயிலில் பதிவு செய்து கொண்டிருக்கிறாள் என்று தெரியவர, தளிச்சேரி பெண்டுகள் அகமகிழ்ந்தார்கள். பெருமையாய் ஊர் முழுவதும் இந்த விஷயத்தைப் பேசினார்கள்.

முதல் சாந்தாரம் முழுவதும் ஓவியங்கள். இரண்டாம் சாந்தாரம் முழுவதும் நூற்றியெட்டு கரணங்கள்.

நாற்பது முடிந்துவிட்டதாம். அறுபது சிற்பம் முடிந்துவிட்டதாம். எழுபத்தைந்து சிற்பம் முடிந்து விட்டதாம் என்று தினம் தினம் விதவிதமாய் பேசிக்கொண்டிருக்கிறார்.

இந்தக் கரணத்திற்கு என்ன அர்த்தம் தெரியுமா? இந்தக் கரணத்திற்கு என்ன பெயர் தெரியுமா? என்று விதம்விதமாய் ஆடியும் காட்டினார்கள்.

''கோயில் பணியில் உன்னை நான் ஈடுபடுத்த வில்லை என்ற நினைப்பு உனக்கு இருந்ததல்லவா? இப்பொழுது பார் இறைவனே உன்னை உபயோகப் படுத்திக் கொண்டிருக்கிறான்.'' என்று சக்ரவர்த்தி உடையார் இராஜராஜர் சொல்ல, வெட்கத்தாலும், சந்தோஷத்தாலும் பஞ்சவன் மாதேவி பூரித்துப் போனாள். ஆனால் உள்ளுக்குள் ஒரு கவலை இருந்தது.

காலை உயரத்தூக்கி ஆடுகிற ஒரு கரணம் உண்டு. சர்பிதம் என்கிற எண்பத்தோராவது கரணத்திற்குப் பிறகு அந்த கால்தூக்கி ஆடுகின்ற கரணம் வரும். அதை இந்தச் சிற்பியின் எதிரே எப்படிச் செய்வது. என் சிவனே, இராஜராஜரின் மனைவியான பஞ்சவன் மாதேவி, ஒரு சிற்பியின் எதிரே இடதுகாலை ஊன்றி, வலதுகாலை நன்றாக உயரத்தூக்கி அந்த முழங்கால் காதில் படும்படி நிறுத்தி

வைக்க வேண்டுமே. அப்படி இருக்கலாமா? அப்படி இருப்பதை ஒரு சிற்பி பார்க்கலாமா?

கொஞ்சம் வேதனைப்பட்டாள்.

அந்த பரதநாட்டிய கரணத்திற்கு தண்டபாதம் என்று பெயர். அது எண்பத்தியிரண்டாவது கரணம்.

'தித்தோம்... தத்தோம்... தகதகதத்தோம்...'

இரவு, பல்வேறு தீப்பந்த வெளிச்சத்திற்கு நடுவே உயர்த்திக் கட்டிய மேடையில் பெண்கள் துள்ளிக் குதித்து ஆடத் துவங்கினார்கள்.

சீருடையாளும், ராஜராஜியும் அருகேயிருந்து அந்த நடனத்தை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்கள். இருட்டில் அவருக்குப் பின்னே ஒரு பெண்மணி உட்கார்ந்து கொண்டார். திரும்பி அவரைப் பார்க்க முயற்சிக்காமல் இரண்டு பேரும் நடனத்தின் மீதே கண் வைத்திருந்தார்கள்.

''அடியே.. குண்டு பூசிணி தாளம் தப்புகிறாய்.''

ராஜராஜி பல் கடித்தாள்.

''ஆமாம். மற்றவரெல்லாம் மிகச்சிறப்பான தாளத்தோடு ஆடுகிறார்கள் போலும்.''

பின்னாலிருந்த பெண்மணி சொல்ல, ''மற்றவர்கள் பரவாயில்லை. இந்தக் குண்டுப்பூசணி தான் தப்பு செய்கிறது.''

''வெறும் குலுக்கல் கூத்துதானே. நாள் முழுவதும் வேலை செய்தவர்கள். இரவு களைப்பாறுவதற்கு முன்பு இப்படி நடனம் பார்ப்பதற்காக உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள். இனி, இந்தக் கூத்து ஆடவிடாமல் ஏதேனும் நாட்டிய நாடகம் செய்யலாம்.''

பின்னால் இருப்பவள் பேச, ''ஆமாம். செய்து கொண்டிருக்கிறோம்.''

''நீங்களும் வெகுநாட்களாகச் செய்கிறீர்கள். எப்பொழுது வெளிவரும் என்று தெரியவில்லை.''

''வந்துவிடும்.. வந்துவிடும்..'' என்று சொல்லி விட்டு சட்டென்று அந்தக் குரல், எங்கோ கேட்டது என்று ஞாபகப்படுத்திக் கொண்டு சீருடையாள் திரும்பிப் பார்த்தாள்.

பெரிய சால்வையைப் போர்த்திக் கொண்டு பஞ்சவன்மாதேவி அங்கிருப்பது தெரிந்தது. சந்தோஷமானாள். சட்டென்று எழ



முயற்சிக்க சீருடையாளை பஞ்சவன்மாதேவி அழுத்தி அமரச் செய்தாள். எழுந்து வணங்கி பரபரப்புக்கு ஆளானதும், ''நான் உங்களைப் பார்க்க வந்தேன். சும்மா இருங்களடி.'' அதட்டினார்.

''சொல்லியிருந்தால் நாங்கள் வந்திருப்போமே. உங்கள் அரண்மனையில் நாட்டிய நாடகம் ஆடியிருப்போமே.''

''அதைக் கேட்கத்தானடி வந்தேன்.''

''என்ன.. என்ன கேட்க வந்தீர்கள்.''

''இராஜராஜேஸ்வரர் நாடகம் எவ்வளவு தொலைவில் இருக்கிறது.''

''முடிந்துவிட்டதம்மா. நாடகம் எழுதி முடித்துவிட்டேன். பயிற்சிதான் போதவில்லை. இந்த மரமண்டைகளில் ஏற்றி ஒரு வழிக்குக் கொண்டு வருவதற்குள் எனக்கு உயிர் போய் உயிர் வருகிறது.''

''சரி. சுமாராகவேணும் ஆடுகிறார்களா, ஒருநாள் வந்து அரண்மனையில் ஆடச்சொல்லேன்.''

''எதற்கம்மா... தெளிவாக நன்றாகப் பழகிய பின்னர்...''

''குற்றம் குறைகள் இருந்தால் சுட்டிக் காட்டுவேன் அல்லவா.''

பஞ்சவன்மாதேவி சொல்ல, சீருடையாளும், ராஜராஜியும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்.

''அதுவும் நல்லதுதான். இதை உங்கள் அரண்மனையில் செய்வதைவிட, எங்கள் இடத்திற்கு வந்துவிட்டால் நன்றாக இருக்குமே.''

''அரண்மனைக்கு வந்தால் உலகமாதேவியாரும், வானவன் மாதேவியும் பார்ப்பார்கள்.''

''அதுதான் வேண்டாம் என்கிறேன்.''

''அவர்கள் பார்க்கும்போது தெளிவாக இருந்தால் நல்லது. நீங்கள் பார்ப்பதாக இருந்தால் முன்பின் குறையாக இருந்தாலும் பரவாயில்லை என்று வைத்துக் கொள்வோம்.''

''நான் மட்டுமே பார்த்துவிட்டு வந்தேன் என்று சொன்னால் அவர்கள் கோபப்படுவார்களே.''

''பார்த்து வந்ததாகச் சொல்லாதீர்கள்.''

''அதெப்படி சொல்லாமல் இருக்க முடியும். பெரிய குதியலோடு சொல்லத்தானே முதலில் பார்க்க ஆசைப்படுகிறேன்.''

பஞ்சவன்மாதேவி ஒரு குலுக்கலாகச் சொல்ல, அவர்கள் நெருங்கி உட்கார்ந்து கொண்டார்கள். பஞ்சவன்மாதேவியின் கைகளைப் பற்றிக் கொண்டார்கள்.

''எங்களுடைய நாட்டியம் பார்ப்பதில் அவ்வளவு ஆசையா.''

''ஆமாம்.. அது என் கணவரைப்பற்றிய நாட்டிய மல்லவா. ஒரு மாமன்னரைப்பற்றிய நாட்டிய மல்லவா. ஒரு வரலாற்றையல்லவா செய்யப் போகிறீர்கள். அதுபற்றி எனக்கு அக்கறை இருக்காதா. நிச்சயம் நாளை காலை வந்து விடுவேன்.''

''ஆனால் தயவுசெய்து நீங்கள் மட்டும் வாருங்கள்.''

''ஏய்.. ராஜராஜி இவர்களைப்பற்றியும் அதில் ஒரு செய்தி வருகிறது. அது இவர்களுக்குப் பிடிக்குமோ, பிடிக்காதோ.''

''என்னைப்பற்றியா.. என்ன செய்தி.''

''நாட்டியத்தை நேரே வந்து பார்த்துக் கொள்ளுங்களேன்.''

''இப்பொழுதே கிளம்பிப் போய்விடலாமா. இப்பொழுதே நாட்டியம் துவங்கி விடுங்களேன்.''

''இங்கே இந்தக்கூத்துதான் மிக முக்கியம். இத்தனை பேரும் வாய் பிளந்து வேடிக்கை பார்க்க இவர்கள் இப்பொழுது ஆடினால்தான் நல்லது.''

''நாளை காலையில் தயவு செய்து நீங்கள் மட்டும் வந்து விடுங்கள். பட்டமகிஷியாரோ, வானவன் மாதேவியாரோ, இலாடமாதேவியாரோ வந்தால் எங்களுக்கு அது நல்லதாகாது.''

''ஏன்.''

''இந்த இராஜராஜேஸ்வரர் நாட்டியத்தில் உங்களைப்பற்றி சிறப்பித்திருக்கிறோம்.''

''என்னடி புதிர் போடுகிறீர்கள். என்னவென்று சொல்லு கிறீர்கள்.''

''நேரில் பார்த்துக் கொள்ளுங்கள்.''

சீருடையாளும், ராஜராஜியும் எழுந்திருக்க முற்பட்டார்கள்.

''சொல்லிவிட்டுப் போங்களடி.''

பஞ்சவன்மாதேவி அதட்டினார்கள்.

சீருடையாள் அருகே வந்து பஞ்சவன் மாதேவியின் முழங் கையைப் பற்றிக் கொண்டாள்.



''அக்கா நீங்கள் இராஜேந்திரசோழருக்காக உங்கள் கருப் பையை கலைத்துக் கொண்டீர்களல்லவா. மூடிக் கொண்டீர் களல்லவா? அதைத்தான் இந்த நாட்டியத்தில் ஒரு சிறிய பகுதி யாகவும் செய்திருக்கிறோம்.''

''என்ன... தேவையில்லாமல் அரசரைப்பற்றிய நாட்டியத்தில் என்னைப்பற்றி எதற்கு.''

''சும்மாயிருங்கள். எப்படிப்பட்ட நாடகம் என்பதைத் தீர்மானிக்க வேண்டியது நாங்கள். எதைச் சொல்ல வேண்டும் என்று தீர்மானிப்பதும் நாங்கள்.''

''இதையெல்லாம் சொல்ல வேண்டிய அவசியமில்லை. இதை யெல்லாம் மக்கள் கேட்க வேண்டிய அவசியமில்லை.''

''அவசியமென்று எங்களுக்குத் தோன்றியது.''

''அடியே... அநியாயம் செய்யாதீர்களடி.''

''இதற்குத்தான் இதை நாங்கள் ரகசியமாக வைத்திருந்தோம். நீ ஏன் வாயைத் திறந்து பேசினாய்.''

சீருடையாளை ராஜராஜி கோபித்துக் கொண்டாள். சீருடை யாள் கண் கலங்கினாள். சீருடையாள் கண் கலங்குவது பஞ்சவன் மாதேவிக்கு பொறுக்கவில்லை. ராஜராஜியை இழுத்து அமர வைத்தாள்.

''நான் கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேனடி. இது வேண்டாம் பட்டமகிஷிக்கும், வானவன் மாதேவிக்கும் இது கோபத்தையும் கொடுக்கக் கூடும்.''

''அதுபற்றி எனக்குக் கவலை இல்லை. என்ன சொல்வார்கள். இராஜராஜேஸ்வரர் நாடகத்தை நிறுத்திவிடு என்பார்களா. அதுபற்றி எனக்கு அக்கறையில்லை.''

''அச்சான்மயமாகப் பேசாதே. இந்த நாட்டிய நாடகம் சந்திர சூரியர் உள்ளவரை இருக்கவேண்டும். சக்ரவர்த்தியின் புகழை உலகமெல்லாம் இந்த நாட்டிய நாடகம் பரப்ப வேண்டும்.''

''செய்யும். நிச்சயம் செய்யும். அவ்வளவு அழகாக வந்திருக்கிறது. நாளை காலை வாருங்கள். இப்பொழுது விடை கொடுங்கள்.''

''ராஜராஜி என்னைப்பற்றிச் சொல்வதில் எனக்கு ஒன்றும் ஆட்சேபனை இல்லை. பட்டமகிஷி பற்றியும், வானவன்மாதேவி பற்றியும், மற்ற மனைவிகள் பற்றியும் அமைதியாகச் சொல்லு. எதையும் விட்டுவிடாதே.''

பஞ்சவன்மாதேவி இரைஞ்சுதல் போலக் கேட்டாள்:

"அப்பா... என்ன மனசு இது. எந்த அரசிக்கும் இல்லாத மனது. என்னைப்பற்றிச் சொல்லியிருக்கிறாயா. இந்தாபிடி என்று ஒரு மூட்டை பொன் கழஞ்சு அனுப்பாமல், மற்றவரையும் சொல் என்கிற மனசு உங்களுக்கு மட்டும்தான் வரும். இதுதான் உங்கள் சிறப்பு."

ராஜராஜி மண்டியிட்டு பஞ்சவன்மாதேவியை வணங்கினாள். சீருடையாளைக் கைப்பிடியாய் இழுத்துக்கொண்டு இருளில் மறைந்தாள்.

அந்த அந்தணன் இரண்டு கோல் தொலைவில் அமர்ந்து பஞ்சவன்மாதேவியைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

அடேயப்பா... திருவாரூரில் இந்தப் பெண்ணைப் பார்த்திருக்கிறோமே. சுந்தரசோழர் ஆட்சி செய்த போது இந்தப் பெண்மணி நடனமாடினாளே. இப்பொழுது முதிர்கன்னியாகி விட்டாள். ஆயினும் முகத்தில் களை குறையவில்லை. இடுப்பு வலுவு குறையவில்லை. காமக்கிழத்தியாகவே இருப்பதற்குப் பிறந்திருக்கிறாள் போலும், வியந்து கொண்டான்.

பஞ்சவன்மாதேவி சுற்றுமுற்றும் பார்த்து மெல்ல எழுந்து இருளில் மறைந்தாள்.

"இது ஆரியக்கூத்தா அல்லது தமிழ்க்கூத்தா." என்று பஞ்சவன் மாதேவி விசாரித்தாள்.

"இரண்டும் கலந்துதான் செய்திருக்கிறோம் அக்கா."

ராஜராஜி பதில் சொன்னாள்.

கூத்து துவங்கியது.

மூவேந்தர்களில் ஒருவரான சோழர் குடியில் தோன்றிய சுந்தரசோழர் பெருந்தகைக்கும், சங்ககாலத்திலிருந்தே தமிழகத்தை அரசாண்ட திருமுடிக்காரி போன்ற பெரும் அரசர்கள் பிறந்த மலையமான் குடியிலிருந்து வந்த வானவன் மாதேவியின் வம்சமும் ஒன்று சேர்ந்து, இந்த இரண்டு வம்சங்களின் கலப்பாகப் பிறந்தவர் அருண்மொழி. ஐப்பசி மாதம் சதய நட்சத்திரத்தில் மிகச்சிறப்பாக அருண்மொழி பிறந்தார்.

செந்திரு மடந்தை மன் சீராசராசன்
இந்திர சமானன் இராச சர்வஞ்ஞனெனும்
புலியைப் பயந்த பொன்மான்.



என்று வானவன்மாதேவி பற்றி பாட்டு துவங்கியது. சுந்தர சோழரை உயர்த்திப் பேசியது.

அழகு பொருந்திய தேவமாதர்களும் கண்டு ஆசைப்படக்கூடிய வனப்பு மிகுந்த சுந்தரசோழருக்கு அதைவிட வனப்பாக அருண்மொழி தோன்றினான்.

அழகு என்கிற அணங்கு அருண்மொழியின் அங்கங்களை அணைந்தாள். அருண்மொழி திருமகளை தன் இரண்டு கைகளிலும் தாங்கினான். அந்தக் கரங்களில் சங்கும், சக்கரமும் ரேகை உருவில் திகழ்ந்தன: இவன் திருமாலின் இன்னொரு வடிவமாகக் காட்சியளித்தான்.

அஜனி புஜயுகனே பிராஸதீர்கேன தீபதச்ரியம்
அகில சரீர ஆஸ்லேஷினீம் ஆததான:
அதிகமரத ரேகா ரூபினௌ சங்க சக்ரௌ
ததத் அருண்மொழி வர்மா தஸ்ய சூனு: முராரி:

பஞ்சவன்மாதேவி மெய்சிலித்தாள்.

இராஜராஜன் பிறந்த போது இரண்டு பக்கங்களிலும் பெரிய தூய்மையான ஒளி, ஒரு பெரும் மண்டலமாகத் தோன்றியது.

ஒப்பற்ற அந்நிலவொளியைக் கண்டதும் மக்கள் கண்களெல்லாம் மலர்ந்தன. குழந்தையின் முகம் அபூர்வமான சந்திரன் போல இருந்தது.

வழக்கமாய் சந்திரனுக்கு இரண்டு பக்கங்கள் உண்டு. ஒன்று இருண்ட பக்கம். இன்னொன்று ஒளிவீசும் பக்கம். ஆனால், அருண்மொழி என்ற நிலவு இரண்டு பக்கமும் சிறந்த ஒளியோடு விளங்கியது. அதாவது, தாய் வழியாகவும், தந்தை வழியாகவும் ஒளிமிகுந்த குலமாக அவன் பிறந்த குலம் இருந்தது. எனவே, இதை விண்ணிலே தோன்றும் நிலவைக் காட்டிலும், இந்த அருண்மொழி என்ற குழந்தையின் முகம் இன்னும் சிறப்பான நிலவாக இருக்கிறது. அந்தச் சிறப்பான நிலவு ஒளி உதித்ததும் அதைச் சுற்றிய ஒளி மண்டலம் சோழப் பேரரசு என்ற பெரிய மண்டலமாகத் திகழ்ந்தது. எனவே அந்த நிலவுக்கு, அதாவது அருண்மொழிக்கு ஈடேயில்லை என்று இன்னொரு பாட்டு சொல்லியது.

தமிழிலே கவிதை நடையில் இதைச் சொல்லி விட்டுப் பின்னால் ஒருவன் குரல் கொடுத்துப் பாட அதற்கு ஏற்றாற்போல் பல பெண்கள் அபிநயம் பிடித்தார்கள்.

'உபய பஷ விசுத்தம் அஹோ
ஓஜஸீ பிரதித மண்டல தாரிணி சர்வதா
தனுப்ருதாம் நயநாநி சிராய தத்வபு:
அபூர்வ ஹிமத்யுதி ரேமீரே'

மாபெரும் சக்ரவர்த்தி தோன்றிவிட்டார். இனி ஆதிசேஷ னாகிய நம் கணவரின் பாரத்தை இந்த அருண்மொழி தாங்குவான் என்று நாகப்பெண்மணி களெல்லாம், ஆதிசேஷனின் மனைவிய ரெல்லாம் மகிழ்ச்சியில் நாட்டியமாடினார்கள். அங்கே குழல் ஒலித்தது.

பெண்கள் நாகமாக வளைந்து, நெளிந்து ஆடினார்கள். ஆதி சேஷனின் மனைவியாக இரண்டு பேர் முன்னே வந்து அருண் மொழி என்ற குழந்தையை வணங்கினார்கள் என்று, தமிழிலே சொல்லிவிட்டு, பிறகு வடமொழியிலும் உரத்த குரலில் பாட்டாகப் பாடினார்கள்.

பர்த்ரு பூபரம் அஸௌ விணேஷ்யதி
பராயஸ: ந இதி நாகயோஷித்:
குர்வதே ஸ்ம பரிநர்த்தனம் ததா
ஜன்ம லப்தவதி சக்ரவர்த்தினி.

பிறக்கும்போதே சக்ரவர்த்திக்குரிய லட்சணங்களோடு அருண் மொழி பிறந்தான் என்று அபிநயங்களும் பாடல்களும் சொல்லின.

அருண்மொழி குழந்தையாக இருக்கும்போதே சுந்தரசோழர் நோய்வாய்ப்பட்டு இறந்து போக, அருண்மொழியின் தாயார் வானவன்மாதேவியார் சுந்தரசோழரோடு உடன்கட்டை ஏறினார்.

அது த்தரூபமாக நடித்துக் காட்டப்பட்டது. கழுத்தில் அரளிப்பூ மாலையுடன் ஒரு பெண்மணிசிதைக்கு அருகே நிற்பதும், கரம் குவிப்பதும் திரும்பி பாலகனாக நிற்கின்ற அருண்மொழியை அருகே அழைத்து, தலையைத்தடவி, உச்சி முகர்ந்து, தள்ளியிரு, நெருப்பு மேலே பட்டுவிடும் அதனால் இன்னும் விலகிப் போ என்று சொல்லி, அவன் விலகிப் போனவுடன், கடைசி முறையாய் மகனைப் பார்த்து விட்டு சட்டென்று தீயில் குதித்தாள்.

பஞ்சவன்மாதேவி முகத்தைப் பொத்திக் கொண்டு அழுதாள். அங்கு பலரும் அழுதார்கள். திடீரென்று காட்சி மாறியது.

உத்தமசோழர் ஆட்சி செய்ய விரும்பியதும் அருண்மொழி சரி என்று ஒத்துக் கொண்டதும் இளவரசராக இருக்க சம்மதித்தத்தும், ஆனால், மக்கள் அவரையே அரசராக இருக்க வேண்டுமென்று உரத்த குரலில் முழங்கியதும், அவர்களை அருண்மொழி சமா தானப்படுத்தியும், வல்லவரையர் வந்தியத் தேவரோடு நட்பாக இருந்ததும், குந்தைவையார் வல்லவரையரை மணந்து கொண்ட தும், இளவரசராக இருந்தபோது உலகமாதேவி என்கிற தந்திசக்தி விடங்கியாரை அரசர் கரம் பிடித்ததும், பிறகு வானதியாரை மணந்ததும் சொல்லப்பட்டது.



தளிச்சேரி பெண்டிரான பழுவேட்டரையர் பரம்பரையில் வந்த பஞ்சவன்மாதேவியை சிதம்பரத்தில் அருண்மொழி சந்தித்ததும் காதல் கொண்டதும், சிதம்பரத்திலுள்ள தேவாரப் பாடல்களை சிதம்பரம் தீக்ஷிதர்களிடமிருந்து மீட்டதும், நம்பியாண்டார் நம்பியின் மூலமாக அவை சரியாகத் தொகுக்கப்பட்டதும், அதற்கு பஞ்சவன்மாதேவி உதவி செய்ததும், பஞ்சவன்மாதேவி வருகை யால் மெல்ல மற்றவர் முகம் வாடியதும், அவர்கள் வாடக்கூடாது என்பதால் பஞ்சவன்மாதேவி மருந்து அரைத்துக் குடித்து, இங்கு இளவரசர் இராஜேந்திரர் மட்டுமே என் குழந்தை. வேறு குழந்தைகள் வேண்டாமென்று சூளுரைத்ததும், அதற்காக வைத்தியரிடம் மருந்து எடுத்துக் கொண்டதும், மற்ற மனைவியர் பஞ்சவன்மாதேவியரிடம் வந்து வருத்தப்பட்டதும், ஆறுதல் சொன்னதும், நாட்டியமாய் சொல்லப்பட, இது வேண்டாம் இது வேண்டாம் என்று பஞ்சவன்மாதேவி தடுத்தார்.

ஒரு கலைஞனின் உரிமையில் தலையிட எவருக்கும் உரிமை யில்லை. ஏன் சக்ரவர்த்தி உடையார் இராஜராஜருக்கும் உரிமை யில்லை.

ஒருவேளை சக்ரவர்த்தி உடையார், ஸ்ரீ இராஜராஜத்தேவர் இதை வேண்டாம் என்று சொன்னால் நாங்கள் கேட்போமே தவிர, நீங்கள் சொல்லி நாங்கள் கேட்கமாட்டோம். ராஜராஜி உரத்து மறுத்தாள்.

போர்களில் ஈடுபட்டதும், சோழதேசம் விரிவானதும், மிக உயரமான கற்றளி கட்ட வேண்டுமென்று நாகை விகாரத்து புத்தர் சிலையைப் பார்த்துவிட்டு இராஜராஜர் உறுதி பூண்டதும், அதற்கு பஞ்சவன்மாதேவி அருகேயிருந்து சாட்சி சொன்னதும், குந்தவை யாரிடம் கலந்து பேசியதும் நாட்டியக் காட்சிகளாகச் சொல்லப் பட்டன.

தஞ்சைப் பெருவுடையார் கோயில் உயர்ந்த விமானம் ஒன்று வைக்கப்பட்டு, அதற்கு முன்பு இராஜராஜரும், உலகமாதேவியும், வானதியும், பஞ்சவன்மாதேவியும் கைகூப்பி நிற்பதுபோல

நாட்டிய நாடகம் தொடர்ந்து நடந்து கொண்டிருந்தது. பஞ்சவன் மாதேவி எழுந்தாள்.

"போதுமடி. போதும். இந்த நாயையும் நீங்கள் ஏன் கௌரவித்தீர்கள்." என்று கண் கலங்கினார்கள். மெல்ல ராஜராஜியைக் கட்டிக் கொண்டாள். சீருடையாளை முத்தமிட்டாள்.

"ஒன்று தெரிகிறதடி. என் வாழ்க்கை அர்த்தமில்லாத வாழ்க்கையோ என்று சில சமயம் மயங்கியிருக்கிறேன். இந்த நாட்டிய நாடகம் பார்த்தபோது, இல்லை நான் வாழ்ந்ததில் ஏதோவொரு அர்த்தமிருக்கிறது. ஒரு அற்புதமான மனிதருக்கு என்ற யோக்கியதையுமில்லாத நான், பட்டமகிஷி எந்த அந்தஸ்தோ, மனைவி என்ற அந்தஸ்தோ இல்லாமல், வெறும் அனுக்கி, கூத்தி என்று வாழ்ந்த நான் இவ்வளவு முக்கியமான நிலையை அடைந்திருக்கிறேன் என்றால், அது காரணமில்லாமல் போகாது. என் கடமையை நான் செவ்வனே செய்திருக்கிறேனடி. என் மன்னனை என் தோளில் இளைப்பாற்றியிருக்கிறேன்.

இவன் மகத்தான பணிகளைச் செய்ய வேண்டும் என்று ஆசைப்பட்டபோதெல்லாம் என்னைத்தேடி எதிரே உட்கார வைத்து, நான் இப்படிச் செய்ய போகிறேன் என்று முதன்முதலில் திருவாய் மலர்ந்து என்னிடம்தானடி பேசினார். அந்த அளவுக்கு நான் உபயோகமாக இருந்திருக்கிறேன். ராஜராஜி இப்பொழுதுகூட நான் சந்தோஷமாகச் செத்துப் போய் விடுவேன். போதும்."

"கும்பாபிஷேகம் பார்க்க வேண்டாமா."

"வேண்டாம். கீழேயிருந்து அந்த கோபுர கலசத்தை கிரீவத்தைப் பார்த்தாகிவிட்டது. அந்த விமானம் எவ்வளவு பெரிதாக வரும் என்பது தெரிந்தாகிவிட்டது. என் புருஷனின் அன்புக்காக எத்தனை பேர் ஏங்குகிறார்கள். எத்தனை மக்கள் அவர் பின்னே நிற்கிறார்கள் என்பதையும் நான் கண்குளிரப் பார்த்து விட்டேன். இதோ இந்த நாட்டிய நாடகம் அதைப்பற்றி இந்த உலகத்திற்குச் சொல்லும். ஏதோ ஒரு நிறைவு வந்துவிட்டது. ஏதோ ஒரு நிம்மதி வந்துவிட்டது. மரணம் போல் நிம்மதி அது."

சொல்லிவிட்டு சரக்கென்று எழுந்தாள். வெளியேறினாள்.

அந்த அந்தணன் விரல்விட்டு எண்ணினான். செவ்வாயின் பலம் மிகுந்திருக்கின்ற இந்த பட்சத்தில் தாக்குதல் தொடுக்கலாம் என்று திட்டமிட்டான்.



இன்று மண்வாரும் இடத்திற்குள் புகுந்து விட வேண்டும். இராஜராஜன் அங்குதான் சுற்றிக் கொண்டிருக்கிறான். எப்படியாவது சக்கரத்தை விஷக் கல்லில் தோய்த்து வீசி நெஞ்சுக் குறிபார்த்து எறிந்து விடவேண்டும். நெஞ்சைப் பிளந்து அந்த ரத்தத்தை சக்கரம் ருசித்து விட்டால் போதும். விஷம் உடம்பில் பரவி சில நாழிகையில் நிச்சயம் மரணம் ஏற்பட்டு விடும். மூக்கிலும், வாயிலும் ரத்தம் வந்து இறக்க நேரிடும். அதற்கு மாற்று மருந்து அதே கல்தான். அந்தக் கல்லை இழைத்து நாக்கில் தடவினால் வாந்தியும், வயிற்றுப் போக்கும் ஆகும். விஷம் வெளியே வந்து விடும். ரத்தத்தைச் சுத்திகரிக்கிற மூலிகைகளைக் கொடுத்தால் மெல்ல மெல்ல உடல் தேறிவிட முடியும். இராஜராஜன் இறந்தான் என்று தெரிந்தபிறகு, இந்தக் கல்லை தின்றுவிட வேண்டும்.

அவன் தீர்மானம் செய்து கொண்டான். ஆனால், அடுத்த பதினைந்து இருபது நாட்களுக்கு அவனால் இராஜராஜனை நெருங்க முடியவில்லை. பாதுகாப்பு ஏற்பாடுகள் அதிகமிருந்தன. அந்தணனுக்கு இங்கே என்ன வேலை. வெளியே போ என்று ஒருவரால் கழுத்தைப் பிடித்தும் அவன் தள்ளிப் பட்டான்.

அங்கஹீனம் என்று சொன்னதும், நிறுத்தி விசாரிக்கப்பட்டான். உளவுப்படை அவனை தனியே கொண்டு போய் விசாரித்தது.

ஆனால், மண் விலக விலக கோயில் அழகாக வெளியே வந்தது, பிரமாண்டம் புரிந்தது. மக்கள் பாதி விமானம் வெளியே வந்ததும் ஆரவாரித்தார்கள். குதித்தார்கள். பலபேர் பாதையில் ஏறி ஓடிப் போய் மெல்ல கஜலட்சுமி சிலைகளையும், மற்ற கடவுள் சிலைகளையும் தொட்டுத் தொட்டுப் பார்த்தார்கள். கட்டித்தழுவி முத்தமிட்டார்கள். நான் தொடலாமா. நான் தொடலாமா என்று பலபேர் போட்டி போட்டுக் கொண்டார்கள்.

கும்பாபிஷேகம் ஆகவில்லை. ஆகவே, யார் வேண்டுமானாலும் தொடலாம். போய் கட்டித் தழுவிக் கொள்ளுங்கள் என்று சொல்லி பலபேர் பாதையில் ஏறி விமானத்தின் பல இடங்களைத் தொட்டுத்தழுவி முத்தமிட்டார்கள். கடவுளர் சிலையைக் கட்டித் தழுவி வணங்கினார்கள்.

நான் செத்துப் போய்விடுவேன். இது இருக்கும். காலாகாலத்திற்கும் இருக்கும். எல்லா மக்களையும் பார்க்கும் எல்லா காலத்தையும் பார்க்கும். வெயில், மழை, குளிர் என்று இடைவிடாது.. இடைவிடாது பார்க்கும். சூரியன் என்பதே இல்லை என்று

பொசுங்கி விழுகிற வரையில் இந்தக் கோயில் இருக்கும் என்று சொல்லிச் சொல்லி தடவிப் பார்த்தார்கள்.

''எப்படியய்யா செய்தீர்கள். இந்தக் கணக்கு எப்படி உங்களுக்குத் தெரிந்தது.''

சிற்பிகளோடு கை சேர்த்துக் கொண்டார்கள். அவர்களைப் பாராட்டினார்கள். அவர்களின் கைகளைப் பற்றி கண்களில் ஒற்றிக் கொண்டார்கள். கால்களில் விழுந்து வணங்கினார்கள்.

''எங்களை ஏன் அம்மா வணங்குகிறீர்கள். சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவரை வணங்குங்கள். அவரால் ஏற்பட்டது இது.''

''அவர் மன்னரே அல்ல.''

ஒரு கிழவி உரக்கச் சொன்னாள்.

எல்லோரும் திகைத்தார்கள்.

''அது மனுஷரே அல்ல.''

மறுபடியும் சொன்னாள். அவரை எல்லோரும் ஆவலோகப் பார்த்தார்கள்.

''அது தெய்வமடா. தெய்வ ரூபம். மகாவிஷ்ணு இங்கு பிறந்திருக்கிறது. இங்கு சிவனுக்கு கோயில் கட்டியிருக்கிறது. ஸ்ரீமன் நாராயணனே இங்கு வந்து சிவன் கோயில் கட்டியிருக்கிறார்.'' என்று உரக்கச் சொல்ல, எல்லோரும் ஆமோதித்தார்கள். சோழம்... சோழம்... என்று வெறியோடு கத்தினார்கள்.

முப்பதாவதுநாள் மூன்றாம்நிலை மாடம் தெரிந்தது. பிறகு, இரண்டாம் நிலை மாடமும், முதல் நிலை மாடமும் தெரிந்தன.

உள்ளே விளக்கொளியில் வரைந்து கொண்டிருந்த சீராளன் என்கிற ஓவியன் சூரிய வெளிச்சம் உள்ளே விழ சந்தோஷமானான். இந்த சூரிய வெளிச்சத்தில் வண்ணங்கள் இன்னும் நன்றாகத் தெரியும். நடராஜர் சிலைக்கும், சரஸ்வதி சிலைக்கும் தங்கம் பூசிவிட முடியும் என்று சொன்னான். தங்கரேக்குகள் ஒட்டுவதற்கு தங்கம் வாங்க வேண்டுமென்று தன்னைச் சேர்ந்த தொண்டை நாட்டு அந்தணரிடம் விண்ணப்பித்தான்.

அந்த ஓவியத்தையும் மக்கள் சுற்றிச் சுற்றி வந்து பார்த்தார்கள்.

அரசர் பட்டமகிஷியோடும், மற்ற எல்லா மனைவியரோடும் வந்தார். பஞ்சவன்மாதேவி பின்னே நிதானமாக வர, அவளை அழைத்து அருகே வைத்துக் கொண்டார்.



இதோ பார் என்று ஒரு ஓவியத்தைச் சுட்டிக் காட்டினார். அங்கு அரசர் உயரமாக நிற்க, பட்டமகிஷி வெள்ளை வெளேர் என்ற நிறத்திலும், சற்று மஞ்சள் நிறத்தில் வானதியும், சற்று பழுப்பு நிறத்தில் பஞ்சவன்மாதேவியும் இருப்பதைச் சுட்டிக் காட்டினார். பஞ்சவன்மாதேவிக்கு வெட்கமாகப் போயிற்று.

என்ன இது நாட்டிய நாடகத்தில்தான் இப்படிக் கொண்டாடுகிறார்கள் என்றால், என்னைப்பற்றி ஒன்றுமே தெரியாத சீராளன்கூட என்னை முன்னிலைப்படுத்தியிருக்கிறானே? இலாடமாதேவிக்கும், மற்ற மனைவியருக்கும் இது வருத்தமாக அல்லவா இருக்கும் என்று நினைத்து மெல்ல அவர்களைப் பார்க்க, அவர்கள் சிரித்தார்கள்.

''அக்கா உண்மையில் உங்களைத்தான் அருகே போடவேண்டும். பட்டமகிஷி என்பதால் தந்திசத்தி விடங்கியாரை முன்னே போட்டிருக்கிறார்கள்.'' என்று இலாடமாதேவி சொல்லி, 'சும்மாயிரு'' என்று பஞ்சவன்மாதேவி மெல்ல பல்கடித்து அவளைச் செல்லமாகக் கோபித்துக் கொண்டாள்.

மண் இன்னும் அகற்றப்பட, அகற்றப்பட்ட மண் நீண்ட நெடும் மலைபோல வேறொரு இடத்தில் குவிக்கப்பட்டது. வெறும், பெரும் மலையாகக் குவிக்காமல் நீண்ட சுவராக வைத்து விடுங்கள். அதுதான் நல்லது என்று சொல்ல அவ்விதமே செய்யப்பட்டது.

சிற்பங்கள் தெளிவாகத் தெரிந்தன. சில இடங்களில் இன்னும் வேலை நடந்து கொண்டிருந்தன.

''ஏன் வேலை மெல்ல நடக்கிறது.''

மூவேந்த வேளார் கேட்டார்.

''ஐயா, இங்கு அதிகம் வேலை செய்ய முடியவில்லை. மண் சுற்றியிருந்ததால் கொஞ்சம் இருளாக இருந்தன. விளக்கேற்றினால் புகை மூச்சை அடைத்தது. அதனால்தான் நிதானமாக வேலை செய்தோம். இப்பொழுது மண் எடுத்து விட்டீர்கள். சூரிய வெளிச்சம் வந்துவிட்டது. இனி விரைவாக வேலை ஆகும்.'' என்று சொல்லப் பட்டது.

சிற்பிகளின் கைத்திறனைப் பார்த்துவிட்டு பஞ்சவன்மாதேவி வியந்தாள்.

கருவறையைச் சுற்றியுள்ள உள்பிரகாரத்தில் ஓவியங்கள் இருந்தன. அதைப் பார்த்துவிட்டு பஞ்சவன்மாதேவி அடுத்த நிலைக்குப் படியேறினாள்.

''அம்மா சர்பிதம் முடித்து விட்டேன். அடுத்தது என்ன.''

கண்டராதித்த பெருந்தச்சர் கேட்டார்.

''தண்டபாதம்.''

''தண்டபாதம் எப்போது செய்து காட்டுகிறீர்கள் தாயே.''

''விரைவில்.''

''இப்போது உதவ முடியுமா.''

''இல்லை. பிறகு வருகிறேன்.''

''சரி தாயே.''

வலக்காலை உயரத் தூக்கி, இவர் எதிரே எப்படி நிற்பது. சிவனே இது என்ன சிக்கல்.

இரண்டாம் நிலை மாடத்திலிருந்த பஞ்சவன்மாதேவி இறங்கி வரும்போது இராஜேந்திரர் எதிர்ப்பட்டார்.

''ஓவியங்களைப் பார்த்தாயா இராஜேந்திரா, தில்லையில் நாமமெல்லாம் இருப்பது போல ஓவியம் வரைந்திருக்கிறார்கள். என்ன அழகு. அந்தச் சீராளன், தெய்வக் கலைஞன்.'' என்று சொல்லி மறுபடியும் இராஜேந்திரரோடு உள்ளே போய் ஓவியங் களையும் சிற்பங்களையும் பார்த்தாள். வெளியே வந்தாள்.

உள்ளே அரசரைச் சுற்றி பெரிய கூட்டம் இருந்தது. வேளாளர் களும், மறவர்களும் அவரை போட்டி போட்டுக்கொண்டு தொட்டுப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அரசரும் சளைக்காமல் எல்லோரையும் தொட்டுத் தடவிக் கொண்டிருந்தார். விசாரித்துக் கொண்டிருந்தார்.

''இதைச் செய்ய வேண்டுமென்று எப்படி ஐயா தோன்றியது.'' என்று ஒருவர் கேட்க, ''நான் என்ன செய்தேன். இது தெய்வ சங்கல்பம். தெய்வம் முடித்த விஷயம். பெருந்தச்சர் உதவியில்லை யென்றால் இதை என்னால் செய்திருக்க முடியுமா. இது அரசன் செய்யும் வேலையா. அந்தத் தெய்வச் சிற்பி செய்த வேலை.'' என்று பெருந்தச்சரைச் சுட்டிக் காட்ட, ''தெய்வச்சிற்பி நான் இருந்து விட்டால் போதுமா. இதை ஆக்ஞையிட்டது சக்ரவர்த்தியல்லவா. சக்ரவர்த்தி இப்படியொரு விஷயம் சொல்லவில்லை என்றால், சக்ரவர்த்தி எனக்கொரு அரண்மனை கட்டு என்று சொல்லி



யிருந்தால், நான் இதைச் செய்திருப்பேனா, இதற்கு முழு முதற்காரணம் சக்ரவர்த்திதான் நானில்லை...'' என்று சொல்ல கூட்டம் மறுபடியும் சக்ரவர்த்தியைச் சூழ்ந்து கொண்டது.

''நானும் இல்லை. அவரும் இல்லை. பல போர்களில், பல வெற்றிகளைத் தேடித்தந்த சோழ தேசத்து மறவர்களால் இது ஆயிற்று.'' என்று சொல்ல, மறவர்கள் உரத்த குரலில் கோஷம் போட்டார்கள்.

''மறவர்கள் மட்டுமா, மறவர்களுக்குத் துணையாக இருந்த வேளாளர்களும்தான் இதற்குக் காரணம். வேளாளர்களுக்குத் துணையாக இருந்த மற்ற குலத்தோரும்தான் காரணம். இது மக்க ளுடைய படைப்பு. நீங்கள் எல்லோரும் சேர்ந்து இந்த மண்ணை அகற்றினீர்கள். நீங்கள் இல்லாவிட்டால் நான் என்றைக்கு மண் அகற்றி என்றைக்கு இந்த விமானத்தைப் பார்த்திருப்பேன்.'' என்று பரவசமாகச் சொன்னார்.

மக்கள் அவரை நகரவொட்டாது சுற்றிக் கொண்டு வந்தனர். மெய்க்காவல் படையினர் அவர்களைப் பிடித்துத் தள்ள அரசர் வேண்டாமென்று சொன்னார்.

''தயவுசெய்து எங்கள் பேச்சைக் கேளுங்கள். இதற்கு மேல் நெருக்கமாக இருப்பது நல்லதல்ல. இருட்டிக்கொண்டு வருகிறது. தயவுசெய்து அவர்களை நகர்ந்து போக நீங்கள் கட்டளை யிடுங்கள். நாங்கள் சொன்னால் முறைக்கிறார்கள்.'' என்று மெய்க்காவல் வீரர்கள் கெஞ்சினார்கள்.

ஆனால், அரசர் சொல்லவில்லை. மறுபடி மறுபடி ஒவ்வொரு குழுவாக விசாரித்துக் கொண்டுவந்தார்.

ஒரு இடத்தில் நின்று பால் குடித்தார். இன்னொரு இடத்தில் நின்று நொய் கஞ்சி குடித்தார். இன்னும் சற்றுப்போய் யாரிடமோ வெற்றிலையும், பாக்கும் கேட்டு வாங்கிப் போட்டுக் கொண்டு வந்தார்.

அந்த வெற்றிலைப் பாக்கு கொடுத்தவருக்கு கிட்டத்தட்ட மயக்கமே வந்துவிட்டது. அவர் தள்ளாடி நிற்க, மக்கள் கூட்டம் ஓ... என்று வாய் விட்டுச் சிரித்தார்கள்.

குழந்தைகளை மெல்ல அணைத்துக் கொண்டு அவர்களுக்கு பெயர் வைத்தார். நிறைய குழந்தைகளுக்கு அவர் இராஜேந்திரர் என்றும், அருண்மொழி என்றும் பெயரிட்டார். பெண் குழந்தை

களுக்கு குந்தவை என்றும், பஞ்சவன்மாதேவி என்றும், வானதி என்றும் பெயரிட்டார்.

அந்த அந்தணன் முன்னேறினான்.

மாதேவடிகள் ஒரு மண் மேடையில் நின்றபடி கூட்டத்தை உற்றுப் பார்ப்பது பஞ்சவன்மாதேவிக்கு தெரிந்தது.

பஞ்சவன்மாதேவி தயங்கி மெல்ல அவளிடம் போனாள்.

"நலமாக இருக்கிறாயா அம்மா." மெல்லக் கேட்டாள்.

"நலமாக இருக்கிறேன்"

"உள்ளே போய் ஓவியங்களைப் பார்த்தாயா."

"பார்த்தேன். சிறப்பாக இருந்தது."

"இங்கு என்ன பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள்."

"அரசரைக் கவனித்துக் கொண்டிருக்கிறேன். மக்களுக்கு அவர் மீது எவ்வளவு அன்பு அதைத்தான் பார்த்து வியந்து கொண்டிருக் கிறேன். யாரோடு வந்தீர்கள்."

"இராஜேந்திரரோடு..."

"இராஜேந்திரன் எங்கே."

இராஜேந்திரரை ஆவலாக மாதேவியடிகள் கேட்டாள்.

"என்ன திடீரென்று அண்ணன் மீது பாசம்."

"ஒரு பாசமுமில்லை. அரசரைக் கொலை செய்வேன் என்று ஒருவன் சொன்னான். இதை நான் இராஜேந்திரனுக்கு வெளிப் படுத்தினேன். இராஜேந்திரன் அந்த அங்கஹீனனைத் தேடிக் கொண்டிருந்தான். ஆனால், இதுவரை கிடைத்ததாக எனக்குத் தெரியவில்லை. அந்த அங்கஹீனனை நான் மறுபடியும் பார்த்தேன். அவன் அந்தணன் போல வேடமிட்டிருக்கிறான். அதோ... அதோ தெரிகிறதா." என்று சுட்டிக்காட்ட அந்த இடத்தில் பல தலைகள் தெரிந்ததே தவிர, யார் அந்தணன், யார் மறவன், யார் வணிகன், யார் வேளாளன் என்று தெரியவில்லை.

"அரசரைக் கொலை செய்வதாகச் சொன்னவன் அருகேயிருக் கிறான் என்கிறாயா?"

"ஆமாம். அது தவிர எனக்குள் ஏதோவொரு படபடப்பு ஒன்று இருந்து கொண்டிருக்கிறது. இந்த நேரம் சரியில்லையென்று பட்சிகள் சொல்கின்றன."



பஞ்சவன்மாதேவி அவளை உற்றுப் பார்த்தாள். தடதடவென்று கீழேஇறங்கினாள். வெளியே ஓடி வந்தாள். அந்தணனைத் தேடினாள். இராஜேந்திரர் எதிர்ப்பட்டதும் வேகமாக விஷயத் தைச் சொன்னாள்.

இராஜேந்திரர் தன்னுடைய மெய்க்காவல் வீரர்களைப் பார்த்து அரசரைச் சுற்றிக் கொள்ளுங்கள் என்று சொல்ல, மெய்க்காவல் படை வீரர்கள் கூட்டத்தைப் பிளந்து கொண்டு முன்னேறி னார்கள். இராஜேந்திரர் பின்னே போனார். இராஜேந்திரர் பின்னே பஞ்சவன்மாதேவி போனாள். கூட்டம் வேகமாகத் தள்ளப்பட்டது. கொஞ்சம் முரட்டுத்தனமாகவே நடந்து கொண் டார்கள்.

மறவர்கள் சிலர் முறைக்க, வேளாளர்கள் உரத்துக்கத்த சுளீர் சுளீரென்று அடிவாங்கினார்கள். விலகுங்கள்.. விலகுகள் என்று சொல்ல, அரசருக்கருகே வெகுவேகமாய் அந்த மெய்க்காவல் படை முன்னேறியது.

இராஜேந்திரர் அந்த வேகம் போதாது என்று அந்த மெய்க்காவல் படைவீரர்களைக் கடுமையாகக் கோபித்துக் கொண்டார். பஞ்சவன்மாதேவி பதறினாள். அவள் உடம்பு வியர்வையில் நனைந்தது. வயிறு பிசைந்தது. நெஞ்சில் ஏதோ அடைத்தது... ஏதோ தவறு... ஏதோ தவறு... ஏதோ தவறு... என்று தோன்றியது.

சட்டென்று அவளுக்கு ஏதோ தோன்ற, அவள் வானம் பார்த்தாள். வானத்தில் ஒரு மேகம் பெரிதாய் நின்றிருந்தது. அந்த மேகம் இறந்து போன அவள் தந்தையின் முகம் போல இருந்தது. அப்பா... என்று உரக்கக் கூவினாள். அந்த மேகம் அவளைப் பார்த்து சிரிப்பதுபோல் இருந்தது. அவள் மேகத்தைப் பார்ப்பதா.. அரசரைப் பார்ப்பதா என்று தடுமாறினாள்.

இராஜேந்திரர் சற்று நகர்ந்ததும் அவளுக்கும், இராஜேந்திரருக் கும் நடுவே மக்கள் சேர்ந்து கொண்டார்கள். அவள் மக்களை வேகமாகத் தள்ளினாள். மறுபடியும் இராஜேந்திரரின் அருகே போய் நின்று கொண்டாள்.

சீக்கிரம்... சீக்கிரம் போ இராஜேந்திரா. என் மனம் சரியாக இல்லை. ஏதோ ஒரு தவறு நடக்கப் போகிறது. சீக்கிரம் போ இராஜேந்திரா.

இராஜேந்திரரின் முதுகு பிடித்துத் தள்ளினாள். இராஜேந்திரர் மிக வேகமாக முன்னேறினார். மெய்க் காவல் படைவீரர்கள் கூட்டத்தைக் கலைத்தார்கள். ஆயிரக்கணக்கான மக்கள் சுற்றிக்

கொண்டிருந்த சக்ரவர்த்தியை அடைவது எளிதாக இல்லை. ஆனால், அந்த அந்தணன் எளிதாக உள்ளே நுழைந்தான். அரசருக்கு அருகே போனான்.

''என்னை நினைவிருக்கிறதா.'' என்று கேட்டான்.

''இல்லையே.'' என்று சிரித்தபடி அரசர் அடுத்தவரின் முகத்தைப் பார்த்தார்.

''இல்லை. நன்றாகப் பாருங்கள். என்னை நினைவிருக்கிறதா.'' என்று மறுபடியும் கேட்டான்.

''நீர் எந்த ஊர் அந்தணர். உங்களை எப்படி எனக்கு நினைவிருக்கும். எனக்கு மறவர்களின் முகம்தான் நினைவில் இருக்கும்.'' என்று சொல்ல மறவர்கள் உரத்த குரலில் சிரித்தார்கள்.

சோழம்... சோழம்... என்று சொன்னார்கள். சில மறவர்களைக் கட்டித் தழுவிக் கொண்டார். தோளில் கை போட்டுக் கொண்டார். மறவர்கள் அவரை அணைத்துக் கொண்டு நடந்தார்கள். அந்த அந்தணன் பின் தொடர்ந்தான். பின்னாலிருந்து சொருகி விடலாமா என்று சக்கரத்தை இறுக்கப் பற்றிக் கொண்டான்.

அவன் கூட்டத்தைப் பிளந்து கொண்டு அந்த மறவர்களைத் தாண்டி முன்னே போனான். சற்றுத் தொலைவில் போய் நின்று கொண்டான். அரசர் அவனைத் தாண்டும்போது, மறுபடியும் கை உயர்த்தி, ''என்னை நன்றாகப் பாருங்கள், என்னை நினைவிருக்கிறதா.'' என்று கேட்டான்.

''இல்லை.'' என்று மூன்றாம் தடவையாகச் சொல்லி சட்டென்று அரசர் நின்றார். அவனை உற்றுப் பார்த்தார்.

''நீ யார்..'' என்று ஏகவசனத்தில் கேட்டார்.

அவன் புருவம் உயர்த்தி ''என்னை நினைவு வந்து விட்டதல்லவா. பட்டப்பகலில் கோட்டை வாசலில் என் மகனின் சிரமறுத்துக் கொன்றீர் அல்லவா.'' என்று உரத்த குரலில் சொல்ல, மறவர் கூட்டம் திகைத்தது.

அரசர் நெற்றி சுருக்கிக் கொண்டு பார்த்தார்.

''என்ன ஆயிற்று உமக்கு. பித்துப் பிடித்தவரா நீர்.''

''என்ன.''

இராஜேந்திரர் அரசருக்குப் பின்பக்கம் வந்து நின்றார். மெய்க்காவல் படைவீரர்கள மறவர்களை விலக்கினார்கள். மறவர்கள் போக மறுத்தார்கள். மெய்க்காவல் படைவீரர்கள் வேகமாக மறவர்களைத் தள்ள, அங்கு தள்ளு முள்ளு உண்டாயிற்று.



''இறந்த என் மகனுக்கு பழிக்குப்பழி வாங்க உம்மைக் கொல்லப் போகிறேன். தைரியமிருந்தால் காப்பாற்றிக் கொள்ளும்.''

அவன் விஷக்கல்லை எடுத்தான். சக்கரத்தை இடுப்பிலிருந்து மறுகையில் எடுத்தான். விஷக்கல்லில் சக்கரத்தை வேகமாகத் தேய்த்தான். குறிபார்த்தான்.

பஞ்சவன்மாதேவி அரசருக்குப் பின்னால் இருந்தவள் குனிந்து நகர்ந்து அரசரின் உயர்த்திய கைகளூடே உள்ளே போய் நின்றாள். வேகமாக சக்கரத்தை அந்த சேரதேசத்து நம்பூதிரியும், பாண்டியனின் ஆபத்துதவியுமான பரசு என்கிறவன் விட்டெறிந்தான்.

பரசு விட்டெறிந்த அந்த இரும்புச்சக்கரம், விஷம் தோய்த்த சக்கரம் அரசரை நோக்கி வந்தது. பஞ்சவன்மாதேவி எழுந்தாள். சக்கரம் வருவதைப் பார்த்தாள். எகிறி இரண்டு கைகளையும், விரித்து அந்தச் சக்கரத்தை அவள் நெஞ்சில் தாங்கிக் கொண்டாள். சக்கரம் சரக்கென்று அவள் நெஞ்சில் குத்தியது. உள்ளுக்குள் இருந்த விஷம் சுரீரென்று அவள் உடம்பு முழுவதும் தாக்கியது. அவள் அலறினாள்.

சக்ரவர்த்தி அவளைத் தாங்கிக் கொண்டார். ஒட்டுமொத்த மறவர்களும் உற்றுப் பார்த்தார்கள். மெய்க்காவல் படையினர் தாவி பரசுவைப் பிடித்தார்கள். பரசு ஓடத் தலைப்பட்டான். வேகமாக ஓடினான். அவன் சால்வை இழுக்கப்பட்டது. அவன் ஒற்றைக் கையனாக இருப்பது தெரிந்தது.

''அவனைப் பிடியுங்கள்... அவனைப் பிடித்து அடியுங்கள்'' என்று ஆவேசமாய் இராஜேந்திரர் கட்டளையிட, மறவர்களும், வேளாளர்களும், மற்ற குலத்தினரும் அந்தப் பரசுவின் மீது பாய்ந்தார்கள். அடிக்கத் துவங்கினார்கள். கால் அரைக்கால் நாழிகையில் பரசு சிதைந்து சின்னாபின்னமாகி வெறும் தசைக் குவியலாய் அந்தக் கோயில் பிரகாரத்தில் அக்னி மூலையில பிணமாய்க் கிடந்தான்.

பஞ்சவன்மாதேவி வாயில் நுரை தள்ள தள்ளாடினாள். தவித்தாள்.

''ஐயா... என் ஐயா... என் ஐயா... என்னை இறுக்கப் பற்றிக் கொள்ளுங்கள்.''

அவள் இடது கையால் அரசரை இழுத்தாள். வலது கையால் அவர் கழுத்தை இழுத்தாள் இறுக்கிக்கொண்டாள். அவர் கன்னத்தில் முகம் தேய்த்தாள். அவள் வாயிலிருந்து மிக வேகமாக ரத்தம் கொப்பளிக்கத் துவங்கியது. கூட்டத்தினரை மெய்க்காவலர்கள் அடித்துத் துவைத்தார்கள்.

ஒரு மரப்பலகையில் அவளைக் கிடத்தினார்கள். வைத்தியர்களிடம் எடுத்துப் போங்கள் என்று சக்ரவர்த்தி சொல்ல, அந்த மரப் பலகையில் கிடந்தவாறு அவள் வெளியே எடுத்துப் போகப் பட்டாள்.

சக்ரவர்த்தியும், இராஜேந்திரரும் ஓட்டமும் நடையுமாய் பின் தொடர்ந்தார்கள். நூற்றுக்கு அதிகமான கருப்பு உடை அணிந்த மெய்க்காவல் படைவீரர்கள் அவர்களைச் சுற்றிக்கொண்டு வெளியேறினார்கள்.

கோயிலுக்கு நேர் எதிரேயிருந்த ஆதுரச் சாலையில் பஞ்சவன் மாதேவி கிடத்தப்பட்டாள். வைத்தியம் உடனடியாகத் துவங்கப் பட்டது.

விளக்கின் சுடர் தூண்டப்பட்டு அந்த அறையின் வெளிச்சம் அதிகமாக்கப்பட்டது. அந்த அறைக்குள் மனிதர்களுடைய எண்ணிக்கை அதிகமாக இருந்ததால் வியர்வை நாற்றமும் மூச்சின் சூடும் பரவாத வண்ணம் தணலில் வாசனைப் பொடிகள் தூவப் பட்டன. அந்தத் தணலிலிருந்த புகை மெல்ல எழுந்து அறை முழுவதும் பரவியது. அறுபது வயதுக்கும் அதிகமான, ஆனால் உறுதியான உடம்பு கொண்ட அந்த வைத்தியர் பஞ்சவன்மாதேவியின் நாடியைச் சோதனை செய்து பார்த்தார்.

பொங்குகின்ற ரத்தத்தைத் தடுத்து நிறுத்தச் சொன்னார். ஈரத் துணியைப் போட்டுப் போட்டு ரத்த காயத்தை மெல்லியதாய் அழுத்தி குளிரச் செய்து ரத்தம் வெளியேறுவதைத் தடுத்தார்கள். சுத்தம் செய்யப்பட்ட பஞ்சை துணியில் சுருட்டி அந்தக் காயத்தின் மீது வைத்துக் கட்டினார்கள். அந்தப் பஞ்சின் மீது உடனடியாக வலியைக் குறைக்கின்ற எண்ணெயைத் துளித்துளியாக ஊற்றினார்கள். மூச்சை சீராக்க, கபம் ஏறி தொண்டையை அடைக்காமல் இருக்க, தலையைச் சற்றுக்கீழே சாய்த்து மூக்கிலும், வாயிலும் மருந்து கலந்த எண்ணெயை விட்டார்கள். வலியினாலோ, பயத்தினாலோ தலை நரம்புகள் தெறிக்காமல் இருக்க பட்டுத் துணியால் இறுக்கக் கட்டினார்கள். நெற்றியில் சந்தனம் கலந்த மஞ்சள் பற்றைப் போட்டார்கள்.



ரத்தம் சேதாரத்தால் கால் நரம்புகள் இழுத்துக் கொண்டு, கால்கள் கோணாமல் இருக்க காலுக்கு தலையணையை அண்டக் கொடுத்தார்கள். உள்ளங்காலிலும் புறங்காலிலும் வைத்தியருடைய உதவிப் பெண்கள் வேகமாய் எண்ணெய் தேய்த்தார்கள். காயம் நெஞ்சுக்குக்கீழே இருப்பதால் பஞ்சவன்மாதேவியின் கச்சையை அகற்றிவிட்டு மேலே மெல்லிய வெள்ளைத் துணியைப் போர்த்தினார்கள்.

பிறகு கட்டை விலக்கி காயத்தைப் பார்த்தபோது ரத்தப் போக்கு நின்றிருந்தது. இன்னும் அருகே போய் காயத்தை முகர்ந்து பார்த்தபோது கடும்நெடி அடித்தது.

''கத்தியை வீசிவிட்டார்களா.''

''இல்லை. சக்கரத்தை வீசினார்கள்.''

''சக்கரமா... சக்கரம் எங்கே.''

வைத்தியர் பரபரப்பாகக் கேட்டார்.

''தெரியவில்லையே.'' என்று இளவரசர் இராஜேந்திரர் பதில் சொன்னார்.''

மறுபடியும் அந்தக் காயத்தை முகர்ந்து பார்த்தார். யோசித்தார்.

''இது பாஷாணம். மிகக் கொடிய விஷம். வடக்கே சில குன்றுகளில் இப்படிப்பட்ட கற்கள் கிடைக்கின்றன. அந்த கருநீலக் கற்களில் கத்தியைத் தீட்டி மேலே பாய்ச்சினால் சில வினாடிகளில் மரணம் ஏற்பட்டு விடும். அப்படித்தான் இது நடந்திருக்கிறது. இதற்கு மருந்து பாஷாணம்தான்.''

''எங்கே கிடைக்கும் பாஷாணம்.''

''சக்கரம் வைத்திருந்தவன் தேய்த்து அடித்திருப்பானல்லவா. அந்த இடத்தில்தான் அந்தக் கல் இருக்கும். அந்தக் கல்லைக் கொண்டு வந்து இழைத்து வாயில் தடவினால் உடனடியாக கேட்கும். வேறு எதனாலும் இதைச் சரிசெய்ய முடியாது. ஆனால் வேறு ஒரு பிரச்சினையும் வரும்.''

''என்ன.''

''அந்தப் பாஷாணத்தை வாயில் தடவுகிற பொழுது பேச்சு போகலாம். பற்கள் கொட்டிவிடலாம். முகம் விகாரமாகலாம்.

இவர்கள் உயிர் பிழைக்க வேண்டுமென்றால், அந்தப் பாஷாணம் வேண்டும். உடனடியாக வேண்டும்.''

வைத்தியர் எழுந்து நின்று பரபரத்தார். இளவரசர் இராஜேந்திரர் வேகமாக வெளியேறினார். அவரைப் பின்தொடர்ந்து பத்து மெய்க்காவல் வீரர்கள் ஆதுரச்சாலைக்கு வெளியே வந்தார்கள்.

எல்லோரும் குதிரையேறினார்கள். இளவரசருடைய குதிரை வேகமாக கோயில் நோக்கிப் போயிற்று. இளவரசர் வருகிறார் என்றதும் வீசாரிப்பதற்காக மக்கள் அவரைச் சூழ்ந்து கொள்ள, மெய்க்காவல் வீரர்கள் சவுக்கைச் சொடுக்கினார்கள். கலைந்து போங்கள் என்று உரத்த குரலில் அதட்டினார்கள்.

மக்கள் பயந்து மிரட்சியோடு வழிவிட்டார்கள். குதிரைகள் பரசு செத்துப் போன இடம் நோக்கிப் போயின. எலும்புகளும், தசைகளும் தனித் தனியாகக் கிடந்தன. சிலபேர் அந்த எலும்பு களை மிதித்து உடைத்துக் கொண்டிருந்தார்கள். தூ.. தூ .. எச்சில் துப்பிக் கொண்டிருந்தார்கள்.

படுபாவி... படுபாவி... என்று இரைந்து கொண்டிருந்தார்கள்.

இராஜேந்திரரும், மற்ற வீரர்களும் கீழிறங்கித் தேடினார்கள்.

''அவர் பாஷாணம் என்று சொல்வது உங்களுக்குப் புரிகிறதா. அதைக் கையால் தொட்டு விடாதீர்கள். அப்படி ஏதாவது இருக் கிறதா என்று குச்சியால் தேடுங்கள்.''

வீரர்களும், இராஜேந்திரரும் வேகமாகத் தேடினார்கள். சதைக் குவியலைப் புரட்டிப் போட்டார்கள்.

என்ன இது. மனிதனுடைய உருவமே தெரியாது அடித்துப் போட்டிருக்கிறார்கள். இளவரசர் சற்றுக் குவியலாக இருந்த ஒரு சதைப்பகுதியின் அருகே போய் உட்கார்ந்து கொண்டார்.

ஒரு மூங்கில் குச்சியைக் கொண்டுவரச் சொன்னார். அந்த மூங்கில் குச்சியால் அந்த சதையைப் பிரித்துப் போட்டுப் பார்த்தார். அவர் எண்ணம் சரியாக இருந்தது. அதில் இடுப்பும், வயிறும், குடலும் சேர்ந்து இருந்தது.

வெளித்தசைக்குவியலும், உள் தசைக் குவியலும் சேர்ந்திருந்த இடத்தில் ஒரு துணி இருந்தது. அந்தத் துணிக்கு நடுவே செவ்வக மாய் ஒரு கறுப்புக்கல் இருந்தது. உற்றுப் பார்க்க அதில் எதையோ வைத்துத் தேய்த்த வடுக்கள் இருந்தன. முகர்ந்து பார்க்க முகத்தைச் சுளிக்க வைக்கும் நெடி அடித்தது.

''இதுதான்.. இதுதான்..''



இளவரசர் உரக்கச் கத்தினார்.

''ஒரு கூடை கொண்டு வா'' என்றார்.

யாரோ அரிசி வைத்திருந்த கூடையைப் பறித்துக் கொண்டு வந்தார்கள்.

அரிசியை அந்தப் பெண்மணியின் மடியில் கொட்டினார்கள். கூடையைக் கொண்டு வந்து இளவரசரிடம் நீட்டினார்கள்.

அந்தக் கூடையில் இரண்டு குச்சிகளால் அந்தப் பாஷாணக் கல்லை எடுத்து இளவரசர் போட்டார். அருகே ஒரு கயிறு இருந்தது. அந்தக் கயிற்றுச் சுருணியை ஒரு மெய்க்காவல் வீரன் கூடைக்குள் போட்டான். மடமடவென்று கயிற்றால் அந்தக் கூடையைக் கட்டினார்கள். இறுக்கினார்கள். குச்சியின் நுனியில் கட்டினார்கள். யார் மீதும் படாவண்ணம் தூக்கினார்கள். ஒரு வீரன் அதற்காக கை நீட்டினான்.

''மிகக் கவனமாய் எடுத்து வா. மேலே போட்டுக் கொள்ளாதே நிதானமாக வா. அதேசமயம் விரைவாக வா.''

அவர் குதிரையைத் திருப்பி ஆதுரச் சாலைக்கு விரைந்தார்.

அந்த வீரன் குதிரையில் பின் தொடர்ந்தான். இப்பொழுது அந்த வீரனை வீரர்கள் சூழ்ந்து கொண்டார்கள்.

''பாஷாணக்கல் கிடைத்துவிட்டது.''

ஆதுரச்சாலைக்கருகே உரக்கக் கத்தினார். அவர் குரலைப் பல பேர் எதிரொலித்தார்கள்.

ஒரு மாக்கல் தட்டில் அந்த பாஷாணக்கல்லை வைத்தியர் வாங்கிக் கொண்டார்.

''இதே கல்தான். தேர்ந்து முதிர்ந்த கல். நல்ல வேளையாய் விரைவாய்க் கொண்டு வந்து விட்டீர்கள்.''

எடுத்துக்கொண்டு உள்ளே போனார். அதைக் கத்தியால் சுரண்டினார். அதன்மீது லேசாகத் தண்ணீர் ஊற்றினார். மீண்டும் கத்தியால் சுரண்டினார்.

கறுப்புக்குழம்பு கிளம்பியது.

''மிகக் கொடுமையான விஷத்தை ஒரு சக்கரத்தில் தோய்த்து வீசி அடித்திருக்கிறார்கள். அது வெகுசீக்கிரம் ஒருவருக்கு மரணத்தை ஏற்படுத்தும். இப்பொழுது அந்த மரணத்தை வெல்வ தற்காக இந்தப் பாஷாணக்கல்லையே நான் மருந்தாகப் பயன்

படுத்தப் போகிறேன். மறுபடி சொல்கிறேன். இதில் ஒரு சின்ன அபாயம் இருக்கிறது.''

அந்தக் கிழவர் பேசும்போது அவர் குரல் நடுங்கியது.

''என்ன அபாயம்.''

இளவரசர் கேட்டார்.

''உயிர் பிழைத்துவிடும் வாய்ப்பு அதிகம் இருப்பினும், இந்த விஷத்தை நாக்கில் தடவி உள்ளுக்குள் இறக்குவதால் பற்கள் கொட்டிப் போகலாம். கண்பார்வை மங்கிப் போகலாம். தலை முடியை இவர்கள் இழக்க நேரலாம்.''

''வேறுவிதமான வைத்தியமே கிடையாதா.''

''இல்லை. இன்னும் சில நொடிகளில் இந்த மருந்தைக் கொடுத்தாக வேண்டும். தாமதப் படுத்துவது வெகு நிச்சயமாய் இவர்கள் உயிரை அழிக்கும்.''

''ஆனால், இதைக் கொடுத்தால் நிச்சயம் உயிர் பிழைத்து விடுவார்களல்லவா.''

அதற்கும் அந்தக் கிழவரால் சரியாகப் பதில் சொல்ல முடியவில்லை. மேலும், கீழும் இளவரசரையும், அரசரையும் மாறிமாறிப் பார்த்தார்.

''நான் இறைவன் மீது பாரத்தைப் போட்டு இந்த வைத்தியத்தைத் துவங்குகிறேன். இது வெற்றி பெற்றால் சிவன் உங்களுக்கு அருளிய கொடை. தோற்றால் என்னைச் சிரச்சேதம் செய்யுங்கள்.''

''இந்த வார்த்தை வேண்டாம். உங்கள் வைத்தியத்தைத் துவங்குங்கள்.''

சக்ரவர்த்தி உடையார் ஆணையிட்டார்.

எல்லோரும் சிவநாமம் சொல்ல, மெல்லக் குழைத்த மருந்தை கத்தியில் எடுத்து பஞ்சவன்மாதேவி வாயை வலுக்கட்டாயமாகத் திறந்து நாக்கில் தடவினார். விஷம் உள்ளுக்குள் போவதற்காக காய்ச்சாத பசும்பாலை வேகமாக வாயில் ஊற்ற, வாய்க்கு வெளியேயும் பால் வடிந்தது. உள்ளேயும் இறங்கியது. வாய்க்கு வெளியே வழிந்த பாலை எல்லோரையும் வெளியே போகச் சொல்லி தண்ணீர் ஊற்றி அலம்பினார்கள். காயத்திற்கு மருந்து தடவினார்கள். பஞ்சவன்மாதேவியைச் சாய்த்து உட்கார வைத்தார்கள்.



''நாளை காலை அரசியார் கண் விழித்து விடுவார்கள். நீங்கள் கொஞ்சம் ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள்.''

அரசர் மெல்ல வெளியே வந்தார். ஆதுரச்சாலையைச்சுற்றி வீரர்கள் இறுக்கமாக நின்றிருந்தார்கள். அதற்கப்பால் பெரிய ஜனக்கூட்டம் தெரிந்தது. மெல்லக் கதிரவன் சாய்ந்து கொண்டிருந்தான். ஜனங்களைக் கலைந்து அவரவர்கள் இடத்திற்குப் போகச் சொல்லுங்கள்.

சக்ரவர்த்தி உத்தரவிட்டார். மறவர்கள் அதைச் செயல்படுத்தினார்கள்.

பட்டமகிஷியும், வானதியும் வர விருப்பம் தெரிவிக்கிறார்கள். அரண்மனையிலிருந்து ஒரு அதிகாரிச்சி வந்து மெல்ல விண்ணப்பித்தார்.

''வேண்டாம் என்று சொல். யார் எதிரி, யார் நம் மக்கள் என்று தெரியவில்லை. நம் மக்களுக்கு நடுவே அவர்கள் புகுந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களும் தாக்கப்பட்டால் என் நிலைமை என்ன ஆவது. அரண்மனையிலேயே இருக்கச் சொல். வைத்தியம் நடந்து கொண்டிருக்கிறது என்று சொல். வேறெதுவும் சொல்ல வேண்டாம்.''

அடிக்குரலில் அந்த அதிகாரிச்சிக்குக் கட்டளையிட்டு விலக்கினார்.

சக்ரவர்த்திக்கு நெய் கலந்த அரிசிக் கஞ்சி தரப்பட்டது. அவர் அதைக் குடிக்கும் முன்பு ஒரு மெய்க்காவல் வீரன் அதைப் பணிவாக வாங்கி உள்ளங்கையில் ஊற்றிக் குடித்துவிட்டு சிறிது நேரம் பொறுத்து அரசரிடம் கொடுத்தான்.

அருண்மொழிப் பட்டன் குதிரையிலிருந்து கீழிறங்கினான். அவன் தலை முடி கலைந்திருந்தது. உடம்பில் இரண்டு மூன்று இடத்தில் கத்தி கீறிய காயங்கள் இருந்தன. அரசர் அவனைப் பார்த்துத் திடுக்கிட்டார்.

''என்ன. ஏன் இப்படி வருகிறாய்.''

வேகமாகக் கேட்டார்.

''ஏழு பேரைக் கைது செய்திருக்கிறேன். ஏழு பேரில் ஆறு பேர் பாண்டிய தேசத்து ஆபத்துதவிகள். சேரதேசத்து நம்பூதிரிகள். அதில் ஒருவன் தங்க இடம் கொடுத்தவன். சோழ தேசத்தவன். இறந்து போனவனுடைய பெயர் பரசு. அவனுக்கும் இவர்களுக்கும் சம்மந்தம் இருக்கிறது.''

''இதை முன்னாலேயே செய்திருக்க வேண்டியது தானே. இதற்கு முன் என்ன செய்து கொண்டிருந்தாய். திரும்பத் திரும்ப நான் எச்சரித்துக் கொண்டேயிருந்தேன். இன்று வரை மெத்தனம் காட்டிவிட்டு இப்பொழுது ஆறுபேர் கைது, ஏழு பேர் கைது என்று என்ன கணக்கு சொல்கிறாய். இறந்தவன் பெயர் ஜாதகம் எனக்குத் தேவையில்லை. நன்றாக உண்டு தூங்கிக் கொண்டு விட்டு அசம்பாவிதம் நடந்தபிறகு கைது செய்வதில் யாருக்கு லாபம்.'' சக்கரவர்த்தி சீறலாகப் பேசினார்.

''தவறு என் மீதோ, என் உளவுப் படைமீதோ அல்ல. அரசரை யார் வேண்டுமானாலும் தொட்டுப் பேசலாமென்று இந்த ஒரு மாதத்தில் ஆகிவிட்டது. எவர் வேண்டுமானாலும் நெருங்கி, எத்தனை நேரம் வேண்டுமானாலும் பேசலாம் என்று இந்தக் கோயிலில் மண் எடுக்கும் காலத்திலிருந்து வந்துவிட்டது. எதிரிகளே இல்லை என்ற நினைப்பில் தான் சோழ மக்கள் சுற்றிச் சுற்றி வந்திருக்கிறார்கள். குறிப்பாய் இந்தத் தவறு உங்களுடையது. மெய்க்காவல் படையினரைக் கூட நீங்கள் அதட்டி விலக்கித்தான் வைத்திருக்கிறீர்களே தவிர, அவர்கள் சொல்படி நீங்கள் கேட்பதேயில்லை.''

''எங்களைக் குற்றம் சொல்லிவிடு அருண்மொழி. சகலமும் முடிந்து விடும்.''

''இல்லை. நீங்கள் என்னைக் குற்றம் சொல்வதால் பதிலுக்கு உண்மையை நான் சொல்லுகிறேன். உளவுப்படை என்பதற்கு அர்த்தம் மக்களுக்கு நடுவே எதிரிகள் புகுந்து கொண்டிருக்கிறார்களா என்று பார்ப்பதுதான். மக்களைப் புறக்கணிப்பதில்லை.''

''போதும் அருண்மொழிப்பட்டா.. போதும்..''

சக்ரவர்த்தி கையமர்த்தினார்.

''வந்து உட்கார்.''

இடம் காட்டினார்.

ஆதுரச்சாலை திண்ணையில் இரண்டு பேரும் அருகருகே உட்கார்ந்து கொண்டார்கள்.

''அருண்மொழி உள்ளே போய் காயங்களுக்கு மருந்து போட்டுக் கொண்டு வா. உன்னுடன் பேச வேண்டும். என்னுடைய ஆள் ஒருவனை உடனே அனுப்பி மூவேந்த வேளாரை வரச்சொல். மண் அகற்றும் பொறுப்பையும், சிலைகள் நிறுவும் பொறுப்பையும், கும்பாபிஷேகப் பணிகளையும் நான் அவரிடம் கொடுக்கப் போகிறேன். மக்களுக்கு இடையே புகுவது நல்லதல்ல என்று உள்ளுணர்வு எச்சரித்தது. இருந்தாலும் எனக்காக எந்த எதிர்பார்ப்புமின்றி எந்தக் கூலியுமில்லாமல் இந்த மக்கள் உழைக்கிறார்களே... இவர்களைத் தொட்டுத் தடவி நன்றி சொல்வோம் என்றுதான் நான் அவர்களோடு பழகினேன். இருபத்து மூன்று வருடம் முன்பு காந்தளூர்ச்சாலையில் இவன் மகனை வெட்டிக் கொன்றேன் என்று இப்பொழுது சக்கரம் எய்கிறான். வாள் உருவிப் போருக்கு அழைத்திருந்தால் நான் யார் என்று நிரூபித்திருப்பேன். சேர தேசத்து நம்பூதிரி குள்ள நரிபோல் தந்திரமாய் நடந்து கொண்டுவிட்டான். எதிரிகளைத் தேடுகிறேன் என்று மக்களை அதிகம் துன்புறுத்தி விடாதீர்கள்.''



''தயவு செய்து இதில் தலையிடாதிருங்கள் தந்தையே.''

இளவரசர் கொஞ்சம் வேகமாக குரல் உயர்த்தி சக்ரவர்த்தியைக் கண்டித்தார்.

''கண் இமைக்கும் நேரத்தில் தாமதித்திருந்தால் இப்போது இந்த இடத்தில் நிலைமை வேறு. உங்களைவிட வயதில் பஞ்சவன் மாதேவி இளமையானவர். அதனால் ஒரு அளவு இந்த விஷ வேகத்தைத் தாங்குகிறார். இதுவே அந்தச் சக்கரம் உங்கள் மீது பட்டிருந்தால் கோயில், கும்பாபிஷேகம் எல்லாமும் கலைந்து போயிருக்கும். பெருவுடையார். கோயிலுக்கு கெட்ட பெயர் வந்திருக்கும்.''

''நீ சும்மாயிரு ராஜேந்திரா. அச்சான்யமாகப் பேசாதே. இறப்பதும், இருப்பதும் முக்கியமான விஷயமாகாது. இந்தக் கோயில் உன்னை, என்னை, எல்லாரையும் தாண்டிய விஷயம். இதில் குடியிருக்கப் போகின்ற பரமஸ்வாமி காலா காலத்திற்கும் இந்த சோழதேசத்தை ஆசீர்வதித்துக் கொண்டிருப்பார். இந்த மண்ணை வளப்படுத்திக் கொண்டிருப்பார். கோயில் வளர்வதை, வாழ்வதை ஒருக்காலும் எவரும் தடுத்துவிட முடியாது. உள்ளே இருக்கின்ற பஞ்சவன்மாதேவி இறக்கலாம். நான் இறக்கலாம். நீ இறக்கலாம். ஆனால், இந்தக் கோயிலுக்கு மரணமில்லை. என் திகைப்பெல்லாம் இருபத்து மூன்று வருடங்களுக்குப் பிறகும் அந்த அந்தணன் நான் நடத்திய போரை மறக்கவில்லையே. அதுதான் வியப்பாக இருக்கிறது.''

''சேரதேசத்து நம்பூதிரிகள் அப்படிப் பட்டவர்கள். கர்வம் மிக்கவர்கள். பழிக்குப் பழி வாங்கத் துடிப்பவர்கள். வன்மம் மிக்கவர்கள்.''

அருண்மொழி இடையில் புகுந்து பதில் சொன்னான்.

''அவனுக்குத் தன் மகனை நான் கொன்றது பெரிய விஷயமல்ல. சோழதேசம் இப்படி வளர்ந்து விட்டதுதான் அவனால் பொறுக்க முடியவில்லை. என்னுடைய வளர்ச்சியைத்தான் அவனால் தாங்க முடியவில்லை. இப்படி இத்தனை உயரமாக கோயில் கட்டு கிறோம் என்பதைத்தான் அவனால் சகித்துக் கொள்ள முடிய வில்லை.''

''நீங்கள் சொல்வது உண்மை தந்தையே. போரில் ஜெயித்து வாகை சூடினோம் என்பது மட்டுமே நம் எதிரிகளுக்கு வெறுப்பான விஷயமல்ல. இந்தத் தேசம் வாழ்வாங்கு வாழ்ந்து கொண்டிருக்கிறது என்பதுதான் அவர்களைக் கவலையூட்டுகிறது. வில் வைத்த குதிரை வண்டிகளும், பித்தளைப் பாத்திரங்களும் தினந்தோறும் நடக்கின்ற இந்த நாட்டியங்களும் இந்த நாடகங் களும், உயர்ந்த கோயில்களும், மற்ற கோயில்களுக்கு நாம் செய்கின்ற செலவுகளும், மக்கள் மகிழ்ச்சியாக முன்னும் பின்னும் அலைவதும், மாடு கன்றுகள் சிறப்பாக இருப்பதும் கூட அவர் களைத் தொந்தரவு செய்கிறது. ஆனால், இதை நாம் சந்தித்துதான் ஆகவேண்டும்.''

''பாண்டிய தேசத்து மக்கள்கூட மெல்ல மெல்ல அடங்கி அமைதியாகி நம்மோடு இயைந்து வாழத்துவங்கிவிட்டார்கள். சேரர்களுக்கு ஏன் இத்தனை பொறாமை. ஆச்சரியமாகவும், வியப்பாகவும் இருக்கிறது.'' மறுபடியும் முகவாயில் கை வைத்து சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீ ராஜராஜத்தேவர் கேள்வி கேட்டார்.

''நமக்கும், பாண்டிய தேசத்தவருக்கும் மொழி ஒரு ஒற்றுமை. அந்தப் புலவர்கள் நம்மைக் கவருகிறார்கள். நம்மவர்கள் அவர் களை ஈர்க்கிறார்கள். பரஸ்பரம் மக்கள் விவரம் தெரிந்து கொள்ள வேண்டுமென்று ஆசைப்படுகிறார்கள். பாண்டிய தேசத்துச் சிற்பி ஒருவன் இங்கு தங்கி இந்தக் கும்பாபிஷேகம் முடிந்த பிறகுதான் நான் மதுரைக்குப் போவேன் என்று இருந்துவிட்டான். மதுரைக் குப் போய் அங்கு இதேபோல் சிவனுக்கு கோயில் எழுப்புவேன் என்று சொல்லியிருக்கிறான். இங்கு தங்கிய அந்த நாட்களில் அவன் நெல்முனையளவுகூட எந்தவித எதிர்ப்பும் காட்டவில்லை.



ஆனால் சேரதேசத்து மக்கள் அப்படியல்ல. அந்த மக்கள் நமக்கு பயந்து அடங்கிக்கிடக்கிறார்களே தவிர, நம்பூதிரிகளைத் தூண்டி விட்டுக் கொண்டுதான் இருக்கிறார்கள். சேர தேசத்து நம்பூதிரி களும் பெரிய பேச்சு பேசிக் கொண்டு வெட்டுவேன், வீழ்த்துவேன் என்று விதம்விதமாக முயற்சிகள் செய்து கொண்டிருக்கிறார்கள். கைது செய்யப்பட்ட ஆறுபேரும், இறந்து போன இந்தப் பரசு நம்பூதிரியும் மேலைச்சாளுக்கியத்தில் சில காலம் வாழ்ந்தவர்கள். மேலைச்சாளுக்கியத்திலிருந்து நம்மைப் பின் தொடர்ந்திருக் கிறார்கள்.

சக்ரவர்த்தி புருவங்களை உயர்த்தினார்.

''ம்ஹூம்... சோழப்படைகளை அழிக்க முடியவில்லை என்ப தால், சோழ சக்ரவர்த்தியை அழித்து விடலாம் என்று திட்டமிட் டிருக்கிறார்கள். இராஜராஜன் இறந்து போனால், சோழதேசம் கலகலத்து விடும் என்று நினைக்கிறார்கள். இராஜேந்திரன் இருப் பது அவர்களுக்குத் தெரியவில்லை. என்னையும்விட உத்தமமான, மிக உறுதியான, மிக உக்ரமான ஒரு சக்ரவர்த்தியை நான் வளர்த்திருக்கிறேன் என்று அவர்களுக்குத் தெரியவில்லை. தந்தை எட்டடி குட்டி பதினாறு அடி என்று சொல்வார்கள். புலி புலிக் குட்டியை நக்கித்தான் புலியாக்கும். நான் ஒரு புலிக்குட்டியை வளர்த்திருக்கிறேன். புலியாக்கியிருக்கிறேன். அந்தப் புலி ஆளத் துவங்கும்போது சோழர்களின் எதிரிகள் பாடு இன்னும் மோசமாக இருக்கும். நான் காட்டிய கருணை எதுவும் இராஜேந்திரனிட மிருந்து வராது. வரவேண்டிய அவசியமும் இல்லை. அருண்மொழி உன் தந்தை எங்கே.''

''அந்த சேரதேசத்து நம்பூதிரிகளை பாண்டிய ஆபத்துதவி படைவீரர்களை விசாரித்துக் கொண்டிருக்கிறார். உணவிட்டு பேசிக் கொண்டிருக்கிறார்.''

''விசாரிப்பது என்றால் உணவிட்டுப் பேசுவதா.''

''அவர்களில் சிலர் சரியான உணவு உட்கொள்ளாமல் வாடிப் போயிருக்கிறார்கள். அவர்கள் பேசவேண்டுமென்றால் உணவு அவசியம். மேலும் அவர்கள் பயந்து போய் இருக்கிறார்கள். ஒருக்காலும் அந்தணர்கள் சிரச்சேதம் செய்யப்படமாட்டார்கள் என்ற வாக்குறுதியை பிரம்மராயர் கொடுத்திருக்கிறார். உண்மை யைப் பேசிவிட்டுப் போங்கள். கடல் கடந்து போய்விடுங்கள் என்று சொல்லியிருக்கிறார்.

பரசு நம்பூதிரியின் மரணம் பற்றி அவருக்கு அவருடைய உளவுப்படைகள் விவரித்துச் சொல்லியிருக்கிறார்கள். அதைக் கேட்டுவிட்டு அவர்கள் உறைந்து போயிருக்கிறார்கள். சொல்லுங்கள் எனக்குத்தான் அந்தணர்களை ஒன்றும் செய்யக் கூடாது என்ற தர்மமெல்லாம் உண்டு. சோழதேசத்து மக்களுக்கெல்லாம் இல்லை. நான் கொண்டு போய் இளவரசர் இராஜேந்திரரிடம் விட்டுவிடுவேன். இராஜேந்திரர் எப்படிப்பட்டவர் என்று உங்களுக்குத் தெரியும். இராஜேந்திரர்கூட உங்களுக்கெதிரே வாள் எடுக்க மாட்டார். உங்களை அப்படியே வெறும் கோமணத்தோடு மக்களிடம் ஒப்படைத்து விடுவார்.

மக்கள் உங்களை வெறும் கைகளாலேயே அடித்துக் கொல்வார்கள். உலகத்தில் மிக மோசமான சாவு மக்களிடம் அடிபட்டுச் சாவது. சோழதேசத்தில் கைச்சண்டை போடுவதற்கென்றே ஒரு தனிப்படை இருக்கிறது. கைக்கோளர்படை என்ற பெயர். வலது காதில் அடித்தால், இடது காதில் ரத்தம் வரும். வெறும் கையாலேயே உங்கள் கைகளை அவர்களால் பிடுங்கிவிட முடியும். அப்பேற்பட்ட மரணம் உங்களுக்கு வரக்கூடாது என்பதற்காக கேட்கிறேன். மொத்தமும், முழுவிபரமும் சொல்லி விடுங்கள்.'' என்று இதமாகப் பேசிக் கொண்டிருக்கிறார்.

''பிரம்மராயரின் எண்ணம் என்ன அவர்களைக் கப்பலேற்றி அனுப்புவதா.''

''ஆமாம். என்கிறார் பிரம்மராயர்.''

''மக்களுக்கு இந்தக் கைது பற்றித் தெரியுமா?''

''தெரியுமென்று நினைக்கிறேன்.''

''அப்படியானால் மக்கள் ஒத்துக் கொள்வார்களா. பிரம்மராயரை இழிவாகப் பேசுவார்களே.''

சக்ரவர்த்தி கவலையோடு கேட்டார்.

''அப்பாவிற்கு வேறு எண்ணமிருக்கிறது. அதில் மூன்றுபேரைக் கப்பலேற்றிவிட்டு இன்னும் மூன்று பேரை இளவரசரிடம் கொடுத்து விடுவது என்ற எண்ணம் இருக்கிறது.''

''ஏன், மூன்று பேர்.''

''மூன்று பேர் உண்மையிலியே பயந்து போயிருக்கிறார்கள். மன்னிப்பு கேட்கிறார்கள். இன்னொரு மூன்று பேர் இளவரசரைக் கொல்வோம் என்று இன்னும் உரத்த குரலில் பேசுகிறார்கள்.''



''இன்னும் எத்தனை ஆபத்துதவிகள் சோழ தேசத்தில் இருக்கிறார்கள்.''

''அதுதான் விசாரணையே.''

அருண்மொழிப்பட்டன் சக்ரவரத்திக்குப் பதில் சொன்னான்.

''நீ இதை முன்னமே செய்திருக்கலாம் அருண்மொழி. உங்களின் திறமையின்மை, என் பஞ்சவன்மாதேவியை பாழடித்துவிட்டது.''

சக்ரவர்த்தி அவர்களே... மறுபடி சொல்கிறேன். இதற்கு நீங்கள்தான் காரணம். சோழதேசத்தில் எந்த சக்ரவர்த்தியும் இவ்வளவு நெருக்கமாக மக்களிடம் பழகியதே இல்லை. அதேசமயம் எந்த சக்ரவர்த்தியும் இவ்வளவு பெரிய கோயில் ஒரு எழுப்பியதும் இல்லை. இந்தக் கோயில் ஒரு அற்புதம் என்றால், இந்தக் கோயில் உங்கள் கனவு என்றால், இந்தக் கோயில் உங்கள் முயற்சி என்றால், பஞ்சவன் மாதேவி நிச்சயம் பிழைத்துக் கொள்வார்கள். சிவன் உங்களுக்கு நிச்சயம் கருணை செய்வார்.

வரும் வழியில் பழமர்நேரி அந்தணர்கள் சிலரைச் சந்தித்தேன். ப்ரசன்னம் பார்க்கலாம் என்றார்கள். இறங்கினேன். இப்போதைக்கு என்ன கிரகம் இருப்போ அதைக் கட்டம் கட்டி மாக்கல்லில் வரைந்து பிறகு சோழிகள் போட்டார்கள். ஒன்பது சோழிகளில் மூன்று சோழிகள் வெளியே நின்றன. ஆறு சோழிகள் கட்டங்களில் நின்றன. அந்தக் கட்டங்களில் நின்றதை வைத்து பலன் சொன்னார்கள். கேதுவில் ஒரு சோழி நின்றது. எதுவும் ராகுவில் நிற்கவில்லை. குருவில் ஒன்றும் சுக்கிரனில் ஒன்றும், புதனில் இரண்டும், சூரியனில் ஒன்றுமாய் சோழிகள் நின்றன. உங்கள் களத்திர காரகன் குரு. குருவில் சோழி இருப்பதால் நிச்சயம் பஞ்சவன்மாதேவி உயிருக்கு ஆபத்து இல்லை. புதனில் சோழி இருப்பதால் அவர் நிச்சயம் குணமாகி விடுவார். சுக்கிரனில் சோழி இருப்பதால் காயம் ஆறும். உடம்பில் எந்த ஊனமும் இருக்காது. அவரால் நடமாட முடியும். சூரியனில் சோழி இருப்பதால் அவருக்கு கண் பார்வை தெளிவாக இருக்கும். ஆனால், உடம்பில் உஷ்ணக் கொதிப்பு ஏற்பட வாய்ப்பு உண்டு. கேதுவில் சோழி இருப்பதால் ஒரு பிரச்சினை.''

''என்ன பிரச்சினை.''

''முகம் உடம்பு விகாரமாகும்.''

''பஞ்சவன்மாதேவி உடம்பல்ல. அந்த உடம்பு விகாரமானால் எனக்குக் கவலையில்லை.''

"அருண்மொழி உன் தகப்பனாரை இப்போது அழைக்க முடியாது. அவர் மிக முக்கியமான வேலையில் இருக்கிறார். மூவேந்தர் வேளாரை அழைத்து கோயில் பணி செய்யச் சொல்லப் போகிறேன். நான் சற்று விலகியிருக்கப் போவதாகச் சொல்லப் போகிறேன். பாதுகாப்பு கருதி மட்டுமல்ல. நான் சற்று அமைதியாக இருக்க வேண்டும் என்று விரும்புகிறேன். அருண்மொழி உன் தந்தைக்குப் பதிலாக உன்னிடம் இப்பொழுது ஒன்றைச் சொல்லப் போகிறேன். என் மகனும் இளவரசருமான இராஜேந்திரனுக்கு வெகுசீக்கிரம் நான் சக்ரவர்த்தி பட்டாபிஷேகம் செய்து விடுவேன். எனக்குப் போதுமென்று தோன்றிவிட்டது. கும்பாபிஷேகம் முடியும்வரை நான் சக்ரவர்த்தியாக இருப்பதுதான் நல்லது. கும்பாபிஷேகம் முடிந்த பிறகு உடனடியாக சக்ரவர்த்தி பதவி கொடுத்தால், அதில் நிர்வாகக் குழப்பம் ஏற்படும். நான் சக்ரவர்த்தியாக பெயருக்கு சில மாதங்கள் இருந்துகொண்டு முழுப் பொறுப்பையும் இராஜேந்திரனிடம் கொடுத்து விடுவேன். தஞ்சைத் தரணியை, தொடர்ந்து அவன் ஆண்டு வரட்டும்."

சட்டென்று இளவரசர் இராஜேந்திரர் நிமிர்ந்து அருண்மொழியைப் பார்த்தார். அருண்மொழி இளவரசரை உற்றுப் பார்த்தான். அவர்கள் பார்ப்பதை சக்ரவர்த்தி மனதில் பதிய வைத்துக் கொண்டார். ஆனால் வேறெங்கோ பார்த்துப் பேசுவதுபோல் பேசினார்.

"என் ஆட்சியைவிட இராஜேந்திரனுடைய ஆட்சியில் இந்த சோழதேசம் இன்னும் வலிமையாகவும், செம்மையாகவும் இருக்குமென்று நான் நினைக்கிறேன். அருண்மொழி உன் தந்தையிடம் இதைச் சொல்வதைவிட, உன்னிடம் சொல்ல இறைவன் பணித்திருக்கிறான். அதனால்தான் உன் தந்தை வரவில்லை. அருண்மொழி என் மகனுக்குத் துணையாக பிரம்மராயராக நீயும் இரு. இது என் விருப்பம். உனக்கொரு தளபதி பதவிகூட கொடுக்கப்படவில்லை என்று எனக்குத் தெரியும். ஆனால், என் மகன் சக்ரவர்த்தியாகப் பட்டமேற்ற அன்றே உன்னை பிரம்மராயராக நான் நியமனம் செய்து சேனாபதி என்று அறிமுகப்படுத்துவேன். இப்போது நீங்கள் இருவரும் இந்த இடத்தைவிட்டு விலகி மற்ற பணிகளைப் பார்க்க ஆரம்பியுங்கள்.

இராஜேந்திரா... உன் முகம் களைப்பாக இருக்கிறது. கொஞ்சம் ஓய்வெடுத்துக் கொள். மூவேந்த வேளார் மட்டும் இங்கு வரட்டும். வேறு எவரையும் நான் சந்திக்க விரும்பவில்லை. அவசியமெனில் நாளை காலையில் பார்த்துக் கொள்ளலாம். நான் இங்கேயே பஞ்சவன்மாதேவிக்கு அருகிலேயே இருப்பேன். பஞ்சவன் மாதேவி குணமடைந்து விடுவாள் என்று அரண்மனைக்கும், மக்களுக்கும் சொல்லிவிடு.



பரசு நம்பூதிரி இறந்த இடத்தைக் கழுவிச் சுத்தம் செய்து ஒரு விளக்கு ஏற்றி வைக்கச் சொல். பரசு நம்பூதிரி இறந்த இடம் பார்த்தாயா... அது அக்னி மூலை. அது வராஹிக்கான இடம். வராஹி உக்ரமான தெய்வம். பலி வாங்காமல் ஓயமாட்டாள். முதல் பலி பரசு நம்பூதிரி. வராஹியைக் குளிர்விப்பது போல காளி கோயில் உவைச்சர்களிடம் ஏதேனும் பூஜைகள் செய்யச் சொல். ஆடு பலியோ, கோழி பலியோ செய்யட்டும். இங்கு சிவ ஸ்தாபனம் ஆனபிறகு அம்மாதிரி எதுவும் செய்ய முடியாது. நீங்கள் போகலாம்."

"தந்தையே நீங்கள் ஓய்வெடுத்துக் கொள்ளவேண்டாமா."

இளவரசர் நெருங்கி வந்து கேட்டார்.

"என்னைப் பற்றி நீ அக்கறைப்பட்டது போதும் இராஜேந்திரா. உன்னைப்பற்றியும், இந்தத் தேசம் பற்றியும் அக்கறைப்படு. நான் என்னைக் கவனித்துக் கொள்வேன். விரைவில் அரண்மனைக்குப் போய் சேர்."

உத்தரவு போல சக்ரவர்த்தி சொல்ல, சற்றுத் தயங்கிய இளவரசர் இராஜேந்திரர் எழுந்து நின்றார். மெய்க்காவல் படை வேலியைத் தாண்டி வெளியே போய் குதிரையில் ஏறிக்கொண்டார். அருண்மொழியும் பின் தொடர்ந்தார். மூவேந்தவேளார் வருகிறார் என்ற தகவல் சிறிது நேரத்திற்குப் பிறகு சக்ரவர்த்திக்குச் சொல்லப்பட்டது.

மூவேந்த வேளார் கவலையோடு பஞ்சவன் மாதேவியைப் பார்த்துவிட்டு வந்தார்.

"அவர்களைக் கைது செய்திருக்கிறார்களாமே." என்று மெல்லிய குரலில் கேட்டார்.

"ஏதோ நடக்கிறது. எது பற்றியும் எனக்கு அக்கறையில்லை. என்னுடைய கவலையெல்லாம் இந்தக் கோயில் பூரணமாக முடிய வேண்டும். கும்பாபிஷேகம் நல்லபடியாக நடைபெற வேண்டும். இராஜராஜனுடைய துக்கத்திற்காக எதுவும் நின்றுவிடக்கூடாது. எந்த துக்கத்திற்காகவும் இந்த உலகம் நின்றதாக சரித்திரம் இல்லை.

மண் எடுக்கின்ற வேலை நாளைக் காலையிலிருந்து இன்னும் விரைவாகவும் இன்னும் சீராகவும் நடைபெற வேண்டும். இந்த மண் எடுக்கும் வேலையில் நடந்த குறைகளெல்லாம் களையப்பட

வேண்டும். மண்ணை அப்புறப்படுத்தி விட்டு சிற்பிகளுக்கு கோயிலைக் கொடுத்துவிட வேண்டும். அவர்கள் இரவு பகலாய் வேலையைச் செய்து விடுவார்கள். பாதுகாப்பு கருதி என்னை மெய்க்காவல் படையினர் மக்களுக்கு அருகே வரவிட மாட்டார்கள். மக்களுக்கு அருகே நான் போனதால் மக்கள் எனக்கருகே வரவேண்டுமென்று மறுபடியும் முயற்சி செய்வார்கள். பாதுகாப்புப் படையினரிடம் அடி வாங்குவார்கள். அதை நான் விரும்பவில்லை. என் பொருட்டு என் மக்கள் எவரும் துன்பப்படுதல் கூடாது. எனவே நான் மக்களிடமிருந்து விலகியிருப்பேன். அதுமட்டுமல்ல, பஞ்சவன்மாதேவியோடு அருகேயிருக்கவும் நான் விரும்புகின்றேன்.

எனவே, மூவேந்த வேளாரே தங்களுடைய எல்லாப் பணிகளையும் ஒதுக்கி வைத்துவிட்டு கோயில் பணியில் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும். உங்களுக்குத் துணையாக எவரை வேண்டுமானாலும் அழைத்துக் கொள்ளலாம்.''

''உங்கள் கட்டளை சக்ரவர்த்தி. உங்கள் மன நிலை எனக்குப் புரிகிறது. பஞ்சவன்மாதேவியோடு நீங்கள் இருந்தால்தான் அவர் நலமாக உடல் தேறி நடமாடுவார். நான் அவருக்காக பிரார்த்தனை செய்கிறேன். பல கோயில்களில், பஞ்சவன்மாதேவி ஊறுத்தையடையாமல் பிழைத்து நடமாட வேண்டுமென்று சிறப்பு பூஜைகள் செய்து கொண்டிருக்கிறார்கள். நாளை காலையிலிருந்து எல்லாக் கோயில்களிலும் இந்தப் பூஜை நடைபெறும். நீங்கள் சொல்வது போல இந்தக் கோயில் பணியில் ஒரு சிறிய சுணக்கம்கூட இல்லாமல் மிக விரைவாய் முன்னைக்காட்டிலும், விரைவாய் நடைபெறும் என்று உங்களுக்கு வாக்கு தருகிறேன்.''

சக்ரவர்த்தி எழுந்து தன்னிலும் வயதான மூவேந்த வேளாரைத் தழுவிக் கொண்டார்.

''உங்களை நான் சிரமப்படுத்துகிறேன். உங்கள் வயதைக்கூட பார்க்காமல் உங்களுக்கு நான் சிரமம் தருகிறேன். தயவு செய்து மன்னிக்க வேண்டும். இது காலத்தின் கட்டளை.''

''நீங்கள் சொல்வது புரிகிறது. அனைத்தும் செவ்வனே நடக்கும். கவலையே வேண்டாம்.''

''இன்னொரு விஷயமும் சொல்ல வேண்டும்.''

''சொல்லுங்கள்.''



''சக்ரவர்த்தியாக இளவரசர் இராஜேந்திரனை வெகு சீக்கிரம் பிரகடனப்படுத்துவேன். அந்தச் செய்தியையும் மக்களிடையே பரப்புவேன். வருங்காலச் சக்ரவர்த்தி என்ற நினைப்போடு மக்கள் அவரைத் தொடரட்டும். நமது பகைவர்களுக்கும் இது பேரிடியாக இருக்கும். இராஜராஜனைப் போல அமைதியாய், எளிமையாய் இராஜேந்திரன் இருக்க மாட்டான் என்பது அவர்களுக்குத் தெரியும். தூது அனுப்பவோ, ஒற்றர் அனுப்பவோ தயங்குவார்கள்.''

''மிக மிக நல்ல செய்தி. நம் மக்கள் இதை விரும்புவார்கள். விடைபெறுகிறேன்.'' சிரம்தாழ்த்தி வணக்கம் சொல்லி தென்னவன் மூவேந்தவேளார் வெளியேறினார்.

அரசர் ஆதுரச்சாலை திண்ணையிலேயே அமர்ந்திருந்தார். எழுந்து சால்வையைப் போர்த்தி கொண்டு ஆதுரச் சாலைக்குள் நுழைந்தார்.

முன் பக்கத்து பெரிய அறையில் ஆறு குத்துவிளக்குள் ஐந்து முகங்களுடன் சுடர்விட்டு எரிந்து கொண்டிருந்தன. பசுநெய்யின் மணம் அந்த விளக்குகளிலிருந்து தீவிரமாய் வீசிக் கொண்டிருந்தது. விளக்குகளிலிருந்து வந்த புகை மேலேயுள்ள தட்டோடுகளில் தொட்டு அங்கிருந்து புகைப்போக்கிகளின் வழியாக வெளியே போயிற்று. ஜன்னலிலிருந்து காற்று உள்ளே வீசிக் கொண்டிருந்தது. பஞ்சவன்மாதேவி ஆழ்ந்து தூங்கிக்கொண்டிருந்தாள்.

''எப்படியிருக்கிறாள் பஞ்சவன்மாதேவி.''

மெல்லிய குரலில் சக்ரவர்த்தி கேட்டார்.

''முன்னும் பின்னுமாய் இருக்கிறார். இன்னும் நான்கு நாழிகை நாழிகை போனபிறகுதான் சொல்ல முடியும். அரசருக்கு உணவு ஏற்பாடு செய்யப்படுமா.''

''நீங்கள் கவலைப்படாதீர்கள். என் மெய்க்காவல் வீரர்கள் பார்த்துக் கொள்வார்கள்.''

உள்ளே கூடத்தினுள் அவருக்கு முக்காலிபோட்டு அமர வைத்து முன்னே சிறிய மர ஆசனம் போட்டு அந்த ஆசனத்தில் இலைபோட்டு அதைச் சுத்தம் செய்து ஒரு மெய்க்காவல் வீரன் உணவு வைத்தான். மெல்ல அவனை நிமிர்ந்து பார்த்தார்.

''மிளகுக் குழம்பும், தயிரும் இருக்கிறது''

மிருதுவாகச் சொன்னான்.

''வெறும் தயிர் போதும்.''

சோற்றின் நடுவே தயிர் ஊற்றப்பட்டது. தொட்டுக் கொள்ள மிளகுக்குழம்பு ஊற்றப்பட்டது.

சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீஇராஜராஜத்தேவர் எவர் துணையுமின்றி தனியே மௌனமாய் உணவு உண்டார்.

அரண்மனையில் இருப்பவர்கள் உணவு எடுத்துக் கொண்டார்களா தெரியவில்லையே.

யோசித்தார். திரும்ப மெய்க்காவல் வீரனைப் பார்த்து நான் உணவு எடுத்துக்கொண்டு விட்டேன் என்று அரண்மனைக்குச் செய்தி சொல். யாரும் பட்டினி இருந்துவிட வேண்டாம்.

அந்த வீரன் தலையசைத்தான். அரசர் கை கழுவினார்.

''வெற்றிலை வேண்டுமா.''

தட்டில் வெற்றிலையும், பாக்கும் வந்தது. வேண்டாமென்று அரசர் மறுத்தார். மறுபடியும் வாசலுக்கு வந்தார்.

மக்களை அந்தப் பக்கமே வரக்கூடாது என்று தொலைவிலேயே தடுத்துவிட்டார்கள்.

எதிரே பாதையும், பாதை தாண்டி முதற் கோபுரமும், முதல் கோபுரம் தாண்டி இரண்டாம் கோபுரமும், இரண்டாம் கோபுரம் தாண்டி உள்ளுக்குள் உயரமாய் விமானமும் தெரிந்தன.

சக்ரவர்த்தியார் அமைதியாக மூன்றையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டிருந்தார்.

சற்று நகர்ந்து திண்ணைக்கு நடுவே போய் தூணில் முதுகு சாய்த்துக் கொண்டார்.

சேனாபதி பிரம்மராயர் வரலாமா என்று ஆள் அனுப்பியிருக்கிறார்.

ஒரு மெய்க்காவல் வீரன் அருகே வந்து அமைதியாகப் பேசினான். சக்ரவர்த்தி யோசித்தார்.

''வேண்டாமென்று சொல். எதுவாயினும் நாளை காலை பார்த்துக் கொள்ளலாம் என்று சொல். நான் சற்று அமைதியாக இருக்க விரும்புகின்றேன். தனிமையை விரும்புகின்றேன் என்று சொல்.''

அவன் நகர கைதட்டி அழைத்தார்.

''பணிவாக வேண்டிக் கொண்டேன் என்று சொல்.''



அவன் தலையசைத்துவிட்டுப் போனான். அமைதியாக எந்தச் சிந்தனையுமின்றி சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீஇராஜராஜத்தேவர் அந்த ஆதுரச் சாலையில் ஒரு சாதாரண வழிப்போக்கன் போல வெள்ளை வேட்டியும், வெள்ளைச் சால்வையும் அணிந்து உடைவாள் கழற்றிவிடப்பட்டிருக்க திண்ணைக்குக்கீழே பாதணிகள் கிடக்க கண்மூடி உட்கார்ந்திருந்தார்.

நடுநிசியில் யாரோ அருகே வருவது தெரிந்தது. மெல்லக் கண் விழித்துத் திரும்பிப் பார்த்தார். வைத்தியர் கை கட்டி நின்றிருந்தார். அவருக்குப் பின்னே ஒரு பணிப்பெண் நின்றிருந்தாள்.

''என்ன.''

வைத்தியர் அருகே வந்தார்.

''சொல்லுங்கள். என்ன வேண்டும்.''

''நாடி தாழ்ந்து கொண்டு வருகிறது. என் கணக்குத் தவறாகப் போய்விடும் என்று நினைக்கிறேன்.''

''என்ன சொல்கிறீர்.''

சக்ரவர்த்தி பதட்டப்பட்டார்.

''இது வைத்திய சாத்திரத்தினுடைய விதி. விஷம் விஷத்தை அறுக்கும் என்பது அந்த விதியின் படிதான். நான் விஷத்திற்கு விஷம் கொடுத்தேன். ஆனால், நான்கு பற்கள் கீழே விழுந்து விட்டன. இரண்டாவது விஷத்தின் வேகத்தை பஞ்சவன் மாதேவியார் தாங்கவில்லை என்று நினைக்கிறேன். அவருடைய வயது ஒத்துழைக்கவில்லை என்று நினைக்கிறேன்.

சுவாசம் அதிகமாகிறது. நாடி தாழ்ந்து போகிறது. அலைந்து கொண்டிருந்த நாடி தாழ ஆரம்பிப்பது நல்ல விஷயமல்ல. கால்களையும் கைகளையும் முறுக்கிக் கொள்கிறார். அவருக்கு கடும் தலைவலி இருக்க வேண்டுமென்று நினைக்கிறேன்.

அதனால் அவர் தலையையும் அசைக்கிறார். இன்றைக்குள் பஞ்சவன்மாதேவி இறந்துவிடலாம். என்னால் ஆனது செய்தேன். அவரைப் பிழைக்க வைக்க முடியுமென்ற நம்பிக்கை எனக்குப் போய் விட்டது. கடைசி நேரம் என்பதால் உங்களிடம் சொல்லி, அவருக்கு அருகே இருங்கள் என்று வேண்டிக் கொள்வதற்காக வந்தேன்.

இந்தக் கையாலாகாத வைத்தியனைக் குத்திக் கொன்று விடுங்கள். பஞ்சவன்மாதேவி அவர்களை அருகேயிருந்து கடைசி நேரம் கண் விழித்தால், ஏதேனும் பேச முற்பட்டால் நீங்களும்

பேசுங்கள். உயிர்ச்சக்தி அனைத்தையும் திரட்டி பஞ்சவன்மாதேவி உங்களிடம் பேசக்கூடும். அப்படியொரு அசைவு அவருக்கு இருக்கிறது. தயவு செய்து உள்ளே வாருங்கள்.''

அவர் கிட்டத்தட்ட அழுதபடியே தழுதழுத்த குரலில் பேசினார்.

சக்ரவர்த்தி உடையார் கண்மூடி அமர்ந்திருந்தார். மெல்ல திண்ணை விட்டு எழுந்தார். வெளியே போனார்.

அந்தப் பணிப்பெண்ணும், வைத்தியரும் அவரைப் பின் தொடர்ந்தார்கள். அறைக்குள் நுழைய கால் இழுத்து உதைத்து, இழுத்து உதைத்து பஞ்சவன்மாதேவி அவஸ்தைப்பட்டுக் கொண்டிருப்பது புரிந்தது. நீண்ட மூச்சுக்கள் வெளியே வந்தன. கைகளை முறுக்கிக் கொள்வதும் புரிந்தது. அவர் அருகே போனார் திரும்பி வைத்தியரைப் பார்த்தார்.

''ஏன் கவலைப்படுகிறீர்கள். நீங்கள் நல்ல வைத்தியர் என்பதை நான் அறிவேன். இந்த நாடும் அறியும். உங்களால் இயன்றதைச் செய்தீர்கள். பயப்பட வேண்டாம். என்னை பஞ்சவன்மாதேவியிடம் விட்டுவிட்டு விலகியிருங்கள். கதவு சார்த்தப் படட்டும்.''

அவர் மெல்ல வெளியேறினார். கதவு சார்த்தப் பட்டது.

பஞ்சவன்மாதேவி கட்டிலில் போய் இராஜராஜர் அமர்ந்து கொண்டார். அவர் தலையைத் தடவி விட்டார். முகம் கறுத்துக் கிடந்தது. காது மடல்களை நீவினார். தோளைத் தடவினார். முகவாயை மெல்லத் தடவினார். குனிந்து இரண்டு கன்னங்களிலும் முத்தமிட்டார். அவள் காதோரம் தன் முகத்தை வைத்துக் கொண்டார்.

என்ன ஆயிற்று உனக்கு. பஞ்சவன்மாதேவி. ஏன் இப்படி அவசரப்படுகிறாய். என்னைவிட்டுப் போய்விடப் போகிறாயா. என்னைவிட்டு உன்னால் போக முடியுமா. அப்படிப் போவது நல்லது என்று நினைக்கிறாயா. எல்லா முட்டாள் பெண்களையும் போல தீர்க்க சுமங்கலியாக கணவன் இருக்கும் போதே, பூவும் பொட்டுமாகப் போய்விடுகின்ற ஒரு நாடகத்தை நீயும் ஆடிக் கொண்டிருக்கிறாயா. பஞ்சவன்மாதேவி, நீ இல்லாவிட்டால் நான் எப்படி உயிர் வாழ்வேன். என்னை அறிந்து எனக்கு யார் உதவி செய்வார்கள். ஒரு குவளை தண்ணீர்கூட எனக்கு நேரத்திற்குக் கொண்டு கொடுக்க யார் இருக்கிறார்கள். இப்படி திடீரென்று அனாதையாக விட்டுவிட்டு நகர்ந்தால் இது நல்லதா. பஞ்சவன் மாதேவி நீ என்னைவிட்டுப் போகக்கூடாது. போராடு, உன் உடலோடும், உயிரோடும் போராடு, போக மாட்டேன் என்று



பிடிவாதம் செய். காலன் கூப்பிட்டால் வரமுடியாது என்று எட்டி உதை. விலகிப் போ.. போ.. என்று சீறு.

கூற்றுவனே... போ... வெளியே போ என்று உள்ளுக்குள் வந்து தைக்கின்ற கூற்றுவனை உதறி அனுப்பு. என் புருஷன் என்னைக் கூப்பிடுகிறார் என்று சொல். என் புருஷன் போன பிறகு என்னை அழைத்துக்கொள் என்று சொல். பஞ்சவன்மாதேவி என்ன முட்டாள்தனம். எனக்கு முன்னால் போவதா அதைச் செய்யக் கூடாது. நான் இறப்பதை நீ பார்க்கவேண்டாமா. என் மரணத்தை நீ அனுபவிக்க வேண்டாமா. நான் எரிந்து சாம்பலான பிறகு எனக்கு தண்ணீர் ஊற்றி, பால் ஊற்றி சமனப்படுத்தி என் பொருட்டு காவிரியிலும், கொள்ளிடத்திலும் குளித்து நீர்வார்க்க வேண்டாமா. தானங்கள் செய்ய வேண்டாமா. நீயில்லையெனில் இவையெல்லாம் யார் செய்வார்கள்.

பஞ்சவன்மாதேவி என் மரணம் நிம்மதியாக இருக்க வேண்டுமென்றால் நீ உயிரோடு இருக்க வேண்டும். நீ இறந்து போனால் நான் செத்துப் போவேனடி. எப்படி செத்துப் போவேன் தெரியுமா. உயிரோடு இருப்பேன். ஆனால், உள்ளுக்குள் செத்துப் போவேன். மனம் செத்துப் போய்விடும். ஒவ்வொன்றுக்கும் உன் பெயரை அழைத்து அழைத்து தடுமாறி, தனியே தவித்து வேறு எவரும் வந்தால் சீறி விழுந்து நான் பைத்தியம் போல நடக்க வேண்டியிருக்கும். அந்தப் பரிதாபமான நிலைமை வரவேண்டுமா, ஊர் என்னைப் பரிகசிக்க வேண்டுமா, ஒருவர் என்னைப் பார்த்து ஏளனம் செய்தாலும், சீறி விழுகின்ற பெண்ணாயிற்றே நீ. ஊர் மொத்தமும் என்னைக் கொண்டாடிக் கொண்டிருக்க நீ என்னை விடப்போகிறாயா. அடியே.. எனக்கு வயதாகிவிட்டதடி. உன் துணை எனக்கு இப்போதுதானே தேவை.

எனக்குப் பதினாலு மனைவிகள். ஆனால் அத்தனையும் அரசியல் சமூக நிர்ப்பந்தம். சக்ரவர்த்தி என்பதால் எனக்குக் கொடுக்கப்பட்ட பரிசுகள். பஞ்சவன்மாதேவி, நான் காதலித்தது உன்னை மட்டும்தானே. நான் வேண்டுமென்று, விரும்பியது உன்னைத்தானே. என்னை மணந்து கொள்கிறாயா என்று எந்தப் பெண்ணையும் கேட்டதில்லையே. உன்னைத்தவிர. என்னை விட்டுப் போகிறேன் என்று சொன்னால் நான் என்ன செய்வேன். உன்னைப் போகவிடமாட்டேன். நீ போகக்கூடாது. இது என் கட்டளை. நான் என்ன தவறு செய்தேன் பஞ்சவன்மாதேவி. எதற்காக இந்தப் பெரிய தண்டனை.

நான் சக்ரவர்த்தி. சோழதேசத்தின் அரசன். சோழதேசத்தின் பாதுகாப்புக்காகத்தான் நான் போர் செய்திருக்கிறேனே தவிர, கொலை செய்திருக்கிறேனே தவிர, போர் என்று வாள் உயர்த்தி நின்றவரைத்தான் வெட்டியிருக்கிறேனே தவிர வேறு யாரையும் படுத்தியதில்லை.

பஞ்சவன்மாதேவி... சிவன் மீது எனக்கு கொள்ளை ஆசை. நாயன்மார்கள் கதை மீது எனக்குப்பித்து. இந்த நாயன்மார் கதைகளைச் சொல்லக்கூடிய சிவனை நான் நிலைநிறுத்த வேண்டும் என்றுதான் இந்தக் கோயில் எழுப்பிக் கொண்டிருக்கிறேன். சைவத்தின் அற்புதத்தைப் புரிந்து கொண்டுதான் இந்தப் பெருங்கோயிலை நிர்மானித்துக் கொண்டிருக்கிறேன். சைவ தத்துவத்தை சிலை ரூபமாகச் செய்து கொண்டிருக்கிறேன்.

பஞ்சவன்மாதேவி நான் இப்படிச் செய்தது தவறு என்றால், நீ என்னை விட்டுப்போ. நான் செய்தது சரி என்றால் என்னை விட்டு நீ நகரக் கூடாது. என்னை விட்டுப் போகக்கூடாது. என்னை விட்டு நீ போனால் நான் உறுதியாகக் கொண்டிருக்கிற இந்தச் சைவம் பிழை என்று அர்த்தமாகி விடும். அந்த நிலையை இறைவன் ஒருநாளும் எனக்கு ஏற்படுத்தமாட்டான். எனக்கு என் பஞ்சவன்மாதேவியைக் கொடு என்று கேட்கிறேன்.

அரசர் சாளரத்தின் வழியே இரண்டு கோபுரங்களையும் பிறகு தொலைவில் நின்ற விமானத்தையும் மறுபடியும் பார்த்தார்.

எவ்வளவு அழகாக இருக்கிறது தெரியுமா பஞ்சவன்மாதேவி. இதை இந்தத் தொலைவிலிருந்து பார்த்தாயா. இங்கிருந்து பார்க்கும் போது கிறுகிறுப்பாக வருகிறது. நாமா செய்தோம். நான் செய்தோம் என்று திகைப்பு ஏற்படுகிறது. இதை நான் செய்யவில்லை. எல்லோரும் கூடிச் செய்தது. அதில் உனக்கும் பங்குண்டு. எல்லோருக்கும் பங்கு உண்டு. என் மனைவியருக்குப் பங்கு உண்டு. இளவரசருக்குப் பங்கு உண்டு. என் அதிகாரிகளுக்குப் பங்கு உண்டு. எல்லோரும் சேர்ந்து கட்டிய கோயில். எல்லோரும் உன்னை நேசித்திருக்கிறார்கள். இவர்கள் அத்தனை பேரும் அழுது புலம்பும்படி எங்களைவிட்டுப் போய்விடுவாயா. இறைவன் அத்தனை கல் நெஞ்சனா. இல்லை இறைவன் நிச்சயம் உன்னை எனக்குத் தருவான்.

அரசர் பஞ்சவன்மாதேவி அருகே வந்து உட்கார்ந்து கொண்டார். கைகளைக் கோர்த்துக் கொண்டார். மறுபடியும் குனிந்து அவள் காதருகே முத்தமிட்டார்.



மறையுடையாய் தோலுடையாய்
வார்சடைமேல் வளரும்
பிறையுடையாய் பிஞ்ஞகனே
என்றுனைப் பேசினல்லால்
குறையுடையார் குற்றம்
ஓராய் கொள்கையினாலுயர்ந்த
நிறையுடையார் இடர்களையாய்
நெடுங்களம் மேயவனே...

பஞ்சவன்மாதேவியை நோக்கி கை கூப்பினார்.

நின்னடியே வழிபடுவான்
நிமலா நினைக்கருத
உன்னடியார் உயிரைவவ்வேல்
என்று அடற் கூற்றுதைத்த
பொன்னடியே பரவிநாளும்
பூவொடு நீர் சுமக்கும்
நின்னடியார் இடர்களையாய்
நெடுங்களம் மேயவனே...

என்று பாடி விமானம் நோக்கிக் கை கூப்பினார். மெல்ல நெற்றியில் முத்தமிட்டார். வெளியே வைத்தியருக்கு அரசரின் பாட்டுக் குரல் கேட்டது நெகிழ்ந்தார்.

மன்னர் "என் சிவனே... என் சிவனே..." என்று அழைத்தார். முறுக்குகின்ற கைகளை மெல்லத் தடவிவிட்டார். கால் உதைத்து முறுக்கிக் கொள்ள அவைகளை மெல்லப் பிடித்துவிட்டார்.

வலி நகரட்டும். வலி போகட்டும் உன் வலி உன்னிடமிருந்து போகட்டும் என்று வேண்டிக் கொண்டார்.

அவள் அமைதியானாள்.

மெல்ல அவளுடைய புறங்கால்களில் முத்தமிட்டார். உள்ளங் கால்களைத் தன் கன்னங்களில் வைத்துக் கொண்டார். மெல்ல கால்களைக் கட்டிக் கொண்டார்.

என் அம்மா... என் தாயே... என்னை விட்டுப் போகாதே. என்னைவிட்டுப் போகாதடி என்று கெஞ்சினார். அப்படியே நின்றார். உள்ளே காற்று நுழைந்தது. மெல்ல அவரை வருடிக் கொடுத்தது. அவளுடைய கேசங்கள் அலைந்தன. இராஜராஜர் கண் மூடிக்கிடந்தார். ஒருக்களித்த கதவின் வழியாக பணிப்பெண்

பார்த்தபோது பஞ்சவன் மாதேவியின் காலைக் கட்டிக் கொண்டு இராஜராஜர் படுத்துக் கிடப்பது தெரிந்தது.

வைத்தியரிடம் விஷயம் சொல்லி, எழுப்பட்டுமா என்று பணிப்பெண் கேட்டார்.

''வேண்டாம். அது உறக்கமல்ல. அவர் தன் மனைவியின் காலைக் கட்டிக் கொண்டு பிரார்த்தனை செய்கிறார். எனவே, ஒரு பொழுதும் தொந்தரவு செய்து விடாதே. அவர் வரும்வரை காத்திரு. தூங்கிவிடாதே.'' என்று சொன்னார்.

மெல்ல கதவு திறக்கும் சத்தம் கேட்டது. வைத்தியரும், பணிப் பெண்ணும் கதவுக்கருகே போனார்கள். மன்னர் வெளியே வந்தார்.

''தீபங்களைக் குறைத்துவிட்டேன். இரண்டேயிரண்டு தீபங்கள் தான் எரிகின்றன. சற்று உறங்கலாம் என்றிருக்கிறேன்.'' கூடத்திற்கு வந்தார். அங்கிருந்து முற்றத்தில் இறங்கினார். முற்றத்தில் ஒரு கட்டில் போடப்பட்டிருந்தது. அந்தக் கட்டிலில் ஒரு துணி விரிக்கப் பட்டது. தலையணை வேண்டுமா என்று பணிப்பெண் கேட்க, வேண்டாம் மரக்கட்டை கொண்டு வா என்று சொன்னார்.

மரப்பலகை கொண்டு வரப்பட்டது. மரப்பலகையைத் தலைக்கு வைத்துக் கொண்டார். கால் நீட்டினார். நிலவு அவர்மீது படர்ந்தது.

பணிப்பெண் வேறொரு வெள்ளைச் சால்வையை அவர்மீது போர்த்தினார். அவர் மெல்லிய புன்முறுவலுடன் சரி என்று தலை யசைத்தார். கண் மூடினார். ஒருக்களித்தார். பணிப்பெண் பெரிய விசிறியால் நிதானமாக அவருக்கு விசிற, தூங்கிப் போனார்.

காலை நேரம் முதற்கோழி கூவியதும் வைத்தியர் திண்ணையி லிருந்து எழுந்து உள்ளே போய் பஞ்சவன்மாதேவியின் நாடி பிடித்துப் பார்த்தார். சீராக இருந்தது. பணிப்பெண்ணை அழைத்து பால் கொண்டு வரச் சொன்னார். காய்ச்சி ஆறின பால் எடுத்து வந்ததும் அதை மெல்ல பஞ்சவன்மாதேவியின் வாயில் ஊற்றினார். பால் உள்ளே போயிற்று. மூக்கில் கை வைத்துப் பார்த்தார். சுவாசம் சீராக இருந்தது. காலிலுள்ள நாடியும் நன்றாக இருந்தது. கையிலுள்ள நாடியும் அமைதியாக இருந்தது. எழுந்து வெளியே வந்தார். அரசர் ஆழ்ந்து உறங்கிக் கொண்டிருப்பது தெரிந்தது. வாசலுக்கு வந்து முகம் கழுவி வாய்க் கொப்பளித்த போது குதிரைகள் வரும் சப்தம் கேட்டது.



வெற்றிலைப்பெட்டியை வைத்துவிட்டு வாசற் படலைத் திறந்தார். சேனாபதியும் பிரம்மராயருமான கிருஷ்ணன்ராமனும், அருண்மொழியும், இளவரசர் இராஜேந்திரரும் குதிரையிலிருந்து இறங்கினார்கள். தலையில் போட்டிருந்த சால்வைகளை விலக்கி படல் திறந்து உள்ளே வந்தார்கள். வைத்தியருக்கு பிரம்மராயர் வணக்கம் சொல்ல, வைத்தியர் பணிவாக வணக்கம் சொன்னார்.

''எப்படியிருக்கிறார் பஞ்சவன்மாதேவி சக்ரவர்த்தி எங்கே'' என்று கேட்டார்.

''சக்ரவர்த்தி அவர்கள் முற்றத்தில் தலைக்கு மனைக்கட்டை வைத்து உறங்கிக் கொண்டிருக்கிறார். பஞ்சவன்மாதேவியின் நாடித்துடிப்பு சீராக இருக்கிறது. மூச்சு வாங்குவது குறைந்து விட்டது. ஆனால், நடுநிசியில் மிக மோசமாக இவைகள் இருந்தன. நான் அரசரிடம் தெரிவித்தேன். அரசர், உன்னுடைய வேலையைச் நீ செய்துவிட்டாய். நான் என் வேலையை செய்கிறேன்'' என்று உள்ளே போய் பஞ்சவன்மாதேவியோடு அடிக்குரலில் பேசிக் கொண்டிருந்தார். அரசர் பேசிவிட்டுப் போனதுதான் பஞ்சவன் மாதேவியைக் குணப்படுத்தியிருக்கிறது. இதேநிலை நீடித்தால் இன்னும் ஒரு வாரத்தில் பஞ்சவன்மாதேவி பேசத் துவங்கி விடுவார். ஆனால்...

''என்ன ஆனால்...''

இளவரசர் மெல்ல அதட்டலாகக் கேட்டார்.

''பஞ்சவன்மாதேவிக்கு தலைமுடி சுத்தமாக உதிர்ந்துவிடும். பஞ்சவன்மாதேவிக்கு பற்கள் அனைத்தும் கொட்டிப் போய் விடும். பஞ்சவன்மாதேவியின் தோலில் சுருக்கங்கள் காணும். பஞ்சவன்மாதேவி முதுகு வளைந்து கோலூன்றித் தான் நடக்க வேண்டியிருக்கும். காலுக்குண்டான வலுவு இருக்காது. நாம் பார்த்த பஞ்சவன்மாதேவியில்லாது வேறொரு பஞ்சவன் மாதேவியாக இருப்பார். ஆனால், வெகுநிச்சயம் உயிரோடு இருப்பார். தொடர்ந்து மருந்துகள் சாப்பிட்டு வரவேண்டும்.''

''அதாவது பஞ்சவன்மாதேவி கிழவியாகி விடுவார் என்று சொல்கிறாயா.''

கிருஷ்ணன்ராமன் உரக்கக் கேட்டார். ''ஆமாம் ஒரு வயதான எண்பது வயதிற்கும் மேலான ஒரு கிழவியாகத்தான் பஞ்சவன் மாதேவி நமக்குக் காட்சியளிப்பாள். இந்தக் கோரத்திற்கு...''

''நிறுத்து... நிறுத்து...''

பிரம்மராயர் அவசரமாக நிறுத்தினார். அவர்கள் கண்கள் வைத்தியரைத் தாண்டிப் பார்த்தன.

அங்கே சக்கரவர்த்தி உடையார் இருட்டோடு இருட்டாக நின்று கொண்டிருந்தார். மெல்ல இறங்கி நிலவொளிக்கு வந்தார்.

''இந்தக் கோரமாக இருப்பதற்குப் பதில் பஞ்சவன்மாதேவி இறந்து போயிருக்கலாமென்று நினைக்கிறீர்களா. பஞ்சவன் மாதேவி எனக்கு அனுக்கியாக இதுவரை இருந்தார். இப்பொழுது தலைமுடி கொட்டி, பற்கள் விழுந்து, தோல் சுருங்கி, முதுகு கூனானால் என்ன. என் தாய் இந்த வயதில் எப்படியிருப்பாள். அப்படியிருந்துவிட்டுப் போகிறாள். அதாவது அனுக்கியாக இருந்த பஞ்சவன்மாதேவி என் தாயாக இருப்பாள். மனைவியாகப் பார்த்த பெண்ணை நான் தாயாகப் பார்க்கப் போகிறேன். இது பெரிய கொடுப்பினை அல்லவா.

பஞ்சவன்மாதேவி உயிரோடு இருப்பார் என்று நீங்கள் சொன்ன வாக்கியமே எனக்கு மிகுந்த சந்தோஷமளிக்கிறது. மிகப்பொறுப்போடு தைரியமாக நஞ்சுக்கு நஞ்சுதான் மருந்து என்று மறுபடியும் பாஷாணம் அவருக்குக் கொடுத்தீர்களே.. அதுதான் அவள் பிழைத்தற்குக் காரணம். உங்களுக்கு என் நன்றியைச் சொல்லிக் கொள்கிறேன். தகுந்த சன்மானம் உங்களை வந்து அடையும். இந்த ஆதுரச்சாலை மேலும் சிறப்பாக இருக்க அரசாங்கம் ஆவன செய்யும்.

இங்கு விசிறிய பெண் உட்பட இங்கு வேலை செய்கிற பணிப் பெண்களுக்கு நெற்கூலி அதிகமாக்கப்படும். இதற்கான தனித்த ஒலை உங்களுக்கு வந்து சேரும். மறுபடியும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நான் போய் அரண்மனையில் பட்ட மகிஷியையும், மற்ற பெண்டிரையும் பார்த்து அவர்களை இங்கு அழைத்து வரப்போகிறேன்.'' வெளியே வர, அவர் குதிரை அவிழ்த்துத் தரப்பட்டது. அவர் குதிரையில் தாவி ஏறினார்.

''யாரும் இங்கேயே மயங்கி நிற்க வேண்டாம். பஞ்சவன் மாதேவியை வைத்தியர் பார்த்துக் கொள்வார். உங்கள் வேலை களை நீங்கள் கவனியுங்கள். மூவேந்த வேளாருக்குத் துணையாக இருங்கள்.''

உத்தரவிட்டார்.

அவர் குதிரை துள்ளல் நடையோடு வெளியே போயிற்று. மெய்க்காவல் படை அவரைச் சூழ்ந்து கொண்டது. வைத்தியர் நீண்ட நெடுஞ்சாண்கிடையாய் அரசர் போன திக்கில் விழுந்து வணங்கினார். எழுந்து நின்றார்.



''என்ன ஆயிற்று வைத்தியரே.. எதற்கு இப்படி ஒரு நெஞ்சாண் வணக்கம்.''

கிருஷ்ணன்ராமன் மிருதுவான குரலில் விசாரித்தார்.

''இவர் சக்ரவர்த்தி. ஆற்றலுள்ள பெரிய மனிதர். மிகப்பெரிய வீரர் என்று தான் நினைத்திருந்தேன். எல்லாவற்றையும் கட்டி ஆளக்கூடிய திறமைசாலி என்று கேள்விப்பட்டிருந்தேன் விஷ்ணு வின் அம்சங்கள் உடையவர் என்று பாடல் படித்திருக்கிறேன். புலியைப் பெற்ற பெண்மான் என்று இவர் தாயைச் சிறப்பித்துக் கூறி, இவர் புலி என்று விவரித்ததையும் நான் கேட்டிருக்கிறேன். இதெல்லாம்விட இன்று ஒன்று நான் தெரிந்து கொண்டேன். சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவர் ஒரு நல்ல மனிதர். மிகச்சிறந்த கணவர். பஞ்சவன்மாதேவி என்ற பெண்மணிக்கு ஆருயிர்க்காதலர். அவரின் ஒவ்வொரு அசைவும் பஞ்சவன் மாதேவியின் மீதுள்ள காதலை வெளிப்படுத்தியது.

என்னுடைய வைத்தியத்தால் பஞ்சவன்மாதேவி குணமாக வில்லை. சக்ரவர்த்தி அவர்கள் கைகூப்பி மனமுருகி தேவாரம் பாடி அவரை எழுப்பியிருக்கிறார். இது சக்ரவர்த்தியால் நிகழ்ந்தது. என்னால் நிகழ்ந்ததல்ல. அந்த மனிதர் தெய்வக்ஞன். கடவுளுக்கு நிகரானவர். எனக்கு சந்தேகமேயில்லை. இந்திரசமானன் என்று பாடல்கள் சொல்கின்றனவாம். இல்லை, இந்திரனுக்கும் மேலே சாட்சாத் சிவசொரூபம் சிவசொரூபம்.''

அவர் மறுபடியும் கைகூப்பினார்.

அங்குள்ள அனைவரும் தங்களை மறந்து கைகூப்பினார்கள்.

''தயவு செய்து அந்த மண்வெட்டியைக் கொடுத்து விடுங் களய்யா.''

''மண்வெட்டியா. எந்த மண்வெட்டி''

அந்தணர் கேள்விக்கு அந்த உலோகச் சிற்பிகள் சற்றுப் பதட்டத் தோடு கேள்விகேட்டார்கள்.

''அரசருக்கு மண்வெட்ட கொடுத்தீர்களே அந்த மண்வெட்டி.''

''எங்களிடம் திருப்பிக் கொடுத்து விட்டாரே.''

''நீங்கள் அதை அரசருக்குத்தானே பரிசளித்தீர்கள்.''

''ஆமாம்.''

"அரசருக்கு எப்பொழுது அதைப் பரிசளித்தீர்களோ அது அரசாங்கச் சொத்தாகி விட்டது. அது எங்களுடைய கணக்கிலே ஏற வேண்டும்."

"இல்லை ஐயா. அரசர் திரும்ப என் கையில்தான் கொடுத்தார்."

"ஒரு அரசர் மண்வெட்டியை வெட்டிவிட்டு தரையிலா போடுவார் அல்லது தோளில் இடுக்கிக் கொண்டு வயல் வேலை பார்க்கப் போவாரா? மரியாதைக்காக மூன்று முறை மண் கொத்திப் போட்டு பிறகு உங்களிடம் கொடுத்துவிட்டார். அது உங்களுடையதாகி விடுமா. அது நீங்கள் பலபேரிடம், பல கழஞ்சுகள் நன்கொடை வாங்கி உருக்கி செய்து அரசருக்கு கொடுத்த பரிசுப் பொருளல்லவா. அருகே நானிருந்தால் என்னிடம் கொடுத்திருப்பார். நான் சற்று தொலைவில் நின்று சகலமும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தேன். அவர் உங்களிடம் கொடுத்துவிட்டதால், நீங்களே வைத்துக் கொள்ளுங்கள் என்று பொருளா.

பலபேரிடம் பொற்கழஞ்சுகள் தானமாக வாங்கிச் செய்த மண்வெட்டியை உங்களுக்குச் சொந்தமாக்கிக் கொள்ள முடியுமா. இப்பொழுது அது உங்களுக்குச் சொந்தமெனில், அது யாருடைய சொந்தம். வைத்திருப்பவர் சொந்தமா அல்லது அத்தனை பேருக்கும் சொந்தமா. அத்தனை பேருக்கும் சொந்தமென்றால் எந்தக் கணக்கில் வரும். என்னவிதமாக உபயோகமாகும். கேள்விகள் இருக்கிறதல்லவா."

அந்த அந்தணர் நிதானமாகவும், கம்பீரமாகவும் பேசினார். உலோகச் சிற்பிகள் திகைத்தார்கள்.

"நான் சொல்வது புரிகிறதா. அல்லது இன்னும் விளக்கமாகச் சொல்லட்டுமா."

"நீங்கள் சொல்வது புரிகிறது. அது எங்கள் சொத்து இல்லை என்பது உண்மை."

"பிறகென்ன கொடுத்துவிடுங்கள்."

"உங்களிடம் எப்படிக் கொடுப்பது."

"வேறு யாரிடம் கொடுக்கப் போகிறீர்கள். நான் அரசாங்க நிர்வாகி. சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீஇராஜராஜத்தேவர் உங்களுக்குக் கட்டளையிட்டிருக்கின்ற உலோகச் சிற்பங்கள் செய்வதை மேற்பார்வையிடுகின்ற அதிகாரம் பெற்றவன். அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டவன். உங்களுக்கு வேண்டிய உலோகங்களைக் கொடுப்பதற்கும், செய்து முடித்த சிற்பங்களைக் கொண்டு போய் அரசரிடம் சேர்ப்பதற்கும் உத்தரவு பெற்றவன். ஒருக்காலும் அது உங்களிடம் இருக்க முடியாது. தயவு செய்து அந்த மண்வெட்டியைக் கொடுத்துவிடுங்கள்."



"ஆமாம்.. அது அரசாங்க சொத்து. நமக்கெதற்கு."

"இவரிடம் கொடுத்தோம் என்பதற்கு என்ன சாட்சி."

"ஒரு சாட்சியும் வேண்டாம். நான் ஓலையில் எழுதி கையெழுத்திட்டு அரசாங்க முத்திரையிட்டுத் தருகிறேன்."

"அப்புறம் என்ன கொடுத்துவிட வேண்டியது தானே."

அவர்களுக்குள்ளே வாக்குவாதம் ஆரம்பமாயிற்று.

அந்த அந்தணர் மௌனமாகக் காத்திருந்தார். வாக்குவாதம் முன்னும் பின்னுமாகப் போகவே கை தட்டினார். அவர்கள் திரும்பினார்கள்.

"இப்பொழுது நீங்கள் அந்த மண்வெட்டியைத் தரவில்லையென்றால், அந்த மண்வெட்டி பறிமுதல் செய்யப்படும். பறிமுதல் செய்வதைத் தடுத்தீர்கள் என்றால் கைது செய்யப்படுவீர்கள். உங்களுக்கு மிக முக்கியமான வேலைகள் கொடுக்கப் பட்டிருக்கின்றன. எடுத்தவுடனேயே அவப்பெயர் வாங்கிக் கொள்ளாதீர்கள். ஏற்கனவே கற்சிற்பிகளுக்கு அவப்பெயர் வந்துவிட்டது. கற்சிற்பிகள் மமதையோடு அலைகிறார்கள். கைநீட்டி அடிக்கிறார்கள் என்று பொதுமக்கள் இழிவாகப் பேசுகிறார்கள். இப்பொழுது உங்கள் முறையா."

"ஐயா. அது நமக்கு வேண்டாம். வீசி எறியுங்கள்."

வீட்டுப் பெண்கள் சொல்ல தலைவராகக் காட்சியளித்த ஒருவர் உள்ளே போய் பட்டுத் துணியில் சுற்றி வைத்திருந்த அந்த தங்க மண்வெட்டியைத் திருகித் திருகி வெள்ளிப்பிடி போட்டு, அதைக் கொண்டு வந்து சபைக்கு நடுவே வைத்தார்.

இதை ஒரு ஓலையில் எழுதிக் கொடுத்துவிட்டு போய்விடுங்கள். என்ன எடை என்ன அகலம். என்ன கனம். வெள்ளியினுடைய எடை என்ன என்று தனித்தனியாகக் குறிக்கப்பட்டு வேலைப்பாடுகள் விளக்கப்பட்டு, இப்போர்ப்பட்ட மண்வெட்டி சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீஇராஜராஜத்தேவருக்கு உலோகச் சிற்பிகளால் பரிசாக அளிக்கப்பட்டது. சக்ரவர்த்தி உடையார் கொத்திவிட்டு அதை உலோகச் சிற்பிகளிடம் கொடுக்க, அதை அரசாங்க சொத்து என்று தொண்டைநாட்டு அந்தணரான நான் இத்தனை பேர்

கூடியிருக்கும்போது, இன்ன தேதியில் இன்ன நேரத்தில், இந்த இடத்தில் வாங்கிக் கொண்டு போனேன். இது என் எழுத்து. இது சாட்சி என்று பலபேர் கையெழுத்திட்டார்கள். கையெழுத்து இடத் தெரியாதவர்கள். வெறுமே ஓலையில் கீறினார்கள். இவர்கள் ஓலையில் கீறினார்கள் என்று வேறு சிலர் கையெழுத்திட்டார்கள்.

மண்வெட்டியை புதிய பட்டுத் துண்டோடு நீட்ட, பட்டுத் துண்டை உருவி அவர்கள் சபைக்கு நடுவே வீசியெறிந்துவிட்டு தன்மேல் துண்டால் தங்க மண்வெட்டியை அந்த அந்தணன் சுற்றிக் கொண்டான்.

''பட்டுத்துணி வேண்டாமா.''

யாரோ கேட்டதற்கு ''வேண்டாம் அதையும் கணக்கு வைக்க வேண்டும். பட்டுத்துணியைக் கணக்கு வைப்பது கடினமான காரியம். எலி கடித்து விட்டால் அல்லது வேறு ஏவரேனும் உருவி எடுத்துக் கொண்டால் நானல்லவா பதில் சொல்ல வேண்டும். பட்டுத்துணியைக் கணக்கு வைக்க எனக்கு விருப்பமில்லை.''

அந்த அந்தணன் மண்வெட்டியை நெஞ்சோடு அணைத்துக் கொண்டு போனான்.

இனி அந்த மண்வெட்டியைப் பார்க்கவே முடியாது என்று பலருக்குத் தோன்றியது.

## 176

சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீஇராஜராஜத் தேவரின் அனுக்கியாரும், இளவரசர் இராஜேந்திரரின் மிகுந்த நம்பிக்கையைப் பெற்றவரும், சோழ தேசத்துக் குடிமக்களின் அன்புக்குப் பாத்திரமானவருமான பஞ்சவன்மாதேவியார் பாண்டிய ஆபத்துதவிப் படையைச் சேர்ந்த பரசுநம்பூதிரி என்பவனால் கடுமையாகத் தாக்கப்பட்டு ஆதுரச்சாலையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்.

ஒரு விஷ ஆயுதத்தால் அவர் தாக்கப்பட்டதால் சற்று நிலை குலைந்து போயிருக்கிறார். ஆயினும், அபாய கட்டத்தைத் தாண்டி சீரான மூச்சோடும், நல்ல நாடித்துடிப்போடும் அமைதியாக உறங்கிக் கொண்டிருக்கிறார். வலி தெரியாமல் இருப்பதற்காக அவருக்கு மயக்க மருந்து தரப்பட்டிருக்கிறது.

பாண்டியனின் ஆபத்துதவி பரசு நம்பூதிரி மறவர்களால் மிதித்துக் கொல்லப்பட்டான். சக்ரவர்த்தியின் கட்டளைப்படி



அந்த பரசு நம்பூதிரியின் மனக்கேதம் தீர்க்க அங்கு ஒரு நொந்தா விளக்கு நிறுவப்பட்டிருக்கிறது.

பரசு நம்பூதிரியைச் சேர்ந்த ஆறுபேர், பாண்டிய ஆபத்துதவிப் படைகள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். இந்த ஆபத்துதவிகளுக்கு தங்க இடம் கொடுத்த ஒரு சோழதேசத்து சத்திரக்காரரும் கைது செய்யப்பட்டிருக்கிறார். அவர்களை சேனாபதி கிருஷ்ணன் ராமன் விசாரித்துக் கொண்டிருக்கிறார்.

நம்முடைய ஊரார் அல்லாத வேறு எவரேனும் உங்களோடு கலந்துகொள்ள முற்பட்டால் அவரை கைப்பிடியாக உளவுப் படையினரிடமும், மெய்க்காவல் படையினரிடமும் சேர்ப்பிக்க வேண்டும். அவர்களை நீங்களாக தடுத்து நிறுத்திச் சண்டையிடாமல் தகுந்த மறவர்களைக் கொண்டு அவர்களைக் கைது செய்ய வேண்டும். கோயில் பணியைக் குலைப்பதற்கு நடக்கின்ற இந்த முயற்சிகளையெல்லாம் தகர்த்துவிட்டு முழு மூச்சில் இந்த கோயிற்பணியைச் சிறப்பாக நாம் நடத்திக்காட்ட வேண்டும்.

சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீஇராஜராஜத்தேவர் அவரது அனுக்கியாரான பஞ்சவன்மாதேவிக்கு அருகிலேயே இருப்பதால், கோயிற் பணிகள் தென்னவன் மூவேந்த வேளார் தலைமையில் நடக்கும். சக்ரவர்த்தி உடையார் வாய்மொழி கேட்டு இளவரசர் இராஜேந்திரர் நேரடிப்பார்வையில் எழுதப்பட்ட உத்தரவு.

ஓலை நாயகங்கள் அங்கங்கு போய் ஓலையைப் படிக்க ஜனங்கள் இரண்டு, மூன்று முறை படிக்கச் சொல்லி கேட்டுக் கொண்டு மனதில் இருத்திக் கொண்டார்கள்.

எல்லார் மனதிலும் ஒருசோர்வு பற்றிக் கொண்டது.

''எனக்கு அப்பொழுதே தெரியுமய்யா. அரசரைச் சுற்றி இத்தனை ஆட்டம் ஆடுகிறார்களே இது நல்லதல்ல என்று நான் அப்பொழுதே நினைத்தேன்.''

'மக்கள் மீது குற்றம் சொல்ல முடியாது. மெய்க்காவல் படையினர் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள். அவன் கிட்டே நெருங்கி வசனங்கள் பேசிவிட்டு அதன் பிறகு சக்கரத்தை வீசுகிறான் என்றால், அவ்வளவு பாதுகாப்பில்லாமல் அல்லவா இருந்திருக்கிறோம். பஞ்சவன்மாதேவி அடிபட்டு விட்டார். நம்மை வேலைக்குத் திரும்பச்சொல்கிறார்கள். இதுவே வேறு மாதிரி இருந்தால் என்ன ஆகியிருக்கும்.''

''போதும். வாயை மூடு.''

''நெருப்பென்றால் வாய் வெந்துவிடுமா.''

''அந்த மாதிரி நிலைமைதானே வந்தது. ஆயுதம் பஞ்சவன் மாதேவியை நோக்கியா வீசப்பட்டது. இது வீசப்பட்டது சக்ரவர்த்தியின் மீதல்லவா அவர்களல்லவா தியாக மனத்தோடு வந்து தாங்கிக் கொண்டார்கள்.''

''இன்னும் ஆறு பேரைக் கைது செய்திருக்கிறார்களாமே. அவர்களைக் கொண்டு வந்து நம்மிடம் விடவேண்டியதுதானே. எங்கள் தேசத்திற்கு வந்து எங்கள் சக்ரவர்த்திக்கெதிராகவா சூழ்ச்சி செய்கிறாய் என்று வெறியாட்டம் ஆடலாம் அல்லவா.''

''ஆனால், ஜனங்கள் வெறியாட்டம்தான் ஆடித்தீர்த்தார்கள். கத்தியும் இல்லை, கட்டையும் இல்லை. கைகளாலேயே அடித்துக் கொன்றார்கள். அறுபது வயதுக் கிழவன் கைக்கோளப்படையைச் சேர்ந்தவன் என்ன ஆக்ரோஷமாய் அடித்தான். பாண்டிய வீரர்களெல்லாம் ஒடுங்கி பயந்து கிடக்கிறார்கள். அவர்களைப் பணிக்கு வரவேண்டாம் என்று சொல்லி தென்னத்தோப்பில் அமர வைத்திருக்கிறார்கள்.''

''கைது செய்யப்பட்டு விட்டார்களா.''

''அப்படியில்லை. கைது செய்யப்பட்டவர்கள் போலத்தான்.''

''ஆனால், என் அபிப்ராயப்படி அவர்களில் பாதிப்பேருக்கு தாங்கள் பாண்டிய தேசத்தவர் என்பதே மறந்து போய்விட்டது.''

''அதையெல்லாம் நம்பாதே. எந்தப் பாண்டியனையும் நம்பவே முடியாது. எத்தனை வருடங்களானாலும், எத்தனை யுகங்களானாலும் பாண்டியன், சோழனை இளக்காரமாகத்தான் நினைத்துக் கொண்டிருப்பான். நாமும் அவ்விதம் பார்த்துக் கொண்டிருப்போம். எனவே, அவர்களை அப்படியே அவர்கள் தேசத்திற்கு அனுப்பிவிடுவது நல்லது.''

''வேண்டாம். நமக்கு சம்மந்தமில்லாத விஷயங்களை நாம் பேசவேண்டாம். எல்லாம் சந்தோஷமாகச் செய்து கொண்டிருந்தோம். யார் கண் பட்டதோ இப்படியொரு அவலமான நிலைமை ஏற்பட்டுவிட்டது. எனக்கு இனிமேல் மண்வெட்டி எடுத்து கொத்த வேண்டுமென்ற எண்ணமேயில்லை. நான் ஊருக்குப் போய் விடலாம் என்றிருக்கிறேன்.'' என்று வாய்விட்டுச் சொன்னான்.

பலபேருக்கு அந்த எண்ணம் தோன்றியது.

''விமானம் பார்த்தாகி விட்டது. அதனுடைய உயரமும், அகலமும் என்னவென்று தெரிந்துவிட்டது. ஊருக்குப் போய் பயிர் வேலைகளைக் கவனித்து கும்பாபிஷேகம் என்று எப்போது சொல்வார்களோ அந்த தேதிக்கு வந்து பார்த்துக் கொள்ளலாம். அல்லது கும்பாபிஷேகம் முடிந்து வந்து பார்த்துக் கொள்ளலாம்.''



ஒருவர் பின் ஒருவராக தஞ்சை நோக்கி வந்து ஜனங்கள் மெல்ல சொல்லாமல் கொள்ளாமல் ஊர்த்திரும்பினார்கள். ஊர் திரும்புவதற்கு வேறுசில காரணங்களும் இருந்தன.

சக்ரவர்த்தியை இனி அங்கே பார்க்க முடியாது என்கிற விஷயம் மட்டுமல்லாமல் நடந்தவைகளை விலாவாரியாக உரத்த குரலில் கைகால் ஆட்டி கதைபோல கோயில்பணிக்கு வராதவர்களிடம் விவரிக்கலாம். அருகேயிருந்து பார்த்ததுபோல பேசலாம் என்கிற ஆசையாலும் நகர்ந்தார்கள்.

''நீங்கள் ஊருக்குப் போங்களய்யா. நான் சக்ரவர்த்தியை நேருக்கு நேர் பார்த்து எந்தக் கவலையும் படாதீர்கள். கோயில் பணி மிகச்சிறப்பாக நடைபெறும். கும்பாபிஷேகம் அருமையாக நடைபெறும் என்று ஆறுதலாய் நாலு வார்த்தை சொல்லிவிட்டுத்தான் வருவேன்.'' என்று ஒருவர் உரத்துச் சொல்ல, பலபேருக்கு அதுவும் சரியென்று தோன்றியது.

''சக்ரவர்த்தி வராமலா போய்விடுவார். இரண்டு மூன்று நாட்கள் பஞ்சவன்மாதேவிக்கு அருகில் இருப்பார் அவ்வளவுதான்.''

''பிறகு.''

''அவருக்கு இருப்பு கொள்ளாது. பஞ்சவன்மாதேவியும் இருக்க விடமாட்டார்கள். கோயில் பணிக்கு போங்கள் என்று சொல்லி விடுவார்கள். ஆனால், மெய்க்காவல் படைதான் கொஞ்சம் முரண்டு செய்யும். ஆனால், அவர்களில் பலபேரை இப்பொழுது தெரிந்து வைத்திருக்கிறோம். சமாதானமாகப் பேசி அரசருக்கு அருகே நுழைந்து விடலாம்.''

''அது நடக்காது. இன்னொரு அசம்பாவிதம் நடக்க மெய்க் காவல் வீரர்கள் ஒருக்காலும் விடமாட்டார்கள். இப்பொழுது என்ன பேச்சு தெரியுமா? மறவர்களைப் புறக்கணித்தீர்கள். மறவர்களை அவமானப்படுத்தினீர்கள். மறவர்களை முட்டாள் என்று வர்ணித்தீர்கள். அதனால்தான் எதிரிகள் உள்ளுக்குள் புகுந்து விட்டார்கள். அரசரைக் கொல்லத் துணிந்துவிட்டார்கள். இனிமேல் மறவன் என்ன ஆட்டம் ஆடுகிறான் என்று பாருங்கள்.

பழுவேட்டரையர் உத்தரவிட்டிருக்கிறார். வீடு வீடாகச் சோதனை நடத்தப்படும். தஞ்சை நகரம் முழுவதும் நாங்கள் சல்லடையாகச் சலித்தெடுக்கப் போகிறோம். தஞ்சையைச் சுற்றி எவரும், எப்பொதும் நகர்ந்துவிடவே முடியாது என்று சொல்லி யிருக்கிறார்கள். வெளியூருக்குப் போகிறேன் என்று சொன்ன ஆட்களையெல்லாம் நிறுத்தி கேள்வி கேட்டு, சந்தேகமான வர்களை உட்கார வைத்து பிறகுதான் அனுப்பியிருக்கிறார்கள்.

''நகரச் சோதனை என்று இவர்கள் ஆரம்பித்தால் போதும், யாரை வேண்டுமானாலும் எப்படி வேண்டுமானாலும் அவமானப் படுத்துவார்கள்.''

''நகரச் சோதனையெல்லாம் நடக்காதய்யா சக்ரவர்த்தி உடை யார் விடமாட்டார்.''

ஆனால், நகரச்சோதனை நடந்தது. வேகமாக இல்லாமல் மிக மரியாதையாக பொதுமக்கள் ஒத்துழைக்க வேண்டுமென்று சொல்லி வீட்டிலுள்ளோர் அத்தனைபேரையும் வெளியே வரச் சொல்லி, அவர்கள் பெயரைக் குறித்துக் கொண்டு உள்ளே போய் யாரும் எங்கேனும் பதுங்கி இருக்கின்றார்களா என்று பார்த்து, பிறகு அந்த வீட்டின் வாசலில் சோதனை செய்து பார்க்கப்பட்டது. என்று முத்திரை பொறித்து சத்திரத்தில் தங்கியிருந்த ஆட்களை யெல்லாம் தீர விசாரித்து, சேரதேசத்து ஒற்றர்கள் இரண்டு பேரைக் கைது செய்து அவர்களைச் சிறையில் அடைத்து ஒரு பரபரப்பு ஏற்படுத்தப்பட்டது.

''கருவறை உயரத்திற்கு இருந்த மண்ணை அகற்றிவிடலாம். வேலை ஆரம்பிக்கட்டும்.'' என்று மூவேந்த வேளார் துரிதப்படுத்த மறுபடியும் மண்வெட்டும் பணி துங்கியது.

''ஆட்களைக் காணோமே... ஆட்களைக் காணோமே.'' என்று அவர் பரபரக்க, ஆட்கள் கொஞ்சம் நொந்து போய் ஊர் திரும்பி விட்டார்கள் என்று சொல்லப்பட்டது.

''என்ன காரணம். உணவு சரியில்லையா.''

''இல்லை. மறவர்கள் அதிகம் மிரட்டுகிறார்கள். பயமாக இருக்கிறது. அடிக்க கை ஓங்குகிறார்கள். இப்படியெல்லாம் யாரும் எங்களை நடத்தியதேயில்லை.''

''சோழவீரர்களே சோழ மக்களைத் துன்புறுத்தினால் பிறகு வேறு என்னதான் அர்த்தம்.'' என்று கேள்வி கேட்கப்பட்டது.

மூவேந்த வேளார் பதில் சொல்லவில்லை.



பழுவேட்டரையர் சோதனையை அவரால் தடுத்து நிறுத்த முடியாது.

வேலை நிதானமாகத்தான் நடக்கிறது என்பதை சக்ரவர்த்தி யிடம் தெரிவித்தேயாக வேண்டும். என்ன காரணமென்று கேட்டால், அப்போது இதைச் சொல்லிக் கொள்ளலாம் என்று யோசித்தார். பிரம்மராயரிடம் இதைத் தெரிவித்தார்.

''வந்து ஒரு மாதமாகிவிட்டதய்யா. இதற்கு மேல் அவன் தாங்க மாட்டான். அவன் பயிர் பச்சைகளையும், குழந்தைகளையும், முதியோர்களையும் பார்க்கப் போய்விடுவான். பெரிய வேலை யைச் செய்து முடித்துவிட்டான். இனி நாம் நம் ஆட்களை வைத்துத்தான் முடிக்க வேண்டும்.

பழுவேட்டரையரைச் சோதனை செய்யாதே என்று சொல்ல முடியாது. சோதனை செய்யா விட்டால் எதிரிகள் மறுபடியும் உள்ளேபுக தயங்க மாட்டார்கள். சோதனை என்ற பெயரில் பரபரப்பும். முரட்டுத்தனமும் காட்டினால்தான் எதிரிகளுடைய நடமாட்டம் நிச்சயமாய் குறையும். உடனடியாக சக்ரவர்த்தியிடம் பழுவேட்டரையரைப் பற்றிய குறையெல்லாம் சொல்லிவிடா தீர்கள். சந்திக்கும் போது நிதானமாக இதைப்பற்றிப் பேசுவோம்.

வேலையைக் குறித்து அவர் கேட்கும்போது நன்றாக நடக்கிறது என்றே சொல்லுவோம். இல்லையென்று சொன்னால் அவரது மனம் வேதனைப்படும். அவருக்கு இருக்கிற வேதனை போதும். இதை நாம் பார்த்துக் கொள்வோம். மிகச்சிறப்பாக மிக துரிதமாக வேலை நடக்கிறதென்றே சொல்லுங்கள்.''

ஆனால், எது சொல்லவும் சக்ரவர்த்தி உடையாரைப் பார்க்க முடியவில்லை.

ஆதுரச்சாலை பாதுகாப்பானதாக இல்லை என்று மெய்க்காவல் வீரர்கள் சொன்னதால், எதிரே கோயிலில் உள்ள ஜனங்கள் அடிக்கடி வந்து கூட்டம் கூட்டமாகப் பார்க்கிறார்கள் என்று விவரித்ததால் பஞ்சவன்மாதேவியை அரண்மனைக்கு மாற்றுகின்ற நிலைமை ஏற்பட்டது.

ஊர் அடங்கியதும் நான்கு சக்கரங்கள் வைத்த பெரிய தேரில் மெத்தைகளைப் பரப்பி பஞ்சவன்மாதேவியை மெத்தையோடு அப்படியே தூக்கிக்கொண்டு போய் வைத்து தேரைச்சுற்றி திரைச் சீலைகள் கட்டி தேரை அதிகம் குலுக்காமல் நிதானமாக ஓட்டினார்கள். வழியே மேடு பள்ளங்கள் சரிசெய்தார்கள். குதிரைகள் வருவதைப் பார்த்து ஜனங்கள் மிரண்டு விழித்து என்ன

என்று கேட்டபோது, 'எழாதே படு, தள்ளிப்போ' என்று ஒன்றை வார்த்தைகளில் உத்தரவிட்டு அவர்களை விலக்கி சில நாழிகையில் அரண்மனைக்குப் போய்விட்டார்கள்.

பதினாறு படிகள் கொண்ட மாளிகை என்பதால் எப்படி ஏற்றுவது என்று யோசித்து குள்ளமாக இரண்டு பேரை முன்னால் வைத்து, உயரமாக இரண்டு பேரை பின்னால் வைத்து ஒரு கட்டிலைத் தூக்கச் சொல்லி அந்த கட்டிலை படிகளின் வழியே நகர்த்தச் சொல்லி, அப்போது அது சமமாக இருப்பதை அரசருக்குக் காட்டி, அரசர் தானும் அதில் போகவிரும்புவதாகச் சொல்ல, அரசரை அதில் படுக்க வைத்து அலுங்காமல் தூக்கிக் கொண்டு போய் காட்டியதும் அரசர் மகிழ்ந்தார். அப்படியே தூக்கி வாருங்கள் என்று மேல்படியிலிருந்து கட்டளையிட்டார்.

இளவரசர் இராஜேந்திரரும், பழுவேட்டரையரும், மெய்க் காவல் வீரர்களும் சுற்றி வர, அந்த வீரர்கள் அலுங்காமல் பூ மாதிரி தூக்கிக் கொண்டு வந்தார்கள்.

அரண்மனைக்குள் முற்றம் தாண்டிய மிகப்பெரிய கூடத்திற்குள், ஒரு பஞ்சணையில், பஞ்சவன்மாதேவி கிடத்தப்பட்டாள். வலியில் முனகுவதும், கண்களைத் திறந்து பார்த்து ஏதோ குழறுவதும் தெரிந்தது. உயிரோடு இருப்பினும் சுயநினைவில் இல்லை என்பதை வைத்தியர் தெளிவுபடுத்தினார். பட்டமகிஷியும் சக்ரவர்த்தியின் இன்னொரு மனைவியான வானதியும் அருகே வந்து பார்த்து விம்மினார்கள். மற்ற மனைவியார்கள் ஒவ்வொருவராய் உள்ளே நுழைந்தார்கள். சுற்றி நின்று மெல்ல அழுதார்கள். வானதி மெல்ல தேவாரப்பாடல் ஒன்றைப்பாட எல்லோரும் கூட சேர்ந்து கொண்டார்கள்.

வைத்தியர் வந்து நாடி பார்த்து, ''கொஞ்சம் படபடப்பாக இருக்கிறார் மற்றபடி நன்றாக இருக்கிறார். சுவாசம் மிகச்சரியாக இருக்கிறது. என்னுடைய கணக்குப்படி இன்னும் சில நாட்களில் அவருக்கு நினைவு வந்துவிடும். விஷம் உயிர்ச் சக்தியை அழித்ததால் சற்று பிரச்சினை இருக்கிறது.''

''நடமாட முடியுமா.'' என்று பட்டமகிஷி கேட்க, ''அது ஈசனுடைய கருணையைப் பொறுத்தது. நடமாடுவது என்பது ஒரு வருடம் அல்லது இரண்டு வருடங்கள் ஆகலாம். வாய் கோணிக் கொண்டிருக்கிறது. ஒரு பல்கூட இல்லையம்மா. எல்லாப் பற்களும் விழுந்துவிட்டன. ஒரு பல் தொண்டையில் சிக்கிக் கொண்டது. சிரமப்பட்டு நீக்கினேன்.''



பட்டமகிஷி முகம் பொத்திக் கொண்டார். சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீஇராஜராஜத்தேவர் எந்தச் சலனமுமில்லாமல் இரும்பு போல் அங்கே உட்கார்ந்திருந்தார்.

ஏன் இது. நமக்கு ஏன் இது. நாம் யாருக்கு என்ன அழிவு செய்தோம். இந்தக் குழந்தைக்கு ஏன் இது வந்திருக்கிறது என்று வானதி வாய்விட்டுக் கூற, சக்ரவர்த்தி அவள் தலையைத் தடவிவிட்டார்.

''நாம் நிறைய பாபங்கள் செய்திருக்கிறோம். ஒன்றா, இரண்டா. ஆயிரக்கணக்கில் கொன்று குவித்திருக்கிறோம். ஊர்களை எரியூட்டியிருக்கிறோம். வினை ஒன்று இருப்பின் எதிர்வினை என்று ஒன்று இல்லாமல் போகுமா. நிச்சயம் இருக்கும். ஏனெனில் நான் இப்படிக் கிடக்க வேண்டியது. நல்லவேளை இவள் வாங்கிக் கொண்டாள். இது நானாக இருந்திருப்பின் இந்நேரம் என்னுடைய கதை முடிந்திருக்கும்.

என் வயது இந்த விஷத்தைத் தாங்கியிருக்காது. அவள் வாலிப மானவள். நல்ல உடல்நலம் உடையவள். அதனால் விஷத்தை எதிர்த்து நிற்கிறாள். வைத்தியரையும் பாராட்ட வேண்டும். விஷத்திற்கு விஷம்தான் மருந்து என்று அந்த பாஷாணக்கல்லைத் தேடிக் கொண்டு வரச்சொன்னார்.

நல்லவேளை அந்த பாஷாணக்கல்லைத் தேடிக்கொண்டு வா என்று வெறுமே உத்தரவிடாமல் இளவரசர் இராஜேந்திரனே ஓடினான். வாளால் அந்த பரசுநம்பூதிரியின் சதையைப் புரட்டி பாஷாணக்கல்லை எடுத்து வந்தான். அதை எப்படி எடுத்து வர வேண்டுமென்று அவனுக்குத் தெரிந்திருக்கிறது. கை தொடாமல் கொண்டு வந்தான். வேறு வீரனாக இருந்தால் தொட்டுத் தடவி அவனும் விஷத்தால் மாண்டுபோயிருப்பான் எந்தச் சேதாரமும் இல்லாமல் கல் கிடைத்துவிட்டது. கால்நாழிகையில் கல்லைக் குழைத்து வாயில் பாஷாணம் தடவ. பற்கள் உதிர்ந்து விட்டன. உயிர் பிழைத்துவிட்டாள். நம் பஞ்சவன்மாதேவி பிழைக்க இந்த வைத்தியர்தான் காரணம்.

''இல்லையம்மா. சக்ரவர்த்தி உடையார்தான் காரணம். அவருடைய பிரார்த்தனை காரணம். மனைவியின் மீது எத்தனை அன்பு வைத்திருக்கிறார். எத்தனை உருக்கமாக வேண்டிக் கொண்டார் என்பதை நான் அருகேயிருந்து பார்த்தேன்.''

வைத்தியர் சொல்ல மற்ற மனைவியர்கள் வியப்போடு சக்ரவர்த்தி உடையாரைப் பார்த்தார்கள். திரும்பி பஞ்சவன்மாதேவியைப் பார்த்தார்கள். பஞ்சவன்மாதேவி இருந்த இடத்தில் நாம்

இல்லாது போனோமோ என்று வருத்தப்பட்டார்கள். இந்த ஆயுதத்தை நெஞ்சில் தாங்கிக் கொண்டிருக்கலாமே என்று எண்ணினார்கள். அப்படித் தாங்கிக் கொண்டிருந்தால் நம்மையும் சக்ரவர்த்தி இப்படி அருகேயிருந்து கொண்டாடுவார்களல்லவா என்று நினைத்தார்கள். எல்லாவற்றிலும் பஞ்சவன்மாதேவி அதிர்ஷ்டசாலி என்று நினைத்தார்கள். அவர்களுக்குள் பேசிக் கொண்டார்கள்.

இரண்டு நாள் கழித்து இதை நேரிடையாகவே சக்ரவர்த்தியின் ஒரு மனைவி இன்னொரு மனைவியிடம் சொல்ல, கை கால் கழுவி கூடத்திற்கு வந்த சக்ரவர்த்தி இதைச் செவிமடுத்தார். பிறகு மறுபடியும் கொல்லைப்புறம் போனார். அமைதியாக யோசித்தார். பிறகு தன் வருகையை சப்தமெழகாட்டி, கூடத்திற்கு வந்து பஞ்சவன்மாதேவிக்கு அருகேயிருந்து, "அடியே, நீ அதிர்ஷ்டசாலி. உன்னைக் கவனித்துக் கொள்ள எத்தனை ஸ்நேகிதிகள் இருக்கிறார்கள் பார். உன்னை கண்ணுக்குக் கண்ணாய், கருத்தாகக் கவனித்துக் கொள்ள பட்டமகிஷியும், வானதியும் துடிக்கிறார்கள். மற்ற மனைவியரும் தயாராக இருக்கிறார்கள். பஞ்சவன்மாதேவி. நான் இவர்களிடம் உன்னை ஒப்படைத்து விட்டுப் போகிறேன்." உரக்க பஞ்சவன்மாதேவியிடம் சொல்லி, அவள் தலையைத் தடவி விட்டு வெளியே வந்தார். அவருக்கு மனசு கனத்தது. ஆயினும், சுதாரித்துக் கொண்டு குதிரை ஏறி கோயில் நோக்கிப் போனார்.

அரசர் கோயில் நோக்கி வருகிறார் என்று எக்காளத்தில் சத்தம் கேட்டதும், மூவேந்தவேளாருக்கு வயிறு புரண்டது. ஏனெனில் அன்று வேலைக்கு சில நூறு பேர்களே வந்திருந்தார்கள். சக்ரவர்த்தி என்ன சொல்வார் என்ற பயத்தில் அந்தக் கிழவருக்கு உடம்பு நடுங்க ஆரம்பித்தது.

குதிரையை நிதானமாகச் செலுத்திக் கொண்டு போன சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீஇராஜராஜத்தேவர் வேதனைப்பட்டார்.

நான் நகர்ந்ததும், கூட்டம் நகர்ந்துவிட்டது. இதைத்தான் மூவேந்த வேளார் சொல்லப் போகிறார். இவரைக் கோபித்து என்ன பயன். ஆனால், எப்படி இவ்வளவு பெரிய கூட்டத்தைத் தடுத்து நிறுத்த முடியும். எப்படி மறுபடியும் கூட்டத்தைக் கொண்டு வருவது. சவுக்கால் அடித்தால் வந்து விடுவார்களா, இல்லை. அண்டை அயல் கிராமத்திற்கு மறுபடியும் பறையறிவித்து வரவேற்க வேண்டாமா. அதில் ஏனோ விருப்பமில்லை. தன் காரியம் என்று வருபவர்கள்தான் நல்லது. போனவர்கள் போகட்டும். வேலை செய்பவர்களை உற்சாகப்படுத்துவோம்.



சக்ரவர்த்தி குதிரையினின்று இறங்கினார். அவர் இறங்குவதைப் பார்த்து மூவேந்த வேளார் கீழிறங்கினார். அருகே வந்தார். அவர் முகத்தில் மிரட்சி இருந்தது.

"தென்னவரே, ஏதேனும் வெற்றிலை பாக்கு வைத்திருக்கிறீரா. சட்டென்று வாயில் ஒரு நமநமப்பு வந்துவிட்டது."

"ஆஹா... இருக்கிறது தருகிறேன்."

இடையறாது வெற்றிலை போடும் பழக்கமுள்ள மூவேந்த வேளார் சட்டென்று பையில் கைவிட்டு அங்கிருந்த சேவகரை தட்டு கொண்டு வரச்சொல்லி, மூங்கில் தட்டில் மெல்லிய வெள்ளை வெற்றிலைகளையும், பாக்குகளையும் பரப்ப, சிறு பாக்கு வெட்டியையும் உள்ளே வைக்க, அவற்றை அருகே எடுத்துக் கொண்டு சக்ரவர்த்தி பக்கத்திலுள்ள மணல் மேட்டுக்குப் போக, அங்கு ஒரு வீரன் துணி விரிக்க. அதில் அமர்ந்து கொண்டு வெற்றிலையைத் துடைத்தார். மூவேந்த வேளார் நிற்பதைப் பார்த்து வலப் பக்கம் கை நீட்டினார். துணி விரிப்பை இன்னும் விலக்கினார். அந்த இடத்தில் மூவேந்த வேளார் அமர்ந்து கொண்டார்.

"தேவியார் எப்படியிருக்கிறார்" தென்னவன் மூவேந்த வேளார் கேட்க, "நலம் எதுவும் பிரச்சினையில்லை. இங்கு வேலை எப்படிப் போய்க் கொண்டிருக்கிறது."

"அதுதான் பார்க்கிறீர்களே."

"ஆமாம். பார்க்கிறேன். தெரிகிறது. இதற்கு மேல் இந்த ஜனங்களைக் கட்டி வைப்பது கடினம் தான். ஆனால், இவர்களெல்லாம் இவ்வளவு ஒற்றுமையாக ஊக்கமாக வேலை செய்கிறார்களே, அதுதான் ஆச்சரியமாக இருக்கிறது."

"நீங்கள் மறுபடியும் வருவீர்கள் என்ற நம்பிக்கையில்தான் பலபேர் வேலை செய்கிறார்கள். உங்களுக்கருகே தொட்டுத்தழுவி நிற்க வேண்டும். உங்கள் பாதங்களில் பணிய வேண்டுமென்று பல பேர் என்னிடம் வாய்விட்டுப் பேசினார்கள். சக்ரவர்த்தி வருவாரா என்று தினம் தினம் கேட்கிறார்கள்."

"அப்படியா.." ஆவலோடு சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீஇராஜராஜத்தேவர் கேட்டார். வெற்றிலையைத் துடைத்துத் துடைத்து போட்டுக் கொண்டார். அவ்வப்போது பாக்கு நறுக்கி வாயிலிட்டுக் கொண்டார். ஒரு அற்புதமான கலவை வாயில் கலந்தது.

எழுந்து நின்று வெற்றிலையை அரைத்தபடி வாயைத் துடைத்துக் கொண்டார். மெல்ல நகர்ந்து போக மெய்க்காவல் வீரர்கள் சூழ்ந்து கொண்டார்கள். திரும்பினார்.

இன்று வேண்டாம். நாளை பார்த்துக் கொள்ளலாம் என்று கட்டளையிட, மெய்க்காவல் வீரர்கள் விலகினார்கள். மூவேந்த வேளார் பின் தொடர அவரையும் வேண்டாமென்று மறுத்தார்.

கோபுரத்திற்கு அஸ்திவாரமெடுத்த இடத்திலிருந்து திருவுண்ணாழி என்று அழைக்கப்படுகின்ற பரமேஸ்வரஉடையார் கருவறை நோக்கி நடக்கத் துவங்கினார். இரண்டு பனை உயரத்திற்கு மண் குவிக்கப்பட்டிருந்தது. அதற்குமேல் விமானம் நேர் கோணலாக உச்சியை நோக்கி நகர்ந்து ஒன்று கூடிற்று. இந்த மண்ணை எடுத்தால்தான் கோஷ்டங்கள வெளியே தெரியவரும். கோஷ்டங்கள் வெளியே தெரிய வந்தால்தான் அங்கு சிலைகள் வைக்க முடியும்.

சிவனின் நடனக் கரணங்களை, சிவனின் ரூபமாகவே வைக்கப் போகிறேன் என்று கண்டராதித்த பெருந்தச்சர் சொல்லியிருந்தார். அந்த வேலை துவங்கி உள்ளே துவாரபாலகர்கள் வைத்து கோயிலைச் சுற்றியுள்ள இடத்தைச் சமன் செய்து மதில் சுவரும், மதில் சுவரையொட்டி திருச்சுற்று மாளிகையும், முன் பக்கம் நந்தியும் வைத்துவிட்டால் கும்பாபிஷேகம் நடந்துவிடும்.

உலோகச் சிற்பிகள் மெழுகு வேலைகள் துவங்கிவிட்டதாகச் சொல்கிறார்கள். மண் சலித்துப் பிசைந்து கொண்டிருக்கிறார்கள். மெழுகு மீது மண்பூசி உலரவைத்து பிறகு மண்பொம்மையை அடுப்பில் போட்டால் மெழுகு உருகி வெளியே வந்துவிடும். சுட்ட மண்பொம்மையை வெளியே எடுத்து துளை வழியே உலோகக் கலவையைக் காய்ச்சி ஊற்றினார்கள் உலோகப் பிரதிமை தயாராகி விடும். பிறகு மெல்ல புருவம் வரைந்து, நகைகள் செய்து கண் திறந்து விடுவார்கள்.

தட்சணமேரு விடங்கரும், ஆடல் வல்லாரும் உமாபரமேஸ்வரியாரும், போக நாச்சியாரும், கணபதியாரும் சூரிய தேவரும் செய்துவிடலாம். பஞ்சவன்மாதேவி செய்யச் சொன்ன ஆடல் வல்லாரை ஸ்தாபிதம் செய்துவிட வேண்டும்.

பஞ்சவன்மாதேவி, ஆடல் வல்லாரும், உமாபரமேஸ்வரியாரும், அமர்ந்த கணபதியும், எதனாலோ பதஞ்சலியாரும் செய்யச் சொல்லியிருக்கிறார்கள்.



பதஞ்சலி என்பவர் வைத்திய சாஸ்திரத்திலும் நிபுணர். நாபிக்கு மேல் மனுஷ உடம்பும், இடுப்புக் கீழ் மூன்று சுற்று பாம்புமாய் ஒரு கற்சிலையை வேறு ஏதோ கோயிலில் பார்த்திருக்கிறோம். அதே போல் செய்ய வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டாள்.

இப்படி நோய்ப்படுவாள் என்று தெரிந்திருக்கும் போலிருக்கிறது. இப்படி விஷத்தால் தாக்கப்படுவாள் என்று முன்னமே அவளுக்கு உள்ளுணர்வு சொல்லியிருக்கிறது. கண் நேரத்தில் அந்தச் சம்பவம் நிகழ்ந்துவிட்டது.

அந்த விஷச்சக்கரம் என்னைத் தாக்கியிருந்தால் இந்தக் கோயில் மண்கூட எடுக்கப்பட்டிருக்காது. நான் இருக்கும்போதே மக்கள் விட்டுவிட்டுப் போகிறார்கள். நான் வரவில்லை என்று தெரிந்து ஊருக்குத் திரும்பி விட்டார்கள். இது சிவன் பணி என்று தெரியவில்லை. அரசனுடைய வேலை என்று நினைத்திருக்கிறார்கள். இந்த மக்கள் எப்போது வேண்டுமானாலும், யாரை வேண்டுமானாலும் தூக்கிக் கொண்டாடுவார்கள். எப்போது வேண்டுமானாலும் தரையில் வீசுவார்கள். யாரோ நாலுபேர் கிளம்பினால், ஒரு நாற்பது பேர் அவ்விதமே வழி நடப்பார்கள். ஒருநாற்பது பேர் நடந்தால் நானூறு பேர் பின் தொடர்வார்கள். நாலாயிரம் பேர் காணாமல் போவார்கள். என்ன செய்கிறோம் என்று யாருக்கும் எதுவும் தெரியாது. அப்படித் தெரியாத தால்தான் இவர்கள் சாதாரண மக்களாக இருக்கிறார்கள்.

ஆனால், இந்த மண் எடுக்க இப்போது இருக்கின்ற இந்த ஆட்கள்போதும், மறவர்களையும் பயன்படுத்தலாம்.

இவன் யார், இவன் முகஜாடை பாண்டிய தேசத்தவன் போல் இருக்கிறதே.

ஒருவன் மண்கொத்தி கூடையில் போட்டுக் கொண்டிருந்தான். அந்தக் கூடையைத் தானே தலையில் தூக்கி தொலைவிலுள்ள பெருங்கூடையில் சேர்த்துக் கொண்டிருந்தான். மறுபடியும் கூடையை எடுத்துக் கொண்டு வந்து கொத்தினான். இவன் உடற்கட்டைப் பார்த்தாலும், பாண்டிய தேசத்து மறவன் போலத்தான் இருக்கிறான்.

தன் மேல் துணியை உதறி தலைப்பாகையாகக் கட்டிக் கொண்டிருந்தான். அவன்கூடை எடுத்த போது தடுத்து வாங்கிக் கொண்டார். தலையில் வைத்துக் கொண்டு சட்டென்று திரும்பி நடந்தார். அவன் நிதானமாக அவரைப் பார்த்துவிட்டு மறுபடியும் மண் கொத்தத் துவங்கினான். அவர் கொட்டிவிட்டுத் திரும்பும்போது

மண் கொத்துவதை நிறுத்தி சட்டென்று அவரைப் பார்த்தான். அருகே வர உற்று நோக்கினான். மண் வெட்டியைக் கீழே போட்டான்.

''நீங்களா... நீங்கள்தானா.'' என்று ஆச்சரியத்தில் வினவினான்.

''ஆமாம்...'' என்று சொல்ல, அவர் கால்களில் விழுந்து வணங்கினான்.

''நீ யார் அன்பனே..''

அரசர் அவன் தோளில் கை வைத்தார்.

''நான் ஒரு கருவறைச்சிற்பி, பாண்டியதேசத்தைச் சேர்ந்தவன்.''

''எல்லோரும் போன பிறகு நீ ஏன் இன்னும் இங்கு வேலை செய்கிறாய். பாண்டியதேசம் போய் விடலாமே. யாரேனும் தடுத்தார்களா.''

அன்பொழுகக் கேட்டார்.

''பாண்டிய தேசத்தில் போய் நான் என்ன செய்வேன். எனக்கு கோயில்கட்டும் பணி பிடித்திருக்கிறது. ஒரு சிற்பியாகிய எனக்கு தேசம் முக்கியமல்லை. ஏன், சிவன், விஷ்ணு கோயில்கூட முக்கிய மில்லை. கோயில் கட்டுவதுதான் முக்கியம். இந்த மண்ணை அகற்றினால்தான் கோஷ்டத்தில் சிலைகள் வைக்க முடியும். கோஷ்டத்தில் சிலைகளை எப்படி நிறுத்துவது என்று நான் கற்றுக் கொள்ள விரும்புகிறேன். அதற்காகவே, இந்த மண்ணை அகற்றிக் கொண்டிருக்கிறேன்.''

''இரண்டு பனை உயரமிருக்கின்ற மண்ணை நீ மட்டுமே எப்படி அகற்றுவாய்.''

''அகற்றித்தானே ஆகவேண்டும். இந்தக் கோயிலை இப்படியே விட்டுவிட முடியுமா. ஒருவராக இருந்தாலும், இருவராக இருந் தாலும், பத்து பேராக இருந்தாலும், லட்சம் பேராக இருந்தாலும் இந்த மண் அகற்றப்பட வேண்டும். எத்தனை காலமாயினும் அகற்றப்படவேண்டும். எனக்கு அதில் சந்தேகமில்லை.''

அவன் உறுதியோடு சொல்ல, இராஜராஜர் கண்களில் நீர் கோர்த்தன. இறுக்கி அவனைத் தழுவிக் கொண்டார்.

''உனக்கு என்ன வேண்டும் சொல். விடுதலையா, பணமா அல்லது பாண்டியதேசத்தில் நிலம் வீடா, என்ன வேண்டும் சொல்.''



''எதுவும் வேண்டாம். என்னை சோழதேசத்துச் சிற்பியாக அங்கீகரியுங்கள். அப்போதுதான் இளவரசர் இராஜேந்திரர் கட்டு கின்ற கோயிலில் எனக்கு வேலை கிடைக்கும். இல்லையெனில், அங்குள்ளோர் என்னை பாண்டியதேசம் போய்விடு என்று சொல் வார்கள். பாண்டியதேசத்திற்குப் போவதை விட எங்கெல்லாம் கோயில் கட்டுகிறார்களோ அங்கெல்லாம் போகவே எனக்கு விருப்பம்.''

அவர் ஆச்சரியத்தோடு அவனைப் பார்த்தார்.

''எனக்கு வாழ்நாள் முழுவதும் கோயில் கட்டிக் கொண்டே யிருக்க வேண்டும் என்பதுதான் அவா. சோழதேசத்தில் அப்பணி இடையறாது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.''

''மூலவரைப் பார்த்தாயா? எப்படி வந்திருக்கிறார். என் பரமஸ்வாமி.''

''அற்புதம். அந்த பாணம் நிற்காது என்று நினைத்தேன். கருவூர்த் தேவரால் நின்றுவிட்டது. அப்பொழுதுதான் எனக்கு இன் னொன்றும் புரிந்தது.''

''என்ன.''

''வெறும் சக்ரவர்த்தியால், சிற்பியால், மறவர்களால் ஆவதல்ல இந்த வேலை. கருவூர்த்தேவரைப் போன்ற ஒரு உத்தமமான ஆத்மா. ஒரு ஞானகுரு இந்தக் கோயில் பணியில் சேர்ந்தால் தான் அது பூர்த்தியாகும். பெருந்தச்சர் முகம் செத்துப் போயிற்றே. நித்த வினோதப் பெருத்தச்சன் விலாசம் காணோமே. காணாமல் போய்விட்டார்களே. இது உங்களாலா நடந்தது. இல்லையே, கருவூர்த்தேவரல்லவா நிற்க வைத்தார். கோயில் பணி மட்டும் வெறுமே மனிதரால் நடைபெறுவதல்ல என்பதைப் புரிந்து கொண்டேன். எனவே தான் இந்தப் பணியில் கர்வமற்று தொடர்ந்து இருக்க விரும்புகின்றேன்.''

அவன் தெளிவான குரலில் மிருதுவாகப் பேசினான். மெய்க் காவல் படைவீரனைத் திரும்பிப் பார்க்க, அதில் ஒரு படைவீரன் சக்ரவர்த்திக்கு அருகே ஓடிவந்தான். சக்ரவர்த்தி அவன் தோளில் இருக்கிற கேயூரத்தைப் பார்த்தார். அது உபதளபதி கேயூரமாக இருந்தது. அதைக் கழற்றச் சொன்னார். கழற்றிய அந்த வெள்ளிக் கேயூரத்தை எடுத்து, அந்த பாண்டிய கருவறைச் சிற்பியின் புஜத்தில் மாட்டினார்.

"இவனுக்கு நான் கேயூரம் அணிவித்ததைச் சொல்லி, நீ வேறு கேயூரம் வாங்கிக் கொள்." அந்த வீரனை அப்புறப்படுத்தினார்.

"என்ன கோயில் கட்டுகிறார்களாம். கேள்விப்பட்டாயா." சக்ரவர்த்தி கேட்டார்.

"உங்களுக்குத் தெரியாததா. என்னிடம் கேட்கிறீர்கள். அங்கிருந்து ஆட்கள் வந்து இங்குள்ள சிற்பிகளிடம் பேசுகிறார்கள். குணவன், நித்தவினோதப் பெருந்தச்சனின் ஆட்கள் என்று அவர்கள் தங்களைக் கூறிக் கொள்கிறார்கள். இங்குள்ளவர்கள் அவர்களை மிக மகிழ்வோடு வரவேற்கிறார்கள். குணவனைப் பற்றி விசாரிக்கிறார்கள்.

குணவன் இப்போது சீருடையாள் என்ற பெண்ணோடு மிகச் சுகமாக அங்கு செங்கற்களாலான பெரிய வீடு ஒன்று கட்டிக் கொண்டு வாழ்வதாகத் தெரிகிறது. அங்குள்ள வசதிகளை இங்குள்ள சிற்பிகளுக்குச் சொல்ல, இங்குள்ள சிற்பிகள் மெல்ல மெல்ல அங்கு குடிபெயர்கிறார்கள்.

குஞ்சரமல்லப் பெருந்தச்சருக்கு இது பிடிக்கவில்லை. அதனால் பெருந்தச்சரிடம் விடைபெறாமல் இந்தச் சிற்பிகள் நகருகிறார்கள். என் வேலையைப் பாதியில் விட்டுவிட்டுப் போகிறீர்களே, நீங்கள் விளங்குவீர்களா. நீங்கள் செய்யும் வேலை விளங்குமா. நீங்கள் கட்டும் அரண்மனை நிலைக்குமா என்றெல்லாம் பெருந்தச்சர் உரத்த குரலில் சாபம் கொடுக்கிறார்.

காலம் எல்லாவற்றையும் விழுங்கிவிடும் தன்மையைக் கொண்டது. காலத்தால் விழுங்க முடியாத சில விஷயங்கள் இந்தப் பூமியில் உண்டு. நன்கு பராமரிக்கப்பட்ட கோயில்களைக் காலம் எதுவும் செய்ய முடியாது. நன்கு பாதுகாக்கப்பட்ட கோயில்களை காலத்தால் அழிக்க முடியாது. கரைவெள்ளமோ கதிரின் சூடோ, தீயோ, காற்றோ, வேற்று நாட்டு மனிதர்களோ அழிக்க முடியாது.

பேரரசே, நான் உங்களுக்காகச் சொல்லவில்லை. இந்தக் கருவறையில் சிவலிங்கம் ஸ்தாபிக்கப்படுகிறபோது நானும் கயிறு கட்டி இழுத்துக் கொண்டிருந்தேன். அந்த நேரத்து நினைவூடே சொல்கிறேன். இந்தப் பெரிய கோயில் பரமஸ்வாமி இருப்பிடத்தை எவரும் அழிக்க முடியாது. சந்திரசூரியர் உள்ளவரை இந்தக் கோயில் நிற்கும். உங்கள் பெயரைச் சொல்லும். ஆனாலும், இந்தக் கோயில் கும்பாபிஷேகம் முடிந்த பிறகு ஒரு சிற்பியாகிய எனக்கு வேலை இல்லை.



சிவாச்சாரியார்கள் இதனைக் கைப்பற்றி விட்டால், என்னையெல்லாம் அலட்சியப்படுத்துவார்கள். எனவே, நான் அடுத்த படியாக எங்கு கோயில் கட்டுகிறார்களோ அங்கு போவேன். நீங்கள் கோயில் கட்டியதுபோல உங்கள் பிள்ளையும் கோயில் கட்டுவார். உங்கள் பிள்ளை கோயில் கட்டியதுபோல, உங்கள் பேரனும் கோயில் கட்டுவான். பேரனுக்குப் பேரனும் கோயில் கட்டுவான்."

"நல்லது. இன்னொரு கூடை மண் அள்ளும்."

"வேண்டாம். நான் அள்ளிப் போட்டு நானே கொண்டு போய் சேர்க்கிறேன். நீங்கள் தொடர்ந்து வந்து போய் கொண்டிருங்கள்." அந்தப் பாண்டிய கருவறைச்சிற்பி மண் கொத்தி கூடையில் போட்டான். தூக்கி தலையில் வைத்துக் கொண்டான்.

சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜராஜரைத் தாண்டி நிதானமாய் நடந்து போய் பெரிய கூடையில் அதைக் கொட்டினான். இராஜராஜரைப் பார்த்து சிரித்த வண்ணம் வந்தான். கூடையைக் கீழே வைத்தான். மண்வெட்டியால் மண்ணைக் கொத்தி மறுபடியும் மண் போட்டான்.

சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவர் மெல்ல அவனிடமிருந்து விலகி மண் மேடு ஏறி, கருவறையை நோக்கி நடந்தார். கடந்துபோய் அந்தப் பாண்டிய வீரனைப் பார்த்தார்.

மனிதர்களில் உத்தமமானவர்கள் எல்லா ஊரிலும் இருக்கிறார்கள். மனிதர்களில் அதமமானவர்கள் எல்லா ஊரிலும் இருக்கிறார்கள். உத்தமமானவர்கள் வெகு சிலரே. சொர்க்கம் அவர்களுக்கு அருகே இருக்கிறது. இந்தப் பாண்டிய வீரன் வெகுநிச்சயம் சிவனின் கருணையில் திளைப்பான் என்று அவர் உள்மனம் சொல்லிற்று. நடந்து போக கருவறை வாசற்பக்கம் பெரிய துவாரபாலகர் சிலையைப் படுக்க வைத்து, அதன் மீது நின்றபடி அதை ஒரு சிற்பி உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார்.

இடுப்பில் இறுக்கி கச்சமாகக் கட்டப்பட்டிருந்த வேட்டி, தலையில் தலைப்பாகை, மார்பில் பொன் வளையம், கையில் காப்பு, காலில் வெள்ளிக்கழல் என்று ஒரு தகுதியுடைய சிற்பியாக காட்சியளித்தார். அவருக்கருகே குத்த வைக்கப்பட்டிருந்த ஒரு பனத்துண்டில் ஒரு வெற்றிலைப்பெட்டி இருந்தது.

முகத்தைச் சொறிந்து கொள்வதும், முணுமுணுப்பாகப் பேசுவதும், மெல்ல வெற்றிலையை வாயில் அதக்கியதுமாய் தீவிர சிந்தனையில் அந்தச் சிற்பி இருந்தார். மெல்ல வலக்கை நீட்டி

வெற்றிலைக்காக துழாவினார். வெற்றிலையை யாரோ எடுத்துக் கொடுப்பார்கள் போலிருக்கிறது. சீக்கிரம் கொண்டா... என்ற ஒரு அதட்டல் சிற்பியிடமிருந்து வந்தது.

சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவர் பனந்துண்டம் மீது வைத்திருந்த வெற்றிலைப் பெட்டியைத் திறந்து பார்த்தார். உள்ளே சுருள் சுருளாக வெற்றிலை வளையமாக, வடயமாக வைக்கப்பட்டிருந்தது. பாக்கு பொதித்து சுன்னம் தடவி சட்டென்று வாயில் போட்டுக் கொள்ளும் வண்ணமாய் அந்த வடயம் இருந்தது. வெற்றிலையைத் தொட்டுத்தடவி நிதானமாகப் போட்டுக் கொள்கின்ற ஒய்வு சிற்பிகளுக்கு இல்லை. அதேசமயம் வெற்றிலை போடாமலும் முடியாது. எனவே, காலையிலேயே வடயமாக இந்த வெற்றிலைகளைச் செய்து கிராம்பு வைத்துத் தைத்துக் கொண்டு வந்து விடுவார்கள். இதை ஒரு பையனிடம் கொடுத்துவிடுவார்கள். கைநீட்டும் பொழுதெல்லாம் அந்த வடயத்தை அவர் கையில் வைக்க வேண்டும். தொடர்ந்து இதைச் சாப்பிட்டுக் கொண்டே வேலை நடக்கும். இப்பொழுது பையன் இல்லை. எங்கோ ஒதுங்கப் போயிருப்பான் போல.

மறுபடியும் அதட்டல் வர சக்ரவர்த்தி உடையார் அந்த வடயத்தை எடுத்து சிற்பியின் கையில் வைக்க, சிற்பி சட்டென்று வாயில் போட்டுக் கொண்டார். முகம், சிற்பத்தைப் பார்த்தவாரே இருந்தது. மறுபடியும் கை நீட்ட மறுபடியும் இன்னொரு வடயத்தை அவர் உள்ளங்கையில் வைத்தார். அதையும் வாங்கிப் போட்டுக் கொண்டு நிதானமாக அரைத்து நாலடி முன்னே நகர்ந்து அந்த துவார பாலகரின் வயிற்றில் நின்றார். மெல்ல பின்னே நகர்ந்தார்.

கதை இத்தனை உயரம் என்றால் கதையைச் சுற்றிய பாம்பு இத்தனை நீளம். கதையைச் சுற்றிய மலைப்பாம்பு இத்தனை நீளம் என்றால், அங்கு யானை இவ்வளவு உயரம். இத்தனை உயரம் யானை, இவ்வளவு நீளம் பாம்பு, இத்தனை உயரம் கதை, அதற்கு மேல் கை. அதற்கு மேல் உடம்பு, உடம்புக்கு மேல் கை. அதற்குமேல் உடம்பு. உடம்புக்கு மேல் தலை. தலைக்கு மேல் கிரீடம் கிரீடத்திற்கு மேல் கை. கை வானம் நோக்கி நிற்கிறது. சரியா என்று தனக்குத்தானே சொல்லி என்ன கேட்கிறேனே என்று, மறுபடியும் வெற்றிலைக்கு கை நீட்டி மூன்றாவது வெற்றிலையை சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவர் அந்த சிற்பியின் கையில் வைத்தார்.



அந்தச் சிற்பி வடயத்தை வாங்கி வாயில் போட்டுக் கொண்டு 'என்ன சரியா' என்று திரும்பினார், அங்கு சக்ரவர்த்தி இருப்பதைப் பார்த்துவிட்டுத் திகைத்தார். நான்கு முறை அரைத்த வாய் நின்றுவிட்டது. வாயில் வெற்றிலைச்சாறு வழிந்தது.

''மன்னிக்க வேண்டும். மன்னிக்க வேண்டும். நீங்களா வெற்றிலை கொடுத்தீர்கள். அந்தப் பையன் எங்கே.'' என்று நாலா புறமும் பதற, உடையார் அவரைச் சட்டென்று நிற்க வைத்தார்.

''என்னாயிற்று உமக்கு. நீர் கேட்டது எனக்குப் புரியவில்லை. அதனால் நான் பதில் சொல்ல வில்லை. என்ன கேட்கிறீர் மறுபடியும் கேளும்.'' சிற்பியிடம் சொல்லி சிற்பி, ''என்னை மன்னிக்க வேண்டும். நாங்கள் பெரிய தவறு செய்து விட்டோம். இது அபசாரம்.'' என்று சிற்பி கத்த, சக்ரவர்த்தி கை வைத்து அழுத்தினார்.

''வெற்றிலை போட்டுக் கொண்டால்தான் வேலை நடக்கும். யாரோ ஒருவர் வெற்றிலை கொடுக்க வேண்டும். பையனைக் காணோம். நான் கொடுத்தேன். இதில் என்ன தவறு. என்ன கேள்வி கேட்டீர். என்னிடம் மறுபடியும் கேளும்.'' சிற்பியால் பேச முடியவில்லை. நெளிந்தார்.

''பேசுமய்யா. நீர் என்ன சொல்ல வருகிறீர். இந்தச் சிற்பம் என்ன சொல்கிறது.''

சக்ரவர்த்தி உடையார் வினவினார்.

''இறைவன் பிரமாண்டம் என்பதை இந்தச் சிலை சொல்கிறது.''

''அப்படியா. துவாரபாலகர் சிலைதானே. எனக்கொன்றும் பிரமாண்டம் தெரியவில்லையே. பெரிய சிலை என்பதால் இறைவன் பிரமாண்டம் என்று சொல்ல வருகிறீரா.''

''இல்லை. அப்படியல்ல. இதோ சிலையின் முகம், மார்பு, கால் செதுக்கி விட்டேன். இந்தத் தூக்கி வைத்த காலுக்குக் கீழ் கதை இருக்கிறது. கதையினுடைய உருளை செதுக்க வேண்டும். அந்த கதையினுடைய உருளையைச் சுற்றி ஒரு மலைப்பாம்பு சுற்றிக் கொண்டிருக்கும். அந்த மலைப்பாம்பு வாயைப் பிளந்து கொண் டிருக்கும். அந்த வாயைப் பிளந்த மலைப்பாம்பு ஒரு யானையை விழுங்கிக் கொண்டிருக்கும்.

அதாவது முற்றி முதிர்ந்த ஒரு யானையை அதனினும் பெரிய ஒரு மலைப்பாம்பு வாயைப் பிளந்து விழுங்க அந்த மலைப்பாம்பு ஒரு கதையில் சுற்றிக் கொண்டிருக்கிறது. யானையை விட பெரிய

பாம்பு. பாம்பை விட பெரிய கதை. கதையைவிட பெரிய கை கால்களுள்ள பெரிய ஒரு துவாரபாலகர். அதாவது யானையே பிரமாண்டம். யானை என்கிற பிரமாண்டத்தைவிட பாம்பு மிகப்பெரிய பிரமாண்டம். அந்த பாம்பு சுற்றிக் கொண்டிருக்கிற கதை மிகப்பெரிய பிரமாண்டம். கதையைத் தாங்கிக் கொண் டிருக்கிற துவாரபாலகர் இன்னும் பெரிய பிரமாண்டம். அத்தனை பெரிய பிரமாண்டம். உயரத் தூக்கி என்னைவிட பிரமாண்டமான ஒரு விஷயம் மேலேயிருக்கிறது என்று கை விரித்துச் சொல்லப் போகிறார். இந்தப் பிரமாண்டத்தை மனம் கொள்ள முடியாது என்பதை இந்தச் சிற்பத்தின் மூலம் சொல்கிறோம். இந்த கை விரித்த முத்திரைக்கு விஸ்மயம் என்று பெயர். அதாவது பெரு வியப்பு என்று பொருள்.''

''அடாடா... அடாடா... யானையும் பாம்பும் எங்கே.''

''இனிமேல்தான் செதுக்க வேண்டும். அந்த அளவைத்தான் மனதுக்குள் குறித்துக் கொண்டிருந்தேன். நீங்கள் வந்து விட்டீர்கள் ஒரு அபசாரம் நிகழ்ந்துவிட்டது.''

''சும்மாயிருமய்யா. மிக அற்புதமாக இருக்கிறது. இறைவன் பிரமாண்டம் என்பதை ஒரு சிலையில் இதைவிட அற்புதமாகச் சொல்லவே முடியாது. இது உம்முடைய யோசனையா.''

''இல்லை. நித்தவினோதப் பெருந்தச்சனின் யோசனை. இதோ இதுதான் அவர் வரைந்த ஓவியம்.

ஒரு ஓவியச்சுருளைப் பிரித்துக்காட்ட, அதில் கரிக்கோட்டில் மிகத்தெளிவாக ஒரு ஓவியம் எழுதப்பட்டிருந்தது.

''குணவன் எப்படியிருக்கிறார்.''

''நலமாக இருப்பதாக நேற்றுகூட செய்தி வந்தது. அவருக் கென்று ஒரு மாளிகை கட்டிக் கொண்டு விட்டாராம். அரண் மனை வேலைக்காக கன்னி மூலையில் கணபதி சிலையொன்று செய்து முடிந்துவிட்டதாம். வரும் வாரம் ஸ்தாபனமாக கன்னி மூலை கணபதி ஸ்தாபனம் செய்து விட்டால் பிறகு அரண்மனை வேலை ஆரம்பித்து விடலாம். அரண்மனை வேலை நடந்து கொண்டிருக்கும்போதே கோயில் வேலையும் துவங்கி விடுவாராம். இந்த வேலையை முடித்துவிட்டு அங்கே வரும்படி கட்டளை. ஏற்கனவே பல சிற்பிகள் நகர்ந்துவிட்டார்கள்.''

''நீங்கள் ஏன் நகரவில்லை.''

''எனக்கு வேலை முடியவில்லையே.''



''முடிந்தால் நகர்ந்துவிடுவீரா.''

''ஆமாம்... முடிந்த பிறகு ஒரு சிற்பிக்கு கோயிலில் என்ன வேலை. அடுத்த கோயில் நோக்கிதான் சிற்பி நகரவேண்டும். சிற்பிக்கென்று தனியே ஒரு ஊரோ, தேசமோ, எதுவுமில்லை. எந்த இடத்தில் கோயில் கட்டுகிறார்களோ அந்த இடம்தான் என்னு டைய ஊர். ஏதோ ஒரு கோயில் கட்டும்போது பிறப்பேன். ஏதோ ஒரு கோயில் கட்டும்போது இறப்பேன். எந்தக் கோயில், எப்போது என்று தெரியாது. நான் இங்குதான் இறக்க வேண்டு மென்று எந்தக் கட்டளையும் இல்லை. நான் கட்டுகின்ற கோயிலுக்குக் கீழே இறக்க வேண்டுமென்பதுதான் என் ஆசை. வெகு நிச்சயமாய் நான் இளவரசர் இராஜேந்திரர் கட்டுகின்ற அந்த அரண்மனைக்கும், கோயிலுக்கும் வேலை செய்யப் போய் விடுவேன்.'' அந்த சிற்பி பேச உள்ளே சட்டென்று ஒரு துக்கம் சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவருக்கு ஏற்பட்டது.

இது சரிதானே. சரியான விளக்கம்தானே என்று எண்ணிக் கொண்டார்.

நல்லது. வேலையை நலமே முடித்துவிட்டு நலமாய் போய் வாருங்கள். கைகூப்பினார். இறங்கி கருவறை நோக்கி நடந்தார்.

உள்ளே அமைதியாய் வெள்ளை வேட்டியைப் போர்த்திய வண்ணம் பரமஸ்வாமி அமர்ந்திருந்தார்.

தென்னாடுடைய சிவனே போற்றி. எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி.

கருவறைக்குள் நுழைந்து மெல்ல அந்த சிவலிங்கத்தைத் தொட்டு அதன் மீது கையை வைத்தார். வெகுநேரம்.. வெகுநேரம் அந்தச் சிவலிங்கத்தைத் தொட்டபடியே நின்றிருந்தார்.

எல்லோரும் ஏதேனும் ஒரு இடம் நோக்கிப் போய்க் கொண் டிருக்கிறார்கள். நான் எங்கு போவேன் என் சிவனே. நான் எங்கு போவேன். என்னை அடுத்தபடி எங்கு அழைப்பாய். எங்கு எழுந்தருளுவது இனியே. நான் எங்கே போவது இனியே அடுத்த கோயில் கட்டப்போவதா அல்லது உனது பாதமே கதியென்று இருப்பதா.

இங்கேயே உட்கார்ந்து உன்னை பூஜை செய்து கொண்டிருப் பதா அல்லது இன்னொரு இடம் நோக்கி நகர்வதா. என் வாழ்க்கை முடிந்துவிட்டதா இல்லை. இன்னும் தொடர்கிறதா இத்தனை பெரிய விஷயம் செய்த எனக்கு இன்னும் நிம்மதியில்லையே.

இன்னும் மனம் நிலைக்கவில்லையே. எனக்குப் பிரியமானவரும் உனக்கு அன்பானவருமா பஞ்சவன்மாதேவியை இப்படி கந்தையாக்கிப் போட்டிருக்கிறாயே. என் சிவனே, நான் என்ன பிழை செய்தேன். என் பாபம் என்ன. அது எப்போதும் போகும்.

சக்ரவர்த்தி உடையார் கண்ணில் நீர் வழிந்தது. அவர் மெல்ல சிவனைத் தழுவிக் கொண்டு அழத்துவங்கினார்.

தென்னவன் மூவேந்த வேளார் மெல்ல உள்ளே எட்டிப் பார்த்தார்.

யார் இவர். சாதாரண மனிதனா. இல்லை. சக்ரவர்த்தியா? செயற்கரிய செயலை, மிகப்பெரிய இந்தக் கோயிலைத் தன் மனதிற்கட்டி அதைச் செயலாக்கிய தீரரா. தனது அனுக்கியின் துன்பத்திற்கு வாய்விட்டு அழுபவரா. இவையாவும் தனித்தனியானவையா. ஒன்றானவையா. இவை இரண்டும் ஒரே மனிதரில் பொதிந்திருக்கின்ற வெவ்வேறு உணர்வுகளா அல்லது ஒன்றின் தொடர்பால் ஒன்று வருபவையா.

தென்னவன் மூவேந்த வேளார் விலகி நின்று சக்ரவர்த்தியைப் பார்த்த வண்ணம் குழம்பினார். மெல்ல கருவறைத் தாண்டி வந்தார். அவரையும் விட வயதில் மூத்தவன் என்ற முறையில் சக்ரவர்த்தியின் தோளில் கை வைத்தார். மெல்ல திசை திருப்பினார். கன்னங்களில் வழியும் நீரைத் துடைத்தார். மெல்ல அணைத்துக் கொண்டார்.

"சக்ரவர்த்தி அவர்களே, இறைவன் வழி காட்டுவான். இந்தப் பூமியில் செயற்கரிய செயலைச் செய்த நீர் எது கேட்டாலும் கிடைக்கும். எப்போது கேட்டாலும் கிடைக்கும். இறைவன் உமக்கு இல்லையென்று மறுத்ததேயில்லை. வேறு எவராக இருப்பினும் அந்த விஷக்கல்லுக்குப் பலியாகி இருப்பார். பஞ்சவன்மாதேவி இன்னும் உயிரோடு இருக்கிறார் என்றால் அது உமக்கு கொடுக்கப்பட்ட கொடை. உம்முடைய பிரார்த்தனைக்கு கிடைத்த பலன். நீ கேட்டு ஒன்று இல்லையென்று இறைவன் மறுத்ததேயில்லை.

அந்த துங்கபத்ரை நதியில் எதிரேயிருந்த அத்தனை வீரர்களையும் கண்டு மிரளாமல் நதியில் இறங்கி போர் முனைக்குப் போய் மிகப்பெரிய வெற்றியைச் சூடினீரே. அதுவும் இறைவன் அளித்த கொடை. கர்வம் மிக்க அந்தணர்களை காந்தளூர்ச்சாலையில் அடித்தீரே, அது இறைவன் கொடுத்த கொடை. வழியே தடுத்த பாண்டிய தேசத்து அரசனைத் தண்டித்தீரே, அப்பொழுது உமது வெற்றியின் சிறப்பு விளங்கிவிட்டது. இறைவன் உன்மீது வைத்த கருணை புரிந்துவிட்டது.



கங்கபாடியும், ரெட்டைபாடியும், தடிகை பாடியும், குடமலை நாடும் உமக்குப் பணிந்ததற்குக் காரணம், உம்முடைய வீரம் மட்டுமல்ல. நம் படைவீரர்களின் சிறப்பு மட்டுமல்ல. இறைவன் உம்மை அதிகளவு நேசிக்கிறான் என்றும் பொருள். உமக்கு இறைவன் கொடுத்த கொடை அற்புமான மனைவிகள் மட்டுமல்ல. வாழ்வின் எல்லா இடத்திலும் துணையிருந்த பஞ்சவன் மாதேவியார் மட்டுமல்ல. உமக்கு இறைவன் மிகப்பெரிய கொடையைக் கொடுத்திருக்கிறான். அதற்குப் பெயர் இராஜேந்திரன்.

இளம் வயதில் உம்முடைய துடிப்பையும், வீரத்தையும் நான் அருகேயிருந்து கவனித்திருக்கிறேன். உத்தம சோழரால் அது சற்று மட்டுப் பட்டது. உத்தமசோழருக்கு ஆட்சி கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தத்தால் உம்முடைய பெருமை கொஞ்சம் மேகத்தில் மறைந்த நிலவு போல் இருந்தது. மேகம் விலக உம்முடைய அறிவொளி பிரகாசித்தது. ஆனால், சித்திரை மாதத்து நிலவு போன்று நிர்மலமான ஒரு வானத்தில் உம்முடைய மகன் பவனி வருகிறான். உம்முடைய புகழை அவன் மேலும் பரப்புவான். அவன் ஜாதகத்தைக் கணித்த குடந்தை ஜோசியர் என்னிடம் சொன்னார்.

இராஜேந்திரனுடைய மகன் இன்னும் சிறப்பாக ஆட்சி செய்வானாம். இந்தச் சோழப்பரம்பரை தலைமுறை தலைமுறையாக அற்புதமாக ஆட்சி செய்து கொண்டு வருமாம். இன்னும் ஏழு தலைமுறைக்கு எந்தக் குறையும் வராது என்று சொன்னார். ஏழு தலைமுறைக்குப் பிறகு என்ன ஆகும் என்று கேட்டேன். சொல்ல முடியாது என்றும் சொன்னார். உம்மோடு நான் வாழ்ந்திருக்கிறேன் என்பதைவிட மிகப்பெரிய பெருமை எனக்கு ஏது உண்டு. நான் பூர்வ புண்ணியம் மிக்கவன். ஒரு நல்ல அரசனிடம், திறமையான நிர்வாகியிடம் நான் வேலை செய்திருக்கிறேன் என்ற நிறைவு எனக்கு எப்போதும் இருந்திருக்கிறது.

சிவனிடம் என்ன கேட்டீர் என்று எனக்குத் தெரியாது. ஆனால் ஒன்று தெரியும். நீர் என்ன கேட்டாலும் கிடைக்கும். எப்போது கேட்டாலும் கிடைக்கும்.

வெளியே வந்து வெளிச்சம் பட்டதும் சக்ரவர்த்தி முகம் தெளிந்தார்.

''மிக்க நன்றி. எனக்கு உம்முடைய வார்த்தைகள் சந்தோஷமளித்தன. நீர் சொல்வது சரி. நான் என்ன கேட்டாலும் எப்போது கேட்டாலும் இறைவன் தருவார். எனக்கு அது புரிகிறது.''

சக்ரவர்த்தி உடையார் கைதட்ட மண்மேடு நோக்கி மெய்க்காவல் படைவீரர்களின் குதிரைகள் பாய்ந்து வந்தன. அரசர் குதிரையும் அருகே வந்தது.

அரசர் குதிரையில் தாவி ஏறிக்கொண்டார்.

''அதிகம் ஆட்களை வரவழைக்க ஒரு சிறிய உபாயம் செய்யப் போகிறேன்.''

மூவேந்த வேளார் என்ன என்று புருவம் உயர்த்தினார்.

''நேராக தளிச்சேரி பெண்களின் தலைக்கோல் ராஜராஜியிடம் போகப் போகிறேன். அந்த நாட்டில் நாடகமொன்று செய்து கொண்டிருக்கிறார்களாம். அதை விரைவில் இங்கு அரங்கேற்றம் செய்யப் போகிறேன். அந்த நாட்டிய நாடகம் இங்கே காண வருபவர்கள். வேலையும் செய்வார்கள். ஆறுநாட்களில் இந்த மண்மேடு அப்புறப்படுத்தப்பட்டு விடும்.''

முகம் முழுவதும் சிரிப்போடு சக்ரவர்த்தி சொல்ல தென்னவன், மூவேந்த வேளாரும் முகம் மலர்ந்தார்.

இதைத்தான் இறைவனிடம் கேட்டுக் கொண்டிருந்தீரா என்று உரத்த குரலில் வினவ சற்று யோசித்த சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவர், ''ஆமாம், வேலை விரைவாக முடிய வேண்டாமா. விரைவாக வேலையை முடித்துத் தாருங்கள் என்று வேண்டிக் கொண்டேன்.''

குதிரையைத் திரும்பினார். மெய்க்காவல் படைசூழ அவர் குதிரை மண்மேட்டுச் சரிவில் இறங்கி கோயிலை வலமாகச் சுற்றிக் கொண்டு கோயிலின் வடக்குப் புறத்திலுள்ள தளிச்சேரி பெண்டிரின் வீடு நோக்கிப் போயிற்று.

மன்னர் வருகிறார் என்ற எக்காளம் அந்தப் பகுதியில் ஊதப்பட்டது. பகல் நேரம் தூங்கிக் கொண்டிருந்த பெண்கள் அடித்துப் புரண்டு எழுந்தார்கள். முகம் துடைத்துப் பொட்டிட்டுக் கொண்டு வாசலுக்கு வந்தார்கள். அதற்குள் குதிரைகள் ராஜராஜியின் வீட்டைச் சுற்றிக்கொண்டு நின்றன.

சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீஇராஜராஜத்தேவர் நான்கு வீரர்கள் புடைசூழ உள்ளே நுழைந்தார். வீணை வாசிப்பவரோடும், குழல் ஊதுபவரோடும் மத்தளக்காரோடும் அமர்ந்த ராஜராஜி துள்ளி



எழுந்திருந்தாள். சக்ரவர்த்தியைக் காலில் விழுந்து வரவேற்றாள். சக்ரவர்த்தி அவளைத் தனியே அழைத்துக் கொண்டு போய், ''எவ்வளவு சீக்கிரம் நாட்டியத்தை அரங்கேற்ற முடியும்.'' என்று கேட்க அவள் திகைத்தாள்.

''கூட்டம் கூட வேண்டுமெனில் அந்த நாடகம் நடப்பது நன்றாக இருக்கும் என்று தோன்றுகிறது. நானும், என்னைப் பார்க்க வேண்டுமல்லவா.'' என்று சிரிப்போடு கேட்க அவள் நாணினாள். விரைவில் செய்து தருவதாக ஒத்துக்கொண்டாள்.

நாட்டிய நாடகத்திற்கு நாள் குறிக்கப்பட்டது. பெரிய மர மேடை அமைக்கப்பட்டது. மக்களுக்கு செவி வழியாய் செய்திகள் போக, ''என்னது இராஜராஜேஸ்வர நாடகமா, நாட்டிய நாடகமா. சக்ரவரத்தி உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவரின் சரித்திரத்தைப் பற்றியா. நான் பார்க்க வேண்டுமே''

இப்போது முன்னிலும் அதிகமாக மக்கள் தஞ்சையை நோக்கி வரத்துவங்கினார்கள். தொண்டை நாட்டு அந்தணர்கள் உணவுக்குப் பரபரத்தார்கள். அரிசிக் கொள்முதலும், காய்கறிக் கொள்முதலும் விரைவாக நடைபெற்றன. நெய் வேண்டுமென்று நாலாபுறமும் ஆட்கள் அலைந்தார்கள். உப்பு குறைவாக இருக்கிறதென்று கடற்கரைப் பட்டிணங்களுக்கு குதிரைகள் பறந்தன. மக்கள் குவிந்த மூன்றே நாட்களில் அந்த மண்மேடு அகற்றப்பட்டு தொலைவில் கொண்டு போய் கொட்டப்பட்டது. தரை சுத்தமாக்கப்பட்டது. குடம் குடமாய் நீருற்றி சுவர்கள் கழுவப்பட்டன. தேங்காய் நாறாலும், பீர்க்கங் கருணையாலும் தேய்க்கப்பட்டு இடுக்கிலிருந்த மண்துகள்கள் நீக்கப்பட்டன.

தட்சிணமேரு விடங்கரைச் செய்து முடித்து விட்டேன் என்று உலோகச் சிற்பிகள் சொல்ல, சக்ரவர்த்தி உடையார், அவர்கள் இடம் நோக்கிப் போய் அந்த சிலையைப் பார்த்தார். பரவசமானார். துணி மூடி பல்லக்கில் வைத்துத் தூக்கி வந்தார். கோயிலுக்குள் மிகச்சரியான இடத்தில் அதைக் குடியமர்த்தினார். பஞ்சவன்மாதேவி ஆணையிட்ட ஆடல் வல்லானும் உமா பிராட்டியாரும் கணபதி யாரும், பதஞ்சலியும் அடுத்தபடி தயாராயின. அவைகள் திறந்த நிலையில் ஊர்வலமாக எடுத்து வரப்பட்டு பொது மக்கள் பார்வைக்கு வைக்கப்பபட்டு பிறகு பஞ்சவன்மாதேவி எதிரில் நிறுத்தப்பட்டது. கட்டிலில் அமர்ந்தபடியே கூடத்து முற்றத்திலிருந்த சிலைகளைப் பார்த்து பஞ்சவன் மாதேவி கைகூப்பினார். அருகேயிருந்த சக்ரவர்த்தி உடையாரின்

கைகளைப் பிடித்துக் கொண்டு மெல்ல எழுந்து நின்றார். எல்லோரும் ஆச்சரியத்தில் வாய் பிளந்தார்கள்.

என்னை இன்னும் அருகே அழைத்துப் போங்கள் என்று சொல்ல சக்ரவர்த்தி உடையார் பஞ்சவன்மாதேவி இடுப்பில் கை சுற்றி மெல்ல நடந்து சிலைக்கருகே அழைத்துப் போனார்.

பஞ்சவன்மாதேவி முற்றத்தில் இறங்கி சூரிய ஒளி தன்மீது படும்படி நின்று உலோகச் சிலைகளைத் தடவிப் பார்த்தார். பிறகு மெல்லத் திரும்பி தன் நிழலைப் பார்த்தார்.

''என் தலையில் ஒருமுடிகூட இல்லையா.'' என்று கேட்டார்.

சக்ரவர்த்தி உடையார் மௌனமாக நின்றிருக்க, மறுபடியும் கேட்டார்.

''இல்லை.'' என்று நிதானமாய் சக்ரவர்த்தி சொல்ல சக்ரவர்த்தியையே உற்றுப் பார்த்தார்.

''ஏன் இன்னும் என்னை அணைத்துக் கொண்டிருக்கிறீர்கள்.'' என்று மெல்லிய விசும்பும் குரலில் பஞ்சவன்மாதேவி கேட்க சக்ரவர்த்தி உடையார் அவரை உறுத்துப் பார்த்து இன்னும் இடுப்பில் இறுக்கிக் கொண்டார். மெல்லத் தூக்கி கூடத்தில் நிற்க வைத்தார். இடுப்பில் கை வைத்து அணைத்த படி கட்டிலுக்குப் போய் அமர வைத்தார்.

''எனக்கு நீ வெறும் முடி, தோல் அல்ல. எனவே அதிகம் உளறாமல் இரு.'' என்று அன்புக் கட்டளையிட்டார்.

சக்ரவர்த்தியார் கைகளை பஞ்சவன்மாதேவியார் பிடித்து மெல்லக் கண்களில் ஒற்றிக் கொண்டார். பிறகு அயர்ச்சியோடு கட்டிலில் சாய்ந்தார். அந்தச் சிலைகள் கோயிலுக்குள் எடுத்துப் போகப்பட்டன.

## 177

இரண்டு ஆள உயரத்திற்கு நின்றிருந்த அந்தச் செப்புக்கலசம் தங்க முலாம் பூசப்பட்டு வெயிலில் பளபளத்தது. தளிச்சேரி பெண்டுகளும் அந்த இடம் முழுவதும் பெருக்கி சுத்தம் செய்து நீர் தெளித்தார்கள். கோலமிட்டார்கள்.

தென்னவன் மூவேந்த வேளாரும், அருண்மொழியும், பிரம்ம ராயரும், ஈராயிரம் பல்லவரையரும் ஒன்றுகூடி ஈசான சிவ பண்டிதர் சொன்னதேதியை மனதில் வாங்கிக் கொண்டார்கள்.



அரசரின் இருபத்தைந்தாவது ஆட்சியாண்டின் இருநூற்று எழுபத்தைந்தாம் நாளில் கும்பாபிஷேகம் நடக்க வேண்டுமென்று நாள் குறிக்கப்பட்டது. குடந்தையில் தங்கி ஓய்வெடுத்துக் கொண்டிருந்த மருவூர் அந்தணர்கள் ஈயம்பூசிய அந்தப் பாத்திரங்களை பெரிய வண்டியில் வைத்து கீழைச்சாளுக்கியத்து காளைகள் இழுக்க உள்ளே வந்தார்கள். அந்தணர்களுக்கு மிகப்பெரிய வரவேற்பு கொடுக்கப்பட்டது. தஞ்சையிலுள்ள பல கோயில்களுக்குச் சொம்பு சொம்பாக சக்ரவர்த்தியின் உத்தரவின் பேரில் கங்கை ஜலம் கொடுத்தார்கள். பெரிய தாமிரத்தவலை நிறைய கங்கை ஜலமும், காவிரி ஜலமும், கிருஷ்ணா நதியின் ஜலமும், கோதாவரியின் ஜலமும் சக்ரவர்த்திக்கென்று கொடுத்தார்கள்.

சக்ரவர்த்தி இதை யாகசாலைக்கு அனுப்பினார். ஈசான சிவபண்டிதரால் யாகசாலை நிறுவப்பட்டு சோழதேசத்தின் பல்வேறு அந்தணர்களால் யாகங்கள் செய்யப்பட்டன.

''இதெல்லாம் என்னன்னு தெரியுமா உனக்கு.''

பழமர்நேரி அந்தணர்கள் தொண்டை நாட்டு அந்தணர்களைக் கேட்க, தொண்டை நாட்டு அந்தணர்கள் உதடு பிதுக்கினார்கள்.

''போ. ஓலையில் ஏதாவது கணக்கு எழுது. நம்ம ஜாதிக்கு இதுதான் ஆதாரம். இதைவிட்டு கணக்கெழுத போயிட்டியே, வணிகர்களுக்குத் தெரியாத கணக்கா. உன்னை யார் கூப்பிட்டா எழுதறதுக்கு. எது கத்துக்கணுமோ அதைக் கத்துக்காத, எது செய்யணுமோ அதைச் செய்யாத. இது என்ன பிழைப்பு.''

உரத்த குரலில் கூற தொண்டை நாட்டு அந்தணர்கள் அம்மாதிரி வைதீக அந்தணர்களுக்கு முன்புவர பயந்தார்கள்.

வைதீக அந்தணர்களுக்கு என்ன வேண்டும் என்பதை தளிச்சேரி பெண்டுகள் வந்து சொல்ல, தளிச்சேரி பெண்டுகளுக்கு வேண்டியதை, தொண்டை நாட்டு அந்தணர்கள் கொடுத்தார்கள்.

பத்து நாட்கள் விதம்விதமான ஹோமங்கள் நடைபெற்றன.

திருச்சுற்று மாளிகையிலுள்ள பரிவாரப் பிள்ளையாருக்கு முதல் பூஜை துவங்கியது. ஆலயத்துப் பிள்ளையாருக்கு அடுத்த பூஜை நடந்தது. சுற்றியுள்ள தேவதைகளுக்கும் காவல் தெய்வங்களுக்கும் பூஜைகளும், பலிகளும் தொடர்ந்தன. வந்தவர்கள் அத்தனை பேருக்கும் உணவிடப் பட்டது. அன்றைக்கு கத்தரிக்காய் பிரட்டல் செய்தீரே, அதுபோல் செய்யக்கூடாதா. தொண்டை நாட்டு அந்தணர்களும் வேளார்களும், மறவர்களும் கேட்டார்கள்.

இன்னும் கொஞ்சம் காரமாக, உப்பு தூக்கலாக என்று பதம் சொன்னார்கள். பக்குவமான புளிக்கரைசலை நன்கு வறுத்த பருப்புகளோடும், வெந்தயத்தோடும் கலந்து சாதத்தில் பிரட்டிக் கொடுக்க அந்தப் புளியோதரை, ஜனங்களுக்கு அதிகம் பிடித்துப் போயிற்று.

வெறும் சாதத்தில் எலுமிச்சம் பழத்தை நறுக்கிப் பிழிந்து வேறு விதமாக அன்னம் செய்ய, அதையும் வாங்கி வாங்கி பொது ஜனங்கள் உண்டார்கள். தொண்டைநாட்டு அந்தணர்களைப் பாராட்டினார்கள்.

''இந்த அந்தணர்களுக்கு ஒருமுறை அரசர் அரசாங்க வேலை இல்லை என்று சொன்னாலும் கோயிலுக்கு வருகின்ற ஜனங் களுக்கு உணவு கொடுத்து சம்பாதிக்கலாம். ஒரு செப்புக்காசுக்கு ஒருபடி புளியோதரை என்று கொடுத்தால் போதும் படிக்குப் பாதி லாபம்.''

''அரசாங்க வேலை ஒருபுறம் இருக்கட்டும். உன்மனைவியை, மகனை, தகப்பனை இப்படியொரு கடைபோடச் சொல்லேன்.''

மறவன் புத்தி சொன்னான்.

அந்த தொண்டை நாட்டு அந்தணருக்குச் சரியென்று பட்டது.

ஆதுரச்சாலைக்கு அடுத்தபடியாக கோயிலுக்கு நேர் எதிரில் பந்தலிட்டு உணவு விற்பனை செய்ய அங்கும் ஜனங்கள் வந்து சோறு வாங்கிக் கொண்டு போனார்கள். அந்த மறவர், சோறு விற்கிற வேகத்தைப் பார்த்துவிட்டு அங்கிருந்து சற்று தள்ளி, வேறொரு மரத்தடியில் மாமிசம் வதக்கி விற்கவும், மீன் சுட்டு விற்கவும், முட்டை அவித்து விற்கவும் ஆரம்பித்தார். மெல்ல மெல்ல கடைகள் தோன்றின. தொண்டை நாட்டு அந்தணர்கள் ஊரின் நாலாபுறமும் இப்படிச் சோற்றுக்கடைகள் திறப்பதற்கு ஆரம்பித்தார்கள்.

''ஆஹா... பரமானந்தம். வேத விஷயம் போய் ஓலைச்சுவடி கணக்கு வந்தது. ஓலைச்சுவடி கணக்கு போய் சோறு விற்கவும் ஆரம்பித்து விட்டீர்கள். கலிகாலம். நம் குலம் மெல்ல மெல்ல அழிந்து கொண்டிருக்கிறது என்பதற்கு இதுதான் சாட்சி.''

வைதீக அந்தணர்கள் உரத்த குரலில் முழங்கினார்கள். ஆனால், தொண்டை நாட்டு அந்தணர்களுக்குக் காது கேட்கவேயில்லை.

''மருவூர் அந்தணர்கள் வந்திருக்கிறார்கள்.'' என்று சக்ரவர்த்தி உடையாருக்குத் தெரிவிக்கப் பட்டது.



''என்ன விஷயம்.'' புருவம் தூக்கினார்.

''ஏதேனும் பிரசாதம் கொடுக்க வந்திருப்பார்களா.'' என்று விசாரித்தார்.

''அப்படி ஏதும் இல்லையாம். ஒரு பயணம் பற்றி உங்களிடம் தகவல் சொல்லவும் அனுமதி பெறவும், உதவிகள் பெறவும் வந்திருக்கிறார்களாம்.''

''அப்படியா... வரச்சொல்.'' என்று கட்டளையிட, மூன்று அந்தணர்களும், இரண்டு மறவர்களும், இரண்டு வணிகர்களும் இரு வேளாளர்களும் சேர்ந்து வந்திருப்பதைப் பார்த்து இன்னும் அதிசயித்தார்.

''அந்தணர்கள் வருவதாகத்தானே சொன்னார்கள். இவர்கள் இங்கே'' என்று மறவர்களைப் பார்த்து கேள்வி கேட்டார்.

''நாங்கள் எல்லோரும் ஒரு கூட்டமாக வந்திருக்கிறோம்.''

''அடாடா... என்ன விஷயமாக..''

''ஒரு பயணம் மேற்கொள்வதை உங்களிடம் சொல்ல வேண்டும் என்று ஆசைப்படுகிறோம்.''

''எங்கு பயணம்.''

''மறுபடியும் கங்கைக்கரைக்குப் பயணப்பட வேண்டுமென்று மருவூர் அந்தணர்களாகிய நாங்கள் பேசிக் கொண்டபோது, எங்கள் கிராமத்தைச் சுற்றியுள்ள மறவர்களும், வணிகர்களும், வேளாளர்களும் எங்களோடு வருவதற்கு மிகப்பெரிய விருப்பம் தெரிவித்தார்கள். இந்த முறை மேலைச்சாளுக்கியம் போகாது. கீழைச்சாளுக்கியம் வழியாக அதாவது வங்கக் கடற்கரையோர மாகச் சென்று கங்கை பலநூறு கிளைகளாகப் பிரிந்து கடலில் கலக் கின்ற இடத்தைப் பார்க்க வேண்டும் என்று விரும்புகின்றோம். ஒட்டப்பிடாரமும், கங்கமும், அதுதாண்டி மலைகள் அடர்ந்த தேசமும் போய்வர விரும்புகின்றோம்.

மேலைச்சாளுக்கியத்திற்குப் படையெடுத்துப் போன வில் வைத்த குதிரை வண்டிகளை வாங்கியிருக்கிறோம். அந்த வண்டி களை சற்றுமாற்றி கூண்டு அமைத்து உணவுப் பொருட்கள் கொண்டு போகவும், சமையல் பாத்திரங்களை எடுத்துப் போகவும் முடிவு செய்திருக்கிறோம். இந்த முறை பயணத்தை தஞ்சையி லிருந்து துவங்காமல் நேரே ராமேஸ்வரம் போய் அங்கிருந்து மண் எடுத்து அங்குள்ள கல்லில் சிவலிங்க பிரதிமை செய்து அதைக் கொண்டு போய் கங்கையில் மண்ணைக் கரைத்து அங்கு சிவலிங்க

ஸ்தாபனம் செய்து அங்கிருந்து கங்கை ஜலம் கொண்டு வந்து ராமேஸ்வரத்திலுள்ள சிவபெருமானுக்கு அபிஷேகம் செய்ய விரும்புகின்றோம்.''

சக்ரவர்த்தி உடையார் ஆச்சரியத்தில் மூழ்கினார். நிமிர்ந்து உட்கார்ந்தார்.

''இது ஏன் இவ்விதம் தோன்றியது உங்களுக்கு இப்பொழுது தானே போய் வந்தீர்கள்.''

''போய் வந்ததுதான் காரணம்.''

''புரியவில்லை.''

''மேலைச்சாளுக்கியமான எதிரியின் தேசத்து வழியாகப் போனது மிகக்கடுமையான பாதை. மிகப்பயமான வழி. ஆனால், அந்த பாதையின் வழியாகவே போய் வந்து விட்டபடியால் இப்படிப் பயணப்படுவது இன்னும் எளிதாக இருக்கும் என்ற எண்ணத்தில் இதைத் துவங்கினோம். இதில் யாருக்கும் விருப்பம் இருக்காது என்று முதலில் நினைத்தோம். எங்கள் பேச்சில் முதலில் வணிகர்கள் கலந்து கொண்டார்கள். பிறகு இப்போதைக்கு நாற்பத் தோரு பேர். இரண்டு பெண்கள் உட்பட பயணப்படுவதற்கு சித்தமாக இருக்கிறார்கள்.''

''இரண்டு பெண்களாக''

''ஆமாம். என்னுடைய மனைவியும், இந்த மறவருடைய மனைவியும்.''

அந்தணர் சுட்டிக்காட்டினார்.

''பெண்களால் இயலுமா.''

''ஆண்களால் இயலுமெனில் பெண்களாலும் இயலும். இயலுமா இயலாதா என்பது ராமேஸ்வரம் போய் திரும்புவ தற்குள் தெரிந்துவிடும். அது ஒரு நடைப்பயிற்சி பரிசோதனை, ராமேஸ்வரம் போய் திரும்பும்வரை தாக்குப்பிடிப்பவர்கள் கங்கைக்கும் வெகு எளிதாகப் பயணப்பட்டு விடுவார்கள்.''

''பயண நாள் எவ்வளவு''

''இந்த முறை சற்று நிதானமாகப் போகலாம் என்றிருக் கிறோம்.''

''அப்படியெனில்..''

''ஒரு வருட காலம் பயணநாள்.''



''அந்தணர்களான உங்களுக்கு இப்படி நெடுந்தொலைவு போகின்ற துணிச்சல் எப்படி வந்தது.''

''நீங்கள் கொடுத்த ஊக்கம்தான் காரணம்.''

''நான் உங்களை மேலைச்சாளுக்கியம் வரச் சொல்ல வில்லையே.''

''மேலைச்சாளுக்கியம் வரை பயணப்படுவது எளிது. துங்க பத்ரை தாண்டி மேலைச்சாளுக்கியத்திற்குள் படையெடுப்பு நடக் கின்ற யுத்த காலத்திலேயே நாங்கள் போய் மீண்டு வந்தோமே, அப்போது எங்களால் எதுவும் செய்ய முடியும் என்று தோன்றி விட்டது. பதட்டப்படாமல் இருக்கவும். பக்குவமாய் பேசவும், நாங்கள் அங்கேதான் கற்றுக் கொண்டோம். மறவர்கள் அனுபவிக் கின்ற துன்பம் பற்றிக் கண்ணெதிரே கண்டோம். வம்சவம்சமாய் வணிகர்கள் இப்படித்தானே தொலைதூரம் பயணம் செய் கிறார்கள்.

நானாதேசிகள் என்ற அந்த வணிகர்கள் செய்த பயணத்திற்கு அளவேயில்லையே. அது எவ்வளவு பெரிய சாதனை என்பது எங்களுக்குப் புரிந்தது. அப்படிப் பயணப்படுகிற போதுதான் மனம் விரிவடைகிறது. உலகத்தின் பிரமாண்டம் புரிகிறது. எத்தனை வனங்கள், எத்தனை வயல்கள், எத்தனை ஆறுகள், எத்தனை மலைகள், எத்தனை விதமான நகரங்கள், கிராமங்கள், விதம் விதமாய் எத்தனை மனிதர்கள். மிகப்பெரிய பிரமிப்பு ஏற்படுகிறது. அதை மீண்டும் மீண்டும் அனுபவிக்க வேண்டுமென்ற ஆசை.

''அது மட்டுமல்ல. இன்னொரு ஆசையும் இருக்கிறது.''

வேறொரு அந்தணர் பேச்சுக்குள்ளே நுழைந்தார்.

''என்ன ஆசை.''

''சோழதேசத்தின் மேன்மையை மற்ற எல்லா இடங்களுக்கும் போய்ச் சொல்ல வேண்டும். கங்கை எவ்வளவு புனிதமான நதியோ, அதேபோல காவிரியும் புனிதமான நதி என்பதை அவர் களுக்கு எடுத்துச் சொல்லவேண்டும். கங்கைக்கரையோர சாதுக் களையும், முனிவர்களையும், யோகராஜர்களையும் இங்கே வந்து பெருவுடையார் கோயிலில் சிவதரிசனம் செய்யும்படி கேட்க வேண்டும்.''

சக்ரவர்த்தி உடையார் முகம் பெரியதாய் மலர்ந்தது.

''அம்மாதிரி நல்லவர்கள் வருகை நமக்கு நல்லது. உங்களுக்கு நான் என்ன உதவி செய்ய வேண்டும்.''

''தேரிலும், குதிரையிலும் பயணம் செய்வதால் எங்களுக்கு நல்ல மரத்தச்சர் வேண்டும். வழியில் மிக அடர்ந்த கானகங்கள் இருப்ப தாய் நாங்கள் கேள்விப்படுகிறோம். மேலைச்சாளுக்கியம் போய் வந்தவர்களும் கீழைச்சாளுக்கியத்திலிருந்து இங்கு வந்தவர்களும் சொன்னார்கள். வேடுவர்கள் துணையில்லாமல் சில இடங்களைக் கடப்பது கடினம் என்றார்கள். கொடிய மிருகங்களை வாசனை யால் அறியக்கூடியவர்கள், சப்தத்தால் அறியக்கூடியவர்கள், சலசலப்பால் அறியக்கூடியவர்கள் வேடுவர்களே. அவர்கள் பாதுகாப்பு நல்லது என்று தோன்றுகிறது. சிறந்த வேடுவர்களை நாங்கள் கண்டுபிடிப்பது கடினம். கைக்கோளப்படையினருக்கு வேடுவர்களோடு நல்ல தொடர்பு இருக்கிறது. அவர்கள் மூலம் எங்களுக்கு இம்மாதிரி உதவி வேண்டும்.''

''உங்கள் அத்தனை பேருக்கும் சமைக்க பெரும் பாத்திரங்கள் தேவைப்படுமே.''

''ஒரு வண்டியில் அப்படிப்பட்ட பாத்திரங்கள் வைத்திருக் கிறோம். ஆனாலும் சுமைதான்.''

''காசி தேசம் போகவேண்டுமென்று தானே எல்லோரும் ஆசைப்படுவார்கள். நீங்கள் கங்கையின் கடைமுகத்துக்குப் போவானேன்.''

''கங்கையின் கடைமுகம் தாண்டிப் போனால் காமாக்யா என்ற இடம் இருக்கிறது. தட்சணயாகத்தில் அவமானப்படுத்தப்பட்ட சிவபெருமான் கோபம் கொண்டு தட்சனை அழித்து, இந்த இழிவுக் குக் காரணமாக இருந்த பார்வதிதேவியையும் பலகூறுகளாக வெட்டிப்போட, அதில் வெவ்வேறு விதமான அங்கங்கள் வெவ்வேறு இடத்தில் பரத கண்டத்தில் விழுந்தன. அப்படி அம்பிகையின் மர்ம ஸ்தானம் விழுந்த இடம் காமாக்யா. நாபி விழுந்த இடம் காஞ்சி. இம்மாதிரி பலதும் சொல்வார்கள்.

''வனங்களுக்கு நடுவே இருக்கின்ற அந்த காமாக்யாவைப் பார்த்து வருவது மிகப்பெரிய சக்தி தரிசனம் என்பது எங்கள் எண்ணம். சிவதரிசனம் செய்தாகிவிட்டது. சக்தி தரிசனம் செய்யலாம் என்று எங்களுக்குத் தோன்ற நாங்கள் இப்படியொரு பயணத்திட்டத்தை மேற்கொண்டோம். வங்க தேசமும் சக்தி வழிபாடு நடக்கின்ற இடம் தான்.''

''நாம் சிவ வழிபாடு செய்கிறவர்களாயிற்றே. திடீரென்று ஏன் சக்தி வழிபாடு'' மன்னர் கேட்டார்.



''அடுத்த ஐநூறு ஆண்டுகளுக்குப் பிறகு சக்தி வழிபாடு தான் மிக முக்கியமாக இந்தத் தேசத்தில் இருக்கப் போகிறது.''

''எதை வைத்துக் கொண்டு சொல்கிறீர்கள்.''

''பெண்களை ஆண்கள் மதிக்கத்துவங்கி விட்டார்கள். எப்பொழுது பெண்களுக்கு மிக முக்கியத்துவம் ஏற்படுகிறதோ, அப்பொழுது சக்தி வழிபாடு வரப்போகிறது என்றும் நடக்கிற தென்றும் கொள்ளலாம். பெண்கள் எப்பொழுது அடக்கி வைக்கப் படுகிறார்களோ, அப்பொழுது நாம் வேறுவித வழிபாட்டில் இருப்போம்.''

''ஆச்சரியமாக இருக்கிறது. உங்கள் பேச்சு. வேறு ஏதும் காரணங்கள் உண்டா.''

''உண்டு.''

''என்ன.''

''இளவரசர் இராஜேந்திரருக்குப் போன முறை போய் வந்த போது கங்கை நீர் ஒரு குடம் அனுப்பினோம். அப்பொழுது அவர் மிகத்தெளிவாகப் போய் வந்த வழிகளைப்பற்றி, இடர்களைப் பற்றி கேட்டார். நாங்கள் விவரித்துச் சொன்னோம். உற்றுக் கேட்டுக் கொண்டிருந்தவர் மறுபடியும் ஒரு பயணம் மேற்கொள் வீர்களா. நான் உதவி செய்யட்டுமா என்றார். நாங்கள் ஆடிப் போனோம். எதற்கு என்று கேட்க, பின்னால் நான் படை யெடுத்துப் போக உங்களுடைய நடவடிக்கைகள் உபயோகமாக இருக்கும் என்றார். சில மறவர்கள் எங்களோடு சேர்ந்திருப்பதற்குக் காரணம் ஸ்ரீஇராஜேந்திரர்தான்.''

சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீஇராஜராஜத்தேவர் திகைத்துப் போனார். விழிவிரித்து அந்தணர்களைப் பார்த்தார்.

அதிகம் தன்னைக் காட்டிக் கொள்ளக்கூடாது என்று உடனே தலைகுனிந்தார். வேறு திக்கில் முகம் திருப்பிக் கொண்டார். பிறகு முகம் நிமிர்த்தி புன்னகை செய்தார். அவன் மிக மிக தந்திரசாலி அடேயப்பா... சகலருடைய உதவியும் வேண்டுமென்று நினைக் கிறவன்.

''மருவூர் அந்தணர்களே, க்ஷத்திரியர்களோடும், வணிகர் களோடும், வேளாளர்களோடும், பிறகு வேடுவர்களோடும் கைகோர்த்து கங்கைக்குப் பயணப்படப் போகிறீர்கள். நல்லது. மிக நல்லது. இந்த விஷயம் எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது. நம்மை அதிகம் பிரித்துக் கொள்ளாமல். நீ, நான், அவன், இவன் என்று

அலட்டிக்கொள்ளாமல் எனக்கு உயர்வு கொடு. அவருக்குத் தாழ்வு ஏற்படுகிறது என்று வேண்டுகோள் வைக்காமல் ஒற்றுமையாய் இருப்பது சிறப்பு. வேடுவரில்லையெனில் பயணம் ரசிக்காது. அந்தணர் இல்லையெனில் பயணம் ரசிக்காது. அந்தணர் இல்லையெனில் வேடுவரால் வரமுடியாது. அந்த வேடுவருக்குச் சொல்லிக் கொடுங்கள். கடவுளர் பற்றிய கதைகளைச் சொல்லுங்கள். வழிபாடு சொல்லிக் கொடுங்கள். மற்றவர்களுக்கும் என்னென்ன சொல்லிக் கொடுக்க வேண்டுமோ சொல்லிக் கொடுங்கள். உங்கள் பயணம் இனிதே நடக்க என் வாழ்த்துக்கள்.

சேனாபதி பிரம்மராயரிடம் நான் தகவல் அனுப்புகிறேன். உங்களுக்கு வேண்டிய சகல உதவிகளையும் அவர் செய்வார். என் சார்பாய் ராமேஸ்வரத்தில், உறையும் எம்பெருமான் சிவனுக்கு என் காணிக்கையான நூறு காசுகளும், கங்கைக் கரையிலுள்ள கோயில்களுக்கு என்னுடைய காணிக்கையாக ஐநூறு காசுகளும் உங்களுக்குத் தருகிறேன். இவைகளை அந்தக் கோயில்களின் நலத்திட்டப் பணிகளுக்குச் செலவழித்துக் கொள்ளுங்கள். உங்களுக்கு அதனால் மதிப்பும், மரியாதையும் கூடும் சுகசௌகரியங்கள் அதிகரிக்கும். நல்ல தரிசனம் கிடைக்கும்.

மருவூர் அந்தணர்களே என் மனம் குளிரச் செய்தீர்கள். சோழ சாம்ராஜ்ஜியத்தின் மிகப் பெரிய வெற்றிக்கு நீங்கள் காரணமாக இருப்பதை, இருந்ததை நான் மறக்க மாட்டேன். அடுத்த தலைமுறைக்கும், நீங்கள் உதவி செய்யப் பயணப் பட்டிருக்கிறீர்கள் என்கிறபோது, உங்களுக்கு என் மனமார்ந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னும் ஒரு கேள்வி. இதில் மருவூர் அந்தணர்கள் மட்டுமே பங்கு பெறுகிற காரணம் என்ன.'' சக்ரவர்த்தி வினவினார்.

''நாங்கள் வைதீகர்கள் அல்ல. உருவ வழிபாடு செய்கிற சிவாச்சாரியர்களும் அல்ல. நாங்கள் அத்வைதிகள். இறைவனை மனதுள் விசாரித்து அறிய முற்படுகிறவர்கள். இம்மாதிரி நீண்ட பயணங்கள் அத்வைத சிந்தனையை வளர்க்கும். தனிமையைப் பலப்படுத்தும்.'' சற்றும் தயக்கமின்றிப் பதில் வந்தது.

''வாழ்க... வாழ்க... வாழ்க மருவூர் அந்தணர்கள்.'' சக்ரவர்த்தி உரத்தக்குரலில் முழங்கினார்.

உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவர் எழுந்து நின்று அவர்களை நோக்கிக் கைகூப்பினார்.



அந்தணர்கள் வலதுகையை உயர்த்தி ''ஜெயவிஜயீபவ'' என்று வாழ்த்தினார்கள். மறவர்கள் தலைகுனிந்து வணங்கினார்கள். வணிகர்களும், வேளாளர்களும் குனிந்து நிலம் தொட்டார்கள்.

வாழ்க்கை என்ற பயணம் முடிவில்லாதது. அது தொடர்ந்து நடந்து கொண்டேதான் இருக்கும்.

ஹோமம யக்ஞாதிகள் ஆரம்பித்த பத்தாம் நாள் எல்லா குடங்களுக்கும் பூஜை நடந்தது. சக்ரவர்த்தி உடையாரும். இளவரசர் இராஜேந்திரரும், ஆளுக்கொரு பெருங்குடத்தைத் தலையில் வைத்துக்கொண்டு படியேறினார்கள். வளைத்து வளைத்துக் கட்டப்பட்டிருந்த சாரத்தில் மெல்ல மெல்ல கால் வைத்து ஏறி மேலே போய் இறக்கி வைத்தார்கள்.

இளவரசர் முதன்முதலாய் ஏறுவதால் உச்சியில் போய் வியந்து போனார்.

என்ன உயரம் என்ன உயரம் பதிமூன்று நிலைகள் (215 அடி) உயரம். கொஞ்சம்கூட கோணல் இல்லாமல் என்ன அற்புதமான படைப்பு நீங்கள் சாதித்துவிட்டீர்களப்பா. இன்னும் சற்று உயரத்தில் கட்டினால் மேகத்தைத் தொட்டுவிடலாம் போலிருக்கிறதே. என்று வியந்தார். தந்தையை இறுக்கக் கட்டிக் கொண்டார்.

கருவறையிலுள்ள சிவலிங்கத்திற்கு ஈசான சிவபண்டிதர் கங்கை ஜலம் எடுத்துப் போனார்.

திருச்சுற்று மாளிகையும், திருமதிலும் கொண்ட இராஜராஜன் வாசல் கோபுரத்திற்கு கிருஷ்ணன் ராமனான பிரம்மராயர், அருண்மொழி இரண்டு பேரும் கலசங்கள் எடுத்துப் போனார்கள். எல்லாத் திசைகளிலும் இருக்கின்ற தேவதைகளுக்கும், காவல் தெய்வங்களுக்கும், மந்திரிமார்களும், தளபதிகளும் கங்கை ஜலம் எடுத்துப் போனார்கள்.

சிவாச்சாரியார்கள் கொடியசைக்க எக்காளம் ஊத, குழல்கள் முழங்க, முரசுகள் அதிர குடத்தைத் தூக்கி கங்கை ஜலத்தையும், காவிரி ஜலத்தையும் கிருஷ்ணகோதாவரி ஜலத்தையும் குடம் குடமாக கலசத்தின் மீதும் கிரீடத்தின் மீதும் சக்ரவர்த்தி உடையார் சாய்த்தார்.

இளவரசர் இராஜேந்திரரும் தன் பங்குக்கு இரண்டு செப்புக் குடம் ஜலம் ஊற்றினார். ஜலம் வழிந்து விமானத்திலும் எல்லா இடுக்குகளிலும் பரவி, அங்கங்கே ஒன்றாகி ஒரு திசையில் வந்து குவிந்து கீழேயிறங்கி, கோயில் சுவரைத் தொட்டு தரையில்,

இறங்கி, தரையில் இறங்கிய அத்தனை ஜலமும் ஒரே பக்கம் ஓடிப்போய் சிவகங்கை என்ற குளத்தில் கலந்தது.

ஈசான சிவபண்டிதர் பரமஸ்வாமியின் மீது ஊற்றிய அந்தப் புனிதநீர் கருவறை முழுவதும் நிரம்பி அங்கிருந்து ஒரு கால்வாயின் வழியாக கோயிலுக்கு வெளியே வந்து. ஒரு சங்கு வைத்திருந்த பூத கணத்தின் தலையில் உள்ள குழாய் வழியாக நீர்த்தொட்டியில் நிரம்பி நீர்த்தொட்டியின் அடியில் இருக்கும் பூமியில் புதைந்திருந்த ஒரு கால்வாய் வழியாக சிவகங்கைக் குளத்தில் கலந்தது.

ஈசன் தலையில் ஊற்றப்பட்ட நீர் ஒரு பொழுதும், எவர் காலையும் தொடவில்லை. எவருக்கும் அந்தப் பாபம் சேரவில்லை. அது அந்தர் முகமாய் சிவகங்கை குளத்தில் கலக்கும் படியாய் குஞ்சரமல்லப் பெருந்தச்சன் வழி வகுத்திருந்தார். கீழே நின்றிருந்த குஞ்சரமல்லப் பெருந்தச்சர் கண்களில் வழியும் நீரைத் துடைத்துக் கொண்டார். கைகூப்பினார்.

"நான் செய்யவில்லை.. நான் செய்யவில்லை. ஈசனே சகலமும் செய்து கொண்டான். ஈசனே தொடர்ந்து சகலமும் செய்வான்." என்று வாய்விட்டு அலறினார்.

விமானத்திலிருந்து கீழிறங்கிய தகப்பனும், பிள்ளையும், குஞ்சரமல்லரைத் தேடினார்கள்.

கயிலாயத்தில் சிவன் இருப்பதுபோல இங்கேயும் சிவன் இருப்பதை, சுப்ரமணியர் கணபதியோடு இருப்பதை முன் பக்கத்தில் மிக அழகாக கதை வேலை செய்யப்பட்டிருந்தது. கஜலட்சுமி உருவம் இருந்தது. அந்த மண்டபத்திற்கு வந்து பெருந்தச்சரை சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீஇராஜராஜத்தேவர் இறுக்கத் தழுவிக் கொண்டார். தான் செய்யவில்லை என்று அவர் அழுததை அருகிலுள்ளோர் சொல்ல, "ஈசன்தான் இதைச் செய்தார். அது எப்போதோ எனக்குத் தெரிந்து போயிற்று. நித்தவினோதப் பெருந்தச்சன் உம்மோடு இல்லையே என்று ஒருக்காலும் கவலைப்பட வேண்டாம். அங்கே மிகச்சிறந்த கோயில் ஒன்று உருவாக வேண்டுமல்லவா. இதைக் காட்டிலும் சிறப்பாக ஒன்று உருவாக வேண்டுமல்லவா. அதற்காகப் போயிருக்கிறார். உம்முடைய வேலை இங்கு முடிந்தது. ஓய்வெடுத்துக் கொள்ளும். சோழ தேசத்தில் எங்கெல்லாம் கோயில் பழுதுபட்டிருக்கிறதோ அங்கெல்லாம் போய் அந்தப் பணியைச் செய்து கொண்டிரும்."

குஞ்சரமல்லப் பெருந்தச்சருக்குப் பரிவட்டம், கட்டி, மாலை சார்த்தி, பெரிய சால்வை போர்த்தி, பொற்கிழிகள் கொடுக்க,



பெருந்தச்சர் அன்போடு வாங்கிக் கொண்டார். தன் மனைவியிடம் கொடுத்தார். இத்தனை பெரிய விஷயம் செய்த பிறகு மனைவி, மக்கள், வாழ்க்கை, நல்லது, கெட்டது எல்லாமுமே மறந்துவிட்டது. இவை எல்லாமுமே இப்பேர்பட்ட காரியங்கள் செய்வதற்காகத் தான் எனக்கு விதிக்கப்பட்டது. இந்த இரண்டு மனைவிகள் இல்லாமல் போய்விட்டால், நான் இத்தனை சிறப்பாகச் செய்திருக்க முடியாது.

என்மகள் என்னை விட்டுப் பிரிந்து போகாமலிருந்தால் என்னால் இத்தனைக் கூர்மையாக ஈடுபட முடியாது. நித்த வினோதப் பெருந்தச்சன் என்னை விட்டுப் பிரிந்து போனது கொஞ்சம் வலித்தது. தன்னை முன்னிலைப் படுத்தியது கொஞ்சம் சிரமப்படுத்தியது. ஆனாலும், நீங்கள் சொன்னது போல வேறு இடத்தில் வேறு கோயில் எழுப்பித்தானே ஆகவேண்டும். குஞ்சர மல்லரோடு கோயில் கட்டும் பணி முடிந்துவிடாது. சோழ தேசத்தில் ஒவ்வொரு வருடமும் ஏதேனும் ஒரு இடத்தில், ஏதேனும் ஒரு கோயில் கட்டப்பட்டுக் கொண்டுதான் இருக்கும். இது சோழ தேசத்தின் மகிமை. நீங்கள் ஆரம்பித்து வைத்ததின் மகிமை என்று கைகூப்பிச் சொன்னார்.

கீழேயுள்ள ஜனங்களுக்கு குஞ்சரமல்லப் பெருந்தச்சரின் கைகளை தகப்பனும், பிள்ளையும் உயர்த்திக் காண்பிக்க கீழேயுள்ள மக்கள் ஆரவாரம் செய்தார்கள். ஜனங்கள் கண்களில் நீர்வழிய, குஞ்சரமல்லப் பெருந்தச்சரை வணங்கினார்கள்.

"இவ்வளவு பெரிய கோயில் கட்டுவது எளிதல்ல தான். அதைவிட சிரமமான காரியம் ஒன்று இருக்கிறது. இந்தக் கோயிலைப் பராமரிப்பது. இந்தக் கோயிலில் யார் யாருக்கு என்ன வேலை, அவர்களுக்கு என்ன கூலி என்பதை நாம் நிர்ணயம் செய்தாக வேண்டும்."

மூவேந்த வேளார் சொல்ல, "நீர் நிர்ணயம் பண்ணும். நான் கையெழுத்திடுகிறேன்.

சக்ரவர்த்தி உடையார் சொல்லிவிட்டு நகர்ந்தார்.

சிவாச்சாரியார்கள் நியமிக்கப்பட்டார்கள். கோயிலில் உள்ள மூலவருக்கும், உற்சவருக்கும் அலங்கரிக்க நகைகளும், படிகலன்களும் தர வேண்டும் என்று சொல்ல, அவர் பண்டாரத்தைத் திறந்து பல்வேறு நகைகளை எடுக்கச் சொல்லி அவைகளின் எடைகளைக் குறிக்கச் சொல்லி, அளவு குறிக்கச் சொல்லி கணக்கெழுதி கோயில் பணியாளர்களிடம் ஒப்படைத்தார். அன்று மாலை பஞ்சவன்மா

தேவியைத் தவிர, பட்டமகிஷியும் வானவன்மாதேவியும் மற்ற அரசிகளும் ஒன்று சூழ மெல்லிய தகடுகளால் செய்யப்பட்ட பொற்பூக்களை பல தட்டுகளில் எடுத்து வரச்செய்து, கருவறையைச் சுற்றியுள்ள சாந்தாரங்களை வலம் வந்து, அதற்கு மேலுள்ள சுற்றுக்குப் போய் அங்கே நின்று கொண்டு எட்டி கீழேயிருக்கின்ற பரம சுவாமியைக் கண்குளிரப் பார்த்தார்கள்.

பூஜைகள் ஆனதும் தீப தூபங்கள் காட்டப்பட்டன. கீழிருந்து அர்ச்சகர் சைகை செய்ததும் அரசரும், அரசியரும், மந்திரிப் பிரதானிகளும், தளபதிகளும் தட்டிலுள்ள பொற்பூக்களை அள்ளி அள்ளி பரமஸ்வாமியின் மீது சொரிந்தார்கள்.

சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவர் மனம் கொண்ட மட்டும் பொற் பூக்களை அள்ளி எடுத்து இரண்டு கைகளிலும் சேர்த்து நிதானமாக பரமஸ்வாமியின் மீது சொரிந்தார். ''அப்பனே.. இது எனக்காகத் தருகிறேன்.'' என்று ஒரு கை நிறைய அள்ளி நிதானமாக சிவனைப் பார்த்து நீர் யார் என்று எனக்குக் காட்டும். எமக்கு உம்மைக் காட்டியருளும், திருநாவுக்கரசருக்கு வலக் கையில் நந்தியும், இடக்கையில் சூலமும் தோன்ற வைத்தீர். நல்லூரில் அவருக்கு உச்சந்தலையில் கால் சுவடு வைத்து பாத தீட்சை கொடுத்தீர். அதேபோல எனக்கும் உம்முடைய பாதத்தைத் தலையில் வைத்து உண்மையான ஞானத்தைத் தந்தருளும்.

நான் வெறும் சக்ரவர்த்தியாக, மனிதனாக, இன்னது என்று தெரியாத பிறவியாக மடிய விரும்பவில்லை. நீர் யாரெனத் தெரிந்தே, உம்மைப் புரிந்தே நான் மரணமடைய வேண்டும். என் ஈசனே உமது பாதத்தை என் தலையிலே வைய்யும். என்னை சிவ பாத சேகரனாகச் செய்யும் என்று மனமுருகி வேண்டி பூக்களைச் சொரிந்தார்.

இது என் தந்தையினுடைய பெயரால், இது என் தாயினுடைய பெயரால், இது என் தமையனுடைய பெயரால், இது குருவினுடைய பெயரால், இது என் மனைவியினுடைய பெயரால் என்று அவர் தம் கைகளால் பொற்பூக்களை வாரிச் சொரிந்தார்.

சிவாச்சாரியார்கள் வேத முழக்கம் செய்தனர் பெரும் மணி ஒலிக்கத் துவங்கியது. எக்காளம் பிளிறியது. உள்ளே ஏதோதொரு நிம்மதி சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவருக்குப் பிறந்தது. சிவன்மீது விழுந்த பொற்பூக்களை தொண்டைநாட்டு அந்தணர்கள் கோயில் கணக்கில் எடுத்துக் கொண்டார்கள்.



சக்ரவர்த்தி உடையார் தேரேறினார். இளவரசர் இராஜேந்திரரை சிற்பிகள் சூழ்ந்திருந்தார்கள்.

தேர் அரண்மனைக்குப் போயிற்று. விபூதியும் வில்வமும், ஒரேயொரு பொற்பூவும், எடுத்துக் கொண்டு போய் பஞ்சவன்மாதேவியிடம் கொடுத்தார். பஞ்சவன்மாதேவி ஆவலுடன் எடுத்துக் கொண்டார். மற்ற அரசிகளும் உள்ளே வந்தார்கள்.

''எப்படி நடந்தது தெரியுமா கும்பாபிஷேகம் என்று பஞ்சவன் மாதேவியிடம விளக்க ஆரம்பித்தார்கள். பஞ்சவன்மாதேவி பொறுமையாய் கேட்டுக் கொண்டார்.

''அக்கா... உங்களுக்கு வரவில்லையே என்ற ஒரு ஏக்கம் உள்ளுக்குள் பெரிதாய் இருக்கிறதா, விளக்கிச் சொல்லும்போது உங்களுக்கு வேதனையாக இருக்கிறதா.''

இலாடமாதேவி அன்பொழுகக் கேட்டாள்.

பஞ்சன்மாதேவி அவளைப் பிரியத்துடன் பார்த்தாள்.

''இல்லை குழந்தாய். எனக்கு எந்தத் துக்கமும் இல்லை. செயலைச் செய்கிறபோதே, அந்தச் செயலிலிருந்து என் மனம் பிரிந்து எது செய்விக்கிறதோ, செயல் செய்விப்பதற்கும் என் மனதிற்கும் எது ஆதாரமாக இருக்கிறதோ, அதைப் பற்றிக் கொண்டுவிட்டது. மேலைச்சாளுக்கியத்தில் யுத்தம் பார்த்து விட்டுத் திரும்பி வந்த நாளிலிருந்தே என்னுள் மாற்றங்கள் ஏற்பட்டுவிட்டன.

நிசும்பசூதனி கோயிலில் நான் இறந்தவர்களையெல்லாம் வரிசைப்படுத்தி பார்த்துக் கொண்டிருந்த போது வாழ்வது பற்றிய கேள்வி எழுந்தது. வாழ்வதினுடைய அநித்யம் புரிந்தது. வாழ்வதினுடைய அநித்யம் புரிந்ததால் செயலினுடைய யோக்கியதை எப்படி இருக்கும். இங்கு செயல் செய்வது என்பது முக்கியமல்ல. செயலைச் செய்விக்கின்ற உள்ளுக்குள் இருக்கின்ற அந்த ஆன்ம சக்தி மிக முக்கியம். நான் செயலைப் பிடித்துக் கொள்ளவில்லை. எது என்னை ஆட்டுவிக்கிறது. எது என் செயலைச் செய்விக்கிறது என்று தேடத்துவங்கி நான் உள்ளுக்குள் போனேன்.

என்னுடைய செயல்களையெல்லாம் நான் வெறும் கடமையாக, சாதாரணமாக இவ்வுலகில் வேறுவழியில்லை என்ற நிர்ப்பந்தமாக நான் செய்யத் துவங்கினேன். இன்னும் தெளிவாகச் சொல்ல வேண்டுமென்றால், என் செயலை நான் காதலிக்கவில்லை. எனக்குள் இருக்கின்ற அந்த உத்தேவகத்தைத்தான் நான்

இறுகப் பிடித்துக் கொண்டேன். எனவே நெஞ்சில் அடிபட்டு மல்லாந்து கிடந்து அங்கிருந்து இங்கு கொண்டு வரப்பட்டபோது, எனக்கு வெறுமே கிடப்பது என்பதை நேரிலும் நான் அனுபவிக்கிறேன் என்பது புரிந்து போயிற்று. நாம் எல்லோரும் மரணத்திற்காகத்தான் காத்திருக்கிறோம். நான் மற்றவரைவிட இன்னும் தெளிவாகக் காத்திருக்கிறேன்.''

''அதாவது செயலே செய்யாமல் இருப்பது உத்தமம் என்கிறீர்களா?''

இலாடமாதேவி மறுபடியும் கேட்டாள்.

''இல்லை குழந்தாய். செயலை மிக முக்கியமாக எடுத்துக் கொண்டு நான் செய்கிறேன் என்ற கர்வத்தை விட்டுவிட்டு செயல் மீது பற்றற்று இருப்பதே முக்கியம். எல்லாச் செயல்களும் ஏதோ ஒருகாலகட்டத்தில் முடிந்து போகும். இந்தச் செயலை விட்டு அடுத்த செயல், அடுத்த செயலை விட்டு அடுத்த செயல் என்று மாறி மாறிப் போய்க் கொண்டிருப்பாய். பிறகு அதுவும் முடிவுறும். எதை நோக்கி நடந்து கொண்டிருக்கிறோம் என்று புரிந்து விட்டால் செயல்மீது எந்தப்பற்றும் இருக்காது. இதனால் செயல் மிகச் சுத்தமாக இருக்கும்.''

''எனக்கு ஒன்றும் புரியவில்லை அக்கா.''

இன்னொரு மனைவி உரத்துச் சொன்னாள்.

''இதுதான் தலையெழுத்து, புரிகிறபோதுதான் புரியும். இது புரிவதற்கு ஒரு நேரம் வரும். அப்போது தான் இதை யோசிக்க முடியும். இது கற்றுக்கொடுத்து வராது.''

அவள் பேசுவதை, பேசும்போது அவள் முகம் எந்த உணர்ச்சியுமற்று கல்லாய் இருப்பதை வியப்போடு சக்ரவர்த்தி பார்த்தார்.

''கிட்டத்தட்ட நீ சொன்னதை ஒரு பாண்டிய தேசத்து கருவறைச்சிற்பி சொன்னான். ஏன் பாண்டியதேசம் போகவில்லை என்று கேட்டேன். அங்கு என்ன இருக்கிறது. கோயில் இருக்கும் இடம்தான் எனக்கு என் தேசம். இந்தக் கோயில் முடித்தபிறகு அடுத்த கோயில் எங்கு கட்டுகிறார்களோ அங்கு நான் போவேன். வேறு எங்கு கோயில் செப்பனிடுகிறார்களோ அங்கு போய் நிற்பேன். இந்தச்சிற்பம் முடித்தபிறகு அடுத்த சிற்பம். இந்தக் கோயில் முடித்தபிறகு அடுத்த கோயில் அவ்வளவுதான். எனக்கு தேசமோ, குடும்பமோ இல்லை. மரணத்தின் கடைசி நேரம் வரை வெறுமே வேலை செய்துவிட்டுச் சாகவேண்டியதுதான் என்று



சொன்னான். நீ சொல்வதும் அவன் பேசுவதும் ஒன்றாகத் தான் இருக்கிறது. எனக்கும் அந்த உணர்வு ஏற்பட்டிருக்கிறது. கும்பாபிஷேகம் நடந்து முடிந்த பிறகு, ஒன்றுமில்லை என்று தோன்றி விட்டது.''

சக்ரவர்த்தி மிருதுவாகப் பேசினார்.

அவர்கள் பேச்சு எதுவும் புரியாத உலகமாதேவி மெல்ல எழுந்திருந்து தன் அரண்மனைப் பகுதிக்குப் போக விரும்புவதாய் அரசரிடம் சொல்ல, வானதியும் எழுந்திருக்க, மற்றவர்களும் விடை பெற்றார்கள். தாதிப் பெண்டிர் பஞ்சவன்மாதேவிக்கு மருந்து கொடுக்க, அரசரின் மார்பில் சாய்ந்து கொண்டு பஞ்சவன்மாதேவி மருந்து குடித்தாள். மெல்ல அவள் நெஞ்சு தடவியபடியே சக்ர வர்த்தி உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவர் அவளை அணைத்துக் கொண்டார்.

''இவ்வளவு தெளிவாகப் பேசுகிறாயே என்ன காரணம். சட்டென்று இந்த மாற்றம் உனக்குள் எப்படி வந்தது.''

''இந்தக் கேள்வியை நீங்கள் கேட்பீர்கள் என்று எதிர்பார்த்தேன். கேட்பதற்காகத்தான் தயங்கி நிற்கிறீர்கள் என்று புரிந்து கொண்டேன். நீங்கள் கோயில் பணிக்காக என்னை இங்கு விட்டுவிட்டுப் போனபோது நான் மௌனமாக அமர்ந்திருந்தேன். ஒருநாள் கருவூர்த்தேவர் வந்தார். எப்படியிருக்கிறாய் என்று கேட்டார். நான் பதில் சொல்லவில்லை. என்ன செய்கிறாய் என்று கேட்டார். சும்மாயிருக்கிறேன் என்று பதில் சொன்னேன்.

அப்படியா, நானும் உன்னோடு அமர்ந்து சும்மாயிருக்கிறேன் என்று சொல்லி என் எதிரே அமர்ந்து கொண்டார். அவர் எதிரே அமர்ந்த பிறகு எனக்குள் மாறிப்போயிற்று. நான் வெறுமே உள்ளே கிடப்பதும் இன்னும் புரிந்து கொண்டேன். அப்படிக் கிடத்தல் திடமாயிற்று. இன்னும் ஆழ்ந்து கிடக்க முடிந்தது. இரண்டு முறைகள் இம்மாதிரி கருவூர்த்தேவர் என் எதிரே வந்து உட்கார்ந்து கொள்ள நான் மாறிப்போனேன். இன்னொரு முறை வந்து உட்கார்ந்து நான் மறுபடியும் வேறு நினைப்புக்குப் போகும் போது கருவூர்த்தேவர் மெல்ல அருகில் வந்து எதைப் பிடித்திருக்கிறாயோ அதை விட்டு விடு என்று சொன்னார். நான் யோசித்தேன். நான் எதைப் பிடித்துக் கொண்டிருக்கிறேன் என்று தீவிரமாக யோசித்தேன்.

நான் உங்களைத்தான் பிடித்துக் கொண்டிருக்கிறேன். நான் எப்போதும் உங்கள் நினைப்பாகத்தான் இருக்கிறேன். தலைமுடி

உதிர்ந்து, பற்கள் போய், உடம்பு வனப்பு குறைந்து, முலைகள் சரிந்து, கால்களில் நிற்கின்ற வலியும் போய், கைகளில் நடுக்கம் ஏற்பட்ட பிறகு நான் உங்களுக்கு என்ன உபயோகம். உங்களுக் காக யோசிக்க முடியாத போது, வெறும் அயர்சி வருகிறபோது நான் உங்களுக்கு என்ன உதவி. எனவே, எந்த உபயோகமும் இல்லாமல், எந்த உதவியும் இல்லாமல் உங்களை ஏன் நான் பிடித்துக் கொண்டிருக்க வேண்டும்.

நான் சட்டென்று உங்களை என்னிலிருந்து அப்புறப்படுத் தினேன். நான் உங்களுக்கு உபயோகமில்லை. எனவே நீங்கள் எனக்குத் தேவையில்லை என்ற இடத்திற்கு வந்தேன். எப்பொழுது உங்களைக் கழற்றிவிட்டேனோ அப்போது உள்ளுக்குள்ளே என்னால் சும்மாயிருக்க முடிந்தது.''

''அற்புதம்... அற்புதம்... என்னைக் கழற்றி விடுவது என்றால் என்ன.''

''உங்களைப்பற்றி யோசிக்காது இருப்பது. உங்களுக்கு உதவி செய்வதும், உபயோகமாக இருக்கவும் இங்கு பலபேர் இருக் கிறார்கள். என்னுடைய இடத்தை மெல்ல மெல்ல இலாடமாதேவி பூர்த்தி செய்வாள். முடிந்த அளவு முயற்சி செய்வாள். அதுவும் தவிர, இனிமேல் நீங்கள் போருக்கோ அல்லது வேறு ஏதேனும் செயலுக்கோ போக வேண்டியதில்லை. போர் முடிந்தது. கோயில் கட்டும் பணியும் முடிந்தது. இனிமேல் தினசரி சாதாரண காரியங் கள்தான். இதை ஒரு பணிப்பெண்கூட உங்களுக்கு செய்துவிட முடியும். எனவே நான் தேவையில்லை என்று தெளிவாகத் தெரிய, உங்களை என்னிலிருந்து அகற்றி விட்டேன். என்னைப்பற்றியே, என் உள்ளுக்குள் இருக்கின்ற உயிர் அசைவு பற்றியே யோசிக்கத் துவங்கினேன். உங்களைக் கழற்றிவிட்டதிலிருந்து மிகப்பெரிய நிம்மதி எனக்குள் பரவிவிட்டது.''

''எனக்குப் புரிகிறது பஞ்சவன்மாதேவி. நான் எதைக் கழற்றி விட வேண்டும். நீ சொல்லுகின்ற இந்த நிம்மதி. இந்த சும்மா யிருத்தல் எனக்கு வரவேண்டுமென்றால் நான் எதைக் கழற்றிவிட வேண்டும். இந்த பரமஸ்வாமி கோயிலையா.''

''இல்லை. வேறொரு விஷயம் இருக்கிறது.''

''என்ன.''

''நீங்கள் இன்னும் சக்ரவர்த்தியாக இருக்கிறீர்கள். இந்தச் சக்ர வர்த்திப் பட்டத்தைக் கழற்றி வையுங்கள். இந்தப் பொறுப்பைத் தூக்கி இளவரசரின் தலையில் வையுங்கள். நீங்கள் சாதாரண



மனிதராக இருங்கள். கோயில் நீங்கள் கட்டியது என்ற இறுமாப்பு கூட மெல்ல மெல்ல குறைந்து போகும். சக்ரவர்த்தி என்ற பட்டத்தைச் சுமந்து கொண்டிருந்தீர்கள் என்றால் நீங்கள் நிற்பதும், நடப்பதும், மூச்சுவிடுவதும் மன்னராகத்தான் இருக்கும். நீங்கள் உங்கள் மூச்சை விடவே மாட்டீர்கள். எனவே, சக்ரவர்த்தி பட்டத்தைக் கழற்றி இளவரசன் தலையில் வைத்து விட்டு நகர்ந்து விடுங்கள்.''

''நகர்ந்து விடுவது என்றால்..''

''அவன் வேறு பக்கம் நகர வேண்டுமென்று முயற்சிக்கிறான். நீங்கள் இருக்குமிடத்தில் அவன் ஆட்சி செய்ய முடியாது என்று கவலைப்படுகிறான். ஜெயங்கொண்ட சோழபுரத்திற்கு அருகே தனியாக ஒரு நகரம் ஸ்தாபிக்க நினைக்கிறான். அங்கு ஒரு கோயில் கட்ட ஆசைப்படுகிறான். அவனுக்கு இடைஞ்சலாக நீங்கள் இங்கு இருப்பானேன். அவனுக்கு சக்ரவர்த்தி பட்டம் கட்டிவிட்டு நீங்களும் நானும் பழையாறை போய்விடலாம். நீங்கள் ஒரு மூலையில், நான் ஒரு மூலையில் வாழ்ந்து கொண்டிருக்கலாம். மரணத்திற்குக் காத்துக் கொண்டிருக்கலாம்.''

''எனக்குப் புரிகிறது பஞ்சவன்மாதேவி என்னுடைய மனசு எதை யோசிக்கிறதோ, அதைத்தான் நீயும் யோசிக்கிறாய்.''

''நீங்கள் வந்தாலும், வராவிட்டாலும், நான் பழையாறை போவது என்று தீர்மானித்து விட்டேன். தஞ்சையினுடைய பேரிகை சத்தங்கள். எக்காளங்கள், யானையின் பிளிறல்கள் மக்களின் கூட்டங்கள் எனக்குத் தாங்கவில்லை. இந்த அரண்மனை எப்போதும் பரபரத்துக் கொண்டிருக்கிறது. இவர் வருகிறாராம் அவர் வருகிறாராம். இவர் நிற்கிறாராம். அவர் எழுந்திருக்கிறாராம் என்று அசைந்து கொண்டிருக்கிறது. இந்த அசைவுகளை யெல்லாம் உங்கள் பட்டமகிஷியும் மற்றவர்களும் செய்து கொண்டிருக் கட்டும். என்னைப் பழையாறைக்கு எவ்வளவு சீக்கிரம் முடி யுமோ, அவ்வளவு சீக்கிரம் அனுப்பிவிடுங்கள். அங்கு வெறுமே குளக்கரையில், அமர்ந்து உலகத்தைப் பார்த்துக் கொண்டிருக் கிறேன்.''

''நல்லது பஞ்சவன்மாதேவி நல்ல நாள் பார்த்து உன்னை அனுப்பி வைக்கிறேன். நீ போன பிறகு என் வேலைகளை முடித்துக் கொண்டு உன்னைப் பின்தொடர்ந்து நான் வருகிறேன். உனக்கும், எனக்கும் இடையில் ஒரு இடைவெளி இருப்பது நல்லது. மிக நெருக்கமாக நாம் வாழ்ந்துவிட்டோம். உடம்பாலும்,

மனதாலும் தினம் தினம் நெருங்கி நெருங்கி ஒருவரையொருவர் இறுக்கப் பிடித்துக் கொண்டு விட்டோம். நாம் விலகியிருப்பது நமக்கு நல்லது. பிரம்மராயரிடம் பேசி, நாள் குறித்து பல்லக்கில் பழையாறை வரை பத்திரமாக உன்னை அனுப்புகிறேன்.''

அரசர் எழுந்திருந்தார். விலகி நடந்தார். கூடத்தின் மூலையிலுள்ள வாசற்படியைத் தாண்டினார். திரும்பிப் பார்த்தார். அரசர் போவதைப் பார்க்காமல், முற்றத்து வெளிச்சத்தை பஞ்சவன் மாதேவி வழுக்கைத் தலையாய், பொக்கை வாயாய், சரிந்த முலையாய், சுருங்கிய தோலாய், வளைந்த முதுகாய் ஒரு ஆசனத்தில் சாய்ந்த வண்ணம் வெறுமே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள். அந்தப் பார்வையில் எந்தச் சலனமும் இல்லை.

சக்ரவர்த்தி உடையாருக்கு அவள் இருப்பு ஒரு அதிசயத்தைக் கொடுத்தது.

பஞ்சவன்மாதேவி நீ எனக்கு அனுக்கியாய், மனைவியாய், ஸ்நேகிதியாய், தளபதியாய் இருந்தாய், பிறகு தாயும் ஆனாய். தாயே... இன்று எனக்கு நீ குருவுமாய் நிற்கிறாய். நீ சொன்னதால் தான் சும்மாயிருத்தல் எனக்குள் பற்றிக் கொண்டது. குருவே சரணம் என்று அவளை நோக்கி கை கூப்பினான். சரக்கென்று திரும்பி தெருவில் இறங்கி குதிரையில் தாவி ஏறினார்.

குதிரை அரண்மனையை விட்டு இளவரசர் இராஜேந்திரர் எங்கிருக்கிறார் என்று விசாரித்து அவருடைய அரண்மனை நோக்கிப் போயிற்று.

''எனக்கா, சக்ரவர்த்தி பட்டமா. அதற்கு இப்பொழுது என்ன அவசரம் தந்தையே.''

இளவரசர் வியப்போடு கேட்டார்.

''சம்பிரதாயமாகப் பேசுகிறாயா இராஜேந்திரா.''

''இல்லை தந்தையே. மிகத் தெளிவாகக் கேட்கிறேன். எதற்கு இப்பொழுது அவசரம். கும்பாபிஷேகம் முடிந்து உடனடியாக எனக்கு நீங்கள் சக்ரவர்த்தி பட்டம் கட்ட வேண்டிய அவசரம் என்ன? இந்தக் கோயில் இன்னும் சீர்பெற வேண்டும். இந்தக் கோயிலுக்கு பல நிவந்தங்கள் விடவேண்டும். இந்தக் கோயிலைக் கட்டிய நீங்கள்தான் நிவந்தனங்கள் விடுவது சரியாக இருக்கும். இந்தக் கோயில் நல்லபடியாக பூரணமாய் முழுமைபெற இன்னும் இரண்டு வருடங்களாவது தேவைப்படும். அந்த இரண்டு வருடங்களும் நீங்கள் சக்ரவர்த்தியாக இருங்கள். பிறகு பார்த்துக் கொள்ளலாம்.''

''இல்லை இராஜேந்திரா. எனக்குள்ளே மெல்லியதாக ஒரு ஆட்டம் ஏற்பட்டுவிட்டது. போதும் என்ற நினைப்பு ஏற்பட்டு விட்டது.''

''இது ஏற்படத்தான் செய்யும். ஒரு போர் முடிந்த பிறகு நமக்கு இனி போர்வேண்டாம் என்று தோன்றும் ஆனால், மறுபடியும் போருக்கு நாம் தயாராவோம். சற்று முன் செய்தி வந்தது. தந்தையே... நமது வணிகர்களின் மரக்கலன்கள் கீழைக் கடலில் பயணம் செய்ய முடியவில்லையாம். புலிக்கொடியை வெட்டி வீழ்த்தி, நமது வீரர்களைச் சிறை பிடித்து அடிமையாக்கி மரக்கலங்களை எரியூட்டுகிறார்களாம். இது மேலைச்சாளுக்கியம் என்று நினைத்தாயா, இது கீழைக்கடல். இராஜேந்திரனால் எதுவும் செய்ய முடியாது என்று சொல். இங்கு குதிரைகள் பூட்டிய தேர்கள் ஓடாது என்று சொல். யானைகள் கடல் நீந்தாது என்று சொல் என்று பேசுகிறார்களாம். யார் தெரியுமா? பாண்டிய ஆபத்துதவிகள்.

காந்தளூர்ச்சாலை கடிகையை அழித்ததிலிருந்து அங்கிருந்து பல நம்பூதிரிகள் ஈழத்தைச் சுற்றிக்கொண்டு வேறு பக்கம் போய்விட்டார்கள். ஈழத்தில் தங்கிவிடலாம் என்று நினைத்தார்கள். ஆனால், ஈழத்து மக்களும், மன்னர்களும் இவர்களை நம்பவில்லை.

போர்ப்பயிற்சி தருகிறோம் என்று ஆறு மரக்கலங்களை எடுத்துக் கொண்டு கடற்பக்கம் போய் ஈழத்து சேனாதிபதிகளை வெட்டிக் கடலில் வீசிவிட்டு மரக்கலன்களை இன்னும் கிழக்கே எடுத்துக் கொண்டு போய் ஒரு ஜலசந்தியில் தங்கிவிட்டார்கள். அது சிங்க தேசமாம். மந்தை மந்தையாக சிங்கங்கள் இருக்கின்றனவாம்.

அவர்களிடம் அடிமையாக இருந்து, ஆறு வருடங்கள் வாழ்ந்து, வேறொரு வணிகக் கப்பலில் தஞ்சம் புகுந்து சீனதேசம் போய் அங்கு சில வருடங்கள் வாழ்ந்து திருமணம் செய்து குழந்தைகள் பெற்று, திரும்பி வந்த வணிகன் ஒருவன் மிக விரிவான கதையைச் சொன்னான். அவனுடைய சொந்த ஊரான நாகப்பட்டிணத்திற்கு அவனை அனுப்பியிருக்கிறேன்.

நேற்று இரவு முழுவதும் மருவூர் அந்தணர்களிடம் பேசிக் கொண்டிருந்தேன்.

நம் பரதகண்டம் என்ன வடிவில் இருக்கும். மேருமலை என்ன வடிவில் இருக்கும். எந்தெந்த ஆறுகள் எங்கெங்கு ஓடும். எங்கெங்கு எந்தெந்த தேசங்கள் இருக்கின்றன என்றெல்லாம் விரிவாகப் படம் போட்டுக் காட்டினார்கள்.

கடல் கடந்து கடாரம் போகவேண்டும். கடற்கரை ஓரமாக நடந்து கீழைச்சாளுக்கியம் தாண்டி ஒட்டர் தேசம் தாண்டி, எப்பொழுதும் மழை பெய்யும் வங்கதேசம் போகவேண்டும். கங்கை நதி பலநூறு கிளைகளாகப் பிரிந்து அந்தத் தேசமே சேறும், சதுப்புமாக இருக்கிறதாம். வருடத்தின் எல்லா நாட்களும் ஐப்பசி மாதம்தானாம் நெற்கதிர்கள் ஆளுயரத்திற்கு வளர்கின்றனவாம். பசுக்களும், எருமைகளும் ஒரு குட்டியானை அளவுக்குப் பெரிதாக இருக்கின்றனவாம்.

தஞ்சாவூர் மோழைகளைப் பார்த்தால், இவை மாடுகளே அல்ல. வினோதமான பிறவிகள் என்றுதான் தோன்றுகிறது என்கிறார்கள். கோடை காலத்தில் நம்மால் பயிர் செய்ய முடிவதில்லை. வெறும் தரிசாகக் கிடக்கிறது. அங்கு எப்போதும், ஏதேனும் பூத்துக்கொண்டே இருக்கிறதாம். காய்த்துக் கொண்டே இருக்கிறதாம். எந்தப் பக்கம் நோக்கினாலும் பச்சையாம். ஆண்கள் ஒரு நாளைக்கு நான்கைந்து முறைகள் குளிக்கிறார்களாம். பிறந்த குழந்தை முதற்கொண்டு நீச்சல் அடிக்கிறதாம். அந்தணர்கள் மீனும், மாமிசமும் சாப்பிடுகிறார்களாம். தவறில்லையே, இதுவும் உணவுதானே என்கிறார்களாம். கீழைச்சாளுக்கியம் தாண்டி கங்க தேசத்தினுள் போகப் போகிறேன். நேற்று முன் தினம் என்னுடைய உளவாளி ஒருவன் வந்தான். நாகை விகாரத்திற்குப் போய் அவனை வெகு நாள் முன்பு தொண்டு புரிய அனுப்பியிருந்தேன். ஈழம் பற்றிய செய்திகள் நாகை விகாரத்தில் நிச்சயம் எதிரொலிக்கின்றன.

பாண்டியனுடைய கிரீடமும், செங்கோலும் இப்பொழுது ரோகணத்தில் இருக்கின்றன. அதை பாண்டிய வம்சத்திற்குத் தெரிவிக்கக் கருதி ஒரு புத்தபிட்சு வந்துவிட்டுப் போயிருக்கிறார். நாகை விகாரத்திலிருந்து பாண்டிய தேசத்திற்கு நடந்து போய்க் கொண்டிருக்கிறார்.

எனக்கு ஈழத்திற்குப் போய் உங்களால் கவர முடியாத அந்தப் பாண்டியனுடைய மணி முடியையும், செங்கோலையும் கவர்ந்து வரவேண்டுமென்று ஆசை இருக்கிறது. விழிஞ்சத்தில் மறுபடியும் கப்பல்கள் கட்டி மிகப்பெரிய ஏரி ஒன்றில் போர்ப்பயிற்சி செய்து கொண்டிருக்கிறார்களாம். சேரதேசத்திற்கும் நான் படையெடுக்க வேண்டும். அந்தக் கப்பல்கள் அத்தனையையும் கையகப் படுத்தி அங்கிருந்து ஈழத்தினுடைய தென் எல்லைக்குப் போய், அங்கிருந்து உட்புகுந்து சிங்களர்களை வடக்கிலும், தெற்கிலுமாக கிடுக்கிப் பிடிபோட்டு காடுகளை அறுத்து அவர்களுடைய மரத்தால் கட்டப்பட்ட மதில்களை எரித்து அந்த மணிமுடியைக் கைப்பற்ற வேண்டும். இன்னும் பல தலைமுறைகளுக்கு ஈழத்தை எழுந்திருக்க வொட்டாது செய்ய வேண்டும்.



உங்களுக்கு இவையெல்லாம் வேடிக்கையாக இருக்கின்றன வல்லவா. மறுபடியும் மேலைச்சாளுக்கியம் கிளர்ந்து எழும் என்பதில் எனக்குச் சந்தேகமே இல்லை. அப்பா, நீங்கள் வருவதற்கு முன்னே நான் உங்களைச் சந்திக்க வேண்டுமென்று நினைத்தேன். கும்பாபிஷேகம் முடிந்துவிட்டது. இனி நான் தஞ்சையில் இருக்க வேண்டிய அவசியமென்ன. நான் ஜெயங்கொண்ட சோழபுரம் போகிறேன். அங்கேயே தங்கியிருக்கப் போகிறேன்.

அரண்மனைக்கான சுற்று மதிலும் உட்புற வேலைகளும் நடந்து கொண்டிருக்கின்றன. கோயில் பணி வெகு சீக்கிரம் துவங்க இருக்கிறது. ஈசான சிவபண்டிதர் அங்குப் போயிருக்கிறார். எசாளத்திலிருந்தும், பிரம்மதேயத்திலிருந்தும் வேதம் ஓதும் மாணவர்கள் வந்து அந்த இடத்தில் தங்கி மூன்று நாட்கள் விதம் விதமான ஹோமங்களைச் செய்தார்கள். வேதம் ஓதினார்கள். வானத்தில் கருடன் வந்தது. நல்ல மழை பெய்தது. ஆறேழு பசுக்கள் எங்கிருந்தோ வந்து அந்த பூமி முழுவதும் புல் மேய்ந்தன. மாலை மரியாதைகளை ஏற்றுக் கொண்டன. நல்ல சகுனங்கள் ஏற்பட்டிருக்கின்றன சக்ரவர்த்தி. எனவே, நான் அங்கேயே குடிபோகலாம் என்று நினைக்கிறேன்.''

''உன்னை யார் தடுத்தது. தடுத்தால்தான் நின்று விடுவாயா. இங்கு அமர்ந்து சக்ரவர்த்தி பட்டம் கட்டிய பிறகு போயேன்.''

''இரண்டு வருடங்களாவது ஆகட்டும் என்று சொன்னேனே.''

''எதற்காக இரண்டு வருடங்கள். அதுவரை நான் உயிரோடு இருப்பேனா என்று தெரியாது.''

''சும்மாயிருங்களப்பா. ஏன் பயமுறுத்துகிறீர்கள். உங்கள் உயிருக்கு எந்த ஆபத்தும் இல்லை. உங்கள் உயிருக்கு மட்டுமல்ல. தஞ்சையில் உள்ள உயிர்களுக்கும், குடந்தையில் உள்ளவர்களுக்கும் எந்த ஆபத்தும், எந்தத் தீங்கும் நேரக்கூடாது என்றுதான் நான் குடிபெயர்கிறேன்.''

''நீ சொல்வது புரியவில்லை.''

''சோழதேசத்தின் எல்லைகள் விரிவாக்கப்பட்டு விட்டன. தென்திசையிலிருந்து பாண்டியன் தாக்கலாம் என்றிருந்தபோது, நீங்கள் பழையாறையிலிருந்து தென்திசை வந்து தஞ்சையில் குடியமர்ந்து மிகப்பெரிய கோட்டையைப் பலப்படுத்தி, வல்லத்துக் கோட்டையையும் சீரமைத்து இங்கே ஆட்சி செய்தீர்கள். பாண்டியர்கள் பணிந்தார்கள். மண்டியிட்டார்கள். மேலைச்சாளுக்கியத்தைப் போய் தாக்கிவிட்ட நாம் இன்னும் கவனமாக இருக்க வேண்டுமென்றால், குடந்தையின் வடக்கு எல்லையில்தான் இருக்க வேண்டும். வல்லத்து இளவரசர் வந்தியத்தேவரை நான் வல்லத்தில் குடியிருக்கச் செய்யப் போகிறேன். தெற்கே வல்லக் கோட்டையில் பழுவேட்டரையர்கள் இருப்பார்கள்.

பரதவர்களிலிருந்து ஒரு வீரனைத் தேர்ந்தெடுத்து திருக்கடல் மல்லையிலும், மயிலையிலும், கடற்படைத் தளங்கள் நிறுவுவேன். தெற்கே எனக்கு பயமில்லை. என் கவனமெல்லாம் வடக்கேதான். நான் இன்னும் வடக்கு நோக்கி சோழதேசத்தை விஸ்தரிக்க அங்கு இருப்பதுதான் நல்லது. உடையார் குடியிலிருந்தும் அதைச் சுற்றியுள்ள கிராமங்களிலிருந்தும் உணவுக்குப் பஞ்சமில்லாமல் தானியங்களும், காய்கறிகளும் வருகின்றன.

என் நகரத்தைச்சுற்றி கொள்ளிடத்து கால்வாய் ஒன்று ஓடுகிறது. வீரநாராயணபுரம் ஏரியிலிருந்து கால்வாய் வருகிறது. எனவே, நீர்வளத்திற்குப் பஞ்சமில்லை. படைவீரர்களும், மந்திரிகளும், அரசாங்க அலுவலர்களும் இருக்கின்ற இடமாக என்கோட்டையை மாற்றிக்கொண்டு விட்டால், அது மிகச்சிறப்பானதாக அமையும்.

தஞ்சையில் வகைதொகையில்லாமல் பலரும் இருக்கிறார்கள். தஞ்சைக்கோட்டை பாதுகாப்பானதாக இல்லை. முழுக்க முழுக்க ஒரு கோட்டை கருங்கல்லால் கட்டப்பட வேண்டிய அவசியத்தை நான் உணர்கிறேன். கோயிலுக்கான நிவந்தங்களைக் கொடுத்து விட்ட பிறகு என்னுடைய அரண்மனை தயாரான பிறகு என் கோயில் பணிகள் ஓர் அளவு தலை தூக்கிய பிறகு, என்னுடைய கோட்டை வளாகத்திற்குள் அதிகாரிகளும், போர் வீரர்களும் அரசாங்க அலுவலர்களும் குடியேறிய பிறகு, நாம் கொணர்ந்த செல்வங்களை வைப்பதற்குண்டான நிலவறைகளையும், மாடங்களையும் செய்த பிறகு சக்ரவர்த்தி பட்டம் ஏற்கிறேன். சக்ரவர்த்தி என்ற பட்டம் ஏற்ற பிறகு நான் எங்கே இருப்பது. தஞ்சை அரண்



மனையிலா? அப்போது நீங்கள் வெளியேற வேண்டுமே. அது நன்றாக இருக்குமா. ஊர் மக்கள் இழிவாகப் பேசமாட்டார்களா.''

''நான் இப்போதே வெளியேறி பழையாறை போய்விடுகிறேனடா.''

''பழையாறை வெறும் மண்கோட்டை. உங்களுக்குச் சரியாக வராது. சௌகரியமாக வாழ்ந்துவிட்டு பழையாறையில் போய் இருப்பதென்பது உங்களால் முடியாது. இத்தனை கூட்டத்திற்கு நடுவே கம்பீரமாக இருந்துவிட்டு, ஒரு சிறிய கிராமம் போல் இருக்கும் பழையாறையில் உங்களால் போய் இருக்க முடியாது. எனவே, நீங்கள் கடைசிவரையில் தஞ்சைக் கோட்டையில்தான் இருக்க வேண்டும்.

நான் என் இடத்தில் இருப்பேன். நான் அங்கு இருந்தால்தான் வேலைகள் துரிதமாக ஆகும். இங்கு அமர்ந்துவிட்டால், வேலைகள் செவ்வனே நடைபெறாது. நாம் இங்குப் பார்த்தோமே தந்தையே, பஞ்சவன்மாதேவிக்குக் காயம் பட்டதும், நீங்கள் அவர்களுடே ஆறேழு நாட்கள் இருந்தீர்கள். அந்த நேரத்தில் கேட்பாரில்லாது வந்த ஜனங்கள் அத்தனை பேரும் மண்வெட்டியையும், கூடையையும் போட்டுவிட்டு ஊர் நோக்கிப் போய் விட்டார்கள்.

என்னால் அந்தத் திமிரைச் சகித்துக் கொள்ள முடியவில்லை. நீங்கள் சகித்துக் கொண்டீர்கள். என் வாழ்க்கை முறை வேறு. என்னைக் கேட்காமல் எதுவும் ஒரு விரற்கடைகூட நகரக்கூடாது. நகரவிடமாட்டேன்.

மேலைச்சாளுக்கிய போரில் கட்டுப்பாடு நமக்கு இல்லாததனால்தான் மான்யகேடம் வரையிலோ, கல்யாணி வரையிலோ போக முடியவில்லை. இல்லையெனில் நாம் காசிமாநகரம் வரைகூட போய் வந்திருக்கலாம். தொடர்ந்து கடாரம் போன்ற இடங்களுக்குப் படையெடுக்க வேண்டுமெனில், ஈழத்து ரோகணத்தைத் தாக்கி சிறைபிடிக்க வேண்டுமெனில், சேரனை அடக்கி வைக்க வேண்டுமெனில், மேலைச்சாளுக்கியத்தின் மீது மறுபடியும் போர் தொடுத்து மான்யகேடம் வரையில் போக வேண்டுமெனில், மான்ய கேடத்தைத் தீக்கிரையாக்க வேண்டுமெனில் கங்கைக்கரைக்குப் போய் மறுபடியும் கங்கையைக் கொண்டு வந்து நான் கட்டுகின்ற கோயிலுக்கு குடமுழுக்கு நடத்த வேண்டுமெனில் இன்னும் மிகச்சரியான படை, மிக ஒழுக்கமான படையை நான் நடத்தவேண்டும். அதுதான் முதல் வேலை. வெறும்

சக்ரவர்த்தி என்று பட்டம் சூட்டிக் கொள்வதைவிட சரியான படைகளுக்கு சக்ரவர்த்தியாக இருக்க விரும்புகின்றேன்.

அப்பா, எனக்கு சக்ரவர்த்தியாக வேண்டுமென்ற விருப்ப மில்லை. எனக்கு இங்கே எவரும் போட்டியில்லை. எனவே, நீங்களே சக்ரவர்த்தியாக இருங்கள். இந்தப் படையெடுப்பிற்கான அடிப்படை வேலைகளை நான் அங்கிருந்து செய்கிறேன்.''

''என்னால் தொடர்ந்து வேலை செய்ய முடியாது இராஜேந் திரா.''

''வேண்டாம். சக்ரவர்த்தியாக இருங்கள் என்று சொன்னேனே தவிர, வேலையில் ஈடுபடச் சொல்லவே இல்லையே. சோழ தேசத்தின் நிர்வாகத்தை நான் கவனித்துக் கொள்கிறேன். தஞ்சையின் நிர்வாகத்தை என்னுடைய முக்கிய மந்திரி கவனித்துக் கொள்வார். நீங்கள் ஓய்வாக இருக்கலாம். எங்கு வேண்டு மானாலும் இருக்கலாம். ஏன், என்னிடத்தில் வந்துகூட நீங்கள் தங்கியிருக்கலாம், வருகிறீர்களா தந்தையே. ஜெயங்கொண்ட சோழபுரத்து அரண்மனையைப் பார்க்கிறீர்களா. நித்தவினோதப் பெருந்தச்சன் ஒரு கோயில் மாதிரியைச் செய்திருக்கிறான். உண்மையைச் சொல்லட்டுமா. பிரகதீஸ்வரர் கோயில் போலவே இருக்கும். ஆனால், இத்தனை உயரமல்ல. அதுவும் விமானம் பெரி தாக்கப்பட்ட கோயில். ஆனால், வேறு வகையான ஒரு விஷயம் செய்திருக்கிறேன்.

திருவக்கரை என்ற ஊரில் அவனுக்கு மிகப் பெரிய சந்திர காந்தக்கல் கிடைத்திருக்கிறது. அந்த சந்திரக்காந்தக்கல்லை கோயில் முதல் தளத்தில் மூடி உயரே விமானம் எழுப்பப்போகிறேன். அந்த சந்திரகாந்தக்கல் இருக்கும் இடத்தில் குளுமை இருக்கும் என்று சொல்கிறார்கள். கதையால் நந்தி செய்தும் பிறகு பெரிய கோட்டை எழுப்பியும் வரைபடம் வைத்திருக்கிறான். நீங்கள் வந்து அதை ஆசீர்வதிக்க வேண்டும்.''

''நித்தவினோதப்பெருந்தச்சனை ஆசீர்வதிக்கச் சொல்கிறாயா? என்னுடைய வேலையை அப்படியே போட்டுவிட்டுப் போயிருக் கிறான். அவனை என்னால் மன்னிக்க முடியும் என்று தோன்ற வில்லை. அவனைப் பார்க்க நான் விரும்பவில்லை. என்னிடம் உத்தரவு பெறாமல் போன ஒரு பிரஜையை நான் மதிக்க வேண்டிய அவசியமில்லை. அவனை நீ கொண்டாடுவதும் தவறு. ஆனால், கொண்டாடக்கூடாது என்று சொல்ல மாட்டேன்.



எனக்குத் தோன்றியபோது உன் இடத்திற்கு வருகிறேன். ஆனால், என்னால் அரசாங்கப் பணிகளில் ஈடுபடமுடியாது. வெறுமே கோயிலுக்குப் போவதைத்தவிர பஞ்சவன் மாதேவியைக் குணப்படுத்துவதைத் தவிர எனக்கு வேறு வேலை எதுவும் இல்லையென்று நினைக்கிறேன். நல்ல நிர்வாகியை தஞ்சை நகரத்தில் நியமித்து விடு. என் காதுக்கு எதுவும் கொண்டு வராதே. உன்னுடைய கட்டிட வேலைகளையும், கோயில் வேலைகளை யும் நலமே செய்து வா.

நீ சொல்கின்ற கடாரப்படையெடுப்பும், கங்கைக்கரை படை யெடுப்பும், மேலைச்சாளுக்கியம், சேரதேசம் என்று நகர்வதும் மிகத்துல்லியமாக இருக்கின்றன.

ரோஹணத்தைக் கைப்பற்றி பாண்டியன் முடியை நீ கொண்டு வந்துவிட்டால், அதைவிட எனக்கு செய்கின்ற கைம்மாறு வேறு எதுவும் இருக்கமுடியாது. என் பிள்ளை என்று நான் இறந்த பிறகும் உன்னைக் கொண்டாடுவேன். இதற்கு மேல் உன்னை கட்டாயப் படுத்த விரும்பவில்லை. நீ சொல்வது போல சக்ரவர்த்தி என்று நீ பதவியேற்றால் நீ அமர்வதற்கு இடம் வேண்டும்.

தஞ்சைக்கு வந்தாலும் உனக்கு இன்னும் பெரிய இடம் வேண்டும். எனவே, நான் விரைவிலேயே பட்டமகிஷியோடும், வானதியோடும், பஞ்சவன் மாதேவியோடும் பழையாறைக்குப் போய் விடப்போகிறேன். நீ சொன்னதுபோல இந்தக் கோயில் பணிகள் முற்றிலும் முடிந்தபிறகு நகரப்போகிறேன். வேண்டு மென்ற தானங்கள் கொடுத்துவிட்டு கோயில் நிர்வாகத்தைச் சீர் செய்துவிட்டு நகரப் போகிறேன். நீ சொன்ன கருத்துக்கள் யாவும் சரி. உன்னுடைய வேலை ஆரம்பித்து விட்டது. என் வேலை முடிந்துவிட்டது.

நான் இப்போது பேருக்குத்தான் சக்ரவர்த்தி. மொத்த சோழ தேசத்து நிர்வாகமும் உன்னிடம்தான் இருக்கிறது என்பதை ஞாபகம் வைத்துக் கொள். என் அனுமதி உனக்கு எதற்கும் தேவை யில்லை. நான் என்ன சொல்வேனோ என்று கவலை கொள்ளத் தேவையில்லை. நீ எது செய்தாலும் உத்தமமாகத்தான் இருக்கும். தஞ்சையில் இருக்க மறுக்கிறாய் என்பதுதான் எனக்கு வேதனை யாக இருக்கிறது.''

''இதில் வேதனைப்படுவதற்கு என்ன இருக்கிறது தந்தையே. நீங்கள் என்ன பழையாறையிலா இருந்தீர்கள். உங்கள் தந்தையார் சுந்தரசோழர் ஆட்சி செய்த அதே இடத்திலா நீங்கள் அமர்ந்தீர்கள்.

பழையாறையிலிருந்தால் சுந்தர சோழருக்கு நெருக்கமாயிருந்த வர்கள் உங்களைக் கண்டு பயப்பட மாட்டார்கள். அதுவுமில்லா மல் கண்டராதித்தருக்கு நெருக்கமாக இருந்தவர்களும் உங்களுக்கு மரியாதை தரமாட்டார்கள் என்று கருதியல்லவா நீங்கள் விலகி வந்தீர்கள். இதுவே தான் நான் தஞ்சையில் இருக்கமாட்டேன் என்பதற்குண்டான காரணம். தஞ்சை உங்களுக்குண்டான நகரம். பழுவேட்டரையரும், பிரம்மராயரும், விழுப்பரையரும், ஈராயிரத்துப் பல்லவரையரும், விழுப்பரையரும், வல்லவரையர் வந்தியத்தேவரும் கூட என்னைத் தங்கள் குழந்தையாக, மாண வனாகப் பார்ப்பார்களே தவிர, எனக்கு அடிபணிய மாட்டார்கள். ஒவ்வொன்றுக்கும் அவர்களைக் கேட்டுக் கொண்டுதான் நான் நகர வேண்டியிருக்கும். இது எனக்குப் பிடித்தமில்லாத விஷயம். என் வேகத்திற்கு அவர்களால் ஈடுகொடுக்க முடியாது.

படையெடுப்பைப்பற்றி யோசனை செய்யச் சொன்னால் ஒரு வாரம் கழித்துப் பதில் சொல்கிறேன் என்று பிரம்மராயர் பதில் சொல்வார். இனி பிரம்மராயருடைய மகன் அருண்மொழிதான் என்னுடைய பிரம்மராயர். நித்தவினோதப் பெருந்தச்சன்தான் ஆஸ்தான பெருந்தச்சன். தளபதிகள் யார் யார் என்று தீர்மானம் செய்து விட்டேன். அவர்களிடமும் சொல்லிவிட்டேன்.

தந்தையே... இந்த அற்புதமான கோயிலுக்குப் பொன்வேய்வது பற்றி யோசித்திருக்கிறீர்களா? திருவாரூர் கோயிலுக்குப் பொன் வேய வேண்டுமென்று என் மனதிற்குள் ஒரு எண்ணமிருக்கிறது. நீங்கள் கட்டிய கோயில் முழுவதும் செப்பு தகடு, அடித்து தங்கம் உருக்கிக் குழைத்துத்தடவ யோசித்திருக்கிறீர்களா?''

இளவரசர் பேச சக்ரவர்த்தி அவரைப் பாராட்டாகத் தொட்டார்.

"ஆனால், தந்தையே அன்று எப்படி பழையாறையில் உங்களால் இருக்க முடியவில்லையோ. அதேபோல இந்தத் தஞ்சையில் என்னால் இருக்க முடியாது. நான் இதைக் கோபத்தினாலோ, வெறுப்பினாலோ, அசூயையினாலோ சொல்லவில்லை. உங் களைத் தந்தையாக அடைந்தது என் பாக்கியம். நீங்கள் மிகப் பெரிய மனிதர் என்பதை நான் அறிவேன். என்ன இருந்தாலும் தகப்பன் மாதிரி என்று பிள்ளையைப் பார்த்து சொல்லுகின்ற வார்த்தைகள், அந்தப் பிள்ளையை உற்சாகப்படுத்தாது. உங்களை நன்கு தெரிந்தவர்கள் என்னைப் பார்க்கும்போது, நான் ஒரு மாற்று இரண்டு மாற்று குறைவாகத்தான் தெரிவேன்.



உங்களை அதிகம் அறியாத என் வயதொத்த இளைஞர்களோடு வேறொரு இடத்தில் குடியேறுகிறபொழுது அவர்களுக்கு நான் பெருந்தலைவனாகத் தெரிவேன். தந்தையே என்தோளில் ஏற்றப்பட்டிருக்கும் பாரம் மிகப்பெரிது. நீங்கள் செயற்கரிய செயல்கள் பலதும் செய்து விட்டீர்கள். உங்களைக்காட்டிலும் நான் செய்தால்தான் உங்களை மிஞ்சி நான் நின்றால்தான் நான் வாழும் வாழ்க்கைக்கு, இருந்த இருப்புக்கு ஒரு மரியாதை வரும். இல்லையெனில், சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவரின் மகன் என்ற பெயர் மட்டுமே மிஞ்சும். அது உங்களுக்கும் இழுக்கு. எனக்கும் இழுக்கு.

தந்தையே, உங்களுக்கு அருகே இருக்கும் போது உங்களுக்கு எதிராக ஏதேனும் பேசி விடுகிறேன். ஆனால், உங்களைவிட்டு விலகியிருக்கும்போது உங்களை என் மனம் இடையறாது கொண்டாடிக் கொண்டிருக்கிறது. நீங்கள் இருந்தால் என்ன செய்வீர்கள் என்றுதான் என் மனம் யோசிக்கிறது.

நித்த வினோதப் பெருந்தச்சன் உங்களைப் புகழ்ந்து தள்ளு கிறான். தன்னுடைய திறன் முழுவதும் வெளி வந்ததற்கு நீங்களே காரணம் என்று சொல்கிறான். லிங்கம் ஸ்தாபித்த நேரம் தவறு என்று சொல்கிறான். அதனால்தான் நரபலி விழுந்துவிட்டது. அரசருக்குப் பாதிப்பு வந்து விட்டது. முதல் முறையிலேயே மிகச் சரியான நேரத்தில், மிகச்சரியான கலவையில் அந்த லிங்கம் ஸ்தாபிதம் செய்திருக்க வேண்டும். அதைச் செய்யாதது பெருந் தச்சருடைய குறை. சிவலிங்கம் இவர்கள் ஸ்தாபிதம் செய்த நேரம் குறையுள்ள நேரம். எனவே. இந்தக் கோயில் குறையோடுதான் இருக்குமென்று கூறுகிறான்.

ஆனால், இவ்வளவு பெரிய கோயில் முழுமையாக இருந்தால் பகைவர்களுக்கு பொறாமையாக இருக்கும். எனவே, இப்பேர்ப் பட்ட விமானம் உள்ள கோயில் குறையோடு இருப்பதே சோழ தேசத்திற்கு நல்லது என்றும் சொல்கிறான்.

ஈசான சிவபண்டிதரும், நித்தவினோதப் பெருந்தச்சனும் இரவு முழுவதும் உட்கார்ந்து பேசுகிறார்கள். நித்தவினோதப் பெருந் தச்சனை ஈசான சிவபாண்டிதர் அற்புதமான யோகி என்று சொல்கிறார். ஈசான சிவபண்டிதரை நித்த வினோதப்பெருந்தச்சன் தன்னுடைய குருவாகக் கொண்டு அவரின் சொல்படியே அரண்மனையும், கோயிலும் ஸ்தாபிக்கிறான்.

இதுவரை நடந்த பூஜைகள் அனைத்தும் மிகத் துல்லியமாக நடைபெற்றன. கோயிலின் எல்லைகளைச் சுற்றி, நிற்கின்ற வராஹி உட்பட எல்லாப் பெண் தெய்வங்களையும் நிலைநிறுத்தி விட்டோம். என்னுடைய எல்லாப் படையெடுப்புகளும் மிகச்சரியாக நடைபெறும் என்றும் என்னுடைய மகன் வாழ்க்கை சீரும், சிறப்புமாக இருக்கும் என்றும் ஈசானசிவபண்டிதர் ஜோதிடம் சொல்கிறார். அனைத்தையும் நான் உங்களுக்கே தத்தம் செய்வேன். சோழதேசத்தின் மகத்தான மனிதராக நீங்கள் இருக்கிறீர்கள். எங்களில் அற்புதமான வழிகாட்டியாக நீங்கள் இருக்கிறீர்கள். பாண்டியன் ஆபத்துதவிகளை சோழதேசத்தில் ஆட்சி செய்ய விட்டு, யாரோ கட்டிய கோயிலுக்கு புதிதாய் லிங்க ஸ்தாபனம் செய்து அதை மகாலிங்கம் என்று உத்தமசோழர் அழைத்தார்.

இது எவ்வளவு நகைப்புக்கிடமான விஷயம். ஆதித்த கரிகாலனைக் கொன்ற அந்த பாண்டியன் ஆபத்துதவிகளை நீங்கள் நாடு கடத்தியதும், அவர்களுக்குத் துணையாக இருந்த காந்தளூர்ச் சாலையை அழித்துத் தகர்த்ததும், பொன்னால் பொறிக்கத் தக்கவை. நீங்கள் இல்லையெனில் சோழதேசம் முழுவதுமே கேரளத்து முன்குடுமி நம்பூதிரிகள் தேசமாகப் போயிருக்கும். மறவர்கள் சாம்ராஜ்ஜியம் மடிந்திருக்கும். தமிழ் வழக்கொழிந்து போயிருக்கும். ஆரியம் மட்டுமே இங்கு பேசுகின்ற பாஷை என்று சொல்லாமல் சொல்லப் பட்டிருக்கும்.

தந்தையே... ஓதுவார்கள் சிலர் பாடுகின்ற போதுதான் எனக்கு தேவார திருவாசகங்களின் மகிமை புரிகிறது.

தந்தது உந்தன் தன்னை
கொண்டது எந்தன் தன்னை
சங்கரா யார் கொலோ சதுரர்..

என்று ஒரு பாடல் வரும். ஒரு ஞானமும் இல்லாத நான் என்னை உனக்குக் கொடுத்துவிட்டு உன்னை எடுத்துக் கொண்டேன். சங்கரா... என் சிவனே, யார் கெட்டிக்காரர் என்று பொருள்படும் அந்தப் பாடலைக் கேட்கும்போதும், என் மனம் பாடும் போதும் நான் உங்களைத்தான் எடுத்துக் கொள்கிறேன்.

நான் குணமில்லாதவன் தந்தையே. முரடன், மூர்க்கன், என் கட்டளைக்குக் கீழ்ப்படியாதவர்களை நான் கடுமையாகத் தண்டிக்கிறேன். தவறு செய்தவர்களைச் சீறி விழுகிறேன். ஆனால் உங்களிடமிருந்து கற்க வேண்டியது ஒன்றேயொன்று இருக்கிறது.



மிகுந்த நிதானத்துடன் எந்த நேரமும் கோபமில்லாமல், உணர்ச்சி வசப்படாமல், இன்னும் சொல்லப்போனால் ஆக்ரோஷமேயில்லாமல் அரசராக நீங்கள் இருக்கிறீர்கள். உமது ஆக்ரோஷத்தை துங்கபத்ரா நதிக்கரையில்தான் பார்த்தேன். மொத்தப் படைகளும் நடுங்கிக் கொண்டிருக்க நீர் மட்டுமே துணிந்து இறங்கிய காட்சி இன்னும் என் மனதில் இருக்கிறது.

உண்மையான வீரன் கண்டபடி கோபப்படமாட்டான் என்று சொல்லிக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதற்கு உதாரணம் நீங்கள் தான் தந்தையே... இதைக்கூட நான் அறிந்துகொள்ள வில்லை. நானாய்த் தெரிந்து கொள்ளவில்லை. என் அனுக்கி பரவை சுட்டிக் காட்டித்தான் எனக்கும், உங்களுக்கும் உள்ள இந்த மிகப்பெரிய வித்தியாசம் தெரிந்தது.

ஒவ்வொரு முறை காலையில் சூரியநமஸ்காரம் செய்யும் போதும், சிவன் ஸ்தோத்திரம் சொல்லும் போதும் என்னை கம்பீரமான வீரனாக்கு என்றுதான் வேண்டிக் கொள்கிறேன். உங்கள் மீது நெல் முனையளவும் எனக்கு பிணக்கு இல்லை. என் வழிவேறு. என் திட்டங்கள் வேறு.

மேலைச்சாளுக்கியம் மட்டுமில்லை தந்தையே கீழைச்சாளுக்கியத்திலும் பிரச்சினைகள் வரலாம். குந்தவையின் மகனுக்குப் பட்டம் அளிப்பதில் இடர்பாடுகள் வரலாம். விமலாதித்தனுடைய அண்ணன் மகன் போட்டிக்கு நிற்கிறான். என் மனதிலுள்ள அத்தனையும் கொட்டித் தீர்த்து விட்டேன். கோயிலினுடைய ஒவ்வொரு விஷயத்தையும் சீர்தூக்கி நீங்கள் சரி செய்துவிட்டு எனக்கு சக்ரவர்த்திப்பட்டம் கொடுங்கள். அதற்குக் குறைந்த பட்சம் ஒரு வருடமாகும்.

நீங்கள் கட்டளையிட்டவை ஒழுங்காக நடைபெறுகிறதா என்பதையும் சற்று இங்கிருந்தபடியே கவனித்துக் கொண்டிருங்கள். பிறகு நகரலாம். ஏனெனில் தஞ்சையைவிட்டு நீங்களும் போகப் போகிறீர்கள், நானும் நகரப் போகிறேன். எனவே, இந்தக் கோயிலும், இந்த ஊரும் சரிவர பாதுகாக்கப் பட வேண்டும் என்பதால், அதற்கான ஏற்பாட்டைச் செய்துவிட்டு வருவதே நல்லது.''

''இராஜேந்திரா... நீ வாழ்ந்து வளர்ந்த இடத்தை விட்டுவிட்டு நகருவேன் என்று எப்படி கூச்சமில்லாமல் சொல்கிறாய்.''

''தந்தையே... இதே கேள்வியை பழையாறையைச் சேர்ந்த ஒருவர் கேட்டால் நீங்கள் என்ன பதில் சொல்லியிருப்பீர்கள். நான் வாழ்ந்த இடம் இதுதான். ஆனால் வளரப் போகின்ற இடம் வேறு

என்று தஞ்சையைச் சுட்டிக்காட்டியிருப்பீர்களல்லவா. இதே பதில்தான் நானும் சொல்ல விரும்புகிறேன். ஜெயங்கொண்ட சோழபுரம் உண்மையில் சரியான இடமாக எனக்குத் தெரிய வில்லை. உண்மையில் திருவொற்றியூரைத்தான் நான் தலை நகராகக் கொள்ள வேண்டுமென்று நினைத்தேன் அல்லது காஞ்சி புரத்தை முழுமையாக என் வசமாக்கிக்கொள்ள வேண்டுமென்றும் விரும்பினேன்.

காஞ்சிபுரம் மிகப்பழைய நகரம். திருவொற்றியூரும் அதே போல. அங்கும் வீடுகள் மலிந்திருக்கின்றன. எனவே, இந்த மாதிரி ஏற்கனவே கட்டப்பட்ட இடங்களாக இல்லாமல் வெறும் பொட்டல் வெளியில் என் விருப்பப்படி போக்குவரவுக்கு எந்தவித இடைஞ்சலும் இல்லாமல் நான்கு யானைகள் ஒருசேர நடக்கும் படியான வீதிகளோடு பலமான அரண்களோடு, முற்றிலும் புதிதான ஒரு நகரம் உருவாக்க விரும்புகின்றேன்.

நல்ல மழைக்கு தஞ்சை சகதியாகி விடுகிறது. நான் இப்பொழுது திட்டமிட்டிருக்கிற இடம் மேடு என்பதால் ஒருசொட்டு நீர் கூட அங்கே தங்கமுடியாது. அதேநேரம் நகரத்தைச் சுற்றி கால்வாய்கள் சலசலத்து ஓடிக்கொண்டிருக்கும். அங்கங்கே கிணறுகள் தோண் டப்பட்டு நீர்வளம் மிகுந்த பகுதியாகவே அவைகள் இருக்கும். இன்னும் இரண்டு வருடத்தில் நகரத்தின் பாதி பகுதி கட்டி முடிந்துவிடும். நீங்கள் வந்து பார்க்க வேண்டும் தந்தையே.''

இராஜேந்திரசோழர் சொல்லிவிட்டுப் மௌனமாக சக்ரவர்த்தி உடையாரைப் பார்த்த வண்ணம் அமர்ந்திருந்தார்.

''ஏன் செயலை வைத்தே என்னை மடக்குகிறாய். நீ சொல்லுகின்ற சமாதானங்கள் யாவும் சரியானவையே என்றாலும், என்னால் முழுமனதாக ஏற்க முடியவில்லை. நீ, நான், இருக்கின்ற இடத்தில் இருக்கக்கூடாது என்று கௌரவம் பார்க்கிறாய். அதற்குக் காரணங்களைத் தேடித்தேடி வரிசைப்படுத்தியிருக்கிறாய். பழையாறையில் இவ்வளவு பெரிய கோயிலை என் தந்தையான சுந்தரசோழர் கட்டியிருப்பின், நான் அதைவிட்டு நகர்ந்திருக்க மாட்டேன். இவ்வளவு பெரிய கோயிலை நான் கட்டியது உனக்கு ஆரம்பித்திலிருந்தே பிடிக்கவில்லை. இப்போது பொறாமையே வந்துவிட்டது என்று நினைக்கிறேன். அதனால்தான் உன்னால் தஞ்சையில் இருக்கவே முடியவில்லை. இனி உன் இஷ்டம். நீ போகலாம்.''



''எனக்குத் தெரியும். என்ன சொன்னாலும் நீங்கள் சமாதான மாக மாட்டீர்கள். என்னை எப்படியாவது தஞ்சையிலேயே இறுக்கிக் கட்டிவிட வேண்டுமென்று நினைக்கிறீர்கள். ஆனால், மேலைச்சாளுக்கியத்தின் படையெடுப்பு நடந்தால் இந்தத் தஞ்சையில் உட்கார்ந்து கொண்டு சோழ தேசத்தின் எல்லை களைப் பலிகொடுத்துக் கொண்டிருக்க வேண்டும். உங்களைச் சமாதானப் படுத்துவது என் வேலையல்ல. அதற்காக நான் காத்திருக்கப் போவதுமில்லை. உங்களுக்கு ஏதேனும் மறுமொழி சொல்ல வேண்டுமே என்பதற்காகத்தான் இவைகளைச் சொன் னேன். மற்றபடிக்கு நான் இன்று மாலையே ஜெயங்கொண்ட சோழபுரம் நோச்கி நகர முடிவெடுத்து விட்டேன். சோழ மண்ணை என் உயிருள்ள வரையில் காப்பேன். உங்களை என் கடைசி மூச்சு உள்ளவரை மறவேன். இந்தத் தஞ்சை பரமஸ்வாமி கோயிலை சோழமக்கள் கவனித்துக் கொள்வார்கள். நான் விடைபெறுகிறேன் தந்தையே.''

மகன் எழுந்து கை கூப்பினான்.

தந்தை மௌனமாக அவரை ஆசீர்வதித்து விட்டு வெளி யேறினார். என்றுமில்லாதபடி சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜ ராஜத்தேவரது நடை தள்ளாட்டமாக இருந்தது.

இராஜேந்திர சோழருக்கு அது வலித்தது.

சிறிது நேரத்தில் தன்னை இராஜேந்திரர் சரி செய்து கொண்டார். சக்ரவர்த்தியும் சிறிது நாளில் சரியாகி விடுவார் என்று நினைத்தார். ஆனால் சில காயங்கள் எளிதில் ஆறுவதில்லை.

கோயில் முன் மண்டபம் சுத்தமாக்கப்பட்டு திருவுண்ணாழி யில் இருக்கும் பரமஸ்வாமியைப் பார்த்தவாறு ஒரு பெரிய மரஆசனம் சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவருக்காகப் போடப்பட்டது. தொண்டை நாட்டு அந்தணர்களும், திரு வோலை நாயகமும், கல் தச்சர்களும் விலகி அமர்ந்திருக்க, சேனாபதி கிருஷ்ணராமனாக பிரம்மராயரும், தென்னவன் மூவேந்தவேளாரும், பழுவேட்டரையரும், பூரி விக்ரமகேசரியும் சக்ரவர்த்தியைச்சுற்றி அமர்ந்திருந்தார்கள். சற்றுத் தாழ்வான மர ஆசனங்கள் அவர்களுக்குப் போடப்பட்டிருந்தன.

''பரமஸ்வாமியான மூலவருக்கும், தட்சணமேரு விடங்கருக் கும் என் சார்பாக நகைகள் செய்ய விரும்புகின்றேன். அந்த நகைகள் கணக்கு இதோ..'' என்று ஒரு ஓலைக்கட்டை சக்ரவர்த்தி

கொடுக்க பல்வேறு அணிகலன்கள் அதில் எடையோடும், செய்நேர்த்திக் குறிப்போடும் இருந்தன. ஒரு மரப்பேழை முழுவதும் அந்த நகைகள் நிரம்பியிருந்தன.

இராஜராஜர் அர்ச்சித்த பொற்பூக்கள் எவ்வளவு என்ற ஒரு குறிப்பை ஒரு தொண்டை நாட்டு அந்தணர் படித்தார். மன்னர் கொடுத்த நகைகளைப் பட்டியலிட்டு சரிபார்த்ததும் பழுவேட்டரையர் தன் பங்கு நகைகளை எடுத்து வைத்தார். தென்னவன் மூவேந்தவேளாரும் ஒரு மரப்பேழையைக் கொண்டு வந்து வைத்தார். சக்ரவர்த்தி திரும்பி பிரம்மராயரைப் பார்த்தார்.

''நீங்கள் எந்த செப்புத்திருமேனியும் செய்ய வில்லையே. ஏன் என்று சக்ரவர்த்தி உடையார் சொல்ல, என்ன செய்வது என்று யோசித்து யோசித்து நேற்று முன் தினம்தான் உலோகச் சிற்பிகளை அழைத்து ஒரு செப்புத் திருமேனி செய்யச் சொன்னேன். அர்த்த நாரீஸ்வரர் வடிவம். ஆணும், பெண்ணும் ஒன்று. சமம் என்று கருதுகின்ற ஒரு அருமையான தத்துவத்தைச் சிலையாகச் செய்யச் சொன்னேன். இதில் சிவனுடைய உடம்பு பித்தளை பூசியும், அம்பாளுடைய உடம்பு செப்புத்திருமேனியாகவும் இருக்கும்.'' தொடர்ந்து பல கணக்குகள் எடுக்கப்பட்டன.

சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீஇராஜராஜத்தேவர் அடுத்தபடியான ஓலைச்சுவடியைப் படித்து எந்தெந்த கிராமம் இந்தக் கோயிலுக்கு நிவந்தமாக அளிக்கப்படுகிறது என்பதைப் பார்த்தார். அந்தக் கிராமத்தில் ஒரு நெல்கூட அரசாங்க வரியாக வசூலிக்கப்படாமல் அங்கு விளைகின்ற விளைநிலங்களிலிருந்து வரியாகக் கிடைக்கின்ற நெல்லனைத்தும் பரமஸ்வாமி கோயிலுக்கே போகவேண்டுமென்றும் செம்பிலும், கல்லிலும் வெட்டிக் கொள்ள உத்தரவிட்டார். தொடர்ந்து பல கிராமங்களைப் படிக்க, அதைத் தொண்டை நாட்டு அந்தணர்கள் ஓலை நறுக்கில் வேகமாக எழுதிக் கொண்டார்கள்.

கோயிலுக்கென்று நூற்று இருபது பரிசாரர்கள் சமையல் வேலை செய்பவர்கள் இருக்க வேண்டுமென்று உத்தரவிட்டார். கோயில் நிவேதனத்துக்கு அல்லாது வருகின்ற மக்களுக்கு உணவு கொடுக்க வேண்டும் என்பதும் அவருடைய கட்டளையாக இருந்தது.

அக்னி மூலையிலுள்ள, மடப்பள்ளியிள்ள அக்னிதேவர் சன்னதிக்கு பூஜை செய்விக்கவும் நிவந்தங்கள் கொடுத்தார்.

இன்னொரு ஓலைக்கட்டு அவர் முன்பு வைக்கப்பட்டது. யார் யார் என்னென்ன வேலை செய்ய வேண்டும். அந்த வேலைக்கு என்ன கூலி என்று எழுதப்பட்ட ஓலைக்கட்டு அது. இதை ஒரு தொண்டைநாட்டு அந்தணர் படிக்க அரசர் சரியென்று அந்த ஓலையில் கையெழுத்திட்டார். சாட்சியாகப் பலரும் கையெழுத்திட்டார்கள்.



இன்னொரு ஓலைக்கட்டு வந்தது. அந்த ஓலைக்கட்டில் தளிச்சேரி பெண்டிர்கள் எந்த ஊரைச் சேர்ந்தவர்கள், அவர்களுடைய பெயர் என்ன, அவர்களுக்கு என்ன வீடு, ஒதுக்கப்பட்டது. எவ்வளவு கலம் நெல் தரப்பட்டது. வீணை வாசிப்பவருக்கும், குழல் ஊதுபவருக்கும், தாளம் தட்டுபவருக்கும், மிருதங்கக்காரருக்கும், வாய்ப்பாட்டு வாசிப்பவருக்கும், ஆரியம் சொல்பவருக்கும், தமிழ் சொல்பவருக்கும், எக்காளம் ஊதுபவருக்கும், சிறு முரசு அடிப்பவருக்கும் எவ்வளவு வருடாந்திர கூலி என்றும் நிர்ணயிக்கப்பட்டு அவையும் படிக்கப்பட்டன. பிறகு கோலம் போடுபவர்கள், நீர்த்தெளிப்பவர்கள் காவிமண் செய்து கோலத்திற்கு வெளியே அழகு செய்பவர்கள். வண்ணார்கள், நாவிதர்கள் என்று பலருக்கும் என்னென்ன வேலை என்று சொல்லப்பட்டு, அவர்களுடைய ஊரும் பெயரும் குறிக்கப்பட்டு, அவர்களுக்கு என்ன கூலி என்றும் நிர்ணயிக்கப்பட்டது.

சிவாச்சாரியார்களுக்கு வருடத்திற்கு இருநூறு கலம் நெல் என்று எழுதப்பட்டது. சிவாச்சாரியார்கள் சந்தோஷமானார்கள். இவைகளை ஓலை நறுக்கில் எழுதிக் கொண்டால் போதுமா அல்லது செப்புப்பட்டயத்தில் எழுத வேண்டுமா என்று ஒரு தொண்டை நாட்டு அந்தணர் கேட்டபோது, எதற்கு செப்புப் பட்டயம், கோயில் வேலை செய்பவர்களல்லவா, இவர்களைப் பற்றி இந்தக் கோயிலிலேயே உள்ள சுவற்றில் கல்வெட்டாகச் செய்துவிடுங்கள். பரம்பரை பரம்பரையாக உள்ள அவர்கள், குடும்பம் இந்த கோயிலுக்குத் தொண்டு செய்து வரட்டும் என்று அரசர் கட்டளையிட்டார்.

''அப்படியானால் ஆரம்ப வாக்கியத்தை நீங்களே சொல்லி விடுங்களேன். என்னவென்று நான் எழுதுவது.'' என்று தொண்டை நாட்டு அந்தணர் கேட்க, சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீஇராஜராஜத் தேவர் திரும்பி சேனாபதி பிரம்மராயரைப் பார்த்தார்.

பிரம்மராயர் யோசித்தார்.

''சக்ரவர்த்தி அவர்களே உங்களுடைய மெய்க்கீர்த்தி முதலில் வரட்டும். பிறகு நீங்கள் என்ன சொல்கிறீர்களோ அதை அப்ப

டியே எழுதி விடலாம்.'' என்று சொல்ல, முதலில் மெய்க்கீர்த்தி எழுதப்பட்டது.

ஸ்வஸ்தி ஸ்ரீ மாலோலலாலிதம் சாஸனம் ஸ்ரீராஜராஜகேசரி ராஜசேகரவர்மனஹ என்று ஸ்ரீஇராஜராஜத்தேவரை ராஜராஜ சேகரவர்மனஹ என்று அவரே சொல்வதாக கல்வெட்டு ஆரம்பித்தது.

நாம் கொடுத்தனவும் நம் அக்கன் கொடுத்தனவும், நம் பெண்டுகள் கொடுத்தனவும், கொடுப்பார் கொடுத்தனவும் இக்கல்லிலே வெட்டி அருளுக என மொழிஞ்சருளி.. என்று ஸ்ரீஇராஜராஜத்தேவர் சொல்ல, அதை அப்படியே ஓலையில் எழுதி தொண்டை நாட்டு அந்தணர் அரசரிடம் காட்ட, அதை மை தடவிப் பார்த்து கண்ணில் ஒற்றிக் கொண்டுநெஞ்சில் வைத்து தொடர்ந்து, நான் என்ன கொடுத்தேனோ அவைகளை கல்லில் வெட்டச் சொல்லுங்கள் என்று சொல்லி தன்னுடைய கை யெழுத்தை மிக அழகாக அந்த ஓலையிலே சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவர் இட்டார்.

வெளியே உளிச்சத்தம் கேட்கத் துவங்கியது.

திருமகள் போல பெருநிலச் செல்வியும்
தமக்கே யுரிமை பூண்டுமெனக்கெழ
காந்தளூர்ச்சாலை கலமறுத்தருளி
வெங்கொடு நாடும் கங்க பாடியும்...

என்று அவருடைய மெய்க்கீர்த்தி வேகமாக கோயிலின் வலப்பக்கச் சுவரின் படியேறுகின்ற இடத்தில் பொறிக்கப்பட்டது.

மெய்க்கீர்த்தி முடிந்ததும் ராஜராஜகேசரி ராஜசேகரவர்மனஹ என்றும் செதுக்கப்பட்டது.

நாம் கொடுத்தனவும் நம் அக்கன் கொடுத்தனவும் நம் பெண்டுகள் கொடுத்தனவும், கொடுப்பார் கொடுத்தனவும் என்று அவர் சொன்ன மொழிகள் அப்படியே செதுக்கப்பட்டன. செதுக்கப்பட்டது உடனடியாக அவரிடம் வந்து சொல்லப்பட்டது.

நகைகளைச் சரிபார்த்துக் கொண்டிருந்த சக்ரவர்த்தி உடையார் எழுந்து நடந்து படிகளில் இறங்கி, கைப்பிடிச்சுவரை மெல்லத் தாண்டி, தன்னுடைய பெயர் பொறிக்கப்பட்டிருந்த கல்வெட்டு அருகில் நின்று மெல்ல அதன்மீது நெற்றியைப் பதித்து மொத்தமும் வருடிப் பார்த்து சந்தோஷத்தோடு சேனாபதி பிரம்மராயரைப் பார்த்தார்.



''இது காலம் கடந்து நிற்கும். காலம் கடந்து நிற்கும். சந்திர சூரியர்கள் உள்ளவரை இந்தக் கோயிலும், இந்தக் கல்வெட்டும் நிற்கும், உங்கள் பெயர் நிற்கும். உங்கள் கொடை நிற்கும். உங்கள் கொடைக்கு சாட்சியாக இருந்த நாங்களும் நிற்போம். வாழ்க. சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவர் வாழ்க.. சோழம்.. சோழம்... சோழம்...'' என்று சேனாபதி பிரம்மராயர் வெறிப் பிடித்தவர் போல கத்த, சுற்றியுள்ள போர் வீரர்களும், மற்றவர் களும் வெறிபிடித்ததுபோல சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீஇராஜ ராஜத்தேவரை வாழ்த்தினார்கள்.

மூவேந்த வேளாரைப் பார்த்து நீங்கள் சரி பார்த்துக் கொள் ளுங்கள் என்று சொல்லிவிட்டு சக்ரவர்த்தி உடையார் படியிறங் கினார்.

மெல்ல கோயிலை வலம் வந்தார். எல்லாக் கோணங்களி லிருந்தும் திரும்பத் திரும்ப பார்த்தார்.

''நான் இந்தக் கோயிலுக்கு என்னாலான ஒரு சிறு காணிக் கையைக் கொண்டு வந்திருக்கிறேன்.'' என்று ஒரு போர்வீரன் நிற்க, என்ன அது என்று வியப்போடு பார்த்தார்.

''ஒரு விளக்கு கொண்டு வந்திருக்கிறேன். இந்த விளக்கு மட்டுமில்லாமல் இந்த விளக்கை எரிப்பதற்கு சாவாமூவா பேராடு களாக நான் ஆடுகளும் கொண்டு வந்திருக்கிறேன். ஆடுகள் அங்கிருக்கின்றன. விளக்கு என் கையில் இருக்கிறது.'' என்று விளக்கை நீட்ட, அந்த தொங்கு விளக்கை எடுத்து நெஞ்சில் வைத்துக் கொண்டார். அருகேயுள்ள தொண்டைநாட்டு அந்தணனை அழைத்தார்.

''இந்த ஆடுகளையும், விளக்கையும் பெற்றுக் கொண்டு இந்த மறவருடைய பெயரும் இந்தக் கல்லிலே வரும்படி செய்ய வேண்டும். யார் யார் என்னென்ன கொடுக்கிறார்களோ அத்தனை பேர்களுடைய பெயரும் இங்கே வரவேண்டும். ஒருவர் மீதமில்லாது ஒருவரையும் புறக்கணிக்காமல் எவராக இருப்பினும், அவர் கொடுத்த கொடை எவ்வளவு சிறியதாக இருப்பினும் அது இந்தக் கல்லிலே பொறிக்கப்பட்ட வேண்டும்.'' என்று சொல்ல தொண்டை நாட்டு அந்தணர் அவ்விதமே செய்வதாக உறுதி கூறினார்.

வாரக்கணக்கில் மாதக்கணக்கில் அந்தக் கோயிலைச்சுற்றி பல்வேறு நிவந்தங்கள் இடையறாது, இடையறாது பொறிக்கப் பட்டன. அந்த பொறிக்கப்பட்டவைகளில் தங்கள் பெயரைத்

தடவித் தடவி சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜராஜரைப் போலவே மக்களும் மகிழ்ந்தார்கள்.

சந்திர சூரியர் உள்ளவரை இந்தக் கோயிலும் இருக்கும். என் பெயரும் இருக்குமென்று அங்கு நிவந்தம் கொடுத்த அத்தனை பேரும் இந்தப் பூமியில் சாஸ்வதமானார்கள். சிரஞ்சீவியாய் இன்னும் வாழ்கிறார்கள்.

கருணையும், கம்பீரமும், கலை வேட்கையையும், சிவபக்தியையும் கொண்ட அந்த அற்புதமான சக்ரவர்த்தி தான் மட்டும் சிறந்து நிற்காது. தன்னைச் சுற்றியுள்ளோரையும் சிறக்க வைத்தார். எப்படிக் கொடை கொடுப்பது என்று வழிகாட்டினார். இந்தக் கோயில் தன்னால் மட்டுமே கட்டப்பட்டது. தானே ஒவ்வொரு அங்குலத்தையும் போராடி கட்டினேன் என்று பெயர் பேசாது. இந்தக் கோயிலின் சிறப்புக்குப் பலர் காரணம் என்பதைக் கல்லிலே பொறித்து வைத்தார்.

கோயிலுக்கு நிவந்தம் கொடுத்தவர் யாராயினும் அவரும் சிரஞ்சீவாய் இருக்க வேண்டுமென்று உளமார நினைத்தார். இவரைப் போன்ற பெரிய மனது கொண்ட சக்ரவர்த்தி இதற்கு முன்னரும் இருந்ததில்லை. இதற்குப் பின்னரும் இருக்கவில்லை. அன்றிலிருந்து இன்றுவரை தனித்த மனிதராக, தெய்வ தூதுவனாக தெய்வக்கஞனாக அவர் மிளிர்ந்து வருகிறார்.

கோபுரப்படியில் ஏறி நின்று பின் நடந்து அந்த திருச்சுற்று மாளிகையின் மேலே அமர்ந்தபடி தான் கட்டிய கோயிலை வியப்போடு பார்த்துக் கொண்டிருந்த சக்ரவர்த்தியை, கோயில் மண்டபத்திலிருந்து சேனாபதி பிரம்மராயர் பார்த்துவிட்டு கைகூப்பினார்.

நான் பார்த்த இராஜராஜர் வேறு. அருண்மொழியாக இருந்த போதும் நான் இவரைப் பார்த்திருக்கிறேன். இராஜராஜராக நிமிர்ந்தபோதும் நான் கவனித்திருக்கிறேன். ஆனால், இப்போது தன்னை சிவபாதசேகரன் என்று சொல்லிக் கொள்கின்ற இந்த மன்னன் முற்றிலும் கனிந்து வேறுவிதமாகக் காட்சியளிக்கிறார். இவர் உடம்பிலிருந்து ஒரு ஒளி பரவிக் கொண்டிருக்கிறது. இவர் கண்கள் கருணை மிகுந்ததாய் மாறி விட்டன. இவர் நடையில் ஒரு சுகம் வந்துவிட்டது. இவர் மேனி மிருதுவாகி விட்டது. இவர் தலைமுடி மெல்லியதாகி விட்டது. இவர் முகத்து ரோமங்கள் பொல்லென்று பூத்திருக்கின்றன. இவர் ஒரு யோகியைப் போல காட்சியளிக்கிறார்.



இவருடைய நெஞ்சுப்படம் விரிந்து சற்று தொந்தி பெரிதாகி கனவுகள் மிதக்கின்ற கண்களோடு இவர் கோயிலைச் சுற்றி வருவது பார்த்தால், இவர் இதைத்தாண்டி வேறொரு இடத்திற்குப் போய்விடுவார் என்று தோன்றுகிறது. உள்ளே எந்நேரமும் கடவுளோடு பேசிக் கொண்டிருப்பவர் போலத்தான் காட்சியளிக்கிறார். இறையே... இறையே... ஸ்ரீமன் நாராயணா இவரோடு வாழ்கின்ற பெரும்பேற்றை எனக்குக் கொடுத்தாய். உனக்கு நன்றி சொல்கிறேன்.

ஸ்ரீமன் நாராயணரே, என்னுடைய அரசருக்கு நீண்ட ஆயுளையும், நோய் நொடி இல்லாத வாழ்க்கையையும், இன்னும் சிறந்த நண்பர்களையும் கொடுத்தருள வேண்டுமென்று வேண்டிக் கொண்டார்.

ஸ்ரீஇராஜராஜத்தேவர் நின்ற இடத்திற்குக் கீழே இருபது இருபத்தைந்து உலோகச் சிற்பிகள் வந்து நிற்பது தெரிந்தது. அவர்கள் ஒரு செப்புக் குடத்திற்கு தங்கமுலாம் பூசிக் கொண்டு வந்திருந்தார்கள்.

பரமஸ்வாமிக்கு எங்கள் காணிக்கை என்று அரசரிடம் கொடுத்தார்கள். அரசர் அவர்களை மேலே அழைத்தார். விமானம் முழுவதும் செப்புத் தகடு அடித்து அதற்கு பொன் முலாம் பூச முடியுமா என்று அவர்களிடம் கேட்க, ''நாலுபக்கமும் ஒரே விதமாகத்தானே இருக்கிறது. சிற்ப உருவங்கள் குறைவுதானே வெகுநிச்சயமாக அடித்துவிடலாம். இந்த அளவு மரப்பலகைகள் இருப்பதைப் பார்த்தோம். எங்கேனும் சேமித்து வைத்திருந்தால், இந்த அளவு மரப்பலகைகளையே அடிப்படையாக வைத்துக் கொண்டு நாங்கள் கல்மீது தகடு பொருத்தி விடுவோம். கனமில்லாத தகடுகள்தான் என்பதால் சுற்றிலும் சாரம்கட்டி அங்கங்கே அடித்துப் பொருத்தி பற்ற வைத்து விடுவோம். பற்றவைத்த தகடுகள் மீது அங்கிருந்த வண்ணமே பொன்முலாம் பூசிவிடலாம்.''

''நல்லது. செப்பு வேலை துவங்கட்டும். ஆனால், இத்தனை செப்பு நம்மிடம் இருக்குமா.''

''பல்வேறு யுத்தத்தில் நீங்கள் கொண்டு வந்த தாமிரப் பாத்திரங்கள் அரண்மனைக்குள் இருப்பதாகச் சொல்கிறார்கள். அவைகளைக் கொடுத்து உதவினால் போதும். கனமான அந்தப் பாத்திரங்களை உருக்கி மெல்லிய தகடுகளை நாங்கள் செய்து கொள்வோம்.''

பாத்திரங்கள் கொடுப்பதற்கு ஏற்பாடாயிற்று. செப்புத்தகட்டை விமானம் முழுவதும் அடிக்கின்ற வேலைக்கு ஆட்கள் பரபரத் தார்கள். அவர்களுக்கும் கூலி நிர்ணயம் செய்யப்பட்டது.

''இதுவே பிரமிப்பாக இருக்கிறதே. இதன் மீது செப்புத்தகடும். தங்க முலாமும் எதற்கு.''

பெருந்தச்சர் குஞ்சரமல்லர் வினவினார்.

''ஈசான சிவபண்டிதர் கயிலாயக் காட்சியை விவரித்ததை நீங்கள் கேட்டதில்லையா. காலைக் கதிரொளி சிறிதுநேரம் கயிலா யத்தில் பட்ட சில நொடிகள் பொன் மயமாக முழுவதும் சொர்ணத் தால் செய்ததுபோல ஜொலிக்கும் என்று சொல்கிறார்கள். பொன் வண்ணம் மாறி மெல்ல மெல்ல காவி வர்ணம் அடைந்து, பிறகு அதுவும் வெளிறி வெள்ளை வெளேரென்று தகதகக்கும் என்று சொன்னார்கள்.

அந்தப் பொன் வண்ணத்தை இங்கு எப்போது பார்த்தாலும் இருக்க வேண்டும் என்று நான் விரும்புகின்றேன். பகலில் பார்த்தாலும், நிலவில் பார்த்தாலும், ஏன் தீப்பந்த ஒளியில் பார்த்தாலும் இந்த விமானம் தகதகத்துத் தெரியவேண்டும். கயிலாயத்தில் சில நொடிகள்தான் பொன்நிறம் தகிக்கும். ஆனால், இந்த தட்சணமேருவில் தென்கயிலாயத்தில் எப்போதும்.. எப்போதும்... பொன் ஒளிர்ந்து கொண்டிருக்கும். ஏனெனில் இதற்குள்ளே சிவன் இருக்கிறார்.

கீழே நிவந்தங்களைக் குறித்த கல்வெட்டுக்கள் செதுக்கப்பட்டுக் கொண்டிருக்க, மேலே பொன் தகடுவேயும் வேலை நடக்க ஆரம்பித்தது.

விமானத்தின் க்ரீவப் பகுதியும், விமானத்தை மூடிய பெருங் கற்களும், நந்தியும், அதற்குக் கீழுள்ள பகுதிகளும் மடமடவென்று அளவெடுத்து செய்யப்பட்டு வேகமாக பொருத்தப்பட்டு, மடிக்கப் பட்டு பற்ற வைக்கப்பட்டன. அங்கேயே கருங்கல் பலகைகள் போட்டு அதன் மீது கரித்துண்டு அடுப்பை எரித்து பொன்னைக் குழைத்து தாமிரத்தில் தடவினார்கள். பொன் சுருளை எடுத்துக் கொண்டு போய் அழுத்தி ஒட்டி சூடாக்கி தாமிரத்தோடு பதியும் படிச் செய்தார்கள்.

பௌர்ணமி நிலவில் அந்த விமானம் முழுவதும் பொன் மயமாக தகதகப்பதை பொது மக்கள் பார்த்துவிட்டு விம்மி விம்மி அழுதார்கள்.



காலை வெயிலில் முதல் கிரணம் பட்டதும், இன்னும் பிரகாச மாக இருப்பதைப் பார்த்து வாய் விட்டு அலறினார்கள். ஒரு நல்ல மழை பெய்து விமானம் முழுவதும் சுத்தமாக மீண்டும் வெயில் அடிக்கும்போது பரவசமாக குதித்தார்கள்.

விதம்விதமான பருவங்களில், விதம்விதமாக அந்தப் பொன் விமானம் ஜொலிப்பதைப் பார்த்து விட்டு கைகூப்பி... கைகூப்பி அழுதார்கள். என் சிவனே, என் சிவனே... என்று விமானம் முற்றிலும் சிவலிங்கமாகக் கருதி, இது பிரமாண்டமான சிவன், எல்லையில்லாத ஒரு பரம்பொருள், இதற்கும் மேலே இருக்கின்ற, அண்டவெளிதான் உண்மையான கடவுள் என்று புரிந்து கொண்டு பேசினார்கள்.

மேலேயிருப்பதும் சிவலிங்கம் அந்த கருவறைக்கு உள்ளிருக் கின்ற வெளியும் சிவலிங்கம். அந்த வெளியை மூடிக் கொண்டிருக் கின்ற இந்த விமானமும் சிவலிங்கம். இந்த விமானத்தை மூடிக் கொண்டிருக்கின்ற வான் வெளியும் ஒரு சிவலிங்கம். ஆக சிவன் எங்குமுள்ளவன். எல்லா இடத்திலும் பரவியவன். எல்லாமுமாய் இருக்கிறவன். உள்ளிருக்கிற விக்கிரகம் மட்டுமே கடவுள் அல்ல. கடவுளைத் தாங்கிக் கொண்டிருக்கின்ற கோயிலும் கடவுள். கோயிலைத் தாங்கிக் கொண்டிருக்கின்ற பிரபஞ்சமும் கடவுள் என்பது வெகு எளிதாக, அந்தத் தஞ்சை மக்களுக்குப் புரிந்து போயிற்று.

ஆகம பண்டிதர்களும், சிவாச்சாரியார்களும், வேத விற்பன்னர் களும், சாதுக்களும், சித்தர்களும், ஞானிகளும், ரிஷிகளும், பௌத்த மதத்தைச் சேர்ந்த துறவிகளும், சமணமதத்தைச் சேர்ந்த திகம்பரர்களும், சுற்றிச் சுற்றி வந்து பார்த்துவிட்டு வியந்தார்கள். புரிகிறது. புரிகிறது என்று விதம்விதமாக வியாக்கியானங்கள் கொடுத்தார்கள்.

சக்ரவர்த்தி உடையாரைச் சந்தித்து சந்தித்து விதம்விதமாக இதைத்தானே சொல்கிறீர்கள். இதைத்தானே சொல்கிறீர்கள் என்று ஆசையும், அன்புமாய் கேட்டார்கள்.

இராஜராஜர் வாயில் என்று அழைக்கப்பட்ட சுவர் பக்கம் சிற்பங்கள் செய்கின்ற வேலை துவங்கியது.

''என்ன சிற்பங்கள் செய்ய வேண்டும்.'' என்று சிற்பிகள் கைகட்டிக் கேட்க, ''கண்ணப்ப நாயனார் செய்யுங்கள். மன்மத தகனம், சிவனார் செய்ததைச் சொல்லுங்கள். நான் என்ன கோயில் கட்டி விட்டேன். மனசுக்குள் கோயில் கட்டினாராமே பூசலார்

நாயனார். அவர் கதையைச் சொல்லுங்கள்.'' என்று விதம்விதமாக சக்ரவர்த்தி உடையார் சொல்ல, சகலமும் ஓலையில் குறித்துக் கொண்டு அந்த இராஜராஜர் வாசலின் இருபக்கமும் அவர் சொன்னதையே சிற்பமாகச் செய்தார்கள்.

பிரம்மராயருக்கு சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவர் பேசுவதும், பார்ப்பதும், நிற்பதும், சிரிப்பதும் முற்றிலும் வேறு விதமாகவே மாறிக் கொண்டிருக்கிறது என்பது புரிந்து போயிற்று.

சக்ரவர்த்தி ஒரு நிலையில் இல்லை. வேறு ஏதோ ஒரு மனப் பக்குவத்தில் நடந்து கொண்டிருக்கிறார்.

வேறு யாராக இருந்தாலும் இது நான் கட்டிய கோயில் என்று சொல்லிக் கொண்டிருப்பார்கள். இவர் நானென்ன கோயில் கட்டிவிட்டேன். மனதுக்குள் கோயில் கட்டினாரே பூசலார் என்று சொல்கிறார், என்றால் இவர் எவ்வளவு கனிந்திருக்க வேண்டும் என்று ஆச்சரியப்பட்டார். இதைச் சிற்பமாகச் செய். அதுவும் கோபுர வாசலிலேயே செய் என்று சொல்ல வேண்டுமென்றால், இவர் எவ்வளவு பணிவுக்கு வந்திருக்க வேண்டும் என்று வியந்தார்.

நாள் தவறாது சக்ரவர்த்தி உடையார் கோயில் வேலை செவ்வனே நடைபெறுவதையும், பொன் இழைப்பது தொடர்ந்து கொண்டிருப்பதையும், ஆயிரக்கணக்கான ஜனங்கள் தினமும் வந்து ஈஸ்வர பிரசாதமாக உணவு எடுத்துக் கொண்டு ஒய்வெடுப்ப தையும், உள்ளே போய் சுவாமி தரிசனம் செய்வதையும் மேல் பிரகாரத்திலுள்ள ஓவியங்களைப் பார்ப்பதையும், அதற்கு மேலே யுள்ள கரணங்களைப் போய் கவனிப்பதையும் பார்த்துப் பார்த்து மகிழ்ந்தார்.

திருச்சுற்று மாளிகை முழுவதும் நடந்து வந்துவிட்டு, ''எங்கே.. எங்கே எழுதியிருக்கிறீர். உம் பெயரை நான் அதைத் தடவிப் பார்க்க வேண்டும்.'' என்று சேனாபதி கிருஷ்ணன்ராமனைப் பார்த்துக் கேட்க, ''அப்படி ஏதும் செய்யவில்லை.'' என்று கிருஷ்ணன்ராமன் சொல்ல, ''தவறு, நிச்சயம் செய்ய வேண்டும். இது உம்முடைய நிவந்தம். நீர் கொடுத்த கொடை. நான் கொடுத்த கொடை மட்டுமேயல்லாமல் நீர் செய்த செயலும் நீர் எம்மோடு துணையாக இருந்தீர் என்பதும் இங்குச் சொல்லப்பட வேண்டும். இதோ, இங்கு அமர்ந்து தானே சகல வேலைகளையும் செய்தீர், இந்த இடத்திலிருந்துதானே கோயில் கட்டும் வேலையை மேற் பார்வை பார்த்தீர். இதுதானே உம்முடைய இடம். இந்த இடத் திலே, இந்தத் தூணிலே உம்முடைய பெயர் பொறிக்கப்படட்டும்.



தென் பக்கமாகவும் இருந்து, இங்கு கல்வெட்டு வேலைகளை யும் கவனித்தீர் அல்லவா. இந்த இடத்திலும் உம்முடைய பெயர் பொறிக்கப்படட்டும். தெற்குப் பக்கமாகவும் மேற்குப் பக்கமாக வும் இரண்டு இடங்களைச் சுட்டிக்காட்டி சேனாபதி கிருஷ்ணன் ராமனுடைய பெயர் பொறிக்கப்பட வேண்டும்.'' என்று கட்டளையிட்டார். அங்கு உளிகளின் சப்தமெழத்துவங்கின.

''அங்கே அரண்மனை வேலை பூர்த்தியாகி விட்டது. கோயில் பணிகள் நன்கு நடந்து கொண்டிருக்கின்றன. சுற்றுச்சுவர்கள் எழுப்பி விட்டார்கள். இங்கே நீங்கள் கட்டியிருப்பது போலவே இந்த இராஜராஜேஸ்வரம் போலவே, அங்கேயும் எழுப்பப் பட்டிருக்கிறது. அங்குள்ள சிவனுக்கு இராஜராஜஸ்வரமுடையார் என்று இராஜேந்திரர் பெயர் வைத்திருக்கிறார். அதாவது உங்கள் பெயரை வைத்திருக்கிறார்.'' சக்ரவர்த்தியிடம் சொல்லப் பட்டதும் அவர் வாய்விட்டுச் சிரிக்கிறார்.

''நல்லது. வேலைகளை அப்படியே விட்டுவிட்டு தஞ்சைக்கு வரச்சொல்லுங்கள். நான் நாள் பார்த்து வைத்திருக்கிறேன். ஈசான பண்டிதருக்கும் ஆள் அனுப்புங்கள். அந்த நாள் சரியென்றால் அப்பொழுதே சக்ரவர்த்திப் பட்டத்தை இராஜேந்திரருக்கு கட்டிவிட்டு நான் பழையாறை நோக்கிப் போகிறேன். சிறிது நாட்கள் சக்ரவர்த்தியாக தஞ்சையில் இராஜேந்திரன் இருந்துவிட்டு பிறகு அவன் விருப்பப்படி எங்கு வேண்டுமானாலும் போகட் டும்.''

குதிரைகள் வடக்கு நோக்கிப் பறந்தன. அரசருடைய விருப்பம் தெரிவிக்கப்பட்டது. மறுபடியும் தஞ்சைக்குள் மக்கள் கூடினார்கள்.

நல்லநாளில் இளவரசர் இராஜேந்திரர் முடிசூடி சக்ரவர்த்தி பரகேசரி இராஜேந்திரசோழர் என்று பதவி ஏற்றார்.

மாதண்ட நாயகனாக நியமிக்கப்பட்டவர் இளவரசராகவும், இளவரசராக மாறியவர் இப்பொழுது சக்ரவர்த்தியாகவும் மாறினார்.

தன்னுடைய சிம்மாசனத்தில் தன்னுடைய கிரீடத்தை அணிந்து, தன்னுடைய செங்கோலை வைத்து கம்பீரமாய், அடர்ந்த மீசையும், சிவந்த உதடும், பெரிய விழிகளும், சிரிப்பும், அகலமான மார்பும், காலில் வீரக்கழலும், நெஞ்சில் வைரப் பதக்கங்களும், தோள்களில் தங்கக் கேயூரங்களும் கைகளில் வளையங்களும் பொருந்த சிவந்த உடையில் வெள்ளை நிற மேல் துணியோடு மிக

கம்பீரமாகக் காட்சியளிக்கும் இராஜேந்திரரைக் கண்குளிரப் பார்த்தார்.

இதுவும் ஒரு கோயில்தான் என்று மனதிற்குள் நினைத்தார்.

அந்தக் கற்கோயில் நான் திட்டமிட்டுச் செய்த கோயில், இந்தக் கோயில் நான் திட்டமிடாமல் செய்த கோயில், இது தானாக உருவாகிய கோயில், இந்தக் கோயிலும் சந்திரசூரியர் உள்ள வரையிலும் மங்காது நிற்கும்.

கடாரம் போக வேண்டுமாம். கலிங்கம் தாண்டி கங்கம் கைப் பற்ற வேண்டுமாம். என்னவெல்லாம் சொல்கிறான். கங்கையைக் கொண்டு வந்து இங்கே மிகப்பெரிய ஏரியில் அதைக் கலக்க வேண்டுமாம். எல்லாவற்றையும்விட என்னால் செய்ய முடியாத வேலையைச் செய்வேன் என்று சூளுரைத்திருக்கிறான். பாண்டி யனது மணிமுடியையும், செங்கோலையும், ரோகணத்திலிருந்து கொண்டு வந்து நான் சூடிக் கொள்வேன் என்று சூளுரைத் திருக்கிறான்.

வாழ்க இராஜேந்திரர். வளர்க சோழம்.

அவருக்கு உள்ளே சட்டென்று குளிர் நீர்பட்டது போன்ற சிலிர்ப்போடு ஒரு நிம்மதி படர்ந்தது.

''நான் விடைபெறலாம் என்றிருக்கிறேன். பழையாறைக்குப் போகலாம் என்றிருக்கிறேன்.''

சேனாபதி பிரம்மராயரிடம் சொல்ல, ''நானும் வருகிறேன்.'' என்று பிரம்மராயர் பரபரத்தார்.

''பழையாறையில் உமக்கு என்ன வேலை. நீர் இராஜேந்திர ரோடு இரும்.''

''இப்படி சட்டென்று நகர்ந்துவிட்டால் சரியாக இருக்குமா? மக்கள் துயரப்படுவார்களே.''

''ஆமாம். துயரப்படுவார்கள்.''

''மக்களின் துயர் நீக்க என்ன வழி.''

இருவரும் யோசித்தார்கள்.

''கோயிலுக்காக வந்த மக்களுக்கு உணவிட்ட தோடு சரி. வேறு ஏதேனும் செய்ய வேண்டும் என்றும் தோன்றுகிறது. பல தேசங் களிலிருந்தும் கொள்ளயடித்த பொருட்கள் தங்கமாக இருக் கின்றன. அவற்றை நானே வைத்துக் கொண்டு என்ன செய்வது. பழையாறையில் அத்தனை தங்கத்திற்கு எந்தச் செலவும் இல்லை.



எனவே, இவைகளை இங்கு வினியோகம் செய்துவிடலாம் என்றிருக்கிறேன்.''

சக்ரவர்த்தி சொல்ல, ''வெறுமே வினியோகம் செய்வதைவிட, வேறொரு விசேஷமாக காரியம் நடத்திச் செய்யலாமே.''

''என்ன விசேஷம் செய்யலாம், சொல்லும்.''

''அந்தணர்களைக் கேட்டால் சொல்லி விடுகிறார்கள்.''

சேனாபதி சொல்ல, அவர்கள் இருவரும் அந்தணர்களை விசாரித்தார்கள்.

''உங்களுடைய அபிலாஷை என்ன என்று சொல்லுங்கள். நிறைவேற இஷ்டி என்ற யாகம் நடத்தலாம்.''

அந்தணர்கள் சொன்னார்கள்.

''இஷ்டியா.''

''ஆமாம். உங்களுடைய இஷ்டம் நடந்தேறுவதற்கு தேவதை களை வேண்டிக் கொள்ளலாம். அந்த தேவதைகளை வேண்டிக் கொள்வதற்கு முன்பு நீங்கள் துலாபாரம் ஏறவேண்டும். அதாவது, எடைக்கு எடை பொன்தர வேண்டும். பிறகு ஹிரண்ய கர்ப்பமும் செய்யலாம். ஹிரண்ய கர்ப்ப மென்றால் தங்கத்தில் பசு செய்யப்பட்டு பசுவின் வாயிற்குள் நுழைந்து வயிற்றில் தங்கி, பிறகு பின்புறமாக வெளியே வந்துவிடவேண்டும். இதை ஹிரண்ய கர்ப்பம் புகுதல் என்பார்கள்.''

''அதாவது அவ்வளவு பெரிய பொன்பசு செய்யப் போகிறீர்கள்.''

''ஆமாம். அவ்வளவு பெரிய பொன்பசு செய்து நீங்களும் உங்கள் மனைவியும் அவ்விதம் வெளியே வரலாம்.''

''இப்படிச் செய்தால் என்ன ஆகும்.''

''மறுபிறவி இல்லாமல் போகும்.''

''எனக்கு கடவுள் என்ற விஷயம் தெரியுமா. நான் உடலோடு உயிரோடு சொர்க்கத்திற்குப் போக முடியுமா.''

''ஒருவேளை போனாலும் போகலாம்.''

அந்தணர்கள் இழுத்தார்கள்.

''நிச்சயமாக நடக்குமா.''

''இல்லை. இஷ்டங்கள் நிறைவேறச் செய்வதற்குப் பெயர் இஷ்டி இந்த இஷ்டங்கள் நிறைவேறுவதற்கு இதுதான் விதிமுறை. ஆனால் இதனால் இஷ்டங்கள் நிறைவேறுமா என்று எங்களுக்குத்

தெரியவில்லை. நீங்கள் சொல்கின்ற இஷ்டத்தை இதுவரை எங்களிடம் யாரும் கேட்டதில்லை. நோய் நீங்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். நோய் நீங்கியிருக்கிறது. அதிக செல்வம் வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அதிக செல்வம் வந்திருக்கிறது. அதிகாரம் வேண்டும் என்று கேட்டு இஷ்டி செய்திருக்கிறார்கள். அதிகாரம் வந்திருக்கிறது. ஆனால் உடம்போடு கயிலாயம் போக வேண்டும். சொர்க்கம் போக வேண்டுமென்று இதுவரை யாரும் இஷ்டி செய்ததாக நாங்கள் கேள்விப்பட்டதில்லை. ஆனாலும் செய்து பார்க்கலாம்.'' என்று அந்தணர்கள் சொல்ல, சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவர் வாய் விட்டுச் சிரித்தார்.

''என்ன இப்படிப் பேசுகிறீர்களே.'' என்று பிரம்மராயர் கொஞ்சம் வேதனையோடு சொல்ல, ''அதனால் என்ன இவர்களாகவா வைத்துக் கொள்ள முடியும். தங்கம் மெல்ல மெல்ல அரண்மனையிலிருந்து மக்களிடம் போய்ச் சேரட்டும், ஹிரண்ய கர்ப்பம் புகுந்த தங்கம் அந்தணர்களுக்கும், நான் துலாபாரம் ஏறிய தங்கம் பொது மக்களுக்கும் போகவேண்டுமென்று உத்தரவிட்டு விடுங்கள்.''

திருவிசநல்லூரில் அந்தணர்கள் ஒன்றுகூடி அரசருடைய மனோபீஷ்டங்கள் நிறைவேறும் என்று பெரிதாய் யாகம் செய்தார்கள். விருந்து நடத்தினார்கள். வந்திருந்த அத்தனை பேருக்கும் கூப்பிட்டுக் கூப்பிட்டு ஆளுக்கொரு கழஞ்சு காசு கொடுத்தார்கள். தங்கத்தால் செய்யப்பட்ட பசுவில் அரசனும், அரசியும் உள் புகுந்து, வெளியே வந்து அந்தப்பசுவை அந்தணருக்கு தானம் கொடுத்தார்கள்.

அந்தப்பசுவின் உடம்பு பல்வேறு கூறுகளாக நறுக்கப்பட்டு அந்தணர்களுக்குக் கொடுக்கப்பட்டது.

உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவர் துலாபாரம் ஏறிய சில நாட்களில் பட்டமகிஷியோடும், வானதியோடும், பஞ்சவன்மாதேவியோடும் பழையாறை அரண்மனை நோக்கிப் போனார்.

மக்கள் பிரியாவிடை கொடுத்தார்கள். அரசரின் தேரின் பின்னாலேயே வந்தார்கள். அரசர் புறம்படியிலேயே அவர்களைத் தடுத்து நிறுத்தி கோயிலை யார் கவனிப்பது. நான் இன்னும் இரண்டு நாளில் திரும்பி விடுவேன். போய் கோயில் பணியைச் செய்யுங்கள் என்று சொல்ல, பொதுமக்கள் வேதனையோடு திரும்பினார்கள்.



சக்ரவர்த்தி உடையார் அதற்குப் பிறகு தஞ்சை நகர் பக்கம் வரவேயில்லை.

பழையாறை வந்ததிலிருந்து பஞ்சவன்மாதேவியின் உடல்நலம் இன்னமும் தேறிற்று. கோல் ஊன்றி மெல்ல நடக்க முடிந்தது. சுவர் பிடித்துக் கொண்டு நிற்க முடிந்தது. திடமான உணவுகளை சற்றுக் கரைத்து விழுங்க முடிந்தது. தன் உடம்பைத்தானே சுத்தம் செய்து கொள்ள முடிந்தது. ஆனால், தோல் சுருக்கம் மறையவில்லை. பற்கள் இல்லாத வாய் மெல்ல அசைந்து கொண்டேயிருந்தது. தலைமுடி ஒன்றுகூட இல்லாமல் பளபளத்த வழுக்கை பரிதாபத்தை அதிகப்படுத்தியது.

ஆனால், சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீஇராஜராஜத்தேவர் தினந்தோறும் பஞ்சவன்மாதேவிக்கு அருகேயிருந்து பல்வேறு நாயன்மார்கள் கதைகளைப் பேசிக் கொண்டிருந்தார்.

''ராஜராஜியை அழைத்து அந்த ராஜேஸ்வரநாடகம் கேட்போமே.'' என்று பஞ்சவன்மாதேவி சொல்ல, ''ஆஹா.. நீ அமர்ந்து பார். என்னை விட்டுவிடு.''

''ஏன். ஏன் நீங்கள் பார்க்கமாட்டேன் என்கிறீர்கள்.''

''என் கதையை நானே பார்க்க வேண்டுமா. எனக்கு அதில் விருப்பமில்லை.''

''எப்பொழுது உங்களுக்கு விருப்பமில்லையோ, அப்பொழுது நானும் பார்க்க போவதில்லை.''

பஞ்சவன்மாதேவியும் பார்க்க மறுத்துவிட்டாள்.

பட்டமகிஷியும், வானதியும் போய் பார்த்துவிட்டு வந்து மிக அற்புதமாக இருக்கிறது என்று சொன்னார்கள்.

''பஞ்சவன்மாதேவி, அந்த நாடகம் கிடக்கட்டும். நாம் இன்று எந்த நாயன்மாரைப் பற்றிப் பேசலாம்'' என்று சக்ரவர்த்தி உடையார் விட்டேத்தியாக கூடத்தில் அமர்ந்து கேட்க, ''சுந்தரமூர்த்தி நாயன்மாரைப் பற்றிப் பேசுவோமா.''

''ஆமாம். எத்தனை பேசினாலும் அலுக்க முடியாத ஒரு வாழ்க்கை வரலாறு அது. சாதாரண மனிதரிடம் தெய்வம் குடி கொண்டது என்று சொல்லுகின்ற ஒரு கதை அது. பிறந்து சில ஆண்டுகளில் இறைவன் பக்கம் திரும்பி, இறைவனால் இழுக்கப்பட்டு, இறைவனால் இழுக்கப்பட்ட பிறகும் பல்வேறு சோதனைக்கு ஆளாகி, இறைவனை நிந்திக்கக்கூடிய அளவிற்கு

வெறுத்துப்போய், ஆனால் மறுபடியும் மனம் தேறி இறைவனைப் பற்றி இடையறாது அற்புதமாய் பாடிக்கொண்டிருக்கிறார்.''

மீளா அடிமை உமக்கே ஆளாய்
பிறரை வேண்டாதே
மூளாத்தீப்போல் உள்ளே கனன்று
முகத்தால் மிக வாடி
ஆளாய் இருக்கும் அடியார் தங்கள்
அல்லல் சொன்னக்கால்
வாளாங்கிருப்பீர் திருவாரூரீர்
வாழ்ந்தே போம் நீரே..

''மூளாத் தீப்போல் உள்ளே கனன்று முகத்தால் மிக வாடி என்கிறார். எது குறித்த வாட்டம் அது.''

சக்ரவர்த்தி தனக்குத்தானே பேசுவதுபோல் கேட்டார்.

''இறைவனை அடைய வேண்டுமென்ற ஆவல்.'' உடனடியாக பஞ்சவன்மாதேவி பதில் சொன்னாள்.

''அப்படியா... அவ்வளவு ஆவல் அவரிடம் இருந்திருக்கிறதா. வேறு எது குறித்த ஆவலும் இல்லையா.''

''இல்லை. இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. கடவுளுடைய அண்மைக்குத்தான் அவருடைய பாடல்கள் பலதும் ஏங்கிருக்கின்றன.''

''ஆனால், அந்த அண்மை கிடைத்து விட்டதல்லவா. ஐராவதம் வந்து அவரை ஏற்றிப் போனதல்லவா.'' சக்ரவர்த்தி வினவினார்.

''ஆமாம். அவரை ஏற்றிப் போனது மட்டுமல்ல. அவருக்குத் துணையாக இருந்த ஒரு அரசனும் அவரோடு போக முடிந்தது.''

''அப்படி அரசன் போனதற்கு யார் காரணம். சுந்தரமூர்த்தி நாயனாரா.''

''ஆமாம். அவருடைய கிருபைதான். அவருடைய அன்புதான். அவரை அவன் நேசித்ததினுடைய விளைவுதான் அவரையும் தாண்டிப் போய் விட்டான். குருவை நேசித்தவர் குருவுக்குப் பின்னால்தான் போகவேண்டுமென்று இல்லை. குருவைத் தாண்டியும் போய்விடலாம். குரு அப்பேர்ப்பட்ட கருணை மனதை உடையவர். சுந்தரனாரை நேசித்த சேரமான் பெருமான் நாயனார் தானும் கயிலாயம் போக ஆசைப்பட்டு தன்னுடைய குதிரை ஏறி, அதன் காதில் நமசிவாயம் என்று சொல்ல, அந்தக் குதிரை பறந்து ஐராவதத்தைத் தாண்டி கடந்து போய் கயிலாயத்தின் வாயிலை அடைந்திருக்கிறது. குருவின் மகிமையல்லாது வேறு என்ன. அந்த குருவுக்குத்தான் தனக்குப் பின் வந்த சீடன் தன்னை முந்திக் கொண்டு போவதில் சந்தோஷம் காண முடியும். தந்தைக்கு மகனிடத்தில் இருப்பதைவிட, ஒரு கணவனுக்கு மனைவியிடம் இருப்பதைவிட, ஒரு தாய்க்கு தன் பிள்ளையிடம் இப்பதைவிட அதிகமான அன்பும், பாசமும் ஒரு குருவுக்குத் தன் சீடனிடத்தில் இருக்கும். சுந்தரருடைய இந்தக் கயிலாயக் காட்சி இதைத்தான் எனக்குச் சொல்லியது.''



பஞ்சவன்மாதேவி சொல்லச் சொல்ல பிரமை பிடித்தவர்போல வெட்டவெளியைப் பார்த்துக் கொண்டு பால்குளத்தம்மன் குளக்கரையில் சக்ரவர்த்திப்பெருமான் வீற்றிருந்தார்.

''என்ன பேச்சையே காணோம். என்ன ஆயிற்று.'' பஞ்சவன் மாதேவி கேட்டாள்.

''நீ சொல்வது புரிகிறது. நன்றாகப் புரிகிறது. எனக்கு அப்படியொரு குரு ஏன் கிடைக்கவில்லை. நான் என்ன பாவம் செய்தேன். என்னை வழி நடத்திப் போகக்கூடிய குரு ஏன் வரவில்லை. என்னை ஏன் கயிலாயத்திற்கு அழைத்துப் போகிறேன் என்று வாக்கு தரவேயில்லை. நான் குருவைத்தேடிப் போகவில்லையா? அல்லது குரு என்னை தேடிவரும் அளவுக்கு எந்தவித யோக்கியதையும் எனக்கு இல்லையா.''

''அப்படியெல்லாம் சொல்லாதீர்கள். இறைவன் உங்கள் மீது மிகுந்த பிரேமை கொண்டுள்ளான். வெகுநிச்சயம் குருவை அனுப்புவான்.''

பழையாறை நகரிலிருந்து யாரோ முக்கியமானவர் வருகிறார் என்பதற்கான எக்காளமும், முரசு சத்தமும் கேட்டது.

உடையாளூர் அம்மன் கோயில் குளத்தில் அமர்ந்திருந்த சக்ரவர்த்தியும், பஞ்சவன் மாதேவியும் யார் என்று திரும்பிப் பார்த்தார்கள். குதிரையில் வந்த வீரன் ஒருவன் கீழிறங்கி வணக்கம் தெரிவித்தான்.

''கருவூர்த்தேவர் உங்களைக் காண வந்து கொண்டிருக்கிறார். தேர் அனுப்பினோம். புறக்கணித்து விட்டார். பல்லக்குக் கொண்டு வரச் செய்தோம். வேண்டாமென்று மறுத்துவிட்டார். வேகமாக உங்களை நோக்கி நடந்து வந்து கொண்டிருக்கிறார்.'' என்று சொல்ல, பஞ்சவன் மாதேவி பொக்கை வாய் திறந்து சிரித்தாள்.

குரு வந்துவிட்டார். அவரிடம் கேளுங்கள். உங்கள் விருப்பம் எல்லாம் கேளுங்கள். இஷ்டி என்று ஏதோ செய்துவிட்டு வந்திருக்கிறீர்களே. உங்கள் இஷ்டம் என்ன என்பதை ஒரு குருவிடம் கேளுங்கள். மந்திரங்களால் கடவுளை அடைய முடியாது. நல்ல குருவினால்தான் கடவுளை அடையும் வழியைக் காட்ட முடியும். எனவே கொஞ்சமும் மனம் கோணாமல், வெட்கப்படாமல் அவரின் பாதம் பணிந்து கேளுங்கள் என்று சொல்ல, சக்ரவர்த்திப் பெருமான் அவசரமாக எழுந்தார். வேகமாக உடையாளூர் எல்லை நோக்கிப் போனார். அங்கே எல்லையில் கருவூர்த்தேவரும், சக்ரவர்த்திப் பெருமானும் சந்தித்துக் கொண்டார்கள்.

சக்ரவர்த்தி நீண்ட நெடுஞ்சாண் கிடையாய் கருவூர்த்தேவர் காலில் விழ, ''என்ன, என்ன ஆயிற்று உனக்கு. எதற்கு மண்ணில் புரள்கிறாய்.'' என்று சக்ரவர்த்தியை எழுப்பி உடம்பெல்லாம் துடைத்து, தோளில் கை போட்டு அணைத்துக் கொண்டு அம்மன் கோயில் குளத்துக்கு அருகே வந்தார். அருகே உட்கார்ந்து கொண்டார்.

''இஷ்டி செய்தாயாமே, மிக விமரிசையாகச் செய்தாயாமே.'' கருவூர்த்தேவர் கேட்க, சக்ரவர்த்திக்கு அந்தக் கேள்வியில் கேலி இருந்தது தெரிந்தது.

பஞ்சவன்மாதேவி வாய்விட்டுச் சிரித்தாள்.

''உனக்கு தலைமுடி போயிற்று. பல் போயிற்று. ஆனால் பஞ்சவன்மாதேவி உனக்குக் குரல் போக வில்லை. புத்திக் கூர்மையும் போகவில்லை. நான் சொல்வது என்ன என்று புரிந்து கொண்டு சிரிக்கிறாய் அல்லவா.'' என்று கேட்க, ஆமாம் என்று பஞ்சவன் மாதேவி பதில் சொன்னாள்.

''என்ன உன்னுடைய இஷ்டம் சொல். இராஜராஜா..'' என்று கருவூர்த்தேவர் கேட்க, குளத்தைப் பார்த்தபடி இராஜராஜர் அமைதியாக உட்கார்ந்திருந்தார்.

''ஒரு வார்த்தையில் சொல். ஒரு வாக்கியத்தில் சொல். எது உன்னுடைய விருப்பம். உன் விருப்பம் என்ன. என்ன எதிர்பார்க்கிறாய். யாரிடம் எதிர்பார்க்கிறாய்.'' என்று உரத்த குரலில் கேட்க, சக்ரவர்த்தி அந்தக் கேள்வியை மனதில் கேட்டுக் கொண்டார். திரும்பி தன் குருவைப் பார்த்தார். கைகூப்பினார்.

''சேரமான் பெருமான் நாயனார் சுந்தரமூர்த்தி சுவாமிகளைப் பணிந்து அவருக்கு முன்பே உடம்போடு கயிலாயம் போய் விட்டார். என்னால் அது முடியாதா. நான் சேரமான் பெருமான் நாயன்மாராக மாற முடியாதா. எனக்கு ஒரு சுந்தரமூர்த்தி ஸ்வாமிகள் கிடைக்க மாட்டாரா. இது எப்பொழுதோ நடந்திருக்கிறதென்றால், இப்போது ஏன் நடக்கவில்லை. என்னால் ஏன், சேரமான் பெருமான் நாயன்மாராக மாறமுடியவில்லை. எனக்கு ஏன் ஒரு சுந்தரமூர்த்தி நாயன்மார் கிடைக்கவில்லை.'' என்று வருத்தம் கலந்த குரலில் கேட்க, கருவூர்த்தேவர் வாய்விட்டுச் சிரித்தார்.



''அதாவது, என்னை எதற்கும் லாயக்கில்லாத வெறும் பிச்சைக்காரன் என்று சொல்கிறாய்.''

''நான் உங்களைச் சொல்லவில்லையே.''

''நீ என்னை எங்கு சொன்னாய். நீ என்னை குருவாகவே கொள்ளவில்லையே.'' என்று சொல்ல, சக்கரவர்த்தி எழுந்து நின்று இடுப்பு மேல் துணியை இறுக்கிக் கொண்டார். மறுபடியும் கருவூர்த்தேவர் காலில் விழுந்து எழுந்தார்.

''நீங்கள் என் குரு. சொல்லுங்கள். என் கேள்விக்குப் பதில் சொல்லுங்கள்.''

''இராஜராஜா என்னை நீ குரு என்று ஏற்றுக் கொண்டாய் எனத் தெரியும். நீ குரு என்று என்னை ஏற்றுக் கொண்டாயோ இல்லையோ இராஜராஜா, உன்னுடைய செயற்கரிய செயல்களைப் பார்த்துவிட்டு, உன் கம்பீரம் பார்த்துவிட்டு, உன் அமைதி பார்த்துவிட்டு, உன்னை நான் சீடனாக ஏற்கனவே வரித்துக் கொண்டேன். உனக்கு எப்பொழுது என்ன எதைச் சொல்ல வேண்டுமோ, அதை இடையறாது செய்தும் வந்திருக்கிறேன்.

இராஜராஜா உன்னுடைய இப்போதைய ஆசை. அற்புதமானது. எந்த மனிதருக்கும் எளிதில் வராதது. இன்னும் சுகத்தில் பலபேர் ஈடுபட்டுக் கொண்டிருக்க, இந்த வயதுக்குப் பிறகு அமைதியாய் உடம்பில் சுருக்கம் விழுந்த உன்னுடைய அனுக்கியோடு உட்கார்ந்து பேசிக் கொண்டிருக்கிறாய் என்றால், நீ எவ்வளவு பெரிய காதலுள்ளவன் என்பதை என்னால் புரிந்து கொள்ள முடிகிறது. இந்தப் பெண்ணை நீ உடம்பாக, உருவமாகப் பார்க்காமல் உள்ளமாகப் பார்க்கிறாய் அல்லவா. இது உன் கனிந்த தன்மையைக் காட்டுகிறது.

தளிச்சேரி பெண்டாக இருந்து ஆட்டமாடிய பெண்ணை, அவள் மனது கண்டு மயங்கி, பிறகு அனுக்கியாக ஏற்று அவளை அரண்மனைக்குக் கொண்டு வந்து மனைவிக்கும் மேலாக மதித்து, அவள் உருக்குலைந்தபோதும் உதாசீனப் படுத்தாது உள்ளங்

கையில் வைத்துத் தாங்கிக் கொண்டிருக்கிறாய். இது நீயொரு நல்ல மனிதன் என்பதைக் காட்டுகிறது. கடவுள் நல்ல மனிதர்களை ஒரு பொழுதும் கைவிட்டதில்லை. புறக்கணித்ததில்லை. மறந்ததில்லை.

இராஜராஜா... உன்னுடைய இஷ்டம் நிச்சயம் நிறைவேறும். ஆனால், உன் இஷ்டம் என்ன என்பதை நீ இன்னும் சற்று தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டும்.

உடலோடு கயிலாயம் போவது என்பது இயலாத காரியம். யாரும் அப்படிப் போனதும் இல்லை. உடலோடு சிரஞ்சீவியாக இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஹனுமன்போல, ஆனால், நீ கேட்பது அதுவல்லவே. உடலோடு கடவுள் இருக்கும் இடத்திற்குப் போகவேண்டும். உடல் இந்தப் பூமிக்குச் சொந்தம். அதை விட்டுவிட்டுத் தான் போகவேண்டும். ஆனால், உயிரோடு போகலாம். நான் சொல்வது உனக்குப் புரிகிறதா. உயிர் என்பது ஒரு கைப்பிடி அளவு காற்றுச்சக்தி. அந்தச்சக்தி இறந்த பிறகு இந்த வெளியில் இருக்கின்ற சக்தியோடு அலைந்து கலந்துவிடும். பிறகு வேறு எங்கேனும் உருக் கொண்டு ஒரு திரள்கொண்டு கருதேடி மறுபடியும் பிறக்கும்.

இதில் கொலை செய்யப்பட்டவர்களும், வஞ்சிக்கப்பட்ட வர்களும், தற்கொலை செய்து கொண்டவர்களும் இந்த உருச்சக்தி யில் கோர உருவம் எடுத்து வேறு கருப்பைத் தேட முடியாமல் இந்தப் புவியிலேயே இன்னும் சிறிது காலம் தாங்கள் செய்த தவறுக்கு நொந்து வருந்தி சிலகாலத்திற்குப் பிறகு மறுபிறவி எடுப்பார்கள். இவைகளுக்குப் பேய்கள் என்று பெயர்.

இராஜராஜா இது அல்லாது மனம் முழுவதும் பக்தியால் நிரம்பிய ஒரு மனிதன் மரணமடைகிற பொழுதும் மனம் பக்தியில் தோய்ந்திருப்பதால் அவன் சுந்தரரூபம் பெறுகிறான். அதாவது அவனுடைய உருவத்தினுடைய தன்மையை அந்த உயிர் எடுக் கிறது. அந்த உயிர் வெறும் காற்றாகக் கலையாமல் அகோரவடிவம் எடுக்காமல் ஒரு சுந்தரவடிவை எடுத்துக் கொண்டு இறைவனை நோக்கிப் பயணப்படுகிறது.

குறிப்பிட்ட தூரம்வரை பயணப்பட்டு பிறகு எல்லா உயிர் களும் தாண்ட வேண்டிய அந்த வைதரணி நதியைத் தாண்டிக் கொண்டு, சிவகணங்களோ அல்லது விஷ்ணுவின் தூதர்களோ வழி காட்ட இறைவனுடைய பாதகமலத்திற்கு வந்து அங்கு அமர்ந்து தொடர்ந்து இறைவனை வேறு ஒரு உருவில் பூஜிக்கத் துவங்கு கிறது.



உணவு உண்ணாமல், உறக்கமில்லாமல், உடை உடுத்தாமல் ஓய்வு எடுக்காமல் இடையறாது இடையறாது இறைபணி அந்த சுந்தரரூபத்திலும் நடைபெறுகிறது. இதைத்தான் சுந்தரமூர்த்தி நாயனாரும், சேரமான் பெருமான் நாயனாரும் செய்தார்கள்.

பூமியிலே உடலோடு வாழ்ந்த அவர்கள், சுந்தர உருவம் எடுத்ததை நீ உடம்போடு போவது என்றும் நினைத்துக் கொண்டு விட்டாய், உன்னை மேலும் மேலும் சிவநெறியில் செலுத்து. இடையறாது உன் உயிர் ரூபத்திலேயே மனதை லயிக்க வை. உன் ஆன்மாவிலேயே உன்னுடைய நினைவு இருக்கட்டும்.

பூமியிலுள்ள விஷயங்களை உள் மனம் பற்றிக் கொண்டு உயிரின் ஓசையை, அசைவைப் புறக்கணிக்கும். ஆனால், பூமியில் உள்ளவற்றை மெல்ல மெல்ல அறுக்க உயிரின் ஓசை. அசைவு உனக்குப் புலப்படும். இதுதான் ஆன்மாவில் நிற்றல். ஆன்மாவில் நிற்கிறபோது மரணம் வர, அதாவது உடம்பிலிருந்து இந்த உயிர் பிரிய அல்லது உடம்பு என்னால் இனி முடியாது என்று உயிரைத் துரத்த உயிர் நகரும்போது முழு உணர்வோடு நகரும். அதாவது உன் மனம் அந்த உயிரின் பின்னே தொடரும். சுந்தரரூபமாக்கும். தொடர்ந்து பக்தி பண்ணவேண்டுமென்ற எண்ணம் பலமாக இருப்பதால் இந்த சுந்தரரூபம், நான் சொன்னபடி உணவு, உறக்கம், இல்லாமல் பக்தி செய்யப்புறப்பட்டு விடும். பிறகு இறைவன் விருப்பம்.

இராஜராஜா வெகு நிச்சயம் உனக்கு இது சித்திக்கும். எப்போதும் இறைவன் மீதே இரு.

கருவூர்த்தேவர் பேசிவிட்டுப் புறப்பட்டார்.

மழை பொழிந்தது. வெயில் அடித்தது இலைகள் உதிர்ந்தன. பனி படர்ந்தது. நெல்கள் விதைக்கப்பட்டன. முளைத்து எழுந்தன அறுவடையாயின. தானியங்கள் பிரிக்கப்பட்டன. அவிக்கப் பட்டன. மறுபடியும் விதைகள் விதைக்கப் பட்டன. வளர்க்கப் பட்டன. அறுக்கப்பட்டன.

பழையாறையை அடுத்த உடையாளூர் என்ற இடத்தில் மிகப் பெரிய அரண்மனையில் சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜராஜத் தேவர் பஞ்சவன்மாதேவியோடும், மற்ற மனைவியரோடும் பேசிச் சிரித்தபடி காலம் கடத்தினார்.

தஞ்சையில் கோயில் நிர்வாகம் மிகச்சரியாக நடைபெறுகிற தென்று அவ்வப்போது கேட்டு சந்தோஷப்பட்டார். அங்கும் கோயில்பணி நடக்கிறது. வேறொரு இடத்தில் கோயில் பணி

நடக்கிறது என்று பல்வேறு இடத்தில் கோயில் பணி நடப்பதைப் பார்த்து மனம் மகிழ்ந்தார். அதற்காக வந்து பொருள் கேட்பவர்களிடம் விசாரித்து விவரங்கள் தெரிந்துகொண்டு, வேண்டிய பொருள் கொடுத்தனுப்பினார்.

இராஜேந்திரசோழனுடைய கோயில் வெகு வேகமாக வளர்ந்து கொண்டிருக்கிறதென்றும், சண்டேஸ்வர நாயனாருக்கு முடி சூட்டும் இறைவன் சிற்பம் மிக அற்புதமாக வந்திருக்கிறது என்றும், மிகப்பெரிய சந்திரகாந்தக்கல் தளமாக அமைக்கப் பட்டு விட்டதென்றும், கருவறை குளுமையாக இருக்கிறதென்றும், லிங்கம் முழு லிங்கமாக எந்தவித பிளவுமில்லாமல் ஒரே கல்லால் செய்யப் பட்டது என்றும் செய்திகள் வந்தன. தன்னைவிட மிக ஆற்றலோடு இராஜேந்திரசோழர் ஆட்சி செய்து கொண்டிருப்பதைக் கண்டு சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவர் சந்தோஷமானார்.

இராஜேந்திரசோழருடைய மகன் இராஜாராஜனைக் கொண்டு வந்து அவன் மனைவி மடியில் கிடத்தினாள். பஞ்சவன்மாதேவி மனம் நெகிழ்ந்தாள். குழந்தைக்கு நகைகள் போட்டு ஆனந்தப் பட்டாள். அவனை தோளில் வைத்துக் கொண்டு சக்ரவர்த்தி உடையார் ஆனந்தக் கூத்தாடினார். இறுக்கித் தழுவி முத்தமிட்டார். பிறகு அவன் தாயிடம் கொடுத்துவிட்டு மறுபடியும் தனியே வயல்வெளியில் உலாவப் போனார்.

போதும் என் சிவனே. இத்தோடு போதும் என் இறைவன் என் வம்சத்தின் அடுத்த தலைமுறையையும், அதற்கு அடுத்த தலைமுறையையும் நான் பார்த்துவிட்டேன். இத்தனை போர்களில் ஈடுபட்டும் வெட்டுப்படாது, செத்துப்போகாது என் வம்சத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறேன். இது போதும் என்னால் இந்த பூமியில் என்னவெல்லாம் செய்ய முடியுமோ அத்தனையும் செய்துவிட்டேன்.

இறையே உனைப் பார்க்க வேண்டும். உன்னோடு இருக்க வேண்டுமென்ற தனியாத ஆசை மட்டும் என்னிடம் இருக்கிறது. போதும் நான் வருகிறேன். என் உடம்பு இதற்குமேல் தாங்க மறுக்கிறது. இதற்கு மேல் இந்த கூட்டிற்குள் இருக்க மறுக்கிறது. இந்தக் கூடு சிரமமாக இருக்கிறது. மூச்சு திணறுகிறது. நெஞ்சு அடைக்கிறது. இந்த இடம் எனக்குப் பிடிக்கவில்லை. நான் விலக விரும்புகிறேன். பரந்துபட்ட இடத்தில் சுந்தர ரூபமாய் உனக்கருகே இருக்க விரும்புகின்றேன் என்று உள்ளுக்குள்ளே அரற்றினார்.



கண்ணில் நீர்வழிய வானத்தைப் பார்த்தபடி இருந்தார். மெல்ல தளர்வாக நடந்து அரண்மனைக்கு வந்தார். அரண்மனையில் ஒரு வசந்த மண்டபம் நான்கு தூண்களோடு நிறுத்தப்பட்டிருந்தது. சுற்றிலும் குட்டையாய் பூச்செடிகள் வளர்க்கப்பட்டிருந்தது. அதற்கு நடுவே போய் அமர்ந்து கொண்டார். எந்தவித யோசனையும் இல்லாமல் வெறுமே பார்த்துக் கிடந்தார்.

பேரன் வந்து போனதைப் பற்றிய பேச்சுக்கள் உள்ளே கேட்டுக் கொண்டிருந்தன. தந்திசக்தி விடங்கி உரத்த குரலில் குழந்தையைப் போலவே பேசுவது காதில் விழுந்தது. எழுந்து குளம் தாண்டி வயலோரம் போய் உடம்பைச் சுத்தம் செய்தார். பிறகு வந்து குளக்கரையில் கால் கழுவினார். மறுபடியும் நடந்து மண்டபத்தில் அமர்ந்தார். கால்விரித்துப் படுத்துக் கொண்டார். தலைக்கு ஏதேனும் கொண்டு வரட்டுமா என்று தாதிகள் ஓடிவந்தார்கள்.

எதுவும் வேண்டாம் என்றார். மனைக்கட்டையை வைத்தார்கள். வேண்டுமென்றால் எடுத்துக் கொள்ளுங்கள் என்பது போல் நின்றார்கள். ஆனால், சக்ரவர்த்தி அசையாது கிடக்க சற்று நேரம் கவனித்து விட்டுப் போனார்கள்.

பஞ்சவன்மாதேவி உறங்கிவிட்டது தெரிந்தது. விளக்குகள் அணைக்கப்பட்டது உணரமுடிந்தது. வானம் நீலநிறமாக இருந்தது. நட்சத்திரங்கள் கண் சிமிட்டின. வெள்ளை நிலவு தொலைவில் தோன்றியது. மெல்ல மேலெழுந்தது. உள்ளே ஒரு குளுமை அதிகமாயிற்று. வயிறு குழைந்தது. நெஞ்சை கீழே இழுத்தது. நெஞ்சு கீழே இழுக்க, தலையில் வேகமாக ரத்தம் பாய்ந்தது. அவர் எழுந்து உட்கார்ந்தார்.

ஏதோ ஒரு வேதனை நடக்கிறதே உள்ளே, என்ன அது என்று வேடிக்கை பார்த்தார். தூக்கம் போலும் கண்கள் இழுத்தன. காதுக்குள் ஓயாத ஒலி ஒன்று கேட்டுக் கொண்டிருந்தது. காது அடைத்தது. காது அடைக்கும் நேரத்தில் நெஞ்சு இழுத்தது. நெஞ்சு இழுக்கும் நேரத்தில் வயிறு குழைந்தது. வயிறு குழையும் நேரத்தில் உள்ளுக்குள் இருந்த ஏதோவொரு வாயு வெளியேறிற்று.

ஹா... உயிர்போவது போல வயிற்றுக்குள்ளிருந்து வாயு கிளம்புகிறது என்று நினைத்தார். மறுபடியும் தூணில் சாய்ந்து கொண்டு வெட்டவெளியைப் பார்த்தார்.

ஊர் அமைதியாக இருந்தது. குதிரைகள் கனைக்கும் சத்தம் கேட்டது. தொலைதூரத்தில் மாடுகள் புற்கள் தேடி நடந்து கொண்

டிருப்பது தெரிந்தது. கூட்டிற்குள்ளே உள்ள கோழி எதற்கோ அச்சப்பட்டு சடசடத்தது.

சக்ரவர்த்தி மெல்ல எழுந்தார். உலாவினார். தொலைவிலிருந்து அரண்மனையைப் பார்த்தார்.

இது யாருடைய ஊர். எவருடைய இடம். என்னுடைய இடமா. நான் வாழ்ந்து வளர்ந்த இடமா. உடையாளூர் என் தேசமா. என் கிராமமா என் அரண்மனையா இதுவா என் இடம். இதுவா என் வீடு. இதுவா என் தேசம். இதுவா என் இருப்பிடம். இல்லையே, இதுவொரு மயக்கமல்லவா என்று யோசித்தார். வாய்விட்டுச் சிரித்தார். மறுபடியும் வந்து உட்கார்ந்து கொண்டார்.

தொலைதூரம் பார்த்தார். மீண்டும் நெஞ்சு கனத்தது. தலை இழுத்தது. வயிறு குழைந்தது. மீண்டும் அடிவயிற்றிலிருந்து வாயு பிரிந்தது. கண்கள் இருண்டன. உடம்பு சொடுக்கிப் போட்டது. குளிரத் துவங்கியது. சால்வையை மிகச் சிரமப்பட்டு இழுத்துப் போர்த்திக் கொண்டார். தலையை நேரே வைத்துக் கொள்ள முடியவில்லை. தூணில் சாய்த்துக் கொண்டார். முதுகு கனமாக உடம்பு மொத்தமும் தூணில் சாய்ந்தது.

சேவல் பெருங்குரலெடுத்துக் கூவியது. இன்னும் சற்றுப் பொறுத்து கரிச்சான்கள் முன்னும் பின்னும் அலைந்தன. மேலே பறந்த தும்பிகளை அலைந்த வாக்கிலேயே கரிச்சான்கள் கொத்தித் தின்றன. இன்னும் மெல்ல கிழக்கே வெளிச்சம்பட்ர காக்கைகளின் குரல்கள் கேட்டது.

இவர் உள்ளே தன்னை ஆழ்ந்து கவனித்தார். எல்லாச் சத்தமும் கேட்டுக் கொண்டிருப்பது எது. உடம்பா, மனதா, புத்தியா வேறு ஏதாவது ஒன்று பார்க்க சட்டென்று ஒரு வெளிச்சம் உள்ளிருந்து பீறிட்டு கண்களைத் தாக்கியது. காதுகளில் நிறைந்தது. உடம்பு முழுவதும் பரவியது.

என்ன அது. என்ன அது என்று பார்க்கும்போது, அதுவே தான் என்று அவருக்குத் தெரிந்தது. அவர் அமைதியானார். இதுதானா. இந்த வெளிச்சம்தான் நானா. இந்த ஒளிதான் நானா. இதுதான் என் பிறப்பா. இதுதான் என் இருப்பா. இதற்கு இடமில்லையல்லவா. இது வேறெங்கே இருப்பதல்லவா. இது ஒளி ரூபமல்லவா. அந்த ஒளிரூபம் இறைவனை நோக்கி நகரவேண்டும். இதுவே இத்துணை ஒளி என்றால், இறை எத்தனை பெரிய ஒளி. இதுவே சுந்தரம் என்றால், இறைவன் எவ்வளவு பெரிய சுந்தரன். இதுவே உன்னதம் என்றால், இறைவன் எவ்வளவு பெரிய உன்னதன். இதுவே அமைதி



என்றால், இறைவன் எவ்வளவு பெரிய அமைதி. இதுவே ஆனந்தம் என்றால், இறைவன் எவ்வளவு பெரிய ஆனந்தம்.

அவர் திணறினார். அந்த ஆனந்தம். அந்த அமைதி. அந்த அன்பு அதை நோக்கிப் போக வேண்டுமே என்று பரபரத்தார்.

அவருடைய உடம்பிலிருந்து அந்த வெளிச்சம் அவரைப் போலவே உருவெடுத்து கிளம்பி, திரும்பி அவரைப் பார்த்தது.

இராஜராஜா போய் வருகிறேன் என்று இராஜராஜனை நோக்கி இராஜராஜன் கைகூப்பினார்.

உத்தமனே போய் வருகிறேன் என்று நிதானமாகச் சொன்னார். இராஜராஜனுக்கு எழ வேண்டுமென்ற ஆசை இருந்தது. அந்த உடம்பு எழ முயற்சித்தது. சட்டென்று தூணில் முதுகு சாய்ந்தது. தலை லேசாக அடிபட்டது. ஆனால் எழுந்திருக்க முடியவில்லை. உடம்பில் சக்தியே இல்லை. உடம்பு வெறும் துணிபோல் இருந்தது. எந்தவித இயக்கமும் செய்ய முடியாமல் இருந்தது.

உடம்பில் மனம் இல்லை. மனம் வெளியே வந்துவிட்டது. உடம்பில் புத்தி இருந்தது. ஆனால், புத்தி மங்கிக் கொண்டிருந்தது. உடம்பில் வலு இருந்தது. ஆனால், கரைந்து கொண்டிருந்தது. உடம்பில் சூடு இருந்தது. ஆனால், அமைதியாகிக் கொண்டிருந்தது. உடம்பில் ரத்த ஓட்டம் மெல்ல மெல்ல அடங்கிக் கொண்டிருந்தது. அங்கங்கே தேங்கி நின்றது. அதனால் உடம்புக்கு வலி இருந்தது. வெளியே இருந்த ஒளி ரூபத்திற்குள் மனம் ஒட்டிக் கொண்டிருக்க, அந்த மனத்தால் அந்த ஒளி ரூபம் மேலும் அழகாயிற்று. இன்னும் சுந்தரமான இராஜராஜனாயிற்று. இராஜராஜா போய் வா என்று உடம்பு மெல்ல, அரைக்கண் திறந்து அந்த ஒளி ரூபத்தைப் பார்த்தது விடை கொடுத்தது. கண்கள் மூடிக்கொண்டன. மெல்ல இராஜராஜரின் உடம்பு இடப்பாகம் சரிந்தது.

அந்த ஒளிரூபம் அவரையே சற்று நேரம் பார்த்துவிட்டு மெல்ல இறங்கி அரண்மனைக்குள்ளே போய் பஞ்சவன்மாதேவியைப் பார்த்தது, பஞ்சவன்மாதேவி அதை உணர, அவள் திடுக்கிட்டு எழுந்தாள். அது அமைதியாக அவளைப் பார்த்தது.

அவள் யாரது என்றாள்.

ஒளிரூபம் மெல்ல அவளைக் கடந்து, அவள் காண, கூரையின் வழியே மேலே பறந்தது.

சோழ தேசத்து சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீஇராஜராஜத்தேவர் இறைவனடி சேர்ந்தார். சிவபாதசேகரர் இறைவனடி சேர்ந்தார்.

சோழதேசம் வாய்விட்டுக் கதறியது. நெஞ்சில் அடித்துக் கொண்டு தரையில் புரண்டது. தலையில் அடித்துக் கொண்டு கதறிற்று. தெய்வமே.. தெய்வமே.. என்று பிளிறிற்று. சோழ தேசத்தின் எல்லா ஊர்களிலிருந்தும் ஆண்களும், பெண்களும், குழந்தைகளும், கிழவர்களும் உடையாளூர் நோக்கி வந்தார்கள். ஒருவரையொருவர் பார்த்து துக்கம் விசாரித்துக் கொண்டார்கள்.

இந்தத் தோளை... இந்தத் தோளைப் பிடிச்சுகிட்டு சக்ரவர்த்தி ஐயா எவ்வளவு தூரம் நடந்து வந்தாக தெரியுமா... என்று விதம் விதமாய் விதம் விதமாய் தங்கள் அனுபவங்களைப் பரிமாறிக் கொண்டார்கள். அனுபவம் இல்லாதவர்கள்கூட அவரோடு வாழ்ந்த அனுபவத்தைப் பெற்றார்கள். நெகிழ்ந்து போய் நின்றார்கள். கண்ணில் ஜலம் வழிய ஏதேதோ சொல்லிப் பிதற்றினார்கள்.

சக்ரவர்த்தி இராஜேந்திரர் தன்னுடைய குதிரையில் ஏறி பழையாறையிலிருந்து சாரை சாரையாய் உடையாளூர் நோக்கிப் போய்க் கொண்டிருந்த ஜனங்களைக் கடந்த போது அவர்கள் கதற, கேட்டுவிட்டு கல்லென குதிரைகளில் அமர்ந்திருந்தார். கால் களைப் பிடித்துக் கொண்டும், கைகளைத் தொட்டும் குழந்தைகள் போல ஜனங்கள் அழுவதைப் பார்த்து கண் கலங்கினார். முகம் சிவந்திருந்தது. உதடு இறுகியிருந்தது.

யார் அழுதாலும் நான் அழமாட்டேன் என்பது போல ஒரு இறுமாப்பு இருந்தது. ஒரு பிடிவாதம் இருந்தது. அதேசமயம் விரட்டாது, மிக நிதானமாக அழுகின்ற ஜனங்களைப் பார்த்துக் கொண்டு தலையசைத்துக் கொண்டு மெல்ல உடையாளூர் நோக்கி முன்னேறினார்.

அந்த நான்கு கால் வசந்த மண்டபத்தில் சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவரின் திருமேனி கிடத்தப்பட்டிருந்தது. சற்றுத் தொலைவிலேயே குதிரையை விட்டுக் கீழிறங்கி இடுப்பு வாளை அவிழ்த்துக் கொடுத்துவிட்டு முடிந்து கொண்டிருந்த சிகையை உதறி அவிழ்த்துவிட்டு மேலே போர்த்திக் கொண்டிருந்த சால்வையை உருவி இடுப்பில் இறுக்கிக் கொண்டு பாதரட்சையைக் கழற்றி ஓரம் வைத்துவிட்டு, கூப்பிய கைகளோடும், வெறும் கால்களோடும் சக்ரவர்த்தி ஸ்ரீ இராஜேந்திரத்தேவர் நிதானமாக நடந்து வந்தார்.



தோட்டக்கதவு தாண்டினார். தென்னவன் மூவேந்த வேளார் கைவிரித்து அவரை நோக்கி வர, அவரை இழுத்து அணைத்துக் கொண்டு முதுகு தடவினார்.

பிரம்மராயர் கைகூப்பி விம்மி விம்மி உடல் குலுங்க அழ, அவரின் தோளைத் தடவிவிட்டு நகர்ந்தார். பழுவேட்டரையர் பெருங்குரலெடுத்து அழ, அவரை அணைத்துக் கொண்டு சமாதானப் படுத்தினார்.

ஈராயிரம் பல்லவரையர் கைகூப்பி ஏதோ பிதற்றிப் பிதற்றிப் பேச அவர் முகத்தைத் தடவி மௌனமாக்கினார். வந்தியத் தேவரும், இராஜேந்திரரும் உற்று ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள். வந்தியத் தேவர் உதடு பிதுக்கிப் போய் விட்டது என்பது போலச் சொல்ல, ஆமாம் என்று சொன்னார். அடுத்து பெண்டுகள் அதிகமிருந்தார்கள். அந்தக்கூட்டம் தாண்ட குந்தவை யாரைத் திரும்பப் பார்த்தார். மெல்ல குந்தவையை நோக்கி கைகூப்பி வணங்கி அத்தையின் கால்களைத் தொட்டு நெற்றியில் இட்டுக் கொண்டார். அத்தையிடம், மௌனமாக நின்றார். பிறகு சற்று நகர்ந்து, கைவிரித்து அழுது கொண்டிருக்கும் இலாடமா தேவிக்கும், வானவன்மாதேவிக்கும் அருகில் போய் நின்றார்.

அம்மா வாய்விட்டுக் கதற, தாயை இறுக்க அணைத்துக் கொண்டார். தலையைத் தடவினார். உச்சி முகர்ந்தார்.

"போய் விட்டதடா.. நம்மையெல்லாம் விட்டு விட்டுப் போய் விட்டதடா." என்று ஒருமையில் சக்ரவர்த்தியை நினைத்து அந்தரங்க நினைவுகளுடன் வானவன்மாதேவி அழ, தாயை அணைத்த வண்ணம் சிறிது நேரம் நின்றார். நகர்ந்து போய் பட்டமகிஷியின் பாதங்களைத் தொட்டார். கைகூப்பினார். பட்டமகிஷிக்குப் பேசமுடியவில்லை. நெஞ்சு அடைத்தது. மூச்சு இழுத்தது. உடனடியாக கைதட்டி வைத்தியரை வரச்சொல்லி பட்டமகிஷியின் முகத்தில் நீர் தெளிக்கச் சொல்லி, குடிக்க நீர் கொடுத்து அவருடைய கைகளைப் பிணைத்துக் கொண்டிருந்தார்.

மெல்ல நகர்ந்து சக்ரவர்த்தியின் அருகே போய் அவர் முகத்தைப் பார்த்தார்.

உள்ளுக்குள் ஏதோ குமுறிக் கொண்டு தொண்டையில் இழுத்தது. தொண்டையை இறுக்கிக் கொள்ள அந்தத் துக்கம் மறுபடியும் நெஞ்சுக்குக் கீழ் முட்டி வயிற்றுக்குள் இறங்கியது. மீண்டும் ஏதோ குமுறல் வர, அவர் நாலாபுறமும் திரும்பிப் பார்த்தார். எங்கே தன் தந்தை என்று தேடுவது போல இருந்தார்.

தந்தையின் உடலுக்கப்பால் வேறு ஏதோ இருக்க வேண்டுமே என்று தவித்தார். மெல்ல தந்தைக்கு அருகே போய் மண்டியிட்டு அவர் நெஞ்சில் முகம் வைத்துக் கொண்டார். கன்னங்களில் முத்த மிட்டார். தலையைத் தடவினார். கைகளைப் பற்றிக் கொண்டார். நகர்ந்து கால்களில் முத்தமிட்டார். மெல்ல எழுந்து தந்தையை நோக்கிக் கைகூப்பினார். ஒருமுறை வலம் வந்தார். எங்கே... எங்கே... என்று யாரையோ தேடினார்.

''யாரைத் தேடுகிறீர்கள்.''

அருண்மொழிப்பட்டன் நிதானமாக அவர் காதோரம் விசாரித்தான்.

''எங்கே பஞ்சவன்மாதேவியர்.''

''உள்ளே இருக்கிறார்.'' என்று சேடிகள் பரபரத்தார்கள்.

வசந்த மண்டபம் விட்டு அரண்மனைக்குப் படியேறி வழிநடையைக் கடந்து கூடத்தைத் தாண்டி கூடத்திற்கு அப்பால் உள்ள முற்றத்தைக் கடந்து, அடுத்த வழி நடையைக் கடந்து இரண்டாம் கட்டு கூடத்தை அடைய, அந்தக் கூடத்தின் நடுவில் அரசர் அமர்ந் திருந்த பெரிய சிம்மாசனத்தில் பஞ்சவன்மாதேவி, வழுக்கைத் தலையாய், வாய் ஒட்டி, ஒரு தளர்ந்த உடம்போடு, சுருங்கிய தோலோடு, அந்த சிம்மாசனத்தில் அமர முடியாமல் சுருண்டு கிடக்கின்ற பஞ்சவன்மாதேவியைப் பார்த்ததும் அவருக்கு உடம்பு பதறியது.

எப்பேர்ப்பட்ட அழகி, என்ன சொரூபம். எத்தனை வேகம், எவ்வளவு ஆளுமை. எல்லாம் போயிற்றே. எல்லாம் போயிற்றே என்று அருகே வந்தார். கைகூப்பினார்.

மெல்ல பஞ்சவன்மாதேவி கண் திறந்தார். எழுந்து உட்கார்ந் தார். தலை நிமிர்த்தி சக்ரவர்த்தி இராஜேந்திர சோழத்தேவரை உற்றுப் பார்த்தார்.

''ஐயனே. நீ பெரியவனானாயா. வீட்டிற்கு மூத்தவன் ஆனாயா. உனக்கு என் ஆசீர்வாதம். சௌக்கியமாய் நீடூழி காலம் இருக்க வேண்டும்.

இனி இந்த சோழதேசம் உன்னை எதிர்பார்த்துக் கொண்டிருக் கிறது. உன் சொல்படி உன்வழி நடக்கப் போகிறது. அப்பனே... இந்த வீட்டிற்கு நீ பெரியவனானாயா.'' என்று கேட்க, நான் இதற்கு ஆசைப்படவில்லை என்பதுபோல் சக்ரவர்த்தி ஸ்ரீஇரஜேந்திரதேவர் வாய்விட்டுக் கதறி அழுதார்.



''இல்லையம்மா... இல்லை. நான் வீட்டிற்கு முதல்வன் இல்லை. நான் முதல்வன் இல்லை. என்னால் பெரியவனாக முடியாது. என்னால் முதல்வனாக முடியாது. என்னால் சக்ரவர்த்தியாக முடியாது. நான் வெறும் பொம்மை. இவர் செய்த காரியத்தில் பாதி கூட என்னால் செய்ய முடியாது. இவர் காட்டிய வீரத்தில் பாதிகூட என்னால் காட்ட முடியாது. இவர் காட்டிய அமைதியில் அன்பில், கருணையில் ஒரு துளிகூட என்னால் காட்ட முடியாது. நான் அரசருக்குப் பிறந்ததால் அரசனே தவிர, அவர் உண்மையிலேயே அரசர். நான் சக்ரவர்த்திக்குப் பிறந்ததால் சக்ரவர்த்தி ஆனேனே தவிர, அவர் இந்த புவனம் முழுவதையும் வெற்றி கொண்ட சக்ரவர்த்தி. அவருக்கு முன்னால் நான் தூசு. துரும்பு'' என்று நெஞ்சில் அடித்துக் கொண்டு அழுதார்.

ஸ்ரீ இராஜேந்திரசோழர் பெரிதாய் அழுகிற சத்தம் வாசல் வரை கேட்டது. எல்லாப் பெண்களும் வாய்விட்டு அழுதார்கள்.

பெண்டுகள் அழுவதைப் பார்த்து அதிகாரிகளும், தளபதிகளும் குமுறினார்கள். தளபதிகளும், அதிகாரிகளும் அழுவது பார்த்து விட்டு வெளியில் திரண்டிருந்த மக்கள் அழுதார்கள். மக்கள் கூட்டம் தொடர்ந்து தொடர்ந்து மிகப்பெரிய அலறலாய் அலறியது.

உடையாளூரிலிருந்து பழையாறைவரை. பழையாறையிலிருந்து பட்டீஸ்வரம் வரை. பட்டீஸ்வரத்திலிருந்து திருக்குடந்தை வரை மிகப்பெரும் அளவில் அழுகைச் சத்தம் வானை உலுக்கியது.

கருணை மிகுந்த உள்ளத்தோடு இராஜராஜர் என்கிற அந்த ஒளி உடம்பு அழுகின்ற மனிதர்களைப் பார்த்துக் கொண்டிருந்தது.

குடந்தைக் காவிரியில் கால் நனைத்தபடி உட்கார்ந்திருந்த கருவூர்த்தேவர் மெல்ல குனிந்து, கைகளால் ஜலம் அள்ளி மறுபடி மறுபடி ஆற்றில் விட்டார். அந்த ஜலம் விட விட அந்த ஒளியுடம் பிற்கு குளுமை அதிகரித்தது. தாகம் தணிந்தது.

''என்ன கிளம்பி விட்டாயா.''

கருவூர்த்தேவர் ஒளியான இராஜராஜத்தேவரை நோக்கிக் கேட்டார்.

இராஜராஜர் ஆமாம் என்று தலையசைத்தார்.

''எங்கே போகப் போகிறாய் இராஜராஜா'' என்று மீண்டும் குனிந்து காவிரி ஜலம் எடுத்து உயரத்தூக்கி வார்த்தார்.

இந்த முறையும் நெஞ்சுத்தாகம் இராஜராஜருக்குத் தணிந்தது.

"கயிலாயம் போகப்போகிறேன்."

"கயிலாயமா. எங்கிருக்கிறது கயிலாயம்."

கூர்மையாக இராஜராஜர் ஒளியுடம்பைப் பார்த்தபடி கருவூர்த் தேவர் கேட்டார்.

"கைலாயம் தஞ்சையில் இருக்கிறது." தயங்காமல் பதில் வந்தது.

"ஹா. எனக்குத் தெரியும். நீ தஞ்சைக்குள்தான் போவாய் என்று எனக்குத் தெரியும். போய் வா இராஜராஜா. போய் வா. அதுதான் உன்னுடைய கயிலாயம். அதுதான் நீ இருக்க வேண்டிய இடம். அதை கைலாயம் இல்லை என்று சொல்லி, நீ வடக்கே நகர்ந்தால் நீ கட்டியதை நீயே மறுக்கிறாய் என்று அர்த்தம் ஆகிவிடும். அது கயிலாயம்தான். சகலருக்கும் அது கயிலாயம்தான். நீ அங்கேயே இரு."

அவர் ஆசீர்வதித்தார். மீண்டும் ஜலம் எடுத்து வார்த்தார். இந்த முறை ஜலம் நெஞ்சு, வயிறு இன்னும் குளிரச் செய்தது.

இராஜராஜர் வேகமாய் கண நேரத்தில் தஞ்சையை அடைந்தார். கோயிலுக்குள் நுழைந்தார். இராஜராஜர் வாயிலைக் கடந்தார். வாயிலைக் கடந்து உள்ளே நுழைந்தார்.

யானை சங்கிலியால் கட்டப்பட்டிருந்த போதிலும் சரட்டென்று மிரண்டு இழுத்துக் கொண்டு ஆடியது. உரக்கப் பிளிறியது. பாகன் என்ன என்ன என்று அதை காது தொட்டு அடக்கினான். இழுத்துத் திருப்பினான். ஆனால், காது இழுக்கின்ற வலியையும் பொறுத்துக் கொண்டு யானை மீண்டும் பிளிறியது. இராஜராஜரை நோக்கி வருக வருக என்று வரவேற்றது. அருகேயிருந்த குதிரைகள் கால்கள் மாறி நடனமாடின. ஏதோ கடந்து போவது போல யானைப் பாகனுக்குத் தோன்றியது. உள்ளே நுழைய பசுக்கள் தும்பை அறுத்துக் கொண்டு ஓடின. காக்கைகள் எழுந்து உரக்கக்கத்தி மிரண்டு போய் இடைவிடாது கத்தின. புறாக்கள் சடசடத்தன. கிளிகள் இடைவிடாது கத்தின.

இராஜராஜர் படிவழியே ஏறி உள்ளே கருவறை நோக்கி கைகூப்பினார். நகர்ந்தார். ஒரு பெரிய மஞ்சள் நிற பூ காற்றில் அடித்துக் கொண்டு வேகமாய் வந்து சிவலிங்கத்தின் மீது சட்டென்று உட்கார்ந்தது. அருகே தீபத்தைத் துடைத்துக் கொண்டிருந்த சிவாச்சாரியாருக்கு எதனாலோ, யாரோ தொடுகின்ற உணர்வு ஏற்பட்டது. கோயில் கதவு மணிகள் அசைந்தன.



அவர் தீபத்தட்டை எடுத்து தீபத்தை ஏற்றினார். திரும்பி யாரோ வந்திருக்கிறார்கள் என்று பார்த்தார். யாரும் வரவில்லை. என்ன செய்வது, தீபத்தை ஏற்றிவிட்டோமே என்று யோசித்தார். ஆனாலும் நமக்காக தரிசனம் செய்வோம் என்று மெல்ல சிவனைத் துதித்து ஸ்லோகங்கள் சொல்லியபடி, மணி அடித்தபடி தீபத்தை உயரே உயர்த்தி சிவனுக்குக் காட்டினார். கீழே வைத்து கண்களில் ஒற்றிக்கொண்டார். திருநீறு தரித்துக் கொண்டார்.

இராஜராஜர் அந்த வெளிச்சத்தையே பார்த்து மெல்ல சிவலிங்கத்தை வலம் வந்தார். சரட்டென்று ஒரே கணத்தில் விமானத்தின் உச்சியில் போய் அமர்ந்து கொண்டார். அங்கிருந்தபடி சோழ தேசத்தைப் பார்த்தார். மெல்ல நழுவி தரையிறங்கினார். உள்ளுக்குள் ஜனங்கள் வந்து கொண்டிருந்தார்கள். வரவேற்கலாம் என்று எண்ணியபோது கோயில் கதவுகளை வேகமாகச் சாத்தினார்கள். தகனம் ஆன பிறகுதான் கதவு திறப்போம் என்று சொன்னார்கள். கூடியிருந்த ஜனங்கள் வெளியே நகர்ந்தார்கள். அங்கங்கே பதறியபடியே குமுமிப் பேசிக் கொண்டிருந்தார்கள். அழுது கொண்டிருந்தார்கள். யாருமில்லாத அந்தக் கோயிலில் இராஜராஜர் நிதானமாக வலம் வந்தார்.

உடையாளூர் வசந்த மண்டபத்திலிருந்து அவருடைய உடம்பு எடுத்துக் கொண்டு போய் கங்கை ஜலம் விட்டு குளிப்பாட்டினார்கள். வசந்தமண்டபத்தில் வேகமாக, மரங்களைப் பிளந்து அடுக்கினார்கள். நடுநடுவே மெல்லிய சுள்ளிகளைப் பொருத்தினார்கள். கோட்டை அடுப்பு போல இடைவெளி விட்டார்கள். மறுபடியும் வைக்கோலும், நாரும் போட்டு அதன்மீது மெத்தையாகப் பரப்பினார்கள். துணி போட்டார்கள். அதன்மீது சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவரைப் படுக்க வைத்தார்கள்.

சக்ரவர்த்தி ஸ்ரீ இராஜேந்திரதேவர் தந்தையை வலம் வந்தார். எக்காளம் முழங்கிற்று. சிறுபறை அதிர்ந்தது. பெரும் பறை அதிர்ந்தது. சோழம்... சோழம்... என்று ஜனங்கள் உரக்கக் கத்தினார்கள். போர்வீரர்கள் வாளால் கேடயத்தை அடித்தார்கள்.

சக்ரவர்த்தி ஸ்ரீ இராஜேந்திரசோழத்தேவர் சிதைக்கு நெருப்பு மூட்டினார். சில கணங்களில் காய்ந்த விறகுகள் எளிதில் பற்றிக் கொள்ள, சிதை கொழுந்து விட்டு எரிந்தது. சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவர் சாம்பலானார்.

பரமஸ்வாமி கோயில் கதவுகளைத் தடேர் தடேரென்று திறந்தார்கள். தளிச்சேரி பெண்டுகள் குடங்களோடு உள்ளே நுழைந்

தார்கள். ஆட்களும் வேகமாக வந்தார்கள். கோயில் முழுவதையும் நீரால் அலம்பினார்கள். கருவறையையும் மண்டபத்தையும், சுத்தம் செய்தார்கள்.

இங்கு உட்கார்ந்தல்லவா நிவந்தம் கொடுத்தார். இங்கு உட்கார்ந்தல்லவா நிவந்தம் கொடுத்தார்.

வாயைப் பொத்திக் கொண்டு அழுதார்கள்.

கல்வெட்டிலுள்ள அவர் பெயரைத் தடவிப் பார்த்தார்கள். இங்கு நடந்தாரே இங்கு நின்றாரே, இந்தப் படியில் அமர்ந்தாரே, இந்தச் சிலையின் அருகே நின்று பார்த்தாரே என்று விதம்விதமாக எல்லா இடங்களிலும் சுற்றி வந்தார்கள்.

ஸ்ரீ பரமஸ்வாமிக்கு அன்னம் நைவேத்யமாயிற்று. உள்ளே ஜனங்கள் வர பசித்த ஜனங்களுக்கு கோயில் பரிசாரகர்கள் சோறு போட்டார்கள். சோறு சாப்பிடும்போது ஜனங்கள் அழுது கொண்டே சாப்பிட்டார்கள்.

இரவு மழை வந்தது. மழைக்குப் பிறகு வெயில் வந்தது. வெயில் காலம் போன பிறகு, மழைக்காலம் வந்தது. மழைக்காலம் போன பிறகு பனிக்காலம் வந்தது. பனிக்காலத்திற்குப் பிறகு இலையுதிர் காலம் வந்தது. இலையுதிர் காலத்திற்குப் பிறகு மறுபடியும் வெயில் வந்தது.

காலங்கள் உருண்டோடின.

மழையிலும், வெயிலிலும், பனியிலும், நிலவிலும், இருளிலும் பொன்வேய்ந்த அந்த விமானம் பளபளத்தது. அந்த விமானம் பார்த்தவரெல்லாம் சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜராஜத் தேவரின் பெயரைச் சொன்னார்கள். மிகப்பெரிய கடற்படை யெடுப்புக்கு இராஜேந்திரசோழர் மிகக் கவனமாகத் தன்னைத் தயார் செய்து கொண்டார்.

கடற்படை எடுப்பதற்கு முன்பு தெற்கே குடந்தை தாண்டி பழையாறை நகருக்குள் புகுந்து அங்குள்ளோர்களை குசலம் விசாரித்தார். உடையாளூர் வந்தார்.

பஞ்சவன்மாதேவி நடமாடினாலும் மனம் சோர்ந்து கிடந்தார்.

''அம்மா... ஏதாவது வேண்டுமா. எல்லாம் குறைவர கிடைத்துக் கொண்டிருக்கிறதா. உங்களுக்கு உதவி செய்யக் காத்திருக்கிறேன். என்ன வேண்டும் சொல்லுங்கள்.''



''இங்கு வேண்டுவது என்று எதுவுமில்லை இராஜேந்திரா. இது எல்லாம் நிறைந்த வளமான அரண்மனைதானே. நான் மரணத் திற்குக் காத்துக் கொண்டிருக்கிறேன்.''

''அப்படிச் சொல்லாதீர்கள் அம்மா. இன்னும் நீங்கள் நன்கு வாழவேண்டும். உடல்நலம் தேற வேண்டும்.''

''இனி தேறுவது என்பது இல்லை. திசை திரும்புவது என்பது தான் இருக்கிறது. அதுவும் தவிர, எனக்கு எல்லாம் இருக்கிறது இராஜேந்திரா.''

''அம்மா நான் ஏதேனும் தரவேண்டாமா. என்னை ஏதும் கேட்க மாட்டீர்களா. என்ன வேண்டும் கேளுங்கள்.''

''என்ன இராஜந்திரா என்ன ஆயிற்று உனக்கு. என்னை என்ன கேட்கச் சொல்கிறாய்.''

''அம்மா... என்னுடைய அரண்மனையில் இராஜராஜேஸ்வர நாடகம் நடந்தது. அந்த நாடகத்தின் நடுப்பகுதியில் எனக்காக நீங்கள் செய்த தியாகங்கள் சூட்சுமமாகச் சொல்லப்பட்டன. என்ன அது என்று விசாரிக்கப்பட்டபோது, எனக்காக நீங்கள் கரு இல்லாமல் இருப்பதற்காக வைத்தியம் மேற்கொண்டீர்களாம். எனக்கு ஒரேபிள்ளை அது இராஜேந்திரன் என்று சொன்னீர் களாம். அதனால் தான் அந்தப்புரம் நிம்மதியாயிற்றாம். அரசரும் மகிழ்ந்து போனாராம் அம்மா.. எதற்காக இப்படிச் செய்தீர்கள். எனக்கொரு தம்பி இருந்திருந்தால் இன்னும் நன்றாக இருக்கு மல்லவா. இன்னும் சோழதேசம் வளமாக ஆயிருக்குமல்லவா.''

''சொல்ல முடியாது இராஜேந்திரா. உனக்கு தம்பி இருந்திருந் தால் சோழதேசம் துண்டாடப் பட்டிருக்கலாம். சோழதேசம் பலவீனமடைந்திருக்கலாம். அரசர் அதனால் நிலை குலைந்திருக் கலாம்.

சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவருக்கு எந்த விதத்திலும் நான் இடைஞ்சலாக இருக்கக்கூடாது என்று இந்த விஷயத்தை மேற் கொண்டேன்.

எனக்கு இது மறந்து போயிற்று. நீயாக ஞாபகப்படுத்தினாய். இதை எதற்காக நாடகமாகப் போடுகிறார்கள் என்று தெரிய வில்லை. வேண்டாமென்று சொல்லிவிட்டேன்.''

''இருக்கட்டும் அம்மா. உங்களைப்பற்றி இந்த சோழதேசம் தெரிந்து கொள்ளட்டும். நான் உங்களுக்கு என்ன செய்ய வேண்டும். சொல்லுங்கள்.''

''திரும்பத் திரும்ப கேட்பதால் சொல்கிறேன். உன் தந்தை என்னை அனுக்கியாகவோ, கூத்தியாகவோ நடத்தவில்லை. உன் தந்தை என்னை மனைவியாக மதித்தார். அரண்மனையில் இடம் கொடுத்தார். அரசவையில் கலந்து கொள்ளச் சொன்னார். என்னை உயர்வான இடத்தில் வைத்திருந்தார். அவர் என்னை உயர்வான இடத்தில் வைத்திருந்தது, மனைவியாக நடத்தியது எப்பொழுது உறுதிப்படும் தெரியுமா. நீ என்னைத் தாயாக ஏற்றால்தான் உறுதிப் படும். சக்ரவர்த்தியைக் கணவனாக அடைந்தேன். இன்னொரு சக்ரவர்த்தி எனக்கு மகனாக இருக்கட்டும். உன் கையால் எனக்கு கொள்ளி வைத்தால் நான் நிம்மதியாகச் சாவேன். வைப்பாய் என்று தெரிந்தால் என் மரணம் முழுமையாக இருக்கும்.''

''என்னம்மா இது. என்ன பேச்சு இது. நான் உங்கள் மகன். உங்களுடைய பிள்ளை. உங்கள் வயிற்றில் பிறக்கவில்லையே தவிர, உங்களால் வளர்க்கப்பட்டவன். எனவே, நீங்கள் மரண மடையக்கூடாது. என்றும் புகழோடு வாழவேண்டும் உங்கள் உடம்புக்கும் மரணம் ஏற்பட்டால் இந்த உடலுக்கு நான் என் கையால் தீ மூட்டுவேன். சகல மரியாதைகளுடனும் உங்களை மேலுலகுக்கு அனுப்பி வைப்பேன்.''

சக்ரவர்த்தி ஸ்ரீஇராஜேந்திரசோழத்தேவர் குனிந்து பஞ்சவன் மாதேவியின் கால்களை முத்தமிட்டார். வலக்கையால் அந்தக் கால்களைப் பொத்தி இது சத்தியம் என்று சொன்னார்.

பஞ்சவன்மாதேவி கண்களில் நீர் துளிக்க சக்ரவர்த்தி ஸ்ரீ இராஜேந்திரசோழத் தேவரையே பார்த்துக் கொண்டிருந்தாள். உண்டு விட்டாயா என்று கேட்டாள். உணவு கொண்டு வரச் சொன்னாள். மகனோடு அந்தத் தாய் அமர்ந்து நிதானமாகச் சாப்பிட்டாள். அப்படியே மஞ்சத்தில் சாய்ந்து அயர்ந்து தூங்கிப் போனாள்.

சக்ரவர்த்தி ஸ்ரீ இராஜேந்திரத்தேவர் தஞ்சையை நோக்கி படைகளோடு போனார். ஸ்ரீ பரமஸ்வாமி கோயிலைச் சுற்றி வந்தார். ஓவியங்களை மறுபடியும் பார்வையிட்டார். அழுக்குப்படி யாமல் பாதுகாக்க வேண்டுமென்று உத்தரவிட்டார். அதற்கு மேல் நிலைக்குப் போய் நின்று பார்க்க, அந்த பரத நாட்டிய கரணச் சிற்பங்கள் எண்பத்தொன்றில் நின்றிருந்தது.

''நூற்றியெட்டு கரணங்களல்லவா. மீதி ஏன் முடியவில்லை. சிற்பிகள் யார். எதற்காக மூளியாக வைத்திருக்கிறார்கள்.''

சக்ரவர்த்தி ஸ்ரீ இராஜேந்திரசோழர் கேள்வி கேட்டார்.



''இந்தக் கரணங்களைச் செய்து காட்டியது பஞ்சன்மாதேவியார் அவர்கள்.''

''ஆமாம். கேள்விப்பட்டிருக்கிறேன். அதனால் என்ன. மீதிக் கரணங்களைச் செய்துவிட வேண்டியதுதானே.''

''அந்தக் கரணங்களை நான் வந்த பிறகு செய்து கொள்ளலாம் என்று சொல்லி விட்டுத்தான் போனார். அவர் போனவர், போன வர்தான். ஆயுதத்தால் தாக்கப்பட்டு சுருண்டு விட்டார். மறுபடியும் இந்தக் கோயிலுக்கு அவர் வரவேயில்லை. அவர் வருவார் என்று எதிர்பார்த்திருந்த கண்டராதித்தப் பெருந்தச்சர் இப்போது உங்களுடைய அரண்மனையில் கோயில் பணிகள் செய்து கொண்டிருக்கிறார். இப்பொழுது இந்தச் சிற்பங்களைச் செய்ய பஞ்சவன்மாதேவியும் இல்லை. கண்டராதித்தப் பெருந்தச்சரும் இல்லை. கண்டராதித்தரையாவது வரவழைத்துவிடலாம். பஞ்சவன்மாதேவியை வரவழைத்துவிட முடியுமா. வந்தாலும் நடனமாட முடியுமா. எனவேதான் என்ன செய்வதென்று தெரியாமல் அமைதியாக இருக்கிறோம்.''

கோயில் அதிகாரிகள் சொன்னார்கள்.

''வேறு யாரையேனும் வைத்து முடித்து விடலாமா'' என்று கேட்டபோது, சட்டென்று இராஜேந்திரசோழருக்கு வேதனை வந்தது.

''இல்லை வேண்டாம். இது அவர் செய்தால்தான் அழகு. அவர் செய்வதற்கு முடியாதபோது இந்த விஷயம் முடியாததாகவே இருக்கட்டும். மூளியாகவே நிற்கட்டும். மிக அற்புதமாக அமைந்த இந்தக் கோயில் முழுமையடைந்துவிட்டால், தேவலோகவாசிகள் கோபப்படுவார்கள். அப்படியே இருக்கட்டும். எனக்குப் பிறகும், வேறு எவர் ஆண்டாலும் அவருக்குக்கூட வழிவழியாக இது சரி செய்யப்படக்கூடாது என்று செவிவழியாக உத்தரவிடுங்கள்.''

''இதை செப்புத்தகட்டில் அடித்து வைக்கலாமா.''

''தேவையில்லை. இது வெறும் உத்தரவாக இருக்கட்டும். இதையெல்லாம் எழுத கல்லை வெட்டிக் கொண்டிருக்கக்கூடாது. செப்பில் செதுக்கிக் கொண்டிருக்கக்கூடாது.'' என்று உரக்க சக்ரவர்த்தி ஸ்ரீ இராஜேந்திரசோழத்தேவர் சொல்ல, சரியென்று தலையசைத்தார்கள்.

இராஜேந்திரசோழர் திரிசிரபுரம் போய் திரும்புகிற வழியில் பஞ்சவன்மாதேவி மரணப்படுக்கையில் இருக்கிறார் என்ற செய்தி கேட்டு தன்னுடைய பயணத்தைத் துரிதப்படுத்தினார்.

குடந்தையிலிருந்து பாபநாசம், வழியாக பழையாறையை அடைந்து, பழையாறையின் வழியாக உடையாளூர் போய், அரண் மனை வாசலில் இறங்கினார். அரண்மனையில் கும்பல் இருந்தது. அதிகாரிகள் மௌனமாக இருந்தார்கள். பதட்டத்துடன் இறங்கிய சக்ரவர்த்தி ஸ்ரீ இராஜேந்திரசோழத்தேவர், அம்மா இருக்கிறாரா என்று முதல் கேள்வி கேட்டார்.

இல்லை. இன்று காலைதான் சித்தியானார் என்று பதில் வந்தது. நிதானமாக உள்ளே போகும் போது அதே வசந்த மண்டபத்தில் பஞ்சவன் மாதேவியைக் கிடத்தியிருப்பது தெரிந்தது. அருகே போய் கால்களைப்பற்றிக் கொண்டு நெற்றியில் வைத்துக் கொண்டார்.

"வந்து விட்டேன் தாயே. கொடுத்த வாக்கு தவறாது வந்துவிட் டேன். உமக்கு கொள்ளிபோட வந்துவிட்டேன்." என்று கைகூப் பினார்.

நடக்கட்டும். துரிதமாக நடக்கட்டும் என்று கட்டளையிட்டார்.

வேகமாக பஞ்சவன்மாதேவியின் உடல் குளிப் பாட்டப் பட்டது. சிதையில் அடுக்கப்பட்டது.

சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜேந்திர சோழத்தேவர் தன் வலக்கையால் தீப்பந்தம் ஏந்தி காய்ந்த அந்த விறகுகளில் தீப்பந்தத்தைச் சொருக மெல்ல புகை வந்து பிறகு நெருப்பு பிடித்து தகதகத்து எரிந்தது. விறகு சரிந்து பஞ்சவன்மாதேவியின் உடலை உள்ளே வாங்கிக் கொண்டது. மேலும், விறகுகள் போடப் போட தீக்கொழுந்து பரவியது. அம்மன் குளத்தில் மூழ்கி குளித்துவிட்டு சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜேந்திரதேவர் கரையேறினார்.

உடையாளூரில் இருக்கின்ற அரசவம்சத்தினர் யாரேனும் என்னு டைய அரண்மனையில் குடியேற விரும்பினால், தாராளமாக வரலாம். இங்கே இருக்க வேண்டுமென்று ஆசைப்பட்டால், இங்கும் இருக்கலாம் என்று சொல்ல, பல அரச குடும்பத்தினர் அவரோடு கிளம்ப சித்தமானார்கள்.

பஞ்சவன்மாதேவி இருளிலிருந்து சிதறி வேகமாக நாலாபுறமும் அலைய, ஒரு ஒளியுடம்பு அவளை சட்டென்று பிடித்துக் கொண்டது. அவள் திமிறி ஓட முயல, இறுக்கிக் கொண்டது.



எங்கே ஓடுகிறாய் என்று குரல் கேட்டது. பஞ்சவன்மாதேவி நிதானிக்க, அது இராஜராஜர் என்று தெரிந்தது.

பஞ்சவன்மாதேவி அவரை அணைத்துக் கொண்டு தரையிறங் கினார்கள். அது தஞ்சை பரமஸ்வாமி கோயில் என்பது தெரிந்தது.

"இங்குதான் இருக்கிறீர்களா? நீங்கள் எங்கேயோ போயிருப் பீர்கள் என்றல்லவா பார்த்தேன்."

"இதுதான் என்னுடைய இடம். என்னுடைய இடம்தான் உன்னுடைய இடம். ஆகவே, நாம் இருக்கப் போகின்ற இடமும் இதுதான்."

"இங்கு நமக்கு என்ன வேலை."

"எத்தனை பேர் தினமும் கோயிலுக்கு வந்து கொண்டிருக் கிறார்கள். எவ்வளவு அமைதியாக சுற்றிக் கொண்டிருக்கிறார்கள். எவ்வளவு ஆர்வமாக இந்தக் கல்வெட்டுகளைப் படித்துக் கொண் டிருக்கிறார்கள். எவ்வளவு விருப்பமாக நந்திப் பெருமானுடைய அபிஷேகத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். எவ்வளவு பய பக்தியோடு தஞ்சை பரமஸ்வாமியை வணங்கிக் கொண்டிருக் கிறார்கள். அவர்களையெல்லாம் வரவேற்க வேண்டும். அவர்கள் சிவனை வணங்கித் திரும்பும்போது அவர்களை வாசலுக்குப் போய் வழியனுப்ப வேண்டும். இது நம்முடைய வேலை அல்லவா. இங்கு வருபவர்களுக்கு நாம் நன்றி சொல்ல வேண்டாமா."

அவர் சொல்ல ஆமாம் என்று தலையசைத்தார்.

புருஷனும், மனைவியுமாய் அன்று முதல் இன்றுவரை யார் பெரிய கோயில் பரமஸ்வாமியைப் பார்ப்பதற்காக வருகிறார் களோ, அவர்களைக் கைகூப்பி இராஜராஜரும், பஞ்சவன்மாதேவி யாரும் கோபுர வாசலிலேயே வரவேற்கிறார்கள். உங்களோடு தொடர்ந்து வருகிறார்கள். படியேறும்போது காற்றாக உங்களைப் பின்தொடர்கிறார்கள். உங்களுக்கு முன்னதாக கருவறைக்குள் சூழன்று உங்களுக்கு அருகே நிற்கிறார்கள். தீப ஆராதனையை உங்களோடு சேர்த்துக் களிக்கிறார்கள். நீங்கள் கீழே இறங்கி வலம்வரும்போது உங்களோடு வலம் வருகிறார்கள். நீங்கள் வெளியேறும்போது உங்களுக்கு வாசலில் நின்று விடை கொடுக் கிறார்கள்.

பொது மக்களாக கோயிலுக்கு யார் வரினும் அவர்களுக்கு மிகுந்த சந்தோஷம். அரசராக உள்ளே நுழைகிறபோது, என்னைத் தவிர வேறு யார் இங்கு அரசர் என்ற கேள்வி அவர்களுக்கு இங்கு

வந்துவிடுகிறது. மாற்றரசருக்கு இங்கு என்ன வேலை என்ற கேள்வி வருகிறது. சிவனின் அடிமை என்று தெரிந்தால் போதும். அவர்கள் உங்களுக்கருகே வந்து ஆனந்தக் கூத்தாடுகிறார்கள். நெற்றியில் முத்தமிடுகிறார்கள். பாதத்தைப் பணிகிறார்கள். வருக என்று வரவேற்கிறார்கள். கோயிலை கண்ணின் இமையாய் பாதுகாத்து வருகிறார்கள்.

சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜேந்திர சோழத்தேவர் உடையாளூரிலிருந்து பஞ்சவன்மாதேவியின் அஸ்தியைத் திரட்டி ஒரு வெங்கலச் செம்பில் எடுத்துக் கொண்டு, அதை பழையாறைக்கு அப்பால் உள்ள ஒரு சிறிய திடலில் கோயில் கட்டச் சொல்லி அங்கு அஸ்திக்கலசத்தை வைத்து அந்த அஸ்திக்கலசத்தின் மீது சிவலிங்கத்தை ஸ்தாபிதம் செய்தார். அங்கே பெரிய பள்ளிப்படை கோயில் கட்டவேண்டும் என்று கட்டளையிட்டார்.

பஞ்சவன்மாதேவியின் பிறந்த குடும்பமான பழுவேட்டரையர் குடும்பம் அந்த பொறுப்பைத்தான் செய்வதாக முன்னே வந்து ஏற்று பொற்கிழியை வாங்கிக் கொண்டது.

பழுவேட்டரையரின் சின்னமாக துவாரபாலகர்களும் நந்தியும் நிறுவப்படும் என்று சொன்னது. சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜேந்திரசோழத்தேவர் தன்னுடைய சிற்றன்னையான பஞ்சவன்மாதேவிக்கு எடுப்பிக்கப்பட்ட பள்ளிப்படை கோயில் என்ற கல்வெட்டு இப்பொழுதும் அந்தக் கோயிலில் இருக்கிறது.

நீங்கள் பஞ்சவன்மாதேவியை நமஸ்கரிக்க வேண்டுமென்றால், ஒரு புருஷனின் கரம் பிடித்து அவனுடைய முன்னேற்றத்திற்குப் பாடுபட்ட ஒரு பெண்ணின் ஆசீர்வாதத்தைக் கேட்க வேண்டுமென்றால், அவளை வணங்கி, அவளுடைய ஆசிகளைப் பெற வேண்டுமென்றால், அவருடைய நினைப்பாக சிறிது நேரம் அந்தக் கோயிலில் அமரவேண்டுமென்றால், அவளைப் போல ஒரு தீரம் மிக்க, தெளிவு மிக்க, திடம் மிக்க ஒரு மனைவியாக வாழவேண்டுமென்றால், உங்களுக்கு அம்மாதிரியான திடம் மிக்க, தீரம் மிக்க, தெளிவு மிக்க, மனைவி கிடைக்க வேண்டுமென்றால், அந்தக் கோயிலுக்குப் போய் வாருங்கள்.

அந்தக் கோயில் வாசலில் மகர யாழி மீது உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவரும், அருகே நர்த்தனமாடுகின்ற பஞ்சவன்மாதேவியும் பார்த்து, தொட்டு வணங்கிவிட்டு வாருங்கள். அந்த சிவலிங்கத்திற்கு ஒரு முழம் பூ சாற்றிவிட்டு வாருங்கள். ஒரு நெய்விளக்கோ,



எண்ணெய் விளக்கோ ஏற்றிவிட்டு வாருங்கள். உங்கள் வாழ்க்கை நிச்சயம் செம்மையாகும்.

குடந்தையிலிருந்து நேரே தஞ்சை போய் அந்த பெரிய கோயிலை உற்று உற்றுப் பாருங்கள். உடையார் ஸ்ரீ இராஜராஜ சோழத்தேவர் எங்கே என்று தேடுங்கள்.

கோயிலின் வலப்பக்க படிக்கட்டுக்கு அருகே இருக்கின்ற இராஜராஜத்தேவருடைய பெயரைத் தடவிப் பாருங்கள்.

நாம் கொடுத்தனவும் நம் அக்கன் கொடுத்தனவும் நம் பெண்டுகள் கொடுத்தனவும் கொடுத்தார் கொடுத்தனவும் என்று எழுதப்பட்டிருக்கின்ற கல்வரிசையைத் தடவுங்கள்.

அது ஒரு உத்தமமான மனதினுடைய கல்வெட்டு. ஒரு பெரிய மனிதனுடைய கல்வெட்டு. எல்லோருக்கும் கொடுக்க வேண்டும் என்பதும், எல்லோரும், எல்லோருக்கும் கொடுக்க வேண்டுமென்பதையும் அப்படிக் கொடுத்ததை நிரந்தரமாகக் கல்லிலே வெட்டவேண்டும் என்பதையும் சொன்ன ஒரு உத்தமனின் கல்வெட்டு.

அவர் நின்ற இடம். அவர் நடந்த இடம். அவர் இன்னும் இருக்கின்ற இடம். அந்த இடத்தைப் போய் தரிசித்துவிட்டு, அவரை உணர்ந்து விட்டு வாருங்கள். உங்கள் குழந்தைகளுக்கு அதை உணரச் செய்யுங்கள்.

இன்னும் பல தலைமுறைகள் இந்தத் தமிழர்கள் அவரைத் தொழவேண்டும். அவர் உங்களைத் தொழவேண்டும். அவர் தொழுது கொடுத்த தமிழ் நம்மை வாழ வைக்க வேண்டும். நாம் அந்தத் தமிழைச் சிறப்பிக்க வேண்டும். சைவத்தை மலர்விக்க வேண்டும்.

இறையருளைக் காட்ட அவர் மனித சக்தியைக் கொண்டு மிகப்பெரிய விமானமாகக் கட்டினார். நம்முடைய சக்தியைக் கொண்டு அதைத் தொழுது எழுந்தால்போதும். அதற்குத்தான் ஆசைப்படுகிறார்.

அறிவு உடையவரும், அருள் உடையவரும், வீரம் உடையவரும், விவேகம் உடையவரும், செல்வம் உடையவரும், சீரும் சிறப்பும் உடைய வருமான உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவரை நெஞ்சில் சுமந்தபடி ஸ்ரீ பரமஸ்வாமியை வணங்குங்கள். எது கடவுள் என்று அங்கு அமர்ந்து சிந்தியுங்கள்.

உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவரை நினைவில் வைத்து, வாழ்க்கையில் ஒரு முறையேனும் பெரிய கோயில் என்று அழைக்கப்படுகின்ற தஞ்சை பரமஸ்வாமி கோயிலுக்குப் போய் வாருங்கள். சிவனின் அருளைப் பெறுங்கள்.

வாழ்க உடையார்
ஸ்ரீ இராஜராஜத்தேவர்..
வளர்க சோழதேசம்..
வளர்க தமிழ்மொழி..
வளர்க திருமுறை..
பொழிக இறையருள்..

உடையார் முற்றும்

# உடையார் நாவலுக்கான ஆதாரக் குறிப்புகள் திரட்டப்பட்ட நூல்கள்

1. நீலகண்ட சாஸ்திரியின் சோழர்கள்
2. சதாசிவப் பண்டாரத்தாரின் பிற்காலச் சோழர்கள்.
3. The great temple of Thanjavur A.K.SESHADRI
4. THANJAVUR BRAHADISVARA- An Architactural study- PIERRE PICHARP
5. The cholas- N.SETHURAMAN
6. Early cholas - N.SETHURAMAN.
7. தமிழ்நாட்டு வரலாறு சோழப்பெருவேந்தர் காலம்- தமிழ்நாட்டு வரலாற்றுக்குழு.
8. சிவபாதசேகரனின் தஞ்சைக் கல்வெட்டுக்கள்- வே.மகாதேவன் எம்.ஏ.
9. தஞ்சாவூர்-குடவாயில் பாலசுப்ரமணியன்
10. தஞ்சைப் பெருவுடையார் கோயில் கல்வெட்டுக்கள்- இரா. நாகசாமி. எம்.ஏ.
11. குடந்தைக் கல்வெட்டுக்கள்-திருமதி. மா. மார்க்சீயகாந்தி.
12. முதலாம் இராஜராஜ சோழன்-க.த.திருநாவுக்கரசு.
13. தமிழர் நாகரிகம் (முதல் தொகுதி) நடன. காசிநாதன். எம்.ஏ.
14. தஞ்சை ஸ்ரீ இராஜராஜேஸ்வரம். வெளியீடு-ஸ்ரீமந்.சி. பாலாஜி ராஜேபான்ஸ்லே சத்திரபதி. பி.இ. மூத்த இளவரசர். அரண்மனை. தஞ்சாவூர்.
15. அருண்மொழி-நடன. காசிநாதன்.
16. சோழ மண்டலத்து வரலாற்று நாயக்கர்களின் சிற்பங்களும், ஓவியங்களும். -குடவாயில் பாலசுப்ரமணியன்.

17. அருளுடைச் சோழமண்டலம்-என்.சேதுராமன்.
18. பழுவூர்ப் புதையல்- முனைவர். இரா. கலைக்கோவன்
19. தளிச்சேரிக் கல்வெட்டுகள், முனைவர். இரா.கலைக்கோவன்.
20. வல்லம்-வரலாற்றுச் சிறப்புகளும், திருக்கோயில்களும்-குடவாயில் பாலசுப்ரமணியன்.
21. கல்வெட்டு காலாண்டு இதழ்கள்-முனைவர். இரா.கலைக்கோவன், C87, 10ம் குறுக்குத் தெரு, தில்லை நகர் மேற்கு, திருச்சி-17

## பஞ்சவன் மாதேவீஸ்வரம் கோவிலுக்குச் செல்லும் வழி

குடந்தையின் எல்லையில் உள்ள பட்டீஸ்வரம் கோயில் வந்து பார்த்து எதிர் நின்றால் இடதும் வலதுமாய் சாலைகள் போகும். இடதுபுறம் பழையாறை போகும் சாலை வலதுபுறம் நடக்க, ஒரு மசூதியின் பின்புறம் மூக்காளம்மன் கோயில் அருகில், ஒரு சிமெண்ட்சாலை பிரியும். உள்ளே நுழைய பழைமையான கோயில் விமானம் தெரியும். இப்போது மதில்சுவரையும் கோபுரத்தையும் புதுப்பித்திருக்கிறார்கள். அக்கோயிலுக்கு இப்போது ராமநாதன் கோயில் என்பது பெயர். ஆனால், இதுவே பஞ்சவன்மாதேவியின் பள்ளிப்படைக் கோவில்.

அருகே சோழன் மேடு, சோழன் மாளிகை இருந்த இடமும் பார்க்கலாம்.

**மரபுப்பட்டியல்-1**

**சோழர் குடிவழிப் பட்டியல்**

**பேராதிக்கச் சோழர் (விசயாலயன் - முதலாம் இராசேந்திரன்)**

**(கி.பி. 850 - கி.பி. 1044)**

